ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

Released by Maran's Dog Toronto , Canada

மொழியைக் கடக்கும் பெரும்புகழாளரான ஸ்ரீகூரத்தாழ்வான்
அருளிச்செய்த பஞ்சஸ்தவத்தில் முதலாவது ஸ்தவமான

ஸ்ரீவைகுண்டஸ்தவம்

ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமி இயற்றிய
"தத்வார்த்த சிந்தாமணி" என்னும் வியாக்கியானத்துடன்

மணவாள மாமுனிகளின் 600ஆவது ஆண்டு
நிறைவு நினைவு மலர்களில் 13ஆவது மலராக பதிப்பிக்கப்பெற்றது.

பதிப்பித்த ஆண்டு :
3-11-1970 (சாதாரண ஐப்பசி திருமூலம்)

வெளியீடு :
கிரந்தமாலா, காஞ்சிபுரம்.

அச்சிட்டோர் :
Freedom Press, Madras - 21.

மறுஅச்சு மற்றும் கிடைக்குமிடம் :
ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ
ஸ்ரீரங்கநாச்சியார் அச்சகம்
214, கீழை உத்தரவீதி, ஸ்ரீரங்கம்-6.
☎: 0431 - 2434398. E-Mail: akchari@vsnl.com


Shrimal Pillai Loka chariar Sishyan ,Toronto , Canada

24.01.2004

விலை ரூபாய் 45/- தபாற்செலவு தனி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:



ஸ்ரீபரமபதநாதன் – பரமபதம்

யோ நித்ய மச்யுத பதாம்புஜ யுக்மருக்ம வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே I
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ: ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே II


– வைகுண்டஸ்தவம் 1

இந்நூலினை ஸ்ரீவைஷ்ணவ சமூகத்தினர் அனைவரும் குறைந்த விலையில் பெற்றுப் பயன்பெறும் வண்ணம், தரமான அச்சுத் தாளினை கொடுத்து உதவியவர் நமக்கு பரம ஆப்தரும், ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேசங்களுக்கும், ஸம்ப்ரதாயத்திற்கும் பற்பல நற்பணி களைச் செய்துவருபவருமான ஸ்ரீ.S.A.R.ப்ரஸன்ன வேங்கடாசார்யர் சதுர்வேதி ஸ்வாமி (ஸ்ரீபாஷ்யகாரர் சாரிடபிள் டிரஸ்ட், சென்னை - 17.)

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.



கூரத்தாழ்வான் அருளிச்செய்த பஞ்சஸ்தவத்தில் முதல் ஸ்தவமான ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தின்

வியாக்கியான அவதாரிகை.

[ஸ்ரீ காஞ்சி. அண்ணங்கராசாரியர்]

திருவரங்கம் பெரியகோயிலிலே ஆழ்வான் எம்பெருமானார்க்கு உசாத்துணையாயிருந்து தரிசந நிர்வாஹம் பண்ணியருளுகிற காலத்திலே, ராஜேந்த்ர சோழபுரத்தில் அரசாண்டு வந்த குலோத்துங்க சோழராஜன் துஷ்ட சைவனுகையாலே கள்ளப் பொய்ந் நூல்களை மெய்ந்நூலாகக் கொண்டு தானும் தன்புரோஹிதனுமாக நாட்டிலுள்ள வித்வான்களையெல்லாம் திரட்டி * **சிவாத் பரதரம் நாஸ்தி** * என்றெழுத்திடச் சொல்லி நிர்ப்பந்திக்க, சிலர் அவ்வரசனுடைய கொடுங்கோன்மைக்கு அஞ்சியும் சிலர் பொருளுக்கும் பூமிக்கும் ஆசைப்பட்டும் அங்ஙனே எழுத்திட்டார்கள். அப்போது அவ்வரசனிடத்தில் சிறிது வால்லப்யம் பெற்றிருந்த 'நாலூரான்' என்பானொரு வைஷ்ணவன் ராஜாவை நோக்கி 'எங்களிராமாநுசன் எழுத்திட்டாலன்றோ எழுத்திட்டதாவது; மற்ற அல்பஜ்ஞர்கள் இட்டாலென்ன? இடாவிடிலென்ன?" என்றுகூற, அது கேட்ட அரசனும் அப்போதே இராமானுசனை அழைத்துவரும்படி ஆள்களையனுப்ப, அவர்களும் உடையவர்மடத்தேறச் சென்றவளவிலே இந்த வ்ருத்தாந்தத்தையுணர்ந்த ஆழ்வான் 'எம்பெருமானார் ராஜ ஸபைக்கு எழுந்தருள்வராகில் அவர்க்கு ஏதாவது அபாயம் விளையக்கூடும்; உலகுக்கெல்லாம் உயிரான அவரைக் காட்டிக் கொடுக்கத்தகாது; நாமே அவருடைய வேஷம் பூண்டு சபைக்குச் செல்வது தகுதி' என்று அறுதியிட்டு, அப்போது எம்பெருமானார் நீராட்டத்திற் கெழுந்தருளியிருப்பதறிந்து அவருடைய காஷாயத்தையும் த்ரிதண்டத்தையும் தாம் தரித்துக்கொண்டு ராஜ ஸபைக்கெழுந்தருளி ஸ்ரீமந்நாராயணனே பரதத்வமென்று உபந்யஸித்தருளினது மன்றி * **சிவாத் பரதரம் நாஸ்தி** * என்றதற்குப் பரிஹாஸமாக * **த்ரோண மஸ்தி தத: பரம்** * என்றெழுத்திட்டது கண்டு கோப பரவசனான அவ்வரசனுடைய கொடுமையினால் திருக்கண்களையிழந்து திருவரங்கம் பெரிய கோயிலேற மீண்டெழுந்தருளி அங்கே வஸிக்கப் பார்த்தவளவிலே, அப்போது எம்பெருமானார் சோழனுடைய உபப்லவங்களை ஸஹிக்கமாட்டாமல் திருநாராயணபுரத்தேற எழுந்தருளியிருந்தபடியால் அவரைப் பிரிந்து கோயிலிலே வஸிக்க மாட்டாமையாலும், இராமானுச னடியார்களைச் சோழ ராஜ ஸேவகர்கள் பலவகைகளில் கலிந்துகொண்டிருந்தமையாலும் "அத்திருவரங்கமா நகர் நிஷ்கண்டக மாமளவும் நாம் இங்கே வஸிக்கத் தகாது" என்று திருவுள்ளம் பற்றிய ஆழ்வான் அங்குநின்றும் புறப்பட்டருளித் திருமாலிருஞ் சோலைமலையிலே சிலகாலம் வஸித்தருள்வதாக எழுந்தருளும்போது வழியிடையிலே பகவத் குணாநுபவத்தாலும் அநுபவ ஜநித ப்ரீதிகாரித வாசிக கைங்கர்யத்தாலும் தம்முடைய நெஞ்சாறல்களை மறக்கக்கருதி எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண

விபூதிகளை விசதமாக அநுஸந்தித்து அவ்வநுஸந்தாந பரீவாஹ ரூபமான ஸ்தோத்ரங்களை யருளிச் செய்யத் தொடங்கி முந்துற முன்னம் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தை அருளிச் செய்தா ராயிற்று. [இது தலைக்கட்டினவாறே அதிமாநுஷஸ்தவ மருளிச்செய்தார். அதன்பிறகு திருமாலிருஞ் சோலைமலை சேர்ந்து ஸுந்தரபாஹுஸ்தவ மருளிச்செய்தார். அதன்பிறகு பலவாண்டுகள் கடந்தபின்பு சோழன் புழுத்துமாண்டு எம்பெருமானார் திருநாராயணபுரத்தில் நின்றும் கோயிலேற எழுந்தருளினபின் அவருடைய நியமந மடியாக வரதராஜஸ்தவமருளிச் செய்யலாயிற்று. இந்த நான்கு ஸ்தவங்களுக்கும் பின்பு ஸ்ரீ ஸ்தவமவதரித்தது. ஆக, பஞ்சாத்ந மென்னும்படி ப்ரசஸ்தி பெற்றவிவை பஞ்சஸ்தவ மென்று வ்யபதேசிக்கப்படும்.]

இவற்றுள் ஸுந்தரபாஹுஸ்தவமே முதல் ஸ்தவமென்பாரும் ஸ்ரீ ஸ்தவமே முதல் ஸ்தவமென்பாருமாய் இப்படி சிலர் விப்ரதிபத்தி பண்ணிப்போருவர்களாகிலும் இங்கே நாம் காட்டின பௌர்வாபர்யக்ரமமே ஸம்ப்ரதாய ஸித்தமும் முந்தின வ்யாக்யாதாக்கள் ஆதரித்ததுமாகும். ஸ்வாசார்ய பரமாசார்ய ஸ்துதிபூர்வகமாக க்ரந்தமியற்றத் தொடங்குவது ஸம்ப்ரதாயமாகையாலும், ஆளவந்தார் பட்டர் முதலானார் அப்படியே ஸ்தோத்ரங்களருளிச் செய்திருக்கையாலும், இந்த ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்திலேயே ஆசார்ய ஸ்துதிகளும் மற்றும் க்ரந்தாரம்ப லிங்கங்களும் அமைந்திருப்பதனாலும் இதுவே முதல் ஸ்தவமென்று அறுதி யிடுகை மிகவும் உபபந்நம். ஸுந்தரபாஹுஸ்தவத்திற்குப் பிறகுதான் வரதராஜஸ்தவம் அவ தரித்த தென்னுமிடம் குருபரம்பரா ப்ரபாவாதிஸித்தம். இன்னமும் இதில் வைசத்ய முண் டாம்படி வல்லார் வாய்க் கேட்டுணர்க.

இந்த ஸ்தவங்களில் சொல்நோக்கும் பொருள்நோக்கும் தொடைநோக்கும் மற்று எந்நோக்கும் சாலவும் சிறப்பாக அமைந்துள்ளனவென்பதும், உபயவேதாந்த ரஹஸ்யார்த் தங்கள் இவற்றில் பொதிந்து கிடக்கின்றன வென்பதும், ஆழ்வார்களின் அருளிச் செயல் களிற்போலே உபதேசங்கொண்டே அறியவேண்டிய பல விசேஷார்த்தங்கள் இவற்றிலும் நிரம்பியிருக்கின்றனவென்பதும், * செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளிய வோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே * என்று திவ்யப்ரபந்தங்களுக்குக் கூறப்பட்டுள்ள அதி சயம் இந்த ஸ்தவங்களுக்கும் நன்கு பொருந்தியதே யென்பதும் பெரியோர்களது ஸித் தாந்தம்.

உபநிஷத்பாஷ்யம் ஸ்ரீபாஷ்யம் முதலிய வேதாந்த க்ரந்தங்களையும், ஸ்ரீராமாயணம் ஸ்ரீபாகவதம் ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதலிய இதிஹாஸ புராணங்களையும் ஆழ்வாரருளிச் செயல் களையும் அவற்றின் வியாக்யானங்களையும் தனித்தனியே ஆழ்ந்து அநுபவிப்பதனால் விளையக் கூடிய ஆனந்தமும் ஆச்சர்யமும் பகவத் பக்தியும் தர்மருசியும் மநோநைர்மல்யமும் தேஹ பரிசுத்தியும் ஐஹிகாமுஷ்மிக பல ஸித்தியுமெல்லாம் இப்பஞ்சஸ்தவத்தின் அநுபவமாத் திரத்தினால் மிகவும் அழகாக விளையுமென்று அநுபவரஸிகர்கள் பணிக்கும்படி. " சந்தங்க ளாயிரமு மறியக்கற்று வல்லாரானால் வைஷ்ணவத்வஸித்தி " என்று ஆசார்ய ஹ்ருதயத்தி லருளிச்செய்த நியாயம் இப்பஞ்சஸ்தவத்துக்குமொக்கும்; அதாவது, இந்த பஞ்சஸ்தவங்கள் அர்த்தத்துடனே முகஸ்தமாயிருக்கப் பெற்றவர்களுக்கே ஸ்ரீவைஷ்ணவத்வ பூர்த்தியுண் டென்கை.

திவ்யப்ரபந்தங்களிற் பாசுரங்களையே பெரும்பாலும் தழுவி இந்த ஸ்தவங்கள் அருளிச் செய்யப்பட்டுள்ளன வாதலால் அவ்வருளிச்செயல்களுக்கும் இந்த ஸ்ரீஸூக்தி களுக்குமுள்ள பொருளொற்றுமை கருத்தொற்றுமை முதலிய விசேஷங்களை விவரித்துரைக்க வேண்டியே அடியேன் இந்த ஸ்தவங்களுக்கு மணிப்ரவாள வியாக்யான மியற்றப் புகுந்தேன்.

இனி, ஸ்ரீ வைகுண்ட ஸ்தவத்தின் ப்ரமேயம் கூறுவோம். *வாணிள வரசான வைகுந்தக்குட்டன் ஒண்டொடியாள் திருமகளும் தானுமாய் நலமந்த மில்லதோர் நாட் டிலே நித்யமுக்தர் ஸேவிக்க ஓலக்கமிருக்குமிருப்பை இந்த ஸ்தவத்தில் அநுஸந்திக்கை யாலே இந்த ஸ்ரீ வைகுண்ட ஸ்தவமென்று திருநாம மாயிற்று. திருநாட்டின் சிறப்பு களைப் பரக்கப்பேசி அந்த அழகோலக்கத்திலே ஸேவிக்கத் தாம் பெருவிடாய்ப்பட்டிருக்

Released by Maran's Dog Toronto , Canada

கும் படியைப் பேசுவதிலே இந்த ஸ்தவம் முழுநோக்குடையது. எம்பெருமான் சாஸ்த்ரங்களை யருள் செய்தானென்பது, அந்த சாஸ்த்ரங்களில் தலையானது வேதமே யென்பது அந்த வேதத்தின் அர்த்தங்களை வைதிகர்கள் ந்யாய ஸ்ம்ருதீதிஹாஸபுராணாதிகளாலே உபப்ரும்ஹிதமாக்கி உணருகிறார்களென்பது, இதரர்கள் பாஹ்யர்களாயும் குத்ருஷ்டிகளாயும் நசித்துப்போகிறார் ளென்பது, சாஸ்த்ரங்களின் அர்த்தமறிவதற்கு பகவத் பக்தியே ப்ரதாந ஸாதநமென்பது, ஸ்ரீமந்நாராயணனே ஸகல வேத வேத்யனாகையாலே அவன்றனக்கே பாரம்யம் பொருந்துமென்பது, காரணத்வநியந்த்ருத்வாதிகளெல்லாம் அந்த ஸ்ரீமந்நாராயணனுக்கே தகுமென்பது, அப்படிப்பட்டவன் உபயவிபூதிநாதன் என்பதாய் ஆக இவ்வளவும் அவதாரணிகாருபேண அருளிச்செய்துகொடுபோந்து *யத்வைஷ்ணவம் ஹி பரமம் பதம் ஆமநந்தி* என்கிற நாற்பத்தோராம் ச்லோகந் தொடங்கிப் பரமபதத்தை வருணிக்கப் புகுகிறார்.

இந்த ஸ்தவம் முழுவதும் வஸந்ததிலக வ்ருத்தம்
அவதாரிகை முற்றிற்று.

ஸ்ரீரஸ்து.
எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஆழ்வான் திருவடிகளே சரணம்.

கூரத்தாழ்வான் திருவாய்மலர்ந்தருளிய

ஸ்ரீ வைகுண்டஸ்தவம்.

[ஸ்ரீகாஞ்சீ, பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய
தத்வார்த்த சிந்தாமணி யென்னும் வியாக்யானத்தோடு கூடியது.]

(ஆழ்வான் தனியன்.)

* ஸ்ரீவத்ஸ சிஹ்நமிச்ரேப்யோ நம உக்திமதீமஹே,
யதுக்தயஸ் த்ரயீகண்டே யாந்தி மங்களஸூத்ரதாம்.

यो नित्यमच्युत पदांबुजयुग्मरुक्मव्यामोहतस्तदितराणि तृणाय मेने ।
असद्गुरोर्भगवतोस्य दयैकसिन्धोः रामानुजस्य चरणौ शरणं प्रपद्ये ॥

யோ நித்ய மச்யுதபதாம்புஜயுக்ம ருக்ம
வ்யமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே,
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே. 1

யஃ நித்யம் அச்யுத பதாம்புஜ யுக்ம
ருக்ம வ்யாமோஹதஃ தத் இதராணி
த்ருணயமேநே, அஸ்ய தயாஏகஸிந்தோஃ
பகவதஃ அஸ்மத் குரோஃ ராமாநுஜஸ்ய
சரணௌ சரணம் ப்ரபத்யே.

யாவனொரு எம்பெருமானார், எப்போதும் எம்பெருமானுடைய திருவடித் தாமரை யிணையாகிற ஸுவர்ணத்திலுள்ள வியாமோஹத்தினால் அந்த பகவத் பாதாரவிந்தங்கள் தவிர மற்ற விஷயங்களை த்ருணமாக எண்ணினாரோ [திருவுள்ளத்தால் திரஸ்கரித்தாரோ], இப்படிப்பட்டவரும் க்ருபைக்கு முக்கியமான கடலாகவுள்ளவரும் கல்யாணகுணசாலியும், அஸ்மதாசார்யருமான எம்பெருமானாருடைய திருவடிகளைச் சரணம் புகுகின்றேன்.

Shrimal Pillai Loka chariar Sishyan ,Toronto , Canada

(விசேஷ வுரை.) மேல் ஸுந்தரபாஹு ஸ்தவத்தின் தொடக்கத்தில் * ஸ்ரீராமாவரஜமுநீந்த்ரலப்த போத: * என்று இவர் தாம் அருளிச் செய்கிறபடியே தம்மை ஸத்தை பெறுவித்தவர் எம்பெருமானாராகையாலே அவரை அடியிலே சரணம் புகுகிறார். * மாற்பால் மனஞ் சுழிப்ப மங்கையர் தோள் கை விட்டு * என்றிவை முதலானவற்றில் சொல்லப்பட்ட பகவத் விஷய வ்யாமோஹமடியான இதர விஷய விரக்தி ஸம்பத்தானது ஸ்வாமி பக்கலிலே குறையற்றிருக்கும்படியை ஒரு சமத்காரமாகப் பேசுகிறார் இதில். லோகத்திலே ஸ்வர்ணத்தில் வியாமோஹம் கொள்ளாதாரில்லை. அதில் வியாமோஹமுடையார்க்கு அதொழிந்த மற்ற வஸ்துக்கள் த்ருணமாகவே தோன்றியிருக்கு மென்னுமிடமும் ஸம்ப்ரதிபந்நம். இந்த லௌகிகர்படியானது நம்மிராமானுசனுக்கும் அவர்ஜநீயமாயிற்றென்கிறது. இதனால் * वेधा द्वेधा भ्रमं चक्रे कान्तासु कनकेषु च—வேதா த்வேதா ப்ரமம் சக்ரே காந்தாஸு கநகேஷு ச* என்கிறபடியே ஸ்வர்ணத்தில் ப்ரமம் ஸர்வர்க்கும் அபரிஹார்யமானாப் போலே எம்பெருமானார்க்கும் அபரிஹார்யமாயிற்றென்பது ஒரு ரஸோக்தி.

இவருடைய வியாமோஹத்துக்கு இலக்கான ஸ்வர்ணந்தான் ஏதென்னில், [அச்யுதபதாம்புஜ யுக்மருக்ம வ்யாமோஹத:] கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான திருப்பதிகளிலே நித்யஸந்நிதி பண்ணி ஆச்ரிதரை ஒரு காலும் நழுவவிடாமே நின்று நோக்கியருள்பவனான எம்பெருமானுடைய திருவடித்தாமரை யிணையன்றி மற்றொன்றிலே இவர்க்கு உத்தேச்யதா புத்தி யில்லைகிடீர். பரம புருஷனுடைய பொற்பாதங்களிலே போர அபிநிவேசம் பூண்டவிவர் ததிதர பதார்த்தங்களை த்ருணவத்கரித்திருப்பராயிற்று. இவருடைய பொன்னடிகளைப் பேணினவர்கள் * த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதய:; ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந:* என்கிறபடியே ஸகலைச்வர்ய போகங்களையும் த்ருணவத்கரித் திருக்குமா போலே இவர் தாமும் அச்யுதனுடைய பதாம்புஜ யுக்மருக்மத்திலே ஆசைவைத்துப் புறம்புள்ளவற்றை யெல்லாம் கண்ணெடுத்துப் பாராதே அநாதரித்திருப்பராயிற்று. திருக்கச்சி நம்பிகள் பேரருளாளப் பெருமாளை நோக்கிப் பணித்த அஷ்டகத்திலே *நமஸ்தே ஹஸ்திசைலேச!...ப்ரணதார்த்திஹராச்யுத!* என்று தேவப்பெருமாளை அச்யுதனென்னுந் திருநாமத்தாலே ஸம்போதிக்கையாலே இந்த ச்லோகத்திலுள்ள அச்யுத பதமும் அந்தப் பேருளாளனையே கணிசித்ததாகக் கொள்வது பாங்கு. * பச்சைமா மலைபோல் மேனிப் பாசுரத்திலே அச்சுதா வென்று அழகிய மணவாளனை யருளிச் செய்திருக்கையாலே இங்கு அந்த எம்பெருமானை விவக்ஷிக்கிறதென்றலும் பொருந்தும். *தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்ப் பூண்டவன்பாளனிராமானுசன் * என்றும், * பொன்னரங்க மென்னில் மயலே பெருகு மிராமானுசன்* என்றும் அமுதனார் அருளிச் செய்த சந்தைகளுக்கு இணங்க, ஏகோக்தியிலே இரண்டு அர்த்தமும் கொள்ளக் குறையில்லை.

[அஸ்மத் குரோ:] அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்குமவர்க்கேயிறே குரு சப்த வாச்யத்வமுள்ளது. * கடலளவாய திசையெட்டினுள்ளுங் கலியிருளே மிடைதரு காலத்திராமானுசன் மிக்க நான்மறையின் சுடரொளியால் அவ்விருளைத் துரந்திலனேல் உயிரையுடையவன் நாரணனென்று அறிவாரில்லை யுற்றுணர்ந்தே * என்று அமுதனார் பணித்தபடியே கலியிருளையொழிப்பதற்கென்றே திருவவதரித்த எம்பெருமானார் பக்கலிலேயிறே குருத்வபூர்த்தியுள்ளது. * தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி ச பதம் பாதி நாந்யத்ர * என்னக்கடவதிறே. * புண்யாம்போஜவிகாஸாய பாபத்வாந்த க்ஷயாய ச, ஸ்ரீமாநாவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர: * என்று அபிநவ ஸூர்யராக ப்ரஸித்தரான எம்பெருமானாருக்குப் போக்கவொண்ணாத இருளில்லைகாணும். ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரையும் கூட்டிக்கொண்டு அஸ்மத்குரோ: என்கிறார். அஸ்மாகம் குரோ: என்றபடி.

[பகவத:] ஜ்ஞாநம் சக்தி பலம் ஐச்வர்யம் வீர்யம் தேஜஸ் என்கிற ஆறு குணங்களும் பொருந்திய விடத்திலே பகவத் சப்த வாச்யத்வம் கிடக்கும். ப்ரஹ்மசப்தம்போலே பகவத் சப்தமும் ஸர்வேச்வரனிடத்திலேயே முக்க்ய வ்ருத்த மென்று ஸ்ரீபாஷ்யத்திலே நிஷ்கர்ஷித்

திருக்க, அந்த ஸ்ரீபாஷ்யகாரர் திறத்திலே பகவச்சப்த ப்ரயோகம் எங்ஙனே யாயிற்றென்னில், *பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து* என்றும், *ஸாக்ஷாந்நாராயணோ தேவஃ க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா* என்றும் சொல்லுகிறபடியே ஸாக்ஷாத் ஸர்வேச்வராவதாரமென்றே கொள்ளப்பட்ட ஸ்வாமி விஷயத்திலே பகவத்சப்தம் பொருந்தக் குறையில்லை யென்னலாம். *மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து எங்கள் மாதவனே கண்ணுற நிற்கிலும் காண கில்லா வுலகோர்களெல்லாம் அண்ணலிராமாநுசன் வந்து தோன்றியவப்பொழுதே நண்ணருஞானம் தலைக்கொண்டு நாரணற்காயினரே * என்கிறபடியே ஸர்வேச்வரனிற் காட்டிலும் மிக்க வீறு பாடுடையரான ஸ்வாமிக்கேதான். பகவத்சப்தம் நன்கு பொருந்துமென்றும் கொள்ளில் மிகையாகாது. பகவான் தனக்கும் பகவத்த்வத்தை ஸித்தமாக்கித் தந்தார் இவரேயிறே.

[அஸ்ய] * * यत्तदोर्नित्यसंबन्धः— யத்ததோர் நித்யஸம்பந்தஃ * என்கிறபடியே யச்சப்த ப்ரதிநிர்தேசமாக தச்சப்தம் ப்ரயோகிக்க ப்ராப்தமாயிருக்கச் செய்தேயும் அதைவிட்டு (அஸ்ய) என்று இதம் சப்தத்தாலே ப்ரதிநிர்தேசம் பண்ணுவ தென்னென்னில்; * इदमः प्रत्यक्षगतम्—— இதமஃ ப்ரத்யக்ஷகதம் ; तदिति परोक्षे विजानीयात्— ததிதி பரோக்ஷே விஜாநீயாத்* என்பது சாஸ்த்ரஜ்ஞஸமயமாகையாலே பரோக்ஷநிர்தேசமான தச்சப்தத்திற் காட்டிலும் ப்ரத்யக்ஷ விஷயமான இதம்சப்த ப்ரயோகத்திலே ஸ்வாரஸ்யாதிசய முண்டிறே. *காஷாய சோபி கமநீய சிகாநிவேசம் தண்டத்ரயோஜ்ஜ்வலகரம் விமலோபவீதம், உத்யத்திநேச நிபமுல்லஸ தூர்த்வபுண்ட்ரம் ரூபம் தவாஸ்தி யதிராஜ! த்ருசோர் மமாக்ரே * என்று அந்தத் திருக்கோலமே ஆழ்வானுக்கு இடைவிடாமல் ஸாக்ஷாத்கார கோசரமா யிருக்கையாலே தச்சப்தம் தள்ளுண்டு இதம்சப்தமே ஏற்குமாய்த்து.

[தயைகஸிந்தோ:] அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்ய ரென்றும் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்ய ரென்றும் ஆசாரியர்களிலே இருவகையுண்டு. திருக்கோட்டியூர் நம்பி போல்வாரைப் போலே பலகால் துவளவைத்து வருந்தி யுபதேசிக்குமாசார்யர்கள் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்ய ரெனப்படுவர்; முலைக் கடுப்பாலே தரையிலே பீச்சுவாரைப்போலே * பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணிகொண்டு தம்பேறாக சிஷ்யர்களை உஜ்ஜீவிப்பிக்குமாசார்யர் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்ய ரெனப்படுவர். * ஓராண்வழியா யுபதேசித்தார் முன்னோர், ஏரா ரெதிராச ரின்னருளால், பாருலகிலாசை யுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறுமென்று பேசி வரம்பறுத்தார்பின்* என்று மணவாள மாமுனிகள் அருளிச்செய்தபடியே ஓராண்வழியாகப் பூருவர்கள் உபதேசித்துப் போந்த நியமத்தைக் குலைத்துப் பலரையும் உபதேசிக்கும்படி பண்ணியும், பலகால் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் நடந்து துவண்டு கேட்ட பரமார்த்தத்தை ஓலக்கமாகவைத்து உபதேசித்தும் ருசிவிச்வாஸ ஹீநரையும் நிர்ப்பந்தித்து சரமோபாயஸ்தராக்கியும் இப்படி அதிகாரம் பாராமல் அவர்களின் துர்க்கதியை மாத்ரமே பார்த்து உபதேசித்தருளுமவரிறே எம்பெருமானார்தாம். இப்படிப்பட்ட ஸ்ரீ ராமாநுஜனுடைய.

[சரணௌ சரணம் ப்ரபத்யே.] ஸ்தநந்தய ப்ரஜை முலையிலே வாய் வைக்குமாபோலே திருவடிகளில் தலை சாய்க்கையிறே நமக்கு ப்ராப்தம். (1)

त्रैविद्यवृद्धजनमूर्धविभूषणं यत् संपच्च सात्विकजनस्य यदेव नित्यम् ।

यद्वा शरण्यम् अशरण्यजनस्य पुण्यं तत् संश्रयेम वकुलाभरणांघ्रियुग्मम् ॥२॥

த்ரைவித்யவ்ருத்தஜநமூர்த்தவிபூஷணம் யத்
ஸம்பச்ச ஸாத்விகஜநஸ்ய யதேவ நித்யம்,
யத்வா சரண்யம் அசரண்யஜநஸ்ய புண்யம்
தத் ஸம்ச்ரயேம வகுளாபரணாங்க்ரியுக்மம். 2

யத் த்ரைவித்ய வ்ருத்தஜந மூர்த்த விபூ ஷணம், யதேவ நித்யம் ஸாத்விக ஜந ஸ்ய ஸம்பத் ச, யத் வா அசரண்ய ஜந ஸ்ய சரண்யம், தத் புண்யம் வகுளா பரண அங்க்ரியுக்மம் ஸம்ச்ரயேம.

யாதொரு நம்மாழ்வார் திருவடி யிணையானது, பரம வைதிகர்களுடைய சிரஸ்ஸுக்கு அலங்காரமா யிருக் கின்றதோ, யாதொரு திருவடியிணையே ஸர்வகால மும் ஸாத்விகர்களுக்கு ஸகலைச்வர்யமுமாக இருக் கின்றதோ, யாதொரு திருவடியிணையே புகலொன் றில்லாதவர்களுக்குத் தஞ்சமா யிருக்கின்றதோ, அப் படிப்பட்ட பரமபாவநமான நம்மாழ்வாருடைய திருவடியிணையை ஆச்ரயிக்கக் கடவோம்.

*** கீழ்ச்லோகத்தில் ஸ்வாசார்யரான எம்பெருமானாரைத் தொழுதார்; அந்த எம்பெரு மானார் தாம் * மாறனடி பணிந்துய்ந்த விராமாநுசனாகையாலே நம்மாழ்வாரை உபச்லோ கித்தாலல்லது அவ்விராமாநுசனுடைய திருவுள்ளம் உகவாதாகையாலும், ஆளவந்தார் தாமும் * **மாதா பிதா யுவதய:*** இத்யாதியால் ஆழ்வார் திருவடியை வணங்கியே எம்பெருமா னைத் துதிக்க இழிந்தாராகையாலும், ஆழ்வாரை வணங்காமல் எம்பெருமானை அடிபணிந்தால் அங்கே முகம் பெறுவது அருமைப்படு மாகையாலும் இந்தச்லோகத்தாலும் மேல்ச்லோகத் தாலும் நம்மாழ்வாரைத் தொழுதிறைஞ்சுகிறார்.

[**தத் வகுளாபரணங்க்ரியுக்மம் ஸம்ச்ரயேம**] * மகிழ்மாலை மார்பினன் * என்று தாமே பேசிக்கொள்ளலாம்படி வகுளமாலையை நிரூபகமாகவுடையரான நம்மாழ்வாருடைய அப்படிப்பட்ட திருவடித் தாமரை யிணையை ஆச்ரயிக்கக்கடவோம். எப்படிப்பட்ட தெனில், சில விசேஷணங்களையிட்டு அத்திருவடிகளின் அதிசயத்தை விளக்குகிறார். [**யத் த்ரைவித்ய வ்ருத்த ஜநமூர்த்த விபூஷணம்**] த்ரைவித்ய வ்ருத்தர்களாகிறார் ஸ்ரீமதுர கவிகள் போல்வார். அவர்களுடைய சிரஸ்ஸுக்கு பூஷணமாக இருக்குமாய்த்து ஆழ்வார் திருவடிகள்; *மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே* என்றும் *குருகூர் நம்பி! முயல் கின்றேனுன்றன் மொய் கழற்கன்பையே * என்றும் ஆழ்வார் திருவடிகளில் ப்ராவண்ய முடையார் அத்திருவடிகளையே யிறே தங்கள் தலைக்கு அணியாகக் கொள்வது; * கோலமா மென் சென்னிக்கு உன் கமலமன்ன குரைகழலே * என்றும் * அரசமர்ந்தா னடி சூடுமரசையல்லால் அரசாகவெண்ணேன் மற்றரசுதானே * என்றும் எம்பெருமானுடைய பாதாரவிந்தங்களை சிரோபூஷணமாகக் கொள்ள நினைப்பாரிற் காட்டிலும் அந்தபகவத் பாதாரவிந்தஸ்வரூபியான ஆழ்வாருடைய திருவடிகளை சிரோபூஷணமாகக் கொள்ளு மவர்களிறே சீரியராவர். **த்ரைவித்யவ்ருத்த** சப்தம் முக்கியமாக நம்மிராமாநுசனையே கருத்தில் கொண்டதாகும். * மாறனடி பணிந்துய்ந்த விராமாநுசனிறே. த்ரைவித்யபதம் * **तदधीते तद्वेद** * என்கிற பாணிநிஸூத்ரப்படி அண்ப்ரத்யயமேறி நிஷ்பந்நமானது. * **तिसृणां विद्यानां समाहार: त्रिविद्यम्; त्रिविद्यमधीते वेद वा—त्रैविद्य:** * ருக்யஜுஸ்ஸாமங்களாகிற வேதவித்யாத்ரயத்திலும் வல்லவரென்றபடி. * சொல்லார் தமிழொருமூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லாவற நெறி யாவும் தெரிந்த விராமாநுசனைப் போன்ற **மஹநீயர்களைக் கொள்க.**

[**ஸாத்விகஜநஸ்ய நித்யம் யதேவ ஸம்பத்**] * தனத்தாலுமேதுங் குறைவிலேன் எந்தை சடகோபன் பாதங்கள் யாமுடைய பற்று * என்றிறே ஸாத்விகர்கள் அத்யவஸித்திருப்பது. லௌகிகர்கள் ஸம்பத்தாக நினைத்திருக்கும் வஸ்துவானது வஸ்துஸ்திதியில் விபத்தாயிருக்கு மாயிற்று. உபய விபூதியும் ஆழ்வார்திருவடிகளில் ப்ராவண்யமுடையார் இட்டவழக்கா யிருக்கு மென்கை, * பொய்யில் பாடலாயிரத்துள் இவையும் பத்தும் வல்லார்கள், வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே * இத்யாதி. * **மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ் ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்** * என்றருளிச் செய்த ஆளவந்தார் போல்வாரையாயிற்று இங்கு **ஸாத்விக ஜந** மென்கிறது. [**நித்யம்**] இந்தவிபூதியில்

உள்ள போதோடு அந்த விபூதியில் செல்லும் போதோடு வாசியற ஸர்வ காலத்திலு மென்றபடி. * அத்ர பரத்ராசாபி நித்யம் யதீயசரணௌ சரணம் மதீயம் * என்னுமாபோலே.

[யத்வா சரண்யம் அசரண்யஜநஸ்ய] அநாதர்களுக்குப் புகலிடமா யிருக்கும் ஆழ்வார் திருவடிகள். எம்பெருமன் தன்னாலும் திருத்தவொண்ணாதென்று கைவிடப்பட்டவர்களாயிற்று அசரண்யர்கள்; அப்படிப் பட்டவர்களையும் வலியப் பிடித்திழுத்து * சொன்னால் விரோதமிது ஆகிலுஞ் சொல்லுவன்கேண்மினோ * இத்தியாதிகளைச் சொல்லியுபதேசித்துத் திருத்திப் பணிகொண்டவர் ஆழ்வாரே யிறே.

[புண்யம்] புநாதீதி புண்யம். பரம பாவந மென்றபடி. * பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு மழுக்குடம்புமாய் நின்ற நிலையைப் போக்கி ஸகலாத்மாக்களையும் பரிசுத்தமாக்கவல்லதென்கை. புண்யம் ஸுந்தரமென்று பர்யாயமுமாகையாலே அழகிய திருவடிகளென்பாருமுளர். பாவநார்த்தகத்வமே பாங்கு. ஆக இப்படிப்பட்ட ஆழ்வார் திருவடிகளை வணங்கினபடி சொல்லிற்றாயிற்று. (2)

भक्तिप्रभावभवदद्भुतभावबन्ध संन्धुक्षितप्रणयसाररसौघपूर्णः ।
वेदार्थरत्ननिधिरच्युतदिव्यधाम जीयात्पराङ्कुशपयोधिरसीमभूमा ॥३॥

பக்திப்ரபாவபவதத்புத பாவபந்த
ஸந்துக்ஷித ப்ரணயஸாரரஸௌக பூர்ண:,
வேதார்த்தரத்நநிதிரச்யுததிவ்யதாம
ஜீயாத் பராங்குசபயோதிரஸீமபூமா.

பக்திப்ரபாவ பவத் அத்புத பாவபந்த ஸந்துக்ஷித ப்ரணயஸார ரஸ ஓக பூர்ண: வேதார்த்த ரத்ந நிதி: அச்யுத திவ்யதாம அஸீமபூமா பராங்குச பயோதி: ஜீயாத்

பக்தியின் கனத்தினாலுண்டாகிய ஆச்சரியமான அபிப்ராயவிசேஷங்களினால், வளர்க்கப்பட்ட ஸாரபூதமான ப்ரணயமாகிற தீர்த்தத்தினுடைய ப்ரவாஹத்தாலே, (2) நவரஸ ஸமூஹத்தாலே நிறைந்ததாயும், வேதப் பொருளாகிற நவரத்னங்களுக்கு நிதியாயும், எம்பெருமானுக்கு திவ்யமான ஸ்தானமாயும், அளவில்லாத பெருமையையுடையதாயுமிருக்கிற நம்மாழ்வாராகிற கடல் நெடுநாள் வாழவேணும்.

* * * இந்த ச்லோகத்தாலே ஆழ்வார்க்கு மங்களாசாஸநம் பண்ணுகிறார். ஆழ்வாரை ஒரு கடலாக ரூபணம்பண்ணிப் பேசுகிறாரிதில். பயோநிதியாக ரூபணம் பண்ணுகைக்குப் பொருத்தமான ஔசித்யங்களை நான்கு விசேஷணங்களினால் நிரூபிக்கிறார், பயோநிதிக்கு இருக்கக்கடவ தன்மைகளெல்லாம் ஆழ்வார்பக்கலில் குறையற்றிருக்கிறபடியை ஒவ்வொரு விசேஷணமும் ரூதலிக்கின்றது. [பக்திப்ரபாவபவதத்புத பாவபந்த ஸந்துக்ஷித ப்ரணய ஸாரரஸௌகபூர்ண:] கடலானது ரஸௌகசப்தவாச்யமான ஜலப்ரவாஹத்தாலே பரிபூரணமாயிருக்கும். ஆழ்வாரோ வென்னில், ச்ருங்கார வீர கருணாத்புதஹாஸ்ய பயாநக ரௌத்ர பீபத்ஸ பக்திரஸங்களாலே பரிபூர்ணராயிராநின்றார். இப்படிப்பட்ட ரஸவிசேஷங்கள் ஆழ்வார் பக்கலிலே விளைந்தமைக்கு நிதாநமேதென்னில், விலக்ஷணமான பக்தி விசேஷத்தாலே ஆச்சரியமான பாவபந்தங்களுண்டாகி அந்த பாவபந்தங்கள் பலதலைத்து நாநாரஸ பரிபாகங்களாயின வென்கிறார்.

[பக்திப்ரபாவ] ஆழ்வாருடைய பக்திக்கு ஒப்புச்சொல்லலாவதில்லை; * காதல் கடல் புரைய விளைவித்த காரமர் மேனி யென்று முதலில் கடல்போலேயாய், * கொண்ட வென் காதலுரைக்கில் தோழீ! மண்டிணி ஞாலமு மேழ்கடலும் நீள்விசும்புங் கழியப் பெரிதால் * என்றாய், அநந்தரம் * சூழ்ந்ததனிற் பெரிய வென்னவா * என்று தத்வத்ரயத்தையும் விளாக்குலை கொள்ளவல்லதாய் ஆகவிப்படி மேன்மேலும் பெருகிச் செல்லுமதான பக்தியின்

ப்ரபாவத்தினலே. [பவத் அத்புத பாவபந்த] உண்டான அத்புதமான பாவபந்தங்களினலே. அதாவது—அந்த பக்திதானே ச்ருங்கார வ்ருத்த்யா பரிணமித்து தலைமகள் பாசுரமாகவும் தாய்பாசுரமாகவும் தோழிபாசுரமாகவும் பேசும்படிக்கீடான பலவகைப்பட்ட ஆச்சர்யபாவ பந்தங்களை யுண்டாக்கி நிற்கு மென்கை. [ஸந்துக்ஷித ப்ரணயஸாரரஸௌகபூர்ண:] அப்படிப் பட்ட பாவபந்தங்கள் ப்ரணயரஸத்தை வளரச்செய்யுமாயிற்று.

* உயர்வற வுயர் நலம் * வீடுமின் முற்றவும் * பத்துடை யடியவர்க்கெளியவன் * பிறவித்துயரற * பொருமாநீள்படை * என்னுமிவைபோல்வனவான திருவாய்மொழிகளில் ஸாதாரண பக்திரஸம் விளங்கு மத்தனையல்லது ப்ரணயரஸம் விளங்கமாட்டாதிறே. * அஞ் சிறையமட நாராய் * மின்னிடை மடவார்கள் * வேய்மரு தோளிணை * முதலான திருவாய் மொழிகளிலேயாயிற்று அத்புத பாவபந்த ஸந்துக்ஷித ப்ரணயஸாரம் விளங்குவது. அப் படிப்பட்ட ப்ரணயம் மீதூர்ந்து வெளிவரும் ஸ்ரீ ஸூக்திகளில் நவரஸமும் பொலிய நிற்கு மிறே. நவரஸங்களுள், ச்ருங்காரம் வீரம் கருணம் அத்புதம் பயாநகம் சாந்தி (-பக்தி) ஆகிற இந்த ரஸங்கள் ஒரோதிருவாய்மொழிகளில் ப்ரதானமாகப் பொதிந்திருக்கும்; மற்ற ஹாஸ்ய பீபத்ஸ ரௌத்ரரஸங்கள் ஓரோவிடங்களிலே மறைய நின்று சிறிது சிறிது தலைகாட்டி நிற்கும். * வீடுமின்முற்றவும் * சார்வேதவநெறிக்கு * கண்ணன் கழலிணை * முதலான திருவாய்மொழிகளிலே பக்திரஸம் தலையெடுத்திருக்கும். * மின்னிடை மடவார்கள் * * நங்கள் வரிவளை * வேய் மரு தோளிணை * முதலான திருவாய் மொழிகளிலே ச்ருங்கார ரஸம் தலையெடுத்திருக்கும். * மாயாவாமனனே * புகழு நல்லொருவன் * நல்குரவுஞ் செல்வும் * முதலான திருவாய் மொழிகளிலே அத்புதரஸம். * உண்ணிலாவிய வைவரால் * இத்தியாதிகளிலே பயாநக ரஸம். * ஊரெல்லாந்துஞ்சி * வாயுந்திரையுகளும் * ஆடியாடி யகங்கரைந்து * இத்யாதிகளிலே கருணாரஸம். * குரவையாய்ச்சியரோடு கோத்ததும் * வீற்றிருந்தேழுலகும் * இத்தியாதிகளிலே வீரரஸம். ஆக இங்ஙனே நாநாரஸங்கள் பொதிந்த ஸ்ரீஸூக்திராசிகளை யருளிச்செய்யும் முகத்தாலே ரஸௌக பரிபூர்ணராயிருப்ப ராய்த்து ஆழ்வார்.

[வேதார்த்த ரத்ந நிதி:] கடல் ரத்நாகரமாகையாலே ரத்நநிதியாயிருக்கும். பராங்குச பயோநிதியும் அப்படியேயிருக்கிறபடி பாரீர். * ஓதம்போல் கிளர் வேத மென்றும் * ச்ருதி ஸாகர மென்றும் சொல்லுகிறபடியே கடல் போன்றுள்ள வேதசாஸ்த்ரங்களிலே அல்ப ஸாரமாயும் ஸாரமாயும் ஸாரதரமாயு மிருக்கின்ற அர்த்தங்கள் போக ஸாரதமங்களாகவுள்ள அர்த்தங்களே ரத்நமாகும். * த்ரைகுண்ய விஷயா வேதா: * என்கிறபடியே எல்லாம் கலந்த கட்டியாயிருக்கும் வேதங்கள். ஸத்வரஜஸ்தமோ குணங்களாகிற மூன்று குணங்களிலும் ஊன்றினவர்களுக்கு அபேக்ஷிதங்களான விஷயங்களை யெல்லாம் வெளியிடு மவையிறே வேதங்கள், * மாற்றங்களாய்ந்து கொண்டு மதுசூதபிரானடிமேல் குருகூர்ச் சடகோபன் சொன்ன சொற்களிலே ஸாரதமமான பொருள் தவிர வேறொன்றும் அவகாசம் பெறுமை யாலே எல்லாம் ரத்நங்களாயிருக்கும். அப்படிப்பட்ட ரத்நங்களுக்கு நிதியாயிருப்ப ராய்த்து ஆழ்வார்.

[அச்யுத திவ்யதாம] * மாலுங் கருங்கடலே! என்னோற்றாய்? வையகமுண்டு ஆலினிலைத் துயின்ற வாழியான்—கோலக் கருமேனிச் செங்கண்மால் கண் படையுள், என் றுந் திருமேனி நீ தீண்டப் பெற்று * (முதல் திருவந்தாதி) என்கிறபடியே எம்பெருமா னுக்கு திவ்யாலயமாயிருக்கும் கடல். ஆழ்வாரும் அப்படியேயா யிருப்பர். * கல்லுங் கனைகடலும் வைகுந்தவானாடும் புல்லென்றொழிந்தனகொல் ஏபாவம்!, வெல்ல நெடியான் நிறங்கரியான் உள்புகுந்து நீங்கான், அடியேனதுள்ளத்தகம் * கொண்டல் வண்ணன் சுடர் முடியன் நான்கு தோளன் குனிசார்ங்கன் ஒண்சங்கதை வாளாழியானொருவன் அடியேனுள் ளானே * என்கிறபடியே ஆழ்வார் எம்பெருமானுக்கு நித்யநிகேதநமாயிருப்பரிறே. * இவையு மவையு முவையுமென்கிற திருவாய்மொழியிலே இதுதன்னை விசதமாகக் காணலாம்.

[அஸீமபூமா] बहो: भाव:-பூமா; ப்ருஹத்த்வ மென்றபடி. "बृहत्त्वं च स्वरूपेण गुणैश्च यत्रान-वधिकातिशयम्" என்று ஸ்ரீ பாஷ்யத்தி லருளிச்செய்தபடியே ஆகாரத்தாலும் குணத்தாலும் த்விவிதமா யிருக்குமிறே ப்ருஹத்த்வம். பெரிய மலை, பெரியகுளம், பெரிய மாளிகை என்றால் அங்கே விவக்ஷிதமான பெருமை ஆகாரத்தினாலாகும். பெரியமனிசர் என்று சில மஹா புருஷர்களைச் சொல்லுவோமாகில் குணங்களினாலாகிய பெருமையே அங்கு விவக்ஷிதமாகும். ஆக இப்படி இருவகைப்பட்ட பெருமையில் ஆகாரப்ரயுக்தமான பெருமை கடலுக்கு ஆனைப் போலே குணப்ரயுக்தமான பெருமை ஆழ்வார்க்காயிற்று. * அருள்கொண்டாயிரமின் தமிழ் பாடினா னருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே * என்னும்படியாய் எல்லைகாணவொண்ணாத க்ருபாகுண மொன்றின் பெருமை போதுமே.

ஆக நான்கு விசேஷணங்களினால் நம்மாழ்வார்க்கும் கடலுக்கும் ஸாதர்மியம் நிர்வஹிக்கப்பட்டதாயிற்று. இப்படிப்பட்ட பராங்குசபயோதி: ஜீயாத்—நித்ய ஸ்ரீர் நித்யமங்களமாக வாழவேணு மென்றதாயிற்று. (3)

यन्मङ्गलाय महते जगतामुशन्ति त्रैविष्टपान्यपि पदानि यदाश्रयाणि ।
वन्दामहे सरसिजेक्षणमद्वितीयं वेदान्तवेद्यमनिदम्प्रथमं महस्तत् ॥४॥

யந்மங்கலாய மஹதே ஜகதா முசந்தி
த்ரைவிஷ்டபாந்யபி பதாநி யதாச்ரயாணி,
வந்தாமஹே ஸரஸிஜேக்ஷண மத்விதீயம்
வேதாந்த வேத்யம் அநிதம்ப்ரதமம் மஹஸ் தத்: (4)

யத் ஜகதாம் மஹதே மங்களாய உசந்தி த்ரைவிஷ்டபாநி பதாநி அபி யத் ஆச்ரயாணி, தத் ஸரஸிஜேக்ஷணம் அத்விதீயம் வேதாந்த வேத்யம் அநிதம்ப்ரதமம் மஹஃ வந்தாமஹே.

பகவானாகிற யாதொரு தேஜஸ்ஸை, உலகங்களினுடைய மிகுந்த மங்களத்தின் பொருட்டு [மஹா மங்களகாமாக என்றபடி] தத்வஜ்ஞானிகள் அபிப்ராயப்படுகிறார்களோ, மூவுலகங்களிலுமுள்ள ஸ்தாந விசேஷங்களெல்லாம் யாதொரு தேஜஸ்ஸை ஆதாரமாகவுடையவைகளோ, அப்படிப் பட்டதும் செந்தாமரை போன்ற திருக்கண்களையுடையதும் ஒப்பற்றதும் வேதாந்தங்களினால் அறியக்கூடியதும் அநாதிஸித்தமுமான தேஜஸ்ஸை ஸ்தோத்ரம் செய்கிறோம்.

* * * இந்த ச்லோகம் முதலாக எம்பெருமானை ஸ்தோத்ரம் பண்ணத் தொடங்குகிறார். * தேஜஸாம் ராசி மூர்ஜிதம் * என்றும் * குழுமித் தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருரு * என்றும் சொல்லுகிறபடியே, தேஜஸ்ஸென்று வேறொரு பதார்த்தமாய் அதையுடையவன் எம்பெருமான் என்று இரண்டுபடச் சொல்லும்படியன்றிக்கே, தேஜஸ் தத்வமே எம்பெருமானென்று அத்வைதம் பேசலாம்படியிறே எம்பெருமானுடைய தேஜோவிசேஷமிருப்பது. ஆகவே இந்த ச்லோகத்தில் எம்பெருமானை தேஜஸ்ஸாகவே அத்யவஸித்து அருளிச்செய்கிறார். யாதொரு தேஜஸ்ஸானது ஸகல லோகங்களுக்கும் மங்களப்ரதமாயிரா நின்றதோ, த்ரிலோகத்திலுமுள்ள ஸகல ஸ்தானங்களும் யாதொரு தேஜஸ்ஸை ஆதாரமாகக் கொண்டு நிலைபெற்றிருக்கின்றனவோ, யாதொரு தேஜஸ்ஸானது தாமரைபோன்ற திருக்கண்கள் பொலிய நின்றதாய் வேதாந்தங்களைக் கொண்டே அறிய நின்றதாய் * ஒத்தார்மிக்காரையிலையாயமாமாயா! * என்கிறபடியே நிஸ்ஸமாப்யதிகமாய் சாச்வதமாய் விளங்குகின்றதோ, அந்த தேஜஸ்ஸை வணங்குகிறோம், (அல்லது) துதிக்கிறோம் என்றாராயிற்று.

உசந்தி— "வச - காந்தௌ; காந்திரிச்சா" என்பர் வையாகரணர். வஷ்டி என்பது ஏகவசநம். இந்த தாதுவை வேதத்தில் தவிர லோகத்தில் ப்ரயோகிக்கலாகா தென்று அநுசாஸநமிருந்தாலும் கவிகள் பெரும்பாலும் ப்ரயோகித்து வருகிறார்கள்.

[அநிதம்ப்ரதமம்] इदंप्रथमं न भवति ॥ அநாதிஸித்த மென்றபடி. * பதிம் விச்வஸ்ய * என்கிற ச்ருதியில் சாச்வதம் என்றுள்ளதை யெடுத்துப் பேசினபடி. (4)

पीताम्बरं वरदशीतलदृष्टिपातम् आजानुलम्बिभुजमायतकर्णपाशम् ।
तन्मेघमेचकमुदग्रविशालवक्षः लक्ष्मीधरं किमपि वस्तु ममाविरस्तु ॥५॥

பீதாம்பரம் வரதசீதலத்ருஷ்டிபாதம்
ஆஜாநுலம்பிபுஜம் ஆயதகர்ணபாசம்,
தந்மேகமேசகமுதக்ரவிசாலவக்ஷ·
லக்ஷ்மீதரம் கிமபி வஸ்து மமாவிரஸ்து. 5

பீதாம்பரம் வரதசீதலத்ருஷ்டிபாதம் ஆஜாநுலம்பிபுஜம் ஆயதகர்ணபாசம் மேகமேசகம் உதக்ர விசாலவக்ஷः லக்ஷ்மீ தரம் தத் கிமபி வஸ்து மம ஆவிரஸ்து	பீதகவாடையுடையதும் வரப்ரதமாய் சீதலமான கடாக்ஷபாதத்தையுடையதும் திருமுழந்தாள் வரை தொங்குகின்ற திருக்கைகளை யுடையதும் நீண்ட திருக்காதுகளையுடையதும் மேகம்போல் சாமள மானதும் உன்னதமும் விசாலமுமான திருமார்பை யுடையதும் ஸ்ரீ மஹாலக்ஷ்மியைத் தரிப்பதுமான (எம்பெருமானுகிற) அந்த ஒரு வஸ்து, அடியேன் பால் ஆவிர்ப்பவிக்க வேணும்.

* * * கீழ்ச்லோகத்திலே ஸரஸிஜேக்ஷணமென்று ஸம்க்ஷேபதः ப்ரஸ்துதமான திவ்ய மங்கள விக்ரஹ யோகத்தை விசேஷேண அநுபவித்து அருளிச் செய்கிறார் இதில். இதிலும் எம்பெருமானுடைய: திருநாமத்தை ஸாக்ஷாத்தாக நிர்தேசியாதே 'கிமபி வஸ்து' என்று அநிர்வசநீயதயா அருளிச் செய்கிறார்.

* பெண்ணின் வருத்தமறியாத பெருமானரையில் பீதக வண்ணவாடை கொண்டு என்னை வாட்டந் தணிய வீசீரே * என்று ஆண்டாள் போல்வார் விரும்பி அர்த்திக்க அவர் களுக்கு அருள் செய்வதற்காகப் பீதகவாடை யணிந்தும், * தொண்டரோர்க் கருளிச் சோதிவாய் திறந்து உன் தாமரைக் கண்களால் நோக்காய் * என்று வேண்டு மடியவர்க்கு அங்ஙனமே ஸகலாபீஷ்ட ப்ரதமாய் நின்று குளிர நோக்கும் திருக்கண்பார்வை கொண்டும், முழந்தாளளவும் நீண்ட திருக்கைகளோடு கூடியும், தோளளவும் தளதளென்று தொங்கு கின்ற திருச் செவிகள் கொண்டும், நீலமேகநிபச்யாமமாயும், நீண்டு அகன்ற திருமார்பை யுடைத்தாயும், * அகல கில்லேனிறையு மென்று அலர்மேல் மங்கையுறை மார்பா! * என்கிறபடியே இடைவிடாது திருமார்பிலே திருமாமகள் திகழப்பெற்று மிராநின்ற ஒரு விலக்ஷண வஸ்து என் கண்முன்னே காட்சிதர வேணுமென்கிறாராயிற்று.

* கர்ணபாச மென்ற விடத்தில் பாச சப்தம் சிறந்த தென்னும் பொருளில் வந்தது.

* உதக்ரவிசால வக்ஷோலக்ஷ்மீதரம் * என்று ஸமஸ்தபதமாகவும் கொள்ளலாம். அப்போது, வக்ஷஸ்ஸிலே லக்ஷ்மியைத் தரிப்பதாகப்பொருள். ... (5)

यत्तत्वमक्षरमदृश्यमगोत्रवर्णम् अग्राह्यमव्ययमनीदृशमद्वितीयम् ।
ईशानमस्य जगतो यदणोरणीयः तद्वैष्णवं पदमुदारमुदाहरामः ॥६॥

யத் தத்வமக்ஷரமத்ருச்யமகோத்ரவர்ணம்
அக்ராஹ்யமவ்யயமநீத்ருசமத்விதீயம்,
ஈசாநமஸ்ய ஜகதோ யதணோரணீய:
தத் வைஷ்ணவம் பதமுதாரமுதாஹராம: 6

வைஷ்ணவம் யத் பதம் தத்வம் அக்ஷரம் அத்ருச்யம் அகோத்ரவர்ணம் அக்ராஹ்யம் அவ்யயம் அநீத்ருசம் அத்விதீயம் யத் அஸ்ய ஜகத: ஈசாநம் அணோ: அணீய: உதாரம் தத் உதாஹராம:.

எம்பெருமானுடையதான யாதொரு ஸ்வரூபமானது ஸத்யமானதோ, நிர்விகாரமானதோ, கண்ணால் காணக் கூடாததோ, நாமமும் ரூபமுமில்லாததோ, அநுமானம் முதலியவற்றைக்கொண்டு க்ரஹிக்கமுடியாததோ, விநாசமில்லாததோ, நாம் கண்களால் காணும் வஸ்துக்கள் போலல்லாததோ; இணையில்லாததோ; யாதொரு ஸ்வரூபமானது இந்த ஜகத்துக்கு ஈச்வரமானதோ, அணுவான வஸ்துக்களிற் காட்டிலும் மிகவும் அணுவானதோ, மஹத்தானதோ, அப்படிப்பட்ட பகவத் ஸ்வரூபத்தை ஸ்துதிக்கிறோம்.

யாதொரு பகவத் ஸ்வரூபமானது ஸத்யமாயும் அநந்தமாயும் * என்றேனும் கட்கண்ணால் காணாத அவ்வுரு * என்கிறபடியே மாம்ஸ சக்ஷுஸ்ஸாலே காணக்கூடாததாயும் நாமரூப ரஹிதமாயும் அநுமாநாதிகளுக்கும் அவிஷயமாயும் அஸங்குசித கல்யாணகுண விசிஷ்டமாயும், இப்படிப்பட்டதென்று ஒருபடி நிரூபித்துச் சொல்ல முடியாததாயும் [அதாவது, அபரிச்சிந்நஸ்வரூப குண விபூதிகமாயும் சேதநா சேதந விஸஜாதீயமாயும்]. ஸமாப்யதிக வஸ்து வேறொன்றில்லாததாயும், * பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் * இத்யாதிப் படியே சேதநா சேதநாத்மக ஸகல ஜகத்துக்கும் நியாமகமாயும், அணுவைக் காட்டிலும் மிகவும் அணுபூதமாயும், [அதாவது, * பரந்த தண்பரவையுள் நீர்தொறும் பரந்துளன், பரந்த அண்டமிதென நிலவிசும் பொழிவற, கரந்த சிலிடந்தொறு மிடந்திகழ் பொருடொறும், கரந்தெங்கும் பரந்துளனிவை யுண்டகரனே * என்கிறபடியே மிகச் சிறிய வஸ்துக்களிலேயும் உள்ளே ப்ரவேசிப்பதற்கு அநுகுணமான நிலையையுடையதாய்,] * மஹதோ மஹீயஸ்ஸாயுமிரா நின்றதோ, அப்படிப்பட்டதான விஷ்ணு ஸ்வரூபத்தை வாய்கொண்டு பேசப்புகுகிறோமென்கிறார்.

[உதாரம்] * உதாரோ தாத்ரு மஹதோ: * என்பது நிகண்டு. உதாத்தம் என்றொரு பாடமும் காண்கிறது. அந்த பகவத்ஸ்வரூபத்தை உயர்த்திச் சொல்லுகிறோ மென்கை. (6)

आम्नायमूर्धनि च मूर्धनि चोर्ध्वपुंसां यद्धाम वैष्णवमभीक्ष्णतरं चकास्ति ।
तन्मादृशामपि च गोचरमेति वाचो मन्ये तदीय मिदमाश्रितवत्सलत्वम् ॥७॥

ஆம்நாயமூர்த்தநி ச மூர்த்தநி சோர்த்வபும்ஸாம்
யத் தாம வைஷ்ணவமபீக்ஷ்ணதரம் சகாஸ்தி,
தந்மாத்ருசாமபி ச கோசரமேதி வாச:
மந்யே ததியமிதமாச்ரிதவத்ஸலத்வம். 7

யத் வைஷ்ணவம் தாம ஆம்நாய மூர்த்தநி ஊர்த்வபும்ஸாம் மூர்த்தநி ச அபீக்ஷ்ணதரம் சகாஸ்தி, தத் மாத்ருசாம் வாச: அபிச கோசரம் ஏதி, இதம் ததீயம் ஆச்ரித வத்ஸலத்வம் மந்யே.

யாதொரு பகவத் தேஜஸ்ஸானது வேதாந்தத்திலும், பூர்வ புருஷர்களின் திருமுடியிலும், மிகவும் விளங்குகின்றதோ, அந்த தேஜஸ்ஸானது என் போன்றவர்களுடைய வாக்குக்கும் விஷயமாயிருக்கையை அடைகின்றது; இப்படி யாவதானது, அவ்வெம்பெருமானுடையதான ஆச்ரித வாத்ஸல்ய கார்யம் போலும்.

* அம்மானாழிப் பிரானவ னெவ்விடத்தான் யானார் * என்கிறபடியே எம்பெருமானுடைய பெருமையையும் தம்முடைய சிறுமையையும் பார்த்து, அந்த உத்துங்க தத்துவமானது * நிறை யொன்றுமில்லாத நீசனேன் வாய்கொண்டு பேசும்படியானதாக அல்லாமலிருக்கச் செய்தேயும் என்னுடைய வாக்குக்கும் ஒருபடி விஷயமாகப் பெற்றதானது என்னே! பகவத் வாத்ஸல்யம் கரைபுரண்ட படியாய்த்து இது! என்கிறார்.

எம்பெருமானை ஒரு தேஜஸ்ஸாகவே பேசுகிறார். அந்தத் தேஜஸ்ஸு எப்படிப்பட்டதென்னில், அதன் உத்துங்கதையைப் பூர்வார்த்தத்தாலருளிச் செய்கிறார்; .வேதாந்தங்களிலும் நம்மாழ்வாருடைய திருமுடியிலுமே விளங்குவதாம் அந்த தேஜஸ்ஸு. * வேதாந்த விழுப் பொருளின் மேலிருந்த விளக்கு * என்கிறபடியே வேதாந்தமாகிற உபநிஷத்துக்களிலேயே விளங்குதலால் * ஆம்நாயமூர்த்தநி * என்றது.

[ஊர்த்த்வபும்ஸாம் மூர்த்தநி ச] ஊர்த்த்வ புருஷ ரென்பது நம்மாழ்வாரையாயிற்று. * திருமாலிருஞ்சோலை மலையே திருபாற்கடலே என் தலையே * என்றும் * என்னுச்சியுளானே * என்றும் அருளிச் செய்தாரிறே அவர்தாம். வரதராஜ ஸ்தவத்திலே * யச்ச மூர்த்தா சடாரேঃ * என்று இவர்தாமே முக்த கண்டமாக அருளிச் செய்ததும் காண்க. ஆக விப்படி வேதத்தினுச்சியிலும் த்ராவிட வேதத்ரஷ்டாவான ஆழ்வாருடைய திருமுடியிலுமே விளங்காநிற்கு மெம்பெருமான் என்னுடைய இளைய புன் கவிதைக்கும் இலக்காகிறானென்றால் இது அவன்றன்னுடைய வாத்ஸல்ய பரீவாஹ மத்தனையிறே! என்றாராயிற்று.

ஸ்தோத்ர ரத்நத்தில் ஆளவந்தார் *யந்மூர்த்நி மே ச்ருதி சிரஸ்ஸு ச பாதி* என்று தம்முடைய திருமுடியிலும் எம்பெருமான் விளங்குவதாக அருளிச் செய்திருக்கையால் அவ்வாசிரியர் தம்மையும் இங்கு ஊர்த்வபும்ஸாம் என்பதனால் விவக்ஷிக்கத் தகும்.

கோசரம் என்றது கோசரத்வ மென்றபடி. பாவப்ரதான நிர்தேசமென்று கொள்க. இதம் ஆச்ரித வத்ஸலத்வ ப்ரயுக்தம் என்ன வேண்டியிருக்க ஆச்ரித வத்ஸலத்வ மென்றே அருளிச்செய்தது கார்ய காரணங்களுக்கு அபேதோபசார மிருந்தபடி. எம்பெருமான் தோஷ போக்ய ஞகையாலே என்னுடைய துஷ்ட வாக்குகளைக் கொண்டு நான் நிர்ப்பயமாக ஸ்துதி செய்யப் புகுந்தேனென்பது பரம தாத்பர்யம். (7)

जानन्नपीह किल मामनपत्रपिष्णुः विष्णोः पदप्रणयिनीं गिरमाद्रियेऽहम् ।

न श्वावलीढमपि तीर्थमतीर्थमाहुः नोदन्यतापि च शुना किल लज्जितव्यम् ॥८॥

ஜாநந்நபீஹ கில மாமநபத்ரபிஷ்ணு:
விஷ்ணோ: பதப்ரணயிநீம் கிரமாத்ரியேஹம்,
ந ச்வாவலீடமபி தீர்த்தமதீர்த்தமாஹு:
நோதந்யதாபி ச சுநா கில லஜ்ஜிதவ்யம். **8**

அஹம் மாம் ஜாநந் அபி அநபத்ரபிஷ்ணுঃ விஷ்ணோঃ பதப்ரணயிநீம் கிரம் இஹ ஆத்ரியே; தீர்த்தம் ச்வ அவலீடம் அபி அதீர்த்தம் நாஹுঃ கில; உதந்யதா சுநா அபிச ந லஜ்ஜிதவ்யம் கில.

அடியேன் என்னை அஜ்ஞனாகத் தெரிந்துகொண்டவனாயிருந்தும் வெட்கப்படாதவனாய் எம்பெருமானுடைய திருவடியில் ப்ரேமம் பொருந்திய வாக்கை இங்குத் தொடுக்க விரும்புகிறேன்; இயற்கையாகவே பவித்திரமான கங்கை முதலிய தீர்த்தம் நாயினால் நக்கப்பட்டபோதிலும் அதனைத்தீர்த்த மல்லாததாகச் சொல்லமாட்டார்களல்லவா; தாஹங்கொண்ட நாயினாலும் நாணப்படத் தகுதியில்லையே.

* * * நைச்யாநுஸந்தானத்தின் எல்லையிலே நின்று அருளிச் செய்வதாயிற்று இந்த ச்லோகம். * மாசூணாவான்கோலத்தமரர்கோன் வழிப்பட்டால் மாசூணா வுனபாத

ஊர்ச்சோதி மழுங்காதே * என்கிறபடியே மேலானவர்கள் துதித்தாலுங்கூட எம்பெருமானுடைய பெருமைக்கு மழுங்குதல் விளையுமென்ற நிற்க, அல்பஜ்ஞான நீர் துதிக்கப்புக்கால் நிறக்கேடாகுமன்றோ வென்று சிலர் சொல்லுவதாகக் கொண்டு அதற்கு ஸமாதான முரைப்பதாயுள்ளது இந்த ச்லோகம்.

என்னுடைய அல்பஜ்ஞத்வமோ அஜ்ஞத்வமோ எனக்குத் தெரியாமையில்லை; நன்கு தெரிந்திருந்தும் நான் வெட்கமின்றியே பகவத்விஷய ஸ்துதியிலே ப்ரவர்த்தியாநின்றேன்; எனது புல்லியவாக்கில் புகுந்து புறப்படுவதால் பகவத்விஷயம் தூய்மை குன்றாதோ வென்னில்; குன்றாது; நிஹீநஜந்துக்களுள் மிகவும் நிஹீநமான நாயானது ஸ்வத: பரிசுத்தமான கங்கா தீர்த்தம் முதலிய புண்ய தீர்த்தத்தைத் தன்னுடைய நாவினால் அளைந்தவளவால் அந்தத் தீர்த்தத்திற்கு ஒரு அபரிசுத்தியும் விளையமாட்டாதன்றோ. வஸிஷ்ட சண்டாள விபாகமின்றிக்கே எல்லாரும் படிந்து குடைந்தாடலாம்படி பரம பவித்திரமாயிருந்துள்ள புண்ய தீர்த்தத்திற்கு நாய் தீண்டுதலால் ஒரு அசுத்தி விளையுமாகில் பகவத் விஷயத்துக்கும் என்னுடைய வாய் தீண்டுதலால் ஒரு அவத்யம் விளையும். அதற்கு ப்ரஸக்தியில்லாதாப்போலே இதற்கும் ப்ரஸக்தியில்லைகிடீர். விடாய் மிகுந்த அந்த நாய் தீர்த்தத்திலே வாய் வைக்க லஜ்ஜிக்கவும் மாட்டாதாப்போலே, பகவத் விஷயத்தைப் பேசியல்லது தரிக்ககில்லாத அடியேனும் பேசுவதற்கு லஜ்ஜிக்கவும் அவகாசமில்லை காணீர்.

பகவத் விஷயத்தைப் பேசுவதற்கு நானும் லஜ்ஜிக்க வேண்டுவதில்லை; அறிவிலியான நான் பேசினவளவால் அவ்விஷயந் தனக்கும் ஒரு அவத்யம் வாராது—என்றாராயிற்று. இவர்தாமே ஸ்ரீஸ்தவத்தில் * க்ஷோதீயாநபி துஷ்டபுத்திரபி * என்ற ச்லோகத்திலும் இங்ஙனே பணிச்செய்தது காண்க.

அபத்ரபிஷ்ணு: ந பவதீதி—அநபத்ரபிஷ்ணு:. * அலங்க்ருஞ் நிராக்ருஞ் * இத்யாதி பாணிநிஸூத்ரத்தாலே இஷ்ணுச் ப்ரத்யயம் ப்ராப்தமாய் 'அபத்ரபிஷ்ணு:' என்கிற ரூபம் ஸித்திக்கக்கடவது. [உதந்யதா] * अशनायोदन्यधनाया बुभुक्षापिपासागर्धेषु * என்கிற பாணிநிஸூத்ரத்தினால் क्यजन्तनिपातनम् ப்ராப்தமாய் 'உதந்யதி' என்று நிஷ்பந்நமாக, அது சத்ருப்ரத்யயாந்தமாய் 'உதந்யந்' என்றாகிறது; விடாயுடையவன் என்றபடி. அதன்மேல் த்ருதீயையில் 'உதந்யதா' என்றாகிறது. (8)

देवस्य दैत्यमथनस्य गुणेष्वियत्ता संख्या च वाङ्मनसगोचरमत्यभूताम् ।

अप्येवमण्वपि च तत्र ममार्तिशान्त्यै कीटस्य तृष्यत उदन्वति विप्रुषाऽलम् ॥९॥

தேவஸ்ய தைத்யமதநஸ்ய குணேஷ் வியத்தா
ஸங்க்யா ச வாங்மநஸ கோசரமத்யபூதாம்,
அப்யேவமண்வபி ச தத்ர மமார்த்தி சாந்த்யை
கீடஸ்ய த்ருஷ்யத உதந்வதி விப்ருஷாலம். 9

தைத்யமதநஸ்ய தேவஸ்ய குணேஷு ஸங்க்யா இயத்தா ச வாங்மநஸகோசரம் அத்யபூதாம்; ஏவம்அபி தத்ர அணு அபிச மம ஆர்த்திசாந்த்யை அலம்; த்ருஷ்யத: கீடஸ்ய உதந்வதி விப்ருஷா அலம்.

அஸுரநிரஸந சீலனான எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களில் எண்ணிக்கையும் இவ்வளவென்கையும் வாக்குக்கும் நெஞ்சுக்கும் எட்டுந் தன்மையைக் கடந்துவிட்டன; இப்படியானபோதிலும் அக்குணங்களில் அணுவளவும் அடியேனுடைய ஆர்த்தி தணிவதற்குப் போதும்; தாஹித்திருக்கின்ற புழுவுக்குக் கடலில் ஒரு திவலைமாத்திரத்தாலே பர்யாப்தி பிறக்குமிறே.

* * * எம்பெருமானே * உயர்வற வுயர்நல முடையவனென்னும்படி எண்ணில் பல்குணங்களுக்குக் கடல்போன்றிரா நின்றான்; அப்படிப்பட்ட அனந்த கல்யாண குணங்களைப் பேசித் தலைக்கட்டுகைக் கீடான ஜ்ஞான சக்திகள் அல்பமும் இல்லாதிருக்கிற நீர் அவனது திருக்குணங்களைப் பேசுவதில் இழியத் தகுமோவென்று சிலர் கேட்பதாக வைத்து, அது தகும் என்று ஸமர்த்திக்கிறார் இதில்.

ஆஸுரப்ரக்ருதிகளை அழித்தருளுமெம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களானவை தனித்தனியாயும் எண்ணமுடியாதவை, ஒரு திரளாகவும் எண்ணமுடியாதவை. கடுகு எள்ளு கொள்ளு என்றுள்ள பொருள்களைத் தனித்தனியே எண்ண முடியாமற் போனாலும் 'இருபது மரக்கால் கடுகு, முப்பது பதக்கு எள்ளு, நாற்பது மூட்டை கொள்ளு' என்றிப்படி ஒரு ஸமுதாய ரூபேண எண்ணி விடலாம்; அப்படியும் எண்ணமுடியாதவை பகவத் குணங்கள்; ஆயிருக்கச் செய்தேயும் சிறியஞானத்தனாகிய அடியேன் அந்த அனந்த கல்யாண குணங்களில் அணுமாத்ரமே பேசவல்லேன். அவ்வளவினால் அடியேனுடைய ஆர்த்திதீரும். விடாய்கொண்டதொரு க்ஷுத்ரஜந்துவானது கடலிலே வாய்வையா நின்றதென்றால் கடல் முழுவதையும் அது பருகவல்லதாகவேணுமோ? கடலில் ஒரு திவலை மாத்திரத்தைப் பருகினவளவால் அதனுடைய விடாய் அடங்கிப்போகின்றதன்றோ! அதுபோலவே கீடப்ராயனான அடியேனும் பகவத்குணங்களாகிற அமுதக்கடலிலே யதாசக்தி வாய்வைத்து எனக்குள்ள விடாய் தீரப்பெறுவேனத்தனை யென்கிறார்.

ஸ்தோத்ரரத்நத்தில் * யத் வா ச்ரமாவதி யதாமதிவாபி * என்கிற ச்லோகத்தின் பரமதாத்பர்யமே இந்தச்லோகத்தில் ஒருவகையாக ஸூசிதமாயிற்று. எம்பெருமானுடைய திருக்குணங்கள் பேசித் தலைக்கட்ட முடியாதவை யென்பதும் அவரவர்கள் பேசப்புகுவதெல்லாம் அவரவர்களின் அபிநிவேசம் ஒருவாறு தீர்வதற்கேயன்றி பகவத் குணங்களை எல்லைகண்டுவிடுவதற்காகவன்றென்பதும் இதனால் விளக்கப்பட்டதாகும். (9)

प्रेमार्द्रविह्वलगिरः पुरुषाः पुराणाः त्वां तुष्टुवुर्मधुरिपो ! मधुरैर्वचोभिः ।

वाचो विडम्बितमिदं मम नीचवाचः क्षान्तिस्तु ते सविषया मम दुर्वचोभिः ॥१०॥

ப்ரேமார்த்ரவிஹ்வலகிர: புருஷா: புராணா:
த்வாம் துஷ்டுவுர் மதுரிபோ மதுரைர் வசோபி:,
வாசோ விடம்பிதமிதம் மம நீசவாச:
க்ஷாந்திஸ் து தே ஸவிஷயா மம துர்வசோபி:. 10

ஹே மதுரிபோ! ப்ரேம ஆர்த்ர விஹ்வல கிர: புராணா: புருஷா: மதுரை: வசோபி: த்வாம் துஷ்டுவு:; நீசவாச: மம இதம் வாசோ விடம்பிதம்; மம துர்வசோபி: தே க்ஷாந்திஸ் து ஸவிஷயா.

வாரீர் மதுஸூதனனான பெருமாளே! பக்தியினால் கனிந்து தழதழத்த குரலையுடைய ஆழ்வார்களும் ஆசாரியர்களுமான முன்னோர்கள் இனிய ஸ்ரீஸூக்திகளாலே தேவரீரைத் துதித்தார்கள்; புல்லிய வாக்குக்களையுடைய அடியேனுடைய இந்த ஸ்தோத்ரமானது அந்த முன்னோர்களின் வாக்கின் அநுகாரரூபமாமத்தனை; அடியேனுடைய துருக்திகளினால் தேவரீருடைய க்ஷமாகுணம் இலக்குப் பெற்றதாகின்றது.

* * * ஏற்கெனவே எம்பெருமானை ஸ்தோத்ரம் செய்தருளின மஹான்களின் ஸ்ரீஸூக்திஸரணியை ஒருபடி அநுகரித்தே தாம் ஸ்துதிக்க இழிந்ததாகவும், தம்முடைய இந்த ஸ்தவத்தால் எம்பெருமானுடைய க்ஷமாகுணம் மிகவும் நிறம் பெறுமென்பதாகவும் இதில் அருளிச்செய்கிறார்.

[ப்ரேமார்த்ர விஹ்வல கிர:] *உள்ளெலா முருகிக் குரல் தழுத்தொழிந்தே னுடம்பெலாங் கண்ணநீர் சோர * என்றும் * வேவாரா வேட்கை நோய் மெல்லாவியுள்ளுலர்த்த *

என்றும் * ஆராவமுதே! அடியேனுடலம் நின்பாலன்பாயே நீராயலைந்து கரைய வுருக்குகின்ற * என்றும் ஹார்தமான ப்ரேமத்தாலே நெஞ்சு கனிந்து குரல் தழதழத்துப் பேசுகின்ற ஆழ்வார்களைத் திருவுள்ளம்பற்றியே "ப்ரேமார்த்ரவிஹ்வலகிர:" என்றருளிச் செய்தது. அப்படிப்பட்ட ஆழ்வார்களும் அவர்களைப் பின் சென்று பேச வல்லவர்களான ஆளவந்தார் முதலிய ஆசாரியர்களும், [மதுரைர் வசோபி: த்வாம் துஷ்டுவு:] * கேட்டு ஆரார் வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே * என்றும் * தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன் * என்றும் * குழலின்மலியச் சொன்னவோராயிர மென்றும் அந்த ஸ்ரீஸூக்திகளின் மாதுர்யம் அவர்களையே மெய்மறந்து பேசப் பண்ணிற்றிறே; அப்படியாக வன்றோ தேவரீரை ஸ்துதித்தார்கள்.

[வாசோ விடம்பித மிதம் மம நீசவாச:] அவர்களுக்குப்போல ஞானமோ பக்தியோ விரக்தியோ அடியேனுக்கு இறையுமில்லை; என்னுடைய வாக்கும் ரஸிகர்கள் காது கொடுத்துக் கேட்கத்தக்கதா யிராது; ஆயினும் முன்னோர்கள் பேசின விஷயங்களையே நான் அநுகரித்துப் பேசா நின்றேனத்தனை; பராங்குச பரகாலாதிகளான ஆழ்வார்களும் ஆளவந்தார் போல்வாரான ஆசார்யர்களும் அருளிச்செய்யாத அர்த்தங்களில்லை; அவற்றின் அநுவாதமே என்னுக்திகளிலுள்ளது என்கிறார்.

[மம துர்வசோபி: தே க்ஷாந்திஸ்து ஸவிஷயா] 'ஆழ்வான்!, உம்முடைய ஸ்தவத்திலே அர்த்தமும் அபூர்வமாக இல்லை. சப்தமும் மதுரமாக இல்லை யென்கிறீர்; இப்படியிருக்க, ஏதுக்கு வீண் ப்ரயாஸங்கொண்டு ச்லோக ரசனையிலே யிழிந்தீர்?' என்று எம்பெருமான் கேட்பதாகக் கொண்டு அதுதனக்கு உத்தரமுரைக்கிறார்— அடியேன் ஒன்றும் பேசாதொழியில் தேவரீருடைய பொறுமைக்குணத்திற்கு ஒன்றும் விஷயமில்லையாய்விடுமே யென்கிறார். முன்னோர்க ளருளிச்செய்த ஸ்ரீஸூக்திகளெல்லாம் குற்றங் குறைகள் சிறிது மற்றுக் குணங்கள் நிரம்பியிருப்பதனால் அவற்றில் தேவரீருடைய க்ஷமாகுணத்திற்கு இலக்குக்கிடையா தொழிந்தது. குணலேசமின்றியே அவத்யங்களே வடிவெடுத்திருக்கும்படி பேச வல்லவன் அடியேனே யாதலால் அடியேனுடைய உக்திகளினாலேயாயிற்று தேவரீருடைய க்ஷமாகுணம் இலக்குப்பெற்றதாவது என்கிறார். இங்ஙனே யருளிச்செய்வதன் கருத்து யாதெனில்; அடியேன் விண்ணப்பம் செய்வது தப்பும் தவறுமா யிருந்தாலும் சீறியருளாதே க்ஷமித்தருள வேண்டுமென்கிற ப்ரார்த்தனையேயாம். (10)

आज्ञा तवात्रभवती विदिता त्रयी सा तां हि प्रमाणमुपजग्मुरतीन्द्रियेऽर्थे ।
आभासभूयमभियान्त्यपराणि दोषैः एषा तु दोषरहिता महिता पुराणी ॥११॥

ஆஜ்ஞா தவாத்ரபவதீ விதிதா த்ரயீ ஸா
தாம் ஹி ப்ரமாண முபஜக்முரதீந்த்ரியேர்த்தே,
ஆபாஸபூய மபியாந்த்யபராணி தோஷை:
ஏஷா து தோஷரஹிதா மஹிதா புராணீ. 11

அத்ரபவதீ ஸா த்ரயீ தவ ஆஜ்ஞா விதிதா, தாம் அதீந்த்ரியே அர்த்தே ப்ரமாணம் உபஜக்மு: ஹி; அபராணி தோஷை: ஆபாஸபூயம் அபியாந்தி; ஏஷா து புராணீ தோஷரஹிதா மஹிதா.

(எம்பெருமானே!,) பூஜிக்கத் தகுந்ததும் ப்ரஸித்தமுமான வேதமானது தேவரீருடைய கட்டளையாக ப்ரஸித்தி பெற்றுள்ளது; அந்த வேதத்தை இந்திரியங்களுக் கெட்டாத பரோக்ஷவிஷயங்களில் ப்ரமாணமாக (வைதிகர்கள்) அங்கீகரித்தார்கள்; வேதம் தவிர்ந்த மற்ற பாஹ்ய சாஸ்த்ரங்கள் பலவகைத் தோஷங்களினால் ஆபாஸத் தன்மையை யடைந்து அப்ராமாணிகமாகின்றன; இந்த வேதமோ வென்றால் அநாதிஸித்தமாய் தோஷமற்றதாய் ப்ரமாணங்களுள் தலையாகக் கொண்டாடப்பட்டது.

கீழ்க் கழிந்த பத்து ச்லோகங்களும் இந்த ஸ்தவத்திற்கு அவதாரிகைபோல் சென்றன. ஸ்வாசார்யரான எம்பெருமானாரை வணங்கி, பரமாசார்யரான ஆழ்வாரை இறைஞ்சி, ஸ்தவத்திற்கு விஷய பூதனான எம்பெருமானை யநுஸந்தித்து அவனுடைய பெருமையையும் தம்முடைய சிறுமையையும் பார்த்தவாறே இந்த ஸ்தோத்ர ப்ரவ்ருத்தி அவனுடைய வாத்ஸல்ய கார்ய மத்தனையென்று அறுதியிட்டு, எம்பெருமானைப் பேசியல்லது தரிக்கமாட்டாத தம்முடைய ஆர்த்தியை ஆவிஷ்கரித்து, எம்பெருமானுடைய க்ஷமாகுணத்துக்கு உத்தம்பகமாயிருக்கையாலே இந்த ஸ்தோத்ர ப்ரவ்ருத்தி யுக்தமே யாகுமென்றும் நிஷ்கர்ஷித்து, அதற்குமேல் ஸ்தோத்திரத்திலே ப்ரவ்ருத்தராய் அதற்குறுப்பாக ப்ரமாண நிஷ்கர்ஷம் பண்ணுகிறார் இதில். ஆழ்வார் திருவாய்மொழியில் அருளிச்செய்யும் அர்த்த விசேஷங்களெல்லாம் வேத வேதாந்த சாஸ்த்ர ஸித்தமானவை யென்பதைக் காட்டும் பொருட்டுத் திருவாய்மொழியின் தொடக்கத்திலேயே * உளன் சுடர்மிகு சுருதியுள் இவையுண்டசுரனே * என்றருளிச் செய்தாப்போலே இவர்தாமும் இதுமுதலான ஸ்தவங்களிலே தாம் அருளிச் செய்யப்புகுகிற அர்த்த விசேஷங்களெல்லாம் வேதஸித்தமத்தனை யென்று ஸூசிப்பிப்பதற்காக வேதமே பரம ப்ரமாணமென்று முந்துற முன்னம் ஸூதலித்தருளுகிறார். *श्रुतिः स्मृतिर्ममैवाज्ञा यस्तामुल्लंघ्य वर्तते । आज्ञाच्छेदी मम द्रोही मद्भक्तोऽपि न वैष्णवः = ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ் தாமுல்லங்க்ய வர்த்ததே, ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோபி ந வைஷ்ணவ: * என்கிற திருமுகப் பாசுரப்படியே வேதம் எம்பெருமானுடைய ஆஜ்ஞாரூபமாகையாலே [ஆஜ்ஞா தவாத்ரபவதீ விதிதா த்ரயீ ஸா] என்கிறார். அரசனது கட்டளையை மீறி நடப்பார்க்கு ராஜதண்டனை நேருகிறாப்போலே எம்பெருமானுடைய கட்டளையான சாஸ்த்ரத்தை மீறி நடப்பார்க்கும் அந்த சாஸ்த்ரத்திற்கு விருத்தமாகப் பேசுகின்றவர்களுக்கும் இங்குமங்கும் தண்டம் தப்பாதென்று காட்டினபடி.

[தாம் ஹி ப்ரமாண முபஜக்மு ரதீந்த்ரியோர்த்தே] ப்ரமாதாவானவன் ஒரு ப்ரமாணத்தைக் கொண்டே ப்ரமேயத்தை நிச்சயிக்க வேண்டுகையாலே அப்படி ப்ரமேயத்தை நிச்சயித்துக்கொடுப்பதான ப்ரமாணம் எதுவென்று விமர்சிக்குமளவிலே ப்ரத்யக்ஷம் முதலியவை எட்டு ப்ரமாணங்களென்று சொல்லுவர்கள். அதில் * ப்ரத்யக்ஷமேகம் சார்வாகா: * இத்யாதியில் சொல்லுகிற பாஹ்ய குத்ருஷ்டிகளைப்போலன்றியே ப்ரத்யக்ஷ அநுமான ஆகமங்கள் மூன்றையும் ப்ரமாணமாக அங்கீகரித்து உபமாநம் முதலான மற்ற ஐந்தையும் அவற்றிலே தகுந்தவாறு அந்தர்ப்பவிப்பித்து, அவற்றில் ப்ரத்யக்ஷம் இந்த்ரியங்களாலே க்ரஹிக்கக் கூடிய விஷயங்களில் ப்ரமாணமென்றும் அநுமாநம் பெரும்பாலும் பரோக்ஷ விஷயங்களில் ப்ரமாணமென்றும், ஸர்வாத்மநா இந்திரியங்களுக்கெட்டாத விஷயங்களில் சாஸ்த்ரமே ப்ரமாணமென்றும் நிஷ்கர்ஷித்து, அதுதன்னிலும் * वेदे कर्त्राद्यभावाद्बलवति हि नयैस्त्वन्मुखे नीयमाने तन्मूलत्वेन मानं तदितरदखिलं जायते रङ्गधामन् !—வேதே கர்த்ராத்யபாவாத் பலவதி ஹி நயைஸ் த்வந்முகே நீயமாநே தந்மூலத்வேந மாநம் ததிதரதகிலம் ஜாயதே ரங்கதாமந் * [ஸ்ரீரங்கராஜஸ்தவே, 2—14.] என்று பட்டரருளிச்செய்தபடியே ஸ்வப்ராமாண்யத்திற்கு மூலஸாபேக்ஷமான பௌருஷேய சாஸ்த்ரங்களைக் காட்டிலும் ஸ்வத: ப்ராமாண்யமுடைய வேதமே ப்ரபல ப்ரமாணமென்றும் அறுதியிட்டிருப்பர்களாயிற்று நம்முடைய ஆசார்யர்கள். இதுவே இங்கு "தாம் ஹி ப்ரமாணமுபஜக்முரதீந்த்ரியோர்த்தே" என்பதனால் விளக்கப்பட்டது.

[அபராணி தோஷை: ஆபாஸபூய மபியாந்தி] வேதங்கள் தவிர வேதமூலங்களல்லாத சாஸ்த்ரங்களெல்லாம் ப்ரமம் ப்ரமாதம் விப்ரலிப்ஸை முதலான தோஷங்களினால் துஷ்டங்களான நூல்களை மூலமாகக்கொண்டவை யாகையாலே ப்ரமாணாபாஸங்களாயிருக்கு மத்தனை போக்கி நிரவத்ய ப்ரமாணங்களாகமாட்டா என்றபடி. [ஏஷாது தோஷரஹிதா மஹிதா புராணீ] ப்ரத்யக்ஷம் அநுமாநம் சப்தம் என்னும் மூன்று ப்ரமாணங்களுள் சப்தம் இரண்டுவகைப்பட்டது; லௌகிக சப்தமென்றும் வைதிக சப்தமென்றும். லௌகிக சப்த

மென்றால் புதிது புதிதாய் நம்போல்வாரால் சொல்லப்படும் சப்தம். வைதிக சப்தங்களே வேதமெனப்படும். வேதமாவது — எப்போதும் ஒரேவிதமாய் ஒன்றோடொன்று பிணைக்கப் பட்டு உச்சரிக்கப்படும் சப்தங்களின் கூட்டம். இந்த வேதமானது ஸ்ருஷ்டியின் தொடக் கத்தில் பரம புருஷனால் நான்முகனுக்கு உபதேசிக்கப் பட்டு அவனால் தன்னுடைய சிஷ்யர்க ளுக்கு உபதேசிக்கப்பட்டு சிஷ்ய ப்ரசிஷ்ய பரம்பரையாய் நமக்குக் கிடைத்திருக்கிறது. இது ப்ரத்யக்ஷத்தாலும் அநுமாநத்தாலும் அறிய முடியாத பொருள்களை அறிவிப்பதனால் வேத மென்று காரணப்பெயர் பெற்றது. * प्रत्यक्षेणानुमित्या वा यस्तूपायो न बुध्यते । यत्तं विदन्ति वेदेन तस्माद्वेदस्य वेदता—ப்ரத்யக்ஷேணாநுமித்யா வா யஸ்தூபாயோ ந புத்யதே, யத்தம் விதந்தி வேதேந தஸ்மாத் வேதஸ்ய வேததா* என்கிற ச்லோகம் இங்குக் காணத்தக்கது. வேத மென்னுமிது ஏட்டில் எழுதப்படாமல் ச்ரவண பரம்பரையாகவே அதிகரிக்கப்பட்டு வரு வதால் ச்ருதி யென்றும் பெயர்பெற்றது.

வேதம் அபௌருஷேய மெனப்படும். புருஷனால் செய்யப்படாதது எதுவோ அதுவே அபௌருஷேயமென்பது. கழுத்து தாடை பல் உதடு முதலிய முகவுறுப்புகளி னின்று வெளிப்படுகின்ற ஒலியே சப்தமாதலால், அப்படிப்பட்ட சப்தங்களின் கூட்டமே வேதமாகையினால் ஒவ்வொரு சப்தமும் புருஷனால் செய்யப்பட்டே வெளியாகின்றமை யால் வேதமாகிற சப்த ராசிகளும் புருஷனால் உண்டாக்கப்பட்டுப் பௌருஷேயமாகத்தானே யிருக்கவேண்டும்; அப்படியிருக்க, வேதத்தை அபௌருஷேயமென்று எங்ஙனே சொல்ல லாம்? என்று ஒரு சங்கை உதிக்கக்கூடும். இதற்கு ஸமாதானம் கூறுவதற்கு முன்னே பௌருஷேயமும் அபௌருஷேயமுமான இரண்டு த்ருஷ்டாந்தங்களை யெடுத்துக்கொண்டு விமர்சிப்போம்; காளிதாஸர் செய்த * ஸ ராஜ்யம் குருணா தத்தம் * என்னும் ச்லோகத்தை யெடுத்துக்கொள்வோம்; அதுபோல் * சம் நோ மித்ரச் சம் வருண: * என்கிற வேத வாக்கி யத்தையு மெடுத்துக்கொள்வோம். இவ்விரண்டுக்குமுள்ள வாசியையும் ஆராய்வோம். “ஸ ராஜ்யம் குருணா தத்தம்” என்கிற காளிதாஸ ச்லோகத்தில் ஸ:, ராஜ்யம், குருணா, தத்தம் என்னும் பதங்கள் வரிசையாகத் தொடுக்கப்பட்டிருக்கின்றன; இப்பதங்கள் காளிதாஸரால் புதிதாக வுண்டாக்கப்பட்டவையல்ல என்பது அனைவரு மறிந்ததே. ஆனால் காளிதாஸர் செய்த தென்னவெனில், தமக்கு விவக்ஷிதமான பொருளைத் தெரிவிப்பதற்கு வேண்டியபடி பதங்களை முன்பின்னாகச் சேர்த்துப் பிணைத்ததே காளிதாஸர் செய்த காரியம். இதைக் கொண்டே நாம் ரகுவம்ச காவியம் காளிதாஸர் செய்தது, மற்றொன்று மற்றொருவர் செய் தது என்கிறோம். இதுபோல் * சம் நோ மித்ரச் சம் வருண: * என்னும் வேத வாக்கியத்தி லுள்ள ‘சம் ந: மித்ர: சம் வருண:’ என்கிற பதங்களை இப்பொழுது காணப்படும் வரிசைக் கிரமமாகத் தொடுத்தவர் யார்? என்பதை அநாதிகாலமாக ஒருவரு மறிந்ததில்லை. வேதத் தைச் செய்தவர் யாரேனுமொருவ ரிருப்பாரானால், பாரதம் ராமாயணம் முதலான க்ரந்தங் களைச் செய்த வியாஸர் வால்மீகி முதலானோருடைய பெயர்களை நாம் பரம்பரையாகச் சொல்லி வருவதுபோல வேத கர்த்தாவின் பெயரையும் அவிச்சிந்நபரம்பரையாகச் சொல்லிவந்திருப் போம். வேத கர்த்தாவின் பெயரை நாம் நம் முன்னோர்களின் எந்த க்ரந்தத்திலும் காண் கின்றிலோம். கர்ண பரம்பரையாகவும் கேட்கின்றிலோம். உண்மையில் வேத கர்த்தா ஒருவரு மில்லையாதலாலேயே அவருடைய பெயர் ஓரிடத்திலும் ஒருவர் வாக்கிலும் வெளிவரவில்லை யென்று நிச்சயிக்கத்தக்கது. இதுவேயாயிற்று காளிதாஸாதி க்ரந்தங்களுக்கும் வேதத்திற்கு முள்ள வைலக்ஷண்யம்.

ஆக விப்படி வேதத்திற்கு அபௌருஷேயத்வம் ஸித்தித்தபோதே அதற்கு நித்யத் வம் நிர்தோஷத்வம் முதலிய நலங்களும் ஸித்திக்கும். ஆகவே வேதம் அபௌருஷேயமாய் நித்யமாய் நிர்தோஷமாய் அவிச்சிந்ந பாம்பராப்ராப்தமாயிருப்பதனாலே ஆரியர்களான நமக்குப் பரம ப்ரமாணமாயுள்ளது என்றதாயிற்று இந்த ச்லோகத்தினால். (11)

अन्तर्हितो निधिरसि त्वमशेषपुंसां लभ्योऽसि पुण्यपुरुषैरितरैर्दुरापः ।
तत्र त्रयीं सुकृतिनः कृतिनोऽधिजग्मुर्बाह्येषु बाह्यचरितैरितरैर्निपेते ॥१२॥

அந்தர்ஹிதோ நிதிரஸி த்வமசேஷபும்ஸாம்
லப்யோஸி புண்யபுருஷைரிதரைர் துராப:,
தத்ர த்ரயீம் ஸுக்ருதிந: க்ருதிநோதிஜக்மு:
பாஹ்யேஷு பாஹ்யசரிதைரிதரைர் நிபேதே. 12

த்வம் அசேஷபும்ஸாம் அந்தர்ஹித: நிதி: அஸி, புண்யபுருஷை: லப்ய: இதரை: துராப: அஸி; தத்ர ஸுக்ருதிந: க்ருதிந: த்ரயீம் அதிஜக்மு:, இதரை: பாஹ்ய சரிதை: பாஹ்யேஷு நிபேதே.

(எம்பெருமானே!,) தேவரீர் அனைவர்க்கும் *வைத்த மாநிதியாயிரா நின்றீர்; பாக்யசாலிகளாலே அடையத் தகுந்தவராகவும் மற்றையோர்களால் அடையக் கூடாதவராகவும் இரா நின்றீர்; தேவரீரைப் பெறுவதான அவ்விஷயத்தில் பாக்யசாலிகளான வித்வான்கள் வேதத்தைக் கைப்பற்றினார்கள்; மற்ற அவைதிகர்களாலே வேத பாஹ்யாகமங்களில் விழுகையானபடி.

* * * "வேதைச் ச ஸர்வைரஹமேவ வேத்ய:" என்றும் * வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கு" என்றும் சொல்லுகிறபடியே ஸகலவேத வேதாந்தங்களுக்கும் ப்ரதான ப்ரதிபாத்யபூதனான எம்பெருமானை உள்ளபடி யுணரப்பெறுவது சில பாக்யசாலிகளுக்கே யல்லது மற்றையோர்க்குக் கூடாதென்கிறார் இந்த ச்லோகத்தினால். [த்வம் அந்தர்ஹித: நிதி: அஸி] * இராமடமூட்டுவாரைப்போலே உள்ளே பதிகிடந்து ஸத்தையே பிடித்து நோக்கிக்கொண்டுபோரும் * (முமுக்ஷுப்படி) இத்யாதிப்படியே அனைவர்க்கும் உள்ளுறையும் நிதியாயிறே எம்பெருமானிருப்பது. * வைத்தமாநிதியாம் மதுஸூதனிறே. * நிதிரவ்யய: * என்று ஸ்ரீஸஹஸ்ர நாமாத்யாயத்திலும் சொல்லிற்று. [புண்ய புருஷை: லப்யோஸி] நிலத்தினுள்ளே நிதி கிடந்தாலும் பாக்யசாலிகளுக்கல்லது மற்றையோர்க்கு அது கிடையாதிறே. * அனந்தன்மேல் கிடந்த வெம்புண்ணியனையறியும்போதைக்கும் ஒரு புண்ணியம் வேண்டுமே. * தேநாவலோக்ய க்ருதிந: பரிபுஞ்ஜதே தம் * என்றிறே இவருடைய திருக்குமாரரும் திருவாய்மலர்ந்தது. வேதாந்தவாசிரியரும் வரதராஜ பஞ்சாசத்திலே * நித்யம் கரீச திமிராவில த்ருஷ்டயோபி ஸித்தாஞ்ஜநேந பவதைவ விபூஷிதாக்ஷா:, பச்யந்த்யுபர்யுபரி ஸஞ்சரதாமத்ருச்யம் மாயாநிகூட மநபாயமஹாநிதிம் த்வாம் * என்று பாக்கப் பேசினார். [இதரை: துராப:] புண்ய புருஷர்களுக்கு லப்யராகா நின்றீரென்றபோதே அபாக்யசாலிகளுக்கு அலப்ய ராகா நின்றீரென்னுமிடம் ஸித்தமாகா நிற்கச்செய்தேயும் * பத்துடை யடியவர்க்கு எளியவன் * என்றுசொல்லி * பிறர்களுக்கரிய வித்தகன் * என்றும் சொன்ன ஆழ்வாரைப் பின்சென்று * இதரை: துராப: * என்று முக்தகண்டமாகவும் அருளிச்செய்கிறபடி.

வேதத்தை ப்ரமாணமாக இசைந்து நிற்கின்ற வைதிகோத்தமர்களே பாக்யசாலிகளென்றும், அங்ஙனன்றிக்கே பாஹ்ய சாஸ்த்ரங்களிலே மண்டிக்கிடக்கின்ற புலையர்களே அபாக்யோபஹதர்களென்றும் உத்தரார்த்தத்திலே மூதலிக்கிறார். [தத்ர] தேவரீருடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகள் முதலானவற்றை அறியவேண்டுமிடத்திலே யென்றபடி. [ஸுக்ருதிந: க்ருதிந: த்ரயீம் அதிஜக்மு:] ஸகுண நிர்குண ச்ருதிகள் த்வைதாத்வைத ச்ருதிகள் முதலானவற்றை ஒன்றையும் ஒதுக்காதே ஸகல ச்ருதி வாக்யங்களையும் ஸமந்விதார்த்தமாக வுபபாதிக்கவல்ல ஸ்ரீவைஷ்ணவ சிகாமணிகளேயாயிற்று இங்கு * ஸுக்ருதிந: க்ருதிந: * என்கிறது.

[இதரைः பாஹ்யசரிதைः பாஹ்யேஷு நிபேதே] சாஸ்த்ரங்களை அநுவர்த்தியாதே அதிவர்த்திக்கின்ற துஷ்ட சரித்திரர்களான மற்றையோர் ஜைநபௌத்தாதி பாஹ்யாகமங்களிலே வீழ்ந்து நசித்தொழிந்தன ரென்கை. இது भावे प्रयोग மென்க; பாஹ்யசரிதா: இதரே பாஹ்யேஷு நிபேதுः என்றவாறு. (12)

चित्रं विधेर्विलसितं त्विदमाविरस्ति दुष्टात्मनामयमहो किल दुर्विपाकः ।
यत्केचिदत्रभवतीं श्रुतिमाश्रयन्तोऽप्यर्थे कुदृष्टिविनिविष्टधियो विनष्टाः ॥१३॥

சித்ரம் விதேர் விலஸிதம் த்விதமாவிரஸ்தி
துஷ்டாத்மநாமயமஹோ கில துர்விபாக:,
யத் கேசிதத்ரபவதீம் ச்ருதிமாச்ரயந்தோபி
அர்த்தே குத்ருஷ்டிவிநிவிஷ்டதியோ விநஷ்டா:. 13

விதேः இதம் விலஸிதம்து சித்ரம் ஆவிரஸ்தி; துஷ்டாத்மநாம் அயம் துர்விபாகः அஹோகில; யத்கேசித் அத்ர பவதீம் ச்ருதிம் ஆச்ரயந்தः அபி அர்த்தே குத்ருஷ்டி விநிவிஷ்டதியः விநஷ்டாः

தைவத்தினுடைய இந்த விலாஸமோவென்றால் ஆச்சர்யகரமாக விளங்குகின்றது; அநேக ஜன்மாநுவ்ருத்த கல்மஷதூஷிதர்களான துஷ்டர்களுடைய இந்த துஷ்டபரிபாகமானது ஆச்சரியம். ஏனென்றால், சிலர் [ப்ரச்சந்நபௌத்தர்] பூஜ்யமான வேதத்தை ப்ரமாணமாக அங்கீகரித்திருந்தும் பொருள் கொள்ளும் விஷயத்தில் குத்ஸிதமான நிர்வாஹங்களிலே ஊன்றின புத்தியையுடையவர்களாய் அழிந்தொழிந்தார்களிறே.

* * * ஸ்ரீவைஷ்ணவர்களல்லாதாரும் வேதத்தையயன்றோ ப்ரமாணங்களுள் தலையானதாக அங்கீகரித்திருப்பது. * தத்ர த்ரயீம் ஸூக்ருதிநः க்ருதிநோதிஜக்முः * என்று கீழ்ச்லோகத்திலே யருளிச்செய்ததற்கு அவர்களும் லக்ஷ்ய பூதர்களாகக் கடவரோ? என்ன, அவர்கள் வேதங்களின் அக்ஷராராசிமாத்ரத்திலே ப்ராமாண்ய மிசைந்தார்களத்தனைபோக்கி அர்த்தத்திலே குத்ருஷ்டிகளாகவன்றோ இராநின்றார்களென்கிறார். [இதம் து விதேர் விலஸிதம் சித்ரம் ஆவிரஸ்தி] குத்ருஷ்டிகளின்படியைத் தம்முள்ளே தாம் அநுஸந்தித்து, அந்தோ! இது என்ன தைவதுர்விலஸிதமென்று இரங்குகிறார். இங்ஙனே ஸாமான்யமாகச் சொன்னதைச் சிறிது விசேஷித்துப் பேசுகிறார் [துஷ்டாத்மநாம் அயம் அஹோகில துர்விபாகः] என்று. அநேக ஜந்மாந்தரோபார்ஜித கல்மஷ பரிபூர்ணர்களான துராத்மாக்களினுடைய துரத்ருஷ்டபரிபாகம் ஆச்சர்யமாயிருக்கின்றதே!; வாய்கொண்டு பேசவொண்ணாதென்றபடி.

அப்படிப்பட்ட துரத்ருஷ்ட சாலிகள் இன்னாரென்கிறது உத்தரார்த்தத்தில் [யத் கேசித் இத்யாதி.] நாமநிர்தேசத்திற்கு அநர்ஹர்களான அவ்யபதேச்யர்களாகையாலே கேசித் என்கிறது. ப்ரச்சந்ந பௌத்தர்களென்றபடி. * அறுசமயச் செடியதனை யடியறுத்தான் வாழியே * என்றவிடத்தில் அடியறுக்கப்பட்டவர்களாகச் சொல்லப்பட்ட விமதர்களையே இங்கு கேசித் என்கிறது. [அத்ரபவதீம் ச்ருதிம் ஆச்ரயந்தோபி] பரம பூஜ்யமான வேதத்தை ப்ரமாணமென்று இசைந்திருந்தார்களாகிலும். [அர்த்தே குத்ருஷ்டி விநிவிஷ்டதியோ விநஷ்டாः] பதார்த்த வாக்யார்த்த தாத்பர்யார்த்த வர்ணனங்களிலே அபந்யாயங்களை யவலம்பித்து ஆக்ரஹக்ரஹிளர்களாய் நசித்துப்போனார்கள். * ந து மாம் அபிஜாநந்தி தத்வேநாதச் ச்யவந்தி தே * (கீதை 9-24.) என்கிறபடியே அஸத்கல்பராயொழிந்தார்களென்கை.

வேதத்தை ப்ரமாணமாக இசைந்துவைத்தே அதில் அபார்த்தங்களைப் பண்ணி நசித்
துப் போம்படியாக எம்பெருமான் சில வ்யக்திகளை ஸ்ருஷ்டித்து வைப்பதே !, இதுவுமொரு
லீலாவிலாஸமோ ! என்று உள்ளந் தளர்ந்துரைத்தபடி.

குத்ருஷ்டி சப்தம் வ்யக்தி பரமாம்போது 'குத்ஸிதா த்ருஷ்டிঃ யேஷாம் தே—குத்
ருஷ்டயঃ' என்று பஹுவ்ரீஹியாகக்கடவது. இந்த ச்லோகந்தன்னிலுள்ள குத்ருஷ்டி
சப்தம் வ்யக்திபரமல்லாமையாலே "குத்ஸிதா ச ஸா த்ருஷ்டிச் ச—குத்ருஷ்டிঃ" என்று
கர்மதாரயமாகக் கடவது, கோணலான புத்தியென்றபடி, ... (13)

बाह्याः कुदृष्टय इति द्वितयेऽप्यपारं घोरं तमस्समुपयान्ति न हीक्षसे तान् ।
जग्धस्य काननमृगैर्मृगतृष्णिकेप्सोः कासारसत्वनिहतस्य च को विशेषः ॥१४॥

பாஹ்யா: குத்ருஷ்டய இதி த்விதயேப்யபாரம்
கோரம் தமஸ் ஸமுபயாந்தி ந ஹீக்ஷஸே தாந்,
ஜக்தஸ்ய காநநம்ருகைர் ம்ருகத்ருஷ்ணிகேப்ஸோ:
காஸாரஸத்வநிஹதஸ்ய ச கோ விசேஷ:. 14

பாஹ்யாঃ குத்ருஷ்டயঃ இதி த்விதயேபி

அபாரம் கோரம் தமঃ ஸமுபயாந்தி;

தாந் ந ஈக்ஷஸே ஹி; ம்ருகத்ருஷ்ணிகா

ஈப்ஸோ: காநநம்ருகை: ஜக்தஸ்ய

காஸாரஸத்வநிஹதஸ்ய ச விசேஷঃ கঃ

(எம்பெருமானே !,) வேதபாஹ்யர்களான ஜைந
பௌத்தாதிகளென்ன சாங்கராதி குத்ருஷ்டிக
ளென்ன ஆகிய இவ்விருவகுப்பினரும் கரையில்லாத
பயங்கரமான தமஸ்ஸை அடைகின்றார்கள். (ஏனென்
றால்) அவர்களைத் தேவரீர் கடாக்ஷிப்பதில்லையன்றோ.
கானலைப்பார்த்துத் தண்ணீரென்றுமயங்கி ஓடிச்
சென்றதும் புலிமுதலிய காட்டு மிருகங்களினால்
பக்ஷிக்கப்பட்டதுமான ம்ருகத்துக்கும், (மெய்யான
தண்ணீரிலேயேயிழிந்து) முதலை முதலான தடாக
ஜந்துக்களால் விழுங்கப் பட்டொழிந்த ம்ருகத்துக்
கும் என்னவாசி? (ஒருவாசியுமில்லை; அதுபோல
வேயிதுவும்.)

வேதத்தை அடியோடே ப்ரமாணமாக அங்கீகரியாதே தூஷிக்கின்ற பாஹ்யர்கள்
*** வேதத்தை அடியோடே ப்ரமாணமாக அங்கீ
தாம் நசித்துப்போவது யுக்தம்; அப்படியல்லாமல் வேதத்தைப் பரமப்ரமாணமாக அங்கீ
கரித்து வைதிகர்களென்று பேர்பெற்றிருப்பவர்களும் நசித்துப்போனார்களென்னலாமோ ?
இருவர்க்கும் நெடுவாசியுண்டே—என்று சிலர் சங்கிப்பதாகக் கொண்டு, வேத ப்ராமாண்
யத்தை அங்கீகரிப்பதனாலும் அதை அங்கீகரியாமையினாலும் ஒரு வைலக்ஷண்யமில்லை;
* बिभेत्यल्पश्रुताद्वेदो मामयं प्रतरिष्यति—பிபேதி அல்பச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி *
என்கிறபடியே வேதத்தை விப்ரலம்பம் பண்ணிக்கெடுக்காதே யதாவஸ்திதமான அர்த்தத்தில்
ஊன்றியிருக்குமத்தனையே வேண்டுவது; அபார்த்தம் சொல்லி அதைக் கெடுப்பதோடு
மூலமே அப்ராமாணமென்பதோடு வாசியில்லாமையாலே அத்யந்தம் அப்ரமாணமென்கிற
பாஹ்யர்களும், ப்ராமாண்யத்துக்கு இசைந்துவைத்தே அபார்த்தங்களைப் பேசுகிற குத்ருஷ்டி
களும் தம்மில் வாசியற்றவர்களே யென்கிறாரிதில். ஹே பகவந் ! என்று ஸம்போதநம்
அத்யாஹாரம் செய்து கொள்வது.

[பாஹ்யாঃ குத்ருஷ்டய இதி த்விதயேபி அபாரம் கோரம் தமஸ் ஸமுபயாந்தி]
வேதத்தை ப்ரமாணமென்றிசையாத மாத்யமிக வைபாஷிக ஸௌத்ராந்திகர்களான பாஹ்யர்
களும், "அநாதி பாபவாஸநா தூஷிதாசேஷசேமுஷீகர்க"ளென்று ஸ்ரீபாஷ்யகாரரால் பேசப்
பட்டவர்களாய் வேதைகதேசத்தை வ்யாவஹாரிக ப்ரமாணமாக ஸ்வீகரித்துங்கூட அஸமீசீ

ந்யாயவாதிகளாயிருக்கின்ற மாயாவாதி ப்ராக்ருதிகளும் ஆகிய இருவகுப்பினரும் என்றேனும் கரைகாண வொண்ணாததாய் அதிக்ரூரமான தமஸ்ஸிலேயே கிடந்துழல்வர்கள். [தாந் ந ஹி ஈக்ஷஸே] இதற்கு இரண்டுபடியாகப் பொருள் கொள்ளத்தகும். இறந்த காலத்தில் கடாக்ஷமில்லாமையைச் சொல்லவுமாம், எதிர்காலத்தில் கடாக்ஷமில்லாமையைச் சொல்லவுமாம். ஆவதென்னென்னில்; * ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந:, ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த சிந்தக: * என்கிறபடியே ஸத்வோத்ரேக ஹேதுவான ஜாயமாநகால கடாக்ஷத்தை அவர்கள் திறத்திலே தேவரீர் செய்தருளவில்லை யென்பதாக ஒரு பொருள். அப்படிப்பட்டவர்களை தேவரீர் இனி யொருநாளும் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டீர் என்பது மற்றொரு பொருள். ஈக்ஷஸே என்கிற வர்த்தமாநக்ரியைக்கு இறந்தகாலப்பொருளும் எதிர்காலப்பொருளும் கூடுமோவென்னில்; * वर्तमानसामीप्ये वर्तमानवद्वा — வர்த்தமாநஸாமீப்யே வர்த்தமாநவத் வா * என்று பாணிநியின் அநுசாஸனமுண்டே.

பாஹ்யர்களும் குத்ருஷ்டிகளும் துல்யயோக க்ஷேமர்களென்பதை ஒரு த்ருஷ்டாந்த முகத்தாலே மூதலிக்கிறார் உத்தரார்த்தத்தில் [ஹ்ருதஸ்ய இத்யாதி.] விடாய் மிகுத்துத் தண்ணீரைத் தேடியோட இரண்டு ம்ருகங்கள் புறப்பட்டன; அவற்றில் ஒரு மிருகமானது தடாகத்தில் புகாதே தூரத்ப்ராமகமான ம்ருகத்ருஷ்ணிகையை [கானலை]ப் பார்த்துப் பாநீய ப்ரவாஹமாக மயங்கி ஓடிக்கொண்டேயிருக்கையில் வழியிடையே நேர்பட்ட புலி சிறுத்தை முதலிய கொடிய மிருகங்களினால் அடித்துத் தின்னப்பட்டதாயொழிந்தது; இது இப்படியாக, மற்றொரு மிருகமானது விடாய் தீரப் பெறுவதற்கு உண்மையாகத் தண்ணீருள்ள தடாகத்திலேயே சென்று சேர்ந்தது; ஆனால் அடைவே இழிய வேண்டிய துறையிலே யிழியாமல் துறைதப்பியிழியவே, அங்குக் கிடந்தவொரு முதலையினாலே கதுவப்பட்டு மாண்டொழிந்தது. ஆக இரண்டு மிருகங்களும் தடாகப்ரவேச அப்ரவேசங்களாலே சிறிது வைலக்ஷண்யம் பெற்றிருந்தாலும் விநாசத்திலே துல்யபல மத்தனையிறே. அது போலவே, குத்ருஷ்டிகளும் பாஹ்யர்களும் வேத ப்ராமாண்ய அங்கீகார அநங்கீகாரங்களாலே சிறிது வாசி பெற்றிருந்தாலும் விநாசத்திலே வாசியற்றவர்களே யென்று அறுதியிடக் குறையில்லையிறே.

ம்ருகத்ருஷ்ணிகையிலே மயங்கி யொழிந்த ம்ருகத்தின் ஸ்தானத்திலே வேத பாஹ்யர்கள் கொள்ளப்பட்டார்கள்; தடாகத்திலே யிழிந்து துறைதப்பி யொழிந்த மிருகத்தின் ஸ்தானத்திலே குத்ருஷ்டிகள் கொள்ளப்பட்டார்கள்.

கோரம் தம: என்றது * மாய வன் சேற்றள்ளல் பொய்ந்நிலமாகிய ஸம்ஸார பூமியைச் சொன்னபடி. * अघोऽघ: पापात्मा शरणद ! निमज्जामि तमसि — அதோத: பாபாத்மா சரணத ! நிமஜ்ஜாமி தமஸி * என்று ஆளவந்தாரும் இதுதன்னிலே தமச்சப்த ப்ரயோகம் செய்தருளினார் காண்மின். (14)

न्यायस्मृतिप्रभृतिभिर्भवता निसृष्टैर्वेदोपबृंहणविधावुचितैरुपायैः ।
श्रुत्यर्थमर्थमिव भानुकरैर्विभेजुः त्वद्भक्तिभावितविकल्मषशेमुषीकाः ॥१५॥

ந்யாயஸ்ம்ருதிப்ரப்ருதிபிர் பவதா நிஸ்ருஷ்டை:
வேதோபப்ர்ம்ஹணவிதாவுசிதைருபாயை:,
ச்ருத்யர்த்தமர்த்தமிவ பாநுகரைர் விபேஜு:
த்வத்பக்திபாவித விகல்மஷ சேமுஷீகா: (15)

த்வத்பக்திபாவித விகல்மஷ சேமுஷீகா: வேதோபப்ர்ம்ஹணவிதௌ உசிதை: உபாயை: பவதா நிஸ்ருஷ்டை: ந்யாயஸ்ம்ருதி ப்ரப்ருதிபி:—பாநுகரை: அர்த்தமிவ ச்ருத்யர்த்தம் விபேஜு:

(எம்பெருமானே!) தேவரீரிடத்திலுண்டான பக்தியினாலே நிஷ்கல்மஷமான புத்தி யுண்டாகப் பெற்றவர்கள் வேதத்தின் பொருள்கொள்ளுந் திறத்தில் உசிதமான உபாயங்களாக தேவரீராலே அருளப்பட்ட தர்க்க மீமாம்ஸைகளென்ன, மந்வாதி ஸ்மிருதிகளென்ன இவை முதலானவற்றாலே—ஸூர்ய கிரணங்களாலே கடபடாதி பதார்த்தத்தைப் பகுத்தறிவதுபோல வேதார்த்தத்தைப் பகுத்தறிந்தார்கள்.

*** வேதப்பொருள்களை நிர்ணயிக்கும் விரகு அருளிச் செய்கிறாரிதில். ச்ருத்யர்த்தம் என்று—வேதத்தில் பூர்வபாக ப்ரதிபாத்யமான கர்மத்தையும் உத்தரபாக ப்ரதிபாத்யமான ப்ரஹ்மத்தையும் சொல்லுகிறது. பூர்வோத்தர மீமாம்ஸைகளில் * அதாதோ தர்மஜிஜ்ஞாஸா என்றும் * அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா என்றுமிறே உபக்ரமித்தது. ஆகையாலே சுருதியின் இரண்டு பாகங்களுக்கும் ப்ரதிபாத்யம்—ஆராதநரூபமான கர்மமும் ஆராத்ய வஸ்துவான ப்ரஹ்மமுமாயிற்று. கர்மம் பகவதாராதன மென்னுமிடம் "स आत्मा, अङ्गान्यन्या देवता: * ஸ ஆத்மா; அங்காந்யந்யா தேவதா:" என்று அக்நீந்த்ராதி ஸகல தேவதைகளும் பகவச் சரீரபூதராக சாஸ்த்ரம் சொல்லுகையாலே ஸித்தம். இவ்வாகாரத்தை யறிந்து அக்நீந்த்ராதி தேவதாந்தர்யாமி ஸமாராதனமாக அநுஷ்டிக்குமவர்களிடத்தில் இதினுடைய பகவதாராதநத்வம் ஸூஸ்பஷ்டமாயிருக்கும். இவ்வாகார மறியாதார் அந்தந்த தேவதா மாத்ரங்களையுத்தேசித்துப் பண்ணும் கர்மமும் வஸ்துகத்யா பகவதாராதனமாய்த் தலைக்கட்டும். * யே யஜந்தி பித்ரூந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹுதாசநாந், ஸர்வ பூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்தி தே * என்னுகின்றதிறே. ஆகையாலே எல்லாப்படியாலும் கர்மத்துக்கு பகவதாராதநத்வம் ஸித்தம். இப்படி ஆராதநரூபமான கருமமும் ஆராத்ய வஸ்துவான ப்ரஹ்மமுமாகிற இரண்டையுமறியவே, த்யாஜ்யமும் உபாதேயமுமான ஸகலார்த்தங்களையுமறியலாயிருக்கையாலே வேதத்தின் இரண்டு பாகங்களுக்கும் ப்ரதிபாத்யம் கர்ம ப்ரஹ்மங்களென்கிறது.

எங்ஙனே யென்னில்; கர்மந்தான் புபுக்ஷுக்களுக்கு ஐச்வர்ய ஸாதநமாய், முமுக்ஷுக்களில் பக்தி நிஷ்டர்க்கு உபாஸநாங்கமாய் ப்ரபந்நர்க்கு கைங்கர்ய ரூபமாயிருக்கும். இப்படியிருந்துள்ள கர்மத்தின் வேஷத்தை உள்ளபடி யறியவே அநந்த ஸ்திரபல ப்ரஹ்ம ப்ராப்திகாமரான ஸாதகர்க்கு இது உபாஸநாங்கமாய்க்கொண்டு உபாதேயம்; ஐச்வர்யார்த்திகளுக்கு உபாதேயமான ஆகாரத்தால் இவர்க்கு த்யாஜ்யம் என்றறியலாம். அநந்யஸாதநர்க்கு இதுகொண்டு ஸாதிக்கவேண்டுவதொன்றில்லாமையாலே கைங்கர்ய ரூபேண உபாதேயம்; உபாஸகர்க்கு உபாதேயமான ஆகாரத்தாலே இவர்களுக்கு த்யாஜ்யம் என்றறியலாம்.

ப்ரஹ்மத்தையறியும்போது தத்ஸ்வரூபரூபகுண விபூதிகளெல்லாம் அறியவேண்டுகையாலே விபூதிபூத சேதநாசேதநங்களின் ஸ்வரூபமறியலாம். அதில் ஜ்ஞாநைகாந்த லக்ஷணமான சேதந ஸ்வரூப வைலக்ஷண்யமடியாக வருகிறதாகையாலே கைவல்யத்தின் வேஷமுமறியலாம். ப்ரஹ்மத்தினுடைய சேஷித்வ ப்ராப்யத்வங்களையறியவே ததநுபவாதிகள் புருஷார்த்தமென்றறியலாம். ததுபாஸ்யத்வ சரண்யத்வங்களையறியவே தத்ப்ராப்தி ஸாதந விசேஷங்களையறியலாம். ப்ரஹ்மத்தினுடைய நிரதிசயபோக்யதையையும் அநந்ய ஸாத்யத்வத்தையும் தத்ப்ரகாரதயா பாரதந்த்ரமான ஸ்வஸ்வரூபத்தையும் தர்சிக்கவே உபாயாந்தர உபேயாந்தரங்களினுடைய த்யாஜ்யதையை ஸூஸ்பஷ்டமாக அறியலாம். ஆக இப்படியிருக்கையாலே வேதத்தினுடைய இரண்டு பாகங்களுக்கும் ப்ரதிபாத்யம்—ஆராதந ஸ்வரூபமான கர்மமும் ஆராத்யவஸ்துவான ப்ரஹ்மமும் என்னக் குறையில்லை. ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே பட்டர் * त्वदर्चाविधिमुपरि परिक्षीयते पूर्वभाग: - ऊर्ध्वो भागस्त्वदीहागुणवि-

भवपरिज्ञापनैस्त्वत्पदासौ— த்வதர்ச்சாவிதிமுபரி பரிக்ஷீயதே பூர்வபாகஃ; ஊர்த்வோ பாகஸ் த்வதீஹாகுணவிபவபரிஜ்ஞாபனைஸ் த்வத்பதாப்தௌ * என்றிறே யருளிச் செய்தது.

இப்படி பூர்வோத்தரபாகப்ரதிபாத்யங்களான இவ்வர்த்தங்களை விபஜிக்கையாவது பகுத்தறிவது. கர்மத்தினுடைய ஸ்வரூபம் அங்கம் பலன்முதலானவற்றையும் ப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூபம் ரூபம் குணம் விபூதி முதலானவற்றையும் ஸம்சயவிபர்யய மில்லாமல் நிர்ணயிக்கையாம். இது மஹாமதிகளான மஹர்ஷிகளுக்கொழிய மற்றையோர்க்குச் செய்யப்போகாமையால் உபப்ரும்ஹணங்கள் கொண்டே நிர்ணயிக்கவேணும்; அப்படிப் பட்ட நிர்ணயஸாதனங்கள் ந்யாயஸ்ம்ருதீதிஹாஸ புராணாதிகள் என்னுமிடத்தை இந்த ச்லோகத்தில் அருளிச்செய்கிறார்.

[பவதா நிஸ்ருஷ்டைஃ] வ்யாஸர்மநு முதலிய மஹர்ஷிகளை அநுப்ரவேசித்து ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்களை பகவான்தானே வெளியிட்டருளினனாகையாலே அவற்றை பகவானே கொடுத்தருளினதாகச் சொல்லக் குறையில்லை. [வேதோபப்ரும்ஹணவிதௌ உசிதைஃ உபாயைஃ] * இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத், பிபேதி அல்பச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி * என்றும், * வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபுஃ * என்றும் சொல்லுகிறபடியே ஸ்ரீராமாயண மஹாபாரதாதிகளாலும் ஸ்ரீவிஷ்ணு புராணாதிகளாலும் மந்வாதி ஸ்ம்ருதிகளாலும் வேதோபப்ரும்ஹணமேயிறே செய்யப்படுவது.

[ந்யாயஸ்ம்ருதிப்ரப்ருதிபிஃ] ந்யாயயாநுக்ருஹீத ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களாலே யென்றபடி. இங்கே ந்யாய சப்தத்தினால் தர்க்க மீமாம்ஸைகளிரண்டும் விவக்ஷிதம். ஸமீசீநதர்க்கமும் பூர்வோத்தர மீமாம்ஸாந்யாயங்களும் வேதோபப்ரும்ஹணத்திற்கு அநுகூலங்களாயிருக்கும். * ஆர்ஷம் தர்மோபதேசஞ் ச வேதசாஸ்த்ராவிரோதிநா, யஸ் தர்க்கேணாநுஸந்தத்தே ஸ தர்மம் வேத நேதரஃ * என்றும் * வேதசாஸ்த்ரரதாரூடாஃ ந்யாயகட்கதரா த்விஜாஃ, க்ரீடார்த்தமபி யத் ப்ரூயுஸ் ஸதர்மஃ பரமோ மதஃ* என்றும் சொல்லக்கடவதிறே.

[ஸ்ம்ருதிப்ரப்ருதிபிஃ] வேதமானது ஸ்வப்ரதிபாத்யார்த்த விசேஷத்தாலே இரண்டு பாகமாகப் பிரிவுண்டதுபோல, உபப்ரும்ஹணங்களும் ப்ரதிபாத்ய விசேஷத்தாலே இதிஹாஸ புராணங்களென்றும் ஸ்ம்ருதி [தர்மசாஸ்த்ரங்] களென்றும் பிரிவுண்டன. ஸ்ம்ருதிகள் வேதத்தின் பூர்வபாகமாகிய கர்மகாண்டத்திற்கு உபப்ரும்ஹணமாகவும் இதிஹாஸ புராணங்கள் உத்தரபாகமாகிய ப்ரஹ்மகாண்டத்திற்கு உபப்ரும்ஹணமாகவும் அமைந்தன. அவ்வோ உபப்ரும்ஹணங்களைக்கொண்டே அவ்வோ பாகங்களின் பொருளை நிர்ணயிக்க வேண்டும். ஆசாரகாண்டம் வ்யவஹாரகாண்டம் ப்ராயச்சித்தகாண்டம் என்றிப்படி அமைந்துள்ள தர்ம சாஸ்த்ரங்களாலே கர்மபரமான பூர்வ பாகத்தின் அர்த்தநிச்சயம் பண்ணக்கடவது. எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிசேஷ்டிதங்களுக்கு ப்ரதிபாதகங்களான இதிஹாஸ புராணங்களாகிற மற்றையிரண்டாலும் ப்ரஹ்மப்ரதிபாதகமான உத்தர பாகத்தின் அர்த்தநிர்ணயம் பண்ணக்கடவது. ஸ்ம்ருதிகளிலே பரப்ரஹ்மப்ரதிபாதனமும் இதிஹாஸ புராணங்களிலே கர்மப்ரதிபாதனமும் உண்டாயிருந்ததேயாகிலும், ஸ்ம்ருதிகளிலுள்ள ப்ரஹ்ம ப்ரதிபாதனமானது கருமங்களினுடைய ததாராதநரூபத்வ ஜ்ஞாபநார்த்தமாகவும், இதிஹாஸ புராணங்களிலுள்ள கர்மப்ரதிபாதனமானது கர்மங்களினுடைய ப்ரஹ்மோபாஸநாங்கத்வ ஜ்ஞாபநார்த்தமாகவும் நேர்ந்ததாக நிர்வஹிப்பர்கள். * ப்ராயேண பூர்வபாகார்த்தபூரணம் தர்மசாஸ்த்ரதஃ, இதிஹாஸபுராணாப்யாம் வேதாந்தார்த்தஃ ப்ரகாச்யதே. * என்றதிறே.

[பாநுகரைஃ அர்த்த மிவ] இங்குள்ள அர்த்த சப்தம் கடபடாதிகளாகிற பதார்த்தங்களைச் சொல்லுமது. பூதலத்திலே கடபடாதி பதார்த்தங்கள் கிடந்தால், ஸூர்யப்ரபைகளைக்கொளி முதலானவற்றின் உதவிகொண்டே அறியவேண்டுகிறாப்போலே உபப்ரும்ஹணங்களைக்கொண்டே வேதார்த்தம் அறியவடுக்கும் என்றதாயிற்று. [த்வத்பக்திபாவிதவிகல்மஷ

சேமுஷீகாঃ] இவையித்தனையுமுண்டானாலும் நிஷ்கல்மஷபகவத் பக்தி யில்லாதார்க்கு ஒரு பொருளும் தெரியவரிதாகையாலே பக்தியே ப்ரதானஸாமக்ரியென்று தலைக்கட்டினாராயிற்று. இதனை விசேஷித்து நிரூபிக்கவே மேல்ச்லோகம் அவதரிக்கின்றது. (15)

ये तु त्वदङ्घ्रिसरसीरुहभक्तिहीनाः तेषाममीभिरपि नैव यथार्थबोधः ।
पित्तघ्नमञ्जनमनापुषि जातु नेत्रे नैव प्रभाभिरपि शङ्खसितत्वबुद्धिः ॥१६॥

**யே து த்வதங்க்ரி ஸரஸீருஹபக்திஹீநா:
தேஷாம் அமீபிரபி நைவ யதார்த்தபோத:,
பித்தக்நமஞ்ஜநமநாபுஷி ஜாது நேத்ரே
நைவ ப்ரபாபிரபி சங்கஸிதத்வபுத்தி:. 16**

யே து த்வதங்க்ரி ஸரஸீருஹ பக்தி ஹீநா:, தேஷாம் அமீபிரபி யதார்த்த போதঃ நைவ; நேத்ரே பித்தக்நம் அஞ்ஜநம் அநாபுஷி ஸதி ப்ரபாபிঃ அபி சங்கஸிதத்வபுத்திঃ ஜாது நைவ

(எம்பெருமானே!) யாவர் சிலர் தேவரீருடைய திருவடித்தாமரைகளில் பக்தியில்லாதவர்களோ, அவர்களுக்குக் கீழ்ச்சொன்ன ந்யாயஸ்மிருதி முதலானவற்றாலும் உண்மையுணர்வு உண்டாகமாட்டாது; (காமாலைகொண்ட) கண்ணானது பித்தஹாரியானவோர் அஞ்ஜனத்தை அணிந்துகொள்ளாதவளவில் ஸௌர்யகிரணம் முதலிய ப்ரகாச ஸாமக்ரிகள் பலவற்றாலும் சங்கு வெண்ணிறமுள்ளதென்கிற வுணர்ச்சி ஒருகாலும் உண்டாகவே மாட்டாதன்றோ.

* * * சாஸ்த்ரார்த்தங்களை உள்ளபடி தெரிந்துகொள்வதற்கு பக்தியே ப்ரதான ஸாதனமென்னுமிடத்தைக் கீழ்ச்லோகத்தில் அந்வயமுகத்தாலே யருளிச்செய்து, இந்த ச்லோகத்தில் வ்யதிரேகமுகத்தாலே அதுதன்னை த்ருடப்படுத்தியருளுகிறார்.

[யே து த்வதங்க்ரிஸரஸீருஹபக்திஹீநாঃ] தேவரீருடைய திருவடித் தாமரைகளிலே பக்தியில்லாதவர்கள் யாவரோ, [தேஷாம் அமீபிரபி நைவ யதார்த்தபோதঃ] அவர்களுக்குக் கீழ்ச்சொன்ன ந்யாயஸ்ம்ருதி முதலான உபப்ரும்ஹணங்களாலும் உண்மைப் பொருளுணர்ச்சி உண்டாகவே மாட்டாது.

இதை த்ருஷ்டாந்தமுகேந ஸமர்த்திக்கிறார் [பித்தக்நம் இத்யாதி] சங்கு இயற்கையாக வெண்ணிறமா யிருக்கச்செய்தேயும் பித்தோபஹததத்ருஷ்டியாயுள்ளவன் அந்த பித்தோத்ரேகத்தினாலே அந்த சங்கைப் பசுமைநிறமுள்ளதாக ப்ரமிக்கக் காணாநின்றோம். வஸ்துக்ரஹணத்திற்கு ஸாதனமான ப்ரகாசம் மிக்கிருந்தாலும் பித்தத்தைப் போக்கடிக்கவல்லதான அஞ்ஜனவிசேஷத்தினால் கண்ணுக்கு ஸம்ஸ்கார முண்டாகாதவளவில் 'சங்கு வெண்ணிறமுடையது' என்கிற உண்மையுணர்ச்சி உண்டாகவேமாட்டாதிறே. அது போலவே ஹ்ருதயம் பக்தி ஸம்ஸ்க்ருத மாகாதவளவில் சாஸ்த்ரங்களின் பொருளுண்மை புலப்படாது என்றதாயிற்று.

மஹாபாரதத்தில் உத்யோகபருவத்தில் த்ருதராஷ்ட்ரனை நோக்கி ஸஞ்ஜயன் கூறுகின்றான்; * மாயாம் ந ஸேவே பத்ரம் தே ந வ்ருதா தர்மமாசரே, சுத்தபாவம் கதோ பக்த்யா சாஸ்த்ராத் வேத்மி ஜநார்தநம். * இதற்கு நம்பிள்ளை யீடுகாண்மின்; "ஸஞ்ஜயனை நோக்கி த்ருதராஷ்ட்ரன், 'நீயும் நானுமொக்க சாஸ்த்ரவாஸனைகள் பண்ணிப்போந்தோம்; இங்ஙனேயிருக்கச்செய்தே எனக்கு உன்பக்கலிலே கேட்டறியவேண்டும்படி உனக்கு இவ்வர்த்தத்தில் வைசத்யமுண்டானபடி யெங்ஙனேயென்ன, எனக்கு வாசி கேளாய்; [மாயாம் ந ஸேவே] நான் வஞ்சனங்கள் செய்துபோரேன். ராஜாவானவனுக்கு ஒருதாழ்ச்சியும் தனக்கொரு உத்கர்ஷமும் சொல்லுகிறானாகையாலே, (பத்ரம் தே) என்கிறான். [நவ்ருதா தர்மமாசரே] நான்

ஒருநாளும் சலதர்ம (சலதர்ம) ங்கள் அநுஷ்டியேன். [சுத்தபாவம் கத:] நினைவும் சொலவும் செயலும் ஒருபடிப்பட்டிருப்பன். [பக்த்யா சாஸ்த்ராத் வேத்மி ஜநார்தநம்] வரியடைவே கற்று அவனை யறிந்தவனல்லேன்; பக்திஸஹக்ருத சாஸ்த்ரத்தாலே அவனையறிந்தவன் என்றானிறே." * என்னெஞ்சினால் நோக்கிக் காணீர் * என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் சட்டிலே இது காணத்தக்கது.

இந்த ச்லோகத்தில், பித்தஸ்தாநே அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநாதிகளும், அஞ்ஜநஸ்தாநே பக்தியும், ப்ரபாஸ்தாநே ந்யாயஸ்ம்ருதி ப்ரப்ருதிகளும், சங்கலிதத்வஸ்தாநே சாஸ்த்ரார்த்தயாதாத்ம்யமும் கொள்ளக் கடவன.

மூன்றாவதுபாதத்தில் அநாபுஷி என்ற ஸ்தானத்தில் 'அநாப்நுஷி' என்று சிலர் பாடங்கூறுவர்; அது மறக்கத்தக்க தவறான பாடம். 'அநாபுஷி' என்றே ரூபம் நிஷ்பந்நமாகும்; இதில் நகாரம் புகுவதற்கு ப்ரஸக்திலேசமுமில்லை. (16)

तत्त्वार्थतत्परपरश्शतवेदवाक्यैः सामर्थ्यतः स्मृतिभिरप्यथ तादृशीभिः ।
त्वामेव तत्त्वपरसात्त्विकसत्पुराणैः देवज्ञधीभिरपि निश्चिनुमः परेशम् ॥१७॥

தத்வார்த்ததத்பரபரச்சதவேதவாக்யை:
ஸாமர்த்யத: ஸ்ம்ருதிபிரப்யத தாத்ருசீபி:,
த்வாமேவ தத்வபரஸாத்விகஸத்புராணை:
தேவஜ்ஞதீபிரபி நிச்சிநும: பரேசம். 17

தத்வார்த்த தத்பர பரச்சத வேத வாக்யை: அத தாத்ருசீபி: ஸ்ம்ருதிபி: அபி ஸாமர்த்யத: தத்வபரஸாத்விக ஸத்புராணை: தேவஜ்ஞதீபி: அபி த்வாம் ஏவ பரேசம் நிச்சிநும:

(எம்பெருமானே!) பரதத்துவப்பொருளை வெளியிடுவதில் ஊற்றமுடைய அனேக வேதவாக்யங்களைக் கொண்டும் இன்னமும் அப்படிப்பட்ட [அதாவது—தத்வார்த்த தத்பரங்களான] ஸ்ம்ருதிகளைக்கொண்டும் (ஸ்பஷ்டார்த்தக வாக்யாநுகுணமாகவே அஸ்பஷ்டார்த்தக வாக்யங்களையும் நிர்வஹிக்கவேண்டுதலாகிற) ஸாமர்த்யத்தைக்கொண்டும் தத்வபரங்களும் ஸாத்விகங்களுமான புராணச்ரேஷ்டங்களைக்கொண்டும் ப்ரஹ்மவித்துக்களான பராங்குச பரகால யதிவராதிகளின் திருவுள்ளங்களைக்கொண்டும் தேவரீரையே ஸர்வேச்வரனாக நிச்சயிக்கின்றோம்.

* * * எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளையடைய வோதும்வேதங்களின் உண்மைப்பொருள்களையுணர்வதற்கு பக்தியே தலையான ஸாதனமென்றருளிச்செய்தார் கீழ்ச்லோகத்தில்; அப்படிப்பட்ட ஸாதநஸம்பந்நரானவர்கள் எம்பெருமானுடைய பாரம்யத்தை நிஷ்கர்ஷிக்கும்வழிகள் இன்னின்னவையென்று அருளிச்செய்கிறார்தில்.

[தத்வார்த்த தத்பர பரச்சத வேதவாக்யை:] *नारायणपरं ब्रह्म तत्त्वं नारायणः परः । नारायण-परो ज्योतिरात्मा नारायणः परः * என்று பரதத்வமாக ஓதப்பட்ட ஸ்ரீமந்நாராயணன்பக்கலிலே தத்பரங்களாயும் அஸங்க்யாதங்களாயுமுள்ள வேதவாக்யங்களைக்கொண்டும். [தாத்ருசீபி: ஸ்ம்ருதிபிரபி] தத்வார்த்த தத்பர பரச்சத ஸ்ம்ருதிகளைக்கொண்டுமென்றபடி. [ஸாமர்த்யத:] ஸாமர்த்யமாவது—ப்ரதிபாதிதமான ஒருஅர்த்தத்துக்கு அவிருத்தமான அர்த்தாந்தரத்தைத் தெரிவிக்கவல்லமையாம். அதாவது, சிலவாக்யங்களில் அர்த்தம் ஸாஸ்பஷ்டமாயிருக்கும்; மற்றுஞ்சிலவாக்யங்களில் அர்த்தம் அஸ்பஷ்டமாயிருக்கும். அங்கு, ஸ்பஷ்டார்த்தகங்களான வாக்யங்களைக்கொண்டு அஸ்பஷ்டார்த்தகங்களான வாக்யங்களின் அர்த்தத்தையும் தததுகுணமாக நயிப்பித்துக்கொள்வதேயாம்.

[தத்வபர ஸாத்விக ஸத்புராணை:] தத்வபரங்களாயும் அதுவே ஸாத்விகங்களாயுமிருக்கிற சிறந்த புராணங்களைக் கொண்டு. * यस्मिन्कल्पे तु यत्प्रोक्तं पुराणं ब्रह्मणा स्वयम् । तस्य तस्य तु माहात्म्यं तत्स्वरूपेण वर्ण्यते ॥ अग्नेश्शिवस्य माहात्म्यं तामसेषु प्रकीर्तितम् । संकीर्णेषु सरस्वत्याः पितॄणां च निगद्यते ॥ राजसेषु च कल्पेषु अधिकं ब्रह्मणो विदुः । सात्त्विकेष्वथ कल्पेषु माहात्म्यमधिकं हरेः ॥ तेष्वेव योगसंसिद्धा गमिष्यन्ति परां गतिम् = யஸ்மிந் கல்பே து யத் ப்ரோக்தம் புராணம் ப்ரஹ்மணா ஸ்வயம், தஸ்ய தஸ்ய து மாஹாத்ம்யம் தத்ஸ்வரூபேண வர்ண்யதே, அக்நேச் சிவஸ்ய மாஹாத்ம்யம் தாமஸேஷு ப்ரகீர்த்திதம், ஸங்கீர்ணேஷு ஸரஸ்வத்யா:, பித்ருணாஞ் ச நிகத்யதே, ராஜஸேஷு ச கல்பேஷு அதிகம் ப்ரஹ்மணோ விது:, ஸாத்விகேஷ்வத கல்பேஷு மாஹாத்ம்யம் அதிகம் ஹரே:, தேஷ்வேவ யோகஸம்ஸித்தா கமிஷ்யந்தி பராம் கதிம் * இத்தியாதிப்ரமாணங்களை இங்கு அநுஸந்திப்பது.

[தேவஜ்ஞதீபிரபி] தேவஜ்ஞர்களாகிறார் பரதேவதாபாரமார்த்த்ய வித்துக்களான பராங்குசபராகாலயதிவராதிகள்; அவர்கள் வெளியிட்டருளின ஸ்ரீஸூக்திகள்கொண்டும் என்றபடி. [த்வாமேவ பரேசம் நிச்சிநும:] தேவரீரையேபரமபுருஷராக அறுதியிடாநின்றோம். ஆக, ச்ருதிகளென்ன ஸ்ம்ருதிகளென்ன ஸாத்விகபுராணங்களென்ன ஆழ்வாராசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளென்ன இவைகளைக்கொண்டு பரதத்வநிர்ணயம் பண்ணப்புகுந்தால் ஸ்ரீமந்நாராயணனுக்கே பாரம்யம் அசைக்கவொண்ணாதபடி தேறும் என்றாராயிற்று. (17)

अन्यत्र तु क्वचन केचिदिहेशशब्दाल्लोकप्रसिद्धिमुपगम्य तमीशमाहुः ।
तैश्च प्रसिद्धिविभवस्य समूलतायै ग्राह्या त्रयी त्वयि तु साऽच्युत ! सम्मुखीना ॥१८॥

அந்யத்ர து க்வசந கேசிதிஹேசசப்தாத்
லோகப்ரஸித்திமுபகம்ய தமீசமாஹு:,
தைச் ச ப்ரஸித்திவிபவஸ்ய ஸமூலதாயை
க்ராஹ்யா த்ரயீ த்வயி து ஸாச்யுத ஸம்முகீநா. **18**

ஹே அச்யுத! இஹ கேசித் து க்வசந அந்யத்ர ஈசசப்தாத் லோகப்ரஸித்திம் உபகம்ய தம் ஈசம் ஆஹு:; ப்ரஸித்தி விபவஸ்ய ஸமூலதாயை தை: த்ரயீ க்ராஹ்யா: ஸா த்ரயீ து த்வயி ஸம்முகீநா.

அடியார்களை ஒருகாலும் நழுவவிடாத எம்பெருமானே!; இவ்வுலகில் சிலபேர்களோவென்றால் சில க்ரந்தங்களில் தேவதாந்தரங்கள் பக்கலில் ஈசசப்த ப்ரஸித்தி யிருப்பதைக்கொண்டு அந்த ருத்ரனை ஈசசப்தவாச்யனைச் சொல்லுகிறார்கள். அந்த ப்ரஸித்தியானது ஸமூலம் என்பதற்காக [மூலாதாரம் காட்டுவதற்காக] அந்த வாதிகளாலே வேதமானது கொள்ளத்தகுந்தது. (வேதமூலப்ரமாணம் காட்டவேணுமென்கை.) அந்த வேதமோவென்றால், தேவரீர் பக்கலிலே ஆபிமுக்யமுடையது.

* * * ஈச சப்தத்திற்கு தேவதாந்தரத்தின் பக்கலில் ப்ரஸித்தி ப்ராசுர்யமிருப்பதால் அந்த சப்தத்திற்கு ஸ்ரீமந்நாராயண பரத்வம் ஸம்பவிக்கக்கூடுமோவென்று சங்கிப்பார்க்கு ஸமாதானமாகும்படி யருளிச்செய்வது இந்த ச்லோகம். [க்வசந கேசித்] சில நூல்களிலே சில ப்ராந்தர்கள் என்றபடி. [ஈசசப்தாத் அந்யத்ர லோகப்ரஸித்திமுபகம்ய] * शंभुरीशः पशुपतिः शिवश्शूली महेश्वरः—சம்புரீச: பசுபதி: சிவச் சூலீ மஹேச்வர: * என்கிற அமரகோசாதிகளைக் கொண்டும், 'ஈச்வரன்கோவில்' என்று உலகர்கள் ப்ரஸித்தமாக வழங்குகிற வழக்கச் சொற்களைக் கொண்டும் ருத்ரன்பக்கலில் தான் ஈசசப்த வாச்யத்வம் உள்ளதென்று கொள்ளுகின்றார்கள். லோகப்ரஸித்தி இங்ஙனேயிருந்தாலும் வேதப்ரஸித்தியே முக்கிய

மாக நோக்கத்தக்கதாதலாலும் வேதப்ரஸித்திமூலகமான லோகப்ரஸித்தியே ப்ரமாணமானதாலும் ஈச சப்தத்திற்கு வேதப்ரஸித்தி எங்ஙனே யிராகின்றதென்று ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவச்யமாகும். அப்படிப் பார்க்குமளவில்; [ஹேஅச்யுத ஸா த்ரயீ து த்வயி ஸம்முகீநா]* पतिं विश्वस्यात्मेश्वरं शाश्वतं शिवमच्युतम्-பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் சாச்வதம் சிவமச்யுதம் * என்று நாராயணாநுவாகம் முதலானவற்றிலுள்ள ச்ருதிவாக்யங்களானவை தேவரீர்பக்கலிலேயே ஈச சப்தார்த்த பௌஷ்கல்யத்தை வ்யவஸ்தை பண்ணித்தருகின்றனவென்றபடி. இத்தால், ப்ரமாணங்களுள் தலையான வேதத்திலுள்ள ப்ரஸித்திக்கு மாறாக அர்த்த வ்யவஸ்தை பண்ணுவது அநுசிதமாகையாலே ஈச்வரத்வமோ ஈசத்வமோ எதுவும் ஸ்ரீமந்நாராயணனிடத்திலேயே முக்க்யவ்ருத்தியை யுடைத்தாயிருக்குமென்றதாயிற்று. (18)

य: खल्वणोरणुतरो महतो महीयानात्मा जनस्य जनको जगतश्च योऽभूत् ।
वेदात्मकप्रणवकारणवर्णवाच्यं तं त्वां वयं तु परमेश्वरमामनाम: ॥१९॥

ய: கல்வணோரணுதரோ மஹதோ மஹீயாந்
ஆத்மா ஜநஸ்ய ஜநகோ ஜகதச் ச யோபூத்,
வேதாத்மக ப்ரணவகாரண வர்ணவாச்யம்
தம் த்வாம் வயம் து பரமேச்வரமாமநாம:. 19

ய: கலு (பவாந்) அணோ: அணுதர: மஹத: மஹீயாந் அபூத், ய: பவாந் ஜகத: ஜநஸ்ய ஜநக: ஆத்மா அபூத்; தம் வேதாத்மக ப்ரணவ காரணவர்ண வாச்யம் த்வாம் து வயம் பரமேச்வரம் ஆமநாம:

(எம்பெருமானே!) யாவரொரு தேவரீர் அணுவிற்காட்டிலும் மிகவும் அணுபூதராகவும் மஹத்தான வஸ்துவிற்காட்டிலும் மிகவும் மஹானாகவும் ஆனீரோ, யாவரொரு தேவரீர் அசேதநவர்க்கத்துக்கும் சேதநவர்க்கத்துக்கும் உத்பாதகராயும் ஆனீரோ, அப்படிப்பட்டவராய், வேதவடிவான ப்ரணவத்திற்குக் காரணபூதமான அகாரமாகிற அக்ஷரத்திற்குப் பொருளான தேவரீரையே அடியோங்கள் பரமேச்வராராக அநுஸந்திக்கின்றோம்.

* * *—கீழ்ச்லோகத்தில் * த்ரயீ த்வயி து ஸாச்யுத! ஸம்முகீநா* என்றருளிச் செய்தபடியை மூதலிக்கிறார் இந்தச்லோகத்தில். *அணோரணீயாந் மஹதோ மஹீயாந்* என்றும் * சுருக்குவாரையின்றியே சுருங்கினாய் சுருங்கியும் பெருக்குவாரையின்றியே பெருக்கமெய்துபெற்றியோய்* என்றும் சொல்லுகின்றபடியே அணுவிற்காட்டில் மிகவும் அணுபூதனாயும் மஹத்திற்காட்டிலும் மிகவும் மஹானாயும், சேதநாசேதநாத்மகமான ஸகல சராசரங்களுக்கும் உத்பாதகனாயும் அந்தர்யாமியாயும், வேதஸ்வரூபியான ப்ரணவத்திற்கும் காரணமான அகாரத்துக்கு அர்த்தபூதனாயுமுள்ள எம்பெருமானொருவனுக்கே பரமேச்வரத்வம் ச்ருதிஸித்தமென்றதாயிற்று.

* அணோரணீயாந் * இத்யாதிச்ருதியிலே "आत्मा गुहायां निहितोऽस्य जन्तो: । तमक्रतुं पश्यति वीतशोको धातु: प्रसादान्महिमानमीशम्" என்று ஈசசப்தநிர்தேசமிருப்பதாலும், இது தைத்திரீயநாராயணாநுவாகத்தி லுள்ளதாகையாலும், அந்த அநுவாகத்தினுடைய முடிவிலேயே *यो वेदादौ स्वर: प्रोक्तो वेदान्ते च प्रतिष्ठित: । तस्य प्रकृतिलीनस्य य: परस्स महेश्वर:— யத் வேதாதௌ ஸ்வர: ப்ரோக்தோ வேதாந்தே ச ப்ரதிஷ்டித:, தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய ய: பரஸ் ஸ மஹேச்வர:* என்று அகாரவாச்யனையே மஹேச்வரனாக ஓதுகையாலும் ஈசத்வமோ ஈச்வரத்வமோ மஹேச்வரத்வமோ பரமேச்வரத்வமோ எல்லாம் ஸ்ரீமந்நாராயணனுக்கே ஏற்குமென்றதாயிற்று.

* तमीश्वराणां परमं महेश्वरम् * उतामृतत्वस्येशान: *पतिं विश्वस्यात्मेश्वरम् * ईशानो भूतभव्यस्य *

[* தமீச்வராணும் பரமம் மஹேச்வரம் * உதாம்ருதத்வஸ்யேசாந: * பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் * * ஈசானோ பூதபவ்யஸ்ய *] என்றிவை முதலான ச்ருதிகளும், * ईश्वरस्सर्वभूतानां हृद्देशेऽर्जुन ! तिष्ठति * अनादि निधनं विष्णुं सर्वलोकमहेश्वरम् * ईशानः प्राणदः प्राणः * * ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசேர்ஜுந திஷ்டதி * அநாதிநிதநம் விஷ்ணும் ஸர்வலோகமஹேச்வரம் * ஈசாந: ப்ராணத: ப்ராண:] என்றிவைமுதலான ஸ்மிருதிகளும் இங்கு அநுஸந்தேயங்கள்.

இதில் பூர்வார்த்தத்தின் முடிவில் அபூத் என்று ப்ரதமபுருஷ க்ரியாபதமிருப்பதனால் அதற்குச்சேர பவாந் என்று அத்யாஹாரம் செய்துகொள்ளப்பட்டது. அபூத் என்றல்லாமல் அபூ: என்கிற பாடமும் சிலருக்குள்ளதாம். அப்போது த்வம் என்று வருவித்துக்கொள்வது; அது தன்னடையே வந்து சேரும். (19)

आत्मेश्वरोऽसि न परोऽस्ति तवेश्वरोऽन्यः विश्वस्य चाधिपतिरस्य परायणं च ।
नारायणाच्युत ! परस्त्वमिहैक एव ब्रह्मादयोऽपि भवदीक्षणलब्धसत्ताः ॥२०॥

ஆத்மேச்வரோஸி ந பரோஸ்தி தவேச்வரோந்ய:
விச்வஸ்ய சாதிபதிரஸ்ய பராயணஞ் ச,
நாராயணாச்யுத பரஸ் த்வமிஹைக ஏவ
ப்ரஹ்மாதயோபி பவதீக்ஷணலப்தஸத்தா: 20

நாராயண அச்யுத இஹ பர: த்வம் ஏக: ஏவ ஆத்மேச்வர: அஸி, தவ அந்ய: பர: ஈச்வர: நாஸ்தி, அஸ்ய விச்வஸ்ய அதிபதி: பராயணஞ்ச அஸி; ப்ரஹ்மாதயோபி பவதீக்ஷணலப்த ஸத்தா:

நாராயணனே! அச்யுதனே! இவ்விடத்து, பரதத்வமான தேவரீர் ஒருவரே ஆத்மேச்வராக ஓதப்பட்டிராநின்றீர்; தேவரீருக்கு வேறொரு சிறந்த நியாமகர் இல்லை; இவ்வுலகுக்கெல்லாம் ப்ராப்யராயும் ப்ராபகராயுமிராநின்றீர்; (சிலசில விடங்களில் ஈச்வராகச் சொல்லப்படுகிற) ப்ரஹ்மாதிகளும் தேவரீருடைய கடாக்ஷத்தினால் ஸத்தைபெற்றவர்களிறே.

* * * கீழ்ச்லோகத்தில் உபநிஷத் வாக்கியங்களையே பெரும்பாலும் தொடுத்து அருளிச்செய்திருக்கிறார். இதில், உபநிஷத் வாக்யங்களை உள்ளடக்கி அவற்றின் பொருள்களைப் பொழிந்தருளிச்செய்கிறார். [ஆத்மேச்வரோஸி] * பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் * என்று ஓதினபடியே ஸகலாத்ம வர்க்கங்களுக்கும் நியந்தாவாக இராநின்றீர். [ந பரோஸ்தி தவேச்வரோந்ய:] நியாமகத்வமும் நியாம்யத்வமும் ஸமாநாதிகரணமாயிருக்கிற படியையும் உலகில் காணாநின்றோமிறே: ஒருவன் சிலர்க்கு நியாமகனாயிருக்கச்செய்தேயும் தான் தன்னில் மேம்பட்டார்க்கு நியாம்யனாயிருப்பதுமுண்டே; அப்படி இங்கில்லை யென்கிறது. ஸர்வாந்தர்யாமியாய்க்கொண்டு ஸர்வநியாமகராயிருப்பீர் தேவரீரொருவரேயாகையாலே தேவரீரை நியமிப்பார் மற்றாருமில்லை கிடீர்.

[விச்வஸ்ய சாதிபதிரஸ்ய பராயணஞ்ச] உபாயமும் உபேயமும் தேவரீரே என்றபடி. மற்ற விஷயங்களில் உபாயம் வேறாய் உபேயம் வேறாயிருக்கும். பகவத் விஷயத்தில் அங்ஙனமில்லையிறே. * स्वप्राप्तौ स्वयमेव साधनतया जोघुष्यमाणः श्रुतौ—ஸ்வப்ராப்தௌ ஸ்வயமேவ ஸாதநதயா ஜோகுஷ்யமாண: ச்ருதௌ * என்றிறே வேதாந்தவாரியனும் விளம்பிற்று. [இஹ த்வமேக ஏவ பர:] ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் ஈச்வரத்வம் கூடுமென்று சொல்லுவார்க்கு அவகாசமற அருளிச்செய்கிறபடி. பரத்வமென்பது $ வ்யாஸஜ்ஜ்யவ்ருத்தியான தர்மமன்று; ஸ்ரீமந்நாராயணனொருவனுக்கே அஸாதாரண தர்மமென்றதாயிற்று.

$ இரண்டு பொருள்களைக் கவ்வியிருக்குமது வ்யாஸஜ்ஜ்யவ்ருத்தி யெனப்படும்.

ஆனால் ப்ரமாணங்களில் சிலசில விடங்களில் ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் ஈச்வரத்வம் சொல்லிற்றுகக் காணுகின்றதே யென்ன; [ப்ரஹ்மாதயோபி பவதீக்ஷணலப்தஸத்தா:] என்கிறார். எம்பெருமானுடைய கடாக்ஷவிசேஷத்தாலேயிறே அவர்கள்தாமும் ஸத்தை பெற்றுக்கிடக்கிறது. * யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ:, புநஸ் த்ரைலோக்ய தாத்ருத்வம் ப்ராப்தவாநிதி சுச்ரும. * மஹாதேவஸ் ஸர்வமேதே மஹாத்மா ஹுத்வாத்மாநம் தேவதேவோ பபூவ * இத்யாதி ப்ரமாண வசனங்கள் இங்கே அநுஸந்தேயங்கள். அவ்வோ தேவதைகள் எம்பெருமானை நெடுங்காலம் ஆராதித்து ஓரோ அதிகாரங்கள் பெற்றார்க ளென்னுமளவால் அவர்களுக்கொரு பரத்வமுண்டாயிடுமோ? (20)

नित्यस्समाभ्यधिकवर्जित ऊर्जितश्री: नित्येऽक्षरे दिवि वसन् पुरुष: पुराण: ।

सत्त्वप्रवर्तनकरो जगतोऽस्य मूलं नान्यस्त्वदस्ति धरणीधर ! वेदवेद्य: ॥२१॥

நித்யஸ் ஸமாப்யதிக வர்ஜித ஊர்ஜித ஸ்ரீ:
நித்யேக்ஷரே திவி வஸந் புருஷ: புராண:,
ஸத்வப்ரவர்த்தநகரோ ஜகதோஸ்ய மூலம்
நாந்யஸ் த்வதஸ்தி தரணீதர! வேதவேத்ய:. 21

தரணீதர! (த்வம் ஏக ஏவ) நித்ய: ஸமாப்யதிகவர்ஜித: ஊர்ஜித ஸ்ரீ: நித்யே திவி அக்ஷரே வஸந் அஸ்ய ஜகத: மூலம் ஸத்வப்ரவர்த்தநகர: புராண: புருஷ: அஸி; த்வத் அந்ய: வேதவேத்ய: நாஸ்தி

ஸமஸ்தபூமண்டல நிர்வாஹகரான பகவானே! தேவரீரொருவரே நிருபாதிக நித்யத்வத்தோடு கூடின வராயும் ஒத்தாரும் மிக்காருமில்லாதவராயும் திடமான ஸ்ரீஸம்பந்தத்தை யுடையவராயும், சாச்வதமாய் பரமாகாச சப்தவாச்யமான பரமபதத்தில் வஸிப்பவராயும் இந்த ஜகத்துக்குக் காரணபூதராயும் ஸத்வகுணத்தை ப்ரவர்த்திப்பிக்குமவராயும் அநாதி புருஷராயும் இராநின்றீர்; தேவரீரைக் காட்டிலும் வேறொருவர் வேதப்ரதிபாத்யராக இல்லை.

* * *—கீழ்ச்லோகத்திலுள்ள த்வம் ஏக ஏவ என்கிற பதங்களை இவ்விடத்திற்கும் ஆகர்ஷித்துக்கொள்வது. [த்வம் ஏக ஏவ நித்ய:] ஜீவாத்மா, காலம், ஆகாசம் முதலானவை களுக்கும் நித்யத்வமுண்டேயாகிலும் நித்யேச்சாதீநமான நித்யத்வமேயன்றோ அவற்றுக் குள்ளது. 'இவை நித்யவஸ்துக்களா யிருக்கக் கடவன' என்று பரமபுருஷன் ஸங்கல் பித்ததனாலன்றோ அவை நித்யவஸ்துக்களெனப்படுகின்றன. அதுதான் ஔபாதிக நித் யத்வ மெனப்படும். அப்படி ஔபாதிகமன்றியே நிருபாதிகமாக நித்யத்வமுள்ளது எம்பெருமானொருவனுக்கேயாயிற்று.

[ஸமாப்யதிகவர்ஜித:] * न तत्समश्चाभ्यधिकश्च दृश्यते — ந தத்ஸமச்ச அப்யதிகச் ச த்ருச் யதே * ஒத்தார்மிக்காரை யிலையாய மாமாயா * என்கிறபடியே தன்னோடொத்தவர்களும் தனக்கு மேம்பட்டவர்களு மில்லாதவனென்கை. தன்னோடொப்பாரில்லையென்றபோதே தன்னில் மேம்பட்டாரில்லையென்பது கல்வெட்டாகத் தேறிநிற்க, மிக்காரில்லை யென்பதைத் தனிப்படச் சொல்லவேணுமோவென்று சிலர் சங்கிப்பார்கள். எம்பெருமானைக்காட்டிலும் மேம்பட்டவர்கள் எப்படியில்லையோ அப்படி அவனோடொத்தவர்களு மில்லையென்று சொல் லுவதிலே நோக்கு என்று சில ஆசார்யர்கள் நிர்வஹிப்பார்கள். அன்றிக்கே, * தானே தனக்குவமன் * தன்னொப்பான் தானேயுளன் காண் * என்றருளிச் செய்கிறபடியே அநந் வயாலங்கார ப்ரக்ரியையில் 'எம்பெருமான் எம்பெருமானோடொப்பன்' என்று சொல்லக் கூடுமாகையாலே ஒருவாறு ஸாம்யவாதத்திற்கு இடமுண்டானாலும் மேம்பட்டாருள ரென்கிற ஸம்பாவனைக்கு இடமேயில்லை யென்கிறது என்று கூறுவாருமுளர்.

[ஊர்ஜிதஸ்ரீ:] எம்பெருமானுக்கு நிருபக விசேஷணங்கள் பலவுண்டாகிலும் அவை யெல்லாவற்றிலுங் காட்டில் ச்ரிய:பதித்வமே ப்ரதாந நிருபகமாக நம்முதலிகள் அறுதி

யிட்டிருப்பார்கள் ; * திருவில்லாத் தேவரைத் தேறேன்மின்தேவு * என்றார் திருமழிசைப் பிரான். ஆஸுரப்ரக்ருதியான மாரீசனுங்கூட *அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா * என்று ஸ்ரீஸம்பந்தத்தையிட்டே யன்றோ பகவானுக்கு உத்கர்ஷம் சொல்லிற்று. வேதமும் *श्रद्धयाऽदेवो देवत्व मश्नुते–ச்ரத்தயாதேவோ தேவத்வமச்நுதே* என்று ஓதிற்று. பிராட்டியின் ஸஹஸ்ரநாமாவளியிலே ச்ரத்தா என்பதும் ஒரு திருநாமமாகப் படிக்கப்பட்டிருக்கையாலே ச்ரத்தயா என்றது ஸ்ரீமஹாலக்ஷ்மியினாலென்றபடி. அதற்கடுத்த பதம் தேவஃ என்பதன்று, 'அதேவஃ' என்றே பதவிபாகமாகும். ஸ்வரஸந்நிவேசமாயிற்று இதற்கு நியாமகம். "அதேவஃ ச்ரத்தயா தேவத்வம் அச்நுதே"—பண்டு தெய்வத்தன்மையில்லாதிருந்தவன் லக்ஷ்மீ ஸம்பந்தத்தினால் தெய்வத்தன்மை பெறுகிறானென்று ஓதிற்றாயிற்று.

[நித்யே அக்ஷரே திவி வஸந்] நித்யமாயும் காலக்ருதபரிணாமரஹிதமாயும் பரமாகாச—பரமவ்யோம சப்தவாச்யமாயுமிருக்கிற பரமபதத்திலுள்ளீரும் தேவரீரே யென்கிறது. * द्योदिवौ द्वे स्त्रियाम् * என்ற அமரகோசத்தின்படி ஸ்த்ரீலிங்கமான திவ் சப்தம் இங்கு அந்ய லிங்கமாயிராநின்றதே ; நித்யே, அக்ஷரே என்கிற விசேஷணங்கள் அந்வயியாதே என்று சிலர் சங்கிப்பர்கள். இதற்காக ஸம்ஸ்க்ருத வியாக்கியான கர்த்தா "பரமபதே இதி சேஷஃ" என்றார். அப்போது திவி என்பது விசேஷ்யமல்ல, விசேஷணரூபமாகவே யுள்ளது என்று கருத்தாகும். 'பரமபதே' என்று அத்யாஹாரமின்றியே அக்ஷரே என்பதையே விசேஷ்யமாகக்கொள்வது உசிதம். அக்ஷரசப்தத்திற்கு மோக்ஷார்த்தகத்வம் நிகண்டு ஸித்தம்; * तदक्षरे परमे व्योमन् * என்று ச்ருதியுமுண்டு. அதை நினைப்பூட்டுதலும் இங்கு விவக்ஷிதம். ஏவஞ்ச, 'நித்யே திவி அக்ஷரே' என்று அந்வயிப்பது.

[புராணஃ புருஷஃ த்வம் ஏக ஏவ அஸி] * எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும் முந்தை * முனிவன் மூவுலகாளியப்பன் * இமையோர்க்கென்றும் முன்னோய் * என்றிவை முதலான சந்தைகளை இங்கே நினைப்பது. [ஸத்வப்ரவர்த்தநகரஃ] * सत्त्वस्यैष प्रवर्तकः—ஸத்வஸ்யைஷ ப்ரவர்த்தகஃ * என்கிற ச்ருதி இங்கே விவக்ஷிதம். * ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதநஃ, ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த சிந்தகஃ* என்பதும் இங்கு அநுஸந்தேயம். தம்முடைய கடாக்ஷத்திற்கு இலக்கானார் திறத்திலே ஸத்வகுணம் ப்ரவ்ருத்தமாம்படி செய்யவல்லவர் என்றபடி. [அஸ்ய ஜகதோ மூலம் த்வம் ஏக ஏவ] * यतो वा इमानि भूतानि जायन्ते * இத்யாதியுபநிஷத்தையும் * அவையுள் தனிமுதலம்மான் * என்பது முதலான வருளிச்செயல்களையும் நினைப்பது.

[த்வத் அந்யஃ வேதவேத்யஃ நாஸ்தி] "வேதைச் ச ஸர்வைரஹமேவ வேத்யஃ" என்று கீதையில் தானே சொன்னபடியே வேதப்ரதிபாத்யன் வேறில்லாமையாலே, தேவரீரைக் காட்டிலும் வேறு வ்யக்தி வேதங்களினால் அறியக்கூடியதாக இல்லையென்றாராயிற்று. அக்நி வருண ஸூர்ய யமாதிகளான பலபல தேவதைகளும் வேதங்களினால் அறியக்கிடக்கின்றன வில்லையோவென்னில் ; "स आत्मा ; अङ्गान्यन्या देवताः" (ஸ ஆத்மா; அங்காந்யந்யா தேவதாஃ) என்கிறபடியே அந்த தேவதைகளெல்லாம் சரீரபூதர்களேயல்லது சரீரிகளல்லாமையாலே அவர்கள் வேதவேத்யர்களாக வகையில்லை யென்க.

"நாந்யஸ் த்வதஸ்தி" என்பதை நித்யஃ, ஸமாப்யதிகவர்ஜிதஃ இத்யாதியான ஒவ்வொன்றோடும் கூட்டி அந்வயிக்கத்தகும். (21)

यं भूतभव्यभवदीशमनीशमाहुरन्तस्समुद्रनिलयं यमनन्तरूपम् ।
यस्य त्रिलोकजननी महिषी च लक्ष्मीः साक्षात्स एव पुरुषोऽसि सहस्रमूर्द्धा ॥२२॥

யம் பூதபவ்ய பவதீச மநீச மாஹு:
அந்தஸ் ஸமுத்ரநிலயம் யமநந்தரூபம்,
யஸ்ய த்ரிலோகஜநநீ மஹிஷீ ச லக்ஷ்மீஸ்
ஸாக்ஷாத் ஸ ஏவ புருஷோஸி ஸஹஸ்ரமூர்த்தா. 22

யம் பூத பவ்ய பவத் ஈசம் அநீசம் ஆஹு:; யம் அந்தஸ் ஸமுத்ர நிலயம் அநந்த ரூபம் ஆஹு:; யஸ்ய மஹிஷீ லக்ஷ்மீச் ச த்ரிலோக ஜநநீ; ஸ: ஸஹஸ்ரமூர்த்தா புருஷ: ஸாக்ஷாத் த்வம் ஏவ அஸி.

யாவனொருவனையே பூத பவிஷ்யத் வர்த்தமாந கா்லிக ஸமஸ்த வஸ்துக்களுக்கும் ஈச்வரனாகவும், தமக்கு நியாமக ரில்லாவனாகவும் (வேதங்கள்) ஓதுகின்றனவோ; யாவனொருவனைக் கடலுள் வாழ்பவனாகவும் அபரிமித அவதார விக்ரஹ விசிஷ்டனாகவும் (அந்த வேதங்கள்) சொல்லுகின்றனவோ, யாவனொருவனுக்கு திவ்யமஹிஷியான ஸ்ரீ மஹாலக்ஷ்மியும் ஸகலலோக மாதாவாக இருக்கின்றாளோ, அப்படிப்பட்ட *ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:* என்னப்பட்ட பரம புருஷன் ஸாக்ஷாத் தேவரீரே ஆகிறீர்.

* * *— * ईशानो भूतभव्यस्य —— ஈசாநோ பூதபவ்யஸ்ய * என்கிற (கடவல்லி) உபநிஷத்தின்படியே பூத பவிஷ்யத் வர்த்தமாந காலிகங்களான ஸகல பதார்த்தங்களுக்கும் நியாமகராய், * न तस्येशे कश्चन—— ந தஸ்யேசே கச்சந * என்கிற ச்ருதியின்படியே தமக்கு வேறொரு நியாமகரையுடையரல்லாதவராய், * यमन्तस्समुद्रे कवयो वयन्ति—— யமந்தஸ் ஸமுத்ரே கவயோ வயந்தி * என்கிற ச்ருதியின்படியே க்ஷீராப்திசாயியாய், * तदेकमव्यक्तमनन्तरूपम्—— ததேகமவ்யக்தமநந்த ரூபம் * என்கிற ச்ருதியின்படியே அபரிமிதாவதார விக்ரஹ விசிஷ்டராய் * ह्रीश्च ते लक्ष्मीश्च पत्न्यौ—— ஹ்ரீச் ச தே லக்ஷ்மீச் ச பத்ந்யௌ * என்கிற ச்ருதியின்படியே ச்ரிய:பதியுமான தேவரீரே * सहस्रशीर्षा पुरुष:—— ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: * என்று தொடங்கி புருஷ ஸூக்தத்தில் ப்ரதிபாதிக்கப்பட்ட புருஷோத்தமராய் இராநின்றீர் என்றதாயிற்று.

* ईशानो भूतभव्यस्य—— ஈசாநோ பூதபவ்யஸ்ய * என்கிற ச்ருதியில் பூதபவிஷ்யத் ப்ரதிபாதகமுள்ளதேயன்றி வர்த்தமாந ப்ரதிபாதகம் இல்லையாயிருக்க, இங்கு "பூத பவ்ய பவதீசம்" என்று வர்த்தமாநத்தையுஞ் சேர்த்துச் சொல்லியிருப்பதானது உபலக்ஷணவிதயா அதுவும் ச்ருதிவிவக்ஷிதமென்று திருவுள்ளம்பற்றியே. வர்த்தமாநமென்பது ஒரு த்ருடி மாத்ரமேயாய் பூதபவிஷ்யத்துக்களுள் ஒன்றிலே சொருகிப்போமதாகையாலே அதற்குத் தனியே நிர்தேசம் அநபேக்ஷிதமென்று கொண்டே ச்ருதியில் அது விடப்பட்டதென்றுங் கொள்ளலாம்.

[அநீசம்] தான் அனைவர்க்கும் ஈசனாயிருப்பதுபோல் தனக்கும் ஒரு ஈசனுண்டோ வென்ன, இல்லையென்கிறது. (22)

सर्वश्रुतिष्वनुगतं स्थिरमप्रकम्प्यं नारायणाह्वयधरं त्वमिवानवद्यम् ।
सूक्तं तु पौरुषमशेषजगत्पवित्रं त्वामुत्तमं पुरुषमीशमुदाजहार ॥२३॥

ஸர்வச்ருதிஷ்வநுகதம் ஸ்திரமப்ரகம்ப்யம்
நாராயணாஹ்வயதரம் த்வமிவாநவத்யம்,
ஸூக்தம் து பௌருஷமசேஷஜகத்பவித்ரம்
த்வாமுத்தமம் புருஷமீச முதாஜஹார. 23

(ஹே பகவந்!) த்வம் இவ ஸர்வச்ருதிஷு அநுகதம் ஸ்திரம் அப்ரகம்ப்யம் நாராயணாஹ்வயதரம் அநவத்யம் அசேஷ ஜகத் பவித்ரம் பௌருஷம் ஸூக்தம் து த்வாம் உத்தமம் புருஷம் ஈசம் உதாஜஹார.

எம்பெருமானே!, தேவரீர் போலவே ஸர்வவேதங்களிலுமோதப்பட்டும் ஸ்திரமானதும் (குதர்க்கங்களால்) அசைக்கவொண்ணாததும் நாராயணத் திருநாமத்தையுடையதும் நிர்துஷ்டமானதும் ஸர்வலோக பாவநமுமான புருஷஸூக்தமோவென்றால் தேவரீரைப் புருஷோத்தமராகவும் ஸர்வேச்வராகவும் ஓதிவைத்தது.

* * *—கீழ்ச்லோகத்தில் * புருஷோஸி ஸஹஸ்ரமூர்த்தா * என்று புருஷ ஸூக்த
வாக்யம் ஸ்மரிக்கப்பட்டபடியாலே அந்த புருஷ ஸூக்தத்தின் பெருமையைப்பேசி இதுவே
பகவத் பரத்வப்ரதிபாதகங்களான ப்ரமாணங்களுக்குள் தலையானதென்றருளிச் செய்கிறாரி
தில். புருஷ ஸூக்தத்திற்கும் எம்பெருமானுக்கும் ஆறு விசேஷணங்களினால் ஸாம்யநிர்வா
ஹம் அற்புதமாகச் செய்தருளுகிறார்: [ஸர்வச்ருதிஷு அநுகதம்] * மறையாய நால்வேதத்
துள் நின்ற மலர்ச்சுடரே * என்கிறபடியே எம்பெருமான் ஸகல வேதங்களிலும் திகழ்வது
போலவே புருஷ ஸூக்தமும் ஸகல வேதங்களிலும் திகழ்வதாகும். புருஷ ஸூக்தமென்
கிற பாகம் ஒவ்வொரு வேதத்திலுமுண்டாயிருக்குமிறே. * ऋग्वेदे षोडशर्चं स्यात् यजुष्यष्टादश-
र्चकम् । सामवेदे तु सप्तर्चं तथा वाजसनेयके—ருக்வேதே ஷோடசர்ச்சம் ஸ்யாத் யஜுஷி அஷ்டாத
சர்ச்சகம், ஸாமவேதே து ஸப்தர்ச்சம் ததா வாஜஸநேயகே * என்று, இந்த புருஷ ஸூக்த
மானது ரிக்வேதத்தில் பதினாறு ருக்குக்களையுடையதாகவும் யஜுர் வேதத்தில் பதினெட்டு
ருக்குக்களையுடையதாகவும் ஸாம வேதத்திலும் வாஜஸநேயகத்திலும் ஏழு ருக்குக்களை
யுடையதாகவும் சொல்லப்பட்டிராநின்றது. ஆகவே 'ஸர்வச்ருதிஷு அநுகதத்வம்' உபய
ஸாதாரணமாயிற்று. [ஸ்திரம்] நிலைநின்றிருக்குந்தன்மையும் உபய ஸாதாரணமாயிருக்கும்.
ப்ரமேய பூதனான எம்பெருமானும் ப்ரமாண மூர்த்தந்யமான புருஷ ஸூக்தமும் நித்யஸ்ரீர்
நித்யமங்களமாக விளங்கத்தட்டில்லையே. [அப்ரகம்ப்யம்] எம்பெருமானை இல்லை செய்ய
வேணுமென்று எத்தனை குதர்க்கவாதிகள் திரண்டாலும் அசைக்கவுமொண்ணாதபடியன்றோ
பகவத் தத்வமுள்ளது. அப்படியே புருஷ ஸூக்தத்தைச் சில குதர்க்கங்களினால் அப்ர
மாணமாக்கவேணுமென்று எவ்வளவு முயன்றாலும் அது கைகூடாததாயிருக்கும். [நாராயணாஹ்
வயதரம்] எம்பெருமானுக்கு நாராயணனென்னுந் திருநாமமுடைமைபோலே புருஷ ஸூக்த
மும் நாராயணாநுவாகமென்று ப்ரஸித்தி பெற்றிருக்கும்.

[அநவத்யம்] எம்பெருமான் அகிலஹேயப்ரத்யநீகனாயிருப்பதுபோலேவே புருஷ
ஸூக்தமும் ஹேயப்ரதிபடம். அதாவது புருஷஸூக்தவ்யதிரிக்தங்களான வேதப்பகுதி
களில் தேவதாந்தர பாரம்யசங்கைக்கு ப்ரஸக்தியாவது உண்டாகையாலே அவற்றில்
அந்த அவத்யமொன்று அவகாசம் பெற்றிருக்கும்: புருஷஸூக்தத்தில் அதுதானுமில்லை
யாயிற்று. * वेदेषु पौरुषं सूक्तं धर्मशास्त्रेषु मानवम् । भारते भगवद्गीता पुराणेषु च वैष्णवम्—
வேதேஷு பௌருஷம் ஸூக்தம் தர்மசாஸ்த்ரேஷு மாநவம். பாரதே பகவத்கீதா
புராணேஷு ச வைஷ்ணவம் * என்னும்படியான சிறப்புடையதென்கை. [அசேஷஜகத்பவித்
ரம்] * पावनस्सर्वलोकानां त्वमेव रघुनन्दन !—பாவநஸ் ஸர்வலோகாநாம் த்வமேவ ரகுநந்தந *
என்கிறபடியே எம்பெருமான் அசேஷ ஜகத்பவித்ரனாயிருப்பதுபோலவே புருஷஸூக்தமும்
தன்னையநுஸந்தித்தாரை மனனகமலமறக்கழுவிப் பரமபரிசுத்தர்களாக்குமது. ஆக இப்
படிப்பட்ட புருஷஸூக்தமானது * வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் * என்றுதொடங்கி
தேவரீருடைய புருஷோத்தமத்வத்தை முறையிடாநின்றது. இந்தச்லோகத்திலுள்ள ஒவ்
வொரு விசேஷணமும் எம்பெருமானுடைய பரத்வத்தை நிலைநாட்டவல்லதென்னுமிடமும்
குறிக்கொள்ளத்தக்கது. (23)

आनन्दमैश्वरमवाङ्मनसावगाह्यमाम्नासिषुश्शतगुणोत्तरितक्रमेण ।
सोऽयं तवैव नृषु हि त्वमिहान्तरात्मा त्वं पुण्डरीकनयनः पुरुषश्च पौष्णः ॥२४॥

ஆநந்த மைச்வர மவாங்மநஸாவகாஹ்யம்
ஆம்நாஸிஷுச் சதகுணோத்தரிதக்ரமேண,
ஸோயம் தவைவ ந்ருஷு ஹி த்வமிஹாந்தராத்மா
த்வம் புண்டரீகநயந: புருஷச் ச பௌஷ்ண:. 24

ஐச்வரம் ஆநந்தம் சதகுணோத்தரித க்ரமேண அவாங்மநஸாவகாஹ்யம் ஆம்நாஸிஷு: ; ஸோயம் தவைவ ; ஹி த்வம் இஹ ந்ருஷு அந்தராத்மா ; த்வம் புண்டரீகநயந: பௌஷ்ண: புருஷச் ச (அஸி.)	(எம்பெருமானே !) ஈச்வரத்வப்ரயுக்தமான ஆனந்தத்தை (வேதவாக்குக்களானவை) நூறுநூறு மடங்காகப்பெருக்கிக் கொண்டே போகிற முறைமையில் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாததாச்சொல்லி முடித்தன ; இவ்வானந்தம் தேவரீருக்கே உற்றது ; ஏனென்னில், இவ்வானந்தவல்லீ ப்ரகரணத்தில் தேவரீர் சேதநர்களுக்குள்ளே அந்தர்யாமியாயன்றோ இருக்கிறீர் ; (அவ்வளவேயுமல்லாமல்) புண்டரீகாக்ஷராயும் ஆதித்ய மண்டலத்தினுள் உறையும் புருஷராயுமிராநின்றீரன்றோ.

* * *—வேதங்கள் எம்பெருமானுடைய ஒவ்வொரு குணத்தினுடையவும் எல்லையைக் காணவிரும்பி, அவற்றுள் ஆனந்தமென்கிற ஒரு குணத்தைப்பற்றிப் பேசப்புகுந்தவிடம் தைத்திரீயோபநிஷத்தில் ஆனந்தவல்லி யென்கிற விடம். அதை யெடுத்தருளிச்செய்கிறார் இதில் பூர்வார்த்தத்தினால். இந்தவுலகத்தில் ஸம்பவிக்கமுடியாத ஒப்பற்ற குணங்கள் வாய்ந்த ஒரு மநுஷ்யனைக் கல்பித்து அவனுக்கு மேன்மேலாகப் பலபேர்கள் இருப்பது போலவும், கீழ்ச் சொல்லப்பட்டவர்களிற் காட்டிலும் மேன்மேலும் சொல்லப்படுபவர்களுடைய குணங்கள் நூறுமடங்கு அதிகமாக இருக்கின்றன போலவும் கல்பித்துக்கொண்டுபோய் அப்படிப் பெருக்கிக் கடைசியாகத் தேறும் தொகையை எம்பெருமானுடைய கல்யாண குணத்தின் அளவாகச் சொல்லலாமென்றெண்ணிப் பார்த்து, அவ்வளவிலே சொல்லி முடிக்கப் பொருந்தாமையால் மீண்டும் மீண்டும் திருப்பித் திருப்பிப் பெருக்கிக்கொண்டே போவதாகக்காட்டி ஆனந்தகுணமொன்றே வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாததென்று தலைக்கட்டப்பட்டது.

ஆனந்தவல்லியின் ஸாராம்சமாவது—; ஒருமநுஷ்யன், அவன் நல்ல யௌவன பருவத்திலுள்ளவன் ; ஸகலசாஸ்த்ரங்களையும் ஒன்றுவிடாமல் ஓதிப் பிறர்களுக்கும் ஓதுவிப்பவன் ; ஆலஸ்யமின்றி எல்லாக்காரியங்களையும் வழுவாமற் செய்பவன் ; தேஹத்திலும் மனத்திலும் திடமுள்ளவன். இவ்வளவும் வாய்ந்தாலும் தரித்திரனாயிருந்தால் பயனில்லையே. அப்படியன்றிச் செல்வமெல்லாம் நிறைந்த பூமண்டலம் முழுவதையும் செங்கோல்செலுத்தி ஆளும்படியான ஒப்புயர்வற்ற ஸம்பத்தும் வாய்ந்தவன். இப்படிப்பட்ட அதிசயங்கள் நிறைந்த ஒருமநுஷ்யனிருந்தால் அவனுக்கு உண்டாகக்கூடிய ஆனந்தத்தை முன்னேயெடுத்துக்காட்டி, அதைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்தமுடையவர்களாக மநுஷ்ய கந்தர்வர்களைக்கூறி, அவர்களைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்தமுடையவர்களாக தேவகந்தர்வர்களைக்கூறி இப்படியே நூறுநூறு பங்கு ஆனந்தமுள்ளவர்களாக வரிசையாய் சிரலோக லோகபித்ருக்களையும் ஆஜாநஜ தேவர்களையும் கர்மதேவ தேவர்களையும் இந்திரனையும் ப்ருஹஸ்பதியையும் ப்ராஜாபதியையும் சொல்லிவந்து அந்த ப்ராஜாபதியின் ஆனந்தத்தைவிட நூறுமடங்கு அதிகமான ஆனந்தமுடையது பரப்ரஹ்மம் என்று சொல்லப்பார்த்து, பரப்ரஹ்மத்தின் ஆனந்தத்தை இவ்வளவு மட்டமாகவா சொல்லி

விடுகிறதென்று குறைபட்டு * யதோ வாசோ நிவர்த்தந்தே, அப்ராப்ய மநஸா ஸஹ * என்று எத்தனைமடங்கு அதிகமாகச் சொன்னாலும் இது அவாங்மநஸ கோசரமானதேயென்று தலைக்கட்டிற்று.

ஆனால் * ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த: [ப்ரஜாபதியின் ஆனந்தத்தின் நூறு கொண்டது ப்ரஹ்மானந்தம்] என்று அங்கு ஏன் சொல்லிற்றென்று கேள்வி பிறக்கக் கூடும்; இக்கேள்விக்கு ஆநந்தமயாதிகரண ஸ்ரீ பாஷ்ய ச்ருதப்ரகாசிகையில் ஸமாதானம் அருளிச் செய்யப்பட்டுள்ளது; கேண்மின். "க்ஷிப்தேஷுரிவ ஸர்ப்பதி" = எறியப்பட்ட அம்பு போலே ஸூர்யன் ஓடுகிறான் என்று சொல்லப்பட்டிருந்தால், ஒரு நிமிஷத்தில் பலகாத வழிகளைக் கடந்து செல்லுகிற ஸூர்யனுக்கு அற்பமான அம்பு ஒப்பாக மாட்டாமையாலே *க்ஷிப்தேஷுரிவ ஸர்ப்பதி* என்ற அந்த வாக்யத்திற்கு 'ஸூர்யனுடைய கதி அமந்தம்' என்பதில் மாத்திரம் தாற்பரிய மாவது போல் * ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த: * என்ற இவ்வாக்கியத்திற்கும் ஆனந்த ஆதிக்யத்தில் மாத்திரம் தாற்பரியமாகக் கடவது என்றருளிச் செய்யப்பட்டது. மற்றொரு வகையான ஸமாதானமும் அங்கே கண்டு கொள்க.

இந்த ச்லோகத்தின் உத்தரார்த்தத்தில் தவ என்றும் த்வம் என்றுமிருக்கையாலே எம்பெருமானை நோக்கியே சொல்லப்படுகிற ச்லோகமிதுவென்று விளங்காநிற்க, முதற் பாதத்தில் ஐச்வரம் என்றிருக்கலாமோ? 'த்வதீயம் ஆநந்தம்' என்றன்றோ இருக்கவேண்டும்—என்று வ்யுத்பந்நர்களுக்கு ஒரு சங்கை தோன்றக்கூடும். கேண்மின்; ஐச்வரம் என்பதற்கு 'ஈச்வரனுடையதான' என்று பொருளன்று; ஈச்வரத்வ ப்ரயுக்தமான, என்று பொருள்; ஆகவே விரோதமில்லை யென்றுணர்க. [ஆம்நாஸிஷு:] என்கிற க்ரியைக்கு ஆனந்தவல்லியிலுள்ள வாக்கியங்கள் என்பது கர்த்ருபதமாக வருவித்துக்கொள்ளவேண்டும்.

[ஸோயம் தவைவ] ஆனந்தவல்லியில் சொல்லப்பட்ட * ஸ ஏகோ மாநுஷ ஆநந்த:* என்று தொடங்கியுள்ள ஸகலானந்தமும் தேவரீருடையதே என்றபடி. மநுஷ்யாதி ப்ரஜாபதிபர்யந்தமாகச் சொல்லப்பட்ட ஆனந்தம் அந்த மநுஷ்யாதிகளின் ஆனந்தமாக இருக்க முடியுமே யல்லது எம்பெருமானுடைய ஆனந்தமாக எப்படியிருக்கமுடியும்? என்கிற சங்கை தோன்றக்கூடியதாதலால் அதற்குப் பரிஹாரமாக [ந்ருஷு ஹி த்வமிஹாந்தராத்மா] என்றருளிச்செய்கிறார். அங்குச் சொல்லப்பட்ட எல்லா ஜீவர்களிடத்திலும் தேவரீரே யன்றோ அந்தராத்மாவாக எழுந்தருளியிருப்பது; அவர்கள்யாவரும் தேவரீருக்கு சரீரபூதர்களாய் தேவரீர் சரீரியாயிருக்கையாலே இங்ஙனே சொல்லக் குறையில்லை யென்றபடி. அந்த ப்ரகரணத்தில் ப்ராணமய மநோமயங்களுக்குப் பிறகு விஜ்ஞாநமயனைச் சொல்லி * तस्यैष एव शारीर आत्मा—தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா * என்று விஜ்ஞாநமயனான ஜீவனுக்கு ஆநந்தமயனான பரமாத்மாவையே அந்தராத்மாவாக ஓதியிருப்பது உணரத்தக்கது.

[த்வம் புண்டரீகநயந: புருஷச்ச பௌஷ்ண:] * स यश्चायं पुरुषे । यश्चासावादित्ये । स एक:—ஸ யச்சாயம் புருஷே, யச்சாஸா வாதித்யே ஸ ஏக:. * என்கிற தைத்திரீ யோபநிஷத் வாக்யத்தில் ஸூர்யமண்டல வர்த்தித்வம் எம்பெருமானுக்குச் சொல்லப்பட்டது; இவ்விஷயத்தன்னையே சாந்தோக்யத்தில் சொல்லும்போது * य एषोऽन्तरादित्ये हिरण्मय: पुरुषो दृश्यते—ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே * என்றுசொல்லி, உடனே * तस्य यथा कप्यासं पुण्डरीकमेवमक्षिणी— தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ * என்று புண்டரீகாக்ஷத்வத்தையும் சொல்லியிருக்கையாலே அவை யிரண்டையு மெடுத்துரைத்துப் பாரம்ய நிரூபணம் பண்ணியருளினாராயிற்று. (24)

यन्मूलकारणमबुध्यत सृष्टिवाक्यैर्ब्रह्मेति वा सदिति वाऽऽत्मगिराऽथवा तत् ।
नारायणस्त्विति महोपनिषद्ब्रवीति सौबालिकीप्रभृतयोऽप्यनुजग्मुरेनाम् ॥२५॥

யந்மூலகாரணமபுத்த்யத ஸ்ருஷ்டிவாக்யை:
ப்ரஹ்மேதி வா ஸதிதி வாத்மகிராதவா தத்,
நாராயணஸ் த்விதி மஹோபநிஷத் ப்ரவீதி
ஸௌபாலிகீப்ரப்ருதயோ ப்யநுஜக்முரேநாம். 25

ஸ்ருஷ்டிவாக்யை: ஸத் இதி வா ப்ரஹ்ம இதி வா அதவா ஆத்மகிரா யத் மூலகாரணம் அபுத்த்யத, தத் நாராயண: இதி மஹோபநிஷத் ப்ரவீதி; ஏநாம் ஸௌபாலிகீப்ரப்ருதயோபி அநுஜக்மு:

ஸ்ருஷ்டி ப்ரகாணத்திலுள்ள காரணவாக்யங்களாலே ஸத் என்றோ ப்ரஹ்ம என்றோ ஆத்மாஎன்றோ எந்த வஸ்துவானது மூலகாரணமாக அறியப்பட்டிருக்கின்றதோ அந்த வ்யக்தி நாராயணனேயென்று மஹோபநிஷத்து ஓதுகின்றது; இந்த மஹோபநிஷத்தை ஸுபாலோபநிஷத்து முதலானவைகளும் பின்செல்லுகின்றன.

* * *—அதர்வஶிரஸ்ஸிலே * कश्च ध्येयः ? कारणं तु ध्येयः—கச்ச த்யேய: ? காரணம் து த்யேய:. * என்று ஜகத்காரணபூதமான வஸ்துவே உபாஸ்யமென்று ஓதிற்று. அப்படிப்பட்ட வஸ்து எது? என்று ஆராயப்புகுமளவில், அந்த காரணவஸ்துவானது ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு சப்தத்தாலே சொல்லப்பட்டிராநின்றது. எங்ஙனேயென்னில்; சாந்தோக்யத்திலே * सदेव सोम्येदमग्र आसीत् एकमेवाद्वितीयम् — ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத் ஏகமேவாத்விதீயம் * என்று ஸச்சப்தத்தாலே சொல்லிற்று. வாஜஸநேயகத்திலே * ब्रह्म वा इदमेवाग्र आसीत्— ப்ரஹ்ம வா இதமேவாக்ர ஆஸீத் * என்று ப்ரஹ்மசப்தத்தாலே சொல்லிற்று. அவ்விடத்திலே, ஸர்வசாகாப்ரத்யய ந்யாயத்தாலே காரணவாக்யங்களெல்லாவற்றுக்கும் ஏகவிஷயத்வம் வேண்டுகையாலே * पशुमालभेत—பசுமாலபேத* என்று ஸாமாந்யமான பசுசப்தம் * छागो वा मन्त्रवर्णात्—சாகோ வாமந்த்ரவர்ணாத் * என்கிற ஸூத்ரத்தில் விசேஷோபஸ்தாபகமான * छागपशु (சாகபசு)விலே பர்யவஸிக்குமாபோலே இங்கும் ஸாமாந்யமான ஸச்சப்தத்துக்கு வாச்யமான காரணவஸ்துவானது விசேஷோபஸ்தாபக ப்ரஹ்மசப்தவாச்யமென்று நிச்சயிக்கப்படுகிறது. இந்த ப்ரஹ்மசப்தந்தானும் * मम योनिर्महद्ब्रह्म— மம யோநிர் மஹத் ப்ரஹ்ம * என்றும் * तज्ज्ञानं ब्रह्मसंज्ञितम्— தத் ஜ்ஞாநம் ப்ரஹ்மஸம்ஜ்ஞிதம் * என்றும் சேதநாசேதந ஸாதாரணமாகையாலே ஐதரேயத்திலே * आत्मा वा इदमेक एवाग्र आसीत्— ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத் * என்று சேதநனுக்கே அஸாதாரணமான ஆத்ம சப்தத்தாலே விசேஷித்தது. இந்த ஆத்மாக்களில் ஜகத்காரணபூதர் ஆரென்று விசேஷஜிஜ்ஞாஸை பிறக்குமளவிலே, இந்த்ரனோ அக்நியோ ஆதித்யனோ சந்த்ரனோ வைச்ரவணனோ வருணனோ வாயு யமப்ரப்ருதிகளான தேவதாவிசேஷங்களோ வென்னில், அவையொன்றுமன்று, நாராயணனேயென்னுமிடத்தை மஹோபநிஷத்தும் ஸுபாலோபநிஷதாதிகளும் நிஷ்கர்ஷித்துக் கொடுத்தன. அவ்விஷயமேயாயிற்று இந்த ச்லோகத்தில் பேசப்பட்டது.

இந்த ச்லோகத்தின் ப்ரமேயத்தை ஸுந்தர பாஹுஸ்தவத்தில் (16) *ஸத்ப்ரஹ்மாத்மபதை:* இத்யாதி ச்லோகத்தாலே விரித்துரைத்தருளினர். அங்கு இன்னமும் விளங்க வுரையிட்டோம், கண்டுகொள்வது.

[ஸ்ருஷ்டிவாக்யை:] உபநிஷத்துக்களிலே ஸ்ருஷ்டியைச் சொல்லுமிடத்துள்ள வாக்யங்களாலே என்றபடி. காரணவாக்யங்களென்பதும் அவற்றையே. (25)

ज्योतिः परं परमतत्वमथो परात्मा ब्रह्मेति च श्रुतिषु यत्परवस्त्वधीतम् ।
नारायणस्तदिति तद्विशिनष्टि काचिद्विष्णोः पदं परममित्यपरा गृणाति ॥२६॥

ஜ்யோதி: பரம் பரமதத்வமதோ பராத்மா
ப்ரஹ்மேதி ச ச்ருதிஷு யத் பரவஸ்த்வதீதம்,
நாராயணஸ் ததிதி தத் விசிநஷ்டி காசித்
விஷ்ணோ: பதம் பரமமித்யபரா க்ருணாதி. 26

ச்ருதிஷு யத் பரவஸ்து பரம் ஜ்யோதிः இதி பரமதத்வம் இதி அதோ பராத்மா இதி ப்ரஹ்ம இதி ச அதீதம், தத் நாராயணः இதி காசித் (ச்ருதிः) விசிநஷ்டி; அபரா (ச்ருதிः) விஷ்ணோः பரமம் பதம் இதி க்ருணாதி

வேதங்களிலே யாதொரு பரவஸ்துவானது பரஞ்சோதியென்றும் பரமதத்வமென்றும் பரமாத்மா என்றும் பரப்ரஹ்மமென்றும் ஓதப்பட்டிருக்கின்றதோ, அந்த வஸ்துவை நாராயணனென்று ஒருச்ருதி விவரிக்கின்றது; மற்றொருச்ருதியானது (அதேவஸ்துவை) விஷ்ணோः பரமம்பதமென்று ஓதுகின்றது.

* * *—பராத்பரனை ஸ்ரீமந்நாராயணனை ஸச்சப்த ப்ரஹ்மசப்த ஆத்மசப்தங்களாலே ஆங்காங்கு வ்யபதேசித்ததுபோலவே, பரம்ஜ்யோதிः, பரமம் தத்வம், பரः ஆத்மா என்றும் வ்யபதேசித்திருப்பதுண்டு; அவையும் நாராயணதத்பரங்களே யென்பது ஸுஸ்பஷ்ட மென்கிறாரிதில். *நாராயணபரோ ஜ்யோதிः* என்ற விடத்தில் பரஞ்சோதியாகச் சொல்லிற்று. நாராயணபரः' என்று ஸமஸ்தபதமாக விருந்தாலும் இதரசாகைகளிலுள்ள பாடத்தை யநுஸரித்து 'நாராயணः பரः' என்று வ்யஸ்தமாகவே கொள்ளக்கடவது. பரः என்றதும் ஜ்யோதிஸ்ஸுக்கு விசேஷணமாகையாலே லிங்க வ்யத்யயம் சாந்தஸ மென்று கொள்வது.- [பரமதத்வம்] * தத்வம் நாராயணः பரः * என்கிற ச்ருதி வாக்யம் விவக்ஷிதம். [பராத்மா] * ஆத்மா நாராயணः பரः * என்பது விவக்ஷிதம். [ப்ரஹ்மேதி ச] * நாராயண பரம் ப்ரஹ்ம * என்பது விவக்ஷிதம். [காசித் நாராயண இதி விசிநஷ்டி] நாராயணாநுவாக மென்கிற வொரு ச்ருதியானது நாராயணனே யென்று விளக்கி நின்றது. [அபரா ச்ருதிஸ் து விஷ்ணோः பரமம் பதமிதி க்ருணாதி] அபரா என்பதனாலே கடவல்லீ ச்ருதி விவக்ஷிதம். * विज्ञानसारथिर्यस्तु मनःप्रग्रहवान्नरः । सोऽध्वनः पारमाप्नोति तद्विष्णोः परमं पदम्— விஜ்ஞாநஸாரதிர் யஸ் து மநःப்ரக்ரஹவாந் நரः, ஸோத்வநः பாரமாப்நோதி தத் விஷ்ணோः பரமம் பதம் * என்றது காண்க.

ஆக இவற்றால் தேவதாந்தர பாரம்யசங்கைக்கு அவகாசலேசமுமில்லை யென்றதாயிற்று. (26)

सन्तीदृशः श्रुतिशिरस्सु परस्सहस्रा वाचस्तव प्रथयितुं परमेशितृत्वम् ।
किञ्चेह न व्यजगणः क्रिमिधातृभेदं क्रामञ्जगन्ति निगिरन् पुनरुद्गिरंश्च ॥२७॥

ஸந்தீத்ருச: ச்ருதிசிரஸ்ஸு பரஸ்ஸஹஸ்ரா:
வாசஸ் தவ ப்ரதயிதும் பரமேசித்ருத்வம்,
கிஞ்சேஹ ந வ்யஜகண: க்ரிமிதாத்ருபேதம்
க்ராமந் ஜகந்தி நிகிரந் புநருத்கிரம்ச்ச. 27

தவ பரமேசித்ருத்வம் ப்ரதயிதும் ச்ருதிசிரஸ்ஸு ஈத்ருசः பரஸ்ஸஹஸ்ராः வாசः ஸந்தி; கிஞ்ச இஹ ஜகந்தி க்ராமந் நிகிரந் புநः உத்கிரந் ச க்ரிமி தாத்ரு பேதம் ந வ்யஜகணः

(எம்பெருமானே!) தேவரீருடைய பரமேச்வரத்வத்தைப் பரவச்செய்வதற்கு வேதாந்தங்களிலே இப்படிப்பட்ட பல்லாயிரம் வாக்குக்கள் உள்ளன; அன்றியும், தேவரீர் இங்கு உலகங்களை அளக்கும்போதும் விழுங்கும்போதும் மறுபடி உமிழும்போதும் கிரிமி யென்றும் பிரமனென்றும் வாசி பார்த்திலீர்.

* * * கீழ்ச்லோகங்களினால் அறிவிக்கப்பட்ட விஷயம் உபலக்ஷணமர்யாதயா கொள்ளக்கடவதென்கிறாரிதில். எம்பெருமானுடைய பாரம்யத்தை விளக்கிக் காட்டவல்ல ச்ருதி வாக்கியங்கள் இவ்வளவேயோ? பலகோடி நூறாயிரமுளவென்கிறார். * தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம் * என்று ஓதப்பட்ட பரமேச்வரத்வத்தை விளக்குதற்குப் பாங்காகவுள்ள ச்ருதிகளைப் பன்னியுரைக்குங்கால் பாரதமாமிறே.

உத்தரார்த்தத்தினால் — ஆழ்வார்கள் நிரூபித்தருளுகிற பாரம்ய ப்ரகாரத்தை மூதலிக்கிறார். அதாவது * கிடந்திருந்து நின்றளந்து கேழலாய்க் கீழ்புக்கிடந்திடும் தன்னுள் கரக்குமுமிழும் * என்றும், * பாரிடந்து பாரையுண்டு பாருமிழ்ந்து பாரளந்து பாரையாண்ட பேராளன் * என்றும் இப்படிகளிலேயுள்ள பாசுரங்கள் எம்பெருமான் செய்தருளின செயல்களாலும் அவனையே பரமபுருஷனென்று அறுதியிடலாமென்று காட்டுகையாலே அப்பாசுரங்களிலுள்ள பொருளையே பெய்து உத்தரார்த்தமருளிச்செய்தபடி. [க்ராமந்] என்பதனாலே உலகளந்த செய்தியையும், [நிகிரந்] என்பதனாலே உலகமுண்டசெய்தியையும், [புநருத்கிரந்] என்பதனாலே உலகமுமிழ்ந்த [அதாவது ஸ்ருஷ்டிசெய்கிற] செயலையும் தெரிவித்தபடி. இச்செயல்களிலே [க்ரிமிதாத்ருபேதம் ந வ்யஜகண:] இது க்ரிமி, இவன் பிரமன் என்று வாசிபார்த்திலை என்றபடி. க்ரிமிகீடாதிகளோடு ப்ரஹ்மாதி தேவர்களோடு வாசியற எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்து, எல்லாரையும் ஒருங்கே திருவயிற்றில் கொண்டு காலவிசேஷத்திலே வெளிநாடுகாணவுமிழ்ந்தாய் நீயேயிறே. * நளிர்மதிச் சடையனும் நான்முகக்கடவுளும் தளிரொளி யிமையவர் தலைவனுமுதலா, யாவகையுலகமும் யாவருமகப்பட, நில நீர் தீகால் சுடரிருவிசும்பும், மலர்சுடர்பிறவும் சிறிதுடன் மயங்க, ...ஓராலிலைச்சேர்ந்த எம்பெருமாமாயனையல்லது, ஒருமாதெய்வம் மற்றுடையமோயாமே. * (திருவாசிரியம்—7.) என்ற பாசுரத்தை இங்கே அநுஸந்திப்பது. (27)

रूपश्रिया परमया परमेण धाम्ना चित्रैश्च कैश्चिदुचितैर्भवतश्चरित्रैः ।
चिह्नैरनिह्नवपरैरपरैश्च कैश्चिन्निश्चिन्वते त्वयि विपश्चित ईशितृत्वम् ॥२८॥

ரூபச்ரியா பரமயா பரமேண தாம்நா
சித்ரைச்ச கைச்சிதுசிதைர் பவதச் சரித்ரை:,
சிஹ்நைரநிஹ்நவபரை ரபரைச்ச கைச்சித்
நிச்சிந்வதே த்வயி விபச்சித ஈசித்ருத்வம். 28

விபச்சித: பவத: பரமயா ரூபச்ரியா பரமேண தாம்நா சித்ரை: உசிதை: கைச்சித் சரித்ரைச்ச அநிஹ்நவபரை: அபரை: கைச்சித் சிஹ்நைச்ச த்வயி ஈசித்ருத்வம் நிச்சிந்வதே

(எம்பெருமானே!) மஹாவிவேகிகளாயுள்ளவர்கள், தேவரீருடைய மிகச்சிறந்த திருமேனிவிளக்கத்தினாலும் சிறந்தஸ்தான விசேஷத்தினாலும் அற்புதமாயும் தகுந்துமிருக்கிற சில சரிதைகளினாலும், பரத்வத்தை யொளிக்காமல் நிர்ணயிக்கக்கூடிய சில அடையாளங்களினாலும் தேவரீரிடத்திலேயே பாரம்யத்தை நிர்ணயிக்கின்றார்கள்.

* * * — ப்ரஹ்மவித்துக்கள் தத்வ நிர்ணயம் செய்யும் வழிகள் பலவுள்ளன வென்கிறார். [பரமயா ரூபச்ரியா] * காணிலுமுருப்பொலார் * என்று (திருச்சந்த விருத்தம்) திருமழிசைப்பிரானருளிச் செய்தபடியே, பிணங்களிடு காடதனுள் நடமாடி வெந்தா ரென்பும் சுடுநீறும் மெய்யில் பூசி விரூபாக்ஷனாயிருக்கு மிருப்புப் போலன்றிக்கே * எழிலுடைய வம்மனைமீர்! என்னரங்கத் தின்னமுதர் குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழி லெழுகமலப் பூவழகர் * என்றும் * தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயுடையம்மான் * என்றும் * கோலமாமணி யாரமும் முத்துத் தாமமும் முடி வில்லதோரெழில் நீலமேனி * என்றும் சொல்லுகிற திருவுருவவழகு

கொண்டும். [பரமேண தாம்நா] * ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் * என்றும் * ததக்ஷரே பரமே வ்யோமந் * என்றும் சொல்லுகிறபடியே நலமந்தமில்லதோர் நாடு தன்னிலிருப்பாலும். [சித்ரைச் ச கைச்சிதுசிதைர் பவதச் சரித்ரை:] *வேதாபஹார குருபாதக தைத்ய பீடாத்யாபத் விமோசந * என்று ஆளவந்தார் போல்வார் எடுத்துக்காட்டியவை பலவுமுண்டே; தூணிலிருந்து தோற்றுவதும் கடலிலே அணைகட்டுவதும் ஏழுபிராயத்திலே குன்றெடுத்தாநிரை காப்பதும் * மாதவத்தோன் புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானை ஓதுவித்ததக்கணையா உருவுருவே கொடுப்பதும், சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதியில் வைதிகன் பிள்ளைகளை உடலொடுங் கொண்டு கொடுப்பதும் முதலானவை சொலப்புகில் வாயமுதம் பரக்குமே. அவற்றாலும். [சிஹ்நைரநிஹ்நவபரைச் ச கைச்சித்] லக்ஷ்மீபதித்வம் சேஷ சாயித்வம் கருட வாஹநத்வம் முதலானவை பரத்வத்தை மூதலிக்கும் சின்னங்களாகையாலே அவற்றைச் சொல்லுகிறது. திருவாய்மொழியில் எம்பெருமானுடைய பரத்வத்தையுபதேசிக்கப் புகுந்த ஆழ்வார் * அணைவது அரவணை மேல் பூம்பாவையாகம் புணர்வது * என்றும் * தீர்த்தனுலகளந்த சேவடி மேல் பூந்தாமம் சேர்த்தியவையே சிவன் முடிமேல்தான் கண்டு, பார்த்தன் தெளிந் தொழிந்த பைந்துழாயான் பெருமை * என்றும் அருளிச்செய்தவை இங்கே அநுஸந்தேயங்கள். [அநிஹ்நவபரை:] நிஹ்நவமாவது அபலாபம்; அதிலே தத்பரங்களல்லாதவை யென்றது—ஸ்பஷ்டமாக நிர்ணயிப்பவை என்றபடி. "அநிஹ்நவ பதை:" என்கிற பாடமும் காண்கிறது. அபலாபத்திற்கு ஆஸ்பதமல்லாத என்றபடி. அபலபிக்க முடியாதவை யென்று கருத்து. [விபச்சித:] விவிதமாகப் பார்க்கவல்ல அறிவுடையார்; மஹாமதிகள் என்றபடி. (28)

यस्याः कटाक्षणमनुक्षणमीश्वराणामैश्वर्यहेतुरिति सर्वजनीनमेतत् ।
तां श्रीरिति त्वदुपसंश्रयणान्निराहुस्त्वां च श्रियश्श्रियमुदाहुरुदारवाचः ॥२९॥

யஸ்யா : கடாக்ஷணமநுக்ஷணமீச்வராணாம்
ஐச்வர்யஹேதுரிதி ஸர்வஜநீநமேதத் ,
தாம் ஸ்ரீரிதி த்வதுபஸம்ச்ரயணாந்நிராஹு:
த்வாம் ஹி ச்ரியச் ச்ரியமுதாஹுருதாரவாச:. 29

யஸ்யா: கடாக்ஷணம் ஈச்வராணாம் அநுக்ஷணம் ஐச்வர்யஹேதுரிதி ஏதத் ஸர்வஜநீநம்; தாம் த்வத் உபஸம்ச்ரயணாத் ஸ்ரீரிதி நிராஹு:; உதாரவாச: த்வாம் ஹி ச்ரிய: ச்ரியம் உதாஹு:	யாவளொரு பிராட்டியின் கடாக்ஷமானது இந்திரன் முதலிய தேவர்களுக்கும் அடிக்கடி ஐச்வர்யஹேதுவாகிறதென்பது ஸர்வஜநஸம்மதமானதோ, அந்தப் பிராட்டியை தேவரீரிடத்தில் ஆச்ரயித்திருப்பது காரணமாகவே ஸ்ரீயென்று நிருக்தி கூறுகின்றார்கள். உதாரவாக்குக்களான திருமங்கையாழ்வார் போல்வாரும் தேவரீரையேயன்றோ திருவுக்குந்திருவாகிய செல்வனென்கிறார்கள்.

* * * எம்பெருமானுடைய பாரம்யத்தை நிர்ணயிக்க லக்ஷ்மீபதித்வமொன்று போதுமேயென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார். பிராட்டியின் பெருமையைப் பூர்வார்த்தத்திலருளிச் செய்கிறார். யாவளொருபிராட்டியின் கடாக்ஷமானது ஈச்வரரென்று பேர்பெற்றவர்களுக்கெல்லாம் ஐச்வர்ய ஹேதுவாகின்றதோ, அப்படிப்பட்ட பிராட்டி ஸ்ரீயென்று திருநாமம்பெற்றிருப்பது தேவரீரைப்பற்றி ஸத்தைபெற்றிருப்பதனாலன்றோ? என்பது மூன்றுபாதங்களின் கருத்து. முதலிரண்டு பாதங்களிற் சொன்ன அர்த்தத்தை பட்டர் ஸ்ரீகுணரத்நகோசத்தில் * अपाङ्गा भूयांसो यदुपरि परं ब्रह्म तदभूत् अमी यत्र द्वित्रास्स च शतमखादिस्तदभरात्—அபாங்கா பூயாம்ஸோ யதுபரி பரம் ப்ரஹ்ம ததபூத் அமீ யத்ர த்வித்ராஸ் ஸ ச சதமகாதிஸ் ததபராத் * என்று பன்னியுரைத்தருளினபடி காண்க. இரண்டாவது பாதத்

தின் முடிவில் 'ஸார்வஜநீநம்' என்னும்பாடம் தவறு; அப்படி ரூபம் நிஷ்பத்தியாக வழியில்லை; ஸர்வஜநீந மென்பதே சுத்த பாடம்.

[தாம் ஸ்ரீரிதி த்வதுபஸம்ச்ரயணாத் நிராஹு:] ஸ்ரீசப்தத்திற்கு ஆறுவகையான வ்யுத்பத்திகள் உள்ளன; அவற்றுள் முதலான வ்யுத்பத்தி ச்ரயதே என்பது. எம்பெருமானைப்பற்றி ஸ்வரூப லாபமடைபவள் என்றபடி. * மலர்மகள் விரும்பும் நமரும் பெறலடிகள் என்றதாயிற்று.

[த்வாம் ஹி ச்ரிய: ச்ரியமுதாஹு:] பிராட்டியினாலே எம்பெருமானுக்கு ஏற்றமென்பதுபோல, எம்பெருமானாலே பிராட்டிக்கு ஏற்றமென்பது முண்டிறே. அதுவும் ப்ராஸங்கிகமாக இங்கு வக்தவ்யமாயிற்று. * திருவுக்கும் திருவாகிய செல்வா * என்றருளிச்செய்த திருமங்கையாழ்வாரையும் * कः श्रीः श्रियः—கச் ஸ்ரீச் ச்ரிய:* என்றருளிச்செய்த ஆளவந்தாரையும் இங்கு உதாரவாக்குக்க ளென்கிறார். திருப்பாவையில் * திருவே துயிலெழாய் * (20) என்றவிடத்து ஆறாயிரப்படியில், "உதாரவாக்குக்களாகிறார்—திருமங்கையாழ்வாரும் ஆளவந்தாரும் ஆழ்வானும் பட்டரும்" என்றருளிச்செய்ததும் காண்க. (29)

मायां त्वयागुण मयी किल या निसृष्टा सा ते विभो! किमिव नर्म न निर्मिमीते।
कौतस्कुता: स्थिरकुतर्कवशेन केचित् सत्यां श्रुतौ च बधिरास्त्वयि तन्महिम्ना ॥३०॥

மாயா த்வயா குணமயீ கில யா நிஸ்ருஷ்டா
ஸா தே விபோ! கிமிவ நர்ம ந நிர்மிமீதே,
கௌதஸ்குதா: ஸ்திரகுதர்க்கவசேந கேசித்
ஸத்யாம் ச்ருதௌ ச பதிராஸ் த்வயி தந்மஹிம்நா. 30

ஹேவிபோ! குணமயீ யா மாயா த்வ[யா] நிஸ்ருஷ்டா கில, ஸா தே கிமிவ நர்ம ந நிர்மிமீதே; கேசித் கௌதஸ்குதா: ச்ருதௌ ஸத்யாம் ச ஸ்திரகுதர்க்கவசேந தந்மஹிம்நா த்வயி பதிரா:

எம்பெருமானே!, குணத்ரயாத்மகமான யாதொரு மாயையானது தேவரீரால பிணைக்கப்பட்டதோ, அந்த மாயை தேவரீருக்கு எந்தவிளையாட்டைத்தான் விளைக்கமாட்டாதது; [அதுவே தேவரீருடைய லீலைக்கு உபகரணம்.] சிலகுத்ஸிதவாதிகள், தேவரீருடைய பரத்வத்தை விளக்கவல்ல ச்ருதிகள் விளங்காநிற்கவும் அவர்ஜநீயமான துராக்ரஹத்தினால் அந்தமாயையின் பெருமையடியாக தேவரீருடைய பெருமையைக் காதுகொண்டு கேட்பதில் செவிடர்களாயிருக்கிறார்கள்.

* * *—பரமைகாந்திகளான பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண துரந்தரர்கள் எந்த ப்ரமாணங்களைக்கொண்டு எம்பெருமானுடைய பாரம்யத்தை அறுதியிடுகின்றார்களோ அந்தப்ரமாணங்கள் இவர்களுக்குப்போல மற்றையோர்க்கும் தெரிந்தவையாயிருக்க, அவர்களும் உள்ளபடியறிய ப்ராப்தமாயிருக்க, அங்ஙனமறியாமைக்குக் காரணம் ஏதென்கிற சங்கையிலே அருளிச்செய்வது இந்த ச்லோகம். ஆளவந்தார் *தவ பரிப்ரடிமஸ்வபாவம், மாயாபலேந பவதாபி நிகுஹ்யமாநம்* என்று ஸ்தோத்ரரத்நத்தில் (16) அருளிச்செய்ததையே விரித்துரைக்கிறாரிதில்.

கீதையிலே * தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா * என்று அவன் தானே சொல்லிவைத்தான். * துயக்கறு மதியினன்ஞானத்துளமரைத் துயக்கும் மயக்குடை மாயைகள் வானிலும் பெரியன வல்லன் * என்றார் ஆழ்வார்தாமும். * க்ரீடாவிதே: பரிகரஸ் தவ யா து மாயா ஸா மோஹநீ ந கதமஸ்ய து ஹந்த ஜந்தோ: * என்றார் இவர்தாமே அதிமாநுஷஸ்தவத்தில். ஒருகுருவி பிணைத்த பிணை ஒருவராலவிழ்க்கப் போகிறதில்லை; அப்படியே

எம்பெருமான் தான் பிணைத்த மாயமயக்குப்பிணையும் எவர்க்கும் தப்பவரிதாயிராநின்றது. * மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே * என்று அவன் தானே கூறிவைத்த படியே, "தைவீம் குணமயீம் மாயாம்...தவாஸ்மி தாஸ இதி வக்தாரம் மாம் தாரய"* (சரணாகதிகத்யே.) என்றுசொல்லி அவனையே கால்கட்டி விடுவித்துக்கொள்வார்க்கன்றி மற்றையோர்க்கு அந்த மாயாபந்தம் தப்பவரிதாயிறே யிருப்பது. அப்படிப்பட்ட மாயைக்கு வசப்பட்டவர்களாகியே சில குதர்க்கவாதிகள் ப்ரபல ப்ரமாணங்களையும் காற்கடைக் கொண்டு தேவரீருடைய பாரம்யத்தை யறியப் பெறாதே தடுமாறுகின்றன ரென்கிறார்.

[குணமயீ யா மாயா த்வயா நிஸ்ருஷ்டா] * தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா * என்கிற பகவத்வசநத்தையே உட்கொண்டு இது அருளிச்செய்தபடி. 'குணமயீ' என்ற விடத்தில் * அஜாமேகாம் லோஹித சுக்லக்ருஷ்ணாம் * என்ற உபநிஷத்வாக்யம் அநுஸந்தேயம். ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களாகிற மூக்குணங்களும் கலந்த கட்டியான என்றபடி. [ஸா தே கிமிவ நர்ம ந நிர்மிமீதே] அந்த மாயை செய்யாத கூத்தில்லை யென்றபடி. அதுசெய்த வொருகூத்தை உத்தரார்த்தத்தாலே மூதலிக்கிறார். [கௌதஸ்குதா:] எது சொன்னாலும் ஒருவரம்பிலே நில்லாதே 'தத் குத:? தத் குத:?' என்றே சோத்யம் செய்துகொண்டிருப் பார்க்குக் கௌதஸ்குதரென்று பெயர். குயுக்தி மாத்ராவலம்பிகளென்றபடி. [ஸ்திர குதர்க்கவசேந] ப்ராமாணிகங்களான ஸமீசீநார்த்தங்களைப் பெரியார் சொல்லக் கேட்டுங் கூட ஆக்ரஹப் பெருமையாலே பற்றினது விடாதே குதர்க்கமே செய்துகொண்டிருக்குந் தன்மையினாலே. [தந்மஹிம்நா] கீழ்ச் சொன்ன மாயையின் பெருமையினாலே யென்றபடி. [த்வயி பதிரா:] தேவரீர் விஷயத்திலே செவிடர்களா யொழிகின்றார்கள். ஸ்ரீகுணரத்ந கோசத்தில் * லோகே த்வந்மஹிமாவபோத பதிரே * என்றருளிச் செய்தது இதையடி யொற்றியே.

ஆக, மாயையைக்கடந்து சுத்த ஸாத்விகர்களாயுள்ளவர்கள் பகவத் பாரம்யத்தை உள்ளபடி யுணர்ந்து வாழ்ந்து போகாநிற்க, குணத்ரயவச்யர்களான சில அவ்யபதேச்யர்கள் இழந்தொழியா நின்றார்கள் என்றதாயிற்று. (30)

यः स्थावरक्रिमिपतङ्गमतङ्गजादिष्वन्येषु जन्तुषु सदैव विजायमानः ।

त्वं नित्यनिर्मलनिरञ्जननिर्विकारकल्याणसद्गुणनिधे ! स इतीरितस्तैः ॥२१॥

யஸ் ஸ்தாவரக்ரிமிபதங்கமதங்கஜாதிஷு
அந்யேஷு ஜந்துஷு ஸதைவ விஜாயமாந:,
த்வம் நித்யநிர்மலநிரஞ்ஜந நிர்விகார
கல்யாணஸத்குணநிதே ! ஸ இதீரிதஸ் தை:. 31

நித்யநிர்மலநிரஞ்ஜநநிர்விகாரகல்யாண ஸத்குணநிதே ! ய: ஸ்தாவரக்ரிமிபதங்க மதங்கஜாதிஷு அந்யேஷு ஜந்துஷு ஸதைவ விஜாயமாந:, ஸ: த்வம் இதி தை: ஈரித: (அஸி)

எப்போதும் ஹேயப்ரதிபடமாயும் நிர்லேபமாயும் நிர்விகாரமாயுமிருக்கிற கல்யாணகுணங்களுக்கு நிதி போன்ற எம்பெருமானே! யாவனொரு ஜீவன் ஸ்தாவரங்களான க்ரிமி பக்ஷி கஜாதிகளும் மற்றுமான யோனிகளிலே இடையறாது பிறந்து கொண்டிருக்கிறானோ அவன் தேவரீரேயென்று அந்தச்செவிடர்களால் சொல்லப்படாநின்றீர்.

* * *—கீழ்ச்லோகத்திலே கௌதஸ்குதா: என்று ப்ரஸ்தாவிக்கப்பட்டவர்களின் ப்ரலாபங்களிலே ஒன்றை யுதாஹரிக்கிறாரிதில். ஸ்வாமி யெம்பெருமானார் வேதார்த்தஸங்க்ரஹத்தின் உபக்ரமத்தில் ஆளவந்தாரை உபச்லோகிக்குமிடத்து,* परं ब्रह्मैवाज्ञं भ्रमपरिगतं संसरति तत् परोपाध्यालीढं विवशमशुभस्यास्पदमिति । श्रुतिन्यायापेतं जगति विततं मोहनमिदं तमो येनापास्तं स हि विजयते

யாமுநமுநி:—பரம் ப்ரஹ்மைவாஜ்ஞம் ப்ரமபரிகதம் ஸம்ஸரதி தத் பரோபாத்யாலீடம் விவசமசுபஸ்யாஸ்பதமிதி, ச்ருதிந்யாயாபேதம் ஜகதி விததம் மோஹநமிதம் தமோ யேநாபாஸ்தம் ஸஹி விஜயதே யாமுநமுநி: * என்று, ஆளவந்தார் நிரஸித்தருளின மாயாவாதி மதத்தை ஸங்க்ரஹித்தருளினர். அந்த மதம் யாருடையதோ அவர்களே கௌதஸ்குதர்களென்றும் ஸ்திரகுதர்க்கவசயர்களென்றும் தெரிவியாநின்றுகொண்டு அவர்களுடைய ப்ரலாபப்ரகாரத்தை யெடுத்துரைக்கிறார்.

நித்ய நிர்மல நிரஞ்ஜந நிர்விகாரகல்யாண ஸத்குணநிதே! என்கிற பகவத்ஸம்போதநம் ஸாபிப்ராயம்; அகில ஹேயப்ரத்யநீககல்யாண குணைகதாநரான தேவரீருடைய தன்மைக்குச் சிறிதும் பொருந்தாதபடியன்றோ பிறர் பேசுகின்றார்கள்! என்று வருந்திக்காட்டுகிறபடி. பரப்ரஹ்மமே ஸ்வமாயையினாலே மோஹிதமாய் ஜீவபாவத்தையடைகின்றதென்று சொல்லுகை, *அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யு:* இத்யாதியான கல்யாணகுண ப்ரதிபாதக ச்ருதியோடு சேராதென்று காட்டுகிறபடி. நித்யநிர்மல!, நிரஞ்ஜந!, நிர்விகார, கல்யாண ஸத்குணநிதே! என்று நான்கு ஸம்புத்திகளாகப் பிரித்துக்கொள்வது. நித்ய!, நிர்மல! என்று அதையும் இரண்டாகப் பிரிப்பாருமுளர். ஸ்வரூபதோ நித்யனானவனே! ஹேயப்ரத்யநீகனானவனே! என்றபடி. [நிரஞ்ஜந!] சேதநர்களை அநுப்ரவேசித்து நிற்கச் செய்தேயும் கர்ம வச்யத்வாதிரூப தோஷங்கள் தொடரப்பெறுதவனே! என்கை. [நிர்விகார!] அசேதநங்களில் அநுப்ரவேசித்திருக்கச் செய்தேயும் விகாராஸ்பதமான அவற்றின்படியன்றிக்கே யிருக்குமவனே! என்கை. [கல்யாணஸத்குணநிதே] கல்யாணகுணமென்றோ ஸத்குணமென்றோ சொல்லப் போதுமாயிருக்க இரண்டையும் சேர்த்துச் சொன்னது என்னென்னில்; கல்யாண என்பதனாலே அநுஸந்தானம் செய்பவர்களுக்கு சுபாவஹங்களென்கிறது. ஸத் என்பதனாலே எவ்வளவநுபவித்தாலும் ஊழிதோறூழி யநுபவித்தாலும் குறையாதே அக்ஷய்யமாயிருக்கும்படி சொல்லுகிறது, இப்படிப்பட்ட திருக்குணங்களுக்கு நிதிபோன்றவனே!.

[ஸ்தாவர க்ரிமி பதங்கமதங்கஜாதிஷு அங்யேஷு ஜந்துஷு ஸதைவ விஜாயமாந: ய: ஸ: த்வமிதி தை: ஈரித:] ஸ்தாவர கீட பக்ஷி ம்ருகாதிகளாய், தேவரீருடைய ஸ்வரூப ஸ்வபாவங்களுக்கு விஜாதீயமான ஸ்வரூபஸ்வபாவங்களையுடையனவாயிருக்கிற யோநிகளிலே மாறிமாறிப்பல பிறப்பும் பிறந்து கொண்டிருக்கிற கர்மவச்யனான ஜீவனுக்கும் அகர்மவச்யரான தேவரீருக்கும் அத்வைதம் சொல்லுகிறார்களே சிலர், அவர்களே கீழ் ச்லோகத்தில் மாயைக்கு வசப்பட்ட செவிடர்களாகச் சொல்லப்பட்டவர்களென்றதாயிற்று. * க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக: * இத்யாதிச்ருதிகளாலே சிதசிதீச்வர தத்வத்ரயம் தனித்தனியே ஓதப்படாநிற்க, அது கொள்ளாதே ஈச்வரதத்வமொன்றுதானுள்ளதென்று சொல்லுமதில் வருமாபத்தி இதனால் தெரிவிக்கப்பட்டதாயிற்று.

க்ரிமி பதங்க மதங்கஜாதி யோநிகளிலே சேதநன் பிறக்கிறானென்றது யுக்தம்; ஸ்தாவரங்களிலும் பிறப்பதுண்டோ? அதையும் சேர்த்துச் சொல்லியிருப்பது பொருந்துமோவென்று சிலர் சங்கிப்பர்கள்; அதற்குச் சொல்லுகிறோம். பெரியாழ்வார் திருமொழியில் (4-4-4) * நரகநாசனை நாவிற்கொண்டழையாத மானிடசாதியர் பருகுநீருமுடுக்குங்கூறையும் பாவஞ்செய்தனதான் கொலோ * என்றவிடத்து வியாக்கியானத்தில் —"........நாமரூபவிசிஷ்டமான ஸகல வஸ்துக்களிலும் ஓரோ ஜீவாதிஷ்டாநமுண்டென்று கொள்ளவேணும்" என்றருளிச்செய்து ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலிருந்து ப்ரமாணமெடுத்துக் காட்டுமிடத்து, "சக்தி: க்ஷேத்ரஜ்ஞஸம்ஜ்ஞிதா, ஸர்வபூதேஷு பால! தாரதம்யேந வர்த்ததே. அப்ராணிமத்ஸு ஸ்வல்பா ஸா ஸ்தாவரேஷு ததோதிகா." என்னும் வசனம் காட்டியருளினார் மணவாளமாமுனிகள். அதுகொண்டு தெளிக. (13)

त्वद्दृष्टिजुष्टमिदमाविरभूदशेषं नो चेत्कटाक्षयसि नैव भवेत्प्रवृत्तिः ।
स्थातुं च वाञ्छति जगत्तव दृष्टिपातं तेन श्रुतौ जगदिषे हि जगत्त्वमेव ॥३२॥

த்வத்த்ருஷ்டி ஜுஷ்டமிதமாவிரபூதசேஷம்
நோசேத் கடாக்ஷயஸி நைவ பவேத் ப்ரவ்ருத்தி:,
ஸ்த்தாதுஞ்ச வாஞ்சதி ஜகத்தவ த்ருஷ்டிபாதம்
தேந ச்ருதௌ ஜகதிஷே ஹி ஜகத் த்வமேவ. (32)

இதம் அசேஷம் த்வத்த்ருஷ்டிஜுஷ்டம் (ஸத்) ஆவிரபூத்; நோசகடாக்ஷயஸி சேத் ப்ரவ்ருத்தி: நைவ பவேத்; ஜகத் ஸ்தாதுஞ்ச தவ த்ருஷ்டிபாதம் வாஞ்சதி; தேந ச்ருதௌ த்வமேவ ஜகத் ஜகதிஷே.

(எம்பெருமானே!) இவ்வுலக மெல்லாம் தேவரீருடைய திருக்கண்ணோக்கத்தைப் பெற்றதாய்க் கொண்டு ஆவிர்ப்பாவ மடைந்தது; தேவரீர் கடாக்ஷித்தருளவில்லை யென்றால் (இவற்றுக்கு ஒரு) ப்ரவ்ருத்தியே உண்டாக மாட்டாது; இந்த ஜகத்தானது ஸத்தை பெறுவதற்கும் தேவரீருடைய கடாக்ஷத்தையே விரும்புகின்றது. ஆக இக்காரணங்களினாலேயே வேதங்களில் தேவரீரே ஜகத்தாகச் சொல்லப்படாநின்றீர்.

* * * கீழ்ச்லோகத்தில் அத்வைதவாதிகளின் ஒரு ப்ரலாபத்தை உபக்ஷேபித்த
ப்ரஸங்கத்தாலே அத்வைதச்ருதிநிர்வாஹம் காட்டியருளுகிறாரிதில். இந்த ச்லோகத்தின்
சரமபாதம் "தேந ச்ருதௌ ஜகதிஷே ஹி ஜகத் த்வமேவ" என்பது; * **ஸர்வம் கல்விதம்**
ப்ரஹ்ம * **ஐததாத்ம்யமிதம் ஸர்வம்** * இத்யாதிச்ருதிகளில் ஜகத்துக்கும் ஈச்வரனுக்கும்
அபேதம் சொல்லப்பட்டுள்ளது. "**ஸிம்ஹோ** மாணவக:" "அக்நிர் மாணவக:"
இத்யாதிலோகவ்யவஹாரங்களிலே காண்கிற அபேதத்தை நிர்வஹிக்கும் வழியை வ்யுத்
பந்நர்கள் யாவரும் உணர்ந்திருக்கிறார்கள். '**அக்நிர்** மாணவக:' என்பதொன்றேயன்று ;
இப்படிப்பட்ட ஸாமாநாதிகரண்ய நிர்தேசம் உலகிற் பலவாறு காண்பதுண்டு. கார்ய
காரண பாவம், சரீரசரீரிபாவம், ஸமாநதர்ம வைசிஷ்ட்யம் முதலான பலபடிகளாலே
அபேத நிர்வாஹம் செய்யக்கடவதாயிருக்கும், ஜகத்துக்கும். ப்ரஹ்மத்துக்கு முண்டான
அபேதவ்யபதேசம் நிர்வஹிக்கப்பட வேண்டிய வழி இந்த ச்லோகத்தி லருளிச்செய்
யப்படுகிறது. ஸ்ரீரங்க கத்யத்தில் * **ஸ்வாதீநத்ரிவித சேதநாசேதந ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி
பேதம்** * என்றருளிச்செய்த சூர்ணை இங்கு அநுஸந்தேயம்.

[**இதம் அசேஷம் த்வத்த்ருஷ்டிஜுஷ்டம்** (ஸத்) **ஆவிரபூத்**] ஸ்ருஷ்டிக்கு முன்
எம்பெருமான் ஸ்ருஜ்யவஸ்துக்களில் திருக்கண் சாத்துகிறானென்பதைச் சொல்லுகிற
உபநிஷத்தில் * **தத் ஐக்ஷத பஹு** ஸ்யாம் **ப்ரஜாயேயேதி** * என்னப்பட்டது. இங்கு
ஐக்ஷத என்றிருப்பதைக் கடாக்ஷித்தே 'த்வத்த்ருஷ்டி ஜுஷ்டம்' என்றருளிச்செய்தார்.
ஈக்ஷணமாவது அநுக்ரஹத்தோடுகூடிய ஸங்கல்பம். **த்ருஷ்டி** என்றதுமதுவே. தேவரீர்
அநுக்ரஹ விசிஷ்டராய்க்கொண்டு ஸங்கல்பஞ் செய்தருளவேதான் கார்யவர்க்கங்க
ளெல்லாம் உண்டாயின. இப்படி உண்டாகைக்குக் காரணமான ஈக்ஷணமேதான்
அந்தந்த வஸ்துக்களின் ப்ரவ்ருத்திகளுக்கும் காரணமென்பதை இரண்டாவது பாதத்தில்
வ்யதிரேகமுகேந அருளிச்செய்கிறார் [**நோசேத் கடாக்ஷயஸி நைவ பவேத் ப்ரவ்ருத்தி:**]
அவ்வோவஸ்துக்களின் உத்பத்திக்கே ஈக்ஷணம்தான் காரணமென்னும்போது, உத்பந்நங்
களான கார்யவர்க்கங்களின் ப்ரவ்ருத்திக்கும் அந்த ஈக்ஷணமே காரணமென்பது சொல்
லவும் வேணுமோ? தேவரீர் கடாக்ஷித் தருளாவிடில் ப்ரவ்ருத்தியு மில்லையாகுமன்றோ.

[ஜகத் ஸ்தாதுஞ்ச தவ த்ருஷ்டிபாதம் வாஞ்சதி] 'ஸ்தாதும்' என்றது ஸ்திதியைப் பெறுவதற்கு என்றபடி. ஸ்திதியாவது நிலைத்து நிற்கை; ரக்ஷணம் பெறுகையிலே பர்யவஸிதம். ஆக, ரக்ஷிக்கப் பெறுவதற்கும் தேவரீருடைய கடாக்ஷத்தையே ப்ரதி க்ஷியாநின்றதென்கை. * ந ஹி பாலந ஸாமர்த்த்யம் ருதே ஸர்வேச்வரம் ஹரிம்* என்னக் கடவதிறே. [தேந] கீழ் மூன்று பாதங்களிலுமருளிச் செய்த மூன்று விஷயங்களையும் ஹேதூகரிக்கிறபடி. ஜகத்தினுடைய உத்பத்தி ப்ரவ்ருத்தி ஸ்திதிகள் தேவரீருக்கு அதீநமாயிருக்கையாலே யென்றபடி. [ச்ருதௌ த்வமேவ ஜகத் ஜகதிஷே] வேத வேதாந்தங்களில் தேவரீரே ஜகத்தாகச் சொல்லப்படா நின்றீர், இவ்வர்த்தத்தை பட்டர் * स्थित्युत्पत्तिप्रवृत्तिप्रसननियमनव्यापनैरात्मनस्ते शेषोऽशेषः प्रपञ्चो वपुरिति भवतस्तस्य चाभेदवादाः* என்கிற ச்லோகத்தினால் வியாக்கியானித்தருளினார்.

ஜகதிஷே—சொல்லப்பட்டாய். 'गद—व्यक्तायां वाचि' என்கிற தாதுவில் கர்மணி லிட்டில் மத்யமபுருஷ ஏகவசநரூபமிது. ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் * தேஹோ தேஹிநி காரணே * என்னும் ச்லோகத்தில் * விச்வம் த்வய்யபிமங்யஸே ஜகதிஷே தேநாத் விதீயஸ் தத꞉ * என்றருளிச்செய்யப்பட்டதும் இங்கே நினைக்கத்தக்கது. (32)

* पुनरपि व्यास्यायते:—வேதாந்தங்களில் காணும் அத்வைத வாதத்தைக் கண்டு உண்மையுணராது பலர் மயங்குவர்; * ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம * என்பது போன்ற பல ச்ருதி வாக்கியங்களில் ஜகத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் அபேதம் சொல்லப்பட்டிருப்பதானது எதனாலென்பதை அத்வைதிகள் உணரப்பெறாமல், ஜகத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் உண்மையாகவே அபேதமிருப்பதாகவும் அதையே ச்ருதிகள் சொல்லியிருப்பதாகவும் கூறுகின்றார்கள். அது தவறு. ''அக்நிர் மாணவக꞉,'' ''ஸிம்ஹோ மாணவக꞉,'' என்றால், நெருப்பும் மாணவகனும் ஒன்று, சிங்கமும் மாணவகனும் ஒன்று என்று உண்மையாகவே அபேதம் விவக்ஷிதமன்றே. சில அம்சங்களிலுள்ள ஸாம்யத்தை யிட்டு அபேதமாகச் சொல்லுகிறதித்தனை. அபேதமாகச் சொல்லுவதற்கு ஸாம்யமென்கிற ஒன்று மாத்திரம் மூலமன்று; மற்றும் பலவுமுண்டென்பதை லோகாநுபவத்திற் காண்கிறோம். ''அமாத்ய: ராஜைவ'' [மந்திரியும் அரசனும் ஒருவனே] என்கிறோம்; இதனால் இரண்டு வ்யக்திகள் இல்லையென்றும் ஒரேவ்யக்திதானுள்ளதென்றும் தேறிவிடுமோ? 'இருவரும் ஒரே கருத்தினர்' என்கிற விவக்ஷையினால் இருவரையும் ஒருவராகவே சொல்லி விடுகிறோம். அபேதவ்யபதேசத்திற்கு இங்ஙனே பல நியாமகங்களுண்டு. ஜகத்துக்கும் ப்ரஹ்மத்திற்கு முண்டான அபேதவ்யபதேசத்திற்கு நியாமகம் இந்தச்லோகத்தில் அருளிச் செய்யப்படுகிறது. பரப்ரஹ்மத்திற்கு அதீனமான உத்பத்தியையும், பரப்ரஹ்மத்திற்கு அதீனமான ஸத்தையையும், பரப்ரஹ்மத்திற்கு அதீநமான ப்ரவ்ருத்தியையும் உடையது ஸகல ஜகத்தும்; இவ்விஷயமே ஸ்ரீரங்ககத்யத்தில் * स्वाधीनत्रिविधचेतनाचेतनस्वरूपस्थितिप्रवृत्तिभेदम्—ஸ்வாதீநத்ரிவிதசேதநாசேதந ஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்தி பேதம் * என்கிற சூர்ணையினால் சொல்லப்பட்டது. திருவாய் மொழியில் முதறப்திகத்தில் * நாமவனிவனுவன் * அவரவர் தமதமது * * நின்றனரிருந்தனர் * என்கிற மூன்று பாசுரங்களினாலும் முறையே இதுதான் அருளிச் செய்யப்பட்டது. ஆக ஜகத்தானது பரப்ரஹ்மத்திற்கு ஸ்வாதீநோத்பத்திகமாயும் ஸ்வாதீநஸ்திதிகமாயும் ஸ்வாதீநப்ரவ்ருத்திகமாயு மிருக்கையாலே ப்ரஹ்மத்திற்கும் ஜகத்துக்கும் அபேதவாதம் ச்ருதிகளில் நிகழ்ந்ததாயிற்று என்பது இந்தச்லோகத்தினால் சொல்லப்பட்டதாயிற்று.

[தவத்ருஷ்டிஜுஷ்டமிதம் ஆவிர்பூதசேஷம்] என்கிற முதல் பாதத்தினால் எம்பெருமானுடைய ஸங்கல்பத்தினாலேயே உலகமெல்லாம் உண்டானமை சொல்லிற்று. [நோசேத் கடாக்ஷயஸி நைவ பவேத் ப்ரவ்ருத்தி:] என்கிற இரண்டாம் பாதத்தி

ணல் எம்பெருமானுடைய ஸங்கல்பத்தினாலேயே உலகமெல்லாம் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்குக் கடவதாகின்ற தென்னுமிடம் சொல்லிற்று. [ஸ்தாதுஞ்ச வாஞ்சதி ஜகத் தவ த்ருஷ்டிபாதம்] என்கிற மூன்றாம் பாதத்தினால் எம்பெருமானுடைய ஸங்கல்பத்தினாலேயே உலகமெல்லாம் ஸத்தை பெறுகின்ற தென்னுமிடம் சொல்லிற்று. ஜகத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் ச்ருதிகளில் சொல்லப்பட்டுள்ள அபேதத்திற்கு இவையே நியாமகமென்று நான்காம் பாதத்தினால் சொல்லித் தலைக்கட்டப்பட்டதாயிற்று.(32)

एवं भगो ! इह भवत्परतन्त्र एव शब्दोऽपि रूपवदमुष्य चराचरस्य ।
ऐश्वर्यमीदृशमिदं श्रुतिषूदितं ते पापीयसामयमहो त्वयि मोहहेतुः ॥३३॥

ஏவம் பகோ இஹ பவத்பரதந்த்ர ஏவ
சப்தோபி ரூபவதமுஷ்ய சராசரஸ்ய,
ஐச்வர்யமீத்ருசமிதம் ச்ருதிஷூதிதம் தே
பாபீயஸாமயமஹோ த்வயி மோஹஹேது: (33)

ஹே பகோ! இஹ அமுஷ்ய சராசரஸ்ய சப்தோபி ரூபவத் ஏவம் பவத்பரதந்த்ரஃ ஏவ ; ஈத்ருசம் இதம் ஐச்வர்யம் தே ச்ருதிஷு உதிதம்; அயம் பாபீயஸாம் த்வயி மோஹஹேதுஃ அஹோ.

பகவானே! இங்குக் காணப்படுகின்ற ஸகல சராசரங்களினுடையவும் நாமரூபங்கள் இப்படி தேவரீரிட்ட வழக்கே; இப்படிப்பட்ட இந்த வைபவமானது தேவரீருடையதாக வேதங்களில் ஓதப்பட்டது. ஆனால் இந்த ஐச்வர்ய குணமானது தௌர்ப்பாக்ய சாலிகளுக்கு தேவரீர் திறத்து மோஹ ஹேதுவாகின்றதந்தோ!.

* * * கீழ்ச்லோகத்தில் * **ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம** * இத்யாதி ஸாமாநாதிகரண்ய நிர்வாஹம் பண்ணத் தொடங்கினார்; அதற்கு சேஷபூதமாகவே இந்த ச்லோகமும் அவதரிக்கின்றது. **भगो** ! என்றது **भगवन्** ! என்றபடி. * **விபாஷா பவத்பகவதித்யாதி** அநுசாஸநத்தினால் **பகவந்**! என்பதற்குப் பர்யாயமாக **பகோ**! என்றும் ரூபஸித்தியாகுமென்றுணர்க. எம்பெருமானே! [**அமுஷ்ய சராசரஸ்ய**] கண்ணாற் காணப்படுமிந்த சராசரங்களினுடைய. [**ரூபவத் சப்தோபி பவத்பரதந்த்ர ஏவ**] 'ரூபவத்' என்றது ரூபமுமென்றபடி. "தேவதத்தன் யஜ்ஞதத்தன் போல யோக்யன்" என்றால் 'தேவதத்தனும் யஜ்ஞதத்தனும் யோக்யர்கள்' என்று பொருள்படுவதுபோல் இதனைக் கொள்க. ரூபமும் நாமமும் தேவரீரிட்டவழக்கு, * **அநேந ஜீவேநாத்மநா அநுப்ரவிச்ய நாமரூபே** வ்யாகரவாணி * என்று ச்ருதி ஓதினபடியே ஒவ்வொன்றிலும் அநுப்ரவேசித்து நாமரூப வ்யாகரணம் பண்ணிற்றுதேவரீரேயாகையாலே அதுகாரணமாக ஸர்வவஸ்து ஸாமாநாதிகரண்யம் தேவரீருக்கு யுக்தமானதேயென்று காட்டடினபடி. * ஜ்யோதீம்ஷி விஷ்ணுர் புவநாநி விஷ்ணுஃ * இத்யாதியாக ஸம்ஸ்க்ருதவேதங்களும், * தீயாய் நீராய் நிலனாய் விசும்பாய்க் காலாய்த் தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய் * இத்யாதியாக த்ராவிடவேதங்களும் ஸகலபதார்த்தங்களோடும் தேவரீரை ஸமாநாதிகரித்துச் சொல்லியிருக்கையாகிற இப்பெருமை தேவரீருக்கே அஸாதாரணமென்கிறது மூன்றாவது பாதத்தினால். ஸர்வவஸ்து ஸாமாநாதிகரண்யார்ஹத்வமாகிற வஸ்துபரிச்சேதராஹித்யம் எம்பெருமானுக்குண்டான ஐச்வர்யங்களுள் ஒன்றாதலால் [**ஐச்வர்யமீத்ருசமிதம் ச்ருதிஷு உதிதம் தே**] என்றார்.

சாஸ்த்ரங்களிற் காணும் ஸாமாநாதிகரண்யத்தை இங்ஙனே நிர்வஹிக்கவேணுமென்பதறியாதே, வஸ்துதோ பேதமேகிடையாதென்று சிலர் [அத்வைதிகள்] ப்ரமிப்பதானது பாபப்ராசுர்யத்தினாலத்தனை யென்கிறார் நான்காவது பாதத்தினால், [**அயம் பாபீயஸாம் த்வயி மோஹஹேதுஃ**] இங்கு **அயம்** என்கிற பும்லிங்க நிர்தேசமானது மேலுள்ள

ஹேதுః' என்ற பதத்தை நோக்கி. * சைத்யம் ஹி யத் ஸா ப்ரக்ருதிர் ஜலஸ்ய * என்ற ப்ரயோகத்தைநினைப்பது. * க்ஷேமஸ் ஸ ஏவ ஹி யதீந்த்ர! * என்ற யதிராஜ விம்சதி ப்ரயோகமு மித்தகைத்தே. ஆக இந்த ச்லோகத்தினல் சொல்லிற்ருயிற்றதென்னென்னில்; எம்பெருமான் ஸகல சராசரங்களிலுமுள்ள ஒவ்வொரு வஸ்துவிலும் அநுப்ரவேசித்து நாமரூபங்களை வகுத்தது காரணமாகவே அப்பெருமான்தானே ஸகல பதார்த்தங்களாகவும் (அபேதமாகச்) சொல்லப்படாநின்ருன்; இது எம்பெருமானுக்கு அஸாதாரணமானவொரு சிறப்பு; இவ்வுண்மையைச் சிலர் தெரிந்துகொள்ளாமல், வஸ்துதః நாநாவஸ்துக்கள் கிடையாவென்றும், நாநாவாகத்தோற்றுவது மாயாவிலஸித மென்றும் ஒன்றே யுள்ளதென்றும் சொல்லுகிருர்கள். அது மருளேயன்றித் தெருளன்று—என்றதாயிற்று. (33)

ये त्वत्कटाक्षलवलक्ष्यमिव क्षणं तैरैश्वर्यमीदृशमलभ्यमलम्भि पुंभिः ।

यत्केऽपि सञ्जगरिरे परमेशितृत्वं तेषामपि श्रुतिषु तन्महिमप्रसङ्गात् ॥३४॥

யே த்வத்கடாக்ஷலவலக்ஷ்யமிவ க்ஷணம் தைః
ஐச்வர்யமீத்ருசமலப்யமலம்பி பும்பிః,
யத் கேபி ஸஞ்ஜகரிரே பரமேசித்ருத்வம்
தேஷாமபி ச்ருதிஷு தந்மஹிமப்ரஸங்காத். (34)

யே க்ஷணம் த்வத் கடாக்ஷ லவ லக்ஷ்யமிவ (அபூவந்) தைః பும்பிః அலப்யம் ஈத்ருசம் ஐச்வர்யம் அலம்பி; கேபி தேஷாமபி பரமேசித்ருத்வம் ச்ருதிஷு ஸஞ்ஜகரிரே இதியத், (தத்) தந்மஹிம ப்ரஸங்காத்.

(எம்பெருமானே!) எவர்கள் க்ஷணகாலம் தேவரீருடைய ஸ்வல்ப கடாக்ஷத்திற்கு இலக்கானுர்களோ, அப்புருஷர்களால் அருமையான இப்படிப்பட்ட ஐச்வரியம் அடையப்பட்டது. சிலர், அப்புருஷர்களுக்கும் வேதங்களில் பாரம்யம் சொல்லப்பட்டிருப்பதாகச் சொல்லுகிருர்களென்பது (எதனுலென்னில்) அப் பெருமானுடைய பெருமையில் ஏகதேசமிருப்பதனுலே.

* * * ஸ்ரீமந்நாராயணனைத் தவிர்த்து இதர தேவதைகளிடத்திலும் ஈச்வர சப்தமும் பரமேச்வரசப்தமும் வழங்கிவரக் காண்கையாலே அந்த தேவதாந்தரங்களுக்கும் பரத்வமுண்டோவென்று சங்கிப்பார்க்குத் தெளிவு பிறக்கும்படி இந்த ச்லோகமருளிச் செய்யப்படுகின்றது. [யே க்ஷணம் த்வத்கடாக்ஷலவலக்ஷ்யமிவ, **தைః பும்பிః ஈத்ருசம்** அலப்யம் **ஐச்வர்யம் அலம்பி**] ஜகத்ஸ்ருஷ்டியை எம்பெருமானெருவனே பண்ணுகிருனென்னில், பதினன்கு லோகங்களைப் படைப்பவனுக நான்முகனுளன்; நித்ய ஸ்ருஷ்டிகர்த்தாக்களாக தசப்ரஜாபதிகள் உள்ளார்கள், மற்றும் ஸமய விசேஷங்களிலே விச்வாமித்ராதிகளும் * அந்யமிந்த்ரம் கரிஷ்யாமி * என்று ஸங்கல்பித்து ஓரோஸ்ருஷ்டிகளைச் செய்ததாகக் காண்கிருேமே; அந்தப் பெருமை அவர்களுக்கு எப்படி யுண்டாயிற்றென்ன; அதெல்லாம் எம்பெருமானுடைய கடாக்ஷ லவலேசத்தினுலுண்டான பெருமையேயென்கிறது.

* युगकोटि सहस्राणि विष्णुमाराध्य पद्मभूः । पुनस्त्रैलोक्यधातृत्वं प्राप्तवानिति शुश्रुम.— யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூః, புநஸ் த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதி சுச்ரும. * என்பதை இங்கே அநுஸந்திப்பது. "கடாக்ஷ லவலக்ஷ்யம்" என்னுதே "லக்ஷ்யமிவ" என்கையாலே அந்த பகவத் கடாக்ஷந்தானும் நன்ருக விழுந்ததோ இல்லையோ வென்று ஸந்தேஹிக்கும்படியான நிலைமை காட்டப்பட்டது. அத்யல்ப கடாக்ஷத்தின் பலனுகவே பிரமன் முதலானுர்க்கு இப்படிப்பட்ட பெருமையுண்டாயிற்

றென்றபடி. [அலப்யம் ஐச்வர்யம்] ஸாமாந்ய புருஷர்களுக்குக் கிடைக்கமாட்டாத தான பெருமை என்றபடி.

[யத்கேபி இத்யாதி.] பரமேச்வரனென்கிற ப்ரஸித்தியை ருத்ரனிடத்திலே காணு நின்றோம்; "வந்தே பார்வதீ பரமேச்வரௌ" என்கிறார்கள் மஹாகவிகளும். இது எப்படி பொருந்தும்? * தமீச்வராணும் பரமம் மஹேச்வரம் * என்று உபநிஷத்துக்களிலே ஸ்ரீமந்நாராயணனுக்கே பரமமஹேச்வரத்வம் சொல்லப்படாநிற்க, இதரதேவதைக்குப் பரமேச்வரத்வம் பொருந்துகிறபடி எங்ஙனே? என்ன; [தந்மஹிம ப்ரஸங்காத்] என்கிறார். எம்பெருமானுடையதான பெருமையின் ஏகதேசஸம்பந்தம் இருப்பதனாலே என்றபடி. * अन्यत्र तद्गुणलेशयोगात् औपचारिक:—அந்யத்ர தத்குண லேசயோகாத் ஔபசாரிகः * என்கிற ஸ்ரீ பாஷ்ய ஸூக்தியை இங்கே ஸ்மரிப்பது. 'ஸஞ்ஜகிரே' என்ற பாடம் நவீநமாகையாலே மறுக்கத்தக்கது. அப்படி ரூபம் தேறாது. (34)

नित्येषु वस्तुषु भवन्निरपेक्षमेव तत्तत्स्वरूपमिति केचिदिह भ्रमन्तः ।
ऐश्वर्यमत्र तव सावधि सङ्गिरन्ते ब्रूते त्रयी तु निरुपाधिकमीशनं ते ॥३५॥

நித்யேஷு வஸ்துஷு பவந்நிரபேக்ஷமேவ
தத்தத்ஸ்வரூபமிதி கேசிதிஹ ப்ரமந்த:,
ஐச்வர்யமத்ர தவ ஸாவதி ஸங்கிரந்தே
ப்ரூதே த்ரயீ து நிருபாதிகமீசநம் தே. (35)

(பகவந்!) இஹ கேசித் நித்யேஷு வஸ்துஷு தத்தத் ஸ்வரூபம் பவந்நிரபேக்ஷமேவ இதி ப்ரமந்த: அத்ர தவ ஐச்வர்யம் ஸாவதி ஸங்கிரந்தே, த்ரயீ து தே ஈசநம் நிருபாதிகம் ப்ரூதே.

(எம்பெருமானே!) இவ்வுலகில் சில அறிவிலிகள் நித்ய வஸ்துக்களில் அவ்வவற்றின் ஸ்வரூபம் தேவரீரையபேக்ஷியாமலே ஸ்வத ஏவ நித்யமாயிருப்பதாக மருள் கொண்டவர்களாய் இவ்விஷயத்தில் தேவரீருடைய ஐச்வரியத்தை ஸாவதிகமாகக் கூறுகின்றார்கள்; வேதமோ என்றால் நிருபாதிகமான ஐச்வரியத்தையே தேவரீருக்குக் கூறுகின்றது.

* * *—எம்பெருமானுடைய பெருமையில் குறைநினைப்பாருடைய ஒருவிதமான நினைவை அநுவதித்துக் கண்டிக்கிறார் இந்த ச்லோகத்தினால். எம்பெருமானை ஸகல ஜகத்காரண பூதனாக இசைந்தால் நித்ய வஸ்துக்களைத்தவிர்த்து அநித்ய வஸ்துக்களுக்கு மாத்திரமே எம்பெருமான் காரணபூதன் என்றிசையவேண்டும்; நித்ய வஸ்துக்களுக்குங்கூட அவனே காரண பூதனென்று இசைந்தால் அப்போது அந்த வஸ்துக்களுக்கு நித்யத்வமானது வ்யாஹதமாகும்; 'மம மாதா வந்த்யா' (என் தாய் மலடி) என்பதுபோலே அநுபபந்நமான உக்தியாகும். ஆகவே, நித்யவஸ்துக்களில் எம்பெருமானுக்குக் காரணத்வம் கிடையாதென்றே கொள்ளவேண்டும்; இங்ஙனே கொள்ளுமளவில் 'ஸகலவஸ்துஸ்வரூபமும் பகவத் ஸங்கல்பாதீநமே' என்கிற வாதம் குலைந்ததாகும். நித்ய வஸ்துக்கள் தவிர மற்ற வஸ்துக்களின் ஸ்வரூபமே பகவத் ஸங்கல்பாதீநமென்று கொள்ளவேண்டியதாமே; அப்படி கொண்டாலென்ன? என்னில்; அப்போது எம்பெருமானுடைய பெருமைக்கு ஸங்கோசம் விளைந்ததாயிற்றன்றோ? அவனுக்கு நிரவதிகமான ஐச்வர்யம் கிடையாது ஸாவதிகமாகவே அது உள்ளது என்று கொள்ளவேண்டிற்றாகும்—என்பர் உண்மையுணராதவர்கள். இவ்விஷயத்தை மூன்றுபாதங்களினாலே அருளிச்செய்து, [ப்ரூதே த்ரயீ து நிருபாதிகம் ஈசநம் தே] என்கிற நான்காவது பாதத்தினாலே அந்தவாதம் வேதாந்த விருத்தம் என்று க்ஷேபித்தருளுகிறார் * பதிம் விச்வஸ்யாத்மேச்வரம * பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே * என்றிவை முதலான ச்ருதி வாக்யங்களில் எம்பெருமானுக்கு நிரவதிகமானபெருமை பேசப்படாநிற்க, அதை ஸங்குசிதமாக்குவது ஸமுசிதமன்றுஎன்றபடி.

ஆனால், நித்யவஸ்துக்கள் திறத்திலும் எம்பெருமானுக்குக் காரணத்வம் இசைய முடியுமோ வென்னில், அதைப்பற்றி அடுத்த ச்லோகத்தில் அருளிச் செய்யப்படுவது காண்க. (35)

इच्छात एव तव विश्वपदार्थसत्ता नित्यं प्रियास्तव तु केचन ते हि नित्याः ।
नित्यं त्वदेकपरतन्त्रनिजस्वरूपा भावत्कमङ्गलगुणा हि निदर्शनं नः ॥३६॥

இச்சாத ஏவ தவ விச்வபதார்த்தஸத்தா
நித்யம் ப்ரியாஸ் தவ து கேசந தே ஹி நித்யா:,
நித்யம் த்வதேகபரதந்த்ர நிஜஸ்வரூபா:
பாவத்கமங்கலகுணா ஹி நிதர்சநம் ந:. (36)

விச்வபதார்த்தஸத்தா தவ இச்சாத: ஏவ; கேசந து தவ நித்யம் ப்ரியா:, தே ஹி நித்யா:; நித்யம் த்வதேக பரதந்த்ர நிஜஸ்வரூபா: பாவத்கமங்கலகுணா: ஹி ந: நிதர்சநம்.

(எம்பெருமானே!) ஸகல பதார்த்தங்களினுடையவும் ஸத்தையானது தேவரீருடைய இச்சையினாலேயேயாகும்; தேவரீருடைய நித்யேச்சைக்கு விஷயபூதங்களான சில வஸ்துக்களே நித்ய வஸ்துக்களாம்; எப்போதும் தேவரீரொருவர்க்கே அதீநமான ஸ்வரூபத்தையுடையவைகளான தேவரீரது திருக்கல்யாண குணங்களே (இவ்விஷயத்தில்) நமக்கு உதாஹரணமாகும்.

* * * கீழ்ச்லோகத்திற்கு சேஷபூதமானது இந்த ச்லோகம். நித்யவஸ்துக்களினுடைய ஸத்தையும் எம்பெருமானுடைய அதீநந்தானென்னுமிடம் உபபத்தியுடன் மூதலிக்கப்படுகிறது இதில். [விச்வ பதார்த்தஸத்தா தவ இச்சாத ஏவ] நித்ய வஸ்துக்கள் அநித்யவஸ்துக்கள் என்கிற விபாகமின்றிக்கே ஸகலபதார்த்தங்களினுடையவும் ஸத்தையானது எம்பெருமானுடைய ஸங்கல்பாதீநமேயா மென்றபடி. அப்படியானால் சில பதார்த்தங்களுக்கு நித்யவஸ்துக்களென்னும் பெயர் வந்தபடியெங்ஙனே? எம்பெருமானுடைய இச்சையுண்டானபோது உண்டாகி அது இல்லையானபோது இல்லையாக வேண்டுமே; ஆகவே நித்யவஸ்து வென்னக்கூடாதே என்கிற சங்கைக்குப் பரிஹாரம் உணர்த்துகிறது இரண்டாம் பாதம் [நித்யம் ப்ரியாஸ் தவ து கேசந தே ஹி நித்யா:] 'இவை நித்யமாயிருக்கக்கடவன' என்று நித்யேச்சாவிஷய பூதங்களானவை நித்யவஸ்துக்களென்னப்படுகின்றன என்றபடி.

நம்முடைய ஸித்தாந்தத்தில் எல்லாவஸ்துக்களுமே நித்யங்களாகக் கொள்ளப்படுகின்றன. உலகில் நம்கண்முன்னே அழியும் பல பதார்த்தங்களைக்காணாநின்றோம்; அவை அநித்யம்போல் தோன்றினாலும் அவையும் ஒருபடி நித்யங்களேயாம்; அவை ப்ரவாஹதோநித்யங்களென்னப்படும். சிலபானைகளும் சிலதுணிகளும் சிலவீடுகளும் அழிந்துபோனாலும் அவற்றோடு ஸஜாதீயங்களாயுள்ள வஸ்துக்கள் எங்கும் எப்போதும் பல பல காணப்படுகையாலே அவை ப்ரவாஹதோ நித்யங்களெனப்படுகின்றன. அவற்றைப் பற்றி இங்கு விசாரமில்லை. ஸ்வரூபதோ நித்யங்களான வஸ்துக்களைப்பற்றியே இங்கு சங்கையும் பரிஹாரமும் நிகழ்கின்றன. ஸத்தான பதார்த்தத்தினுடைய உத்பத்தி விநாச அத்யந்தாபாவமே ஸ்வரூபேண நித்யத்வமெனப்படுகிறது. உத்பத்திவிநாசங்கள் கூடாநிற்கச் செய்தேயும் பூர்வகாலத்திலுண்டான நாமரூப லிங்காதிகளின் மாறுபாடு சிறிதுமில்லாமை ப்ரவாஹரூபேண நித்யத்வம். சித்து அசித்து காலம் என்னுமிவை ஸ்வரூபதோ நித்யங்களாகையாலே இவற்றைப்பற்ற எம்பெருமானுக்குக் காரணத்வம் இசையவேண்டாமையாலே சங்கைக்கு உதயமுண்டாயிற்று. இவற்றின் விஷயத்திலும் எம்பெருமானுக்கு நித்யஸங்கல்பமுள்ளதென்று கொண்டு சங்காபரிஹாரம் செய்யப்பட்டதாயிற்று.

இதற்கு த்ருஷ்டாந்தமொன்று காட்டப் படுகிறது உத்தரார்த்தத்தினால். ஸத்ய காமத்வ ஸத்யஸங்கல்பத்வ ஸர்வஜ்ஞத்வாதிகளான திருக்கல்யாண குணங்கள் ஸ்வரூப தோ நித்யங்களே ; ஆனாலும் இவை பகவததீநமான ஸத்தையையுடையன என்பது நிர்விவாதம். இவை நித்யங்களாயிருக்கச் செய்தேயும் பகவதேகபரதந்த்ர நிஜஸ்வரூபங் களாயிருக்கக் குறையில்லையே. ஆகவே நித்யவஸ்துக்கள் திறத்திலே பகவத்ஸங்கல் பத்தை ஒதுக்கவேண்டிய ப்ரஸக்தி யில்லாமையாலே கீழ்ச்லோகத்தில் "கேசித் இஹ ப்ரமந்த:" என்று அருளிச்செய்தது மிகப்பொருத்தமென்றுணர்க. நித்யவஸ்துக்களின் ஸ்வரூபமும் பகவத்ஸாபேக்ஷமேயல்லது தந்நிரபேக்ஷமன்று என்று நிகமிக்கப்பட்ட தாயிற்று. (36)

विश्वस्य विश्वविधकारणमच्युत ! त्वं कार्यं तदेतदखिलं चिदचित्स्वरूपम् ।
त्वं निर्विकार इति वेदशिरस्सु घोषो निस्सीममेव तव दर्शयतीशितृत्वम् ॥३७॥

விச்வஸ்ய விச்வவிதகாரணமச்யுத ! த்வம்
கார்யம் ததேததகிலம் சிதசித்ஸ்வரூபம்,
த்வம் நிர்விகார இதி வேதசிரஸ்ஸு கோஷ:
நிஸ்ஸீமமேவ தவ தர்சயதீசித்ர்த்வம். (37)

ஹேஅச்யுத ! விச்வஸ்ய விச்வவித காரணம் த்வம் ; சிதசித் ஸ்வரூபம் ததேதத் அகிலம் கார்யம் ; த்வம் நிர்விகார: இதி வேதசிரஸ்ஸு கோஷ: தவ நிஸ்ஸீமமேவ ஈசித்ர்த்வம் தர்சயதி.

எம்பெருமானே ! எல்லாவற்றுக்கும் எல்லாவகையான காரணமும் தேவரீரேயாகின்றீர் ; சேதநாசேதநாத்மகமான இவையெல்லாம் தேவரீருக்குக் காரியப்பொருளாகின்றன ; தேவரீர் விகாரமற்றவரென்று வேதாந்தங்களில் முறையிடப்படுவதானது தேவரீருடைய எல்லைகடந்த சக்திவிசேஷத்தைக் காட்டுகின்றது.

* * * உலகுக்கெல்லாம் எம்பெருமானே மூவகைக்காரணமு மென்று அருளிச் செய்து, உபாதாநகாரணமும் எம்பெருமானேயாகில் அவனுக்கு விகாரித்வம் வருமே யென்கிற சங்கைக்குப் பரிஹாரமுமருளிச் செய்கிறார் இந்த ச்லோகத்தில். [**ஹே அச்யுத ! த்வம் விச்வஸ்ய விச்வவித காரணம்**] உலகில் நாம் ஒவ்வொரு பதார்த்தமு முண்டாகைக் குறுப்பாக மூவகைக் காரணங்களைக் காணுகின்றோம் ; உபாதாந காரணம், ஸஹகாரி காரணம், நிமித்தகாரணம் என்பன அவை. ஒருபானை யுண்டாகவேணுமானால் மண் என்கிற உபாதாந காரணமும், தடி சக்கரம் தண்ணீர் முதலான ஸஹகாரி காரணமும், குயவனென்கிற நிமித்த காரணமும் வேண்டியிரா நின்றன. ஒரு துணியுண்டாக வேணுமானால் நூல் என்கிற உபாதாந காரணமும் துரீவேமாதிகளான ஸஹகாரி காரண கலாபமும், சேணிய னென்கிற நிமித்தகாரணமும் வேண்டியிரா நின்றன. இங்ஙனே ஒவ்வொன்றிலும் காணலாம். முழுமுதற் பிரபஞ்ச ஸ்ருஷ்டிக்கும் இம் மூவகைக் காரணங்களும் வேண்டியிருக்குமே ; பகவான் ஏதாவது ஒரு காரணமாகத்தானே யிருக்கமுடியும் ; ஔசித்யாத் நிமித்த காரணமாக இருக்கலாம் ; மற்றை யுபாதாந ஸஹகாரி காரணங்கள் எவை ? என்று கேள்விபிறக்கும். மூவகைக்காரணங்களும் எம்பெருமானேயென்பது வேதாந்திகளின் கொள்கை.

தத்வத்ரயத்தில் ஈச்வரப்ரகரணத்தில் (152.) "இவனே ஸகலஜகத்துக்கும் காரண பூதன்.......(165) இவன்தானே ஜகத்தாய்ப் பரிணமிக்கையாலே உபாதாநமுமாயிருக்கும். ஆனால் நிர்விகாரனென்னும்படி யென்னென்னில், ஸ்வரூபத்துக்கு விகாரமில்லாமையாலே. ஆனால் பரிணாமமுண்டாம்படி யென்னென்னில், விசிஷ்டவிசேஷண ஸத்வாரகமாக. ஒருசிலந்திக்குண்டான ஸ்வபாவம் ஸர்வசக்திக்குக் கூடாதொழியா

ரீறே.'' என்றருளிச்செய்தவையும், அவ்விடத்து மணவாளமாமுனிகளின் வியாக்கியான திவ்ய ஸ்ரீஸூக்திகளும் இங்கே அநுஸந்தேயங்கள். எம்பெருமான் ஸ்வேஸ்ரூபேண நிமித்தகாரண பூதன்; சேதநாசேதந சரீரகனாய்க்கொண்டு உபாதாநகாரணபூதன்; ஸங்கல்பவிசிஷ்ட வேஷேண ஸஹகாரிகாரண பூதன் என்று கொள்வது.

[சிதசித்ஸ்வரூபம் தத்ஸ்தகிலம் கார்யம்] சேதநாசேதநாத்மகமான எல்லாமும் ஒன்றொழியாமே அப்பெருமானுக்குக் காரியப்பொருளாயுள்ளன. என்றவாறே, ஒரு சங்கை தோன்றக்கூடியதுண்டு; உலகில் உபாதாநகாரணமாயிருக்கிறவஸ்து தான் விகாரமடையாமல் ஒருகாரியத்தையுண்டாக்க முடியாதே; ஜகத்துக்கு எம்பெருமானே உபாதாநகாரணமென்னில் இவன் விகாரப்படுவதாக இசையவேண்டிவருமே; எம்பெருமானுக்கு விகாரித்வமும் உண்டோ? என்று சங்கைதோன்ற, அதற்கு உத்தரமாக வுள்ளது உத்தரார்த்தம். வேதாந்தங்களில் எம்பெருமான் நிர்விகாரனென்றே ஓதப்பட்டிருக்கையாலே தத்ஸ்வரூபத்திற்கு விகாரம் கொள்ள ப்ரஸக்தியில்லை; அப்படியாகில் உபாதாநகாரணத்வம் அவனுக்கில்லையென்று இசையவேண்டு மத்தனையென்னில்; ஸ்வரூபம்விகாரமடையாமலே உபாதாநகாரணமாயிருக்கையே எம்பெருமானுடைய மிகச்சிறந்த சக்தி விசேஷம் என்றாராயிற்று.

எம்பெருமானுடைய ஷாட்குண்யத்திலே வீர்யமென்பது ஒரு குணம். அந்த குணத்தின் தன்மையை பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தரசதகத்தில்—* मृगनाभिगन्ध इव यत्सकलार्थान् निजसन्निधेरविकृतो विकुरुषे । प्रियरङ्ग ! वीर्यमिति तत्तु वदन्ते—ம்ருகநாபிகந்த இவ யத் ஸகலார்த்தாந் நிஜஸந்நிதேரவிக்ருதோ விக்ருஷே, ப்ரியரங்க! வீர்யமிதி தத் து வதந்தே * என்றருளிச்செய்தார். தான் விகாரமுறாமலே ஸ்ருஜ்ய பதார்த்தங்களை விகரிப்பிக்கை ஷாட்குண்யபரிபூர்ணனுடைய ப்ரபாவாதிசயம் என்றதாயிற்று. (37)

किंसाधनः क्व निवसन् किमुपाददानः कस्मै फलाय सृजतीश इदं समस्तम् ।
इत्याद्यनिष्ठितकुतर्कमतर्कयन्तः त्वद्वैभवं श्रुतिविदो विदुरप्रतर्क्यम् ॥३८॥

கிம்ஸாதந: க்வ நிவஸந் கிமுபாததாந:
கஸ்மை பலாய ஸ்ருஜதீச இதம் ஸமஸ்தம்,
இத்யாத்யநிஷ்டிதகுதர்க்கமதர்க்கயந்த:
த்வத்வைபவம் ச்ருதிவிதோ விதுரப்ரதர்க்யம். (38)

"ஈச: கிம்ஸாதந: க்வ நிவஸந் கிம் உபாததாந: கஸ்மை பலாய இதம் ஸமஸ்தம் ஸ்ருஜதி?" இத்யாதிஅநிஷ்டிதகுதர்க்கம் அதர்க்கயந்த: ச்ருதிவித: த்வத்வைபவம் அப்ரதர்க்யம் விது:.

"பகவான் எதை ஸாதனமாகக் கொண்டு எவ்விடத்திலிருந்துகொண்டு எப்பொருளை உபாதானமாகக் கொண்டு எந்தபலனுக்காக இவ்வுலகங்களை யெல்லாம் படைக்கிறான்?'' என்றிப்படியெல்லாம் அமர்யாதமாகச் சிலர் செய்யும் குதர்க்கங்களைச் சிறிதும் பொருள்படுத்தாத வேதாந்திகள் (எம்பெருமானே!) தேவரீருடைய வைபவத்தை அப்ரமேயமாக அறிந்துள்ளார்கள்.

* * * காரணத்வ ப்ரதிபாதநப்ரஸங்கத்திலே சில குதர்க்கவாதிகளின் குத்ஸித வாதங்களை யநுவதித்து, எம்பெருமானுடைய அப்ரமேயமான பெருமையின் முன்னிலையிலே இப்படிப்பட்ட குதர்க்கங்கள் தலைகாட்டமாட்டாவென்று கிள்ளிக்களைந்தருளினார் இந்தச்லோகத்தில். [கிம்ஸாதந இத்யாதி.]

உலகில் கடபடாதிபதார்த்தங்களின் நிர்மாணத்தைக் காண்பவர்கள் சிலவஸ்துக் களை ஸஹகாரிகாரணமாகக் கொண்டும் உபாதாநகாரணமாகக் கொண்டும் ஓரிடத் திலிருந்துகொண்டும் ஏதேனுமொரு ப்ரயோஜனத்தை விரும்பியும் நிர்மாணம் செய்யக் காண்கையாலே, எம்பெருமான் செய்யும் ப்ரபஞ்சஸ்ருஷ்டியும் இம்முறையிலேயே நடை பெறவேணுமென்றுகொண்டு " ஈசஃ கிம்ஸாதநஃ கிம்உபாதநஃ க்வ நிவஸந் கஸ்மை பலாய ஸ்ருஜதி ? " என்று கேள்விகள் கேட்கத் தொடங்குவர்கள். இக்கேள்விகளின் உட்கருத்து யாதெனில் ; கேண்மின் ;—[கிம்ஸாதநஃ?] எதை ஸாதனமாகக்கொண்டு எம் பெருமான் ஜகத்ஸ்ருஷ்டிபண்ணுகிறான் ? என்பது ஒரு கேள்வி. ஏதேனுமொரு வஸ்து வைக்காட்டி இதை ஸாதனமாகக்கொண்டு ஸ்ருஷ்டிக்கிறானென்று சொன்னால் 'அந்த ஸாதநவஸ்துவை ஸ்ருஷ்டிக்கும்போது எந்தவஸ்துவை ஸாதனமாகக் கொள்கின்றான் ?' என்று உடனே கேட்பார்கள். இங்ஙனே ப்ரச்நபரம்பரைகளுக்கு ஓய்வில்லையாகும். இப்படியே உபாதாநகாரண விஷயத்திலும் ப்ரச்நபரம்பரைகள் ஓயாது சென்று கொண் டிருக்கும். ஸ்ருஷ்டிக்கும்போது ஓரிடத்தி லிருந்துகொண்டு ஸ்ருஷ்டிக்க வேண்டுகை யாலே எம்பெருமான் எவ்விடத்திலிருந்து கொண்டு ஸ்ருஷ்டிக்கிறானென்று கேட்பது மற்றொருகேள்வி ; ஓரிடத்தைக் குறிப்பிட்டு இவ்விடத்திலிருந்து கொண்டு ஸ்ருஷ்டிக் கிறானென்று சொன்னால் அவ்விடத்தை ஸ்ருஷ்டிக்கும் போது எவ்விடத்திலிருந்து கொண்டு ஸ்ருஷ்டிக்கிறானென்று உடனே கேட்பார்கள். இந்த ப்ரச்நபரம்பரைகளுக்கும் ஓய்வில்லையாகும். எம்பெருமான் செய்யும் ஸ்ருஷ்டி எந்தப்ரயோஜனத்திற்காக வென்று மற்றொருகேள்வி. 'ஒரு ப்ரயோஜனத்திற்காகவுமன்று' என்று சொன்னால் "ப்ரயோஜந மநுத்திச்ய ந மந்தோபி ப்ரவர்த்ததே " என்று க்ஷேபிப்பர்கள். ஏதேனுமொருப்ரயோஜந முண்டென்று சொன்னால் 'இதுவரையில் இந்த ப்ரயோஜனம் கைகூடப்பெறாத எம்பெரு மானை அவாப்தஸமஸ்தகாமனென்று எங்ஙனே கூறுகின்றீர்கள் ?' என்று க்ஷேபிப் பர்கள். ஆக இப்படிப்பட்ட குதர்க்கவாதங்கள் பகவத்ப்ரபாவத்தை உள்ளபடியுணர்ந்த வேதாந்திகளான ப்ரஹ்மவித்துக்களின் கோஷ்டிகளிலே விலைச்செல்லமாட்டாவென்று தலைக்கட்டுகிறார். பரிச்சிந்நசக்தியுக்தர்களான அஸ்மாத்ருச ப்ராக்ருதர்களிடத்திலே காண்பவைகளைக் கொண்டு அபரிச்சிந்ந சக்தியுக்தனான பரமபுருஷன்செய்கைகளிலே குசோத்யங்கள் பண்ணுவது கூடாதென்பதே பரமதாத்பர்யம். சாரீரகமீமாம்ஸையில் *க்ருத்ஸ்நப்ரஸக்திர் நிரவயவத்வசப்தகோபோ வா* என்கிறஸூத்ரத்தில் ஒரு சோத்யத்தை உத்க்ஷேபித்துக்கொண்டு *ச்ருதேஸ் து சப்தமூலத்வாத்* என்பதேயன்றோ ஸித்தாந்த ஸூத்ரமாக அமைக்கப்பட்டது. சாஸ்த்ரைக ஸமதிகம்யமான பரப்ரஹ்மத்தினிடத்தில் லௌகிகத்ருஷ்ட்யா ஒரு குசோத்யமும் செய்யத்தகாதென்பதே ஸூத்ரிதமாயிற்று. இந்த ச்லோகந்தன்னில் " த்வத்வைபவம் அப்ரதர்க்யம் " என்பதே உயிரான வார்த்தை. " கஸ்மை பலாய ஸ்ருஜதீச ஃ ?" என்கிற கேள்வியை சாரீரகமீமாம்ஸையில் * ந ப்ரயோஜந வத்த்வாத் * என்கிற ஸூத்ரத்தினால் உத்க்ஷேபித்துக்கொண்டு * லோகவத் து லீலாகை வல்யம் * என்கிற ஸூத்ரத்தினால் ஸமாதான முரைக்கப்பட்டமை யுணர்க. அதுவே அடுத்த ச்லோகத்தினலருளிச்செய்யப்படுகின்றது. ... (38)

यत्संवृतं दशगुणोत्तरसप्ततत्त्वैरण्डं चतुर्दशजगद्भवधातृधाम ।
अण्डानि तत्सुसदृशानि परश्शतानि क्रीडाविधेस्तव परिच्छदतामगच्छन् ॥३९॥

யத் ஸம்வ்ருதம் தசகுணோத்தர ஸப்ததத்வை:
அண்டம் சதுர்தசஜகத் பவ தாத்ரு தாம,
அண்டாநி தத்ஸூஸத்ருசாநி பரச்சதாநி
க்ரீடாவிதேஸ் தவ பரிச்சததாமகச்சந். (39)

தசகுணோத்தர ஸப்ததத்வை: ஸம்வ்ருதம் சதுர்தசஜகத் பவ தாத்ரு தாம யத் அண்டம் தத்ஸுஸத்ருசாநி பரச்சதாநி அண்டாநி தவ க்ரீடாவிதே: பரிச்சததாம் அகச்சந்.

(எம்பெருமானே! மேன்மேலும் பதின்மடங்காகப்பெருகியுள்ள ஏழு தத்வங்களினாலே சூழப்பட்டும் பதினான்கு உலகங்களையுடைத்தாயும் அரனுக்கும் அயனுக்குமிருப்பிடமாயும் யாதொருஅண்டம் இராநின்றதோ, அதனோடு மிகவும் ஒத்திருப்பவையும் பலநூற்றுக்கணக்காக வுள்ளவையுமான அண்டங்களானவை தேவரீருடைய லீலைக்கு உபகரணமாக இருக்குந் தன்மையை யடைந்துள்ளன.

* * *—அவாப்தஸமஸ்தகாமனான ஸர்வேச்வரனுக்கு ஒருபலனை விரும்பி ஸ்ருஷ்டிக்க வேண்டிய ப்ரஸக்தியில்லை; நிஷ்ப்ரயோஜநமாக ஸ்ருஷ்டிக்கிறானென்னில் * **ப்ரயோஜநமநுத்திச்ய ந மந்தோபி ப்ரவர்த்ததே** யாகையாலே ஸ்ருஷ்டி ப்ரவ்ருத்தியே அஸம்பாவிதமாகிறதே என்று வாதம் ப்ரஸக்தமாக, இவ்விபூதிக்கு லீலாவிபூதி யென்று பெயராகையாலே "மன்பல்லுயிர்களுமாகிப் பலபல மாயமயக்குக்களால் இன்புறு மிவ்விளையாட்டுடையான்" என்று ஆழ்வாரருளிச் செய்தபடியே எம்பெருமானுடைய லீலைக்காகவே சதுர்தச புவநாத்மகமான அண்டமும் அதையொத்த பலபல அண்டங்களும் அமைந்தன வென்றருளிச் செய்கிறாரிதில்.

[சதுர்தச ஜகத்] என்பதில் பஹுவ்ரீஹிஸமாஸம் கொள்ளவேணும். "சதுர்தச ஜகந்தி யஸ்மிந் தத்—சதுர்தசஜகத்" என்று கொள்வது. பதினான்கு லோகங்களாவன—கீழில் அண்டகடாஹத்துக்குமேல் எண்பத்துமூன்று நூறாயிரத்தைம்பதினாயிரம் யோஜன முயர்த்தியுடைத்தான கர்ப்போதகத்தின்மேலே * ஸப்ததிஸ் து ஸஹஸ்ராணாம் த்விஜோச்ச்ராயோபி கத்யதே, தச ஸாஹஸ்ரமேகைகம் பாதாளம் முநிஸத்தம அதலம் விதலஞ்சைவ நிதலஞ்ச கபஸ்திமத், மஹாக்யம் ஸுதலஞ்சாக்ர்யம் பாதாலஞ்சைவ ஸப்தமம். * என்கிறபடியே ஓரொன்று பதினாலாயிரம் யோஜநத்தளவு உயர்த்தியையும் பரப்பையுமுடைத்தாய் தைத்யதாநவ பந்நகஸுபர்ணாதிகள் வாழுமிடமாய் மணலாயும் மலையாயும் பொன்னாயுமிருக்கிற ஸ்தல விசேஷங்களையுடையவையாய், விலக்ஷணமான மாளிகைகளாலும் ப்ராஸாததோரணங்களாலும் அலங்க்ருதமாய் ஸ்வர்க்காதிகளிலுங் காட்டில் பரமபோக்யமாய், அதலமென்றும் விதலமென்றும் நிதலமென்றும் (கபஸ்திமத்தென்கிற மறுபெயரையுடைய) தலாதலமென்றும் மஹாதலமென்றும் ஸுதலமென்றும் பாதாலமென்றும் பெயரையுடைத்தான கீழுலகங்களேழும், இதுக்குமேல் எழுபதினாயிரம் யோஜனம் அகலத்தையுடைத்தாய் ஸப்தத்வீப ஸாகர பர்வதாதி விசிஷ்டமாய் பாதசாரிகளான மநுஷ்யாதிகள் வர்த்திக்கும் தேசமாய் பத்மாகாரமான பூலோகமும், பூலோகத்துக்குமேல் ஆதித்யனுக்குக்கீழ் நூறாயிரம் யோஜநத்தளவு உயர்த்தியையுடைத்தாய் கந்தர்வாதிகள் வாழும் தேசமான புவர்லோகமும், ஆதித்யனுக்குமேல் த்ருவனுக்குக்கீழ் பதினாயிரம் யோஜனத்தளவு உயர்த்தியையுடைத்தாய் ஸாதிகாரரான க்ரஹ நக்ஷத்ர இந்த்ராதிகள் வாழுமிடமான ஸ்வர்லோகமும், த்ருவனுக்குமேல் ஒருகோடி யோஜனத்தளவு உயர்த்தியையுடைத்தாய் * **விநிவ்ருத்தாதிகாராஸ் து மஹர்லோக நிவாஸிந:** * என்கிறபடியே அதிகாரபதவியினின்று விலகினவர்களாய் அதிகாராபேக்ஷிகளான இந்த்ராதிகள் வாழும் தேசமான மஹர்லோகமும், அந்த மஹர்லோகத்துக்குமேல் இரண்டுகோடி யோஜனத்தளவு உயர்த்தியையுடைத்தாய் ப்ரஹ்ம புத்ரர்களான ஸநகாதி பரமயோகிகள் வாழுமிடமான ஜநர்லோகமும், ஜநர்லோகத்துக்குமேல் எட்டுகோடி யோஜனத்தளவு உயர்த்தியையுடைத்தாய் வைராஜரென்கிற ப்ரஜாபதிகள் வாழுமிடமான தபோலோகமும், தபோலோகத்துக்குமேல் நாற்பத்தெட்டுகோடி யோஜனத்தளவு உயர்த்தியையுடைத்தாய், * **தேஷாமேஷாம் கேசப்ரஹ்ம லோகா: ருத்ரஸ்யாந்யே ஸந்தி லோகா விசாலா:, தாந் தாந் லோகாந் தாநுபாஸ்ய வ்ரஜந்தி** *

என்கிறபடியே ப்ரஹ்மவிஷ்ணு சிவர்களும், அவர்களையுபாஸித்து அவர்களை ப்ராபித்தவர்களும் வாழுமிடமான ஸத்ய லோகமும் ஆக இப்படியிருந்துள்ள சதுர்தச புவனங்களாம். இவற்றோடே கூடியிருக்கும்படியைச் சொன்னபடி.

[தசகுணோத்தரஸப்ததத்வைः ஸம்வ்ருதம்] ஒன்றுக்கொன்று பதிற்றுமடங்கான ஏழாவரணங்களாலும் சூழப்பட்டதென்கை. கீழ்ச்சொன்ன பதினாலு லோகத்தையும் அண்டகடாஹம் ஆவரித்துநிற்கும். அண்ட கடாஹத்தோடு கூடின இவ்வண்டம் தன்னில் பதிற்றுமடங்கு பரந்திருக்கிற ஜலதத்வத்தாலே ஆவரிக்கப்பட்டிருக்கும். இப்படி தசோத்தரமாய்க்கொண்டு ஜலதத்வத்தை தேஜஸ்தத்வமாவரிக்கும். அப்படி அத்தை வாயுதத்வம் ஆவரிக்கும். வாயுவை ஆகாசம் ஆவரிக்கும். ஆகாசத்தை அஹங்காரமாவரிக்கும். அஹங்காரத்தை மஹத்தத்வம் ஆவரிக்கும். அந்த மஹத்தத்வத்தை அவ்யக்தமாவரிக்கும். இப்படி தசோத்தரங்களான ஸப்தாவரணங்களாலும் சூழப்பட்டிருக்கும்.

[தத்ஸத்ருசானி பரச்சதானி அண்டானி] * அண்டானாம் து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராணி அயுதானி ச, ஈத்ருசானாம் ததா தத்ர கோடிகோடி சதானி ச * என்கிற ஸ்ரீவிஷ்ணுபுராண வசனம் இங்கே அநுஸந்தேயம். ஆக இவையெல்லாம் **[தவ க்ரீடா விதேः பரிச்சததாம் அகச்சந்]** க்ரீடாபரனான பாலகனுக்கு விளையாட்டுக் கருவிகள்போல, க்ரீடாரஸமநுபவிக்க விரும்பிய எம்பெருமானுக்கு லீலோபகரணங்களாயிருக்கும். * ஹரே விஹரஸி **க்ரீடாகந்துகைரிவ ஜந்துபிः** * **மோததே பகவாந் பூதைः பாலः க்ரீடநகைரிவ** * இத்யாதி ப்ரமாணங்களை இங்கு நினைப்பது. (39)

इच्छाविहारविधये विहितान्यमूनि स्यात्त्वद्विभूतिलवलेशकलायुतांशः ।
या वै न जातु परिणामपदास्पदं सा कालातिगा तव परा महती विभूतिः ॥४०॥

இச்சாவிஹாரவிதயே விஹிதாந்யமூநி
ஸ்யாத் த்வத்விபூதிலவலேசகலாயுதாம்ச:,
யா வை ந ஜாது பரிணாமபதாஸ்பதம் ஸா
காலாதிகா தவ பரா மஹதீ விபூதி:. (40)

இச்சாவிஹாரவிதயே விஹிதானி அமூநி **த்வத்விபூதி லவ லேச கலா அயுதாம்சः** ஸ்யாத்; யா வை ஜாது ந பரிணாம **பதாஸ்பதம் காலாதிகா** ஸா தவ விபூதிः மஹதீ.

(எம்பெருமானே!) யதேஷ்டமான லீலைக்காகப் படைக்கப்பட்ட இவ்வண்டங்களானவை தேவரீருடைய ஐச்வரியப் பரப்பிலே மிகச்சிறுபகுதி யான ஏகதேசமாயிருக்கும்; யாதொரு விபூதியானது ஒருகாலும் பரிணமிக்க மாட்டாததும் காலம் நடையாடப்பெறுததுமா யிருக்கின்றதோ, அந்த நித்ய விபூதியானது தேவரீருக்கு மிகப் பெரிதாயுள்ளது.

* * * —கீழ்ச்லோகத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட லீலா விபூதியிற் காட்டிலும் ஸர்வப்ரகாரங்களாலும் பெருமை பெற்ற நித்யவிபூதியின் ப்ரசம்ஸைக்கு அடியிடுகிறதாயிற்று இந்தச்லோகம். ஸ்தோத்ரரத்நத்தில் * **கஸ்யாயுதாயுத சதைக கலாம்சகாம்சே விச்வம் விசித்ரசிதசித்ப்ரவிபாக வ்ருத்தம்** * என்றருளிச்செய்ததை யடியொற்றி "**த்வத் விபூதிலவலேச கலாயுதாம்ச: ஸ்யாத்** * என்றருளிச் செய்கிறார், லீலோபகரணமாகப் படைக்கப்பட்ட இவ்வண்டங்களெல்லாம் தேவரீருடைய மஹிமையில் மிகச்சிறுபங்காயிருக்கும். இவை கிடக்க; **[யா வை ந ஜாது இத்யாதி.]** ஒருகாலும் பரிணமபதாஸ்பதமல்லாதது நித்யவிபூதி, தத்வத்ரயத்தில் அசித்ப்ரகரணத்தில் (79) "இதில் சுத்த ஸத்வமாவது.........விமாந கேகபுர மண்டப ப்ராஸாதாதிரூபேண பரிணமிக்கக்கடவதாய்" என்றருளிச் செய்திருக்கையாலே பரிணமபதாஸ்மதமென்று தெரிகிறதே;

Released by Maran's Dog Toronto , Canada
"யாவை ந ஜாது பரிணாமபதாஸ்பதம்" என்னலாமோவென்று சிலர் சங்கிக்கக் கூடும்; கேண்மின்; மேலெடுத்த தத்வத்ரய ஸ்ரீஸூக்தியில் "கர்மத்தாலன்றிக்கே கேவலபகவதிச்சையாலே விமாந கோபுர மண்டப ப்ராஸாதாதிரூபேண பரிணமிக்கக்கடவதாய்" என்றருளிச் செய்திருக்கையாலே கர்மக்ருத பரிணாமமில்லையென்கிறதித்தனை. சேதநன் தான்பண்ணின கருமங்களுக்குத் தகுதியாக இச்சிக்க, அந்த இச்சைக்கு அநுகுணமாக பகவத்ஸங்கல்பத்தாலே இருபத்திநான்கு தத்வமாய்க் கொண்டு பரிணமித்து சேதநர்க்கு போக்யபோகோபகரண போகஸ்தானங்களாக ஆகின்றது ப்ரக்ருதிதத்வம்; அதுபோலல்லாமல் தன்னுடைய போகார்த்தமாகவுண்டான பகவதிச்சையாலே விமாந கோபுராதிரூபேண பரிணமியா நிற்கும் இது. ஆகவே கர்மக்ருத பரிணாமமில்லாமையைப்பற்ற "ந ஜாது பரிணாமபதாஸ்பதம்" என்றருளிச் செய்தது.

[காலாதிகா] * காலம் ஸ பசதே யத்ர ந காலஸ் தத்ர வை ப்ரபு: * என்றும் * கலாமுஹூர்த்தாதிமயச் ச காலோ ந யத்விபூதே: பரிணாமஹேது; * என்றும், * யத் காலாதபசேவிமம் * என்றும் சொல்லுகிறபடியே காலக்ருத பரிணாமமில்லாத தேசமென்றபடி. தத்வத்ரயத்தில் ஈச்வரப்ரகரணத்தில் (183) "அதில் பரத்வமாவது அகாலகால்யமான நலமந்தமில்லதோர் நாட்டிலே" என்ற விடத்துக்கு வியாக்கியான மருளிச் செய்யா நின்ற மணவாள மாமுனிகள் காலக்ருத பரிணாமமில்லாமைக்குக் காட்டியருளும் ப்ரமாணங்களிடையே "யா வை ந ஜாது பரிணாமபதாஸ்பதம் ஸா காலாதிகா தவ பரா மஹதீ விபூதி:" என்று இந்த ச்லோகப்பகுதியையும் எடுத்துக்காட்டி யருளியிருக்கையாலே. 'ந ஜாது பரிணாம பதாஸ்பதம்' என்றதும் காலக்ருத பரிணாமமில்லாமையைச் சொன்னபடியே யாமென்று கொள்ளத்தகும். அப்போது 'காலாதிகா' என்ற விசேஷணம் தத்விவரணமாமத்தனை. ஆக இப்படிப்பட்ட விபூதியானது [மஹதீ] நித்ய முக்தராலும் ஈச்வரனாலும் அளவிடவொண்ணாத மஹிமையுடையது. ஸ்ரீ வைகுண்டகத்யத்தில் * தேஷாமபி இயத்பரிமாணம் இயதைச்வர்யம் ஈத்ருசஸ்வபாவமிதி பரிச்சேத்துமயோக்யே* என்றருளிச் செய்ததுங் காண்க.

ஆக இந்த ச்லோகம் நித்யவிபூதிஸத்தையைச்சொன்னவளவேயாம். இதின் ஒப்புயர்வற்ற பெருமைகளை மேல் ஐந்து ச்லோகங்களினால் விரிவாக அருளிச்செய்வர். (40)

यद्वैष्णवं हि परमं पदमामनन्ति खं वा यदेव परमं तमसः परस्तात् ।
तेजोमयं परमसत्वमयं ध्रुवं यदानन्दकन्दमतिसुन्दरमद्भुतं यत् ॥४१॥

யத் வைஷ்ணவம் ஹி பரமம் பதமாமநந்தி
கம் வா யதேவ பரமம் தமஸ: பரஸ்தாத்,
தேஜோமயம் பரமஸத்வமயம் த்ருவம் யத்
ஆநந்தகந்தம் அதிஸுந்தரம் அத்புதம் யத். 41

யத் ஹி வைஷ்ணவம் பரமம் பதம் ஆமநந்தி, யதேவ வா தமஸ: பரஸ்தாத் பரமம் கம், யத் தேஜோமயம் பரம ஸத்வமயம் த்ருவம், யத் ஆநந்த கந்தம் அதிஸுந்தரம் அத்புதம்.

யாதொரு ஸ்தானத்தை விஷ்ணு ஸம்பந்தியான பரமபத மென்கிறார்களோ, எந்த ஸ்தானமானது தமஸ்ஸுக்கு அப்பால் பரமாகாசமெனப்படுகிறதோ, எந்த ஸ்தானமானது தேஜோமயமாயும் நிஷ்க்ருஷ்ட ஸத்வமாயும் சாச்வதமாயுமுள்ளதோ, எந்த ஸ்தானமானது ஆனந்தகந்தமாயும் மிகவழகியதாயும் ஆச்சரியமாயு முள்ளதோ.

* * * ஸ்ரீவைகுண்ட மஹிமவர்ண்ந பரமாக ப்ரவ்ருத்தமான இது முதலான ஐந்து ச்லோகங்கள் குளகமாகும். அதாவது, நான்கு ச்லோகங்களில் க்ரியாபதம்

Shrimal Pillai Loka chariar Sishyan ,Toronto , Canada

கிடையாது; ஐந்தாவது ச்லோகத்தில் * வைகுண்ட நாம தவ தாம **ததாமநந்தி*** என்று க்ரியையுள்ளவிடத்திலே இவையெல்லாம் அங்வயிக்கக் கடவன. இந்த ச்லோகத்தில் **ஆமநந்தி** என்று க்ரியையிருந்தாலும் அது அவாந்தரக்ரியையேயல்லது பரமமான க்ரியையன்றே. யாதொரு விபூதியை வைஷ்ணவபதமென்றும் பரமபதமென்றும் சொல்லுகிறார்களோ; * க்ஷயந்தமஸ்ய ரஜஸஃ பராகே * என்றும் * தமஸஸ் து பாரே * என்றும் * தமஸஃ பரஸ்தாத் * என்றும் சொல்லுகிறபடியே ரஜஸ்தமஸ்ஸுக்களுக்கு அப்பால் அவை கலசாதே பரமாகாச மென்னப்படுகிறது யாதோ;

[தேஜோமயம்] * ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்நி: * என்றும் * அத்யர்க்காநல தீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மநஃ, ஸ்வயைவ ப்ரபயா ராஜந்! துஷ்ப்ரேக்ஷம் தேவதாநவை; *என்றும் சொல்லுகிறபடியே அக்நி ஆதித்யன் முதலான தேஜஃபதார்த்தங்களையும் மின்மினியாக்கும்படி அளவிறந்த தேஜஸ்ஸே வடிவாயிருக்குமது, * சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதி * என்ற ஆழ்வாரருளிச் செயலுங்காண்க. [பரமஸத்வமயம்] ரஜோகுண தமோகுணங்கள் கலசாத சுத்தஸத்வமே வடிவெடுத்ததாயிருக்கும். [**த்ருவம்**] * யத் தத் புராணமாகாசம் ஸர்வஸ்மாத் பரமம் **த்ருவம்**, யத் பதம் ப்ராப்ய தத்வஜ்ஞா முச்யந்தே ஸர்வகில்பிஷை: * என்ற ப்ரமாணவசனத்தில் **த்ருவம்** என்றதை அநுவதித்தபடி. அநாதிநிதநமாயிருக்குமதென்றபடி. [**ஆநந்தகந்தம்**]* நலமந்தமில்லதோர் நாடிறே. [**அதிஸுந்தரம்**] ஸ்ரீ வைகுண்டகத்யத்தில் காணும் வர்ணனையின்படியே ஸௌந்தர்யம் எல்லைகாணவொண்ணுதபடியிருக்குமது. [**அத்புதம்**] அநுக்ஷணம் அபூர்வமாய் ஆச்சர்யாவஹமாயிருக்குமது. ஆக இப்படிப்பட்ட யாதொரு ஸ்தானமுளதோ, (தத் தவ தாம ஆமநந்தி) என்று மேலோடே அங்வயம். *(41)*

यद्ब्रह्मरुद्रपुरुहूतमुखैर्दुरापं नित्यं निवृत्तिनिरतैस्सनकादिभिर्वा ।
सायुज्यमुज्ज्वलमुशन्ति यदापरोक्ष्यं यस्मात्परं न पदमञ्चितमस्ति किञ्चित् ॥४२॥

யத் ப்ரஹ்மருத்ரபுருஹூதமுகைர் துராபம்
நித்யம் நிவ்ருத்திநிரதைஸ் ஸநகாதிபிர் வா,
ஸாயுஜ்யமுஜ்ஜ்வலமுசந்தி யதாபரோக்ஷ்யம்
யஸ்மாத் பரம் ந பதமஞ்சிதமஸ்தி கிஞ்சித். **42**

யத் ப்ரஹ்மருத்ரபுருஹூதமுகைஃ நித்யம் நிவ்ருத்திநிரதைஃ ஸநகாதிபிர் வா **துராபம்**, யதாபரோக்ஷ்யம் **உஜ்ஜ்வலம் ஸாயுஜ்யம் உசந்தி**, யஸ்மாத் **அஞ்சிதம் பதம்** பரம் **கிஞ்சித்** நாஸ்தி;

எந்த ஸ்தானமானது அயன் அரன் இந்திரன் முதலானாலும், நிவ்ருத்திதர்மநிஷ்டர்களான ஸநகாதிகளாலு மடையமுடியாததோ, எந்த ஸ்தானத்தை ஸாக்ஷாத்கரிப்பதை முக்க்ய ஸாயுஜ்யமாகச் சொல்லுகிறார்களோ, எந்த **ஸ்தானத்திற்** காட்டிலும் சிறந்தஸ்தானம் வேறொன்**றில்லையோ;**

*** [ப்ரஹ்ம **ருத்**ரபுருஹூத முகை: யத் **துராபம்**] ஸ்ருஷ்டிக்குக் கடவ**னை பிரம**னுக்கும் ஸம்ஹாரத்துக்குக் கடவனை ருத்ரனுக்கும் த்ரைலோக்யாதிபதியான **இந்திர**னுக்கும் மற்றுமுள்ள தேவர்களுக்கும் புகவரிதானது பரமபதம். * நேரே **கடிக்கமலத்**துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணனடிக் கமலந்தன்னை அயன் * என்**று பொய்கை**யாழ்வார் அயனொருத்தனுக்குச் சொன்னது அவனோடு துவக்குண்டார்க்கு **மொக்கு**மே. * பின்னிட்ட சடையானும் பிரமனுமிந்திரனும் துன்னிட்டுப் புகலரிய **ஸ்தானமி**றே ஸ்ரீவைகுண்டம். [நித்யம் நிவ்ருத்திநிரதைஸ் **ஸநகாதிபிர் வா**] முன்பாதத்தி**லுள்ள 'துராபம்'** என்பது இங்கும் அங்வயிக்கும். நிவ்ருத்தி தர்மநிஷ்டர்களான ஸநக ஸநந்தநாதிகளுக்கும் புகவரிதானதென்கை. *ஸமூஹிதைஸ் ஸாது ஸநந்தநாதிபிஸ் ஸுதுர்லபம்* என்று வரதராஜஸ்வத்திலுமருளிச்செய்வது காண்க. [யதாபரோக்ஷ்யம் **உஜ்ஜ்வலம் ஸாயுஜ்ய**

முசந்தி] * ब्रह्मणस्सायुज्यं....यन्ति-ப்ரஹ்மணஸ்ஸாயுஜ்யம்....யந்தி* என்று ச்ருதிகளில் ஸாயுஜ்ய ப்ராப்தியாகச் சொல்லப்படுகிறது பரமபதஸாக்ஷாத்காரத்தையேயிறே .["समानगुण भागित्वं सायुज्यमिति कथ्यते— ஸமாநகுணபாகித்வம் ஸாயுஜ்யமிதி கத்த்யதே"] ஆத்மாவுக்கு இயற்கையாயிருந்து * மாய வன் சேற்றள்ளல் பொய்ந்நிலத்தில் வீழ்ச்சியினாலே திரோஹிதமாய்க் கிடந்த ஜ்ஞாநாநந்தாதிகளுக்கு ப்ராதுர்ப்பாவம் பரமபதப் ராப்திஸமகாலீகம் என்பது கருத்து. உஜ்ஜ்வலம் ஸாயுஜ்யம் என்றது முக்கியமான ஸாயுஜ்யமென்றபடி.

[யஸ்மாத் பரம் ந பதமஞ்சிதமஸ்தி கிஞ்சித்] 'இந்த லோகத்திற் காட்டிலும் அந்த லோகம் மேற்பட்டது, அதிற்காட்டிலும் அது மேற்பட்டது, என்று சொல்லிக்கொண்டு போகலாம்; அப்படிப்பட்ட வாக்விந்யாஸங்கள் பரமபதத்தளவிலே வந்தவாறே முற்றுப் புள்ளியிட்டு நிற்கவேண்டுமத்தனை. இதற்குமேலும் சொல்லலாவதொரு ஸ்தானமில்லையே. (42)

रूपेण सद्गुणगणैः परया समृद्धया भावैरुदारमधुरैरपि वा महिम्ना ।
तादृक्तदीदृगिदमित्युपवर्णयन्त्यो वाचो यदीयविभवस्य तिरस्क्रियायै ॥४३॥

ரூபேண ஸத்குணகணை: பரயா ஸம்ருத்த்யா
பாவைருதாரமதுரைரபி வா மஹிம்நா,
தாத்ருக் ததீத்ருகிதமித்யுபவர்ணயந்த்யோ
வாசோ யதீயவிபவஸ்ய திரஸ்க்ரியாயை. 43

ரூபேண ஸத்குணகணை: பரயா ஸம்ருத்த்யா உதாரமதுரை: பாவைர்வா மஹிம்நா அபிவா 'தத் தாத்ருக் இதம் ஈத்ருக்' இதி உபவர்ணயந்த்ய: வாச: யதீய விபவஸ்ய திரஸ்க்ரியாயை;

தேஜஸ்ஸினாலும் ஸத்குண ஸமூஹங்களினாலும் சிறந்த ஸம்ருத்தியினாலும், மற்றுமுள்ள அதிசயத்தினாலும், 'அது அப்படிப்பட்டது, இது இப்படிப்பட்டது' என்று வருணிக்கின்ற வாக்குக்களானவை எந்தஸ்தானத்தின் பெருமைக்குத் திரஸ்கார காரணமாகின்றனவோ;

* * * வாய்கொண்டு வருணிக்கவே முடியாத அதிசய முடைய ஸ்தான விசேஷம் பரமபதம்—என்கிறது இதில். உலகில் கவிகள் எந்த ஸ்தானத்தையும் போரப் பொலிய வருணிப்பதுண்டு; ரூபத்தையிட்டும் சிறந்த நற்குணங்களை யிட்டும் ஸம்ருத்தியையிட்டும் ஆங்காங்குள்ள சீரிய பொருள்களையிட்டும் 'அது அப்படிப்பட்டது, இது இப்படிப்பட்டது' என்று வருணிக்கக் காணாநின்றோமிறே: அப்படி பரமபதத்தையும் வருணிக்கப்புகுந்தால் அது இதனைத் திரஸ்காரம் செய்ததாகுமத்தனை போக்கிப் புகழ்ந்ததாக ஆகமாட்டாது என்கிறார். இதுதன்னைச் சுருக்கியே பட்டர் ஸ்ரீகுணரத்ந கோசத்திலே "யத் துர்க்ரஹம் மதிராம் தத் விஷ்ணோ: பரமம் பதம்" என்றருளிச் செய்தது.

பரமபதத்தை அப்படியிப்படியென்று வருணிப்பது அதன் திரஸ்காரத்திற்கேயாகுமென்று சொல்லலாமோ? எம்பெருமானார் ஸ்ரீவைகுண்ட கத்யத்திலே பரக்க வருணித்திருக்கவில்லையோ? இவர் தாமும் இங்கே சில ச்லோகங்களினால் வருணிக்கவில்லையோ? இப்படிப்பட்ட வசநவ்யக்திகளெல்லாம் திரஸ்காரமேயாகுமென்னலாமோ? என்று சங்கை பிறக்கும்; கேண்மின்; *ஒட்டுரைத் திவ்வுல குன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும் பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ * (திருவாய்மொழி 3—1—2.) என்று ஆழ்வார் அருளிச்செய்கிறார்; எம்பெருமானுக்குச் சில பொருள்களை உவமைகூறிப் புகழ்வதானது அவனுக்கு நிறக்கேடே யாகுமென்று இதனால் அருளிச் செய்யப்பட்டது; இப்படி யருளிச்செய்தவரே உவமைகூறிப் புகழா

மலில்லை. அது எம்பெருமானுக்கு நிறக்கேடுதானேயென்று எண்ணலாகுமோ? 'ஒப்புயர்வற்ற பெருமையுள்ளது' என்பதைத் தெரிவிக்கிற வசநவ்யக்திகள் பலவகைப் பட்டிருக்குமே; அவ்வகைகளில் இதுவுமொருவகை என்று கொள்ளக்கடவது. ஆழ்வார் பெரிய திருவந்தாதி தொடங்கும் போதே "புகழ்வோம் பழிப்போம் புகழோம் பழி யோம்" என்கிறார், எம்பெருமானே! உன்னைப் புகழ்ந்தோமாகில் பழித்தோமாவோம்; புகழாதிருந்தோமாகில் பழியாதிருந்தோமாவோம் என்பது இதன் பொருள். இதற் காக எம்பெருமானைப் புகழாதிருப்பாருண்டோ? இப்படியருளிச் செய்தவர் தாமே "நற்பூவைப் பூவீன்ற வண்ணன்புகழ்—நயப்புடைய நாவீன் தொடைகிளவியுட் பொதி வோம்" என்றன்றோ திவ்வியப் பிரபந்தம் தொடங்கி யருளினர். ஆகவே மஹிமையின் அப்ரமேயத்வம் சொன்னபடியாமத்தனை. (43)

यद्वृद्ध्यपक्षयविनाशमुखैर्विकारैरेतैरसंस्तुतमनस्तमितास्तिशब्दम् ।
यद्गौरवाच्छ्रुतिषु फल्गु फलं क्रियाणाम् आदिष्टमन्यदसुखोत्तरमध्रुवं च ॥४४॥

யத் வ்ருத்த்யபக்ஷயவிநாசமுகைர் விகாரை:
ஏதைரஸம்ஸ்துத மநஸ்தமிதாஸ்திசப்தம்,
யத்கௌரவாத் ச்ருதிஷு பல்கு பலம் க்ரியாணாம்
ஆதிஷ்டமந்யத் அஸுகோத்தர மத்ருவஞ் ச. 44

யத் வ்ருத்திஅபக்ஷய விநாச முகைஃ ஏதைஃ விகாரைஃ அஸம்ஸ்துதம் அநஸ்**தமிதாஸ்தி சப்தம்,** ச்ருதிஷு க்ரியா**ணாம் ஆதிஷ்டம் அந்யத் பலம் யத் கௌரவாத் பல்கு அஸுகோத்தரம்** அத்ருவம் **ச.**

யாதொரு ஸ்தானமானது வளருதல் குறைதல் அழிதல் முதலான இத்தகைய விகாரங்களினால் தொடப்படாததும் அஸ்திசப்தம் ஒருநாளும் அஸ்தமிக்கப் பெறாததுமாயுள்ளதோ, வேதங்க களில் ஜ்யோதிஷ்டோமாதி கருமங்களுக்கு ஓதப் பட்ட இதர பலனானது யாதொரு ஸ்தானத்தின் பெருமையைப் பற்ற அஸாரமாயும் துக்கோத்தர மாயும் அநித்யமாயு முள்ளதோ;

* * * இதுவும் ஸ்ரீவைகுண்டத்தின் பெருமை சொல்லுகிறது. [வ்ருத்த்யபக்ஷய **விநாச முகைர் விகாரை: அஸம்ஸ்துதம்]** நாம் கண்ணுற்காணும் பொருள்களில் பலவகைப் பட்ட விகாரங்களைக் காணுகின்றோம்; செடி கொடி மரம் முதலிய பொருள்களைக் கொள்வோம். இவை ஒரு கால் வளர்ந்து செல்லவும் மற்றொருகால் குறைந்து செல்ல வும் இன்னுமொருகால் அறவே அழிந்து நிற்கவும் காணுகின்றோம். இப்படிப்பட்ட விகாரங்களில் ஒன்றும் ஸ்ரீவைகுண்டத்தைத் தொடாது. வளர்ச்சி, தேய்வு, அழிவு என்னுமிவை ஸ்ரீவைகுண்டத்திற்கு அப்ரஸக்தமென்றபடி. **[அநஸ்தமித அஸ்திசப்தம்]** அஸ்தியென்கிற வ்யபதேசம் ஒரு நாளும் அஸ்தமிக்கப் பெறாதது. விநாசமில்லையென்று முதற்பாதத்தில் சொன்னதுவே முகபேதேந சொல்லப்பட்டதாயிற்று. **அஸ்தி, ஜாயதே பரிணமதே, வ்ர்தகே** (एधते), **அபக்ஷீயதே, ப்ரணச்யதி,** என்கிற ஷட்பாவ விகாரங்களுண்டே; **அஸ்தி** என்பதற்கு மேற்பட்ட ஜநநாதிகளுக்கு ப்ரஸக்திலேசமு மில்லையென்றபடி.

(யத்கௌரவாத் இத்யாதி,) வேதங்களில் பலவகைப்பட்ட க்ரியைகள்—ஜ்யோ திஷ்டோமாதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன, அவற்றுக்குச் சொல்லப்பட்டுள்ள பலன் களெல்லாம் அற்பமாயும் அஸாரமாயும் அநித்யமாயும் துக்கமிச்ரமாயுமே காணப்படு கின்றன, * **கதாகதம் காமகாமா லபந்தே** * என்றும் * **க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி** * என்றும், **தத் யதேஹ கர்மசிதோ லோக: க்ஷீயதே ஏவமேவ அமுத்ர புண்யசிதோ லோக: க்ஷீயதே** * என்றுமுள்ள ப்ரமாணங்கள் காண்க. இந்த ஸ்தானத்தின் பெருமை யோ வென்னில்; * **ததக்ஷரே பரமே வ்யோமந்** * என்றும், * **தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா**

பச்யந்தி ஸூரய: * என்றும் * நச புநராவர்த்ததே நச புந ராவர்த்ததே * என்றும் பொலிந்து நின்றது. ஆகவிப்படி சாச்வத பரம பலமாயிருக்கையும் இதன் பெருமை யென்று சொல்லிற்றாயிற்று. (44)

निष्कल्मषैर्निहतजन्मजराविकारैर्भूयिष्ठभक्तिविभवैरभवैरवाप्यम् ।

अन्यैरधन्यपुरुषैर्मनसाऽप्यनाप्यं वैकुण्ठनाम तव धाम तदामनन्ति ॥४५॥

நிஷ்கல்மஷைர் நிஹதஜந்மஜராவிகாரை:
பூயிஷ்டபக்திவிபவை ரபவைரவாப்யம்,
அந்யை ரதந்யபுருஷைர் மநஸாப்யநாப்யம்
வைகுண்டநாம தவ தாம ததாமநந்தி. 45

நிஷ்கல்மஷை: நிஹதஜந்மஜராவிகாரை: பூயிஷ்டபக்திவிபவை: அபவை: அவாப்யம், அந்யை: அதந்ய புருஷை: மநஸாபி அநாப்யம் தத் வைகுண்டநாம தாம தவ ஆமநந்தி.

கல்மஷ மற்றவர்களாயும் பிறப்பு மூப்பு முதலிய விகாரங்களைத் தொலைத்தவர்களாயும் பக்திச் செல்வம் மிகுந்தவர்களாயுமுள்ள முமுக்ஷுக்களாலே அடையத் தகுந்ததாய், மற்றையோர்களான தரித்திரர்களாலே நெஞ்சினாலும் அணுகத்தகாததாயுள்ள அப்படிப்பட்ட வைகுண்டமென்னும் ஸ்தானத்தை (எம்பெருமானே!) தேவரீருடைய இருப்பிடமாகச் சொல்லுகின்றார்கள்.

* * * இந்த ச்லோகத்தோடே ஸ்ரீவைகுண்ட வர்ணனத்தைத் தலைக்கட்டியருளுகிறார். அந்த திவ்யஸ்தான விசேஷத்தில் புகுவதற்கு அதிகாரிகளையும் அநதிகாரிகளையும் குறித்தருளுகிறார். முன்னிரண்டு பாதங்களில் அதிகாரி நிர்த்தேசம், மூன்றாவது பாதத்தில் அநதிகாரி நிர்த்தேசம். அதிகார ஸம்பத்தியுடையாரார் என்னில் [நிஷ்கல்மஷை:] * ததா வித்வாந் புண்யபாபே விதூய * என்றும் * போய பிழையும் புகுதருவானின்றனவும் தீயினில் தூசாகும் * என்றும் சொல்லுகிறபடியே ஸகல பாபங்களையும் உதறித் தள்ளப் பெற்றவர்கள். [நிஹத ஜந்ம ஜராவிகாரை:] * புநரபி ஜநநம் புநரபி மரணம் புநரபி ஜநநீஜடரே சயநம் * என்னும்படியான ஜநநமரணங்களும் தததநுபந்தியான ஜரைமுதலான விகாரங்களு மற்று * போர்த்த பிறப்பொடு நோயொடு மூப்பொடு இறப்பிவை பேர்த்துப் பெருந்துன்பம் வேரறநீக்கி விளங்குமவர்கள். [பூயிஷ்டபக்தி விபவை:] பரபக்தி பரஜ்ஞாந பரம பக்திகள் பரிபக்வமாகப் பெற்றவர்கள். அன்றிக்கே பூயிஷ்டபக்தியென்று ப்ரபத்தியைச் சொல்லிற்றாகவுமாம். * ப்ரபந்நாதந்யேஷாம் ந திசதி முகுந்தோ நிஜபதம்* என்கிறபடியே ப்ரபந்நர்களுக் கொழிய மற்றையோர்க்கு தந்தருளாமையாலே இவ்வர்த்தம் மிகப் பொருந்துமாயிற்று.

[அபவை:] ஸம்ஸாரத்தில் ருசியற்றவர்களென்று முமுக்ஷுக்களை விவக்ஷிக்கிறது. வேறுவகையாகப் பொருள் கொள்ளில் முதற்பாதத்தோடு புநருக்தமாகுமே. ஆக இப்படிப்பட்டவர்களாலே அடையக் கூடியது.

[அந்யைரித்யாதி.] இப்படிப்பட்டவர்களல்லாத * கருவிலே திருவிலாதார்க்கு நெஞ்சினாலும் அணுகத்தகாதது. இப்படிப்பட்ட ஸ்ரீவைகுண்ட மென்னும் ஸ்தான விசேஷத்தை தேவரீருடைய திருநாடாகக் கூறுகின்றார்கள்.

நான்காவது பாதத்தில் " வைகுண்டநாத!" என்று சிலருடைய பாடம்; " வைகுண்ட நாம " என்பதே பொருத்தமான பாடம்.

கீழ் நான்கு ச்லோகங்களுக்கும் காங்க்ஷிதமான க்ரியாபதம் இந்த ச்லோகத்திலுள்ளதாகையாலே இத்தோடு குளகம் ஸமாப்த மாயிற்றென்றுணர்க. ... (45)

नित्या तवान्यनिरपेक्षमहामहिम्नोऽप्येतादृशी निरवधिर्नियता विभूतिः ।
ज्ञानादयो गुणगणास्समतीतसीमाः लक्ष्मीः प्रिया परिजनाः पतगेन्द्रमुख्याः ॥४६॥

நித்யா தவாந்ய நிரபேக்ஷமஹாமஹிம்நோபி
ஏதாத்ருசீ நிரவதிர் நியதா விபூதி:,
ஜ்ஞாநாதயோ குணகணாஸ் ஸமதீதஸீமா:
லக்ஷ்மீ: ப்ரியா பரிஜநா: பதகேந்த்ரமுக்க்யா:. 46

அந்யநிரபேக்ஷ மஹாமஹிம்நோபி தவ ஏதாத்ருசீ நிரவதி: நித்யா விபூதி: நியதா; ஜ்ஞாநாதய: குணகணா: ஸமதீதஸீமா:, லக்ஷ்மீ: ப்ரியா, பதகேந்த்ர முக்க்யா: பரிஜநா:.

வேறொன்றை யெதிர்பாராமல் இயல்பாகவே அமைந்த மஹாவைபவத்தையுடையீரான தேவரீருக்கும் இப்படிப்பட்ட நிரவதிகமான நித்யவிபூதியானது நியதபோகோபகரணமாயிராநின்றது; ஜ்ஞாநாதி குணங்களோ எல்லை கடந்திருக்கின்றன; ஸ்ரீமஹாலக்ஷ்மியோ வல்லபையாயிராநின்றாள்; பெரிய திருவடிமுதலான நித்யஸூரிகளோ பரிஜனங்களாயிராநின்றார்கள்.

* * * கீழ்ச் சொன்ன பெருமையை அநுவதித்து உபஸம்ஹரித்து, மற்றுமுள்ள சில அதிசயங்களையும் அருளிச் செய்கிறாரிதில். [அந்யநிரபேக்ஷ மஹாமஹிம்நோபி தவ] எம்பெருமானுடைய பெருமை ஒன்றையிட்டு நிரூபிக்க வேண்டியதன்றே; ப்ராக்ருதர்களான நம் போலியர்க்கு ஒரு பெருமை சொல்ல வேண்டுமானால், இயற்கையான பெருமை ஒருவர்க்கும் சிறிதுமில்லாமையாலே ஏதேனுமொன்றையிட்டே பெருமை சொல்ல வேண்டியிருக்கும். குலத்தையிட்டோ ரூபத்தையிட்டோ ஐச்வரியத்தையிட்டோ வித்யையையிட்டோ நமக்குப் பெருமை பேச வேண்டும். எம்பெருமான் படி இங்ஙனேயன்று. பெருமைக்கு நிரூபகங்களானவை பலவும் எம்பெருமான் பக்கலிலே யிருந்தாலும் அவை தாம் நிறம் பெறுவதற்காக எம்பெருமானை ஆச்ரயித் திருக்கின்றனவேயன்றி அவற்றால் எம்பெருமான் அதிசயம் பெறுகிறானென்றில்லையே; "ச்ரிய: பதியாய், ஸ்ரீவைகுண்ட நிகேதநனாய் நித்யமுக்தாநுபாவ்யனாய்" என்று ச்ரிய:பதித்வாதிகளையிட்டு எம்பெருமானைப்பேசினாலும் இவற்றால் அவனுக்கொரு பெருமையுண்டாகிறதென்று கருதியன்றே; உள்ளதை உள்ளபடியுரைக்கவேணு மென்கைக்காகவன்றோ அவை சொல்லுகிறது. இவ்விஷயம் அடுத்த ச்லோகத்தில் இதம்பரமாக விரித்துரைக்கப்படும். அது இங்கு "அந்யநிரபேக்ஷமஹாமஹிம்ந:" என்று சுருங்க வநுஸந்திக்கப் படுகிறது. [**ஏதாத்ருசீ நிரவதி: நித்யா விபூதி: நியதா**] கீழே ஐந்து ச்லோகங்களினாற்சொல்லப்பட்ட பெருமையையுடைய நித்யவிபூதியானது ஒருகாலும் விட்டு நீங்காத பெருமையாயிரா நின்றதென்கை. எம்பெருமானுடைய பெருமை இதர நிரபேக்ஷமாயிருக்கச் செய்தேயும் நித்ய விபூத்யைச் வர்யமானது பெருமைக்குத் தலைமை பெற்றிருக்கின்றதென்றபடி.

இவ்வளவேயன்றிக்கே மற்றும் பல பெருமைகளுமுண்டென்கிறது உத்தரார்த்தத்தில் [**ஜ்ஞாநாதயோ குணகணாஸ் ஸமதீதஸீமா:**] ஞானம் முதலான திருக்கல்யாண குணங்களோ எல்லை கடந்திருக்கின்றன. ஜ்ஞானம் சக்தி பலம் ஐச்வர்யம் வீர்யம் தேஜஸ்ஸு என்கிற ஆறு திருக்குணங்களும் * குணாநாம் நிஸ்ஸீம்நாம் கணநவிகுணாநாம் ப்ரஸவபூ: * என்று இவர் தாமருளிச் செய்தபடியே இவையடியாகத் தோன்றியுள்ள மற்றைத் திருக்குணங்களும் எண்ணிறந்தவையாயுள்ளன. [லக்ஷ்மீ: ப்ரியா] பிராட்டிதானே வல்லபையாக வாய்த்திருக்கின்றாள். [பதகேந்த்ர முக்க்யா: பரிஜநா:] பெரிய திருவடி முதலான நித்யஸூரிகளும் முக்தர்களும் நித்யகிங்கரர்களாயுள்ளார்கள். ஆக இப்படிப்பட்ட பெருமை அப்ரமேயமென்றதாயிற்று. (46)

एकस्य येषु हि गुणस्य लवायुतांशः स्यात्कस्यचित्स खलु वाङ्मनसातिगश्रीः ।
ते तादृशोऽत्यवधयस्समतीतसंख्याः त्वत्सद्गुणास्त्वमसि तन्निरपेक्षलक्ष्मीः ॥४७॥

ஏகஸ்ய யேஷு ஹி குணஸ்ய லவாயுதாம்ச:
ஸ்யாத் கஸ்யசித் ஸ கலு வாங்மநஸாதிக ஸ்ரீ:,
தே தாத்ருசோத்யவதயஸ் ஸமதீதஸங்க்யா:
த்வத்ஸத்குணாஸ் த்வமஸி தந் நிரபேக்ஷலக்ஷ்மீ:. 47

யேஷு (குணேஷு) ஏகஸ்ய குணஸ்ய லவாயுதாம்ச: கஸ்யசித் ஸ்யாத் ஸ கலு வாங்மநஸாதிகஸ்ரீ:, தாத்ருச: அத்யவதய: ஸமதீதஸங்க்யா: தே த்வத்ஸத்குணா:, தத் த்வம் நிரபேக்ஷலக்ஷ்மீ: அஸி.

(எம்பெருமானே!) எந்த குணங்களுள் ஒருகுணத்தின் ஏகதேசமானது எவனேனுமொருவனுக்குண்டாகி அதனால் அவன் வாக்குக்கும் மனஸ்ஸுக்கு மெட்டாத ஸ்ரீயை யுடையவனாகின்றானோ, நிரவதிகங்களாய் எண்ணிறந்தவைகளான அப்படிப்பட்ட திருக்குணங்கள் தேவரீருக்கு அமைந்துள்ளன; ஆதலால் தேவரீர் குணாதீனமல்லாமல் ஸ்வாதீனமேயான பெருமையையுடையீர்.

* * * கீழ் ச்லோகத்தில் * அங்கநிரபேக்ஷமஹா மஹிம்ந:* என்றதற்கு வியாக்கியானமாக அவதரிக்கின்றது இந்த ச்லோகம். [ஏகஸ்ய யேஷு ஹி இத்யாதி.] உலகில் நாம் சிலரை வாசாமகோசரமான ஐச்வரியமுடையராகச் சொல்லுவதுண்டு; எது கொண்டு சொல்லுகிறோமென்னில்; *பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே * என்றும், *தாதூநாமிவ சைலேந்த்ரோ குணாநாம் ஆகரோ மஹாந் * என்றும் *ஸங்க்யாதும் நைவ சக்யந்தே குணா தோஷாச் ச சார்ங்கிண:, ஆநந்த்யாத் ப்ரதமோ ராசி: அபாவாதேவ பச்சிம: * என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமான் பக்கலிலுள்ள எல்லைகடந்த திருக்குணங்களுள் ஏகதேசம் ஒரு வ்யக்தியினிடத்தில் இருந்துவிட்டால் அது கொண்டு அவனை வாசாமகோசரைச்வர்யவானாகச் சொல்லிப் புகழாநின்றோம். அது பலகோடி நூறாயிரம் மடங்கு விஞ்சியன்றோ எம்பெருமான் பக்கலுள்ளது. அப்படிப்பட்ட பெருமானுடைய பெருமைக்கு வாசகமான சொல் ஒன்றில்லையே.

இந்த ச்லோகத்தின் கருத்தையே புஷ்கலமாகக் கொண்ட ச்லோகமொன்று ஸுந்தர பாஹுஸ்தவத்திலுள்ளது — (26) * யேஷ்வேகஸ்ய குணஸ்ய விப்ருடபி வை * இத்யாதி.

நிர்குண ப்ரஹ்மமே வேதாந்த வேத்ய மென்று சொல்லுகிற குத்ருஷ்டிகளைத் தெளிவிக்க வேண்டி, நிர்க்குணத்வப்ரதிபாதக ச்ருதியின் தாத்பர்யத்தை மேலே நாற்பத்தொன்பதாம் ச்லோகத்தில் அருளிச் செய்யப் போகிறாராய் இந்த ச்லோகத்தில் கல்யாண குணபௌஷ்கல்யத்தை யருளிச் செய்தாராயிற்று. (47)

सर्वस्य चैव गुणतो हि विलक्षणत्वमैश्वर्यतश्च किल कश्चिदुदञ्चितस्स्यात् ।
तत्प्रत्युत त्वयि विभो ! विभवो गुणाश्च सम्बन्धतस्तव भजन्ति हि मङ्गलत्वम् ॥४८॥

ஸர்வஸ்ய சைவ குணதோ ஹி விலக்ஷணத்வம்
ஐச்வர்யதச் ச கில கச்கச்துதஞ்சிதஸ் ஸ்யாத்,
தத் ப்ரத்யுத த்வயி விபோ! விபவோ குணாச் ச
ஸம்பந்ததஸ் தவ பஜந்தி ஹி மங்கலத்வம், 48

விபோ! ஸர்வஸ்யச விலக்ஷணத்வம் குணத ஏவ ஹி; கச்சித் ஐச்வர்யதச்ச கில உதஞ்சிதஸ்ஸ்யாத்: த்வயி தத் ப்ரத்யுத; விபவஃ குணச்ச தவ ஸம்பந்ததோ ஹி மங்கலத்வம் பஜந்தி.

எம்பெருமானே! (உலகில்) ஸகல புருஷர்களுக்கும் ஸ்வஸஜாதீயர்களிற் காட்டில் வைலக்ஷண்யமென்பது குணஸம்ருத்தியினாலன்றோ ஆகின்றது; அவ்யபதேச்யனாயிருந்த எவனேனுமொருவனும் ஐச்வர்யத்தினாலன்றோ மேம்படுகிறான்; இவ்விரண்டு விஷயமும் தேவரீர் பக்கல் மாறுபாடுற்றிருக்கின்றது; ஏனெனில், ஐச்வர்யமும் குணங்களும் தேவரீருடைய ஸம்பந்தத்தினாலேயே மேம்பாடு பெறுகின்றனவன்றோ.

* * * உலகில் நல்ல பதார்த்தங்களாயுள்ளன வென்று சிலவற்றை நாம் ஆதரிப்பது எதனாலே யென்னில்; அவற்றில் நல்ல குணங்கள் இருப்பதனாலன்றி வேறொன்றினாலன்று. ரத்னத்தில் ஒளி மிகுதியையிட்டுப் புகழ்ச்சியும், புஷ்பத்தில் பரிமளப்ராசுர்யத்தையிட்டுப் புகழ்ச்சியுமாக இங்ஙனே ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குணஸம்ருத்தியையிட்டே உத்கர்ஷவ்யபதேசம் நிகழா நின்றது. குணத்தையிட்டேயன்று [ஐச்வர்யதச்ச கில] ஐச்வர்யத்தையிட்டும் பெருமை பேசப்படுகின்றது, ஆனால் அது எம்பெருமானளவிலே விபரீதமென்கிறது உத்தரார்த்தத்தில் [தத் ப்ரத்யுத த்வயி விபோ! இத்யாதி.] குணத்தையிட்டும் விபவத்தையிட்டும் மேன்மை பேசப்பெறுகின்ற லௌகிக வஸ்துக்களின் படியன்றிறே எம்பெருமான் படி. பின்னையென்னென்னில், குணங்களும் ஐச்வரியமும் எம்பெருமானாகிற ஆச்ரயத்தின் மேன்மையாலே தாம் மேன்மை பெறுகின்றனவாயிற்று, * धन्यानि स्थलवैभवेन कतिचिद्वस्तूनि, कस्तूरिकां नेपालक्षितिपालफालपतिते पङ्के न शङ्केत कः— தந்யாநி ஸ்தலவைபவேந கதிசித் வஸ்தூநி, கஸ்தூரிகாம் நேபாலக்ஷிதிபாலபாலபதிதே பங்கே ந சங்கேத க:? * என்கிற ச்லோகம் இங்கு ஸ்மரிக்கத்தக்கது.

ஸ்ரீராம குணங்களிலே யீடுபட்டவொரு மஹாகவி கூறுகின்றான் (ப்ரஸங்கராகவே) * यदेतैर्निश्शेषैरपरगुणलुब्धैरिव जगति असावेकश्चक्रे सततसुखसंवासवसतिः—யதேதைர் நிச்சேஷைஃ அபரகுணலுப்தைரிவ ஜகதி அஸாவேகச் சக்ரே ஸததஸுக ஸம்வாஸவஸதிஃ * என்று. குணங்களெல்லாங் கூடி 'நமக்கொரு குணமுண்டாகப் பெறவேணும்' என்று ஆசைப்பட்டுப் பெருமாள் பக்கலிலே வந்து குடிபுகுந்தனவாகப் பேசியுள்ளது இதில். "ஆபரணத்துக்கு அழகு கொடுக்கும் பெருமாள்" என்னுமா போலே குணங்களுக்கும் குணங்கொடுக்கும் பெருமானாகையாலே குணங்களாலே தான் பெருமை பெறுகிறானென்று சொல்ல வொண்ணாதிறே. (48)

दूरे गुणास्तव तु सत्वरजस्तमांसि तेन त्रयी प्रथयति त्वयि निर्गुणत्वम् ।
नित्यं हरे ! निखिलसद्गुणसागरं हि त्वामामनन्ति परमेश्वरमीश्वराणाम् ॥४९॥

தூரே குணாஸ் தவ து ஸத்வரஜஸ்தமாம்ஸி
தேந த்ரயீ ப்ரதயதி த்வயி நிர்குணத்வம்,
நித்யம் ஹரே நிகிலஸத்குணஸாகரம் ஹி
த்வாமாமநந்தி பரமேச்வர மீச்வராணாம். 49

ஹே ஹரே! ஸத்வரஜஸ்தமாம்ஸி குணாஸ் து தவ தூரே; தேந த்ரயீ த்வயி நிர்குணத்வம் ப்ரதயதி; ஈச்வராணாம் பரமேச்வரம் த்வாம் நித்யம் ஸகலஸத்குணஸாகரம் ஹி ஆமநந்தி.

எம்பெருமானே! ஸத்வரஜஸ் தமஸ்ஸுக்களாகிற முக்குணங்களும் தேவரீரை அணுகமாட்டாமல் அப்பால் விலகியுள்ளன; ஆனது பற்றியே வேதமானது தேவரீரிடத்தில் நிர்குணத்வத்தை ஓதுகின்றது; ஈச்வரர்களென்று பேர்பெற்றவர்களுக்கும் பரமேச்வரராயிராநின்ற தேவரீரை எப்போதும் ஸகல கல்யாண குணக்கடலாக வன்றோ மறைகள் முறையிடுகின்றன.

* * *—நிர்க்குண ச்ருதிகளுக்கு என்ன கதியென்ன, அவற்றை நிர்வஹிக்க வேண்டும் வழி காட்டுகிறாரிதில். * **நிர்க்குணம் நிரஞ்ஜநம்** * இத்யாதி ச்ருதிகள் எம்பெருமான் பக்கலிலே குணங்களின் அத்யந்தாபாவத்தைச் சொல்லுகிறனவல்ல; அப்படியாகில் * **யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்** * இத்யாதி பரச்சத வாக்யங்களினால் எம்பெருமானுக்குச் சொல்லப்பட்ட குணபௌஷ்கல்யம் வ்யாஹதமாகுமே. ஒரு ச்ருதியும் வ்யாஹதார்த்தமாகாத படி நிர்வஹிக்க வேண்டுமே. நிர்க்குணத்வத்தைச் சொன்னவிடம் ஹேயகுண ராஹித்யத்தைச் சொல்லிற்றாகக் கொள்ளுமளவில் ஒரு விரோதமுமில்லையே. உத்ஸர்க்காபவாதந்யாயம் இதற்குக் கை கொடுக்குமே. [**ஸத்வரஜஸ்தமாம்ஸி குணாஸ்து தவ தூரே**] ஸத்வரஜஸ்தமோ குணங்கள் தேவரீருக்கு நெடுந் தூரத்திலுள்ளன. எம்பெருமான் பக்கலில் ரஜஸ்தமோ குணங்கள் இல்லையென்று சொல்லாமத்தனை போக்கி ஸத்வகுணமும் இல்லையென்று சொல்லலாமோவென்று ஒரு சங்கை தோன்றும். * **பரமஸத்வ ஸமாச்ரயः கः?** * என்னும்படியுள்ள எம்பெருமான் பக்கலில் ஸத்வ குணமில்லையென்னப் போகாது; ரஜஸ்தமோ மிச்ரமான ஸத்வகுணமில்லை யென்கிற தத்தனை. [**தேந த்ரயீ ப்ரதயதி த்வயி நிர்க்குணத்வம்**] அதையிட்டே வேதத்தில் நைர்குண்யவாதம் ப்ரவ்ருத்தமாயிற்று.

குணஸாமாந்யாபாவத்தையே ச்ருதி விவக்ஷிக்கிற தென்னவொண்ணாதோ வென்னில்; ஒண்ணாமையை உபபாதிக்கிறது உத்தரார்த்தம்—[**நித்யம் ஹரே! நிகிலஸத்குண ஸாகர மித்யாதி**] *பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச* *ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்பः*இத்யாதி ச்ருதிகள் எம்பெருமானை ஸகல கல்யாண குணநிதியாக ஓதாநிற்க, அதற்கு முரணாகப் பொருள் கொள்ள வொண்ணாதிறே. * **அக்நீஷோமீயம் பசுமாலபேத*** இத்யாதிகளில் விஹிதமான ஹிம்ஸையைத் தள்ளியன்றே * **மா ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி*** இத்யாதி நிஷேத ச்ருதிகளுக்குப் பொருள் நிர்வஹியா நின்றோம். அது இங்கு மொக்குமே.

அன்றியும். ***இதிஹாஸ** புராணப்யாம் வேதம் ஸமுபப்ர்ம்ஹயேத் * **என்றும்,** *வேதோபப்ர்ம்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபுः* என்றும் சொல்லுகிறபடியே வேதார்த்த நிர்ணயம் இதிஹாஸ புராணாதீனமாகவுள்ளது. அந்த இதிஹாஸ புராணங்களெல்லாம் **எம்பெருமானுடைய** கல்யாணகுண ப்ரபஞ்சனத்திற்காக வன்றே அவதரித்தன. எம் **பெருமான்** ராமக்ருஷ்ணதிருபேண அவதாரங்கள் பண்ணினது தன்னுடைய திருக் **குணங்களை** வெளியிடுவதற்காகவேயன்றோ. இதனை ஸ்ரீராமாயணத்தின் உபக்ரமந்தானே **நன்கு முதலிக்குமே.** வால்மீகி பகவானுடைய ஆச்ரமத்திற்கு நாரத மஹர்ஷி யெழுந் **தருள, அவரை** நோக்கிக் கேட்டது என்னென்று பார்க்கவேணுமே. *கோந்வஸ்மிந் **ஸாம்ப்ரதம் லோகே** * என்று உபக்ரமித்துப் பல திருக்குணங்களையுஞ் சொல்லி இவை **யுடையானைச் சொல்லியருள**வேணுமென்றிறே கேட்டது நாரத மஹர்ஷியும் *முநே! **வக்ஷ்யாம்யஹம் புத்த்வா** தைர் யுக்த: ச்ரூயதாம் நரः* என்று அக்குணங்களுடையானைச் சொல்லு**கிறேன் கேளாய்** என்றிறே சொல்லவுபக்ரமித்தது. இடையிடையே தொட்ட தொட்ட **விடமெல்லாம்** குணப்ரசுரமாயிறே யிருப்பது *பஹவோ ந்ருப கல்யாண குணாः புத்ரஸ்ய **ஸந்தி தே** * இத்யாதியாகப் பௌர ஜனங்களையிட்டும், *தருணை ரூபஸம்பந்நௌ* **இத்யாதியாக** சூர்ப்பணகையையிட்டும், *தாதூநாமிவ சைலேந்த்ரோ குணாநாமாகரோ **மஹாந்** * இத்யாதியாகத் தாரையையிட்டும், *தமஸः பரமோ தாதா சங்கசக்ரகதாதரः ***இத்யாதியாக** மந்தோதரியையிட்டும் நிருபித்த குணகணங்கள் வாசாமகோசரமிறே. இப்படிப்பட்ட இதிஹாஸ ச்ரேஷ்டத்தாலும் மற்றுமுள்ள புராணங்களாலும் உபப்ரும்ஹணீயமான வேதமானது நிர்க்குணப்ரஹ்மவாதம் பண்ண வந்ததென்றால் இதனில் மிக்கோரயர்வுண்டே? (49)

ज्ञानात्मनस्तव तदेव गुणं गृणन्ति तेजोमयस्य हि मणेर्गुण एव तेजः ।

तेनैव विश्वमपरोक्षमुदीक्षसे त्वं रक्षा त्वदीक्षणत एव यतोऽखिलस्य ॥५०॥

ஜ்ஞாநாத்மநஸ் தவ ததேவ குணம் க்ருணந்தி
தேஜோமயஸ்ய ஹி மணேர் குண ஏவ தேஜ:,
தேநைவ விச்வமபரோக்ஷ முதீக்ஷஸே த்வம்
ரக்ஷா த்வதீக்ஷணத ஏவ யதோகிலஸ்ய. (50)

ஜ்ஞாநாத்மந: தவ தத் ஏவ குணம் க்ருணந்தி; தேஜோமயஸ்ய மணே: தேஜ ஏவ ஹி குண:; த்வம் தேநைவ விச்வம் அபரோக்ஷம் உதீக்ஷஸே; யத: அகிலஸ்ய ரக்ஷா த்வதீக்ஷணத ஏவ.

(எம்பெருமானே!) ஜ்ஞாந ஸ்வரூபியான தேவரீருக்கு அந்த ஞானத்தையே தர்மபூத குணமாகவும் (வேதாந்திகள்) சொல்லுகின்றார்கள்; தேஜஸ் ஸ்வரூபியான ரத்னத்திற்கு தேஜஸ்ஸே குணமாகவுமிராநின்றதன்றோ; (அது போலவே யாமிதுவும்.) தேவரீர் அந்த ஞானத்தினாலேயே உலகம் முழுவதையும் கையிலங்கு நெல்லிக் கனியாகக் காணுகின்றீர்; தேவரீருடைய கடாக்ஷவீக்ஷணத்தினாலேயே அனைத்துலகுக்கும் ரக்ஷணமாக வேண்டியிருப்பதனால்.

** * *—கீழே எம்பெருமானுடைய திருக்குணங்களை ப்ரஸ்தாவிக்கையாலே அவற்றுள் தலையான ஜ்ஞானத்தைப் பற்றிச் சொல்லவேண்டியதைச் சொல்லுகிறது இந்த ச்லோகத்தில்; [**ஜ்ஞாநாத்மநஸ் தவ ததேவ குணம் க்ருணந்தி**] பகவத் குணங்களுள் ஞானமும் ஒன்றாகவிறே சொல்லப்படுகிறது; ∗ **सत्यं ज्ञानमनन्तं ब्रह्म**—ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம∗ என்று பகவத்ஸ்வரூபமே ஜ்ஞாநாத்மகமாகச் சொல்லப்படாநிற்க [தர்மி ஸ்வரூபமே ஜ்ஞானமாயிருக்க] அந்தஜ்ஞானம் பகவானுக்கு எப்படி தர்மமாகும்? என்கிற சங்கைக்குப் பரிஹாரமாகச் சொல்லுகிறதுஇது; ஜ்ஞானமே தர்மியாயிருக்கச் செய்தேயும் தர்மபூதஜ்ஞானமு மொன்றுண்டாகத் தட்டில்லை யென்கிறது. த்ருஷ்டாந்த முகேந இதனை ஸமர்த்திக்கிறார் [**தேஜோமயஸ்ய ஹி மணேர்குண** ஏவ தேஜ:] இங்கு ரத்னத்தைச் சொன்னது ப்ரபாவத்பதார்த்தங்களுக்கெல்லாம் உபலக்ஷணம், ரத்னம் ஸூர்யன் தீபம் முதலான ப்ரபாவத் பதார்த்தங்கள் தேஜோமயங்களாயிருக்கச் செய்தேயும் தேஜஸ்ஸு அவற்றுக்குக் குணமாகவுமிராநின்றதிறே, ஸ்வரூபமான தேஜஸ்ஸு தர்மியாயிருக்கும், மற்றொன்று தர்மமாயிருக்கும்; இவ்வளவேயாயிற்று வாசி. அதுபோலவே ஜ்ஞாநஸ்வரூபியான ஆத்மாவுக்கு ஜ்ஞானம் குணமாகவுமிருக்குமென்றதாயிற்று.*

*[**தேநைவ**] அந்த தர்மபூத ஜ்ஞானத்தினாலேயே யென்றபடி. [**த்வம் விச்வம் அபரோக்ஷம்யதாததா உதீக்ஷஸே**] ஸகல ப்ரபஞ்சத்தையும் கரதலாமலகமாகக் காணுகின்றீர். அந்த ஈக்ஷணத்தினால்தான் உலகமெல்லாம் ரக்ஷை பெறுகின்றதென்கிறார் மேல் பாதத்தினால். (50)*

त्र्य्युद्यता तव युवत्वमुखैर्गुणौघैरानन्दमेधितमियानिति संनियन्तुम् ।
ते ये शतं त्विति परम्परया प्रवृत्ता नैवैष वाङ्मनसगोचर इत्युदाह ॥५१॥

த்ரய்யுத்யதா தவ யுவத்வமுகைர் குணௌகை:
ஆநந்தமேதித மியாநிதி ஸம்நியந்தும்,
தே யே சதம் த்விதி பரம்பரயா ப்ரவ்ருத்தா
நைவைஷ வாங்மநஸகோசர இத்யுதாஹ. (51)

த்வ யௌவநமுகைः குணை: ஏதிதம் ஆநந்தம் இயாந் இதி ஸம்ஙியந்தும் உத்யதா த்ரயீ தே யே சதமிதி பரம் பரயா ப்ரவ்ருத்தா ஸதீ 'ஏஷः வாங் மநஸகோசர: நைவ' இதி உதாஹ.

(எம்பெருமானே!) யௌவனம்முதலான குண ஸமூஹங்களினால் மிகச் சிறந்து விளங்குமதான தேவரீருடைய ஆனந்தத்தை இவ்வளவென்று அளவிடப் புகுந்த வேதமானது *தே யே சதம்* என்கிற பரம்பரையினாலே சொல்லப்புகுந்து 'இக்குணம் வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதது' என்று சொல்லி நின்றது.

* * *—கீழ் எம்பெருமானுடைய ஸ்வரூபநிரூபணம் செய்து போருமடைவில் இருபத்தினான்காவது ச்லோகத்தில் ஆனந்தத்தின் அபரிச்சிந்நத்வத்தை யருளிச்செய்தாரே; அதை இப்போது இந்த குணப்ரகரணத்திலே விவரித்தருளுகிறார்.

[தவ யுவத்வமுகைர் குணௌகைः ஏதிதம் **ஆநந்தம்** இயாநிதி ஸம்ஙியந்தும் **உத்யதா த்ரயீ**] தைத்திரீயோபநிஷத்தில் ஆனந்தவல்லி யென்னும் பரிச்சேதத்தில் ***ஸைஷாநந்தஸ்ய மீமாம்ஸா பவதி*** என்று தொடங்கி ***யதோ வாசோ நிவர்த்தந்தே*** என்னுமளவாக **ஓதப்பட்டுள்ள விஷயத்தை** இங்கெடுத்துக் காட்டுகிறார். எம்பெருமானுடைய திருக் **குணங்களுள் ஒன்றான** ஆனந்த குணத்தைப் பற்றிப் பேசுகின்றது அவ்விடம். அந்த **ஆனந்தம் இவ்வளவினதென்று** சொல்ல முடியாதென்பதைக் காட்டுவதற்கு வேதபுருஷனே **ஒருவகையான கல்பனையைச்** செய்து போருகிறான். (அதாவது,) ஒரு மநுஷ்யன்; **அவன் நல்ல யௌவன பருவத்திலுள்ளவன்;** ஸகல சாஸ்த்ரங்களையும் ஒன்று விடாமலோதிப் **பிறர்களுக்கும் ஓதுவிப்பவன்; ஆலஸ்யமின்றி** எல்லாக் காரியங்களையும் வழுவாமற் செய்பவன்; தேஹத்திலும் மனத்திலும் திடமுள்ளவன். இவ்வளவும் வாய்ந்தாலும் தரித்ரனாயிருந்தால் பயனில்லையே. அப்படியன்றிச் செல்வமெல்லாம் நிறைந்த பூமண்டலம் முழுவதையும் செங்கோல் செலுத்தியாளும்படியான ஒப்புயர்வற்ற ஸம்பத்தும் வாய்ந்தவன். இப்படிப்பட்ட அதிசயம் நிறைந்த வொரு மநுஷ்யனிருந்தால் அவனுக்கு உண்டாகக்கூடிய ஆனந்தத்தை முன்னேயெடுத்துக் காட்டி, அதைவிட நூறுமடங்கு அதிகமான ஆனந்த முடையவர்களாக மநுஷ்ய கந்தர்வர்களென்ற வகுப்பைக் கூறி, அவர்களைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்தமுடையவர்களாக தேவகந்தர்வர்களைக் கூறி இப்படியே நூறு நூறுபங்கு அதிகமான ஆனந்தமுள்ளவர்களாக வரிசையாய் சிரலோகலோக பித்ருக்களையும் ஆஜாநஜதேவர்களையும் கர்மதேவதேவர்களையும் தேவர்களையும் இந்திரனையும் ப்ருஹஸ்பதியையும் ப்ரஜாபதியையும் சொல்லிவந்து, அந்த ப்ரஜாபதியின் ஆனந்தத்தைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்தத்தையுடையது பரப்ரஹ்மம்—என்று சொல்லப் பார்த்து 'பரப்ரஹ்மத்தின் ஆனந்தத்தை இவ்வளவு மட்டமாகவா சொல்லித் தலைக்கட்டுவது!' என்று குறைபட்டு [யதோ வாசோ நிவர்த்தந்தே] என்று மறுபடியும் திரும்புகிறதாம். அதாவது, கீழ்ச் சொல்லிக்கொண்டுவந்த ப்ரக்ரியையில் கடைசியாகச் சொல்லப்பட்ட ப்ரஜாபதியை அடுத்த பர்யாயத்தில் மநுஷ்யஸ்தானத்திலே நிறுத்தி அவன் முதலாக ப்ரஜாபதியளவும் சொல்லிக்கொண்டுபோய் அந்த ப்ரஜாபதியின் ஆனந்தத்தைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்தம் பரப்ரஹ்மத்தினுடையது என்று சொல்லி முடிக்கப்பார்த்து அதுவும் கூடாமையாலே முன்போலே மறுபடியும் ஒரு பர்யாயம் சொல்லுவது—இப்படியே அந்தாதியாக இன்றைக்கும் புந: புநராவ்ருத்தியிலேயே வேதம் கிடக்கின்றதாக ஆளவந்தார் தம்முடைய ஸ்தோத்ரரத்னத்தில் (19) *உபர்யுபர்யப்ஜபுவோபி பூருஷாந் ப்ரகல்ப்ய* என்கிற ச்லோகத்தில் அருளிச் செய்கிறார். பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தரசதகத்தில் *மர்த்யோத்தாயம் விரிஞ்சாவதிகமுபரி சோத்ப்ரேக்ஷ்ய **மீமாம்ஸமாநா ரங்கேந்த்ராநந்தவல்லீ*** என்கிற ச்லோகத்திலருளிச் செய்கிறார். அதெல்லாம் இங்கே அநுஸந்தேயம்.

[**தே யே சதம் த்விதி** பரம்பரயா இத்யாதி,] இப்படி **தே யே சதம், தே யே சதம்** என்று தொடர்ந்தோதிச் சென்ற வேதத்தின் பரமதாத்பர்யமென்னவென்றால் எம்பெரு

மானுடைய ஆனந்தம் அவாங்மநஸகோசரம் என்பதேயன்றோ; *அப்ராப்ய மநஸா ஸஹ*
என்று முக்தகண்டமாகவும் சொல்லிற்றிறே அது. (51)

एवं तया चतुरया तव यौवनाद्याः सर्वे गुणास्सह समस्तविभूतिभिश्च ।
प्रव्याहृतास्स्युरवधीनवधीरयन्तो वाचामगोचरमहामहिमान एव ॥५२॥

ஏவம் தயா சதுரயா தவ யௌவநாத்யாஸ்
ஸர்வே குணாஸ் ஸஹ ஸ்மஸ்த விபூதிபிச் ச,
ப்ரவ்யாஹ்ருதாஸ் ஸ்யுரவதீந் அவதீரயந்த:
வாசாமகோசரமஹாமஹிமாந ஏவ. (52)

சதுரயா தயா ஏவம் தவ யௌவநாத்யா: ஸர்வே குணா: ஸமஸ்தவிபூதிபிச் ச ஸஹ அவதீந் அவதீரயந்த: வாசாமகோசர மஹாமஹிமாந: ப்ரவ்யாஹ்ருதா ஏவ ஸ்யு:.

(எம்பெருமானே!) சாதுர்யமுடையதான அந்த ஆனந்தவல்லி யென்னும்ச்ருதியினாலே இவ்விதமாகவே தேவரீருடைய யௌவனம் முதலிய ஸகல குணங்களும் ஸகல விபூதிகளோடுங்கூட நிரவதிகங்களாகவும் வாசாமகோசரமஹாவைபவ சாலிகளாகவும் சொல்லி முடிக்கப்பட்டவைகளேயாகும்.

* * *—கீழ் ச்லோகத்தில் ஆனந்த குணத்தின் அவாங்மநஸ கோசரத்வம் சொல்
லிற்று; இது ஆனந்த குணமொன்றுக்கேயன்று; எம்பெருமானுடைய ஒவ்வொரு
குணமும் இப்படியே அபரிச்சிந்நமென்பதே அந்த ஆனந்த வல்லியினால் காட்டப்பட்ட
தாயிற்று என்கிறாரிதில்.

[சதுரயா தயா] கீழ் ச்லோகத்திலுள்ள **த்ரயீ** என்பது இங்கு தச்சப்தத்தினால் விவ
க்ஷிக்கப்படுகிறது. 'தயா த்ரய்யா' என்றபடி. வேதத்திற்கு சாதுர்யமாவது—ஒவ்
வொரு திருக்குணத்தையும் தனித்தனியே யெடுத்து 'இது அபரிச்சிந்நம், இது அபரிச்
சிந்நம்' என்று சொல்லிப்போரும் சிரமத்தை விட்டு, ஸகல குணங்களும் ஸகல விபூதி
களும் அபரிச்சிந்நமென்பதைச் சுருங்கக் காட்டுகையேயாம். ஸ்ரீவிஷ்ணு புராணத்தில்
*ப்ருந்தாவநம் பகவதா க்ருஷ்ணேந **அக்லிஷ்டகர்மணா*** என்கிற ச்லோகத்தில் கண்ண
பிரானை அக்லிஷ்டகர்மா என்றார் மஹர்ஷி; ஒவ்வொரு பசுவுக்கும் கன்றுக்கும் தனித்
தனியே புல்லுந்தண்ணீரும் திரட்டித் தருகையாகிற க்லேசத்திற்கு இடமின்றிக்கே
நெருஞ்சிக்காடு முழுவதையும் பசும்புற் காடாக ஆம்படி ஸங்கல்பித்த சாதுர்யமன்றோ
அங்கு விவக்ஷிதம். வேதவேத்யனுடைய அந்த சாதுர்யம்போலே வேதத்தினுடைய
இந்த சாதுர்யம் இங்குக் கொண்டாடப்படுகிறது. **[தவ யௌவநாத்யாஸ் ஸர்வே குணா:]**
ஆனந்த வல்லியின உபக்ரமத்தில் *யுவா ஸ்யாத்* என்று யௌவனத்தை முன்னிட்டு
ஓதுகையாலே அது ஸகல குணங்களுக்கு முபலக்ஷணமென்று கொண்டு '**யௌவநாத்யா:**'
என்கிறார். **[ஸமஸ்தவிபூதிபிச் ச ஸஹ]** அந்த ஆநந்த மீமாம்ஸையில் ***தஸ்யேயம் ப்ருதிவீ**
ஸர்வா வித்தஸ்ய பூர்ணா ஸ்யாத்* என்று பூலோகைச்வர்யம் மாத்திரம் சொன்னது *பொங்
கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகுமங்காதுஞ் சோராமேயாள்கின்ற வெம்பெரு
மானுடைய ஸகலலோகைச்வர்யத்துக்கு முபலக்ஷணம். ஆக, ஆனந்த குணமொன்றின்
அபரிச்சிந்நத்வத்தைச் சொல்லப் புறப்பட்ட வேதம் எம்பெருமானுடைய ஸகல குணங்
களும் ஸகல விபூதிகளும் நிரவதிகங்களாய் வாசாமகோசர மஹாமஹிமசாலி
களானவை யென்று சொல்லித் தலைக்கட்டினதாக இந்தச்லோகத்தினாலருளிச் செய்தா
ராயிற்று. (52)

संवर्तवर्ति निखिलं निरभिज्ञमज्ञं चित्रे च कर्मणि यथार्हमहो! नियच्छन् ।
सद्यः क्रिमिद्रुहिणभेदमभेदमेतदाविश्चकर्थ सकृदीक्षणदीक्षणेन ॥५३॥

ஸம்வர்த்தவர்த்தி நிகிலம் நிரபிஜ்ஞமஜ்ஞம்
சித்ரே ச கர்மணி யதார்ஹமஹோ நியச்சந்,
ஸத்ய: க்ரிமித்ருஹிண பேத மபேதமேதத்
ஆவிச்சகர்த்த ஸக்ருதீக்ஷண தீக்ஷணேந. (53)

ஸம்வர்த்தவர்த்தி நிரபிஜ்ஞம் அஜ்ஞம் நிகிலம் சித்ரே ச கர்மணி யதார்ஹம் நியச்சந் ஸக்ருதீக்ஷண தீக்ஷணேந ஸத்ய: ஏதத் க்ரிமித்ருஹிணபேதம் அபேதஞ்ச ஆவிச்சகர்த்த.

(எம்பெருமானே!) ப்ரளயத்திலே கிடப்பதாய் அநுபவரூபஜ்ஞானமும் ப்ரத்யபிஜ்ஞாரூபஜ்ஞானமுமற்றதான ஸகல ஜந்து ஜாதத்தையும் விசித்திரமான தத்தத் கருமங்களிலே யதாயோக்யமாக நிபந்தித்து ஏககாலத்திலே கடாக்ஷிக்கும் தீக்ஷைகொண்டு உடனே இவ்வுலகத்தை ப்ரஹ்மாதிஸ்தம்பபர்யந்த பேத விசிஷ்டமாயும் ஸ்ருஷ்டிகாலத்தில் பேதமற்றதாயும் படைத்தீர்.

** * *—எம்பெருமானுடைய ஸங்கல்பரூபமான ஜ்ஞாநவிசேஷமும் அபரிச்சிந்ந மஹிமசாலி யென்கிறார் இதில், வேதாந்தங்களில் ஸ்ருஷ்டியைச் சொல்லும் வாக்யங்களில் ப்ரளயமே முந்துற ப்ரஸ்தாவிக்கப்படுகிறது. ப்ரபஞ்சம் அநாதியாகையால் அபூர்வ ஸ்ருஷ்டியென்பது சொல்ல வொண்ணாது. *ஸூர்யா சந்த்ரமஸௌ தாதா யதாபூர்வமகல்பயத்* என்றவிடத்திலும் 'யதாபூர்வம்' என்னப்பட்டதிறே. ஆகவே பிரளயத்தை முன்னே சொல்லி ஸ்ருஷ்டியைப் பின்னே சொல்லுவது முறைமையாயிற்று. *ஸதேவ ஸோம்ய! இதமக்ர ஆஸீத் *ஆஸீதிதம் தமோபூதம்* இத்யாதிகள் காண்க. இப்படிப்பட்ட ப்ரமாணங்களையடியொற்றி **[ஸம்வர்த்தவர்த்தி]** என்று தொடங்குகிறார். ஸம்வர்த்தமாவது ப்ரலயம். அப்போது ஒன்றுமேயில்லையென்ன வொண்ணாதே. நம்முடைய ஸித்தாந்தத்தில் ஒன்றுக்கு அபூர்வமான உற்பத்தியும் கிடையாது, ஆத்யந்திக விநாசமும் கிடையாது. ஸூக்ஷ்மதசையிலிருந்ததற்கு ஸ்தூலதசாபத்தியே உத்பத்தியென்று வழங்கப்படும். ஸ்தூலதசையைவிட்டு ஸூக்ஷ்மதசைக்கே சென்று சேருவது விநாசமென்று வழங்கப்படும். ஆகவே ப்ரளய காலத்தில் எல்லாம் ஸூக்ஷ்மதசாபந்நமாகவுண்டு. **[நிரபிஜ்ஞம்]** அநுபவரூபஜ்ஞான மில்லாததென்றபடி. **[அஜ்ஞம்]** ப்ரத்யபிஜ்ஞாரூபஜ்ஞானமுமில்லாததென்கை. ஸூக்ஷ்மதசாபத்தியில் இவை அஸம்பாவிதமிறே. இப்படிப்பட்ட நிகிலத்தையும். **[சித்ரே ச கர்மணி யதார்ஹம் நியச்சந்]** 'சித்ரே ச' என்றது **'சித்ரேஸத்யபி'** என்றபடி. அஸங்க்யேயமான பிராணிஸமூஹங்கள் செய்த கருமங்கள் விசித்திரங்களாகவன்றோ இருப்பது. அவற்றுக்கெல்லாம் பரிபாக தசை ஏக காலத்திலேயுண்டாகமாட்டாதே. ஓரூரில் ஒருநாளில் எட்டு பேர்களுக்கு ஜனனமும் ஐந்து பேர்களுக்கு மரணமு முண்டாவதாகக் கொள்வோம். இன்று ஐந்நூறு பேர்களுக்கு ஜனனமும் ஆயிரம் பேர்களுக்கு மரணமும் ஏன் உண்டாகவில்லையென்று ஒருவர் கேட்டால் அதற்கு நாம் விடையிறுக்கக் கூடியது ஒன்றே; ஜனனத்திற்குரிய கர்மவிபாகமும் மரணத்திற்குரிய கர்மவிபாகமுமே ஜனன மரணங்களுக்குக் காரணம்; அப்படிப்பட்ட கர்மவிபாகம் எந்தெந்த நாட்களில் யார்யார்களுக்கு உண்டாகின்றதோ அவரவர்களுக்கு அந்தந்த நாட்களில் தான் ஜனன மரணங்களுண்டாகுமென்பது நூற்கொள்கை. இந்த ரீதியில் பார்க்கும்போது (ஸ்ருஷ்டி காலத்தில்) ஸகல ஜந்துக்களுக்கும் ஏக காலத்தில் பிறப்பென்பது அஸம்பாவிதம். ஸகலாத்மாக்களுடையவும் ஜனனத்திற்குரிய கர்மம் ஏகக்ஷணாவச்சேதேந பரிபக்வமாய்விட்டதாக நினைக்க ஸம்பாவனையில்லையே. அப்படியிருக்க, ஸ்ருஷ்டியிலே உந்முகனான எம்பெருமான் ஸகலாத்மாக்களுக்கும்*

ஏககாலத்திலே கரணகளேபரப்ரதாநம் பண்ணினது கேவலம் க்ருபையினாலேயென்று நம் ஆசார்யர்கள் நிர்வஹிக்கும்படி. *யௌगपद्यम् अनुग्रहकार्यम् - யௌகபத்யம் அநுக்ரஹ கார்யம்* என்பார்கள். இவ்விஷயமே இந்த ச்லோகத்தில் உயிராகத் தெரிவிக்கப் படுகின்றது. ஏககாலத்தில் கரணகளேபரப்ரதாநம் பண்ணுகைக்கு மாத்திரமே க்ருபை காரணமாகும். க்ரிமிகீட பதங்காதி ப்ரஹ்மாந்தமாகச் செய்யும் சரீர பேதங்கள் மாத்திரம் தத்தத் கர்மாநு குணமேயாகும். அதையிட்டு [யதார்ஹம் நியச்சந்] என்று அருளிச் செய்யப் பட்டது. ஸத்யః என்றது 'யுகபத்' என்றபடி. ஸமகாலத்திலேயே யென்கை. க்ரிமித்ருஹிண பேதம்—க்ரிமிமுதலாக த்ருஹிணபர்யந்தமாகப் பலவகைப்பட்ட பேதங்களையுடைத் தாம்படி யென்கை. த்ருஹிணனென்று பிரமனுக்குப் பெயர்.

அபேதம்—பக்ஷபாத சூந்யமாக; வைஷம்ய நைர்க்ருண்ய ப்ரஸக்தியற என்றபடி.

[ஸக்ருதீக்ஷண தீக்ஷணேந ஆவிச்சகர்த்த] ஸங்கல்ப லேசத்தினாலே தோற்றுவித்தீரென்கை. இதனால் ஸங்கல்பத்தின் ப்ரபாவாதிசயம் சொல்லிற்றாயிற்று. ... (53)

अस्तं यदुद्यदुपचाय्यपचायि चैवमीशं दरिद्रमथ जङ्गममप्यनिङ्गम् ।
विश्वं विचित्रमविलक्षणवीक्षणेन विक्षोभयस्यनवधिर्बत शक्तिरैशी ॥५४॥

அஸ்தம் யதுத்யதுபசாய்யபசாயி சைவம்
ஈசம் தரித்ரமத ஜங்கமமப்யநிங்கம்,
விச்வம் விசித்ரமவிலக்ஷணவீக்ஷணேந
விக்ஷோபயஸ்யநவதிர் பத சக்திரைசீ. (54)

ஹேஈச அஸ்தம் யத் உத்யத் உபசாயி அபசாயிச ஈசம் தரித்ரம் ஜங்கமம் அநிங்கம் ஏவம் விசித்ரம் விச்வம் அவிலக்ஷணவீக்ஷணேந விக்ஷோபயஸி, ஐசீ சக்திః அநவதிః, பத!

ஸர்வேச்வரனே! அழிவதும் உண்டாவதும் வளர்வதும் தேய்வதும் ஸம்பன்னமும் தரித்ரமும் ஜங்கமமும் ஸ்தாவரமுமாய் இப்படி விசித்திரமான பிரபஞ்சத்தை ஸக்ருத் ஸங்கல்பத்தினால் ஸ்ருஷ்டிக்கனுகூலமான விகாரத்தோடு கூடியதாக ஆக்குகின்றீர்; ஈச்வரத்வப்ரயுக்தமான உமது சக்தி எல்லைகடந்தது; ஆச்சரியம்.

* * *—ஸங்கல்பத்தோடு கூட சக்தியின் ப்ரபாவத்தையும் அநுஸந்தித்தருளுகிறாரிதில். ப்ரபஞ்சம் நெடுவாசி பட்டிருக்கிறபடியைப் பூர்வார்த்தத்தில் பேசுகிறார். [அஸ்தம் யத் உத்யத்] விநாசோந்முகமானதொன்று, உதயோந்முகமானதொன்று. இங்கு யத் என்பது ஸர்வநாமபரிக்ணிதமான யச்சப்தமன்று; 'இண்—கதௌ' என்கிற தாதுவிலிருந்து சத்ர் ப்ரத்யயாந்தமாக நிஷ்பந்நமான ரூபம். பும்லிங்கத்தில் (யந்) என்றும், ஸ்த்ரீலிங்கத்தில் (யதீ) என்றுமாகும். அடைகின்ற என்று பொருள். அஸ்தமயத்தையடைகின்றதொன்று, உதயத்தையடைகின்றதொன்று. [உபசாயி அபசாயி] அபிவிருத்தியடைவதொன்று, க்ஷயமடைவதொன்று. [ஈசம் தரித்ரம்] ஐச்வரிய விசிஷ்டமொன்று. தாரித்ர்யவிசிஷ்டமொன்று. [ஜங்கமம் அநிங்கம்] நடையாடுவதொன்று. நிலைத்து நிற்பதொன்று. [ஏவம் விசித்ரம் விச்வம்] *ஈரேசிதவ்ய வைஷம்ய நிம்நோந்நதமிதம் ஜகத்* என்கிறபடியே எல்லைகடந்து காணப்படுகின்ற வைஷம்யங்களாலே விசித்திரமாயன்றோ விச்வமிருப்பது. இப்படிப்பட்டதாம்படி [அவிலக்ஷண வீக்ஷணேந விக்ஷோபயஸி] ஏகரூபமான ஸங்கல்பத்தினாலே விசேஷ விகாரயுக்தமாகச் செய்யாநின்றீரென்கை. ஸ்ருஷ்டிக்கு உந்முகமான குணவிகாரத்தோடு கூடினதாகச் செய்யாநின்றீரென்கை. [அநவதிர் பத சக்திரைசீ] அஸாதாரணமாய் ஈச்வரத்வ ப்ரயுக்தமாயுள்ள இந்த சக்திக்கு ஓரவதியுண்டோ? (54)

रूपप्रकारपरिणामकृतव्यवस्थं विश्वं विपर्यसितुमन्यदसच्च कर्तुम् ।
क्षाम्यन् स्वभावनियमं किमुदीक्षसे त्वं स्वातन्त्र्यमैश्वरमपर्यनुयोज्यमाहुः ॥५५॥

ரூபப்ரகார பரிணாமக்ருத வ்யவஸ்தம்
விச்வம் விபர்யஸிதுமந்யதஸச் ச கர்த்தும்,
க்ஷாம்யந் ஸ்வபாவநியமம் கிமுதீக்ஷஸே த்வம்
ஸ்வாதந்த்ர்ய மைச்வரமபர்யநுயோஜ்யமாஹு:. (55)

ரூப ப்ரகார பரிணாம க்ருத வ்யவஸ்தம் விச்வம் விபர்யஸிதும் அஸத் அந்யத் கர்த்தும் ச க்ஷாம்யந் த்வம் ஸ்வபாவ நியமம் கிம் உதீக்ஷஸே, ஐச்வரம் ஸ்வாதந்த்ர்யம் அபர்யநுயோஜ்யம் ஆஹு:.

(எம்பெருமானே !) இன்னவஸ்துக்களுக்கு ஸ்வரூபபரிணாமம், இன்னவஸ்துக்களுக்கு ஸ்வபாவபரிணாமம் என்று வ்யவஸ்தை பெற்றிருக்கிற சேதநாசேதநாத்மகமான ஸகலப்ரபஞ்சத்தையும் விபரீதமாக்குவதற்கும், அஸத்கல்பமானதை ஸத்தாயுக்தமாக்குவதற்கும் சக்தரான தேவரீர் ஸ்வபாவநியமத்தை ஏதுக்காகக் கணிசிக்கிறீர்? ஈச்வரத்வப்ரயுக்தமான உமது ஸ்வாதந்த்ர்யம் கேட்பாரற்றது என்கிறார்கள்.

*** எம்பெருமானுடைய ஸ்வாதந்த்ர்யம் நிரங்குசமென்னுமிடம் சொல்லுகிறது இதில். [ரூபப்ரகாரபரிணாமக்ருத வ்யவஸ்தம் விச்வம்] ரூபமாவது ஸ்வரூபம்; ப்ரகாரமாவது ஸ்வபாவம்; அசேதநவஸ்துவுக்கு ஸ்வரூபவிகாரமும், சேதநவஸ்துவுக்கு ஸ்வபாவவிகாரமும் பகவத்ஸங்கல்பத்தாலே வ்யவஸ்திதம். *க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர:* ஆத்மா சுத்தோக்ஷர:* என்று அக்ஷர சப்தத்தாலே ஆத்மாவைச் சொல்லியிருக்கையாலே—க்ஷணக்ஷரண ஸ்வபாவமாய்க்கொண்டு க்ஷரசப்தவாச்யமான அசித்துப்போலே விகரிக்கையின்றிக்கே ஸதைகரூபமாயிருக்கும் சித்தத்வம். *அவிகார்யோயம்* என்று கீதோபநிஷதாசார்யனும் அருளிச்செய்தான். விகாரமாவது அவஸ்தாந்தராபத்தி. சேதந ஸ்வபாவத்திற்கு அவஸ்தாந்தராபத்தியிருந்தாலும் சேதந ஸ்வரூபத்திற்கு அது ஒருநாளும் கிடையாது. அசேதந ஸ்வரூபத்திற்கு அது உண்டு. ஆக, ஸ்வரூபவிகார ஸ்வபாவவிகாரங்களிலே ஒரு நியதி கொண்டிருக்கிற விச்வத்தை. [விபர்யஸிதும், அஸத் கர்த்தும், அந்யச்ச கர்த்தும் க்ஷாம்யந்] விபர்யஸ்தமாக்குவதற்கும் அழிக்கைக்கும் ஆக்குவதற்கும் சக்தரென்னவுமாம். [ஸ்வபாவநியமம் கிமுதீக்ஷஸே] அவ்வோவஸ்துக்களின் கர்மபல ஸ்வபாவநியதியைக் கடாக்ஷிக்க வேண்டியதுண்டோ? ப்ரளயாநுகூலமான கர்மவிபாகத்தையும் ஸ்ருஷ்ட்யநுகூலமான கர்மவிபாகத்தையும் எதிர்பார்த்து ஸ்ருஷ்டிப்ரலயங்களை நிர்வஹிக்கவேண்டிய ஆவச்யகதையில்லையிறே தேவரீருக்கு என்றபடி. ஏனென்னில்; நிரங்குச ஸ்வதந்த்ரராகையாலே யென்று ஈற்றடியால் ஸமர்த்திக்கிறார். [ஐச்வரம் ஸ்வாதந்த்ர்யம் அபர்யநுயோஜ்யமாஹு:] நியோகபர்யநுயோகாநர்ஹத்வரூபமான ஸ்வாதந்த்ர்யமன்றோ ஈச்வரனுக்குள்ளது. இதைச் செய், அதைச் செய் என்று ஏவுகை நியோகம்; ஏன் இதைச் செய்தாய்? ஏன் இப்படிச் செய்தாய்? என்று கேட்கை பர்யநுயோகம். இவ்விரண்டுக்கும் நிலமல்லாதது ஈச்வர ஸ்வாதந்த்ர்யம். 'அபர்யநுயோஜ்யம்' என்றவிதில் நியோகாநர்ஹதையும் உபலக்ஷணவிதயா கொள்ளக்கடவது. ஆஹு: என்றதற்கு எழுவாய் சாஸ்த்ர வித்துக்கள்.

அபர்யநுயோஜ்யமான ஸ்வாதந்த்ர்ய விசேஷத்தாலே தேவரீர் எதுவும் செய்ய வல்லீர்; எந்த வ்யவஸ்தையும் குறுக்கே நிற்ககில்லாது என்பதே இந்தச்லோகத்தின் பரமதாத்பரியம். வ்யவஸ்தைகளை மீறிச்செய்யவல்ல ஸ்வாதந்த்ர்யம் எம்பெருமானுக்கு இருந்தாலும் தானிட்ட வ்யவஸ்தையை [வரம்பை]த் தானே மாற்றுதல் நன்றல்லாமையாலே பெரும்பாலும் வ்யவஸ்தைகள் குன்றாமே ஒழுகுவதே எம்பெருமானியல்பு.

ஆனாலும் நிரங்குச ஸ்வாதந்திரியம் போற்றத்தக்கதாகையாலே அது செய்ததாயிற்று இந்தச்லோகத்தினால். (55)

संवर्तसम्भृतकरस्य सहस्ररश्मेरुस्रं तमिस्रयदजस्रविहारि हारि ।

नित्यानुकूलमनुकूलनृणां परेषामुद्वेजनं च तव तेज उदाहरन्ति ॥५६॥

ஸம்வர்த்தஸம்ப்ருதகரஸ்ய ஸஹஸ்ரரச்மே:
உஸ்ரம் தமிஸ்ரயதஜஸ்ரவிஹாரி ஹாரி,
நித்யாநுகூலமநுகூலந்ருணாம் பரேஷாம்
உத்வேஜநஞ்ச தவ தேஜ உதாஹரந்தி. (56)

ஸம்வர்த்தஸம்ப்ருதகரஸ்ய ஸஹஸ்ரரச்மே: உஸ்ரம் தமிஸ்ரயத் அஜஸ்ர விஹாரி ஹாரி பரேஷாம் உத்வேஜநம் ச தவ தேஜ: அநுகூலந்ருணாம் நித்யாநுகூலம் உதாஹரந்தி.

(எம்பெருமானே!) பிரளயகாலத்தில் நிரம்பிய கிரணங்களையுடையனான ஸூர்யனுடைய கிரணங்களை இருளாக்குவதும் நித்யாஸங்குசிதமும் மநோஹரமும் பிரதிகூலர்களுக்கு பயங்கரமுமான உன்னுடைய தேஜஸ்ஸை அன்பர்களுக்கு நித்ய போக்யமாகச் சொல்லுகிறார்கள்.

*** பராபிபவந ஸாமர்த்ய ரூபமான தேஜஸ்ஸென்னும் மஹாகுணத்தை உபச்லோகிக்கிறது இந்தச்லோகம். [**ஸம்வர்த்தஸம்ப்ருதகரஸ்ய ஸஹஸ்ரரச்மே: உஸ்ரம் தமிஸ்ரயத்**] பிரளயகாலத்தில் ஸூர்யசந்த்ர வாயு யமாதிகளான ஸகல தேவதைகளுக்கும் வீர்யம் அபரிமித மென்பது நூற்கொள்கை. ஸூர்யனுடைய கிரணங்கள் அத்யுக்ர மாக ஜ்வலிக்குமப்போது. அந்த ப்ரகாசாதிசயமும் இருளென்னலாம்படியுள்ளது எம்பெருமானுடைய இயற்கையான தேஜஸ்ஸு. தமிஸ்ரம் குர்வத்—**தமிஸ்ரயத்** என்றாகக் கடவது. "**தமிஸ்ரம் திமிரம் தம:**" என்று அமரகோசம்.

[**அஜஸ்ரவிஹாரி**] எப்போதும் விஹரிப்பது; ஒருகாலும் ஸங்கோச மில்லாத தென்றபடி. [**ஹாரி**] மநோஹரமானது, [**அநுகூலந்ருணாம் நித்யாநுகூலம்**] *குழுமித் தேவர் குழாங்கள் கைதொழச் சோதிவெள்ளத்தினுள்ளே* என்று ஆழ்வார்கள்போல் வார் வாய்வெருவும் படியுள்ள தென்கை. [**பரேஷாம் உத்வேஜநஞ்ச**] மாரீசன் போல்வார் ***அப்ரமேயம் ஹி தத் தேஜ:*** என்று நெஞ்சுளைந்து சொல்லும்படியானது. [**தவ தேஜ உதாஹரந்தி**] ஆக விப்படிப்பட்டதாகவாயிற்று தேவரீருடைய தேஜஸ்ஸை அநுபவ ரஸிகர்கள் கூறுகிறார்கள். (56)

नैव ह्यवाप्यमनवाप्तमिहास्ति यस्य सत्ताऽपि तस्य तव वीक्षणतः प्रजानाम् ।

सम्पत्तु किंपुनरितो न वदान्यमन्यं मन्ये त्वमेव खलु मन्दिरमिन्दिरायाः ॥५७॥

நைவ ஹ்யவாப்யமநவாப்தமிஹாஸ்தி யஸ்ய
ஸத்தாபி தஸ்ய தவ வீக்ஷணத: ப்ரஜாநாம்,
ஸம்பத் து கிம்புநரிதோ ந வதாந்யமந்யம்
மந்யே த்வமேவ கலு மந்திரமிந்திராயா:. (57)

யஸ்ய தவ இஹ அநவாப்தம் அவாப்யம் நைவாஸ்தி ஹி, தஸ்ய தவ வீக்ஷணத: ப்ரஜாநாம் ஸத்தாபி; ஸம்பத் து கிம் புந:? இத: அந்யம் வதாந்யம் ந மந்யே; இந்திராயா: மந்திரம் த்வமேவ கலு.

(எம்பெருமானே!) யாவரொரு தேவரீருக்கு உபய விபூதியிலும் இதுவரை கிட்டாததாய் இனிக் கிட்டவேண்டியதாக இல்லையோ, அப்படி அவாப்த ஸமஸ்தகாமரான தேவரீருடைய கடாக்ஷத்தினால் தான் ப்ரஜைகளுக்கு ஸத்தையுமாகிறது. செல்வ முண்டாவதைப்பற்றிக் கேட்கவேணுமோ? ஆதலால் தேவரீரைவிட வேறொரு உதாரரை அறிகின்றிலேன்; திருவுக்கு மிருப்பிடம் தேவரீரேயன்றோ.

* * * ஔதார்யகுணத்தைக் கொண்டாடுகிறாரிதில். *வேண்டிற்றெல்லாந்தரும் கோதில் வள்ளல்* எற்பரனென்னையாக்கிக் கொண்டு எனக்கே தன்னைத்தந்த கற்பகம்* என்று போற்றப்பட்ட ஔதார்யம் தேவரீருக்கே 'அஸாதாரணம். தேவரீர் அவாப்த ஸமஸ்தகாமராகையாலும், தேவரீருடைய கடாக்ஷவீக்ஷணத்தினாலேயே உலகுக்கெல்லாம் ஸத்தையும் ஸம்பத்தும் விளைவதனாலும், ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு தேவரீரே வல்லபராகையாலும் தேவரீருக்கு மேற்பட்டவொரு உதாரவ்யக்தியை உலகிற் காண்கின்றிலேன் என்றாராயிற்று, அவாப்த ஸமஸ்த காமத்வத்தாலும் ப்ரஹ்மாதிஸத்தா ஸ்திதிப்ரலய ஹேதுபூத ஸங்கல்ப சாலித்வத்தாலும் ச்ரிய:பதித்வத்தாலும் ஔதார்யம் எம்பெருமானுக்கே அஸாதாரணமென்கை. **வதாந்ய:**—உதாரபுருஷன். (57)

पापैरनादिभवसंभववासनोत्थैर्दुःखेषु यः खलु मिमङ्क्षति हन्त जन्तुः ।
तं केवलं नु कृपयैव समुद्धरिष्यन् तद्दुष्कृतस्य ननु निष्कृतिमात्थ शास्त्रैः ॥५८॥

பாபைரநாதிபவஸம்பவவாஸநோத்தை:
து:கேஷு ய: கலு மிமங்க்ஷதி ஹந்த ஜந்து:,
தம் கேவலம் நு க்ருபயைவ ஸமுத்தரிஷ்யந்
தத்துஷ்க்ருதஸ்ய நநு நிஷ்க்ருதி மாத்த சாஸ்த்ரை:. **(58)**

அநாதி பவ ஸம்பவ வாஸநா உத்தை: பாபை: ய: கலு ஜந்து: து:கேஷு மிமங்க்ஷதி; ஹந்த! தம் க்ருபயா ஏவ **கேவலம்** ஸமுத்தரிஷ்யந் **சாஸ்த்ரை: தத் துஷ்க்ருதஸ்ய** நிஷ்க்ருதிம் ஆத்த.

(எம்பெருமானே!) அநாதியான ஸம்ஸாரப் பிறப்பின் வாஸனையினாலுண்டான பாபங்களினால் யாவனொரு சேதநன் (அந்தந்த பாபங்களுக்குப் பயனாக) நரகாதி துக்கங்களில் மூழ்க நினைக்கிறானோ, அப்படிப்பட்ட சேதநனையும் நிர்ஹேதுக க்ருபையினால் கரைமரம் சேர்க்கத் திருவுள்ளம் பற்றிய தேவரீர், அவன் செய்த பாவங்களுக்குரிய ப்ராயச்சித்தங்களை சாஸ்த்ரங்களினால் அருளிச் செய்யாநின்றீர்.

* * *—எம்பெருமானுடைய க்ருபாகுணத்தின் பெருமையை விரிவாக அருளிச்**செய்யப்** புகுந்து இந்த ச்லோகத்தில் அதற்கு அடியிடுகிறார். *ய: கச்சிதேவ* என்கிற **அறுபத்து** நான்காம் ச்லோகம் வரையில் ஏகவாக்யார்த்தமாகக் கொள்ளலாம். க்ருபை**யினால் உத்தம்பிதமாகக்** கடவதான க்ஷமாகுணத்தையும் உடன் கூட்டிக்கொண்டநுபவித்துத் **தலைக்கட்டுகிறார்**, எம்பெருமான் தன்னுடைய க்ருபையினாலேயே எல்லாரையும் **அங்கீகரித்து** ரக்ஷித்தருள்வதாக வைத்துக்கொண்டால் ஸர்வமுக்தி ப்ரஸங்கமாகும். திருவுள்ளமானபடி சிலரை ரக்ஷிப்பதும் சிலரைக் கைவிடுவதுமாகக் கொண்டால் **வைஷம்ய நைர்க்ருண்ய** ப்ரஸங்கமாகும். இவ்விரண்டு ஆபத்துக்களுக்குமிடமின்றியே, சாஸ்த்ரங்களை **அவதரிப்பித்து** அவற்றில் பாப நிபர்ஹணத்திற்குரிய ப்ராயச்சித்த ப்ரகாரங்களையும் **தெரிவித்து** இவ்வழியாலே தன்னுடைய க்ருபாகுணத்தை ஸத்தை பெறுவித்துக் கொள்ளும்படியை அருளிச் செய்கிறார் இந்த ச்லோகத்தில்,

[அநாதிபவஸம்பவவாஸநோத்தை: பாபை:] ஸம்ஸார சக்ரம் சுழன்றுவரத் தொடங்கினது இன்று நேற்றன்றே; அநாதிகாலமாகவன்றோ பிறப்பிறப்பென்னுமிவை நிகழ்ந்து வருவது. இவற்றில் வாஸனை ரூடமூலமாயிருக்கையாலே அதன் கனத்தினால் ஏதேனும் பாபங்கள் விளைந்துகொண்டேயிருக்குமே. [து:க்கேஷு ய: **கலு** மிமங்க்ஷதி **ஹந்த ஜந்து:**] செய்த பாபங்கள் பலனைக் கொடுத்தே தீருமாதலால் பாப பலமான நரகாதி வ்யஸனங்களிலே ஆழங்காற்பட வேண்டியவனாகிறான் சேதநன். இப்படி ஸம்ஸாரமும் தப்பாமல், அதில் பாப வாஸனையும் தப்பாமல், அதனால் பாபாசரணமும் தப்பா

மல், அதன் பலனான நரகாதி வ்யஸநாநுபவமும் தப்பாமலிருக்குமாகில், அவன் கரையேறும் வழிதானென்னென்னில் ; அது சொல்லுகிறது உத்தரார்த்தத்தினால். செய்த பாபங்களின் பலன் அவசியம் அநுபவித்தேயறவேணுமென்று நிர்ப்பந்தமில்லையே ; * अनुतापादुपरमात् प्रायश्चित्तोन्मुखत्वतः । तत्पूरणाच्चापराधाः सर्वे नश्यन्ति पादशः — அநுதாபாதுபரமாத் ப்ராயச்சித்தோந்முகத்வதஃ, தத்பூரணாச்சாபராதாஸ் ஸர்வே நச்யந்தி பாதசஃ* என்கிற படியே ப்ராயச்சித்தாநுஷ்டானத்தினாலே அவை தொலையக் கடவனவாகையாலே அப்படிப்பட்ட ப்ராயச்சித்தங்களையும் சாஸ்த்ரமுகத்தாலே வெளியிட்டருளினது சேதநர்களை ஈடேற்றுகைக்காகவன்றோ. இதுவும் க்ருபாகார்யமிறே என்றாராயிற்று. (58)

शास्त्रैरनादिनिधनैः स्मृतिभिस्त्वदीयदिव्यावतारचरितैश्शुभया च दृष्ट्या ।

निश्श्रेयसं यदुपकल्पयसि प्रजानां सा त्वत्कृपाजलधितल्लजवल्गितश्रीः ॥५९॥

சாஸ்த்ரைரநாதிநிதநை: ஸ்ம்ருதிபிஸ் த்வதீய
திவ்யாவதாரசரிதைச் சுபயா ச த்ருஷ்ட்யா,
நிச்ச்ரேயஸம் யதுபகல்பயஸி ப்ரஜாநாம்
ஸா த்வத்க்ருபாஜலதிதல்லஜவல்கிதஸ்ரீ:. (59)

அநாதிநிதநைஃ சாஸ்த்ரைஃ ஸ்ம்ருதிபிஃ த்வதீய திவ்யாவதாரசரிதைஃ சுபயா த்ருஷ்ட்யா ச ப்ரஜாநாம் நிச்ச்ரேயஸம் உபகல்பயஸிஇதி யத் ஸா த்வத்க்ருபா ஜலதி தல்லஜ வல்கித ஸ்ரீஃ

(எம்பெருமானே!) உத்பத்திவிநாசங்களில்லாத சாஸ்த்ரங்களாகிய வேதங்களினாலும் மந்வாதி ஸ்மிருதிகளினாலும் தேவரீருடைய திவ்யாவதார சரிதைகளினாலும், திவ்ய கடாக்ஷத்தினாலும் சேதநர்களுக்கு நன்மையைச் செய்தருளாநின்றீரென்பது **யாதொன்றுண்டோ, அதுவானது தேவரீருடைய அருளாகிற கடலின் திரைக்கிளர்ச்சியேயாம்.**

* * * கீழ்ச்லோகத்தில் "**க்ருபயைவ**" என்றதை விவரித்தருளுகிறார் இந்த ச்லோகத்தினால். [**அநாதிநிதனைச் சாஸ்த்ரைஃ**] ஸ்ம்ருதிகளும் சாஸ்த்ரமாயிருக்கச் செய்தேயும் அவற்றை **ஸ்ம்ருதிபிஃ** என்று தனியே சொல்லியிருக்கையாலே கோபலீவர்த்த ந்யாயத்தாலே இங்கு சாஸ்த்ரசப்தம் ச்ருதிகளைச் சொல்லிற்றாகக் கடவது. சாஸநாத் சாஸ்த்ரமாகையாலே 'இதம் குரு, இதம் மாகார்ஷீஃ' என்று விதிவிலக்குகளைத் தெரிவிக்கவல்ல வேதங்களேயன்றோ சாஸ்த்ரசப்தவ்யபதேசத்திற்கு முக்யபாத்ரம். அவை தாம் ஒருகால் தோன்றி ஒருகால் தொலையுமவையல்லாமையாலே அநாதிநிதநங்களாயிருக்கும். [**ஸ்ம்ருதிபிஃ**]* ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ் தாமுல்லங்க்ய **வர்த்ததே, ஆஜ்ஞாச்சேதீ** மம **த்ரோஹீ** மத்பக்தோபி ந வைஷ்ணவஃ * என்று எம்பெருமான்தானே சோதிவாய்திறந்து பணித்திருக்கையாலே ச்ருதிகளோடொக்க ஸ்ம்ருதிகளும் **கொள்ளத்** தக்கவையேயிறே. ஆக, ச்ருதிகளாலும் ஸ்மிருதிகளாலும் என்றபடி.

[**த்வதீயதிவ்யாவதாரசரிதைஃ**] எம்பெருமான் தன்னுடைய அவதாரப்ர**யோஜனங்**களையருளிச் செய்யுமிடத்து * **தர்ம**ஸம்**ஸ்தாப**நார்த்தாய **ஸம்**பவாமி * என்று **தர்மஸ்தாப**நத்தையும் ஒரு ப்ரயோஜனமாகச் சொல்லியிருக்கையாலே, அவதாரங்களில் **காட்டின** சரிதைகளும் ச்ருதிஸ்மிருதிகளோடொக்க நினைக்கலாம்படியிறேயிருப்பது, **ஆக**, இதிஹாஸபுராணங்களாலு மென்றபடி. [**சுபயா த்ருஷ்ட்யா ச**] சுபாவஹமான திருக்கண்ணோக்கத்தாலும். * ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதநஃ, ஸாத்விகஸ் ஸது விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்தசிந்தகஃ * என்றது இங்கே அநுஸந்தேயம்.

ஆக இவற்றாலே, [**ப்ரஜாநாம் நிச்ச்ரேயஸம் உபகல்பயஸீதி யத்**] சேதநர்களுக்கு தேவரீர் நன்மைசெய்யப்பார்ப்பதென்பது யாதொன்றுண்டு, [**ஸா த்வத்க்ருபா ஜலதி**

தல்லஜ வல்கித ஸ்ரீ:] இதெல்லாம் நிர்ஹேதுகக்ருபையடியாகவன்றோ என்றபடி. இங்கு ஸா என்று ஸ்த்ரீலிங்க நிர்தேசம் விதேயப்ராதாந்யத்தாலே யென்று கொள்ளக்கடவது. * शैत्यं हि यत्सा प्रकृतिर्जलस्य—சைத்யம் ஹி யத் ஸா ப்ரக்ருதிர் ஜலஸ்ய * என்றவிடம் ஸ்மரிப்பது. ஆக இந்தச்லோகத்தால் எம்பெருமான் நிர்ஹேதுகக்ருபாவிபவத்தினால் செய்தருளுமவை சொல்லிற்றாயிற்று. (59)

है हन्त जन्तुषु निरन्तरसन्ततात्मा पाप्मा हि नाम बत ! कोऽयमचिन्त्यशक्तिः ।
यस्त्वत्कृपाजलधिमप्यतिवेलखेलमुल्लङ्घयत्यकृतभासुरभागधेयान् ॥६०॥

ஹை ஹந்த ஜந்துஷு நிரந்தரஸந்ததாத்மா
பாப்மா ஹி நாம பத! கோயமசிந்த்யசக்தி:,
யஸ் த்வத்க்ருபாஜலதிமப்யதிவேலகேலம்
உல்லங்கயத்யக்ருதபாஸுரபாகதேயாந். (60)

ஜந்துஷு நிரந்தர ஸந்தத ஆத்மா அசிந்த்யசக்தி: அயம் பாப்மா கோ நாம! ஹை ஹந்த பத! ய: (பாப்மா) அக்ருத பாஸுர பாகதேயாந் அதிவேல கேலம் த்வத்க்ருபாஜலதிமபி உல்லங்கயதி.

(எம்பெருமானே!) சேதநர்களிடத்தில் இடைவீடின்றி வியாபித்திருக்கின்ற ஸ்வரூபத்தையுடையதாய் நெஞ்சாலும் நினைக்கவொண்ணாத சக்தியையுடைத்தான இந்த பாபமானது என்னோ! (இந்த பாபத்தின் கொடுமை ஒப்பற்றதென்கை.) (பாபம் செய்வதென்ன வென்றால்,) தௌர்ப்பாக்ய சாலிகள் தேவரீருடைய கரைகடந்த அருட்கடலையும் மீறினவர்களாம்படி செய்யா நின்றதன்றோ!

* * * சிலபாக்யஹீநர்பக்கலிலே க்ருபையின் ப்ரஸரம் ஸங்குசிதமாவதுண்டே; அதுதன்னைப் பேசுகிறது இந்தச்லோகம், எம்பெருமானுடைய கருணை வெள்ளம் தானாகவே பெருகப்புக்கால் அதைத் தடைசெய்யாமலிருந்தாகிலும் வாழலாமே: அந்தோ! ஈதென்ன ப்ரபலபாபம்! அவ்வருள் வெள்ளத்தைத் தடைசெய்கின்ற கருவிலே திருவிலாதாரும் சிலருண்டாவதே! என்று தபிக்கிறார். [ஜந்துஷு நிரந்தர ஸந்ததாத்மா அசிந்த்யசக்தி: கோயம் பாப்மா நாம] பிராணிகளிடத்திலே இடைவிடாமல் தொடர்ந்து செல்லுமதாய், இப்படிப்பட்டதென்று சிந்திக்கமுடியாத சக்தியையுடைத்தான பாபமொன்று காண்கிறதே, இதுவென்னோ!, இப்படியும் ஒரு பாபமுண்டாகக் கடவதோவென்கிறார். அந்தபாபத்தினுடைய கொடுமையை உத்தரார்த்தத்தாலே நிரூபித்தருளுகிறார் [ய: த்வத்க்ருபாஜலதிமபீத்யாதி.] நல்வினையொன்றும் செய்தறியாதவர்களாய் தௌர்ப்பாக்ய சாலிகளென்று பேர்பெற்றுள்ளவர்களை தேவரீருடைய நிர்ஹேதுகக்ருபாப்ரவாஹத்தையும் மீறினவர்களாகச் செய்யாநிற்பதொரு பாபம் யாதொன்றுண்டோ, அதன்கொடுமை வாசாமகோசரம் என்றதாயிற்று.

"அக்ருதபாஸுரபாகதேயாந் க்ருபாஜலதிம் உல்லங்கயதி" என்றவிது த்விகர்மகப்ரயோகம். **உல்லங்கயதி** என்றவிது = அதிக்ராந்தாங்கரோதி என்ற பொருளில் வந்துளது; ணிஜந்தம். (60)

यद्ब्रह्मकल्पनियुतानुभवेऽप्यनाश्यं तत्किल्बिषं सृजति जन्तुरिह क्षणार्धे ।
एवं सदा सकलजन्मसु सापराधं क्षाम्यस्यहो ! तदभिसन्धिविराममात्रात् ॥६१॥

யத் ப்ரஹ்மகல்பநியுதாநுபவேப்யநாச்யம்
தத் கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே,
ஏவம் ஸதா ஸகலஜந்மஸு ஸாபராதம்
க்ஷாம்யஸ்யஹோ ததபிஸந்திவிராமமாத்ராத். (61)

யத் (கில்பிஷம்) ப்ரஹ்ம கல்பநியுத அநுபவேபி அநாச்யம் தத் கில்பிஷம் ஜந்து: இஹ க்ஷணார்த்தே ஸ்ருஜதி, ஏவம் ஸகலஜந்மஸு ஸதா ஸாபராதம் ததபிஸந்திவிராமமாத்ராத் க்ஷாம்யஸி, அஹோ!

(எம்பெருமானே!) யாதொரு பாபமானது லக்ஷக் கணக்கான ப்ரஹ்ம கல்பங்கள் அநுபவித்தாலும் மாளாததோ அப்படிப்பட்ட பாபத்தை சேதநன் இங்கு அரைநொடியில் செய்கிறான். இப்படி எல்லாப் பிறப்புகளிலும் எப்போதும் குற்றவாளனாகவே யிராநின்ற சேதநனை 'இனி நாம் குற்றம் செய்யலாகாது' என்று கையொழிந்த வளவையே கொண்டு க்ஷமித்தருளா நின்றீர்; ஆச்சரியமான குணமிது.

* * * க்ஷமாகுணத்தின் பெருமையைப் பேசுகிறாரிதில், [யத் கில்பிஷம் ப்ரஹ்ம கல்பநியுதாநுபவேபி அநாச்யம், தத் ஜந்து: க்ஷணார்த்தே இஹ ஸ்ருஜதி] அவனவன் பண்ணின பாபத்தை அநுபவித்தே தொலைக்கவேணுமிறே; *நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிசதைரபி* என்கையாலே செய்த பாபந்தான் அநுபவித்தாலல்லது தொலையாதிறே. ஒருவன் அரைநொடிப்பொழுதில் செய்கிற பாபம் எத்தனைகாலமநுபவித்துத் தொலைக்கவேணு மென்னில்; [ப்ரஹ்மகல்பநியுதாநுபவேபி அநாச்யம்] லக்ஷக்கணக்கான ப்ரஹ்மகல்பங்கள்வரைக்கும் அநுபவித்தாலுங்கூடத் தொலையாததுகாணீர். அரைநொடிப் பொழுதில் பண்ணும் பாபத்தின் தன்மை இதுவானால்* ஆண்டுகள் நாள் திங்களாய் நிகழ்காலமெல்லாம் பிறவிதோறும் செய்து போருகிற பாபங்களின் தன்மையைப் பற்றி வாய்திறக்க வுண்டோவழி? அப்படிப்பட்ட அபராதங்கள் கூடுபூரித்துக் கிடக்கிற சேதநரையும் எம்பெருமான் க்ஷமைக்கு இலக்காக்குவதுண்டே; அதுதன்னைச் சொல்லுகிறது [ஏவம் ஸதா ஸகலஜந்மஸு ஸாபராதம் க்ஷாம்யஸ்யஹோ] என்று.

க்ஷமிக்கைக்கு ஒரு ஹேது இருக்கவேணுமே; நிர்ஹேதுகமாக க்ஷமிப்பதென்றால் ஸர்வாபராதிகள் விஷயத்திலும் க்ஷமையுண்டாகவேணுமே; என்ன ஹேது கண்டு க்ஷமிப்பதென்னில்; [ததபிஸந்தி விராமமாத்ராத்] அபராதங்களைச் செய்து கொண்டே போந்தவன் ஒருநாளிலே கைசலித்துக் கையொழிந்து நின்றானாகில் அந்த விராமந்தானே பற்றாசாக க்ஷமித்தருளுகிறபடி, வ்யாஜமாத்ரஸாபேக்ஷமான க்ஷமா குணத்திற்கு இவ்வளவு போதுமன்றோ. (61)

क्षान्तिस्तवेयमियती महती कथं नु मुह्येदहो त्वयि कृताञ्जलिपञ्जरेषु ।
इत्थं स्वतो निखिलजन्तुषु निर्विशेषं वात्सल्यमुत्सुकजनेषु कथं गुणस्ते ॥६२॥

க்ஷாந்திஸ் தவேயமியதீ மஹதீ கதம் நு
முஹ்யேதஹோ த்வயி க்ருதாஞ்ஜலிபஞ்ஜரேஷு,
இத்தம் ஸ்வதோ நிகிலஜந்துஷு நிர்விசேஷம்
வாத்ஸல்யமுத்ஸுகஜநேஷு கதம் குணஸ் தே. (62)

இயதீ மஹதீ தவ க்ஷாந்தி: த்வயி க்ருதாஞ்ஜலி பஞ்ஜரேஷு கதம் நு முஹ்யேத்: இத்தம் நிகில ஜந்துஷு ஸ்வத: நிர்விசேஷம் தே வாத்ஸல்யம் உத்ஸுகஜநேஷு கதம் குண:?

(எம்பெருமானே!) இவ்வளவாய்ப் பெரிதான தேவரீருடைய பொறுமைக் குணமானது தேவரீர் விஷயத்தில் அஞ்ஜலியாகிற ரக்ஷையைச் செய்து கொண்டவர்கள் விஷயத்தில் எவ்வாறு இடம் பெறுதொழியும்? இப்படி ஸகல சேதநர்களிடத்திலும் இயற்கையாகவே பக்ஷபாத சூந்யமாயிருக்கின்ற தேவரீரது வாத்ஸல்யமானது அத்யந்த பக்தர்கள் விஷயத்தில் எங்ஙனே குணமாகும்?

* * *—க்ஷமாகுணத்தின் ப்ரஸ்தாவத்திலே இதன் காஷ்டாபூமியான வாத்ஸல்ய குணத்தையும் ப்ரஸ்தாவித்தருளுகிறார். [தவ இயதீ மஹதீ இயம் க்ஷாந்தி:] கீழ் ச்லோகத்திலே "க்ஷாம்யஸ்யஹோ ததபிஸந்திவிராமமாத்ராத்" என்னப் பெற்ற பெருமை பொருந்தியதான இந்த க்ஷாந்தியானது. [த்வயி க்ருதாஞ்ஜலிபஞ்ஜரேஷு (பக்தேஷு) கதம் நு முஹ்யேத்?] அபராதங்களைத் தீரக்கழியச் செய்து போந்தவர்கள் ஒரு ப்ராயச்சித்தமும் பண்ணிக்கொள்ளாதே ஓர் அஞ்ஜலிமாத்ரமும் பண்ணுதே அவ்வபராதங்களில் நின்றும் கை யொழிந்து நின்ற வளவுக்கே க்ஷமைகாட்டியருளாநின்ற தேவரீர், *க்ருதாபராதஸ்யஹி தே நாந்யத் பச்யாம்யஹம் க்ஷமம், அந்தரேணாஞ்ஜலிம் பத்த்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத்* இத்யாதி ப்ரமாணங்கள் கண்டோ அதுதானுமறியாமலோ அஞ்ஜலியும் செய்து போருகின்ற பக்தர்கள் திறத்திலே அந்த க்ஷமையைக் காட்டாதிருக்க முடியுமோ?

பஞ்ஜரமாவது கவசம்; அஞ்ஜலியானது ஸ்வதோஷாபநோதந ஹேதுவாகையாலே கவசமென்னத்தகுமிறே. கதம் முஹ்யேத் என்றது—கதம் விரமேத் என்றபடி. பக்திரிக்தர்கள் பக்கலிலும் ப்ரஸரிக்கக் கடவதான தேவரீருடைய க்ஷமையானது பக்தியுக்தர்கள் பக்கலிலே ப்ரஸரிக்கக் கேட்கவேணுமோ? இதுவொரு அதிசயமோ? என்றதாயிற்று. இதுபோலவேதான் வாத்ஸல்யமும் என்கிறார் உத்தரார்த்தத்தில். பக்தியுக்தர்கள் பக்கலிலே ப்ரஸரிக்கின்ற க்ஷமாகுணம் எப்படி அதிசயமன்றோ அப்படியே பக்திமான்களிடத்திலே காண்கின்ற தேவரீருடைய வாத்ஸல்யமும் அதிசயமன்று என்கிறார். தெருவில் போகிறவர்கள் திறத்திலும் கநகதாரைகளை வர்ஷிக்குமொருவன் புத்ரமித்ர பாந்தவாதிகளிடத்திலே வர்ஷித்தானென்றால் அதையொரு ஔதார்யமாகச் சொல்லுவர்களோ? இயல்பு என்ன வேண்டுமத்தனையிறே. அதுபோலவே, பக்தர்கள் அபக்தர்கள் என்கிறவாசியின்றிக்கே எல்லார்திறத்திலும் ப்ரஸரிக்கக்கடவதான வாத்ஸல்ய குணமானது அத்யந்த பக்தர்களிடத்திலே ப்ரஸரித்து மேன்மை பெறமாட்டாதிறே யென்கை. இத்தால் *அநாலோசித விசேஷாசேஷ லோகசரண்யத்வம் அநுஸந்திக்கப் பட்டதாயிற்று. ... (62)

विश्वं धियैव विरचय्य निचाय्य भूयः सञ्जहुषस्सति समाश्रितवत्सलत्वे ।
आजग्मुषस्तव गजोत्तमबृंहितेन पादं परामम्रुशुषोऽपि च का मनीषा ? ॥६३॥

விச்வம் தியைவ விரசய்ய நிசாய்ய பூய:
ஸஞ்ஜஹ்ருஷஸ் ஸதி ஸமாச்ரிதவத்ஸலத்வே,
ஆஜக்முஷஸ் தவ கஜோத்தமப்ர்ம்ஹிதேந
பாதம் பராமம்ர்சுஷோபி ச கா மநீஷா. (63)

தியா ஏவ விச்வம் விரசய்ய நிசாய்ய பூய: ஸஞ்ஜஹ்ருஷ: ஸமாச்ரித வத்ஸலத்வே ஸதி கஜோத்தமப்ர்ம்ஹிதேந ஆஜக்முஷ: பாதம் பராமம்ர்சுஷோபி ச தவ கா மநீஷா?

(எம்பெருமானே!) ஸங்கல்பத்தினலேயே பிரபஞ்சத்தை யெல்லாம் படைத்தும் காத்தும் மீண்டும் ஸம்ஹரித்தும் போருகிறவராய், ஆச்ரித வாத்ஸல்யமுண்டானவளவில் கஜேந்திராழ்வானுடைய கூக்குரலினலே (பொய்கைக் கரைக்கு) ஓடி வருபவராய் (அவ்வானையின்) பாதத்தைத் தடவிக் கொடுப்பவராயுமிராநின்ற தேவரீருடைய திருவுள்ளம் என்னே?

* * * கீழ் ச்லோகத்தில் ப்ரஸ்துதமான வாத்ஸல்ய குணத்தின் ஸீமாபூமியைப் பேசி யினியராகிறார் இந்த ச்லோகத்தில். கஜேந்திராழ்வானிடத்தில் காட்டியருளின

பரிவின் மிகுதி வாத்ஸல்ய குணத்தின் எல்லை நிலமிறே; அந்தப் பரிவுதன்னை யருளிச் செய்கிறார். *மழுங்காத வைநுதிய சக்கர நல்வலத்தையாய், தொழுங்காதல் களிறளிப் பான் புள்ளூர்ந்து தோன்றினையே, மழுங்காத ஞானமே படையாக மலருலகில், தொழும் பாயார்க்களித்தாலுன் சுடர்ச்சோதி மறையாதே* என்ற திருவாய்மொழிப் (3—1—9.) பாசுரத்திற்கு விசேஷ வியாக்கியானம்போல் அமைந்ததாம் இந்த ச்லோகம்.

கஜேந்திராழ்வான் ஒரு மடுவின் கரையிலே முதலைவாய்க் கோட்பட்டு * கஜ ஆகர்ஷதே தீரே க்ராஹ ஆகர்ஷதே ஜலே * என்னும்படி நெடுங்காலம் துவண்டு, இனி நம்மைக் காத்துக்கொள்ள நம்மாலாகாதென்று துணிந்து, ஆதி மூலமே! யென்று வாய் விட்டலற, அக்கூக்குரலைக் கேட்ட ஸ்ரீவைகுண்டநாதன் அரைகுலையத்தலைகுலைய அறப் பதறியோடிவந்து மடுவின்கரையிலே விழுந்து உபசாரங்கள்பண்ணிக் காத்தருளினதாக இதிஹாஸம். இதனை ஆழ்வார்கள் * மீனமர்பொய்கை நாண்மலர் கொய்வான் வேட் கையினோடு சென்றிழிந்த, கானமர்வேழம் கையெடுத்தலறக் கராவதன் காலினைக் கதுவ, ஆனையின் துயரந் தீரப்புள்ளூர்ந்து சென்றுநின்றாழி தொட்டான் * என்றும், * பெண் ணுலாஞ்சடையினானும் பிரமனுமுன்னைக் காண்பான், எண்ணிலாவூழியூழிதவஞ் செய் தார் வெள்கிநிற்ப, விண்ணுளார் வியப்பவந்து ஆனைக்கன்றருளையீந்த * என்றும் நூற் றுக்கணக்கான பாசுரங்களினால் பேசியுள்ளார்கள். யானையின் துயரம் தீர்க்கவேண்டு மானால் அரைகுலையத் தலைகுலைய மடுவின்கரையிலே வந்துவிழவேண்டுமோ? இங்குவந் தும் * க்ராஹம் சக்ரேண மாதவ: * என்றும் * குட்டத்துக்கோள் முதலைதுஞ்சக் குறித் தெறிந்த சக்கரத்தான் * என்றும் சொல்லுகிறபடியே திருவாழியாழ்வானை ஏவியன்றோ காரியங்கொண்டது; இந்தத் திருவாழியாழ்வானைப் பரமபதத்தில் நின்றும் போகவிட் டால் அவன்தானேவந்து முதலையைத் துணித்து மீளானோ? அன்றியும், திருவாழியாழ் வானை ஏவவேணுமென்கிற நிர்ப்பந்தந்தானுமில்லையே. ஸகலப்ரபஞ்சங்களினுடையவும் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை *ஸோ'காமயத * * ஸ தபோதப்யத* என்று உபநிஷத்து ஓதும்படியான ஸங்கல்பசக்தியினாலேயே நிர்வஹித்துப் போருமெம்பெருமான் அந்த ஸங்கல்பங் கொண்டே முதலையைத் துணித்து கஜேந்திராழ்வானைக் காத்தல் முடியாத தொன்றோ? ஆக, ஸங்கல்பத்தினாலேயே கஜேந்திராழ்வானுடைய துயரைத் தீர்க்கலா மாயிருக்க, அங்ஙன் செய்யாதே நேர்கொடுநேரே ஓடிவந்ததென்னோ? ஓடிவந்து, முதலை கவ்வி உதிரமொழுக நின்ற யானையின் காலைத் திருக்கையிலேந்தித் தடவிக்கொடுத்து உபசாரங்கள் செய்ததுதான் என்னோ! இங்ஙனே செய்ததற்கு என்ன திருவுள்ளம் பிரானே! என்கிறார்.

இங்ஙனம் கேள்வியோடே தலைக்கட்டிநின்றது இந்தச்லோகம். கீழே நாமெடுத் துக்காட்டிய திருவாய்மொழிப் பாசுரத்தின் பின்னடிகளிலே இதற்குற்ற விடை காணத் தக்கது. இன்னமும் கேளீர்; * பரமாபதம் ஆபந்ந மநஸா அசிந்தயத் ஹரிம் * என்றும் * கவளமாகதத்த கரியுய்யப் பொய்கைக் கராங்கொளக் கலங்கியுள் நினைந்து துவள * என்றும் சொல்லுகிறபடியே—இடர்ப்பட்ட களிறு எம்பெருமானை நெஞ்சால்நினைத்த மாத்திரமேயொழிய இங்கேவந்திடாயென்று அழைத்தது மில்லை: அப்படியிருக்கத் திருமங்கையாழ்வார் * போரானை பொய்கைவாய்க் கோட்பட்டு நின்றலறி, நீரார் மலர்க் கமலங் கொண்டோர் நெடுங்கையால், நாராயணா ஓ! மணி வண்ணா நாகணையாய், வாராய் என்னாரிடரை நீக்காய் * (சிறியதிருமடல்.) என்று, எம்பெருமானை மடுவின் கரையேற வருமாறு யானை அழைத்ததாகவே பாசுரம் பாடி விட்டார், உண்மையில் எம்பெருமான் நேரில்வந்தே பரிஹரிக்க வேண்டிய இடராதலாலும், அப்படி நேரில் வந்தேயாகவேணுமென்கிற எண்ணம் திண்ணமாக கஜேந்திராழ்வானுக்கு இருந்தபடி யாலுமே திருமங்கையாழ்வார் இங்ஙனே பாசுரம் பணித்தார். கஜேந்திராழ்வானுடைய துயரம் ஸங்கல்பத்தினால் தீர்க்க முடியாததோ? நேர்கொடுநேரே எழுந்தருளியே பரி ஹரிக்கத்தக்கதோ? என்னில்; ஆம். முதலையைத் துணித்த பிறகு கஜேந்திராழ்வான்

விண்ணப்பஞ் செய்கிறான்—* நாஹம் களேபரஸ்யாஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந, கரஸ்த கமலாந்யேவ பாதயோரர்ப்பிதும் தவ.* என்கிறான்; என்றேனுமொருநாள் தொலைந்தே போகக்கடவதான இவ்வுடல் தொலைவதைப்பற்றி நான் வருந்தினேனல்லேன்; உன்னை நேரே கண்ணாரக்கண்டு, வருந்திப் பறித்த இப்புஷ்பங்களைத் திருவடிகளிலே பணிமாறப் பெறவேணுமென்றேநான் விசாரமுற்றுக்கிடந்தேன் பெருமானே! என்றாயிற்று கஜேந்திராழ்வான் விண்ணப்பஞ் செய்தது. இதற்குத் திருவாழியாழ்வானையனுப்பி என் செய்வது? ஸங்கல்பசக்தியினால்தான் என்செய்வது? நேரில்வந்துகாட்சிதந்தேயாக வேண்டியதாயிற்று. வந்தருளி யானைபட்ட இடரின் கனத்தைக் கண்டவாறே 'அந்தோ! என் காவற் சோர்வு என்னாயிற்று! என்பக்தனை இங்ஙனே முதலைவாயில் துடிக்கவிட்டேனே! ஓ படுகொலை படுகொலை படுகொலை!' என்று துடித்து, திருப்பரிவட்டத்தைத் திருப்பவளத்திலேவைத்து வெதுகொண்டு ஒற்றியொற்றி உபசாரங்கள் செய்தாலன்றித் தன்னுடைய நெஞ்சாறல் தீரமாட்டாதாயிருந்தமையாலே அதுவும் செய்ய ப்ராப்தமாயிற்று.

நான்காம் பாதத்தில் பராமம்ர்சுஷ: என்கிற ப்ரயோகம் விலக்ஷணமானது 'பராமம்ர்சிவாந்' என்பது ப்ரதமாவிபக்தியில் ரூபம்; அதற்கு ஷஷ்டீவிபக்தியில் ரூபம் பராமம்ர்சுஷ: என்பது; பகவத் விசேஷணம். வேதத்திற்கே உரியதான க்வஸு ப்ரத்யயாந்த ரூபமிது, வைதிக ப்ரயோகங்கள் சில லோகத்திலும் வழங்குவனவாம். *தம் தஸ்திவாம்ஸம் நகரோபகண்டே* இத்யாதி.

கா மநீஷா? என்று ப்ரச்நத்திலே நோக்காக அருளிச் செய்ததன்று; ஈடுபாடு தோற்றவருளிச்செய்கிறபடி, ... (63)

यः कश्चिदेव यदि किञ्चन हन्त जन्तुर्भव्यो भजेत भगवन्तमनन्यचेताः ।
तं सोऽयमीदृश इयानिति वाप्यजानन् हे वैनतेयसममप्युररीकरोषि ॥६४॥

ய: கச்சிதேவ யதி கிஞ்சந ஹந்த ஜந்து:
பவ்யோ பஜேத பகவந்த மநந்ய சேதா:,
தம் ஸோயமீத்ருச இயாநிதி வாப்யஜாநந்
ஹை வைநதேயஸமமப்யுரரீகரோஷி. (64)

ய: **கச்சிதேவ** **ஜந்து:** பவ்ய: அநந்ய சேதா: **பகவந்தம்** **கிஞ்சந** பஜேத யதி, **ஸோயம்** **ஈத்ருச:** **இயாந்** **இதி** வா அபி அஜாநந் தம் **வைநதேய** **ஸமமபி** **உரரீ** **கரோஷி; ஹை ஹந்த.**

(எம்பெருமானே!) எவனேனுமொருவன் தூயவனாய் அநந்யமநஸ்கனாய் தேவரீரைப் பணிந்தானாகில், இவன் இன்னான் இனையான் என்று கூட ஆலோசியாமல் அவனைப் பெரிய திருவடியோடொக்கவும் திருவுள்ளம் பற்றுகின்றீர்; இது மிக வியக்கத்தக்கது.

. * கீழ் ச்லோகத்தில் கஜேந்திராழ்வான் பக்கலிலே எம்பெருமான் காட்டின பரிவின் மிகுதியை யருளிச்செய்த ப்ரஸங்கத்திலே, எம்பெருமான் பக்தர்களை இன்னாரினையாரென்று பாராதே வ்யாமோஹாதிசயம் பெருக நின்று கைக்கொள்ளும் படியை யருளிச் செய்கிறாரிதில். [ய: கச்சிதேவ ஜந்து: பவ்ய: அநந்யசேதா: பகவந்தம் கிஞ்சந பஜேத யதி] திர்யக் ஜாதீயனான கஜேந்திரன் திறத்திலா இவ்வளவு வியாமோஹம்! என்றிறே சிலரெண்ணுவது; இன்னமும் கடைகெட்ட யோனிகளிலே பிறக்கவுமாம்; வஸ்து கோடியிலே எண்ணத்தகாத ஜன்மமாகவுமமையும். *அநந்ய சேதாஸ் ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யச:* என்று கீதையிற் சொன்னபடியே அநந்ய சேதஸ்கத்வமொன்றேயாயிற்று தேட்டம். [ஸோயம் ஈத்ருச இயாநிதிவாபி தம் அஜாநந்] இவன் இன்னானினையானென்றுகூட அவனை யிட்டெண்ணுவானல்லனெம்பெருமான். இவன்

செய்த குற்றமென்ன, இவனது பிறப்பென்ன, இவனது இயல்பென்ன என்று ஒன்றையும் கணிசியானென்றபடி. [வைநதேயஸமம்பி உரரீகரோஷி] * தாஸஸ் ஸகா வாஹநம் மாஸநம் த்வஜோ யஸ்தே விதாநம் வ்யஜநம் த்ரயீமயஃ* என்னப்பட்ட புள்ளரையனோடொக்கவும் அவனைக் கைக் கொள்ளும்படி காணாநின்றோம். [ஹை] இதென்ன சீலந்தான்! என்று வித்தராகிறபடி.

இந்த ச்லோகத்தில் உரரீகரோஷி என்று மத்யம புருஷக்ரியை யிருக்கையாலே இரண்டாம் பாதத்தில் பகவந்தம் என்றிருக்கிற ப்ரதம புருஷநிர்தேசம் சேராதென்று கொண்டு சிலர் "பவ்யோ பஜேத ஹி பவந்தம்" என்று பாடத்தைத் திருத்துவர்; அது வேண்டா; பகவந்தமென்றது தேவரீரை யென்றபடி. பூஜ்யம் பவந்தம் இதி யாவத். (64)

त्वत्साम्यमेव भजतामभिवाञ्छसि त्वं तत्साक्कृतैर्विभवरूपगुणैस्त्वदीयैः ।

मुक्तिं ततो हि परमं तव साम्यमाहुः त्वद्दास्यमेव विदुषां परमं मतं तत् ॥६५॥

த்வத்ஸாம்யமேவ பஜதாமபிவாஞ்சஸி த்வம்
தத்ஸாத்க்ருதைர் விபவரூபகுணைஸ் த்வதீயைஃ,
முக்திம் ததோ ஹி பரமம் தவ ஸாம்யமாஹுஃ
த்வத்தாஸ்யமேவ விதுஷாம் பரமம் மதம் தத். (65)

பஜதாம் தத்ஸாத்க்ருதைஃ த்வதீயைஃ விபவரூபகுணைஃ த்வத்ஸாம்யம் ஏவ த்வம் அபிவாஞ்சஸி; ததோ ஹி தவ பரமம் ஸாம்யம் முக்திம் ஆஹுஃ; த்வத்தாஸ்யம் ஏவ தத் விதுஷாம் பரமம் மதம்.

(எம்பெருமானே!) பக்தர்களுக்கு (முத்திதசையில் ஸாம்யமாவது தேவரீருடைய விபவங்களையும் ரூபகுணங்களையும் அவர்களுக்கு அதீனமாக்கி அதனாலேயே ஸாம்யாபத்தியென்றும் தேவரீர் திருவுள்ளம் பற்றியிருப்பது; (அங்ஙனன்றிக்கே) தேவரீருக்கு அடிமை செய்வதே மோக்ஷமென்று ஸ்ரீவைஷ்ணவ வித்வான்களின் சிறந்த கொள்கை.

*** இந்த ஸ்தவத்திற்கு ஸ்ரீவைகுண்டஸ்தவ மென்றிறே திருநாமமுள்ளது ஸ்ரீவைகுண்டநாதனை ஸவிபூதிகனாக அநுபவிக்க இழிந்தாராகையாலே இவ்வளவும் விபூதிப்பரப்பிலே ஊன்றிப்போந்தார். இடையிலே *யத் வைஷ்ணவம் ஹி பரமம் பதமாமநந்தி* என்கிற நாற்பத்தோராம் ச்லோகந்தொடங்கி ஐந்து ச்லோகங்களினால் திருநாட்டை வருணித்தவர் ப்ராஸங்கிகமாக எம்பெருமானுடைய திருக்குணங்களை ப்ரசம்ஸிக்கப் புகுந்து அவற்றைப் பேசிவந்தார். இனி, முக்தபோக்யமான திவ்யமங்கள விக்ரஹத்தை மேலேபேசப்புகுகிறாராய் இந்த ச்லோகத்தில் எம்பெருமானார் தர்சனப் படியே மோக்ஷபதார்த்த நிஷ்கர்ஷம் செய்தருளுகிறார்.

"பாஷாணகல்பதைவ முக்திஃ" என்றும், "ஆத்யந்திக துக்கத்வம்ஸ ஏவ மோக்ஷஃ" என்றும் சொல்லிப்போருவர் பிறர். *ब्रह्म वेद ब्रह्मैव भवति— ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி* என்கிற ச்ருதி வாக்யத்தின் உண்மைப்பொருளுணராதார் பரமபுருஷனோடு ஐக்யமாய் விடுகையே மோக்ஷ மென்றார்கள். * तदा विद्वान् पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्यमुपैति— ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜநஃ பரமம் ஸாம்ய முபைதி* என்கிற ச்ருதியினாலே பரப்ரஹ்மத்தோடு ஸாம்யமடைவதாகச் சொல்லிற்று. இரண்டு பொருள்கள் தனித்தனியே இருந்தாலல்லது ஸாம்யம் என்னப் போகாது. * तद्भिन्नत्वे सति तद्गतभूयोधर्मवत्त्वं साम्यम् * என்றிறே சாஸ்திரஜ்ஞர்கள் சொல்லுவது. "கமலஸமம் முகம்" என்றால்

கமலமென்கிறவொரு பதார்த்தமும் முகமென்கிறவொரு பதார்த்தமும் தனித்தனி**யிருந்து** தீரவேண்டுமன்றோ, அப்படியே சேதநனும் பரமசேதநனுமாகிற இரண்டு **வஸ்துக்கள்** தனித்தனியே உள்ளனவாக இசைந்தாலல்லது ஸாம்யமுபைதி என்று **ச்ருதி** சொன்னது பொருந்ாது. இந்த ஸாம்யாபத்தியாவது என்ன? என்று விமர்சிக்கு**மளவில்,** எம்பெருமானுக்குள்ள விபவரூப குணங்களெல்லாம் முக்தாத்மாவுக்குமுண்டாகப் பெறுகையே ஸாம்யம் என்னவேணும். முக்தி ஸாம்ராஜ்யமென்பது இவ்வளவேயன்று; *உற்றேனுகந்துபணிசெய்து உனபாதம் பெற்றேன்* என்று பணி செய்கையை விசேஷித்தருளிச் செய்திருக்கையாலே எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்வதுதான் மோக்ஷமென்றாயிற்று ஸ்ரீவைஷ்ணவ வித்வான்கள் திருவுள்ளம் பற்றியிருப்பது. அது தன்னையருளிச் செய்தாராயிற்று இந்த ச்லோகத்தில்.

நான்காம் பாதத்தில் **விதுஷாம்** என்றது-ஆழ்வார் ஆளவந்தார் எம்பெருமானார் போல்வாரைத் திருவுள்ளம் பற்றியது. (65)

तद्वै तथाऽस्तु कतमोऽयमहो ! स्वभावो यावान्यथाविधगुणो भजते भवन्तम् ।
तावांस्तथाविधगुणस्तदधीनवृत्तिस्संश्लिष्यसि त्वमिह तेन समानधर्मा ॥६६॥

தத் வை ததாஸ்து கதமோயமஹோ ஸ்வபாவோ
யாவாந் யதாவிதகுணோ பஜதே பவந்தம்,
தாவாந் ததாவிதகுணஸ் தததீநவ்ருத்தி:
ஸம்ச்லிஷ்யஸி த்வமிஹ தேந ஸமாநதர்மா. **66**

தத் வை ததா அஸ்து; அயம் ஸ்வபாவ: அஹோ கதம:!, யாவாந் யதாவிதகுண: **பவந்தம் பஜதே, த்வம் தாவாந் ததா விதகுண: தததீநவ்ருத்தி: தேந ஸமாந தர்மா ஸந் ஸம்ச்லிஷ்யஸி.**

(எம்பெருமானே!) கீழ்ச் சுலோகத்திற் சொல்லப்பட்ட விஷயம் அப்படியிருக்கட்டும். [இவ்வாச்சரியம் கேளீர்.] (ஒருசேதநன்) எவ்வளவிலனாய் எந்த குணத்தை உபாஸ்யமாகப் பரிக்ரஹித்தவனாய் தேவரீரை பஜிக்கின்றானோ, தேவரீர் அவ்வளவராய் அப்படிப்பட்ட குணாவிஷ்காரத்தையேயுடையராய் அவ்வுபாஸகனுக்கு அதீனமான வ்ருதியையுடையவராய் தத்ஸதர்மாவாய்க் கொண்டு அவனோடு கலந்தருளுகிறீர்; அந்தோ! இது என்ன இயல்பு!

—*அப்ரதீகாலம்பநாந்......தத்க்ரதுச்ச* என்கிற ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு விஷய வாக்யமாக * **यथाक्रतुरस्मिन् लोके पुरुषो भवति तथेत: प्रेत्य भवति** — யதாக்ரதுரஸ்மிந் லோகே புருஷோ பவதி ததா இத; ப்ரேத்ய பவதி* என்கிற ச்ருதியைக்காட்டி ***तथोपासीनस्तथैव प्राप्नोति என்று தாத்பர்யமருளப் பட்டது. அவ்வர்த்தமே இந்த சுலோகத்திலருளிச் செய்யப்படுகிறது. [**தத்வை ததாஸ்து**] கீழ்சுலோகத்தில் பூர்வார்த்தத்தில் சொல்லப்பட்ட விஷயம் கிடக்கட்டு மென்றபடி தன்னுடைய விபவரூப குணங்களை பக்தர்களுக்கு அதீனமாக்கி ஸாம்யாபத்தியளிப்பதாகச் சொன்னவது ஒரு பெரிய குணமோ? இப்போது சொல்லப்படுவதன்றோ மிகச்சிறந்த குணம்! என்பது கருத்து. அது தன்னைச் சொல்லுவதற்கு முன்னே [கதமோயமஹோ ஸ்வபாவ:!] என்று நெஞ்சு குழைகிறார். [**யாவாந் யதாவித குணோ பவந்தம் பஜதே**] பஜிப்பவன் எவ்வளவான ஜ்ஞாநாதி குணயுக்தனாய்க் கொண்டு தேவரீருடைய திருக்கல்யாண குணங்களிலே தன்னுடைய ருசிக்கீடாக எந்த திருக்குணங்களை உபாஸ்யமாகக்கொண்டு பஜிக்கிறானோ; [**த்வம் தாவாந் ததாவிதகுண:**] தேவரீரும்

அவ்வளவராய் அவனுபாஸித்த குணங்களை மாத்திரமே குணமாகக்கொண்டவராய் [ததநுவ்ருத்திः] அவ்வுபாஸகனிட்ட வழக்காய். [தேந ஸமாநதர்மா ஸம்ச்லிஷ்யஸி] அவனோடு புரையறக்கலந்து பரிமாறுகின்றீர். அயமஹோ கதமः ஸ்வபாவः என்று விஸ்மயப்படுகிறபடி.

வேதாந்திகளின் கோஷ்டியிலே தத்க்ரதுந்யாயம் ப்ரஸித்தம்; அதிற் சொன்ன உபாஸகனுக்கும் அவனுக்கு உபாஸ்யனான எம்பெருமானுக்குமே தெரியக்கடவதான இந்த குணவிசேஷத்தைப்பன்னியுரைக்கை நம்போல்வார்க்கு நிலமோ?

இந்த ச்லோகத்திற்கு மற்றொருவகையாகவும் பொருள் காணலாம். ... (66)

नीलाञ्जनाद्रिनिभमुन्नसमायताक्षमाजानुजैत्रभुजमायतकर्णपाशम् ।
श्रीवत्सलक्षणमुदारगभीरनाभिं पश्येम देव ! शरदश्शतमीदृशं त्वाम् ॥६७॥

நீலாஞ்ஜநாத்ரிநிப முந்நஸ மாயதாக்ஷம்
ஆஜாநு ஜைத்ரபுஜ மாயத கர்ணபாசம்,
ஸ்ரீவத்ஸலக்ஷண முதாரகபீரநாபிம்
பச்யேம தேவ! சரதச் சத மீத்ருசம் த்வாம். 67

ஹே தேவ! நீலாஞ்ஜநாத்ரிநிபம் உந்நஸம் ஆயதாக்ஷம் ஆஜாநு ஜைத்ர புஜம் ஆயதகர்ணபாசம் ஸ்ரீவத்ஸலக்ஷணம் உதார கபீரநாபிம் த்வாம் ஈத்ருசம் சதம் சரதः பச்யேம.

எம்பெருமானே! நீலாஞ்ஜனமலை போன்றவரும் நீண்ட திருமூக்குடையவரும், பரந்த திருக்கண்களை யுடையவரும், திருமுழந்தாளளவுந் தொங்குகின்ற ஜயசீல புஜங்களையுடையவரும், பரந்த் திருச்செவி மடல்களையுடையவரும், திருமறுமார்பரும், அழகிய ஆழ்ந்த திருநாபியையுடையவருமான தேவரீரை இவ்வண்ணமாகவே பல்லாண்டு பல்லாண்டளவும் ஸேவிக்கக் கடவோம்.

* * * இனி இந்தச்லோகம் முதலாக எண்பத்துமூன்றும் ச்லோகமளவாக பரம ப்ராப்யமான பரம புருஷார்த்தந்தன்னையே வாய்வெருவுகிறார். திருநாட்டில் திருமாமணி மண்டபந்தன்னிலேயே தாமிருப்பதாக பாவநாப்ரகர்ஷத்தாலே அபிஸந்தி பண்ணி அந்த திவ்யமங்கள விக்ரஹத்தையநுபவித்து இனியராய்ப் பேசுகிறார். [நீலாஞ்ஜநாத்ரிநிபம்] * பச்சைமாமலைபோல் மேனியிறே. * நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே வாவென்று கூவும் * என்னும்படியிறே உள்ளது. [உந்நஸம்] * மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோவென்று நித்யஸந்தேஹ ஜநகமாயாயிற்று கோலநீள் கொடிமூக்கிருப்பது, "உந்நதா நாஸிகா யஸ்ய ஸः—உந்நஸः" என்று விக்ரஹமறிவது. * உபஸர்க்காச்ச* (5—4—119) என்கிற பாணிநிஸூத்ரம் காண்க. நாஸிகாயா நஸாதேசः.

[ஆயதாக்ஷம்] *கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய திருக்கண்களிருக்கிறபடி. [ஆஜாநு ஜைத்ரபுஜம்] திருமுழந்தாளளவும் நீண்டு ஜயசீலங்களாய் விளங்காநின்ற திருக்கைகளையுடையீர். [ஆயதகர்ணபாசம்] திருச்செவி மடல்கள் தோளளவும் தளதளென்று தொங்கியிருக்குமிறே. *லஸதம்ஸவிலம்பி கர்ணபாசம்* என்றும் *ஆயத் கர்ணபாசபரிகர்மஸதம்ஸம்* என்றும் வரதராஜஸ்தவத்திலுமருளிச்செய்கிறாரிறே. [ஸ்ரீவத்ஸலக்ஷணம்] ஸ்ரீவத்ஸமென்பது ஒரு மயிர்ச்சுழி. இதுஎம்பெருமானுடைய திருமார்பிலே அஸாதாரணமாக விளங்குவதாம். ஸ்ரீராமாயணத்தில் பெருமாளை நோக்கி மந்தோதரி பண்ணும் ஸ்தோத்ரத்திலும் *வ்யக்த மேஷ மஹாயோகீ...... ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீः* என வருவது காண்க. [உதாரகபீரநாபிம்] திருநாபிக்கு ஔதார்யமாவது நான்முகனைத்தந்து அவன் மூலமாக மூவுலகையும் தருகையாம். [தேவ! ஈத்ருசம் த்வாம் சரதச் சதம் பச்யேம] இங்ஙனமே காலதத்வமுள்ளதனையும்

ஸேவிக்கக்கடவேன். *ஸதா பச்யந்தி ஸூரய:* என்னப்பட்ட பேறு அடியேனுக்கு வாய்க்கவேணு மென்றுராயிற்று. "சரதச்சதம்" என்றது நூறுவருஷத்தளவிலே நிற்கும் வார்த்தையன்று; *இன்னுமொருநூற்றாண்டிரும் போலே கொள்ளக்கடவது. (67)

अम्भोरुहाक्षमरविन्दनिभाङ्घ्रियुग्ममाताम्रतामरसरम्यकराग्रकान्ति ।
भृङ्गालकं भ्रमरविभ्रमकायकान्ति पीताम्बरं वपुरदस्तु वयं स्तवाम ॥६८॥

அம்போருஹாக்ஷ மரவிந்த நிபாங்க்ரியுக்மம்
ஆதாம்ரதாமரஸரம்ய கராக்ரகாந்தி,
ப்ருங்காலகம் ப்ரமரவிப்ரம காயகாந்தி
பீதாம்பரம் வபுரதஸ் து வயம் ஸ்தவாம. 68

வயம் து, அம்போருஹாக்ஷம் அரவிந்த நிப அங்க்ரியுக்மம் ஆதாம்ர தாமரஸ ரம்யகராக்ர காந்தி ப்ருங்காலகம் ப்ரமர விப்ரமகாய காந்தி பீதாம்பரம் அத: வபு: ஸ்தவாம.

(எம்பெருமானே!) அடியோங்களோ வென்றால் செந்தாமரைக் கண்களையுடையதும் செந்தாமரை யடிகளையுடையதும் செந்தாமரை போன்றழகிய திருக்கைத்தலவழகையுடையதும் வண்டொத் திருண்ட குழல்களையுடையதும் வண்டின் சாயலை யுடையதும் பீதகவாடையணிந்ததுமான இந்தத் திருமேனியை ஏத்தக் கடவோம்.

*** கீழ்ச்லோகத்திலே காட்சியை வேண்டினார்; கண்டவாறே வாய்மூடி நிற்க வொண்ணாதிறே, வாய்படைத்த ப்ரயோஜனம் பெறுமாறு வாயாரத் துதிக்க ப்ராப்த மாகுமே; அதுதன்னைச் சொல்லிவைக்கிறாரிதில். *கட்டுரைக்கில் தாமரை நின்கண்பாதம் கையொவ்வா* என்னச்செய்தேயும், *செந்தாமரைத்தடங்கண் செங்கனிவாய்ச் செங்கமலம் செந்தாமரையடிக்கள்* என்றும், *கைவண்ணம் தாமரை வாய் கமலம்போலும் கண்ணிணையு மரவிந்தம் அடியுமஃதே* என்றுமிறே அருளிச்செய்து போருவது. இவ்வாழ்வான் தாமும் *அப்ஜம் நு கதம் நிதர்சநம்?* என்றருளிச்செய்துவைத்து *அப்ஜ பாத மரவிந்தலோசநம் பத்மபாணிதலம்* என்கிறாரிறே ஸுந்தரபாஹுஸ்தவத்தில். ஆகவே எம்பெருமானுடைய திவ்யாவயவங்களுக்கு மீண்டுமீண்டும் தாமரையையே போலியாகச் சொல்லவேண்டியிருக்கையாலே அம்போருஹ மென்றும் அரவிந்தமென்றும் தாமரஸ மென்றும் சொற்களை மாற்றியிட்டு வருணிக்கிறபடி,

[ப்ருங்காலகம்] *செங்கமலப்பூவில் தேனுண்ணும் வண்டேபோல் பங்கிகள் வந்து உன் பவளவாய் மொய்ப்ப* என்ற பெரியாழ்வார் திருமொழியையுட்கொண்டு அருளிச் செய்கிறபடி. முன்னெற்றி மயிர்கள் திருமுகமண்டலத்திலே படிந்திருப்பதை நோக்கினால் செங்கமலப் பூவில் தேனுண்பதற்கு வண்டுகள் படிந்தனவோ! என்னலாம் படியிருக்குமிறே.

[ப்ரமரவிப்ரமகாயகாந்தி] திருமேனி முழுவதுமே வண்டினங்களின் ஒளியாயிருக்கும். *தூவியம் புள்ளுடைத் தெய்வவண்டு* என்று எம்பெருமானையே வண்டாகவருளிச்செய்தாரிறே நம்மாழ்வார். [பீதாம்பரம்] திருமேனிக்குப் பரபாகசோபையாகத் திருப்பீதாம்பரமணிந்திருக்கிறபடி. இப்படிப்பட்ட திருமேனியை வாயார வாழ்த்தக் கடவே னென்றுராயிற்று. (68)

भ्रूविभ्रमेण मृदुशीतविलोकितेन मन्दस्मितेन मधुराक्षरया च वाचा ।
प्रेमप्रकर्षपिशुनेन विकासिना च संभावयिष्यसि कदा मुखपङ्कजेन ॥६९॥

ப்ரூவிப்ரமேண ம்ருதுசீதவிலோகிதேந
மந்தஸ்மிதேந மதுராக்ஷரயா ச வாசா,
ப்ரேமப்ரகர்ஷபிசுநேந விகாஸிநா ச
ஸம்பாவயிஷ்யஸி கதா முகபங்கஜேந. 69

ப்ரூ விப்ரமேண ம்ருது சீத விலோகிதேந மந்த ஸ்மிதேந, மதுராக்ஷரயா வாசா ச, ப்ரேம ப்ரகர்ஷ பிசுநேந விகாஸிநா முகபங்கஜேந ச (மாம்) கதா ஸம்பாவயிஷ்யஸி.

(எம்பிரானே!) திருப்புருவவிலாஸத்தாலும் மெல்லிய குளிர்ந்த கடாக்ஷ வீக்ஷணத்தாலும் புன்முறுவலாலும், மதுரமான அக்ஷரங்களையுடைய வாக்கினாலும், உள்ளேயுறையும் ப்ரேம ப்ரகர்ஷத்தைக் கோள் சொல்லித்தரக் கடவதாய் விகாஸசாலியான முகாரவிந்தத்தினாலும் (அடியேனை) எப்போது ஸத்கரிக்கப்போகிறாய்?

***—எம்பருமானார் ஸ்ரீவைகுண்டகத்யத்திலே—"கதாஹம் பகவந்தம் நாராயணம்... இதி பகவத்பரிசர்யாயாம் ஆசாம் வர்த்தயித்வா" என்றருளிச்செய்த கணக்கிலே நான்கு ச்லோகங்களருளிச்செய்கிறார்.

இதில், *நின்முக வொளிதிகழ முறுவல்செய்துநிற்குங்கால மென்றைக்கோ வென்கிறார். [ப்ரூவிப்ரமேண] *தன்கைச்சார்ங்கமதுவேபோல் புருவவட்டமழகிய* என்னும்படியான திருப்புருவங்களின் விலாஸத்தாலும். [ம்ருதுசீத விலோகிதேந] *தம்பெருங் கண்மலர்ப் புண்டரீகம் நம்மேலொருங்கே பிறழவைத்தார்* என்னும்படியான திருக் கண்ணோக்கத்தாலும். [மந்தஸ்மிதேந] *முற்றம்புகுந்து முறுவல்செய்து நின்றீர்* என்று அந்தரங்க ப்ரணயிநிகளுக்கே அரும்பெரும் பேறான புன்முறுவலினாலும். [மதுராக்ஷரயா ச வாசா] *வஞ்சி மருங்குல்நெருங்கநோக்கி வாய்திறந்தொன்று பணித்ததுண்டு* என்றும் *தொண்டரோர்க் கருளிச்சோதிவாய் திறந்து* என்றும் பேசலாம்படியான திருவாசகங்களாலும். [ப்ரேமப்ரகர்ஷ பிசுநேந விகாஸிநா முகபங்கஜேந ச] திருவுள்ளத்திலுறையும் ப்ரீதியடங்கலும் திருமுகமண்டல விகாஸத்திலே தோற்றக்கடவதாயிருக்கவேணும். இங்ஙனே அடியேனுக்குப் பரிசளிக்கத் திருவுள்ளம்பற்றியிருப்பதெப்போதோ? (69)

वज्राङ्कुशध्वजसरोरुहशङ्खचक्रमत्स्यीसुधाकलशकल्पककल्पिताङ्कम् ।
त्वत्पादपद्मयुगलं विगलत्प्रभाद्भिर्भूयोऽभिषेक्ष्यति कदा नु शिरो मदीयम् ॥७०॥

வஜ்ராங்குசத்வஜஸரோருஹ சங்கசக்ர
மத்ஸ்யீ ஸுதாகலச கல்பக கல்பிதாங்கம்,
த்வத்பாத பத்மயுகளம் விகளத் ப்ரபாத்பி:
பூயோபிஷேக்ஷ்யதி கதா நு சிரோ மதீயம். 70

வஜ்ர அங்குச த்வஜ ஸரோருஹ சங்க சக்ர மத்ஸ்யீ ஸுதாகலச கல்பக கல்பித அங்கம் த்வத் பாதபத்ம யுகளம் விகளத் ப்ரபா அத்பி: மதீயம் சிர: கதா நு பூய: அபிஷேக்ஷ்யதி.

(எம்பிரானே!) "வஜ்ரமென்ன அங்குசமென்ன த்வஜமென்ன தாமரையென்ன சங்கமென்ன சக்கரமென்ன மத்ஸ்யமென்ன அம்ருதகலசமென்ன கல்பவ்ருக்ஷமென்ன ஆகிய இவற்றின் ரேகைகளினால் அடையாளம் செய்யப் பெற்ற உன்து பாதாரவிந்த த்வந்த்வமானது பெருகுகின்ற காந்திப்ரவாஹமாகிற தீர்த்தத்தினால் என்னுடைய சிரஸ்ஸை எப்போது நன்றாக அபிஷேகம் செயயுமோ?

* * *—திருமுக மண்டலத்தினால் பண்ணியருளும் பரிசை ப்ரார்த்தித்தார் கீழ் ச்லோகத்தில். *நீ யொருநாள் படிக்களவாக நிமிர்த்த நின் பாதபங்கயமே தலைக்கணியாய்* என்றும், *கோலமாமென் சென்னிக்கு உன் கமலமன்ன குரைகழலே* என்றும், *அடிச்சியோந்தலைமிசை நீயணியாய் ஆழியங்கண்ணாவுன் கோலப்பாதம்* என்றும் ப்ரார்த்திப்பர்களிறே ஆழ்வார்கள்; அந்த ப்ரார்த்தனையும் செய்தருளுகிறார் இரண்டு ச்லோகங்களாலே. வஜ்ராயுதாத்மகமான சின்னம், அங்குசரூபமான சின்னம், த்வஜரூபமான சின்னம், தாமரைப்பூமயமான சின்னம், பஞ்சாயுத சின்னம், மத்ஸ்யாகாரமான சின்னம் அம்ருதகலச ரூபமான சின்னம், கல்பவ்ருக்ஷாத்மகமான சின்னம் ஆகியஇவை உள்ளடியிலே பொருந்தியிருக்கப்பெறுவது உத்தம புருஷபாத சிஹ்நமாக சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருப்பதாலும், எம்பெருமானுடைய திருவடித்தலங்களிலே இந்த சின்னங்களை பக்தர்கள் அநுஸந்திப்பதாலும் வஜ்ராங்குசேத்யாதி அருளிச்செய்கிறபடி. அதிமாநுஷ ஸ்தவத்திலும்* வஜ்ரத்வஜாங்குச ஸுதா கலசாதபத்ரபங்கேருஹாங்க பரிகர்ம பரீத மந்தஃ* என்றருளிச் செய்தது காண்க. ஆளவந்தாரும் *சங்க ரதாங்க கல்பக த்வஜாரவிந்தாங்குச வஜ்ரலாஞ்சநம்* என்றருளிச் செய்தார். பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே *வஜ்ராரவிந்தத்வஜச் சத்ரீகல்பக சங்கசக்ரேத்யாதி யருளிச்செய்தார். ஆக, ரேகாத்மகங்களான இவற்றாலே அலங்க்ருதமான தேவரீருடைய பாதாரவிந்தயுகளமானது காந்தி ப்ரவாஹங்களாலே அடியேனுடைய தலையை அபிஷேகம் செய்யப்பெறுவது எப்போதோ வென்றாராயிற்று. (70)

त्रैविक्रमक्रमकृताक्रमणत्रिलोकमुत्तंसमुत्तममनुत्तमभक्तिभाजाम् ।
नित्यं धनं मम कदा हि मदुत्तमाङ्गमङ्गीकरिष्यति चिरं तव पादपद्मम् ॥७१॥

த்ரைவிக்ரமக்ரமக்ருதாக்ரமண த்ரிலோகம்
உத்தம்ஸமுத்தம மநுத்தமபக்தி பாஜாம்,
நித்யம் தநம் மம கதாஹி மதுத்தமாங்கம்
அங்கீகரிஷ்யதி சிரம் தவ பாதபத்மம். 71

த்ரைவிக்ரம க்ரம க்ருத ஆக்ரமண த்ரிலோகம் அநுத்தம பக்திபாஜாம் உத்தமம் உத்தம்ஸம் மம நித்யம் தநம் தவ பாதபத்மம் மதுத்தமாங்கம் கதா சிரம் அங்கீகரிஷ்யதி?

(எம்பிரானே!) த்ரிவிக்ரமாபதானத்தினால் மூவுலகையும் ஆக்ரமித்ததாய் சிறந்த பக்திமான்களுக்கு உத்தமமான சிரோபூஷணமாய் எனக்கு சாச்வதமான செல்வமாயிராநின்ற உனது திருவடித்தாமரையை என்னுடைய தலையானது நித்யமாக அங்கீகரிப்ப தெப்போதோ?

* * *-தேவரீருடைய உலகமளந்த பொன்னடிகளை என்னுடைய தலை நித்ய சேகரமாகக்கொள்வது என்றைக்கோவென்கிறார், [**த்ரைவிக்ரமக்ரமக்ருதாக்ரமணத்ரிலோகம்**] * தாவி யன்றுலகமெல்லாம் தலைவிளாக்கொண்ட வெந்தாய் * என்கிறபடியே காடுமோடையுமளந்த திருவடிகளுக்குப் பாவியேன் தலை ஆஸ்பதமாகக் கூடாதோ? [**அநுத்தமபக்திபாஜாம் உத்தமம் உத்தம்ஸம்**] மிகச் சிறந்த பக்தியே வடிவெடுத்த ஆழ்வார்களுக்கும் ஆளவந்தார் போன்ற ஆசாரியர்களுக்கும் தலையான சிரோபூஷணமாயிருந்த திருவடிகளை நீசனேன் நிறையொன்றுமிலேன் விரும்புவது தகுதியற்றதாயினும் சாபலத்தாலே விரும்புகிறேன், க்ஷமித்தருளவேணும் என்பது உட்கருத்து.

இந்தச்லோகத்தில் பாத பத்மத்தை கர்த்தாவாக வைத்து உத்தமாங்கத்தை கர்மமாக்கி, தேவரீருடைய பாதார விந்தமானது என்னுடைய தலையை எப்போது அங்கீகரிக்கப்போகிறதென்று சிலர் பொருளுரைக்கப் பார்ப்பர்கள்; அது பொருந்தாது. அப்போது இரண்டாவது பாதத்தில் உத்தம்ஸம் என்றது சேராது; ஏனென்னில், அந்த சப்தம் நித்ய பும்லிங்கமாகையாலே "உத்தம்ஸः பாதபத்மம்" என்றேயிருக்கக் கடவதா

கும். பாதபத்மமென்பதை த்விதீயாந்தமாகத் திருவுள்ளம்பற்றி ப்ரயோகித்தருளின படியாலே உத்தம்ஸ மென்றதும் த்விதீயாந்தமாக உபபந்நமாகக் குறையில்லை. (71)

उन्निद्रपत्रशतपत्रसगोत्रमन्तर्लेखारविन्दमभिनन्दनमिन्द्रियाणाम् ।
मन्मूर्ध्नि हन्त करपल्लवतल्लजं ते कुर्वन् कदा कृतमनोरथयिष्यसे माम् ॥७२॥

உந்நித்ரபத்ர சதபத்ரஸகோத்ரம், அந்தர்
லேகாரவிந்த மபிநந்தந மிந்த்ரியாணும்,
மந்மூர்த்நி ஹந்த கரபல்லவதல்லஜம் தே
குர்வந் கதா க்ருதமநோரதயிஷ்யஸே மாம். 72

உந்நித்ர பத்ர சதபத்ர ஸகோத்ரம் அந்தர்லேகாரவிந்தம் இந்த்ரியாணும் அபிநந்தநம் தே கரபல்லவதல்லஜம் மந் மூர்த்நி குர்வந் மாம் கதா க்ருத மநோரதயிஷ்யஸே.

(எம்பிரானே!) விகஸித்த இதழ்களையுடைய தாமரையோ டொத்ததாயும் உட்புறத்தில் ரேகாரூபமான அரவிந்தத்தை யுடையதாயும் ஸர்வேந்த்ரியாஹ்லாத கரமாயும் சிறந்த தளிர் போன்றதாயுமிருக்கிற உன்னுடைய திருக்கைத்தலத்தை என் தலையில் வைத்து என்னைப் பரிபூர்ண மநோரதனுக்குவது என்றைக்கோ?

* * *— * அணிமிகு தாமரைக் கையை யந்தோ அடிச்சியோந்தலைமிசை நீயணியாய் * என்று ஆழ்வார் ப்ரார்த்தித்தாப்போலே ப்ரார்த்திப்பது இந்த ச்லோகம். [**உந்நித்ரபத்ரசதபத்ரஸகோத்ரம்**] நாட்பூ மலர்ந்தாற்போலே மலர்ந்த திருக்கைத் தலங்களை அடியேன் சென்னிமீது வைத்தருளவேணும். [**அந்தர்லேகாரவிந்தம்**] திருக்கைத்தலம் தாமரை போன்றிருப்பது மாத்திரமன்று; தாமரைரேகையும் பொருந்தியிருக்குமதாயிற்று. [**இந்த்ரியாணும் அபிநந்தநம்**] ஸர்வேந்த்ரியாஹ்லாதகரமானது. இப்படிப்பட்ட [**தே கரபல்லவ தல்லஜம்**] தல்லஜ சப்தம் ச்ரேஷ்ட வாசகம். அழகிற் சிறந்த தளிர் போன்ற திருக்கைத்தலத்தை. [**மந்மூர்த்நி குர்வந்**] * காலந்தோறும் யானிருந்து கைதலை பூசலிட்டால் * என்கிறபடியே என்கையையே என்தலைமீதுவைத்துக்கொண்டு புலம்பா நின்றேன் காண்; இப்படிப்பட்ட என்தலையிலே உன்திருக்கைத்தலத்தை வைத்தருளி அஞ்சேலென்னவேண்டாவோ? நான் தலைபடைத்த ப்ரயோஜனம் இதுவன்றோ. (72)

आङ्गी निसर्गनियता त्वयि हन्त कान्तिर्नित्यं तवालमियमेव तथाऽपि चान्या ।
वैभूषणी भवति कान्तिरलंतरां सा हे पुष्कलैव निखिलाऽपि भवद्विभूतिः ॥७३॥

ஆங்கி நிஸர்கநியதா த்வயி ஹந்த காந்தி:
நித்யம் தவாலமியமேவ ததாபி சாந்யா,
வைபூஷணீ பவதி காந்தி ரலந்தராம் ஸா
ஹை புஷ்கலைவ நிகிலாபி பவத்விபூதி:. 73

த்வயி நிஸர்கநியதா தவ ஆங்கீ இயம் காந்திரேவ நித்யம் அலம்; ததாபிச அந்யா வைபூஷணீ ஸா காந்தி: அலம் பவதிதராம்; நிகிலாபி பவத்விபூதி: ஹை புஷ்கலைவ.

(எம்பிரானே!) உனது திருமேனியில் இயற்கையாகவுள்ள காந்தியே போதும்; அதற்குமேல் மற்றொருகாந்தியுமுள்ளதே, (அதாவது) திருவாபரணச் சேர்த்தியாலுண்டான காந்தியானது பரம போக்யமாயிராநின்றது; (இங்ஙனே பிரித்துச் சொல்லுவதென்?) உன்னுடைய விபூதி ஒவ்வொன்றுமே யாவஜ்ஜீவம் அநுபவிக்கப் போதுமானது; ஐயோ!.

* * *—இயற்கையழகின்மேலே செயற்கையழகும் தம்மையீடுபடுத்தும்படியை யருளிச் செய்கிறாரிதில். தேவரீருடைய போக்யதையிலே அடியேன் ஈடுபடுகைக்குத் திருமேனியில் நின்றும் இயற்கையாகப் பரம்புகிற காந்தியொன்றே போதுமாயிருக்க, அதற்கு மேலே *மெய்யமர் பல்கலன் நன்கணிந்தானுக்கு* என்றும், *பலபலவேயாபரணம்* என்றும், *மின்னுநீண்முடியாரம் பல்கலன் தானுடை யெம்பெருமான்* என்றும் சொல்லுகிறபடியே திருவாபரணங்களணிந்ததனாலுண்டாகும் அழகு வெள்ளமுமானால் பின்னையும்கேட்கவேணுமோ? தேவரீருடைய விபவம் ஒவ்வொன்றும் புஷ்கலமாயேயிருப்பது.

श्रीवत्सकौस्तुभकिरीटललाटिकाभिः केयूरहारकटकोत्तमकण्ठिकाभिः ।

उद्दामदाममणिनूपुरनीविबन्धैर्भान्तं भवन्तमनिमेषमुदीक्षिषीय ॥७४॥

ஸ்ரீவத்ஸ கௌஸ்துப கிரீட லலாடிகாபி:
கேயூரஹார கடகோத்தம கண்டிகாபி:,
உத்தாமதாம மணிநூபுர நீவிபந்தை:
பாந்தம் பவந்த மநிமேஷ முதீக்ஷிஷீய. 74

ஸ்ரீவத்ஸ கௌஸ்துப கிரீட லலாடிகாபி: கேயூர ஹார கடக உத்தம கண்டிகாபி: உத்தாம தாம மணிநூபுர நீவிபந்தை: பாந்தம் பவந்தம் அநிமேஷம் உதீக்ஷிஷீய.

(எம்பிரானே!) ஸ்ரீவத்ஸம் கௌஸ்துபம் கிரீடம் சுட்டி இவைகளாலும், தோள்வளை ஹாரம் கடகம் சிறந்த கண்டஸரம் இவைகளாலும், மிகச்சிறந்த வொளியையுடைய மணிநூபுரமென்ன உதரபந்தனமென்ன இவைகளாலும் விளங்கிக் கொண்டிருக்கிறவுன்னை இமை கொட்டாது ஸேவிக்கக் கடவேன்.

* * *—திருவாபரணங்களோட்டைச் சேர்த்தியழகை யநுபவிக்க ஆசைப்படுகிறார். திருமார்பிலணிந்துள்ள ஸ்ரீவத்ஸ கௌஸ்துபங்களென்ன, திருமுடியிலணிந்துள்ள திருவபிஷேகமென்ன, திருநெற்றியணியான சுட்டியென்ன, திருத்தோள்வளையென்ன, கோலமாமணியாரங்களென்ன, திருக்கைகளுக்கான கடகங்களென்ன, திருக்கழுத்துக்கணியான கண்டஸரமென்ன, வனமாலையென்ன, திருவடிகளுக்கணியான பாடகமென்ன, திருவுதரபந்தனமென்ன ஆகிய இத்திருவாபரணங்களோடே விளங்காநின்ற தேவரீரைக் கண்ணிமைத்தலின்றியே ஸேவிக்கப்பெறுவேனாகவேணும். ... (74)

ऐन्दीवरी क्वचिदपि क्वचनारविन्दी चान्द्रातपी क्वचन च क्वचनाथ हैमी ।

कान्तिस्तवोढपरभागपरस्परश्रीः पार्येत पारणयितुं किमु चक्षुषोर्मे ॥७५॥

ஐந்தீவரீ க்வசிதபி க்வசநாரவிந்தீ
சாந்த்ராதபீ க்வசந ச க்வசநாத ஹைமீ,
காந்திஸ் தவோட பரபாக பரஸ்பரஸ்ரீ:
பார்யேத பாரணயிதும் கிமு சக்ஷுஷோர் மே. 75

க்வசிதபி ஐந்தீவரீ, க்வசந ஆரவிந்தீ, க்வசந சாந்த்ராதபீ, அத க்வசந ஹைமீ ஊடபரபாகபரஸ்பரஸ்ரீ: தவ காந்தி: மே சக்ஷுஷோ: பாரணயிதும் பார்யேத கிமு!

(எம்பிரானே!) சிலவிடங்களில் நீலோத்பல ஸமாநகாந்தியும் சிலவிடங்களில் அரவிந்த ஸமாநகாந்தியும் சிலவிடங்களில் நிலாப் போன்ற காந்தியும் சிலவிடங்களில் பொன்போன்றகாந்தியுமாக இப்படி ஒன்றோடொன்று பரபாகமாகப் பொருந்தியுள்ள திருவடிவின் ஒளியானது எனது கண்களுக்குப் பூர்ண த்ருப்தியையுண்டாக்கவற்றோ? (அப்படிப்பட்ட காலம் என்றைக்கோ?,)

* * *—எம்பெருமானுடைய திருமேனியிலே தோன்றும் பரஸ்பரபரபாக சோபைகளை அற்புதமாகப் பேசியருளுகிறார். திவ்யமங்கள விக்ரஹகாந்தியோ இந்தீவர காந்தி பரம்பினாற்போன்றுள்ளது; திருமுகம் திருக்கைத்தலம் திருவடித்தலம் முதலான வற்றிலே தோன்றும் காந்தியோ அரவிந்த காந்தி பரம்பினாற்போன்றுள்ளது; மந்த ஹாஸமுக்தா ஹாராதிகளிலே தோன்றும் காந்தி நிலாவொளி பரம்பினாற்போன்றுள்ளது; கௌஸ்துப பீதாம்பராதிகளிலே தோன்றும் காந்தி ஸுவர்ணச்சாயை பரம்பினாற் போன்றுள்ளது. ஆகவிப்படி பரஸ்பர பரபாக சோபையை வஹித்திரா நின்ற தேவரீருடைய விலக்ஷண திவ்யமங்கள விக்ரஹ காந்தியானது அடியேனுடைய கண்களின் பட்டினியைத் தீர்த்துப் பரிபூர்ண பாரணையாகவேணுமென்றாராயிற்று. ... (75)

त्वां सेवितं जलजचक्रगदासिशार्ङ्गैस्तार्क्ष्येण सैन्यपतिनाऽनुचरैस्तथाऽन्यैः ।

देव्या श्रिया सह लसन्तमनन्तभोगे भुञ्जीय साञ्जलिरसङ्कुचिताक्षिपक्ष्मा ॥७६॥

த்வாம் ஸேவிதம் ஜலஜசக்ரகதாஸிசார்ங்கை:
தார்க்ஷ்யேண ஸைந்யபதிநாநுசரைஸ் ததாந்யை:,
தேவ்யா ச்ரியா ஸஹ லஸந்தமநந்தபோகே
புஞ்ஜீய ஸாஞ்ஜலிரஸங்குசிதாக்ஷிபக்ஷ்மா. 76

ஜலஜ சக்ர கதா அஸி சார்ங்கைஃ தார்க்ஷ்யேண ஸைந்யபதிநா ததா அந்யைஃ அநுசரைஃ ஸேவிதம் அநந்த போகே ச்ரியா தேவ்யா ஸஹ லஸந்தம் த்வாம் அஸங்குசித அக்ஷிபக்ஷ்மா ஸாஞ்ஜலிஃ புஞ்ஜீய.

(எம்பிரானே!) சங்கு சக்கரம் கதை வாள் வில் ஆகிய பஞ்சாயுதங்களாலும் பெரிய திருவடியாலும் ஸேநாபதியாழ்வாராலும் மற்றுமுள்ள அநுசரர்களாலும் ஸேவிக்கப்பட்டவனாயும், திருவனந்தாழ்வானது திருமேனியின்மீது ஸ்ரீதேவியோடு கூட விளங்குபவனாயுமுள்ள உன்னைக் கண்ணிமை கொட்டாமல் அஞ்ஜலி ஹஸ்தனாய்க் கொண்டு அநுபவிக்கக் கடவேன்.

* * *—பஞ்சாயுதாழ்வார்கள் திகழவும், பெரிய திருவடி ஸேனாபதியாழ்வான் முதலான நித்ய கிங்கரர்கள் புடை சூழவும் பெரிய பிராட்டியாரோடே கூடத் திருவனந்தாழ்வான் மீது விளங்கா நின்ற தேவரீரைக் கண்ணிமைத்தலின்றியே கையு மஞ்ஜலியுமாய் நின்று ஸேவிக்கக் கடவேனென்றாராயிற்று. ... (76)

कैङ्कर्यनित्यनिरतैर्भवदेकभोगैर्नित्यैरनुक्षणनवीनरसार्द्रभावैः ।

नित्याभिवाञ्छितपरस्परनीचभावैर्मद्दैवतैः परिजनैस्तव सङ्गसीय ॥७७॥

கைங்கர்யநித்யநிரதைர் பவதேகபோகை:
நித்யைரநுக்ஷணநவீநரஸார்த்ரபாவை:,
நித்யாபிவாஞ்சித பரஸ்பர நீசபாவை:
மத்தைவதை: பரிஜநைஸ் தவ ஸங்கஸீய. 77

கைங்கர்ய நித்ய நிரதைஃ பவத் ஏக போகைஃ நித்யைஃ அநுக்ஷண நவீந ரஸ ஆர்த்ர பாவைஃ நித்ய அபி வாஞ்சித பரஸ்பர நீசபாவைஃ மத் தைவதைஃ தவ பரிஜநைஃ (ஸஹ) ஸங்கஸீய.

ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி ஆட்செய்பவர்களாயும் அநந்ய போக்யத்வஸ்வரூபத்தில் தலை நின்றவர்களாயும் நித்யஸித்தர்களாயும் க்ஷணந்தோறும் புதிது புதிதாக விளைகின்ற பகவதநுபவ ருசியினால் உருகின நெஞ்சையுடையராயும் பாகவதர்களுக்குள் பரஸ்பரம் சேஷத்வத்தையே ஸதா விரும்புமவர்களாயும் அடியேனுக்குத் தெய்வமாகக் கொண்டாடத் தக்கவர்களாயுமிருக்கிற தேவரீருடைய அடியார்களோடுடனே கூடிவாழக்கடவேன்.

* * *—நம்மாழ்வார் *அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்று கொலோ* என்று, பாரித்ததும் அடியார்களின் திரளிலே கலந்து பரிமாறுவதற்கே. பிறகு பேறு பெற்றதாகச் சொல்லுமிடத்தும் *வந்தவரெதிர் கொள்ள மாமணி மண்டபத்து அந்த மில்பேரின்பத்து அடியரோடிருந்தமை* என்று அடியார்கள் திரளில் கலந்து பரிமாறப் பெற்றபடியையே அருளிச்செய்து தலைக்கட்டினார். ஆகவே திருநாட்டில் பெரும்பேறு அதுவேயென்று ஆழ்வாருடைய ஸித்தாந்தமாகையாலே அதனையடியொற்றியே இந்த ச்லோகமருளிச் செய்தாராயிற்று, கீழ்ச்லோகத்தில் "த்வாம் புஞ்ஜீய" என்று பகவதநுப வத்தில் பாரிப்புக் காட்டினாராகிலும் அதைப் பூர்வபக்ஷமாக்கி இதனையே ஸித்தாந்தமாக வருளிச் செய்ததாய்க் கொள்ளக்கடவது. தனியேயிருந்து பகவதநுபவம் செய்வதிற் காட்டிலும் அடியார் திரளிலே அந்வயித்திருந்து அது செய்கை மிகவும் ரஸித்திருக்கு மாகையாலே இங்ஙனே யருளிச் செய்தபடி. பாகவத கோஷ்டியில் கலந்து பரிமாறுவது பகவதநுபவத்தின் ஸாரஸ்யம் விஞ்சுகைக்கேயிறே.

நித்யாபிவாஞ்சித பரஸ்பரநீசபாவை: என்றவிடத்து "கேசவா புருடோத்தமா கிளர்சோதியாய் குறளாவென்று பேசுவாரடியார்கள் எந்தம்மை விற்கவும் பெறுவார் களே" என்ற பெரியாழ்வார் திருமொழியும், "ஹரிபக்த தாஸ்ய ரஸிகா: பரஸ்பரம் க்ரய விக்ரயார்ஹதயா ஸமிந்ததே" என்ற யதிராஜஸப்ததி ஸூக்தியும் அநுஸந்தேயம். [மத்தைவதை:] *கடல்மல்லைத் தலசயனத்துறைவாரைக் கொண்டாடும் நெஞ்சுடை யார் அவரெங்கள் குல தெய்வமே* என்ற பெரிய திருமொழி காண்க. ... (77)

(மேல் மூன்று ச்லோகங்கள் குளகம்.)

यत्किञ्चिदुज्ज्वलमिदं यदुपाख्ययाऽऽहुस्सौन्दर्यमृद्धिरिति यन्महिमांशलेशः ।
नाम्नैव यां श्रियमुशन्ति यदीयधाम त्वामामनन्ति यतमा यतमानसिद्धिः ॥७८॥

யத்கிஞ்சி துஜ்ஜ்வலமிதம் யதுபாக்யயாஹு:
ஸௌந்தர்யம் ருத்திரிதி யந்மஹிமாம்சலேச:,
நாம்நைவ யாம் ச்ரியமுசந்தி யதீயதாம
த்வாமாமநந்தி யதமா யதமாந ஸித்தி:. 78

या वै त्वयाऽप्युदधिमन्थनयत्नलभ्या याऽन्तर्हितेति जगदुन्मथनोद्यतोऽभूः ।
या च प्रतिक्षणमपूर्वरसानुबन्धैर्भावैर्भवन्तमभिनन्दयते सदैव ॥७९॥

யா வை த்வயாப்யுதநிமந்தநயத்நலப்யா
யாந்தர்ஹிதேதி ஜகதுந்மதநோத்யதோபூ:,
யா ச ப்ரதிக்ஷணமபூர்வரஸாநுபந்தை:
பாவைர் பவந்தமபிநந்தயதே ஸதைவ. 79

रूपश्रिया गुणगणैर्विभवेन धाम्ना भावैरुदारमधुरैश्चतुरैश्चरित्रैः ।
नित्यं तवैव सदृशीं श्रियमीश्वरीं तां त्वां चाञ्चितः परिचरेयमुदीर्णभावः ॥८०॥

ரூபச்ரியா குணகணைர் விபவேந தாம்நா
பாவைருதாரமதுரைச் சதுரைச் சரித்ரை:,
நித்யம் தவைவ ஸத்ருசீம் ச்ரியமீச்வரீம் தாம்
த்வாஞ்சாஞ்சித: பரிசரேய முதீர்ணபாவ:. 80

உஜ்ஜ்வலம் யத்கிஞ்சித் இதம் யத்
உபாக்யயா ஆஹுஃ, ஸௌந்தர்யம்
ருத்திஃ இதி யந்மஹிம அம்ச லேசஃ,
யாம் நாம்நா ஏவ ச்ரியம் உசந்தி,
த்வாம் யதீய தாம ஆமநந்தி. யதமா யத
மாந ஸித்திஃ.

மிகுந்த வொளியுடையதாகவுள்ளது யாதொன்றுண்டோ அப்படிப்பட்டதை யாவளொரு பிராட்டியின் திருநாமத்தினால் சொல்லுகின்றார்களோ. (உலகில்) ஸௌந்தர்ய மென்றும் ஸம்பத்தென்றும் சொல்லப்படுமவை யாவளொரு பிராட்டியின் மஹிமையினது லவலேசமோ, யாவளொரு பிராட்டியைத் திருநாமத்தினாலேயே ஸ்ரீயென்று சொல்லுகிறார்களோ, (எம்பெருமானாகிய) தேவரீரை யாவளொரு பிராட்டியினுடையதான ஸ்தானமாகச் சொல்லுகிறார்களோ, யாவளொரு பிராட்டியானவள் யோகிகளின் ஸித்தியே வடிவெடுத்தவளோ, ... (78)

யா வை த்வயாஅபி உததி மந்தந யத்ந
லப்யா, யா அந்தர்ஹிதா இதி ஜகத்
உந்மதந உத்யதஃ அபூஃ, யா ப்ரதிக்ஷ
ணம் அபூர்வரஸ அநுபந்தைஃ பாவைஃ
பவந்தம் ஸதா ஏவ அபிநந்தயதே.

யாவளொரு பிராட்டி தேவரீராலும் கடல்கடைகையாகிற முயற்சியினால் பெறத்தக்கவளாயிருக்கின்றாளோ, யாவளொரு (ஸீதா) பிராட்டி (பஞ்சவடியில் ராவணாபஹார வியாஜத்தினால்) மறைந்தாளென்று ஜகத்தையெல்லாம் உபஸம்ஹாரம் செய்வதில் தேவரீர் உத்யோகித்ததோ, யாவளொரு பிராட்டி க்ஷணந்தோறும் அபூர்வமான [புதிதுபுதிதாகத் தோன்றுகின்ற] சுவைச் செறிவையுடைய பாவபந்தங்களினால் தேவரீரை இடைவீடின்றி உகப்பிக்கின்றாளோ, ... (79)

ரூப ச்ரியா குண கணைஃ விபவேந
தாம்நா உதார மதுரைஃ பாவைஃ சதுரைஃ
சரித்ரைஃ நித்யம் தவ ஏவ ஸத்ருசீம்
தாம் ஈச்வரீம் ச்ரியம் த்வாம் ச அஞ்சிதஃ
உதீர்ண பாவஃ பரிசரேயம்.

வடிவழகினாலும் திருக்குணங்களினாலும் அவதாரத்தினாலும் தேஜஸ்ஸினாலும் (அல்லது) இருப்பிடத்தினாலும் மிகப் பெரியவையாய் மதுரங்களான சித்தவ்ருத்திகளினாலும் சதிரான நடத்தைகளினாலும் எப்போதும் தேவரீருக்கே ஏற்றிருப்பவளான அந்தப்பெரிய பிராட்டியையும் தேவரீரையும் அடியேன் அடைந்தவனாகி கைங்கர்யமநோரதம் விஞ்சப் பெற்றவனாய் அடிமைசெய்யக் கடவேன். ... (80)

இம்மூன்று ச்லோகங்களுஞ் சேர்ந்து ஏகாந்வயமாகையாலே குளகமெனப்படும்.

* * *—இம்மூன்று ச்லோகங்களினாலும் *கோலத்திருமாமகளோடு உன்னைக்கூடி அடிமை செய்யக் கடவேனென்று இருவருமான சேர்த்தியிலே தமக்குள்ள மநோரதத்தை ஆவிஷ்கரித்தருளுகிறார். இம்மூன்று ச்லோகங்களும் பெரியபிராட்டியாருடைய பெருமையைப் பரக்கப் பேசுவன. ஸ்ரீஸ்தவத்தில் *ஐச்வர்யம் யதசேஷபும்ஸி யதிதம் ஸௌந்தர்யலாவண்யயோ ரூபம் யச் சஹி மங்களம் கிமபி யல்லோகே ஸதித்யுச்யதே, தத்ஸர்வம் த்வததீநமேவ* என்ற ச்லோகத்தினால் மிகவிரிவாக விளக்கப்பட்ட விஷயத்தை இங்கு "யத்கிஞ்சிதுஜ்ஜ்வலமிதம் யதுபாக்யயாஹுஃ ஸௌந்தர்யம்ருத்திரிதி யந்மஹிமாம்ச லேசஃ" என்ற இரண்டு பாதங்களினால் சுருக்கி அருளிச் செய்தபடி. ஆளவந்தார் சதுச்ச்லோகியில் *ஸ்ரீரித்யேவ ச நாம தே பகவதி ப்ரூமஃ கதம் த்வாம் வயம்* என்றருளிச்செய்ததையடியொற்றி *நாம்நைவ யாம் ச்ரிய முசந்தி* என்றருளிச்செய்தபடி. [யதீயதாம த்வாம் ஆமநந்தி] *அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கையுறைமார்பா!* என்று ஆழ்வாரும், *சகர்த்த யஸ்யா பவநம் புஜாந்தரம்* என்று ஆளவந்தாரும் அருளிச்செய்தது காண்க. [யதமா யதமாநஸித்திஃ] யதமா என்றது (யா)

என்றபடி. மேலே, யதமாநாநாம் ஸித்திः— யதமாந ஸித்திः என்று ஷஷ்டீதத்புருஷன். பகவத்கீதையில் (7–3.) *மநுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு கச்சித் யததி ஸித்தயே, யததாமபி கௌந்தேய கச்சிந்மாம் வேத்தி தத்வதः* என்னும் ச்லோகத்தில் 'யததாம்' என்று சொல்லப்பட்ட அதிகாரிகளே இங்கு 'யதமாந' சப்தத்தினுல் சொல்லப்பட்டவர்கள். ஸித்தி பெற முயல்பவர்களைச் சொல்லுகிறது யதமாநாः என்று. அவர்களுடைய ஸித்தி லக்ஷ்மீ கடாக்ஷத்தினுலல்லது வேறென்றினுலுமுண்டாகாதாதலால் இவளையே யதமாந ஸித்தி யென்கிறது. (78)

79. [யா வை த்வயாபி உததிமந்தநயத்நலப்யா] ஸ்தோத்ரரத்நத்தில் "யதர்த்தம் அம்போதிரமந்தி" என்றருளிச்செய்ததையடியொற்றி இது அருளிச்செய்கிறபடி. ஸ்ரீரங்க ராஜஸ்தவத்தில் "உந்மூல்யாஹர மந்தராத்ரிம்" என்கிற ச்லோகத்தினுல் கடல்கடைந்த வரலாற்றை விரிவாகச் சொல்லி "பலேக்ரஹிர் ஹி கமலாலாபேந ஸர்வः ச்ரமः" என்று தலைக்கட்டிற்று. "அண்ணல் செய்து அலைகடல் கடைந்து அதனுள் கண்ணுதல் நஞ்சுண் ணக் கண்டவனே! விண்ணவரமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்ட வெம் பெருமானே!" என்றார் திருமங்கையாழ்வாரும். [யா அந்தர்ஹிதேதிஜகதுந்மதநோத்யதோபூः] பிராட்டியின் பிரிவிலே பெருமாள் "ஜகத் ஸசைலம் பரிவர்த்தயாம்யஹம்" என்றதாக வான்மீகி முனிவர் கூறியிருக்கையாலே இங்ஙனே அருளிச்செய்தபடி. "ராவணுபஹ்ரு தேதி" என்னுமல் அந்தர்ஹிதேதி என்கையாலே பிராட்டி இலங்கை புகுந்தது ராவணு பஹாரத்தாலேயன்று, ஸ்வேச்சையாலே யென்னுமிடம் ஸூசிதமாகிறது. "இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றஞ் சொல்லுகிறது" என்ற ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தியை விவரித்தருளுமிடத்து மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளிவை காண்மின் ;— "பிராட்டி யென்னுதே சிறையிருந்தவளென்றருளிச் செய்தது அவளுடைய தயாதிசயத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக, தேவ தேவ திவ்ய மஹிஷியான தன் பெருமையையும் சிறையிருப்பின் தண்மையையும் பாராதே தேவஸ்த்ரீ களின் சிறையை விடுவிக்கைக்காகத் தான் சிறையிருந்தது தயாபரவசையாயிறே. ப்ரஜை கிணற்றிலே விழுந்தால் ஒக்கக் குதித்தெடுக்கும் மாதாவைப்போலே இச்சேதநர் விழுந்த ஸம்ஸாரத்திலே தானுமொக்க வந்து பிறந்து இவர்கள் பட்டதைத் தானும் பட்டு ரக்ஷிக்கையாலே நிருபாதிக மாத்ருத்வஸம்பந்தத்தால் வந்த நிரதிசய வாத்ஸல்யத் துக்கும் ப்ரகாசகமிறேயிது. இந்த குணுதிக்யத்தை வெளியிடுகைக்காகவிறே பரமா சார்யரான நம்மாழ்வார், *தனிச்சிறையில் விளப்புற்ற கிளிமொழியாள்* என்றருளிச் செய்தது. அவருடைய திவ்ய ஸூக்தியிறே இவரிப்படி யருளிச்செய்கைக்கு மூலம். சிறையிருப்பு தண்மையாவது கர்ம நிபந்தநமாகிலிறே. ஆச்ரிதரான தேவர்களுடைய ஸ்த்ரீகள் சிறையை விடுவிக்கைக்காகத் தன்னநுக்ரஹத்தாலே தானே வலியச் செய்த தாகையாலே ஏற்றத்துக் குடலாமித்தனையிறே." என்று.

[யா ச ப்ரதிக்ஷணமித்யாதி] நிரந்தரம் அநுபவியா நின்றாலும் நித்யாபூர்வமாகத் தோற்றுகின்ற சுவையின்பம் தொடர்ந்து செல்லப்பெற்ற ஸாத்விகாதிபாவங்களினுல் தேவரீரை எப்போதும் உகப்பிக்கின்றாள் யாவளொருத்தியோ. (79)

[80. ரூபச்ரியேத்யாதி.] ஸௌந்தர்ய லாவண்ய ஸௌகுமார்யாதிகளாலும், தயா வாத்ஸல்யாதி குணஸமூஹங்களாலும் ஒக்க அவதரிக்கையினுலும் ஸ்தானப் பெருமை யினுலும் கம்பீரமதுரங்களான சித்த வ்ருத்திகளாலும் ஆச்ரித ஸம்ரக்ஷண ஸமர்த்தங் களான செய்கைகளினுலும், *துல்ய சீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜந லக்ஷணும், ராகவோர் ஹதி வைதேஹீம் தஞ்சேயமஸிதேக்ஷணு.* இத்யாதிகளில் பேசப்பட்ட ஆநுரூப்யத்தை யுடையளாய், *ஈச்வரீம் ஸர்வபூதாநாம்* என்னப்பட்ட ஐச்வர்யத்தையுமுடையளான பிராட்டியும் தேவரீருமான சேர்த்தியிலே அடியேன் அணுகி நின்று, *வழுவிலாவடிமை செய்ய வேண்டுநாம்* என்கிற கைங்கர்ய மநோரதம் விஞ்சி நின்று அத்தாணிச் சேவகம் செய்யக்கடவேன் என்றாராயிற்று. (80)

या बिभ्रती स्थिरचरात्मकमेव विश्वं विश्वम्भरा परमया क्षमया क्षमा च ।
तां मातरं च पितरं च भवन्तमस्य व्युच्छन्तु रात्रय इमा वरिवस्यतो मे ॥८१॥

யா பிப்ரதீ ஸ்திரசராத்மகமேவ விச்வம்
விச்வம்பரா பரமயா க்ஷமயா க்ஷமா ச,
தாம் மாதரஞ்ச பிதரஞ்ச பவந்தமஸ்ய
வ்யுச்சந்து ராத்ரய இமா வரிவஸ்யதோ மே. 81

யா ஸ்திரசராத்மகம் விச்வம் பிப்ரதீ ஏவ விச்வம்பரா, பரமயா க்ஷமயா க்ஷமா ச; தாம் மாதரஞ்ச பிதரம் பவந்தஞ்ச வரிவஸ்யதஃ அஸ்ய மே இமாஃ ராத்ரயஃ வ்யுச்சந்து.

(எம்பிரானே!) யாவளொரு பூமிப்பிராட்டியானவள் ஸ்தாவரஜங்கமாத்மகமான ஸகல ஜகத்தையும் வஹிப்பவளாயிருந்து கொண்டே 'விச்வம்பரா' என்று பெயர் பெறுகின்றாளோ, சிறந்த பொறுமையினால் 'க்ஷமா' என்று பெயர்பெறுகின்றாளோ, அந்தத் தாயையும் தந்தையாகிய உன்னையும் சேர்த்துக் கைங்கரியம் பண்ண விரும்பியிருக்கு மடியேனுக்கு இந்த ஸம்ஸாரகாளராத்ரிகள் விடிந்தனவாகட்டும்.

****—பெரிய பிராட்டியாருடைய சேர்த்தியிலே அடிமைசெய்யக் குதூஹலித்திருக்கும்படியைக் கீழ்ச்லோகத்திலேயருளிச்செய்தாராய் நின்றார்; பூமிப்பிராட்டியாருடைய சேர்த்தியிலே அடிமை செய்யக் காதலிக்கிறபடியை யருளிச்செய்கிறாரிதில். பூமிப்பிராட்டியாருக்கு விச்வம்பரா என்றும் க்ஷமா என்றும் இரண்டு திருநாமங்களுண்டே; அவை கேவல ரூடியாலன்று, யோகார்த்த பௌஷ்கல்யமுடையவையேயென்று பூர்வார்த்தத்தினால் மூதலிக்கிறார். ஸ்தாவரஜங்கமாத்மகமான விச்வத்தையும் வஹிக்கையினாலே விச்வம்பரையானாள்; எல்லைகடந்த பொறுமைக் குணத்தின் யோகத்தாலே க்ஷமையானாள். அதற்கு மேலே ஸர்வ ஸாதாரண நிருபாதிக மாத்ருத்வமுமுண்டாயிருந்தது. அப்படிப்பட்ட பூமிப்பிராட்டியாரும் *தஞ்சமாகிய தந்தையான தேவரீருமான சேர்த்தியிலே அடியேன் அடிமை செய்து கொண்டிருக்க, இரவும் பகலும் கலசியிருக்கையன்றிக்கே எப்போதும் விடிந்த பகலாகவே என் காலம் கழிய வேணுமென்கிறார். திருநாட்டிலே திவாராத்ர விபாக மில்லையிறே.*

व्युच्छन्तु *(வ்யுச்சந்து.)—இது அபூர்வமான க்ரியாபதம்; விசேஷித்து வேதத்தில் வழங்குமது. விடிந்ததாகட்டுமென்று பொருள்.* ராத்ரயஃ *என்ற கர்த்ருபதத்திற்குச் சேர இந்த க்ரியை ப்ரயோகிக்கப்பட்டது. இரவின்றிக்கே பகலேயாயிருக்கக்கடவதென்றவாறு.* வரிவஸ்யதஃ *என்ற ஷஷ்ட்யந்தபதம் வர்த்தமானார்த்த சத்ர்ப்ரத்யயாந்தம்;* *வர்த்தமானஸாமீப்யே வர்த்தமானவத் வா* *என்றது காண்க.* ... *(81)*

भावैरुदारमधुरैर्विविधैर्विलासैर्भ्रूविभ्रमस्मितकटाक्षनिरीक्षणैश्च ।
या त्वन्मयी त्वमपि यन्मय एव सा मां नीला नितान्तमुररीकुरुतामुदारा ॥८२॥

பாவைருதாரமதுரைர் விவிதைர் விலாஸை:
ப்ரூவிப்ரமஸ்மித கடாக்ஷ நிரீக்ஷணைச் ச,
யா த்வந்மயீ த்வமபி யந்மய ஏவ ஸா மாம்
நீளா நிதாந்தமுரரீகுருதாமுதாரா. 82

உதாரமதுரை: பாவை: விவிதை: விலாஸை: ப்ருவிப்ரம ஸ்மித கடாக்ஷ நிரீக்ஷணைச் ச யா த்வங்மயீ, த்வமபி யங்மய ஏவ, ஸா உதாரா நீளா மாம் நிதாந்தம் உரரீகுருதாம்.

(எம்பிரானே!) கம்பீர மநோஹரங்களான சித்த வ்ருத்திகளாலும் பலவகைப்பட்ட ச்ருங்கார சேஷ்டிதங்களாலும், புருவவிலாஸம் புன்முறுவல் கடைக்கணிப்பு ஆகிய இவைகளாலும் யாவளொரு நீளாதேவியானவள் உன்னில் வேறுபடாதவளா யிருக்கின்றாளோ, நீயும் யாவளொரு நீளாதேவியிற் காட்டில் வேறுபடாதிருக்கின்றாயோ, உதாரை யான அந்த நீளாதேவியானவள் அடியேனைப் பரிபூர்ணமாக அங்கீகரித்தருளவேணும்.

* * *—கீழிரண்டு ச்லோகங்களில் ஸ்ரீ பூதேவிகளின் சேர்த்தியை அநுஸந்தித்தார். இதில் நீளாதேவியை யநுஸந்தித்து அவளுடைய அங்கீகாரத்தை ப்ரார்த்திக்கிறார். கம்பீரமநோஹரங்களான சித்த வ்ருத்திகளாலும், அந்த சித்த வ்ருத்திகளுக்கு ஸூசகங்களான ச்ருங்கார சேஷ்டிதங்கள் பலவற்றாலும், புருவநெறிப்பு புன்முறுவல் கடைக்கண்ணோக்கம் ஆகிய இவற்றாலும் யாவளொரு நீளை தேவரீருடைய தாதாத்மியத்தை யடைவதும் தேவரீர் யாவளொரு நீளையின் தாதாத்ம்யத்தையடைவதுமாயிருக்கின்றதோ. அப்படிப்பட்ட நீளாதேவி அடியேனையாட் கொண்டருளவேணுமென்றாயிற்று.

"யா த்வங்மயீ" இத்யாதி மூன்றாவது பாதத்திற்குச் சேர *மகஸ்வீ தத்கதஸ் தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித:* என்ற ஸ்ரீராமாயண ச்லோகமநுஸந்தேயம். பரஸ்பரமுண்டான இனிமையைச் சொன்னபடி. (82)

भावैरनुक्षणमपूर्वरसानुविद्धैरत्यद्भुतैरभिनवैरभिनन्द्य देवीः ।
भृत्यान् यथोचितपरिच्छदिनो यथार्हं संभावयन्तमभितो भगवन्! भवेयम् ॥८३॥

பாவைரநுக்ஷணமபூர்வ ரஸாநுவித்தை:
அத்யத்புதைரபிநவைரபிநந்த்ய தேவீ:,
ப்ருத்யாந் யதோசித பரிச்சதிநோ யதார்ஹம்
ஸம்பாவயந்தமபிதோ பகவந் பவேயம். 83

பகவந்! அநுக்ஷணம் அபூர்வரஸ அநுவித்தை: அத்யத்புதை: அபிநவை: பாவை: தேவீ: அபிநந்த்ய யதோசித பரிச்சதிந: ப்ருத்யாந் யதார்ஹம் ஸம்பாவயந்தம் பவந்தம் அபித: பவேயம்.

பகவானே! க்ஷணந்தோறும் அபூர்வமாயிருக்கின்ற ச்ருங்கார ரஸவிசேஷத்தோடே கூடி அத்யாச்சர்யங்களாய் புதிது புதிதாயிருக்கின்ற சித்தவ்ருத்திகளாலே பிராட்டிமார்களை உகப்பித்து, தங்களுக்கு உரிய கைங்கர்யோபகரணங்களையுடையவர்களான (நித்யஸூரிகளான) கிங்கரர்களை யதாயோக்யமாக ஸத்கரியா நிற்கிற பரமபதநாதனான வுன்னைச் சூழ்ந்துகொண்டு வர்த்திக்கக்கடவேன்.

* * *—அந்தமில் பேரின்பத் திருவோலக்கத்திலே அந்வயித்து முன்னழகு பின்னழகு பக்கத்தழகு ஆகிய எல்லாவழகுகளையும் அநுபவிக்கச் சுற்றிலும் வலம்வர வேணுமென்கிற விருப்பத்தை வெளியிடுகிறாரிதில். க்ஷணந்தோறுமிட்டு மாறினாற்போலே அப்பொழுதைக்கப்பொழுது நவம்நவமாய்த் தோன்றுகிற ஆச்சரியமான ஸாத்விகாதி பாவங்களாலே, கீழ்ச்சொன்ன பிராட்டிமார்களை யுகப்பித்து, சத்ரசாமர வேத்ராதி கைங்கர்யோபகரணங்களைக் கொண்டிருக்கிற ஸேநாபதியாழ்வான் முதலான நித்ய கிங்கரர்களை அவரவர்களின் அதிகாரங்களுக்குத் தக்கபடி ஸத்கரித்துக்கொண்டிருக்கும் தேவரீரை அந்நிலைமையிலே இப்பரிசுபெற அடியேனுமொருவனுளனென்று காட்டிக்கொண்டு முன்னும் பின்னும் ஸேவித்து நிற்கக்கடவேனென்றாயிற்று.

" अभिनन्द्य संभावयन्तम् " என்று அந்வயம். (83)

हा हन्त हन्त ! हतकोऽसि खलोऽसि धिङ्मां मुह्यन्नहो ! अहमिदं किमुवाच वाचा ।
त्वामङ्ग ! मङ्गलगुणास्पदमस्तहेयम् आः ! स्मर्तुमेव कथमर्हति मादृगंहः ॥८४॥

ஹா ஹந்த ஹந்த ஹதகோஸ்மி கலோஸ்மி திங் மாம்
முஹ்யந்நஹோ அஹமிதம் கிமுவாச வாசா,
த்வாமங்க! மங்களகுணாஸ்பதமஸ்த ஹேயம்
ஆ: ஸ்மர்த்துமேவ கதமர்ஹதி மாத்ருகம்ஹ:. 84

ஹா ஹந்த ஹந்த! ஹதக: அஸ்மி கல: அஸ்மி, மாம் திக்; அஹோ முஹ்யந் அஹம் வாசா இதம் கிம் உவாச; அங்க! மங்களகுண ஆஸ்பதம் அஸ்த ஹேயம் த்வாம் மாத்ருக் அம்ஹ: ஆ: ஸ்மர்த்துமேவ கதம் அர்ஹதி.

(எம்பிரானே!) ஐயோ ஐயோ! கெட்டேன்! வாழ்வில்லை; நான் அதி துஷ்டன், கெடுவேன் கெடுவேனே; விஷயாந்தரங்களில் வியாமோஹமுடைய நான் (பகவத் விஷயப்ரவணன்போல) வாயினால் என்னசொன்னேனந்தோ!, என்னைப்போன்ற பாப பிண்டம் அகிலஹேயப்ரத்யநீக கல்யாணகதாநனை வுன்னை நெஞ்சினால் நினைக்கவே யோக்யதையுடையதன்றே.

* * *—எம்பெருமான் திருவோலக்கத்திலே நித்யகைங்கரியம் பண்ணப்பெறவேணுமென்று பாரித்து நின்றார் கீழ்; அப்பரம புருஷனுடைய எல்லையற்ற உயர்நலங்களையும் தம்முடைய எல்லையற்ற தாழ்வுகளையும் நினைத்து *அம்மானாழிப்பிரானவனெவ்விடத்தான்யானார்* என்றாற்போலே திருவுள்ளத்திலேபட்டு, உத்தமோத்தமனான அவனெங்கே! அதமாதமனான நானெங்கே!; தேவர்களுக்கு அர்ஹமான புரோடாசத்தை நாய் விரும்புவதுபோலன்றோ மஹான்களுக்கே உரித்தான பகவத் கைங்கர்யத்தை நாயினேன் விரும்புவது; மதிகெட்டு இப்படியும் விரும்பலாமோ? ஸம்ஸார நாற்றமேயறியாத நித்யஸூரிகள் ஆசைப்படக்கடவதான நித்யகைங்கர்யத்தை நித்ய ஸம்ஸாரியான நான் ஆசைப்படுவதானது பேதைமையன்றோ, ஹாஹா! என்ன ஸாஹஸமான காரியம் செய்யத் துணிந்தோம்! என்று தம்மைத் தாமே வெறுத்துக்கொள்ளுகிறார்.

அந்தோ! பாவியேன் கெட்டேன் கெட்டேன்!!, என்னை மறந்தன்றோ சில பிதற்றினேன்; பாவியேன் என்சொன்னேனானேன்; அகிலஹேயப்ரத்யநீக கல்யாண கதானரான தேவரீரை இந்த பாபபிண்டம் ஸ்மரிக்கவும் தகாதன்றோ என்கிறார்.

मादृगंहः (மாத்ருகம்ஹ:)=என்னைப்போன்ற பாபி என்னவேண்டுமிடத்தில் 'என்னைப்போன்ற பாபம்' என்று, தம்மைப் பாபமாகவே சொல்லிக்கொண்டது பாப ப்ராசுர்யத்தைப்பற்ற. பாபமே வடிவெடுத்தன்றோ நானிருப்பது என்கிறார்போலும். மூன்றாம்பாதத்தில் அங்க! என்றது ஸம்போதநார்த்தகமான ஒரு அவ்யயம். *(84)*

अंहः प्रसह्य विनिगृह्य विशोध्य बुद्धिं व्यापूय विश्वमशिवं जनुषाऽनुबद्धम् ।
आधाय सद्गुणगणानपि नाहमर्हः त्वत्पादयोर्यदहमत्र चिरान्निमग्नः ॥८५॥

அம்ஹ: ப்ரஸஹ்ய விநிக்ருஹ்ய விசோத்ய புத்திம்
வ்யாபூய விச்வமசிவம் ஜநுஷாநுபத்தம்,
ஆதாய ஸத்குணகணாநபி நாஹமர்ஹ:
த்வத்பாதயோ:, யதஹமத்ர சிராந்நிமக்ந:. 85

அம்ஹஃ ப்ரஸஹ்ய விநிக்ருஹ்ய புத்திம் விசோத்ய ஜநுஷா அநுபத்தம் விச்வம் அசிவம் வ்யாதூய ஸத்குணகணாந் ஆதாயாபி த்வத்பாதயோஃ அஹம் நார்ஹஃ; யத் அஹம் அத்ர சிராத் நிமக்நஃ.

(எம்பிரானே!) எனது பாபத்தை பலாத்காரமாகப் போக்கிக்கொண்டும் புத்தியை சுத்தமாக்கிக்கொண்டும் ஜந்மாநுபந்தியான தீதுகளையெல்லாம் உதறித்தள்ளியும் ஸத்குண ஸமூஹங்களையுண்டாக்கியுங்கூட நான் உன் திருவடிகளுக்கு யோக்யனாக மாட்டேனே; ஏனென்றால், இப்பிறவிக்கடலுள் நான் நெடுங்காலமாக மூழ்கியிருப்பவனன்றோ.

* * *—கீழ்ச்லோகத்தில், தம்முடைய பாபப்ராசுர்யத்தை நினைத்து அயோக்யதாநுஸந்தானம் பண்ணி நின்ற ஆழ்வானை நோக்கி எம்பெருமான், "வாரீர்! பாபப்ராசுர்யத்தைப்பற்றி நீர் அஞ்சவேண்டுவதுண்டோ? அதைப்போக்குவது நமக்கு அரிதோ? மிகவுமெளிதன்றோ; ஆகவே நீர் அயோக்யதாநுஸந்தானம் பண்ண ப்ராப்தியில்லை காணும்" என்று பணிப்பதாகக் கொண்டு இஃது அருளிச் செய்கிறார்; *சுற்றுமொளி வட்டஞ்சூழ்ந்து சோதிபரந்தெங்கும் எத்தனை செய்யிலும் என்மகன் முகம் நேரொவ்வாய்* என்று யசோதைப்பிராட்டி சந்திரனை நோக்கிச் சொன்னது போலே, எம்பெருமானே! தேவரீர் என்னைக் கல்யாண தமனாக்க எவ்வளவு முயன்று பார்த்தாலும் அநாதிகாலமாக *வன்சேற்றள்ளல் பொய்ந்நிலத்தவனான என்னை அடிமைக்கு உரியவனாக்கிக்கொள்ள முடியாது என்கிறார். இத்தால், எம்பெருமான் திருவடிகட்குத் தாம அடிமைப்படாமலே யொழியவேணுமென்கிறதன்று; இப்படிப்பட்ட தம்மையும் அடிமையிலே அந்வயிப்பித்துக் கொள்ளவே போகிறானென்று அத்தலையில் குணோத்கர்ஷம் சொல்லுகிறதத்தனை, அதுதான் அடுத்த ச்லோகத்திலேயே விளங்கும்,

இதில் இரண்டாம் பாதத்தில் **வ்யாபூய, வ்யாதூய** *என்பன பாடபேதங்கள்.* (85)

जानेऽथ वा किमहमङ्ग ! यदेव सङ्गादङ्गीकरोषि न हि मङ्गलमन्यदस्मात् ।
तेन त्वमेनमुररीकुरुषे जनं चेन्नैवामुतो भवति युक्ततरो हि कश्चित् ॥८६॥

ஜாநேதவா கிமஹமங்க ! யதேவ ஸங்காத்
அங்கீகரோஷி ந ஹி மங்கள மந்யதஸ்மாத்,
தேந த்வமேந முரரீகுருஷே ஜநஞ்சேத்
நைவாமுதோ பவதி யுக்ததரோ ஹி கச்சித். **86**

அங்க! அதவா அஹம் கிம் ஜாநே; யதேவ ஸங்காத் அங்கீகரோஷி அஸ்மாத் அந்யத் மங்களம் நஹி; தேந த்வம் ஏநம் ஜநம் உரரீகுருஷே சேத், அமுதஃ கச்சித் யுக்ததரஃ நைவ ஹி.

எம்பிரானே! என்னறிவனேழையேன்!; நீ ஸஹஜ ஸௌஹார்த்தத்தினால் (அடியேனை) அங்கீகரித்தருளுமளவில் அப்படிப்பட்ட அங்கீகாரத்திற் காட்டிலும் வேறுநன்மை இல்லையன்றோ; ஆகவே அந்த ஸௌஹார்தத்தினால் இவ்வடியேனை அங்கீகரித்தருள்வாயாகில் என்னைக்காட்டிலும் வேறொரு யோக்யன் தேறமாட்டானன்றோ.

* * *—எம்பெருமானுடைய இயற்கையின்னருளை நினைத்து ஸமாஹிதராகிறார். அடியேன்திறத்துள்ள தீமைத்திரள்களைக் காணுமிடத்து தேவரீருடைய திருவடிகளுக்கு அநர்ஹனேயென்று அறுதியிட நேர்ந்தாலும், *தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம்* என்றும், *விபீஷணோ வா ஸுக்ரீவ! யதி வா ராவணஸ் ஸ்வயம்* என்றும் அருளிச்செய்து ஆட்கொள்ளவல்ல தேவரீருக்கு ஆகாததுண்டோ? என்பக்கலில் நானாகஆர்ஜித்த நன்மையொன்றுமில்லை யென்றேனத்தனை போக்கி அத்தலையாலே வரும் நன்மையை இல்லை செய்ய என்னாலாகுமோ? *யமேவைஷ வ்ருணுதே தேந

லப்ய:* என்கிறபடியே தேவரீராக விஷயீகரித்தருளுமளவில், அயோக்யனென்று அகலா தொழிகையே யன்றிக்கே, என்னில் மேம்பட்ட யோக்யனில்லையென்று மார்பு தட்டவும் ப்ராப்தமாகுமிறே யென்கிறார்.

''அவன் இவனைப்பெற நினைக்கும் போது பாதகமும் விலக்கன்று'' (143) என்ற ஸ்ரீவசநபூஷண திவ்யஸூக்தி இங்கே அநுஸந்தேயம்; இவ்விடத்தில் மணவாள மாமுனிகள் வியாக்கியான ஸ்ரீஸூக்தி காண்மின்;— ''ஸ்வாமியாய் ஸ்வதந்த்ரனானவன் ஸ்வமாய்ப் பரதந்த்ரனாயிருக்கிறவிவனை ஸ்வேச்சையாலே பெறநினைக்குமளவில், பாபங்களில் ப்ரதானமாக எண்ணப்படும் பாதகமும் ப்ரதிபந்தகமாக மாட்டாதென்கை. இத்தால் பரகதஸ்வீகாரோபாயத்வம் காட்டப்பட்டது.'' (86)

यन्नाभवाम भवदीयकटाक्षलक्ष्यं संसारगर्तपरिवर्तमतोऽगमाम ।
आगांसि ये खलु सहस्रमजस्रमेवं जन्मस्वतन्महि कथं त इमेऽनुकम्प्याः ॥८७॥

யந்நாபவாம பவதீயகடாக்ஷலக்ஷ்ம்
ஸம்ஸாரகர்த்த பரிவர்த்தம் அதோ'கமாம,
ஆகாம்ஸி யே கலு ஸஹஸ்ரமஜஸ்ரமேவம்
ஜந்மஸ்வதந்மஹி கதம் த இமேநுகம்ப்யா:. 87

பவதீய கடாக்ஷ லக்ஷ்யம் யத் நாபவாம, **அத:** ஸம்ஸார **கர்த்த** பரிவர்த்தம் **அகமாம;** யே கலு (வயம்) அஜஸ்ரம் ஜந்மஸு ஏவம் ஸஹஸ்ரம் **ஆகாம்ஸி அதந்மஹிதே** இமே (வயம்) **கதம் அநுகம்ப்யா:**

(எம்பிரானே!) நீ செய்தருளும் ஜாயமாந கால கடாக்ஷத்திற்கு அடியேன் இலக்காகாதொழிந்தமையாலே ஸம்ஸாரப்படுகுழியிலே விழநேர்ந்தது; அதற்குமேலும் ஜன்மங்கள்தோறும் இடைவீடின்றி அளவற்ற பாபங்களையும் செய்துபோந்திருக்க, உன்னுடைய அருளுக்கு எங்ஙனே இலக்காவேன்?

* * *—கீழ்ச்லோகத்தில் ஒருவாறு ஸமாஹிதரானவர் மீண்டும் தடுமாற்றங்கொள்ளுகிறாரிதில். இடையறாது செய்த பாவங்கள் கூடுபூரித்துக்கிடக்குமடியேன் பக்கலில் அப்படிப்பட்ட நிர்ஹேதுக விஷயீகாரம் எங்ஙனே விளையும்படியென்று அதிசங்கிக்கிறார். அப்படிப்பட்ட திருவருளுக்கு அடியேன் பாத்திரமாகக் கூடியவனாகில் * ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந:, ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த சிந்தக:. * என்னும்படியான ஜாயமாந கால கடாக்ஷத்தையே பெற்றிருப்பேனே; அது பெருமையினாலன்றோ ஸம்ஸாரப்படுகுழியிலே வீழ்ந்து உழலாநின்றது; இப்படி மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து நிச்சலும் பாவங்களையே செய்து போந்தவடியேன் (கீழ்ச்லோகத்திலே ப்ரஸ்துதமான) அருளுக்கு எங்ஙனமிலக்காவேன்! என்கிறார். (87)

सत्कर्म नैव किल किञ्चन सञ्चिनोमि विद्याऽप्यवद्यरहिता न च विद्यते मे ।
किञ्च त्वदञ्चितपदाम्बुजभक्तिहीनः पात्रं भवामि भगवन् ! भवतो दयायाः ॥८८॥

ஸத்கர்ம நைவ கில கிஞ்சந ஸஞ்சிநோமி
வித்யாப்யவத்யரஹிதா நச வித்யதே மே,
கிஞ்ச த்வதஞ்சித பதாம்புஜபக்திஹீந:
பாத்ரம் பவாமி பகவந் பவதோ தயாயா:. 88

ஹே பகவந்! ஸத்கர்ம கிஞ்சந நைவ ஸஞ்சிநோமி, அவத்யரஹிதா வித்யாபிச மே ந வித்யதே; கிஞ்ச த்வத் அஞ்சித பதாம்புஜ பக்திஹீநஃ, பவதஃ தயாயாஃ பாத்ரம் பவாமி.

பகவானே! ஸத்கருமத்தைச் சிறிதும் செய்கின்றிலேன்; நிரவத்யமான வித்யையும் எனக்கில்லை; உனது சிறந்த பாதாரவிந்தத்தில் பக்தியுமில்லாதவனுயிருக்கிறேன், ஆகவே உன்னருளுக்கே பாத்ரமாகின்றேன்.

* * *—கீழ்ச்லோகத்தில் "**கதம் த இமேநுகம்ப்யாஃ**" என்றவர் ஸர்வாத்மநா பகவத்க்ருபையில் நைராச்யங் கொள்ளமுடியுமோ? ஸார்வபௌமனுடைய ஔதார்யம் ஜந்மதரித்ரனையே இலக்காகக் கொள்ளுமாபோலே எம்பெருமானுடைய க்ருபையும் அகிஞ்சநர்களையே புகலாகக்கொண்டிருக்குமதாகையாலே அதுதன்னை யறிந்தவிவர் தம்முடைய ஆகிஞ்சந்யத்தை முன்னிட்டுத் திருவருளைப் பிரார்த்திக்கலாமென்று துணிந்து அதுதன்னிலே யிழிகிறார். *இடகிலேனொன்றட்டகில்லேன் ஐம்புலன் வெல்லகில்லேன், கடவனுகிக் காலந்தோறும் பூப்பறித்தேத்தகில்லேன்* என்றும், *நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்* என்றும், *குளித்து மூன்றனலையோம்புங் குறிகொளந்தணமை தன்னை ஒளித்திட்டேனென் கணில்லை நின்கணும் பத்தனல்லேன்* என்றும் அருளிச்செய்த கணக்கிலே, கர்மஜ்ஞாந பக்திகளிலே தமக்கு அந்வயலேசமுமில்லாமையை மூன்று பாதங்களாலே வெளியிட்டு, இப்படிப்பட்ட அகிஞ்சநர்களையே தேடித்திரியுமதான தேவரீருடைய க்ருபைக்கு அடியேனே இலக்காகிறேனென்று முடிக்கிறார்.

மூன்றாம் பாதத்தில் "**த்வதஞ்சிதபதாம்புஜ**" என்றவிடத்து த்வத்பதத்திற்குப் பதாம்புஜத்திலே அந்வயம். அது எப்படிப்பட்டதென்றால், **அஞ்சிதம்**—ஸர்வலோக பூஜிதமென்றபடி. *(88)*

किं भूयसा प्रलपितेन यदेव किञ्चित्पापाह्वमल्पमुरु वा तदशेषमेषः ।
जानन्नवा शतसहस्रपरार्धकृत्वो योऽकार्षमेनमगतिं कृपया क्षमस्व ॥८९॥

கிம் பூயஸா ப்ரலபிதேந யதேவ கிஞ்சித்
பாபாஹ்வமல்பமுரு வா ததசேஷமேஷ:,
ஜாநந் ந வா சதஸஹஸ்ரபரார்த்தக்ருத்வ:
யோகார்ஷ மேநமகதிம் க்ருபயா க்ஷமஸ்வ. 89

பூயஸா ப்ரலபிதேந கிம்? பாபாஹ்வம் அல்பம் வா உரு வா யதேவ கிஞ்சித், தத் அசேஷம் ஏஷஃ யஃ ஜாநந்வா நஜாநந்வா சதஸஹஸ்ர பரார்த்தக்ருத்வஃ அகார்ஷம், ஏநம் அகதிம் க்ருபயா க்ஷமஸ்வ.

(எம்பிரானே!) பல பிதற்றியென்? பாபமென்று பேர்பெற்றது சிறியதோ பெரியதோ எது எது உண்டோ, அதையெல்லாம் தெரிந்தும் தெரியாமலும் எண்ணிறந்தபடி செய்து போந்தேனந்தோ, இவ்வடியேனைப் பரம க்ருபையினால் க்ஷமித்தருள வேணும்.

* * *—க்ஷமாப்ரார்த்தனை பண்ணுதவளவில் க்ருபை பெறுவதில்லையென்னுமிடத்தையும், க்ஷமையை வேண்டினவாறே க்ருபை பெருகப்புகுகிறதென்னுமிடத்தையும் லோகத்திலே கண்டவராகையாலே க்ஷமாப்ரார்த்தனை பண்ணுகிறாரிதில்.

[பூயஸா ப்ரலபிதேந கிம்] 'கிம் பஹுநா'. என்பதுண்டே, அதுதானிது. நானே சங்கிப்பதும் நானே ஸமாஹிதனுவதுமாய்ப் பல பிதற்றுமிதில் ப்ரயோஜனமென்? பாபமென்று பேர்பெற்றவற்றில் சிறியதாகிலுமாம் பெரியதாகிலுமாம், ஒன்றுதப்பாமல் பலவற்றை புத்தி பூர்வகமாகவும், சிலவற்றை ப்ராமாதிகமாகவும் பலகோடி நூறாயிரந்தடவை செய்துபோந்தேனடியேன்; இதனை வாய்விட்டு விண்ணப்பஞ் செய்வது

தவிர வேறுகதியற்றவடியேனை அவஸரப்ரதீக்ஷையான ஸ்வகீய க்ருபையினாலேயே க்ஷமா விஷயமாக்கியருளவேணும் என்றாராயிற்று.

மூன்றாவது பாதத்தில் பரார்த்தம் என்றது ஸங்க்யைகளுக்கு எல்லையாகக் கொள்ளப்படுமது; * परेपरार्धे गणना यदि स्यात्— பாரேபரார்த்தம் கணநா யதி ஸ்யாத்* என்பது நைஷதகாவ்யத்தில் ஸ்ரீஹர்ஷனுடைய வாக்கு. தைத்திரீயஸம்ஹிதையில் ஏழாவது காண்டத்தில் இரண்டாவது ப்ரச்நத்தில் "शताय स्वाहा सहस्राय स्वाहा" என்று தொடங்கி சதம், ஸஹஸ்ரம், அயுதம், நியுதம், ப்ரயுதம், அர்புதம், ந்யர்புதம், ஸமுத்ரம், மத்யம், அந்தம், பரார்த்தம் என்று நின்றது. (89)

देव ! त्वदीयचरणप्रणयप्रवीणरामानुजार्यविषयीकृतमप्यहो माम् ।
भूयः प्रधर्षयति वैषयिको विमोहो मत्कर्मणः कतरदत्र समानसारम् ॥९०॥

தேவ! த்வதீய சரணப்ரணயப்ரவீண
ராமாநுஜார்யவிஷயீக்ருதமப்யஹோ மாம்,
பூய: ப்ரதர்ஷயதி வைஷயிகோ விமோஹ:
மத்கர்மண: கதரதத்ர ஸமாநஸாரம். 90

தேவ! த்வதீய சரண ப்ரணய ப்ரவீண ராமாநுஜார்ய விஷயீக்ருதம் அபி மாம் வைஷயிகঃ விமோஹঃ பூயঃ ப்ரதர்ஷயதி அஹோ, அத்ர மத்கர்மணঃ ஸமாநஸாரம் கதரத்?

எம்பிரானே! உன் திருவடிகளில் அன்புபூண்டிருப்பதில் தலைசிறந்தவரான எம்பெருமானாரால் ஆட்படுத்திக்கொள்ளப்பட்ட அடியேனையும் விஷய வ்யாமோஹம் மிகவும் பரிபவிக்கின்றதந்தோ! என்னுடைய கருமத்தோடொத்த வலிதான கருமம் வேறொருவர்க்குண்டோ இவ்வுலகில்?'

* * * இந்த நிலைமையில் ஆசார்யநாமோச்சாரணம் செய்வது ச்ரேயஸ்கரமென்று திருவுள்ளம்பற்றி ஒருவாறு அதுதன்னைச் செய்கிறார். எம்பிரானே! தேவரீருடைய திருவடிகளில் பக்தியையே நிரூபகமாகக்கொண்ட எம்பெருமானார் அடியேனை நிர்ஹேதுகமாக விஷயீகரித்தருளி யிருக்கையாலே அடியேனுக்கொரு குறையில்லை யென்றிராநின்றேன்; இங்ஙனே அடியேன் மஹாவலம்பம் பெற்றிருக்கச்செய்தேயும் *பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ* *கிறிசெய்தென்னைப் புறத்திட்டு இன்னங் கெடுப்பாயோ* என்னும்படியான இருள்தருமா ஞாலத்திலே வைத்திருக்கையாலே விஷயவாஸனை அருமையாலே வைஷயிகவ்யாமோஹம் அடியேனைப் பரிபவிக்கின்றது. *மதநகதநைர் ந க்லிச்யந்தே யதீச்வரஸம்ச்ரயாঃ* (யதிராஜஸப்ததி.) என்றும், *காமாதி தோஷஹரமாத்ம பதாச்ரிதாநாம்* (யதிராஜவிம்சதி) என்றும் பேசலாம்படி புகழ்பெற்ற எம்பெருமானாருடைய பரிக்ரஹமான வடியேனுக்கு இங்ஙனே நேரத்தகுமோ? நேரக் காண்கையாலே *மதியிலேன் வல்வினையே மாளாதோ* என்னும்படி வலிய கருமம் எனக்கே அஸாதாரணமென்று நினைக்கவேண்டியதாகிறது என்கிறார்.

[அத்ர மத்கர்மணঃ ஸமாந ஸாரம் கதரத்?] இவ்வுலகில் என்னைப்போலே தீவினை செய்தாருண்டோ? என்றபடி. (90)

गर्भेषु निर्भरनिपीडनखिन्नदेहः क्षोदीयसोऽतिमहतोऽप्यखिलस्य जन्तोः ।
जन्मान्तराण्यनुविचिन्त्य परस्सहस्राण्यत्राहमप्रतिविधिर्निहतश्चरामि ॥९१॥

க்ர்ப்பேஷு நிர்ப்பரநிபீடந கிந்நதேஹ:
க்ஷோதீயஸோதிமஹதோப்யகிலஸ்ய ஜந்தோ:,
ஜந்மாந்தராண்யநு விசிந்த்ய பரஸ்ஸஹஸ்ராணி
அத்ராஹமப்ரதிவிதிர் நிஹதச் சராமி. 91

க்ஷோதீயஸ: அதிமஹத: அபி அகிலஸ்ய ஜந்தோ: கர்ப்பேஷு நிர்ப்பரநிபீடநகிந்நதேஹ: அஹம் பரஸ்ஸஹஸ்ராணி ஜந்மாந்தராணி அநுவிசிந்த்ய அத்ர அப்ரதிவிதி: நிஹத: சராமி.

அதிக்ஷுத்ரமாயும் அதிமஹத்தாயுமிருக்கிற ஸகல ஜந்துக்களினுடையவும் கர்ப்பங்களில் மிகவும் உறைந்திருந்ததனலே வருந்தின தேஹத்தை யுடையனுன நான் பலவாயிரம் ஜந்மாந்தரங்கள் நேரப்போகின்றவற்றைச் சிந்தைசெய்து அதற்கு ஒருவிதமான ப்ரதிக்ரியையு மறியாதவனுய் ம்ருதப்ராயனுய் உழல்கின்றேன்.

**** இதுமுதல் ஐந்து ச்லோகங்களினுல் ஸாம்ஸாரிக துக்கங்கள் தமக்கு மிகவும் அஸஹ்யமாயிருக்கிறபடியை அதிமாத்ர நிர்வேதத்தோடே விண்ணப்பஞ் செய்கிருர். திறந்து கிடந்த வாசல்தோறும் நுழைந்து திரியும் பதார்த்தம்போலே நான் நுழைந்து புறப்படாத யோனியில்லை: அதிக்ஷுத்ரமான பிபீலிகைமுதல் அதிமஹத்தான கஜஸிம்ஹாதிகள்வரையி லுண்டான ஸகல ப்ராணிவர்க்கங்களி னுடையவும் கர்ப்பங்களிலே புக்கு** अत्याम्लकटुतीक्ष्णोष्णलवणैर्मातृभोजनैः । अतितापिभिरत्यर्थं वर्धमानातिवेदनः ॥ क्लेशान्निष्क्रान्तिमाप्नोति जठरान्मातुरातुरः—அத்யாம்ல கடுதீக்ஷ்ணேஷ்ணலவணைர் மாத்ரு போஜநை:' அதிதாபிபி ரத்யர்த்தம் வர்த்தமாநாதி வேதந:, க்லேசாந் நிஷ்க்ராந்திமாப்நோதி ஜடராந் மாதுராதுர:* என்கிறபடியே பலவகையான க்லேசங்களை அநுபவித்த வளவேயன்றிக்கே இன்னமும் நேரப்போகிற அளவுகடந்த ஜன்மாந்தரங்களையும் பற்றிச் சிந்தித்து இதற்கு நம்மால் செய்யலாவதொரு ப்ரதீகாரமில்லையேயென்று தளரா நின்றேன். ... (91)*

भूयश्च जन्मसमयेषु सुदुर्वचानि दुःखानि दुःखमतिरिच्य किमप्यजानन् ।
मूढोऽनुभूय पुनरेव तु बालभावात् दुःखोत्तरं निजचरित्रममुत्र सेवे ॥९२॥

பூயச் ச ஜந்மஸமயேஷு ஸுதுர்வசாநி
துக்காநி துக்கமதிரிச்ய கிமப்யஜாநந்,
மூடோநுபூய புநரேவது பாலபாவாத்
துக்கோத்தரம் நிஜசரித்ரமமுத்ர ஸேவே. 92

பூயச்ச ஜந்மஸமயேஷு ஸுதுர்வசாநி துக்காநி அநுபூய, துக்கம் அதிரிச்ய கிமபி அஜாநந் மூட: புநரேவ து பால பாவாத் அமுத்ர துக்கோத்தரம் நிஜ சரித்ரம் ஸேவே'

(எம்பெருமானே!) கர்ப்பக்லேசங்களை யநுபவித்தபிறகும் கர்ப்பத்தில் நின்றும் வெளிப்படுகை யாகிற ஜனன காலங்களில் இன்னவை இனையவை யென்று சொல்லமுடியாத துயரங்களை யநுபவித்து, துக்கந்தவிர வேறென்று மறியாதவனுயும் அந்த-துக்கங்களைப் போக்கிக்கொள்ளும் விரகறியாதவனுயுமுள்ள அடியேன் இன்னமும் அவிவேகத்தினுல் பரலோகத்தில் மிகுந்த துக்கத்தை விளைக்குமதான வல்வினையைச் செய்துபோருகின்றேன்.

* * *—கீழ்ச்லோகத்திற் சொன்னபடி கர்ப்பவாஸ காலத்தில் படும் க்லேசங்களோ அபாரம்; பிறகு கர்ப்பத்திலிருந்து வெளிப்புறப்படுங் காலங்களிலே படும் துயரங்களோ வாய்கொண்டு சொல்லவொண்ணாதவை; அப்படிப்பட்ட துக்கங்களையும் அநுபவித்தேன்; சிறிதேனும் ஸுகமநுபவித்திருந்தாலன்றோ அந்த துக்கம் இந்த துக்கமென்று விசேஷித்துச் சொல்லலாவது; துக்கந் தவிர வேறொன்றில் வ்யுத்பத்தி பண்ணியறியேன்; அவிவேகத்தினாலே நான் செய்து போருகிறதத்தனையும் தீவினையேயாதலால் இனி மேலுள்ள காலமெல்லாம் அநுபவிக்க விருப்பதும் துக்கமே; இதுவாயிற்று என்னுடைய நிலைமை என்று, எம்பெருமானுக்குக் கடுக இரக்கம் பிறக்குமாறு அருளிச் செய்தாராயிற்று. (92)

भूयांसि भूय उपयन्विविधानि दुःखान्यन्यच्च दुःखमनुभूय सुखभ्रमेण ।
दुःखानुबन्धमपि दुःखविमिश्रमल्पं क्षुद्रं जुगुप्सितसुखं सुखमित्युपासे ॥९३॥

பூயாம்ஸி பூய உபயந் விவிதாநி து:க்காநி
அந்யச்ச து:க்க மநுபூய ஸுகப்ரமேண,
து:க்காநுபந்தமபி து:க்க விமிச்ரமல்பம்
க்ஷுத்ரம் ஜுகுப்ஸிதஸுகம் ஸுகமித்யுபாஸே. 93

பூய: பூயாம்ஸி விவிதாநி து:க்காநி உபயந் அந்யச்ச து:க்கம் ஸுகப்ரமேண அநுபூய து:க்காநுபந்தம் து:க்க விமிச்ரம் அல்பம் க்ஷுத்ரம் ஜுகுப்ஸிதஸுகம் அபி ஸுகம் இதி உபாஸே.

(எம்பெருமானே!) பின்னையும் பலவகைப்பட்ட துக்கங்களை யடைகின்றவனாக நான் வேறு துக்கத்தையும் ஸுகமென்கிற ப்ரமத்தினால் அநுபவித்து, காலாந்தரத்தில் துக்கத்தை விளைப்பதாயும் துக்கமிச்ரமாயும் மிகவும் அற்பமாயும் சிஷ்டகர்ஹிதமாயுமுள்ள வைஷயிக ஸுகத்தை உண்மையான ஸுகமாகக்கொண்டு விரும்புகிறேன்,

* * *—"பேதை பாலகனதாகும்" என்கிற திருமாலைப் பாசுரத்தில் **அது** என்கிற ஸங்கேதச் சொல்லாலே விவக்ஷிதமான யௌவன பருவத்தில் ஸம்பவங்களைப் பேசுவதாம் இந்தச்லோகம். மஹா விரக்தாக்ரேஸரரான ஆழ்வானிடத்திலே இப்படிப்பட்ட வார்த்தைகளுக்கு ஸம்பந்த லேசமுமில்லை கிடீர்; அஸ்மதாதிகள் அநுஸந்திக்க வேண்டியதற்காக அருளிச் செய்துவைக்கிறாரித்தனையிறே. [**பூயாம்ஸி பூய உபயந் விவிதாநி து:க்காநி**] கீழிரண்டு ச்லோகங்களிற் சொன்ன வளவேயன்றிக்கே மற்றும் பலவகைப்பட்ட துக்கங்களையும் அநுபவித்தேன். தற்காலத்தில் இன்பம் போல் தோன்றிப் பிறகு பெருந்துன்பமாக முடிகின்றவற்றையு மநுபவித்தேன். துக்கத்தோடு தொடர்புள்ளதாயும் துக்கம் கலசினதாயும் சிஷ்டர்கள் இகழக் கூடியதாயுமுள்ள அதிக்ஷுத்ரஸுகங்களையும் உத்தமஸுகமாக ப்ரமித்து அவற்றிலே நசை பண்ணிப்போராநின்றேன். (93)

लोलद्भिरिन्द्रियहयैरपथेषु नीतो दुष्प्रापदुर्भगमनोरथमथ्यमानः ।
विद्याधनाभिजनजन्ममदेन कामक्रोधादिभिश्च हतधीर्न शमं प्रयामि ॥९४॥

லோலத்பிரிந்த்ரியஹயைரபதேஷு நீத:
துஷ்ப்ராப துர்ப்பக மநோரதமத்யமாந:,
வித்யாதநாபிஜந ஜந்மமதேந காம
க்ரோதாதிபிச் ச ஹததீர் ந சமம் ப்ரயாமி. 94

லோலத்பி: இந்த்ரியஹயை: அப தேஷு நீத: துஷ்ப்ராபதுர்ப்பகமனோ ரத மத்யமான: வித்யா தன அபிஜனஜன்ம மதேன காமக்ரோதாதிபிச் ச ஹததீ: சமம் ந ப்ரயாமி.

(எம்பெருமானே!) சஞ்சலங்களான இந்த்ரியக் குதிரைகளினுல் தப்பு வழிகளில் கொண்டுபோகப் பட்டவனுய் பெறுதற்கரிய வீண்மனோரதங்களினுல் பீடிக்கப்படுமவனுய், கல்விச்செருக்கு செல்வச்செருக்கு குலச்செருக்கு ஆகிய இவற்ருலும் காமக்ரோதாதிகளாலும் அறிவுகெட்டவனுய் இந்திரியஜயம் பண்ணமுடியாதவனுய்க்கிடக்கிறேன்.

* * *—கர்மேந்திரியங்களைந்தும் ஜ்ஞாநேந்திரியங்களைந்தும் இவற்றுக்கு ஸஹகாரியான மநஸ்ஸுமாகிற பதினோரிந்திரியங்களும் பதினொரு குதிரைகளாகிக் கண்டவிடமெங்கும் தீய நெறிகளிலே இழுத்துக்கொண்டு செல்லுமிறே; இந்தக் கஷ்டமொரு புறத்தில். மற்றொரு புறத்திலோவென்னில், பாழும் மனோரதங்கள் துர்லப விஷயங்களிலே தோன்றிப் பீடிக்கும் கஷ்டம். இவையுமன்றிக்கே, கல்விச் செருக்கு செல்வச் செருக்கு குலச் செருக்கு என்னும்படியான வஞ்சமுக் குறும்புகளினுலும் காம க்ரோதாதிகளினுலும் நேரும் துன்பங்களோ அபரிமிதம். இவற்ருல் புத்தி கெட்டு இந்திரிய ஜயத்திற்கு ப்ரஸக்தியின்றிக்கே கிடந்துழலாநின்றேனென்று வருந்திப் பேசுகிருர்.

மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக் குறும்பாங்குழியைக் கடக்கும் நங்கூரத்தாழ்வான் என்று விசேஷித்துப் புகழப்பெற்ற ஆழ்வானுடைய அநுஸந்தானம் இதுவானுல் நம்போல்வார் பேசவேண்டும் பாசுரமெதுவோ அறியோம். (94)

लभ्येषु दुर्लभतरेष्वपि वाञ्छितेषु जाता सहस्रगुणतत्प्रतिलम्भनेऽपि ।
विघ्नैर्हतेष्वपि च तेषु समूलघातं वर्धिष्णुरेव न तु शाम्यति हन्त तृष्णा ॥९५॥

லப்யேஷு துர்லபதரேஷ்வபி வாஞ்சிதேஷு
ஜாதா ஸஹஸ்ரகுணதத்ப்ரதிலம்பநேபி,
விக்நைர் ஹதேஷ்வபி ச தேஷு ஸமூலகாதம்
வர்த்திஷ்ணுரேவ ந து சாம்யதி ஹந்த த்ருஷ்ணா. 95

லப்யேஷு துர்லபதரேஷு அபி வாஞ்சிதேஷு ஜாதா த்ருஷ்ணா ஸஹஸ்ரகுணதத்ப்ரதிலம்பநே அபி தேஷு விக்நை: ஸமூலகாதம் ஹதேஷு அபி ச வர்த்திஷ்ணுரேவ, ந து சாம்யதி ஹந்த.

(எம்பெருமானே!) எளியவையாயும் மிகவும் அரியவையாயுமிருக்கின்ற இஷ்டவஸ்துக்களிலுண்டான அபிலாஷையானது—ஆயிரமடங்கு அதிகமாகப் பலன் கிடைத்தாலும் இடையூறுகளினுல் வேர்பறியுண்டாலும் (அவ்வஸ்துக்களில் ஆசை) மேன்மேலும் வளர்ந்து செல்லுகின்றதேயன்றி அடங்கி யொழிகின்றதில்லை.

* * *—கீழ்ச்லோகத்தில் *துஷ்ப்ராப துர்ப்பக மனோரத மத்யமான:* என்றது தன்னை விவரித்தருளுகிருரிதில். உலகில் அபேக்ஷிதங்கள் இரண்டு படிப்பட்டிருக்கும். எளிதான வஸ்துக்களும் அபேக்ஷிதமாகும், அரிதான வஸ்துக்களும் அபேக்ஷிதமாகுமிறே. இப்படி இருவகைப்பட்ட வஸ்துக்களிலும் உண்டாகின்ற ஆசையானது மேன்மேலும் வளர்ந்து செல்லுகின்றதே யொழிய நசிப்பதென்பது ஒரு போதுமில்லை. அபேக்ஷித்த பொருள் ஒன்று நூறுயிரமாகக் கைகூடி விட்டால் " இச்சாயா: விஷயஸித்த்யா விநாச:" என்று சாஸ்த்ரஜ்ஞர்கள் சொல்லுகிற கணக்கிலே அபேக்ஷித வஸ்து விஷயகமான ஆசை அற்றொழியலாமே; அதுதான் கிடையாது. இன்னமும் வேணும் இன்னமும் வேணுமென மேன்மேலும் வளராநின்றது. அபேக்ஷித வஸ்துக்கள் பல

பல இடையூறுகளினால் வேர்பறியுண்டொழிந்தால் அப்போதாவது 'இது வீணான ஆசை; இது விட்டொழிக்கத் தக்கதே' என்று வைராக்யம் பிறக்கலாமே; அதுவுமில்லை அப்போதுங்கூட ஆசை பெருகிச் செல்லுமத்தனை யொழிய மடிவதில்லை. இது ஆசையின் ஸ்வபாவமிருக்கிறபடி.

இது கீழ்ச்லோகத்திற்கு சேஷ பூதமாகையாலே "ந சமம் ப்ரயாமி" என்று அங்குச்சொன்னதே இங்கும் ப்ரதாநக்ரியையாக மாநஸாநு ஸந்தானமாகக் கடவது. (95)

त्वत्कीर्तनस्तुतिनमस्कृतिवेदनेषु श्रद्धा न भक्तिरपि शक्तिरथो न चेच्छा ।
नैवानुतापमतिरेष्वकृतेषु किंनु भूयानहो ! परिकरः प्रतिकूलपक्षे ॥९६॥

த்வத் கீர்த்தந ஸ்துதிநமஸ்க்ருதி வேதநேஷு
ச்ரத்தா ந பக்திரபி சக்திரதோ நசேச்சா,
நைவாநுதாபமதிரேஷ்வக்ருதேஷு கிம் நு
பூயாநஹோ பரிகர: ப்ரதிகூலபக்ஷே. 96

த்வத் கீர்த்தந ஸ்துதி நமஸ்க்ருதி வேதநேஷு ச்ரத்தா பக்திரபி சக்தி: அதோ இச்சா ச ந; ஏஷு அக்ருதேஷு அநுதாபமதி: நைவ; கிம் நு!; அஹோ ப்ரதிகூலபக்ஷே பூயாந் பரிகர:.

(எம்பெருமானே!) உன்னுடைய திருநாம ஸங் கீர்த்தனம் குண கீர்த்தனம் நமஸ்காரம் த்யானம் ஆகிய இவற்றில் (எனக்கு) ச்ரத்தையோ பக்தியோ சக்தியோ இச்சையோ எதுவுமில்லை; கீழே சொன்ன கீர்த்தநாதிகள் செய்யப்படாதவளவில் அநுதாப புத்தியுமில்லை. இது என்னோ! அந்தோ! ப்ரதிகூலபக்ஷத்தில்தான் ஸாமக்ரி வலிதாக வுள்ளது.

* * *—"ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்" என்ற இரண்டில் ப்ராதிகூல்ய வர்ஜநமில்லை யென்பதைக் கீழே பரக்கப் பேசினார்; ஆநுகூல்ய ஸங்கல் பந்தானுமில்லையென்கிறாரிதில். திருநாம ஸங்கீர்த்தனம் பண்ணுவது திருக்கல்யாண குண கீர்த்தனம் பண்ணுவது தொழுதிறைஞ்சுவது த்யானிப்பது ஆகிய இவற்றில் பக்தியுமில்லை, ச்ரத்தையுமில்லை, சக்தியுமில்லை, இச்சையுமில்லை. அந்தோ! இவை யில்லையே யென்கிற அநுதாப புத்தியாகிலு முண்டோவென்னில், அது தானுமில்லை. *யந் முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே, ஸா ஹாநிஸ் தந் மஹச்சித்ரம் ஸா ப்ராந்திஸ் ஸா ச விக்ரியா* என்றும், *ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாநவர்ஜிதே, தஸ்யுபிர் முஷிதேநேவ யுக்த மாக்ரந்திதும் ந்ருணாம்* என்றும் சொல்லு கிறபடியே ஒரு க்ஷணகாலம் பாழே கழிந்தாலும் ஸர்வஸ்வமுமிழந்தவன் போலக் கதறிக் கதறியழுவனன்றோ ப்ராப்தம்; அநுதாபகந்தமுமின்றிக்கேயன்றோ நானிருப்பது.

மூன்றாவது பாதத்தின் முடிவில் **கிம் நு, கிம் து** என்று இருவகைப் பாடமுங் காண்கிறது. [**கிம் நு**] இது என்னோவென்று தம்மில் தாம் வருந்துகிறபடி. '**கிம் து**' என்கிற பாடமும் ஒருவாறு பொருந்தும். [**ப்ரதிகூலபக்ஷே பூயாந் பரிகர:**] ஈச்வர ஸ்ருஷ்டியிலேயே, அநுகூல பக்ஷத்தில் ஸாமக்ரிகளின்குறைவும், ப்ரதிகூல பக்ஷத்தில் ஸாமக்ரீ பௌஷ்கல்யமும் காணாநின்றோமிறே என்கை. ... (96)

एतेन वै सुविदितं बत मामकीनं दौरात्म्यमप्रतिविधेयमपारमीश !
संमूर्च्छितोऽप्यदमसि यतस्त्वदीयनिस्सीमभूमकरुणामृतवीचिवायोः ॥९७॥

ஏதேந வை ஸுவிதிதம் பத மாமகிநம்
தௌராத்ம்யமப்ரதிவிதேயமபாரமீச!,
ஸம்மூர்ச்சதோப்யபதமஸ்மி யதஸ் த்வதீய
நிஸ்ஸீம பூமகருணம்ருத வீசிவாயோ:. 97

ஈச! ஸம்மூர்ச்சதः த்வதீயநிஸ்ஸீம பூமகருணாஅம்ருதவீசிவாயோः அபி யதः அபதம் அஸ்மி, ஏதேந அப்ரதிவிதேயம் அபாரம் மாமகீநம் தௌராத்ம்யம் ஸுவிதிதம் பத!.

எம்பெருமானே! எங்கும்பரந்த, உன்னுடைய எல்லைகடந்த பெருமைவாய்ந்த கருணைதரங்கத்தின் காற்றுங்கூட என்மேல் படாமலிருப்பதனாலே, ப்ரதீகாரமற்றதாய் அபாரமான எனது தௌர்ப்பாக்யமானது ஸுப்ரஸித்தம்; அந்தோ!.

* * *—ப்ராதிகூல்யமிருக்கும் படியையே பன்னிப் பேசியருளுகிறார். எம்பெருமானே! உன்னுடைய எல்லை கடந்த கருணார்ணவத்தின் அலையெறிவு எங்கும் நிரங்குசமாகப் பரவாநிற்கச் செய்தேயும் அதன் காற்றுங்கூட அடியேன் மீது படாமையினாலே என்னுடைய பாவம் அளவு கடந்ததென்றும் ப்ரதீகாரமற்றதென்றும் அறுதியிடத் தட்டில்லையென்றாராயிற்று. (97)

ऐश्वर्यवीर्यकरुणागरिमक्षमाद्यास्स्वामिन्नकारणसुहृत्त्वमथो विशेषात् ।
सर्वे गुणास्सविषयास्तव मामपारघोराघपूर्णमगतिं निहतं समेत्य ॥९८॥

ஐச்வர்யவீர்ய கருணாகரிம க்ஷமாத்யா:
ஸ்வாமிந் அகாரணஸுஹ்ருத்த்வமதோ விசேஷாத்,
ஸர்வே குணாஸ் ஸவிஷயாஸ் தவ மாமபார
கோராக பூர்ணமகதிம் நிஹதம் ஸமேத்ய. 98

ஸ்வாமிந்! தவ ஐச்வர்ய வீர்ய கருணா கரிம க்ஷமா ஆத்யாः அதோ விசேஷாத் அகாரண ஸுஹ்ருத்த்வம் ஸர்வே குணாः அபார கோர அக பூர்ணம் அகதிம் நிஹதம் மாம் ஸமேத்ய ஸவிஷயாः.

எம்பெருமானே!, உன்னுடைய ஐச்வரியம் வீர்யம் கருணையின் பெருமை பொறுமை முதலானவைகளும் அதற்குமேல் விசேஷப்படியான அவ்யாஜ ஸௌஹார்தமும் ஆகிற ஸகலகுணங்களும் அபாரகோரபாபங்கள் நிறைந்தவனாய் கதியற்றவனாய் ம்ருதப்ராயனான என்னைப்பெற்று ஸவிஷயங்களாகின்றன.

* * *—கீழே பரக்க விண்ணப்பஞ் செய்தவற்றைக் கேட்டருளின எம்பெருமான் ஆழ்வான்! நீர் இங்ஙனே பாபபூயிஷ்டராயிருந்தீராகில் என்னை என் செய்யச் சொல்லுகிறீர்? உமக்கு நான் என்ன நன்மை செய்யமுடியும்!' என்ன; பிரானே! உன்னுடைய திருக்கல்யாண குணங்களெல்லாம் இலக்குப் பெறுவதற்கு என் பக்கலிலன்றோ ஸௌகர்யமுள்ளது; குணபூயிஷ்டர்கள் பக்கலிலே உன்னுடைய திருக்குணங்கள் ப்ரஸரிக்கக் கூசுமே; என் பக்கலிலன்றோ நிஸ்ஸங்கோசமாக அவை ப்ரஸரிக்கலாவது என்கிறார்.

இத்தலையில் கிஞ்சித்காரத்தை எதிர்பார்க்க வேண்டாமைக்குடலான ஐச்வர்யமும், ஸங்கல்பாநுகுண ரக்ஷணத்திற் குறுப்பான வீர்யமும், துக்கத்தைப் பொறுத்திருக்கமாட்டாமைக் குறுப்பான கருணையும், குற்றங்களிலே கண் செலுத்த வேண்டாமைக் குறுப்பான க்ஷமையும் மற்றுமுள்ள அவ்யாஜ ஸௌஹார்த வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகளுமான எல்லாக்குணங்களும் மற்றையோர் பக்கலிலே இரைபெறுமல் என்னளவிலன்றோ இரைபெற்று நிற்பது; ஆகவே எனக்கொரு குறையுமில்லைகாண். உனக்கும் உபேக்ஷிக்க வொண்ணாதுகாண் என்றாராயிற்று. (98)

त्वत्पादसंश्रयणहेतुषु साधिकारानुद्युञ्जतश्चरितकृत्स्नविधींश्च तांस्तान् ।
त्वं रक्षसीति महिमा न तवालमेष मां चेदनीदृशमनन्यगतिं न रक्षेः ॥९९॥

த்வத்பாத ஸம்ச்ரயணஹேதுஷு ஸாதிகாராந்
உத்யுஞ்ஜதச் சரிதக்ருத்ஸ்நவிதீம்ச்ச தாம்ஸ்தாந்,
த்வம் ரக்ஷஸீதி மஹிமா ந தவால மேஷ:
மாஞ்சேதநீத்ருசமநந்ய கதிம் ந ரக்ஷே:. 99

த்வத்பாத ஸம்ச்ரயண ஹேதுஷு ஸாதிகாராந் உத்யுஞ்ஜதஃ சரிதக்ருத்ஸ்நவிதீந் ச தாந் தாந் த்வம் ரக்ஷஸி இதி தவ ஏஷஃ மஹிமா—அநீத்ருசம் அநந்யகதிம் மாம் ந ரக்ஷேச் சேத் ந அலம்.

(எம்பெருமானே!) உன்திருவடிகளை யடைவதற்கு ஸாதனங்களான கர்மயோகாதிகளில் அதிகாரம் பெற்றவர்களாயும் அவற்றை யனுஷ்டிக்க முயலுமவர்களாயும் அவற்றையெல்லா மனுஷ்டித்துத் தலைக்கட்டினவர்களாயுமுள்ள அவ்வவர்களை நீரக்ஷித்துப்போருகிருயென்கிற விப்பெருமையானது—அப்படிப்பட்டவர்களிலே சேராதவனும் வேறுபுகலற்றவனுமான அடியேனை ரக்ஷியாதவளவில் விலைசெல்லாது.

* * *—மோக்ஷஸாதனங்களாக சாஸ்த்ரங்களில் ப்ரதிபாதிக்கப்பட்டவற்றை யநுஷ்டித்தாரையே ரக்ஷிப்பதென்றும் மற்றையோர்களை ரக்ஷிப்பதில்லையென்றும் நமக்கொரு விரதமுண்டு காணும் என்று எம்பெருமான் திருவுள்ளமாக, பிரானே! இப்படியொரு விரதங்கொள்ளுகை உன்னுடைய ரக்ஷகத்வப் பெருமைக்குக் கொத்தை காண் என்கிருர். [த்வத்பாதேத்யாதி.] உன்னுடைய திருவடிகளைக் கிட்டுகைக்கு ஸாதனங்களான கர்மயோகாத்யுபாயங்களை யநுஷ்டிக்க யோக்யதை யுடையவர்களையும் அநுஷ்டிக்கும் முயற்சியுடையவர்களையும் அவையெல்லாவற்றையும் அடைவே அநுஷ்டித்துத் தலைகட்டினவர்களையுமே ரக்ஷிப்பதாகவும் இவையொன்று மின்றிக்கே அநந்ய கதியான வென்னை உபேக்ஷிப்பதாகவும் திருவுள்ளமாகில் உனக்குள்ள ரக்ஷகத்வ ப்ரதைக்கு வசையாகாதோ? அது க்ருத ப்ரதிக்ருதமாகுமே யொழிய ரக்ஷணமாகுமோ? என்றுராயிற்று. (99)

या कर्मणामधिकृतिर्य इहोद्यमस्तेष्वप्येष्वनुष्ठितिरशेषमिदं हि पुंसाम् ।
त्वामन्तरेण न कथञ्चन शक्यमाप्तुमेवं च तेषु मयि चास्ति न ते विशेषः ॥१००॥

யா கர்மணுமதிக்ருதிர் ய இஹோத்யமஸ் தேஷு
அப்யேஷ்வநுஷ்டிதிரசேஷமிதம் ஹி பும்ஸாம்,
த்வாமந்தரேண ந கதஞ்சந சக்ய மாப்தும்
ஏவஞ்ச தேஷு மயி சாஸ்தி ந தே விசேஷ:. 100

கர்மணும் அதிக்ருதிஃ யா, தேஷு உத்யமஃ யஃ, ஏஷு அநுஷ்டிதிஃ அபி இதம் அசேஷம் பும்ஸாம் இஹ த்வாம் அந்தரேண கதஞ்சந ஆப்தும் ந சக்யம், ஏவஞ்ச தேஷு மயி ச தே ந விசேஷஃ.

(எம்பெருமானே!) கர்மயோகாதி அனுஷ்டானங்களுக்கு அதிகாரியாவதும் அவற்றில் முயற்சிசெய்வதும் அவற்றைச்செய்து தலைக்கட்டுவதுமாகிய இதெல்லாம் உன்னுதவியாலன்றி ஒரு விதத்திலும் பெறமுடியாததே; ஆகவே அவர்களோடு என்னோடு ஒரு வாசியில்லையாயிற்று உனக்கு.

* * * ஒன்றும் அனுட்டியாதவர்களையும் நான் ரக்ஷிப்பதென்று கொண்டால் மோக்ஷ ஸாதநவிதிசாஸ்த்ரங்கள் வ்யர்த்த மாகாதோ வென்று எம்பெருமான் திருவுள்ளமாக, அதற்கு மறுமாற்றமுரைக்கிருரிதில். [யா கர்மணு மித்யாதி.] கீழ்ச்லோ

கத்திற் சொன்ன கர்மயோகாத்யநுஷ்டாந யோக்யதையோ, அநுஷ்டாநத்தில் உத்யோகமோ, அநுஷ்டித்துத் தலைக்கட்டுதலோ எல்லாம் உன்னுடைய ஸங்கல்பத்தாலன்றி நிறைவேறமாட்டாதன்றோ; உன்னுடைய க்ருபையினாலேயன்றோ தலைக்கட்ட வேண்டும்; அதுதான் என்பக்கலிலும் குறையற்றிருந்ததாகையாலே அவர்களோடு என்னோடு வாசியில்லைகாண்.

கர்மயோகாதிகளில் ஏதேனுமொன்றைப்பற்றி உன்னைப் பெறவிருக்குமவர்கள் எத்தனை ஆனைத் தொழில்கள் செய்துபோந்தாலும், * स प्रीतोऽलं फलाय * என்கிறபடியே உன் திருவுள்ள முகந்தருளினாலல்லது பேறு கைபுகுருகைக்கு ப்ராப்தியில்லை யென்னுமிடம் அடியேன் சொல்லவேணுமோ? க்ஷணபங்குரங்களாயும் அசேதநங்களாயுமுள்ள க்ரியாகலாபங்கள் ஸ்வாதந்த்ர்யேண பலனளிக்க மாட்டாவே; அந்த அசேதந க்ரியாகலாபங்கள் உன் திருவுள்ளத்திலே இரக்கத்தைப் பிறப்பித்து அம்முகத்தாலே பலப்ரதங்களாக வேணுமேயல்லது உன் திருவருளை எதிர்பாராதே பயன் பெறுவிக்கமாட்டாவானபின்பு அத்திருவருளே அடியேனுக்கு அவலம்பமாகத் தட்டுண்டோ? அநந்யதாஸித்தமான உபாயம் ஸித்தமாயிருக்க, அந்யதாஸித்தமான ஸாத்யோபாயங்களிலே தலையிட்டுத் தடுமாற வேண்டாவே என்றதாயிற்று. ... (100)

निर्बन्ध एष यदि ते यदशेषवैधसंसेविनो वरद ! रक्षसि नेतरांस्त्वम् ।

तर्हि त्वमेव मयि शक्त्यधिकारवाञ्छा: प्रत्यूहशान्तिमितरच्च विधेहि विश्वम् ॥१०१॥

நிர்பந்த ஏஷ யதி தே யதசேஷவைத
ஸம்ஸேவிநோ வரத! ரக்ஷஸி நேதராம் ஸ்த்வம்,
தர்ஹி த்வமேவ மயி சக்த்யதிகாரவாஞ்சா:
ப்ரத்யூஹ சாந்திமிதரச்ச விதேஹி விச்வம். **101**

வரத! அசேஷவைதஸம்ஸேவிந: ரக்ஷஸி, இதராந் ந ரக்ஷஸி இதி யத் ஏஷ: தே நிர்பந்தோ யதி, தர்ஹி, சக்தி அதிகாரவாஞ்சா: ப்ரத்யூஹசாந்திம் இதரத் விச்வம் ச த்வம் ஏவ மயி விதேஹி.

வரந்தரும் பெருமானே! சாஸ்த்ரவிஹிதங்களான எல்லாவற்றையும் அனுட்டிப்பவர்களையே ரக்ஷிப்பது, அல்லாதாரை ரக்ஷிப்பதில்லை என்னுமிது உனக்கொரு நிர்ப்பந்தமாக உள்ளதாகில், நீயே என்னிடத்தில் சக்தியையும் அதிகாரத்தையும் அபேக்ஷையையும் ப்ரதிபந்தக நிவ்ருத்தியையும் மற்றுமபேக்ஷிதமான எல்லாவற்றையும் உண்டாக்கிக்கொள்ளக்கடவை.

* * * "ப்ராபகாந்தரபரித்யாகத்துக்கு அஜ்ஞாநா சக்திகளன்று, ஸ்வரூப விரோதமே ப்ரதாநஹேது" (என்கிற ஸ்ரீவசந பூஷண 115) திவ்ய ஸூக்திப்படியே உபாயாந்தரங்களை ஸ்வரூப விரோதிகளென்று துணிந்து விட்டிட்டு *காம்பறத் தலை சிரைத்துன் கடைத்தலையிருந்து வாழுஞ் சோம்பரையுகத்தி போலும் சூழ்புனலரங்கத்தானே* என்கிற திருமாலைப் பாசுரத்தில் திடமான நம்பிக்கை கொண்டு ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமுமே வடிவாயிருப்பவர்களை எம்பெருமான் தவறாது ரக்ஷித்தருள்வதாக ஒரு ப்ரஸித்தியுள்ளது. அந்த ப்ரஸித்திக்கு இணங்க *பகவத் ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியாகிற ப்ரபத்தி நிஷ்டையிலே ஊன்றியிருக்கிறார்கள் நம் ஆசார்யர்கள். உபாயாந்தரங்களும் சாஸ்த்ரங்களிலே விஹிதங்களாயிருக்கையாலே அவற்றை யநுஷ்டித்தாலல்லது காரியஞ் செய்யக் கடவோமல்லோம் என்று எம்பெமான் திருவுள்ள மிருந்தாகில் அப்போது, அகிஞ்சநர்களாயும் அநந்ய கதிகளாயுமுள்ள அதிகாரிகள் செய்யத்தக்கது யாது? அவ்வுபாயாந்தரங்களை அநுஷ்டிக்க வேண்டியதுதானோ? என்றொரு சங்கை தோன்றுமே; அதற்குப் பரிஹாரமுணர்த்துகிறது இந்த ச்லோகம்.

[நிர்ப்பந்த ஏஷ யதி தே இத்யாதி.] ஸ்வரூப விருத்தங்களான உபாயாந்தரங்களை அநுஷ்டித்தாலல்லது ரக்ஷிக்கக் கடவோமல்லோமென்று ஒரு நிர்ப்பந்தமிட்டுக்கொள்ள ப்ரஸக்தியில்லை; நிரங்குச ஸ்வதந்த்ரனானவன் ஏப்படிப்பட்ட நிர்ப்பந்தமும் இட்டுக்

கொள்ளலாமாகையாலே 'அங்ஙனே நிர்ப்பந்தம் நமக்கு உண்டு காணும்' என்று நீ சொல்லுவாயாகில், அங்கோபாங்க ஸஹிதமான அங்கி எவ்வளவு வேணுமென்று திருவுள்ளமோ அவ்வளவும் நீயே உண்டாக்கிக் கொண்டு ஸ்வநிர்ப்பந்தம் ஒருபடி பரிபாலிதமாயிற்றென்று கொண்டு ரக்ஷித்தருள்வது—என்று. எம்பெருமான் தனக்கும் மறுமாற்றமுரைக்க இடமில்லாதபடி விண்ணப்பஞ் செய்து ஸ்தவத்தையும் தலைக்கட்டினாராயிற்று. (101)

முடிவு தனியன்.

व्यक्तीकुर्वन्निगमशिरसामर्थमन्तर्निगूढं श्रीवैकुण्ठस्तुतिमकृत यः श्रेयसे सज्जनानाम् ।
कूराधीशं गुरुतरदयादुग्धसिन्धुं तमीडे श्रीवत्साङ्कं श्रुतिमतगुरुच्छात्रशीलैकधाम ॥

வ்யக்தீகுர்வந் நிகம சிரஸாமர்த்த மந்தர் நிகூடம்
ஸ்ரீவைகுண்ட ஸ்துதி மக்ருத ய: ச்ரேயஸே ஸஜ்ஜநாநாம்,
கூராதீசம் குருதரதயா துக்த ஸிந்தும் தமீடே
ஸ்ரீவத்ஸாங்கம் ச்ருதிமதகுருச்சாத்ரசீலைகதாம.

(கருத்து.) வேதாந்தங்களினுள்ளே பொதிந்து கிடக்கிற பொருள்களை விசதீகரித்தருள நினைத்து ஸத் புருஷர்களின் ச்ரேயஸ் ஸுக்காக ஸ்ரீவைகுண்டஸ்தவத்தை யருளிச்செய்தவராயும், மிகுந்த கருணைக்கடலாயும், சாஸ்த்ர ஸித்தமான ஆசார்ய லக்ஷண சிஷ்ய லக்ஷணங்களுக்கு முக்ய வாஸஸ்தானமாயுமுள்ள கூரத்தாழ்வானைத் துதிக்கின்றேனென்கை. (*)

(ஆழ்வான் தனியன்.)

अर्वाञ्चो यत्पदसरसिजद्वन्द्वमाश्रित्य, पूर्वे मूर्ध्ना यस्यान्वयमुपगता देशिका मुक्तिमापुः ।
सोऽयं रामानुजमुनिरपि स्वीयमुक्तिं करस्थां यत्संबन्धादमनुत कथं वर्ण्यते कूरनाथः ॥

அர்வாஞ்சோ யத்பதஸரஸிஜத்வந்த்வமாச்ரித்ய, பூர்வே
மூர்த்நா யஸ்யாந்வய முபகதா தேசிகா முக்தி மாபு:,
ஸோயம் ராமாநுஜ முநிரபி ஸ்வீய முக்திம் கரஸ்தாம்
யத்ஸம்பந்தாதமநுத கதம் வர்ண்யதே கூரநாத:.

(கருத்து.) தம்முடைய சிஷ்யர்களைத் தமது திருவடி ஸம்பந்தத்தினாலும் தம்முடைய பூர்வாசார்யர்களைத் தமது திருமுடி ஸம்பந்தத்தினாலும் உஜ்ஜீவிப்பித்தருளின எம்பெருமானாருங்கூட கூரத்தாழ்வானுடைய ஸம்பந்தத்தினாலேயே தமக்கு முக்தி ஸித்தமென்று திருவுள்ளம் பற்றினதாக இதிஹாஸமுள்ளது; அப்படிப்பட்ட ஆழ்வான் பெருமையை நாம் என்னவென்று வருணிப்பது! மொழியைக் கடக்கும் பெரும் புகழன்றோ ஆழ்வானுடையது என்கை. (*)

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஆழ்வான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசார்யர் இயற்றிய

பஞ்சஸ்தவ வ்யாக்க்யானத்தில்

ஸ்ரீவைகுண்டஸ்தவ வ்யாக்க்யானம்

முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

"ஸ்ரீராமாநுஜன்"

மாத இதழ் மறு வெளியீடு



உலகோர் உய்யும்வண்ணம் ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமி அருளிய பகவத் கல்யாண குணாநுபவக் கட்டுரைகள், வேதாந்தவிசாரங்கள், ரஹஸ்ய க்ரந்த நுண்பொருள்கள், ஸ்தோத்ரபாட அர்த்த விசேஷங்கள், ஆழ்வார்கள், ஆசார்யர்களின் பெருமை, திருவாய்மொழி, முதல் மூன்று திருவந்தாதிகள், பெரியதிருமொழி ஆகியவற்றிற்கான திவ்யார்த்த தீபிகை உரைகள் இந்த இதழை அணிசெய்கின்றன. அன்பர்கள் அனைவரும் ஸ்ரீராமாநுஜன் மாத இதழை ஆதரத்துடன் அநுபவித்துப் பயன்பெறுக! காரேய் கருணை இராமாநுசனின் அருள்பெறுக!

தனி இதழ் ரூபாய் 15/–, ஆண்டுச்சந்தா ரூபாய் 150/– ஆயுள்சந்தா ரூபாய் 1000/–

சந்தாத்தொகையினை ஸ்ரீராமாநுஜன் என்றபெயரில் **D.D.** (or) **M.O.** ஆக எடுத்து
214, கீழை உத்தரவீதி, ஸ்ரீரங்கம்–6 என்ற முகவரிக்கு அனுப்பி
வைத்திடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வெளியூர் காசோலைகள் **(Cheques)**
அனுப்பவேண்டாம் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீ:


ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

மொழியைக் கடக்கும் பெரும்புகழாளரான ஸ்ரீகூரத்தாழ்வான் அருளிச்செய்த

அதிமாநுஷஸ்தவம்

ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமி இயற்றிய

வியாக்கியானத்துடன்



ஆமருவியப்பன் - தேரழுந்தூர்

மறுஅச்சு மற்றும் கிடைக்குமிடம் :

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ

ஸ்ரீரங்கநாச்சியார் அச்சகம்

214, கீழை உத்தரவீதி, ஸ்ரீரங்கம் - 6.

☎: 0431 - 2434398. E-Mail : akchari@vsnl.com

விலை ரூபாய் 35/- தபாற்செலவு தனி.

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

மொழியைக் கடக்கும் பெரும்புகழாளரான ஸ்ரீகூரத்தாழ்வான்
அருளிச்செய்த பஞ்சஸ்தவத்தில் இரண்டாவது ஸ்தவமான

அதிமாநுஷஸ்தவம்

ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமி இயற்றிய
"தத்வார்த்த சிந்தாமணி" என்னும் வியாக்கியானத்துடன்

மணவாள மாமுனிகளின் 600ஆவது ஆண்டு
நிறைவு நினைவு மலர்களில் 13ஆவது மலராக பதிப்பிக்கப்பெற்றது.

பதிப்பித்த ஆண்டு :
3-11-1970 (சாதாரண ஐப்பசி திருமூலம்)

வெளியீடு :
கிரந்தமாலா, காஞ்சிபுரம்.


அச்சிட்டோர் :
Freedom Press, Madras - 21.

மறுஅச்சு மற்றும் கிடைக்குமிடம் :
ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ
ஸ்ரீரங்கநாச்சியார் அச்சகம்
214, கீழை உத்தரவீதி, ஸ்ரீரங்கம்-6.
☎: 0431 - 2434398. E-Mail: akchari@vsnl.com

24.01.2004

விலை ரூபாய் 35/- *தபாற்செலவு தனி.*

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:



அதிமாநுஷசீலவ்ருத்தவேஷை:
அதிவ்ருத்தாமர விக்ரம ப்ரதாபை : |
அதிலங்கித ஸர்வலோகஸாம்யம்
வரயே வைஷ்ணவ வைபவாவதாரம் ||

– அதிமாநுஷஸ்தவம் 1

இந்நூலினை ஸ்ரீவைஷ்ணவ சமூகத்தினர் அனைவரும் குறைந்த விலையில் பெற்றுப் பயன்பெறும் வண்ணம், தரமான அச்சுத் தாளினை கொடுத்து உதவியவர் நமக்கு பரம ஆப்தரும், ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேசங்களுக்கும், ஸம்ப்ரதாயத்திற்கும் பற்பல நற்பணி களைச் செய்துவருபவருமான ஸ்ரீ.S.A.R.ப்ரஸன்ன வேங்கடாசார்யர் சதுர்வேதி ஸ்வாமி (ஸ்ரீபாஷ்யகாரர் சாரிடபிள் டிரஸ்ட், சென்னை - 17.)

Released by Maaran's Dog Toronto , Canada

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

கூரத்தாழ்வான் திருவடிகளே சரணம்.

அதிமாநுஷஸ்தவம்.

[அ வ தா ரி கை.]

ஆழ்வானருளிச்செய்த பஞ்சரத்நமென்று ப்ரஸித்திபெற்ற பஞ்சஸ்தவத்திலே முதல்வதான ஸ்ரீ வைகுண்ட ஸ்தவத்துக்கு அடுத்த ஸ்தவம் அதிமாநுஷஸ்தவமாயிருக்கும். மூன்ருவது ஸுந்தரபாஹுஸ்தவம். நான்காவது வரத ராஜஸ்தவம்; ஐந்தாவது ஸ்ரீஸ்தவம். பஞ்சஸ்தவத்தின் பௌர்வாபர்ய க்ரமம் இதுவே யாகும்.

ஆழ்வான் எம்பெருமானுர் திருக்கோலம் பூண்டு சோழராஜ ஸபைக்கு எழுந்தருளி ஸ்ரீமந் நாராயணனே பரதத்வமென்று உபந்யஸித்தருளினது மன்றி "சிவாத் பரதரம் நாஸ்தி" என்றதற்குப் பரிஹாஸமாக "த்ரோணமஸ்தி தத: பரம்" என்று எழுத்திட்டது கண்டு கோபத்தினுடைய மேலெல்லையிலே நின்ற வீரசைவனுன அவ்வரசனுடைய கொடுமையினுல் திருக்கண்களையிழந்து பெரிய நம்பியைப் பறிகொடுத்துத் திருவரங்கம் பெரிய கோயிலேற மீண்டெழுந்தருளி அங்கே வஸிக்கப் பார்த்தவளவிலே, அப்போது எம்பெருமானுர் சோழனுடைய உபத்திரவங்களைப் பொறுக்க மாட்டாமல் திருநாராயண புரத்தேற எழுந்தருளியிருந்தபடியால் அவரைப் பிரிந்து கோயிலிலே வஸிக்க மாட்டாமையாலும், இராமானுசனடியார்களை சோழ ராஜஸேவகர்கள் பலவகைகளில் நலிந்துகொண்டிருந்த படியாலும் "இத்திருவரங்கமாநகர் நிஷ்கண்டக மாமளவும் நாம் இங்கே வஸிக்கத் தகாது" என்று திருவுள்ளம் பற்றிய ஆழ்வான் அங்கு நின்றும் புறப்பட்டருளித் திருமாலிருஞ் சோலைமலையிலே சிலகாலம் வஸித்தருள்வதாக எழுந்தருளும்போது வழியிடையிலே பகவத் குணுநுபவத்தாலே தம்முடைய நெஞ்சாறல்களை மறக்கக் கருதி ஸ்ரீ வைகுண்டஸ்தவமருளிச்செய்து தலைக் கட்டினவாறே அதிமாநுஷஸ்தவத்தை யருளிச் செய்தார்.

இதுதனக்கு அதிமாநுஷஸ்தவமென்று திருநாமமாயிற்றென்னென்னில்; இந்த ஸ்தவம் "அதிமாநுஷ சீலவ்ருத்த வேஷை:" என்ற சப்த ஸந்தர்ப்பத்தாலே தொடங்கப் பெற்றமையால் 'முதற் குறிப்பு' என்னுமிலக்கணத்தாலே இதற்கு அதிமாநுஷஸ்தவமென்று பேராயிற்று. ஜிதந்தேஸ்தோத்ரம், அமலனுதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு என்பனபோலே என்று சொல்லலாமாகிலும், இராமபிரானுடையவும் கண்ணபிரானுடையவும் அதிமாநுஷ சேஷ்டிதங்களை வர்ணிக்கப் பிறந்த ஸ்தவமாகையாலே அதிமாநுஷஸ்தவ மென்னலாயிற்றென்று பெரியோர் சொல்லிப் போருவர்கள். அதிமாநுஷர்களான ராமகிருஷ்ணர்களுடைய ஸ்தவமாகையாலே யென்றும் சிலர் சொல்லுவர்கள். மாநுஷாந் அதிக்ராந்தமானது அதிமாநுஷமெனப் படும். மனுஷ்ய யோனியிலே பிறந்து வைத்து "ஆத்மாநம் மாநுஷம் மந்யே" என்றும் "அஹம் வோ பாந்தவோ ஜாத:" என்றும் வசநவ்யக்திகளுண்டாயிருக்கச் செய்தேயும், பெரியவுடையார்க்குப் பரகதியளிப்பது, கடலிலே அணைகட்டுவது, குன்றமொன்றெடுத்தேந்தி நிற்பது, ஸாந்தீபிநி புத்ரஸஞ்ஜீவநம் வைதிக புத்ராநயநம் முதலிய அருந்தொழில்கள் செய்வது, இவை போல்வன பலதிவ்ய சேஷ்டிதங்கள் செய்தருளிற்றெல்லாம் நெஞ்சால் நினைப்பரிதாய் அதிமாநுஷமென்னுமித்தனையிறே.

கீழ் ஸ்ரீ வைகுண்ட ஸ்தவத்திலே பரத்வே பரத்வவிஷயமாகச் சொல்லவேண்டுவதெல்லாம் ஒருபடி சொல்லியற்றது. வ்யூஹத்தில் நிலையை மாநஸாநுபவமாத்ரமாய் அநுபவித்துத் தலைக் கட்டினராய் மேல் விபவாவதாராநுபவத்திலே திருவுள்ளம் மண்டி இந்த ஸ்தவமருளிச் செய்கிறராய், இதுதன்னிலே பல அவதாரங்களைப் பற்றிப் பேசாநின்றரெனினும் ராமாவதாரத்திலும் கிருஷ்ணாவதாரத்திலுமேயாய்த்து அபிநிவேசாதிசயம் தோற்றப் பேசியருளிற்று. பாசுரப் பரப்புள்ளதும் அவ்விரண்டிலேயாய்த்து.

ஆழ்வானுடைய மற்றை ஸ்தவங்கள் கிடக்கச் செய்தேயும் இந்தஸ்தவம் சப்தஸந்தர்ப்ப மாதுர்யவிசேஷத்தாலும் அர்த்த காம்பீர்ய பௌஷ்கல்யத்தாலும் ஒப்புயர்வற்று விளங்கும். குஸுமாதபி ஸுகுமாரமென்று ப்ரஸித்தமான ஆழ்வானுடைய திருவுள்ளத்தின் வைகரி விளங்காநிற்குமாய்த்து இதுதன்னிலே.

இந்த ஸ்தவத்தினுடைய வைபவத்துக்குத் தகுதியாக விபுலவியாக்யாநமிடவேணுமென்று குதூஹலம் கிளராநின்றாலும் காலாநுகுணமாகவும் அதிகாரிகளுடைய அபிஸந்திப்ரகாரோசிதமாகவும் ஸங்க்ரஹமே ஸமுசிதமென்று கொண்டு ஸங்க்ஷிப்த ப்ரக்ரியையிலே வியாக்யாநம் செய்யலாகிறது. ஆயினும் ஆவச்யகத்வேந விவக்ஷிதாம்சங்களுக்குக் குறையில்லாமை கண்டுகொள்வது.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கூரத்தாழ்வான் திருவாய்மலர்ந்தருளிய
பஞ்சஸ்தவத்தில் இரண்டாவதான
அதிமாநுஷஸ்தவம்.

மூலம். அதிமாநுஷசீலவ்ருத்தவேஷை: அதிவ்ருத்தாமர விக்ரம ப்ரதாபை:,
அதிலங்கித ஸர்வலோகஸாம்யம் வரயே வைஷ்ணவ வைபவாவதாரம் ||

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் இயற்றிய

தத்வார்த்த சிந்தாமணி வியாக்யானம்.

பதவுரை

அதிமாநுஷ சீலவ்ருத்த வேஷை:	திவ்யமான ஸ்வபாவமென்ன சேஷ்டிதமென்ன ஆக்ருதியென்ன இவற்றாலும்,	அதிலங்கித ஸர்வலோக ஸாம்யம்	ஒருவரோடும் ஒப்புச் சொல்லவொண்ணாதிருக்கிற
அதிவ்ருத்த அமரவிக்ரம ப்ரதாபை:	அதிதிவ்யமான விக்ரமங்களென்ன ப்ரதாபங்களென்ன இவற்றாலும்	வைஷ்ணவ வைபவாவதாரம்	எம்பெருமானுடையதான விபவாவதாரத்தை
		வரயே	புகழ்கின்றேன்.

* * * * *

அத்யத்புதங்களான ஸ்வபாவத்தாலும் வ்யாபாரத்தாலும் அலங்காரத்தாலும் விக்ரமத்தாலும் ப்ரதாபத்தாலும் ஒத்தார்மிக்காரையிலையாய மாமாயனான பரமபுருஷனுடைய விபவாவதாரத்தைப் புகழ்ந்து பேசத் தொடங்குகிறேனென்று ப்ரதிஜ்ஞை பண்ணுகிறார் இதில்.

ராமகிருஷ்ணாதிகள் மனுஷ்யயோனியிலே அவதரித்திருக்கச் செய்தேயும் மனுஷ்யர்களுக்குரிய சீல வ்ருத்த வேஷங்களை யுடையரன்றிக்கேயிருப்பார்கள். * இமௌ ஸ்ம முநிசார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ * என்றும், * அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம், ந ஹி ப்ரதிஜ்ஞாம் ஸம்ச்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விசேஷத: *

என்று மித்யாதிகளிலே இராமபிரானுடைய சீலமும், கடலிலே அணைக இராமபிரானுடைய வ்ருத்தமும், கோவர்த்தநோத்தரணம் முதலான கண் வ்ருத்தமும், * பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்* என்னும்படியான இர வேஷமும், * அம்போத நீலமரவிந்த தளாயதாக்ஷம் பிஞ்சாவதம்ஸ மு பாணிம் * என்னும்படியான கண்ணபிரானுடைய வேஷமும் அதிமாநுஷ கடலிலே ஒருதிவலையெடுத்துக் காட்டினபடியாமிது.

[அதிவ்ருத்தாமரேத்யாதி] விக்ரமமாவதென்? ப்ரதாபமாவதெ கூசாதே சத்ருஸைன்யமத்யத்திலே பிரவேசிக்கைக்கீடான சக்திவிசேஷம் ரால் அபிபவிக்க வொண்ணுமைக்குறுப்பான சக்தி விசேஷம் ப்ரதாபம். விபவாவதாரங்களிலே காட்டியருளின விக்ரம ப்ரதாபங்களும் அவனுடை வேஷங்களும் இந்த ஸ்தவத்திலே மேலே விரித்துரைக்கப்பட்டமை க இவற்றாலே மனுஷ்ய தேவாதிகளெல்லாரிற்காட்டிலும் அதிசயித ப்ரப விபவாவதாரத்தை ஏத்துகின்றேனென்றாராய்த்து. இதில் "அதிவ்ருத்த தாபை;" என்பதை ஸ்வதந்த்ர விசேஷணமாக்காதே அதிமாநுஷ சீல களுக்கு விசேஷணமாக்கி நிர்வஹிப்பதும் ஒரு புடையுண்டு.

["வரயே"] இங்கு ஆத்மநே பதம் நிர்வஹிக்கும்படி யென்னென் சஷ்டே—வரயதே" என்றாகக் கடவது. வரமென்றது ச்லாக்யமென்றபட ரத்தை ச்லாக்கியமாகச் சொல்லுகிறேனென்றாய், புகழ்கின்றேனென்றவாறு

* * * *

ச்ரேய: கிரந்து கிரணாச் சரணாரவிந்த நிஷ்யந்தமாந மகரந்த ரஸௌக தேச்யா
தஜ்ஜா: ச்ருதேர் மதுந உத்ஸ இதி ப்ரதீதா: மாங்கல்ய ரங்கநிலயஸ்ய பரஸ்

மாங்கல்ய ரங்கநிலயஸ்ய	அனைவர்க்கும் க்ஷேமங்கரமான ஸ்ரீரங்கவிமானத்தை வாஸஸ்தானமாகவுடையனுப்	மதுந: உத்ஸ: இதி	மதுவின் மென்று
பரஸ்ய தாம்ந:	பரஞ்சோதியென்று ப்ரஸித்தனுன எம்பெருமானுடைய	ச்ருதே:	வேதத்தினு
சரணாரவிந்த நிஷ்யந்தமாந மகரந்த ரஸௌகதேச்யா:	திருவடித் தாமரைகளில் நின்றும் பெருகாநின்றமகரந்தரஸப்ரவாஹமென்னலாம்படியாய்	ப்ரதீதா:	ப்ரதிபன்ன
		தஜ்ஜா:	அந்த திருவ தின்றுமு
		கிரணா:	கிரணங்கள்
		ச்ரேய:	நன்மையை
		கிரந்து	வ்ருத்திபண்

இது முதல் நான்கு ச்லோகங்களாலே ஸ்ரீரங்கநாதன் பக்கல் ப்ராவ ப்ரகாசிப்பித்தருளுகிறார். விபவாவதாரங்களை அனுபவிக்க இழிந்தவ தாரத்திலே அவகாஹிப்பானென்னென்னில்; *மாமுனி வேள்வியைக் க மாட்டிய அடுதிறலயோத்தியெம் மரசே அரங்கத்தம்மா *என்றும், *கோவல யுண்டவாயனென்னுள்ளங் கவர்ந்தானை அண்டர்கோனணியரங்கனென்ன மருளிச் செய்தபடியே ஸ்ரீரங்கநாதனை நிலைமையிலே விபவாபதானங்கள் லாம்படி யிருக்கையாலே சொல்லுகிறார். அர்ச்சாவதாரத்தை யனுபவிக்க விபவாபதானங்களைப் பேசியல்லது தரிக்கப் போகாது; விபவாவதாரத் இழியுமளவில் அர்ச்சையைக் கூட்டியல்லது பேசப் போகாது. ஆழ்வார்களு இதிலே ஏக கண்டராயிருப்பர்களாய்த்து. ஸுந்தரபாஹுஸ்தவ வரதரா அர்ச்சாவதாராநுபவப்ரதாநங்களாயிருக்கச் செய்தேயும் ஊடே விபவ அவர்ஜநீயமானவோபாதி விபவாபதாநாநுபவப்ரதாநமான இந்த ஸ்தவத்தி பவம் அவர்ஜநீயமானபடி. ஆழ்வார்களுடைய அநுபவப்ரகாரமும் இங்ங கண்க.

அணியார் பொழில் சூழரங்க நகரப்பா-பரஞ்சோதீ என்னப்பட்ட பரம்ஜ்யோதிஸ்சப்தவாச்யனான ஸ்ரீரங்கநாதனுடைய தாமரைபோன்ற திருவடிகளின் கிரணங்களானவை ச்ரேயஸ்கரங்களாகவேணும். அந்த கிரணங்கள் எப்படிப் பட்டவையென்னில்; 'தாமரை மலரில் நின்றும் பெருகுகின்ற மகரந்த ரஸப்ரவாஹமோ இவை' என்னலாம்படியாயிருக்கும். சரணமென்றுபேராய் தாமரையேயிறேயுள்ளது. தாமரையாகில் மகரந்தம் பெருகுமே; அதுவே கிரணவ்யாஜத்தாலே பரவாநின்றதுபோலும். மகரந்தப்ரவாஹமென்று நாம் உத்ப்ரேக்ஷிக்கிறவளவேயல்ல; ச்ருதிப்ரதிபாதிதமுமென்கிருர்—"ச்ருதேঃ" இத்யாதியால். *விஷ்ணோঃ பதே பரமே மத்வ உத்ஸঃ *என்றதிறே ச்ருதி. [மத்வঃ - மதுநঃ, உத்ஸঃ- ப்ரவாஹঃ.] ச்ருதேঃ என்றது பஞ்சம்யந்தம். 'தஜ்ஜাঃ' என்றவிடத்தில் தச்சப்தம் சரணாரவிந்தபரம்.

"ரஸௌகதேச்யাঃ" என்றவிடத்து *ஈஷதஸமாப்தௌ கல்பப்தேச்யதேசீயரঃ* என்ற பாணிநிஸூத்ரமநுஸந்தேயம்.

என்னுடைய சரணவரணத்துக்கு விஷயமான ரங்கரமண சரணகிரணங்கள் அதிமாநுஷாவதார சரித்ர ஸ்தோத்திரத்திற்கு உறுப்பான வாக்ஸம்ருத்தியைக் கொடுக்க வேணுமென்று இந்தச்லோகத்தால் ப்ரார்த்தித்தாராய்த்து. (2)

ஸ்ரீமத்பராங்குச முநீந்த்ரமநோ நிவாஸாத் தஜ்ஜாநுராகரஸமஜ்ஜந மஞ்ஜஸாப்ய
அத்யாப்யநாரததுத்திதராகயோகம் ஸ்ரீரங்கராஜசரணாம்புஜமுந்நயாம: (3)

ஸ்ரீமத்பராங்குச முநீந்த்ரமநோ நிவாஸாத்	நம்மாழ்வாருடைய திருவுள்ளத்தில் உறைந்ததனாலே	அத்யாபி	இன்னமும்
தஜ்ஜ அநுராக ரஸ மஜ்ஜநம்	அத்திருவுள்ளத்திலுண்டான அனுராகமாகிற தீர்த்தத்தில் திருமஞ்ஜனத்தை	அநாரத தநுத்திதராக யோகம்	அந்த அநுராகரஸமஜ்ஜனத்தாலுண்டான ராகஸம்பந்தம் மாருமலிருக்கப்பெற்ற
அஞ்ஜஸா	சீக்கிரமாக	ஸ்ரீரங்கராஜ சரணாம்புஜம்	ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித் தாமரையை
ஆப்ய	அடைந்து	உந்நயாம:	சிரஸா தரிக்கிறோம்.

* * * * * *

[ஸ்ரீமத் பராங்குசேத்யாதி] ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகள் ஸ்வாபாவிகமாகவே சிவந்திருக்கும்படிக்கு ஒரு ஹேதூத்ப்ரேக்ஷை பண்ணுகிருர். * க்ருஷ்ணத்ருஷ்ணாதத்வமிவோதிதம் * என்கிறபடியே பகவத் விஷயாநுராகமே ஒருவடிவு கொண்டதென்னலாம்படி பகவதநுராக பூயிஷ்டரான நம்மாழ்வாருடைய திருவுள்ளத்திலே * திருக்கடித்தானமுமென்னுடைச் சிந்தையுமொருக்கடுத்துள்ளேயுறையும்பிரான் * ஒண் சங்கதைவாளாழியானொருவனடியேனுள்ளான் * வெல்லநெடியான் நிறம் கரியானுள் புகுந்து நீங்கானடியேனதுள்ளத்தகம் * இத்யாதிப்படியே அவிச்சிந்நவாஸம் பண்ணியருளாநின்ற எம்பெருமானுடைய திருவடித் தாமரைகள் அவ்வநுராக ரஸமஜ்ஜநத்தாலே ராகயோகம் மாருதிருக்கப் பெற்றதாகப் பேசுகிருர். அப்படிப்பட்ட திருவடிகளை முடிமேல் புனைவோமென்கிருர்.

கவிஸமய ஸரணியில் அநுராகம் சிவப்பாக வர்ணிக்கப்படுமென்பது அறியத்தக்கது. நம்மாழ்வாருடைய திருவுள்ளம் பகவத் விஷயாநுராக பரிபூர்ணமென்னுமிடமும், அவர் திருவுள்ளத்திலேயே எம்பெருமான் நித்யவாஸம் செய்தருள்கிருனென்னுமிடமும் இந்த ச்லோகத்தில் தேறிற்ருகும். இதில் த்விதீய பாதாதியிலுள்ள தச்சப்தம் ஆழ்வார் திருவுள்ளத்தைக் குறிக்கும். மூன்ருவது பாதத்தின் இடையிலுள்ள தச்சப்தம் அநுராக ரஸமஜ்ஜநத்தைக்குறிக்கும்.

[ஆப்ய] ப்ர, அவ, ஸம் இத்யாதியுபஸர்க்கபூர்வகமான அவ்யயமாயிருந்தாலன்ருே ல்யபந்தமாகும்; இங்கு உபஸர்க்கமொன்று மில்லாமையாலே "ஆப்த்வா" என்று த்வா ப்ரத்யயாந்தாவ்யய மாகவன்ருே ப்ரயோகிக்கவேணுமென்று சிலர் சங்கிக்கக்கூடும்; இவ்

விடத்தில், ஆங் என்னுமுபஸர்க்கம் ஸம்யுக்தமாயிருப்பதால் ‘ஆப்ய’ என்றது பொருத்த முடைத்தே. “முக்திமாப்ய பரமாம் பரே பதே” என்று ஸுந்தர பாஹுஸ்தவத்திலும் ப்ரயோகமுள்ளது காண்க. [அஞ்ஜஸா] சீக்கிரம் என்னுமர்த்தத்திலும் த்ருவம் என்னுமர்த்தத்திலும் இந்த அவ்யயத்துக்கு ப்ரயோக முண்டாகையாலே இவ்விடத்தில் த்ருவம் என்கிற அர்த்தம் கொள்வது உசிதமாம். அஞ்ஜஸா—உண்மையாக. [உந்நயாம:] உந்நயநமாவது உயரத்தூக்குகை; இங்கே சிரஸா தாரணத்தைச் சொல்லுகிறது. (3)

வஜ்ரத்வஜாங்குச ஸுதாகலசாதபத்ர பங்கேருஹாங்க பரிகர்மபரீத மந்த:
ஆபாதபங்கஜ விச்ருங்கல தீப்ரமௌலே: ஸ்ரீரங்கிணச் சரணயோர் யுகமாச்ரயாம: (4)

ஆபாதபங்கஜ விச்ருங்கல தீப்ர மௌலே:	திருவடித் தாமரையளவும் நிரர்களமாக ஜ்வலித்துக்கொண்டிருக்கிறதிருவபிஷேகத்தை யுடையனுன	வஜ்ர த்வஜ அங்குச ஸுதா கலச ஆதபத்ர பங்கேருஹ அங்க பரிகர்ம பரீதம்	வஜ்ரம், த்வஜம், மாவட்டி, அமிருதகலசம், குடை தாமரைப்பூ--இந்த சின்னங்களாகிற அலங்காரத்தாலே வியாப்தமாயிருக்கிற
ஸ்ரீரங்கிண: அந்த:	ஸ்ரீரங்கநாதனுடைய (திருவடியின்) உட்புறத்தில்	சரணயோ: யுகம் ஆச்ரயாம:	திருவடியிணையை ஆச்ரயிக்கிறோம்.

* * * * * *

முற்றவிம் மூவுலகும் விரிகின்ற சுடர் முடிக்கே என்று ஆழ்வாரருளிச் செய்தபடியே - கண்டவிடமெங்கும் ஒளிசெய்து விளங்குமதான திருவபிஷேகம் திருவடித் தாமரையளவும் ஒளிசெய்து விளங்காநிற்கும் என்னுமிடம் கைமுதிகந்யாயஸித்தமிறே. *கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீண்முடியின் ப்ரகாச வைபவம் வாக்குக்கு விஷயமாகமாட்டாதே. தன்னொளியாலே திருமேனி முழுவதையும் முட்டாக்கிட்டு வீறுபெற்று விளங்காநின்ற திருவபிஷேகத்தையணிந்து திகழும் திருவரங்கச் செல்வனுருடைய திருவடிகளை ஆச்ரயிப்போமென்கிருர்.

அத்திருவடிகள் புருஷோத்தமலக்ஷணம் பொலியநிற்கும்படியை யருளிச்செய்கிருர் பூர்வார்த்தத்தாலே. வஜ்ராயுதாத்மகமான சின்னம், த்வஜரூபமான சின்னம், அங்குசரூபமான சின்னம், அம்ருதகலசரூபமான சின்னம், ஆதபத்ரரூபமான சின்னம், தாமரைப் பூமயமான சின்னம், இன்னம் சொல்லிச் சொல்லாத சங்க சக்ர மத்ஸ்ய கல்பகாதி சின்னங்கள் இவற்ருலே அலங்க்ருதமான அந்த: ப்ரதேசத்தையுடைய திருவடிகளைப் பணிவோமென்ருராயிற்று. ஸ்ரீ வைகுண்ட ஸ்தவத்திலே “வஜ்ராங்குச த்வஜ ஸரோருஹ சங்க சக்ர மத்ஸ்ய ஸுதாகலச கல்பக கல்பிதாங்கம் த்வத் பாத பத்மயுகளம்” என்றது இங்கே அனுஸந்தேயம்.

[பரிகர்ம—அலங்காரம்.] [பரீதம்—வ்யாப்தம்.] [அந்த;-உள்ளடியிலே.] (4]

ஸ்ரீரங்க ராஜ சரணௌ ப்ரணுமோ யயோ: கலு ஏகஸ் த்ரிவிக்ரமவிதௌ வஸுதாமசேஷாம்
வ்யக்ரம்ஸ்த ஸாசலகுலாமபி விப்ரகீர்ண ஸ்தூலாவலக்ந ஸிகதாமிவ நிர்நதோச்சம் || (5)

யயோ:	(எம்பெருமானுடைய) எந்த இரண்டு திருவடிகளுள்	அசேஷாம்	ஸமஸ்தமான
		வஸுதாம்	பூமண்டலத்தையும்
ஏக:	ஒரு திருவடியானது	நிர்நதோச்சம் (யதாததா)	சிறிது பெரிது என்கிற வாசியின்றிக்கே (ஸகல பதார்த்த வ்யாபியாக)
த்ரிவிக்ரம விதௌ	மூவுலகளந்தவிடத்து		
ஸாசல குலாம்அபி	பர்வத ஸமூஹங்களோடு கூடியதாயிருக்கச் சேய்தேயும்	வ்யக்ரம்ஸ்த	அளந்ததோ,
		(தௌ)	அந்த ஒரு திருவடியோடு கூடி த்வந்த்வமாயிராநின்ற
விப்ரகீர்ண ஸ்தூலாவலக்நஸிகதாம் இவ ஸ்திதாம்	சிதறின பெரிய பருக்கைகள் ஒட்டிக்கொண்டிருக்கப் பெற்றது போன்றிருந்த	ஸ்ரீரங்கராஜ சரணௌ	ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளை
		ப்ரணும:	ஸ்தோத்ரம் பண்ணுகிறோம்,

“உவந்த வுள்ளத்தனுயுலகமளந்தண்டமுற நிவர்ந்த நீண் முடியன்—கடியார் பொழிலரங்கத்தம்மான்” என்கிறபடியே உலகளந்த அபதானத்தையும் ஸ்ரீரங்கநாதனுடைய செயலாக அநுஸந்தித்து அவ்வுலகளந்த திருவடிகளை ஏத்துவோமென்கிறார். இரண்டு திருவடிகளும் செய்த செயலை அருளிச் செய்யாதே ஒரு திருவடியின் செயலை மாத்திரம் இங்கே அருளிச் செய்தது—கண்ணெச்சில் வாராமைக்காக. “மந்தரமீதுபோகி மதிநின்றிறைஞ்ச மலரோன் வணங்க வளர் சேர் அந்தரமேழினூடு செலவுய்த்த பாதமது நம்மையாளுமரசே” என்று திருமங்கை யாழ்வார் உபரிதந லோகங்களை யளந்த திருவடியொன்றையே பற்றினார். “நிலம் தாவிய நீள்கழலே-நாடொறும் வீடின்றியே தொழக் கூடுங்கொல்.” என்று நம்மாழ்வார் கீழுலகங்களையளந்த திருவடியொன்றையே விரும்பினார். இவர் ஒரு திருவடியின் செயலை அநுஸந்தித்து இரண்டு திருவடிகளையும் விரும்புகிறாரென்று சமத்காரமுணர்க.

பூமண்டலம் முழுவதையும் ஒருதிருவடி அளந்ததென்றால், பூமியிலே பலபல மலைகள் கிடக்குமே; அவையுள்ள விடங்கள் மேடாகவும் மற்றைநிலங்கள் அகாதமாகவும் ஆகவிப்படி ஸமரீதிகமன்றிக்கே மிகவும் மேடு பள்ளங்களான பூபாகங்களை அளக்குமிடத்தில் திருவடியானது அழுந்தப் படிந்து அளக்க முடியாதாகையாலே * மாமுதலடிப்போதொன்று கவிழ்த்தலர்த்தி மண்முழுது மகப்படுத்தானென்னக் கூடுமோவென்று லௌகிக த்ருஷ்டியாலே சங்கிப்பார்க்கு ஸமாதானமாம்படி “ஸாசலகுலாமபி · விப்ரகீர்ண ஸ்தூலாவலக்ந ஸிகதாமிவ” என்றருளிச் செய்கிறார். பர்வதஸமூஹங்கள் பலகிடந்தாலும் அவை எம்பெருமானுடைய திருவடியில் பெரியசில பருக்கைகள் ஒட்டிக்கொண்டாற்போலே யிருந்தவத்தனை போக்கி திருவடி ஸமமாக நிலத்தில் படியவொண்ணாதபடி பெருப்பெருத்த வஸ்துவாக நிற்கவில்லையென்று கருத்து. “சிலம்பினிடைச் சிறுபரல்போல் பெரிய மேரு திருக்குளம்பில் கணகணப்ப” என்று ஸ்ரீவராஹாவதார விஷயத்திலே இப்படி திருமங்கையாழ்வாரருளிச் செய்ததுண்டுகாணும். “ தூரமத்யகதோ · யஸ்ய · மேரு : கணகணாயதே.”

நாமெல்லாம் ஓரோவிடங்களை அளக்கும்போது சிறு பரல்களும் பெருமணல்களும் அளப்பதற்கு ப்ரதிபந்தகமாக மாட்டாதவோபாதி ஸமஸ்த பூமண்டலத்திலுள்ள மலைகளும் எம்பெருமானுடைய அளப்புக்கு இடையூறாகவில்லை யென்றதாயிற்று, * அணோரணீயானென்னும்படி யிருந்தவன் * மஹதோ மஹீயானனவாறே மஹத்தாயிருந்த பதார்த்தங்களடங்கச் சிறுகிப்போனபடி.

[நிர்நதோச்சம் வ்யக்ரமிஸ்த] வஸிஷ்ட சண்டாள விபாகமற எல்லார் தலையிலும் ஒருங்கே திருவடியை யிட்டபடி சொல்லுகிறது. (5)

ஜ்ஞாநம் பலம் விபுலமீசந வீர்ய சக்தி தேஜாம்ஸி ச த்ரியுகஷூய முபாகதாநி
பூர்ணாநி ஷட் ச பரிக்ருஹ்ய பவந் சதுர்தா பக்தம் ஜநம் த்வமநுஜக்ரஹிதாநுராகாத் ॥ (6)

(ஹே தேவ!)	எம்பெருமானே!	உபாகதாநி	அடைந்தனவாகவும்
த்வம்	தேவரீர்	பூர்ணாநி ச	ஸமஸ்தங்களாகவும்
விபுலம்	அளவற்றதான	பரிக்ருஹ்ய	பரிக்ரஹித்தருளி
ஜ்ஞானம்	ஞானமென்ன	சதுர்தா பவந்	வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபத்தாலே சதுர்விதராகி
பலம்	பலமென்ன	பக்தம் ஜநம்	பக்த ஜனங்களை
ஈசந வீர்ய சக்தி தேஜாம்ஸி ச	ஐச்வர்யமென்ன வீர்யமென்ன சக்தியென்ன தேஜஸ்ஸென்ன ஆகிய இந்த	அநுராகாத்	அன்புடனே
ஷட்	ஆறு குணங்களையும்	அநுஜக்ரஹித	அனுக்ரஹித்தருளிற்று.
த்ரியுகஷூயம்	மூவிரண்டாயிருக்கும் தன்மையை		

ஸங்க்யாதும் நைவ சக்யந்தே குணா தோஷாச் ச சார்ங்கிண:, ஆநந்த்யாத் ப்ரதமோ ராசி: அபாவாதேவ பச்சிம: என்கிறபடியே எம்பெருமான் அஸங்க்யேய குணகணாகரனாயிருக்கச் செய்தேயும் *தவாநந்தகுணஸ்யாபி ஷடேவ ப்ரதமே குணா:* என்கிறபடியே ஆறு குணங்கள் ப்ரதாந தமங்களாயிருக்கும்! அவை எவையென்னில் ஜ்ஞாந பலைச்வர்ய வீர்ய சக்தி தேஜஸ் ஸுக்கள். பரவாஸுதேவமூர்த்தி, ஸங்கர்ஷணமூர்த்தி, ப்ரத்யும்நமூர்த்தி, அநிருத்தமூர்த்தி என்று சதுர்விதமான மூர்த்திகளில் ப்ரதமமான வாஸுதேவமூர்த்தியில் இந்த ஆறு குணங்களும் ப்ரகாசிக்கின்றன. மற்ற ஸங்கர்ஷணாதி மூன்று மூர்த்திகளில் ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு குணம் விழுக்காடு ப்ரகாசிக்கின்றன. என்று பகவச்சாஸ்த்ர ப்ரதிபாதிதமான அர்த்தம் இந்த ச்லோகத்தில் ஸங்க்ரஹிக்கப் பட்டதாய்த்து. இங்கே விரித்துரைக்க வேண்டும் அம்சங்களை வரதராஜஸ்தவத்தில் "ப்ரக்ருஷ்டம் விஜ்ஞாநம் பலமதுலம்" "குணைஷ் ஷட்பிஸ்த்வேதை:" என்ற (15—16) ச்லோகங்களின் வ்யாக்யான த்திலே விஸ்தரேண சொல்லி வைத்தோம்; அங்கே கண்டுகொள்வது.

இதில் விபுலம் என்ற விசேஷணம் குணஷட்கத்திலும் அந்வயிக்கக் கடவது. "ஈசந வீர்ய சக்தி தேஜாம்ஸி" என்ற விடத்தில் அந்வயிக்கும்போது "விபுலாநி" என்று வசனவ்யத்யயமாகக் கடவது. [த்ரியுக பூயம்] த்ரயாணாம் யுகாநாம் ஸமாஹார; த்ரியுகம்; தஸ்ய பாவ; தத் = யுகம் என்று இரண்டிரண்டான குணவர்க்கத்தைச் சொல்லுகிறது. அப்படிப் பட்ட குணவர்க்கம் மூன்றாகையாலே த்ரியுகமென்றது. "த்ரியுகபூயமுபாகதாநி பரிக்ருஹ்ய" என்றது—மூன்று மூர்த்திகளில் மூவிரண்டு குணவர்க்கத்தை வகுத்துக்கொண்டு என்றபடி. "ததஸ்திஸ்ரஸ் தேஷாம் த்ரியுக! யுகளைர் ஹி த்ரிபிரபு:" என்றதைச் சொன்னபடி. "பூர்ணாநி ச பரிக்ருஹ்ய" என்றது—"குணைஷ் ஷட்பிஸ் த்வேதை: ப்ரதமதர மூர்த்திஸ் தவ பபௌ" என்றதைச் சொன்னபடி.

[பக்தம் ஜநம் த்வ மநுஜக்ரஹிதாநுராகாத்] "ஷாட்குண்யாத் வாஸுதேவ; பர இதி ஸ பவாந் முக்த போக்யோ பலாட்யாத் போதாத் ஸங்கர்ஷணஸ் த்வம் ஹரஸி விதநுஷே சாஸ்த்ர மைச்வர்ய வீர்யாத், ப்ரத்யும்நஸ் ஸர்கதர்மௌ நயஸி ச பகவந்! சக்தி தேஜோ நிருத்தோ பிப்ராண; பாஸி தத்த்வம் கமயஸி ச ததா வ்யூஹ்ய ரங்காதிராஜ!" [ஸ்ரீரங்க ராஜஸ்தவம்—உத்தர சதகம்—39] என்ற பட்டர் ஸ்ரீஸூக்தியும், தத்த்வ த்ரயத்தில்—"பரத்வத்தில் ஜ்ஞாநாதிகளாறும் பூர்ணமாயிருக்கும்; வ்யூஹத்தில் இவ்விரண்டு குணம் ப்ரகடமாயிருக்கும்; அதில் ஸங்கர்ஷணர் ஜ்ஞாநபலங்களிரண்டோடுங்கூடி தேஹதத்வத்தை அதிஷ்டித்து அத்தை ப்ரக்ருதியில் நின்றும் விவேகித்து ப்ரத்யும்நாவஸ்தையையும் பஜித்து சாஸ்த்ர ப்ரவர்த்தநத்தையும் ஜகத்ஸம்ஹாரத்தையும் பண்ணக்கடவ ராயிருப்பர். ப்ரத்யும்நர் ஐச்வர்ய வீர்யங்களிரண்டோடுங்கூடி மனஸ் தத்வத்தை அதிஷ்டித்து தர்மோபதேசத்தையும் மநு சதுஷ்டயம் தொடக்கமான சுத்தவர்க்க ஸ்ருஷ்டியையும் பண்ணக் கடவராயிருப்பர். அநிருத்தர் சக்தி தேஜஸ்ஸுக்களிரண்டோடுங்கூடி ரக்ஷணத்துக்கும் தத்வஜ்ஞானப்ரதானத்துக்கும் காலஸ்ருஷ்டிக்கும் மிச்ரஸ்ருஷ்டிக்கும் கடவராயிருப்பர்." என்ற பிள்ளை லோகாசார்யர் ஸ்ரீஸூக்தியும் இங்கே அநுஸந்தேயங்கள்.

[அநுஜக்ரஹித] அநுக்ரஹித்தாய் என்றபடி. (6)

ஏகாந்தமங்கள குணாஸ்பத மஸ்தஹேயம் நித்யம் பதம் தவ யதஸ் தத ஏவ தேவ
ஆம்நாயதே ததிஹ விச்வ விரூப ரூபம் தேநைவ நந்வித மசப்த மரூப மாஹு: ‖ (7)

ஹே தேவ	எம்பெருமானே!,
தவ	தேவரீருடைய
பதம்	ஸ்வரூபமானது
யத:	யாதொரு காரணத்தாலே
நித்யம்	ஸர்வகாலமும்
ஏகாந்த மங்கள குண-ஆஸ்பதம்	அஸாதாரணங்களான கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாயும்

அஸ்த ஹேயம் ச (பவதி)	ஹேய குணங்களை யுடைத்தாகாததாயு மிருக்கிறதோ	ஆம்நாயதே	வேதங்களாலே ப்ரதிபாதிக்கப் படுகிறது;
தத ஏவ	அந்த காரணத்தாலே	தேநைவ	ஆனது பற்றியே
தத்	அந்த ஸ்வரூபமானது	இதம்	ப்ராக்ருதஸ்வரூபத்தை
இஹ	இங்கே	அரூபம்	ரூப சூன்யமாகவும்
விச்வ விரூப ரூபம்	ஸகல விலக்ஷணாகாரமாக	அசப்தம்	நாம சூன்யமாகவும்
		ஆஹு:	(வைதிகர்கள்) சொல்லுகிறார் கள்.

எம்பெருமானுடைய ஸ்வரூபத்தைப் பேசுவாரெல்லாரும் "அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந ஸ்வேதர ஸமஸ்தவஸ்து விலக்ஷணாநந்த ஜ்ஞாநாநந்தைகஸ்வரூப" என்றிறே பேசுவது. ப்ரஹ்மஸூத்ர காரரும் "ந ஸ்தாநதோபி பரஸ்யோபய லிங்கம் ஸர்வத்ர ஹி" என்று உபயலிங்காதி கரணத்திலே நிரஸ்த நிகில தோஷத்வத்தையும் கல்யாண குணாகரத்வத்தையும் எம்பெருமானுக்கு அஸாதாரண லக்ஷணமாகச் சொல்லிவைத்தார். இந்த உபயலிங்கத்தாலே பகவத் ஸ்வரூபமானது ஸ்வேதரஸமஸ்த வஸ்து விலக்ஷணமாயிருக்கும். இவ்வர்த்தத்தை இந்த ச்லோகத்தாலே அருளிச் செய்கிறார்.

[தவ பதம்] தேவரீருடைய ஸ்வரூபமென்றபடி. *ஸமஸ்த ஹேயாஹிதம் விஷ்ண்வாக்யம் பரமம் பதம்* என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்திலும் ஸ்வரூபவாசகமாக பதசப்த ப்ரயோகம் பண்ணிற்று.

[ஏகாந்த மங்கள குணாஸ்பதம்] ஏகாந்த மாகையாவது—தனக்கே அஸாதாரணமா யிருக்கை. "ததுத்கர்ஷ சௌர்யை: பரேஷாம் ஸ்துத்யத்வாத்" என்கிற கணக்கிலே பகவத் கதங்களான குணங்களைக் களவுகண்டிறே பிறர் பக்கல் ஆரோபித்து லௌகிகர் ஸ்துதியா நிற்பது. [அஸ்த ஹேயம்] நிரஸ்த தோஷ மென்றபடி. [தத ஏவ] இப்படி ஸ்வபாவதோ நிரஸ்த நிகில தோஷமாய் அநந்த கல்யாண குணாகரமாயிருக்கையாலே. [தத் விச்வ விரூப ரூபமாம்நாயதே] *பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச என்றதை உபஜீவித்திறே ச்ருதி *ந தத்ஸமச்சாப் யதிகச்ச த்ருச்யதே*என்று ஸகலேதர வைலக்ஷண்யத்தைச் சொல்லி வைத்தது. விரூப மென்றது விஸஜாதீய மென்றபடி.

[தேநைவ நந்வித மசப்தமரூபமாஹு:] எம்பெருமானுக்கு நாமரூபங்களில்லையென்னில் பல பல நாம ரூபங்களை ப்ரதிபாதியாநின்ற சாஸ்திரங்கள் பொய்யாக வேண்டாவோ? எம்பெருமானைப் பற்றி வேதங்களும் வைதிகர்களும் அஸ்மதாதிகளும் வ்யவஹரியா நிற்பது தானும் அஸங்கடிதமாகாதோவென்னில் *கேண்மின் ; *அசப்தமரூப மாஹு; *என்று நாம ரூபங்களின் அத்யந்தாபாவத்தைச் சொல்லுகிறதன்று ; "ஸ்ரீ பாஷ்யத்தில் *விவக்ஷிதகுணோ பபத்தேச்ச *[1—2—2] என்னும் ஸூத்ர பாஷ்யத்தில் *ஸர்வகந்தஸ் ஸர்வரஸ:* என்கிற கடச்ருதியை விவரிக்குமிடத்திலே *அசப்தமஸ்பர்சம் *இத்யாதிநா ப்ராக்ருத கந்தரஸாதி நிஷேதாத் அப்ராக்ருதா: ஸ்வாஸாதாரணா நிரவத்யா நிரதிசயா: கல்யாணா: ஸ்வபோக்யபூதா: ஸர்வவிதா கந்த ரஸாஸ் தஸ்ய ஸந்தீ த்யர்த்த:" என்றருளிச் செய்த கணக்கிலே கர்ம மடியாகப்ராக்ருதங்களென்னத் தக்க நாமரூபங்களில்லையென்றதத்தனை போக்கி அப்ராக்ருதமாய் ஸ்வாஸாதாரணமாய் நிரவத்யமாயுள்ள நாம ரூபங்களை நிஷேதித்தமையில்லைகிடீர். *பலபலவேயாபரணம் பேரும் பல பலவே, பல பலவே சோதி வடிவு *என்னக் கடவதிறே.

சப்தாதி ஹேயமிஹ கோசர இந்த்ரியாணாம் தத்ப்ரத்யநீக விபவஸ் த்வமதீந்த்ரியோஸி
தேநைவ தே ந பத தர்சநமஸ்தி கிஞ்சித் வாசோ தியச் ச தத ஏவ ந கோசரோஸி || (8)

(ஹே தேவ!)	எம்பெருமானே!,	ஹேயம்	வெறுக்கத்தக்க
இஹ	இங்கே	சப்தாதி	சப்தாதி விஷயம்

இந்த்ரியாணாம் கோசர:	ச்ரோத்ராதி இந்திரியங்களுக்கு விஷயமாகா நின்றது;	தேநைவ	ஆகையாலே
தத்ப்ரத்யநீக விபவ: த்வம்	அதற்கெதிர்த்தட்டான குண ஸம்பத்தையுடையீரான தேவரீர்	தே	தேவரீருக்கு
அதீந்த்ரிய: அஸி	இந்திரியங்களுக்கு அவிஷயராயிரா நின்றீர்;	கிஞ்சித் தர்சநம் நாஸ்தி	ஒருபடியாலும் த்ரஷ்டவ்யத்வமில்லை;
		தத ஏவ	ஆனது பற்றியே
		வாச:	வாக்குக்கும்
		தியஸ்ச	புத்திக்கும்
		கோசர: நாஸி	எட்டாதவராயிருக்கிறீர்.

கீழில் ச்லோகத்தி லர்த்தத்தையே விவரித்தருளுகிறாரிதில். லௌகிகர்களுடைய சக்ஷுராதீந்திரிய க்ராமங்களாலே சப்தாதி விஷயங்கள் எங்ஙனே க்ரஹிக்கப் படுகின்றனவோ, அங்ஙனே பகவத் விஷயம் க்ரஹிக்கப்படுமதன்றிறே. * பொறியுணர்வவையிலன் * என்றார் ஆழ்வாரும்.

இந்திரியங்களுக்கு விஷயமாகும் வஸ்து ஐந்திரியகமென்றும், அவற்றுக்கு விஷயமாகாத வஸ்து அதீந்திரியமென்றும் சொல்லப்படுமாகையாலே பகவத் விஷயம் அதீந்த்ரியமாய்த்து. ஆகவேதான் கண்கொண்டு காணவும் வாய்கொண்டு வ்யவஹரிக்கவும் புத்தியாலே விஷயீகரிக்கவும் அயோக்யமாய் ஸகலேதர விலக்ஷணமாய் முடிந்தது.

இப்படி புத்திக்கும் வாக்குக்கும் எம்பெருமான் விஷயமாகிறிலன் என்றால், ப்ஹ்மவித்துக்களென்றும் ப்ரஹ்ம வாதிகளென்றும் பல மஹான்களைச் சொல்லியிருப்பது கூடாதே; அவர்களுடைய புத்திக்கும் வாக்குக்கும் எம்பெருமான் விஷயமாகுனென்றிறே சொல்லப்பட்டுள்ளது; இது சேரும்படியென்னென்னில்; மனோவாக்குக்களுக்கு அத்யந்தம் அவிஷயனென்னில் துச்சத்வம் ப்ரஸங்கிக்கும்; ஆகையாலே அது பொருளன்று, அஸ்மதாதிகளுடைய அபரிசுத்தமான மனஸ்ஸாலும் வாக்காலும் க்ரஹிக்கக்கூடாதவனென்றதத்தனை. [தத்ப்ரத்யநீகவிபவ;] சப்தாதி விஷயங்கள் ஹேயதமங்களாயிருக்கைக்கு ப்ரதிபடமாக எம்பெருமான் * உயர்வற வுயர்நலமுடையவனுயிருப்பனென்றபடி. [பத!] இப்படிப்பட்ட வுன்னை மாத்ருசர்கள் எங்ஙனே ஸாக்ஷாத்கரிக்கவல்லாரென்று வருந்துகிறபடி. (8)

* * * * *

ஏவம் ஸ்திதே த்வதுபஸம்ச்ரயணப்யுபாய: மாநேந கேநசிதலப்ஸ்யத நோபலப்தும்,
நோசேதமர்த்யமநுஜாதிஷு யோநிஷுத்வம் இச்சாவிஹாரவிதிநா ஸமவாதரிஷ்ய: ‖ (9)

ஏவம் ஸ்திதே	தேவரீர் இப்படி அதீந்திரியராயிருக்கச் செய்தே	நோ ஸமவாதரிஷ்யச்சேத்	திருவவதரித்தருளாவிடில்
த்வம்	தேவரீர்	த்வதுபஸம்ச்ரயணப்யுபாய:	தேவரீரை ஆச்ரயிப்பதற்கு உறுப்பான உபாயம்
இச்சாவிஹார விதிநா	(கர்மநிபந்தநமாகவன்றிக்கே) ஸ்வச்சந்தவிஹாரப்ரயுக்தமாக	கேநசித் மாநேந	ஒரு ப்ரமாணத்தாலும்
அமர்த்ய மநுஜாதிஷு யோநிஷு	தேவ மனுஷ்யாதி யோநிகளில்	உபலப்தும் நாலப்ஸ்யத	அறியக் கிடையாமல் போயிருக்கும்

இனி விபவாவதாரத்துக்கு அடியிடுகிறார். தேவரீர் ஸுரநரதிர்யகாதி யோநிகளில் *உயிரளிப்பானெந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் என்கிறபடியே திருவவதரித்தருளாதே பரவ்யூஹாந்தர்யாமி ரூபேண நின்று இந்த்ரியமார்க்கத்துக்கு அணித்தாகாதே அவ்வருகுபட்டால், சாஸ்த்ரங்களிலே விதிக்கப்பட்டுள்ள உபாஸநார்ச்சநப்ரதக்ஷிண நமஸ்கார ப்ரப்ருதிகளான வழிபாடுகளுக்கு விஷயமின்றிக்கே யொழியுமே; அங்ஙனொழியாமைக்காக வாய்த்துத் திருவவதாரங்கள் செய்தருளிற்று என்கிறார். (9)

சீல: க ஏஷ தவ ஹந்த தயைகஸிந்தோ க்ஷுத்ரே ப்ருதக்ஜநபதே ஜகதண்டமத்யே!
க்ஷேத்ரீயஸோபி ஹி ஜநஸ்ய க்ருதே க்ருதீ த்வம் அத்ராவதீர்ய நநு லோசந கோசரோபூ: (10)

தயைகஸிந்தோ	வாரீர் அருட்கடலான எம்பெருமானே!	ஜநஸ்யாபி க்ருதே	ஜநங்களுக்காகவும்
க்ருதீ த்வம்	க்ருத க்ருத்யரான தேவரீர்	அவதீர்ய	அவதரித்து
ஜகதண்ட மத்யே	இந்தப்ரஹ்மாண்ட மத்தியத்தில்	லோசநகோசர:	கண்களுக்கு இலக்காக
க்ஷுத்ரே	அத்க்ஷயல்பமாயும்	அபூ: நநு	ஆயிற்றே;
ப்ருதக் ஜந பதே	ப்ராக்ருத ஜநங்களுக்கு வாஸ ஸ்தானமாயுமுள்ள	தவ	இப்படி திருவவதரித்த தேவரீருடைய
அத்ர	இவ்விடத்தில்	ஏஷ: சீல:	இந்த ஸௌசீல்யம்
க்ஷோதீயஸ:	அதிக்ஷுத்ரமான	க:?	என் கொல்?
		ஹந்த!	ஆச்சர்யம்.

அதீந்த்ரியனை எம்பெருமான் ஆஸுரப்ரக்ருதிகளிடையே வந்து திருவவதரித்தானென்னுமிடம் ஸ்ம்ருதி விஷயமானவாறே "பிறந்தவாறும்" என்று மோஹித்து ஈடுபடும்படியாயிருக்குமிறே. குணமறிந்து உகக்கமாட்டாதே எதிரம்பு கோப்பதும் செய்யாநின்ற அரக்கரசுரர் போன்ற மனிசரிடையே வந்து பிறந்தருளின இந்த ஸௌசீல்ய மிருந்தபடியென்!, ஸ்வப்ரயோஜநமொன்றுமின்றிக்கே *பயனன்றாகிலும் பாங்கலராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வதையே பேறாகக் கொண்டு, 'கட்கிலி' என்கிற ஸ்வரூபத்தை அழியமாறி *ஸகலமநுஜநயநவிஷயமானது என்ன க்ருபை! என்ன சீலம்! என்று தரைப்படுகிறார்.

[தயைகஸிந்தோ] இந்த சீலத்துக்கு முதலடி க்ருபையாய்த்து. [ப்ருதக்ஜநபதே] *விவர்ண: பாமரோ நீச: ப்ராக்ருத்ச்ச ப்ருதக்ஜந: என்றும் *மூர்க்கநீசௌ ப்ருதக்ஜநௌ என்றும் அமரன் சொன்னான். ஸாதுக்களிற்காட்டில் வேறுபட்ட ஜநமென்கை. மூர்க்கர்களும் நீசர்களுமேயிறே இந் நிலத்தில் கிடக்கிறது, *த்வம் நீச சசவத்ஸ்ம்ருத:.......... அவஜாநந்தி மாம்மூடா: இத்யாதி. [க்ருதீ த்வம்] நீ அவாப்தஸமஸ்தகாமனென்றிறே ப்ரஸித்திபெற்றிரா நின்றாய்; இதுவரையில் பெறாததாய் இனிப்பெறக் கடவதான ஒன்றும் உனக்கு இவ்வுலகில் இல்லைகாண். ஆகையாலே ஏதேனுமொரு அபீஷ்ட ஸித்திக்காக நீ இந்நிலத்திலே வந்து திருவவதரிக்கிறாய் என்கைக்கு அவகாசமில்லை, இங்குள்ள எளியெனும்பர்களை அநுக்ரஹிக்கைக்காகவே யாய்த்துத் திருவவதரிப்பது என்று நிகமித்தபடி. (10)

யம் பாதகாத் ஸுமஹதோப் யுததாரயஸ் த்வம் த்வத்பாதவாரி பரிபூதசிராச்ச யோபூத்
தம் வந்தஸே கில ததச்ச வரம் வ்ருணீஷே க்ரீடாவிதிர் பத விலக்ஷணலக்ஷண ஸ்தே ‖ (11)

(ஹே தேவ!)	எம்பெருமானே!,	தம்	அப்படிப் பட்டவருத்ரனை
த்வம்	தேவரீர்	வந்தஸே	தேவரீர் நமஸ்கரியா நின்றது;
யம்	யாவனொருருத்ரனை	ததஃ	அவனிடத்தில்
ஸுமஹதோபி	மிகப் பெரிய	வரம் ச வ்ருணீஷே	வரமும் வேண்டிப் பெறா நின்றது;
பாதகாத்	பாவத்தில் நின்றும்	தே	தேவரீருடைய
உததாரய:	உத்தரித்தருளிற்றோ;	க்ரீடாவிதி:	லீலாவ்யாபாரமானது
யச்ச	யாவனொரு ருத்ரன்	விலக்ஷண லக்ஷண:	விசித்ரஸ்வரூபமாயிரா நின்றது;
த்வத் பாதவாரி பரிபூதசிரா:	தேவரீருடைய ஸ்ரீபாத தீர்த்தத்தாலே பரிசுத்தமான சிரஸ்ஸையுடையவனாக	பத	ஆச்சர்யம்.
அபூத்	ஆனானே,		

கீழ்ப்ரஸ்துதமான ஸௌசீல்யம் அதிவேலமாய்ப் பெருகினபடியை அநுஸந்தித்து "மாயனே! உன்னுடைய ஸ்வதந்திரலீலா ப்ரகாரங்கள் இருந்தபடியென்!" என்று கொண்டு தலை சீய்க்கிறார். [யம் த்வம் ஸுமஹ தோபிபாதகாத் உததாரய:] ஒருகாலத்திலே பரமசிவன், தன்னைப் போலவே பிரமனும் ஐந்தலையனாயிருப்பது பலரும் பார்த்து மயங்குவதற்கு ஹேதுவாயிராநின்ற தென்றெண்ணி அவனுடைய ஒரு சிரஸ்ஸைக் கிள்ளியெடுத்துவிட, அக் கபாலமப்படியே சிவன் கையில் ஒட்டிக்கொண்டவாறே 'இதற்கென் செய்வது' என்று

அவன் கவலைப்பட, தேவர்களும் முனிவர்களும்கூடி "இப் பாவம் தொலைய பிக்ஷையெடுக்கக் கடவை; என்றைக்குக் கபாலம் நிறையுமோ அன்றைக்கே இது கையைவிட்டு அகலும்" என்று உரைக்க, சிவன் பலகாலம் பலபல தலங்களிலும் சென்று பிச்சையேற்றுக்கொண்டே வருந்தித் திரிந்தும் அக்கபாலம் நீங்காதொழியவே, பின்பு ஒருநாள் ஸ்ரீபதரிகாச்ரமத்தேறச் சென்று ஸ்ரீமந்நாராயணனை வணங்கி யாசித்த வளவில் அப் பெருமான் 'அக்ஷயம்' என்று பிக்ஷையிட உடனே அது நிறைந்து கையைவிட்டு அகன்றது என்ற இதிஹாஸமறியத்தக்கது.

[தம் வந்தஸே கில நதச்ச வரம் வ்ருணீஷே] ஹரிவம்சத்தில் விஷ்ணு பர்வத்தில் நூற்றுப்பதினேழா மத்தியாயம் தொடங்கி இந்த வ்ருத்தாந்தம் விஸ்தரேண சொல்லப் பட்டது. த்வாரகையிலே கண்ணபிரான் ருக்மிணிப் பிராட்டியுடனே பள்ளிகொண்டருளி வார்த்தையாடா நிற்கையில் *அநுக்ரஹோ யதி ஸ்யாந்மே தேவ தேவ ஜகத்பதே!, தாது மர்ஹஸி புத்ரம் த்வம் வீர்யவந்தம் ஜநார்தந!*என்று புத்ரதானம் தரவேணுமென்று கண்ணனை ருக்மிணி ப்ரார்த்திக்க, கண்ணபிரான் கைலாஸ சிகரத்தில் சென்று ருத்ரனைக் குறித்துத் தபஸ்ஸு பண்ணிப் புத்ர வரம்பெற்று வருவதாகச் சொல்லிப் புறப் பட்டெழுந் தருளி, அங்கே தீவ்ரமான தபஸ்ஸு பண்ணுநிற்கையில் பரமசிவன் வந்து நிற்க, அவனைக் கண்ணபிரான் வணங்கி வழிபட்டதாகச் சொல்லப்பட்டுள்ள கதை இங்கே அநுஸந்தேயம்.

தனக்கு சேஷபூதர்களிலே ஒருவனான சிவனை சேஷியாக்கி நமஸ்காராதிகள் செய்த விது சிவனுக்குப் பரத்வத்யோதகமாகவும் எம்பெருமான்றனக்கு அவரத்வத்யோதகமாகவும் முடியுமேயென்னில்; இன்புறுமிவ் விளையாட்டுடையானிறே இவன்; லீலாபரனாய்க் கொண்டு செய்யு மவற்றுக்கு ஓரடைவுண்டோ என்கிறார் *க்ரீடாவிதிர் பத விலக்ஷண லக்ஷணஸ் தே* என்று. (11)

*　　*　　*　　*　　*

க்ரீடாவிதேः பரிகரஸ் தவ யா து மாயா ஸா மோஹிநீ ந கதமஸ்ய து ஹந்த ஜந்தோः
ஹை மர்த்யஸிம்ஹவபுஷஸ் தவ தேஜஸோம்சே சம்புர் பவந் ஹி சரபச் சலபோபபூவ ||

(ஹேதேவ !)	எம்பெருமானே !	சரபः பவந்	சரபவுருக்கொண்ட
யா மாயா	யாதொருமாயையானது	சம்புः	சிவனானவன்
தவ	தேவரீருடைய	மர்த்யஸிம்ஹவபுஷः	நரஸிம்ஹ வடிவுகொண்ட
க்ரீடாவிதேः	லீலாவ்யாபாரத்துக்கு	தவ	தேவரீருடைய
பரிகரः	ஸாமக்ரியாக இருக்கிறதோ	தேஜஸः அம்சே	தேஜஸ்ஸின் ஏகதேசத்திலே
ஸா	அந்த மாயையானது	சலபः	விட்டில்பூச்சிபோலே
கதமஸ்ய ஜந்தோः	எந்தப்ராணிக்குத்தான்	பபூவ ஹி	பட்டொழிந்தானிறே
ந மோஹிநீ	அவிவேகத்தையுண்டுபண்ணுகிறதில்லை ?	ஹை !	ஆச்சரியம்.

பரஸ்மாத் பரனான எம்பெருமான் ஸ்ருஜ்ய கோடியில் ஒருவனான ருத்ரனை நோக்கி நமஸ்காராதிகளைச் செய்தது லீலாமாத்ரமத்தனையென்னுமிடத்தை இதிஹாஸாந்தரத்தாலே மூதலிக்கிறார். எம்பெருமான் நரஸிம்ஹ ரூபியாய் ஸ்தம்பத்திலே தோன்றின காலத்தில் ஹிரண்யனுடைய ஸபையிலே அவனுக்குச் சார்பாக இருந்த பலபல அஸுரர்களையெல்லாம் கொன்று உடனே ஹிரண்யனை அழித்தபின்பும் கோபம் தணியாமல் உக்ரபாவம் மேலிட் டிருக்க, அந்த மஹாக்ரோதத்தைக் கண்டு அதனால் உலகமே அழியுமென்று மயங்கி அஞ்சின தேவர்கள் ஓடிச் சிவபிரானைச் சரணமடைய, அவன் அவர்களுக்கு அபயமளித்து மிகப் பெரியதொரு சரபவடிவம் கொண்டு ஆரவாரித்து நரஸிம்ஹத்தை எதிர்த்துவர, நரஸிம்ஹ மூர்த்தி அந்த சிவசரபத்தையும் ஹிரண்யனைப் போலவே பலவாறு சின்னபின்னப் படுத்தி யழித்து, பிறகு ப்ரஹ்லாதன் பணிந்து ப்ரார்த்தித்ததனால் சினம் தணிந்ததென்கிற புராணகதையைத் திருவுள்ளம் பற்றியருளிச் செய்கிறார். "கேழ்கிளருமங்கவேள் குன்று

அழல் சரபத்தைப் பிளந்த, சிங்கவேள் குன்றத்தினுர்" என்று பிள்ளைப் பெருமாளையங்காருமிந்தக் கதையை அநுஸந்தித்தார்.

துயக்கறு மதியின் நன்ஞானத்துளமரரைத் துயக்கும், மயக்குடைமாயைகள் வானிலும் பெரியன வல்லன் என்றிறே எம்பெருமானுக்கு ப்ரஸித்தி. க்ரீடாபரிகரமாகத் தான் படைத்த மாயையாலே அறிவு அழியாதார் ஆருமில்லை. ப்ரஹ்மஹத்யா சாபவிமோசனம் முதலான பல மஹோபகாரங்களை சிவன் பெற்றிருந்தும் பரமபுருஷனுக்குப் ப்ரதிபடனுகவந்து தோன்றினது பகவந்மாயா திரோஹிதஸ்வஸ்வரூபனுய்க் கொண்டு செய்த செயல் காண்மின் என்கிருர். இல்லாவிடில், ப்ரஹ்லாதனைப் போலே வழிபட்டு வாழ்ந்து போகலாமிறே சிவனும், நரஸிம்ஹ ப்ரதாபாக்நிஸ்புலிங்கத்திலே விட்டில்பட்டது பட்டானென்னும் போது இது பகவந்மாயாகார்ய மத்தனையிறே.

இரண்டு தலைகளையும் சிறகுகளையும் அதிதீக்ஷ்ணநகமுள்ள எட்டுக் கால்களையும் மேல் நோக்கிய கண்களையுமுடையதொரு மிருகவிசேஷம் சரபமெனப்படும். இதுதன்னைப் பக்ஷியென்பாருமுண்டு. இது ஸிம்ஹத்தை அநாயாஸமாகக் கொல்லவல்லதென்று ப்ரஸித்தம். எம்பெருமான் வெறும்ஸிம்ஹமன்றிக்கே நரஸிம்ஹமானதாலும், அதுதன்னிலும் ஸாமாந்ய ஸிம்ஹமன்றிக்கே *அதிவ்ருத்தாமரவிக்ரம ப்ரதாபமாக இவ் [illegible]லும் இதின் ப்ரதாபாக்நியிலே அந்த சரபம் சலபமாயிற்று. (12)

* * * *

யஸ்யாத்மதாம் த்ரிபுரபங்கவிதாவதாஸ் த்வம் த்வச்சக்திதேஜிதசரோ விஜயீ ச யோபூத்
தக்ஷக்ரதௌ து கில தேந விநிர்ஜிதஸ் த்வம் யுக்தோ விதேயவிஷயேஷு ஹி காமசார: ||

த்ரிபுரபங்கவிதௌ	த்ரிபுரதஹந கார்யத்திலே	விஜயீ அபூத்	ஜயசாலியானுனே,
யஸ்ய	யாவனெருருத்ரனுக்கு	தேந	அப்படிப்பட்ட ருத்ரனுலே
த்வம்	தேவரீர்	த்வம்	தேவரீர்
ஆத்மதாம்	அந்தராத்மாவாயிருக்கையை	தக்ஷக்ரதௌ	தக்ஷயாகத்திலே
அதா:	தரித்ததோ,	விநிர்ஜித:	வெல்லப்பட்டது ;
யச்ச	யாவனெருருத்ரன்	விதேயவிஷயேஷு	வச்யவிஷயங்களில்
த்வச்சக்தி தேஜித சர: ஸந்	தேவரீருடைய சக்தியாலே கூர்மை பெற்றபாணத்தையுடையனுய்க்கொண்டு	காமசார:	மனம்போனபடி நடந்துகொள்கை
		யுக்தோ ஹி	யுக்தமேயிறே.

எம்பெருமானுடைய பாரதந்த்ர்யந்தானும் ஸ்வாதந்த்ரிய காஷ்டையென்கிருர். "க்ருபையாலே வரும் பாரதந்த்ரியத்திற் காட்டில் ஸ்வாதந்திரியத்தாலே வரும் பாரதந்த்ரியம் ப்ரபலம்" என்றிறே ஸ்ரீவசனபூஷணத்தில் பாசுரம். ஆதுரராய் அநந்ய சரணராய்த் தன் திருவடிகளிலே வந்து சரணம் புகுந்தவர்களளவில் தனக்குண்டான க்ருபையாலே தான் அவர்களிட்ட வழக்காம்படி பரதந்திரனுகையும், பட்டத்துக்குரிய ஆனையுமரசும் போலே தன் நிரங்குசஸ்வாதந்திரியத்தாலே நிர்ஹேதுகமாகச் சிலர்பக்கல் ப்ரேமபந்தம் வைத்துத் தன்னை அவர்களிட்ட வழக்காக்கி வைக்கையும் இரண்டு மீச்வரனுக்குள்ளதொன்று. இவற்றுள் க்ருபாப்ரயுக்த பாரதந்த்ரியம் பலவிடங்களில் காணலாம். ஸ்வாதந்த்ரியப்ரயுக்த பாரதந்த்ரியம் காணலாவது க்வசித் க்வசித்தேயாம். அதுதன்னை ருத்ரவிஷயத்திலே காட்டினபடியைப் பேசுகிருர் இங்கு.

தாரகாஸுரனுடைய புத்திரர்களான வித்யுந்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்கிற மூவரும் பிரம்மனை நோக்கிக் கோரமாதவம் புரிந்து அவன் பக்கல் வரம் பெற்று ஆகாசத்தில் பறந்து செல்லும் தன்மையையுடைய மூன்று பட்டணங்களையடைந்து மற்றும் பல அஸுரர்களோடு அங்நகரங்களுடனே தாம் நினைத்தவிடங்களில் பறந்து சென்று பலவிடங்களின் மேலும் இருந்து அவ்வவ் விடங்களைப் பாழாக்கி வருகையில், அந்த [illegible]

ஸஹிக்கமாட்டாத தேவமஹர்ஷிப்ரப்ருதிகளுடைய ப்ரார்த்தனையாலே சிவபிரான் பூமியைத் தேராகவும் சந்த்ர ஸூர்யர்களைத் தேர்ச் சக்கரமாகவும், நான்கு வேதங்களை நான்கு குதிரைகளாகவும், ப்ரஹ்மாவை ஸாரதியாகவும், மஹாமேருவை தநுஸ்ஸாகவும், ஆதிசேஷனை வில் நாணியாகவும், விஷ்ணுவை வாயுவாகிய சிறகமைந்து அக்நியை முனையாகவுடைய அம்பாகவும் அமைத்துக் கொண்டு யுத்த ஸந்நத்தனாய்ச் சென்று போர்த் தொடக்கத்தில் சிரித்து அந்த ஹாஸத்தில் நின்றுமுண்டான நெருப்பினால் அவ்வஸுரர்களை அந்த நகரங்களுடனே எரித்திட்டானென்கிறகதை இங்கே அநுஸந்தேயம், த்ரிபுரதஹநம் பண்ணினவன் ருத்ரன் என்று ஸாமான்யர் நினையா நின்றாலும் *விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமித தேஜஸ:, தஸ்மாத் தநுர்ஜ்யாஸம்ஸ்பர்சம் ஸ விஷேஹே மஹேச்வர: *[மஹாபாரதம்—கர்ண பர்வம்-23—33] என்றிறே அடியறிவார் சொல்லுவது. நம்மாழ்வார் *புரமொரு மூன்றெரித்து*என்று த்ரிபுர தஹநத்தை பகவத் க்ருத்யமாகவே அருளிச்செய்ததற்கு இதுவேயிறே கருத்து. எம்பெருமானுக்கு ஸர்வவஸ்துக்களிலும் அவிசேஷேண அந்த: ப்ரவேசம் இல்லையோ? *விஷ்ணுராத்மா பவஸ்ய* என்று விசேஷித்துச் சொல்லுவானேன்? என்னில்; ஸத்தாநிர்வாஹகமாய் ஸாமான்யமான அந்த: ப்ரவேசம் ஜயபராஜயங்களுக்குப் பொதுவாகையாலே ஜயத்துக்கே ஐகாந்திகமாக ருத்ரன் பக்கலிலே விசிஷ்ய அநுப்ரவேசித்து நின்றான் என்கிறது.

[த்வச்சக்தி தேஜிதசர:] *சிந்தயித்வா ஹரிம் விஷ்ணும் அவ்யயம் யஜ்ஞவாஹநம், சரம் ஸங்கல்பயாஞ்சக்ரே* [பாரதம்—கர்ணபர்வம். 26-30] என்றும் *குழல்நிற வண்ண! நின் கூறு கொண்ட தழல் நிறவண்ணன் நண்ணார் நகரம் விழ, நனிமலை சிலைவளைவு செய்து அங்கழல் நிறவம்பது வானவனே! *[பெரியதிருமொழி 6-1-3] என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமானேயிறே அம்புதானுமாகவும் நின்றது. [விஜயீ அபூத்] அங்கு வாஸ்தவமான விஜயம் எம்பெருமானுக்கே யாகிலும் "திரிபுரமூன்றெரித்தான்" என்றும், "புரங்கள் மூன்று மோர் மாத்திரைப் போதில் பொங்கெரிக்கிரைகண்டவன்" என்றும் ருத்ரனுக்கிறே ஜயப்ரஸித்தி யுண்டாம்படி செய்தருளிற்று. [தேந] இங்ஙனே தேவரீராலே வெற்றிபெற்ற அந்த ருத்ரனாலே.

[த்வம் தக்ஷக்ரதௌ விநிர்ஜித:] முன்பொருகால் தக்ஷப்ரஜாபதி ஒருயஜ்ஞஸதஸ்ஸிலே செல்ல, அப்போது அங்கே இருந்த தேவர்களும் மஹர்ஷிகளுமெல்லாரும் சடக்கென எழுந்து கௌரவிக்க, ப்ரஹ்மாவும் சிவனும் எழுந்திராமல் இருந்தபடியே யிருக்க, தக்ஷன் ப்ரஹ்மாவை லோக குருத்வப்ரதிபத்தியாலே நமஸ்கரித்துவிட்டு, தன்னுடைய கௌரவம் தோற்ற சிவன் வழிபாடு ஒன்றும் செய்யவில்லையென்று சீற்றங்கொண்டவனாய் "இந்தருத்ரன் எனக்கு ஜாமாதாவான போதே எனக்கு சிஷ்யனாய்வைத்து இங்ஙனே ஸ்தப்தனாய்க் கிடக்கிறானே; இவனில் மிக்க பாதகி உலகிலுண்டோ? க்ருத்யாக்ருத்ய விவேகசூன்யனான இந்த மூர்க்கனுக்கு அந்யாயமாய் அருமந்த பெண்ணைக் கொடுத்துக் கெட்டேனே" என்று பலபடியாக நிந்தித்து 'இவனுக்கு யஜ்ஞபாக மில்லையாகக் கடவது' என்று சபித்துவிட்டு மஹாகோபத்துடனே எழுந்து ஸ்வஸ்தானத்திற்குப் போய்ச் சேர்ந்து, பிறகு நெடுநாளைக்குப்பால் ப்ருஹஸ்பதிஸவமென்றொரு யஜ்ஞம் பண்ணத் தொடங்கின செய்தியைப் பார்வதி கேள்விப்பட்டு 'பிதாவின் யஜ்ஞவைபவத்தை நாமும் கண்டு வருவோம்' என்று புறப்பட, சிவன் பழைய வைரத்தை நினைத்து 'அங்கே போகலாகாது' என்று தடுத்தும் குதூஹலாதிசயத்தாலே அவள் விரைந்து புறப்பட்டுப் பித்ருக்ருஹத்தேறச் செல்ல, அங்கே இவளைக் கண்டு பிதா நல்வரவு வினவுதல் யோக க்ஷேமம் வினவுதல் ஒன்றும் செய்யாதே விமுகனாயிருக்குமிருப்பையும், ருத்ரபாகமில்லாமே யாகம் நடைபெறுவதையும் கண்டு வெகுளியும் வெறுப்புங்கொண்டு 'இந்த பாபியான தக்ஷனிடத்தில்நின்றுமுண்டான இந்த என் சரீரம் இனி முடிந்துபோவதே நன்று' என்று அறுதியிட்டு, தனது யோகபலத்தினால் ஒரு தீயை மூட்டி, அதிலே சரீரத்யாகம் பண்ணிவிட, இங்ஙனே பார்வதி அவமானம் பொறுமல் இறந்

தொழிந்தாளென்றுணர்ந்த சிவன் அதிக்ருத்தனாய் தக்ஷயாகத்தைப் பலபடிகளாலும் தகர்த்துவிடவேணுமென்று நிச்சயித்து, தன் சடையில் நின்றும் ஒரு மயிரையெடுத்துக் கீழே எறிய, அதில் நின்றும் அதிக்ரூரகாயனான வீரபத்ரன் கிளம்பி ருத்ரனுடைய ஆஜ்ஞையைப் பெற்று தக்ஷாத்வரத்திலே சென்று வாசாமகோசரமான க்ஷோபங்களையுண்டுபண்ண, ருத்ரனும்கூடச் சென்று தக்ஷனையும் தலையறுத்து ஸ்வாஹாகாரங்களையெல்லாம் ஹாஹாகாரமாக்கி 'தக்ஷாத்வரத்வம்ஸீ' என்றும் "தக்கன் வேள்வி தகர்த்த தலைவன்'' என்றும் பெயர் பெற்றானென்கிற வரலாறு ஸ்ரீபாகவதத்தில் சதுர்த்தஸ்கந்தோபக்ரமத்தில் விஸ்தரேண சொல்லப் பட்டுள்ளது.

இந்த வரலாற்றில், சிவனாலே விஷ்ணுவுக்குப் பராஜயம் நேர்ந்ததாக இல்லையேயென்னில்; யஜ்ஞத்வம்ஸம் விளைந்தது விஷ்ணு பராஜய பர்யாயமிறே. "யஜ்ஞோவை விஷ்ணுঃ'' என்றும் "வேள்வியாய்த் தக்கணையாய்த் தானுமானான்'' என்றும் எம்பெருமானேயிறே ஸாக்ஷாத்யஜ்ஞமாகச் சொல்லப் படுகிறான். *யஜ்ஞ இஜ்யோ மஹேஜ்யச் ச க்ரதுஸ் ஸத்ரம் ஸதாம்கதிঃ *என்றிறே ஸ்ரீஸஹஸ்ர நாமாத்யாயத்திலும் திருநாமமாய்த்து. ஆகவே, தக்ஷயஜ்ஞத்வம்ஸம் விஷ்ணு பராஜய பர்யாயமாகக் குறையில்லை. இங்ஙனே திருவுள்ளம் பற்றியே "தக்ஷக்ரதௌ து கில தேந விநிர்ஜிதஸ் த்வம்'' என்று இவரருளிச் செய்தது. தக்ஷயாகத்திலே சிவனுடைய சிறுச் சேவகம் ஓங்கவொண்ணாதபடி தேவரீருடைய ரக்ஷகத்வத்தைக் காட்டி தேவரீருடைய ஸமாராதநமான அந்த வேள்வியைத் தலைக் கட்டிக் கொள்ளலாமாயிருக்க, அங்ஙனே செய்தருளாமல் அவன் செய்த த்வம்ஸங்களுக்கு இசைந்திருந்தது ஸ்வபராஜயத்தையும் தத்விஜயத்தையும் விளங்கக் காட்டவேணுமென்கிற திருவுள்ளத்தாலே போலுமென்கிறார்.

இங்ஙனேயும் ஒரு திருவுள்ளமுண்டாகலாமோ வென்ன, அர்த்தாந்தரந்யாஸத்தாலே ஸமர்த்திக்கிறார் [யுக்தோ விதேய விஷயேஷு ஹி காமசாரঃ] லோகத்திலே புத்ரதாராதிகளை ஒருபோது தலைமேற்கொண்டு சுமப்பதும் மற்றொருபோது தெருவிலே தள்ளித் தகர்ப்பதும் செய்யக் காண்கிறோமிறே. உச்சிமேலணிந்த போதோடு உதைத்துத் தள்ளின போதோடு வாசியற சேஷசேஷிபாவம் வ்யவஸ்திதமாயிறே யிருப்பது. விதேய விஷயங்களிலே பரிமாறும் வகை உச்சாவசமாய் நியோக பர்யநுயோகாநர்ஹமாயிருக்கு மாகையாலே விதேயகோடியில் ஒருவனான ருத்ரனளவிலே பகவான் பரிமாறின பரிமாற்றம் கேட்பாரற்ற ஸ்வாதந்த்ரியத்திற்குச் சேருமத்தனைபோக்கி ருத்ரபாரம்யஸ்தாபகமாகமாட்டாதென்கை.

முக்தச் சிசுர் வடதளே சயிதோதிதந்வா தந்வா ஜகந்தி பிப்ருஷே ஸவிகாஸமேவ
ஜசீமிமாம் து தவ சக்திமதர்க்கிதவ்யாம் அவ்யாஜதঃ ப்ரதயஸே கிமிஹாவதீர்ணঃ ‖ (14)

வடதளே சயிதঃ	ஆலிலையில் பள்ளிகொண்ட	தவ	தேவரீருடைய
முக்தঃ சிசுঃ த்வம்	அதிபாலனான தேவரீர்	ஜசீம்	ஸர்வேச்வரத்வைகாந்தமும்
அதிதந்வா	அதிஸூக்ஷ்மமான	அதர்க்கிதவ்யாம்	(அதஏவ) அசிந்தநீயமுமான
தந்வா	திருமேனியாலே	இமாம் சக்திம்	இந்த சக்தியை
ஜகந்தி	உலகங்களை	இஹ அவதீர்ணஸ் ஸந்	இந்த லோகத்தில் அவதரியா நின்றுகொண்டு
ஸவிகாஸமேவ	நிஸ்ஸங்கோசமாகவே	அவ்யாஜதঃ	நிர்ஹேதுகமாக
பிப்ருஷே	தாங்கியருளுகிறது ;	கிம் ப்ரதயஸே	ஏன் ப்ரகாசிப்பித்தருளுகிறது?

தக்கன் வேள்வியைத் தகர்ப்பது முதலான சில செயல்களாலே ருத்ரன் பக்கல் பாரம்யம் கொள்வார் பலருண்டே. "அன்றெல்லாருமறியாரோ எம்பெருமானுண்டுமிழ்ந்த எச்சில் தேவரல்லாதார் தாமுளரே?'' என்கிறபடியே ப்ரளயகாலத்திலே அந்த ருத்ரனுமகப்பட எம்பெருமான் திருவயிற்றில் புகுந்து பிழைத்த கதையை உணர்த்தினால் பேயர்கள் தெளிவர்களென்று திருவுள்ளம் பற்றி அதை ப்ரஸங்கிக்கிறார். ஆழ்வாரும் திருவாசிரியத்திலே

"ஓ ஓ உலகினதியல்வே" என்கிற பாசுரத்தாலே தேவதாந்தர பாரம்யம் கொள்வாரைப் பற்றி நெஞ்சு உளைந்து "நளிர்மதிச் சடையனும்" என்று தொடங்கி "ஒருபொருள் புறப் பாடின்றி முழுவதுமகப்படக் கரந்து ஓராலிலைச் சேர்ந்த எம்பெருமாமாயனையல்லது, ஒரு மா தெய்வம் மற்றுடையமோ யாமே" என்று வையமேழும் வயிற்றிலே கொண்ட வடதள சாயிவ்ருத்தாந்தத்தை யநுஸந்தித்திறே இனியரானூர்.

[முக்தச்சிசுः] "படியாதுமில் குழவிப்படி" என்றூரிறே. 'இது ஸாத்மிக்கும் இதுஸாத் மியாது' என்றறியாதே ஏதேனுமாக முன்புதோன்றினத்தை வாயிலே எடுத்திடும்படியா யிற்று பருவம். ரக்ஷகவஸ்துவினுடைய வ்யாபாரமாகையாலே இது ரக்ஷணமாய்த் தலைக் கட்டினவித்தனை. [வடதளே' சயிதः] அன்றே தோன்றிப் பால் மாறுதேயிருந்த ஆலந் தளிரிலேயாய்த்துக் கண் வளர்ந்தது. [அதிதந்வா தந்வா] லோகத்தில் சிசுக்களுக்குள்ள வடிவும் இல்லையாய்த்து. ஆலிலையில் அடங்கத் தக்க சிறிய வடிவம் பெற்றபடி. [ஜகந்தி பிப்ருஷே] அப்போது சிவனையும் திருவற்றியிலே கொண்டமை தனிப்படச் சொல்ல வேணுமோ? "நெற்றிமேற் கண்ணனும் நிறைமொழிவாய் நான்முகனும்......கடலரையன் விழுங்காமல் தான் விழுங்கியுய்யக் கொண்ட கொற்றப் போராழியான்" என்று விளங்கச் சொன்னூருமுண்டு. "அங்கண்ஞால முண்டபோது வெள்ளி வெற்பகன்றதோ" என்று பிள்ளைப் பெருமாள் கேட்க வாய்மூடியோடினூர்களிறே ஜம்புகேச்வர சைவர்கள்.

[பிப்ருஷே] அவ் வபதாநம் ஆழ்வானுக்குக் கண்ணெதிரே தோன்றுகின்றது போலும்; வர்த்தமாநமாக நிர்த்தேசிக்கிரூரிறே. அன்றிக்கே, "பப்ருஷே" என்று பாட மானுல் பூதகாலமாக உரைப்பது.

[ஸவிகாஸமேவ] சிறிய திருவயிற்றினுள்ளே அண்டரண்டபகிரண்டத்தொருமா நிலமெழுமால்வரை முற்றும் அடைத்துவைத்தால் நெருக்குப் பட்டிராமே பெரியபேழை யிலே சிறியகடுகை இட்டுவைத்தாற்போலே ஒவ்வொரு பதார்த்தமும் தனித் தனியே இடம் வலம் கொள்ளப் பாங்காக வஹித்தபடி. [ஐசீமித்யாதி] பரத்வைகாந்திகமாய், அதஏவ இது இப்படிப்பட்டதென்று நெஞ்சால் நினைக்கவுமொண்ணுத சக்தியை தேவரீர் இவ்வுலகத் திலே மநுஷ்யாதிஸஜாதீயராய்க் கொண்டவதரித்து நிர்ஹேதுகமாகப் ப்ரகாசிப்பித்தருளு கிறது எதுக்காக?. யசோதாஸ்தநந்தயமாக அவதரித்து அஜ்ஞரைப் போலேயும் அசக்த ரைப் போலேயும் தாம்பாலாப்புண்டழுது ஏங்கி நிற்பது ஒருபக்கத்திலே, கோவர்த்த நோத்தரண முகத்தாலே அசிந்த்யதிவ்யாத்புதசக்தியைக் காட்டி நிற்பது மற்றொரு பக்கத் திலே; தசரதாத்மஜனுயவதரித்துப் பிராட்டியைப் பறிகொடுத்து கண்டதிர்யக்குக்களின் காலிலே விழுவது ஒரு பக்கத்திலே, பெரியவுடையார்க்குப் பரகதியளிப்பது மற் றொருபக்கத்திலே. இப்படியேயிறே அவதாரங்களில் அசக்தியும் அற்புதசக்தியும் கலந்த கட்டியாயிருப்பது. எளிமையைக் காட்டுவதற்கென்றே பண்ணின அவதாரங்களில், ஸர் வேச்வரத்வஸமாநாதிகரணங்களான சக்திவிசேஷங்களையும் கூடவே கட்டியருள்வது ஏதுக்காகவென்று ப்ரச்நம் பண்ணினூராய்த்து.

[இஹாவதீர்ண: கிம் ப்ரதயஸே?] வடதள சாயியாய்க் கொண்டு செய்த செயலை மநுஷ்யஸாஜாத்ய பாவனையோடே அவதரித்த விடத்திலும் செய்பலாமோ? "வையமேழும் கண்டாள் பிள்ளைவாயுளே" என்றும் "வாயுள் வையகம் கண்ட மடநல்லார்" என்றும் சொல்லுகிறபடியே அந்த சக்திவிசேஷத்தை இங்கும் காட்டி "பாலகனென்று பரிபவம் செய் யேல், பண்டொருநாள் ஆலினிலை வளர்ந்த சிறுக்கனவனிவன்" என்று அடியறிந்து சொல் லும்படி செய்துகொண்டது என்னேபிரானே யென்கிரூர்.

[அவ்யாஜதः] ஒருவரும் அபேக்ஷியாதிருக்க ஸ்வயமேவ என்கை. கிம் ப்ரதயஸே என்று ப்ரச்நத்தோடே தலைக்கட்டினவிது—இதற்குள்ள ஸமாதாநத்தை வெளியிடமாட்டாமே ஆழ்வான் திருவுள்ளம் உடைகுலைப் படுகிறபடியைத் தெவிக்கும். "ஆதியம் சோதியுருவை

அங்குவைத் திங்குப்பிறந்தளன்கிறபடியே அஜஹத்ஸ்வபாவனாய் அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தானத்தோடே வந்தவதரித்தபடியாலே திவ்ய சக்திவிசேஷங்களை நீ எவ்வளவு மறைத்துப் பேண நினைத்தாலும் அவை மறைக்கவொண்ணாமே வ்யக்தமாகின்றனகாண் என்பதாகத் திருவுள்ளம்.

ப்ரஹ்மேசமத்யகணநா கணநார்க்கபங்க்தெள இந்த்ராநுஜத்வமதிதேஸ் தநயத்வயோகாத்
இக்ஷ்வாகுவம்சயதுவம்சஜநிச்ச ஹந்த ! ச்லாக்யாந்யமூந்யநுபமஸ்ய பரஸ்ய தாம்ந3 ||

அநுபமஸ்ய	ஒப்பற்ற	அதிதே3 தநயத்வ யோகாத்	அதிதிக்குப் பிள்ளையாகப் பிறந்ததனாலே உபேந்த்ரனானதும்
பரஸ்ய தாம்ந3	பரஞ்சோதியாகிய எம்பெருமானுக்கு	இக்ஷ்வாகுவம்ச யதுவம்சஜநிச்ச	இக்ஷ்வாகுவம்சத்திலும் யதுவம்சத்திலும் அவதரித்ததும்
ப்ரஹ்மேசமத்ய கணநா	ப்ரஹ்மருத்ரர்களின் நடுவே (ஒருவனாக) எண்ணப் பெறுகையும்	அமூநி	ஆக இவ் வவதாரங்களெல்லாம்
அர்க்க பங்க்தெள கணநா	த்வாதசாதித்தியர்களின் திரளில் எண்ணப் பெறுகையும்	ச்லாக்யாநி	அதிசயாவஹங்கள்.
		ஹந்த !	ஆச்சர்யம் !

[ப்ரஹ்மேசேத்யாதி] கீழ்ச்லோகத்தில் "இஹாவதீர்ண3" என்றவாறே எம்பெருமானுடைய அவதாரங்களை நினைத்தருளினார்; ப்ரஹ்மருத்ரர்களினிடையே ஒருவனாக அவதரித்ததும், ஆதித்யர்களினிடையேஅவதரித்ததும் உபேந்த்ரனாகப் பிறந்ததும் ராமக்ருஷ்ணாதிகளாகத் தோன்றியதும் ஸ்ம்ருதி விஷயமாகவே அவற்றை அநுஸந்தித்து "பல பிறப்பாயொளிவருமுழுநலம்" என்கிறபடியே இவையெல்லாம் எம்பெருமானுக்கு அதிசயாவஹங்களாயிருக்கிறபடியைப் பேசி இனியராகிறார். கேவல பரத்வமும் கேவல ஸௌலப்யமும் ச்லாக்யமாகமாட்டாதே; பரத்வேஸதி ஸௌலப்யமிறே ச்லாக்யமாவது. அப்படிப்பட்ட ஸௌலப்யம் பொலியும்படி பரத்வத்தை மறைத்தருளி அவதரித்து ஒளிபெறுவதே! என்கிறார். [ப்ரஹ்மேசமத்யகணநா] பலவிடங்களிலே ப்ரஹ்மருத்ரர்கள்நடுவே பரிகணிக்கும் படிக்கீடாக விஷ்ணுவாய் அவதீர்ணனானபடியைச் சொல்லுகிறது. *நல்லரன் நாரணன் நான்முகனுக்கு* என்றார் திருமங்கையாழ்வார்.

[அர்க்கபங்க்தெள கணநா] இங்கு ஆதித்யர் பன்னிருவரில் உயர்ந்த விஷ்ணுநான் என்னும்கீதாபாஷ்யம் அநுஸந்தேயம். [அதிதேஸ்தநயத்வயோகாத் இந்த்ராநுஜத்வம்] மஹாபலியானவன் தன் வலிமையாலே தேவலோகத்தையுமாக்ரமித்து இந்திரனைத் தள்ளித் தானே தேவாதிபத்யம் செலுத்திவருகையில் இந்த்ரமாதாவான அதிதியானவள் தன்புத்ரன் இப்படி பரிபூதனாய் சோகியாநின்றபடியையறிந்து பரிதபித்து க்ஷீரவ்ரத நிஷ்டையாய் பகவானை த்யானித்துக் கொண்டிருக்க, ஸ்ரீமந்நாராயணன் சங்க சக்ரகதாபாணியாய் அதிதியின் முன்னே வந்து ஸேவைஸாதிக்க, அவளும் ஸேவித்து பத்தாஞ்சலியாய் ஸ்துதித்து தன் மனக்குறையை விஜ்ஞாபிக்க, பகவான் திருவுள்ளமுகந்து "நானுனக்குப் பிள்ளையாய்ப் பிறந்து உன் பிள்ளையாகிய இந்திரனுடைய துயரைப் போக்குகிறேன்" என்று சோதிவாய் திறந்து அருளிச் செய்துவிட்டு அந்தர்ஹிதனாய் பிறகு சிறிதுகாலம் கழிந்தபின் அதிதியின் கர்ப்பத்திலே வாமனனாய் அவதரித்து இந்திரன் துயரைத் தீர்த்தருளினானென்கிறகதை அநுஸந்தேயம். இந்த அவதாரத்தில், அதிதி—மாதா, கச்யபன்—பிதா, இந்திரன்—தமையன்.

[இக்ஷ்வாகுவம்சேத்யாதி] ஸ்ரீராமனையும் க்ருஷ்ணனையும் அவதரித்தபடி. ஆகிய இவ் வவதாரங்களெல்லாம் கர்ம நிபந்தநமாகவன்றிக்கே, இச்சாபரிக்ருஹீதமாகையாலே பரஸ்மாத் பரனான உன்னுடைய ஸௌலப்ய ப்ரகாசநமுகேந உனக்கு அதிசயாவஹமத்தனை போக்கி ஸம்ஸாரிகளுடைய ஜநிகள் போலே இழுக்கல்ல என்றாராய்த்து.

த்வந்நிர்மிதா ஜடரகா ச தவ த்ரிலோகீ கிம் பிக்ஷணாத் இயம் ருதே பவதோ துராபா,
மத்யே கதா து ந விசக்ரமிஷே ஜகச்சேத் த்வத்விக்ரமை: கதமிவ ச்ருதிரஞ்சிதா ஸ்யாத். 16

(ஹே தேவ !)	எம்பெருமானே !	மத்யே கதா து	இடையிலொருகாலத்தில்
த்வத் நிர்மிதா	தேவரீரால் படைக்கப்பட்டதும்	ஜகத்	இந்த வுலகத்தை
தவ ஜடரகா ச	(ஒருகால்) தேவரீருடைய திருவயிற்றிலே கிடந்து ரக்ஷை பெற்றதுமான	ந விசக்ரமிஷே சேத்	(பிக்ஷாவ்யாஜத்தாலே மூவடி கொண்டு) அளந்தருளாவிடில்
இயம் த்ரிலோகீ	இந்த மூவுலகும்		
பிக்ஷணாத் ருதே	(மாவலியிடத்தில்) யாசிப்பது தவிர மற்றவுபாயத்தினால்	ச்ருதி:	வேதமானது
பவத:	தேவரீருக்கு	த்வத் விக்ரமை:	தேவரீருடைய விக்ரமங்களினால்
துராபா கிம்	கிடைக்கவரிதோ ? [யாசித்துப் பெருமல் ஸ்வாதந்த்ரியத்தினாலேயே பெறமுடியாதோ ?]	கதம் அஞ்சிதா ஸ்யாத்	எங்ஙனம் மேன்மை பெற்றதாகும் ?

இதிலே த்ரிவிக்ரமாவதார ஸௌலப்யத்தை அநுஸந்தித்து இனியராகிறார். ஆழ்வாரைப்போலே எம்பெருமானை மடிபிடித்துக் கேள்வி கேட்கிறார். ஆழ்வார் கேட்டது என்னென்னில்; பெரிய திருவந்தாதியிலே "சீரால் பிறந்து சிறப்பால் வளராது பேர் வாமனாகாக்கால் பேராளா! மார்பாரப் புல்கி நீயுண்டுமிழ்ந்த பூமி நீரேற்பரிதே, சொல்லு நீ யாமறியச் சூழ்ந்து" என்று ஸர்வதா உனக்கு வச்யமான பூமியை ஒரு பையல் பக்கல் பிக்ஷுவாய்ச் சென்று யாசித்துப் பெறவேண்டிய காரணம் என்கொல் பிரானே! என்று கேட்டாரிறே. அப்படியே இவரும் பூர்வார்த்தத்தாலே கேள்விகேட்டு உத்தரார்த்தத்தாலே ஸ்வயமேவ ஸமாஹிதராகிறார். ஆகையாலே இதில் பூர்வார்த்தம் பெரிய திருவந்தாதிப் பாசுரத்தின் ப்ரதிச்சந்தமாகவே அமைந்தது. அந்தப் பாசுரத்தையே ஸுந்தரபாஹுஸ்தவத்திலே "க்ஷிதி ரியம் ஜகிஸம்ஹ்ருதி பாலனை: நிகிரணோத்கிரணோத்தரணைரபி, வநகிரீச! தவைவ ஸதீ கதம் வரத! வாமன! பிக்ஷணமர்ஹதி" என்று பூர்ண ச்லோகத்தாலே அநுபாஷித்தருளினர்.

சதுர்முக முகேந ஸ்ருஷ்டித்தும் ஸ்வேநரூபேண ரக்ஷித்தும் போருகிற ப்ரகாரங்களாலே உனக்கே ஸ்வம்மான இந்த த்ரைலோக்யத்தை ஒரு பையல் தன்னதாக அபிமானித்திருந்தானாகில் அவனை நேர்கொடு நேரே தண்டித்து வாங்கலாமாயிருக்க, அது செய்யாதே யாசகனாய்ச் சென்று பல் பன்னிரண்டும் காட்டி இரந்துதானோ பெறவேணும்; பெறுதற்கு வேறு உபாயமறிந்திலையோ! பல வுபாயங்களிருந்திருக்கச் செய்தேயும் மூவடி வேண்டி மூவுலகளந்தது ஒக்குமென்கிறார் உத்தரார்த்தத்தாலே; உபயோகமற்ற பலவிஷயங்களையும் பரக்கப் பேசி எச்சில் வாயாயொழிந்த வேதமானது "இதம் விஷ்ணுர்விசக்ரமே த்ரேதா நிதகே பதம்" "த்ரீணி பதா விசக்ரமே விஷ்ணுர் கோபா அதாப்ய:" "விசக்ரமாணஸ் த்ரேதோருகாய:" இத்யாதிகளாலே த்வதீயவிக்ரமங்களைப் பேசி பவித்ரமாவதற்காகவாய்த்து மூவடி யளந்து மூவுலகு பெற்றது என்கிறார். இங்ஙனே செய்யாதொழியில் வேதம் அபூதமாயே கிடக்குமென்கை. (16)

ப்ருச்சாமி கிஞ்சந யதா கில ராகவத்வே மாயாம்ருகஸ்ய வசகோ மநுஜத்வமௌக்த்யாத்,
ஸீதாவியோகவிவசோ ந ச தத்கதிஜ்ஞ: ப்ராதாஸ் ததா பரகதிம் ஹி கதம் ககாய. 17

(ஹே தேவ !	எம்பெருமானே !	மாயாம்ருகஸ்ய வசகஸ் ஸந்	மாரீசனாகிற மாயமானுக்குப் பரவசராகி
கிஞ்சந ப்ருச்சாமி	(தேவரீரை) ஒன்று கேட்கிறேன் ;	ஸீதாவியோக விவச:	பிராட்டியைப் பிரிந்து வருந்தினீரோ,
ராகவத்வே	ஸ்ரீராமனாகத் திருவவதரித்த காலத்தில்	தத் கதிஜ்ஞச் ச ந (அபூ:)	அவள் போன போக்கையும் அறியாதவராயிருந்தீரோ,
யதா	யாதொரு ஸமயத்தில்		
மநுஜத்வ மௌக்த்யாத்	'ஆத்மாநம் மாநுஷம் மந்யே' என்ற மநுஷ்யத்வ ப்ரயுக்தமான மோஹத்தாலே	ததா ககாய பரகதிம் கதம் ப்ராதா:	அப்படிப்பட்ட ஸமயத்திலே ஜடாயுவுக்கு பரமபதப்ராப்தியை எப்படி பண்ணித் தந்தீர்?

இது முதல் முப்பத்துமூன்றும் ச்லோகமளவும் ராமாவதார வ்ருத்தாந்தங்களிலே அவகாஹித்துச் செல்லுகிறார். மத்யே "ஏதத் கதம் கதய யந்மதிதஸ் த்வயாஸௌ" என்கிற ச்லோகமொன்று ப்ராஸங்கிகம்.

மாயமான் பின்னே சென்று மைதிலியைப் பிரிந்து அவள் போனவழி தெரியாதே 'மலையே! நீ கண்டாயோ? மரமே நீ கண்டாயோ? மடுவே நீ கண்டாயோ? என்று கண்ட சேதநாசேதநங்களின் காலிலே விழுந்து துவண்டு கிடப்பது ஒரு பக்கத்திலே; பெரிய வுடையாரை நோக்கி "கச்ச லோகாநநுத்தமாந்" என்று பரகதிக்கு விடைகொடுப்பது ஒரு பக்கத்திலே; 'இவை யிரண்டும் தன்னிலே சேரும்படி எங்ஙனே' யென்று விஸ்மிதராய் அவன் றன்னையே கேட்டறிவோமென்று கேட்டுத் தீருகிறார். த்ருஷ்டத்திலே ஒருத்தி போன வழியறியாதவன் அத்ருஷ்டத்திலே ஒருவனுக்கு வழிகாட்ட முற்பட்டது என்ன விசித்ர மென்கிறார். ஸீதாவியோகத்திலே பரிதபித்ததெல்லாம் "ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" என்று மநுஷ்ய பாவனையாலே யாகில் அந்த பாவனை ஊடுருவச் செல்ல வேண்டாவோ? பெரிய வுடையார் திறத்திலே வந்தவாறே மனிச்சுத்தவிர்ந்து பரத்வம் குடி புகுந்து "மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாநநுத்தமாந்" என்ன வேணுமோ? இவை சேரும்படி எங்ஙனே? *ஸத்யேந லோகாந் ஜயதியைக்கொண்டு ஸமாதானமறிவது. (17)

அக்ஷுண்ணயோகபதம் அக்ர்யஹதம் ஜடாயும் திர்யஞ்சமேவ பத மோக்ஷபதே நியோக்தும்
சக்நோஷி வேத்ஸி ச யதா ஸ ததா கதம் த்வம் தேவீமவாப்துமநலம் வ்யதிதோ விசிந்வந். 18

(ஹே தேவ !)	எம்பெருமானே !,	நியோக்தும்	அநுமதிபண்ண
த்வம்	தேவரீர்	யதா	எப்போது
அக்ஷுண்ண யோக பதம்	யோகமார்க்கத்தை அப்யஸியாதவரும்	வேத்ஸி	அறிந்தீரோ,
அக்ர்ய ஹதம்	ப்ராஹ்மணஜாதியனை ராவணனாலே கொலையுண்டவரும்	சக்நோஷி ச	சக்தராகவுமானீரோ,
திர்யஞ்சம்	திர்யக் யோநியிலே பிறந்தவருமான	ததா	அப்போது
ஜடாயும் ஏவ	ஜடாயுவையுங்கூட	ஸ: த்வம்	அப்படிப்பட்ட தேவரீர்
மோக்ஷபதே	மோக்ஷமார்க்கத்துக்குப் போகும்படி	தேவீம் விசிந்வந்	பிராட்டியைத் தேடிக்கொண்டு
		அவாப்தும்	(அவளைப்) பெறுதற்கு
		அநலம்	அஸமர்த்தராய்
		வ்யதித: கதம் அபூ:	வருந்தினீரே, அது என்கொல்?.

கீழ் ச்லோகத்தின் அர்த்தத்தையே முகபேதேந அநுஸந்திக்கிறாரிதில். பிராட்டியைப் பிரிந்து வருந்தின நீ பெரியவுடையார்க்கு எங்ஙனே பரகதியளிக்கவல்லை யானாய்? என்று கேட்டார் கீழே; அநதிகாரியான ஒரு திர்யக்குக்குப் பரகதியளிக்க வல்லமை பெற்ற நீ பிராட்டியின் கதியை அறியப் பெறாதே காடுமோடும் திரிந்தலைந்து வருந்தினபடி என்னோ? என்று கேட்கிறாரிதில். ப்ரச்நப்ரகாரபேத மொழிய அர்த்தத்தில் வாசியில்லையாயிருக்க ஐகார்த்யேந இரண்டு ச்லோக மருளிச்செய்தது அநாவச்யகமிறே யென்ன வேண்டா; பெரியவுடையார்க்குப் பரகதியளித்த பெருமையிலே யீடுபட்டுப் பேசுகையிலே நோக்கா யிருக்கும் கீழ்ச்லோகம்; பிராட்டியைப் பிரிந்து வருந்தின எளிமையிலே யீடுபட்டுப் பேசுகையிலே நோக்காயிருக்கும் இந்த ச்லோகம். ஆகையாலே ப்ரமேய பேதமுண்டென்று கொள்க. பெரிய வுடையார் மோக்ஷப்ராப்திக்கு அநர்ஹர் என்னுமிடத்தை மூன்று விசேஷணங்களாலே ஸூசிக்கிறார். [அக்ஷுண்ணயோகபதம்] "நோற்றநோன்பிலேன்" "இடகிலேனொன்றட்டகில்லேன்" இத்யாதி. அக்ஷுண்ண:— அநப்யஸ்த: ஸாதநாநுஷ்டாநமொன்றும் செய்யாதவரென்றதாய்த்து. [திர்யஞ்சம்] ஸாதநாநுஷ்டாநத்துக்கு உரிய ஜந்மத்திலும் பிறந்திலர் என்கை. [அக்ர்யஹதம்] அவ்வளவேயோ? ஸாதநஸாமக்ரி இல்லையாகிலும் ப்ரதிபந்தக அபாவமாவது இருக்கலாமே, அதுவுமில்லை. "அக்நிஹோத்ராச் ச வேதாச் ச ராக்ஷஸாநாம் க்ருஹே க்ருஹே" என்னும்படிக் கீடாக ப்ரஹ்மவம்ச்யனை ராவணனாலே கொலையுண்டா ராகையாலே "நாக்ர்யஹதஸ்ய லோகோஸ்தி" என்ற சாஸ்த்ரப்படி பரகதிப்ரதிபந்தகமான அக்ர்யஹதத்வமும் உண்டாய்த்திறே. அக்ரேபவ:— அக்ர்ய:; ப்ராஹ்மணனென்கை. ப்ரஹ்மபுத்ரரான புலஸ்த்யருடைய வம்சத்தில்பிறந்தவனிறே ராவணன்.

இப்படிப்பட்ட ஜடாயுவையும் கூட ஸ்வதந்த்ர சக்தி விசேஷத்தாலே மோக்ஷம் புகுமாறு நியமிக்கவல்ல தேவரீர் பிராட்டியைப் பெறமாட்டாதே தேடித் தளர்ந்தது என் கொல்? என்றுராயிற்று. "தேவீ மவாப்த மகல:" என்ற பாடம் அபத்தம்; 'அகலம்' என்றேயாகும். (18)

ஸாலாந் ஹி ஸப்த ஸகிரீந் ஸரஸாதலாந் யாந் ஏகேஷுமந்தஜவதோ நிரபத்ரயஸ் த்வம்
தேஷ்வேகவிவ்யதநகிந்நகபிப்ரணுந்நம் சாகாம்ருகம் ம்ருகயஸேஸ்ம கதம் ஸஹாயம். 19

(ஹே தேவ !)	எம்பெருமானே !	தேஷு	அந்த ஸாலவ்ருக்ஷங்களில்
யாந் ஸப்த ஸாலாந் ஸகிரீந்	யாவை சில ஸப்தஸால வ்ருக்ஷங்களைக் குலபர்வதங்களோடுகூடினவையாகவும்	ஏக விவ்யதந கிந்ந கபி ப்ரணுந்நம்	ஒரு மரத்தைப் பிளப்பதிலும் வருந்தியொழிந்த வாலியினாலே தூரத்தியடிக்கப்பட்ட
ஸரஸாதலாந்	பாதாளங்களோடு கூடினவையாகவும்	சாகாம்ருகம்	ஸுக்ரீவனை
ஏக இஷுமந்தஜவத:	ஒரு பாணத்தின் ஸ்வல்ப வேகத்தினாலே	ஸஹாயம்	துணைவனாக
த்வம் நிரபத்ரய:	தேவரீர் பேதித்தருளிற்றோ ;	கதம் ம்ருகயஸேஸ்ம	எங்ஙனே தேடிற்று ?

கீழ் ப்ரஸ்துதமான அசக்தி பாவனையையே ப்ரகாராந்தரேண அநுபவிக்கிறார். பிராட்டியைக் கொள்ளைகொண்ட ராவணனை ஸம்ஹரிக்கவேண்டி துர்பலனான ஸுக்ரீவனை ஸஹாயபூதனாகக்கொண்டது என்னோ என்கிறார். வலிமையில் ஏறக்குறைய ஸமாநஸ்கந்தனாயிருப்பவனையன்றோ துணைகொள்ள வடுப்பது. ராவணனை வாலிலே கட்டிக்கொண்டு திரிந்து எளிவரவு படுத்தின வாலியைத் துணை கொண்டாலும் கொள்ளலாம்; அந்த வாலியைக் கண்டவாறே ஆளியைக் கண்ட அச்வம்போலும் அரியைக்கண்ட நரிபோலும் உளைந்தோடினவனும் வாலியின் கையாலே பலநாள் தகர்ப்புண்டவனுமிருக்கிற ஸுக்ரீவனையன்றோ துணை கொண்டது.

இந்த ஸுக்ரீவனை நெருக்கின வாலியாவது தேவரீருக்கு ஸமாநஸ்கந்தனோ? அதுவுமில்லை. "பிபேத ச புநஸ் ஸாலாந் ஸப்தைகேந மஹேஷுணா, கிரீந் ரஸாதலஞ் சைவ" என்கிறபடியே ஒரு பாணத்தை ப்ரயோகித்து ஸப்த ஸாலவ்ருக்ஷங்களையும் ஸப்தகுல பர்வதங்களையும் ஸப்தபாதாளங்களையும் அநாயாஸமாக ஒருங்கே பேதித்தவர் தேவரீர்; அந்த வாலியோ வென்னில், அந்த ஸப்தஸாலங்களில் ஒன்றை பேதிப்பதற்கே பெரும் பாடுபட்டவன்; ஆகையாலே ராவணபங்க சதுரனானவாலியே தேவரீருக்கு அத்யந்தம் விஷமஸ்கந்தனென்றதாகா நிற்க அவனிலும் சாலத்தண்ணியனான ஸுக்ரீவன் தேவரீருக்கு ஒருபடியாலும் ஸமாநஸ்கந்தனாகமாட்டாதேயிருக்கச்செய்தேயும், அரிய பெரிய காரியத்திற்கு அவனை மஹாநிர்வாஹகனாகக்கொண்டு அந்த எலியெலும்பனைத் துணைதேடிப் பெற்றதே! இது என்ன சமத்து! என்று ஏசுகிறார் போலும்.

எம்பெருமான் இதரநிரபேக்ஷ சூரனாகையாலே அவன் ஸ்வகார்ய ஸாதநார்த்தமாக ஆரையும் துணைகொள்ள வேண்டிய ப்ரஸக்தியில்லை. அப்படி யிருந்தாலன்றோ எவன் பலவானென்று விமர்சித்து வரிக்கவேண்டும்; ஸுக்ரீவனை வரித்தது ஸாஹாய்யத்துக்காகவல்லவிறே; சரணாகதரக்ஷணத்தை வ்ரதமாகக் கொண்ட பெருமாளுக்குக் கோல்விழுக்காட்டாலே அவனை ஸ்வீகரிக்க நேர்ந்தவத்தனையேயிறேயுள்ளது.*

வாலியைக் கொல்லும்படியான ஆற்றல் பெருமாளுக்கு உண்டோ இல்லையோவென்று ஸந்தேஹித்த ஸுக்ரீவன் ஸ்வப்ரத்யயார்த்தமாக ஓரம்பாலே ஸப்த ஸாலங்களைத் துளைபடுத்த வேணுமென்று வேண்டினனேயொழிய, பர்வதங்களையும் பாதாளங்களையும்கூடத் துளைபடுத்த வேணுமென்று வேண்டவில்லை; ஆயினும் ராமபாணமானது நிஸ்ஸமாப்யதிக சக்தி விசேஷத்தாலே ஏழேழென்று பேர்பெற்ற மற்றும் சில குலாசலாதிகளையும் துளைபடுத்தி மீண்டபடியாலே "ஸகிரீந் ஸரஸாதலாந்" என்றார். "யேந ஸப்த மஹாஸாலா கிரிர் பூமிச் ச தாரிதா:, பாணேநைகேந காகுத்ஸ்த! ஸ்தாதா தே கோ ரணாக்ரத:" என்றானிறே ஸுக்ரீவன்.

ஸப்தஸாலங்களைக் குறித்து ப்ரயோகித்த பாணம் அவ்வளவோடு நில்லாதே ஸப்தஸங்க்யையிலேயுள்ள வேறு வஸ்துக்களிலும் பரம்தபடியைப் பார்த்து ஏழாக நிற்கும் நிரனிலே இந்த பாணத்துக்குக் கறுவுதல் உண்டாயிற்று போலுமென்றெண்ணி, ஸப்த ஸாகரங்

களும் ஸப்தரிஷிகளும் ஸூர்யனுடைய ஸப்தாச்வங்களும் முதலானவையெல்லாம் நமக்கும் வல்லடிவந்ததென்று அஞ்சி நடுங்கினதாகக் கம்பர் கூறினது இங்கே ஸ்மரிக்கத் தகும். (19)

தாஸஸ் ஸகா ஸமபவத் தவ ய: கபீந்த்ர: தத்வித்விஷம் கபிமமர்ஷவசாஜ் ஜிகாம்ஸு:
த்வத்ஸ்நேஹவிக்லபதியம் தமிமம் கபீந்த்ரம் விஸ்ரம்பயந் ஸபதி ஸாலகிரீந் அவித்ய:. 20

(ஹே தேவ !)	எம்பெருமானே !	த்வத் ஸ்நேஹ விக்லபதியம்	தேவரீர் பக்கல் ப்ரேமத்தினால் கலங்கின புத்தியை யுடையனான அந்த ஸுக்ரீவனை
ய: கபீந்த்ர:	யாவனொரு ஸுக்ரீவன்		
தவ	தேவரீருக்கு		
தாஸ: ஸகா ச ஸமபவத்	அடியனாகவும் அன்பனாகவும் ஆனானோ,	விஸ்ரம்பயந் ஸந்	விச்வஸிப்பியா நின்று கொண்டு
தத் வித்விஷம் கபிம்	அவனுக்கு விரோதியான வாலியை	ஸபதி	அப்போதே
த்வம்	தேவரீர்	ஸால கிரீந்	மராமரங்களையும் குலபர்வதங்களையும்
அமர்ஷவசாத்	கோபவசத்தாலே		
ஜிகாம்ஸு:	கொல்ல விரும்பினவராய்	அவித்ய:	தேவரீர் எய்தருளிற்று.

பெருமாளுக்கு ஒருபடியாலும் ஸமாகஸ்கந்தனாகமாட்டாத வாலியின் கையிலே பலகால் தகர்ப்புண்ட ஸுக்ரீவனாலே பெருமாளுக்கு ஒரு ப்ரயோஜனமுமில்லையாயிருக்க அவனை ஸஹாயமாகக் கொண்டது வ்யர்த்தம்; அதுக்கு மேலே அவனுக்கு விச்வாஸத்தைப் பிறப்பிக்கவேணுமென்கிற இச்சையுண்டானதும் அநாவச்யகம்; ததர்த்தமான ஸப்தஸால பஞ்ஜநம் ஸுதராமநாவச்யகம்; தன்னளவில் அபராதலேசமும் செய்தறியாதவனாயும் ஸ்வாபீஷ்ட ஸித்திக்குத் துணையாக வல்ல மிடுக்கை யுடையனாயுமிருந்த வாலியைக் கொன்றது அதிதராம் அயுக்தமென்று வசை கூறுவாரைத் தெளிவிக்கிறாரிதில். ஸுக்ரீவன் ராம ஸந்நிதியிலே புகுந்து "ஸோஹம் த்ரஸ்தோ வநே பீதோ வஸாம்யுத்ப்ராந்த சேதந: | வாலிநா நிக்ருதோ ப்ராத்ரா க்ருதவைரச் ச ராகவ | வாலிநோ மே மஹாபாக! பயார்த்தஸ்யாபயம் குரு— கர்த்துமர்ஹஸி காகுத்ஸ்த! பயம் மே ந பவேத் யதா" என்று அபயம் வேண்டினவளவிலே "வாலிநம் தம் வதிஷ்யாமி தவ பார்யாபஹாரிணம்" என்று பெருமாள் அபயப்ரதாநம் பண்ணினாராகச் சொல்லப்பட்டது. தாஸனாயும் ஸகாவாயு மமைந்த ஸுக்ரீவனுக்கு இஷ்டம் செய்யவேண்டிய கடமை பெருமாளுக் கவர்ஜநீயமாயிற்றாகையாலே ஸுக்ரீவ விரோதியென்னு மாகாரத்தாலே வாலி பக்கல் விரோதம் வஹித்த பெருமாள் அவனைக் கொல்லப் புகுந்தது யுக்தமேயாம்.

நம் கார்யம் செய்துதலைக்கட்டவல்ல சக்தி ராமனுக்கு உண்டோ இல்லையோ வென்று விஹ்வலனான ஸுக்ரீவனைத் தேற்றினவன்றி அவன் வாலியோடே போர்புரியப்போக மாட்டானாகையாலும், போகாவிடில் வாலியைக் கொல்ல வழியில்லாமையாலும், கொல்லாவிடில் தாம் பண்ணின அபயப்ரதாநம் பழுதுபடுமாகையாலும் ஸுக்ரீவனை விஸ்ரப்தனாக்கவேண்டியது ஆவச்யகமாக, ஸாலபஞ்ஜநம் ப்ராப்தமாயிற்றித்தனை....என்று இந்த ச்லோகத்தாலருளிச் செய்தாராய்த்து. (20)

யத்வா ம்ருகம் ம்ருகயுவந் ம்ருகயா பதேநச் சந்நோ ஜகந்த நது சத்ரு வதாபிமுக்யாத்,
தத் யுக்தமேவ தவ ராகவவம்சஜஸ்ய, திர்யக்ஷு நைவ ஹி விபக்ஷதயோபசார: (21)

ம்ருகம் ம்ருகயுவத்	காட்டு ம்ருகத்தை வேடன் மறைந்து கொல்லுமா போலே	இதி யத் வா	என்பது யாதொன்றுண்டோ
		தத்	அதுவானது
ம்ருகயாபதேந	(தேவரீரும் வாலியை) வேட்டையாடும் விழுக்காட்டிலே	ராகவவம்சஜஸ்ய தவ	இக்ஷ்வாகு வம்சயரான தேவரீருக்கு
சந்ந: ஜகந்த	மறைந்திருந்து கொன்றீர்	யுக்தமேவ	தகுந்ததேயாம்,(ஏனென்றால்)
		திர்யக்ஷு	திர்யக் ஜந்துக்களிடத்தில்
சத்ருவத் ஆபிமுக்யாத் து ந ஜகந்த	சத்ருவோடே யுத்தம் செய்யும் கணக்கிலே நேர்நின்று கொன்றீரில்லை.	விபக்ஷதயா உபசார: ந ஹி யுக்த:	ஔபசாரிகசத்ருத்வ ப்ரதிபத்தியும் தகாதிறே.

சரணாகதனான ஸுக்ரீவனுக்காக வாலிவதம் ப்ராப்தமாயிற்றென்று கொண்டா லும் நேர்கொடு நேரே நின்று வாலியைக் கொல்வது தவிர்ந்து மறைந்துகொண்டு பாணப்ரயோகம் பண்ணி வதம் செய்தது அயுக்தமன்றோ? வேட்டைக்காரன் மிருகங் களை மறைந்து நின்று அடிக்குமாபோலே அடித்துப் பொகட்டது யுக்தமாகுமோ! சத்ரு வென்று யுத்தபண்ணிச் செய்த வதமாகில் உருவைக்காட்டி எதிரேநின்று யுத்தம் செய்வ தன்றோ ப்ராப்தம்; ஸ்ரீராமன் பரமதார்மிகனாயிருந்துவைத்து இங்ஙனே அதர்மமாகச் செய்தது அநுசிதமன்றோவென்று பலர் பேசுவதுண்டிறே: “நிரவதி குணக்ராமே ராமே நிராகஸி வாகஸிஸ்புரணமுஷிதாலோகா லோகா வதந்தி ஸதந்திகே! வாதநு ஹதிம் வாலி த்ரோஹம் மநாகபஸர்ப்பணம்” என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்திலே தேசிகனும் அருளிச் செய்தாரே. வாலியை வதம் பண்ணினதே அயுக்தம்; அதுதன்னிலும் மறைந்து நின்று கொன்றது ஸுதராமயுக்தமென்று பழிப்பார் பலருண்டே; அதில் முதல் பழிப்புக்குப் பரிஹாரமருளிச் செய்தார் கீழே; இரண்டாம் பழிப்புக்கு இதில் பரிஹாரமருளிச் செய்கிறார். பூர்வார்த்தத்தாலே பாமரர் சொல்லும் தூஷணத்தை அநுவதித்து உத்தரார்த்தத்தாலே ஸமாதா நம் பண்ணுகிறார். யுக்தமானபடி எங்ஙனேயென்னில். [ராகவவம்சஜஸ்ய தவ திர்யக்ஷு விபக்ஷ தயா உபசாரோபி நயுக்தோஹி.”] “விவாதச்ச விவாஹச்ச ஸமயோரேவ சோபதே” என்றிறேயுள்ளது. பெருமாள் தாம் இக்ஷ்வாகு வம்ச்யராயிருந்துவைத்து திர்யக்யோநி யிலே பிறந்து ஸர்வதா விஸத்ருசமான ஒரு குரங்கை ப்ரதிபக்ஷியாகக்கொண்டு எதிரே நின்று பொருதாரென்றால் இது அவருடைய குலத்துக்கே இழுக்காமே. வாலியை சத்ரு வாக ப்ரதிபத்தி பண்ணுகைக்கு ஈஷத்தும் தாம் போராமையாலே ராஜாக்கள் கொடிய மிருகங்களைப் பதுங்கிநின்று கொல்லுகிற வேட்டை முறைமையால் கொன்றதுவே யுக்ததம் என்றாராய்த்து.

இது சாடூக்தியாக அருளிச்செய்த ஸமாதானமென்று சிலர் நினைத்தாலும் பரமார்த்தபூத ஸமாதானங்களில் இதுவும் ஒன்றேயென்று பெரியோர் பணிப்பர்.

ராவண வதத்துக்கு ஸஹாயம் தேடுகிற பெருமாள் அந்த ராவணனை அநாயா ஸேந ஜயிக்கவல்ல வாலியைக் கொன்றுவிட்டு பரமபீருவான ஸுக்ரீவனை ஸஹாயம் கொண்டது என்ன புத்திசாலித்தனம்? என்று ஏசுமவர்களுக்குச் சொல்லுகிறோம்;—

வாலியானவன் முன்னமே ராவணனோடு அக்நிஸாக்ஷிகமாக ஸ்நேஹம் கொண் டிருந்தபடியால் அவனைத் தாம் துணைகொண்டால் ராவணாதி துஷ்ட நிக்ரஹம்பண்ண வழியில்லாமல் போமாகையால் பெருமாள் ஸுக்ரீவனைக் கைக்கொண்டு வாலியை வதைத் தார். வாலியை ஸஹாயமாகக்கொள்ள ஸௌகர்யமில்லையாகிலும் அவனை வீணாக வதம் செய்யாமலாவது இருக்கலாமேயென்னில் கேண்மின்;—இனிச் செய்யவேண்டிய ராவணவதமாகிய தேவகாரியத்துக்கு இந்த வாலிவதம் அங்கமென்று நினைக்கத்தக்கது. ஏனென்னில்,—ஆர்த்ராபராதியாயிருந்தாலும் சரணாகதனைவிட்டால் அவனை ரக்ஷிப்ப தாகிற சிறந்த தருமத்தை மேற்கொண்டு நடப்பவரான பெருமாள் இந்த தர்மத்துக்கு ப்ரதிபடனாயிருந்த வாலியைக் கொல்ல ப்ராப்தமாயிற்று. ப்ரமாதாத் அபராதியான ஸுக்ரீவன் சரணமடைந்த பின்பும் க்ஷமியாதே அவனைப் பலவகைகளிலும் கொல் லப் பார்த்தவனிறே வாலி. ஆகையாலே வாலிபக்கல் இது பெருத்த தோஷம்.

பரதார பரிக்ரஹமும், ப்ராத்ரு விரோத சிந்தையும், துர்பலனைப் முதுகுகாட்டி யோடுகிற வனைத் துரத்தித்துரத்திக் கொல்லத் தொடங்குவதும் முதலிய துச்சரிதங்கள் வாலியிடத்திலே யிருந்தபடியால் ஏகதாரவ்ரதராயும், ப்ராதாக்களை ப்ராண நிர்விசேஷமாக மதிப்பவராயும் துர்பலனான சத்ருவைப்பார்த்து ‘இன்று போய் நாளை வா’ என்று அன்போடுசொல்லி விடுத்தருளும் மஹா வீரராயுமுள்ள பெருமாள் அவனை அழித்தது அத்யுசிதமேயிறே.

எதிரேவந்து நில்லாதே மறைந்திருந்து அடித்ததும் யுக்தம். மூந்துறமுன்னம் சரணமடைந்த சுக்ரீவனுக்கு அபயமளித்து வாலியைக் கொல்வதாக வாக்தானம் செய்து

விட்ட பெருமாள், பிறகு வாலியினெதிரில் நின்று யுத்தம் செய்தால் பெருமாளுடைய திறலைக்கண்டு அஞ்சி வாலியும் தன்னை சரணம் புகுந்தானாகில் தஞ்சமடைந்தவனை வதைக்கக்கூடாமைபற்றி அவனைக் கொல்லாமல்விடுமளவில் முன்னே ஸுக்ரீவனுக்கு அளித்த வாக்தானம் தவறிப்போய்விடுமே யென்கிற நோக்கம் முக்கிய காரணம். தவிரவும் எதிர்ந்தவர்களுடைய பலத்தில் பாதியாகம் தன்னிடம்வந்து சேரும்படி வாலி சிவனிடத்தில் பெற்றிருக்கிற வரம் பழுதுபடாமலிருக்கும்படி மறைந்து நின்று அம்புவிட்டாரென்பது மொன்று. அவரவர்கள் தேவதாந்தரங்களிடத்தில் பெற்ற வரங்கள் பழுதுபடாதபடியன்றோ எம்பெருமான் காரியம்செய்வது, இங்ஙனே பல காரணங்களுண்டு. (21)

22 மாநுஷ்யகம் சரிதமாசரிதும் ப்ரவ்ருத்த : தேவாதிகம் சரிதமங்க ! கிமங்க்யகார்ஷீ : |
யத் ஸாகரே பத பபந்தித நாத ஸேதும் சைலை : ப்லவங்கமஸமிங்கித ஸம்ப்ராணுந்நை : ||

அங்க ;	வாராய் பிரானே !,	நாத	ஸ்வாமிந்.
மாநுஷ்யகம் சரிதம்	மநுஷ்ய த்வைகாந்தமான கார்யத்தை	ப்லவங்கமஸமிங்கித ஸம்ப்ராணுந்நை :	வாநரவீரர்களால் கொண்டு வந்து எறியப்பட்ட
ஆசரிதும்	செய்வதற்கு	சைலை :	குன்றுகளாலே
ப்ரவ்ருத்த : (த்வம்)	ப்ரவர்த்தித்தவனான நீ	ஸாகரே	ஸமுத்திரத்திலே
தேவாதிகம் சரிதம்	தேவர்களுக்கும் நிலமல்லாத கார்யத்தை	ஸேதும் பபந்தித	அணை கட்டினாய்
கிம் அங்க்யகார்ஷீ :	என் ஏற்றுக்கொண்டாய் ?	இதி யத்	என்பது யாதொன்றுண்டு
(அப்படி செய்த கார்யமேதென்னில்)		(ததேவ)	அதுதான்.
		பத !	ஆச்சர்யம் !

ஸேதுபந்தநமாகிற அதிமாநுஷ க்ருத்யத்தை அநுஸந்திக்கிறாரிதில். "ஆத்மாநம் மாநுஷம் மந்யே" என்று தாமே சொல்லிக் கொண்டபடியே மநுஷ்யத்வைகாந்திகமான க்ருத்யத்தையே செய்வதாகப் புகுந்த தேவரீர் தேவர்களுக்கும் நெஞ்சால் நினைக்கவு மொண்ணாத காரியத்தைச் செய்ய ஒருப்பட்டது என்னோ? அங்ஙனே செய்தது ஏதென்ன, அருளிச்செய்கிறார். (யத் ஸாகரே இத்யாதி) * குரக்கினத்தாலே குரைகடல் தன்னை நெருக்கி அணைகட்டி * என்கிறபடியே தண்ணீரைக் காண இருய்த்துக் கிளைகளிலே தத்தித் தாவித் திரிந்து சாகாம்ருகம் என்று பேர் பெற்றுக் கிடக்கிற குரங்குகளை வைத்துக்கொண்டு அவை புரட்டிக் கொணர்ந்து எறிந்த மலைகளைக் கொண்டு ஸமுத்திரம் தன்னிலே ஸேதுபந்தம் பண்ணிற்றே! இது மநுஷ்யத்வைகாந்தமான சரிதமோ? தேவர்களுக்கும் நிலமல்லவிறே இக்கார்யம்; இது ஸங்கடிதமானபடி என்னோ வென்கிறார்.

பெருமாள் முதலிலே மாநுஷ்யகத்துக்குத் தக்கபடி விநயத்தாலே காரியம் ஸாதிக்கப் பார்த்து ஸமுத்திர ராஜனை நோக்கிச் சரணாகதி பண்ணின விடத்தில் அவன் இவருடைய பரத்வஸமாநாதிகரண ஸௌலப்யத்தைக் கணிசியாதே கேவல ஸௌலப்யத்தையே பார்த்துக் குழைச் சரக்காக நினைத்து "பரந்திட்டு நின்ற படுகடல் தன்னை இரந்திட்ட கைமேல் எறிதிரைமோத" என்கிறபடியே திரஸ்காரம் தோற்ற இருந்தபடியாலே பெருமாள் திருவுள்ளம் சீறி 'எல்லாரும் நடந்தே செல்லும்படி கடலை சோஷிப்பிக்கிறேன்' என்று ஆக்நேயாஸ்திரத்தைத் தொடுக்கத் தொடங்கின வளவிலே வருணன் அஞ்சி நடுங்கி ஓடி வந்து பெருமாளைச் சரணமடைந்து கடல் வடிவமான தன்மேல் அணைகட்டுவதற்கு உடன்பட்டுச் சொன்னபடியாலே பெருமாள் வாநர முதலிகளைக் கொண்டு மலைகளை யிடுவித்து ஸேதுபந்தம் பண்ணியருளினார்.

இந்த ச்லோகத்தால் மநுஷ்யத்வே பரத்வத்தில் ஈடுபட்டுப் பேசினாராய்த்து. பாவநாஸித்தமான மநுஷ்யத்வத்தை ஸ்வாபாவிகமான பரத்வம் வென்று விடுமென்றதாய்த்து. 22.

23 யோ விக்ரமேண மநுஜத்வ விபூஷணேந தேவம் வரம் வருணராஜ மஜ! வ்யஜேஷ்டா: |
க்ருத்வோபதாம் தசரதம் விதிருத்ரமுக்யை: தேவை: ஸ்துதச் ச ஸ கிலேந்த்ரஜிதா ஜிதோஸி.

அஜ!	பிறப்பிலியான பெருமானே	விதிருத்ரமுக்யை: தேவை:	ப்ரம்மருத்ராதி தேவர்களாலே
ய: த்வம்	யாவனொரு நீ	தசரதம் உபதாம் க்ருத்வா	தசரதனைப் புரஸ்கரித்து
மநுஜத்வ விபூஷணேந	மநுஷ்யத்வத்துக்குப் பாங்கான	ஸ்துதச் ச (அபூ:)	ஸ்துதிக்கவும் பட்டாயோ
விக்ரமேண	பராக்ரமத்தாலே	ஸ: த்வம்	அப்படிப்பட்ட நீ
வரம் தேவம்	தேவச்ரேஷ்டனை	இந்த்ரஜிதா ஜிதோஸி கில	இந்திரஜித்தினால் ஜயிக்கப்பட்டாயிறே (இதுவென்?)
வருணராஜம்	வருணனாகிய ராஜாவை		
வ்யஜேஷ்டா:	ஜயித்தாயோ		

ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமும் உடையவன் போல் ஸமுத்ர ராஜனை சரணாகதி பண்ணுவது ஒரு க்ஷணத்திலே; அடுத்த க்ஷணந்தன்னிலே சீறிச் சிவந்து "ஸாகரம் சோஷயிஷ்யாமி" என்பது; இந்திரஜித்தாலே அஸ்த்ர பத்தனாய்க் கிடந்து மோஹித்திருப்பது ஒருபோது; தேவர்களெல்லாரும் தசரத சக்ரவர்த்தியை முன்னிட்டுக்கொண்டு லங்கையிலே வந்து "ஸீதா லக்ஷ்மீ: பவாந் விஷ்ணு: தேவ: க்ருஷ்ண: ப்ரஜாபதி: வதார்த்தம் ராவணஸ்யேஹ ப்ரவிஷ்டோ மாநுஷீம் தநூம்" இத்யாதியாகத் துதிக்கும்படி வீறு பெற்று நிற்பது ஒரு போது. உன்படி ஒன்றும் இன்னதென்று அறியப் போகிறதில்லையே! என்கிறார்.

[மநுஜத்வ விபூஷணேந விக்ரமேண] மநுஷ்யத்வத்துக்கு அலங்காரமான விக்ரமமாவது—முன்னே காலில் விழுந்து பின்னே தலையறுக்க முயல்வதாம்.

[க்ருத்வோபதாமித்யாதி] லங்கையில் பிராட்டி அக்நி ப்ரவேசம் பண்ணின ஸமநந்தரத்திலே *த்தோ வைச்ரவணோ ராஜா யமச்ச பித்ருபிஸ்ஸஹ.......... ஆகம்ய நகரீம் லங்காம் அபிஜக்முச்ச ராகவம்* [யுத்தகாண்டம். 119. ஸர்.] இத்யாதிப்படியே தேவர்களெல்லாரும் லங்கையிலே ஸ்ரீராமன் பக்கல் வந்து சேர்ந்து *ஏஷ ராஜா தசரதோ விமாநஸ்த: பிதா தவ* என்று சக்ரவர்த்தியை முன்னிட்டு *ஸீதாலக்ஷ்மீ: பவாந் விஷ்ணு:* இத்யாதிகளாலே ஸ்துதித்தபடியைச் சொல்லுகிறது. *உபாயந முபக்ராஹ்ய முபஹாரஸ் ததோபதா* என்று அமரகோச மாகையாலே "உபதாம் க்ருத்வா" என்றது உபஹாரமாக்கி என்றபடி; முன்னிட்டுக் கொண்டு என்று கருத்து.

[ஸ கில இந்த்ரஜிதா ஜிதோஸி] வருண விஜயத்தாலும் தேவகண விரசித ஸ்துதி சதகங்களாலும் பராத்பரனாகப் பொலிந்து நின்ற நீ ஸாநுஜனாய் இந்த்ரஜித்தின் அஸ்த்ரத்தாலே கட்டுண்டு மூர்ச்சித்துக் கிடந்தது என்கொல்! என்கை. 23.

24 அப்திம் ந தேரித ந ஜிக்யித ராக்ஷஸேந்த்ரம் நைவாஸ்ய ஜஜ்ஞித யதா ச பலாபலம் த்வம்.
நிஸ்ஸம்சயஸ் ஸபதி தஸ்ய பதேப்யஷிஞ்ச: தஸ்யாநுஜம் கதமிதம் ஹி விபீஷணஞ் ச.

(ஹே ராம!)	ஸ்ரீ ராமபிரானே!	ஸபதி	ஸாஹஸமாக
த்வம்	நீ	தஸ்யாநுஜம்	அவன் தம்பியான
யதா	எப்பொழுது	விபீஷணம்	விபீஷணனை
அப்திம் ந தேரித	கடலைக் கடக்க வில்லையோ	தஸ்ய பதே	அந்த ராவணனுடைய பதவியிலே
ராக்ஷஸேந்த்ரம்	ராவணனை		
ந ஜிக்யித	ஜயிக்கவில்லையோ,	நிஸ்ஸம்சயஸ்ஸந்	ஸம்சயமில்லாதவனாய்
அஸ்ய பலாபலஞ்ச	இந்த ராவணனுடைய பலாபலத்தையும்	அப்யஷிஞ்ச:	அபிஷேகம் பண்ணினாய்
[illegible]		ஹி	என்பது ப்ரஸித்தம்
நைவ ஜஜ்ஞித	அறியவில்லையோ,	இதம் ச கதம்	இதுவும் எங்ஙனே?
ததா	அப்போது		

மநுஷ்யபாவனை ஒருபுறமிருக்கச் செய்தேயும் பரத்வைகாந்திகமான ஸத்ய ஸங்கல்பத்வத்தை மத்யே வெளியிட்டருளினமைக்குக் கருத்து என்? என்கிறார். “ அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் ! க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர : ப்ரமுமோதஹ ” என்று ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கு லங்கைச்வர்யாபிஷேகம் செய்தருளிற்றே, அது எங்ஙனே? கடலைக் கடக்க வேண்டிய கார்யம் பலீயஸ்ஸாக இருந்தது; அதைக் கடந்து லங்கைக்குச் சென்றாலும் அப்ரத்ருஷ்யனான ராவணனை ஜயிக்க வேண்டிய கார்யம் அதற்கு மேலே ப்ரபலமாயிருந்தது ; இருக்கச் செய்தேயும் கடலைக் கடவாமலும், ராவணனை வெல்லாமலும் அவன் வெல்லக்கூடியவன் தானோ வென்று அவனுடைய பலாபலங்களை விசாரித்துத் தெரிந்து கொள்ளாமலும் அவனுடைய ஸ்தானத்திலே அவன் தம்பியான விபீஷணனை அபிஷேகித்தனைக் கினது என்ன தைர்யம் கொண்டு; நம்மால் ஸமுத்ர தரணம் பண்ண முடியுமோ முடியாதோ என்கிற ஸம்சயம் வர்த்தியாதே, ஸமுத்ரத்தைக் கடந்தோமாகிலும் ப்ரபலனான ராவணனை வதைக்க முடியுமோ முடியாதோ என்கிற ஸம்சயமும் வர்த்தியாதே எல்லாம் ஸுகரமென்றே நிச்சயித்து ராவண வதாநந்தர பாவியான ஒரு காரியத்தை முந்துற முன்னம் செய்தருளினது ஸத்யகாமத்வ ஸத்யஸங்கல்பத்வங்களை ஆவிஷ்கரித்துக் கொண்டபடியாமத்தனையிறே. நாம் நினைத்ததை நினைத்தபடியே பத்தும் பத்தாகச் செய்து தலைக்கட்டவல்லோமென்கிற பரத்வாபிமானம் கொண்டிறே செய்தருளிற்று என்கை. 24.

25 த்வம் தக்ஷிணஸ்ய நிவஸந்நுததேஸ் தடேபி தூராந்தரோத்தர பயோதி மஹாந்தரீபே.
தைத்யாந் நிஜைக சரபாரணயந் கிமேதாம் லங்காம் ஸ்திதோத்ர குருஷே கில ந ஸ்ம பஸ்ம.

(ஹேராம)	ஸ்ரீராமபிரானே!	தைத்யாந்	அஸுரர்களை
த்வம்	நீ	நிஜைக சரபாரணயந் த்வம்	தனது ஒரு அம்புக்கு இரையாக்கி முடித்த நீ
தக்ஷிணஸ்ய உததே : தடே நிவஸந்நபி	தெற்கு ஸமுத்திரத்தின் கரையில் வஸிக்கச் செய்தேயும்	அத்ர ஸ்தித :	இக்கரையில் இருந்து கொண்டே
தூராந்தர உத்தர பயோதி மஹாந்தரீபே	தூரமான அவகாசத்தையுடைய வடக்கு ஸமுத்ரத்தின் பெரிய தீவிலே (இருந்த)	ஏதாம் லங்காம்	இந்த லங்காபுரியை
		பஸ்ம ந குருஷே ஸ்ம கில கிம்	பஸ்மமாக்கி ஒழிக்கவில்லையே, இது என்?

பெருமாள் ஸமுத்ர ராஜனை நோக்கிச் சரணாகதி பண்ணின வளவிலும் அவன் வந்து முகம் காட்டா தொழிந்தவாறே சீறிச் சிவந்த கண்ணினராய் இளையபெருமாளை நோக்கி வில்லைக் கொண்டுவரச் சொல்லி அம்பு தொடுத்தவாறே ஸமுத்ரராஜன் அஞ்சி நடுங்கி ஓடி வந்து அநுகூலித்த பின்பு பெருமாள் அவனை நோக்கித்தொடுத்தபாணம் பழுதுபடக்கூடாமையாலே இதை எங்கேனுமோரிடத்தே ப்ரயோகித்துத் தீரவேண்டுமே ; எங்கே ப்ரயோகிப்பது? சொல்லாய் வருணனே ! என்று கேட்க, வடபுறத்திலே சில சத்ருக்களைக் காட்டி அவர்கள் மேலே ப்ரயோகிக்கும்படி சொல்ல, பெருமாளுமப்படியே பாணப்ரயோகம் பண்ணினா ரென்று ஸ்ரீ ராமாயணத்திலே ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள வ்ருத்தாந்தத்தைத் திருவுள்ளம் பற்றி ஒரு கேள்வி கேட்கிறாரிதில்.

தேவரீர் தக்ஷிண ஸாகரத்தின் கரையில் நின்றுகொண்டே அதிதூரஸ்தமான வடகடலின் த்வீபத்திலுள்ள தைத்யர்களை ஒரு பாணத்தினாலே முடித்தருளிற்று ; இப்படி செய்யவல்ல அத்புத சக்திகரான தேவரீர் அந்த தக்ஷிண ஸாகரத்திலிருந்து கொண்டே ஸந்நிஹிதையான லங்கையை அநாயாஸேந பஸ்மமாக்கி யிருக்கலாமே ; தூரஸ்த சத்ருக்களைக் கொல்லவல்ல பாணம் ஸமீபஸ்த சத்ருக்களைக் கொல்லமாட்டாமையில்லையிறே. இங்ஙனே அநாயாஸமாக லங்கையைப் பாழ்படுத்தலாமாயிருக்க அஸேவ்யஸேவை முதலான பரிச்ரமங்கள் பட்டது என்னோ என்கிறார்.

இது தனக்கு ஸமாதாநமுண்டோ இல்லையோ வென்னில் ; உண்டு. ராவணனை எப்படியாவது முடித்தே விடவேணுமென்று பெருமாள் திருவுள்ளம்பற்றி யிருந்தாராகில் அநாயாஸமாக இருந்த விடத்திலிருந்தே பாணப்ரயோகமு மின்றியிலே ஸங்கல்ப மாத்ரத்தாலும்

முடித்திருக்க வமையும்; அப்படி தீவ்ரமான திருவுள்ள மில்லையே பெருமாளுக்கு; ஆபி முக்ய லேசமாவது நேருமாகில் அவனைத் திருத்திப் பணிகொள்ளக் கடவோ மென்றிறே ப்ரத்யாசை யோடே கிடந்தது. 'இன்று போய் நாளைவா' என்று விட்டதற்கும் திருவுள்ள மிதுவிறே. ஆகையாலே, எங்ஙனே யாகிலும் அவன் நமக்கு ஆளாகக் கூடுமோ வென்னும் நசையாலே யாய்த்து இலங்கை யளவும் சென்று துவண்டது. **25.**

26 ஏதத் கதம் கதய யந்மதிதஸ் த்வயாஸௌ ஹித்வா ஸ்வபாவநியமம் ப்ரதிதம் த்ரிலோக்யாம் |
அச்வாப்ஸரோ விஷஸுதா விதுபாரிஜாத லக்ஷ்ம்யாத்மநா பரிணதோ ஜலதிர் பபூவ.

(ஹே தேவ !)	எம்பெருமானே !	அச்வாப்ஸரோ விஷஸுதா விது பாரிஜாத லக்ஷ்ம்யாத்மநா	குதிரை அப்ஸரஸ்ஸு விஷம் அம்ருதம் சந்திரன் கல்ப தரு லக்ஷ்மீ ஆகிய ஏதத் ரூபமாக
த்வயா மதித :	உன்னாலே கடையப்பட்ட	பரிணதோ பபூவ இதி யத்	பரிணமித்த தென்பது யாதொன்றுண்டு
அஸௌ ஜலதி :	இந்த ஸமுத்ரமானது	ஏதத் கதம்	இது எங்ஙனே !
த்ரிலோக்யாம்ப்ரதிதம்	த்ரிஜகத் ப்ரஸித்தமான	கதய	சொல்லாய்.
ஸ்வபாவ நியமம் ஹித்வா	'இன்னது இன்னவிதமாகப் பரிணமிக்கும்' என்கிற நியதஸ்வபாவத்தை விட்டு		

கீழ் "மாநுஷ்யகம் சரிதம்." என்கிற ச்லோகம் தொடங்கி நாலு ச்லோகங்களி லும் ஸமுத்ரப்ரஸ்தாவ மிடைவிடாது வருகையாலே ஸமுத்ரபந்த ப்ரஸங்கத்திலே ஸமுத்ர மதநமும் ஸ்ம்ருதமாய் அதிலே ஈடுபட்டுப் பேசுகிறார். எம்பெருமான் தேவர்களுக்காகக் கடல் கடைந்த காலத்திலே அக் கடலில்நின்றும் உச்சைச் ச்ரவஸ் என்னும் குதிரையும் அப்ஸர ஸ்திரீயும் ஹாலாஹலமும் அம்ருதமும் சந்திரனும் கல்பகவ்ருக்ஷமும் பிராட்டியும் என்றிவை முதலான வஸ்துக்கள் கிளர்ந்தனவாக இதிஹாஸங்களிலே காணுகின்றது; இது என்ன அதிமா நுஷக்ருத்யமோ பிரானே! ஸமுத்ரமே அச்வாதிரூபேண பரிணமித்து விட்டதிறே; லோக த்ருஷ்டந்யாயத்திலே இது அஸங்கடிதமிறே. பால் தயிராகப் பரிணமிக்கும்; வெண்ணெய் நெய்யாகப் பரிணமிக்கும் என்றிப்படி லோகத்திலே சில பரிணாமப்ரக்ரியைகள் வ்யவஸ் திதமாகக் கண்டிருக்கிறோம்; ஜலத்ரவ்யம் அச்வாதிரூபேண பரிணமிக்கும்படியை எங்கும் கண்டிலோம். அப்பனே! இது என்ன விசித்ரம்? சொல்லாய். என்கிறார். **26.**

27 யத் தாத்ருசாகஸமரிம் ரகுவீர வீக்ஷ்ய விச்ரம்யதாமிதி முமோசித முக்தமாஜௌ |
கோயம் குண: கதரகோடிகத: கியாந் வா கஸ்ய ஸ்துதே: பதமஹோ பத கஸ்ய பூமி: ||

ரகுவீர !	ஸ்ரீராம பிரானே !	அயம் குண : க :	இது என்ன குணம் !
தாத்ருச ஆகஸம் அரிம்	அப்படிப்பட்ட (துர்வசமான) அபராதம்செய்த ராவணனை	கதரகோடி கத :	எந்த வகுப்பில் சேர்ந்தது !
ஆஜௌ	போர்க்களத்திலே.	கியாந் வா	எவ்வளவுடையது ?
முக்தம் வீக்ஷ்ய	ஒன்றும் செய்யத்தோன்றாதவனாக நோக்கி	கஸ்ய ஸ்துதே : பதம்	யாருடைய ஸ்தோத்திரத்துக்கு ஆஸ்பதமானது ?
விச்ரம்யதாம் இதி முமோசித	'இன்றுபோய் நாளை வா' என்று போகவிட்டாயே !	கஸ்ய பூமி :	ஆர்க்குக் காண நிலமாவது ?
		அஹோ பத !	ஆச்சர்யமென்னுமித்தனை.

நிலை கலங்கி நின்ற ராவணனை நோக்கி, இன்று நீ சாலவும் இளைத்தாய்; தீரக்கழிய அபராதம் பண்ணின உன்னை இப்போது ஒரு நொடியிலே வதம் பண்ணிவிடலாமாயினும் அது செய்ய நினைத்திலேன்; இலங்கைக்குச் சென்று தேற்றிக்கொண்டு மீண்டும் வா, என்று சொல்லிப் போகவிட்டருளின மஹா குணத்திலே வித்தராய்ப் பேசுகிறார். *சுரிகுழல் கனிவாய்த் திருவினைப்பிரித்த கொடுமையில் கடுவிசை யரக்கனிறே. இவன்செய்த அபராதம் வகைதொகையிட்டுச் சொல்லப்போகாதிறே *தாத்ருசாகஸ மென்னுமித்தனை. [முக்தம்] நிலைகலங்கினவனை [விச்ரம்யதாமிதி முமோசித] இன்று போரக் களைத்த நீ வீடுசென்று சிறிது ச்ரமபரிஹாரம் பண்ணிக்கொண்டு வா என்று சொல்லி விடுத்தருளிற்றே. [ஆஜௌ] போர்க்களத்திலே வந்த பையலை இப்படி விடுவாருண்டோ? [கோயம் குண:] ஸௌசீல்

யப் ஸௌஹார்த்தமென்று சில குணங்களுக்குப் பேரிட்டிருக்கிறப் போலே இந்த குணந் தனக்கும் ஒரு பேரிட்டிருக்கவேணுமே; அந்த பேர்தானென்னென்கிறார்.

[கதரகோடிகத:] ஆச்ரயண ஸௌகர்யாபாதகங்களென்றும் ஆச்ரித கார்யாபாதகங்களென்றும் இருவகுப்பான கல்யாணகுணங்களிலே இந்த குணம் எந்த வகுப்பிலே சேர்ந்ததோ? [கியாந்வா] இந்த குணத்தினளவு அறிவாருண்டோ? அப்ரமேயமன்றோ இது. [கஸ்ய ஸ்துதே: பதம்] வெண்ணெய் களவுகண்டு உரலினோடிணைந்திருந்து ஏங்கின குணத்தைச் சொல்லப்புக்கு ஆறுமாஸம் மோஹித்தார்களென்றால் இந்த குணந்தன்னிலே வாய்திறக்கவுண்டோ வழி! [கஸ்ய பூமி:] இதைக் காண்பார்தானுண்டோ? ஒருவர்க்கும் நிலமன்றிறே. 27.

28 யல்லக்ஷ்மணஸ் த்வதநுஜோ ரிபுசக்தி முக்த; சத்ரோர் குருர் ஹநுமதஸ்து லகுர் பபூவ |
ஏதேந தே ஸூவிதிதோ பவதிந்த்ரசத்ரோ: மாயாஸ்த்ர பந்தந நிபந்தநஜோ விமோஹ: ||

(ஹே ராம!)	ஸ்ரீ ராமனே!	இதி யத்	என்பது யாதொன்றுண்டு.
ரிபு சக்தி முக்த:	சத்ருவான ராவணனுடைய சக்தியென்கிற ஆயுதத்தாலே மோஹித்தவனான	ஏதேந	இந்த விஷயத்தினால்
த்வதநுஜ: லக்ஷ்மண:	உன் தம்பியான லக்ஷ்மணன்	தே	உனக்கு
சத்ரோ: குரு:	சத்ருவுக்கு அசைக்கவும்முடியாதபடி கனத்தவனாகவும்	இந்த்ர சத்ரோ: மாயாஸ்த்ர பந்தந நிபந்தநஜ விமோஹ:	இந்த்ரஜித்து மாயாஸ்த்ரத்தால் கட்டிவைத்ததனாலுண்டான மயக்கமானது
ஹநுமதஸ்து லகு:	திருவடிக்கோவென்றால் பூமாலைபோல் எடுக்கலாம்படி லேசாகவும்	ஸூவிதித: அபவத்	(மநுஷ்ய பாவநார்த்தம் என்னுமிடம்) ஸ்பஷ்டமாயிற்று.
பபூவ	ஆனான்		

கீழ் 23-ஆம் ச்லோகத்திலே அருளிச்செய்ததற்கு ஸமாதாநம்போலே இருக்கிறதாய்த்து இந்த ச்லோகம். ராவணனுடைய சக்தியென்னு மாயுத விசேஷத்தாலே புடையுண்டு மூர்ச்சித்த லக்ஷ்மணனை ராவணன் ஸபரிகரனாய்க்கொண்டு எடுக்கப் புக்கவிடத்தில் எடுக்கமாட்டிற்றிலன்; திருவடி தனியனாயிருக்கச் செய்தேயும் கருமுகைமாலை போலே யெடுத்து எறிட்டுக்கொண்டு போனான்.

லக்ஷ்மணன் மூர்ச்சித்தான் என்பது உண்மையாகில் [அதாவது அஸாமர்த்ய ப்ரயுக்தமாகில்] சத்ருக்களுக்குப் பேர்க்கவுமொண்ணாதபடி கனக்கவும், பக்தனுக்கு எளிதில் எடுக்கும்படியாகவும் வேண்டாவிறே. நெஞ்சில் சாத்ரமுவடையார்க்கு அரியனாகவும் பரிவுடையார்க்கு எளியனாகவும் ஆனானென்னும்போது மாயாஸ்த்ர பந்தந ப்ரயுக்தமான மோஹமானது மநுஷ்யபாவனைக்கு அநுகுணமான அபிநயமாத்ரமென்னுமிடம் ஸூவ்யக்தமாய்த்திறே.

த்ருதீயபாதத்தில் "ஏதேந வை" "ஏதேந வாம்" "ஏதேந தே" என்று மூன்றுவகையான பாடங்கள் வழங்குகின்றன. "வாம்" என்ற பாடம் பொருத்தமானதென்று அருளிச்செய்வர். "வாம்-யுவயோ:" என்றபடி. மாயாஸ்த்ர பந்தந மூலக வ்யாமோஹம் ராமலக்ஷ்மணரிருவர்க்குமுண்டாய்த்திறே. எம்பெருமானொருவனைப்பற்றியே இங்கு ஸ்தோத்திரப்ரஸக்தியுள்ளதாகையாலே "தே", என்று ஏகவசந பாடமே ஏற்குமென்பாருமுளர். 28

29 ஹா ஹந்த ஹந்த பவதச் சரணாரவிந்த த்வந்த்வம் கதாநு பவிதா விஷயோ மமாக்ஷ்ணோ: |
யோஹம் நிர்களவிநிர்கள தந்தகாரை: வ்ருக்ஷைஸ் த்ருணைச் ச ஸூலபம் ஸமயம் வ்யதீத: ||

ய: அஹம்	யாவனொரு அடியேன்.	ஸமயம்	கால விசேஷத்தை
நிர்கள விநிர்களத் அந்தகாரை:	நன்றாக விடுபட்ட அஜ்ஞாநாந்தகாரத்தை யுடைய	வ்யதீத:	இழந்தேனோ,
வ்ருக்ஷை:	வ்ருக்ஷங்களாலும்	தஸ்ய மம	அப்படிப்பட்ட எனக்கு
த்ருணைச்ச	த்ருணங்களாலும்	பவத:	உன்னுடைய
ஸூலபம்	எளிதில் அடையக்கூடியதாயிருந்த	சரணாரவிந்த த்வந்த்வம்	திருவடித்தாமரையிணை
		அக்ஷ்ணோ: விஷய:	நேத்திர விஷயமாக

கதா நு பவிதா	இனி எப்போது ஆகப்போகிறது.	ஹா ஹந்த ஹந்த! கஷ்டம் கஷ்டம்!

அன்று சராசரங்களை வைகுந்தத் தேற்றின வ்ருத்தாந்தத்தை அநுஸந்தித்து ஐயோ! பாவியேன் அந்த நல்லடிக் காலத்தை இழந்தொழிந்தேனே யென்று வயிறுபிடிக்கிறார். "முனிவன் வேண்டத் திறல் விளங்கு மிலக்குமனைப் பிரிந்தான் தன்னை" என்கிறபடியே இளைய பெருமாளை விட்டுப்பிரிந்ததனால் தரிக்கமாட்டாமல் போரக்லேசித்த பெருமாள் ராஜ்யத்தை விட்டு, எழுந்தருளத் தொடங்கியபோது அயோத்தியா நகரவாஸி ஜந்துஜாதங்களடங்கலும் பெருமாளைச் சரணமடைந்து "தேவரீர் எங்குச்சென்றாலும் அடியோங்களையும் கூடவே அழைத்துக்கொண்டு செல்லவேணும்" என்று ப்ரார்த்திக்க, பெருமாள் அவர்களுடைய பக்திப்ரகர்ஷத்தைக்கண்டு உவந்து "ததாஸ்து.' என்றருளிச்செய்து அனைவரையும் தம்மைப் பின் தொடர்ந்து வரும்படி பணித்தருளி ப்ரயாணப்பட, அப்பொழுது சேதநாசேதநங்களோடு வாசியற ஸகல பதார்த்தங்களும் பெருமாள் பின்னே செல்ல, இங்ஙனே பலரும் புடைசூழ ஸ்ரீ பகவான் ஸரயுவில் இறங்கித் தன்னடிச் சோதிக்கெழுந்தருளும்போது ப்ரேம பரவசர்களாய் தம்மைப் பின்பற்றி ஸரயுவில் முழுகி உடம்பைத் துறந்த எல்லா வுயிர்கட்கும் ப்ரஹ்மலோகத்துக்கு மேற்பட்டதாய் பரமபதம்போலவே அபுநராவ்ருத்தி லக்ஷணமான ஸாந்தாநிக மென்னும் லோகத்தை அளித்தாரென்று உத்தர ஸ்ரீராமாயணத்திலுள்ள இதிஹாஸம் இங்கு அநுஸந்தேயம்.

[நிரர்க்கள விநிர்க்களத் அந்தகார:] ஆந்தர தமஸ்ஸான அஜ்ஞாநத்தை இங்கு அந்தகாரமென்கிறது. அஜ்ஞாந லவலேசம் கிடந்தாலும் பேறுபெற முடியாதாகையாலே பகவதநுக்ரஹத்தாலே விச்ருங்கலமாக வெளிக்கழியப் பெற்ற அஜ்ஞாநத்தையுடைய என்கை. ஜ்ஞாநப்ரஸக்தியே யில்லாத வ்ருக்ஷ த்ருணாதிகளுக்கு அஜ்ஞாந விநிர்கமம் சொல்ல ப்ரஸங்கமென்னென்னில், நாமரூப விசிஷ்டமான ஸகல வஸ்துக்களிலும் ஒரோ ஜீவாதிஷ்டாந முண்டென்று சாஸ்த்ரம் சொல்லுகையாலே ப்ரஸக்தியுண்டென்று கொள்ளலாம். பெரியாழ்வார் திருமொழியில் (4-4-4.) "உரகமெல்லணையான் கையில்.......பருகு நீரு முடுக்கும் கூறையும் பாவம் செய்தன தான் கொலோ" என்றவிடத்து மணவாளமாமுனிகள் வ்யாக்யாந ஸ்ரீ ஸூக்தியை ஸேவிப்பது.

[வ்ருக்ஷைஸ் த்ருணைச்ச] "புற்பா முதலாப் புல்லெறும்பாதி யொன்றின்றியே" என்ற அருளிச்செயலில் நோக்கு. [ஸுலபம் ஸமயம் வ்யதீத:] அந்த வ்ருக்ஷத்ருணாதிகளிலே நானுமொருவனாய்ப் பிறவாதொழிந்தேனே யென்கிறார். [ஹா ஹந்த ஹந்த] பூரிதாந காலத்திலே ஏமாந்தவனுக்கு பரீக்ஷ்ய தாந காலத்திலே என்ன ப்ரஸக்தி. பாவியேன் இழந்தொழிந்தேனே யென்று கதறுகிறார். 29

30 வம்சம் ரகோ ரநுஜிக்ருக்ஷு ரிஹாவதீர்ண: திவ்யைர் வவர்ஷித ததாத்ர பவத் குணௌகை: |
த்வத்ஸந்நிதி ப்ரபவசைத்ய ஜுஷோ யதாஹி வ்ருக்ஷாச் ச தார்ந்தி மலபந்த பவத் வியோகே : ||

(ஹே ராம !)	ஸ்ரீராமபிரானே !	த்வத் ஸந்நிதி ப்ரபவ சைத்ய ஜுஷ:	உன்னுடைய ஸந்நிதாநத்தாலுண்டான குளிர்ச்சியையடைந்த
ரகோ: வம்சம்	ரகு வம்சத்தை	வ்ருக்ஷாச்ச	மரங்களும்
அநுஜிக்ருக்ஷு:	அநுக்ரஹிக்க விரும்பி	பவத் வியோகே	உன்னைவிட்டுப் பிரிந்த காலத்திலே
இஹ அவதீர்ண: த்வம்	இந்நிலத்தில் அவதரித்த நீ	யதாஹி தார்ந்திம் அலபந்த	எப்படிப்பட்ட வாட்டமடைந்தனவோ (அப்படி)
அத்ர	இவ்விடத்தில்		
திவ்யை: பவத் குண ஓகை:	திவ்யமான உன் குண ப்ரவாஹங்களைக் கொண்டு		
ததா வவர்ஷித	அப்படி வர்ஷித்தாய் (எப்படியென்னில்)		

கோஸலஜநபதத்தில் வ்ருக்ஷாதிகளுக்குங்கூட மோக்ஷப்ரதாநம் பண்ணினபடி **யெவ்வளவோவென்ன** அருளிச்செய்கிறார்- ரகுவம்சத்தை அநுக்ரஹிக்கத் திருவுள்ளம்பற்றி **இந்நிலத்திலே அவதரித்த தேவரீர்** ஸ்வகீய திவ்ய குணங்களைக் கொண்டு வர்ஷித்தபடி

யெங்ஙனே யென்னில்; தேவரீருடைய ஸந்நிதியுண்டானபோது அநாவ்ருஷ்டியாய்க் கிடந்தாலும் வ்ருக்ஷ த்ருண லதௌஷதிகளெல்லாம் குளிர்ந்து தழைத்திருக்கும்படியாகவும், தேவரீருடைய வியோகமுண்டானபோது எத்தனை வ்ருஷ்டியுண்டாகிலும் வாடிக்கிடக்கும்படியாகவுமன்றோ செய்தது. பெருமாள் காட்டுக்கெழுந்தருளின பின்பு சக்ரவர்த்தியை நோக்கி ஸுமந்திரன் சொல்லுகிறான், 'பெருமாளுடைய ஸந்நிதாநமே தாரகமாக செழித்துக் கிடந்தவை வியோகத்திலே உலர்ந்து வாடிப்போயின' வென்கிறான். "நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக்குய்த்தனன்" என்றாரிறே ஆழ்வாரும். நற்பாலுக்கு உய்க்கையாவது ஸ்வஸம்ச்லேஷைக ஸுகதுக்காம்படி பண்ணுகை. இப்படியாகில் ராவணவதாநந்தரம் பரத்வாஜாச்ரமத்துக் கெழுந்தருளின பெருமாளை நோக்கி அபேக்ஷிதமான வரத்தை வேண்டிக்கொள் என்று ருஷி சொல்ல, வ்ருக்ஷங்களெல்லாம் தளிரும் முறியுமாக வேணுமென்று பரத்வாஜரிடத்தில் வரங்கேட்டதாகவும், அவரும் 'ததாஸ்து' என்றதாகவும் பின்பு அப்படியே ஆனதாகவும் சொல்லுகிறவிது கூடுமோ? ஸ்வஸந்நிதாநத்தாலே இயற்கையாகவே அப்படி ஆகவேண்டியதை வரங்கொண்டு பெறுவானேன்? என்னில்; அவாப்த ஸமஸ்தகாமனை நோக்கி வரம் வேண்டிக்கொள் என்று விதித்தால் மஹர்ஷியின் முகம் கோணாமைக்கு ஏதேனுமொன்றை வேண்டிக்கொள்ள வேணுமிறே. "மத்த: கிமபி காங்க்ஷ த்வம்" என்ற ருத்ரனை நோக்கி 'ஊழிபோம் வழியே நானும் போம்படி வரமளித்துப்போ' என்றுரைத்த திருமழிசைப்பிரான்போலே சொல்லவல்ல நாவீறுடையனல்லனே இராமபிரான்; ஆகையாலே தோற்றினதொன்றைக் கேட்டுவைத்தானாய்த்து.

ஆக இந்த ச்லோகத்தாலே என் சொல்லிற்றென்னில்; பரமபக்தியை த்ருணதிகளுக்கு உண்டாக்கிக் கொடுத்தே தேவரீர் முக்தியளித்ததென்றதாய்த்து. 30

31 யே தர்ம மாசரிதுமப்யஸிதும் ச யோகம் போத்துஞ் ச கிஞ்சந ந ஜாத்வதிகாரபாஜ: |
தேபி த்வதாசரிதபூதலபந்த கந்தாத் பந்தாதிகா: பாகதிம் கமிதாஸ் த்ருணத்யா: ||

யே த்ருணத்யா:	யாவை சில த்ருணதிகள்	ந அதிகாரபாஜ:	அநதிகாரிகளாயிருந்தனவோ
தர்மம் ஆசரிதும்	கர்மயோகத்தை அநுஷ்டிப்பதற்கும்	தே அபி	அந்த த்ருணதிகளும்
யோகம் அப்யஸிதும் ச	யோகாப்யாஸம் பண்ணுவதற்கும்	த்வதாசரித பூதல பந்த கந்தாத்	நீ ஸஞ்சரித்த ப்ரதேசங்களின் ஸம்பந்த வாஸனையாலே
கிஞ்சந போத்துஞ்ச	ஏதேனு மொன்றை அறிவதற்கும்	பந்தாதிகாஸ் ஸந்த:	கர்ம பந்தத்தைக் கடந்து
ஜாது	ஒருகாலும்	பாகதிம் கமிதா:	உத்க்ருஷ்ட கதியை அடைவிக்கப்பட்டன.

பகவத் பாகவதாபிமததேச வாஸமும் ஸாதநவிசேஷ மாகையாலே அதுதானே த்ருணதிகளுக்கு முக்திஹேதுவாய்த்தென்கிறார். கர்மஜ்ஞாநாதி யோகங்களிலே ஒன்றையும் அநுஷ்டிக்க அதிகாரமற்ற த்ருணதிகளும் தேவரீர் நடமாடின நிலங்களிலே ஜநித்திருக்கையாகிற ஸம்பத்தையுடையனவா யிருந்த காரணத்தினால் பாகதியை அடைவிக்கப்பட்டன. 31

32 தாத்ருக்குணோ நநு பபூவித ராகவத்வே யஸ் தாவகம் சரித மந்வஹ மந்வபுங்க்த |
ஸோத்ரைவ ஹந்த ஹநுமாந் பரமாம் விமுக்திம் புத்த்யா வதூய சரிதம் தவ ஸேவதேஸௌ. ||

ஹே தேவ!	எம்பெருமானே!	ஸ: அஸௌ	அந்த ஹநுமான்
ராகவத்வே	ஸ்ரீராமாவதாரத்திலே	அத்ரைவ பரமாம் விமுக்திம்	இவ்விடத்திலிருந்துகொண்டே ச்லாக்யமான மோக்ஷத்தையும்
தாத்ருக் குண: நநு பபூவித	அப்படிப்பட்ட கல்யாண குணங்களையுடையையாயிருந்தாயிறே. (அதை விவரிக்கிறார் மேல்)	புத்த்யா அவதூய	ஸ்வபுத்தியால் திரஸ்கரித்து
ய: ஹநுமாந்	யர்வனொரு திருவடி	தவ சரிதம்	உன் சரிதத்தையே
தாவகம் சரிதம்	உனது சரித்திரத்தை	ஸேவதே	அநுபவித்துக்கொண்டிராநின்றான்.
அந்வஹம் அந்வபுங்க்த	நித்தியமநுபவித்தானோ		

“பாவோ நாந்யத்ர கச்சதி” என்று திருவடி ஈடுபட்டிருந்தபடியை அருளிச்செய்கிறார். [“பஹவோ ந்ருப! கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே] “உன் மகனுக்கு குணங்கள் பல உள” என்று பௌரஜநங்கள் சொன்னது கிடக்கட்டும். திருவடியை யீடுபடுத்தின குணங்களின் பெருமையை என் சொல்வோம். குணத்தாலே அநுகூலரையும் சரத்தாலே ப்ரதிகூலரையும் ஜயிக்கும் வீரனை உன்னளவிலே அதிவேலமாக வுண்டான ஸ்நேஹ பக்திகளாலே த்வத்குணாநுபவத்தை விட்டுப் பரத்வத்தில் நெஞ்சு செல்லாமை சொல்லுகிற விடத்தில் பரத்வத்தின் பேரும் சொல்லுகை அஸஹ்யமாய் “அந்யத்ர” என்னும்படி உன்னை யல்லதறியாதிருந்தானிறே. ‘ராகவ த்வம்’ என்றும் பாடமுண்டு. 32

33 யத் த்வம் க்ருதாகஸமபி ப்ராணதி ப்ரஸக்தம் தம் வாயஸம் பரமயா தயயா க்ஷமிஷ்டா: |
தேநைவ மாத்ருசஜநஸ்ய மஹாகஸோபி யுக்தம் ஸமாச்வஸநமித்யுபதாரயாமி.

க்ருத ஆகஸமபி	ஆர்த்ராபராதியாயிருக்கச் செய்தேயும்	தேநைவ	அதுகொண்டே
ப்ரணதி ப்ரஸக்தம்	ப்ரணமத்திலே உத்யுக்தனை	மஹாகஸ:	தீரக்கழிய குற்றம் செய்திருக்கிற
தம் வாயஸம்	அந்த காகாஸுரனை	மாத்ருச ஜநஸ்யாபி	என்னைப் போன்றவர்களுக்கும்
பரமயா தயயா	பேரருளாலே		
த்வம் யத் அக்ஷமிஷ்டா:	நீ க்ஷமித்தாய் என்பது யாதொன்றுண்டு	ஸமாச்வஸநம் யுக்தமிதி உபதாரயாமி	அச்சங் கெட்டுத் தேறியிருக்கை கூடுமென்று விச்வஸித்திருக்கிறேன்.

சித்ரகூட பரிஸரத்திலே பிராட்டியும் தாமும் கூட ஜலக்ரீடை பண்ணின பின்பு பெருமாள் மடியிலே முந்துறப் பிராட்டி கண் வளர்ந்து அநந்தரம் பிராட்டி மடியிலே பெருமாள் கண் வளர்ந்தருளா நிற்கச் செய்தே இந்த்ர புத்திரனான ஜயந்தன் ஆஸுரப்ரக்ருதியாகையாலே தேவரூபத்தை மறைத்து காகரூபத்தைப் பரிக்ரஹித்துக் கொண்டு ஜநகியென்றறியாதே பிராட்டியுடைய வடிவழகைக்கண்டு விபரீத புத்தியாலேவந்து திருமேனியிலே புண்படுத்த அத்தாலே பெருமாள் சீறியருளி காகத்தைக் குறித்து ப்ரஹ்மாஸ்திரத்தை ப்ரயோகிக்க, அது புக்க விடமெங்கும் தொடருகையாலே ஓரிடத்திலும் போக்கற்று தன்னுடைய ப்ராண ரக்ஷணார்த்தமாக வந்து, அவரையே சரணம் புக, அத்தாலே ப்ரம்மாஸ்திரத்திற்கு ஒரு கண்ணழிவைக் கற்பித்து பிராணனோடே போகவிட்ட தயாளுத்வத்தைப் பேசுகிறார். ஆர்த்ராபராதியான அந்த காகாஸுரனையும் கூட க்ஷமித்தருளின படியாலே அஸ்மதாதிகளுடைய அபராதங்களையும் க்ஷமித்தருளக் குறைவில்லை யென்று ஆச்வஸித்திருக்க விரகு கண்டோமென்கிறார்.

[ப்ரணதி ப்ரஸக்தம் தம் வாயஸம்] இவனைப் பரிக்ரஹிக்கில் நமக்கும் அநர்த்தமாமென்று அனைவரும் கைவிடப் புகலற்றுச் செயல் மாட்சியாலே தரையிலே வந்து விழுந்தானத்தனை ரிஷி, ‘சரணம் கத:’ என்றதும் ராமாபிப்ராயத்தாலே.

[அக்ஷமிஷ்டா:] க்ருபாகார்யமே பலித்துவிட்டது பிராட்டிஸந்நிதியாலேயிறே. 33

34 ஸா பூதநா சகடமர்ஜுநயோச் ச யுக்மம் பால்யோசிதாந்யபர சேஷ்டித விஷ்புலிங்கே |
யஸ்யாலபந்த சலபத்வ மஹோ நிகூட: ஸ த்வம் விராஜே வவ்ருதிஷே கில கம்ஸபீத்யா ||

யஸ்ய தவ	யாவனொரு உன்னுடைய	சகடம்	சகடாஸுரனும்
பால்யோசித அந்ய பர சேஷ்டித விஷ்புலிங்கே	பால்யோசிதமாயும் அந்யார்த்தமாயு மிருக்கிற சேஷ்டைகளாகிற நெருப்புப் பொறியிலே	அர்ஜுநயோ: யுக்மஞ் ச	யமளார்ஜுநமும்
		சலபத்வம் அலபந்த	விட்டில் பூச்சிபோல் ஒழிந்தனவோ
ஸா பூதநா	அந்த பூதனையும்	ஸ: த்வம்	அப்படிப்பட்ட விக்ரமசாலியான நீ

கம்ஸ பீத்யா	கம்ஸ பயத்தாலே	வவ்ருதிஷே கில	வளர்ந்தாயிறே;
நிகூடஸ் ஸந்	மறைந்து கொண்டு	அஹோ!	ஆச்சர்யம்!
வ்ரஜே	திருவாய்ப்பாடியிலே		

“ப்ருச்சாமி கிஞ்சந” என்று தொடங்கி இவ்வளவும் ஸ்ரீராமாவதார திவ்ய சரிதங்களை அநுபவித்தாராய் நின்றார். இனிமேல் இருபத்தைந்து ச்லோகங்களாலே க்ருஷ்ணாவதார சரிதங்களையும் அநுபவிக்க விரும்பி அவன் தொட்டில்பருவத்திலேயே செய்த சில சேஷ்டிதங்களை நினைந்து நைந்து உள் கரைந்து உருகுகிறாரிதில். தன்னைக் கொல்லப் பிறந்த கண்ணபிரான் திருவாய்ப் பாடியிலே ஒளித்து வளர்வதை அறிந்த கம்ஸன் அந்த ஸ்ரீ க்ருஷ்ண சிசுவை நாடியுணர்ந்து கொல்லும் பொருட்டுப் பல அஸுரர்களை ஏவ, அவர்களில் ஒருத்தியான பூதனையென்னும் ராக்ஷஸி நல்ல பெண்ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்கு வந்து அங்குக் கண்வளரா நின்ற க்ருஷ்ண சிசுவை எடுத்து தன் விஷம் தடவின முலையைக் கொடுத்துக் கொல்ல முயல, பகவானான குழந்தை அந்த ராக்ஷஸியின் ஸ்தநங்களைக் கைகளால் இறுகப் பிடித்துப் பாலுண்ணுகிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி முடித்திட்டான். இப்படியே, காவலாக வைத்திருந்த சகடத்தின் மேலே ஒரு அஸுரன் வந்து ஆவேசித்து மேலே பாய்ந்து நலியப் புக, முலை வரவு தாழ்த்துச் சீறி நிமிர்த்த திருவடியாலே உதைத்தருள அந்த சகடம் கீழே விழுந்து அஸுரனுட்பட அழிந்தது. க்ருஷ்ணனுடைய தீம்புகளைப் பொறுக்கமாட்டாத யசோதை க்ருஷ்ணனை வயிற்றிலே கயிற்றினால் கட்டி ஒருரலிலே பிணித்துவிட, கண்ணன் அவ்வுரலை இழுத்துக் கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருத மரத்தின் நடுவே எழுந்தருளிய பொழுது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டதனாலே அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்தன. நளகூபரன் மணிக்ரீவன் என்னும் குபேர புத்திரர்கள் நாரத சாபத்தாலே யமளார்ஜுநங்களாய்க் கிடந்தார்களாகிலும், கம்ஸப்ரேரிதரான அஸுரர்களும் அங்கே ஆவேசித்திருந்தனரென்று ஆழ்வார்கள் அநுஸந்திப்பர்கள். “பொய்ம் மாயமருதான அசுரரைப் போன்றுவித்தின்று நீ வந்தாய்” என்றாரிறே பெரியாழ்வார்.

[பால்யோசித-இத்யாதி] கீழ்ச்சொன்ன பூதநா சகட யமளார்ஜுநங்களை முடிப்பதற்கு தாதர்த்யேந ஒரு கார்யம் செய்தமை யில்லையிறே. பாலுண்கிற பாவனையிலே சகடத்தையும் தவழ்ந்து செல்லுகிற பாவனையிலே இரட்டை மருத மரங்களையும் முடித்தானத்தனையிறே. இந்த அந்யபர சேஷ்டிதங்களை ஸ்புலிங்க மென்றது—மேலே ‘சலபத்வ’ மென்றதுக்குச்சேர. விளக்கிலே விட்டில் பட்டபாடு பட்டன காணென்கிறார்.

[ஸ த்வம் கம்ஸபீத்யா இத்யாதி] பூதநாதி நிரஸநம்போலே கம்ஸ நிரஸநத்தையும் சைசவத்தில் தானே அவலீலையாகச் செய்யவல்ல நீ அவனுக்கு அஞ்சி யொளித்து வளர்ந்தாய் என்பது ஆச்சர்யமா யிருந்ததீ! 34

35 பச்யத்ஸு ஸூரிஷு ஸதா பரமம் பதம் தே தேவ்யா ச்ரியா ஸஹ வஸந் பரயா விபூத்யா |
யோகேந யோகநிரதை: பரிம்ருக்யமாண: கிம் த்வம் வ்ரஜேஷு நவநீத மஹோ வ்யமுஷ்ண:

ஹே க்ருஷ்ண!	கண்ணபிரானே!	யோகேந	த்யாந மார்க்கத்தாலே
தே பரமம் பதம்	உன்னுடைய பரமபதத்தை	பரிம்ருக்யமாண:	தேடப்படாநிற்பவனுமான
ஸூரிஷு	நித்யஸூரிகள்	த்வம்	நீ
ஸதா பச்யத்ஸு	ஸதா தர்சநம் பண்ணுகிற	வ்ரஜேஷு	ஆயர்மனைகளில்
பரயா விபூத்யா உபலக்ஷிதஸ் ஸந்	சிறந்த செல்வத்தோடு கூடினவனும்	நவநீதம்	வெண்ணெயை
ச்ரியா தேவ்யா ஸஹ வஸந்	ச்ரீதேவியோடு கூட வாழ்பவனும்	கிம் வ்யமுஷ்ண:	ஏன் களவு கண்டாய்?
யோக நிரதை:	யோகாப்யாஸ நிஷ்டர்களாலே	அஹோ!	ஆச்சர்யம்!

ச்ரிய: பதியாய் நித்யஸூரி ஸேவ்யனாய் யோகித்யேயனா யிருக்கிற வுனக்கு நவநீத சௌர்யம் என்னோ வென்கிறார். "பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற வெம்பெருமான்" என்கிறபடியே உபயவிபூதி நிர்வாஹ ஸம்பத் ஸம்ருத்தனாய் நித்யஸூரிகள் கண் வட்டத்திலே *ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப விருந்து அரசு புரிகின்றவனான நீ யோகிகளுக்கும் எட்டாதே அவ்வேஷ்டவ்யனா யிருந்துகொண்டு ஆயர் மனைகளிலே புகுந்து வெண்ணெய் களவு கண்டா யென்பது ஆச்சரியமா யிருந்ததீ! என்கிறார். அந்த பரத்வமெங்கே!, இந்த ஸௌலப்ய மெங்கே!. ஸூரிஸேவ்யனாயும் யோகிபிரந்விஷ்யமாணனாயுமிருந்து வைத்து வ்ரஜ ஜந ஸாக்ஷாத் கார்யனானதும், உபயவிபூதி நாதனாய், ச்ரிய: பதியா யிருந்து வைத்து நவநீத சௌர்ய நிரதனானதும் ஆச்சர்யமிறே. "எங்கானு மீதொப்பதோர் மாயமுண்டே"—என்கிற திருமொழியை இங்கே சேர அநுஸந்திப்பது. 35

36 யம் துர்க்ராஹம் ஸுமநஸ . . மநஸாபி நித்யம் பந்தச்சிதம் பரம மீச முதாஹரந்தி |
தாம்நா நிபத்த இதி சுச்ரும தம் பவந்தம் நாலம் பபூவித பத ! சிலதநாய தஸ்ய.

யம் பவந்தம்	யாவனொரு உன்னை	உதாஹரந்தி	(வைதிகர்கள்) சொல்லு கிறார்களோ,
ஸுமநஸ: மநஸாபி	பரிசுத்தாந்த: கரணனானவனுடைய மநஸ்ஸாலும்	தம் பவந்தம்	அப்படிப்பட்ட உன்னை
நித்யம் துர்க்ராஹம்	ஒருகாலும் க்ரஹிக்கக்கூடாதவனாகவும்	தாம்நா நிபத்த: இதி சுச்ரும	தாம்பினால் கட்டப்பட்டவ னென்று கேள்விப்பட் டோம்
பந்தச்சிதம்	(ஸாம்ஸாரிக கர்ம) பந்தங்களை அறுக்க வல்லவனாகவும்	தஸ்ய	அந்த பந்தத்தை
		சலதநாய	அவிழ்த்துக்கொள்ள
பரமம் ஈசம்	பரமேச்வரனாகவும்	அலம் ந பபூவித பத !	அஸமர்த்தனானாய், ஆச்சர்யம் !

தாமபந்தந வ்ருத்தாந்தத்தை யநுபவிக்கிறார். எப்படிப்பட்ட மநஸ்ஸுக்கும் எட்டாதவனென்று ப்ரமாண சதப்ரதிபந்நனான நீ ஓர் அபலை கையிலே அகப்பட்டு நின்றதும், எல்லாருடைய கர்ம பந்தங்களையும் அறுக்கவல்ல நீ பத்தனானா யென்பதும், ஸர்வ சக்தனான நீ அந்த தாம பந்தத்தை அறுத்தெறிய மாட்டாமல் அசக்தரைப் போலே அழுது ஏங்கி நின்றா யென்பதும் ஆச்சர்யதமங்களென்றாராய்த்து. 36

37 ஜசம் ஹி சைசவமபி வ்யதிவேல கேலம் யத் பூதநா சகட மர்ஜுநயோச் ச யுக்மம் |
பால்யோசிதாந்யபரஸாசி விசேஷ்டிதேந ஹந்தாலபந்த சலபாயித மோஜஸஸ் தே.

யத்	யாவனொரு காரணத்தாலே	ஓஜஸ:	ப்ரதாபாக்னிக்கு
பூதநா	பூதனையும்	சலபாயிதம்	விட்டில் பூச்சியாயிருக்கையை
சகடம்	சகடாஸுரனும்	அலபந்த	அடைந்தனவோ (ஆகையினாலே
அர்ஜுநயோ: யுக்மஞ்ச	இரட்டை மருத மரங்களும் (உன்னுடைய)	ஜசம் சைசவமபி	ஸர்வேச்வரனுடைய குழந்தைப் பருவமும்
பால்யோசித அந்ய பர ஸாசி விசேஷ்டிதேந	பால்யோசிதமாயும், அந்யார்த்தமாயுமிருக்கிற யாத்ருச்சிக சேஷ்டையினாலே	வ்யதிவேல கேலம் ஹி	அளவற்ற திருவிளையாடல்களையுடையதிறே.
தே	உன்னுடைய		

பூதநா சகட யமளார்ஜுநங்கள் பட்டொழிந்தது யௌவந பருவத்தி லன்றிக்கே தொட்டில் பருவமான இளம்பிராயத்திலே யாகையாலே பரம புருஷனுடைய சைசவமும் பரம போக்யமென்று உகக்கிறார். [34-ம் ச்லோகத்தின் வ்யாக்யாநம் காண்க.] ஸாசி விசேஷ்டிதமாவது—யாத்ருச்சிக சேஷ்டை. 37

38 ஸத்யேவ கவ்யநிவஹே நிஜதாம்நி பூம்நா பர்யந்த ஸத்மஸு கிமர்த்த மதூசுரஸ் த்வம்
முஷ்ணம்ச் ச கிம் வ்யஜகடோ கடசேஷ மக்ரே கோபீஜநஸ்ய பரிஹாஸபதம் கிமாஸீ:

நிஜதாம்நி	ஸ்வ க்ருஹத்திலே	முஷ்ணந் ச	திருடினுபாகிலு மாகிறாய்
கவ்ய நிவஹே	நவநீதாதி த்ரவ்ய ராசியானது	கடசேஷம்	புக்தசேஷமான பாத்திரத்தை
பூம்நா	அதிகமாக	அக்ரே	கண் முன்னே
ஸத்யேவ	இருக்கச் செய்தேயும்	கிம் வ்யஜகட:	ஏன் உடைத்தாய் ?
பர்யந்த ஸத்மஸு	அண்டை வீடுகளிலே	கோபீஜநஸ்ய	ஆய்ச்சிகளுக்கு
த்வம்	நீ	பரிஹாஸபதம்	ஏச்சுக்கிடமாக
கிமர்த்தம் அதூசுர:	ஏன் திருடினாய் ?	கிம் ஆஸீ:	ஏன் ஆனாய் ?

* அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும் எம்பெருமான் நந்தகோபால னுடைய திருமாளிகையிலே பிறந்துவைத்து அங்கே கவ்யங்களுக்குக் குறைவுண்டாய் பிறர் மனையிலே புக்குக் களவாட வேணுமோ ?" "வைத்த நெய்யும் காய்ந்த பாலும் வடிதயிரும் நறு வெண்ணெயும். இத்தனையும் பெற்றறியே னெம்பிரான் ! நீ பிறந்த பின்னை" என்று யசோதை சொல்லும்படி க்ருஹத்திலேயுள்ள ஸ்வகவ்யமடங்கலும் புஜித்தும், அதில் பர்யாப்தி பிறவாதே அசலகங்களிலும் புகுந்து களவுசெய்தது என்னே ? "வெண்ணெய் விழுங்கி வெறுங் கலத்தை வெற்பிடையிட்டு" என்றும், "மோரார் குடமுருட்டி" என்றும் சொல்லுகிறபடியே வெண்ணெய்க் கலத்தை உடைத்தும் மோர்க்குடத்தை யுருட்டி யும் போந்தது என்னே ? "பானையில் பாலைப்பருகிப் பற்றாதாரெல்லாம் சிரிப்ப" என்றும், "வேயினன்ன தோள் மடவார் வெண்ணெயுண்டா னிவனென்று ஏசநின்ற வெம்பெரு மான்" என்றுஞ் சொல்லுகிறபடியே ஆய்ச்சியர் சிரிக்க நின்றது என்னே ?

இப்படி செய்ததுக்கெல்லாம் கேவலலீலையேயிறே ப்ரயோஜநமென்றதாய்த்து. ஆச்ரிதருடைய ஹஸ்தஸ்பர்ச முள்ளதொரு த்ரவ்யமே தனக்கு போக்யமென்னுமிடத்தை வெளியிடுகைக்காக வாய்த்துப் பிறருடைய கவ்யங்களை வாரியுண்டது. "வெறுங் கலத்தை வெற்பிடையிட்டு அதனோசை கேட்கும்" என்கிறபடியே கலம் உடைகிற போதை ஓசை கேட்டுக் களிக்கைக்காக வாய்த்த சூன்யபாத்திரத்தை உடைத்திட்டது. 38

39 யந் நாம நாத நவநீத மதூசுரஸ் த்வம் தச் சாதநாய யதி தே மதி ராவிராஸீத் |
கிம் மூக்த்த திக்த்த மமுநா கரபல்லவம் தே காத்ரே ப்ரம்ருஜ்ய நிரகா: கில நிர்விசங்க : ||

ஹே நாத	கண்ணபிரானே !	அமுநா	இந்த திருடின வெண்ணெயாலே
த்வம்	நீ		
யத் நவநீதம்	யாதொரு வெண்ணெயை	திக்த்தம்	பூசப்பட்டிருந்த
அதூசுர :	களவுகண்டாயோ	கர பல்லவம்	தளிர்போன்ற கையை
தச்சாதநாய	அதை மறைப்பதற்கு	தே காத்ரே	உன்னுடைய உடம்பில்
தே	உனக்கு	ப்ரம்ருஜ்ய	தடவிக்கொண்டு
மதி: ஆவிராஸீத் யதி	எண்ணமுண்டானால்	நிர் விசங்கஸ் ஸந்	நிர்பயனாய்க் கொண்டு
		நிரகா: கில	வெளிப்புறப்பட்டாயன்றோ;
ஹே மூக்த்த	மறைக்கும் வழிதெரியாத முக்த்தனே !	கிம்	இது என்னே ?

ஒருநாள் ஓரிடத்திலே கண்ணன் வெண்ணெய் களவு செய்யாநிற்கச் செய்தே உடையவர்கள் வருகிற சுவடறிந்து கையது வாயதான வெண்ணெயை மறைத்திடவேணு மென்றெண்ணி "வாயிலேயாவது கையிலேயாவது வெண்ணெ யிருக்கக்கண்டாலன்றோ நம்முடைய களவு வெளிப்படலாவது ; கையிலும் வாயிலும் இல்லாதபடி ஆக்கிவிடுவோம்" என்று வெண்ணெயை யெல்லாம் உடம்பிலே பூசிக்கொண்டு "இனி நாம் யாருக்கும் அஞ்சவேண்டியதில்லை" என்று நிர்பயனாய் வெளிப்புறப்பட்டா னென்கிற ஒரு முக்த்த சேஷ்டிதத்தை அநுஸந்தித்து, என் நாயனே ! இப்படியும் ஒரு மௌக்த்ய முண்டோ ?

நவநீத சௌர்யத்தை மறைக்க நினைத்து அது நன்று வெளிப்படையாம்படிக்கீடான கார்யம் செய்தாயே!; இது வஸ்துத: மௌக்த்யத்தாலோ? அன்றி மௌக்த்ய பாவனையாலோ? சொல்லாய் என்கிறார் போலும். 39

40 " த்வா மந்ய கோபக்ருஹ கவ்யமுஷம் யசோதா குர்வீ த்வதீய மவமாந மம்ருஷ்யமாணா |
ப்ரேம்ணா து தாம பரிணாமஜுஷா பபந்த தாத்ருங் ந தே சரித மார்யஜநாஸ் ஸஹந்தே.

குர்வீ	பெருமதிப்பை யுடையவளான	தாம பரிணாமஜுஷா	தாம்பாய் பரிணமித்த
யசோதா	யசோதையானவள்	ப்ரேம்ணா	ப்ரேமத்தாலே
த்வதீயம் அவமாநம் அம்ருஷ்யமாணா	உன்னுடைய பரிபவத்தைப் பொறாதவளாய்	பபந்த	கட்டினாள்;
அந்ய கோபக்ருஹ கவ்யமுஷம் த்வாம்	வேறு இடையர்களின் மனைகளிலுள்ள கவ்யங்களைத் திருடின உன்னை	தே தாத்ருக் சரிதம்	அப்படி நீ கட்டுண்டாயென்கிற செய்தியை
அத	பிறகு	ஆர்ய ஜநா:	ஆழ்வார்போல்வார்
		ந ஸஹந்தே	ஸஹிக்கமாட்டுகின்றிலர்.

"மத்துறு கடைவெண்ணெய் களவினிலுரவிடை யாப்புண்டு எத்திற முரலினோடிணைத்திருந்தேங்கிய வெளிவே! என்று கண்ணபிரான் நவநீத சௌர்யத்துக்காக *கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்டு கிடந்தபடியை அநுஸந்தித்து ஆழ்வார் ஆறு மாஸம் மோஹித்திருந்ததைப் பேசுகிறார். "மேலையகத்து நங்காய் வந்துகாண்மின்கள்! வெண்ணெயே யன்று இருந்த பாலும் பதின்குடம் கண்டிலேன்" என்று அந்ய கோபக்ருஹிணிகள் வந்து முறைப்படுவர்களிறே. [குர்வீ] "மானமுடைத்துங்களாயர் குலம்" என்னும்படியான அபிமானமுடையவளென்கை [த்வதீய மவமாந மம்ருஷ்யமாணா] கேளாராயர்குலத்தவர் இப்பழிகெட்டேன் வாழ்வில்லை" என்னுமவளிறே. [அத தாம பரிணாமஜுஷா ப்ரேம்ணா பபந்த] யசோதை தான் ப்ரேமத்தாலே உன்னைக் கட்டிவைத்தாளத்தனை போக்கி மநஸ்ஸில் மாத்ஸர்யமில்லையிறே. "அன்பற்று நோக்கி யடித்தும் பிடித்தும்" என்றிறே. நீதானும் சொல்லுவது அவளுடைய ப்ரேமமே தாம்பாக வடிவுகொண்டதித்தனை. தாமபந்தம் ப்ரேமகார்யமென்றபடி.

[தே தாத்ருக் சரிதம் ஆர்யஜநா ந ஸஹந்தே] இங்ஙனே நீ கட்டுண்டிருந்தாயென்கிற சரிதத்தை ப்ரஸ்தாவித்த மாத்திரத்திலும் ஸஹித்திருக்கமாட்டாதே *எத்திறமென்று ஆறு மாஸம் மோஹிப்பர்களாய்த்து ஆழ்வார்போல்வார். 40

41 மாத்ரா யதி த்வமஸி தாமநி ஸந்நிபத்த: தச் ச்ராவிணாமுதித சாக்ஷுஷ நிர்ஜராணாம் |
பத்நாஸி ஹந்த ஹ்ருதயம் பகவந் குதஸ் தத் ஸர்வோ ஹி வச்யவிஷயே விவ்ருணோதி வீர்யம் ||

ஹே பகவந்	பெருமானே!	ஹ்ருதயம்	மநஸ்ஸை
த்வம்	நீ	பத்நாஸி ஹந்த	கட்டுகிறாயே!
மாத்ரா	தாயான யசோதையாலே	தத் குத:	அது ஏனோ!
தாமநி	தாம்பிலே		(அதவா இது யுக்தமே.)
ஸம்நிபத்தோஸி யதி	கட்டப்பட்டாயாகில்	ஸர்வ:	ஸர்வஜநமும்
தத் ச்ராவிணாம்	அந்த வ்ருத்தாந்தத்தைக் கேள்விப்பட்டவர்களாயும்	வச்ய விஷயேஹி	தன் கையிலடங்கினவர்களிடத்திலன்றோ
உதித சாக்ஷுஷ நிர்ஜராணாம்	(அதஏவ) கண்ணீர் பெருகப் பெற்றவர்களாயுமுள்ள ஆர்ய ஜநங்களுடைய	வீர்யம் விவ்ருணோதி	தன் வீர்யத்தைக் காட்டுவது.

பிரானே ! * க்ருதப்ரதிக்ருதம் | ஸர்வேபி | தத் | குர்வதே *
என்றொரு ந்யாயமுண்டு ; நன்மைசெய்தார்க்கு நன்மைசெய்கையும் தீமைசெய்தார்க்குத் தீமைசெய்கையும் க்ருதப்ரதிக்ருதமாம். உன்னைத் தாம்பாலே கட்டினவள் உன்தாய் ; அதற்கு நீ ப்ரதிக்ரியை செய்யவேண்டில் அவளை நீ தாம்பாலே கட்டப் பார்க்கவேணும் ; அது செய்ய மாட்டிற்றிலை ; பின்னை என் செய்யாநின்றாயென்னில் ; அந்த அபதாநத்தைக் கேட்டு ஈடுபட்டுக் கண்ணும் கண்ணீருமாய் நிற்கிற ப்ரேம பரவசர்களினுடைய ஹ்ருதயத்தை பந்திக்கிறாயத்தனை. ஆர் பக்கலிலே செய்யவேண்டியதை ஆர்பக்கலிலே செய்கிறாய் !

[உதித சாக்ஷுஷ நிர்ஜராணாம் தச்ச்ராவிணாம்] இதுவுமொரு ஆச்சரிய மென்கிறார் போலும். தாமபத்தனன்றோ கண்ணீர் விட வடுப்பது. உன்னுடைய தாமபந்த வ்ருத்தாந்தத்தைக் கேட்டவர்களிறே கண்ணீர் சொரியாநின்றார்கள். " ஆஹ்லாத சீத நேத்ராம்பு: புலகீ க்ருத காத்ரவாந் | ஸதா பரகுணாவிஷ்டோ த்ரஷ்டவ்யஸ் ஸர்வ தேஹிபி:" என்றிருப்பவர்களைச் சொல்லுகிறது [குதஸ்தத்] ப்ரதிக்ரியை பண்ணவேண்டில் உன்னைக் கட்டின ஜநநியையன்றோ கட்டவேண்டும் ; அதுசெய்யாதே நிரபராதராய் ஆர்த்தராயிருப்பாரைக் கட்டிவைப்பது என்னோ ? பக்தர்களுடைய ஹ்ருதயத்தை பந்தித்ததாகச் சொல்லுகிறது என் கொண்டென்னில் ; அந்த ஸௌசீல்யத்திலேயே ஈடுபட்டு " எத்திறம் " என்றும் " பிறந்தவாறும் வளர்ந்தவாறும் " என்றும் " எழில்கொள் தாம்பு கொண்டடிப்பதற்கு எள்கு நிலையும் " என்றும் நெஞ்சு பிணிப்புண்டு பேசும்படியைப் பற்றச் சொல்லுகிறது.

" குதஸ் தத் " என்றவர் தாமே ஸமாஹிதராகிறார் [ஸர்வோ ஹி வச்ய விஷயே விவ்ருணோதி வீர்யம்] லோகத்திலே இது வழக்கமேயிறே ; தனக்கடங்கினார் பக்கலிலே தன் வீர்யம் செலுத்துமதிறேயுள்ளது. யசோதை தனக்கு வச்யனான உன்னளவிலே தன் வீர்யம் காட்டினாள் ; நீ உனக்கு வச்யரானார் திறத்திலே உன் வீர்யம் காட்டுதி என்று அர்த்தாந்தர ந்யாஸத்தாலே ஸமாஹிதரானபடி. 41

42 காந்தாலகாந்த மமலம் கமலாயதாக்ஷம் உத்ப்ருவிலாஸ முதிதஸ்மித முந்நஸஞ் ச |
வக்த்ரம் வஹந் பரம! கோபக்ருஹேஷு கிம் த்வம் கோபீமநாம்ஸி நவநீத முதாப்யமோஷீ:.

ஹே பரம !	பரமபுருஷனே !	உந்நஸம் ச	உயர்ந்தநாஸிகையையுமுடையதுமான
காந்த அலகாந்தம்	அழகிய திருக்குழல் நுனியையுடையதும்	வக்த்ரம்	திருமுகமண்டலத்தை
அமலம்	நிர்மலமானதும்	வஹந் த்வம்	வஹியாநின்ற நீ
கமல ஆயதாக்ஷம்	தாமரைபோன்று நீண்ட திருக்கண்களையுடையதும்	கோப க்ருஹேஷு	ஆயர்மனைகளிலே
உத் ப்ரூ விலாஸம்	உத்துங்கமான புருவவட்ட விலாஸத்தையுடையதும்	கோபீ மநாம்ஸி அப்யமோஷீ :	ஆய்ச்சிகளின் நெஞ்சைக் களவுகண்டாயா ?
உதித ஸ்மிதம்	புன்முறுவலுண்டாகப் பெற்றதும்	உத நவநீதம் (அப்யமோஷீ):	அல்லது வெண்ணெயைக் களவு கண்டாயா ?

நவநீத சௌர்யஸமயத்திலே வடிவழகிருந்தபடியை பாவநா ப்ரகர்ஷத்தாலே ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாக அநுபவித்து இனியராகிறார்.

[பரம !] " வண்ணக் கருங்குழலாய்ச்சியால் மொத்துண்டு, கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டானாகிலும், எண்ணற்கரிய னிமையோர்க்கும் சாழலே " என்னும்படியான பாரம்யத்தில் குறையில்லையிறே. [காந்தாலகாந்தம்] பூர்வார்த்தத்திலுள்ள ஆறு விசேஷ

ணங்களும் வக்த்ரமென்னும் விசேஷ்யபதத்திலே அந்வயிப்பன. "செங்கமலப் பூவில் தேனுண்ணும் வண்டேபோல் பங்கிகள் வந்துன் பவளவாய் மொய்ப்ப" என்னும்படியே. [அமலம்] மறுக் கழற்றின சந்த்ரமண்டலம் போலேயிருக்குமதாகையாலே நிஷ்களங்கமாயிருக்கும். [கமலாயதாக்ஷம்] அரவிந்தம் போன்று நீண்ட கண்ணனிறே. [உத்ப்ரூவிலாஸம்] உத்துங்கமான ப்ரூபங்க ஸௌபாக்யமுடையது. [உதிதஸ்மிதம்] *படலடைத்த சிறு குரம்பை நுழைந்துபுக்குப் பசுவெண்ணெய் களவுகாணப் புக்கவிடத்திலே தன்னிறத்தினிருட்சியாலும் அவ்விடத்தினிருட்சியாலும் தெரியாமையாலே தடவாநிற்கச்செய்தே கையிலே வெண்ணெய்த் தாழிகள் தட்டின ப்ரியலாபத்தாலே ஸ்மிதம் பண்ணுமிதுவே கைவிளக்காக அமுதுசெய்வனென்கிற ப்ரஸித்தியைப்பற்ற இங்கே உதித ஸ்மிதமென்கிறது. "நாளிளம் திங்களைக் கோள் விடுத்து வேயகம்பால் வெண்ணெய் தொடுவுண்ட ஆனாயர் தாயவனே" என்றது காண்க. [உந்நஸம் ச] "மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ" என்று நித்யஸந்தேஹ ஜநகமாயிறே கோலநீள் கொடிமூக்கிருப்பது. [வக்த்ரம் வஹந் த்வம்] இப்படி விலக்ஷணமான திருமுகமண்டலத்தையுடையையான நீ [கோபீ க்ருஹேஷு கிம் கோபீமநாம்ஸி அப்யமோஷீ:? உத நவநீத மப்யமோஷீ:?] ஆயர்மனைகளிலே புக்கு ஆய்ச்சிகளின் ஹ்ருதயங்களைக் கொள்ளைகொண்டாயோ? அன்றி வெண்ணெய்தான் கொண்டாயோ? இரண்டையுமே அபஹரித்தாய் என்பது கருத்து. நவநீத ஹரனும் மநோஹரனும் இருந்தாய் என்கை. "ஸுந்தரோருபுஜ! நந்த நந்தநஸ் த்வம் பவந் ப்ரமர விப்ரமாலக :—மந்திரேஷு நவநீத தல்லஜம் வல்லவீ திபமுத வ்யசூசுர:" என்றார் ஸுந்தரபாஹு ஸ்தவத்திலும். 42

43 ஸர்வம் குணாய குணிநா மீதி ஸத்யமேதத் யத் கல்விஹேதராஜநே மலிநத்வ ஹேது: |
யத் கோபவேஷ விநிவேஷண முத்தமம் தே கோபாலநம் ச கணயந்தி குணம் குணேஷு.

இஹ	இந்த லோகத்தில்	ஸத்யம்	மெய்யே;
யத் கலு	யாதொரு வ்யாபாரம்	யத்	ஏனென்றால்
இதராஜநே	(குணஹீநமான) ஸாமாந்ய ஜநத்தினிடத்தில்	தே	உன்னுடைய
மலிநத்வஹேது:	மாலிந்ய ஹேதுவாக ஆகின்றதோ	கோபவேஷ விநிவேஷணம்	கோபால வேஷ பரிக்ரஹத்தையும்
		கோபாலநம் ச	பசுமேய்க்கும் தொழிலையும்
தத் ஸர்வம்	அந்த வ்யாபாரமெல்லாம்		
குணிநாம்	குணசாலிகள் விஷயத்தில்	குணேஷு	குணங்களினுள்ளே
குணாய	குணமாக ஆகின்றது,	உத்தமம் குணம்	சிலாக்ய குணமாக
இத்யேதத்	என்கிற இந்த லோகப்ரவாதம்	கணயந்தி	வ்யவஹரியா நின்றார்களிறே.

ஸாமாந்ய ஜநங்களுக்கு மாலிந்ய ஹேதுவான க்ருத்யம் தானே ப்ரஸித்த குணசாலிகள் பக்கலிலே கிடக்குமாகில் பிறர்க்கு தோஷத்தின் பொருட்டாகிற அந்த க்ருத்யம் தானே அவர்களுக்கு குணத்தின் பொருட்டு ஆகுமென்று ஒரு லோகப்ரஸித்தியுண்டு; அது மெய்யே காண். ஏனென்னில், "கற்றினம் மேய்க்கலும் மேய்க்கப் பெற்றான் காடுவாழ் சாதியுமாகப் பெற்றான்" என்று ஏச்சுக் குறைப்பானவை தானே ஜ்ஞாநிநாமக்ரேஸரர்களுக்கு குணகோடியிலே அநுஸந்தேயமாய்த்திறே. 'கம்ஸ நிரஸந பாண்டவரக்ஷணாதி க்ருத்யங்களிற் காட்டிலும்கோப வேஷ பரிக்ரஹமும் கோக்களின் பாலநமுமிறே வீறு பெற்றிருப்பது. 'ச'காரம் அநுக்த ஸமுச்சயத்திலேயாய் உரலிடையாப்புண்டது முதலானவற்றைச்சொல்லக் கடவது. "கணயந்தி குணம் குணஜ்ஞா:" என்ற பாடமும் பொருந்தும். 43

44 கோபால போதகதயா நிப்ருதம் தரித்ரீம் ஆவஸ்து காம இவ ஸந்நபி பால்யலௌல்யாத் ।
ஐந்த்ரம் நிஹத்ய மஹமத்ரிமதோ ததாந: கிம் தஸ்த்திஷே ஸுரகணாய ஸவாஸவாய.

கோபால போதகதயா	கோபகுமாரனாய்	ஐந்த்ரம் மஹம் நிஹத்ய	தேவேந்திரனுடைய விழவை விலக்கி
நிப்ருதம்	ரஹஸ்யமாக	அதோ	அதற்குப் பிறகு
தரித்ரீம் ஆவஸ்துகாம இவ ஸந் அபி	பூமியில் வஸிக்க வேணுமென்று நீ நினைத்திருந்தும்	அத்ரிம் ததாந:	கோவர்த்தந கிரியை எடுத்தவனாய்
பால்ய லௌல்யாத்	பால்யோசித சாபலத்தாலே	ஸவாஸவாய	இந்திரனோடு கூடின
		ஸுரகணாய	தேவஸமூஹத்துக்கு
		கிம் தஸ்த்திஷே	ஏன் எதிரியாய் நின்றாய்.

ஸௌலப்ய ஸௌசீல்யங்களையே காட்டி பரத்வத்தை யொளித்து மாநுஷ்யகம் கொண்டாட வந்த விடத்திலே பரத்துவமே பொலியும்படியான அதிமாநுஷ க்ருத்யங்களையும் ஊடே வெளியிடுவது என்றிய வென்கிறார்.

* ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்ந்தது உன்னுடைய சக்தி விசேஷங்களை யெல்லாம் மறைத்திறே. அப்படி யிருக்கும்போது “இந்திரனுக்கென்றாயர்களெடுத்த எழில் விழவில் பழநடை செய், மந்திர விதியில் பூசனை” என்னப்பட்ட இந்த்ர ஸமாராதனையை விலக்கி * மாரிப்பகை புணர்த்து * அம்மைத் தடங்கண் மடவாய்ச்சியரு மானாயரு மானிரையு மலறின வளவிலே * கோவர்த்தன மென்னும் கொற்றக் குடையேந்தி நின்றது என்னோ பிரானே !

[ஸவாஸவாய ஸுரகணாய கிம் தஸ்த்திஷே ?] தேவேந்திரனும் தேவர்களு மெல்லாரும் ஒரு கக்ஷியாகவும் நீ யொரு கக்ஷியாகவுமிருந்து கார்யம் நடந்ததே, அது என் ? என்றபடி. “தேவ கணங்களே ! உங்களுக்கு நான் எதிரியா யிருக்கிறேன்” என்று ஸ்வாபிப்ராயத்தை ப்ரகாசிப்பித்துக் கொண்டு ஏன் நின்றாய் என்று கேட்டபடி. “ஐந்த்ரம் நிஹத்ய மகம்” என்றும் பாடமுண்டு. மகமாவது யஜ்ஞம்=தேவபூஜை. * யஜ தேவபூஜாயாம். 44

45 வேணுக்வண ப்ரணயிநி த்வயி லோகநாத ! ப்ருந்தாவநம் சரண ஸஞ்சரணை : புநாநே |
பாவாஸ் ததா வநபுவ : கில கீத்ருசஸ் தே த்வத் கீத ஸிக்த ஸிகதாஸு வஸுந்தராஸு.

லோகநாத !	ஸகல ஜகத்பதியே !	த்வத் கீத ஸிக்த ஸிகதாஸு	உன்னுடைய வேணுகாநாம்ருதத்தாலே நனைக்கப்பட்ட மணல்களையுடைய
த்வயி	நீ		
வேணுக்வணப்ரணயிநி	வேணுகாநப்ரியனாய்க் கொண்டு		
சரண ஸஞ்சரணை :	பாதஸஞ்சாரத்தாலே	வஸுந்தராஸு	பூமிகளில்
ப்ருந்தாவநம்	ப்ருந்தாவநத்தை	வநபுவ: தே பாவா :	ஆரண்ய பதார்த்தங்கள்
புநாநே ஸதி	பவித்திரமாக்கின வளவில்	கீத்ருச : ?	எப்படிப்பட்டவையாயிருந்தன ?
ததா	அப்போது		

ஸ்ரீ க்ருஷ்ணனுடைய வேணுகாநத்திலே ஈடுபட்டுப் பேசுகிறார். லோகநாதனே ! நீ “இடவணரை இடத்தோளொடு சாய்த்து இருகைகூடப் புருவம் நெறிந்தேற, குடவயிறுபட வாய்கடைகூடக் கோவிந்தன் குழல் கொடூதினபோது” என்கிறபடியே த்ரிபங்கீ லலிதாங்கனாய்க் கொண்டு வேணுகாநம் பண்ணிக் கொண்டு ப்ருந்தாவநத்திலே உலாவினபோது அந்த காநத்தாலே குளிர்ந்த அவ்வரண்ய பூமிகளிலே யுண்டான ஸகல சராசரங்களும் பட்டபாடு என்னோ பிரானே ! என்கிறார்:

நாவலம் பெரிய தீவினில் வாழுமென்கிற பெரியாழ்வார் திருமொழியிலே "கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்கிச் செவியாட்டகில்லாவே" என்றும், "மருண்டு மான் கணங்கள் மேய்கைமறந்து மேய்ந்த புல்லும் கடைவாய்வழிசோர, இரண்டுபாடும் துலுங்கா புடை பெயரா எழுது சித்திரங்கள்போல நின்றனவே" என்றும், "மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும் மலர்கள் வீழும் வளர்கொம்புகள் தாழும், இரங்கும் கூம்பும் திருமால் நின்ற நின்ற பக்கம் நோக்கி அவை செய்யும் குணமே" என்று மருளிச் செய்தவற்றை திருவுள்ளத்திலேகொண்டு அந்த ப்ரகாரங்களைத் தம்வாயாலே பேசமாட்டாமே "கீ[illegible]:" என்று அவன் தன்னையே கேட்கிறாராய்த்து.

"சைலோக்நிச்ச ஜலாம்பபூவ மூநயோ மூடாம் பபூவுர் ஜடா: ப்ராஜ்ஞாமாஸ:" என்று தொடங்கி "த்வம் தேஷ்வக்யதமாம்பபூவித பவத்வேணுக்வணேந்மாதகே" என்று ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே பட்டர் எம்பெருமானைக் கேள்வி கேளாதே தரித்து நின்று பேச வல்லரானார். ஆழ்வான் அவ்வளவு உரமுடையரல்லாமையாலே "கீத்ருச:" என்று ப்ரச்நத்தோடே தலைக்கட்டுகிறார். (45)

தந்யை: ச்ருதம் ததிஹ தாவக ராஸகாலே கீதேந யேநஹி சிலாஸ் ஸலிலாம் பபூவு: |
பஞ்சாபி கிஞ் ச பரிவ்ருத்தகுணாநி பூதாநி உர்வீ க்ருசாநு மருதம்பர சம்பராணி || 46

இஹ	இந்த லோகத்தில்	பஞ்சாபி பூதாநி	பஞ்சபூதங்களும்
தாவக ராஸகாலே	நீ குரவைக் கூத்தாடின போது	பரிவ்ருத்தகுணாநி	மாறுபட்ட குணங்களையுடையனவாக
யேந கீதேந	யாதொரு வேணுகாநத்தாலே		
சிலா:	கற்கள்	பபூவு:	ஆயினவோ
ஸலிலாம் பபூவு:	நீர்ப்பண்டமாயினவோ	தத் கீதம்	அப்படிப்பட்ட காநமானது
கிஞ்ச	இன்னமும்	தந்யை:	பாக்யாதிகர்களாலே
உர்வீக்ருசாநு மருதம்பர சம்பராணி	பூமி அக்கி வாயு ஆகாசம் ஜலம் என்கிற	ச்ருதம்	செவிசாத்தப்பட்டது.

அந்த வேணுகாநந்தன்னைக் கேட்கப் பெற்றவர்களும் சிலரே! என்று கொண்டாடுகிறார். [தாவக ராஸகாலே] ராஸக்ரீடையாவது திருக்குரவை, "அங்கநா மங்கநா மந்தரே மாதவோ மாதவம் மாதவம் சாந்தரேணாங்கநா" என்கிறபடியே ஒவ்வொரு ஆய்ச்சியின் பக்கத்திலும் ஒவ்வொரு கண்ணபிரானாகப் பல வடிவெடுத்து ஆடினதொரு கூத்து; "குரவையாய்ச்சியரோடு கோத்ததும்" என்று ஆழ்வார்கள் ஆழங்கால் படுந்துறை, அந்தக் குரவைக் கூத்தாடின ஸமயத்திலே, [யேந கீதேந சிலா: ஸலிலாம் பபூவு:] யாதொரு திருக்குழலோசையாலே கடிந பதார்த்தங்களும் நீர்ப் பண்டமாய் உருகிப் போயினவோ, "சைலோக்நிச்ச ஜலாம் பபூவ" என்கிற படியே.

[பஞ்சாபீத்யாதி] "யேந" என்று இவ்விடத்திலும் அநுஷங்கிக்கக் கடவது, யாதொரு வேணு காநததாலே ப்ருதிவ்யாதி பஞ்ச பூதங்களும் ஸ்வ ஸ்வ குணங்கள் மாறாடப் பெற்றனவோ, [தத் தவ கீதம் தந்யை: ச்ருதம்] அசேதந வஸ்துக்களையும் விகரிப்பிக்கவல்ல அப்படிப்பட்ட வேணுகாநமானது அன்றிருந்த பாக்யசாலிகளாலேயாய்த்து செவிசாத்தப்பட்டது.

கருவிலே திருவிலாத அடியேன் போல்வார்க்கு ப்ராப்திபுண்டோ? "நந்தன் பெற்றனன் நல்வினையில்லா நங்கள் கோன் வசுதேவன் பெற்றிலனே" என்றாப்போலே இன்றிருந்து வயிறெரிகைக்கு ப்ராப்தாரானேனே மத்தனை யென்கை. [ஸலிலாம் பபூவு:] "ஸநாத்யந்தா தாதவ:" என்கிற பாணிநி ஸூத்ரத்தாலே ஸலில சப்தத்துக்கு தாது ஸம்ஜ்ஞையாய் "காஸ் ப்ரத்யயாதாமமந்த்ரே லிடி" என்னும் ஸூத்ரத்தால் ஆம் ப்ராப்தமாய் "க்ருஞ்சாநு ப்ரயுஜ்யதே லிடி" என்கிற ஸூத்ரத்தால் அநுப்ரயோகமும் வந்து இக்ரூபம் ஸித்தம். (46)

தேப்ய: க்ருதீ ந கில கச்சி திஹாஸ்தி யே வை ராஸோத்ஸவோத்ஸவகதியஸ் தவ காநநாந்தே
வேணுஸ்வந ஸ்ருத ரஸௌகபரிப்லுதாங்தே ஸ்வே ஸ்ருக்வணீ ரஸநயா லிலிஹுர் புஜங்கா: || 47

யே புஜங்கா:	எந்த ஸர்ப்பங்கள்	ஸ்வே ஸ்ருக்வணீ	தமது கடைவாய்களை
காநநாந்தே	ப்ருந்தாவநத்தில்	ரஸநயா	நாக்கினாலே
ராஸோத்ஸவ உத் ஸுக தியஃ தவ	ராஸக்ரீடையில் உத்கண்டிதமான புத்தியையுடைய வனுன உன்னுடைய	லிலிஹு:	ஆஸ்வாதநம் செய்தனவோ
		தேப்ய:	அந்த ஸர்ப்பங்களிற் காட்டில்
வேணுஸ்வநஸ்ருத ரஸௌக பரிப்லு தாந்தே	வேணு நாதத்தாலே பெருகின ரஸப்ரவாஹத்தாலே நனைக்கப்பட்ட ப்ராந்த ப்ரதேசத்தையுடைய	க்ருதீ	ஸுக்ருதியான
		கச்சித்	ஒருவனும்
		இஹ	இந்த லோகத்தில்
		நாஸ்தி கில	இல்லையிறே

வேணுநாதத்தினன்று ஸர்ப்பங்கள் பட்டபாடு இன்னதென்கிறார். "பசுர் வேத்தி சிசுர் வேத்தி வேத்தி காநரஸம் பணீ" இத்யாதி.

உன்னுடைய வேணுஸ்வநத்தைச் செவிமடுத்து அநுபவித்த ஸர்ப்பங்களின் ஓஷ்ட ப்ராந்த பாகங்களிலே அம்ருதரஸம் கசிய அந்த ரஸத்தை அந்த ஸர்ப்பங்கள் தம் நாவினாலே நக்கி த்ருப்தியடைந்தனவென்றால் அந்த ஸர்ப்பங்களிற்காட்டிலும் தந்யாத்மா வேறுண்டோ? என்கிறார். ஸர்ப்பங்களினுடைய விஷமும் அம்ருதமாகப் பரிணமித்தது அற்புதமிறே. ஆகையாலே அவற்றின் விஞ்சின பாக்யாதிகரில்லையென்ன வேண்டிற்று. (47)

அம்போத நீல மரவிந்த தளாயதாக்ஷம் பிஞ்சாவதம்ஸ முரரீக்ருத வேணு பாணிம் |
த்வாம் கோபவேஷ பரிகர்மித காயகாந்திம் தந்யாஸ் ததா தத்ருசு ருந்மதிதாந்யபாவா:|| 48

ததா	அந்த ராஸக்ரீடாஸமயத்தில்		
அம்போத நீலம்	மேகச்யாமனையும்	கோபவேஷ பரிகர்மித காய காந்திம்	கோபால வேஷத்தாலே வீறுபெறுத்தப்பட்ட திருமேனி யொளியையுடைய வனையுமிருந்த
அரவிந்த தள ஆயதாக்ஷம்	தாமரையிதழ் போன்று நீண்ட திருக்கண்களையுடையனையும்	த்வாம்	உன்னை
பிஞ்ச அவதம்ஸம்	மயில்கண் சூடினவனையும்	தந்யா:	பாக்கியசாலிகள்
உரரீக்ருத வேணுபாணிம்	வேய்ங் குழலைக்கொண்ட திருக்கையையுடையவனையும்	உந்மதித அந்ய பாவாஸ் ஸந்த:	அநந்ய சித்தர்களாய்க் கொண்டு
		தத்ருசு:	ஸேவிக்கப் பெற்றார்கள்.

"தழைகளும் தொங்கலும்" என்கிற (பெரியாழ்வார்) திருமொழி ப்ரக்ரியையிலே பேசுகிறார்.

[அம்போத நீலம்] "மழைகொலோ வருகின்றது" என்னும்படி யிருக்கை, [அரவிந்த தளாயதாக்ஷம்] "இலங்கொளி சேரரவிந்தம் போன்று நீண்ட கண்ணனை." [பிஞ்சாவ தம்ஸம்] "நீல நன்னுறுங் குஞ்சி நேத்திரத் தாலணிந்து," "கருங்கண் தோகைமயிற் பீலியணிந்து." [உரரீக்ருத வேணு பாணிம்] "இடவணரை இடத்தோளொடு சாய்த்து இருகை கூடப் புருவம் நெறிந்தேற, குட வயிறு பட வாய்கடை கூடக் கோவிந்தன் குழல் கொடூதினபோது." [கோபவேஷ பரிகர்மித காய காந்திம்] "சிலைக்குதம்பை யொரு காது, ஒரு காது செங்கிறமேல் தோன்றிப் பூ, கோலப் பணைக் கச்சும் கூறையுடையும் குளிர் முத்தின் கோடாலமும் காலிப் பின்னே வருகின்ற கடல் வண்ணன் வேடம் "வலங்காதில் மேல்தோன்றிப் பூவணிந்து." இத்யாதி. [த்வாம்] "சாலப் பன்னிரைப் பின்னே" என்கிற பாசுரம் முழுதும் இந்த ச்லோகமாகப் பரிணமித்தபடி. இப்படிப்பட்ட உன்னை [தந்யாஸ் ததா தத்ருசுருந்மதிதாந்யபாவா:] "காலிப்பின்னே வருகின்ற கடல்வண்ணன் வேடத்தை வந்து காணீர்." என்று யசோதைப்பிராட்டியும், "என்று மிவனை யொப்பாரை நங்காய் கண்டறியேனேடி வந்து காணாய்" என்று ஆய்ப்பெண்டுகளும் அழைத்துக் காட்டக் கண்டவர்களிறே க்ருதார்த்தர்கள். பாக்யாதிக்யத்தாலே அன்றிருந்து காணப்பெற்றார்கள். தௌர்ப்பாக்யத்தாலே நாம் இன்றிருந்து இழந்தோமாவுதோம்.

[உந்மதிதாந்யபாவா:] "எங்கும் காவலுங்கடந்து....கின்றனரே" என்னும்போது வேறொன்றிலே நெஞ்சு செல்லப்பெறுமோ. (48)

கோவர்த்தநோ கிரிவரோ யமுநா நதீ ஸா ப்ருந்தாவநம் ச மதுரா ச புரீ புராணீ |
அத்யாபி ஹந்த ஸுலபா: க்ருதிநாம் ஜநாநாம் ஏதே பவச் சரணசாரஜுஷ:ப்ரதேசா:|| 49

கிரிவர:	பர்வதச்ரேஷ்டமான	பவச் சரண சார ஜுஷ: ஏதே ப்ரதேசா:	உன்னுடைய பாதஸஞ்சாரம் பெற்ற இந்த ஸ்தலங்கள்
கோவர்த்தந:	கோவர்த்தநமும்	க்ருதிநாம் ஜநாநாம்	ஸுக்ருதிகளுக்கு
ஸா யமுநா நதீ	அந்த யமுனையாறும்	அத்யாபி ஸுலபா:	இன்றைக்கும் ஸுலபங்களாயுள்ளன.
ப்ருந்தாவநம் ச	ப்ருந்தாவநமும்		
புராணீ	புராதநமான		
மதுரா புரீ ச	மதுரா நகரியும் (ஆகிய)		

அன்று பிறவாதே இழந்தார்க்கும் ஒருபடி ஸமாதாநம் பண்ணிக்கொள்ள விரகு உண்டாய்த்தே என்று உகக்கிறார் போலும். [கோவர்த்தநோ கிரிவர:] "காலிகளுய்ய மழை தடுத்துக் கொற்றக் குடையாகவேந்தி நின்ற கோவர்த்தனத்தென்னை யுய்த்திடுமின்" என்ற கோவர்த்தன கிரியை இன்றைக்கும் காணப்பெற்றோமிறே. [யமுநா நதீஸா] கண்ண பிரானும் ஆய்ச்சிகளுமாகத் திளைத்த *தூயபெருநீர் யமுனைத்துறை அழிந்ததில்லைகிடீர். [ப்ருந்தாவநம் ச] "இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டிவிட்டுக் கொண்டு விளையாட நின்ற விருந்தாவனம் இன்றும் காணக்குறையில்லை. [புராணீ மதுரா புரீ ச] மன்னு வடமதுரையும் மன்னியிருக்கப் பெற்றோமே. [பவச் சரண சாரஜுஷ: ஏதே ப்ரதேசா: க்ருதிநாம் ஜநாநாம் அத்யாபி ஹந்த! ஸுலபா:] அவனுலாவிப் போன அடிச்சுவடுகொண்டு தரிக்கவிருப்பார்க்கு அன்று அவனெடுத்த குன்றமும், பெண்களுடன் திளைத்த யமுனையும், வேட்டையாடி நின்ற விருந்தாவனமும், திருவவதரித்தவிடமான திருமதுரையும் உண்டாய்த்திறே. [க்ருதிநாம் ஜநாநாம் ஸுலபா:]. "பாலாழி நீ கிடக்கும் பண்பை, யாம் கேட்டேயும் காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்" என்னும்படியுள்ளார்க்கு இவைதானும் விபலமேயிறே, "ஊராய வெல்லா மொழியாமே நானவனை" என்று ஸங்கல்பித்து * தானுகந்தவூரெல்லாம் தன் தாள்பாடி * கண்டியூர ரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று மண்டித் திரியும் மஹாபாக்யசாலிகளுக்கு ஸுலபமேகிடீர். (49)

ப்ருந்தாவநே ஸ்திரசராத்மக கீடதூர்வா பர்யந்த ஜந்து நிசயே பத யே ததாநீம் —
நைவாலபாமஹி ஜநிம் ஹதகாஸ் த ஏதே பாபா: பதம் தவ கதா புநராச்ரயாம: || 50

ப்ருந்தாவநே	ஸ்ரீப்ருந்தாவனத்திலே	தே ஏதே ஹதகா: பாபா: வயம்	படுபாவிகளான அந்த நாங்கள்.
ஸ்திர சராத்மக கீடதூர்வா பர்யந்த ஜந்து நிசயே	ஸ்தாவரங்களில் எல்லையான த்ருணமென்ன, ஜங்கமங்களில் எல்லையான புழுவென்ன இவையாகிற ஜந்து ஸமூகத்தினுள்ளே	தவ	உன்னுடைய
		பதம்	திருவடியை
		கதா புந:	பின்னை யெப்போது
ஜநிம்	(அங்ஙனமாம்படியான) ஜந்மத்தை.	ஆச்ரயாம:	அநுபவிக்கப் போகிறோம்
யே வயம் நைவ அலபாமஹி	எந்த நாங்கள் அடையவில்லையோ	பத!	கஷ்டம்.

அன்று ப்ருந்தாவநத்திலே ஜநித்திருந்த சேதநாசேதநங்கள் பல வுண்டே; அவற்றில் ஏதேனுமொரு வஸ்துவாக ஜநிக்கப் பெற்றிருந்தேனாகில் இன்று ஸம்ஸாரியாய்ப் பிறக்க நேர்ந்திராதே. அந்தோ! நல்லடிக் காலத்தைப் பாவியேனிழந் தொழிந்தேனே.

ஸர்வஸ்வ தாநம் பண்ணின காலத்திலே இழந்த பாவிகளுக்கு இனி யொரு நல்ல காலமுண்டாகப் போகிறதோ. உன் திருவடி சேர இனி என்றைக்கு ப்ராப்தியாமோ வென்று முடிமேல் மோதிக் கொள்ளுகிறார் போலும். 'ஆச்ரயாம' என்று லோடுத்தம பஹுவசநாந்த பாடமுமுண்டு. (50)

ஹா ஜந்ம தாஸு ஸிகதாஸு மயா ந லப்தம் ராஸே த்வயா விரஹிதா: கில கோபகந்யா: |
யாஸ் தாவகீந பதபங்க்திஜுஷோ ஜுஷந்த நிக்ஷிப்ய தத்ர நிஜமங்க மநங்க தப்தம் || 51

ராஸே	குரவைக் கூத்திலே	நிஜம் அங்கம்	தம் தம் சரீரத்தை
த்வயா விரஹிதா:	உன்னை விட்டுப் பிரிந்த	நிக்ஷிப்ய	வைத்து
யா: கோபகந்யா:	எந்த இடைப் பெண்கள்	தாவகீநபதபங்க்தி ஜுஷ:	நீ நடந்துசென்ற வழியிலேயுள்ள
தத்ர	அந்த விரஹ காலத்திலே		
அநங்கதப்தம்	காமாக்நியாலே தபிக்கப்பட்ட	யா: (ஸிகதா:)	எந்த மணல்களை

அஜுஷந்த	அடைந்தார்களோ,	ஜந்ம ந லப்தம்	(ஒரு மணலாக) பிறக்கப் பெறவில்லையே,
தாஸு ஸிகதாஸு	அந்த மணல்களில்	ஹா	அந்தோ !
மயா	அடியேனால்		

நெடும்போது திருக்குரவை கோத்து விளையாடிப் பரமாநந்த ரஸமாய்ச் சென்ற வளவிலே இது ஸாத்மிக்கவேணுமென்று கண்ணபிரான் பெண்களைப் பிரிந்து மறைந்தகாலத்திலே விரஹம் தின்ற வுடம்போடே பெண்கள் ஆற்றமாட்டாமே கண்ணனுலாவிப்போன அடிச்சுவடு பொருந்தியமணல் கொட்டகங்களிலே சரீரத்தை வைத்துக் கிடந்து ஒருவாறு ஆச்வஸித்தார்கள் என்று ப்ரஸித்தமான வொரு வ்ருத்தாந்தத்தை அநுஸந்தித்து, அந்தோ! அந்த மணலாகவாகிலும் பிறவாதொழிந்தேனே பாவியேன்! என்று வயிறு பிடிக்கிறார். "ஸிகதாஸு மயா ஜந்ம ந லப்தம்" என்றது ஸிகதாஸ்வந்யதமத்வேந (ஸிகதாத்வேந) ஜந்ம ந லப்தம் என்றபடியாய் அந்த மணலாகப் பிறந்து க்ருஷ்ண ஸஞ்சார ரூப பாக்யத்தையும் கோபகந்யாதேஹ நிக்ஷேப ரூப பாக்யத்தையும் லபியாதொழிந்தேனே யென்று விஷண்ணராகிறபடி. "ஆஸாமஹோ சரணரேணுஜுஷாமஹம் ஸ்யாம்ப்ருந்தாவநே கிமபி குல்மலதௌஷதீநாம்; யா துஸ்த்யஜம் ஸ்வஜநமார்யபதம் ச ஹித்வா பேஜுர் முகுந்த பதவீம் ச்ருதிபிர் விம்ருக்யாம்" என்ற பாகவதச்லோகார்த்தம் இங்கு அநுஸந்தேயம். (51)

ஆசிந்வத: குஸுமமங்க்ரி ஸரோருஹம் தே யே பேஜிரே பத வநஸ்பதயோ லதா வா |
அத்யாபி தத்குலபுவ: குலதைவதம் மே ப்ருந்தாவநம் மம தியஞ் ச ஸநாதயந்தி || 52

குஸுமம் ஆசிந்வத: தே	நீ புஷ்பம் பறிக்கும்போது	குலதைவதம்	என்னுடைய குலதைவமான
யே வநஸ்பதய:	எந்த வ்ருக்ஷங்களும்	ப்ருந்தாவநம்	ப்ருந்தா வநத்தையும்
யா: லதா வா	எந்த கொடிகளும்		
தே அங்க்ரி ஸரோருஹம்	உன்னுடைய திருவடித் தாமரையை	மம தியம் ச	என்னுடைய அந்தரங்கத்தையும்
பேஜிரே	அடைந்தனவோ,		
தத் குலபுவ:	அவற்றின் பரம்பரையிலே உண்டான வ்ருக்ஷலதைகள்	அத்யாபி	இன்றைக்கும்
		ஸநாதயந்தி	பரிஷ்கரியா நின்றன.

அன்று நீ கதம்பாதி வ்ருக்ஷங்களிலும் மாலதீ மாகத்யாதி லதைகளிலும் திருவடிகளை வைத்து புஷ்பங்கள் பறிக்கும் போது உன் திருவடி படப்பெற்ற அவை எவ்வளவோ தந்யங்களாயின. ஸாக்ஷாத் அந்த வ்ருக்ஷலதைகளே இப்போது இல்லையாயினும் அவற்றின் பரம்பரையிலே உத்தரோத்தர முண்டானவை ப்ருந்தாவநத்திலே விசேஷத: உண்டாகையாலே அவைதான் பாவியேனுக்கு ப்ராப்யங்களென்று அத்யவஸித் திருக்கிறேனென்கிறாராய்த்து. தத் ஸம்பந்தி ஸம்பந்தி வர்க்கமும் உத்தேச்யமென்ற சாஸ்த்ரார்த்தத்தை விளக்கினபடி.

"காளியஸ்ய பணதாம் சிரஸ்து மே ஸத்கதம்ப சிகரத்வ மேவவா, வஷ்டி ஜுஷ்ட வந சைல ஸுந்தர! த்வத்பதாப்ஜயுக மர்ப்பிதம் யயோ:" என்று ஸுந்தர பாஹு ஸ்தவத்திலே ஒரு யடியாக வருளிச் செய்ததும் இங்கு அநுஸந்தேயம். (52)

யத் தத்வத்ப்ரியம் ததிஹ புண்ய மபுண்ய மந்யத் நாந்யத் தயோர் பவதி லக்ஷண மத்ர ஜாது
தூர்த்தாயிதம் தவ ஹி யத் கில ராஸகோஷ்ட்யாம் தத்கீர்த்தநம் பரமபாவந மாமநந்தி || 53

இஹ	இவ்விடத்தில்	ஜாது	ஒருகாலும்
யத்	யாதொன்று	ந பவதி	ஆகாது,
த்வத் ப்ரியம்	உனக்கு இஷ்டமானதோ	ராஸகோஷ்ட்யாம்	திருக்குரவையிலே
தத் புண்யம்	அது புண்ய மெனப்படும்;	தவ தூர்த்தாயிதம் யத் கில	உன்னுடைய தூர்த்த சரிதம் யாதொன்றுண்டு
அந்யத்	உனக்கு ப்ரியமல்லாதது		
அபுண்யம்	பாபமெனப்படும்.	தத் கீர்த்தநம்.	அந்த சரிதாநுஸந்தானத்தை
தயோ:	அந்த புண்ய பாபங்களுக்கு	பரம பாவநம்	பரம பரிசுத்தமாக
அத்ர	இந்த லோகத்தில்		
அந்யத் லக்ஷணம்	(கீழ்ச்சொன்னது தவிர) வேறு லக்ஷணம்	ஆமநந்தி கில	மஹரிஷிகள் சொல்லுகிறார்களிறே.

எம்பெருமானுடைய சேஷ்டிதங்களெல்லாம் பரமபாவநமென்கிறார். உன்னுடைய திருவுள்ளத்துக்கு எது உகப்பானதோ அது புண்யமென்றும், எது வெறுப்பானதோ அது பாபமென்றும் இத்தனையேயிறே புண்யபாப லக்ஷணம் சொல்லலாவது. ராஸக்ரீடையிலே நீ செய்த தூர்த்த சரிதங்களைக் கீர்த்தநம் செய்வதெல்லாம் ப்ராக்ருதருடைய மநஸ்ஸாலே பாபமென்று நினைக்கலாமாயிருந்தாலும் இங்ஙனே புண்யபாபலக்ஷண சிக்ஷை பண்ணியிருப்பார்க்கு அதெல்லாம் புண்யமென்று நினைக்கலாயிருக்கு மத்தனைபோக்கி பாபமென்று கனவிலும் கருதப் போகாதிறே, திருக்குரவையிலே நீ செய்த தீம்புகளைச் சொல்லுவார் பக்கலிலே உன்னுடைய திருவுள்ளம் போர வுகந்திருக்குமாகையாலே "யத் த்வத்ப்ரியம் ததிஹ புண்யம்" என்கிற கணக்கிலே அது புண்யமாகக் குறையில்லையிறே. (53)

யா கம்ஸ முக்யந்ருபகீட நிபர்ஹணோத்தா ஸா நிர்ஜித த்ரிஜகதஸ் தவ நைவ கீர்த்தி : |
கோபாலநாதி யதிதம் பவதீயகர்மேதி ஆர்த்ரீ கரோதி விதுஷாம் ஹ்ருதயம் ததேதத் || 54

கம்ஸ முக்ய ந்ருபகீட நிபர்ஹணோத்தா	கம்ஸன் முதலிய ராஜாக்களாகிற புழுக்களை நசுக்கினதாலுண்டான	கோபாலநாதி யத் இதம் தத் ஏதத்	பசுமேய்த்தது முதலிய யாதொரு க்ருத்யமுண்டோ அதுவானது
கீர்த்தி: யா ஸா.	கீர்த்தி யாதொன்றுண்டு; அதுவானது	பவதீயகர்ம இதி	உன்னுடைய தொழில் என்கிற காரணத்தினால்
நிர்ஜித த்ரிஜகத: தவ	மூவுலகங்களையும் வென்றிருக்கிற வுனக்கு		
நைவ கீர்த்தி:	புகழ்ச்சியாக மாட்டாது காண்;	விதுஷாம் ஹ்ருதயம் ஆர்த்ரீ கரோதி	ஜ்ஞானிகளுடைய மநஸ்ஸை இளகுவிக்கின்றது.

கம்ஸ ராவண ஹிரண்யாதிகளான ஆஸுரப்ரக்ருதிகளை நிரஸித்தானென்று வீர சரித்திரங்களைச் சொல்லி ஏத்துவதிற் காட்டிலும் ஆநிரை மேய்த்த எளிய சரிதங்களைச் சொல்லி ஏத்துவதே பரம போக்யமென்கிறார். மூவுலகங்களையும் வென்றிருக்கிறவன், கம்ஸன் முதலிய சில க்ஷுத்ர ஜந்துக்களை நிரஸித்தானென்றால் இது ஒரு புகழ்ச்சியாகுமோ; பரத்வத்தில் குறையற்றவன் ஸௌலப்ய ஸௌசீல்யங்களுக்கு எல்லை நிலமான கோபாலநாதி க்ருத்யங்களைச் செய்தானென்றால் இதுவிறே உருக்கத்துக்கு உறுப்பானது. "திவத்திலும் பசுநிரை மேய்ப்பு உவத்தி செங்கனிவாயெங்களாயர் தேவே" என்று ஈடுபடும் துறையிதுவிறே. கம்ஸ நிரஸநாதிகள் பெருமையல்லவாகில் "கஞ்சனைக் காய்ந்தானை" என்றும் "கஞ்சன் வயிற்றினில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே" என்றும் அதனைச் சொல்லிப் புகழலாமோ வென்னில்; இவர் தாம் ஸுந்தர பாஹுஸ்தவத்திலே "இங்கிதம் ஸ்மிதம் ச தாவகம் ரம்ய மத்புத மதிப்ரியங்கரம், தேந கம்ஸமுக கீடசாஸனம் ஸுந்தரால்பகமபி ப்ரசஸ்யதே" என்றருளிச் செய்த கணக்கிலே ப்ரசம்ஸையிலே தலைக்கட்டுகிறது, "அது இது உது என்னலாவனவல்ல என்னையுன் செய்கை நைவிக்கும்" என்றாப்போலே. பகவானுடைய சேஷ்டிதமென்னு மாகாரத்தாலே பெருமைக்குக் குறையில்லையிறே. (54)

கோபால வேஷ பரிகர்ம பராவரேசம் யந்நாம தாம பரமம் தமஸ: பரஸ்தாத் |
தத் பிஞ்சலாஞ்சநஸுதாமக்ருதோபவீதம் கோதூளி தூஸரித குந்தளமந்தராஸ்தாம் || 55

பராவரேசம்	உபய விபூதி நிர்வாஹகமாயும் (அத ஏவ)	கோபால வேஷ பரிகர்ம	கோபால வேஷத்தை அலங்காரமாக வுடையதாய்க் கொண்டும்
பரமம்	உத்க்ருஷ்டமாயுமிருக்கிற		
யத் தாம	யாதொரு தேஜஸ்ஸானது		
தமஸ: பரஸ்தாத்	ப்ராக்ருதி மண்டலத்துக்கவ்வருகே இருக்கின்றதோ,	கோதூளி தூஸரித குந்தலம்	பசுக்களின் தூளியாலே புழுதிபடிந்த திருக்குழலை யுடையதாய்க்கொண்டும்
தத்	அந்த தேஜஸ்ஸானது		
பிஞ்சலாஞ்சந ஸுதாமக்ருத உபவீதம்	மயில் தோகை மாலையை அணிந்ததாய்க் கொண்டும்	அந்த: ஆஸ்தாம்	என் நெஞ்சினுள்ளே இருக்க வேணும்.

ஸௌலப்யத்துக்கு ஐகாந்திகமாயும் போக்யதைக்கு எல்லைநிலமாயுமிருக்கிற திருக்கோலத்தை சிந்தையில் கொள்ளுகிறார்.

[கோபால வேஷ பரிகர்ம] "சிலைக்குதம்பை யொருகாது ஒருகாது செந்நிறமேல்தோன்றிப்பூ, கோலப் பணைக்கச்சும் கூறையுடையும் குளிர் முத்தின் கோடாலமும் காலிப் பின்னே வருகின்ற கடல்வண்ணன் வேடம்" என்றதை நினைக்கிறது, [பராவரேசமித்யாதி] உபய விபூதி நிர்வாஹகமாயிருக்கிற தத்துவமிறே இங்ஙனே காலி மேய்க்கும் வேஷம் கொள்வது. [தஸ்த்யாதி], "விண்ணின் மீதமரர்கள் விரும்பித் தொழ மிறைத் தாயர்பாடியில் வீதியூடே, கண்ணன் காலிப்பின்னே எழுந்தருள" என்றும் "சாலப் பன்னிரைப்பின்னே தழைக்காவின் கீழ்த் தன் திருமேனி நின்றொளி திகழ, நீல நன்னறும் குஞ்சி நேத்திரத்தாலணிந்து, பல்லாயர் குழாநடுவே ஆயரோடாலித்து வருகின்ற" என்றும் சொல்லுகிறபடியே, [கோதூளி தூஸரித குந்தளம்] * கற்றுத் தூளியுடை வேடர்கானிடைக் கன்றின்பின் போகையாலே திருக்குழல் களெல்லாம் கோதூளிகளாலே தூஸரிதமாயிருக்குமாய்த்து, இப்படிப்பட்ட திருக்கோலம் என்னுள்ளே திகழவேணும், "ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" என்கிற திருவுருவைக் காட்டிலும் இவ்வுருவே பரமபோக்யமென்றபடி. (55)

யத்வை ஜராஸந்தபயாத் விபலாயதாஸ் த்வம் தச் சேந் மநுஷ்ய சரிதாநுவிதாநஜம் தே |
தர்ஹி த்ரிலோககுருமீச்வர மீச்வராணாம் பாணஹவே கிமிதி சம்பு மஜ்ரும்பயஸ் த்வம் || 56

த்வம்	நீ	த்ரிலோக குரும்	த்ரிலோகத்திலும் மேற்பட்டவனும்
ஜராஸந்தபயாத்	ஜராசந்தனிடத்தில் பயத்தாலே		
விபலாயதா: இதி யத் வை	ஓடினாய் என்று யாதொன்று ப்ரஸித்தமோ	ஈச்வராணாம் ஈச்வரம்	இந்த்ராதிகளுக்கும் தலைவனை
தத்	அதுவானது	சம்பும்	ருத்திரனை
தே	உனக்கு	பாணஹவே	பாணாஸுர யுத்தத்திலே
மநுஷ்யசரிதாநுவிதாநஜம் சேத் தர்ஹி	மநுஷ்ய சரிதத்தை அநுவர்த்திப்பதற்காக வுண்டானதாகில்	கிமிதி த்வம் அஜ்ரும்பய:	ஏன் நீ கொட்டாவி விடச் செய்தாய்?

காலயவநன் செருக்கனாய்த் திரிந்து கொண்டிருக்கையில் ஒரு நாள் நாரதரைப் பார்த்து 'இந் லோகத்தில் சூரராயிருப்பார் ஆரேனு முண்டோ' என்று கேட்க, 'மதுரையில் யாதவர்களுண்டு' என்ன; அது கேட்ட காலயவநன் அங்கு நின்றும் புறப்பட்டு மதுரைக்கு வந்து யாதவர்களோடு போர் செய்யத் தொடங்க; அப்போது கண்ணபிரான் இதையறிந்து பச்சிமஸாகரத் தேறச் சென்று அங்கு ஸமுத்ரராஜனை யாசித்து த்வாதச யோஜந விஸ்தீர்ணமான இடத்தை வாங்கி அங்கு த்வாரகாபுரியை அமைத்து மதுரையிலுள்ள யாதவர்களை அங்கே அழைத்துக்கொண்டு போய் காலயவநனுடைய பயத்தைத் தவிர்த்து, பின்பு தான் மதுரைக்கு வந்து கையில் ஆயுதமொன்றுமின்றியே வெளியே புறப்பட்டவளவில் அக் காலயவநன் பின் தொடர்ந்து யுத்தம் பண்ண வந்தான்; அவனைக் கண்டு க்ருஷ்ணன் விரைந்தோடி ஒரு மலையின் முழஞ்சில் நுழைந்தான். காலயவநனும் கூடவே நுழைந்து அங்கு "முன்பு தேவாஸுரயுத்தத்தில் தேவர்களுக்குத் துணையாயிருந்து போர் புரிந்து அஸுரர்களைக் கொன்று வெற்றி பெற்று அந்த ச்ரமம் ஆறுகைக்காக நெடுநாள் உறங்கவேணுமென்றும், அப்போது எழுப்புகிறவன் தன் பார்வையினால் உடனே எரிந்து போகக் கடவனென்றும், உடனே பகவானை ஸேவிக்கப் பெறவேணுமென்றும்" தேவர்களிடம் வரம் பெற்று வந்து படுத்து அயர்ந்து உறங்குகிற முசுகுந்தரைக் கண்டு "இவன் க்ருஷ்ணன், நம்முடன் யுத்தம் செய்யமாட்டாமல் ஓடி வந்து உறங்குவான்போல் கள்ளவேடம் போடுகிறான்"—என்று நினைத்து அந்த முசுகுந்தரைக் காலால் வலிய உதைக்கவே, அவர் திடுக்கிட்டெழுந்து காலயவநனைப் பார்க்க அப் பார்வையினால் அவன் எரிந்து செத்துப் போனான். பின்பு முசுகுந்தர் கண்ணபிரானை ஸேவித்து ஸ்தோத்ரம் செய்து க்ருதார்த்தரானார் என்றொரு கதையுண்டு. இப்படி ஸ்ரீ பாகவதத்தில் தசமஸ்கந்தத்தில் ஐம்பத்திரண்டா மத்யாயத்திலே ஜராஸந்தனுக்கு அஞ்சியோடுகிற பாவனை காட்டின கதை யொன்றுண்டு அதைத் திருவுள்ளம் பற்றி விநோதமாக வொரு கேள்வி கேட்கிறார் இதில்.

இப்படி ஜராஸந்தனிடத்தில் பயந்தவன் போல ஓடிச் சென்றது மநுஷ்யபாவநாப்ரயுக்தமாகில், பாணாஸுரயுத்தத்திலே ஜ்ரும்பகாஸ்த்ரப்ரயோகம் பண்ணி சிவனைக் கொட்டாவி விட்டுக்கொண்டு கிடக்கச்செய்தது மாத்திரம் என் கொல்? அது மநுஷ்யபாவனைக்குச் சேர்ந்த செயலோ? "முண்டனீறன் மக்கள் வெப்பு மோடியங்கியோடிட" என்கிறபடியே அவை

ஓடின ஓட்டம் நீ ஓடியிருந்தாலன்றோ மநுஷ்ய சரிதாநுவிதாகம் இசைந்திருப்பது. மநுஷ்ய பாவனையிலும் உன்னுடைய பாரம்யம் மறைக்கமுடியாதது காண் என்றாராய்த்து. (56)

ஜாதம் குதஸ் ததக்ருதஜ்ஞவிசேஷ்டிதம் தே புத்ரீயயா கில வரம் வவ்ருஷே வ்ருஷாங்காத் |
அக்ஷேஷு ஸக்தமதிநா ச நிராதரேண வாராணஸீ ஹரபுரீ பவதா விதக்தா || 57

புத்ரீயயா	புத்திரகாமனையினாலே	ஹர புரீ	(அந்த) ருத்ரனுடைய நகரமான
வ்ருஷாங்காத்	ருத்திரனிடத்தில்	வாராணஸீ	காசியானது
வரம் வவ்ருஷே	வரம் வேண்டினாய்	விதக்தா	தஹிக்கப்பட்டதாய்த்து;
	(மற்றொரு சமயத்தில்)	தத்	அப்படிப்பட்ட
அக்ஷேஷு	த்யூதக்ரீடையில்	அக்ருதஜ்ஞ விசேஷ்டிதம்	நன்றி கெட்ட வ்யாபாரமானது
ஸக்த மதிநா	ஆஸக்தனையும்		
நிராதரேண ச	ஊக்கமில்லாதவனையு மிருந்த	தே	உனக்கு
பவதா	உன்னாலே	குத: ஜாதம்	ஏன் உண்டாயிற்று.

கீழே பதினோராம் ச்லோகத்திலே "தம் வந்தஸே கில ததச் ச வரம் வ்ருணீஷே" என்றவிடத்தில் "புத்ரீயயா கில வரம் வவ்ருஷே வ்ருஷாங்காத்" என்ற வ்ருத்தாந்தத்தை விரித்துரைத்தோம், கண்டு கொள்வது.

[அக்ஷேஷு இத்யாதி] தன்னையே வாஸுதேவனாகச் சொல்லி அஹங்கரித்துக் கொண்டிருந்த பௌண்ட்ரகனைக் கண்ணபிரான் கொன்றொழித்ததை அவனுடைய தோழனான காசிராஜன் கேள்விப் பட்டு க்ருஷ்ணனையும் மற்றும் யாதவர்களையும் த்வாரகையையும் அழித்திடுவதாக ஸங்கல்பித்து ஒரு பிசாசத்தை ஸ்ருஷ்டித்து ஏவவிட்டான்; அது த்வாரகைக்கு வந்து ஜநங்களை பாதிக்கத் தொடங்கிற்று இதைச் செவியுற்ற கண்ணபிரான் அக்ஷக்ரீடையில் வ்யாப்ருத மநஸ்கனா யிருந்துகொண்டே தன் திருவாழியை ஏவியிட, அது அப் பிசாசத்தைத் துரத்திக்கொண்டு காசியளவும்போய் அதையும் அத்துடன் சேர்ந்து வந்த கணங்களையும் அந்த காசீபட்டணத்தையும் பஸ்மமாக்கியொழித்து ஸ்ரீ க்ருஷ்ணன் பக்கல் வந்து சேர்ந்ததிறே. சிவனிடத்தில் புத்ரவரம் வேண்டினதும் சிவபுரியான காசியை தஹித்தொழித்ததுமான இவ் விரண்டு வ்ருத்தாந்தங்களையும் எடுத்துரைத்து இப்படிப்பட்ட க்ருதக்நக்ருத்யமும் செய்யலாமோவென்கிறார். யாவனொரு சிவனிடத்தில் புத்ரார்த்தவரலாபமோ, அவனுடைய பட்டணத்தையே தஹித்தது க்ருதஜ்ஞதைக்குச் சேராதிறே என்கிறார். அவாப்த ஸமஸ்தகாமனான ஸர்வேச்வரனுக்கு புத்ரப்ரார்த்தனாதிகள் மநுஷ்யத்வ விடம்பநாநுகுணமாகையாலே க்ருதஜ்ஞதைக்கு ப்ரஸக்தி மாத்ரமு மில்லையென்று கருத்து. சிவனிடத்தில் புத்ரவரம் வேண்டினதைப்பற்றி இங்கே விரித்துரைக்க நினைத்ததை யெல்லாம் விஸ்தரபயத்தாலே நிறுத்திக்கொண்டோம். [புத்ரீயயா] புத்ரகாமநயா என்றபடி. [நிராதரேண] அவலீலையாகவே யென்று கருத்து. (57)

ஸஞ்ஜீவயந் நபி ம்ருதம் ஸுத முத்தராயா: ஸாந்தீபிநேச் சிர ம்ருதம் ஸுதமாநயம்ச்ச |
தாம்நோ நிஜாத் த்விஜஸுதாந் புந ராநயந் வா ஸ்வாமேவ தாம் தநுமஹோ கதமாநயஸ் த்வம்|| 58

ம்ருதம்	செத்துக்கிடந்த	நிஜாத் தாம்ந:	தன்னுடைச் சோதியில் நின்றும்
உத்தராயா: ஸுதம்	உத்தரையின் சிறுவனை		
ஸஞ்ஜீவயந் அபி	பிழைப்பியா நின்றும்	த்விஜ ஸுதாந்	வைதிக புத்ரர்களை
சிரம்ருதம்	நெடுநாளைக்குமுன் செத்துக்கிடந்த	புந: ஆநயந் வா த்வம்	மீட்டுக் கொணரா நின்று மிருந்த நீ
ஸாந்தீபிநே: ஸுதம்	ஸாந்தீபிநி புத்ரனை	ஸ்வாமேவ தாம் தநும்	அவரவர்களுடைய தான அந்த சரீரத்தையே
ஆநயந் ச	மீட்டுக் கொண்டு வாரா நின்றும்	கதம் ஆநய:	எப்படிக் கொண்டுவந்தாய்?
		அஹோ!	ஆச்சர்யம்.

பெரியாழ்வார் திருமொழியிலே "மாதவத்தோன் புத்திரன் போய்" என்கிற திருமொழியிலே முதல் மூன்று பாசுரங்களிலும் முன் அடிகளில் அநுஸந்தித்த மூன்று கதைகளைப் பேசி க்டுபடுகிறார். [ம்ருதம் உத்தராயா: ஸுதம் ஸஞ்ஜீவயந்] "மருமகன் தன் சந்ததியை உயிர் மீட்டு" என்றும் "உத்தரை தன் சிறுவனையுமுய்யக் கொண்டவுயிராளன்" என்று மருளிச்

செய்த வ்ருத்தாந்தம். அர்ஜுந புத்ரனான அபிமந்யுவுக்கு விராட ராஜபுத்ரியான உத்தரையி னிடம் பிறந்தவன் 'பரீக்ஷித்' எனப்படுவன், மஹாபாரத யுத்தத்தில் பதினெட்டாம் நாள் போரில் பீமஸேநனால் அழிக்கப்பட்ட துர்யோதனன் குற்றுயிராய்ப் போர்க்களத்தில் விழுந்து கிடக்க அவனுக்கு ஆச்வாஸோக்திகள் சொல்லிப் பாண்டவர்களை அந்த ராத்ரியிலே தான் கொன்று மீள்வதாகச் சொல்லிப் போன த்ரோணபுத்ரனான அச்வத்தாமன் இரவில் பாண்ட வர்களின் படைவீட்டில் புகுந்து அங்கே தூங்கிக் கொண்டிருந்த பலரையும் கொல்லுகையில் பாண்டவபுத்ரராகிய உபபாண்டவரையும் பாண்டவரென்றே நினைத்துத் தலை துணித்துச்செல்ல, பின்பு புத்ரசோகத்தினால் வருந்தின த்ரௌபதியை ஆச்வஸிப்பித்த அர்ஜுநன் அச்வத்தாமனை யெதிர்த்து யுத்தம் பண்ணி, ஜயித்து பங்கப்படுத்தினபோது அந்த அச்வத்தாமன் பாண்ட வரை வேரோடறுக்கும்படி ப்ரம்மாஸ்திரத்தை ப்ரயோகிக்க, அது பாண்டவரைக் கொல்ல வருமளவில் கண்ணபிரான் திருவாழியை ப்ரயோகிக்க, பயப்பட்டோடிய அந்த அபாண்ட வாஸ்த்ரம் உத்தரையின் கர்ப்பத்தை நோக்கிச் சென்று அதிலிருந்த குழந்தையை தஹிக்க, அதனால் கரிக்கட்டையாய் விழுந்த சிசுவை ஸ்ரீ க்ருஷ்ணன் "யதி மே ப்ரஹ்மசர்யம் ஸ்யாத் மயி ஸத்யம் ச திஷ்டதி—அவ்யாஹதம் மமைச்வர்யம் தேந ஜீவது பாலக:" என்றருளிச் செய்து, "பாதேந கமலாபேந ப்ரஹ்மருத்ரார்ச்சிதேந ச—பஸ்பர்ச புண்டரீகாக்ஷ: ஆபாத தல மஸ்தகம்" என்கிறபடியே தன் திருவடியால் அடிமுதல் முடியளவும் ஸ்பர்சிக்க, அந்தக் குழந்தை உயிர் பெற்று எழுந்திருக்கவே அதற்கு 'பரீக்ஷித்' என்று நாமகரணமாயிற்று.

[ஸாந்தீபிநே ரித்யாதி] 'மாதவத்தோன் புத்திரன் போய் மறிகடல் வாய் மாண்டானை ஓதுவித்த தக்கணையா உருவுருவே கொடுத்தான்" என்கிறது, கண்ணபிரான் ஸாந்தீபினி பக்க லிலே அத்யயநம் பண்ணித் தலைக் கட்டினவாறே குரு தக்ஷிணை ஸமர்ப்பிக்கத் தேடுகிற வள விலே இவனுடைய அதிமாநுஷ சேஷ்டிதங்களை யறிந்தவனாகையாலே, 'முன்பே ஸமுத்திரத் தில் ம்ருதனான என் புத்திரனைக் கொண்டு வந்து தரவேணும்' என்று அபேக்ஷிக்க 'தம் பாலம் யாதநா ஸம்ஸ்தம் யதா பூர்வ சரீரிணம்—பித்ரே ப்ரதத்தவாந் க்ருஷ்ண:" என்கிறபடியே அவ் வுருவோடே கொணர்ந்து கொடுத்தானிறே.

[தாம்நோ நிஜாதித்யாதி] "சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதியில் வைதிகன் பிள்ளைகளை, உடலொடும் கொண்டு கொடுத்தவன்" என்கிறது. ஒரு ப்ராம்மணனுக்கு முன்பே மூன்று பிள்ளைகள் பிறந்து அப்போதே காண வொண்ணாதபடி போய் விடுகையாலே நாலாவது ப்ரஸவஸமயத்திலே க்ருஷ்ணன் பக்கலிலே வந்து "இந்த ஒரு பிள்ளையையாகிலும் தேவரீர் ரக்ஷித்துத் தந்தருளவேணும்" என்றபேக்ஷிக்க, க்ருஷ்ணனும் அப்படியே செய்கிறோ மென்று இசைந்த வநந்தரம், ஏகாஹ தீக்ஷைபான க்ரதுவிலே தீக்ஷிதராயிருக்கிற விவர் எழுந் தருள வொண்ணாதென்று அர்ஜுநன் நான் போய் ரக்ஷிக்கிறேனென்று என்று கொண்டு ப்ராம்மணனையும் கூட்டிக்கொண்டு போய் ஸூதிகாக்ருஹத்தைச் சுற்றும் வாயுவும் ப்ரவேசிக்க வொண்ணாதபடி சரக்கூடமாகக் கட்டிக் காத்துக்கொண்டிருக்க, அந்தப் பிள்ளை பிறந்தவள விலே ப்ராம்மணன் வந்து அர்ஜுநனை 'க்ஷத்ரியாதமா உன்னாலேயன்றோ பிள்ளை போகவேண் டிற்று; க்ருஷ்ணன் எழுந்தருளி ரக்ஷிப்பதை நீயன்றோ கெடுத்தாய்' என்று வெறுத்து, க்ருஷ்ணன் பக்கலிலே தள்ளிக்கொண்டுவர, க்ருஷ்ணன் இத்தைக்கண்டு மந்தஸ்மிதம் பண்ணி 'அவனைவிடு, உனக்குப் பிள்ளை நாம் கொண்டுவந்து தருகிறோம்.' என்று ப்ராம்மணனுக்கு அருளிச்செய்து தான் பரமபதத்துச் சென்று நால்வரையும் அப்படியே கொண்டுவந்து கொடுத்தானிறே.

இப்படியாகில் 'ந ச புநராவர்த்ததே' என்கிற சாஸ்த்ர மர்யாதை குலைந்ததில்லையோ வென்னில்; கர்மஜ்ஞாந பக்தி ப்ரபத்யாத்யுபாயங்களை அநுஷ்டித்து தந்மூலமாகவே மோக்ஷ மடைந்தவர்களே அங்கு நின்றும் மீண்டு வருகிறதில்லை யென்க.

பரமபதத்திலுள்ள நாச்சிமார் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய ஸௌந்தர்யத்தைக் காண விரும்பித் தம் ஸ்வாதந்த்ரியத்தால் இச்சரீரத்துடனேயே பரமபதத்தில் கொண்டுபோய் வைத்திருந்த இவ் வைதிகபுத்ரர்கள் மீளாவுலகமாகிய அங்கு நின்றும் திரும்பி வருதலில் சாஸ்த்ர பாதக மில்லை யென்பர்கள்.

[ஸ்வாமேவ தாம் தநுமஹோ கதமாநயஸ் த்வம்] அகடித கடநா ஸாமர்த்யத்தாலே (58)
யிறே கொணர்ந்தாய் என்று கருத்து.

அத்யாபி நாஸ்த்யுபரதி: த்ரிவிதாபசாராத் பாப: பரே நிபதிதோஸ்மி தமஸ்யபாரே |
ஏதாத்ருசோஹ மகதிர் பவதோ தயாயா: பாத்ரம் த்வதீய சரணௌ சரணம் ப்ரபத்யே || 59

த்ரிவிதாபசாராத்	மூன்று விதமான அபசாரங்களில் நின்றும்	நிபதிதோஸ்மி	விழுந்துகிடக்கிறேன்
உபரதி:	ஒழிந்தமை	ஏதாத்ருச:	இப்படிப்பட்டவனாய்
அத்யாபி நாஸ்தி	இன்றைக்கு மில்லை;	அகதி:	உபாயாந்தர சூன்யனாய்
பாப:	பாபியான அடியேன்	பவத: தயாயா: பாத்ரம்	உன்னருளுக்குப் பாத்ரமாயிருக்கிற
பரே	மஹத்தாயும்	அஹம்	அடியேன்
அபாரே	துஸ்தரமாயுமிருக்கிற	த்வதீய சரணௌ	உன் திருவடிகளை
தமஸி	அஜ்ஞானத்திலே	சரணம் ப்ரபத்யே	சரணம் புகுகிறேன்.

கீழ் ச்லோகத்தோடே க்ருஷ்ணாவதார திவ்ய சேஷ்டிதாநுபவத்தைத் தலைக்கட்டினாராய், இனிமேல் மூன்று ச்லோகங்களாலே ஸ்வீய குணாநுஸந்தாநம் பண்ணி ஸ்தோத்ரத்தைத் தலைக்கட்டுகிறார். ஸ்வீயகுணாநுஸந்தாநமாகிறது கீழநுபவித்த பகவத் குணங்களுக்கு எதிர்த்தடையான தம் தாழ்வுகளை விண்ணப்பம் செய்தல்.

பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசாரங்களென்று சொல்லப்படுகிற த்ரிவிதாபசாரங்களில் நின்றும் இன்னமும்ஒழிந்திலேன். "அதோத: பாபாத்மா சரணத! நிமஜ்ஜாமி தமஸி" என்றாப்போலே கங்கு கரையற்ற தமஸ்ஸிலே விழுந்து துவளாநின்றேன். *மூதாவியில் தடுமாறுகின்றேனென்கை. இப்படிப்பட்ட அடியேன் வேறு புகலற்று உன்னருளுக்கே பாத்ரமாகி அடிக் கீழமர்ந்து புகுந்தேன்; திருவுள்ளம் பற்றியருளாயென்கிறார்.

"அத்யாபி நாஸ்த்யுபரதி:" என்றே பாட ப்ரஸித்தியிருந்தாலும் "அத்யாபி நஹ்யுபரத:" என்ற பாடம் தத்வதீபத்திலே வாதிகேஸரி ஆதரித்ததாம், ரீதிபேதமின்றிக்கே யிருக்குமாகையாலே அதுவே உசிதம். 'நாஸ்ம்யுபரத:' என்றுமுள்ளது. (59)

விஸ்ரம்பணம் த்வயி ந யத்யபி மேஸ்தி நாபி ச்ரத்தா யதோக்த வசநார்த்த கதா ததாபி |
வாசம் த்விமாம் ஸக்ருததாப்யஸக்ருந் மயோக்தாம் ஸத்யாம் குருஷ்வ தயயைவ தயைகஸிந்தோ|| 60

ஹே தயைக ஸிந்தோ	கருணைக்கடலான பகவானே	மே யத்யபி நாஸ்தி	அடியேனுக்கு இல்லையாயினும்
த்வயி	உன் பக்கல்		
விஸ்ரம்பணம்	மஹா விச்வாஸமானது	ஸக்ருத் மயா உக்தாம் இமாம் வாசம்	ஒரு கால் நான் சொன்ன இந்த வாக்யத்தை
மே யத்யபி நாஸ்தி	அடியேனுக்கு இல்லையாயினும்	அதாபி அஸக்ருத் உக்தாம்	மேன்மேலும் அடுத்தடுத்துச் சொல்லப்பட்டதாகவும்
யதோக்த வசநார்த்த கதா ச்ரத்தாபி	"த்வதீய சரணௌ சரணம் ப்ரபத்யே" என்று கீழ்ச் சொன்ன வாக்யத்தின் பொருளில் ச்ரத்தையும்	ஸத்யாம்	யதார்த்தமாகவும்
		தயயைவ	நின்னருளாலேயே
		குருஷ்வ	செய்தருளவேணும்.

பேரருளாளப் பெருமாளே! உன்னிடத்திலடியேனுக்கு மஹா விச்வாஸமில்லை யென்னுமளவேயல்ல;"த்வதீய சரணௌ சரணம் ப்ரபத்யே"என்று கீழ்ச்சொன்ன வாக்யந்தன்னிலும் அத்யவஸாயமுடையவனல்லேன் காண். இப்படியாகில் அடியேனைத் திருவுள்ளம் பற்றுகைக்குக் கைம்முதலொன்றுமில்லையேயென்று பார்க்கிறாயோ? உன்னருளாலே அது கனக்கவுண்டுகாண். "த்வதீய சரணௌ சரணம் ப்ரபத்யே" என்றுநான் மேலெழ ஒருகால் சொன்னது தன்னையே பலகால் சொன்னதாகவும் அதுதானும் ஹார்த்தமாய் பாரமார்த்திகமாய்ச் சொன்னதாகவும் செய்துகொள்ளக் கடவதான திருவருள் குறையற்றபின்பு இனி என் கார்யம் தலைக்கட்டினபடியேயன்றோ வென்கிறார். இத்தால் "நின்னருளே புரிந்திருந்தேன் இனி என் திருக்குறிப்பே" என்றதாய்த்து. நிர்ஹேதுக பகவத் க்ருபையே யாத்ருச்சிக—ப்ராஸங்கிக—ஆநுஷங்கிகாதி ஸுக்ருத லவலேசத்தை ஒன்று பத்தாக்கிக் கார்யம் செய்யவல்லதென்று சாஸ்த்ரார்த்தமு மூணர்த்தினபடி. (60)

பாபீயஸோபி சரணாகத சப்தபாஜ: நோபேக்ஷணம் மம தவோசித மீச்வரஸ்ய |
த்வத் ஜ்ஞாந சக்தி கருணாஸு ஸதீஷு நேஹ பாபம் பராக்ரமிது மர்ஹதி மாமகீநம் || 61

பாபீயஸ: அபி	பாபிஷ்டனாயிருந்தேனாகிலும்	த்வத் ஜ்ஞாந சக்தி கருணாஸு ஸதீஷு	உன்னுடைய ஜ்ஞானசக்தி க்ருபைகள் இருக்கும் போது
சரணாகத சப்தபாஜ:	சரணாகதனென்று பேர் சுமந்திரா நின்ற		
மம	அடியேனை	இஹ	இங்கே
உபேக்ஷணம்	உபேக்ஷிப்பதானது		
ஈச்வரஸ்ய தவ நோசிதம்	ஸர்வேச்வரனான வுனக்குத் தகாது.	மாமகீநம் பாபம்	என்னுடைய பாபம்
		பராக்ரமிதும் நார்ஹதி	வீறுபெறமாட்டாது காண்.

அடியேன் பாபங்கள் கூடுபூரித்துக்கிடப்பவனாயினும் சரணாகதனென்று பேர்சுமக்கிறேனாகையாலே அடியேனை உபேக்ஷித்தல் ஈச்வரனான வுனக்கு உரியதன்று கிடாய்; ஈசிதவ்ய ரக்ஷணம் ஈச்வரனுக்குக் கடமையிறேயென்று எம்பெருமானை நோக்கி ஆழ்வான் விண்ணப்பம் செய்ய, அது கேட்ட எம்பெருமான் 'உம்முடைய பாபங்கள் கழிந்தவாறே ரக்ஷிக்கக் கடவோம் காணும்' என்றருளிச் செய்ய; பிரானே! உன்னுடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வ சக்தித்வ ஸர்வபூத ஸுஹ்ருத்த்வாதி குணங்களின் முன்னே என்னுடைய பாபம் அஸத்கல்பமிறே; இது என்ன செய்ய முடியும்! அகிஞ்சித்கரமான என்னுடைய பாபத்தை த்ருணவத்கரித்து அப்ரதிஹத சக்திகமான உன்னுடைய குணங்களையே கொண்டு திருவுள்ளம் பற்றியருள வேணுமென்று விண்ணப்பம் செய்து ஸ்தோத்ரந்தன்னையும் தலைக்கட்டினாராய்த்து.(61)

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்.


ஆழ்வான் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய

அதிமாநுஷஸ்தவ வ்யாக்யாநம்

முற்றிற்று.

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

"ஸ்ரீராமாநுஜன்"

மாத இதழ் மறு வெளியீடு




உலகோர் உய்யும்வண்ணம் ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமி அருளிய பகவத் கல்யாண குணாநுபவக் கட்டுரைகள், வேதாந்தவிசாரங்கள், ரஹஸ்ய க்ரந்த நுண்பொருள்கள், ஸ்தோத்ரபாட அர்த்த விசேஷங்கள், ஆழ்வார்கள், ஆசார்யர்களின் பெருமை, திருவாய்மொழி, முதல் மூன்று திருவந்தாதிகள், பெரியதிருமொழி ஆகியவற்றிற்கான திவ்யார்த்த தீபிகை உரைககள் இந்த இதழை அணிசெய்கின்றன. அன்பர்கள் அனைவரும் ஸ்ரீராமாநுஜன் மாத இதழை ஆதரத்துடன் அநுபவித்துப் பயன்பெறுக! காரேய் கருணை இராமாநுசனின் அருள்பெறுக!

தனி இதழ் ரூபாய் 15/–, ஆண்டுச்சந்தா ரூபாய் 150/– ஆயுள்சந்தா ரூபாய் 1000/–

சந்தாத்தொகையினை ஸ்ரீராமாநுஜன் என்றபெயரில் **D.D.** (or) **M.O.** ஆக எடுத்து
214, கீழை உத்தரவீதி, ஸ்ரீரங்கம்–6 என்ற முகவரிக்கு அனுப்பி
வைத்திடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வெளியூர் காசோலைகள் **(Cheques)**
அனுப்பவேண்டாம் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

பாஞ்சஜன்யம்

வைணவத்தின் பக்திநெறி, இலக்கியச்சுவை, இலக்கணவளம், வரலாற்று உண்மைகள், ஆன்மீகக் கோட்பாடுகள், நுண்பொருட் தெளிவு, ஐயம் அகற்றல், உண்மை உணர்தல், பொய்மை எதிர்த்தல் ஆகிய பல துறைகளில் பற்பல உன்னதமான செய்திகள்! தேனினும் இனிய தெளிந்த நற்கட்டுரைகள்! அறிஞர்களின் ஆதாரபூர்வமான அறிவுச் செல்வங்கள்! அனைத்தும் அழகுத்தமிழில், பழகுமொழியில், தேவையெனின் ஆங்கிலத்திலும்! ஒவ்வொரு மாதமும் தரம்மிக்க தங்கள் சிந்தனைக்கு விருந்து படைத்துப் பரிமளிக்கின்றது உங்கள் பாஞ்சஜன்யம்.

மதிநலமிக்க தங்கள் மாண்பினுக்கேற்ப வைணவத்தின் பல படிகளில் பன்முக அறிவாற்றலைப் பாங்காக வழங்குகின்றது பாஞ்சஜன்யம். இன்பமிகு இறையருளும், எல்லையில்லாத் தொன்னெறிக்கண் ஈடுபாடும், இயைந்து ஓங்கப் பாரெல்லாம் முழங்குகின்றது நம் பாஞ்சஜன்யம். ஒவ்வொரு இதழும் 64 பக்கங்களைக் கொண்டது.

மயர்வறமதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களின் அருள்பெற்ற வைணவ உரையாசிரியர்களின் அறிவுக் கருவூலங்களையும், நுழைபுலம் மிக்க தாங்களும், தங்களது இளம் தலைமுறையினரும், எதிர்காலச் சந்ததியினரும், அருங்காதலுடன் அநுபவித்து மகிழ வேண்டும் என்பதே எங்கள் அவா. எனவே தாங்கள் பாஞ்சஜன்யத்தின் ஆயுள்சந்தா உறுப்பினராகச் சேர்ந்து பயனடைய வேண்டுகிறோம்.

தனிப்பிரதிவிலை ரூ.10/-


ஆண்டு சந்தா ரூ.100/-, ஆயுள் சந்தா ரூ.800/-

சந்தாத்தொகையினை **ஸ்ரீரங்கநாச்சியார் அச்சகம்**

என்ற பெயரில் மட்டுமே **D,D. (or) M.O.** எடுத்து 214, கீழை உத்தரவீதி, ஸ்ரீரங்கம்-6. என்ற முகவரிக்கு அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

Released by Maaran's Dog Toronto , Canada

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

ஸ்ரீபகவத் சாஸ்த்ரமாகிய ஸ்ரீபாஞ்சராத்ரம்

(காலாண்டு இதழ்)



மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் இந்த இதழில் ஸ்ரீபாஞ்சராத்ரம் பற்றிய வினாவிடை, ஸ்ரீவைஷ்ணவத்தின் அடிநிலைகள், திவ்யதேசத் திருக்கோயில்களில் நடைபெறும் உத்ஸவங்கள், ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தில் சில ஸம்ஹிதைகள் பற்றிய குறிப்புகள், வேதவிஜ்ஞானம், திவ்ய தேசங்களில் நடைபெறும் உத்ஸவங்கள், க்ரந்தபாஷை (பாலபாடம்) மற்றும் பல பயனுள்ள கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

மேலும் இதுவரை அச்சில் வெளிவராத, ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்த 'ஆகமப்ராமாண்யம்' ஸம்ஸ்க்ருதம், தமிழ் மூலம் அதற்கான விவரணத்துடன் வெளியிடப்படுகிறது. தனிப்பிரதி விலை ரூ.15/-, ஆண்டு சந்தா ரூ.60/-

பிரதிகள் கிடைக்கும் இடம்

திவ்யதேச பாரம்பரியப் பாதுகாப்புப் பேரவை,

214, கீழை உத்தரவீதி, ஸ்ரீரங்கம், திருச்சி - 6.

☎: 0431 - 2434398. E-Mail : akchari@vsnl.com

Released by Maaran's Dog Toronto , Canada

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

மொழியைக் கடக்கும் பெரும்புகழாளரான

ஸ்ரீகூரத்தாழ்வான் அருளிச்செய்த

சுந்தரபாஹுஸ்தவம்

ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமி இயற்றிய

வியாக்கியானத்துடன்



கள்ளழகர் - திருமாலிருஞ்சோலை

Released by Maran's Dog Toronto , Canada

மறுஅச்சு மற்றும் கிடைக்குமிடம் :

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ

Shrimal Pillai Loka charjar Sishyan ,Toronto , Canada

ஸ்ரீரங்கநாச்சியார் அச்சகம்

214, கீழை உத்தரவீதி, ஸ்ரீரங்கம் - 6.

Released by Maran's Dog Toronto , Canada

☎: 0431 - 2434398. E-Mail : akchari@vsnl.com

விலை ரூபாய் 45/- தபாற்செலவு தனி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:



ஸ்ரீகள்ளழகர் ஸந்நிதி முகப்புத் தோற்றம் – திருமாலிருஞ்சோலை

ஸ்ரீமந்தெள ஹரிசரணௌ ஸமாச்ரிதோஹம்
ஸ்ரீராமாவரஜமுநீந்த்ரலப்தபோத: ।
நிர்ப்பீகஸ் தத இஹ ஸுந்தரோருபாஹும்
ஸ்தோஷ்யே தச்சரணவிலோகநாபிலாஷீ ॥

– ஸுந்தரபாஹுஸ்தவம் 1

இந்நூலினை ஸ்ரீவைஷ்ணவ சமூகத்தினர் அனைவரும் குறைந்த விலையில் பெற்றுப் பயன்பெறும் வண்ணம், தரமான அச்சுத் தாளினை கொடுத்து உதவியவர் நமக்குபரம ஆப்தரும், ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேசங்களுக்கும், ஸம்ப்ரதாயத்திற்கும் பற்பல நற்பணி களைச் செய்துவருபவருமான ஸ்ரீ.S.A.R.ப்ரஸன்ன வேங்கடாசார்யர் சதுர்வேதி ஸ்வாமி (ஸ்ரீபாஷ்யகாரர் சாரிடபிள் டிரஸ்ட், சென்னை - 17.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

மொழியைக் கடக்கும் பெரும்புகழாளரான ஸ்ரீகூரத்தாழ்வான்
அருளிச்செய்த பஞ்சஸ்தவத்தில் மூன்றாவது ஸ்தவமான

ஸுந்தரபாஹுஸ்தவம்

ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமி இயற்றிய
வியாக்கியானத்துடன்

மணவாள மாமுனிகளின் 600ஆவது ஆண்டு
நிறைவு நினைவு மலர்களில் 13ஆவது மலராக பதிப்பிக்கப்பெற்றது.

பதிப்பித்த ஆண்டு :
3-11-1970 (சாதாரண ஐப்பசி திருமூலம்)

வெளியீடு :
கிரந்தமாலா, காஞ்சிபுரம்.

அச்சிட்டோர் :
Freedom Press, Madras - 21.

மறுஅச்சு மற்றும் கிடைக்குமிடம் :
ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ
ஸ்ரீரங்கநாச்சியார் அச்சகம்
214, கீழை உத்தரவீதி, ஸ்ரீரங்கம்-6.
☎: 0431 - 2434398. E-Mail: akchari@vsnl.com

24.01.2004

விலை ரூபாய் 45/-

தபாற்செலவு தனி.

ஸ்ரீரஸ்து.

கூரத்தாழ்வானருளிச்செய்த பஞ்சஸ்தவங்களுள்

மூன்றாவது ஸ்தவமான

ஸுந்தரபாஹுஸ்தவம்.

[ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய வியாக்கியானத்துடன்.]

— வியாக்கியான அவதாரிகை —


எம்பெருமானார் திருவடிவாரத்திலே அத்தாணிச் சேவகராயெழுந்தருளியிருந்து *மொழியைக்கடக்கும் பெரும்புகழான்* என்று வாசாமகோசரமான புகழைப்பெற்றவரான கூரத்தாழ்வான் சோழ ராஜனுடைய ஸதஸ்ஸிலேயெழுந்தருளி *சிவாத் பரதரம் நாஸ்தி* என்றதற்கு ப்ரதியாக *த்ரோணமஸ்தி ததஃபரம்* என்று பரிஹாஸமாகக் கையெழுத்திட்டு ச்ருதீதிஹாஸ புராண ப்ரமாண சத ஸஹஸ்ரங்களை யுபந்யஸித்து ஸ்ரீமந் நாராயணனுடைய பாரம்யத்தை ஸ்தாபித்தருளினவளவிலே வீரசைவனான அந்த சோழன் மிகச் சினங்கொண்டு ஆழ்வானுடைய திருக்கண்களுக்குத் தீங்கு விளைக்க, ஆழ்வானும் போர க்லேசித்து ஆச்வஸித்து மீண்டு நம்பெருமாள் ஸந்நிதியேற வெழுந்தருளி, அவ்விடத்தில் எம்பெருமானார் ஸேவை ஸாதித்தருளாமல் மேல்நாட்டுக் கெழுந்தருளியிருப்பதறிந்து அங்கு வஸிக்க ருசியாமையாலே திருமாலிருஞ்சோலையேற வெழுந்தருளப் புறப்பட்டு இந்த க்லேசங்கள் திருவுள்ளத்திலே நடையாடாதபடி எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுணவிபூதி சேஷ்டிதாதிகளை யநுஸந்தித்துப் போதுபோக்க விரும்பிச் சில ஸ்தவங்களை யருளிச்செய்யத்தொடங்கி ஸ்ரீவைகுண்டஸ்தவமும் அதிமாநுஷஸ்தவமும் வழியிடையே அருளிச்செய்து, திருமாலிருஞ்சோலைமலை சென்று சேர்ந்து அழகருடைய ஸர்வாங்க ஸௌந்தர்யத்தை யநுபவித்து அவ்வநுபவ பரீவாஹ ரூபமாக ஸ்ரீ ஸுந்தரபாஹுஸ்தவமென்கிற இந்த ஸ்தோத்ரத்தை யருளிச் செய்தாராயிற்று.

இது சப்த காம்பீர்யத்தாலும் அர்த்த புஷ்டியாலும் ஒப்புயர்வற்றதாயிருக்கும். ச்ருதீதிஹாஸ புராணங்களிலும் திவ்ய ப்ரபந்தங்களிலும் சிரபரிசயம் பண்ணியறிய வேண்டிய அரும்பெரும் பொருள்களெல்லாம் இதுதன்னிலே ச்லோகந்தோறும் அறியக் கிடக்கும்.

இந்த ஸ்தவத்தின் முடிவில் *விஜ்ஞாபநாம் வநகிரீச்வரஸத்யரூபாம்* என்று தொடங்கியுள்ள நான்கு ச்லோகங்களின் பொருளை யுற்றுநோக்கினால் ஸ்ரீரங்க வாஸத்தை யிழக்க நேர்ந்த வருத்தம் பொறுக்கமாட்டாமையே இந்த ஸ்தவமாகப் பரிணமித்ததென்பது கைகொள் கனியாகும். திருவரங்கம் பெரிய கோயிலிலே அஸத்துக்களை யொழித்து ஸத்துக்களைக் குடியிருக்கப்பண்ணி எம்பெருமானாருடைய திருவடி நிழலிலே அடியேன் பண்டுபோலே வாழும்படி கடாக்ஷித்தருளவேணும் என்கிற ப்ரார்த்தனையாகவே இந்த ஸ்தவம் நிகமிக்கப்பட்டுள்ளமை காண்க. *

அவதாரிகை முற்றிற்று.

கூரத்தாழ்வான் திருவடிகளே சரணம்.



ஸுந்தரபாஹுஸ்தவம்.

(ஆழ்வான் தனியன்.)

श्रीवत्सचिह्नमिश्रेभ्यो नमउक्तिमधीमहे ।
यदुक्तयस्त्रयीकण्ठे यान्ति मङ्गलसूत्रताम् ॥

ஸ்ரீவத்ஸசிஹ்நமிச்ரேப்யோ நமஉக்திமதீமஹே,
யதுக்தயஸ் த்ரயீகண்டே யாந்தி மங்களஸூத்ரதாம்.

श्रीमन्तौ हरिचरणौ समाश्रितोऽहं श्रीरामावरजमुनीन्द्रलब्धबोधः ।
निर्भीकस्तत इह सुन्दरोरुबाहुं स्तोष्ये तच्चरणविलोकनाभिलाषी ॥१॥

ஸ்ரீமந்தௌ ஹரிசரணௌ ஸமாச்ரிதோஹம்
ஸ்ரீராமாவரஜமுநீந்த்ரலப்தபோத:,
நீர்ப்பீகஸ் தத இஹ ஸுந்தரோருபாஹும்
ஸ்தோஷ்யே தச்சரணவிலோகநாபிலாஷீ. 1

— (வியாக்கியானம்.) —

काञ्चीवादिभयंकरवंशीयाण्णङ्गरार्यदासेन ।
सुन्दरबाहुस्तवकृतिविवृतिर्विशदा विरच्यते सैषा ॥

எம்பெருமானுர் திருவடிகளை ஸேவிக்கப் பெறவேணுமென்னுமவாவினுல் இந்த ஸ்தவத்தை விண்ணப்பஞ் செய்யப்புகுகின்றேனென்கிருர். இந்த ஸ்தவத்தின் பயனுக எம்பெருமானுருடைய திருவடி நிழலில் வாழ்ச்சி தமக்குக் கிடைக்கவேணுமென்கிருராயிற்று.

ஸ்ரீமந்தௌ ஹரிசரணௌ ஸமாச்ரித: அஹம்—எம்பெருமானுடைய திருப்பொலிந்த சேவடியைப் பணிந்தவனுன அடியேன்;

ஸ்ரீராமாவரஜமுநீந்த்ர லப்த போத:—எம்பெருமானுர் பக்கலிலே சைதந்யம் பெற்றவன். ஸ்வாமி திருவடிகளிலே ஆச்ரயித்து ஸகலார்த்தங்களையும் கேட்டு ஸத்தை பெற்றவுண்மையை வெளியிட்டுக் கொண்டபடி.

ததோ நிர்ப்பீக:— ஆதலால் பயப்படாதே நின்று. *கஜம் வா வீக்ஷ்ய ஸிம்ஹம் வா வ்யாக்ரம் வாபி வராங்கநா, நாஹாரயதி ஸந்த்ராஸம் பாஹூ ராமஸ்ய ஸம்ச்ரிதா* என்று, பிராட்டி பெருமாளுடைய திருத்தோள்களையண்டை கொண்ட பலத்தாலே ஒன்றுக்கு மஞ்சாதாப்போலே,

இஹ ஸுந்தரோருபாஹும் ஸ்தோஷ்யே — இவ்விடத்தில் சுந்தரத்தோளுடையானைத் துதிக்க விழிகின்றேன். (ஸுந்தர-உரு—பாஹும்—ஸுந்தரமாயும் பெரிதாயுமுள்ள பாஹுக்களையுடைய பெருமானை யென்கை.) எந்த பலஸித்திக்காக இந்த ஸ்தோத்ரமென்னில்;

தச்சரண விலோகந அபிலாஷீ ஸந் (ஸ்தோஷ்யே) — அந்த எம்பெருமானாராகிற அஸ்மதாசார்ய ஸார்வ பௌமருடைய திருவடிகளைக் கண்ணாரக் காணவேணுமென்னு மாசையையுடையேனாய்க்கொண்டு இந்த ஸ்தவத்திலிழியாநின்றேனென்கை.

இந்த ஸ்தவத்தின் முடிவிலும் *ஸ்ரீரங்கதாமநி யதாபுர மேகதோஹம் ராமாநுஜார்யவசகः பரிவர்த்திஷீய* என்று இந்தப் பலன் ஸ்பஷ்டீக்ருதம். முதலிரண்டு பாதங்களினால் தெரிவிக்கப்பட்ட விஷயம் (அதாவது—ஸ்ரீஹரிசரண ஸமாச்ரிதத்வமும், ஸ்ரீராமாவரஜமுநீந்த்ரலப்த போதத்வமும்) நிர்ப்பீகः என்னப்பட்ட நிர்ப்பயத்வத்தில் ஹேதுக்கள். கோட்டையினுள்ளே கிடப்பார்க்கு அஞ்சவேணுமோ? (1)

सुन्दरायतभुजं भजामहे वृक्षषण्डमयमद्रिमाश्थितम् ।
यत्र सुप्रथितनूपुरापगातीर्थमर्थितफलप्रदं विदुः ॥२॥

ஸுந்தராயதபுஜம் பஜாமஹே வ்ருக்ஷஷண்டமய மத்ரி மாஸ்திதம்,
யத்ர ஸுப்ரதித நூபுராபகாதீர்த்தம் அர்த்தித பலப்ரதம் விதுः. 2

சிலம்பாறு பாயும் தென் திருமாலிருஞ்சோலைமலை யுறையும் பெருமானை யடிபணிகின்றேனென்கிறார்,

வ்ருக்ஷஷண்டமயம் அத்ரிம் ஆஸ்திதம் ஸுந்தராயதபுஜம் பஜாமஹே—*கதள வகுள ஜம்பூ பூக மாகந்தேத்யாதிகளான வ்ருக்ஷங்கள் பலவும் நெருங்கிப் பெருஞ்சோலையாயிருப்பதுபற்றியேயிறே இத்தலத்திற்குத் திருமாலிருஞ்சோலையென்று திருநாமமாயிற்று. அப்படிப்பட்ட திருமலையிலே எழுந்தருளியிருக்கின்ற சுந்தரத்தோளுடையானைத் தொழுகின்றோம். (ஆச்ரிதம், ஆஸ்திதம் என்பன பாடபேதங்கள்.) அந்தத் திருமலையின் பெருமை எப்படிப்பட்டதென்ன, அது சொல்லுகிறது உத்தரார்த்தத்தில்.

யத்ர—யாதொரு திருமாலிருஞ்சோலைமலையிலே,

ஸுப்ரதித நூபுராபகாதீர்த்தம்—'சிலம்பாறு' என்றும் 'நூபுரகங்கை' என்றும் மிகவும் புகழ்பெற்றதாகி விளங்கும் திவ்ய தீர்த்தத்தை;

அர்த்தித பலப்ரதம் விது:—அவரவர்கள் விரும்பும் ஸகல பலன்களையும் அளிக்கவல்லதாக மஹான்கள் அறிந்துள்ளார்களோ, அப்படிப்பட்ட அத்ரிம் ஆச்ரிதம் பஜாமஹே என்று முடிவு காண்க.

ஆரோக்யம் ஸந்தானம் ஐச்வர்யம் மோக்ஷம் என்று சொல்லப்படும் ஸகல பலன்களையும் அர்த்திகளுக்கு அளிக்கவல்லதென்று புராண பௌராணிகர்களால் புகழப்பட்டதான நூபுரகங்கையினாலே அலங்க்ருதமான திருமாலிருஞ்சோலையிலே யெழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ ஸுந்தரபாஹு பகவானை பஜிக்கின்றோமென்றதாயிற்று. [ஸுந்தர ஆயத புஜம்] ஆயதமென்றது நீண்டதென்றபடி. [நூபுராபகாதீர்த்தம்] எம்பெருமான் திரிவிக்கிரமனாய் உலகளந்தருளுகிற காலத்திலே திருவடியில் அணிந்திருந்த நூபுரத்தினின்று [சிலம்பினின்று] பெருகின கங்கையென்கிற காரணத்தினால் நூபுர கங்கையென்று ப்ரஸித்திபெற்றது. பெரியாழ்வாரும் ஆண்டாளும் திருமங்கை

யாழ்வாரும் தத்தம் திவ்ய ப்ரபந்தங்களிலே இந்த நூபுர கங்கையின் ப்ரசம்ஸை செய்தருளியுள்ளார்கள்; *சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர்களாடுஞ் சீர்ச்சிலம்பாறுபாயுந் தென்திருமாலிருஞ்சோலையே* என்றார் பெரியாழ்வார்; * சங்தொடு காரகிலுஞ்சுமந்து தடங்கள் பொருதுவந்திழியுஞ் சிலம்பாறுடைமாலிருஞ்சோலை* என்றாள் ஆண்டாள். * சிலம்பியலாறுடைய திருமாலிருஞ்சோலை நின்ற* என்றார் திருமங்கையாழ்வார். (2)

क्वचित्त्वरितगामिनी क्वचन मन्दमन्दालसा क्वचित्स्खलितविह्वला क्वचन फेनिला सारवा ।
पतन्त्यपि किल क्वचिद्व्रजति नूपुराह्वा नदी सुसुन्दरभुजाह्वयं मधु निपीय मत्ता यथा ॥३॥

க்வசித் த்வரிதகாமிநீ க்வசந மந்தமந்தாலஸா
க்வசித் ஸ்கலித விஹ்வலா க்வசந பேநிலா ஸாரவா,
பதந்த்யபி கில க்வசித் வ்ரஜதி நூபுராஹ்வா நதீ
ஸுஸுந்தரபுஜாஹ்வயம் மது நிபீய மத்தா யதா. 3

கீழ்ச்லோகத்தில் நூபுராபகாதீர்த்தத்தின் ப்ரஸ்தாவம் செய்தருளினபடியாலே அந்த திவ்ய நதியின் கதிவிசேஷங்களை வருணித்தருளுகிறார் இந்த ச்லோகத்தில்.

நூபுராஹ்வா நதீ—நூபுரகங்கையானது,

ஸுஸுந்தரபுஜாஹ்வயம் மது நிபீய மத்தா யதா வ்ரஜதி—ஸுந்தரபாஹு பகவானுகிற மதுவைப்பருகி மதம்பிடித்ததுபோல இத்திருமலையிலே பெருகாநின்றது. * எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ் சோலைக்கோனே யென்கிற திருவாய் மொழியை நோக்குமளவில் சுந்தரத்தோளுடையானை மதுவென்னத் தகுதியுண்டே. உலகில் மதுபானம்பண்ணி மதித்தவர்களின் கதியும் இந்த நதியின் கதியும் ஒத்திருக்கையாலே "மது நிபீய மத்தா யதா வ்ரஜதி" என்கிறது. அந்த கதி எங்ஙனேயிராநின்றதென்னில்.;

க்வசித் த்வரித காமிநீ—சிலவிடங்களில் விரைந்தோடாநின்றது. வழியில் இடையூறொன்றுமில்லாதவிடங்களில் விரைந்தோடும் வெள்ளம் காணலாமிறே.

க்வசந மந்த மந்தாலஸா—சிலவிடங்களில் மிகமந்தமான கதியையுடைத்தாய்ப் பெருகாநின்றது. मन्दमन्दा च सा अलसा चेति विशेषणोभयपदकर्मधारयः ॥

க்வசித் ஸ்கலிதவிஹ்வலா—சிலவிடங்களிலே பெரிய கற்பாறைகளின் அபிகாதம் முதலான இடையூறுகளாலே தட்டித்தடுமாறிப் பெருகாநின்றது.

க்வசந பேநிலா—சிலவிடங்களில் நுரைததும்பிப் பெருகா நின்றது.

க்வசந ஸாரவா—பெரு முழக்கத்துடனே சிலவிடங்களில் பெருகா நின்றது.

க்வசிதபி பதந்தீ வ்ரஜதி—மேடான நிலத்திலிருந்து கீழ்நிலகுபாதாளத்திலே பெருகுமிடமும் சிலவுண்டு.

ஆகவிப்படி பஹுமுகமான விப்ரமங்களுடனே ப்ரவஹிக்கிற கதிவிசேஷங்களை நோக்குமிடத்தில் உலகில் மதுபானம்பண்ணி நடப்பாருடைய நடை நினைவுக்கு வாராநிற்குமாயிற்று. வேதாந்தங்களில் மதுவாகச் சொல்லப்பட்ட எம்பெருமானே இத்திருமலையில் அழகராக எழுந்தருளியிருப்பதனால் இவரை யநுபவித்ததனாலே மதுபர்களின் கதி விசேஷங்கள் இந்த நதிக்குமுண்டாயிற்றுப்போலுமென்று உல்லேகித்தபடி. ச்லோகத்தின் முடிவில் यथा என்றது இவ என்றபடி. ... (3)

उदधिगमन्दराद्रिमथिमन्थनलब्धपयोमधुररसेन्दिराह्वसुधसुन्दरदोःपरिघम् ।
अशरणमादृशात्मशरणं शरणार्थिजनप्रवणधियं भजेम तरुषण्डमयाद्रिपतिम् ॥४॥

உததிக மந்தராத்ரி மதி மந்தநலப்தபயோ
மதுரரஸேந்திராஹ்வஸுதஸுந்தரதோ: பரிகம்,
அசரணமாத்ருசாத்மசரணம் சரணார்த்திஜந
ப்ரவண தியம் பஜேம தருஷண்டமயாத்ரிபதிம். 4

ஆண்டாள் திருமாலிருஞ் சோலையழகரைப் பற்றிப் பேசும்போது (நாச்சியார் திருமொழியில்) *மந்தரம் நாட்டியன்று மதுரக் கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத்தோளுடையான் * என்றருளிச் செய்தாள். இப்பாசுரத்தில் 'மதுரக் கொழுஞ்சாறு' என்று பெரிய பிராட்டியாரையும் குறித்ததாக ஆழ்வான் திருவுள்ளம்பற்றி இந்த ச்லோகமருளிச்செய்கிறார்.* விண்ணவரமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்ட வெம்பெருமானே!* என்று திருமங்கையாழ்வாருமருளிச் செய்கிறார். தேவர்களுக்கு அமுதமெடுத்துக் கொடுக்கக் கடல் கடைந்த தென்பது வ்யாஜ மாத்ரம்.* फलेग्रहिर्हि कमलालाभेन सर्वः । श्रम:—பலேக்ரஹிர் ஹி கமலாலாபேந ஸர்வச் ச்ரம:* என்று பட்டரருளிச் செய்தபடியே பிராட்டியைப் பெறுவதே பரம ப்ரயோஜனமென்கையிலே ஔசித்யமிருக்கையாலே *மந்தரம் நாட்டியன்று மதுரக்கொழுஞ்சாறு கொண்ட* என்கிற ஆண்டாள் பாசுரத்திற்கு ஆழ்வான் திருவுள்ளம்பற்றின பொருள் இன்சுவை மிக்கதேயாகும். அப்பொருளைப் பதிய வைத்து இதில் பூர்வார்த்த மருளிச்செய்கிறார்.

[உததிகேத்யாதி.] உததிக—ஸமுத்ரத்தை யடைந்ததான, மந்தராத்ரி மதி—மந்தரமலையாகிற மத்தாலே (செய்யப்பட்ட) மந்தந—கடைதலினாலே, லப்த—அடையப்பட்ட,

பயோமதுரரஸ இந்திராஹ்வ ஸுத—பயஸ்ஸாகிற மதுரரஸமென்ன, பெரிய பிராட்டியாராகிய ஸுதை யென்ன இவ்விரண்டையு முடைத்தான, ஸுந்தரதோ: பரிகம்—உழல் தடிபோன்ற ஸுந்தர புஜங்களையுடையவராய். இதன் கருத்தாவது, தம்முடைய வலிமிக்க ஸுந்தர புஜங்களினாலே மந்தரமலையாகிற மத்தைக் கடலிலே யிட்டு அக்கடலைக் கடைந்து விண்ணவர்களின் அம்ருதமான உப்புச் சாற்றையும், *சீதக்கட லுள்ளமுது* என்கிறபடியே தம்முடைய அம்ருதமான பிராட்டியையும் கொண்டருளினவரென்கை.

அசரணமாத்ருசாத்ம சரணம்—புகலொன்றில்லாத அடியேன்போல்வாரான ஆத்மவர்க்கங்களுக்குப் புகலானவராய்;

சரணார்த்தி ஜந ப்ரவண தியம்—அடைக்கலம்புகுந்த அடியார்கள் பக்கலிலே அபிமுகமான திருவுள்ள முடையவராயிரா நின்ற;

தருஷண்டமய அத்ரிபதிம் பஜேம—திருமாலிருஞ் சோலைத் தலைவரை ஆச்ரயிக்கக் கடவோம். நம்முடைய பக்திக்கு இலக்காகுவோ மென்றபடி. ... (4)

शशधररिङ्खणाढ्यशिखमुच्छिखरप्रकरं तिमिरनिभप्रभूततरुषण्डमयं भ्रमदम् ।
वनगिरिमावसन्तमुपयामि हरिं शरणं भिदुरितसप्तलोकसुविश्रृङ्खलशङ्खरवम् ॥५॥

சசதரரிங்கணாட்யசிகம் உச்சிகரப்ரகரம்
திமிர நிபப்ரபூததருஷண்டமயம் ப்ரமதம்;
வநகிரிமாவஸந்தமுபயாமி ஹரிம் சரணம்
பிதுரிதஸப்தலோகஸுவிச்ருங்கலசங்கரவம். 5

திருவாய்மொழியில் *மதி தவழ்குடுமி மாலிருஞ்சோலை* என்றும், *அதிர்குரல் சங்கத்தழகர்தங்கோயில்* என்றுமுள்ள சந்தைகளைத் திருவுள்ளம்பற்றி இந்த ச்லோக மருளிச்செய்கிறார்.

சசதரரிங்கணுட்ய சிகம்—*மதிதவழ் குடுமி* என்கிறபடியே சந்த்ரஸஞ்சார ஸம்பந்தமான சிகரத்தை யுடைத்தாயும். *திங்கள் நன்மாமுகில்சேர் திருமாலிருஞ் சோலை* என்றார் திருமங்கையாழ்வாரும். இத்தால், சந்த்ரபதத்தளவு மோங்கினதென்று திருமலையின் உச்ச்ராயம் சொன்னபடி.

உச்சிகரப்ரகரம்—உத்துங்கமான கொடுமுடிகளின் கூட்டங்களை யுடைத்தாயும்.

திமிரநிப ப்ரபூததருஷண்ட மயம்—இருள் செறிந்தாற்போலவும் அபரிமிதமாகவு முள்ள சோலைகளால் ப்ரசுரமாயும்.

ப்ரமதம்—'இது சோலையே யல்லது மலையன்று' என்கிற ப்ராந்தியை விளைக்கவல்ல தாயு மிருக்கிற.

வநகிரிம் ஆவஸந்தம்— திருமாலிருஞ் சோலையிலே எழுந்தருளியிருப்பவராய்.

பிதுரித ஸப்தலோக ஸுவிச்ருங்கல சங்கரவம்—ஏழுலகங்களையும் பேதிக்கவல்லதான அப்ரதிஹத சங்கத்வநியை யுடையவரான.

ஹரிம் சரணம் உபயாமி— அழகரைத் தஞ்சமாகவடைகின்றேன்.

நான்காவது பாதமாகிய விசேஷணம் திருமாலிருஞ் சோலைக்கு மந்வயிக்கலாம். அழகர்க்கு மந்வயிக்கலாம்; இந்த விசேஷணத்திற்கு மூலமான *அதிர்குரல் சங்கத்தழகர்தங் கோயில்* என்ற திருவாய் மொழிப் பாசுரத்திலும் *அதிர்குரல் சங்கமென்கிற அடைமொழி அழகர்க்கும் அழகர்தங் கோயிலுக்கும் அந்வயிக்க வுரித்தாயிறே யிருப்பது. *மயல்மிகு பொழில்சூழ் மாலிருஞ் சோலை* என்கிற பாசுரத்தை இதில் இரண்டாவது பாதத்திற்குச் சேர அநுஸந்திப்பது. (5)

यत्तुङ्गशृङ्गविनिषङ्गिसुराङ्गनानां न्यस्तोर्ध्वपुण्ड्रमुखमण्डनमण्डितानाम् ।
दर्पण्यभूद्धृतमपाङ्कशशाङ्कपृष्ठं तद्धाम सुन्दरभुजस्य महान् वनाद्रिः ॥६॥

யத்துங்கச்ருங்க விநிஷங்கி ஸுராங்கநாநாம்
ந்யஸ்தோர்த்வ புண்ட்ரமுக மண்டந மண்டிதாநாம்,
தர்ப்பண்யபூத் த்ருதமபாங்க சசாங்கப்ருஷ்டம்
தத் தாம ஸுந்தர புஜஸ்ய மஹாந் வநாத்ரி:. 6

இந்த ச்லோகமும் திருமலையின் திருவளர்த்தியை வர்ணிக்கிற புடையிலே அமைந்தது. அதிசயோக்தி யலங்காரம். அழகரை ஸேவிப்பதற்காக தேவலோகத்திலிருந்து தெய்வ மகளிர்கள் திருமலைக்கு வருகிறார்கள்; *சிலம்பு ஆர்க்கவந்து தெய்வ மகளிர்களாடுஞ் சீர்ச்சிலம்பாறு பாயுந் தென் திருமாலிருஞ்சோலையே* என்று பெரியாழ்வாரருளிச்செய்தாரே. அப்படி வருகின்ற அவர்கள் நெற்றியில் ஊர்த்வ புண்ட்ராலங்காரமின்றிக்கே பெருமாளை ஸேவிக்க மாட்டாதவர்களாகையாலே திருமலையினுடைய உந்நதமான சிகரத்திலே யிருந்து நிர்மலமான சந்த்ர மண்டலத்தையே கண்ணாடியாகக்கொண்டு முகாலங்காரம் செய்துகொள்ளுகிறார்கள் என்பது இதில் சொல்லப்படுகிறது. இதனால் சந்த்ரமண்டலாவகாஹியான சிகரத்தையுடையது இத்திருமலையென்று ஒக்கம் சொல்லிற்றாகிறது.

ந்யஸ்தோர்த்வ புண்ட்ர முகமண்ட நமண்டிதாநாம்— அணியப்பட்ட ஊர்த்வபுண்ட்ரமாகிற முகாலங்காரத்தாலே அலங்கரிக்கப்பட்டவர்களான; (இது ஸுராங்கனைகளுக்கு **விசேஷணம்.)**

யத்துங்கச்ருங்கவிநிஷங்கி ஸுராங்கநாநாம்—யாதொரு திருமலையினுடைய உந்நதமான சிகரத்திலே வந்து சேர்ந்த தேவமாதர்களுக்கு,

த்ருதம் அபாங்க சசாங்கப்ருஷ்டம் தர்ப்பண்யபூத்—அகளங்க சந்த்ரமண்டலமானது கையிலேந்தப்பட்டுக் கண்ணாடியாயிற்றே;

தத் தாம—அந்த ஸ்தானமானது,

ஸௌந்தரபுஜஸ்ய மஹாந் வநாத்ரி:—சுந்தரத் தோளுடையானது திருமாலிருஞ்சோலைமலையாம்.

மலமறு மதிசேர் மாலிருஞ்சோலை என்ற திருவாய்மொழிப் பாசுரத்தை நோக்கி 'அபாங்க சசாங்க' என்றது. அபாங்கமென்றது அபகதமான அங்கத்தை [களங்கத்தை] யுடையதென்றபடி. நிஷ்களங்கமென்கை. சந்திரன் நிஷ்களங்கனாக இருக்க முடியுமோ வென்னில்; அடுத்த ச்லோகத்தில் சொல்லுகிறபடியே தேவதாந்தர ஸ்பர்சத்தினாலாகுங்களங்க முண்டே, அது தவிர்ந்தமை சொன்னபடி. சந்திரன் திருமாலிருஞ்சோலையை ஸேவித்து அந்தப் பாதகத்தைத் தீர்த்துக்கொண்டானென்க. ... (6)

यदीयशिखरागतां शशिकलां तु शाखामृगा निरीक्ष्य हरशेखरीभवनमामृशन्तस्ततः ।
स्पृशन्ति न हि देवतान्तरसमाश्रितेति स्फुटं स एष सुमहातरुव्रजगिरिर्गृहं श्रीपतेः ॥७॥

யதீயசிகராதாம் சசிகலாம் து சாகாம்ருகா:
நிரீக்ஷ்ய ஹரசேகரீபவநம் ஆம்ருசந்தஸ் தத:,
ஸ்ப்ருசந்தி ந ஹி தேவதாந்தரஸமாச்ரிதேதி ஸ்புடம்
ஸஏஷ ஸுமஹாதருவ்ரஜகிரிர் க்ருஹம் ஸ்ரீபதே:. 7

திருமாலிருஞ்சோலை மலையுச்சியில் சாகாம்ருகங்கள் [வானரங்கள்] ஸஞ்சரித்துக் கொண்டிருக்குமே; அவை சந்திரமண்டலத்தினருகே யிருக்கச் செய்தேயும் அந்த சந்திர மண்டலத்தைத் தொடுவதில்லையாம்; எதனாலே யென்னில்; "பிறைதங்கு சடையான்" என்றும் "சந்த்ரமௌலி" என்றும் சிவன் பேர் பெற்றிருப்பதற்கிணங்க சந்திரன் சிவனுக்குச் சிரோ பூஷணமாயிருப்பதனால், தேவதாந்தர ஸம்பந்தம் பெற்ற இந்த சந்த்ர கலையை பகவத் ஸம்பந்திகளான நாம் ஸ்பர்சிக்கத்தகாது என்று கருதித் தொடுகின்றன வில்லைபோலும் என்று உத்ப்ரேக்ஷிக்கிறது இந்தச்லோகம். இத்தால் சந்த்ரமண்டலத் தளவு மோங்கின சிகரத்தையுடையது திருமலையென்று திருமலையின் உந்நதியின் வீறு தான் சொல்லிற்றாகிறது.

சாகாம்ருகாஸ் து—குரங்குகளோவென்னில்; கீழ் ச்லோகத்தில் சொல்லப்பட்ட ஸுராங் கனைகளை வ்யாவர்த்திக்கிறது இந்த து சப்தம்; அவர்கள் வைஷ்ணவத்வ பூர்த்தியை யுடையவர்களல்லாமையாலே சந்திரமண்டலத்தைக் கையாலே தொட்டுக் காரியங் கொள்ளுகிறார்கள்; இந்தக் குரங்குகள் அவர்களிற் காட்டிலும் விலக்ஷணங்களென்று வாசிகாட்டப்பட்டதாயிற்று.

யதீயசிகராகதாம் சசிகலாம் நிரீக்ஷ்ய—யாதொரு திருமலையினுடைய சிகரத்தில் வந்த சந்திரகலையைப் பார்த்து;

ஹரசேகரீபவநம் ஆம்ருசந்தஸ் ஸந்த:—'இந்த சந்திரகலையானது ருத்ரனுக்கு சிரோ பூஷணமானதன்றோ' என்று அந்தத் தன்மையை ஆராய்ந்தவைகளாய்க் கொண்டு;

தத: தேவதாந்தரஸமாச்ரிதேதி ந ஹி ஸ்ப்ருசந்தி—தேவதாந்தரஸங்க முள்ளதன்றோவிது என்று கொண்டு அதனை ஸ்பர்சிப்பதில்லையோ;

ஸஏஷ ஸுமஹாதருவ்ரஜகிரி :—அப்படிப்பட்டதான விந்தத் திருமாலிருஞ்சோலைமலை யானது;
ஸ்ரீபதே: க்ருஹம்—திருமாலின் கோயிலாம்.

மூன்றும் பாதத்தின் முடிவில் ஸ்புடம் என்றது உத்ப்ரேக்ஷாலிங்கமென்று கொள்ளக்கடவது. (7)

सुन्दरदोर्दिव्याज्ञालम्भनकातरवशानुयायिनि करिणि ।
प्रणयजकलहसमाधिर्यत्र वनाद्रिस्स एष सुन्दरदोष्णः ॥८॥

ஸுந்தரதோர்திவ்யாஜ்ஞாலம்பந காதரவசாநுயாயிநி கரிணி,
ப்ரணயஜகலஹஸமாதிர் யத்ர வநாத்ரிஸ் ஸஏஷ ஸுந்தரதோஷ்ண: 8

பெரியாழ்வார் திருமொழியில் *கருவாரணம் தன்பிடி துரந்தோடக், கடல் வண்ணன் திருவாணை கூறத்திரியும் தண்மாலிருஞ்சோலையே* என்றருளிச்செய்த வதுவே இந்த ச்லோகமாக வடிவெடுத்திரா நின்றது. அப்பாசுரத்தின் மொழிபெயர்ப் பாகவே யமைந்ததாம் இந்த ச்லோகமென்க. அப்பாட்டின் முன்னடிகளை விட்டுப் பின்னடிகளைமாத்திரம் கொண்டாரிங்கு. திருமலையில் ஒரு யானை தன் பேடையோடு விளையாடிக்கொண்டிருக்கையில் ப்ரணயகலஹம் [ஊடல்] உண்டாகி அந்தப் பேடை யானது ஆண்யானையை விட்டுநீங்கி அப்பால் செல்லப் புறப்பட்டதாம்; அப்போது அந்தக்களிறு 'என்னை நீ பிரிந்து போகுயானால் அழகர் ஸ்ரீபாதத்தின்மேலாணை' என்று ஆணையிட்டவாறே அந்தப்பிடியானது அதனை மீறிப் போகமாட்டாதே அஞ்சி நிற்கு மென்று இங்குச் சொல்லப்படுகிறது. இதனால் திருமலையிலுள்ள திர்யக்குக்களுக்கும் அழகர்பக்கலிலே யுண்டான ப்ரதிபத்தியின் கனம் தெரிவிக்கப்பட்டதாகும்.

யத்ர—யாதொரு திருமாலிருஞ்சோலைமலையிலே,
கரிணி—ஒரு காட்டு யானையானது, (இது, ஸதிஸப்தமி.)

ஸுந்தரதோர்திவ்யாஜ்ஞாலம்பநகாதரவசா அநுயாயிநிஸதி—'அழகர் ஆணை' என்று சொல்லி அழகர்மேல் ஆணையிட்டதனாலே அந்த ஆணையை மீறிப்போகமாட்டாமல் திகைத்து நின்ற தன்பேடையை அநுஸரித்து நின்றவளவிலே,

ப்ரணயஜகலஹஸமாதி:—ப்ரணயகலஹம் சாந்தமாகி ஸமாதானமுண்டாகின்றதோ;
ஸ ஏஷ வநாத்ரி: ஸுந்தரதோஷ்ண:—அந்தத் திருமலையானது ஸுந்தரபாஹு வெம்பெரு மானுடையதாம்.

இரண்டாவது பாதத்தில் லம்பந என்றும் லங்கந என்றும் இருவகையான பாட முண்டு; இரண்டுபடியுமொக்கும்; (லம்பந) என்னும் பாடத்தில் லம்பநேந காதரா என்று த்ருதீயாஸமாஸம் கொள்ளக்கடவது; (லங்கந) என்னும் பாடத்தில் லங்கநாத் காதரா என்று பஞ்சமீஸமாஸம் கொள்ளக்கடவது. வசா என்று பெண்யானைக்குப் பெயர்; தமி ழில் பிடி என்பதுபோல. (8)

स एष सौन्दर्यनिधेर्धृतश्रियो वनाचलो नाम सुधाम यत्र हि ।
भुजङ्गराजस्य कुलस्य गौरवान्न खण्डिताः कुण्डलिनश्शिखण्डिभिः ॥९॥

ஸஏஷ ஸௌந்தர்யநிதேர் த்ருதச்ரிய: வநாசலோ நாம ஸுதாம யத்ர ஹி,
புஜங்கராஜஸ்ய குலஸ்ய கௌரவாத் ந கண்டிதா: குண்டலிநச் சிகண்டிபி: 9

ப்ரஸங்காத் இதுமுதல் மூன்று ச்லோகங்களாலே திருமலையிலுள்ள திர்யக்குக் களின் விலக்ஷண சர்யாவிசேஷங்கள் பேசப்படுகின்றன. மயில்களானவை எங்கும்

இயற்கையாக ஸர்ப்பங்களைக் கண்டிப்பனவென்று ப்ரஸித்தம்; திருமலையிலுள்ள மயில்களோவென்னில், * சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம், நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும் புணையாமணி விளக்காம் பூம்பட்டாம் புல்குமணையாம் திருமாற்கு அரவு* என்கிற பொய்கையாழ்வார் பாசுரப்படியும், * நிவாஸ சய்யாஸந பாதுகாம்சுகோபதாந வர்ஷாதபவாரணுதிபி:, சரீரபேதைஸ் தவ சேஷதாம் கதைர் யதோசிதம் சேஷ இதீரிதே ஜநை:* என்கிற ஆளவந்தார் ஸ்ரீஸூக்திப்படியும் எம்பெருமானுக்கு ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வவித கைங்கர்யங்களிலும் நிரதனுன திருவனந்தாழ்வான் பக்கலிலுள்ள கௌரவப்ரதிபத்தியாலே அவனுடைய குலத்திலுதித்தவர்களை நாம் நலியலாகாதென்று நட்புக்கொண்டாடியிருக்கும்படியை இந்த ச்லோகத்திலருளிச்செய்கிறாராயிற்று. "தத்ஸந்நிதௌ வைரத்யாக:" என்னக் கடவதிறே.

யத்ர—யாதொரு திருமாலிருஞ்சோலைமலையிலே,

குண்டலிந:—(மயில்களுக்கு இயற்கையில் வைரிகளான) ஸர்ப்பங்களானவை,

புஜங்கராஜஸ்ய குலஸ்ய கௌரவாத்—ஆதிசேஷஸந்தானமென்கிற கௌரவப்ரதிபத்தியாலே,

சிகண்டிபி: ந கண்டிதா:—மயில்களினால் கடிக்கப்படவில்லையோ;

வநாசலோ நாம ஸஏஷ:—திருமாலிருஞ்சோலையென்று ப்ரஸித்தமான இத்திருமலையானது,

ஸௌந்தர்யநிதே: த்ருதச்ரிய: ஸுதாம—*ஏறுதிருவுடையாரென்று ப்ரஸித்திபெற்ற அழகருக்கு அழகிய கோயிலாம். (9)

वृषगिरिरयमच्युतस्य यस्मिन् स्वमतमलङ्घयितुं परस्परेभ्यः ।
खगपतिचरणौ खगाश्शपन्ते भुजगपतेर्भुजगाश्च सर्व एव ॥१०॥

வ்ருஷகிரிரயமச்யுதஸ்ய யஸ்மிந் ஸ்வமதமலங்கயிதும் பரஸ்பரேப்ய:,
ககபதிசரணௌ ககாச் சபந்தே புஜகபதேர் புஜகாச் ச ஸர்வ ஏவ.

பறவைத்திரள்களுள் ப்ரணயகலஹம் நேர்ந்தால் பெரிய திருவடிபாதத்தின்மேலாணையிடுவதும், ஸர்ப்பகணங்களுள் ப்ரணயகலஹம் நேர்ந்தால் திருவனந்தாழ்வானடிமேலாணையிடுவதும் திருமலையில் நிகழ்கிறபடியை யருளிச்செய்கிறாரிதில்.

யஸ்மிந்—யாதொரு திருமாலிருஞ்சோலைமலையிலே;

ஸர்வே ககா:—ஸகல பக்ஷிவர்க்கங்களும்,

ஸ்வமதம் அலங்கயிதும்—தம்தமக்கு ப்ரதிஜ்ஞாதமான அம்சத்தை அதிக்ரமித்து நடவாமைக்காக,

ககபதிசரணௌ பரஸ்பரேப்ய: சபந்தே—பக்ஷிராஜனுடைய பாதங்களின்மேல் ஆணையிடுவதையே பரஸ்பரம்செய்து போருகின்றனவோ,

புஜகாச்ச ஸர்வே புஜகபதேரேவ சரணௌ சபந்தே—"ஸ்வமத மலங்கயிதும் பரஸ்பரேப்ய:" என்றதற்கு இவ்விடத்திலும் அநுஷங்கமாகக் கடவது. ஸர்ப்பஜாதிகளெல்லாம் ஸ்வாபிமத ஸித்திக்காக ஆதிசேஷனடிமேல் ஆணையிடுகின்றனவோ;

அயம் வ்ருஷகிரி: அச்யுதஸ்ய—இந்தத் திருமாலிருஞ்சோலை மலையானது அடியார்களை ஒருகாலும் நழுவவிடாதவரான அழகருடையதாம். கீழ்ச்லோகத்திலிருந்து ஸுதாம என்கிற பதத்தை இங்கும் ஆகர்ஷித்துக்கொள்ளவுமாம். (10)

हरिकुलमखिलं हनूमदङ्घ्रिं स्वकुलपजाम्बवतस्तथैव भल्लाः ।
निजकुलपजटायुषश्च गृध्राः स्वकुलपतेश्च गजा गजेन्द्रनाम्नः ॥ ११ ॥

ஹரிகுலமகிலம் ஹநூமதங்க்ரிம் ஸ்வகுலபஜாம்பவதஸ் தததைவ பல்லாঃ,
நிஜகுலபஜடாயுஷச் ச க்ருத்ரா: ஸ்வகுலபதேச் ச கஜா கஜேந்த்ர நாம்நঃ. 11

கீழ்ச்லோகத்தி லிருந்து "ஸ்வமத மலங்கயிதும் பரஸ்பரேப்யச் சபந்தே" என்கிற வாக்யம் இந்த ச்லோகத்தில் பாதந்தோறும் அநுஷங்கம் செய்துகொள்ளத் தக்கது. இது, மூலத்தில் (தததைவ)என்பதனால் ஸூசிதம். முடிவில்* வ்ருஷகிரிரயமச்யுதஸ்ய* என்பதும் கீழ்ச்லோகத்திலிருந்து வருவித்துக்கொள்ள வுரியது. கீழ்ச்லோகமும் இந்த ச்லோகமும் சேர்ந்து குளகம் என்றதாயிற்று.

ஹரிகுல மகிலம் ஹநூமதங்க்ரிம்—திருமலையில் வாநரவர்க்கமெல்லாம் ஆணையிடவேண்டிய ப்ரகரணங்களிலே திருவடியின் ஸ்ரீபாதத்திலாணை என்னுமாம் ;

ஸ்வகுலபஜாம்பவதஸ் தததைவ பல்லாঃ— கரடிகளெல்லாம் தங்கள் குலக்கொழுந்தான ஜாம்பவான்மேல் ஆணையிடுமாம்.

க்ருத்ராঃ நிஜகுலபஜடாயுஷঃ— கழுகுகளெல்லாம் தங்கள் குலத்தரசனான ஜடாயுவின் மேல் ஆணையிடுமாம்.

கஜாঃ ஸ்வகுலபதேঃ கஜேந்த்ரநாம்நঃ—யானைகளெல்லாம் தங்கள் குலபதியான கஜேந்திராழ்வான்மேல் ஆணையிடுமாம்.

முதல் பாதத்தில் அங்க்ரிம் என்பது வ்யஸ்த பதமாகவன்றிக்கே ஸமஸ்தபதமாயிருந்தாலும் மேல்பாதங்களிலுள்ள ஷஷ்ட்யந்த விசேஷ்ய பதங்களின் பக்கத்திலும் சேர்த்துக்கொள்ளத் தக்கது. ஜாம்பவதঃ அங்க்ரிம், ஜடாயுஷঃ அங்க்ரிம், கஜேந்த்ர நாம்நঃ அங்க்ரிம்—என்று கொள்க. ஜடாயு சப்தத்தை அதிமாநுஷஸ்தவத்தில் உகாராந்தமாக ப்ரயோகித்த இவர்தாமே இங்கு ஷகாராந்தமாக ப்ரயோகித்திருக்கையாலே இரண்டுபடியு முண்டென்று கொள்வது. (11)

वकुलधरसरस्वतीविषक्तस्वररसभावयुतासु किन्नरीषु ।
द्रवति दृषदपि प्रसक्तगानास्विह वनशैलतटीषु सुन्दरस्य ॥ १२ ॥

வகுலதரஸரஸ்வதீவிஷக்த ஸ்வரரஸ பாவயுதாஸு கிந்நரீஷு,
த்ரவதி த்ருஷதபி ப்ரஸக்தகாநாஸு இஹ வநசைலதடீஷு ஸுந்தரஸ்ய.()

திருமாலிருஞ்சோலைமலையிற் பெருகும் நூபுர கங்கைக்குத் தமிழில் சிலம்பாறு என்று திருநாமம். நூபுர மென்னும் வடசொல் சிலம்பென்று கிடப்பதாக யாவருமறிவர். ஆனாலும், சிலம்பென்கிற தமிழ்ச் சொல்லுக்கு மலையென்கிற பொருளும் தமிழ் நிகண்டுகளில் ப்ரஸித்தம். மூன்றாந் திருவந்தாதியில் *வேங்கடமே தீங்குழல் வாய்வைத்தான் சிலம்பு* என்ற பாசுரத்திலும் மலையென்கிற பொருளிலே சிலம்பென்கிற பதம் பிரயோகிக்கப்பட்டிருப்பது காணத்தக்கது. ஆழ்வான் இப்போது இப்பொருளைத் திருவுள்ளம் பற்றி இந்த ச்லோக மருளிச்செய்கிறபடி. சிலம்பு என்னப்படுகிற மலைதானே ஆருகவுருகிப் பெருகினபடியாலே சிலம்பாறு என்னப் பெற்றது போலும் என்று இப்படிப்பட்ட உல்லேகம் இப்போது ஆழ்வான் திருவுள்ளத்திலோடுகின்றது. மலை ஆருகவுருகிப் பெருகவேண்டிய காரணமென்னென்ன, அது தன்னைச் சொல்லுகிற தாய்த்து இந்த ச்லோகம் முழுவதும்.

கிந்நரஸ்த்ரீகள் அழகரை ஸேவிக்க இத்திருமலையில் தாழ்வரைகளிலே வந்து சேர்ந்து, நம்மாழ்வார் இத்திருப்பதி விஷயமாக அருளிச்செய்த *கிளரொளியிளமை* *முடிச்சோதியாய் *செஞ்சொற்கவிகாள்* என்கிற திருவாய்மொழிகளை ஸுஸ்வரமாகவும் ரஸவத்தரமாகவும் ஸாபிப்ராயமாகவும் பாடுகிறார்களாம்; *மரங்களு மிரங்கும் வகை மணிவண்ணவோவென்று கூவுமால்* என்னும்படியான அருளிச்செயல்களை அப்படி பாடும்போது கல்லும் உருகாநின்றது; உருகினவதுதானே ஆறாய்ப் பெருகிற்று— என்கிறார்.

வகுலதரஸரஸ்வதீவிஷக்த —மகிழ்மாலை மார்பினரான நம்மாழ்வாருடைய திருவாய்மொழியில் ஸம்பந்தித்திருக்கிற,

ஸ்வரரஸ பாவயுதாஸு கிந்நரீஷு—ஸ்வரங்கள் ரஸங்கள் கருத்துகள் ஆகிய இவற்றோடு கூடினவர்களான கின்னர மாதர்கள்,

ஸுந்தரஸ்ய இஹ வநசைலதடீஷு—அழகருடைய திருமலைத் தாழ்வரைகளிலே,

ப்ரஸக்த காநாஸு ஸதீஷு—அவ்வருளிச் செயல்களைப் பாடாநின்றவளவில்,

த்ருஷதபி த்ரவதி—கல்லும் கரையா நின்றது. (அதுவே சிலம்பாறென்று பேர் பெற்றதென்பதாகப் பூரித்துக் கொள்வது.) (12)

भृङ्गी गायति हंसतालनिभृतं तत्पुष्णती कोकिलाऽप्युद्गायत्यथ वल्लितल्लजमुखादास्रं मधु स्यन्दते ।
निष्पन्दस्तिमिताः कुरङ्गततयश्शीतं शिलासैकतं सायाह्ने किल यत्र सुन्दरभुजस्तस्मिन्वनक्ष्माधरे ॥ १३ ॥

ப்ருங்கீ காயதி ஹம்ஸதாள நிப்ருதம் தத் புஷ்ணதீ கோகிலாபி
உத்காயத்யத வல்லிதல்லஜமுகாத் ஆஸ்ரம் மது ஸ்யந்ததே,
நிஷ்பந்தஸ்திமிதா: குரங்கததயச் சீதம் சிலாஸைகதம்
ஸாயாஹ்நே கில யத்ர ஸுந்தரபுஜஸ் தஸ்மிந் வநக்ஷ்மாதரே. 13

சுந்தரத் தோளுடையான் எழுந்தருளி யிருக்கிற திருமலையிலே மாலைப் பொழுதுகளில் நிகழும்படிகளை ஸ்வபாவோக்தி முறையிலேயே யருளிச்செய்கிறார்.

ஹம்ஸதாள நிப்ருதம் யதாததா ப்ருங்கீ காயதி—ஹம்ஸ கதியானது தாளமாகவும் வண்டினம் முரல்வது ஸங்கீதமாகவும் ஆகா நின்றது. ஹம்ஸகதியைப்போலவே ஹம்ஸ ஸ்வநத்தையும் தாளமாகக் கொள்ளலாம். ஹம்ஸதாளத்திற்குப் பொருத்தமாக வண்டுபாடா நின்றதாம்.

கோகிலாபி தத் புஷ்ணதீஸதீ உத்காயதி—அந்த வண்டினம் முரல்வதை யநுஸரித்துக் குயில் பேடை தானும் உயரக் கூவாநின்றது.

அத வல்லிதல்லஜமுகாத் மது ஆஸ்ரம் ஸ்யந்ததே—செவிக்கினிதாகப் பாடுவாருண்டாகில் கேட்டு ஆனந்த பரீவாஹமாகக் கண்ணீரைப் பெருக்குவாருமுண்டே; அப்படியே இங்கு முண்டென்கிறது. சிறந்த கொடிகளில் நின்றும் மகரந்தமே அச்ருவாகப் பெருகுகின்றதாம். அத—கீழ்ச்சொன்ன ஸங்கீத ப்ரவ்ருத்திக்குப் பிறகு என்றபடி.

குரங்கததய: நிஷ்பந்தஸ்திமிதா:—உயர்ந்த ஸங்கீதத்தைக் கேட்டு ஸ்தம்பித் திருப்பாருமுண்டே, அப்படியு முண்டென்கிறது; கண்ணபிரான் குழலூதினபோது *மருண்டு மான்கணங்கள் மேய்கை மறந்து மேய்ந்த புல்லுங் கடைவாய் வழிசோர, இரண்டுபாடுந் துலுங்காப் புடைபெயரா எழுது சித்திரங்கள்போல நின்றனவே* என்கிறபடியே மான்கள் ஸ்தம்பித்திருந்ததுபோலவே இங்குமுள்ளது. நிஷ்பந்தத்வ

மாவது கரசரணுதிகளை அசைக்காமலிருத்தல்; ஸ்திமிதத்வமாவது இமைகொட்டாமலிருத்தல் என்று கொள்வது.

சிலாஸைகதம் சீதம்—கற்களும் மணல்களும் நீரைப் பெருக்கிக் குளிர்ச்சி பெற்றனவாயின. *ஸர்வோ த்வந்த்வோ விபாஷயா ஏகவத் பவதி* என்கிற பரிபாஷையினுல் *சிலாஸைகத மென்கிற ஏகவசநம் உபபந்நம்.

ஏவம் ஸாயாஹ்நே யத்ர வநகக்ஷமாதரே பவதி, தஸ்மிந் ஸுந்தரபுஜ: (விலஸதி)—இவ்வண்ணமாக மாலைப் பொழுதில் எந்தத் திருமலையில் நிகழ்கின்றதோ அந்தத் திருமலையில் சுந்தரத்தோளுடையானுளன். "யத்ர ஸுந்தரபுஜ: அஸ்தி, தஸ்மிந் வநக்ஷமாதரே ஸாயாஹ்நே ஏவம் பவதி" என்றும் யோஜித்துக் கொள்ளலாம். ... (13)

पीताम्बरं वरदशीतलदृष्टिपातमाजानुलम्बिभुजमायतकर्णपाशम् ।
श्रीमन्महावनगिरीन्द्रनिवासदीक्षं लक्ष्मीधरं किमपि वस्तु ममाविरस्तु ॥ १४ ॥

பீதாம்பரம் வரதசீதலத்ருஷ்டிபாதம் ஆஜாநுலம்பிபுஜமாயதகர்ணபாசம்,
ஸ்ரீமந்மஹாவநகிரீந்த்ரநிவாஸதீக்ஷம் லக்ஷ்மீதரம் கிமபி வஸ்து மமாவிரஸ்து.

கீழ்ப் பதின்மூன்று ச்லோகங்களும் இந்த ஸ்தவத்திற்கு ப்ரவேசமப்போலமைந்தன; திருமலையின் வளஞ் சொல்லித் தலைக் கட்டிருராயிற்று. இனி அழகருடைய துதியிலே யொருப்படுகிருர்.

கிமபி வஸ்து மம ஆவிரஸ்து— அழகரென்கிற ஒரு பரஞ்சோதி என் கண் முன்னே தெருநினுள்ளே தோன்றக் கடவது: அதுதான் எப்படிப்பட்டதென்னில்;

பீதாம்பரம்— *பீதகவாடைப் பிரானுர்* என்கிறப்டியே பீதாம்பரதரமாயிருக்கும்.

வரதசீதலத்ருஷ்டிபாதம்— வேண்டுவார் வேண்டின வரங்களெல்லா மளிக்கவல்லதாய் சீதளமான கடாக்ஷ வீக்ஷணத்தை யுடையதாயிருக்கும்;

ஆஜாநுலம்பிபுஜம்— முழந்தாளளவும் தொங்குகின்ற புஜங்களை யுடைத்தாயுமிருக்கும்;

ஆயதகர்ணபாசம்— தோளளவும் நீண்ட திருச் செவிமடல்களையுடைத்தாயுமிருக்கும்;

ஸ்ரீமந்மஹாவநகிரீந்த்ரநிவாஸதீக்ஷம்— திருமாலிருஞ்சோலைமலையிலே நித்ய வாஸவ்ரதமாயுமிருக்கும்;

லக்ஷ்மீதரம்— *பூவார் திருமாமகள் புல்கிய மார்பதாயுமிருக்கும். ஆகவிப்படிப்பட்ட ஒரு விலக்ஷண வஸ்து அடியேனுக்கு விளங்கவேணு மென்ருராயிற்று. ... (14)

जनिजीवनाप्ययविमुक्तयो यतो जगतामिति श्रुतिशिरस्सु गीयते ।
तदिदं समस्तदुरितैकभेषजं वनशैलसम्भवमहं भजे महः ॥ १५ ॥

ஜநிஜீவநாப்யய விமுக்தயோ யதோ
ஜகதாமிதி ச்ருதிசிரஸ்ஸு கீயதே,
ததிதம் ஸமஸ்ததுரிதைகபேஷஜம்
வநசைலஸம்பவமஹம் பஜே மஹ:. 15

இனி வேதாந்த ப்ரக்ரியையாலே ஸ்துதிக்க உபக்ரமிக்கிருர்; *யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத் ப்ரயந்த்யபிஸம்விசந்தி, தத் ப்ரஹ்ம* என்று உபநிஷத்து ஓதின கட்டளையிலேயாகிறது.

ஜகதாம் ஜநிஜீவநாப்யய விமுக்தய: —ஜகத்துக்களுக்கெல்லாம் உத்பத்தி ஸ்திதிலயங்களும் மோக்ஷப்ராப்தியும்.

யதஃ இதி ச்ருதி சிரஸ்ஸு கீயதே — யாதொரு பரஞ்சோதியிடத்தினின்றுமாகின்றன வென்று வேதாந்தங்களிலே ஓதப்படுகின்றதோ,

ஸமஸ்த துரித ஏகபேஷஜம்—ஸகல பாபங்களுக்கும் அருமருந்தாய்,

வநசைலஸம்பவம்— திருமாலிருஞ் சோலைமலையிலே தோன்றிற்றுகவுள்ள,

ததிதம் மஹ:—அப்படிப்பட்ட பரஞ்சோதியை,

அஹம் பஜே— நான் பஜிக்கிறேன்.

முதற்பாதத்தின் முடிவில் (யதஃ) என்றருளிச் செய்தது *யதோ வா இமாநி பூதாநி* என்கிற உபநிஷத் வாக்யத்திற்கு ப்ரத்யபிஜ்ஞாபகமாகும். அந்த ச்ருதிவாக்யத்தில் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் மாத்திரமே சொல்லப்பட்டிருந்தாலும் *அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி* இத்யாதி கீதாஸித்தமான விமுக்தியையும் சேர்த்து "ஜநிஜீவநாப்யயவிமுக்தயஃ" என்றருளிச் செய்தாராயிற்று. அது தோன்றவே கீயதே என்று ப்ரயோகித்தருளிற்று. எம்பெருமானுக்குள்ள மோக்ஷப்ரதத்வத்தை ஸ்திதி ஸம்ஹாரங்களுள் ஏதேனு மொன்றிலே அடக்கிவிடலாமானாலும் *வீடாம் தெளிதருநிலைமையது ஒழிவிலன்* என்று ஆழ்வார் அந்த மோக்ஷப்ரதத்வத்தைத் தனியே அருளிச் செய்ததை யடியொற்றி ஆசாரியர்களும் அதனைத் தனிப்படவே அருளிச் செய்து போருவர்கள். *த்வதாச்ரிதாநாம் ஜகதுத்பவஸ்திதி ப்ரணாச ஸம்ஸாரவிமோசந* என்று ஆளவந்தாரருளிச் செய்ததும் காண்க.

ஆக, ஸகல ஜகத்துக்களுக்கும் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகாரகமாய், ஸர்வபாப நிவாரண பூர்வக மோக்ஷப்ரதாநத்திற்கும் கடவதாக வேதாந்த ஸித்தமான பரஞ்சோதி திருமாலிருஞ் சோலைமலையிலே உறைகின்றதென்றதாயிற்று (15)

सद्ब्रह्मात्मपदैस्त्रयीशिरसि यो नारायणोक्त्या तथा व्याख्यातो गतिसाम्यलब्धविषयानन्यत्वबोधोज्ज्वलैः ।
निस्तुल्याधिकमद्वितीयममृतं तं पुण्डरीकेक्षणं प्रारूढश्रियमाश्रये वनगिरेः कुञ्जोदितं सुन्दरम् ॥ १६ ॥

ஸத்ப்ரஹ்மாத்மபதைஸ் த்ரயீசிரஸி யோ நாராயணோக்த்யா ததா
வ்யாக்க்யாதோ கதிஸாம்யலப்தவிஷயாநந்யத்வ போதோஜ்ஜ்வலை:,
நிஸ்துல்யாதிகமத்விதீயமம்ருதம் தம் புண்டரீகேக்ஷணம்
ப்ராரூடச்ரியமாச்ரயே வநகிரே: குஞ்ஜோதிதம் ஸுந்தரம். 16

பரப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூப ரூபகுண விபூத்யாதிகளை ஸம்சய விபர்யயமற நிர்ணயிக்கவேண்டும்போது ஸகல சாகா ப்ரத்யயந்யாயத்தாலும் ஸகல வேதாந்த ப்ரத்யயந்யாயத்தாலும் செய்யவேணும்; அதில் ஸகல சாகாப்ரத்யயந்யாயமாவது—ஒரு வாக்கியத்திலே ஓரர்த்தத்தைச் சொன்னால் அதினுடைய அங்கோபாங்காதிகளை நேராக அறிகைக்காக சாகாந்தரங்களெல்லாவற்றிலும் ஸஞ்சரித்து அவற்றில் சொல்லுகிற அர்த்தங்களிலும் ஜ்ஞானம் பிறந்து அவ்வர்த்தங்களுக்கு அந்யோந்ய விரோதங்களையும் சமிப்பித்து தனக்கபிமதமான அங்கியோடே சேருமவற்றைச் சேர்க்கை. இனி, ஸகல வேதாந்த ப்ரத்யயந்யாயமாவது— ஒரு வேதாந்தத்திலே ஒரு வாக்யம் ஓரர்த்தத்தைச் சொன்னால் அல்லாத வேதாந்தங்களிலும ஸஞ்சரித்து அவற்றில் சொல்லுகிற அர்த்தங்களுக்கு அந்யோந்ய விரோதம் பிறவாதபடி விஷய விபாகம் பண்ணி, தனக்கு அபிமதமான அர்த்தங்களோடே சேருமவற்றைச் சேர்க்கை. இப்ப

டிப்பட்ட நியாயங்களையே இந்த ச்லோகத்தில் (கதிஸாம்ய) என்கிற பதத்தாலே விவக்ஷிக்கிறார்.

சாந்தோக்யத்திலே *ஸதேவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் ஏகமேவ அத்விதீயம்* என்று காரணவஸ்துவொன்று நிர்தேசிக்கப்பட்டது; இதில் ஸத் என்னும் சப்தமானது ஒரு வ்யக்தி விசேஷத்தைக் குறிப்பிட மாட்டாதே 'உள்ளதான வஸ்து' என்று இவ்வளவையே தெரிவித்ததாகும். அதற்குமேல் வாஜஸநேயகத்திலே *ப்ரஹ்ம வா இதமேவ அக்ர ஆஸீத்* என்று அந்த காரண வஸ்துவானது ப்ரஹ்ம சப்தத்தாலே நிர்தேசிக்கப்பட்டது. இதுவும் ஒரு வ்யக்தி விசேஷத்தைக் குறிப்பிட மாட்டாதே ப்ருஹத்தான வஸ்துவென்று இவ்வளவையே தெரிவித்ததாகும். சாந்தோக்யத்தில் ஸத் என்னும் சப்தத்தாலே குறிக்கப்பட்ட காரண வஸ்துவானது சிறியதா? பெரியதா? என்று ஸந்தேஹம் விளைந்தவளவிலே, அது சிறியதன்று பெரியதே என்று இவ்வளவே வாஜஸநேயகத்தில் தெரிவிக்கப்பட்டதாயிற்று. அவ்விடத்திலே ஸர்வசாகாப்ரத்யயந்யாயத்தாலே காரண வாக்கியங்களெல்லாவற்றுக்கும் ஏக விஷயத்வம் வேண்டுகையாலே *பசும் ஆலபேத* என்றவிடத்தில் ஸாமாந்யமான பசு சப்தம் *ச்சாகோ வா மந்த்ர வர்ணாத்*என்கிற ஸூத்ரத்தில் விசேஷோபஸ்தாபகமான ச்சாக பசுவிலே பர்யவஸிக்குமதாக நிர்ணயிக்கப்பட்ட கணக்கிலே, இங்கும் ஸாமாந்யமான ஸச்சப்தத்துக்கு வாச்யமான காரண வஸ்துவானது விசேஷோபஸ்தாபக ப்ரஹ்மசப்த வாச்யமென்று நிச்சயிக்கப்படுகிறது. இந்த ப்ரஹ்ம சப்தமானது *மம யோநிர் மஹத் ப்ரஹ்ம* என்றும் *தத் ஜ்ஞாநம் ப்ரஹ்மஸம்ஜ்ஞிதம்* என்றும் சொல்லுகிறபடியே சேதந அசேதந ஸாதாரணமாகையாலே காரணவஸ்துவானது சேதநமா அசேதநமாவென்கிற ஸந்தேஹம் தீராமலிருந்தது. ஐதரேயத்திலே *ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத்; நாந்யத் கிஞ்சந மிஷத்* என்று சேதனனுக்கே அஸாதாரணமான ஆத்ம சப்தத்தாலே விசேஷித்தது. இந்த ஆத்ம சப்தமும் வ்யக்தி விசேஷ நிர்ணாயகமாக மாட்டாது; ஆத்மாக்களில் வைத்துக்கொண்டு ஜகத் காரண பூதர் ஆரென்று விசேஷாகாங்க்ஷை பிறக்கும்; இந்திரனோ அக்நியோ ஆதித்யனோ சந்திரனோ வைச்ரவணனோ வருணனோ வாயு யம ப்ரப்ருதிகளான தேவதா விசேஷங்களோவென்னில்; அவையொன்றுமன்று, நாராயணனே — என்னுமிடத்தை நாராயணாநுவாகமும் ஸுபாலோபநிஷத்து முதலியனவும் நிஷ்கர்ஷித்துக் கொடுத்தன. இவ்விஷயமே இந்த ச்லோகத்தில் பூர்வார்த்தத்தாலே பேசப்பட்டது.

[கதிஸாம்யலப்த விஷயாநந்யத்வ போதோஜ்ஜ்வலை: இத்யாதி] காரண வாக்கியங்களுக்கெல்லாம் விஷயம் ஒன்றேயாயிருக்கவேண்டுகையாலே, காரண வஸ்துவைச் சொல்லுமிடங்களில் ஸச்சப்த—ப்ரஹ்மசப்த—ஆத்ம சப்தங்களாலே ஸாமாந்யமாகச் சொல்லப்பட்ட வஸ்துவானது *ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந:* இத்யாதிகளில் ஸுஸ்பஷ்டமான நாராயண சப்தத்தாலே விசேஷித்து விசதீகரிக்கப்பட்டதாயிற்று. அந்த நாராயணனே திருமாலிருஞ்சோலையில் ஸேவைஸாதிக்கக் காண்கிறோமென்று உத்தரார்த்தத்தாலே அருளிச் செய்கிறார். *ஏஷ ஈச இதி நிர்ணயம் த்ரயீ பாகதேயரஹிதஷேஷுநோ திசேத், ஹஸ்திதாமநி ந நிர்ணயேத க: தேவராஜம் அயமீச்வரஸ் த்விதி* என்று வரதராஜஸ்தவத்தில் அருளிச்செய்த கணக்கிலே வேதாந்தங்களிலே நமக்குப் பரதத்வ நிஷ்கர்ஷம் ஆயாஸ பஹுளமாயிருந்தாலும் திவ்யதேசத்தில் நிலைகளிலே அது மிகவெளிது என்று நிரூபிப்பதே இந்த ச்லோகத்தின் பரமதாற்பரியமாகும்.

நிஸ்துல்யாதிகம்—*ஒத்தார் மிக்காரை யிலையாய மாமாயா* என்கிறபடியே ஒத்தாரும் மிக்காருமில்லாதவனென்கை. ஒத்தாரில்லையென்றபோதே மிக்காரில்லை யென்னுமிடம் தன்னடையே ஸித்தமாயிருக்க, மிக்காரில்லையென்று தனிப்படச் சொல்லவேணுமோவென்று சங்கைதோன்றும்; *ந தத்ஸமச்ச அப்யதிகச்ச த்ருச்யதே* என்று

உபநிஷத்து ஓதிக்கிடக்கையாலே அதைத் தழுவி அருளிச்செய்தபடியென்று ஸமாதானம் கூறுவர். உபநிஷத்துத்தான் அங்ஙனே ஏன் ஓதிற்று? என்று கேள்வி பிறக்குமே; கேண்மின்; அலங்கார சாஸ்த்ரத்தில் அநந்வயமென்று ஓர் அலங்காரமுண்டு; "உபமாநோபமேயத்வம் யதேகஸ்யைவ வஸ்துந:" என்பது அதன் லக்ஷணம். "இந்துரிந்துரிவ ஸ்ரீமாந்—ககநம் ககநாகாரம் ஸாகரஸ் ஸாகரோபம:, ராமராவணயோர் யுத்தம் ராமராவணயோரிவ" என்று லக்ஷ்யங்களுமுள்ளன. அந்தரீதியில் 'எம்பெருமான் எம்பெருமானையேயொப்பன்' என்று சொல்லக் குறையில்லை; ஆழ்வார்களும் "தானே தனக்கு உவமன்" என்றும் "தன்னொப்பான் தானுயுளன்காண்" என்றும் இதனையே யருளிச்செய்தார்கள். ஆகவே இப்படி ஸத்ருசவ்யக்தி ஸித்தியுண்டானாலும் அதிக வ்யக்தி ஸித்தி அஸம்பாவிதமென்க.

அத்விதீயம் அம்ருதம்—*ரஸோ வை ஸ:* என்றும் *எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ்சோலைக் கோனே* என்றும் சொல்லுகிறபடியே விலக்ஷண திவ்யாம்ருதம்போலே பரமபோக்யன்.

புண்டரீகேக்ஷணம்—*தாமரைபோற் கண்ணன். *தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவமக்ஷிணீ* என்கிற உபநிஷத்திலே நோக்கு.

ப்ராரூட ச்ரியம்— *நாறு நறும்பொழில் மாலிருஞ் சோலை நம்பிக்கு* என்கிற பாசுரத்தில் *ஏறுதிருவுடையான்* என்று ஆண்டாளருளிச் செய்த திருநாமத்திற்கு இது ஸம்ஸ்க்ருத வ்யபதேசம். மேலே *ஆரூட ஸ்ரீ:* என்றும் *ஆரூடலக்ஷ்மயா ஹரே:* என்றும் அருளிச் செய்கிறார். பிராட்டி தானே ஸ்வயம்வரித்து வந்து சேரப்பெற்ற பெருமாளென்றபடி.

வநகிரே: குஞ்ஜோஜ்திதம் ஸுந்தரம் ஆச்ரயே—குஞ்ஜமாவது லதாக்ருஹம்; அதிலே ஸேவை ஸாதிக்கின்ற அழகரை அடிபணிகின்றேனென்றாராயிற்று. ... (16)

पतिं विश्वस्यात्मेश्वरमिति परं ब्रह्म पुरुषः परं ज्योतिस्तत्त्वं परमिति च नारायण इति ।
श्रुतिर्ब्रह्मेशादींस्तदुदितविभूतींस्तु गृणती यमाहारूढश्रीस्स वनगिरिधामा विजयते ॥ १७ ॥

பதிம் விச்வஸ்யாத்மேச்வரமிதி பரம் ப்ரஹ்ம புருஷ:
பரம் ஜ்யோதிஸ் தத்வம் பரமிதி ச நாராயண இதி,
ச்ருதிர் ப்ரஹ்மேசாதீந் ததுதிதவிபூதீம்ஸ்து க்ருணதீ
யமாஹாரூடஸ்ரீஸ் ஸ வநகிரிதாமா விஜயதே. 17

இந்த ச்லோகத்தில் பூர்வார்த்தம் முழுதும் உபநிஷத் வாக்யகண்டாநுவாதம். *பதிம் விச்வஸ்யாத்மேச்வரம்* என்றும், *நாராயணபரம் ப்ரஹ்ம* என்றும், *விச்வமேவேதம் புருஷ:* என்றும், *பரம் ஜ்யோதிருபஸம்பத்ய* என்றும், *தத்வம் நாராயண: பர:* என்றும், *நாராயண ஏவேதம் ஸர்வம்* என்றும் இங்ஙனேயுள்ள ச்ருதிவாக்யங்களைச் சேர்த்து அருளிச் செய்திருக்கிறபடி.

இதி ச்ருதி:— பூர்வார்த்தத்தில் உதாஹரிக்கப்பட்ட ச்ருதிவாக்யங்களானவைஎன்றபடி.

ப்ரஹ்மேசாதீந் ததுதிதவிபூதீந் க்ருணதீ ஸதீ— பிரமன் சிவன் முதலிய தேவர்களை பகவத் விபூதிகளாகவே தெரிவித்ததாய்க் கொண்டு;

யம் ஆஹ—யாவரொரு திருமாலிருஞ்சோலை யழகரைப் பேசி நின்றதோ; * நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே, நாராயணாத் ருத்ரோ ஜாயதே*. இத்யாதிச்ருதிகளாலே ப்ரஹ்மாதி தேவர்கள் பகவத் விபூதிகளாகவே சொல்லப்பட்டார்களிறே.

ஸ: ஆருடஶ்ரீ: வநகிரிதாமா விஜயதே— வேதாந்த ஸித்தனை அந்த எம்பெருமானே ஏறுதிருவுடையானென்கிற திருநாமத்தோடே தெற்குத் திருமலையிலே ஸர்வோத்கர்ஷசாலியாக விளங்காநின்றுரென்றதாயிற்று.

[तदुदितेत्यादि.] विभूतिर्नाम विभवः; तच्छब्दार्थो नारायणः। नारायणाधीनविभवान् इत्यर्थः। नरत्वशङ्कास्पदभूतानां ब्रह्मरुद्रादीनामपि यद्विभूतित्वम्, यस्य च सर्वस्मात्परत्वं श्रुतिरेव प्राह, स वनगिरिधामा सन् विजयते इत्युक्तं भवति ॥ (17)

पृथिव्याद्यात्मान्तं नियमयति यस्तत्त्वनिकरं तदन्तर्यामी तद्वपुरविदितस्तेन भगवान्।
स एष स्वैश्वर्यं नविजहदशेषं वनगिरिं समध्यासीनो नो विशतु हृदयं सुन्दरभुजः ॥ १८ ॥

ப்ருதிவ்யாத்யாத்மாந்தம் நியமயதி யஸ் தத்வநிகரம்
ததந்தர்யாமீ தத்வபுரவிதிதஸ் தேந பகவாந்,
ஸ ஏஷ ஸ்வைச்வர்யம் நவிஜஹதசேஷம் வநகிரிம்
ஸமத்யாஸீநோ நோ விசது ஹ்ருதயம் ஸுந்தரபுஜ:. 18

***— இந்த ச்லோகத்திலும் பூர்வார்த்தத்தாலே உபநிஷத் விசேஷத்தின் பொருளையே அநுவதிக்கிறுர். * यः पृथिव्यां तिष्ठन् पृथिव्या अन्तरो यं पृथिवी न वेद यस्य पृथिवी शरीरं यः पृथिवीमन्तरो यमयति * என்று தொடங்கி * य आत्मनि तिष्ठन् आत्मनोऽन्तरः यमात्मा न वेद यस्यात्मा शरीरं य आत्मानमन्तरो यमयति * என்பதீருக அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் சொன்னபடி யாவனொரு பகவான் ப்ருதிவி முதல் ஆத்மா வரையிலுமுண்டான தத்வங்களை ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு சக்தமாம்படி செய்தருளுகிறுனே; அதுதான் எங்ஙனே யென்னில்; ஒவ்வொரு தத்வத்திலும் அந்தர்யாமியாய்க் கொண்டும், அந்தந்த தத்வங்களை சரீரமாகவுடையனுய்க் கொண்டும்; அந்தந்த தத்வஸமூஹத்தாலே அறியப்படாதவனுய்க் கொண்டும் நியமிக்கிறுனுயிற்று. இப்படி உபநிஷத் ப்ரதிபாதிதனை எம்பெருமான் தன்னுடைய பாரமேச்வரப்ரகார மொன்றையும் விடாமல் திருமாலிருஞ் சோலைமலையில் கோயில் கொண்டிரா நின்ற சுந்தரத் தோளுடையானே. அப்பெருமான் நம்முடைய உள்ளத்துள்ளே புகுந்து வர்த்திக்கக்கடவன் என்கிறுர்.

ய: பகவாந் ப்ருதிவ்யாதி ஆத்மாந்தம் தத்வநிகரம்-- ததந்தர்யாமீ ஸந் தத்வபுஸ்ஸந் தேந அவிதிதஸ்ஸந் நியமயதி— யாவனொரு பகவான் அந்தர்யாமிப்ராஹ்மண மெடுத்தோதிய கட்டளையிலே ப்ருதிவி முதல் ஆத்மாவளவுமுண்டான தத்வங்களை யெல்லாம் அந்த தத்வங்களில் அந்தர்யாமியாய்க் கொண்டும், அவற்றை சரீரமாகக் கொண்டு அவற்றுக்குத் தான் சரீரியாயும், அவற்றுல் 'இவன் நம் முள்ளே யுறைகின்றுன்' என்று அறியப்படாதவனுயும்,' [தத்வநிகரம் நியமயதி] அவற்றின் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளை நிர்வஹித்துக் கொண்டு போருகிறுனே;

ஸ ஏஷ:— இப்படி ச்ருதிப்ரதிபாதிதனை எம்பெருமான்;

ஸ்வைச்வர்யம் அசேஷம் நவிஜஹத்— பகவத்கீதையில் நாலாமத்யாயத்தில் *அஜோபி ஸந் அவ்யயாத்மா பூதாநாமீச்வரோபி ஸந், ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாமி ஆத்மமாயயா* என்று சொன்னபடியும்,* ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்திங்குப் பிறந்த* என்று ஆழ்வாரருளிச் செய்தபடியும் தன்னுடையதான பாரமேச்வர ப்ரகாரமொன்றையும் விடாதானுய்க் கொண்டு. ('நவிஜஹத்' என்றவிடத்தில் நைக சப்தத்திற் போலே நசப்தேந ஸமாஸ மென்றுணர்க.)

வநகிரிம் ஸமத்யாஸீநஃ ஸௌந்தரபுஜஃ— திருமாலிருஞ் சோலை மலையைக் கலவிருக்கையாகக் கொண்டிருக்கின்ற ஸௌந்தரபாஹு;

நஃ ஹ்ருதயம் விசது — நம்முடைய ஹ்ருதயத்தினுள்ளே புகுந்து வர்த்திப்பானாக. *மலை மேல் தானின்று என் மனத்துளிருந்தானை* என்கிற திருவாய்மொழிப் பாசுரத்திலே நோக்கு. “அங்குத்தை வாஸம் ஸாதநம், இங்குத்தை வாஸம் ஸாத்யம்” என்ற ஸ்ரீவசநபூஷண ஸூக்தியும் இங்கே அநுஸந்தேயம். (18)

प्रत्यगात्मनि कदाऽप्यसंभवद्भूमभूमिमभिवक्ति यं श्रुतिः ।
तं वनाद्रिनिलयं सुसुन्दरं सुन्दरायतभुजं भजामहे ॥ १९ ॥

ப்ரத்யகாத்மநி கதாப்யஸம்பவத்பூமபூமிமபிவக்தி யம் ச்ருதி:,
தம் வநாத்ரிநிலயம் ஸுஸுந்தரம் ஸுந்தராயதபுஜம் பஜாமஹே. (19)

கீழ்ச்லோகத்தில் ஸகல சேதநாசேதந அந்தர்யாமித்வத்தை யருளிச் செய்தார்; அப்படி அந்தர்யாமியாயிருக்கச் செய்தேயும் தத்கததோஷங்களாலே அஸம்ஸ்ப்ருஷ்டனாயிருக்கையாகிற ஹேயப்ரத்யநீகத்வமும் கல்யாணைகதாநத்வமும் ஜீவாத்மாவுக்கு ஒரு காலும் அஸம்பாவிதமாய் பகவானுக்கே அஸாதாரணமாயிருக்கிறபடியை இந்த ச்லோகத்திலருளிச் செய்கிறார்.

ச்ருதிஃ— *ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயணஃ* இத்யாதி உபநிஷத்வாக்யம் இங்கு ச்ருதிசப்தவிவக்ஷிதம். இப்படிப்பட்ட ச்ருதியானது;

யம் பகவந்தம்— யாவனொரு பகவானை;

ப்ரத்யகாத்மநி கதாபி அஸம்பவத்பூமபூமிம் அபிவக்தி— ஜீவாத்மாவினிடத்தில் முக்திதசையிலுங்கூட ஸம்பவிக்கமாட்டாததான அதிசயங்களுக்கு ஆஸ்பத பூதனாக ஓதியிராநின்றதோ;

[தம் வநாத்ரிநிலயம் இத்யாதி.] அந்த பகவான் தானே தெற்குத் திருமலையில் சுந்தரத் தோளுடையானாக ஸேவை ஸாதிக்கின்றான்; இங்கே நம்முடைய பக்தியைச் செலுத்தக்கடவோமென்கை.

இந்த ச்லோகத்தில் பூம சப்த நிர்தேசம் செய்தருளியிருக்கையாலே ப்ரஹ்ம ஸூத்ரத்தில் முதலத்யாயத்தின் மூன்றாவது பாதத்திலுள்ள பூமாதிகரணத்தின் ப்ரமேயம் இங்கு விவக்ஷித மென்னலாம். “भूमगुणविशिष्टो न प्रत्यगात्मा ; अपि तु परमात्मा” இத்யாதி ஸ்ரீபாஷ்ய ஸூக்திகள் இங்கே அநுஸந்தேயம். (19)

वन्देय सुन्दरभुजं भुजगेन्द्रभोगसक्तं महावनगिरिप्रणयप्रवीणम् ।
यं तं विदुर्दहरमष्टगुणोपजुष्टम् आकाशमौपनिषदीषु सरस्वतीषु ॥ २० ॥

வந்தேய ஸுந்தரபுஜம் புஜகேந்த்ரபோக
ஸக்தம் மஹாவநகிரிப்ரணயப்ரவீணம்,
யம் தம் விதுர் தஹரமஷ்டகுணோபஜுஷ்டம்
ஆகாசம் ஔபநிஷதீஷு ஸரஸ்வதீஷு. (20)

* * *— சாந்தோக்யத்தில் * अथ यदिदमस्मिन् ब्रह्मपुरे पुण्डरीकं वेश्म दहरोऽस्मिन्नन्तर आकाशस्तस्मिन् यदन्तस्तदन्वेष्टव्यं तद्वाव विजिज्ञासितव्यम् * என்று ஓதினவிடத்தில் ஹ்ருதய புண்ட

ரீக மத்யத்திலுள்ளதாய் தஹராகாச மென்னப்பட்டதான வஸ்து பூதாகாசமா? ஜீவனா? பரமாத்மாவா? என்று சங்கித்துக்கொண்டு, மேலே யெடுத்துக் காட்டப்பட்ட சாந்தோக்ய வாக்யத்தில் மேலே * य एष आत्मा अपहतपाप्मा विजरो विमृत्युर्विशोको विजिघत्सोऽपिपासस्सत्यकामस्सत्यसंकल्पः * என்று அஷ்டகுணமுடைமை சொல்லியிருக்கையாலே அது பரமாத்மாவுக்கே ஸம்பவிக்குமதாகையாலே தஹராகாச சப்தவாச்யன் பரமாத்மாவேயாகக்கடவன் என்று "தஹர உத்தரேப்ய:" என்கிற ப்ரஹ்மஸூத்ரத்தின் ஸ்ரீபாஷ்யத்திலே பரக்க உபபாதிக்கப்பட்டுள்ள அர்த்த விசேஷத்தை ஸங்க்ரஹிக்கிறதாயிற்று இந்த ச்லோகம். அந்த ஸூத்ரத்தின் ப்ரமேயமே இதில் உத்தரார்த்தத்திலுள்ளது.

ஔபநிஷதீஷு ஸரஸ்வதீஷு— உபநிஷத்வாக்யங்களிலே;

அஷ்டகுணோபஜுஷ்டம் தஹரமாகாசம் யம் விது:— அபஹதபாப்மத்வம் முதலாக ஸத்ய ஸங்கல்பத்வமீறாக அஷ்ட குணங்களோடு கூடினவனாக எந்த பரமபுருஷனை வைதிகர்கள் அறிகின்றார்களோ;

தம் ஸுந்தரபுஜம் வந்தேய— அந்த பரமபுருஷனே ஸுந்தரபாஹுவாக ஸேவை ஸாதிக்குமிடத்திலே ஸேவிக்கக்கடவேனென்கை. அவர் எப்படிப்பட்டவரென்னில்;

புஜகேந்த்ரபோகஸக்தம்— அரவணைமேல் பள்ளிகொண்டருளுமவரென்கை. ஸர்ப்பத்தின் உடலுக்கு போக மென்று பெயர்.

மஹாவநகிரிப்ரணயப்ரவீணம்— திருமாலிருஞ் சோலைமலைவாஸத்தில் ரஸிகராயுமிருப்பர் என்றபடி. புஜகேந்த்ர போகஸக்தத்வம் இத்திருமலையில் நின்ற நிலைதன்னிலே இல்லையாகிலும் அது பகவானுக்கு ஐகாந்திகமென்கிற ப்ரதிபத்தியாலே அருளிச்செய்யக் குறையில்லை. ஸ்ரீஹஸ்திசைலசிகரோஜ்ஜ்வல பாரிஜாதமான தேவப்பெருமானை *அணி மணியின் துத்திசேர்நாகத்தின் மேல் துயில்வான்* என்று பூதத்தாழ்வாரும், *அநந்தசயம் த்வாம்* என்று இவ்வாழ்வான் தாமும் சேஷசாயியாகச் சொன்னவை இங்கு அநுஸந்தேயம். (20)

यत्स्वायत्तस्वरूपस्थितिकृतिकनिजेच्छानियाम्यस्वशेषानन्ताशेषप्रपञ्चस्तत इह चिदचिद्वाचिपूर्वाचिशब्दः ।
विश्वैश्शब्दैः प्रवाच्यो हतवृजिनतया नित्यमेवानवद्यस्तं वन्दे सुन्दराह्वं वनगिरिनिलयं पुण्डरीकायताक्षम् ॥२१॥

யத் ஸ்வாயத்த ஸ்வரூப ஸ்திதிக்ருதிக நிஜேச்சா நியாம்யஸ்வசேஷ
அநந்தாசேஷப்ரபஞ்சஸ் தத இஹ சிதிவாசித்வபூர்வாசிசப்தை:,
விச்வைச் சப்தை: ப்ரவாச்யோ ஹதவ்ருஜிநதயா நித்யமேவாநவத்ய:
தம் வந்தே ஸுந்தராஹ்வம் வநகிரிநிலயம் புண்டரீகாயதாக்ஷம். (21)

***—இந்த ச்லோகத்திலே அத்வைத ச்ருதி நிர்வாஹம் காட்டியருளுகிறார். *ததேவாக்நிஸ் தத் வாயுஸ் தத் ஸூர்யஸ் தது சந்த்ரமா:* என்றும் *ஜ்யோதீம்ஷி விஷ்ணுர் புவநாநி விஷ்ணுர் வநாநி விஷ்ணுர் கிரயோ திசச் ச* என்றும் ஸர்வ பதார்த்த ஸாமாநாதிகரண்யேந எம்பெருமானைச் சொல்லியுள்ளவிடங்களில் விசிஷ்டாத்வைத ப்ரக்ரியையாலே தெளிந்துகொள்ளவேண்டிய நிர்வாஹம் இதுவே காணீர். லோகத்தில் தேவமநுஷ்யாதி சரீரங்களைச் சொல்லவல்ல சப்தங்களைக் கொண்டு சரீரியான ஆத்மாவை வ்யபதேசிக்கக் காணாநின்றோம். "தேவோஹம், மநுஷ்யோஹம்" இத்யாதி வ்யவஹாரங்கள் ப்ரஸித்தங்கள். இங்கு தேவ மநுஷ்ய சப்தங்கள் தேவசரீர மநுஷ்ய சரீரங்களைச் சொல்லவல்லவையேயல்லது ஆத்மஸ்வரூபத்தைச் சொல்லவல்லவையல்ல. அஹமர்த்த பூதனான ஆத்மாவினிடத்தில் தேவ:, மநுஷ்ய: இத்யாதிபதங்களை ஸமாநாதிகரிப்பது எங்ஙனேயென்னில்; தேவசரீர விசிஷ்ட:, மநுஷ்ய சரீர விசிஷ்ட: என்றபடி.

யாதலால் குறையில்லை என்று நிர்வஹிக்கவேண்டும்; அதுபோலவே எம்பெருமான் விஷயத்திலும் சரீர சரீரிபாவப்ரயுக்தமாக அவ்வோவஸ்துக்களோடே அபேத வ்யபதேசம் பொருந்துமென்பதே நம் தர்சனத்தின் ஸாரார்த்தம். இதுவே இந்த ச்லோகத்திலருளிச்செய்வதாம்.

இஹ—இந்த ஜகத்தில்;

அசித் வபுர்வாசி சப்தைஃ சித் இவ—அசித்பரிணாம பூத தேவமனுஷ்யாதி சரீரங்களைச் சொல்லக் கடவதான சப்தங்களாலே ஜீவாத்மா எப்படி சொல்லப்படுகிறானோ, அப்படி. அதாவது, ஸ்தூலோஹம், க்ருசோஹம் இத்யாதிவ்யவஹாரங்களில் ஸ்தூலத்வமும் க்ருசத்வமும் ஆத்மாவிலுள்ளதன்றிக்கே சரீரத்திலுள்ளதாயிருக்கச் செய்தேயும் "அஹம் ஸ்தூலஃ, அஹம் க்ருசஃ" என்று சரீரத்ருஷ்ட்யா சொல்லுகிறாப்போலே யென்கை. இந்த த்ருஷ்டாந்தத்தைக் கொண்டு ஸாதிக்கப்படும் அம்சம் ஏதென்னில்;

விச்வைச் சப்தைஃ ப்ரவாச்யஃ—எம்பெருமான் ஸகல சப்த வாச்யனாகிறானென்பதுவே; இதுதனக்கு நிமித்தமேதென்னில்;

யத் ஸ்வாயத்த ஸ்வரூப ஸ்திதிக்ருதிக நிஜேச்சா நியாம்யஸ்வசேஷாநந்தாசேஷப்ரபஞ்சஃ ததஃ—யத் என்றது யாதொரு காரணத்தாலே யென்றபடி. அநந்தமாயுள்ள அசேஷ ப்ரபஞ்சமும் ஸ்வாயத்தஸ்வரூபஸ்திதி க்ருதிகமாய், நிஜேச்சாநியாம்யமாய், ஸ்வசேஷமாய் இருக்கையாலே என்றபடி. "यस्य चेतनस्य यद् द्रव्यं सर्वात्मना स्वार्थे नियन्तुं धारयितुंच शक्यं तच्छेषतैकस्वरूपंच, तत्तस्य शरीरम्" என்பது சரீரலக்ஷணமாகையாலே இந்த லக்ஷணம் ஸமஸ்தப்ரபஞ்சத்தினிடத்திலும் ஸமந்விதமாகிறது. * स्वाधीनत्रिविधचेतनाचेतनस्वरूपस्थिति-प्रवृत्तिभेदम् * என்கிற கத்யஸூக்திப்படியே ஸகல ப்ரபஞ்சத்தினுடையவும் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் எம்பெருமானதீநமாகையாலும் *அந்தஃ ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம்* என்கிறபடியே ஸகல ப்ரபஞ்ச நியமநமும் அவனுடைய இச்சாதீநமாகையாலும், இவையடங்கலும் அவனுக்கே சேஷமாகையாலும் அசேஷ ப்ரபஞ்சமும் சரீரலக்ஷண ஸமந்வயம் பெற்றதாயிற்று.

ததஃ விச்வைச் சப்தைஃ ப்ரவாச்யஃ—ஆகவே ஸர்வபதார்த்த வாசக ஸகல சப்தங்களோடும் எம்பெருமானை ஸமாநாதிகரிக்கக் குறையில்லையென்றபடி. ஸமாநவிபக்தியால் நிர்தேசிப்பது ஸமாநாதிகரண நிர்தேசமென்றும், வெவ்வேறு விபக்திகளால் நிர்தேசிப்பது வ்யதிகரண நிர்தேசமென்றும் வழங்கப்பெறும். "ஸகலம் ஜகத் பகவதஃ சேஷபூதம்" என்றால் இது வ்யதிகரண நிர்தேசம். "ஸகலம் ஜகத் பகவாந்" என்றால் இது ஸமாநாதிகரண நிர்தேசம். உண்மையில் வ்யதிகரண நிர்தேசம் ப்ராப்தமாயிருக்க ஸமாநாதிகரண நிர்தேசம் எங்ஙனே பொருந்தும்? என்கிற சங்கை வேதாந்தவ்யுத்பத்தியில்லாதவர்களுக்குத் தோன்றும் *ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம* ஐததாத்ம்யமிதம் ஸர்வம் *தத் த்வமஸி* என்றிவை முதலான ச்ருதிகளை நிர்வஹிக்கும் வழியையறிவார்க்கு ஸமாநாதிகரண நிர்தேசத்தோடு வ்யதிகரண நிர்தேசத்தோடு வாசியற இரண்டும் துல்யமாகவே தோன்றும். பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ—உத்தரசதகத்தில் "தேஹோ தேஹிநி காரணே" "ஸ்தித்யுத்பத்தி ப்ரவ்ருத்தி" என்னுமிரண்டு ச்லோகங்களினால் இவ்விஷயத்தை விசததமமாக உபபாதித்தருளினார். அவ்விடத்து வியாக்கியானத்திலே மிக விரிவாக வுணர்த்தினோம், காண்க.

ஹுதவ்ருஜிநதயா நித்யமேவாநவத்யஃ—*அபஹதபாப்மா*வாகையாலே எப்போதும் ஹேயப்ரத்யநீகனாகவே யிருப்பன் என்றபடி. வ்ருஜிநமாவது பாபம்; ஹேயஸாமாந்யத்தையும் சொல்லுகிறது. (ஹுத) என்று பரத்வம்ஸாபாவம் சொல்லுகிறதன்று;

அத்யந்தாபாவமே இங்கு விவக்ஷிதம். இதனால் முக்த புருஷவ்யாவ்ருத்தி. தம் வநகிரிநிலயம் புண்டரீகாயதாக்ஷம் ஸுந்தராஹ்வம் வந்தே—ஆகவிப்படி வேதாந்த வேத்யனான எம்பெருமான் தாமரைக்கண்ணழகுடனே தெற்குத் திருமலையிலே ஸேவை ஸாதிக்குமிருப்பிலே ஸேவிக்கப்பெற்றேனென்கிறார்.

இச்லோகத்தில் முதல் பாதத்தில் க்ருதி சப்தம் ப்ரவ்ருத்தியைச் சொல்லுகிறது. திருவாய்மொழியில் *உயர்வற வுயர்நலமென்கிற முதற் பதிகத்தில் *நாமவனிவனுவன்* *அவரவர் தமதமது *நின்றனரிருந்தனர்* என்கிற மூன்று பாசுரங்களினால் ஸகல சேதநாசேதனங்களுடையவும் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் எம்பெருமானதீனங்களென்று முறையே சொல்லி, அடுத்த பாசுரத்தில் *உடன் மிசையுயிரென* என்று ஜீவாத்மாவை த்ருஷ்டாந்தீகரித்து *உளன் சுடர்மிகு சுருதியுள்* என்று தலைக்கட்டினாராழ்வார்; அந்தச் சாயையிலேயே இந்த ச்லோகம் அமைந்திரா நின்றதாயிற்று. ... (21)

गुणजं गुणिनो हि मङ्गलत्वं प्रमितं प्रत्युत यत्स्वरूपमेत्य ।
तमनन्तसुखावबोधरूपं विमलं सुन्दरबाहुमाश्रयामः ॥ ॥ २२ ॥

குணஜம் குணிநோ ஹி மங்கலத்வம் ப்ரமிதம் ப்ரத்யுத யத்ஸ்வரூபமேத்ய,
தமநந்தஸுகாவபோதரூபம் விமலம் ஸுந்தரபாஹுமாச்ரயாமஃ. (22)

***—உலகில் நல்ல பதார்த்தங்களாயுள்ளனவென்று சிலவற்றை நாம் ஆதரிப்பது எதனாலேயென்னில்; அவற்றில் நல்ல குணங்களிருப்பதனாலே. மணி த்யுமணி சந்த்ர சந்தந சம்பக அரவிந்தாதிகளை மங்களவஸ்துக்களாக நாம் சொல்வது அவற்றிலே ஒளியும் தண்ணளியும் நறுமணமுமாகிற மங்கல குணங்கள் இருப்பதுபற்றியேயன்றோ. ஆகவே லௌகிக வஸ்துக்களுக்குச் சொல்லும் மங்களத்வம் மங்கள குணவத்தாப்ரயுக்தமென்றதாயிற்று. இந்த ரீதியானது எம்பெருமான் பக்கலிலே விபரீதமாகக் கொள்ளத் தக்கதாயிரா நின்றது. ஸ்வதோ மங்களபூதனான எம்பெருமான் பக்கலிலே எவையெவையுள்ளனவோ, அவையெல்லாம் எம்பெருமானை ஆச்ரயிக்கப்பெற்ற ராஜகுல மாஹாத்ம்யத்தினாலேயே மங்களமாயின. பகவத்ஸம்பந்த பலத்தினாலே இவற்றுக்கு மங்களத்வமேயொழிய, இவற்றின் ஸம்பந்தத்தினால் பகவானுக்கு மங்களத்வம் என்பதில்லை—என்கிற தத்வார்த்தம் இந்த ச்லோகத்தில் அருளிச்செய்யப்படுகிறது.

குணிநஃ மங்கலத்வம் குணஜம் ஹி ப்ரமிதம்—(லோகே) என்று கூட்டிக்கொள்ளவேணும். ஸாமாந்யமாக உலகத்தில் குணவத்தாக வழங்கப்படுகிற வஸ்துஸமூஹத்திற்கு மாங்களிகத்வம் குணஸம்பந்த நிபந்தனமாகவன்றோ அறியப்பட்டுள்ளது. ப்ரமிதம் என்பது மத்யம தீபந்யாயத்தாலே முன்னும் பின்னும் அந்வயிக்கக்கடவது. (முதல் பாதத்திலும் அந்வயிக்கும், இரண்டாவது பாதத்திலும் அந்வயிக்கும் என்றபடி.)

ப்ரத்யுத யத்ஸ்வரூபமேத்ய—அந்த நியாயம் இங்கு விபரீதம்; பகவத்ஸ்வரூபத்தை யாச்ரயித்தே அவ்வோகுணங்கள் நிறம்பெறுகின்றனவென்க. லோகவிலக்ஷணமாயிறே பகவத் விஷயந்தானிருப்பது.

அநந்தஸுகாவபோதரூபம்—அநந்த ரூபம், ஸுகரூபம், அவபோதரூபம் என்று யோஜித்துக்கொள்வது. தேசபரிச்சேத காலபரிச்சேத வஸ்துபரிச்சேதங்களில்லாமை அநந்தத்வமாவது. ஸுகரூபமென்றது ஆநந்தமயமென்றபடி. அவபோதரூபமென்றது ஜ்ஞாநமயமென்றபடி.

தம் விமலம் ஸுந்தரபாஹும் ஆச்ரயாமஃ—அகில ஹேயப்ரத்யநீகனாயிரா நின்ற அந்த ஸுந்தரபாஹுவை ஆச்ரயிக்கின்றோமென்றாராயிற்று.

ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தில் *ஸர்வஸ்ய சைவ குணதோ ஹி விலக்ஷணத்வம்* என்கிற ச்லோகமும், வரதராஜஸ்தவத்தில் *குணபத்தம் லோகே குணிஷு ஹி மதம் மங்கலபதம்* என்கிற ச்லோகமும் ஏதத் ஸமாநார்த்தகமாயிருக்குமென்று அறியக் கடவது. இப்படி இவ்வர்த்தத்தை அஸக்ருத் அருளிச்செய்வதற்கொரு திருவுள்ளமுண்டு; எம்பெருமானுக்குப் பரதுக்க துக்கித்வம் முதலானவை குணமாக அநுஸந்திக்கப்படுகின்றனவே ; துக்கித்வமென்பது தோஷமே தவிர குணமன்றே; இது எப்படி கல்யாண குணமாக அநுஸந்திக்கப்படுகிறது? என்று சங்கிப்பார்க்கு அவகாசமறும்படி இது சொல்லுகிறது. எம்பெருமானைப்பற்றியுள்ளது எதுவாயினும் சுபகுணமேயொழிய வேறொன்றன்று என்று தெளிவிக்கிறபடி. (22)

अतिपतितावधिस्वमहिमानुभवप्रभवत्सुखकृतनिस्तरङ्गजलधीयितनित्यदशम् ।
प्रतिभटमेव हेयनिकरस्य सदाऽप्रतिमं हरिमिह सुन्दराह्वमुपयामि वनाद्रितटे ॥ ॥ २३ ॥

அதிபதிதாவதி ஸ்வமஹிமாநுபவ ப்ரபவத்
ஸுகக்ருதநிஸ்தரங்க ஜலதீயித நித்யதசம்,
ப்ரதிபடமேவ ஹேயநிகரஸ்ய ஸதாப்ரதிமம்
ஹரிமிஹ ஸுந்தராஹ்வமுபயாமி வநாத்ரிதடே. (23)

***—பகவச் சாஸ்திரங்களிலே எம்பெருமானுக்கு நித்யோதித தசையென்றும் சாந்தோதித தசையென்றும் இரண்டு தசைகள் சொல்லப்படுகின்றன. தன் வைபவத்தைத் தானேயநுபவித்து உகந்திருக்கும் நிலைமை நித்யோதித தசையெனப்படும்; தன் விபூதியையநுபவித்து உகந்திருக்கும் நிலைமை சாந்தோதித தசையெனப்படும். அவற்றுள் முந்தின தசையை அநுஸந்தித்துப் பேசுவது இந்த ச்லோகம்.

அதிபதிதாவதீத்யாதி.—பூர்வார்த்தம் முழுவதும் ஸமஸ்தமான ஓரே பதம். (அதிபதிதாவதி) என்பது (ஸ்வமஹிம) என்பதற்கு விசேஷணம். அவதியைக் கடந்ததான யாதொரு ஸ்வவைபவமுண்டு ; அதனை யநுபவிப்பதனாலுண்டான ஆனந்தத்தினால் அலையோய்ந்த கடலின் நிலைமையுண்டாயிருக்கின்றதாம். வரதராஜஸ்தவத்தில் *ப்ரசாந்தாநந்தாத்மாநுபவஜ மஹாநந்த மஹிம ப்ரஸக்த ஸ்தைமித்யாநுக்ருத விதரங்கார்ணவதசம்* என்றவிடத்து எம்முடைய வியாக்கியானம் கண்டுகொள்க. ஜலதீயித-ஜலதிபோன்றதான என்றபடி. நித்யதசா என்றது நித்யோதித தசையென்றவாறு.

ஸதைவ ஹேயநிகரஸ்ய ப்ரதிபடம்—தமஸ்ஸுக்குத் தேஜஸ்ஸுபோலவும் ஸர்ப்பத்துக்கு கருடன்போலவும் ஹேயமான அவத்ய ஸமூஹத்திற்கு எதிராயிருப்பவர். ஹேயஸாமாநாதிகரண்ய அஸஹிஷ்ணுத்வம் சொன்னபடி. ஸதைவ என்றது ஸ்வபாவத ஏவ என்றபடி. இத்தால் நித்ய முக்த வ்யாவ்ருத்தி கொள்க. ஹேய ப்ரத்யநீகத்வம் முக்தர்களுக்கு ஸம்ஸரண தசையில் கிடையாது ; நித்யர்களுக்கு அது பகவதிச்சாதீநமாகையாலே ஸ்வாபாவிகமன்று.

அப்ரதிமம்—கீழ்ச்சொன்னதுவே ஹேதுவாக ஒப்பற்றபடி.

ஸுந்தராஹ்வம் ஹரிம் இஹ வநாத்ரிதடே உபயாமி—இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த அழகப்பிரானுரைத் திருமாலிருஞ்சோலை யடிவாரந்தன்னில் அநுபவிக்கின்றேனென்கை. (23)

सदा षाड्गुण्याख्यैः पृथुलबलविज्ञानशकनप्रभावीर्यैश्वर्यैरवधिविधुरैरेधितदशम् ।
द्रुमस्तोमक्ष्माभृत्परिसरमहोद्यानमुदितं प्रपद्येऽध्यारूढश्रियमिममहं सुन्दरभुजम् ॥ ॥ २४ ॥

ஸதா ஷாட்குண்யாக்யைః ப்ருதுலபலவிஜ்ஞாநசகந
ப்ரபாவீர்யைச்வர்யை ரவதிவிதுரை ரேதிததசம்,
த்ருமஸ்தோம க்ஷமாப்ருத் பரிஸரமஹோத்யாநமுதிதம்
ப்ரபத்யேத்யாரூடச்ரிய மிமமஹம் ஸுந்தரபுஜம். (24)

***—பகவானுடைய ஷாட்குண்ய ஸம்பத்தியை அநுபவித்துப் பேசுகிறார். ஜ்ஞாநம் பலம் ஐச்வர்யம் வீர்யம் சக்தி தேஜஸ்ஸு என்கிற ஆறு குணங்கள் ஷாட்குண்யமெனப்படும். இவற்றுக்கு பகமென்று பெயர்; [षण्णां भग इतीरणा.] இவையுடைமை பற்றியே பகவானென்கிறது. அஸ்மதாதிகளுக்கும் ஜ்ஞாநபலைச்வர்யாதிகள் உள்ளனவெனினும் இவை மிக அற்பமாயிருக்கும்; அநல்பமாய் அவதிகடந்துள்ளது எம்பெருமானொருவனுக்கே. அது தோன்றவே "ப்ருதுல" என்கிற விசேஷணமும் "அவதிவிதுரைः" என்கிற விசேஷணமுமிட்டது.

ஷாட்குண்யாக்யைः—மேலே சொல்லப்படுகிற திருக்குணங்கள் ஷாட்குண்யமென்று பெயர்பெற்றவை. ஷட்குணமே ஷாட்குண்யமென்று *ஸ்வார்த்தே ஷ்யஞ்* பெற்றுக் கிடக்கிறது. சாதுர்வர்ண்யம், சாதுராச்ரம்யம்போலே. அந்த ஷட்குணங்கள் எவையென்னில்; ப்ருதுல பல விஜ்ஞாந சகந ப்ரபா வீர்யைச்வர்யைः—அபரிமிதமான பலம் ஜ்ஞானம் சக்தி தேஜஸ்ஸு வீர்யம் ஐச்வர்யம் ஆகிறவிவை. ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் *யுகபதநிசமக்ஷः* என்று தொடங்கி *ஸஹகார்யபேக்ஷமபி* என்றளவாக ஏழுச்லோகங்களாலே ஷாட்குண்யஸ்வரூபஸ்வபாவங்கள் விளக்கப்பட்டுள்ளன; அவ்விடத்து நமது வியாக்யானத்திலே விரிவு காண்க. *ப்ரக்ருஷ்டம் விஜ்ஞாநம்* என்ற வரதராஜஸ்தவச்லோக வியாக்கியானத்திலுங் காணலாம்.

அவதிவிதுரைः—அவதிரஹிதைः என்றபடி. ஆனந்தவல்லியில் ஆனந்தகுணமொன்றுக்குக் காட்டப்பட்ட இயத்தாராஹித்யம் ஸகல குணங்களுக்கு மொக்குமென்று இதனால் தெரிவித்தபடி. ஆக இப்படிப்பட்ட ஷட்குணங்களாலே;

ஏதிததசம்—அதிசயிதமான ஸ்வவைபவத்தையுடையவரென்றபடி. இன்னமும் எப்படிப்பட்டவரென்னில்;

த்ருமஸ்தோம க்ஷமாப்ருத் பரிஸர மஹோத்யாநமுதிதம்—'த்ருமஸ்தோமக்ஷமாப்ருத்' என்றது—திருமாலிருஞ்சோலைமலை யென்றபடி. அதனுடைய பரிஸரமென்று தாழ்வரையைச் சொன்னபடி. அங்குள்ள மஹோத்யானத்திலே—பெரியதொரு சோலையிலே, முதிதம்—திருவுள்ளமுகந்து வர்த்திப்பவர்.

அத்யாரூடச்ரியம் இமம் ஸுந்தரபுஜம் அஹம் ப்ரபத்யே—*ஏறு திருவுடையராய் சுந்தரத் தோளுடையரான பெருமானை அடியேன் அடிபணிகின்றேனென்றாராயிற்று. (24)

सौशील्याश्रितवत्सलत्वमृदुतासौहार्दसाम्यार्जवैः धैर्यस्थैर्यसुवीर्यशौर्यकृतिताङ्गाम्भीर्यचातुर्यकैः ।
सौन्दर्यान्वितसौकुमार्यसमतालावण्यमुख्यैर्गुणैर्देवः श्रीतरुषण्डशैलनिलयो नित्यं स्थितस्सुन्दरः ॥ २५ ॥

ஸௌசீல்யாச்ரித வத்ஸலத்வ ம்ருதுதா ஸௌஹார்த ஸாம்யார்ஜவைः
தைர்ய ஸ்தைர்ய ஸுவீர்ய சௌர்ய க்ருதிதா காம்பீர்ய சாதுர்யகைः,
ஸௌந்தர்யாந்வித ஸௌகுமார்ய ஸமதா லாவண்ய முக்க்யைர் குணைः
தேவः ஸ்ரீதருஷண்ட சைலநிலயோ நித்யம் ஸ்திதஸ் ஸுந்தரः. (25)

*** —கீழ்ச்லோகத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஷாட்குண்யத்தின் பரிணமவிததி ரூபங்களாகப் பல திருக்குணங்களுண்டு; அவற்றில் சிலவற்றைக் கூறியனுபவிக்கிறார் இந்தச்லோகத்தில். பகவத் குணங்களைப் பல வகுப்பாகப் பிரிப்பதுண்டு; ஸ்வரூப நிரூபக குணங்கள், நிரூபிதஸ்வரூபவிசேஷண குணங்கள் என்றொரு வகுப்பு. ஆச்ரயண ஸௌகர்யாபாதக குணங்கள், ஆச்ரித கார்யாபாதக குணங்கள் என்றொரு வகுப்பு. திவ்யாத்ம ஸ்வரூபாச்ரித குணங்கள், திவ்யமங்கள விக்ரஹாச்ரித குணங்கள் என்றொரு வகுப்பு. இங்ஙனே பல வகுப்பாக அநுஸந்திக்கப்படுகிற திருக்குணங்களுக்கு 'திவ்யாத்ம ஸ்வரூபாச்ரிதங்கள் திவ்யமங்கலவிக்ரஹாச்ரிதங்கள்' என்கிற பாகுபாடொன்றே முக்கியமாக நெஞ்சிற் கொள்ளத்தக்கது. ஸௌசீல்ய வாத்ஸல்யாதி குணங்கள் ஸ்வரூபாச்ரிதங்கள்; ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதிகள் விக்ரஹாச்ரிதங்கள்; "தவ வரதராஜோத்தமகுண விஸீமாநோஸங்க்யா: ப்ரணதஜநபோகம் ப்ரஸுவதே" என்று வரதராஜஸ்தவத்திலருளிச்செய்தபடியே இத் திருக்குணங்களெல்லாம் அநுபவ ரஸிகர்களுக்குப் பரமபோக்யங்களாயிருக்கும்.

ஸௌசீல்ய—சீலமென்றாலும் ஸௌசீல்யமென்றாலும் ஒக்கும். மஹானுயிருப்பவன் தன் மஹிமையைச் சிறிதும் கணிசியாமல் நீசர்களோடும் புரையறக் கலந்து பரிமாறுகையாயிற்று ஸௌசீல்யம் குஹப்பெருமாள்போல்வாரிடத்திலே காட்டியருளின குணமிது.

ஆச்ரிதவத்ஸலத்வ—*என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர் போலும்* என்னும்படி குன்றனைய குற்றஞ்செய்யினும் குணங்கொள்ளுமது வாத்ஸல்யம்.

ம்ருதுதா—மார்தவம் என்றபடி. இது ஸ்வரூபகுணமாகவும் கொள்ளப்படுவதுண்டு; விக்ரஹகுணமாகவும் கொள்ளப்படுவதுண்டு; மேலே ஸௌகுமார்யமென்று தனியே சொல்லுகையாலே அதை விக்ரஹகுணமாகக் கொண்டு மார்தவமென்ற விதனை ஸ்வரூப குணமாகக் கொள்ளவடுக்கும். *மஹாத்மபிர் மாம் அவலோக்யதாம் நய க்ஷணேபி தே யத்விரஹோதிதுஸ்ஸஹ:* என்று ஆளவந்தாரருளிச் செய்தபடியே ஆச்ரித விச்லேஷம் பொறுமையென்பது இது. ஆசார்ய ஹ்ருதய த்ருதீய ப்ரகரணத்தில் "மஹாத்மாக்கள்விரஹம் ஸஹியாத மார்தவம்" என்ற ஸ்ரீஸூக்தி இங்கே அநுஸந்தேயம்.

ஸௌஹார்த—சோபநாசம்ஸி ஹ்ருதயசாலித்வம் ஸௌஹார்தமெனப்படும். அதாவது ஸர்வஜந ஹிதைஷித்வம். *அருள்புரிந்த சிந்தை அடியார்மேல்வைத்து* என்ற ஆழ்வாரருளிச்செயலில் காணும் குணமிது.

ஸாம்ய—கீதையில் *ஸமோஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய:* என்று பணித்தபடியே அபிஜநவித்யாவ்ருத்தங்களில் வாசிபாராதே ஆச்ரயணீயத்வே ஸர்வஸமனுயிருக்கையாயிற்று இது.

ஆர்ஜவ—மநோவாக்காயங்களாகிற கரணத்ரயமும் ஒன்றிநில்லாத செவ்வைக்கேடரான ஸம்ஸாரிகளோடு கலந்து பரிமாறுமிடத்து அவர்களைப்போலே தானும் குடிலஹ்ருதயனுயிருக்கையன்றிக்கே செவ்வியனுயிருக்கையாகிற கரணத்ரய ஸாரூப்யம் இது.

தைர்ய—அநிஷ்டங்கள் மேன்மேலும் வந்து புகுந்தாலும் நெஞ்சில் விகாரலேசமுமின்றிக்கேயிருக்கை. "அத்யந்தாநிஷ்ட ப்ரஸங்கேபி அப்ரதிஹத சித்தவ்ருத்தித்வம் தைர்யம்" என்பர்கள்.

ஸ்தைர்ய—ஆச்ரிதர்களைக் கைவிடாமையிலே திண்ணிய ஊற்றங்கொண்டிருக்கை. *அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம், ந ஹி ப்ரதிஜ்ஞாம் ஸம்ச்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விசேஷத:.* மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந *ஏதத் வ்ரதம் மம* என்று மித்யாதிகளிலே ப்ரஸித்தமான குணமிது.

ஸ்வவீர்ய—அரியபெரிய போர்களைச் செய்யவேண்டி வந்தாலும் ஆயாஸமற்றிருக்கை வீர்யமாகிறது.

சௌர்ய—போர்க்களத்தில் புகும்போது துணைதேடாதே ஏகாகியாய்ச் சென்று புக வல்லமையாயிற்று சூரத்வம். *சதுர்தச ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீமகர்மணாம், ஏகச்ச ராமோ தர்மாத்மா கதம் யுத்தம் பவிஷ்யதி* என்று வயிறுபிடித்த காலத்திலே *அஸஹாய சூர ! அநபாயஸாஹஸ !* என்று கொண்டாடும்படியானமை.

க்ருதிதா—க்ருதக்ருத்யத்வம். அடியார்களுக்குச் செய்யவேண்டுமவற்றைச் செய்து தலைக்கட்டுகை. *அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம், க்ருத க்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ* என்கிறபடியே க்ருதக்ருத்யனாகை.

காம்பீர்ய—திருவுள்ளத்தின் ஆழம் அளவிலிகளால் அறியவொண்ணாதிருக்கை. அடியார்களுக்குச் செய்யவேண்டுமவற்றைச் செய்து தலைக்கட்டினாலுங்கூட *உன்னடியார்க்கு என்செய்வனென்றே யிருத்தி நீ* (பெரிய திருவந்தாதி 53.) என்கிறபடியே இன்னமு மென்செய்வோமென்றே யிருக்குமவனாகையாலே அப்படிப்பட்ட திருவுள்ளத்தினாழம் அறியவொண்ணாதிருக்கை.

சாதுர்யக—பிறரால் நெஞ்சாலும் நினைக்கவொண்ணாத அரியபெரிய செயல்களை மிகவெளிதாகச் செய்து தலைக்கட்டவல்ல சதிர்.

ஸௌந்தர்ய—கண்ணையும் நெஞ்சையும் கவரவல்லதான வடிவழகு. *சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோடிசைந்த காலம் மாதரார்கயற்கணென்னும் வலையுள்பட்டழுந்து வேனைப் போதரேயென்று சொல்லிப் புந்தியிற்புகுந்து தன்பாலாதரம் பெருகவைத்த வழகு* என்கிறபடியே விமுகர்களுடையவும் வைமுக்யத்தைமாற்றி யீடுபடுத்திக் கொள்ளவல்லவழகு.

ஸௌகுமார்ய—*ரங்கபர்த்துரபி லோசந சர்ச்சாம் ஸாஹஸாவளிஷ்வ லேகயமாநம், புஷ்ப ஹாஸ இதி நாம துஹாநம் ஸௌகுமார்யம் அதிவாங்மநஸம் ந:* என்று பட்டர் அநுஸந்திக்கும்படியான மென்மை. [*பாதாருந்துதமேவ பங்கஜரஜ:*இத்யாதி.] *த்வதங்கமார்தவே த்ருஷ்டே கஸ்ய சித்தே நபாஸதே, மாலதீ சசப்ருல்லேகா கதலீ நாம் கடோரதா* என்றான் ஒரு காமுககவி. மலையை மலரென்று பொய் சொன்ன படியிறே அது. *வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி* என்கிறபடியே பிராட்டிமாரும் பிடிக்கக் கூசும்படியான ஸௌகுமார்யமிறேயிது. "ஸௌந்தர்யாங்வித ஸௌகுமார்ய" என்றது—ஸௌந்தர்யமும் ஸௌகுமார்யமு மென்றபடி.

ஸமதா—கீழ் முதற்பாதத்தில் ஸாம்யமென்கிற குணம் சொல்லப்பட்டிருக்க, மீண்டு மிங்கே 'ஸமதா' என்கிறது திவ்யமங்கள விக்ரஹ குணமான ஸமத்வத்தைச் சொன்ன படி. ஸாமுத்ரிகத்திற் சொன்னபடியே ஸமபரிமாண சாலியான அவயவங்களுடைமை. *ஸமஸ் ஸமவிபக்தாங்க:* இத்யாதி.

லாவண்ய—ஒவ்வோரவயவமும் அழகிதாயிருக்கை ஸௌந்தர்யமெனப்படும்; ஸமுதாய சோபை லாவண்யமெனப்படும். ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலுள்ள *ஏகைகஸ்மிந் ப்ரமவயவே* என்கிறச்லோகம் இங்கே அநுஸந்தேயம்.

மூக்க்யைர் குணை:—ச்லோகம் தலைக்கட்டுகையாலே சந்தோபந்த நிர்ப்பந்தத்தினால் நிற்க வேண்டிற்றத்தனை. *அஸங்க்யேய கல்யாணகுணகண* என்னக் கடவதிறே. ஆக இப்படிப்பட்ட திருக்குணங்களோடேகூடி.

ஸௌந்தரோ தேவ: ஸ்ரீதருஷண்ட சைலநிலயஸ்ஸந் நித்யம் ஸ்திதஃ—அழகப்பிரானார் திருமாலிருஞ்சோலைமலையை இருப்பிடமாகக்கொண்டு அவதாரங்கள்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே எஞ்ஞான்றுமுளன். "ஸ்ரீதருஷண்ட சைல நிலயே" என்று ஸப்தமியான பாடமும் காண்கிறது; அப்போது திருமாலிருஞ் சோலைமலைக் கோயிலிலே என்றபடி. (25)

येष्वेकस्य गुणस्य विप्रुडपि वै लोकोत्तरं स्वाश्रयं कुर्यात्तादृशवैभवैरगणितैर्निस्सीमभूमान्वितैः ।
नित्यैर्दिव्यगुणैस्ततोऽधिकशुभत्वैकास्पदात्माश्रयैरिद्धं सुन्दरबाहुमस्मि शरणं यातो वनाद्रीश्वरम् ॥ २६ ॥

யேஷ்வேகஸ்ய குணஸ்ய விப்ருடபி வை லோகோத்தரம் ஸ்வாச்ரயம்
குர்யாத், தாத்ருச வைபவைரகணிதைர் நிஸ்ஸீம பூமாந்விதை:,
நித்யைர் திவ்யகுணைஸ் ததோதிகசுபத்வைகாஸ்பதாத்மாச்ரயை:
இத்தம் ஸௌந்தரபாஹுமஸ்மி சரணம் யாதோ வநாத்ரீச்வரம். (26)

***—கீழ்ச்லோகத்தில் பிரியவநுஸந்தித்த திருக்குணங்களை ஒருசேர நெஞ்சிற் கொண்டு, அவற்றுள் ஒவ்வொன்றின் பெருமையும் நெஞ்சால் நினைப்பரிதாகையாலே ஓரொரு திருக்குணமே யீடுபடுத்த வல்லதாயிருக்க, இப்படி நிரதிசயங்களான எண்ணிறந்த திருக்குணங்கள் பொலிய எம்பெருமான் ஸேவை ஸாதிக்கும்படி என்னே! என்று உள்குழைந்து பேசுகிறாரிதில்.

யேஷு குணேஷு ஏகஸ்ய குணஸ்ய விப்ருடபி ஸ்வாச்ரயம் லோகோத்தரம் குர்யாத்—கீழ்ச் சொன்ன குணங்களிலும் மற்றுமுள்ள குணங்களிலும் ஓரொரு குணத்தையெடுத்துக் கொள்வது; அதுதான் பூர்த்தியாக இருக்கவேணுமென்பதில்லை; அதில் ஏகதேசத்தில் யத்கிஞ்சிதம்சம் இருந்தாலும் அவ்விடத்தின் உத்கர்ஷம் வாக்குக்கு நிலமன்றிக்கேயிருக்கும். விப்ருட்—பிந்து என்றபடி; அத்யல்ப பாகத்தைச் சொன்னபடி.

தாத்ருசவைபவை:—ஏகதேச ஸம்பந்தமாத்திரத்தாலே ஸ்வாச்ரயத்தை நிறம்பெறுவிக்கவல்ல பெருமை ஒவ்வொரு திருக்குணத்திற்குமுண்டென்க.

அகணிதை:—அங்ஙனேயான குணங்களுக்கு எண்ணிக்கையில்லையென்க. ஆற்றில் மணலை எண்ணினாலும் எண்ணப்போகாதவையிறே பகவத்குணங்கள்.

நிஸ்ஸீம பூமாந்விதை:—"தாத்ருசவைபவை:" என்று கீழே சொல்லியிருக்கச்செய்தேயும் அபர்யாப்தியாலே மீண்டும் "நிஸ்ஸீம பூமாந்விதை:" என்கிறது. "யத்ர நாந்யத் பச்யதி நாந்யத் ச்ருணோதி நாந்யத் விஜாநாதி ஸ பூமா" என்றிருக்கையாலே சிந்தை மற்றொன்றின் திறத்ததாகாதபடி துவக்கவல்ல பெருமையை இங்கு விவக்ஷிக்கிறபடி; அதுதோன்றவே பூம பதப்ரயோகம் செய்தது.

நித்யை:—இத் திருக்குணங்கள் தாம் ஆகமாபாயியன்றிக்கே ஸ்வரூபாநுபந்திகளென்க.

ததோதிக சுபத்வைகாஸ்பத ஆத்மாச்ரயை:—இந்தச்லோகத்தில் முதற்பாதத்தில் சொன்ன விஷயம் ஒருபுறமிருக்க, கீழே "குணஜம் குணிநோ ஹி மங்கலத்வம்" (22) என்கிறச்லோகத்திற் சொன்னபடியே தம்மிற்காட்டிலும் சீரிய ஸ்வாச்ரயத்தை [திவ்யாத்மஸ்வரூபத்தை] உடையவையென்க. இத்தால், இத்தலையைப்பற்றியே நிறம் பெற்றவையென்பது சொல்லிற்றாயிற்று. ஆக இப்படிப்பட்ட,

திவ்யகுணை:—திருக்கல்யாண குணங்களாலே, இத்தம் (इद्धम्) — इत्थम् என்று சிலர் மருள்கொள்வதுண்டு; புத்தகங்களிற் பாடமும் அங்ஙனே பதிப்பித்துள்ளார்கள்: அது பொருந்ாது; इद्धम् என்பதே இங்குப் பொருந்தும்; 'இந்தீ-தீப்தௌ' என்கிற தாதுவடியாகப்பிறந்த க்தப்ரத்யயாந்தமான சொல்வடிவமிது.

ஆக இப்படிப்பட்ட [வநாத்ரீச்வரம் ஸுந்தரபாஹும் சரணம் யாதோஸ்மி] திருமலையழகரைச் சரணமடைந்தேனாகிறேனென்றாராயிற்று. (26)

सदा समस्तं जगदीक्षते हि यः प्रत्यक्षदृष्ट्या युगपद्भुवा स्वतः ।
स ईदृशज्ञाननिधिर्निधिस्तु नस्सिंहाद्रिकुञ्जेषु चकास्ति सुन्दरः ॥ ॥ २७ ॥

ஸதா ஸமஸ்தம் ஜகதீக்ஷதே ஹி யஃ
ப்ரத்யக்ஷத்ருஷ்ட்யா யுகபத்புவா ஸ்வதஃ,
ஸ ஈத்ருச ஜ்ஞாநநிதிர் நிதிஸ்து நஃ
ஸிம்ஹாத்ரி குஞ்ஜேஷு சகாஸ்தி ஸுந்தரஃ. (27)

***—கீழ்ச்சொன்ன திருக்குணங்களில் சிலவற்றையெடுத்துக்கொண்டநுபவிக்கப் புகுந்து, ஷாட்குண்யத்தில் தலையான ஜ்ஞானகுணத்தை யநுபவிக்கிறாரிதில்.

யஃ—யாவனொரு பகவான்,

ஸ்வதஃ யுகபத்புவா ப்ரத்யக்ஷத்ருஷ்ட்யா—ஒரு க்லேசமின்றிக்கே இயற்கையாகவே, பௌர்வாபர்யமின்றிக்கே ஏககாலத்திலேயுண்டான ப்ரத்யக்ஷத்ருஷ்டியாலே.

ஸமஸ்தம் ஜகத் ஸதா ஈக்ஷதே ஹி—ஸகல ப்ரபஞ்சங்களையும் என்றுமொக்க ஸாக்ஷாத்கரியாநின்றானே,

ஈத்ருசஜ்ஞாநநிதிஃ ஸஃ—இப்படிப்பட்ட *யுகபத் ஸர்வஸாக்ஷாத்கார க்ஷமமான ஜ்ஞானத்திற்கு நிதியான அந்த பகவான்,

நஃ நிதிஸ்ஸந்—*அந்தர்ஹிதோ நிதி ரஸி த்வமசேஷபும்ஸாம்* என்று ஸ்ரீவைகுண்டஸ்தவத்திலருளிச்செய்தபடியே நமக்கு அக்ஷய்ய நிதியாய்க்கொண்டு,

ஸுந்தரஃ ஸிம்ஹாத்ரி குஞ்ஜேஷு சகாஸ்தி—அழகப்பிரானாய்த் திருமாலிருஞ்சோலைமலையின் லதாக்ருஹங்களிலே ஸேவைஸாதியாநின்றானென்றாராயிற்று. திருமாலிருஞ்சோலையை வநாத்ரி, வ்ருஷாத்ரி என்பதுபோலே ஸிம்ஹாத்ரியென்பதுமுண்டு; "மடங்கல்நின்றதிரும் மாலிருஞ்சோலை" என்றபெரியதிருமொழியிலே நோக்கு. (27)

ऐश्वर्यतेजोबलवीर्यशक्तयः कीदृग्विधास्सुन्दरबाहुसंश्रयाः ।
योऽसौ जगज्जन्मलयस्थितिक्रियास्सङ्कल्पतोऽल्पादुपकल्पयत्यजः ॥ ॥ २८ ॥

ஐச்வர்ய தேஜோபல வீர்ய சக்தயஃ
கீத்ருக் விதாஸ் ஸுந்தரபாஹு ஸம்ச்ரயாஃ,
யோஸௌ ஜகஜ் ஜந்மலயஸ்திதிக்ரியாஸ்
ஸங்கல்பதோல்பா துபகல்பயத்யஜஃ. (28)

***—ஷாட்குண்யத்தில் ஜ்ஞாநகுணமொன்றை யநுபவித்தார் கீழ்ச்லோகத்தில்; மற்றையைந்து குணங்களையும் சேரவநுபவிக்கிறாரிதில். ஷாட்குண்யத்திற்கு ஜகத்

ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களிலே உபயோகமாகையாலே இவ்வாறு குணங்களையுங் கொண்டு அமைத்தளித்துத் துடைப்பதான காரியங்களை அவலீலையாகச் செய்து போருகின்ற எம்பெருமானது பெருமை என்னே! என்று வியந்து கூறுகிறபடி.

யோஸௌ அஜ:—யாவரொரு அழகர்,

அல்பாத் ஸங்கல்பத:—மிகச்சிறியதொரு ஸங்கல்பங்கொண்டே,

ஜகஜ்ஜந்மலயஸ்திதிக்ரியா: ஸங்கல்பயதி—ஸகல ஜகத்துக்களினுடையவும் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை நடத்திக்கொண்டு போருகிறாரோ,

ஸௌந்தரபாஹுஸம்ச்ரயா:—அப்படிப்பட்ட அழகரை அவலம்பித்திருக்கின்ற,

ஐச்வர்ய தேஜோ பல வீர்ய சக்தய: கீத்ருக்விதா:—ஐச்வர்யம், தேஜஸ்ஸு, பலம், வீர்யம் சக்தி ஆகிற இக்குணங்கள் அந்தோ! எப்படிப்பட்டவை!; அபரிச்சேத்யமான வைபவத்தையுடையவைகளன்றோவென்க. (28)

यत्कल्पायुतभोगतोऽपि कृशतां यायान्न तावत्फलं येष्वेकस्य तथाविधैस्सततजैरंहोभिरुत्सीमभिः ।
अस्तादाविह संसृतावुपचितैश्छन्नं सुसन्नं जनं संनत्या क्षमते क्षणाद्वनगिरिप्रस्थप्रियस्सुन्दरः ॥ ॥ २९ ॥

யத்கல்பாயுத போகதோபி க்ருசதாம் யாயாந் ந தாவத் பலம்
யேஷ்வேகஸ்ய ததாவிதைஸ் ஸததஜைரம்ஹோபி ருத்ஸீமபி:,
அஸ்தாதாவிஹ ஸம்ஸ்ருதாவுபசிதைச் சந்நம் ஸுஸந்நம் ஜநம்
ஸந்நத்யா க்ஷமதே க்ஷணாத் வநகிரிப்ரஸ்தப்ரியஸ் ஸுந்தர:. (29)

***—அழகருடைய க்ஷமாகுணத்தின் சீர்மையை அநுபவிக்கிறாரிதில். ஒரு பாபத்தின் பலனைப் பதினாயிரம் கல்பகாலம் அநுபவித்தாலும் அறாதென்னும்படியான பாபங்கள் அநவரதமும் எல்லைகடந்து செய்யப்படுகின்றனவாம் இவ்விருள்தருமா ஞாலத்தில்; அப்படிப்பட்ட மஹாபாபி ஜநத்தையும் ஒரு ப்ரணாமமாத்திரமே கொண்டு க்ஷமித்தருளாநின்றார் திருமலையழகர்—என்கிறார்.

யத் (அம்ஹ:) கல்பாயுதபோகதோபி க்ருசதாம் ந யாயாத்—யாதொரு பாபமானது பதினாயிரம் கல்பம் பலாநுபவம் செய்யப்பெற்றாலும் க்ஷயிக்கமாட்டாதோ,

தாவத் பலம் யேஷு ஏகஸ்ய—எந்த பாபங்களுள் ஒரு பாபத்திற்கு அவ்வளவு மிடுக்கு உள்ளதோ,

ததாவிதை:—அப்படிப்பட்டவைகளாய்,

ஸததஜை:—இடைவீடின்றிக்கே செய்யப்படுமவையாய்,

உத்ஸீமபி:—எல்லைகடந்தவையாய்,

அஸ்தாதௌ இஹ ஸம்ஸ்ருதௌ உபசிதை:—அநாதியான இந்த ஸம்ஸார மண்டலத்திலே வளர்ந்து செல்லுமவையான,

அம்ஹோபி: ச்சந்நம்—பாபங்களாலே திரோஹிதாத்மஸ்வரூபனாய்,

ஸுஸந்நம் ஜநம்—அதனாலேயே ஸுதராம் அவஸந்நனானவொரு பிராணியை,

வநகிரிப்ரஸ்தப்ரிய: ஸுந்தர:—திருமாலிருஞ்சோலை யடிவாரத்தில் திருவுள்ளமுகந்து வர்த்திக்குமழகர்,

ஸங்நத்யா க்ஷணாத் க்ஷமதே—*ப்ரணிபாத ப்ரதீகாரஸ் ஸம்ரம்போ ஹி மஹாத்மநாம்* என்று காளிதாஸனும் சொன்னபடியே ப்ரணிபாதமாத்ரமே பற்றாசாக நொடிப் பொழுதில் க்ஷமைக்கு இலக்காக்குகிறான். ஸ்ரீவைகுண்டஸ்தவத்திலுள்ள *யத் ப்ரஹ்ம கல்ப நியுதாநுபவேபி* என்னும் ச்லோகம் இங்கே அநுஸந்தேயம். (29)

यज्जातीयो यादृशो यत्स्वभावः पादच्छायां संश्रितो योऽपि कोऽपि ।

तज्जातीयस्तादृशस्तत्स्वभावः श्लिष्यत्येनं सुन्दरो वत्सलत्वात् ॥ ॥३०॥

யஜ்ஜாதீயோ யாத்ருசோ யத்ஸ்வபாவ:
பாதச்சாயாம் ஸம்ச்ரிதோ யோபிகோபி,
தஜ்ஜாதீயஸ் தாத்ருசஸ் தத்ஸ்வபாவ:
ச்லிஷ்யத்யேநம் ஸுந்தரோ வத்ஸலத்வாத். (30)

***—எம்பெருமான் அடியார்களோடு புரையறக் கலந்து பரிமாறும் குணவிசேஷத்தை இந்தச்லோகத்தாலும் மேல்ச்லோகத்தாலும் அநுபவிக்கிறார். "எக்குற்றவாளரெதுபிறப் பேதியல்வாக நின்றோர்" என்கிறபடியே எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் "காதம் பலவும் திரிந்துழன்றேற்கு அங்கோர் நிழலில்லை நீரில்லை, உன்பாத நிழலல்லால் மற்றோருயிர்ப்பிடம் நானெங்குங் காண்கின்றிலேன்—திருமாலிருஞ்சோலையெந்தாய்" என்றநுஸந்தித்துத் திருவடி நிழலிலே யொதுங்குமளவில், வாத்ஸல்யமடியாகத் தானும் அவர்களோடொத்தவனாயிருந்து கலந்து பரிமாறுவானென்கிறாரிதில்.

யஜ்ஜாதீய:—தேவமனுஷ்யாதி ஜாதிகளில் ஏதேனுமாகவுமாம்;

யாத்ருச:—ஒழுக்கத்தில் ஏதேனுமாகவுமாம்; யத்ஸ்வபாவ:—இயல்பு ஏதேனுமாகவுமாம்;

யோபிகோபி—இன்னானின்னையானென்றில்லை; எவனாகவுமாம்.

பாதச்சாயாம் ஸம்ச்ரித:—திருவடி நிழலிலே யொதுங்கினனாகவமையும்.

ஏநம் ஜநம்—இப்படிப்பட்ட பிராணியோடே,

ஸுந்தர:—திருமாலிருஞ்சோலையழகர்,

வத்ஸலத்வாத்—தம்முடைய வாத்ஸல்யமே பற்றாசாக,

தஜ்ஜாதீயஸ்ஸந் தாத்ருசஸ்ஸந் தத்ஸ்வபாவஸ் ஸந் ச்லிஷ்யதி—ஜாத்யாசாரஸ்வபாவங்களில் சிறிதும் வேற்றுமையின்றிக்கே ஒக்கக்கலந்து பரிமாறுகிறாராயிற்று. எதிர்த்தலையிலுள்ள ஜாத்யாசாரஸ்வபாவங்களில் பலவகைப்பட்ட தோஷங்கள் கிடக்க ஒக்கக் கலந்து பரிமாறுகை அஸம்பாவிதமன்றோவென்கிற சங்கைக்கு இடமறும்படி வத்ஸலத்வாத் என்கிறார். தோஷங்களை அநாதரிக்கைக்கடியான ஸ்நேஹ விசேஷமிருக்கையாலே அஸம்பாவிதமொன்றுமில்லையென்க. கீழ்ச்லோகத்தில், அபராத ஸஹிஷ்ணுதாரூபமான க்ஷமாகுணத்தை யநுபவித்தார்; இந்தச்லோகத்தில், தோஷபோக்யதாரூபமான வாத்ஸல்யத்தையநுபவித்தாராயிற்று. (30)

निहीनो जात्या वा भृशमकुशलैर्वा स्वचरितैः पुमान्वै यः कश्चिद्बहुतृणमपि स्यादगुणतः ।

भजन्तं तं पश्येद्भुजगपतिना तुल्यमपि यो वनाद्रिप्रस्थस्थस्स मम शरणं सुन्दरभुजः ॥ ॥ ३१ ॥

நிஹீநோ ஜாத்யா வா ப்ருசமகுசலைர்வா ஸ்வசரிதை:
புமாந் வை ய: கச்சித் பஹுத்ருணமபி ஸ்யாதகுணத:,
பஜந்தம் தம் பச்யேத் புஜகபதிநா துல்யமபி ய:
வநாத்ரிப்ரஸ்தஸ்தஸ் ஸ மம சரணம் ஸுந்தரபுஜ:. (31)

***—இந்த ச்லோகத்தில் ஸமத்வமாகிற மஹாகுணத்தை யநுபவிக்கிறார். ஸமத்வமாகிறது—மந்தர்களையும் ஸர்வாத்மநா நிஹீநர்களையும் மஹான்களோடொக்கத்

திருவுள்ளம் பற்றுதல். இன்று ஆச்ரயித்த நித்யஸம்ஸாரிகளில் கடைகெட்டவொருவனையும் திருவடி திருவனந்தாழ்வான் முதலானாரோடொக்கத் திருவுள்ளம் பற்றுகையாகிற மஹாகுணத்தைக் கொண்டாடுகிறார்.

யஃ கச்சித் புமாந்—பெயரிட்டுச் சொல்லவொண்ணாதானொருவன் எவனாகிலுமாகவுமாம்;

ஜாத்யா வா ப்ருசம் நிஹீநஃ—ஜாதியினால் தண்ணியனாகவுமாம்;

அகுசலைஃ ஸ்வசரிதைர் வா ப்ருசம் நிஹீநஃ—தீய நடத்தைகளினால் தண்ணியனாகவுமாம்.

அகுணதஃ பஹுத்ருணமபி ஸ்யாத்—ஒரு குணமுமில்லாமைபற்றி த்ருணப்ராயனாகவுமாம். ஆக இங்ஙனே ஸர்வாத்மநா தண்ணியனாயிருந்தானேலும்.

பஜந்தம் தம் புஜகபதிநா துல்யமபி யஃ பச்யேத்—பகவத் பஜநம் என்கிறவொரு குணம் அவனிடத்தில் வாய்க்குமாகில், அன்னவனை ஆதிசேஷனோடொக்கவும் கடாக்ஷித்தருளா நின்றான் யாவன்;

ஸஃ வநாத்ரி ப்ரஸ்தஸ்தஃ ஸுந்தரபுஜஃ மம சரணம்—திருமாலிருஞ்சோலை மலையடிவாரந் தன்னிலுறையும் அந்தச் சுந்தரத் தோளுடையான் எனக்குப் புகல்.

– ஸ்ரீ விபீஷணாழ்வான் கடற்கரையிலே வந்து சரணம் புகுந்தபோது அவனை ஈரக்கையாலே குளிரத் தழுவி அங்கீகரித்தபோது பெருமாளருளிச்செய்த வார்த்தை—(கம்பர்) "குகனொடுமைவரானோம் முன்பு, பின்குன்று சூழ்வான் மகனொடுமறுவரானோம், எம்முழையன்பின்வந்த அகனமர்காதலைய! நின்னொடு மெழுவரானோம்" என்பது. இப்படி வேடனையும் குரங்கையும் அரக்கனையும் தம்பிமாராகக் கொள்ளுமியல்வினனான எம்பெருமானுக்கு இது அஸம்பாவிதமன்றிறே. [பஹுத்ருணம்—अल्पौपम्यार्थे बहुच्प्रत्ययः ।] (31)

एकैकमङ्गलगुणानुभवाभिनन्दमीदृक्त्वियानिति च सुन्दरदोष्णि कृष्णे ।
ते ये शतंत्विति नियन्तुमनाश्श्रुतिर्हि नैवैष वाङ्मनसगोचर इत्युदाह ॥ ॥३२॥

ஏகைகமங்கல குணாநுபவாபிநந்தம்
ஈத்ருக் த்வியாநிதி ச ஸுந்தரதோஷ்ணி க்ருஷ்ணே,
தேயே சதந்த்விதி நியந்துமநாஃ ச்ருதிர் ஹை
நைவைஷ வாங்மநஸ கோசர இத்யுதாஹ. (32)

***—கீழ் ஒவ்வொரு ச்லோகத்தாலும் ஒவ்வொரு திருக்குணத்தைப் பேசியநுபவித்து வந்தார். வேதபுருஷன் தானும் *யதோ வாசோ நிவர்த்தந்தே, அப்ராப்ய மநஸா ஸஹ* என்று மீண்டபடியை யெடுத்துக்காட்டுகிற முகத்தாலே தாமும் மீளவேண்டும்படியை மூதலிக்கிறார் இந்தச்லோகத்தில். ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் (51) *த்ரய்யுத்யதா தவ யுவத்வமுகைர் குணௌகைஃ* என்று தொடங்கியுள்ள ச்லோகமும் இந்த ச்லோகமும் பெரும்பாலும் பொருளொற்றுமை கொண்டிருக்கும். இரண்டுக்கும் "நைவைஷ வாங்மநஸ கோசர இத்யுதாஹ" என்பதே நான்காவது பாதமாக அமைந்திருக்கும்படி காணத்தக்கது.

ஸுந்தரதோஷ்ணி க்ருஷ்ணே—அஸங்க்யேய கல்யாண குணகண நிதியான சுந்தரத்தோளுடையான் பக்கலிலே,

ஏகைகமங்கள குணாநுபவ அபிநந்தம்—ஒவ்வொரு திருக்கல்யாண குணத்தையுமநுபவிப்பதனாலுண்டாகுமானந்தத்தை,

ஈத்ருக் இயாநிதி நியந்துமநாஃ ச்ருதிஸ்துஃ—இப்படிப்பட்டதென்றும் இவ்வளவிற்றென்றும் பரிச்சேதிக்கப் புகுந்த வேதமோவென்றால்

ஏஷஃ வாங்மநஸ கோசரோ நைவ இதி உதாஹ—இது வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டவே மாட்டாததென்று சொல்லித் தலைக்கட்டிற்று.

ஸ்தோத்ரரத்நத்தில்* உபர்யுபர்யப்ஜபுவோபி* என்கிற ச்லோகத்தின் வியாக்கியானத்திலும் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தரசதகத்தில் *மர்த்யோத்தாயம் விரிஞ்சாவதிகம்* என்கிற ச்லோகத்தின் வியாக்கியானத்திலும் ஆனந்தவல்லியின் ப்ரக்ரியையை விரிய வுரைத்தோம், அங்கே கண்டுகொள்வது. (32)

अब्जपादमरविन्दलोचनं पद्मपाणितलमञ्जनप्रभम् ।
सुन्दरोरुभुजमिन्दिरापतिं वन्दिषीय वरदं वनाद्रिगम् ॥ ॥३३॥

அப்ஜபாதமரவிந்த லோசநம் பத்மபாணிதலமஞ்ஜநப்ரபம்,
ஸுந்தரோருபுஜ மிந்திராபதிம் வந்திஷீய வரதம் வநாத்ரிகம். (33)

***—திருக்கல்யாண குணாநுபவத்திலிருந்து திவ்யமங்கள விக்ரஹ ஸௌந்தர்ய லாவண்யாநுபவத்தில் தோள்மாற நினைத்து, அதற்கு அடியிடுவதாயிற்று இந்த ச்லோகம். இதில் அப்ஜமென்றும் அரவிந்தமென்றும் பத்மமென்றும் பதபேதமேயொழிய அர்த்தபேதமில்லை. திருநெடுந்தாண்டகத்தில் "கைவண்ணந் தாமரை, வாய்கமலம் போலும், கண்ணிணையு மரவிந்தம்'' என்றருளிச்செய்த கட்டளையிலே இது அருளிச் செய்கிறபடி. "செந்தாமரைத் தடங்கண் செங்கனிவாய் செங்கமலம் செந்தாமரை யடிக்கள்'' என்று ஒரு சொல்லையேயிட்டுச் சொல்லுவதுமுண்டு; தாமரை கமலம் அரவிந்தம் என்று வெவ்வேறு சொற்களையிட்டுச் சொல்லுவதுமுண்டு. அநுபவ ரஸிகர்களின் படி ஓரோவகையாயிருக்குமிறே. எங்ஙனே சொல்லிலும் "கட்டுரைக்கில் தாமரை நின்கண்பாதம் கையொவ்வா'' என்று நம்மாழ்வாரருளிச்செய்தபடியே ஒவ்வாத படியன்றோ இருப்பது; இந்த ஸ்தவந்தன்னிலும் மேலே *அப்ஜம் ந கதம் நிதர்சநம்* என்றருளிச்செய்கிறாரே. அப்படியிருந்தும் உபமானங்களையிட்டு அநுபவிப்பது ஏனென்னில்; ஏதோ வொருவிதமாக வருணித்துப் போதைப்போக்கவேண்டுமே. வாளாவிருக்கமுடியாதே. 'அத்தைப்போலிருக்கும் இத்தைப்போலிருக்கும் என்று சொல்லிக்கொண்டிருப்பதும் ஒருபோதுபோக்கா யிருக்குமிறே,

அப்ஜபாதம்—செந்தாமரைபோன்ற திருவடிகளையுடையவன்.

அரவிந்தலோசநம்—*அரவிந்தம்போன்று நீண்ட கண்ணன்.

பத்மபாணிதலம்—பற்பமென்னலாம்படியான திருக்கைத்தலமுடையவன். பத்மத்தைப் பாணிதலத்திலேயுடையவனென்னவுமாம்; அப்போது பத்மமென்றது பத்மரேகையைச் சொன்னபடி. பத்மத்தைக் கையிலே தரித்து ஸேவைஸாதிப்பதுமுண்டு; அதைச் சொல்லிற்றாகவுமாம். திருமங்கையாழ்வார் அட்டபுயகரப் பதிகத்தில் (2—8—3) *செம்பொனிலங்கு......ஒண்மலர்பற்றி* என்றருளிச்செய்ததுகாண்க.

அஞ்ஜநப்ரபம்—*மைப்படி மேனியிறே. *அஞ்சனவண்ணனை என்றும், *அஞ்சனம் புரையுந் திருவுருவனை* என்றும் ஆழ்வார்கள் வாய்வெருவும் திருமேனியிறே.

ஸுந்தர உரு புஜம்—அழகியவாய் நீண்டவையான திருத்தோள்களையுடையவன்.

இந்திராபதிம்—*திருமகளார் தனிக்கேள்வன்,

வநாத்ரிகம் வரதம் வந்திஷீய—ஹஸ்திகிரியிலே யெழுந்தருளி நிற்கிற வரதன் வநாத்ரியிலே ஸேவைஸாதித்தருளுகிறுன்போலும். ஆழ்வார்கள் *நாவாயுளானை நறையூரில் கண்டேனே* என்றும், *தேன்கொண்ட சாரல் திருவேங்கடத்தானை நான் சென்று நாடி நறையூரில் கண்டேனே* என்றும் *நின்றவூர் நித்திலத்தைக் கண்டது நான் கடன்மல்லைத் தலசயனத்தே* என்றும் ஓரிடத்தெம்பெருமானை மற்றோரிடத்தே காணப்பெற்றதாக அருளிச்செய்வதுண்டே; அதுபோல. ஆக, ஸர்வாங்க ஸுந்தரனுன வரதனை வநாத்ரியிலே ஸேவிக்கக் கடவேனென்ருராயிற்று. (33)

कनकमरतकाञ्जनद्रवाणां मथनसमुत्थितसारमेलनोत्थम् ।
जयति किमपि रूपमस्य तेजो वनगिरिनन्दनसुन्दरोरुबाहोः ॥ ॥ ३४ ॥

கநகமரதகாஞ்ஜநத்ரவாணும்
மதநஸமுத்தித ஸாரமேலநோத்தம்,
ஜயதி கிமபி ரூபமஸ்ய தேஜஃ
வநகிரிநந்தந ஸுந்தரோருபாஹோஃ. (34)

அழகருடைய திவ்யமங்கள விக்ரஹ லாவண்யத்தில் ஈடுபட்டுப் பேசுகிருர், [அஸ்ய வநகிரிநந்தநஸுந்தரோருபாஹோஃ கிமபி ரூபம் தேஜஃஜயதி] திருமாலிருஞ்சோலைமலையிலே, உகந்துவர்த்திக்கிற இந்த சுந்தரத்தோளுடையானுடைய பரமவிலக்ஷணமான தேஜஸ்ஸு விளங்காநின்றது. (கிமபிரூபம்) என்பதை இரண்டு பதமாகக் கொள்ளுகையன்றிக்கே ஸமஸ்தமான ஒரே பதமாகக் கொள்ளத்தகும்; அநிர்வசநீயமான ரூபத்தையுடைய வென்றபடி. அன்றிக்கே, வ்யஸ்தபதமாகவே கொண்டு 'தேஜஃ கிமபி ரூபம் ஜயதி'—தேஜோமயமான ஒருருவம் திகழ்கின்றது என்று முரைக்கலாம். அது எப்படிப்பட்டதென்னில்: [கநக மரதகாஞ்ஜநத்ரவாணும் மதநஸமுத்திதஸார மேலநோத்தம்] கனகம், மரதகம், அஞ்ஜனம் ஆகிய இவற்றையுருக்கி, அந்த த்ரவத்தைத் தனித்தனியே மதனம்பண்ணி, அதை வடிக்கட்டி ஒன்றுசேர்த்தாற்போன்றுள்ளதாம் அழகருடைய திருவுருவம். முதல் பாதத்தின் முடிவிலுள்ள த்ரவபதம் கனகம் முதலிய மூன்றிலும் அந்வயிக்கக்கடவது. கநகத்ரவம், மரதகத்ரவம், அஞ்ஜநத்ரவம் ஆகிய இம்மூன்று த்ரவங்களையும் என்றபடி. இவற்றை மதனம்பண்ணுகையாவது—புடம்போடுகை; அநந்தரம் வெளிறு கழித்து ஸாரத்தைத் திரட்டும்படியாகும். அப்படி திரட்டின ஸாரங்களை ஒன்றுகூட்டியதனுல் இந்த திவ்யமங்கள விக்ரஹலாவண்ய முண்டாயிற்றென்று சமத்காரமாக வருளிச்செய்தபடி. மூன்று தாழியிலே தயிரை நிறைத்துக் கடைந்தால் அவற்றின் ஸாரமாக வெண்ணெய் திரளுமாபோலே, கநகத்ரவ மரதகத்ரவ அஞ்ஜநத்ரவங்களை மூன்று பாத்திரங்களிலே நிறைத்துக் கடைந்தால் அவற்றில்நின்று ஸாராம்சங்கள் தோன்றுமே; அவற்றின் கூட்டரவே அழகர் திருமேனியாகக் கொள்ளத்தக்கது.

किंनु स्वयं स्वात्मविभूषणं भवन्नसावलङ्कार इतीरितो जनैः ।
वर्धिष्णुबालद्रुमषण्डमण्डितं वनाचलं वा परितः प्रसाधयन् ॥ ॥ ३५ ॥

கிம் நு ஸ்வயம் ஸ்வாத்மவிபூஷணம் பவந்
அஸாவலங்கார இதீரிதோ ஜநைஃ,
வர்த்திஷ்ணுபாலத்ருமஷண்டமண்டிதம்
வநாசலம் வா பரிதஃ ப்ரஸாதயந். (35)

திருமாலிருஞ்சோலையழகர்க்கு அலங்காரனென்றெரு திருநாமமுண்டு; பெரியாழ்வார் திருமொழியில் *பலபல நாழஞ்சொல்லிப் பழித்த சிசுபாலன்றன்னை அலை

வலைமை தவிர்த்த அழகன் அலங்காரன் மலை—திருமாலிருஞ்சோலையதே* என்ற பாசுரத்தில் இத் திருநாமமருளிச்செய்யப்பட்டிரா நின்றது. இத் திருநாமம் இப்பெருமானுக்கு எங்ஙனே வந்ததென்று ஆராய்ச்சி செய்யப் புகுந்து இரண்டுவகையான உல்லேகங்களை வெளியிடுகிறார் இந்தச்லோகத்தில்

அஸௌ ஜனைः அலங்கார இதி ஈரிதः—இவ்வழகப்பிரானர் உலகத்தவர்களால் அலங்காரரென்று வழங்கப்படுகிறார்; இதற்குக் காரணமெதுவாயிருக்குமென்று பார்க்குமளவில்;

கிம் நு ஸ்வயம் ஸ்வாத்மவிபூஷணம் பவந்—ஆபரணாதிகளால் அழகுபெறவேண்டாதே தனக்குத்தானே அலங்காரமாயிருப்பது பற்றி - என்னலாமோ? அன்றிக்கே;

வர்த்திஷ்ணுபாலத்ருமஷண்டமண்டிதம் வநாசலம் பரித: ப்ரஸாதயந் வா— *வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ்சோலையைச் சுற்றிலும் அலங்கரிப்பது பற்றி என்னலாமோ? வரதராஜஸ்தவத்தில் *கர்ணிகா தவ கரீச! கிமேஷா* என்னும் சுலோகத்திலுள்ள உல்லேகங்களை இங்கு ஒருபுடை இதற்குப் போலியாக நினைப்பது. ஸ்வயம் ஸ்வாத்மவிபூஷணமாயிருப்பதுபற்றியும் வநகிரி விபூஷணமாயிருப்பது பற்றியும் அலங்காரனென்று திருநாமமாயிற்றென்பது பரமதாற்பரியம்.

நம்மாழ்வார் *கிளரொளி யிளமையில் *வளரிளம் பொழில்சூழ்மாலிருஞ்சோலை* என்றருளிச் செய்ததை *வர்த்திஷ்ணுபாலத்ருமஷண்டமண்டிதம் வநாசலம்* என்று மொழி பெயர்த்தபடி. (35)

सुखस्पर्शैर्नित्यैः कुसुमसुकुमाराङ्गसुखदैः सुसौगन्ध्यैर्दिव्याभरणगणदिव्यायुधगणैः ।
अलङ्कार्यैस्सर्वैर्निगदितमलङ्कार इति यस्समाख्यानं धत्ते स वनगिरिनाथोऽस्तु शरणम् ॥ ॥ ३६ ॥

ஸுகஸ்பர்சைர் நித்யைः குஸுமஸுகுமாராங்க ஸுகதைः
ஸுஸௌகந்த்யைர் திவ்யாபரணகண திவ்யாயுத கணைः,
அலங்கார்யைஸ் ஸர்வைர் நிகதிதமலங்கார இதி யः
ஸமாக்யாநம் தத்தே ஸ வநகிரிநாதோஸ்து சரணம். (36)

அழகருக்கு அலங்காரனென்னும் திருநாமம் எதுபற்றி? என்று விதர்க்கமாய்ச் சென்றது கீழ்ச்லோகம்; நிஷ்கர்ஷமாய்ச் செல்லுகிறது இந்தச்லோகம். கிரீடமகுடசூடாவதம்ஸாதி திவ்யாபரணங்களாலும் ஸுதர்சந பாஞ்சஜந்யாதி திவ்யாயுதங்களாலும் அலங்காரம் பெற்றிருப்பதனாலே அலங்காரனென்று ஓதப்படுகிறானாயிற்று; அன்னவனே நமக்குத் தஞ்சம்— என்கிறார். அந்த திவ்யாபரணங்களும் திவ்யாயுதங்களும் எப்படிப்பட்டவை யென்ன;

ஸுகஸ்பர்சைः— சரணாகதிகத்யத்தில் ஆபரண சூர்ணையிலே "நிரதிசய ஸுகஸ்பர்ச" இத்யாதியாக அருளிச் செய்தபடியே மெத்தென்றிருக்குமவை.

குஸுமஸுகுமாராங்கஸுகதைः— புஷ்பஹாஸ ஸுகுமாரங்களான பாதாதிகேசாந்த அவயவங்களுக்குக் கருமுகை மாலைபோலே இனிமையைத் தரும்படியானவை.

ஸுஸௌகந்த்யைः— லோக விலக்ஷணமான திவ்ய பரிமளம் பொருந்தியவை.

அலங்கார்யைः— திருமேனிக்கு சோபாவஹங்களாயிருக்குமவை. ஆக இப்படிப்பட்ட;

ஸர்வைः திவ்யாபரணகண திவ்யாயுதகணை:— ஸகல திவ்யாபரணகணங்களாலும் ஸகல திவ்யாயுதகணங்களாலும்,

நிகதிதம் அலங்கார இதி ஸமாக்க்யாநம் — தெரிவிக்கப்பட்டதான அலங்காரரென்னும் திருநாமத்தை யஃ வநகிரிநாதஃ தத்தே — யாவரொரு திருமாலிருஞ்சோலை யழகர் தமக்குத் திருநாமமாகக்கொண்டிருக்கிறரோ,

ஸஃ சரணம் அஸ்து — அவர் (நமக்குத்) தஞ்சமாகக் கடவர். ஆக இந்த ச்லோகம் முன் ச்லோகத்திற்கு சேஷபூதமாகி அலங்காரநாம நிர்வசநம் செய்ததாயிற்று. 36

मकुटमकुटमालोत्तंसचूडाललामस्वलकतिलकमालाकुण्डलैस्सोर्ध्वपुण्ड्रैः ।
मणिवरवनमालाहारकेयूरकण्ठ्यैस्तुलसिकटककाञ्चीनूपुराद्यैश्च भूषैः ॥ ३७ ॥

மகுட மகுட மாலோத்தம்ஸ சூடாலலாம
ஸ்வலக திலகமாலா குண்டலைஸ் ஸோர்த்வ புண்ட்ரைஃ,
மணிவர வநமாலாஹார கேயூரகண்ட்யைஃ
துலஸி கடக காஞ்சீ நூபுராத்யைச்ச பூஷைஃ.

असिजलजरथाङ्गैश्शार्ङ्गकौमोदकीभ्यामगणितगुणजालैरायुधैरप्यथान्यैः ।
सततविततशोभं पद्मनाभं वनाद्रेरुपवनसुखलीलं सुन्दरं वन्दिषीय ॥ ३८ ॥

அஸிஜலஜ ரதாங்கைச் சார்ங்க கௌமோதகீப்யாம்
அகணிதகுண ஜாலைராயுதைரப்யதாந்யைஃ,
ஸதத விதத சோபம் பத்மநாபம் வநாத்ரேஃ
உபவந ஸுகலீலம் ஸுந்தரம் வந்திஷீய. 38

***—இவையிரண்டு ச்லோகங்களும் சேர்ந்து ஏகாந்வயமாகையாலே குளகமெனப்படும். கீழ்ச்லோகத்தில் * திவ்யாபரணகண திவ்யாயுத கணைஃ * என்று இரு வகுப்புகள் அருளிச் செய்தாரே; அவற்றுள் முக்கியமான சிலவற்றை யெடுத்துரைக்க விரும்பி ஒரு ச்லோகத்தில் திருவாபரணங்களையும் மற்றொரு ச்லோகத்தில் திவ்யாயுதங்களையும் அருளிச் செய்து இவை யெல்லாமுமே ஆபரண கோடியில் அமைந்திருக்கும் படியை யருளிச்செய்து தலைக்கட்டுகிறர்.

மகுட—திருவபிஷேகமென்ன, மகுடமாலா—அந்தத் திருவபிஷேகத்தைச் சுற்றி அலங்காரமாகச் சாத்தப்படுகிறதொரு மாலையென்ன, உத்தம்ஸ—திருவபிஷேகத்தின் முனையிலேயாம் ஆபரண விசேஷமென்ன, சூடாலலாம—தொப்பாரமென்ன, [ஸ்வலக திலக மாலா] மாலா சப்தத்தை இரண்டிடத்திலும் அந்வயித்து, ஸ்வலகமாலா - திலக மாலா என்றுக்குவது; திருக்குழற்கற்றைக்குச் சாத்துமாபரணமும் திரு நெற்றிக்குச் சாத்துமாபரணமுமென்ன,

... ..குண்டலைஸ் ஸோர்த்த்வபுண்ட்ரைஃ—மகர குண்டலமென்ன ஊர்த்த்வ புண்ட்ராலங்காரமென்ன, மணிவர—*குருமாமணிப்பூண்* என்னப்பட்ட ஸ்ரீ கௌஸ்துபமென்ன, வநமாலா—*ஆபாத சூடம் யா மாலா வநமாலேதி கத்த்யதே* எனப்பட்ட வநமாலையென்ன, ஹார—முத்து வடங்களென்ன, கேயூர—திருத்தோள்வளைகளென்ன, கண்ட்யை:—காறையென்னும் கண்டாபரணமென்ன, துலஸி—தண்ணந்துழாய் மாலையென்ன, கடக—ஹஸ்தாபரணமென்ன, காஞ்சீ—திருவரைநாணென்ன, நூபுராத்யைச்ச பூஷைஃ—திருவடிச் சதங்கையென்ன, ஆக, இவை முதலான திருவாபரணங்களாலும். [இதற்கு மேல் ச்லோகத்திலுள்ள *ஸதத விதத சோபம்* என்பதிலே அந்வயம்.] ஆக, இந்த ச்லோகத்தினுல் திவ்ய பூஷணங்களை ஸங்க்ரஹித்தாராயிற்று. பூஷா சப்தம் ஸ்த்ரீலிங்கமாகையாலே பூஷாபிஃ என்னவேண்டியிருக்க பூஷைஃ என்றது எங்ஙனே பொருந்துமென்று சிலர் சங்கிப்பதுண்டு; ஸம்ஸ்க்ருத வ்யாக்

யாதா "வ்யாகரண நிபுணைர் விசாரணீயம்" என்றெழுதி வைத்தார். घनन्तत्वात् வரு மென்று கொள்ளக் கடவது. (37.) இனி அடுத்த ச்லோகத்தின் முதற்பாதத்தில் பஞ்சாயுதங்களை யருளிச்செய்கிறார்.

அஸி ஜலஜ ரதாங்கைः—நந்தகமென்றும் பாஞ்சஜந்யமென்றும் ஸுதர்சநமென்றும் பேர் பெற்ற வாள் சங்கு சக்கரங்களாலும்; சார்ங்க கௌமோதகீப்யாம்—சார்ங்கமென்றும் கௌமோதகியென்றும் பேர்பெற்ற வில்தண்டுகளாலும்;

அத அகணித குணஜாலைः அந்யைரபி ஆயுதைः—எண்ணித் தலைக்கட்ட வொண்ணாத குண கணங்களையுடைய மற்றுமுள்ள ஹலமுஸல பரசு ப்ரப்ருதிகளான ஆயுதங் களாலும்.

ஸததவிதத சோபம்:—நிரந்தரமாகப் பரம்பின ஸௌந்தர்யத்தையுடையவரான அழகரை வணங்கக்கடவேன். திவ்யாயுதங்களும் திவ்யாபரணம் போலவே திருமேனிக்கு சோபாவஹமாயிருக்கப்பெற்ற வைலக்ஷண்யத்தை அநுபவித்தாராயிற்று. 38

आजानजस्वगतबन्धुरगन्धलुब्धभ्राम्यद्विदग्धमधुपालिसदेशकेशम् ।
विश्वाधिराज्यपरिबर्हकिरीटराजं है सुन्दरस्य बत ! सुन्दरमुत्तमाङ्गम् ॥३९॥

ஆஜாநஜஸ்வகத பந்துரகந்தலுப்த
ப்ராம்யத் விதக்த மதுபாலி ஸதேச கேசம்,
விச்வாதிராஜ்ய பரிபர்ஹ கிரீடராஜம்
ஹை ஸுந்தரஸ்ய பத! ஸுந்தரமுத்தமாங்கம். 39

* * * இந்த ச்லோகத்தினால் அழகருடைய திருமுடியை யநுபவிக்கிறார்.

ஸுந்தரஸ்ய உத்தமாங்கம் ஸுந்தரம்—அழகருடைய திருமுடியானது மிகவழகியது.

ஹை! பத! என்னுமிரண்டு அவ்யயங்களினால் இவ்வழகை உள்ளபடி வருணிக்க முடியாமல் தளருகின்றமை தோற்றுவிக்கப்படும். திருமுடி எப்படிப்பட்டதென்ன, இரண்டு விசேஷணங்களினால் அதன் சிறப்பைப் பேசுகிறார்; சிறந்த கூந்தலையும் உயர்ந்த மகுடத்தையுமுடையது என்கிறார்.

ஆஜாநஜ ஸ்வகத பந்துர கந்தலுப்த ப்ராம்யத்விதக்த மதுபாளி ஸதேச கேசம்—'ஸ்வகத' என்றவிடத்தில ஸ்வசப்தத்தாலே கேசம் க்ரஹிக்கத்தக்கது; 'ஆஜாநஜ' என்று தொடங்கி 'ஸதேச' என்றவளவும் கேசத்திற்கே விசேஷணமாகையாலே. இயற்கையான பரிமளத்தில் லோபத்தாலே சுழலமிடா நின்ற வண்டுகளின் திரள்படிந்த கூந்தலையுடையது திருமுடியென்கை. 'ஆஜாநஜ' என்றது—ஆரோபிதமன்றிக்கே ஜன்மஸித்தமான வென்றபடி. கூந்தலுக்கு இதர த்ரவ்யங்களைக் கொண்டு நறுமண மூட்டுவாருண்டே யுலகில்; அங்ஙனன்றிக்கே * ஸர்வகந்தः* என்று உபநிஷத் ப்ரஸித்தனானவனுடைய கூந்தலாகையாலே நறுமணம் இயற்கையாகப் பெற்றிருக்குமாயிற்று. பந்துர என்றது ஸம்ருத்தமான வென்றபடி. ஸ்வாபாவிகமாய்த் தன்னிடத்திலுள்ள ஸம்ருத்தமான நறுமணத்தில் லோபமுடையவையாய்க் கொண்டு மேலே சுழலமிடா நின்ற ரஸிக ப்ரமர பங்க்திகள் படியப்பெற்ற திருக்குழற்கற்றையை யுடையது என்றதாயிற்று. ஸதேச என்றதற்கு இரண்டு வகையாகப் பொருள் கொள்ளலாம்; மதுபாவளிகளோடே ஸமாநாதிகரணமாயிருக்கின்ற என்றும், மதுபாவளிகளோடே ஸமானமாயிருக்கின்ற என்றும். முந்தின பொருளில் வண்டுகளும் கேசங்களும் உத்தமாங்கத்திலுள்ளதாகத் தெரிவிக்கப்படும். பிந்தின பொருளில், * களிவண்டெங்குங் கலந்தாற்போல் கமழ் பூங்குழல்கள் தடந்தோள் மேல் மிளிர நின்று* என்று நாச்சியாரருளிச் செய்தபடியே களிவண்டுகள் படிந்திருக்கின்றனவோ வென்று சங்கிக்கலாம் படியான கூந்தலையுடையது உத்தமாங்கம் என்றதாகும்.

விச்வாதி ராஜ்ய பரிபர்ஹ கிரீடராஜம்—ஸர்வேச்வரத்வ ஸூசகமாயிருக்கின்ற திருவபிஷேகத்தையுடைய தென்கை. * பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே ஆள்கின்ற உபயவிபூதி நிர்வாஹகன் இவனே யென்று கோட்சொல்லித் தருகின்றதாம் திருவபிஷேகம். பரிபர்ஹ மென்று ஸாமக்ரிக்குப் பெயர். ஸூசகமென்பது தாத்பர்யஸித்தம். 39

अन्धं तमस्तिमिरनिर्मितमेव यत्स्यात्तत्सारसाधितसुतन्त्वतिवृत्तवार्तम् ।
ईशस्य (केसरिगिरे) केशवहरेरलकालिजालं तत्तुल्यकुल्यमधुपाढ्यमहावनस्य ॥४०॥

அந்தம் தமஸ் திமிர நிர்மித மேவ யத் ஸ்யாத்
தத்ஸாரஸாதித ஸுதந்த்வதிவ்ருத்த வார்த்தம்,
ஈசஸ்ய கேசவகிரே ரலகாலிஜாலம்
தத்துல்ய குல்ய மதுபாட்ய மஹாவநஸ்ய. 40

*** இந்த ச்லோகத்தினுல் அழகருடைய திருக்குழற் கற்றையை வருணிக்கிருர். கீழ்ச்லோகத்தில் பூர்வார்த்தத்தாலே கேசபாச வர்ணநம் செய்திருந்தாலும் அது விசேஷணமாய் நின்றதத்தனை. அதுதன்னையே விசேஷ்யமாக்கியநுபவிப்பதும் ஆழ்வார் பாசுரமொன்றைக் கொண்டு அநுபவிப்பதும் இந்த ச்லோகத்திற்கு விசேஷாகாரம்.

திருவாய்மொழியில் * ஏழையராவியில் *கொள்கின்ற கோளிருளைச் சுகிர்ந்திட்ட கொழுஞ்சுருளின் உட்கொண்ட நீல நன்னூல் தழைகொல்? அன்று மாயன் குழல் * என்ற இரண்டடிகளை மொழிபெயர்த்ததாயிருக்கிறது இந்த ச்லோகத்தில் பூர்வார்த்தம். நம்மாழ்வார், திருக்குழற் கற்றையினழகு வந்து தம்மை நலிகிறபடியைச் சொன்ன அப் பாசுரத்தில், திருக்குழலை ஒருவாறு உல்லேகம் பண்ணுவதும் அந்த உல்லேகமும் உரியதன்றென்று உதறித் தள்ளுவதுமானுர். உல்லேகம் செய்தபடி எங்ஙனே யென்னில்; பிரளயகாலத்தில் ப்ரபஞ்சத்தையெல்லாம் வியாபிக்கக் கடவதான இருள் உண்டே, அதைப் பிடித்துக் கொணர்ந்து அதில் அஸாரமான அம்சத்தைக் கழித்துப் பரமஸாரமான பாகத்தை நூல் நூற்பதற்காகக் கொள்ளும் ஒரு பஞ்சுச் சுருளை போலே சுருளையாக்கி அதில் நின்றும் நூற்கப்பட்டதொரு நீல நூல் தழையோ இந்த கூந்தலென்பது—என்று சொல்லலாமென்று பார்த்தார்; இந்த அபூதோபமையையும் ஸஹியாதபடி யன்றோ திருக்குழலிருப்பது. ஆகவே உடனே 'அன்று' என்று தாமே மறுத்துவிட்டார். பின்னை என்னவென்று சொல்லலாமென்ன, 'மாயன் குழல்' என்றிவ்வளவே [உபமேயந் தன்னையே] சொல்லவேணுமென்று முடித்தார். அதே ரீதியில் அமைந்ததுதான் இந்த ச்லோகமும்.

திமிரநிர்மிதமேவ அந்தம் தமஃ யத் ஸ்யாத் தத்ஸாரஸாதித ஸுதந்து அதிவ்ருத்த வார்த்தம்—இருளையே உபாதாநமாகக் கொண்டு நிருமிக்கப்பட்ட ஒரு காடாந்தகார மிருக்குமாகில் அதனுடைய ஸாரத்தைக் கொண்டு செய்யப்பட்ட நல்ல நூல்தொகுதிதான் அழகருடைய திருக்குழல் என்னப் பார்த்தால் [அதிவ்ருத்தவார்த்தம்] அதை அதிக்ரமித்த வார்த்தையையுடையது — அங்ஙனே சொல்லவொண்ணுததாயிருக்குமென்றபடி. அதுதான் எதுவென்னில்;

அலகாளி ஜாலம்—வண்டொத்திருண்ட குழல் கற்றை. அதுதான் யாருடையதென்னில்;

தத்துல்ய குல்ய மதுபாட்ய மஹாவநஸ்ய கேசவ கிரே ரீசஸ்ய—தச்சப்தமானது அலகஜாலத்தைப் பராமர்சிக்கக் கடவது; அந்த அலக ஜாலத்தோடே துல்யகுல்யமான [ஸமாநாகாரங்களான] வண்டுகள் நிறைந்த சோலைகளை யுடைத்தான திருமலைக்குத் தலைவ

ரான அழகருடையது. திருமாலிருஞ் சோலை யழகருடைய திருக்குழல் கற்றை யானது......ஸுந்தத்வதிவ்ருத்த வார்த்தம்—என்று முடிப்பது.

[கேசவகிரே:] திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் "தேசமெல்லாம் வணங்கும் திருமாலிருஞ்சோலை நின்ற கேசவ நம்பி" என்கையாலே கேசவன் வர்த்திக்கிற திருமலையைக் கேசவகிரி என்று ப்ரஸித்தமாக வழங்கிப் போருவர்கள். கேஸரி கிரே: என்றும் பாடமுள்ளது. ஸிம்ஹகிரி யென்று அடிக்கடி அருளிச்செய்து வருகிறாரே, அதற்குப் பொருந்தும்.

'அலகாளி ஜாலம்' என்றவிடத்து, 'அலக - அளி -' என்று கொள்வதிற் காட்டிலும் 'அலக - ஆளி' என்று கொள்வது மிகப் பொருந்தும்; நான்காம் பாதத்தோடு புநருக்தமாயிராது. ஆளியென்றது ஆவளி யென்றபடி. அதற்கு மேலும் ஜாலசப்த மிருப்பது மிக அடர்த்தியைக் காட்டும். 40

जुष्टाष्टमीकज्वलदिन्दुसंनिभं धृतोर्ध्वपुण्ड्रं विलसद्विशेषकम् ।
भूम्ना ललाटं विमलं विराजते वनाद्रिनाथस्य समुच्छ्रितश्रियः ॥४१॥

ஜுஷ்டாஷ்டமீக ஜ்வலதிந்து ஸந்நிபம்
த்ருதோர்த்வபுண்ட்ரம் விலஸத்விசேஷகம்,
பூம்நா லலாடம் விமலம் விராஜதே
வநாத்ரிநாதஸ்ய ஸமுச்ச்ரிதச்ரிய:. 41

* * * இந்த ச்லோகத்தினால் அழகருடைய திருநெற்றியை யநுபவிக்கிறார்.

ஸமுச்ச்ரித ச்ரிய: வநாத்ரிநாதஸ்ய லலாடம் பூம்நா விராஜதே—'ஏறு திருவுடையான்' என்னப்பட்ட திருமாலிருஞ்சோலை யழகருடைய திருநெற்றியானது அதிசயித்து விளங்கா நின்றது. அந்தத் திருநெற்றி எப்படிப்பட்டதென்னில்,

ஜுஷ்டாஷ்டமீக ஜ்வலதிந்து ஸந்நிபம்—அஷ்டமீ திதியன்று விளங்கா நின்ற சந்திரனை யொத்திரா நின்றது. பாதிச் சந்திரன் போன்றதென்கை. வரதராஜஸ்தவத்தில் (32) 'उभयोरपि पक्षयोस्तिथिर्या' என்ற ச்லோகம் இங்கே அநுஸந்தேயம். தூப்புற் பிள்ளை பணித்த பரமபத ஸோபாநத்தில் ஒன்பதாவதான பராப்தி பர்வத்தில் "திருக்குழல் சேர்த்தியாலே ஒரு பாகமிருளோடே சேர்ந்த அஷ்டமீ சந்த்ரனை யநுகரிக்கிற திருநெற்றியை யநுபவித்து" என்றுள்ளதுங் காண்க.

த்ருதோர்த்வபுண்ட்ரம்—ஊர்த்வ புண்ட்ரமணிந்துள்ளது.

விலஸத்விசேஷகம்—கஸ்தூரீ திலகமும் விளங்கப்பெற்றது. ஆக இப்படிப்பட்ட திருநெற்றி விமலமாக விளங்குகின்றதென்றாராயிற்று. விமலம், விபுலம் என்பன பாடபேதங்கள். 41

सुचारुचापद्वयविभ्रमं भ्रुवोर्युगं सुनेत्राह्वसहस्रपत्रयोः ।
उपान्तगं वा मधुपावलीयुगं विराजते सुन्दरबाहुसंश्रयम् ॥४२॥

ஸுசாருசாபத்வய விப்ரமம் ப்ருவோ:
யுகம் ஸுநேத்ராஹ்வ ஸஹஸ்ரபத்ரயோ:,
உபாந்தகம் வா மதுபாவலீயுகம்
விராஜதே ஸுந்தரபாஹுஸம்ச்ரயம். 42

* * * இந்த ச்லோகத்திஞல் அழகருடைய திருப்புருவ வட்டங்களை வருணிக்கிறுர். ஸுந்தரபாஹு ஸம்ச்ரயம் ப்ருவோ: யுகம் விராஜதே—சுந்தரத் தோளுடையரான அழகருடைய திருப்புருவமிரண்டும் விளங்கா நின்றது; எங்ஙனே யென்னில்;

ஸுசாரு சாபத்வய விப்ரமம்—"தின் கைச் சார்ங்கமதுவேபோல் புருவவட்டமழகிய பொருத்தமிலி" என்கிற ஆண்டாள் ஸ்ரீஸூக்தியின்படியே பரம ஸுந்தரமான இரண்டு விற்களின் விலாஸம் போன்ற விலாஸத்தையுடையதென்கிறுர். இப்புருவ விணை எங்ஙனே உல்லேகிக்கும்படி யிராநின்றதென்ன,

ஸுநேத்ராஹ்வ ஸஹஸ்ரபத்ரயோ: உபாந்தகம் மதுபாவலீயுகம் வா—திருக் கண்களாகிற இரண்டு தாமரை மலர்களின் ஸமீபத்திலே வந்து படிந்த வண்டுத் திரளோ இவை! என்னலாம்படி யிராநின்றதென்கிறுர். வாசப்தம் இவார்த்தகம். 'மதுபாவளீயுகமிவ விராஜதே' என்றதாயிற்று. 42

अदीर्घमप्रेमदुघं क्षणोज्ज्वलं नचोरमन्तःकरणस्य पश्यताम् ।
अनुज्जमब्जं नु कथं निदर्शनं वनाद्रिनाथस्य विशालयोर्दृशोः ॥४३॥

அதீர்க்க மப்ரேமதுகம் க்ஷணோஜ்ஜ்வலம்
நசோரமந்தஃகரணஸ்ய பச்யதாம்,
அநுப்ஜமப்ஜம் நு கதம் நிதர்சநம்
வநாத்ரிநாதஸ்ய விசாலயோர் த்ருசோ:. 43

* * * இந்த ச்லோகத்திஞல் அழகருடைய திருக் கண்களை யநுபவிக்கிறுர். செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களென்று சொல்லலாமோ வென்று பார்த்தார்; அழகருடைய திருக்கண்களுக்கும் தாமரை மலர்க்கும் ஒரு படியாலும் ஒற்றுமை இல்லையாயிருக்க அதை எப்படி உவமை கூறலாமென்கிறுர்.

அதீர்க்கம்—"நீண்டவப் பெரியவாய கண்கள்" என்று திருப்பாணுழ்வாரும், "இலங்கொளி சேரரவிந்தம் போன்று நீண்ட கண்ணனை" என்று திருமங்கை யாழ்வாரும் பேசும்படியாகத் திருக்கண்கள் நீண்டிருப்பதுபோலே தாமரை நீண்டிருக்கவில்லையே. நீட்சிக்குத் தாமரை ஒப்பாகமாட்டாதே.

அப்ரேமதுகம்—"நீண்டவப் பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே" என்னும்படி பிச்சேற்றுந் திறம் திருக் கண்களுக்கல்லது தாமரை மலர்க்கு இல்லையே. ப்ரேம ப்ரகர்ஷத்தை விளைவிப்பதில் தாமரை ஒப்பாகமாட்டாதே.

க்ஷணோஜ்ஜ்வலம்—* எப்பொழுதும் நாள் திங்களாண்டூழி யூழிதொறும் அப்பொழுதைக்கப்பொழுதென்னுராவமுதமே * என்னும்படி காண்தோறும் நவம் நவமாய் விளங்காநின்ற திருக் கண்களுக்கு அதிஸ்வல்பகாலமே விகாஸத்தோடு கூடி விளங்கக்கடவதான தாமரை ஒப்பாகமாட்டாதே.

பச்யதாம் அந்தஃகரணஸ்ய நசோரம்—* கண்டவர் தம் மனம் வழங்கும் * என்னுமாபோலே கண்டாருடைய மனத்தைக் கொள்ளை கொள்ளக் கடவதாயிறே திருக்கண்களிருப்பது. இவற்றுக்கு இங்ஙனல்லாத தாமரை ஒப்பாகமாட்டாதே.

அநுப்ஜம்—"உப்ஜ - ஆர்ஜவே" என்று தாது பாடம். ஆர்ஜவமற்றது என்றபடி குடிலமாயிறே தாமரை மலர்தானிருப்பது. அது ஆர்ஜவமே வடிவெடுத்த திருக் கண்களுக்கு ஒப்பாகமாட்டாதே. ஆக, அதீர்க்கத்வாதி விசிஷ்டமான அப்ஜமானது,

வநாத்ரிநாதஸ்ய விசாலயோ: த்ருசோ: கதம் நு நிதர்சநம்—திருமாலிருஞ்சோலை யழகருடைய புடை பரந்து நீண்டவப் பெரியவாய திருக்கண்களுக்கு எங்ஙனே த்ருஷ்டாந்தமாகவற்று? ஒருகாலு மாகா தென்றபடி.

இங்ஙனே யருளிச் செய்யுமிவர் * அப்ஜபாதமரவிந்த லோசநம் பத்மபாணிதலம் * என்று தாமரைதன்னையே ஒவ்வோரவயவத்துக்கும் உவமையாக்கிக் கூறுவது எங்ஙனே பொருந்து மென்னில்; ஏதேனுமொன்றை த்ருஷ்டாந்தீகரித்துக் கூறியே போதைப் போக்கவேண்டுமே. நம்மாழ்வார் தாமும் * ஓட்டுரைத் திவ்வுலகுன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும் பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ * என்று நிற்கச் செய்தேயும் ஓட்டுரைத்துப் புகழாதொழியாரிறே. 43

प्रच्योतत्प्रेमसारामृतरसचुलकप्रक्रमप्रक्रियाभ्यां
विक्षिप्तालोकितोर्मिप्रसरणमुषितस्वान्तकान्ताजनाभ्याम् ।
विश्वोत्पत्तिप्रवृत्तिस्थितिलयकरणैकान्तशान्तक्रियाभ्यां
देवोऽलङ्कारनामा वनगिरिनिलयो वीक्षतामीक्षणाभ्याम् ॥४४॥

ப்ரச்சோதத் ப்ரேமஸாராம்ருதரஸ சுளகப்ரக்ரம ப்ரக்ரியாப்யாம்
விக்ஷிப்தாலோகிதோர்மி ப்ரஸரணமுஷிதஸ்வாந்தகாந்தாஜநாப்யாம்,
விச்வோத்பத்தி ப்ரவ்ருத்திஸ்திதிலய கரணைகாந்தசாந்த க்ரியாப்யாம்
தேவோலங்காரநாமா வநகிரிநிலயோ வீக்ஷதாமீக்ஷணாப்யாம். 44

* * * கீழ்ச்லோகத்தில் திருக்கண் ப்ரஸ்துதமாயிற்றிறே; * அங்கணிரண்டுங் கொண்டு — எம்மேல் விழியாவோ * என்றும் * உன் தாமரைக் கண்களால் நோக்காய் * என்றும் ப்ரார்த்திக்கக் கடவதிறே. அந்த ப்ரார்த்தனை இந்த ச்லோகத்திலேயாய்ச் செல்லுகிறது.

வநகிரிநிலய: அலங்காரநாமா தேவ: ஈக்ஷணாப்யாம் வீக்ஷதாம்—திருமாலிருஞ்சோலை மலையுறையும் அழகனலங்காரன் தன்னுடைய திருக் கண்களாலே குளிர நோக்கியருளவேணும். அந்தத் திருக் கண்கள் எப்படிப்பட்டவை யென்னில்;

ப்ரச்சோதத் ப்ரேமஸாராம்ருதரஸ சுளகப்ரக்ரம ப்ரக்ரியாப்யாம்—பெருகுகின்ற அன்பு வெள்ளமாகிற அமுதப் பெருக்கையுடைய சிறுங்கையோ இவை! என்னலாம்படியுள்ளது. சுலகமாவது சிறுங்கை; கண்களின் வைசால்யத்திற்குச் சிறுங்கையை உவமை கூறுவதுண்டு; திருவிருத்தத்தில் (11) * ஓரோ குடங்கைப் பெரியன கெண்டைக் குலம் * என்றது காண்க. அழகருடைய திருக்கண்களாகிற சிறுங்கையில் ப்ரேமஸாரமாகிற அமுதவெள்ளம் பெருகுகின்ற தென்கையாலே அன்போடு கடாக்ஷித்தருளுகின்றமை சொல்லிற்றுகிறது. ப்ரக்ரமமாவது ப்ரகாரம்; ப்ரக்ரியை யென்றாலும் ப்ரகாரமே; சுளகத்தின் தன்மைபோன்ற தன்மையையுடையவை திருக்கண்கள் என்றபடி.

விக்ஷிப்தாலோகிதோர்மி ப்ரஸரண முஷிதஸ்வாந்த காந்தாஜநாப்யாம்—அலையெறிகின்ற கடாக்ஷதாரைகளாலே கோபீ ஜனங்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவை யென்கை. விக்ஷிப்தங்களான ஆலோகிதங்களாகிற அலைகளின் ப்ரஸரணத்தாலே கவரப்பட்ட காந்தாஜநஸ்வாந்தங்களையுடையவை திருக்கண்கள். [விக்ஷிப்த—விசேஷேண ப்ரேரித என்றபடி.] ஆலோகிதமாவது ஆலோகனம். * தூது செய் கண்கள் கொண்டொன்று பேசி * (திருவாய் மொழி) என்கிறபடியே திருக்கண்ணோக்கிலேயே உள்ளத்தைக் கொள்ளைகொள்ளுமவரிறே.

விச்வோத்பத்தி ப்ரவ்ருத்தி ஸ்திதிலய கரணைகாந்த சாந்தக்ரியாப்யாம்—ஸகல சராசரங்களினுடையவும் உத்பத்தி ப்ரவ்ருத்தி ஸம்ரக்ஷண ஸம்ஹாரங்களைச் செய்வதில் மிகவும் ஊக்கமுடையவை யென்கை. * நாவேக்ஷஸே யதி ததோ புவநாந்யமூநி நாலம் ப்ர

போ! பவிதுமேவ குத: ப்ரவ்ருத்தி:* [ஸ்தோத்ரரத்நே] என்று ஆளவந்தாரருளிச் செய்தபடியே அவேக்ஷணமாத்ரத்தாலேயன்றோ விச்வோத்பத்தி ப்ரவ்ருத்தி ஸ்திதி லயங்கள் நடைபெறுகின்றன. ஆக இப்படிப்பட்ட திருக்கண்களாலே அழகர் கடாக்ஷித்தருளவேணுமென்றதாயிற்று. 44

प्रेमामृतौघपरिवाहिमहाक्षिसिन्धुमध्ये प्रबद्धसमुदञ्चितसेतुकल्पा ।
ऋज्वी सुसुन्दरभुजस्य विभाति नासा कल्पद्रुमाङ्कुरनिभा वनशैलभर्तुः ॥४५॥

ப்ரேமாம்ருதௌகபரிவாஹி மஹாக்ஷிஸிந்து
மத்யே ப்ரபத்த ஸமுதஞ்சித ஸேதுகல்பா,
ருஜ்வீ ஸுஸுந்தரபுஜஸ்ய விபாதி நாஸா
கல்பத்ருமாங்குர நிபா வநசைலபர்த்து:. 45

*** இந்த ச்லோகத்தினால் அழகருடைய திருமூக்கினழகை யநுபவிக்கிறார்.

வநசைலபர்த்து: ஸுஸுந்தர புஜஸ்ய—திருமாலிருஞ்சோலைத் தலைவரான சுந்தரத்தோளுடைய பெருமானது,

ருஜ்வீ கல்பத்ருமாங்குரநிபா நாஸா—நேர்மை பொருந்தியதாய் கற்பகக் கொடியின பல்லவம் போன்றதான நாஸிகையானது,

ப்ரேமாம்ருதௌக பரிவாஹி மஹாக்ஷி ஸிந்துமத்யே ப்ரபத்தஸமுதஞ்சித ஸேதுகல்பா விபாதி— அழகருடைய திருக் கண்கள் ஆச்ரித வாத்ஸல்யாதிசயத்தாலே 'எப்போதும் அலைபாயாநின்றுகொண்டிருப்பதால் 'அலையெறிகின்ற பெருங்கடலோ இது!' என்னலாம்படியிருக்கும்; அத்திருக்கண்களினிடையே கோல நீள் கொடி மூக்கு அமைந்திருப்பதானது கடலிடையே கட்டினஅணைதானோ இது! என்னும்படி யிராநின்றதென்கிறார்.

திருக்கண்களைக் கடலாக ரூபணம் பண்ணினபடிக்கு அமைய "ப்ரேமாம்ருதௌக பரிவாஹி" என்கிற விசேஷணமிடப்பட்டதாயிற்று. கடலானது நீர் வெள்ளத்தைப் பெருக்கும்; இத் திருக்கண்ணாகிற கடலானது ப்ரேமமாகிற அம்ருதப்ரவாஹத்தைப் பெருக்கா நின்றதென்க. திருவாய்மொழியில் *ஈட்டிய வெண்ணெயுண்டான் திருமூக்கு - மாட்டுயர்கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோவறியேன்" என்றருளிச் செய்ததை அடியொற்றி கல்பத்ருமாங்குரநிபா என்றருளிச் செய்தபடி. ... 45

व्याभाषिताभ्यधिकनन्दनभन्दनर्द्धिमन्दस्मितामृतपरिस्रवसंस्तवाढ्यम् ।
आभाति विद्रुमसमाधरमास्यमस्य देवस्य सुन्दरभुजस्य वनाद्रिभर्तुः ॥४६॥

வ்யாபாஷிதாப்யதிகநந்தந பந்தநர்த்தி
மந்தஸ்மிதாம்ருத பரிஸ்ரவ ஸம்ஸ்தவாட்யம்,
ஆபாதி வித்ருமஸமாதர மாஸ்ய மஸ்ய
தேவஸ்ய ஸுந்தரபுஜஸ்ய வநாத்ரிபர்த்து:. 46

*** அழகருடைய திருப்பவள வாயை அநுபவிக்கிறாரிதில்.

வநாத்ரிபர்த்து: ஸுந்தரபுஜஸ்ய அஸ்ய தேவஸ்ய—திருமாலிருஞ்சோலை மலைத் தலைவரான சுந்தரத்தோளுடைய பெருமானான இவ்வழகருடைய, வித்ருமஸமாதரம் ஆஸ்யம் ஆபாதி — * பவளம்போல் கனிவாய் சிவப்ப * என்கிறபடியே சிவந்து கனிந்த திருப்பவளவாயானது விளங்கா நின்றது; இதுதான் எப்படிப்பட்டதென்னில்;

வ்யாபாஷிதாப்யதிகநந்த பந்தநர்த்தி மந்தஸ்மிதாம்ருத பரிஸ்ரவ ஸம்ஸ்தவாட்யம்—வாய் திறந்து பேசுவதிற்காட்டிலும் இனிதான புன் முறுவல் பூத்திருக்கப்பெற்ற தென்ற வாறு. வ்யாபாஷிதமாவது வ்யாபாஷணம்; (அதாவது) வாய்திறந்தொன்று பணிக்கை; அதிற்காட்டிலும் [அப்யதிக நந்தந]—மிகவும் ஆனந்தகரமாயும், भन्दन— கல்யாணவஹமான, ऋद्धि—ஸம்ருத்தியையுடையதாயுமிருக்கிறது மந்தஸ்மிதம்—புன் னகை; அதுவாகிற அம்ருத பரிஸ்ரவத்தாலே [அம்ருதப் பெருக்கிஞலே] ஆட்யம்— நிறைந்தது.

அபிமதஜநதர்சநாநந்த வேகத்தாலே அர்ச்சாவதார ஸமாதியைக் கடந்து விம்மி வெளிவிழுகின்ற அவ்யக்த மதுரமந்தஹாஸவிலாஸமானது வாய் திறந்து வார்த்தை சொல்லுமதிற்காட்டிலும் பரமானந்த ஸந்தோஹ ஸந்தாயகமாயிருக்குமாய்த்து. அந்த மந்த ஸ்மிதமானது அம்ருத ப்ரவாஹமென்றும் சொல்லலாம்படியிருக்குமாயிற்று. அது விஞ்சியிருக்கப்பெற்ற திருப்பவளச் செவ்வாய் அநுபவிக்கப்பட்டதாயிற்று. ... 46

यशोदाङ्गुल्यग्रोन्नमितचुबुकाघ्राणमुदितौ कपोलावद्यापि ह्यनुपरततद्धर्षगमकौ ।
विराजेते विष्वग्विततसहकारासवरसप्रमाद्यद्भृङ्गाढ्यद्रुमवनगिरेस्सुन्दरहरेः ॥४७॥

யசோதாங்குல்யக்ரோந்நமித சுபுகாக்ராணமுதிதௌ
கபோலாவத்யாபி ஹ்யநுபரத தத்தர்ஷகமகௌ,
விராஜேதே விஷ்வக்விதத ஸஹகாராஸவரஸ -
ப்ரமாத்யத் ப்ருங்காட்ய த்ருமவநகிரேஸ் ஸுந்தரஹரே:. 47

* * * அழகருடைய திவ்ய கபோலங்களை யநுபவிக்கிருரிதில்.

விஷ்வக் விததஸஹகாராஸவரஸ ப்ரமாத்யத் ப்ருங்காட்ய த்ருமவநகிரேஃ ஸுந்தரஹரேஃ கபோலௌ விராஜேதே—எங்கும் பரந்த தேன்மாமரங்களின் மதுவைப் பருகிக் களித் திராநின்ற வண்டுகள் நிரம்பிய சோலைகளையுடைய திருமலையை உறைவிடமாகவுடைய ரான அழகருடைய திருக்கபோலங்கள் மிக விளங்குகின்றன. இவை எங்ஙனே யிரா நின்றனவென்னில்;

யசோதாங்குல்யக்ரோந்நமித சுபுகாக்ராணமுதிதௌ அத்யாபி அநுபரத தத்தர்ஷகமகௌ— பண்டு க்ருஷ்ணவதாரத்தில் யசோதைப் பிராட்டி தன்னுடைய விரல் நுனியாலே மோவாயைத் தூக்கி முத்தமிட்டதஞலே ரோமாஞ்சிதங்களாய் இன்னமும் அந்நிலை மாருதேயிருப்பனவாம். முத்தமிடுவது கபோலததிலன்ருகிலும் ஹர்ஷம் தோற்று வது கபோலத்திலே யாகையாலே இங்ஙனே யருளிச்செய்யக் குறையில்லை. அழகரு டைய திவ்ய மங்கள விக்ரஹத்தில் ஸ்ரீ க்ருஷ்ண தாதாத்ம்ய பாவனை முற்றி அருளிச் செய்ததாமிது. * கோவலனுய் வெண்ணெயுண்டவாயன் அண்டர்கோனணியரங்கன்* என்றிறே திருப்பாணுழ்வார் தாமும் அநுபவித்துப் பேசினது. ... 47

व्यालम्बिकुण्डलमुदग्रसुवर्णपुष्पनिष्पन्नकल्पलतिकायुगलानुकारम् ।
यत्कर्णपाशयुगलं निगलं धियां नस्सोऽयं सुसुन्दरभुजो वनशैलभूषा ॥४८॥

வ்யாலம்பிகுண்டல முதக்ரஸுவர்ணபுஷ்ப
நிஷ்பந்ந கல்பலதிகாயுகளாநுகாரம்,
யத்கர்ணபாசயுகளம் நிகளம் தியாம் நஃ
ஸோயம் ஸுஸுந்தரபுஜோ வநசைலபூஷா. 48

* * * — அழகருடைய திருச்செவி மடல்களை யநுபவிக்கிருரிதில்.

வ்யாலம்பி குண்டலம்—*மகரஞ்சேர் குழையிருபாடிலங்கியாட* என்கிறபடியே தள தளென்று தொங்குகின்ற கனமகரக் குழைகளையுடையதாய்,

உதக்ரஸுவர்ணபுஷ்ப நிஷ்பந்ந கல்பலதிகாயுகளாநுகாரம்—மிகச் சிறந்த ஸ்வர்ண புஷ்பங்களோடு விளங்கப் பெற்ற இரண்டு கல்பலதைகள் போன்றதாய்.

திருச்செவி மடல்களின் ஸ்தானத்தில் கல்பலதையும், கனமகரக் குழைகளின் ஸ்தானத்தில் ஸுவர்ணபுஷ்பமும் கொள்ளக் கடவது. ஆக இப்படிப்பட்டதான.

யத்கர்ணபாசயுகலம் ந: தியாம் நிகலம்—யாவரொரு அழகருடைய திருச்செவி மடல்களிரண்டும் நம்முடைய புத்திக்கு விலங்குபோலாகின்றதோ. விலங்கிடப்பட்டவன் இடம் விட்டுப் பெயர்ந்து வேறோரிடம் செல்ல முடியாமல் திகைப்பதுபோல் தம்முடைய திருவுள்ளம் அழகருடைய கர்ணபாசத்தை விட்டு மற்றோரவயவத்திலே ஈடுபட முடியாமல் திகைத்திருக்கின்றதென்று காட்டியவாறு.

ஸோயம் ஸுஸுந்தரபுஜ: வநசைலபூஷா—இத்தகைய கர்ணபாச ஸௌந்தர்யம் வாய்ந்த சுந்தரத்தோளுடையான் திருமலைக்கு திவ்யாலங்காரமாக விளங்குகின்றானென்கை. 48

सदंससंसञ्जितकुन्तलान्तिकावतीर्णकर्णाभरणाढ्यकन्धरः ।
सुबन्धुरस्कन्धनिबन्धनो युवा सुसुन्दरस्सुन्दरदोर्विजृम्भते ॥४९॥

ஸதம்ஸ ஸம்ஸஞ்ஜித குந்தலாந்திகா
வதீர்ண கர்ணாபரணாட்யகந்தர:,
ஸுபந்துரஸ்கந்த நிபந்தநோ யுவா
ஸுஸுந்தரஸ் ஸுந்தரதோர் விஜ்ரும்பதே. 49

* * * "களிவண்டெங்குங் கலந்தாற்போல் கமழ் பூங்குழல்கள் தடந்தோள் மேல் மிளிர நின்று விளையாட" என்றும் "மைவண்ண நறுங்குஞ்சிக் குழல் பின் தாழ மகரஞ்சேர் குழையிருபாடிலங்கியாட" என்றும் தனித்தனியே யநுபவித்த அழகுகளைச் சேரப்பிடித்து அநுபவிக்கிறதாய்ச் செல்லுகிறது இந்த ச்லோகம்.

ஸதம்ஸஸம்ஸஞ்ஜித குந்தலாந்திகாவதீர்ண கர்ணாபரணாட்யகந்தர:—அழகிய திருத்தோள்களிலே வந்து அலையா நின்ற திருக்குழல்களினருகே தொங்குகின்ற கனமகரக் குழைகளாலே விளங்கா நின்ற திருக்கழுத்தை யுடையவராய்;

ஸுபந்துரஸ்கந்தநிபந்தந:—ஸ்கந்த நிபந்தநமாவது திருத்தோள் பட்டைகளின் அமைப்பு; திருக்கழுத்துப் பின்புறத்தின் ஸந்திபந்தம். அது ஸுபந்துரம்—மிகவழகியதாயிருக்கின்றது. இங்ஙனேயிருக்கப் பெற்றவராய்;

யுவா ஸுஸுந்தர:—இளகிப்பதித்த திருமேனியையுடையராகையாலே நித்ய யௌவந சாலியாய் அழகரென்று திருநாம முடையரான,

ஸுந்தரதோ: விஜ்ரும்பதே—சுந்தரத்தோளுடைய பெருமாள் ஓங்கி விளங்குகின்றார். 49

व्यूढगूढभुजजत्रुमुल्लसत्कम्बुकन्धरधरं धराधरम् ।
वृक्षषण्डमयभूभृतस्तटे सुन्दरायतभुजं भजामहे ॥५०॥

வ்யூடகூட புஜஜத்ருமுல்லஸத் கம்புகந்தரதரம் தராதரம்,
வ்ருக்ஷஷண்டமயபூப்ருதஸ் தடே ஸுந்தராயதபுஜம் பஜாமஹே. 50

* * * அழகருடைய திருத்தோள்பட்டையினழகையும் திருக்கழுத்தினழகையும் அநுபவித்துப் பேசுகிறாரிதில்.

வ்ருக்ஷஷண்டமயபூப்ருதஸ் தடே—திருமாலிருஞ்சோலை மலைத் தாழ்வரையினடியிலே,

ஸௌந்தராயத புஜம் பஜாமஹே—சுந்தரத் தடந்தோளுடைய பெருமாளை பஜிக்கிறோம்; அவர் தாம் எப்படிப்பட்டவரென்னில்;

வ்யூடகூட புஜஜத்ரும்—ஸ்கந்தத்திற்கும் கக்ஷத்திற்கும் ஸந்தியானவிடம் ஜத்ருவெனப்படும்; அதன் மேல்பாகமானது புஜஜத்ருவெனப்படும். அது பருத்தும் அவ்யக்தமாயுமிருக்கிறதாயிற்று. மாம்ஸலத்வாதிசயத்தாலே அவ்யக்தமாயிருக்கிறபடி. இப்படிப்பட்ட புஜஜத்ருவையுடையராய்;

கம்புகந்தரதரம்—சங்குபோன்றழகிய திருக்கழுத்தையுடையரான அழகரை. ரேகாத்ரயவிபக்தாங்கமான திருக்கழுத்துக்கு சங்கை உவமை கூறுதல் கவிமரபு. பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே *க்ரமுகதருணக்ரீவா கம்புப்ரலம்பமலிம்லுசஃ கண்டஃ* என்றருளிச் செய்தது காண்க. கந்தராசப்தம் [கழுத்துக்கு வாசகமானது] ஸ்த்ரீலிங்கமாகையாலே 'கந்தராதரம்' என்றேயிருக்கத்தக்கது; இங்கு 'கந்தரதரம்' என்றிருக்கையாலே பஹுவ்ரீஹியை விவக்ஷித்து விசேஷணோபயபத கர்மதாரயமாகக் கொள்ளலாம்.

उल्लसन्ती कम्बुकन्धरा यस्य सः—उल्लसत्कम्बुकन्धरः ; उल्लसत्कम्बुकन्धरश्चासौ धरश्चेति । धरः (தரஃ)

என்றது நிர்வாஹகனென்றபடி. கந்தரா சப்தம்போலே கந்தர சப்தமும் பும்லிங்கமாகவுண்டென்று ஆழ்வான் திருவுள்ளம்பற்றியே இங்ஙனம் ப்ரயோகித்தருளினராதலால் இங்ஙனே ச்ரமப்படவேண்டாவென்பாருமுளர். திருக்கழுத்தைத் தரிப்பவர் என்றே பொருள் கொள்ளலாம். 50

मन्दरभ्रमणविभ्रमोद्भटास्सुन्दरस्य विलसन्ति बाहवः ।
इन्दिरासमभिनन्दनन्दनाश्चन्दनागरुविलेपभूषिताः ॥५१॥

மந்தரப்ரமண விப்ரமோத்படாஸ் ஸௌந்தரஸ்ய விலஸந்தி பாஹவ:,
இந்திராஸமபிநந்தநந்தநாச் சந்தநாகருவிலேப பூஷிதா:. 51

* * * அழகர்க்கு ஸௌந்தரபாஹுவென்றும் சுந்தரத்தோளுடையானென்றும் திருநாமமாகையாலே அந்த திருத்தோள்களை நான்கு ச்லோகங்களாலே வருணித்தருளிச் செய்கிறார் இது முதலாக. நான்கு திருத்தோள்களுக்கும் நான்கு ச்லோகம் போலும்.

ஸௌந்தரஸ்ய பாஹவ: விலஸந்தி—அழகருடைய பாஹுக்கள் அழகு பொலிந்து விளங்குகின்றன; அவை எப்படிப்பட்டவையென்னில்;

மந்தரப்ரமண விப்ரமோத்படா:—*மந்தரம் நாட்டியன்று மதுரக் கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத் தோளுடையான்* என்ற நாச்சியார் திருமொழிப் பாசுரத்தைத் திருவுள்ளத்திலே கொண்டு அருளிச் செய்கிற விசேஷணமிது. கடல் கடைந்தருளுகிற காலத்திலே மந்தர மலையை மத்தாக நாட்டி அதனைச் சுழற்றுவதாகிற விலாஸ காரியத்தில் உத்ஸாஹம் பொருந்தியவை அழகருடைய பாஹுக்கள். அநாயாஸமாக மந்தர மலையைச் சுழற்றியவை என்றபடி. இன்னமும் எப்படிப்பட்டவை யென்னில்;

இந்திராஸமபிநந்தநந்தநா:—ஸ்ரீ மஹாலக்ஷ்மியை ஸந்தோஷப்படுத்தி அதனாலே உகப்புப் பெற்றவை. *விண்ணவரமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்ட எம்பெருமானுகையாலே *சீதக் கடலுள்ளமுதாக அவதரித்த ஸ்ரீ மஹாலக்ஷ்மியை ஆரத் தழுவி அவளையும் மகிழ்வித்துத் தாமும் மகிழ்ந்தவை யென்க. இன்னமும் எப்படிப்பட்டவை யென்னில்;

சந்தநாக்ருவிலேபபூஷிதா :—* ஏவிற்றுச் செய்வான் ஏன்றெதிர்ந்து வந்த மல்லரைச் சாவத்தகர்த்த சாந்தணிதோள் சதுரன் * [343] என்று பெரியாழ்வாரருளிச் செய்ததைத் திருவுள்ளம் பற்றிப் பணித்தபடி. வட மதுரையில் கூனி பூசின சாந்து குறியழியாமே மல்லரோடே பொருது வெற்றி பெற்ற திருத்தோள்களே இவையென்று காட்டினபடி. ஸுகந்தி சந்தனமணிந்து விளங்குபவை. 51

ज्याकिणाङ्कपरिकर्मधर्मिणो भान्ति सुन्दरभुजस्य बाहवः ।
पारिजातविटपायितर्द्धयः प्रार्थितार्थपरिदानदीक्षिताः ॥ ५२ ॥

ஜ்யாகிணாங்க பரிகர்ம தர்மிணோ
பாந்தி ஸுந்தரபுஜஸ்ய பாஹவঃ,
பாரிஜாதவிடபாயிதர்த்தயঃ
ப்ரார்த்திதார்த்த பரிதாநதீக்ஷிதாঃ. 52

* * * இந்தச்லோகமும் ஸுந்தரபாஹுவின் பாஹுவர்ணநம். ஸுந்தரபுஜஸ்ய பாஹவ: பாந்தி—ஸுந்தரபாஹு பகவானுடைய பாஹுக்கள் விளங்குகின்றன. அவைதாம் எப்படிப்பட்டவை யென்னில்; ஜ்யாகிணாங்க பரிகர்ம தர்மிணঃ— மஹாவீரனுடைய பாஹுக்களென்று கண்டவாற்றால் தெரிகிறபடி. * தழும்பிருந்த சார்ங்க நாண் தோய்ந்தவாமங்கை * என்ற பொய்கையாழ்வார் பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றிப் பேசுகிறார். ஸ்ரீ சார்ங்க வில்லின் நாணித்தழும்பாலே அலங்கரிக்கப்பட்டவை யென்கை. விபவாவதாரங்களில் ஆச்ரித விரோதிகளைத் தொலைக்கும் பொருட்டுப் பல பல போர்களைச்செய்து அந்த யுத்தங்களில் நேர்ந்த வில்நாணியின் வடுக்கள் அவ்வவதார தசையில் ஸ்ரீராமக்ருஷ்ணாதி மூர்த்திகளின் திருக்கைகளை அலங்கரித்திருந்தன. அவையே அர்ச்சையிலும் இவர்களுடைய ப்ரத்யக்ஷ த்ருஷ்டிக்கு கோசரமாகிறபடி. ஆளவந்தார் * சகாஸதம் ஜ்யாகிண கர்க்கசைச் சுபைச் சதுர்ப்பிராஜாநு விலம்பிபிர் புஜைঃ* என்று பரதசையில் அநுஸந்தித்தால் அர்ச்சையிலநுஸந்திக்கக் கேட்கவேணுமோ?

இன்னமும் எப்படிப்பட்டவையென்னில்;

பாரிஜாதவிடபாயிதர்த்தய:— கற்பகத்தருவின் கிளைகளோ! என்னலாம்படியமைந்த ஸம்ருத்தியையுடையன. இன்னமும் எப்படிப்பட்டவையென்னில்;

ப்ராத்திதார்த்தபரிதாநதீக்ஷிதாঃ— கேட்டார் கேட்டதெல்லாம் வழங்குவதில் தீக்ஷை கொண்டவை. * அலம்புரிந்த நெடுந்தடக்கை யமரர் வேந்தனிறே. ... 52

सागराम्बरतमालकाननश्यामलर्द्धय उदारपीवराः ।
शेषभोगपरिभोगभागिनस्तन्निभा वनगिरीशितुर्भुजाः ॥ ५३ ॥

ஸாகராம்பரதமால காநநச்யாமலர்த்தய உதார பீவராঃ,
சேஷபோகபரிபோகபாகிநஸ் தந்நிபா வநகிரீசிதுர் புஜாঃ. 53

* * * இதுவும் அழகருடைய திருத்தோள்களை வருணிப்பது.

ஸாகர் அம்பர தமாலகாநந ச்யாமல ருத்தயঃ— கடல்போலவும் ஆகாசம் போலவும் பச்சிலைப் பொழில் போலவும் பேசலாம்படியான பசுமை வாய்ந்தவை. இவை, வெறும் நிறத்திற்குமாத்திரமன்றிக்கே வைசால்யத்திற்கும் உவமையாம். ஸாகராம்பரதமால கானனங்களின் சாமநிறத்தின் ஸம்ருத்தியையுடையவை.

உதாரபீவரா:—* उदारो दातृमहतोः * என்று கோசமாகையாலே இங்கு உதார பதத்தினால் தாத்ருத்வமும் மஹத்த்வமும் விவக்ஷிதமாகலாம். நீண்டு பருத்தவையென்க. இன்னமும் எப்படிப்பட்டவையென்னில்;

சேஷபோக பரிபோகபாகிந:— திருவனந்தாழ்வானுடைய திருமேனியின்மீது கிடந்து ஆனந்தாநுபவம் செய்யுமவையென்கை. * வெள்ளை வெள்ளத்தின்மேலொருபாம்பை மெத்தையாக விரித்து அதன்மேலே கள்ள நித்திரை செய்யும்போது *— தன்தாளுந் தோளும் முடிகளும் சமனிலாத பலபரப்பித் திருக்கண் வளர்ந்தருளுகிறபடியை நினைத்து அருளிச் செய்ததாமிது. * ஆயிரந்தோள் பரப்பி முடியாயிரம் மின்னிலக ஆயிரம் பைந்தலைய அனந்த சயனனாளும் மலை—மாலிருஞ் சோலையதே * என்ற பெரியாழ்வாரருளிச் செயல் இங்கே அநுஸந்தேயம்.

தந்நிபா:— * போகிபோக சயநீயசாயிகளென்று கீழே சொல்லிற்று; அவ்வளவேயன்றிக்கே அந்தத் திருவனந்தாழ்வானுடைய திருமேனியோடே ஸாம்யமுமுடையவை யென்கிறது இத்தால். ஆக இப்படிப்பட்டவை வநகிரீசிது: புஜா:. ... 53

अहमहमिकाभाजो गोवर्धनोद्धृतिनर्मणि प्रमथनविधावब्धेर्लब्धप्रबन्धसमक्रियाः ।
अभिमतबहुभावाः कान्ताभिरम्भणसंभ्रमे वनगिरिपतेर्बाहाश्शुम्भन्ति सुन्दरदोर्हरेः ॥ ५४ ॥

அஹமஹமிகாபாஜோ கோவர்த்த நோத்த்ருதி நர்மணி
ப்ரமதநவிதாவப்தேர் லப்தப்ரபந்த ஸமக்ரியா:,
அபிமதபஹுபாவா: காந்தாபிரம்பணஸம்ப்ரமே
வநகிரிபதேர் பாஹாச் சும்பந்தி ஸுந்தரதோர்ஹரே:. 54

* * * இந்தச்லோகத்தோடே பாஹு வர்ணனம் தலைக்கட்டுகிறதாயிற்று.

வநகிரிபதே: ஸுந்தரதோர்ஹரே: பாஹா: சும்பந்தி—திருமாலிருஞ் சோலைமலைக்குத் தலைவரான ஸுந்தரபாஹு பகவானுடைய திருத்தோள்கள் சால விளங்குகின்றன. அவைதாம் எப்படிப்பட்டவை யென்னில்;

கோவர்த்தந உத்த்ருதிநர்மணி அஹமஹமிகாபாஜ:— கோவர்த்தனமென்னும் மலையைக் கொற்றக்குடையாக ஏந்திநிற்கும் லீலா விசேஷத்திலே நான்முன்னே நான் முன்னே யென்று முற்கோலி நிற்குமவை. अहं पूर्वम् अहं पूर्वमिति या प्रवृत्तिः सा अहमहमिका । இதனால் உத்ஸாஹாதிசயம் சொன்னபடி. உத்ஸாஹத்தோடு கோவர்த்தனகிரியைக் குடையாகவேந்திநின்றவை யென்றபடி. இன்னமும் எப்படிப்பட்டவை யென்னில்;

அப்தே: ப்ரமதநவிதௌ லப்தப்ரபந்தஸமக்ரியா:— கடல்கடைவதாகிற வியாபாரத்தில் முயன்று நின்ற தேவாசுரர்களோடொக்கத் தொழில் செய்தவையென்கை. ப்ரபந்தமாவது முயற்சி. லப்தப்ரபந்தா:—முயன்று நின்றவர்கள்; அவர்களாகிறார் சுரர்களும் அசுரர்களும். அவர்கள் இளைத்துநின்ற காலத்திலே அந்த க்ரியையை இவைதாம் செய்தனவாயிற்று. * அரங்கனே! தரங்கநீர் கலங்கவன்று குன்று சூழ்மரங்கள்தேய மாநிலங் குலுங்க மாசுணம் சுலாய், நெருங்கநீ கடைந்தபோது நின்றசூரர் என் செய்தார்? * என்ற திருச்சந்த விருத்தப்பாசுரம் காண்க. இன்னமும் எப்படிப் பட்டவையென்னில்;

காந்தா அபிரம்பண ஸம்ப்ரமே அபிமதபஹுபாவா:— கடைந்த கடலினின்று பிராட்டி தோன்ற அவளை ஆரத்தழுவுகிற ஸம்ப்ரமத்தில் விச்வரூபமெடுக்கக் கோலினவை யன்கை. இரண்டாயும் நான்காயுமிருந்து தழுவுகையில் பர்யாப்தி பிறவாமையாலே பஹுபவநஸங்கல்பம் கொண்டபடி. ஆக இப்படிப்பட்டவையாம் அழகருடைய திருத்தோள்கள். 54

श्रीमद्वनाद्रिपतिपाणितलाब्जयुग्ममारूढयोर्विमलशङ्खरथाङ्गयोस्तु ।
एकोऽब्जमाश्रित इवोत्तमराजहंसः पद्मप्रियोऽर्क इव तत्समितो द्वितीयः ॥ ५५

ஸ்ரீமத்வநாத்ரிபதி பாணிதலாப்ஜயுக்மம்
ஆரூடயோர் விமலசங்கரதாங்கயோஸ்து,
ஏகோப்ஜமாச்ரித இவோத்தமராஜ ஹம்ஸஃ
பத்மப்ரியோர்க்க இவ தத்ஸமிதோ த்விதீயஃ. 55

* * * திருமாலிருஞ் சோலையழகருடைய திருக்கைத்தலங்களில் விளங்கும் திருவாழி திருச்சங்குகளை யநுபவிக்கிறார்.

ஸ்ரீமத்வநாத்ரிபதிபாணிதலாப்ஜயுக்மம் ஆரூடயோஃ—அழகருடைய இரண்டு திருக்கைகளிலும் ஏறியிருக்கிற. * ஊழியான் கைத்தலத்திடரில் குடியேறி * என்றும், * வடமதுரையார் மன்னன் வாசுதேவன் கையில் குடியேறி வீற்றிருந்தாய் கோலப் பெருஞ் சங்கே * என்றும் ஆண்டாளருளிச் செய்ததை யடியொற்றி ஆரூட பதப்ரயோகம் செய்தருளினபடி.

விமல சங்கரதாங்கயோஃ—*வெள்ளைவிளிசங்கும் திருவாழியாழ்வானுமாகிற இருவர்க்குள்.

ஏகஃ அப்ஜமாச்ரிதஃ உத்தமராஜஹம்ஸ இவ=ஒருவரான ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வான் தாமரைமலரிலே துயில்கொள்ளும் ராஜஹம்ஸம்போலே விளங்காநின்றார். நாச்சியார் திருமொழியில் * செங்கமல நாண் மலர்மேல் தேனுகரு மன்னம்போல், செங்கட் கருமேனி வாசுதேவனுடைய, அங்கைத் தலமேறி அன்னவசஞ் செய்யும் சங்கரையா! உன் செல்வம் சாலவழகியதே * என்ற பாசுரத்தைத் தழுவி இது அருளிச் செய்தபடி.

த்விதீயஸ்து தத்ஸமிதஃ பத்மப்ரியஃ அர்க்க இவ—மற்றொருவரான திருவாழியாழ்வானோவென்னில்; தாமரை மலரிலே வந்து வீற்றிருக்கின்ற ஸூர்யன்போலே விளங்காநின்றார். ஸூர்யன் தாமரை மலரிலே வந்து வீற்றிருப்பதற்கு ப்ரஸக்தியேதென்ன, [பத்மப்ரியஃ] இது ஹேது கர்ப்ப விசேஷணம்; கமலபாந்தவனாகையாலே கமலத்திலே வந்து கிடக்கலாமிறே. ஆக, அழகருடைய இரண்டு திருக்கைகளும் இரண்டு தாமரையாகையாலே ஒரு தாமரையிலே அன்னம் வந்துபடிந்து சங்காக விளங்குகின்றது; மற்றொரு தாமரையிலே ஸூர்யன் வந்துபடிந்து ஸுதர்சநமாக விளங்குகின்றான் என்றாராயிற்று. [ஸமிதஃ—ஸம்யக் இதஃ— ப்ராப்தஃ; ‘இண்—கதௌ’ என்கிற தாதுவிலே கர்த்தரி க்தப்ரத்யயாந்தமிது.] 55

लक्ष्म्याः पदं कौस्तुभसंस्कृतं च श्रीवत्सभूमिर्विमलं विशालम् ।
विभाति वक्षो वनमालयाऽऽढ्यं वनाद्रिनाथस्य सुसुन्दरस्य ॥ ५६ ॥

லக்ஷ்ம்யா: பதம் கௌஸ்துபஸம்ஸ்க்ருதஞ்ச
ஸ்ரீவத்ஸபூமிர் விமலம் விசாலம்,
விபாதி வக்ஷோ வநமாலயாட்யம்
வநாத்ரிநாதஸ்ய ஸுஸுந்தரஸ்ய. 56

* * * அழகருடைய திருமார்பையநுபவிக்கிறாரிதில்.

வநாத்ரிநாதஸ்ய ஸுஸுந்தரஸ்ய வக்ஷோ விபாதி—திருமாலிருஞ்சோலை மலைக்குத் தலைவரான அழகருடைய திருமார்பு விளங்காநின்றது. அது எங்ஙனே யிராநின்றதென்னில்;

லக்ஷ்ம்யாः பதம்— * அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா * என்றும் * பூவார் திருமாமகள் புல்கியமார்பா * என்றும் சொல்லுகிறபடியே பெரிய பிராட்டியாருக்கு நித்ய நிகேதநமாயிரா நின்றது.

கௌஸ்துப ஸம்ஸ்க்ருதஞ்ச— * குருமாமணிப்பூண் குலாவித் திகழும் திருமார்வு * என்கிறபடியே கௌஸ்துபாலங்க்ருதமாயிரா நின்றது.

ஸ்ரீவத்ஸ பூமிः— * திருமறு மார்பனுகையாலே ஸ்ரீவத்ஸமென்னும் மயிர்ச்சுழிக்கு இருப்பிடமானது.

விமலம் விசாலம்— பளபளென்றகன்று காடவ்யூடமாய் விளங்காநின்றது.
வநமாலயா ஆட்யம்— * ஆபாதகூடம் யா மாலா வநமாலேதி கத்யதே * என்கிறபடியே திருமுடி தொடங்கித் திருவடியளவாக விளங்காநின்ற வநமாலையாலே சோபிதமானது. ஆக இப்படிப்பட்ட திருமார்பு திகழா நின்றதென்றாராயிற்று. 56

सौन्दर्यामृतसारपूरपरिवाहावर्तगर्तायितं यातः किञ्च विरिञ्चिसंभवनभूम्यम्भोजसंभूतिभूः ।
नाभिश्शुम्भति कुम्भिकुम्भनिभनिर्भातस्तनस्वर्वधूसंभुक्तद्रुमषण्डशैलवसते रारूढलक्ष्म्या हरेः ॥

சௌந்தர்யாம்ருத ஸாரபூரபரிவாஹாவர்த்த கர்த்தாயிதம்
யாதः கிஞ்ச விரிஞ்ச ஸம்பவநபூம்யம்போஜஸம்பூதிபூः,
நாபிச் சும்பதி கும்பிகும்பநிபநிர்ப்பாத ஸ்தநஸ்வர்வதூ
ஸம்புக்தத்ருமஷண்ட சைலவஸதே ராரூட லக்ஷ்ம்யா ஹரேः. 57

* * *— அழகருடைய திருக்கொப்பூழ்தன்னை யநுபவிக்கிறாரிதில். * கொப்பூழிலெழு கமலப்பூவழகர் * என்று ஆண்டாளநுபவித்த முறையிலே அநுபவிக்கிறாராயிற்று. கும்பிகும்பநிப நிர்ப்பாத ஸ்தநஸ்வர்வதூ ஸம்புக்தத்ருமஷண்ட சைலவஸதேः ஆரூட லக்ஷ்ம்யாः ஹரேः நாபிः சும்பதி—யானையினுடைய கும்பஸ்தலம் போன்று விளங்குகின்ற கொங்கைத் தலங்களையுடைய தேவமாதர்கள் [ஊர்வசீ மேநகா ரம்பா திலோத்தமாதிகள்] வந்து இறைஞ்சியேத்தியநுபவிக்குமிடமான திருமாலிருஞ் சோலைமலையை உறைவிடமாகவுடையவரும், ‘ஏறு திருவுடையான்’ என்னப்பெற்றவருமான அழகருடைய திருநாபியானது விளங்காநின்றது. அது எப்படிப்பட்டதென்ன, இரண்டு விசேஷணங்களாலே அதன் பெருமையை யருளிச்செய்கிறார் ;—

ஸௌந்தர்யாம்ருத ஸாரபூரபரிவாஹாவர்த்த கர்த்தாயிதம் யாதः— ஸௌந்தர்யமாகிற அமுதவாறு பெருகப்புக, அதிலே தோன்றின சுழியோ இது! என்னலாம்படியிரா நின்றது. மஹாப்ரவாஹமுள்ள விடங்களிலே சுழியுண்டாவது காணாநின்றோம். அழகருடைய திருமேனியடங்கலும் பெருவெள்ளங்கோத்துப் பெருகாநின்ற ஸௌந்தர்ய ப்ரவாஹத்தின் வேகத்தினாலே யுண்டான சுழிதான் திருநாபியென்று வ்யபதேசிக்கப்படுகின்றதென்றதாயிற்று. “பவதநுபவரஸவிவசருடைய அபிநிவேச பாசபரி ப்ராமித மதிமந்தாநமத்த்யமாநமான ஸௌந்தர்ய துக்தஸிந்துவானது சுற்றோரம் திரைந்தெழுந்து நடுக்குழித்திட்ட சுழிபோல் சுந்தரமா முந்திமலரும்” என்ற * டுபாடு காண்க. सौन्दर्यामृतसारपूरपरिवाहे आवर्तगर्तत्वं प्राप्तः என்றவாறு. கிஞ்ச—மேலும் ;

விரிஞ்சஸம்பவநபூமீ அம்போஜஸம்பூதிபூः— * உய்யவுலகு படைக்கவேண்டி உந்தியில் தோற்றினாய் நான்முகனை * என்றும், * தன்னுந்திவலயத்துப் பேரொளிசேர் மன்னிய தாமரை மாமலர்பூத்து, அம்மலர்மேல் முன்னம் திசைமுகனைத் தான் படைக்க * என்றும் சொல்லுகிறபடியே நான்முகனுக்குப் பிறப்பிடமாகவுள்ளது. ஆக இப்படிப்பட்ட திருநாபி திகழ்கின்றது. 57

सुन्दरस्य किल सुन्दरबाहोः श्रीमहातरुवनाचलभर्तुः ।
हन्त ! यत्र निवसन्ति जगन्ति प्रापितक्रशिम तत्तनु मध्यम् ॥ ५८ ॥

ஸுந்தரஸ்ய கில ஸுந்தரபாஹோ: ஶ்ரீமஹாதருவநாசலபர்த்து:,
ஹந்த யத்ர நிவஸந்தி ஜகந்தி ப்ராபிதக்ரசிம தத் தநு மத்யம். 58

* * * அழகருடைய இடையழகை அநுபவிக்கிறாரிதில்.

ஶ்ரீமஹாதருவநாசலபர்த்து: ஸுந்தரஸ்ய ஸுந்தரபாஹோ: யத்ர மத்யே ஜகந்தி நிவஸந்தி, தத் தநுமத்யம் ப்ராபிதக்ரசிம ஹந்த—திருமாலிருஞ் சோலைமலையுறையும் சுந்தரத்தோளுடைய அழகப்பிரானுடைய எந்த மத்யத்திலே பிரளய காலத்தில் உலகங்களெல்லாம் உறைகின்றனவோ அது எவ்வளவோ பருத்திருக்கவேணுமே; அப்படியன்றிக்கே க்ருசமாயிராநின்றது அந்தோ! என்று விஸ்மயந்தோற்ற அருளிச்செய்கிறபடி. * அண்டரண்ட பகிரண்டத் தொருமாநில மெழுமால்வரை முற்றுமுண்ட * என்றும், * மஞ்சாடுவரையேழுங் கடல்களேழும் வானகமும் மண்ணகமும் மற்றுமெல்லாம் எஞ்சாமல் வயிற்றடக்கி * என்றும் சொல்லுகிறபடியே ஸகல சராசரங்களையும் உள்ளே கொண்டிருக்கக்கடவதான திருவுதரம் பெருத்தன்றோ விளங்க வேணும்; உண்டதுருக்காட்டாதே சிறுத்துக்கிடக்கிறபடி என்னே! என்கிறார். உத்தம புருஷர்களின் உதரம் ப்ரக்ருத்யா க்ருச மென்றதாயிற்று.

ப்ராபிதக்ரசிம—அடைவிக்கப்பட்ட க்ருசத்வத்தையுடையது. க்ருசமாயிருக்குந் தன்மையைப் பெற்றிருக்கிறதென்றபடி.

தநுமத்யம்—இதனை ஸமஸ்தபதமாகவும் கொள்ளலாம், வ்யஸ்தபதமாகவுங் கொள்ளலாம். ஸமஸ்தமாகக் கொண்டால், தநுவென்று திருமேனியைச் சொல்லிற்றாய் திவ்யமங்கள விக்ரஹத்திலுள்ள மத்ய ப்ரதேசமென்றபடி. வ்யஸ்தமாகக் கொண்டால், தநு—ஸூக்ஷ்மமான என்றபடி. 58

पिष्टदुष्टमधुकैटभकीटौ हस्तिहस्तयुगलाभसुवृत्तौ ।
राजतः क्रमकृशौ च सदूरू सुन्दरस्य वनभूधरभर्तुः ॥ ५९ ॥

பிஷ்ட துஷ்டமதுகைடபகீடௌ
ஹஸ்திஹஸ்த யுகளாபஸுவ்ருத்தௌ,
ராஜத: க்ரமக்ருசௌ ச ஸதூரு
ஸுந்தரஸ்ய வநபூதரபர்த்து:. 59

* * * இந்தச்லோகத்தினால் அழகருடைய திருத்துடைகளை அநுபவிக்கிறார்.

வநபூதரபர்த்து: ஸுந்தரஸ்ய ஸதூரு ராஜத:— திருமாலிருஞ்சோலைமலைக்குத் தலைவரான அழகருடைய அழகிய திருத்துடைகள் விளங்காநின்றன; அவைதாம் எப்படிப்பட்டவையென்னில்;

பிஷ்டதுஷ்ட மதுகைடபகீடௌ—ஆதிஸ்ருஷ்டி காலத்தில் தோன்றினவர்களாய் மஹாபலிஷ்டர்களான மது கைடபர்களென்னும் அஸுரர்களிருவரும் முன்னொரு காலத்திலே நான்முகனிடத்திலிருந்து வேதங்களைக் கொள்ளைகொண்டு கடலில் மூழ்கி மறைந்து விட, ஞானவொளியைத்தரும் பெருவிளக்கான வேதங்களொழிந்தமைபற்றி உலகமெங்கும் பேரிருள் மூடி நலியாநிற்க, பிரமன் முதலியோரனைவரும் கண்கெட்டவர் போல யாதொன்றும் செய்யவறியாமல் திகைத்து வருந்துவது கண்டு எம்பெருமான்

திருவுள்ளமிரங்கிக் கடலினுள் புகுந்து அவ்வஸுரர்களைத் தேடிக் கண்டுபிடிக்க, அவர்களும் செருக்கி எம்பெருமானை யெதிர்த்துப் பெரும் போர்புரிய, எம்பெருமான் இவர்களைத் துடையிலிறுக்கி முடித்ததாக இதிஹாஸம். பண்டொரு ஸமய விசேஷத்திலே இவ்வஸுரர்கள் பெற்றிருந்த வரம் பழுதாகாமைக்காகவாயிற்று துடையிடையிலிறுக்கிக் கொன்றது. பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் அழகிய மணவாளனுடைய திருத்துடைகளை வருணிக்குமிடத்து * மதமிவ மதுகைடபஸ்ய * என்றருளிச் செய்திருப்பது காண்க. ஆக, மதுகைடபர்களைப் பேஷணம் பண்ணின பெருமையையுடையவை அழகருடைய திருத்துடைகள் என்றதாயிற்று. இன்னமும் எப்படிப்பட்டவையென்னில் ;

ஹஸ்தி ஹஸ்தயுகளாப ஸுவ்ருத்தௌ—யானையின் துதிக்கையையும் துடைகளுக்கு உவமை கூறுவது கவிமரபு. * ரம்பாஸ்தம்பாঃ கரிவரகராঃ * என்றருளிச்செய்கிறார் வரதராஜ ஸ்தவத்திலும். யானையினுடைய இரண்டு துதிக்கைகளோடொத்தவையும் உருண்டிருப்பனவுமாய் விளங்கா நின்றன வென்கை.

हस्तिहस्तयुगलाभौ च तौ सुवृत्तौ चेति विशेषणोभयपदकर्मधारयः ॥

க்ரமக்ருசௌ ச—அடிபருத்து நுனி சிறுத்திருப்பவை யென்றபடி. ... 59

यौवनवृषककुदोद्भेदनिभं नितरां भाति विभोरुभयं जानु शुभाकृतिकम् ।
सुन्दरभुजनाम्नो मन्दरमथिताब्धेश्चन्दनवनविलसत्कन्दरवृषभपतेः ॥ ६० ॥

யௌவநவ்ருஷ ககுதோத்பேதநிபம் நிதராம்
பாதி விபோருபயம் ஜாநு சுபாக்ருதிகம்,
ஸுந்தரபுஜநாம்நோ மந்தரமதிதாப்தேঃ
சந்தநவநவிலஸத் கந்தரவ்ருஷபபதேঃ. 60

* * *—அழகருடைய திரு முழந்தாள்களை யநுபவிக்கிறாரிதில்.

மந்தரமதிதாப்தேঃ சந்தநவந விலஸத்கந்தர வ்ருஷபபதேঃ ஸுந்தரபுஜநாம்நঃ விபோঃ சுபாக்ருதிகம் உபயம் ஜாநு நிதராம் பாதி—

* மந்தரம் நாட்டியன்று மதுரக்கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத் தோளுடையான் * (நாச்சியார் திருமொழி - 9 - 1-) என்கிறபடியே மந்தரமலையை மத்தாக நாட்டிக் கடல் கடைந்தவரும், * சந்தனப் பொழிலின் தாழ் சினை நீழல்...... மாலிருஞ்சோலை வணங்குதும் வா மட நெஞ்சே * (பெரிய திருமொழி 9-8-1.) என்கிறபடியே சந்தனப் பொழில்கள் விளங்கப்பெற்ற திருமாலிருஞ்சோலை மலைக்குத் தலைவருமா், சுந்தரத்தோளுடையானென்று திருநாமமுடையவருமான பெருமானுடைய மிகவழகிய உருவமமைந்த முழந்தாளிணையானது மிகவும் விளங்காநின்றது. அதுதான் எங்ஙனே உத்ப்ரேக்ஷிக்கலாம்படி யிராநின்றதென்னில் ;

யௌவநவ்ருஷககுதோத்பேதநிபம்—யௌவனமாகிற வ்ருஷப ராஜத்தின் முசுப்புக்கள் தான் முழந்தாள்களாக மிளிர்கின்றன வென்னலாம்படி யிராநின்றது. வ்ருஷபத்திற்கு முசுப்பானது அஸாதாரண நிரூபகமாவது போல திருமுழந்தாள்கள் எம்பெருமானுடைய நித்ய யௌவனத்திற்கு அஸாதாரண நிரூபகமாயிராநின்றதென்றபடி.

* स्यादुक्ष्णोर्वा ककुदयुगलं यौवनैश्वर्यनाम्नोः— ஸ்யாதுக்ஷ்ணோர் வா ககுதயுகலம் யௌவநைச்வர்யநாம்நோঃ * என்ற வரதராஜஸ்தவ ஸூக்தியும் இங்கே அநுஸந்தேயம். ருக்வேதத்தில் "யுவாகுமாரঃ" என்று ஓதிற்று. அங்கு - யுவா, அகுமாரঃ என்று பதபாடம். அகுமாரঃ என்ற விடத்து ஈஷதர்த்தே நஞ். கௌமாரம் கழியும் தசையாயும்

யௌவநம் வந்து தலைகாட்டும் தசையாயுமிருக்கப்பெற்ற நிலைமையே எம்பெருமானுடைய பருவமென்றுணர்க. அதுதான் யௌவனமெனப்படுகிறது. ... 60

अधोमुखं न्यस्तपदारविन्दयोरुदञ्चितोदात्तसुनालसंनिभे ।
विलङ्घ्य जङ्घे क नु रंहतो दृशौ वनाद्रिनाथस्य सुसुन्दरस्य मे ॥ ६१ ॥

அதோமுகந்யஸ்தபதாரவிந்தயோ:
உதஞ்சிதோதாத்தஸுநாலஸந்நிபே,
விலங்க்ய ஜங்கே க்வ நு ரம்ஹதோ த்ருசௌ
வநாத்ரிநாதஸ்ய ஸுஸுந்தரஸ்ய மே. 61

* * * அழகருடைய திருக்கணைக்கால்களை யநுபவிக்கிறாரிதில். அழகருடைய திருவடிகளானவை கீழ்முகமாக வைக்கப்பட்ட தாமரைமலர்கள் போன்றிருப்பனவாகவும், திருக்கணைக்கால்களானவை அத்தாமரைகளின் நாளதண்டங்களோ வென்னலாம்படியிருப்பனவாகவும் அருளிச் செய்கிறாராயிற்று.

வநாத்ரிநாதஸ்ய ஸுஸுந்தரஸ்ய—திருமாலிருஞ்சோலை மலைத் தலைவரான அழகருடைய,

அதோமுகந்யஸ்தபதாரவிந்தயோ: உதஞ்சிதோதாத்த ஸுநாலஸந்நிபே ஜங்கே விலங்க்ய—அதோமுகமாக வைக்கப்பட்ட திருவடித் தாமரைகளினுடைய வ்ருத்தாகாரமாய் ஆயதமாயிருக்கின்ற அழகிய நாளதண்டங்களை யொத்த திருக்கணைக்கால்களைத் தவிர்த்து,

மே த்ருசௌ க்வ நு ரம்ஹத:—என்னுடைய கண்களானவை வேறெங்குச் செல்லும்! எங்கும் செல்லாது. இத் திருக்கணைக்கால்களையே அநுபவித்து நிற்குமத்தனை என்றதாயிற்று.

[அதோ முகந்யஸ்தபதாரவிந்தயோரித்யாதி.] திருவடித்தாமரைகளை அதோ முகமாக வைக்க வேண்டிய காரணம் இங்கு அருளிச் செய்யப்படவில்லையாயினும், வரதராஜஸ்தவத்தில், " प्रेम्णाघ्रातुं करिगिरिशिरोधोमुखीभावभाजोः अङ्घ्रिद्वंद्वाह्वयकमलयोर्दण्डकाण्डायमाने — ப்ரேம்ணாக்ராதும் கரிகிரிசிரோதோமுகீபாவபாஜோ: அங்க்ரி த்வந்த்வாஹ்வய கமலயோர் தண்ட காண்டாயமாநே." என்று அருளிச் செய்யப்பட்டது இங்கே அநுஸந்திக்கத்தகும். திருமலையின் போக்யதாதிசய ப்ரயுக்தமான ப்ரீதிவிசேஷத்தாலே அதனை உச்சிமோந்து மகிழவேணுமென நினைத்துத் திருவடித்தாமரைகள் கீழ்முகமாக்கப்பட்டன வென்க. 61

सुसुन्दरस्यास्य पदारविन्दे पदारविन्दाधिकसौकुमार्ये ।
अतोऽन्यथा ते बिभृयात्कथं नु तदासनं नाम सहस्रपत्रम् ॥ ६२ ॥

ஸுஸுந்தரஸ்யாஸ்ய பதாரவிந்தே பதாரவிந்தாதிக ஸௌகுமார்யே,
அதோந்யதா தே பிப்ர்யாத் கதம் நு ததாஸநம் நாம ஸஹஸ்ரபத்ரம். 62

* * * இந்த ச்லோகத்தாலும் அடுத்த ச்லோகத்தாலும் அழகருடைய திருவடியிணைகளும் ஆஸன பத்மமுமான சேர்த்தி யழகை ஒரு விலக்ஷணமான உத்ப்ரேக்ஷையோடுங்கூட அநுபவிக்கிறார். நம்மாழ்வார் திருவாய்மொழியில் (4-5-8) * தண்டாமரை சுமக்கும் பாதப் பெருமானை * என்றருளிச் செய்தார்; குளிர்ந்த ஆஸந பத்மத்தாலே தரிக்கப்பட்ட திருவடிகளையுடையவனென்கை. எம்பெருமானுடைய திருவடிகளின் கீழே பத்மாஸந மொன்று உண்டே; அதன் மேலன்றோ திருவடிகள் விளங்குகின்றன; * அடிச்சோதி நீ நின்ற தாமரையாயலர்ந்ததுவோ * என்ற பாசுரமும் இங்கே அநுஸந்தேயம். " தண்டாமரையின்மீது விளங்குகின்ற பாதங்களையுடைய

Released by Maran's Dog Toronto , Canada

வன்" என்ன வேண்டுமிடத்து 'தண்டாமரை சுமக்கும் பாதன்' என்றது ஒரு உத்ப்ரேக்ஷையில் நோக்காக; அதாவது குளிர்த்தியிலும் பரிமளத்திலும் செவ்வியிலும் தாமரைப் பூவானது திருவடிக்குத் தோற்றுப் போயிற்றும்; தோற்றவர்கள் வென்றவர்களைச் சுமப்பதென்கிற ஒரு வ்யவஸ்தை உலகிற் காண்பதாதலால் தோல்வி யடைந்த தாமரைப் பூ வெற்றிபெற்ற திருவடியைச் சுமக்க வேண்டியதாயிற்றுப் போலுமென்கை. இவ்விஷயத்தை அடுத்த மேல் ச்லோகத்தில் வ்யக்தமாக அருளிச் செய்கிறார். இந்த ச்லோகத்தில் அதனை ஸாமாந்யமாக ப்ரஸ்தாவிக்கிறார்.

அஸ்ய ஸுஸுந்தரஸ்ய பதாரவிந்தே—இவ்வழகருடைய திருவடித் தாமரைகளானவை.

பதாரவிந்தாதிக ஸௌகுமார்யே—ஆஸன பத்மத்திற் காட்டிலும் அதிசயித்த ஸௌகுமார்ய முடையன. இஃது எங்ஙனே தெரிகிறதென்னில்;

அதோந்யதா—கீழே சொன்னபடியல்லவாகில்.

ஆஸநம் நாம தத் ஸஹஸ்ரபத்ரம் தே கதம் ந பிப்ருயாத்?—ஆஸன பத்மமென்று ப்ரஸித்தமான அந்தத் தாமரையானது திருவடித் தாமரைகளை ஏன் சுமக்கும்? தோற்றதனாலன்றோ சுமக்கின்றதென்று திருவுள்ளம். இது மேல் ச்லோகத்திலே விசதமாகும். 62

सौन्दर्यमार्दवसुगन्धरसप्रवाहैरेते हि सुन्दरभुजस्य पदारविन्दे ।
अम्भोजडम्भपरिरम्भणमभ्यजैष्टां तद्वै पराजितमिमे शिरसा बिभर्ति ॥६३॥

ஸௌந்தர்ய மார்தவஸுகந்தரஸ ப்ரவாஹைஃ
ஏதே ஹி ஸுந்தரபுஜஸ்ய பதாரவிந்தே,
அம்போஜடம்பபரிரம்பணமப்யஜைஷ்டாம்
தத் வை பராஜிதமிமே சிரஸா பிபர்த்தி. 63

*** கீழ் ச்லோகத்தி லருளிச் செய்த விஷயம் இதில் உபபத்தியுடன் விவரிக்கப்படுகிறது. அழகு, ஸௌகுமார்யம், நறுமணம், மகரந்தரஸ ப்ரவாஹம் ஆகிய இவற்றாலே அழகருடைய திருவடிகளானவை தாமரையை வென்றிட்டபடியினால் தோல்வி யடைந்த அந்தத் தாமரைப் பூ இந்தத் திருவடிகளைச் சுமக்கின்றது என்கிறார்.

ஸுந்தரபுஜஸ்ய ஏதே பதாரவிந்தே—சுந்தரத் தோளுடையானது இந்தத் திருவடித் தாமரைகளானவை,

ஸௌந்தர்ய மார்தவ ஸுகந்த ரஸப்ரவாஹை:—அழகு, மென்மை, நறுமணம், மகரந்தரஸ ப்ரவாஹம் ஆகிய இவற்றாலே,

அம்போஜடம்பபரிரம்பணம் அப்யஜைஷ்டாம்—தாமரை மலரின் செருக்குக் கிளர்ச்சியை வென்றொழித்தன;

தத் வை பராஜிதம் (ஸத்) இமே சிரஸா பிபர்த்தி—அந்தத் தாமரையானது பராஜிதமாகி இத் திருவடிகளை ஆஸநபத்மமாய்க் கொண்டு சுமந்திராநின்றது. 63

एते ते बत ! सुन्दराह्वयजुषः पादारविन्दे शुभे यन्निर्णेजसमुत्थितत्रिपथगास्रोतस्सु किञ्चित्किल ।
धत्तेऽसौ शिरसा ध्रुवस्तदपरं स्रोतो भवानीपतिर्यस्यास्यालकनन्दिकेति निजगुर्नामैवमन्वर्थकम् ॥६४॥

ஏதே தே பத ஸுந்தராஹ்வயஜுஷ: பாதாரவிந்தே சுபே
யந்நிர்ணேஜஸமுத்தித த்ரிபதகா ஸ்ரோதஸ்ஸு கிஞ்சித் கில,
தத்தேஸௌ சிரஸா த்ருவஸ் ததபரம் ஸ்ரோதோ பவாநீபதி:
யஸ்யாஸ்யாலக நந்திகேதி நிஜகுர் நாமைவமந்வர்த்தகம். 64

Shrimal Pillai Loka chariar Sishyan ,Toronto , Canada

* * * அழகருடைய திருவடித் தாமரைகளில் கங்கை பெருகின வரலாற்றை யநுபவித்துப் பேசுகிறாரிதில்.

யந்நிர்ணேஜ ஸமுத்தித த்ரிபதகா ஸ்ரோதஸ்ஸு—பண்டொருகால் த்ரிவிக்ரமாவதாரம் செய்தருளின காலத்திலே *குறைகொண்டு நான்முகன் குண்டிகைநீர்பெய்து மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்திக் கறைகொண்ட கண்டத்தான் சென்னி மேலேறக் கழுவினான் அண்டத்தான் சேவடியை யாங்கு* [நான்முகன் திருவந்தாதி—9.] என்றருளிச் செய்தபடி திருவடி விளக்கின தீர்த்தம் பல முகமாகப் பெருகிற்றே; அவற்றுள்;

கிஞ்சித் கில அஸௌ த்ருவஃ சிரஸா தத்தே—ஒரு பெருக்கை, உத்தாநபாதனென்னும் சக்ரவர்த்தியினுடைய புதல்வனான த்ருவன் தன் தலையாலே தாங்கி நிற்கிறான்.

தத் அபரம் ஸ்ரோதோ பவாநீபதிஃ—மற்றொரு பெருக்கைப் பார்வதீபதியான பரமசிவன் தன்தலையாலே தாங்கி நிற்கின்றான்.

யஸ்யாஸ்ய அலகநந்திகேதி ஏவம் நாம அந்வர்த்தகம் நிஜகுஃ—யாதொரு பெருக்குக்கு 'அலக நந்தா' என்றிங்ஙனே வழங்கிவரும் பெயரை அந்வர்த்தமாகச் சொல்லுகிறார்களோ அதனைப் பரமசிவன் தாங்குகின்றானென்கை. *சதுமுகன் கையில் சதுப்புயன் தாளில் சங்கரன் சடையினில் தங்கிக் கதிர்முகமணி கொண்டிழி புனற்கங்கை* என்று பெரியாழ்வாரருளிச் செய்தபடியே சங்கரனுடைய அலகஸம்பந்தம் பெற்றது காரணமாகவே 'அலகநந்தா' என்று பெயர்பெற்றதாயிற்று.

ஸுந்தராஹ்வயஜுஷஃ தே ஏதே பாதாரவிந்தே சுபே—அழகருடைய இந்தத் திருவடித் தாமரைகளானவை பரம போக்யங்கள். த்ருவனும் சிவனும் சிரஸா வஹிக்கும்படியான பெருக்குகளையுடைய கங்கைக்கு உத்பத்தி பூமியான அழகர் திருவடிகள் பரம போக்யங்களென்றதாயிற்று. 64

आम्नायकल्पलतिकोत्थसुगन्धिपुष्पं योगीन्द्रहार्दसरसीरुहराजहंसम् ।
उत्पक्वधर्मसहकारफलप्रकाण्डं वन्देय सुन्दरभुजस्य पदारविन्दम् ॥६५॥

ஆம்நாயகல்பலதிகோத்த ஸுகந்தி புஷ்பம்
யோகீந்த்ர ஹார்த ஸரஸீருஹராஜஹம்ஸம்,
உத்பக்வதர்மஸஹகார பலப்ரகாண்டம்
வந்தேய ஸுந்தரபுஜஸ்ய பதாரவிந்தம். 65

* * * அழகர் திருவடிகளை மிக அற்புதமாக உல்லேகிக்கிறார் இதில்.

ஆம்நாயகல்பலதிகோத்த ஸுகந்திபுஷ்பம்—வேதங்களாகிற கற்பகக் கொடியில் நின்றுமுண்டான நறுமணம் மிக்க மலர்களோ இவை! என்னலாயிருந்தது. வேதங்களிலே பரிமளிக்கும் இத் திருவடிகள்—வேத ப்ரதிபாத்யங்கள் என்று கருத்து.

யோகீந்த்ர ஹார்த ஸரஸீருஹராஜஹம்ஸம்—யோகிச்ரேஷ்டர்களின் ஹ்ருதயகமலங்களிலே விளங்கும் ராஜஹம்ஸங்களோ இவை! என்னலாயிருந்தது. யோகித்யேயங்களென்றபடி.

உத்பக்வதர்மஸஹகாரபலப்ரகாண்டம்—பரிபக்வமான தர்மமாகிற தேன்மாம்பழங்களோ விவை! என்னலாயிருந்தது. த்யாக பலமும் இவையேயாய் பரமபுருஷார்த்தமாயிருப்பவை யென்றவாறு. ப்ரகாண்ட சப்தம்—ச்ரேஷ்ட வாசகம். ஆக இப்படிப்பட்ட;

ஸுந்தர புஜஸ்ய பதாரவிந்தம் வந்தேய—சுந்தரத்தோளுடையானுடைய திருவடித் தாமரையை வணங்கக் கடவேன். 65

सुसुन्दरस्यास्य तु वामनाकृतेः क्रमत्रयप्रार्थिनि मानसे किल ।
इमे पदे तावदिहासहिष्णुनी विचक्रमाते त्रिजगत्पदद्वये ॥६६॥

ஸுஸுந்தரஸ்யாஸ்ய து வாமநாக்ருதே:
க்ரமத்ரய ப்ரார்த்திநி மாநஸே கில,
இமே பதே தாவ திஹாஸஹிஷ்ணுநீ
விசக்ரமாதே த்ரிஜகத் பதத்வயே. 66

* * * பண்டு திருவடிகளைக் கொண்டு உலகளந்தருளின காலத்திலே வாமன மூர்த்தி மஹாபலிஸகாசத்திலே "என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடி மண் மன்னா! தருகென்று வாய்திறப்ப" என்கிறபடியே மூவடிவைப்புக்கு விஷய மிருப்பதாகக்கருதி மூவடிமண் வேண்டினாலுங்கூட, திருவடிகளானவை இரண்டுவைப்பிலேயே மூவுலகையும் அளாவிவிட்டன வென்கிறார். இதனால் திருவடிகளுக்குண்டான ஆச்ரித ஸம்ரக்ஷண த்வராதிசயம் சொல்லிற்றாகிறது.

வாமநாக்ருதே: அஸ்ய ஸுஸுந்தரஸ்ய—பண்டு வாமன மூர்த்தியாகக் கோலங்கொண்ட இவ்வழகருடைய, மாநஸே—திருவுள்ளமானது,

க்ரமத்ரயப்ரார்த்திநி ஸதி—மஹாபலி பக்கலில் மூவடிவைப்புக்கு உரித்தாக மூவடி நிலம் வேண்டியிருக்கையில்.

இமே பதே தாவத் இஹ அஸஹிஷ்ணுநீ—இத்திருவடிகளோ வென்னில், இந்நிலத்திலே மூவடிவைப்பை ஸஹிக்கமாட்டாதவைகளாய்.

த்ரிஜகத் பதத்வயே விசக்ரமாதே—மூவுலகங்களையும் இரண்டே வைப்பில் கொள்ளை கொண்டனவாயின. எம்பெருமானுடைய திருவுள்ளத்தைக் காட்டிலும் திருவடிகளின் செயல் த்வராதிசயத்தில் வியக்கத்தக்கதென்று கருத்து. ... 66

सौन्दर्यसारामृतसिन्धुवीचिश्रेणीषु पादाङ्गुलिनामिकासु ।
न्यक्कृत्य चन्द्रश्रियमात्मकान्त्या नखावली शुम्भति सुन्दरस्य ॥६७॥

ஸௌந்தர்யஸாராம்ருத ஸிந்துவீசி
ச்ரேணீஷு பாதாங்குலி நாமிகாஸு,
ந்யக்க்ருத்ய சந்த்ரச்ரியமாத்மகாந்த்யா
நகாவலீ சும்பதி ஸுந்தரஸ்ய. 67

* * * திருவடிகளிலுள்ள திருநகங்களை வர்ணிக்கிறாரிதில். திருவிரல்களின் வர்ணநமும் அர்த்தாத் ஸித்திக்கிறது. அழகருடைய திருமேனியிலே அழகென்னும் அமுதக்கடலொன்று உண்டாயிற்று. கடலாகில் அலைகளு முண்டாகவேணுமிறே. அவ்வலைகள் தானோ வென்னலாம்படியிராநின்றன திருவிரல்கள், அத்திருவிரல்களிலே திருநகங்கள் சந்திரனுடைய ஒளியையும் திரஸ்கரித்து மிகவழகியவாக விளங்குகின்றன வென்கிறார்.

ஸுந்தரஸ்ய—திருமாலிருஞ்சோலையழகருடைய. பாதாங்குலிநாமிகாஸு ஸௌந்தர்ய ஸாராம்ருத ஸிந்துவீசிச்ரேணீஷு—திருவடி விரல்களாகிற ஸௌந்தர்யாம்ருத ஸாகர தரங்க பரம்பரைகளிலே.

நகாவலீ ஆத்மகாந்த்யா சந்த்ரச்ரியம் ந்யக்க்ருத்ய சும்பதி—திருநகங்களின் வரிசையானது தன்னொளியினாலே சந்திரனொளியையும் கீழ்ப்படுத்தி விளங்காநின்றது. ... 67

यो जातकशिमा मली च शिरसा संभावितश्शम्भुना सोऽयं यच्चरणाश्रयी शशधरो नूनं नखव्याजतः ।
पूर्णत्वं विमलत्वमुज्ज्वलतया सार्धं बहुत्वं तथा यातस्तं तरुषण्डशैलनिलयं वन्दामहे सुन्दरम् ॥६८॥

யோ ஜாதக்ரசிமா மலீ ச சிரஸா ஸம்பாவிதச் சம்புநா
ஸோயம் யச்சரணாச்ரயீ சசதரோ நூநம் நகவ்யாஜதஃ,
பூர்ணத்வம் விமலத்வமுஜ்ஜ்வலதயா ஸார்த்தம் பஹுத்வம் ததா
யாதஸ் தம் தருஷண்டசைலநிலயம் வந்தாமஹே ஸுந்தரம். 68

* * * கீழ்ச்லோகத்தில் திருவடி நகங்களைச் சந்த்ர ஸத்ருசங்களாகப் பேசினர். வாஸ்தவமாகவே சந்திரன் தேவதாந்தர ஸமாச்ரயணத்தினல் தனக்குண்டாயிருந்த குறைகள் தீரவேண்டி நகவ்யாஜத்தாலே அழகர் திருவடிகளை யாச்ரயித்துக் குறைகள் தீர்ந்து பரிபூர்த்தியையும் பெற்றுனென்று இதில் அருளிச் செய்கிறுர்.

யஃ சசதரஃ சம்புநா சிரஸா ஸம்பாவிதஸ்ஸந் ஜாதக்ரசிமா மலீச (அபூத்)—யாவனொரு சந்திரன் சிவன் சிரஸ்ஸாலே தரிக்கப்பட்டவனுகி க்ஷயிஷ்ணுவும் களங்கியுமானுனே; ஸோயம் நகவ்யாஜதஃ யச்சரணாச்ரயீஸந் பூர்ணத்வம் விமலத்வம் உஜ்ஜ்வலதயா ஸார்த்தம் ததா பஹுத்வம் யாதஃ—எப்போதும் பூர்ணனுயிருக்கை நிஷ்களங்கனுயிருக்கை, ஒளிமிக்கிருக்கை, பலவடிவு பெற்றிருக்கை ஆகிய இத்தன்மைகளையடைந்தானே, தம் தருஷண்டசைலநிலயம் ஸுந்தரம் வந்தாமஹே—அந்தத் திருமாலிருஞ் சோலையழகரை வணங்குகிறோம்.

இங்ஙனே யருளிச்செய்தவிது உத்ப்ரேக்ஷாலங்கார ரீதியிலென்று காட்டுகிறது இரண்டாவது பாதத்திலுள்ள நூநம் என்பது.

"मन्ये शङ्के ध्रुवं प्रायो नूनमित्येवमादिभिः । उत्प्रेक्षा व्यज्यते शब्दैरिव शब्दोऽपि तादृशः"

என்னக்கடவதிறே. தேவதாந்தர சிரஸ் ஸம்பந்தத்தினல் க்ஷயிஷ்ணுத்வத்தையும் களங்கித்வத்தையு மடைந்திருந்த சந்திரன் அழகருடைய திருவடிகளை ஆச்ரயித்து [அதாவது நகம் என்கிற தன்மை பூண்டிருந்து] க்ஷயிஷ்ணுத்வம் நீங்கி ஸதா ஸர்வதா புஷ்கலனுயிருக்கப் பெற்றுன்; களங்கித்வம் நீங்கி விமலனுயிருக்கப்பெற்றுன்; சில ஸமயங்களில் ஒளிமழுங்குதலின்றி எப்போதும் ஒளிமல்கியிருக்கப் பெற்றுன்; ஏகத்வத்தை விட்டு பஹுத்வத்தையு மடைந்தான்—என்ற விதனுல், பத்துத் திருவிரல்களிலுமுள்ள பத்து நகங்களும் பத்து சந்திரர்கள்போல விளங்குவதும் எப்போதும் புஷ்கலமாய் அகளங்கமாய் ஜாஜ்வல்யமாநமாயிருப்பதும் சொல்லிற்றுயிற்று. 68

यस्याः कटाक्षणमनुक्षणमीश्वराणामैश्वर्यहेतुरिति सर्वजनीनमेतत् ।
श्रीस्सेति सुन्दरनिषेवणतो निराहुस्तं हि श्रियश्श्रियमुदाहुरुदारवाचः ॥६९॥

யஸ்யாஃ கடாக்ஷண மநுக்ஷண மீச்வராணும்
ஐச்வர்யஹேதுரிதி ஸர்வஜநீநமேதத்,
ஸ்ரீஸ் ஸேதி ஸுந்தரநிஷேவணதோ நிராஹுஃ
தம் ஹி ச்ரியஃ ச்ரியமுதாஹுருதாரவாசஃ. 69

* * * கீழ் (39) * ஆஜாநஜஸ்வகதபந்துரேத்யாதி ச்லோகந் தொடங்கிக் கீழ்ச்லோகமளவும் முப்பது ச்லோகங்களாலே அழகருடைய கேசாதி பாதாந்த திவ்யாவயவ வர்ணநம் செய்து தலைக்கட்டிறுராயிற்று. இனி ஸ்ரீபூநீளாதேவிகளாகிற திவ்ய மஹிஷிகளின் சேர்த்தியையும், சேஷ சேஷாசநகருடப்ரமுக நித்யஸூரிகளின் பரிசர்யா விசேஷங்களையும் அநுபவிக்கத் திருவுள்ளம்பற்றி ஸ்ரீ மஹா லக்ஷ்மியின் நித்ய யோகத்தை யருளிச்செய்கிறுரிதில். யாவளொரு பிராட்டியின் கடாக்ஷமானது இந்திரன்

முதலிய தேவர்களுக்கும் அடிக்கடி ஐச்வர்ய ஹேதுவாகிற தென்பது ஸர்வஜந ஸம்மத மானதோ, அந்தப் பிராட்டியும் அழகரையாச்ரயித்தே ஸ்ரீயென்று திருநாமம் பெறு கிறாள்; அழகர்தாமும் திருவுக்கும் திருவாகிய செல்வராய் விளங்குகிறார்—என்கிறார்.

யஸ்யா: கடாக்ஷணம்—யாவளொருபிராட்டியின் கடைக்கண் பார்வையானது.

ஈச்வராணும் அநுக்ஷணம் ஐச்வர்யஹேதுரிதி ஏதத் ஸர்வஜநீநம்—ஈச்வரரென்று பேர் பெற்ற வர்களுக்கெல்லாம் அடிக்கடி ஐச்வர்ய ஹேதுவாகின்ற தென்பது நிர்விவாதமாயிருக் கின்றதோ.

ஸா ஸுந்தரநிஷேவணத: ஸ்ரீ: இதி நிராஹு:—அந்தப் பிராட்டிதானும் அழகரை ஆச்ர யிப்பதனாலேயே ஸ்ரீ யென்று பேர் பெறுகிறாளென்று ஸ்ரீ சப்த நிர்வசநகர்த்தாக்கள் கூறுகின்றார்கள். ஸ்ரீ சப்தத்திற்கு ஆறுவகையான வ்யுத்பத்திகள் உள்ளன; அவற் றுள் ச்ரயதே என்பது ஒரு வ்யுத்பத்தி. எம்பெருமானைப் பற்றி ஸ்வரூபலாப மடை பவள் என்றபடி- * மலர்மகள் விரும்பும் நமரும் பெறலடிகள் என்றதாயிற்று. இனி, பிராட்டிக்கு எம்பெருமானாலே ஏற்றமென்பதுபோல எம்பெருமானுக்கும் பிராட்டியாலே, ஏற்றமென்பது முண்டிறே, அது சொல்லுகிறது நான்காவது பாதத்தி னால்;

உதாரவாச: தஞ்ச ச்ரிய: ச்ரியம் உதாஹு:—*திருவுக்குந்திருவாகிய செல்வா * என்றருளிச் செய்த திருமங்கையாழ்வாரையும் * க: ஸ்ரீ: ச்ரிய: * என்றருளிச்செய்த ஆளவந்தாரை யும் இங்கு உதாரவாக்குக்களென்கிறார். திருப்பாவையில் (20)*திருவே துயிலெழாய் என்றவிடத்து ஆறாயிரப்படியில்—'உதாரவாக்குள்ளாகிறார்—திருமங்கையாழ்வாரும் ஆளவந்தாரும் ஆழ்வானும் பட்டரும்'' என்றருளிச் செய்ததும் காண்க.

இந்த ச்லோகம் சில சப்தங்கள் மாறி ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் இருபத்தொன்ப தாம் ச்லோகமாகவுள்ளது; அங்குமிங்கும் முன்னிரண்டு பாதங்களில் சிறிதும் வாசி யில்லை. மூன்றாவது பாதம் " தாம் ஸ்ரீரிதி த்வதுபஸம் ச்ரயணாந் நிராஹு: " என்று அங்கே யுள்ளது. இங்கு அழகருடைய திருநாமமிட்டுச்சொல்ல வேண்டுகையாலே " ஸ்ரீஸ் ஸேதி ஸுந்தர நிஷேவணதோ நிராஹு: " என்று சிறிது மாறுபட்டுள்ளது. இனி நான்காவது பாதத்திலும் சிறிது வாசியுண்டு: அங்கு மூன்றாவது பாதம் 'த்வதுபஸம்ச்ரயணாத்' என்று மத்யம புருஷ நிர்தேசமாக இருப்பதனாலே அதற்குச் சேர நான்காவது பாதத்தி லும் த்வாம் என்று யுஷ்மச்சப்தநிர்தேசம் ப்ராப்தமாயிற்று. இங்கு மூன்றாம்பாதத்தில் மத் யமபுருஷ நிர்தேசமின்றிக்கே 'ஸுந்தரநிஷேவணத:' என்று ப்ரதமபுருஷ நிர்தேசமே யுள்ளதனால் அதற்குச்சேர நான்காவதுபாதத்தில் (தம்) என்று இருக்கத்தகுமேயல்லாது (த்வாம்) என்று இருக்கத்தகாது. இங்கும் த்வாமென்று காண்கிறபாடம் ஸ்காலித்யத் தாலே வந்ததத்தனை. இதனைஒருவாறு பொருந்தவிட வேணுமாகில், மூன்றாவதுபாதத் தில் (ஸுந்தரநிஷேவணத:) என்றதில் ஸுந்தர! என்று பிரித்து ஸம்போதனமாக்கி, நிஷே வணத: என்றதை (த்வந்நிஷேவணத:) என்பதாக மாநஸாநுஸந்தாநம் செய்து கொள்ள வேண்டும். இது க்லிஷ்டம், வக்தாவுக்கு விவக்ஷிதமுமன்று. 69

दिव्याचिन्त्यमहाद्भुतोत्तमगुणैस्तारुण्यलावण्यकप्रायैरद्भुतभावगर्भसततापूर्वप्रियैर्विभ्रमैः ।

रूपाकारविभूतिभिश्च सदृशीं नित्यानपेतां श्रियं नीलां भूमिमपीदृशीं रमयिता नित्यं वनाद्रीश्वरः ॥७०॥

திவ்யாசிந்த்ய மஹாத்புதோத்தமகுணைஸ் தாருண்ய லாவண்யக—
ப்ராயை ரத்புதபாவ கர்ப்பஸததாபூர்வப்ரியைர் விப்ரமை:,
ரூபாகார விபூதிபிச்ச ஸத்ருசீம் நித்யாநபேதாம் ச்ரியம்
நீலாம் பூமிமபீத்ருசீம் ரமயிதா நித்யம் வநாத்ரீச்வர: 70

***—கீழ்ச்லோகத்தில் பெரிய பிராட்டியாரைப்பற்றி மாத்திரம் அருளிச்செய்தார்; இந்த ச்லோகத்தில் * கூந்தல் மலர் மங்கைக்கும் மண்மடந்தைக்கும் குலவாயர் கொழுந்துக்கும் கேள்வன் * என்கிறபடியே ஸ்ரீபூநீளாதேவிகளின் பெருமையையும் அப்பிராட்டிமார்களை அழகர் ரஸிப்பித்தருளும் பரிசையும் பேசுகிறார்.

திவ்ய அசிந்த்ய மஹாத்புத உத்தமகுணை:—அப்ராக்ருதங்களாயும் இப்படிப்பட்டவையென்று சிந்திக்க முடியாதவைகளாயும் மிக ஆச்சரியங்களாயும் உத்தமங்களாயுமிருக்கின்ற வாத்ஸல்ய காருண்யாதி ஆத்ம குணங்களாலும்.

தாருண்ய லாவண்யகப்ராயை:—(குணை:)—யௌவனம் லாவண்யம் போன்ற திவ்ய மங்கல விக்ரஹ குணங்களாலும்.

அத்புத பாவகர்ப்பஸததாபூர்வ ப்ரியை: விப்ரமைச்ச—ஆச்சரியமான அபிப்ராய விசேஷங்களை உள்ளேயுடையவைகளாய் அப்பொழுதைக்கப்பொழுது அபூர்வங்களாய் ப்ரியங்களாயுமிருக்கின்ற விலாஸங்களாலும்

ரூப ஆகார விபூதிபிச்ச—ஸ்வரூப விக்ரஹவிபவங்களினாலும்.

ஸத்ருசீம்—*துல்ய சீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜநலக்ஷணாம், ராகவோர்ஹதி வைதேஹீம் தஞ்சேய மஸிதேக்ஷணா* என்றும், *பகவந்நாராயணாபிமதாநுரூபஸ்வரூபரூப குண விபவைச்வர்ய சீலாத்யநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாண குணகணாம்* என்றும் சொல்லுகிறபடியே அநுரூபையாயிருக்கின்ற.

நித்யாநபேதாம் ச்ரியம்—நித்யாநபாயிநியான ஸ்ரீ மஹாலக்ஷ்மியையும்.

ஈத்ருசீம் பூமிம் நீலாமபி—பூர்வோக்த விசேஷண விசிஷ்டைகளான பூமி நீளைகளையும்.

வநாத்ரீச்வர: நித்யம் ரமயிதா—திருமாலிருஞ் சோலையழகர் இடையறாது ரஸிப்பிக்குந் தன்மையர். இத்தால், அழகரைப் பற்றுவார்க்குக் காலம் பார்க்க வேண்டாதே புருஷகார ஸாந்நித்யம் எப்போதுமுள்ளதென்றாராயிற்று. 70

अन्योन्यचेष्टितनिरीक्षणहार्दभावप्रेमानुभावमधुरप्रणयप्रभावः ।
आजस्रनव्यतरदिव्यरसानुभूतिस्स्वां प्रेयसीं रमयिता वनशैलनाथः ॥७१॥

அந்யோந்ய சேஷ்டிதநிரீக்ஷண ஹார்தபாவ
ப்ரேமாநுபாவ மதுரப்ரணயப்ரபாவ:,
ஆஜஸ்ரநவ்யதர திவ்ய ரஸாநுபூதி:
ஸ்வாம் ப்ரேயஸீம் ரமயிதா வநசைலநாத:. 71

* * * " रामस्तु सीतया सार्धं विजहार बहूनृतून् । मनस्वी तद्गतस्तस्या नित्यं हृदि समर्पितः ॥
प्रिया तु सीता रामस्य दाराः पितृकृता इति । गुणाद्रूपगुणाच्चापि प्रीतिर्भूयोऽभ्यवर्धत ॥
तस्याश्च भर्ता द्विगुणं हृदये परिवर्तते । अन्तर्गतमपि व्यक्तमाख्याति हृदयं हृदा ॥ "

இத்யாதி ஸ்ரீ ராமாயண ச்லோகங்களைப் பெரும்பாலும் திருவுள்ளம் பற்றி யருளிச் செய்வது இந்த ச்லோகம். பெருமாளுக்கும் பிராட்டிக்கும் ஸர்வாத்மநாவுள்ள ஸௌமநஸ்யம் பேசப்படுகிறது. [சேஷ்டித] புருவ நெறிப்பு, புன்சிரிப்பு முதலான விலாஸ வியாபார விசேஷங்கள். [நிரீக்ஷண] கடைக்கண் பார்வை. [ஹார்தபாவ] உள்ளேயுறையுமபிப்ராயம். அதாவது தாருண்ய லாவண்யாதிகளின் அநுத்யானம். [ப்ரேமாநுபாவ] ப்ரேமாதிசயம் ஆகிய இவற்றாலே [மதுர ப்ரணய ப்ரபாவ:] பரம போக்யமான அநுராகாதிசயத்தை யுடையவரான [வநசைலநாத:] திருமாலிருஞ் சோலை யழகர். [ஆஜஸ்ர நவ்யதர திவ்ய ரஸாநுபூதிஸ்ஸந்] அநவரத முண்டாயிருக்கச் செய்தேயும் அப்பொழுதைக்கப்பொழுது அபூர்வமாய்த் தோன்றுகின்ற அப்ராக்ருதமான ஆனந்தாநு

பவத்தையுடையவராய்க் கொண்டு. [ஸ்வாம் ப்ரேயஸீம் ரமயிதா] தம்முடைய தேவியாரை ரஸிப்பியா நின்றார்.

ச்லோகாரம்பத்தில் (அந்யோந்ய) என்றது—திவ்ய தம்பதிகளுக்குப் பரஸ்பரம் அநுபாவ்யமான என்றபடி. *परस्पर तपस्सम्पत्फलायित परस्परौ—பரஸ்பர தபஸ் ஸம்பத் பலாயித பரஸ்பரௌ * இத்யாதிகளிற்போல [அந்யோந்ய—என்றதற்குச் சேர] த்விவசநாந்தமாக முடிய வேண்டாவோ வென்று சிலர் கேட்பதுண்டு. அப்படி நிர்ப்பந்தமில்லை. 71

सुन्दरस्य वनशैलवासिनो भोगमेव निजभोगमाभजन् ।
शेष एष इति शेषताकृतेः प्रीतिमानहिपतिस्स्वनामनि ॥७२॥

ஸுந்தரஸ்ய வநசைல வாஸிநோ
போகமேவ நிஜபோகமாபஜந்,
சேஷ எஷ இதி சேஷதாக்ருதே:
ப்ரீதிமாநஹிபதிஸ் ஸ்வநாமநி. 72

* * * இந்த ச்லோகம் முதல் மூன்று ச்லோகங்களாலே அநந்த கருட விஷ்வக்ஸேநர்களாகிற நித்ய ஸூரிவரர்களின் பரிசர்யா விசேஷங்களை முறையே யெடுத்துரைக்கத் திருவுள்ளம் பற்றி இந்த ச்லோகத்தினால் திருவனந்தாழ்வானுடைய பரிசர்யா விசேஷத்தைப் பேசுகிறார். சேஷாத்ரி யென்கிற திருநாமம் திருவேங்கட மலைக்குப் போலவே திருமாலிருஞ் சோலை மலைக்கு முண்டு. திருவனந்தாழ்வான் தானே திருமலையாக வடிவெடுத்து எம்பெருமானுக்குப் பரமாநந்த ஸந்தோஷஸந்தாயக ஸ்தாந விசேஷமாக அமைந்திருக்கிறபடி. இப்படிப்பட்ட விலக்ஷணமான சேஷத்வம் தனக்கு வாய்த்தபடியாலே திருவனந்தாழ்வான் சேஷனென்கிற தனது திருநாமத்திலே மிகவு முகப்புடையான் என்கிறார்.

அஹிபதி:—ஸர்ப்பராஜனான திருவனந்தாழ்வான்.

வநசைலவாஸிந: ஸுந்தரஸ்ய போகமேவ நிஜபோகம் ஆபஜந்—திருமாலிருஞ்சோலை மலையுறையும் அழகருடைய ஸ்வேச்சா விஹாராநுபவத்தையே தன்னுடைய வுடலுக்கு ஸாபல்யமாக நினைத்தவனாய் என்றபடி. வடமொழியில் ஸர்ப்பத்தின் உடலுக்கு போக மென்று பெயர். பகவத் போகத்தையே ஸ்வபோகமாகக் கொண்டானென்று சாதுக்தி யிருக்கிறபடி.

சேஷதாக்ருதே:—* परगतातिशयाधानेच्छया उपादेयत्वमेव यस्य स्वरूपं स शेषः * என்று லக்ஷணமுடையதான சேஷத்வம் ஸித்தித்தபடியாலே யென்கை.

சேஷ ஏஷ இதி ஸ்வநாமநி ப்ரீதிமாந்—'இவன் சேஷன்' என்று பலரும் சொல்லும்படியாகத் தனக்கு வாய்த்த சேஷ நாமத்திலே போரவுகப்புடையான். ... 72

वाहनासनवितानचामराद्याकृतिः खगपतिस्त्रयीमयः ।
नित्यदास्यरतिरेव यस्य वै एष सुन्दरभुजो वनाद्रिगः ॥७३॥

வாஹநாஸந விதாநசாமராத்யாக்ருதி: ககபதிஸ்த்ரயீமய:,
நித்யதாஸ்யரதிரேவ யஸ்ய வை ஏஷஸுந்தரபுஜோ வநாத்ரிக:. 73

* * * பெரிய திருவடியின் பரிசர்யா விசேஷங்களைப் பேசுகிறாரிதில்.

த்ரயீமய: ககபதி:—"வேதாத்மா விஹகேச்வர:" என்று வேதஸ்வரூபியாகச் சொல்லப்பட்ட பெரிய திருவடி.

வாஹநாஸந விதாந சாமராத்யாக்ருதிஸ் ஸந்—“ தாஸஸ் ஸகா வாஹநமாஸநம் த்வஜோ யஸ்தே விதாநம் வ்யஜநம் த்ரயீமய: ” என்று ஆளவந்தாரருளிச் செய்தபடியே ஸமயாநு குணமாக வாஹனமாயும் ஆஸனமாயும் விதானமாயும் சாமரமாயும் மற்றும் பலவாயும் வடிவெடுத்தவனுய்க் கொண்டு.

யஸ்யைவ நித்யதாஸ்யரதி:—யாவரொரு அழகருக்கே நித்ய கைங்கர்ய நிரதராயிரா நின்ருரோ.

ஷ ஸுந்தரபுஜோ வநாத்ரிக:—அப்படிப்பட்ட சுந்தரத் தோளுடைய பெருமாள் திருமாலிருஞ் சோலைமலை யுறைகின்ருர். திருமாலிருஞ் சோலை யழகர் பெரிய திருவடியினுடைய ஸகலவித கைங்கரியங்களையும் கொண்டருளுமா போலே அடியேனிடத்திலும் கொண்டருள வேணுமென்று விஞ்ஜாபித்தபடி. 73

वनाद्रिनाथस्य सुसुन्दरस्य वै प्रभुक्तशिष्टाश्यथ सैन्यसत्पतिः ।
समस्तलोकैकधुरन्धरस्सदा कटाक्षवीक्ष्योऽस्य च सर्वकर्मसु ॥७४॥

வநாத்ரிநாதஸ்ய ஸுஸுந்தரஸ்ய வை
ப்ரபுக்தசிஷ்டாச்யத ஸைந்யஸத்பதி:,
ஸமஸ்த லோகைக துரந்தரஸ் ஸதா
கடாக்ஷவீக்ஷ்யோஃஸ்ய ச ஸர்வகர்மஸு. 74

* * * இதில் ஸ்ரீஸேநாபதியாழ்வானுடைய பரிசர்யாவிசேஷத்தைப் பேசுகிருர்.

ஸைந்யஸத்பதி:—ஸ்ரீ ஸேநாபதி யாழ்வான்.

வநாத்ரிநாதஸ்ய ஸுஸுந்தரஸ்ய ப்ரபுக்த சிஷ்டாசீ ஸந்—திருமாலிருஞ்சோலை மலைத் தலைவரான அழகருடைய போனகஞ் செய்த சேட முண்பாராய்க் கொண்டு. ஸேனை முதலியார்க்கு சேஷாசநனென்றே திருநாமமிறே. “த்வதீய புக்தோஜ்ஜித சேஷ போஜிநா—ப்ரியேண ஸேநாபதிநா” என்ருரிறே ஆளவந்தாரும்.

ஸர்வகர்மஸு அஸ்ய கடாக்ஷவீக்ஷ்ய:—ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ஸகல வ்யாபாரங்களிலும் அழகருடைய கடாக்ஷ வீக்ஷணமொன்றையே எதிர் பார்ப்பவராய்.

ஸதா ஸமஸ்த லோகைக துரந்தர:—“ஸ்ரீமதி விஷ்வக் ஸேநே ந்யஸ்த ஸமஸ்தாத்மைச்வர்யம்” என்றும், “ஸ்ரீ ரங்க சந்த்ரமஸ மிந்திரயா விஹர்த்தும் விந்யஸ்ய விச்வசித சிந்யநாதிகாரம், யோ நிர்வஹதி” என்றும் சொல்லுகிறபடியே எப்போதும் ஸமஸ்த லோக நிர்வாஹகராய் விளங்கா நின்ருர். 74

छत्रचामरमुखाः परिच्छदास्सूरयः परिजनाश्च नैत्यगाः ।
सुन्दरोरुभुजमिन्धते सदा ज्ञानशक्तिमुखनित्यसद्गुणाः ॥७५॥

சத்ரசாமரமுகா: பரிச்சதா: ஸூரய: பரிஜநாச்ச நைத்யகா:,
ஸுந்தரோருபுஜமிந்ததே ஸதா ஜ்ஞாநசக்தி முகநித்ய ஸத்குணா:. 75

* * * அழகருடைய பரிஜந பரிச்சத கல்யாண குண ஸம்ருத்தியை யருளிச் செய்கிருரிதில்.

நைத்யகா: ஸூரய:—நித்ய கைங்கர்ய பாகிகளான ஸூரிகளும்.

பரிஜநா:—பரிஜநங்களென்று பேர் பெற்றவர்களும்.

சத்ர சாமரமுகாः பரிச்சதாः—குடை சாமரம் முதலிய எடுபிடி ஸாமான்களும்.

ஜ்ஞாந சக்திமுக நித்யஸத்குணாச்ச—ஜ்ஞாந சக்தி பலைச்வர்யாதிகளான நித்ய கல்யாண குணங்களும்.

ஸுந்தரோருபுஜம் ஸதா இந்ததே—சுந்தரத் தோளுடைய பெருமானை யடைந்து எப்போதும் விளங்கா நின்றன.

இதில் மூன்றுவது பாதத்தில் ஒரு விசாரமுண்டு;—

"ஸுந்தரோருபுஜம் இந்ததே" என்பதற்கு சுந்தரத் தோளுடையானை எப்போதும் விளங்கச் செய்கின்றன வென்று சிலர் பொருள் கூறுவதாகவும் அது பொருந்தமாட்டாதென்றும், ப்ராப்ய என்று ஒரு ல்யபந்தம் அத்யாஹாரம் செய்துகொண்டு 'ஸுந்தரோரு புஜம் ப்ராப்ய இந்ததே' என்று யோஜித்துக் கொள்வதே பொருத்தமென்றும் ஸம்ஸ்க்ருத வ்யாக்யாதா எழுதியுள்ளார், இந்ததே என்பதற்கு (ப்ரகாசயந்தி) என்று பொருள் கொள்ளுவதில் ஒளசித்யமில்லை யென்று அவர் எழுதியிருப்பது பொருத்தமே. ஆனல், மேல் ச்லோகத்தின் முடிவில் (ச்ரிதாः) என்றிருப்பதுபோல, இந்த ச்லோகத்திலும் (த்ருதீயபாதாந்தே) 'ச்ரிதாः' என்றிருந்ததாகவும் அது (ஸதா) என்று மாறிவிட்டதாகவும் சில பெரியார் ஊஹித்துச் சொல்லுவதுண்டு. ஸஹஸா பாடத்தைத் திருத்த நாம் அதிகாரிகளல்லோம். பாடப் பிறழ்வுகள் எங்கும் ஸம்பாவிதமே. (75)

द्वारनाथगणनाथतल्लजाः पारिषद्यपदभागिनस्तथा ।
मामकाश्च गुरवः पुरातनास्सुन्दरं वनमहीध्रगं श्रिताः ॥७६॥

த்வார நாத கண நாத தல்லஜாः பாரிஷத்யபதபாகிநஸ் ததா,
மாமகாச்ச குரவः புராதநாः ஸுந்தரம் வநமஹீத்ரகம் ச்ரிதாः. 76

சண்டப்ரசண்டாதிகளான த்வார பாலக ச்ரேஷ்டர்களும், குமுத குமுதாக்ஷாதிகளான கணநாயக ச்ரேஷ்டர்களும். "பாரிஷத்யாः பரச்சதம்" என்கிறபடியே பாரிஷத்ய பதவ்யபதேச்யர்களானவர்களும் ஸ்ரீபராங்குச பரகாலயதிவராதிகளான நம் முன்னோர்களும் திருமாலிருஞ்சோலை யழகரைப் பணிந்து உய்ந்து போந்தார்கள்-என்றுராயிற்று. தல்லஜ சப்தம்-ச்ரேஷ்டவாசகம். 76

ईदृशैः परिजनैः परिच्छदैर्नित्यसिद्धनिजभोगभूमिगः ।
सुन्दरो वनगिरेस्तटीषु वै रज्यते सकलदृष्टिगोचरः ॥७७॥

ஈத்ருசைः பரிஜநைः பரிச்சதைः
நித்யஸித்த நிஜபோக பூமிகः,
ஸுந்தரோ வநகிரேஸ் தடீஷு வை
ரஜ்யதே ஸகலத்ருஷ்டிகோசரः. 77

* * * கீழே சொல்லப்பட்ட அனந்த கருட விஷ்வக்ஸேநாதிகளான பரிஜநங்களோடும் சத்ரசாமராதிகளான பரிச்சதங்களோடும் அழகர் திருமாலிருஞ்சோலைத் தாழ்வரையிலே அனைவரும் கண்ணாரக்கண்டு களிக்கலாம்படியெழுந்தருளியிருந்து ஸேவைஸாதித் தருளுமாற்றைய நுபவித்துப் பேசுகிறாரிதில்.

ஈத்ருசைः பரிஜநைः பரிச்சதைஸ்ஸஹ—பூர்வோக்த ப்ரகாரங்களான பரிஜந பரிச்சதங்களோடே கூட, கீழே * ஸுந்தரஸ்ய வநசைலவாஸிநः * என்கிற ச்லோகந் தொடங்கி

முந்தின ச்லோகமளவாக ஐந்து ச்லோகங்களிலே அருளிச் செய்தவற்றைச் சேரப் பிடித்து (ஈத்ருசைஃ) என்றருளிச் செய்தபடி.

நித்ய ஸித்த நிஜபோக பூமிக:—'நித்யஸித்த' என்றது ஸதா ஏகரூபமான என்றபடி. நிஜ போக பூமியென்று தனக்கு அஸாதாரணமான நலமந்தமில்லதோர் நாடாகிய நித்ய விபூதியைச் சொல்லுகிறது. *வைகுண்டே து பரேலோகே ச்ரியா ஸார்த்தம்ஜகத்பதிஃ, ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ. என்கிறபடியே ஸ்ரீவை குண்டத்திலே யெழுந்தருளியிருப்பவனான எம் பெருமான்,

ஸகலத்ருஷ்டிகோசரஃ ஸுந்தரஸ் ஸந்—ஸகலஜந நயந விஷயபூதரான அழகராய்க்கொண்டு.

வநகிரேஸ் தடேஷு ரஜ்யதே—திருமாலிருஞ்சோலை மலையடிவாரத்திலே திருவுள்ள முகந்து வர்த்திக்கிறாரென்றபடி. திருநாட்டிலே நம்போல்வாருடைய கண்ணுக்கு இலக்காகாமலிருக்கிற குறைதீர அங்குத்தை நிலைமையோடே இங்கே இனக்குறவர் களுட்பட ஸகலர்க்கும் சக்ஷுர்விஷயனாய்க் கொண்டு ஸேவை ஸாதிக்கிறாரென்ற தாயிற்று. 77

आक्रीडभूमिषु सुगन्धिषु पौष्पिकीषु वैकुण्ठधामनि समृद्धसुवापिकासु ।
श्रीमल्लतागृहवतीषु यथा तथैव लक्ष्मीधरस्सजति सिंहगिरेस्तटीषु ॥७८॥

ஆக்ரீடபூமிஷு ஸுகந்திஷு பௌஷ்பிகீஷு
வைகுண்டதாமநி ஸம்ருத்தஸுவாபிகாஸு,
ஸ்ரீமல்லதாக்ருஹவதீஷு யதா ததைவ
லக்ஷ்மீதரஸ் ஸஜதி ஸிம்ஹகிரேஸ் தடேஷு. 78

*** நலமந்தமில்லதோர் நாடாகிய ஸ்ரீவைகுண்டத்திலே திருவுள்ளத்திற்கு மிகவு மினிதாக வஸித்தருளும் பெருமானுக்கு இத்திருமலைத் தாழ்வரையிலே வாஸம் ருசிக்குமோ? என்று சிலர் சங்கிக்கக் கூடுமென்றெண்ணி, அவ்விருப்போடு இவ்விருப்போடு வாசியில்லை யென்றருளிச் செய்கிறாரிதில்.

வைகுண்டதாமநி—ஸ்ரீவைகுண்டமாகிற நித்ய விபூதியிலே.

ஸம்ருத்தஸுவாபிகாஸு—வாவித்தடங்கள் நிரம்பியவையாயும்.

ஸ்ரீமல்லதாக்ருஹவதீஷு—அழகிய கொடி மண்டபங்களையுடையனவாயும்.

பௌஷ்பிகீஷு—புஷ்பங்கள் நிறைந்தனவாயும்.

ஸுகந்திஷு—நறுமணம் மிக்கவையாயுமிருக்கிற.

ஆக்ரீடபூமிஷு—விஹாரோபயோகிகளான உத்யான வனங்களிலே.

லக்ஷ்மீதர: யதா ஸஜதி—ச்ரியஃபதியான எம்பெருமான் எவ்விதமாகத் திருவுள்ள முகந்து வர்த்திக்கிறானோ.

ததைவ ஸிம்ஹகிரேஸ் தடேஷு ஸஜதி—அவ்விதமாகவே திருமாலிருஞ்சோலைத் தாழ்வரைகளிலும் திருவுள்ள முகந்து வர்த்திக்கிறானாயிற்று. இத்தால், திருமலை பூலோக வைகுண்ட மென்றதாயிற்று. 78

आनन्दमन्दिरमहामणिमण्डपान्तर्लक्ष्म्या भुवाऽप्यहिपतौ सह नीलया च ।
निस्संख्यनित्यनिजदिव्यजनैकसेव्यो नित्यं वसन् सजति सुन्दरदोर्वनाद्रौ ॥७९॥

ஆநந்தமந்திர மஹாமணிமண்டபாந்தঃ
லக்ஷ்ம்யா புவா^{2}ப்யஹிபதௌ ஸஹ நீலயா ச,
நிஸ்ஸங்க்ய நித்ய நிஜ திவ்ய ஜநைக ஸேவ்யঃ
நித்யம் வஸந் ஸஜதி ஸுந்தரதோர் வநாத்ரௌ. 79

*** இந்த ச்லோகமும் கீழ் ச்லோகத்திற்கு சேஷபூதமாகவே அவதரிக்கிறதாயிற்று.

ஆநந்த மந்திரமஹாமணிமண்டபாந்த:—ஸ்வரூபரூபகுண விபூதிகளோடும் நித்ய முக்தர்களோடும் கூடியிருக்குமிருப்பை யநுபவிப்பதனுலுண்டாகும் மஹானந்தத்திற்குப் பிறப்பிடமான திருமாமணி மண்டபத்தினுள்ளே என்றபடி.

அஹிபதௌ லக்ஷ்ம்யா புவா நீலயாச ஸஹ—திருவனந்தாழ்வான்மீது ஸ்ரீதேவி பூதேவி நீலாதேவிகளோடுங்கூட.

நிஸ்ஸங்க்ய நித்ய நிஜ திவ்ய ஜநைக ஸேவ்ய:—த்ரிபாத் விபூதியாகையாலே எண்ணிறந்த நித்ய முக்தர்களன்றோ அங்கிருப்பது; அவர்களுக்கு மாத்திரமே ஸேவ்யனுயிருக்கின்ற, ஸுந்தரதோ:—சுந்தரத் தோளுடைய பெருமாள்.

வநாத்ரௌ நித்யம் வஸந் ஸஜதி—திருமாலிருஞ்சோலை மலையிலே நித்யவாஸரஸிகராயிரா நின்ருர்.

விரஜையை மறக்கும்படியான நூபுரகங்கையும் திருமாமணி மண்டபத்தை மறக்கும்படியான திவ்யாலய மண்டப ஸந்நிவேசமுமிங்கிருக்கையாலே திருநாட்டில் வாஸத்தையும் மறந்து இங்கே வர்த்திக்கிறபடி. [ஸஜதி—ஸக்தோ பவதி என்றபடி.] 79

प्रत्यर्थिनि त्रिगुणकप्रकृतेरसीम्नि वैकुण्ठधामनि पराम्बरनाम्नि नित्ये ।
नित्यं वसन्परमसत्त्वमयेऽप्यतीतयोगीन्द्रवाङ्मनस एष हरिर्वनाद्रौ ॥८०॥

ப்ரத்யர்த்திநி த்ரிகுணக ப்ரக்ருதேரஸீம்நி
வைகுண்டதாமநி பராம்பரநாம்நி நித்யே,
நித்யம் வஸந் பரமஸத்வமயேபி, அதீத
யோகீந்த்ர வாங்மநஸ ஏஷ ஹரிர் வநாத்ரௌ. 80

*** ஸ்ரீவசநபூஷணத்திலே "ஆவரண ஜலம் போலே பரத்வம்.... பெருக்காறு போலே விபவங்கள்; அதிலே தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்." என்று பரமபதத்திற் காட்டிலும் அர்ச்சாவதாரத்திற்குள்ள ஏற்றம் த்ருஷ்டாந்த முகத்தாலே காட்டப்பட்டது. அப்படிப்பட்ட ஏற்றத்தைத் திருவுள்ளத்திலே கொண்டு அருளிச்செய்வது இந்த ச்லோகம். [வைகுண்டதாமநி நித்யம் வஸந்நபி ஏஷ ஹரிர் வநாத்ரௌ.] இவ்வழகர் திருநாட்டிலே யெழுந்தருளியிருப்பவராயினும் இத்திருமலையிலே ஸந்நிஹிதராயிராநின்ருர்—என்கிருராயிற்று. வைகுண்டத்திற்கு அனேக விசேஷணங்கள் இட்டருளுகிருர்:—

த்ரிகுணகப்ரக்ருதேঃ ப்ரத்யர்த்திநி:—ஸத்வ ரஜஸ் தமோ குணங்களென்னும் முக்குணங்களின் கூட்டரவாகிய மூலப்ரக்ருதிக்கு எதிராகவுள்ளது. அதாவதென்னென்னில்;

பரமஸத்வமயே—சுத்த ஸத்வமயமாயிருக்கை.

அஸீம்நி—லீலா விபூதியின் பரிமாணம் எல்லை கண்டு கூறப்பட்டிருக்கின்றது. அங்ஙனன்றிக்கே, "तेषामपि इयत्परिमाणम् इयदैश्वर्यम् ईदृशस्वभावमिति परिच्छेत्तुमयोग्ये" என்று

ஸ்ரீவைகுண்ட கத்யத்தில்) ஸ்வாமி யருளிச்செய்தபடியே நித்யாஸங்குசித ஜ்ஞானர்களுக்கும் அளவிட வொண்ணுத பரிமாணத்தை யுடைத்தாயிருக்குமாயிற்று.

பராம்பரநாம்நி—பரமாகாச மென்னும் பெயரையுடையதாயிற்று.

நித்யே வைகுண்ட தாமநி—நித்ய விபூதி யென்னப்படுகிற ஸ்ரீ வைகுண்ட லோகத்திலே.

"அதீத யோகீந்த்ர வாங்கமநஸ ஏஷ:"—என்ற விடத்து முந்தின ஸமஸ்த பதமானது ஸப்தம்யந்தமாகவும் பிரிக்கக்கூடியது, ப்ரதமாந்தமாகவும் பிரிக்கக்கூடியது; ஸந்தி இரண்டு படிக்கும் பொதுவாக வுள்ளதாகையினாலே. ஸப்தம்யந்தமாகக் கொண்டால் வைகுண்ட தாமாவுக்கு விசேஷணமாய் நிற்கும். ப்ரதமாந்தமாகக் கொண்டால் அழகர்க்கு விசேஷணமாய் நிற்கும், இரண்டு படியுமழகியதே. சரணாகதி கத்யத்திலே "परमयोगिवाङ्मनसापरिच्छेद्यस्वरूपस्वभाव..... निरतिशयवैकुठनाथ !" என்றருளிச் செய்திருப்பதற்குச் சேர ஸப்தம்யந்தமாகக் கொள்ளுதல் சிறக்கும். யோகி ச்ரேஷ்டர்களின் வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாததுமான ஸ்ரீ வைகுண்டத்திலே. [வஸந்நபி ஏஷ ஹரி: வநாத்ரேள] 'ஸஜதி' என்று க்ரியாபதம் கீழ்ச்லோகத்திலிருந்து வருவித்துக் கொள்ளத்தகும். 80

लोकांश्चतुर्दश दधत् किल सुन्दरस्य पङ्क्तीगुणोत्तरितसप्तवृतीदमण्डम् ।
अण्डानि चास्य सुसदृंशि परश्शतानि क्रीडाविधेरिह परिच्छदतामगच्छन् ॥८१॥

லோகாந் சதுர்தச ததத் கில ஸௌந்தரஸ்ய
பங்க்தீ குணோத்தரித ஸப்தவ்ருதீதமண்டம்,
அண்டாநி சாஸ்ய ஸௌஸத்ரும்சி பரச்சதாநி
க்ரீடாவிதேரிஹ பரிச்சததாமகச்சந். 81

* * * கீழே சில ச்லோகங்களினால் நித்ய விபூதி யோகத்தை அநுஸந்தித்தருளினராய் மேலிரண்டு ச்லோகங்களாலே லீலா விபூதி யோகத்தை யநுஸந்தித்தருளுகிறார். "யதண்ட மண்டாந்தர கோசரஞ்ச யத் தசோத்தராண்யாவரணாநி யாநி ச" என்று ஸ்தோத்ரரத்நத்தில் ஆளவந்தாரருளிச் செய்ததை யடியொற்றிப் பேசுகிறதாயிற்று இதில் பூர்வார்த்தம் அவ்விடத்திலே நம்முடைய வியாக்கியானத்தில் விரிவு கண்டு கொள்வது.

சதுர்தச் லோகாந் ததத், பங்க்தீகுணோத்தரிதஸப்தவ்ருதி இதம் அண்டம்—பதினான்கு லோகங்களையும் தன்னுள்ளே யடக்கிக் கொண்டிருப்பதும் மேலே ஒன்றுக்கொன்று பதின்மடங்காகப் பெருக்கப்பட்ட வைசால்யத்தை யுடைய ஸப்தாவரணங்களையுடையதுமான இவ்வண்டமும்.

அஸ்ய ஸௌஸத்ரும்சி பரச்சதாநி அண்டாநி ச—கீழ்ச் சொன்ன வண்டத்தோடு மிகவுமொத்திருக்கின்ற நூற்றுக்கணக்கான அண்டங்களும்.

இஹ ஸௌந்தரஸ்ய க்ரீடாவிதே: பரிச்சததாம் அகச்சந்—இங்குள்ள அழகருக்கு க்ரீடாபரிகரங்களாயிரா நின்றன. அண்டக் குலத்துக்கு அதிபதியாய் அவற்றை லீலோபகரணமாகக் கொண்டவரான அழகர் இத்திருமலையிலே ஸேவை ஸாதிக்கின்றாரென்றதாயிற்று. 81

सुरनरतिर्यगादिबहुभेदकभिन्नमिदं जगदथ चाण्डमण्डवरणानि च सप्त तथा ।
गुणपुरुषौ च मुक्त पुरुषाश्च वनाद्रिपतेरुपकरणानि नर्मविधये हि भवन्ति विभोः ॥८२॥

ஸுரநர திர்யகாதி பஹு பேதக பிந்நமிதம்
ஜகத்த சாண்ட மண்டவரணுநி ச ஸப்த ததா,
குண புருஷௌ ச முக்த புருஷாச்ச வநாத்ரிபதே:
உபகரணுநி நர்மவிதயேஹி பவந்தி விபோ:. 82

ஸுரநரதிர்யகாதி பஹுபேதக பிந்நம் இதம் ஜகத்—தேவமநுஷ்ய திர்யக் ஸ்த்தாவரங்களென்கிற பலவகைப்பட்ட விசேஷணங்களினாலே வேறுபட்டிருக்கிற இந்த ஜகத்தும். ஸுரநர திர்யக் ஸ்தாவராத்மக ஜந்து ஸமூஹவிசிஷ்டமான இவ்வுலகும் என்றபடி.

அதச அண்டம் ஸப்த அண்டவரணுநிச—இவ்வளவேயுமன்றிக்கே அண்டமும் ஏழு அண்டாவரணங்களும்.

குண புருஷௌ ச—ப்ரக்ருதியும் ஜீவாத்ம வர்க்கமும்.

முக்த புருஷாச் ச—ப்ரக்ருதி ஸம்பந்த விநிர் முக்தர்களான புருஷர்களும். கீதையில் "தேஷாம் ஸதத யுக்தாநாம்" என்ற விடத்தில் 'ஸததயோகம் காங்க்ஷமாணுநாம் என்று பாஷ்யரீத்யா பொருள் கொள்ளப்படுவதுபோல, இங்கும் 'முக்த புருஷா:' என்பதற்கு முக்தியை விரும்புகின்ற புருஷர்களென்று பொருள் கொள்ளவடுக்கும். திருவிருத்தத்தில் * விண்ணுளாரிலும் சீரியரே * என்னப்பட்டவர்களை விவக்ஷித்தபடி. ஆக இவ்வளவும்.

வநாத்ரிபதே: விபோ: நர்மவிதயே உபகரணுநி பவந்தி—திருமாலிருஞ்சோலை யெம்பெருமானுக்கு லீலா பரிகரங்களாகின்றன. 82

ज्ञानिनस्सततयोगिनो हि ये सुन्दरांघ्रिपरभक्तिभागिनः ।
मुक्तिमाप्य परमां परे पदे नित्यकिङ्करपदं भजन्ति ते ॥८३॥

ஜ்ஞாநிநஸ் ஸதத யோகிநோ ஹி யே
ஸுந்தராங்க்ரி பர பக்தி பாகிந:,
முக்திமாப்ய பரமாம் பரே பதே
நித்ய கிங்கர பதம் பஜந்தி தே. 83

* * * கீழ்ச்லோகத்திலே 'முக்த புருஷாச்ச' என்பதனாலே முமுக்ஷுப்ரஸ்தாவம் செய்தருளினபடியாலே அவர்களை விசேஷிக்கிறார் இந்த ச்லோகத்தில். பகவத் கீதையில்* தேஷாம் ஜ்ஞாநீ நித்ய யுக்த ஏகபக்திர் விசிஷ்யதே*என்றும்* ஜ்ஞாநீ து ஆத்மைவ மேமதம் *என்றும் புகழப்பட்ட ஜ்ஞாநி வகுப்பைச் சேர்ந்தவர்கள் திருமாலிருஞ்சோலையழகருடைய திருவடிகளிலே பக்தியைச் செலுத்தியே மோக்ஷத்தையடைய முடியும்—என்பது இந்த ச்லோகத்திற்கு உயிரான கருத்து. 'ஸதத யோகிந:' என்கிற பதம் 'தேஷாம் ஸதத யுக்தாநாம்' என்கிற கீதா ச்லோகத்திலுள்ள ஸதத யுக்த பதத்தின் ஸ்தானத்திலே ப்ரயுக்தமாகையாலே அப்பதத்தின் பொருளே இப்பதத்திற்குமாகக் கடவது. सततयोगं काङ्क्षमाणाः என்பது பொருள். எப்போதும் கூடியிருந்து அநுபவிக்க விரும்புகிறவர்களென்றபடி.

இரண்டாவது பாதத்தில் ஸுந்தராங்க்ரிபத-என்றும் ஸுந்தராங்க்ரிபர என்றும் இருவகையான பாடம் காண்கிறது; (பர) என்னும் பாடம் எளிதாகப் பொருள்படுகிறது. (பத) என்னும் பாடத்தில் (அங்க்ரி) யென்றாலும் திருவடியாய் (பத) என்றாலும் திருவடியாய் புநருக்தியாகிறதே யென்று சிலர் சங்கிப்பதுண்டு; சங்கை வேண்டா;

பதம் என்பதற்கு ஆஸ்பதம் என்று பொருள். அழகருடைய திருவடிகளை ஆஸ்பதமாகக் கொண்ட பக்தியை யுடையவர்கள் என்றவாறு.

மூன்றாம் பாதத்தில் " முக்திமாப்ய " என்றவிடத்து (ஆப்ய) என்ற ல்யப்பில் ஒரு விசாரமுண்டு; உபஸர்க்க யோகமில்லாத போது த்யக்த்வா, ஹித்வா, புக்த்வா, உக்த்வா, கத்வா என்றாப்போலே (ஆப்த்வா) என்று த்வாப்ரத்யயாந்தமாகத்தானே நிற்க வேணும்; உபஸர்க்க யோகமிருந்தால்தானே ஆகர்ய, பரித்யஜ்ய, பரிபுஜ்ய, ஸமாப்ய என்றாப்போலே ல்யபந்தமாகும். (ஆப்ய) என்ற இவ்விடத்தில் உபஸர்க்கமில்லாதிருக்க ல்யப்பு எங்ஙனே வந்ததென்று. இங்கும் ஆங் என்கிற உபஸர்க்கம அந்தர்ஹிதமாயிருக்கையாலே அநுபபத்தியொன்று மில்லையென்று ஸமாதாநம் காண்க. அதிமாநுஷ ஸ்தவத்திலும் மூன்றாவது ச்லோகத்தில் " ரஸ மஜ்ஜந மஞ்ஜஸாப்ய " என்றவிடம் காண்க.

தே பரமாம் முக்திமாப்ய பரே பதே நித்ய கிங்கரபதம் பஜந்தி—பூர்வார்த்தத்தில் சொல்லப்பட்டபடி ஜ்ஞாநிகளாய் அழகர் திருவடிகளிலே பக்தியைச் செலுத்தினவர்கள் அபுநராவ்ருத்திலக்ஷணமான மோக்ஷத்தைப் பெற்றுத் திருநாட்டிலே நித்ய கைங்கர்யசாலிகளாகின்றன ரென்றபடி. 83

देवस्य सुन्दरभुजस्य वनाद्रिभर्तुर्हे शीलवत्त्वमथवाऽऽश्रितवत्सलत्वम् ।
ऐशस्वभावमजहद्भिरिहावतारैर्योऽलञ्चकार जगदाश्रिततुल्यधर्मा ॥८४॥

தேவஸ்ய ஸுந்தரபுஜஸ்ய வநாத்ரிபர்த்துஃ
ஹை சீலவத்த்வ மதவா ச்ரித வத்ஸலத்வம்,
ஐசஸ்வபாவ மஜஹத்பிரிஹாவதாரைஃ
யோலஞ்சகார ஜகதாச்ரித துல்யதர்மா. 84

* * * இனி மத்ஸ்ய கூர்மாதி விபவாவதாரங்களை விரிவாக அநுபவிக்கத் திருவுள்ளம்பற்றி அதற்கு அவதரணிகைபோல இந்தாறு ச்லோகங்களருளிச் செய்கிறார். * அஜோபி ஸந் அவ்யயாத்மா பூதாநாமீச்வரோபி ஸந், ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா * என்று கீதையிலருளிச் செய்தபடியே அஜஹத் ஸ்வபாவனைக்கொண்டும் மநுஷ்யஸஜாதீயனைக்கொண்டும் விபவாவதாரங்கள் செய்தருளினது ஸௌசீல்யப்ரயுக்தமோ! அல்லது ஆச்ரித வாத்ஸல்ய நிபந்தநமோ வென்கிறார் இதில்.

யஃ (ஸுந்தரபுஜஃ) ஐசஸ்வபாவம் அஜஹத்பிஃ அவதாரைஃ இஹ ஆச்ரித துல்யதர்மா ஸந் ஜகத் அலஞ்சகார—யாவரொரு அழகர் ஸர்வேச்வரத்வத்திற்கு ஏற்ற ஸ்வரூபரூப குணவிபவாதிகளை (அல்லது) ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வாதிகளை விடாதிருக்கின்ற திருவவதாரங்களினால் இந்நிலத்திலே அடியார்களான மநுஷ்யாதிகளோடு துல்யசீலராய்க் கொண்டு இந்த ஜகத்தை அலங்கரித்தருளினரோ;

தஸ்ய வநாத்ரிபர்த்துஃ ஸுந்தரபுஜஸ்ய தேவஸ்ய சீலவத்த்வம் அதவா ஆச்ரிதவத்ஸலத்வம் ஹை—அந்த திருமாலிருஞ்சோலை மலைத்தலைவரான சுந்தரத் தோளுடைய பெருமானுடைய சீலகுணமோ அல்லது ஆச்ரிதவாத்ஸல்ய குணமோ ஆச்சரியமானது. 84

सिंहाद्रिनाथ ! तव वाङ्मनसातिवृत्तं रूपं त्वतीन्द्रियमुदाह रहस्यवाणी ।
एवं च न त्वमिह चेत्समवातरिष्यस्त्वज्ज्ञानभक्तिविषयोऽद्य मुधाऽभविष्यन् ॥८५॥

ஸிம்ஹாத்ரிநாத! தவ வாங்மநஸாதிவ்ருத்தம்
ரூபம் த்வதீந்த்ரிய முதாஹ ரஹஸ்ய வாணீ,
ஏவஞ்ச ந த்வமிஹ சேத் ஸமவாதரிஷ்யஃ
த்வத் ஜ்ஞாநபக்தி விஷயோத்ய முதாபவிஷ்யந். 85

* * * எம்பெருமான் அவதாரங்கள் செய்தருளாவிடில் ச்ருதி ஸ்ம்ருத்யாதி ஸகல சாஸ்திரங்களும் நிர்விஷயங்களா யொழியுமென்று சொல்லி அவதாரத்தின் ஆவச்யகதையை முதலிக்கிறுரிதில்.

ஸிம்ஹாத்ரிநாத!—திருமாலிருஞ் சோலைமலைத் தலைவரே!

ரஹஸ்யவாணீ வாங்மநஸாதிவ்ருத்தம் தவ ரூபம் து அதீந்திரியம் உதாஹ—உபநிஷத்தானது தேவரீருடைய அவாங்மநஸ கோசரமான திருவுருவத்தை அதீந்த்ரியமென்று ஓதி வைத்தது. கண்ணால் காணமுடியாததென்றது.

ஏவஞ்ச த்வம் இஹ ந ஸமவாதரிஷ்யச்சேத்— இங்ஙனே உபநிஷத்து ஓதியிருப்பதற்கேற்ப தேவரீரும் இந்நிலத்திலே போந்து விபவாவதாரங்களைச் செய்தருளாமலே யிருந்து விட்டீராகில், ஒருவர் கண்ணுக்கு மிலக்காகாதிருந்தீராகில்.

த்வத் ஜ்ஞாநபக்தி விதய: அத்ய முதா அபவிஷ்யந்—சாஸ்திரங்களிலே *நிதித்யாஸிதவ்ய:* என்றும் * அர்ச்சயேத் * என்றும் * ப்ரணமேத் * என்றும் * நித்யம் ப்ரதக்ஷிணீ குர்யாத்* என்றும் விதிக்கப்பட்டுள்ள வழிபாடுகளுக்கு விஷயமின்றிக்கே யொழியுமிறே.

மநுஷ்யர்களை நோக்கி ப்ரவர்த்தித்த சாஸ்திரங்களிலே விஹிதங்களாயிருந்துள்ள விதிகளுக்கு ஒரு இலக்குக் கிடையாதே போனால் அந்த சாஸ்திரங்கள் நிரர்த்தகங்களாமே. *ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா* என்ற திருமுகப்பாசுரமும் பழுதேயாமத்தனையிறே. அங்ஙனுகாமைக்காகவாயிற்று திருவவதாரங்கள் செய்தருளிற்று. 85

ये भक्ता भवदेकभोगमनसोऽनन्यात्मसञ्जीवनास्तत्संश्लेषणतद्विरोधिनिधनाद्यर्थं वनाद्रीश्वर ! ।
मद्ध्येण्डं यदवातरस्सुरनराद्याकारदिव्याकृतिस्तेनैव त्रिदशैर्नरैश्च सुकरं स्वप्रार्थितप्रार्थनम् ॥८६॥

யே பக்தா பவதேகபோக மநஸோ நந்யாத்மஸஞ்ஜீவநா:
தத்ஸம்ச்லேஷண தத்விரோதி நிதநாத்யர்த்தம் வநாத்ரீச்வர !,
மத்யேண்டம் யதவாதரஸ் ஸுரநராத்யாகார திவ்யாக்ருதி:
தேநைவ த்ரிதசைர் நரைச்ச ஸுகரம் ஸ்வப்ரார்த்தித ப்ரார்த்தநம் 86

* * * எம்பெருமான் விபவாவதாரங்கள் செய்தருளின காரணத்தையும் அவ்வவதாரத்தினுல் விளைந்த ஸௌகர்யத்தையு மருளிச் செய்கிறுரிதில்.

ஹே வநாத்ரீச்வர !—வாரீர் திருமாலிருஞ்சோலைத் தலைவரே !

அநந்யாத்ம ஸஞ்ஜீவநா: பவதேக போகமநஸ: யே பக்தா:—அநந்யோபாயர்களும் அநந்யோபேயர்களுமான யாவர் சில பக்தர்களுளரோ என்றபடி. * களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன் * என்றும் * உனக்குப் பணி செய்திருக்குந் தவமுடையேன் * என்றும் அநுஸந்தித்திருக்குமவர்களான பக்தர்கள் சிலருண்டே;

தத்ஸம்ச்லேஷண - தத்விரோதி நிதநாத்யர்த்தம்—அப்படிப்பட்ட பரமபக்தர்களோடே ஸம்ச்லேஷிக்கவும் அவர்களது விரோதிகளை நிரஸிக்கவும், ஆதிசப்தத்தாலே தர்ம ஸம்ஸ்தாபனத்திற்காகவு மென்றபடி. கீதையில் * பரித்ராணுய ஸாதூநாம் * என்றச்லோகத்தில் பரித்ராண சப்தத்தினுல் விவக்ஷிதமான பொருளை இங்கு ஸம்ச்லேஷண சப்தத்தினுல் விவரித்தருளினுராயிற்று. ஸாமாந்யமான பரித்ராணம் விவக்ஷிதமாகில் அது ஸங்கல்ப மாத்ர ஸாத்யமுமாகலாமே; அதற்காக வந்து பிறக்கவேண்டாவே. தத்ஸம்ச்லேஷணம் ஸங்கல்ப ஸாத்யமாகாதிறே. கீதாபாஷ்யத்திலும் அந்தராதிகரண ஸ்ரீபாஷ்யத்திலும் எம்பெருமானுர் திருவுள்ளம்பற்றின பொருள் இதுவேயாயிற்று. ஆக, ஸாதுபரித்ராண துஷ்க்ருத் விநாசநாதிகளுக்காக என்கை.

ஸுரநராத்யாகார திவ்யாக்ருதிः மத்யேண்டம் யத் அவாதரः—தேவமநுஷ்ய திர்யக்ஸ்தாவர ஸஜாதீயராய் திவ்யமான உருவத்தையுடையவராய்க் கொண்டு அண்டங்களினிடையே அவதரித்தீரென்பது யாதொன்றுண்டு;

தேநைவ—இப்படி அவதரித்ததனாலேயே.

த்ரிதசைः நரைச்ச—தேவர்களாலும் மனுஷ்யர்களாலும்.

ஸ்வப்ரார்த்தித ப்ரார்த்தநம் ஸுகரம் (அபூத்)—தம்தமக்கு வேண்டியவற்றை வேண்டிக் கொள்வதானது எளிதாகச் செய்துகொள்ளலாயிற்று. திருவவதாரங்களைச் செய்து கண்ணுக்குப் புலப்பட்டு நிற்கவேயன்றோ அவரவர்கள் வணங்கி வழிபட்டு வேண்டியவற்றை யாசிப்பதற்கு அவகாசமுண்டாயிற்று. அவதாரம் செய்தருளாவிடில் கண்ணிற்காண நேராதாகையினாலே ஒருவர் ஒன்று வேண்டிக் கொள்ள அவகாசமில்லையாகுமிறே.

"ஸ்வப்ரார்த்தித ப்ரார்த்தநம்"—என்றது ஸ்வாபிலஷிதவஸ்து ப்ரார்த்தநமென்றபடி. 86

श्रीमन्महावनगिरीश! विधीशयोस्ते मध्ये तु विष्णुरिति यः प्रथमावतारः ।
तेनैव चेत्तव महिम्नि जनाः किलान्धास्त्वन्मत्स्यभावमवगम्य कथं भवेयुः ॥८७॥

ஸ்ரீமந் மஹாவநகிரீச! விதீசயோஸ் தே
மத்யே து விஷ்ணுரிதி யः ப்ரதமாவதாரः,
தேநைவ சேத் தவ மஹிம்நி ஜநாः கிலாந்தாः
த்வந்மத்ஸ்ய பாவ மவகம்ய கதம் பவேயுः. 87

* * * விபவாவதார ப்ரசம்கை ப்ரஸ்துதமாய் நிகழ்ந்து வருகையாலே இதில் விவக்ஷிதமான விஷயங்களை யெல்லாம் அடைவே அருளிச்செய்கிறார். பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்திலே (51) * மத்யே விரிஞ்ச கிரிசம் ப்ரதமாவதாரः * என்று தொடங்கியருளிச் செய்துள்ள ச்லோகம் இந்த ச்லோகத்தின் கருத்தை நன்கு விவரிக்குமது.

ஸ்ரீமந் மஹாவநகிரீச != திருமாலிருஞ்சோலை மலைத்தலைவரே! (இது இரண்டு ஸம்போதநமாகவும், ஒரே ஸம்போதநமாகவுமாம்.) ஸ்ரீமந்! என்று தனியே பிரித்தால் இரண்டு விளி. மஹாவநகிரியிலோ மஹாவந கிரீசனிலோ ஸ்ரீமத்த்வத்தையந்வயித்து ஸமஸ்தபதமாகக் கொண்டால் ஒரே விளி.

விதீசயோர் மத்யே விஷ்ணுரிதி தே யः ப்ரதமாவதாரः—பிரமன் சிவனென்னுமிவர்களினிடையே தேவரீர் விஷ்ணுவென்று முதன்முதலாகத் திருவவதாரம் செய்தது யாதொன்றுண்டு;

தேநைவ தவ மஹிம்நி ஜநாः அந்தாச் சேத்—அது கொண்டே ஜனங்கள் தேவரீருடைய பெருமையில் குருடர்களாக ஆவர்களானால்; தேவரீருடைய மஹிமையை உள்ளபடியுணராதே விபரீதமாகக் கொள்வர்களாகில் என்றபடி.

த்வந்மத்ஸ்யபாவம் அவகம்ய கதம் பவேயுः?—தேவரீர் மத்ஸ்யாவதாரம் செய்தருளினபடியையறிந்து என்னுவர்களோ? தேவரீர் தேவயோநியில் அவதரித்தது கொண்டே ப்ரபாவத்தில் ப்ரமித்திருப்பர்களாகில் மத்ஸ்யாதி நீசயோனிகளில் ஜனித்தது கொண்டு இன்னமும் அதிகமாக ப்ரமிப்பார்களன்றோ வென்றபடி. "த்வந்மத்ஸ்ய பாவம்" என்று பாடமன்றிக்கே "த்வந்மர்த்ய பாவம்" என்கிற பாடமும் காண்கிறது. இதுவே பொருத்தமென்பாருமுளர். எம்பெருமான் தனித்தனியவதாரங்கள் செய்தது தவிர த்ரிமூர்த்தி ஸாம்யப்ரமம் தோன்றும்படியாக ப்ரஹ்மருத்ரர்களினிடையே விஷ்ணுவாகி நின்று ஓரவதாரம் முந்துறமுன்னம் செய்ததுண்டு. திரு

மங்கையாழ்வார் "நல்லரன் நாரணன் நான்முகனுக்கு" (2–9–1.) என்று பெரிய திருமொழியிலருளிச்செய்தது காண்க. அதிமாநுஷ ஸ்தவத்திலும் "ப்ரஹ்மேச மத்யகணநா" என்றருளிச் செய்தார். நிகமாந்த குருவும் வரதராஜ பஞ்சாசத்திலே "मध्ये विरिञ्चिशिवयोर्विहितावतारः ख्यातोऽसि तत्समतया तदिदं न चित्रम्" என்றருளிச் செய்தார். அந்தச் லோகத்தின் உத்தரார்த்தம் "मायावशेन मकरादिशरीरिणं त्वां तानेव पश्यति करीश ! यदेष लोकः" என்றிருக்கையாலே இந்த ச்லோகத்தில் நான்காவது பாதத்தில் "த்வம் மத்ஸ்யபாவமவகம்ய" என்கிறபாடமே மிகப் பொருத்தமென்று கொள்ளலாம். எம்பெருமான் ப்ரஹ்மருத்ரர்களினிடையே அவதாரம் செய்ததுகொண்டு அவர்களோடொக்க நினைப்பது அநுசிதமென்பது இந்தச்லோகத்தின் ஸாரமான கருத்து. ... 87

हे देव ! सुन्दरभुज ! त्वमिहाण्डमध्ये सौलभ्यतो विसदृशं चरितं महिम्नः ।
अङ्गीकरोषि यदि तत्र सुरैरमीभिस्साम्यान्निकर्षपरिपालनमेव साधु ॥८८॥

ஹேதேவ! ஸுந்தரபுஜ! த்வமிஹாண்ட மத்யே
ஸௌலப்யதோ விஸத்ருசம் சரிதம் மஹிம்நः,
அங்கீகரோஷி யதி தத்ர ஸுரைரமீபிः
ஸாம்யாந் நிகர்ஷபரிபாலநமேவ ஸாது. 88

*** கீழ்ச்லோகத்தில் ப்ரஹ்மருத்ரர்களினிடையே விஷ்ணுவாக அவதரிக்குமோரவதாரம் ப்ரஸ்துதமாயிற்று; அவ்வவதாரந்தன்னில் தேவர்கள் விஷ்ணுவை அந்த ப்ரஹ்மருத்ரர்களோடு ஸமமாக ப்ரதிபத்தி பண்ணுமதிற் காட்டிலும் நிகர்ஷப்ரதிபத்தி பண்ணுவதே நலமென்றருளிச் செய்கிறார் இந்த ச்லோகத்தில். புருஷோத்தமனான எம்பெருமானை க்ஷுத்ரர்களோடு ஸமமாக நினைப்பதும் குறைய நினைப்பதும் துல்யமேயென்பது கருத்து.

ஹே ஸுந்தரபுஜ தேவ!—வாரீர் சுந்தரத் தோளுடைய பெருமாளே!; த்வம்—தேவரீர்.
ஸௌலப்யதः—ஸௌலப்ய குணத்தினால்.
இஹ அண்டமத்யே—இவ்வண்ட மத்யத்திலே (திருவவதரித்து),
மஹிம்நः விஸத்ருசம் சரிதம் அங்கீகரோஷி யதி—தேவரீருடைய பரத்வத்திற்கு எதிர்த்தட்டாயிருக்கிற நிலைமையை ஏற்றுக் கொள்ளுமளவில்.
தத்ர—அந்நிலை தன்னிலே. அமீபிः ஸுரைः—இந்த தேவர்களாலே.
ஸாம்யாத் நிகர்ஷபரிபாலநமேவ ஸாது—ஸாம்யப்ரதிபத்தி கொள்ளுமதிற் காட்டிலும் அபகர்ஷப்ரதிபத்தி கொள்ளுமதே நன்றாம். அபகர்ஷப்ரதிபத்தி எப்படி அவிவேககிருத்யமோ அப்படியே ஸாம்யப்ரதிபத்தியும் அவிவேகக்ருத்ய மென்றதாயிற்று.

ஸம்ஸ்க்ருத வ்யாக்யாதா இந்த ச்லோகத்திற்கு வேறு வகைபாகத் தாத்பர்யம் காட்டுகிறார்;—"ब्रह्मरुद्रेन्द्रादिसाम्यावहविष्णूपेन्द्राद्यवतारादपि मत्स्यकूर्मादिसजातीयावतार एव अत्यन्तसौलभ्यावह इति भावः ॥" என்றெழுதியுள்ளார். பிரமன் சிவனிந்திரன் முதலானவர்களோடு ஸாம்யத்தை ப்ரமிப்பதற்குறுப்பான விஷ்ணுவவதாரம் முதலிய அவதாரங்களைச் செய்வதை விட மத்ஸ்யகூர்மாதி ஸஜாதீயமான அவதாரம் செய்வதுமேல்—என்பதாக இந்த ச்லோகத்தின் கருத்தைக் காட்டுகிறார். 88

इहावतीर्णस्य वनाद्रिनाथ ! ते निगूहतः स्वं महिमानमैश्वरम् ।
उमापतेः किं विजयः प्रियङ्करः प्रियङ्करा चेन्द्रजिदस्त्रबन्धना ॥८९॥

இஹாவதீர்ணஸ்ய வநாத்ரிநாத ! தே
நிகூஹத: ஸ்வம் மஹிமாநமைச்வரம்,
உமாபதே: கிம் விஜய: ப்ரியங்கர:
ப்ரியங்கரா வேந்த்ரஜிதஸ்த்ரபந்தநா. 89

* * * அவதாரங்களில் எம்பெருமானுக்கு அபகர்ஷம நினைக்கும்படியாகச் சில சரித்ரங்கள் இதிஹாஸ புராணங்களில் காணபதுண்டு. தன்னுடைய பெருமையைத் தானே மறைத்துக் காட்ட நினைத்த எம்பெருமானுடைய ஒரு விலக்ஷணஸங்கல்ப விசேஷத்தினுலேயான அந்த சரித்திரங்களைக் கொண்டு அந்யதாப்ரதிபத்தி கொள்ளலாகாதென்கிற தாத்பர்யத்தைத் திருவுள்ளத்திலே கொண்டு, எம்பெருமான் தன்னையே ஒரு கேள்வி கேட்பதாக அருளிச் செய்யப்படுகிறது இந்த ச்லோகம்.

ஹேவநாத்ரிநாத!—வாரீர் திருமாலிருஞ்சோலை மலைத்தலைவரே!

ஐச்வரம் ஸ்வம் மஹிமாநம் நிகூஹத: இஹ அவதீர்ணஸ்ய தே—ஸர்வேச்வரத்வ நிபந்தநமாய் ஸ்வதஸ்ஸித்தமான பெருமையை மறைத்துக்கொண்டு இந்த லீலா விபூதியில் அவதாரங்களைச் செய்தருளாநின்ற தேவரீருக்கு.

உமாபதே: விஜய: ப்ரியங்கர: கிம்? இந்த்ரஜிதஸ்த்ரபந்தநா ப்ரியங்கராவா?—பாணாஸுர யுத்தத்திலே சிவனைப் பங்கப்படுத்தின செயல் திருவுள்ளத்திற்கு உகப்பானதா? அல்லது, இந்திரஜித்தின் மாயாஸ்த்ரத்தாலே கட்டுண்டுகிடந்தது திருவுள்ளத்திற்கு உகப்பானதா? என்று கேட்பதாக ஸம்ஸ்க்ருத வ்யாக்யாதா பொருளெழுதியுள்ளார். 'உமாபதேர் விஜய:; என்பதற்கு 'உமாபதியான சிவனைத் தோற்பித்தது' என்று பொருள் கொள்வதிற்காட்டிலும் 'உமாபதியான சிவன் வெற்றிபெறும்படி செய்தது' என்று பொருள் கொள்வது சிறக்கும். * कर्तृकर्मणोः कृति * என்பது வ்யாகரண ஸூத்ரமாகையாலே உமாபதியை விஜயத்திற்குக் கர்த்தாவாகவும் கொள்ளலாம், கர்மமாகவும் கொள்ளலாம். கர்மமாகக் கொண்டு ஸம்ஸ்க்ருத வ்யாக்யாதா பொருள் பணித்தார். அப்போது எம்பெருமானுக்கு உத்கர்ஷம் விளங்கும். இது இவ்விடத்திற்கு ஸ்வரஸமன்று; "நிகூஹத: ஸ்வம் மஹிமாநமைச்வரம்" என்று எம்பெருமான் தனது மேன்மையை மறைத்துக்கொண்டு அவதாரம் செய்தருளின படியையன்றோ இங்கு ப்ரஸ்தாவித்தருளினர். அதற்குச் சேர்ந்திருக்கவேணுமே சொல்லப்படுகிற சரித்திரம். उमापतिकर्तृकको विजय एवात्र ग्रन्थकर्तुरभिमत इति प्रतिभाति ॥ எம்பெருமான் சிவபிரானிடத்திலே புத்ரவரம் கேட்பது முதலான அபதானங்களில் சிவனுக்கு வெற்றியும் தனக்குத் தோல்வியும் காண நிற்குமிறே. திருவாய்மொழியில் (2-2-10) * கள்வா வெம்மையு மேழுலகும், நின்னுள்ளே தோற்றிய இறைவவென்று, வெள்ளேறன் நான்முகனிந்திரன் வானவர், புள்ளூர்தி கழல் பணிந்தேத்துவரே * என்ற பாசுரத்தின் சுவைமிக்க பொருள் இங்கே அநுஸந்திக்கத் தகும். (அதாவது) தேவர்கள் எம்பெருமான் பக்கலிலே வந்து வரங்கொள்ளும் போது "நீர் எங்களிடத்திலே வந்து வரங் கேட்பதாகவுங்காட்டி எங்களைப் பெருமைப்படுத்த வேணும்" என்றும் வரம் கேட்பர்களாம்; எம்பெருமான் அதற்கிணங்கி 'ருக்மிணிப் பிராட்டிக்கு ஒரு பிள்ளை வேணும்' என்று சிவபிரானிடத்தே வரங் கேட்பனும்; அப்போது, "அந்தோ! தான் பராத்பரனுயிருக்கிற நிலைமையை மறைத்துக்கொண்டு இப்படி வரம் கேட்கிறானே, இது என்ன கள்வமோ!" என்றீடுபட்டுக் கள்வா! என்று விளிப்பர்களாம், அதை ஆழ்வாரெடுத்துக் காட்டுகிறார். இப்படிப்பட்ட கள்வச் செயல்களினால் உமாபதிக்கு மேன்மையையும் தனக்குத் தாழ்வையும் காட்டுவதுண்டே, அதுதான் இங்கு விவக்ஷிதமென்னப் பொருந்தும். ஸம்ஸ்க்ருத வ்யாக்

க்யாதா காட்டின பொருள் ஸர்வாத்மநா அஸங்கத மென்னப்போகாது; அதுவும் ஒருவாறு இணங்கக்கூடியதே.

"இந்த்ரஜிதஸ்த்ரபந்தநா" என்றவிடத்து அநுஸந்தேயமான கதை ஸ்ரீராமாயண யுத்த காண்டத்தில் நாற்பத்தைந்தாவது ஸர்க்கத்தில் காணத்தக்கது. 89

पुच्छोत्पुच्छनमूर्च्छनोद्धतिधुतव्यावर्तितावर्तवत्संवर्तार्णवनीरपूरविलुठत्पाठीनदिव्याकृतेः ।
सिंहाद्रीश ! न वैभवं तव कथं स्वालक्ष्यमालक्ष्यते पद्माक्षस्य जुगुक्षतोऽपि विभवं लक्ष्मीधराधोक्षज ! ॥९०॥

புச்சோத் புச்சந மூர்ச்ச நோத்ததிதுத வ்யாவர்த்தி தாவர்த்தவத்
ஸம்வர்த்தார்ணவ நீரபூரவிலுடத் பாடீந திவ்யாக்ருதேঃ,
ஸிம்ஹாத்ரீச ! ந வைபவம் தவ கதம் ஸ்வாலக்ஷ்யமாலக்ஷ்யதே
பத்மாக்ஷஸ்ய ஜுகுக்ஷதோபி விபவம் லக்ஷ்மீதராதோக்ஷஜ ! 90

* * * கீழ் ச்லோகத்தில், எம்பெருமான் விபவாவதாரங்களில் தன்னுடைய பெருமையை மறைத்துக் கொள்வதென்னும் விஷயம் ப்ரஸ்துதமாயிற்று; அவன் மறைத்துக் கொள்ள நினைத்தாலும் மறைக்க முடியாதென்கிறாரிதில். இது தொடங்கி மத்ஸ்யகூர்மாதி யவதாரங்களை அடைவே அநுபவித் தருளுகிறாராயிற்று. இதில் பூர்வார்த்தம் முழுவதும் ஸமஸ்தமான ஒரே பதம்; மத்ஸ்யாக்ருதியை அற்புதமாக வர்ணிக்கிறது.

ஹே ஸிம்ஹாத்ரீச !—வாரீர் திருமாலிருஞ்சோலை மலைத்தலைவரே! லக்ஷ்மீதர அதோக்ஷஜ!

புச்சோத் புச்சந மூர்ச்ச நோத்ததிதுத வ்யாவர்த்தி தாவர்த்தவத் ஸம்வர்த்தார்ணவ நீரபூரவிலுடத்பாடீந திவ்யாக்ருதேஸ்தவ—(மீனாயவதரித்தபோது) வாலை உயரத்தூக்குவது, குறுக்கே பரப்புவது ஆகிய இச்செயல்களினால் நடுக்கமுற்றதாகச் செய்யப்பட்டதும் சுழற்சியுடையதாகச் செய்யப்பட்டதுமான ப்ரளயார்ணவத்தின் நீர் வெள்ளத்தாலே புரளா நின்ற திவ்ய மத்ஸ்யாக்ருதியைக் கொண்ட தேவரீருடைய. ['ஆவர்த்தவத்' என்றது, 'நீர்ச்சுழிகளையுடைய' என்றபடி. இது ஸ்வாபாவிக விசேஷணம்.] எம்பெருமான் மீனுருவங் கொண்டது ஸாமான்யமான மீனுருவமன்று; வாலை உயரத் தூக்கும் போதும் குறுக்கே பரப்பும்போதும் ப்ரளயார்ணவமே நிலை கலங்கும்படியாயிற்று. இப்படிப்பட்ட அப்ராக்ருத அதிவிலக்ஷண மத்ஸ்ய விக்ரஹத்தைக் கொண்ட தேவரீருடைய.

ஸ்வாலக்ஷ்யம் வைபவம் கதம் நாலக்ஷ்யதே—நன்கு காணக்கூடிய வைபவம் எங்ஙனே காண முடியாமற் போகும்?

விபவம் ஜுகுக்ஷதோபி பத்மாக்ஷஸ்ய தவ என்று கீழோடே அந்வயம். தேவரீருடைய பெருமையை மறைத்துக்கொள்ளவேணு மென்று தேவரீர் விரும்பின போதிலும் என்பது தாற்பரியம். गूहितुमिच्छन् - जुगुक्षन् ; तस्य—जुगुक्षतः । இங்கு (பத்மாக்ஷஸ்ய) என்றது ஸாபிப்ராயம்; செந்தாமரைக் கண்ணரான தேவரீர் அவதாரத்தில் அக்கண்ணழகை மறைத்துக்கொள்ள முடியுமாகில் மற்றுள்ள பெருமைகளையும் மறைத்துக் கொள்ள முடியும் என்று காட்டினபடி. * பீஷ்ம த்ரோணா வதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந! கிமர்த்தம்......புக்தம் வ்ருஷல போஜநம் * என்று அதிக்ஷேபிக்கவந்த துரியோதநனும் "கிமர்த்தம் புண்டரீகாக்ஷ" என்று பரவசமாகச் சொல்லும்படியாயிற்றே. 90

...

साचलावटतटाकदीर्घिकाजाह्नवीजलविवर्धितः क्षये ।
शृङ्गसङ्गमितनौर्मनोरमूरग्रतोऽण्डजवपुर्हि सुन्दर ! ॥९१॥

ஸாசலாவட தடாக தீர்க்கிகா ஜாஹ்நவீ ஜலவிவர்த்திதஃ க்ஷயே,
ச்ருங்கஸங்கமித நௌர் மநோரமஃ அண்டஜ வபுர் ஹி ஸௌந்தர! 91

* * * மத்ஸ்யாவதார சரித்ரவிஸ்தரம் சுருங்க அநுபவிக்கப்படுகிறது இந்த ச்லோகத்தில். க்ருதமாலா நதியின் கரையில் எம்பெருமானை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருந்த ஸத்யவ்ரத ரென்னுமோர் ராஜர்ஷி ஜலபானம் பண்ணிக்கொண்டு பிழைத்திருந்தார். அவர் ஜல தர்ப்பணஞ் செய்கையில் அவரது இரண்டு கைகளுக்குள் ஒரு சிறிய மீன் அகப்பட்டுக்கொண்டது. அதனை அவர் பூமியிலுள்ளதொரு பள்ளத்தில் விட்டார்; அம்மீன் அதிலடங்காத வுருவமெடுத்தது கண்டு அதையெடுத்து ஒரு குளத்தில் விட்டார்; அதிலுமடங்காத வுருவமுண்டானது கண்டு அம்மீனை பெரியதோர் நடை வாவியில விட்டார்; அதிலு மடங்காத வடிவுகொண்டது கண்டு கங்கையில் விட்டார்; அதிலு மடங்காத பேருருவங்கொண்டது கண்டு கடலில் விட்டார். அப்பால் அந்த ஸத்யவ்ரதர் அம்மீனிடத்துப் பெருமயல் கொண்டு அதனை நோக்கி 'ஓமத்ஸ்ய ராஜனே! உனது வரலாற்றைத் தெரிந்துகொள்ள மிகவு மாவலுடையேன்; நூறு யோஜனை நீளமும் அதற்குத்தக்க பருமனும் வாய்ந்துள்ள நீ யார்? உனது தத்துவத்தை வெளியிடவேணும' என்று கைகூப்பிப் பிரார்த்திக்க, அந்த மத்ஸ்யராஜன் "ஓ மஹாநுபாவரே! இன்று முதல் ஏழு நாட்களுக்குள் இம்மூவுலகங்களும் மூழ்கிவிடப் போகின்றன; அந்தப் பெருநீரில் ஒரு விசாலமான ஓடம் வரப்போகிறது; அந்தப்படகில் ஸப்தர்ஷிகளும் நீரும் எல்லா வோஷதிகளும ஸமஸ்தப்ராணிகளும் ஏறி மனத்திற்கு வருத்தமொன்றுமின்றி உலாவக்கடவீர்கள்; அப்படி ஸஞ்சரித்துக்கொண்டிருக்குமளவில் ஒரு பெருங்காற்று வீசப்போகிறது; அதனால் அந்த ஓடமானது பெருநீரில் அலையப் போகின்றது; அப்பொழுது எனது சிரஸ்ஸில முளைத்துள்ள பெரியதொரு கொம்பில் பெரிதான வொரு ஸர்பபத்தினால் அந்த வோடத்தைக் கட்டி விடும். பிறகு நான் அந்தப் படகுடன் உம்மையும் எல்லாப்பிராணிகளையும ரிஷிகளையும் சுமந்துகொண்டு அந்தப் பேரிருள் நீங்கும் வரையில் கடலில் ஸஞ்சரிக்கப் போகின்றேன். அப்போது எனது பெருமையை நீர் உணர்வீர்" என்று உரைத்துவிட்டு மறைந்திடவே, ஆச்சரிய மடைந்த அந்த ஸத்யவ்ரதர் பகவானாலே குறிக்கப்பட்ட அக்காலத்தை எதிர் பார்த்திருக்கையில், ஸப்த மேகங்களினுடைய ஆரவாரத்தால் கடல் கிளரத் தொடங்கிற்று. பகவான் குறித்த தினத்தில் ஒரு பெரியவோடம அக்கடலில் வரக்கண்டு மகிழ்ந்து எல்லாக் கொடி செடி பீஜங்களையும் அந்தப் படகிலேற்றித் தாமும் ஏறினார். ஏறி, ஸப்தர்ஷிகளும் தாமுமாய்ப் பகவானைச் சிந்தனை செய்துகொண்டிருக்கையில், பெரிய கொம்புள்ள மத்ஸ்ய ரூபங்கொண்ட பகவான் காணப்பட்டார். லக்ஷம் யோஜனை நீளமும் பதினாயிரம் யோஜனை பருமனும் ஒற்றைக் கொம்பும் ஸுவர்ண வர்ணமும் ஸகலலோக மநோஹரரூபமும் வாய்ந்தவராகக் காணப்பட்டார். உடனே அந்த ஸத்ய வ்ரதர் ஒரு பெரிய நாகத்தைக்கொண்டு அந்த மத்ஸ்ய பகவானது கொம்பிலே அப்படகைக் கட்டிவிட, அப்பெருமான் அதைவஹித்துக் கொண்டு அண்டகடாஹத்தளவும் செல்லத துள்ளி விளையாடி, முன்பு அசுரர்கவர்ந்து சென்ற வேதங்களையும் மீட்டுக் கொணர்ந்தருளி ஆக இவ்வண்ணம் பிரளயாபத்தில நின்றும் ப்ரஜைகளைக் காத்தருளியதும் வேதங்களை உபகரித்தருளினதும் மத்ஸ்யாவதார சரிதமாகும். இதுதன்னை இந்த ச்லோகத்தாலும் அடுத்த ச்லோகத்தாலும் சுருங்க அநுஸந்திக்கிறாராயிற்று.

ஹேஸௌந்தர!—வாரீர் அழகரே; க்ஷயே—ப்ரளய காலத்திலே.

அண்டஜவபுஸ் ஸந்—மத்ஸ்யத் திருமேனியையுடையீராய்க் கொண்டு.

ஸாசலாவட தடாக தீர்க்கிகாஜாஹ்நவீஜலவிவர்த்திதஃ— * பூர்ப் பூமி ரசலாநந்தா * என்கிற அமர கோசத்தின் படியே (அசலா) என்பது பூமிக்கு வாசகம். அவட மென்பது

பள்ளம். தடாகமென்பது ஏரி. தீர்க்கிகா—நடைவாவி. ஜாஹ்நவீ—கங்கை. இவற்றி னுடைய தீர்த்தத்தினுல் வளரச் செய்யப்பட்டவராய் என்றபடி. முதலில் பூமியிலே விட, பிறகு பள்ளத்திலே விட, முடிவாகக் கடலிலே விட்டதாகக் கதையிருப்பதனுலே இங்கு जाह्नवीजलधि वर्धित :— ஜாஹ்நவீ ஜலதி வர்த்திதः" என்று பாடமிருந்திருக்கு மென்றும், அப்பாடம் (ஜலவிவர்த்திதः) என்று திரிந்திருக்கு மென்றும் தோன்று கிறது. நிஷ்கர்ஷிப்பதில பெரியார் ப்ரமாணம். (ஸாசலாவட) என்றவிடத்து, अचलाया अवट: —अचलावट:, तेन सहिता: तटाकादय:....என்று கொள்ளலாம்.

மநோः அக்ரதः ச்ருங்கஸங்கமித நௌः அபூः—கீழ் விவரித்த வரலாற்றில் ஸத்யவ்ரதரென்னப் பட்டவர்தாம் இங்கு மநு வெனப்படுகிருர். அவருடைய முன்னிலையில் தன் சிரஸ்ஸிலே தோன்றிய கொம்பிலே கட்டப்பட்ட படகையுடையீரானீர் என்றபடி. ஸ்ரீரங்க ராஜஸ்தவ உத்தரசதகத்திலுள்ள * மீநதநுஸ் த்வம் நாவி நிதாய ஸ்திரசரபரிகரம் அநுமநு பகவந் * இத்யாதி மத்ஸ்யாவதார ச்லோகமும் இங்கே அநுஸந்தேயம். 91

प्रलयजनीरपूरपरिपूरितस्वनिलयावसन्नवदनभ्रमदशरण्यभूतशरणार्थिनाकिशरणं भवन् स्वकृपया ।
चलदुदधीरिताम्बुकलुषीक्रियाढ्यगमनस्वपृष्ठविधृताचलकुल एष मीनतनुरत्र सुन्दरभुजो वनाद्रिनिलय: ॥९२॥

ப்ரலயஜ நீரபூர பரிபூரிதஸ்வ நிலயாவஸந்நவதந
ப்ரமதசரண்யபூத சரணார்த்தி நாகி சரணம் பவந் ஸ்வக்ருபயா,
சலதுத தீரிதாம்பு கலுஷீக்ரியாட்ய கமநஸ்வப்ருஷ்ட வித்ருதா
சலகுல ஏஷ மீநதநுரத்ர ஸுந்தரபுஜோ வநாத்ரி நிலயः. 92

*** இந்த ச்லோகமும் மத்ஸ்யாவதார வர்ணநபரம்; முந்தின ச்லோகத்திற்கு சேஷபூதமானது. பெரிய திருமொழியில் பதினேராம் பத்தில் தசாவதார வர்ணநபரமான * நிலையிடமெங்குமின்றி * என்ற திருமொழியில் முதற் பாசுரம் மத்ஸ்யாவதார பரம். அப்பாசுரமும இந்த ச்லோகமும பொருளொற்றுமையோடு கூடினவளவே யல்லாமல் வ்ருத்தபங்கியும ஓரேவகையி லமைந்ததென் றுணர்க. இந்த ச்லோகம் பாதந்தோறும இருபத்து மூனறெழுத்துக் கொண்டது; அந்தப் பாசுரமும அடிதோறும் ஒற்றொழித்து இருபதது மூன்றெழுத்துக் கொண்டது. அப்பாசுரம் வருமாறு :—

நிலையிட மெங்குமின்றி நெடுவெள்ள மும்பர் வளநாடுமூட விமையோர் *
தலையிட மற்றெமக்கோர் சரணில்லையென்ன அரணாவனென்னுமருளால் *
அலைகடல் நீர்குழம்ப வகடாடவோடி அகல்வானுரிஞ்ச முதுகில் *
மலைகளை மீதுகொண்டு வருமீனைமாலை மறவாதிறைஞ்செனமனனே.

ஸ்வ க்ருபயா— தன்னுடைய இயற்கையின்னருளாலே.

ப்ரலயஜ நீரபூர பரிபூரித ஸ்வநிலயாவஸந்ந வதந ப்ரமத் அசரண்யபூத சரணார்த்திநாகி சரணம் பவந்—பிரளயத்திலுண்டான பெருவெள்ளத்தினுலே நிரபபப்பட்ட தம்தம் இருப்பிடங்களையுடையவர்களாய், அதனுலே மிகவருந்தின முகத்தை யுடையவர்களாய், தடுமாறினவர்களாய், நாதனற்றவர்களாய், புகலிடம் விரும்புமவர்களான தேவர்களுக்குத் தஞ்சமாய்க்கொண்டு. பரிபூரிதஸ்வநிலய, அவஸந்நவதந, ப்ரமத், அசரண்யபூத, சரணார்த்தி—என்கிற ஐந்தும் நாகிகளுக்கு விசேஷணங்களாகையாலே பஹுபத் கர்மதாரயம.

சலதுதீரிதாம்பு கலுஷீக்ரியாட்யகமஃஸ்வப்ருஷ்ட வித்ருதாசலகுல:—இதுவரையில் ஸமஸ்தமான ஒருபதமாகக் கொள்ளவுமாம்; இடையில்.. கலுஷீக்ரியாட்யகமஃ என்று விஸர்க்காந்தமாக்கி அதை ஒருபதமாகவும் மேலுள்ளதை ஒரு பதமாகவும் கொள்ளவுமாம். பொருளிலும் கருத்திலும் வாசியில்லை. முன்னமெடுத்துக்காட்டிய பெரிய திருமொழிப் பாசுரத்தில் * அலைகடல் நீர் குழம்ப அகடாடவோடியகல்வானுரிஞ்ச * என்றதற்கான கருத்தை "சலதுத தீரிதாம்பு கலுஷீ க்ரியாட்ய கமஃ" என்றதனாலே யருளிச்செய்தார். * முதுகில் மலைகளை மீதுகொண்டுவருமீன மாலே * என்றதற்கான கருத்தை "ஸ்வப்ருஷ்ட வித்ருதாசல குல ஏஷ மீநதநுஃ" என்றதனாலே யருளிச்செய்தார். கொந்தளிக்கின்ற கடல்நீர் வெள்ளத்தை யெல்லாம் கலக்கிக்கொண்டு அதனுள்ளே ஸஞ்சரிப்பவரும்,முதுகிலே மலைத்திரள்களைத் தாங்கிக்கொண்டிருந்தவருமான மத்ஸ்யாவதாரப் பெருமாள்.

அத்ர ஸுந்தரபுஜோ வநாத்ரி நிலயஃ—இங்குத் திருமாலிருஞ்சோலை மலையுறையும் சுந்தரத்தோளராகக் காட்சி தருகின்றாரென்கை. 92

स्वपृष्ठे प्रष्ठाद्रिभ्रमणकरणैः किञ्च फणिनः विकृष्टिव्याकृष्टिव्यतिविधुतदुग्धाब्धिचलितैः ।
अविष्पन्दो नन्दन् विकसदरविन्देक्षणरुचिः पुराऽभूस्सिंहाद्रेः प्रियतम ! हरे ! कच्छपवपुः ॥९३॥

ஸ்வப்ருஷ்டே ப்ரஷ்டாத்ரி ப்ரமண கரணைஃ கிஞ்ச பணிநஃ
விக்ருஷ்டி வ்யாக்ருஷ்டி வ்யதிவிதுத துக்தாப்தி சலிதைஃ,
அவிஷ்பந்தோ நந்தந் விகஸதரவிந்தேக்ஷண ருசிஃ
புராபூஸ் ஸிம்ஹாத்ரேஃ ப்ரியதம ஹரே! கச்சப வபுஃ 93

* * * கூர்மாவதார வைபவத்தை யநுபவித்தருளிச் செய்கிறாரிந்த ச்லோகத்தினால்.

ஹே ஸிம்ஹாத்ரேஃ ப்ரியதம ஹரே!—வாரீர் திருமாலிருஞ்சோலைமலைக் கன்பரான அழகரே;

புரா—பண்டொரு காலத்திலே; தேவர்களுக்கு அமுதமளிக்கக் கடல் கடைய நேர்ந்த காலத்திலே யென்றபடி.

ஸ்வப்ருஷ்டே ப்ரஷ்டாத்ரி ப்ரமண கரணைஃ—தன்னுடைய முதுகின்மீது முந்துற முன்னம் வந்து நின்ற மந்தரமலையைச் சுழற்றியதனாலும். * प्रष्ठोऽग्रगामिनि * என்பது வியாகரண ஸூத்ரம். ச்ரேஷ்டமென்று பொருள் தேறும். ப்ரஷ்டாத்ரி யென்றது சிறந்த மலையென்றபடியாய் மந்தரமலையைச் சொல்லிற்றாகும்.

கிஞ்ச பணிநஃ விக்ருஷ்டி வ்யாக்ருஷ்டி வ்யதிவிதுத துக்தாப்திசலிதை:—மந்தரமலையை மத்தாக நாட்டிச் சுழற்றினவளவன்றிக்கே, வாசுகி நாகத்தைக் கடைகயிறாகப் பூட்டி இடம் வலங்கொள்ள இழுப்பதனாலே மிகவும் அசைதலுற்ற திருப்பாற்கடலின் அசைவினாலும்.

அவிஷ்பந்தஃ—தான் சிறிதும் அசைதலற்று.

நந்தந்—ஆச்ரிதர்களான தேவர்களின் காரியம் தலைக்கட்டப்பெறுகிறதென்று திருவுள்ளமுவந்து.

விகஸதரவிந்தேக்ஷண ருசிஃ—அப்போதலர்ந்த செந்தாமரை போன்ற திருக்கண்ணழகையுடைய.

கச்சபவபுஃ அபூஃ—ஆமைவடிவையுடையீரானீர். தம்முடலைப் பேணுமல் ப்ரணதஜந மநோரத பரிபூரணத்தையே விரதமாகக்கொண்டவரென்கிற குணாதிசயம் அநுபவிக்கப்பட்டதாயிற்று. 93

जगत्प्रलीनं पुनरुद्दिधीर्षतस्सिंहक्षितिक्षिन्निलयस्य ! सुन्दर ! ।
पुरा वराहस्य तवेयमुर्वरा दंष्ट्राह्वयेन्दोः किल लक्ष्म लक्षिता ॥९४॥

ஜகத் ப்ரலீநம் புநருத்திதீர்ஷதஃ
ஸிம்ஹ க்ஷிதிக்ஷிந் நிலயஸ்த ஸுந்தர,
புரா வராஹஸ்ய தவேய முர்வரா
தம்ஷ்ட்ராஹ்வயேந்தோஃ கில லக்ஷ்ம லக்ஷிதா. 94

* * * திவ்ய வராஹ மூர்த்தியை யநுபவிக்கிருர் இந்த ச்லோகத்தில். கோல வராஹத் திருமேனியின் பெருமையைப் பேசுபவர்கள் யாவரும் ஓரோ சமத்கார வகையிலே பேசுவதுண்டு. திருமங்கையாழ்வார் * खुरमध्यगतो यस्य मेरुः कणकणायते * என்ற ப்ரமாணத்தை யடியொற்றி * சிலம்பினிடைச் சிறுபரல் போல் பெரியமேரு திருக்குளம்பில் கணகணப்பத் திருவாகாரம் குலுங்க, நிலமடந்தைதனை யிடந்து புல்கிக் கோட்டிடை வைத்தருளிய வெங்கோமான் * என்றருளிச்செய்தார். பின்னையும், * நீதறு திங்கள் பொங்கு சுடரும்பரும்பருல கேழினேடு முடனே, மாதிர மண் சுமந்த வட குன்று நின்ற மலையாறு மேழுகடலும், பாதமர் சூழ்குளம்பின் அக மண்டலத்தி னொருபாலொடுங்க வளர்சேர், ஆதிமுனேனமாகி யரணுயமூர்த்தியது* என்று மருளிச்செய்தார். *वरद हन्त कथं प्रभूतं वाराहमास्थितवतो वपुरद्भुतं ते *என்று கேள்வி கேட்டார் வேதாந்த தேசிகர். இங்கு ஆழ்வானுடைய விலக்ஷணமான உல்லேகம் காணீர்.

ஸிம்ஹ க்ஷிதிக்ஷிந் நிலயஸ்த ஸுந்தர—ஸிம்ஹாத்ரியான திருமாலிருஞ்சோலைமலையிலெழுந்தருளி யிராநின்ற அழகரே! (க்ஷிதிக்ஷித்—பர்வதம்.)

புரா ப்ரலீநம் ஜகத் புநருத்திதீர்ஷதஃ வராஹஸ்ய தவ—பண்டொருகால் ப்ரலயார்ணவமக்னமான ஜகத்தைப் புநருத்தாரம் செய்ய நினைத்தருளின வராஹ ரூபியான தேவரீருடைய.

தம்ஷ்ட்ராஹ்வய இந்தோ :—கோரப் பற்களென்னும் சந்திரனுக்கு.

இயம் உர்வரா லக்ஷ்ம கில லக்ஷிதா—ஸஸ்யங்கள் நிறைந்த இந்தப் பூமியானது ஒரு களங்கமாகவன்றே காணப்பட்டது. பூமண்டலம் முழுதும் கோரப்பல்லிலே ஏகதேசமாகக் காணப்பட்டதென்ருல் அந்த வராஹ மூர்த்தியின் வைபுல்யம் அளவிட முடியாதென்கை 94

न वायुः पस्पन्दे ययतुरथवाऽस्तं शशिरवी दिशोऽनश्यन् विश्वाऽप्यचलदचला साचलकुला ।
नभश्च प्रच्योति क्वथितमपि पाथो नरहरौ त्वयि स्तम्भे शुम्भद्वपुषि सति हे सुन्दरभुज ! ॥९५॥

நவாயுஃ பஸ்பந்தே யயது ரதவாஸ்தம் சசிரவீ
திசோநச்யந் விச்வாப்யசலதசலா ஸாசலகுலா,
நபச் ச ப்ரச்யோதி க்வதிதமபி பாதோ நரஹரௌ
த்வயி ஸ்தம்பே சும்பத்வபுஷி ஸதி ஹே ஸுந்தரபுஜ! 95

* * * இது முதல் மூன்று ச்லோகங்களினுல் நரஸிம்ஹாவதாரத்தை யநுபவித்துப் பேசுகிருர். * அங்கண் ஞாலமஞ்ச அங்கோராளரியாய் * என்கிறபடியே, நரசிங்க

வுருக்கொண்டு தோன்றியபோது உலகமெல்லாம் நடுங்கும்படியிருந்ததனால், அப்போது காற்று அசையவில்லை, சந்திர ஸூர்யர்கள் உதிக்கவில்லை; திசைகள் தென்படவில்லை, பர்வதஸமூஹங்களோடு கூடிய ஸமஸ்த பூமண்டலமும் ஆடியசைந்தது; ஆகாசமும் விகாரப்பட்டது; கடல் நீரும் கொதிப்படைந்தது! இப்படியாக அந்த நிலைமையை என் சொல்லுவோமென்கிறார்.

ஹே ஸுந்தரபுஜ!—வாரீர் சுந்தரத் தோளுடைய அழகரே!

த்வயி நரஹரௌ ஸ்தம்பே சும்பத்வபுஷி ஸதி—தேவரீர் நரசிங்க வுருவினராய்க்கொண்டு ஹிரண்யாஸுர க்ருஹ ஸ்தம்பத்தில் ப்ரகாசித்த வடிவையுடையரானவளவில்—ப்ராதுர்ப்பவித்தருளினவளவில்.

வாயுஃ ந பஸ்பந்தே—* भीषाऽस्माद्वात: पवते * என்கிறபடியே தேவரீருடைய திவ்யாஜ்ஞைக்குக் கட்டுப்பட்டு ஸதாகதியாயிருக்கக்கடவனான வாயுவுங்கூட அசைந்திலன்.

அதவா சசிரவீ அஸ்தம் யயதுஃ—அதற்குமேல் சந்திரஸூரியர்களும் அஸ்தமித்தே கிடந்தார்கள், உதிக்கப்பெற்றிலர்.

திசஃ அகச்யந்—கிழக்கு முதலிய திசைகளும் தெரியாதொழிந்தன.

ஸாசலகுலா விச்வாபி அசலா அசலத்—பர்வத ஸமூஹங்களோடு கூடிய நிலவுலகம் முழுவதும் ஆடல் கொடுத்தது.

நபச்ச ப்ரச்ச்யோதி—ஆகாசமும் சரிந்து கடலில் ஆழ்ந்தது என்று அதிசயோக்தியிருக்கிறபடி.

பாதஃ அபி க்வதிதம்—கடல் நீரும் கொதிப்படைந்ததாயிற்று. 95

अरालं पातालं त्रिदशनिलय: प्रापितलयो धरित्री निर्धूता ययुरपि दिश: कामपि दिशम् ।
अजृम्भिष्टाम्भोधिर्घुमुघुमिति घूर्णन् सुररिपो: विभिन्दाने वक्षस्त्वयि नरहरौ सुन्दरभुज ! ॥९६॥

அராலம் பாதாலம் த்ரிதசநிலயஃ ப்ராபிதலயஃ
தரித்ரீ நிர்த்தூதா யயுரபி திசஃ காமபி திசம்,
அஜ்ரும்பிஷ்டாம்போதிஃ குமுகுமிதி கூர்ணந் ஸுரரிபோஃ
விபிந்தாநே வக்ஷஸ் த்வயி நரஹரௌ ஸுந்தரபுஜ! 96

*** கீழ்ச்லோகத்தில், நரஹரியாய்த் தூணில் நின்று தோன்றினபோது உண்டான ஸம்பவம் சொல்லிற்று. இதில் இரணியனுடலைப் பிளந்தபோது உண்டான ஸம்பவம் சொல்லுகிறது.

ஹேஸுந்தரபுஜ! த்வயி நரஹரௌ ஸுரரிபோஃ வக்ஷஃ விபிந்தாநே ஸதி—வாரீர் சுந்தரத் தோளுடைய அழகரே! தேவரீர் நரஸிம்ஹ மூர்த்தியாகி ஹிரண்யாஸுரனுடைய மார்பைத் திருவுகிரால் கீண்டருளினவளவில்.

பாதாலம் அராலம்—பாதாளலோகமானது தலைதடுமாறுயிற்று.

த்ரிதச நிலயஃ ப்ராபிதலயஃ—தேவர்களின் குடியிருப்பான ஸ்வர்க்கலோகமும் லயமடைந்ததாயிற்று. சுவர்க்கமிருக்குமிடமே தெரியவில்லையென்றபடி.

தரித்ரீ நிர்த்தூதா—பூமியானது மிகவும் கம்பமடைந்தது.

திசஃ அபி காமபி திசம் யயுஃ—திக்குக்களும் ஏதோவொரு திக்கையடைந்தன—திசைகளும் மறைந்தனவென்றபடி.

அம்போதி: குமுகுமிதி கூர்ணங் அஜ்ரும்பிஷ்ட—கடலும் குமுகுமு வென்கிறவோசை யோடே சுழன்று கொந்தளித்தது. ஆக இவ்வளவு பயங்கரமான நிலைமையாயிற் றென்கை. 96

नखक्रकचकप्रथिक्रथितदैत्यवक्षःस्थलीसमुत्थरुधिरच्छटाच्छुरितबिम्बितं स्वं वपुः ।

विलोक्य रुषितः पुनः प्रतिमृगेन्द्रशङ्कावशाद्य एष नरकेसरी स इह दृश्यते सुन्दरः ॥९७॥

நகக்ரகசகப்ரதிக்ரதிததைத்ய வக்ஷஸ்ஸ்தலீ—
ஸமுத்தருதிரச்சடாச்சுரிதபிம்பிதம் ஸ்வம் வபுः,
விலோக்ய ருஷிதः புநः ப்ரதிம்ருகேந்த்ர சங்காவசாத்
ய ஏஷ நரகேஸரீ ஸ இஹ த்ருச்யதே ஸுந்தரः. 97

* * * நரஸிம்ஹாவதார காலத்தில் இரணியன் பரமபக்தமணியான ப்ரஹ்லாதாழ்வானுக்குப் பலவகையான த்ரோஹங்களைச் செய்தானென்று உண்டான சீற்றம் படுத்தினபாடு கீழிரண்டு ச்லோகங்களில், அருளிச் செய்யப்பட்டது. மற்றொரு சீற்றமு முண்டாயிற்றென்கிறார் இந்த ச்லோகத்தில். பேயாழ்வார் * பார்த்தகடுவன் சுனை நீர் நிழல் கண்டு, பேர்த்தோர் கடுவனெனப் பேர்ந்து * என்றருளிச்செய்த கணக்கிலே. ம்ருகங்கள் நீரிலே ப்ரதிபிம்பங் கண்டு சீறுவதென்று ஒன்றுண்டு; அதுதன்னைச் சொல்லுகிறார்.

யः நரகேஸரீ—யாவரொரு அழகிய சிங்கர்.

நக க்ரகசகப்ரதிக்ரதித தைத்யவக்ஷஸ்ஸ்தலீஸமுத்த ருதிரச்சடாச்சுரித பிம்பிதம் ஸ்வம் வபுः விலோக்ய—திருநகங்களாகிற ரம்பங்களின் நுதியாலே பிளக்கப்பட்ட இரணியனது மார்வகலத்தில் நின்றும் கிளர்ந்த உதிர வெள்ளத்திலே தோன்றின ப்ரதிபிம்ப ரூபமான தம்முடைய திருமேனியைத் தாமே பார்த்து.

ப்ரதி ம்ருகேந்த்ரசங்காவசாத் புநः ருஷிதः—தமக்கு எதிராகத் தோன்றிய மற்றொரு சிங்க மோவிது! என்கிற சங்கையினால் முன்னிலு மதிகமாகச் சீற்ற முற்றனரோ;

ஏஷः இஹ ஸுந்தரः த்ருச்யதே—அவர்தாமே இத்திருமலையிலே அழகராக ஸேவை ஸாதிக்கின்றாரென்று தர்மியின் ஐக்யம் அநுஸந்திக்கப் பட்டதாயிற்று. ஸ்வப்ரதிபிம்பத்தைக் கண்டு சீற்றமுற்றதாகச் சொன்னவிதனால் ஸிம்ஹ ஜாதியின் மெய்ப்பாடு சொல்லிற்றாயிற்று. 97

क्षितिरियं जनिसंहृतिपालनैः निगिरणोद्गिरणोद्धरणैरपि ।

वनगिरीश ! तवैव सती कथं वरद ! वामन ! भिक्षणमर्हति ॥९८॥

க்ஷிதிரியம் ஜநிஸம்ஹ்ருதிபாலநை: நிகிரணோத்கிரணோத்தரணைரபி,
வநகிரீச! தவைவ ஸதீ கதம் வரத! வாமந! பிக்ஷணமர்ஹதி. 98

* * * வாமநாவதாரத்திலீடுபட்டுப் பேசுகிற ச்லோகமிது. நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் எம்பெருமானை மடிபிடித்து ஒரு கேள்விகேட்டார்—*சீரால் பிறந்து சிறப்பால் வளராது, பேர் வாமனாகாக்கால் பேராளா!—மார்பாரப் புல்கி நீ யுண்டு மிழ்ந்த பூமி நீரேற் பரிதே, சொல்லு நீ யாமறியச் சூழ்ந்து * என்றார்; அப்பாசுரத்தைத் தழுவியே இந்த ச்லோகமவதரிக்கின்றது.

வநகிரீச வரத வாமந இயம் க்ஷிதிः ஜநிஸம்ஹ்ருதிபாலநைः நிகிரண உத்கிரண உத்தரணைரபி தவைவ ஸதீ கதம் பிக்ஷணமர்ஹதி?—திருமாலிருஞ் சோலைக்குத் தலைவனான வரந்தரும் வாமன மூர்த்தியே! இப் பூமண்டலம் முழுவதும் படைத்தல் துடைத்தல் காத்தல்

உண்டு உமிழ்தல் இடந்தெடுத்தல் முதலான செயல்களினுல் ஸர்வாத்மநா உனக்கே யன்றோ வச்யமாயிரா நின்றது; இதனை ஒரு பையல் பக்கல் பிக்ஷுவாய்ச் சென்று யாசித்துப் பெற்றதென்கொல்? என்று கேட்கிறார். சதுர்முகமுகேக ஸ்ருஷ்டித்தும் ஸ்வேந ரூபேண ரக்ஷித்தும் போருகிற ப்ரகாரங்களாலே உனக்கே ஸ்வம்மான இந்த த்ரைலோக்யத்தை ஒரு பையல் தன்னதாக அபிமாநித்திருந்தானுகில் அவனை நேர் கொடு நேரே தண்டித்து வாங்கலாமாயிருக்க அது செய்யாதே யாசகனுய்ச் சென்று பல் பன்னிரண்டுங் காட்டி இரந்துதானே பெறவேணும்? பெறுதற்கு வேறு உபாய மறிந்திலேயோ? என்று கேள்வியை விரித்துக்கொள்க. வரத! என்கிற ஸம்போதநம் ஸாபிப்ராயம்; வரந்தரும் பெருமாளென்று விருது வஹித்து அலம்புரிந்த நெடுந் தடக்கையனுயிருந்து வைத்து பிக்ஷுகனுகலாமோ வென்றவாறு. மஹாபலியான வன் ஒளதார்ய மென்றொரு தர்மாபாஸத்தை என்றுகொண்டிருந்தானுகையாலே அதற்குத் தக்கவாறு யாசக வேஷங்கொண்டு சென்று காரியம் பார்த்தது ஸதுபாயஜ் ஞத்வத்தில் சேர்ந்ததென்று ஸமாதானம் கண்டுகொள்வது. இது, ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தரசதகத்தில் * தைத்யௌதார்யேந்த்ர யாச்ஞாவிஹதிமபநயந் * என்கிற ச்லோகத் தில் காணத்தக்கது.

முதல் பாதத்தில், ஜந்மவாசகமான ஜநிசப்தம் உபசாராத் ஸ்ருஷ்டிக்கு வாசக மாகக் கொள்ளக்கடவது.

... ... 98

भार्गवः किल भवन् भवान्पुरा कुन्दसुन्दरवनाचलेश्वर ! ।
अर्जुनस्य बलदर्पितस्य तु च्छेत्स्यति स्मरति बाहुकाननम् ॥९९॥

பார்க்கவஃ கில பவந் பவாந் புரா குந்தஸுந்தரவநாசலேச்வர,
அர்ஜுநஸ்ய பலதர்ப்பிதஸ்ய து ச்சேத்ஸ்யதி ஸ்மரதி பாஹுகாநநம்.

* * * இந்த ச்லோகத்தினுல் பரசுராமாவதாரத்தை யநுபவிக்கிறார். ஸ்ரீமஹா விஷ்ணு பரசுராமனுய்த் திருவவதரித்து உலகில் க்ஷத்ரியப் பூண்டே இல்லையாம்படி செய்த செயல் அறியத்தக்கது. உலகத்தில் எவரும் அழிப்பவரில்லாமையால் கொழுத் துத் திரிந்து கொடுமை யியற்றிவந்த க்ஷத்ரியர்களின் குலத்தை நாசஞ் செய்வதற்காக ஜமதக்நி முனிவருடைய மனைவியான ரேணுகையிடம் இராமனுய்த் திருவவதரித்து, பரசு என்னுங் கோடாலிப்படையை ஆயுதமாகக் கொண்டு அதனுல் பரசுராமனென்ன வழங்கப்பட்டுவந்தான். ஒருநாள் கார்த்தவீர்யார்ஜுநனும் அவனது குமாரர்களும் ஜமதக்நியின் ஆச்ரமத்தில் இளைப்பாறப் புகுந்த காலத்து அங்கே அம முனிவனுடைய ஹோமதேநுவானது வேண்டின வஸ்துக்களை யெல்லாம் யதேஷ்டமாக அளித்துக் கொண்டிருப்பதைக் கண்ட இவர்கள் அப் பசுவைக் கொள்ளைகொள்ள விரும்பி அதனைக் கவர்ந்து அம்முனிவனையுங் கொன்றிட்டது காரணமாக (பரசுராமன்) அக் கார்த்தவீர் யார்ஜுனனையும் அவனது குமாரர்களையுங் கொன்று, அதனுலேயே க்ஷத்ரிய வம்சம் முழுவதன் மேலேயும் கோபாவேசங் கொண்டு உலகத்திலுள்ள அரசர்கள் பலரையும் இருபத்தொரு தலைமுறை பொருது அழித்திட்டான் என்பது இதிஹாஸம். * தெழித் திட்டெழுந்தே யெதிர்நின்ற மன்னன் சினத் தோளவையாயிரமும் மழுவால் அழித் திட்டவன் * என்றும் * அடல்புரை யெழில் திகழ் திரடோள் ஆயிரந் துணிய அடல் மழுப்பற்றி மற்றவனகல் விசும்பணைய * என்றும் திருமங்கையாழ்வாரருளிச் செய்த பாசுரங்களை யடியொற்றி இந்த ச்லோகமருளிச்செய்கிறபடி. முமுக்ஷுக்களுக்குப் பரசு ராமாவதாரம் உபாஸனைக்கு உரியதன்றுகிலும் விரோதிகளைக் களைந்தொழித்தஉபகாரத் துக்குத் தோற்றுத் துதிப்பது மாத்திரமுண்டு. இராமானுச நூற்றந்தாதியில் * கோக் குல மன்னரை மூவெழுகால் ஒரு கூர்மழுவால் போக்கிய தேவனைப் போற்றும் புனிதன் ... இராமானுசன் * என்றதும் காண்க.

பரசுராமன் ப்ருகு குலத்தில் தோன்றினபடியால் (பார்க்கவ:) என்றது. ஸ்ரீரங்க ராஜஸ்தவத்தில் * भवान् रामो भूत्वा परशु परिकर्मा भृगुकुलादलावीद्भूपालान् * என்று பட்டருமருளிச்செய்தார். ஹே குந்தஸுந்தரவநாசலேச்வர !—குருந்த மரங்களாலழகிய திருமாலிருஞ்சோலைமலைக்குத் தலைவரே !

புராகில பவாந் பார்க்கவ: பவந்—பண்டு தேவரீர் பரசுராமனாகத் திருவவதரித்து,

பலதர்ப்பிதஸ்ய அர்ஜுநஸ்ய—வலிமைச்செருக்குள்ளவனான கார்த்தவீர்யார்ஜுநனுடைய.

பாஹுகாநநம் சேத்ஸ்யதி ஸ்மரதி—புஜவனத்தை அறுத்தொழித்தீர். * अभिज्ञावचने लृट् * என்கிற அநுசாஸநத்தினால் ஸ்மரதிபதஸமபிவ்யாஹாரத்தில் இறந்தகாலப் பொருளில் எதிர்காலப் பொருளதான லகாரத்திற்கு ப்ரயோகமாயிற்று. (ஸ்மரதி) என்கிற க்ரியைக்குத் தனியே ஒரு பொருள் கிடையாது. அது தன் முன்னேயிருக்கிற எதிர்காலப் பொருளதான க்ரியா பதத்திற்கு இறந்தகாலப் பொருளை நிர்வஹித்து நிற்குமத்தனை. 99

आज्ञा तवात्रभवती विदिता त्रयी सा धर्मं तदुक्तमखिलेन वनाद्रिनाथ ! ।
अन्यूनमाचरितुमास्तिकशिक्षणार्थमत्रावतीर्य किल सुन्दर ! राघवोऽभूः ॥१००॥

ஆஜ்ஞா தவாத்ரபவதீ விதிதா த்ரயீ ஸா
தர்மம் ததுக்தமகிலேந வநாத்ரி நாத !
அந்யூநமாசரிது மாஸ்திக சிக்ஷணார்த்தம்
அத்ராவதீர்ய கில ஸுந்தர ! ராகவோऽபூ: . 100

* * * இது முதல் * ரகுகுல திலகஸ் த்வம் * என்னும் ச்லோகமளவாக ஏழு ச்லோகங்களாலே ஸ்ரீராமாவதாரத்தை யநுபவித்தருளிச் செய்கிறார். பண்டு ராமனாகத் திருவவதரித்தவரும் இப்போது அழகராக ஸேவை ஸாதிப்பவரும் ஒருவரே யென்பது தோற்ற 'வநாத்ரிநாத ஹே ஸுந்தர த்வம் ராகவ: அபூ:' என்றருளிச் செய்கிறார். வேதோக்தங்களான தர்மங்களை யெல்லாம் குறையற அநுஷ்டிப்பதற்காகவே நீர் சக்ரவர்த்தி திருமகனாராகத் திருவவதரித் தருளினீரென்கிறார்.

அத்ரபவதீ ஸா த்ரயீ தவ ஆஜ்ஞா விதிதா—பரமபூஜ்யமானவேதமானது * ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா * என்கிறபடியே தேவரீருடைய திவ்யாஜ்ஞையாக ப்ரஸித்தமானது.

ததுக்தம் தர்மம்ஆஸ்திகசிக்ஷணார்த்தம் அகிலேந அந்யூநம் ஆசரிதும்—*வேதோகிலோ தர்மமூலம் * என்கிறபடியே அந்த வேதமானது ஸகலவித தர்மங்களுக்கும் மூலமாயிருக்குமாகையாலே அதிற் சொல்லப்பட்ட ஸகலவித தருமங்களையும் ஆஸ்திக சிக்ஷார்த்தமாகத் தாம் குறையற அநுஷ்டிப்பதற்காக.

அத்ர அவதீர்ய ராகவ: அபூ:—இந் நிலத்திலே திருவவதரித்து ஸ்ரீமத் ரகு குல திலகராக ஆனீர். ஸ்ரீராமனாகத் திருவவதரித்தீரென்றபடி. பகவத் கீதையிலே பகவானுடைய திருவவதாரத்திற்கு ப்ரயோஜநம் ஸாதுபரித்ராணம் துஷ்க்ருத் விநாசநம் தர்ம ஸம்ஸ்தாபநம் என்று மூன்றாகச் சொல்லிற்று. அதில் தர்மஸ்தாபனம் இங்கு முக்கியமாகக் கொள்ளப்பட்டது. * ராமோ விக்ரஹவாந் தர்ம: * என்னக் கடவதிறே. பித்ரு வாக்ய பரிபாலனம் சரணாகத பரித்ராணம் முதலான ஸாமாந்ய தர்மங்களையும் விசேஷ தர்மங்களையும் தான் அநுஷ்டித்துக்காட்டி ஆஸ்திகர்களையும் அநுஷ்டிப்பிக்கவே ராமாவதாரமென்றதாயிற்று. "ஆஸ்திக சிக்ஷணார்த்தம்" என்ற விடத்தில் "சிஷ்யனாய் நின்றது சிஷ்யனிருக்குமிருப்பு நாட்டாரறியாமையாலே அத்தை யறிவிக்கைக்காக" என்ற முமுக்ஷுப்படி ஸ்ரீஸூக்தி ஒரு புடை நினைக்கத் தக்கது. 100

वनगिरिपतिरीशितेति देवैः त्रिपुरहरत्रिपुरघ्नचापभङ्गात् ।
व्यगाणि परशुरामदर्शितस्य स्वकधनुषः परिमर्शदर्शनाच्च ॥१०१॥

வநகிரி பதிரீசிதேதி தேவைః த்ரிபுரஹர த்ரிபுரக்ந சாபபங்காத்,
வ்யகணி பரசுராமதர்சிதஸ்ய ஸ்வகதநுஷః பரிமர்சதர்சநாச்ச. 101

* * * ஸ்ரீராமாவதாரத்தில் * ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம் * என்று பரத்வத்தை மறைத்து மனிச்சை ஏறிட்டுக் கொண்டாலும் இரண்டு செய்கைகளினால் தன்னுடைய பரத்வத்தை தேவர்கள் தெரிந்து கொள்ளும்படியாயிற்றென்கிறாரிதில்.

த்ரிபுரஹரத்ரிபுரக்ந சாப பங்காத்—திரிபுர மூன்றெரித்த சிவபெருமான் அந்த த்ரிபுரஸம்ஹாரம் பண்ணும்போது கொண்ட வில்லானது சிறிது முறிபட்டது; அதனைச் சிவபிரான் ஜநக குலத்துத் தேவராதனென்னும் அரசனிடம் கொடுத்திட, அது வம்ச பரம்பரையாய் ஜநக மஹாராஜனளவும் வந்தது; அதனை ஸீதைக்குக் கந்யா சுல்கமாக ஜநகன் வைத்திருந்தான்; இராமன் அந்த வில்லை முறித்துத் தன் பேராற்றலை விளங்கச் செய்ததனாலும்.

பரசுராம தர்சிதஸ்ய ஸ்வகதநுஷః பரிமர்சதர்சநாச்ச—ஆதி காலத்தில் தேவ சில்பியான விச்வகர்மாவினால் இரண்டு சிறந்த விற்கள் நிருமிக்கப்பட்டன; அவற்றுள் ஒன்று சிவபிரான் கொண்டது. அதைப்பற்றிக் கீழே சொல்லியாயிற்று, மற்றொரு வில்லை ஸ்ரீ மஹாவிஷ்ணு எடுத்துக்கொண்டு ரிசீக முனிவனிடம் கொடுத்துச் செல்ல, அது அவன் குமாரனான ஜமதக்நி யினிடத்தும் அவன் குமாரனான பரசுராமனிடத்தும் பரம்பரையாய் வந்தது; இராமபிரான் பிராட்டியை மணந்து கொண்டு மிதிலாபுரியினின்றும் புறப்பட்டு அயோத்திக் கெழுந்தருளும்போது வழியிடையே * என் வில்வலி கண்டு போவென்று செருக்கிவந்த பரசுராமனது கையில்நின்றும் அவ் வில்லை வாங்கி எளிதில் வளைத்து நாணேற்றிக் கணைதொடுத்து ‘இவ்வம்புக்கு இலக்கு என்?’ என்று வினவ, பரசுராமன் அதற்கு இலக்காகத் தனது தபோபலம் முழுவதையும் கொடுக்க, அவன் க்ஷத்திரிய வம்சத்தைக் கருவறுத்தவனா யிருந்தாலும் வேதவித்தும் தவவிரதம் பூண்டவனுமா யிருத்தல்பற்றி அவனைக் கொல்லாமல் அவனது தவத்தைக் கவர்ந்த மாத்திரத்தோடு ஸ்ரீராமன் விட்டருளினன் என்பது வரலாறு. பரசுராமன் காட்டின வில் விஷ்ணு தநுஸ்ஸாகையாலே (ஸ்வகதநுஷః) என்றருளிச் செய்தார். ஆக, த்ரிபுரஹரத்ரிபுரக்ந சாப பங்கத்தாலும் பரசுராம தர்சித ஸ்வகீய தநுః பரிமர்ச தர்சநத்தாலும் தேவர்களால் எந்த ஸ்ரீராமன் பரமேச்வரனென்று அறுதியிடப்பட்டானோ அப்பெருமானே திருமாலிருஞ்சோலை யழகராக விளங்காநின்றானென்றதாயிற்று. 101

अनवाप्तमत्र किल लिप्स्यते जनैः न च लब्धमेतदिह भोक्तुमिष्यते ।
अनवाप्तमत्र किल नास्ति राम ! तज्जगती त्वया तृणमवैक्षि सुन्दर ! ॥१०२॥

அநவாப்தமத்ர கில லிப்ஸ்யதே ஜநைः
நச லப்தமேததிஹ போக்து மிஷ்யதே,
அநவாப்தமத்ர கில நாஸ்தி ராம! தத்
ஜகதீ த்வயா த்ருணமவைக்ஷி ஸௌந்தர! 102

* * * சக்ரவர்த்தி திருமகன் கூனி சொற்கேட்ட கொடியவள்தன் சொற்கொண்டு * குவலயத் துங்கக்கரியும் பரியுமிராச்சியமு மெல்லாம் துறந்து கானகமே

மிக விரும்பிப் போனது அவாப்த ஸமஸ்தகாமனுன தான் ஜகத்தையெல்லாம் த்ருண மாக நினைத்ததனாலே யென்கிறாரிதில்.

ராம ஸுந்தர !—பண்டு ஸ்ரீராமனாகத் திருவவதரித்த அழகரே !

ஜனை: அத்ர அநவாப்தம் கில லிப்ஸ்யதே—இவ்வுலகில் மனிசரெல்லாம் தங்களுக்குக் கிடைக்காத பொருள்களையே பெற விரும்புவது இயல்பு.

ந ச லப்தம் ஏதத் இஹ போக்துமிஷ்யதே—அநுபவிக்கப் பாங்காகக் கிடைத்த வஸ்துவானது விரும்பப்படுகிறதில்லை ; ஸித்தமானதில் விருப்பமுண்டாக ப்ரஸக்தி யில்லாமையாலே. ஆக, கிடைக்காத வஸ்துவில் ஆசையும், கிடைத்து முடிந்த வஸ்துவில் ஆசை யில்லாமையும் உலக வியல்பு என்றதாயிற்று. இனி எம்பெருமான்படி சொல்லுகிறது ;

அநவாப்த மத்ர கில நாஸ்தி—அவாப்த ஸமஸ்த காமரென்று புகழ்பெற்ற தேவரீருக்கு அநவாப்தமான தொன்றில்லையிறே ; தத்—ஆகையினாலே.

த்வயா ஜகதீ த்ருணம் அவைக்ஷி—* பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற வெம்பெருமானாய் உபய விபூதிநாதரான தேவரீராலே இக்ஷ்வாகு ராஜ்யமானது மிக அற்பமாகக் காணப்பட்டது. ஆனதுபற்றியே நாடு துறந்து காடு சென்றீரென்கை. 102

शिखरिषु विपिनेष्वप्यापगास्वच्छतोयास्वनुभवसि रसज्ञो दण्डकारण्यवासान् ।
तदिह तदनुभूतौ साभिलाषोऽद्य राम ! श्रयसि वनगिरीन्द्रं सुन्दरीभूय भूयः ॥१०३॥

சிகரிஷு விபிநேஷ்வப்யாபகா ஸ்வச்சதோயாஸு
அநுபவஸி ரஸஜ்ஞோ தண்டகாரண்ய வாஸாந்,
ததிஹ தததுபூதௌ ஸாபிலாஷோத்ய ராம !
ச்ரயஸி வநகிரீந்த்ரம் ஸுந்தரீபூய பூய:. 103

* * * ஸ்ரீராமாவதாரத்தில் சித்ரகூடம் முதலிய மலைகளிலும் தண்டகாரணியம் முதலிய காடுகளிலும் கங்கை கோதாவரி முதலிய நதிகளிலும் விலக்ஷணமான ஆனந்தத்தை அநுபவித்தபடியாலே மீண்டும் அவ்வானந்தத்தை யநுபவிக்க வேண்டியே அழகராகித் திருமாலிருஞ்சோலைமலையிலே யெழுந்தருளியிருக்கிறீர்போலு மென்கிறாரிதில். சித்ரகூடாதி பர்வதஸ்தாநத்திலே இத்திருமலையும், தண்டகாதி அரண்யஸ்தானத்திலே இங்குள்ள வநராஜிகளும் கங்காதிநதிஸ்தானத்திலே நூபுரகங்காதிகளும் கொள்ளக்கடவன.

ஹே ராம ! ரஸஜ்ஞ: த்வம்—சக்ரவர்த்தி திருமகனாரே ! ரஸிகரான தேவரீர் ;

சிகரிஷு—சித்ரகூடாதி பர்வதராஜங்களிலும்.

விபிநேஷு—* தே வநேந வநம் கத்வா * என்னும்படியான வனங்களிலும்.

அச்ச தோயாஸு ஆபகாஸு—நிர்மலமான தீர்த்தத்தை யுடைய மந்தாகிந்யாதி நதிகளிலும்.

தண்டாகரண்ய வாஸாந் அநுபவஸி—* சித்ரகூட மநுப்ராப்ய பரத்வாஜஸ்ய சாஸநாத், ரம்யமாவஸதம் க்ருத்வா ரமமாணா வநே த்ரய:. தேவகந்தர்வஸங்காசாஸ் தத்ர தேந்யவஸந் ஸுகம் * இத்யாதிப்படியே அரண்யவாஸ ஸுகத்தை யநுபவித்தீர். பூதகாலப்ரயோகம் பண்ணவேண்டுமிடத்து (அநுபவஸி) என்று வர்த்தமாநப்ரயோகம் பண்ணினது, * चिरनिर्वृत्तमप्येतम् प्रत्यक्षमिव दर्शितम् *என்ற ஸமாதியாலே யென்னலாம்.

தத்—இங்ஙனே திருவுள்ளத்திற்குப் பாங்காக அநுபவித்த ராஸிக்யாதிசயத்தாலே.

இஹ பூய: ததநுபூதௌ ஸாபிலாஷஸ்ஸந்—மீண்டும் அவ்வநுபவங்களைச் செய்து போரத் திருவுள்ளம் பற்றினவராய்க்கொண்டு.

ஸுந்தரீபூய வநகிரீந்த்ரம் ச்ரயஸி — அழகராகத் திருவவதரித்துத் திருமாலிருஞ்சோலை மலையை உறைவிடமாகக் கொண்டருளிற்று. 103

उपवनतरुषण्डैर्मण्डिते गण्डशैलप्रणयिभवदुदन्तोद्गायिगन्धर्वसिद्धे ।

वनगिरितटभूमिप्रस्तरे सुन्दर ! त्वं भजसि नु मृगयानानुद्रवश्रान्तिशान्तिम् ॥१०४॥

உபவநதருஷண்டைர்மண்டிதே கண்டசைல
ப்ரணயிபவதுதந்தோத்காயி கந்தர்வஸித்தே,
வநகிரிதடபூமிப்ரஸ்தரே ஸுந்தர! த்வம்
பஜஸி நு ம்ருகயாநாநுத்ரவச்ராந்தி சாந்திம். 104

* * *—கீழ்ச்லோகத்தி லருளிச்செய்த அர்த்தத்தைச் சிறிது பரிஷ்கரிக்கிற தாயிற்று இந்த ச்லோகம். தண்டகாரண்யவாஸத்தில் ச்ரமங்கள் நேர்ந்தன; அந்த ச்ரமங்கள் ஆறுதற்கு இத்திருமலையில் வாஸத்தை உகந்தீர்போலு மென்கிறார்.

ஹேஸுந்தர!—வாரீர் அழகரே!; த்வம்—தேவரீர்.

ம்ருகயாநாநுத்ரவ ச்ராந்திசாந்திம் வநகிரிதடபூமிப்ரஸ்தரே பஜஸி நு—பண்டு பஞ்சவடியில் மாரீச மாயாம்ருகத்தின் பின்னே தொடர்ந்து சென்றதனாலுண்டான ச்ரமத்தின் பரிஹாரத்தைத் திருமாலிருஞ்சோலைத் தாழ்வரையிலே அடைகின்றீர்போலும். அந்தத் தாழ்வரை எங்ஙனேயிராநின்றதென்ன, இரண்டு விசேஷணங்களினால் அதனைச் சிறப்பிக்கின்றார்.

உபவநதருஷண்டைர் மண்டிதே—* ஆயிரமாறுகளும் சுனைகள் பலவாயிரமும் ஆயிரம் பூம்பொழிலு முடை மாலிருஞ்சோலையதே * என்கிறபடியே பூஞ்சோலைகள் நிரம்பப் பெற்றது.

கண்ட சைலப்ரணயி - பவதுதந்தோத் காயி கந்தர்வஸித்தே—கந்தர்வர்களும் ஸித்தர்களும் பாறைகளின் மீது வீற்றிருந்து எம்பெருமானுடைய திவ்யசரிதைகளை உரக்கப்பாடுகின்றார்களாயிற்று. ஆக இப்பெருமைவாய்ந்த திருமலைத்தாழ்வரையிலே பண்டு வனவாஸத்திலுண்டான விடாய் தீரப்பெறுகிறீர்போலு மென்றாராயிற்று. ... 104

कूलेऽब्धेः किल दक्षिणस्य निवसन्दूरोत्तराम्भोधिगान् दैत्यानेकपतत्रिणाऽच्छिनत इतीयं किंवदन्ती श्रुता ।

तत्रैवेश्वरमम्भसां व्यजयथास्तस्माद्वनाद्रीश्वर ! श्रीमन् ! सुन्दर ! सेतुबन्धनमुखाः क्रीडास्तवाडम्बरम् ॥१०५॥

கூலேப்தே: கில தக்ஷிணஸ்ய நிவஸந் தூரோத்தராம்போதிகாந்
தைத்யாநேகபதத்ரிணாச்சிந இதீயம் கிம்வதந்தீ ச்ருதா,
தத்ரைவேச்வரமம்பஸாம் வ்யஜயதாஸ் தஸ்மாத் வநாத்ரீச்வர
ஸ்ரீமந் ஸுந்தர ஸேதுபந்தநமுகா: க்ரீடாஸ் தவாடம்பரம். 105

* * * பெருமாள் * ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி * என்ற விபீஷண வசனத்தில் விச்வாஸத்தாலே கடலரசனை நோக்கிச் சரணாகதி பண்ணின வளவிலும் அவன்வந்து முகங்காட்டா தொழிந்தவாறே சிறிச்சிவந்த கண்ணினராய் இளைய பெருமாளை நோக்கி வில்லைக்கொண்டுவரச்சொல்லி அம்பு தொடுத்தவாறே ஸமுத்ரராஜன் அஞ்சி நடுங்கி ஓடிவந்து அநுகூலித்தபின்பு பெருமாள் அவனை நோக்கித்தொடுத்த

பாணம் பழுதுபடக் கூடாமையாலே இதை எங்கேனு மோரிடத்தே ப்ரயோகித்துத் தீர வேண்டு மென்று 'எங்கே எய்வது? சொல்லாய் வருணனே' என்ன; அவனும், வட புறத்திலே த்ருமகுல்ய மென்கிற வொரு தீவிலே தனக்குப் பலபல சத்ருக்களிருப்ப தாகச்சொல்லி அவர்கள்மேலே பிரயோகிக்கும்படி ப்ரார்த்திக்க,பெருமாளும் அப்படியே செய்தருளி அவர்களை யெல்லாம் ஒரு நொடிப்பொழுதில கொன்றொழித்தாரென்று ஸ்ரீராமாயணத்தில் யுத்தகாண்டத்தில இருபத்திரண்டாம் ஸர்க்கத்தில் இதிஹாஸ முள்ளது. இது கடலின் வடபுறத்தில் நடந்த காரியம். தென்புறத்தில் நின்றவிடத் திலேயே ஸமுத்ர ராஜனை வென்றி கொண்டது முள்ளது. இவற்றால் பெருமாளுடைய ஸத்யகாமத்வ ஸத்யஸங்கல்பத்வங்கள் வெளியாகின்றன. இப்படிப்பட்ட பெருமை யிருக்கும்போது நின்றவிடத்தே நின்று இராவணன் தலைகளை யறுத்து இலங்கையை நீறுக்க முடியாமையில்லை. இதற்காக ஒரு ப்ரயாஸமும் அநுபவிக்க ஆவச்யகதை யில்லை. அப்படியிருந்தும் கடலில் அணை கட்டிக்கொண்டு இலங்கைசென்றது, அங்கே பல பரிச்ரமங்கள் பட்டது, அகஸ்த்ய மஹர்ஷியால் ஆதித்யஹ்ருதயம் உபதேசிக்கப் பெற்று ராவணவதம் செய்தது ஆகிய இவையெல்லாம் எதற்கு? என்று ஒரு கேள்வி யுண்டாகும். கீழே அதிமாநுஷஸ்தவத்தில் * த்வம் தக்ஷிணஸ்ய நிவஸந் * (25) என்கிற ச்லோகத்தில் அக் கேள்வியைக் கேட்டு விட்டார்; இந்தச்லோகத்தில் அதற்குத் தாமே ஒருவாறு ஸமாதானமு மருளிச்செய்கிறார். என்ன ஸமாதானமென்னில் ஸேதுபந்தமுகாः க்ரீடாஸ் தவாடம்பரம் என்பதேயாமது.

ஹேவநாத்ரீச்வர! ஸ்ரீமந் ஸுந்தர!—திருமாலிருஞ்சோலைமலைக்குத் தலைவரான அழகரே!;

தக்ஷிணஸ்ய அப்தேः கூலே நிவஸந் த்வம்—தென்கடற்கரையிலே எழுந்தருளியிருந்த தேவரீர்;

தூரோத்தராம்போதிகாந் தைத்யாந்—மிகவும் தூரஸ்தமான வடபுறக் கடலில் வாழ்ந்த (ஸமுத்ரராஜ சத்ருக்களான) தைத்யர்களை.

ஏகபதத்த்ரிணா அச்சிந இதி இயம் கிம்வதந்தீ ச்ருதா—ஓரேயம்பினால் தொலைத்தருளிற் றென்று கேள்விப்பட்டிருந்தோம். அதுவன்றியும்,

தத்ரைவ—தென் கடற்கரையிலேயே.

அம்பஸாம் ஈச்வரம் வ்யஜயதாः—ஸமுத்ர ராஜனை வெற்றிகொண்டீர்.

தஸ்மாத்—மநுஷ்யத்வேபி பரத்வம் பொலியநிற்கும் பெருமை குறையற்றிருக்கையாலே யென்றபடி. அங்கிருந்தபடியே அவ்வொரு பாணத்தையே லங்கைக்கும் போக விட்டு ராவணன் தலையை அறுக்கலாமாயிருக்க, அப்படிச் செய்யாதே.

ஸேதுபந்தமுகாः தவ க்ரீடாः—* குரக்கினத்தாலே குரைகடல் தன்னை நெருக்கியணை கட்டினது முதலான லீலைகளை தேவரீர் செய்தருளினதானது,

ஆடம்பரம்—இராவணனைத் தொலைத்தே விடவேணுமென்கிற திருவுள்ளம் இருந்திருக் குமாகில் அங்ஙனே செய்திருக்கலாம். * யதி வா ராவணஸ் ஸ்வயம் * என்றவர்க்கு அங்ஙனே திருவுள்ளமிருக்க நியாயமில்லையே. எப்படியாவது அவனையும் அபிமுக னாக்கிக் கொள்ளவேணுமென்றே திருவுள்ள மிருந்ததனால் அதற்கு அவகாசமளிக் கிற ரீதியிலே ஆடம்பரமாகச் செய்த வித்தனை யென்கை.

ஆடம்பர சப்தம் பும்லிங்கமே யாதலால் "க்ரீடாஸ் தவாடம்பரः" என்றே பாடம் யுக்தம். ஆயினும் ஆடம்பர மென்கிற க்லீப பாடமே காண்கிறது. 105

रघुकुलतिलक ! त्वं जातुचिद्यातुधानच्छलमृगमृगयायां संप्रसक्तः पुराऽभूः ।
तदुपजनितखेदच्छेदनायाद्य गायन्मधुकरतरुषण्डं रज्यसे किं वनाद्रिम् ॥१०६॥

ரகுகுலதிலக ! த்வம் ஜாதுசித் யாதுதாந
ச்சலம்ருக ம்ருகயாயாம் ஸம்ப்ரஸக்த: புராபூ:,
ததுபஜநித கேதச்சேதநாயாத்ய காயந்—
மதுகரதரு ஷண்டம் ரஜ்யஸே கிம் வநாத்ரிம் ? 106

* * * இந்த ச்லோகத்தோடு ஸ்ரீராமாவதாராநுபவத்தைத் தலைக்கட்டி யருளுகிறார். கீழே * உபவந தருஷண்டை: (104) என்கிற ச்லோகத்தில் மாரீசமாயாம்ருகத்தின் பின்னே சென்ற விடாய் தீரவோ இத்திருமலையில் வாழ்வதென்றாரிறே; அவ்வொரு விடாய்தானோ ? ராக்ஷஸ வேட்டையாடின பெருவிடாய் கனத்திருக்குமே; அது தீரவோ இத் திருமலையில் வாழ்வதென்று கேட்கிறாராயிற்று.

ஹே ரகு குல திலக !—பண்டு ராமாவதாரம் செய்தருளின அழகரே !

புரா ஜாதுசித் த்வம் யாதுதாநச்சலம்ருகம்ருகயாயாம் ஸம்ப்ரஸக்த: அபூ:—முன்னொருகால் தேவரீர் ராவணாதி ராக்ஷஸர்களாகிற மிருகங்களிடையே வேட்டையாடுவதில் வியாபரித்தீர் ;

ததுபஜநித கேதச் சேதநாய—அந்த வேட்டையினாலுண்டான ச்ரமம் தீர.

காயந்மதுகர தருஷண்டம் வநாத்ரிம் அத்ய ரஜ்யஸே கிம்— * பாண்டகு வண்டினங்கள் பண்கள் பாடி மதுப் பருக * என்று பெரியாழ்வாருளிச் செய்தபடியே வண்டினமுரலுஞ்சோலைகளையுடைய இத் திருமலையிலே இப்போது உகந்து வர்த்திக்கிறீர் போலும்.

"யாதுதாநச்சலம்ருக" என்றதற்கு மாரீச மாயா ம்ருகத்தைப் பொருளாகச் சிலர் சொல்லுவது ஆசிரியர்க்கு விவக்ஷிதமன்று. அது முன்னமே சொல்லியாயிற்று. ஸ்ரீராமாயண கதைகளை ஒருவாறு அடைவே அநுபவித்து வருமிந்த ஸந்தர்ப்பத்திலே கீழ் ச்லோகத்தில் திருவணை கட்டுதல் ப்ரஸ்துதமானபடியாலே அதன் பிறகு லங்கையில் ப்ரவ்ருத்தமான ராக்ஷஸ வேட்டையே இங்கு விவக்ஷிதமாகத் தக்கது. அரசர்கள் மிருகங்களைக் கொல்ல வேட்டையாடுவது போல, பெருமாளும் அரக்கர்களாகிற மிருகங்களை முடித்ததாக அருளிச் செய்தபடி. இதனால் * பொல்லாவரக்கனைக் கிள்ளிக்களைந்தானை * என்றாப்போலே அநாயஸேந அழித்தமை சொன்னதாயிற்று. 106

हे सुन्दरैकतरजन्मनि कृष्णभावे द्वे मातरौ च पितरौ च कुले अपि द्वे ।
एकक्षणादनुगृहीतवतः फलं ते नीला कुलेन सदृशी किल रुक्मिणी च ॥१०७॥

ஹே ஸுந்தரைகதர ஜந்மநி க்ருஷ்ண பாவே
த்வே மாதரௌ ச பிதரௌ ச குலே அபி த்வே,
ஏகக்ஷணா தநுக்ருஹீதவத: பலம் தே
நீலா குலேந ஸத்ருசீ கில ருக்மிணீ ச. 107

* * * கீழ் ஏழு ச்லோகங்களாலே ஸ்ரீராமாவதாரத்தை யநுபவித்தாராய் நின்றார்; இனி இந்த ச்லோகம் தொடங்கி 'வாராணஸீதஹநேத்யாதி ச்லோகமளவாகப் பத்து ச்லோகங்களாலே ஸ்ரீக்ருஷ்ணாவதாராநுபவ ப்ரவணராய்ச் செல்லுகிறார். அழகருக்கும் கண்ணனுக்குமுள்ள அபேதத்தைத் திடப்படுத்துகிறபடி. ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் ஏக க்ஷணத்திலே மாதாக்களிருவர் பிதாக்களிருவர் குலங்களுமிரண்டு என்னும் படியானது எதற்காகவென்று ஆராயுமிடத்து இரண்டு குலங்களுக்கும் தகுதியாக மனைவியர் இருவரைப் பரிக்ரஹிக்கைக்காகவே போலும் என்று சமத்காரமாக அருளிச் செய்கிறாரிதில்.

ஹே ஸுந்தர !—வாரீர் அழகரே !

ஏகதராஜந்மநி க்ருஷ்ணபாவே—கண்ணனாகத் தோன்றின ஓரவதாரந் தன்னிலே ;

த்வே மாதரேளச த்வௌ பிதரேளச த்வே குலே அபிச—தாய்மார் இருவரையும் தந்தையர் இருவரையும் குலங்களிரண்டையும் ; (அதாவது) தேவகீ யசோதைகளென்று தாயார் இருவர் ; வஸுதேவ நந்தகோபர்களென்று தந்தையர் இருவர் ; யதுகுல கோபால குலங்களென்று குலங்களிரண்டு. ஆக எல்லாமிரண்டாக.

ஏகஸ்ஷணாத் அநுக்ருஹீதவத: தே பலம்—* ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் லொருத்தி மகனாய் * என்னும்படி ஸ்வல்ப காலந்தன்னிலேயே பரிக்ரஹித்தருளின தேவரீருக்கு உத்தேச்யம் யாதெனில ; அதனை உள்ளபடி அறியப்பெற்றோம் கேளீரென்கிறார் ;

குலேஷு ஸத்ருசீ நீலாச ருக்மிணீச கில—கோபால குலத்திற்குத் தகுதியாக நப்பின்னைப் பிராட்டியையும், க்ஷத்ரிய குலத்திற்குத் தகுதியாக ருக்மிணிப் பிராட்டியையும் பெறுதற்கே யாமத்தனை.

திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தத்திலே * ஆயனாகி ஆயர்மங்கை வேயதோள் விரும்பினாய் * என்றருளிச் செய்த பாசுரத்தையே உயிராகப் பிடித்து அருளிச் செய்ததாம் இந்த ச்லோகம். கண்ணபிரான் நந்தகோபன் குமரனாக வளரத் திருவுள்ளம்பற்றின போதே, ஸ்ரீதேவி பூதேவிகளோடொக்க திவ்ய மஹிஷியான நீளாதேவியானவள் தானும் இடைக்குலத்திலே யசோதைப் பிராட்டியின் உடன் பிறந்தவனான கும்ப னென்பவனுக்கு மகளாய்த் தோன்றி நப்பின்னைப் பிராட்டியென வழங்கப்பட்டு வந்தாள். அவளுடைய தந்தையானவர் ஒருவர்க்கு மடங்காத அஸுராவேசம் பெற்ற ஏழு எருதுகளைக் கந்யா சுல்கமாகக் குறிப்பிட்டு இவற்றை வலியடக்குபவற்கே என் மகளை விவாஹஞ் செய்துகொடுப்பே னென்று உறுதி கொண்டிருக்கையில், கண்ணபிரான் சென்று அவற்றை வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்துகொண்டு பின்னை மணாளனாயினன். இவ்வரலாறு ஸ்ரீவிஷ்ணு புராண ஸ்ரீபாகவதாதிகளில் காணப்பெற்றதில்லை. யாதவாப்யுதயத்தில் நான்காவது ஸர்க்கத்தில் * திசா கஜாநாமிவ சாக்வராணாம் * என்னும் ச்லோகத்தில் இக்கதை கூறப்பட்டுள்ளது ; அவ்விடத்து வியாக்யானத்தில் அப்பய்ய தீக்ஷிதர் இக்கதை ஹரிவம்சத்திலுள்ள தென்று வரலாற்றுடன் எடுத்துக் காட்டியுள்ளார். ஆழ்வார்களருளிச் செயல்களில் ருக்மிணீ ப்ரஸ்தாவமுள்ளது அதிஸ்வல்பமேயாம். திருவாய்மொழியில் ஓரிடத்திலும் பெரியாழ்வார் திருமொழியில் இரண்டிடங்களிலுமே யுள்ளது. நப்பின்னைப் பிராட்டியின் ப்ரஸ்தாவமுள்ள இடங்கள் அபரிமிதம். 'குலவாயர் கொழுந்து' என்று அவனை நம்மாழ்வார் சிறப்பித்துக் கூறுவர் ; ஆயர் குலத்திலே அமைந்த திவ்ய மஹிஷியானதுபற்றியே. 107

त्वं हि सुन्दर ! यदा स्तनन्धयः पूतनास्तनमधास्तदा नु किम् ।
जीर्णमेव जठरे पयोविषं दुर्जरं वद तदात्मना सह ॥१०८॥

த்வம் ஹி ஸுந்தர யதா ஸ்தநந்தய:
பூதநாஸ்தநமதாஸ் ததா நு கிம்,
ஜீர்ணமேவ ஜடரே பயோவிஷம்
துர்ஜரம் வத ததாத்மநா ஸஹ. 108

* * * கண்ணபிரான் யசோதாஸ்தநந்தயனான வளவன்றிக்கே பூதநாஸ்தநந்தயனுமான அற்புதத்தை அநுபவித்துப் பேசுகிறார். வடமதுரையில் வஸுதேவ க்ருஹத்தில் திருவவதரித்த கண்ணபிரான் திருவாய்ப்பாடியில் ஒளித்து வளர்கிறானென்பதையறிந்த கம்ஸன் எவ்வகையினாலாவது அவனை முடித்தாலல்லது தனக்கு ஜீவிதாசையில்லையென்று துணிந்து கண்ணனை மாய்க்கும் பொருட்டுப் பல அசுரர்களைக் கோகுலத்திற்குப் போகவிடுவதே பணியாயிருந்தான். அவனுடைய ஏவுதலால் பூதனையென்னும் ராக்ஷஸி யசோதையினுருவங் கொண்டு நள்ளிரவிலே திருவாய்ப்பாடிக்கு

வந்து அங்கு தூங்கிக்கொண்டிருந்த கிருஷ்ண சிசுவை யெடுத்துத் தனது நஞ்சு தீற்றிய முலையை உண்ணக்கொடுத்துத் தீங்கு செய்ய முயல, பகவானுன குழந்தை அவ்வரக்கியின் தனங்களைக் கைகளால் இறுகப் பிடித்து பாலுண்ணுகிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி, * ஸ்தந்யம் தத் விஷஸம்மிச்ரம் ரஸ்யமாஸீத் ஜகத்குரோ: * என்னும்படியே அவள் தனத்தில் பூசியிருந்த விஷத்தையும் அமுதமாக வுண்டு அவளை முடித்தருளினன் என்பது பூதநாவதவ்ருத்தாந்தம். இதைப்பற்றி அவன்தன்னையே ஒரு கேள்வி கேட்கும் முகத்தாலே ஸ்வாநுபவ ரஸிக்யத்தைக் காட்டியருளுகிறுர்.

ஹே ஸுந்தர! த்வம் யதா ஸ்தநந்தயஸ் ஸந் பூதநாஸ்தநம் அதா:—திருமாலிருஞ்சோலை யழகரே! பண்டு கண்ணபிரானுகத் திருவவதரித்த தேவரீர் ஸ்தநந்தய சிசுவாய் எப்போது பூதனையின் முலைப்பாலை அமுது செய்தருளிற்றே;

ததா துர்ஜரம் பயோ விஷம் ததாத்மநா ஸஹ ஜடரே ஜீர்ணமேவ கிம்? வத — அப்போது பிறரால் உண்டறுக்கமுடியாத ஸ்தந்ய விஷமானது அவளது ஆவியோடு கூடவே தேவரீருடைய திருவயிற்றில் ஜீர்ணமாகி யொழிந்ததோ? இதை தேவரீர் தாமே யருளிச் செய்யவேணும் என்கிறுர்.

பூதனையூட்டிய விஷந்தானே பிறர்வாயில் புகுந்தால் முடித்தல்லது விடாதிறே. ஒருவராலும் ஜரிப்பித்துக்கொள்ளப் போகாதே; அது உமக்கு ஜீர்ணமானவளவேயன்றிக்கே அவளுயிரைத்தானே முடித்து நின்றதே; இது வென் கொல்! என்று அதிசயித்துக் கூறினவிதனுல் சைசவத்திலும் பரத்வம் குறைய நில்லாத அவனுடைய பெருமை பேசப்பட்டதாயிற்று. 108

आश्रितेषु सुलभो भवन् भवान् मर्त्यतां यदि जगाम सुन्दर ।
अस्तु नाम तदुलूखले कियद्दामबद्ध इति किं तदाऽरुदः ॥१०९॥

ஆச்ரிதேஷு ஸுலபோ பவந் பவாந் மர்த்யதாம் யதி ஜகாம ஸுந்தர
அஸ்து நாம தது லூகலே கியத் தாமபத்த இதி கிம் ததாऽருத:. 109

* * * கண்ணபிரானுடைய ஸௌலப்ய பரம காஷ்டையிலீடுபட்டு உருகிப் பேசுகிறுர். அழகரே; தேவரீர் ஆச்ரித ஸௌலப்யத்தாலே கட்கிலியான வுருவத்தைக் கண்ணுக் கிலக்காம்படியாக்கி * துயரில் மலியும் மனிசர் பிறவியில் தோன்றிக் கண்காண வந்து * என்கிறபடியே மநுஷ்யஸஜாதீயராக அவதரித்ததுபற்றிக் கேள்வியில்லை; * ஒளியா வெண்ணெயுண்டானென்று உரலோடாய்ச்சி யொண்கயிற்றால், விளியாவார்க்க ஆப்புண்டு விம்மியழுதான் * என்றும் * எழில் கொள் தாம்பு கொண்டடிப்பதற்கு எள்கு நிலையும் வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும் அழுகையு மஞ்சி நோக்குமந் நோக்கும் அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும் * என்றும் சொல்லுகிறபடியே கண்ணி நுண் சிறுத் தாம்பினுல் உரலோடு கட்டுண்டு ஏங்கியழுது கிடந்தது எதற்காக? இக் குணத்தை எந்த வகுப்பில் சேர்ப்பது? என்கிறுர்.

ஹேஸுந்தர! பவாந் ஆச்ரிதேஷு ஸுலபோ பவந் மர்த்யதாம் யதி ஜகாம தத் அஸ்துநாம— திருமாலிருஞ்சோலையழகரே! தேவரீர் ஆச்ரிதர்கள் பக்கலிலே எளியராய் மநுஷ்யஸ ஜாதீயராய்ப் பிறந்தீராகில் அது கிடக்கட்டும்; அதில் விசிகித்ஸை யொன்றும் செய்கின்றிலோமென்கை. பின்னை விசிகித்ஸையுள்ளது எதிலே யென்னில்;

ததா உலூகலே கியத்தாமபத்த இதி கிம் அருத:—அப்படி மநுஷ்ய யோநியிலே பிறந்த காலத்து வெண்ணெய் களவு கண்டு அதற்காக உரலிலே சிறு தாம்பினுல் கட்டுண்டு கிடந்து அழுது நின்றுயே, அது எதற்காக? என்று இதிலேயாயிற்று என்போல்வார்க்குப் போர விசிகித்ஸையுள்ளது என்கிறுர். இங்ஙனே கேள்வி கேட்குமிவருடைய திருவுள்ளம் யாதெனில், * மத்துறு கடை வெண்ணெய் களவினி லுரவிடையாப்புண்டு எத்திற முரலினேடிணைந்திருந் தேங்கிய வெளிவே! * என்று சொல்லி ஆழ்வார் ஆறு

மாதம் மோஹிப்பதற்காகவே நீ உரலிலே கட்டுண்டு அழுது நின்றது என்று வெளியிடுவதாம்.

கியத்தாமபத்தஃ ' என்றது ' ஸ்வல்பதாமபத்தஃ ' என்றபடி. ' தாமபத்தஸ் ஸந் அருதஃ ' என்னுமல் ' தாமபத்த இதி அருதஃ ' என்றது — ஆய்ச்சியர் உன்னைக் கட்டினார்களல்லர் ;* கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயன் * என்கிறபடியே உன்னை நீயே கட்டுண்டவனாகச் செய்துகொண்டாய் ; அதுதானும் உன்னுடைய குணநிசயத்தை வெளியிடுகைக்காக. என்னுங் கருத்துத் தோன்ற. 109

सुन्दरोरुभुज ! नन्दनन्दनस्त्वं भवन् भ्रमरविभ्रमालकः ।

मन्दिरेषु नवनीततल्लजं वल्लवीधियमुत व्यचूचुरः ॥११०॥

ஸுந்தரோருபுஜ ! நந்தநந்தநஸ் த்வம் பவந் ப்ரமர விப்ரமாலகஃ,
மந்திரேஷு நவநீததல்லஜம் வல்லவீதியமுத வ்யசூசுரஃ. 110

* * * கீழ் ச்லோகத்தில் தாம்பினால் கட்டுண்டமை ப்ரஸ்துதமாகையாலே அதற்கு மூலமான நவநீத சௌர்யம் நினைவுக்கு வர, களவுகண்டது வெண்ணெயையோ ஆய்ச்சியருள்ளத்தையோ வென்று வினவுகிறார்.

ஸுந்தரோருபுஜ !— சுந்தரத்தோளுடைய பிரானே ! அழகரே !;

த்வம் ப்ரமரவிப்ரமாலகஃ நந்தநந்தநஃ பவந் — * களிவண்டெங்கும் கலந்தாற்போல் கமழ்பூங் குழல்கள் தடந்தோள்மேல் மிளிரநின்று * என்றும் * அண்டத்தமரர் பெருமானழகமர் வண்டொத்திருண்ட குழல் * என்றும் சொல்லுகிறபடியே, தேவரீர் வண்டொத்த திருக்குழற் கற்றையையுடைய நந்தன் மதலையாய்க் கொண்டு,

மந்திரேஷு நவநீததல்லஜம் வ்யசூசுரஃ? உத வல்லவீதியம்?— ஆயர் மனைகளிலே புக்கு வெண்ணெயைத்தான் களவுகண்டீரோ? அல்லது ஆய்ச்சியர்களின் உள்ளத்தைத் தான் கொள்ளைகொண்டீரோ ? இரண்டையுந்தான் கொள்ளை கொண்டேனென்பது எம்பெருமானுடைய விடை. நவநீதசோரனாயிருந்த நிலைதன்னிலே கோபீமநோஹரனாயுமிருந்தமை சொன்னபடி. அதிமாநுஷஸ்தவத்தில் " கோபக்ருஹேஷு கிம் த்வம் கோபீமநாம்ஸி நவநீத முதாப்யமோஷீஃ ?" என்றருளிச்செய்ததும் இங்கே அநுஸந்தேயம்.

[நவநீததல்லஜம்] தல்லஜ சப்தம் ச்ரேஷ்ட வாசகம். வெண்ணெய்க்குச் சிறப்பாவது கண்ணபிரான் கைக்கொள்ளப் பெறுகையாயிற்று. 110

कालियस्य फणतां शिरस्तु मे सत्कदम्बशिखरत्वमेव वा ।

वष्टि जुष्टवनशैल ! सुन्दर ! त्वत्पदाब्जयुगमर्पितं ययोः ॥१११॥

காலியஸ்ய பணதாம் சிரஸ்து மே ஸத்கதம்பசிகரத்வமேவ வா,
வஷ்டி ஜுஷ்டவநசைல ! ஸுந்தர ! த்வத்பதாப்ஜயுக மர்ப்பிதம் யயோஃ.

* * * நித்யமும் திருவாய்ப்பாடியிலிருந்து ப்ருந்தாவனத்திற் கெழுந்தருளாநின்ற கண்ணபிரான் நம்பிமூத்தபிரானோடு கூடவே யெழுந்தருள்வது வழக்கம் ; * ஏகதா து விநா ராமம் க்ருஷ்ணோ ப்ருந்தாவநம் யயௌ * என்கிறபடியே ஒருநாள் அவனை யொழியப் புறப்பட்டுக் கன்றுகளை யோட்டிக்கொண்டு ஒருவரும் ஸஞ்சரியாத வழியே போகத் தொடங்க, மற்றுள்ள பிள்ளைகள் 'கண்ணா ! அவ்வழி நோக்கவேண்டா; அவ்வழிபிற் சென்றால் யமுநாநதியின் ஓர் மடுவில் காளியனென்னுங் கொடிய நாகம் தன் குடும்பத்தோடு வாஸஞ்செய்துகொண்டு விஷாக்னியைக் கக்கி யாவரையும் பிணமாக்கி விடுவதால் நாங்கள் அஞ்சுகிறோம்' என்ன, அக்காளிய நாகத்தைத் தண்டிக்க வேண்டுமென்று திருவுள்ளங்கொண்ட கண்ணன் அப் பிள்ளைகளுக்கு அபயங் கூறி

உடனழைத்துக்கொண்டு அம்மடுவிற்குச் சென்று அங்கு அருகேயுள்ளதொரு கடம்ப மரத்தின் மேலேறி அம் மடுவிற் குதித்து அந் நாகத்தின் படங்களின் மேலேறி நின்று நர்த்தனஞ்செய்து வலியடக்கினதாக வரலாறு உள்ளது. இதனை யநுஸந்தித்த ஆசிரியர் தமக்குண்டான வோர் வாஞ்சையை வெளியிடுகிறாரிதில். காளியநாகத்தின் மத்தகமாகவோ கடம்ப மரத்தின் உச்சியாகவோ ஆகப் பெறவேணுமென்று தம்முடைய திருமுடி விரும்புவதாக அருளிச்செய்கிறார்.

ஜுஷ்டவநசைல ! ஸுந்தர !—திருமாலிருஞ்சோலை மலையுறையும் அழகரே ! ;

மே சிரஸ்து—அடியேனுடைய தலையோவென்றால்,

காளியஸ்ய பணதாம் ஸத்கதம்ப சிகரத்வமேவ வா வஷ்டி—காளிய நாகத்தின் படமாயிருக்கையையோ கடம்பமரத்தின் உச்சியாயிருக்கையையோ மெச்சுகின்றது ; அவற்றில் என்ன ஏற்றங்கண்டு? என்னில் ;

யயோ: த்வத்பதாப்ஜயுகம் ஆர்ப்பிதம்—தேவரீருடைய திருவடித்தாமரையிணையை வைத்தருளப் பெற்றவையன்றோ அவை. * அடிச்சியோந் தலைமிசை நீயணியாய் ஆழியங் கண்ணாவுன் கோலப்பாதம் * என்றும் * கோலமாமென் சென்னிக்கு உன் கமலமன்ன குரைகழலே * என்றும் * கதாபுந:......த்வச்சரணாம்புஜத்வயம் மதீயமூர்த்தாநம் அலங்கரிஷ்யதி * என்றும் பிரார்த்தித்துப் பெறவேண்டிய பேறு அவற்றுக்கு அநாயாஸமாகக் கிடைத்ததேயென்று வியந்து பேசினபடி. வஷ்டி - விரும்புகிறது.
" वश-कान्तौ ; कान्तिरिच्छा ॥ " 111

गूहितस्वमहिमाऽपि सुन्दर ! त्वं व्रजे किमिति शक्रमाक्रमीः ।
सप्तरात्रमदधाश्च किं गिरिं पृच्छतश्च सुहृदः किमकृथाः ॥११२॥

கூஹித ஸ்வமஹிமாபி ஸுந்தர! த்வம் வ்ரஜே கிமிதி சக்ரமாக்ரமீ:,
ஸப்தராத்ரமததாச்ச கிம் கிரிம் ப்ருச்சதச்ச ஸுஹ்ருத: கிமக்ருத:.

*** ஸௌலப்ய ஸௌசீல்யங்களையே காட்டிப் பரத்வத்தை யொளித்து மாநுஷ்யகம் கொண்டாட வந்தவிடத்திலே பரத்வமே பொலியும்படியான அதிமாநுஷ க்ருத்யங்களையும் ஊடே வெளியிட்டது எதற்காகவென்று வினவுகிறார்.

ஸுந்தர த்வம் கூஹிதஸ்வமஹிமா அபி வ்ரஜே கிமிதி சக்ரம் ஆக்ரமீ:—அழகரே ! தேவரீர் * ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவி லொருத்தி மகனா யொளித்து வளர்ந்தது ஸ்வகீய சக்தி விசேஷங்களை யெல்லாம் மறைத்திறே : அப்படியிருந்தும், * கேட்டறியாதன கேட்கின்றேன் கேசவா ; கோவலரிந்திரற்குக் காட்டிய சோறுங் கறியும் தயிரும் கலந்துடனுண்டாய் போலும் * என்றும், * ஆயிரங் கண்ணுடை யிந்திரனாருக்கென்று ஆயர் விழவெடுப்ப, பாசனநல்லன பண்டிகளால் புகப்பெய்த வதனையெல்லாம், போயிருந்தங்கொரு பூதவடிவுகொண்டு உன் மகனின்று நங்காய்!, மாயனதனை யெல்லாம் முற்றும் வாரிவளைத்துண்டிருந்தான் போலும் * என்றும் சொல்லுகிறபடியே இந்த்ர பூஜையைத் தடைசெய்து அவனை யுத்தோந் முகனாக ஆக்கிக் கொண்டது என்னோ ?

ஸப்தராத்ரம் அததாச்ச கிம் கிரிம்—*வழுவொன்று மில்லாச் செய்கை வானவர் கோன் வலிப்பட்டு முனிந்து விடுக்கப்பட்ட மழைவந் தெழுநாள் பெய்து மாத்தடைப்ப மதுசூதனெடுத்து மறித்த மலை * என்றும், * செப்பாடுடைய திருமாலவன் தன் செந்தாமரைக் கை விரலைந்தினையும் கப்பாக மடுத்து மணிநெடுந் தோள் காம்பாகக் கொடுத்துக் கவித்த மலை * என்றும் சொல்லுகிறபடியே * கொடியேறு செந்தாமரைக் கை விரல்கள் கோலமு மழிந்தில வாடிற்றில வடிவேறு திருவுகிர் நொந்துமில வென்னும் படியாக ஏழு நாள் வாடாதே வதங்காதே மலையைத் தாங்கி நின்றது என்னோ ?

ப்ருச்சதச் ச ஸுஹ்ருத꞉ கிம் அக்ருத꞉—மலையெடுத்து நின்ற அதிமாநுஷ சேஷ்டிதங் கண்டு ஆச்சரியப்பட்ட ஆயர்கள் * बालत्वं चातिवीर्यं च जन्म चासास्वशोभनम् । चिन्त्यमानममेयात्मन् ! शङ्कां कृष्ण ! प्रयच्छति ॥ देवो वा दानवो वा त्वं यक्षो गन्धर्व एव वा*என்று 'நீ தேவனா? தானவனா? யக்ஷனா? கந்தர்வனா?' என்று கேட்க; * क्षणं भूत्वा त्वसौ तूष्णीं किञ्चित्प्रणयरोषवान् *என்கிறபடியே அப்படி அவர்கள் கேட்டதற்காகச் சீற்றங்கொண்டதாக வுள்ளது; சீற்றங்கொள்ளும்படியாக அவர்கள் ஒன்றும் கேட்கவில்லையே, அப்படியிருக்க சீற்றங்கொண்டது ஏன்? என்று கேட்கிறார்.

ஆக இந்த ச்லோகத்தில் மூன்று வினாக்கள் உள்ளன; நெடுநாளாகத் திருவாய்ப்பாடியில் நடந்துவந்த தேவேந்த்ர ஸமாராதனையைத் தடுத்தது ஏன்? என்பது முதற் கேள்வி; பராத்பரனான தான் வளருகிற ஊரிலே தேவதாந்தரத்திற்கு ஆராதனை யாவதென்? என்றிருந்தபடியாலே தடுத்ததாக இதற்கு விடை. அவ்விந்திரன் ஏழுநாள் கல் மழை பெய்வித்து ஆயர்களுக்கும் ஆநிரைகளுக்கும் பொறுக்கொணாத் தீங்கை விளைத்தபோது அவனைத் தலையரிந்து பொகட வேண்டியிருக்க, அது செய்யாதே மலையைக் குடையாக வெடுத்து நின்றதேன்? என்பது இரண்டாவது கேள்வி. 'இந்திரனது உணவைக் கொண்ட நாம் உயிரையும் கொள்ளவேணுமோ? இந்த மலையே நமக்கு ரக்ஷகமென்று நாம் அடியிலே சொன்ன வார்த்தையை மெய்யாக்கிக் கொண்டோமாகில் அவன் கை சலித்தவாறே தானே ஓய்ந்து நிற்கிறான்' என்று ஆந்ருசம்ஸ்யம் கொண்டாடி நின்றதுதான் இதற்கு ஸமாதானம். 'நீ தேவனா தானவனா யக்ஷனா கந்தர்வனா? என்று கேட்டவர்கள் மீது சீற்றமுற்றது எதற்காக?' என்பது மூன்றாவது கேள்வி; பரத்வத்திலே வெறுப்புக்கொண்டு மநுஷ்ய ஸஜாதீயனாய், அதிலும் இடையர்களுள் கடைகெட்ட இடையனாய் ஆசையோடு தான் வந்து பிறந்திருக்க, வேறாகச் சங்கித்துக் கேட்டது அப்ரியமாய், "தேவத்வமும் நிந்தையானவனுக்கு" என்று ஆசார்ய ஹ்ருதயத்திலருளிச் செய்கிறபடியே நிந்தாரூபமுமாய்த் தோற்றுகையாலே சீற்ற முண்டாயிற்றென்பது ஸமாதானம்.

ஆக, இம் மூன்று கேள்விகளாலும் பெறுவிக்கப்படுகிற ஸமாதானங்களினால் விலக்ஷணமான குணாநுபவம் செய்தருளினாராயிற்று. ... 112

हे नन्दनन्दन ! सुसुन्दर सुन्दराह्व ! बृन्दावने विहरतस्तव वल्लवीभिः ।
वेणुध्वनिश्रवणतस्तरुभिस्तदा वै सग्रावभिर्जतुविलायमहो ! विलिल्ये ॥११३॥

ஹே நந்தநந்தந! ஸுஸுந்தர! ஸுந்தராஹ்வ!
ப்ருந்தாவநே விஹரதஸ் தவ வல்லவீபி꞉,
வேணுத்வநி சரவணதஸ் தருபிஸ் ததா வை
ஸக்ராவபிர் ஜதுவிலாயமஹோ விலில்யே. 113

*** வேணுகானத்திலே மரங்களும் மலைகளுங்கூட உருகினபடியைப் பேசியநுபவிக்கிறாரிதில்.

ஹே நந்தநந்தந! ஸுஸுந்தர! ஸுந்தராஹ்வ!—நந்தகோப ஸூநுவாகத் திருவவதரித்த அழகரே! அழகரென்றே திருநாமம் படைத்தவரே!

ததா ப்ருந்தாவநே வல்லவீபிஸ் ஸஹ விஹரதஸ் தவ—முன்பு ப்ருந்தாவனத்தில் ஆயர் மங்கைகளோடு லீலா ரஸமநுபவியாநின்ற தேவரீருடைய.

வேணு த்வநி ச்ரவணத꞉—குழலூது மிசையைக் கேட்டதனாலே.

ஸக்ராவபி꞉ தருபி꞉ ஜதுவிலாயம் விலில்யே அஹோ—மலைகளும மரங்களும் தீயோடுடன் சேர்மெழுகு உருகுமாபோலே உருகினபடி என்னே!

பெரியாழ்வார் திருமொழியில் * நாவலம் பெரிய தீவினில் வாழுமென்கிற திருமொழியிலே * மருண்டு மான் கணங்கள் மேய்கை மறந்து மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர, இரண்டுபாடும் துலுங்கா புடைபெயரா எழுது சித்திரங்கள் போல நின்றனவே * என்றும், * மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும் மலர்கள் வீழும் வளர்கொம்புகள் தாழும் இரங்குங் கூம்பும் திருமால் நின்ற நின்ற பக்கம் நோக்கி அவை செய்யுங் குணமே * என்றும் அருளிச் செய்த பாசுரங்கள் இங்கே அநுஸந்தேயங்கள். பட்டர் ஸ்ரீரங்க ராஜஸ்தவத்தில் * சைலோக்நிச்ச ஜலாம்பூவ * என்று தொடங்கி யருளிச்செய்ததும் காண்க. நான்காவது பாதம் भावे प्रयोग: ॥ ... 113

गायंगायं वनगिरिपते ! त्वं हि बृन्दावनान्तर्गोपीसंघैर्विहरसि यदा सुन्दर व्यूढबाहो ! ।
रासारम्भोत्सवबहुविधप्रेमसीमन्तिनीनां चेतश्चेतस्तव च तु तदा कां दशामन्वभूताम् ॥११४॥

காயம்காயம் வநகிரிபதே த்வம் ஹி ப்ருந்தாவநாந்தஃ
கோபீ ஸங்கைர் விஹரஸி யதா ஸுந்தர வ்யூடபாஹோ!
ராஸாரம்போத்ஸவ பஹுவிதப்ரேம ஸீமந்திநீநாம்
சேதச் சேதஸ் தவ ச து ததா காம் தசாமந்வபூதாம் 114

* * * கீழ் ச்லோகத்தில் வேணுகானம் ப்ரஸ்துதமாகையாலே, அக்காலத்திலே மரங்கள் மலைகள் முதலிய அசேதநங்கள் பட்டபாடு கிடக்கட்டும்; அவனுடைய ஹ்ருதயமும் கோபிகளின் ஹ்ருதயமும் பட்டபாடு எதுவாயிருக்குமென்று ஆராய்கையில் இது அவன் திருவுள்ளத்திற்கே தெரியுமத்தனை யென்று தெளிந்து அவன் தன்னையே கேட்டருளுகிறாரிதில்.

ஹேவநகிரிபதே! ஸுந்தரவ்யூடபாஹோ!—திருமாலிருஞ்சோலைமலைக்குத் தலைவராய் சுந்தரத் தடந்தோளுடையவரான அழகரே!.

த்வம் ப்ருந்தாவநாந்தஃ காயம் காயம் கோபீஸங்கைஸ் ஸஹ யதா விஹரஸி—தேவரீர் ப்ருந்தாவனத்தினுள்ளே வேணுகானத்தை அடுத்தடுத்துச்செய்து கோபிகள் திரளோடு லீலாரஸம் கொண்டாடின காலத்திலே.

ராஸாரம்போத்ஸவபஹுவிதப்ரேமஸீமந்திநீநாம் சேதஃ தவச சேதஃ ததா காம் தசாம் அந்வபூதாம்—ராஸாரம்போத்ஸவமாவது — ராஸக்ரீடை; இது தமிழில் குரவைக் கூத்தெனப்படும். * अङ्गनामङ्गनामन्तरे माधव: माधवं माधवं चान्तरेणाङ्गना—அங்கநாமங்கநா மந்தரே மாதவஃ மாதவம் மாதவஞ் சாந்தரேணாங்கநா * என்கிறபடியே ஒவ்வோராய்ச்சியின் பக்கத்திலும் ஒவ்வொரு கண்ணனாகப் பலவடிவெடுத்து ஆடினதொரு கூத்து அப்போது * इत्थमाकल्पिते मण्डले मध्यग: संजगौ वेणुना देवकीनन्दन:—இத்தமாகல்பிதே மண்டலே மத்யகஃ ஸஞ்ஜகௌ வேணுநா தேவகீ நந்தநஃ * என்று, அந்த ராஸக்ரீடா மண்டலத்தின் நடுவேயிருந்துகொண்டு கண்ணன் அற்புதமாக வேணுகானம் செய்வனாயிற்று. அப்போது அவ்வாய்ச்சிகளுக்குண்டான ப்ரேமம் பேச்சுக்கு நிலமன்றே. அப்படி வாசமகோசரமான ப்ரேமத்தையுடையவர்களான ஆய்ச்சிகளின் உள்ளமும் கண்ணபிரானது திருவுள்ளமும் எந்த நிலையிலிருந்திருக்குமென்று அவன் தன்னையே கேட்குமத்தனையிறே.

ஸீமந்திநீ—என்று ஸ்த்ரீஸாமாந்யப்பெயர்.

இங்ஙனே அழகரை நோக்கிக் கேள்வி கேட்ட ஆசிரியர்க்கு என்ன ஸமாதாநம் கிடைத்திருக்கு மென்னில்; ‘இப்போது நீரும் நாமும் கலந்து பரிமாறுகையில் நம்மிருவருடைய உள்ளமும் என்ன நிலையிலிரா நின்றதோ இந்த நிலைதான் அப்போது மென்று கொள்ளீர்’ என்கிற ஸமாதானமே கிடைத்திருக்கும். 113

इङ्गितं निमिषितं च तावकं रम्यमद्भुतमतिप्रियङ्करम् ।
तेन कंसमुखकीटशासनं सुन्दराल्पकमपि प्रशस्यते ॥११५॥

இங்கிதம் நிமிஷிதம் ச தாவகம் ரம்யமத்புத மதிப்ரியங்கரம்,
தேந கம்ஸமுக கீடசாஸநம் ஸுந்தரால்பகமபி ப்ரசஸ்யதே. 115

* * * க்ருஷ்ணாவதாரத்தில் * தேனுகன் பிலம்பன் காளிய னென்னும் தீப்பப் பூடுகளடங்க வுழக்கினதும் * வார்கடாவருவியானை மாமலையின் மருப்பிணைக்குவடி றுத்துருட்டி ஊர்கொள் திண்பாகனுயிர் செகுத்து அரங்கின் மல்லரைக் கொன்று கஞ்சனைத் தகர்த்ததும் முதலான துஷ்க்ருத் விநாசக சரிதைகள் விசேஷமாகவுண்டு; இவை ஸர்வ சக்தனான எம்பெருமானுக்கு க்ரிமி கீட நிரஸநப்ராயமே யல்லது விக்ரமச் செயலில் சேர்ந்தவையல்ல. அதிமாநுஷஸ்தவத்திலே * या कंसमुख्यनृपकीटनिबर्हणोत्था सा निर्जितत्रिजगतस्तव नैव कीर्तिः—யா கம்ஸ முக்ய ந்ருப கீட நிபர்ஹணோத்தா ஸா நிர்ஜித த்ரிஜகதஸ் தவ நைவ கீர்த்தி: * என்று ஸ்பஷ்டமாகவே யருளிச்செய்யப்பட்டது. உண்மை இங்ஙனே யிருந்தும் கம்ஸவதம் முதலான கீட நிபர்ஹணங்களையும் ஸ்தோதாக்களான பக்தர்கள் புகழ்ந்து பேசுகிறார்களே, இது எங்ஙனே? என்று ஒரு சங்கை தோன்றக்கூடியதுண்டு; அதற்குப் பரிஹார முணர்த்துகிறாரிந்த ச்லோகத்தில். செய்கிற செயல் சிறிதா பெரிதா என்று பாரார் பக்தர்கள்; செய்தவன் யாவன்? என்று அஃதொன்றையே பார்ப்பர்கள்; எம்பெருமான் செய்தது, கண்ணபிரான் செய்தது என்று தெரிய வந்தால் சிறிது பெரிதென்கிற வாசியின்றிக்கே ஸகல சரிதங்களையும் ஸமரீதியாகவே புகழ்ந்து பேசக் கடமைப்பட்டவர்கள் பக்தர்கள்—என்கிற பரமார்த்தம் இதில் வெளியிடப்படுகின்றது.

ஹே ஸுந்தர! இங்கிதம் நிமிஷிதஞ்ச தாவகம்—அழகரே! இங்கிதமோ வீக்ஷிதமோ எதுவாகிலுமாம்; தேவரீருடையதாயிருக்கு மத்தனையே வேண்டுவது. அபிப்ராயாநுரூபமான சேஷ்டைக்கு இங்கிதமென்று பெயர். கண்ணிமைத்தலுக்கு நிமிஷிதமென்று பெயர். எங்களுக்கு சரித்ரபர்யந்தம் வேண்டா; இங்கித நிமிஷிதங்களே போதும் உருகுகைக்கு—என்கைக்காக இவை சொல்லுகிறபடி.

ரம்யம் அத்புதம் அதிப்ரியங்கரம்—தேவரீருடைய தெல்லாம் ரமணீயமும் அத்புதமும் பரம போக்யமுமா யிருக்குமிறே.

தேந—இக் காரணம் பற்றியே.

கம்ஸமுககீடசாஸநம் அல்பகமபி ப்ரசஸ்யதே—கம்ஸன் முதலிய புழுக்களைத் தண்டித்ததுங்கூட சிறுச்சேவகமாயிருக்கச் செய்தேயும் குலாவப்படுகிறது. நம்மாழ்வார் திருவாய்மொழியில் (5-10-2) * அதுவிதுவுது வென்னலாவனவல்ல என்னையுன் செய்கை நைவிக்கும் * என்றருளிச்செய்த பாசுரத்தின் விவரணமாயிற்று இந்த ச்லோகம்.

115

वाराणसीदहनपौण्ड्रकभौमभङ्गकल्पद्रुमाहरणशङ्करजृम्भणाद्याः ।
अन्याश्च भारतबलक्रथनादयस्ते क्रीडास्सुसुन्दरभुज ! श्रवणामृतानि ॥११६॥

வாராணஸீ தஹந பௌண்ட்ரக பௌமபங்க
கல்பத்ருமாஹரண சங்கர ஜ்ரும்பணாத்யா:,
அந்யாச்ச பாரத பலக்ரதநாதயஸ் தே
க்ரீடாஸ் ஸுஸுந்தர புஜ! ச்ரவணாம்ருதாநி. 116

*** கீழ் ச்லோகத்தில் 'அல்பகமபி' என்ருரே; அல்பமன்றிக்கே அநல்பமென்று மதிக்கக்கூடிய சேஷ்டிதங்களும் சிலவுண்டே; அங்ஙனேயுள்ள சிலவற்றையெடுத்துரைத்து இவையெல்லாம் கர்ணமிருதமான சரித்திரங்களென்கிருரிதில்.

வாராணஸீ தஹந பௌண்ட்ரகபங்க = பௌண்ட்ரக பங்கம் முன்பும் காசீதஹனம் பின்பும் நடந்ததாகையாலே பௌண்ட்ரக பங்கத்தை முன்னே யநுஸந்திப்பது. பௌண்ட்ரகனென்பானேரரசன் வாஸுதேவ னென்று பேர்பெற்றிருந்தான். பல மூடர்கள் திரண்டு 'நீ தான் ஸாக்ஷாத் வாஸுதேவ பரமாத்மா' என்று அவனைப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். அவனும் தன்னையே வாஸுதேவனுக மயங்கி மார்பு நெறித்துச் சங்கு சக்கரம் கிரீடம் முதலியவற்றைச் செய்வித்துத் தானணிந்து கொண்டு தூதனையழைத்து 'நீ க்ருஷ்ணனிடம் போய் என் பெயரைச் சொல்லி இன்னுன் வாஸுதேவனுயிருக்க நீ அவனுடைய சங்கு சக்கரங்களைத் தரிக்கக் கூடாது; இன்று முதல் விட்டுவிடவேண்டியது; இல்லையாகில் யுத்தஞ் செய்ய வருக – என்று சொல்லவேண்டியதென்று சொல்லியனுப்ப, அங்ஙனமே அந்தத் தூதன் வந்து க்ருஷ்ணனிடம் அச் செய்தியைச் சொல்ல, கண்ணபிரான் சீறிச் சினந்து பெரிய திருவடியின் மீதேறிச் சென்று போர் செய்து பௌண்ட்ரகனைத் தனது திருவாழியினுல் தலையறுத்துக் கொன்ருெழித்தான். இச் செய்தியை அவனது தோழனுன காசி மன்னன் கேள்விப்பட்டு க்ருஷ்ணனையும் மற்றும் யாதவர்களையும் த்வாரகையையும் அழித்திடுவதாகச் சங்கற்பித்து ஒரு பிசாசத்தை ஸ்ருஷ்டித்து ஏவலிட்டான்; அப்பிசாசம் த்வாரகைக்கு வந்து பாதிக்கத் தொடங்கிற்று; இச்செய்தியைச் செவியுற்ற கண்ணபிரான் அப்போது அக்ஷக்ரீடையில் வ்யாஸக்தனு யிருந்ததனுல் தானெழுந்து ஒன்று செய்யாமலே திருவாழியாழ்வானை ஏவியிட, அவன் அப்பிசாசத்தைத் துரத்திக்கொண்டு காசியளவும் போய் அதையும் அத்துடன் சேர்ந்துவந்த கணங்களையும் அந்தக் காசிப் பட்டணத்தையும் நீருக்கி மீண்டனனென்ற வரலாறு அறியத்தக்கது.

பௌமபங்க கல்பத்ருமாஹரண—பௌமனென்று நரகாஸுரனுக்குப் பெயர்; எம்பெருமான் வராஹாவதாரஞ் செய்து பூமியைக் கோட்டாற் குத்தியெடுத்தபொழுது எம்பெருமானுடைய ஸ்பர்சத்தால் பூமி தேவிக்குக் குமாரனுய்ப் பிறந்தவனும் அஸமயத்தில் சேர்ந்து பெறப்பட்டதனுல் அஸுரத் தன்மை பூண்டவனுமான நரகனென்பவன் ப்ராக்ஜோதிஷ மென்னும் பட்டணத்திலிருந்து கொண்டு ஸகல ப்ராணிகளையும் நலிந்து தேவ ஸித்த கந்தர்வாதிகளுடைய கன்னிகைகளையும் பற்பலரை பலாத்காரமாய் அபஹரித்துக் கொண்டுபோய்த் தான் மணம்புணரத் தன்மாளிகையிற் சிறை வைத்து, வருணனது குடையையும் மந்தரகிரி சிகரமான ரத்ன பர்வதத்தையும் தேவ மாதாவான அதிதி தேவியின் குண்டலங்களையும் கவர்ந்து போனதுமன்றி இந்திரனுடைய ஐராவத யானையையும அடித்துக்கொண்டு போக ஸமயம் பார்த்திருக்க, அஞ்சிவந்து பணிந்து முறையிட்ட இந்திரன் வேண்டுகோளால் கண்ணன் கருடனை வரவழைத்து ஸத்யபாமையுடனே தான் கருடன் மேலேறி அந்நகரேகிச் சக்ராயுதத்தைப் பிரயோகித்து அவனது மந்த்ரியான முரன் முதலிய பல அஸுரர்களையும் இறுதியில் அந்த நரகாஸுரனையும் அறுத்துத்தள்ளி யழித்து, அவன் சிறைப்படுத்தியிருந்த பதினுருயிரத்தொரு நூறு கன்னிகைகளையும் ஆட்கொண்டு, நரகனுல் முன்பு கவரப்பட்ட அதிதி குண்டலங்களை அவ்வதிதி தேவிக்குக் கொடுக்கும்பொருட்டு ஸத்யபாமையுடனே கருடன் தோள்மே லேறிக்கொண்டு தேவலோகத்துக்குச் செல்ல, அங்கு இந்திராணி ஸத்யபாமைக்கு ஸகல உபசாரங்களைச் செய்தும் தேவர்க்கே உரிய பாரிஜாத புஷ்பம் மானிடப் பெண்ணுகிய இவளுக்குத் தகாதென்று ஸமர்ப்பிக்கவில்லையாதலின் அதனைக் கண்டு பாமை விருப்புற்றவளாய் நாதனை நோக்கி இந்தப் பாரிஜாத தருவை த்வாரகைக்குக் கொண்டுபோக வேண்டுமென்ன, உடனே மரத்தை வேரோடு பெயர்த்துப் பெரிய திருவடி தோளின்மேல் வைத்தருளி, அப்

பொழுது இந்திராணி தூண்டிவிட்டதனால் வந்து மறித்துப் போர் செய்த இந்திரனை ஸகல தேவ ஸைந்யங்களுடன் சங்கநாதத்தாலே பங்கப்படுத்திப் பின்பு பாரிஜாத தருவை த்வாரகைக்குக் கொண்டுவந்து ஸத்யபாமையின் தோட்டத்தில் நாட்டியருளினன் என்ற வரலாறு அறிக.

சங்கரஜ்ரும்பணத்யாஃ—பாணாஸுர யுத்தத்திலே ஜ்ரும்பகாஸ்த்ர ப்ரயோகம் பண்ணிச் சிவபெருமானைக் கொட்டாவி விட்டுக்கொண்டு கிடக்கும்படி செய்தது முதலான.

அந்யாச்ச பாரதபலக்ரதநாதயஃ தே க்ரீடாஃ— * மலைபுரை தோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலர் குலைய நூற்றுவரும் பட்டழியப் பார்த்தன் சிலை வளையத் திண்டேர் மேல் முன்னின்று செய்த லீலைகளுமெல்லாம்.

ச்ரவணாம்ருதாநி—தேவரீர் திறத்திலே விஸ்மயப் படத் தக்கவை யல்லவாகிலும் ஒவ்வொரு சரிதையும் செவிக்கு அமுதமாயிருப்பவை யன்றோ. * செவிகளாலார நின் கீர்த்திக் கனியென்னுங் கவிகளே காலப்பண் தேனுறைப்பத் துற்றிப், புவியின் மேல் பொன்னெடுஞ் சக்கரத் துன்னையே அவிவின்றி யாதரிக்குமென தாவியே * என்ற திருவாய்மொழிப் பாசுரம் (2979) இங்கே அநுஸந்தேயம். ஆக இவ்வளவும் ஸ்ரீ க்ருஷ்ணாவதாராநுபவமாய்த் தலைக்கட்டிற்று. 116

त्वं हि सुन्दर ! वनाद्रिनाथ ! हे वेङ्कटाह्वयनगेन्द्रमूर्धनि ।
देवसेवितपदाम्बुजद्वयः संश्रितेभ्य इह तिष्ठसे सदा ॥११७॥

த்வம் ஹி ஸுந்தர! வநாத்ரிநாத! ஹே
வேங்கடாஹ்வய நகேந்த்ர மூர்த்தநி,
தேவ ஸேவித பதாம்புஜத்வயஃ
ஸம்ச்ரிதேப்ய இஹ திஷ்டஸே ஸதா. 117

*** மத்ஸ்யாவதாரம் தொடங்கி விபவாவதாரங்களை அடைவே அநுபவித்து வாராநின்றவர் கீழ் ச்லோகத்தோடே க்ருஷ்ணாவதாராநுபவத்தைத் தலைக்கட்டினார்; அநந்தரம் பவிஷ்யத்தான கல்கியவதாரத்தைப்பற்றி யருளிச்செய்ய ப்ராப்தமாயிருந்தும் அதை மேலே (120ல்) அருளிச் செய்பவராய் இடையில் மூன்று ச்லோகங்களினால் திருமலை, பெருமாள் கோயில், திருவரங்கம் பெரிய கோயிலாகிற மூன்று திருப்பதிகளை யநுபவிக்கிறார். கோயில் திருமலை பெருமாள் கோயில் என்று இங்ஙனே க்ரமமிருக்க வ்யுத்க்ரமமாக அருளிச் செய்வதேன்? எனில்; இதுவும் ஒரு க்ரமத்திலே சேர்ந்திருக்குமாயிற்று. "தென்னனுயர் பொருப்பும் தெய்வ வடமலையு மென்னுமிவையே முலையா" (பெரிய திருமடல்) என்கிறபடியே தெற்குத் திருமலையான இத்திருமலையோடே வட திருவேங்கட மலைக்கு ஒரு சேர்த்தியுண்டாகையாலே அதனை முந்துறவெடுத்தார்; இவ்விரண்டு திருமலைகளோடே ஹஸ்திகிரியாகிற திருவத்திமாமலைக்கும் பர்வதத்வேந ஒரு சேர்த்தியுண்டாகையாலே அடுத்தபடி அதனையெடுத்தார். அனந்தரம் பாரிசேஷ்யாத் கோயில் அநுஸந்திக்கப்படுகிறது.

ஹே வநாத்ரி நாத ஸுந்தர!—வாரீர் திருமாலிருஞ்சோலைத் தலைவரான அழகரே!. த்வம்—தேவரீர்.

வேங்கடாஹ்வய நகேந்த்ர மூர்த்தநி—திருவேங்கடமென்னுந் திருமலையினுச்சியிலே.

தேவ ஸேவித பதாம்புஜ த்வயஸ் ஸந்—* சுரர்கள் முனிக்கணங்கள் விரும்புந் திருவேங்கடத்தானே * என்றும், * மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான் * என்றும் சொல்லுகிறபடியே வானவர் தொழுந் திருவடித்தாமரையிணையை யுடையீராய்க்கொண்டு.

இஹ ஸம்ச்ரிதேப்யஸ் ஸதா திஷ்டஸே—இத்தலத்திலே அடியவர்களுக்கு ஸ்வாபிப்ராயத்தைத் தெரிவித்துக்கொண்டு என்ஞான்று மெழுந்தருளி யிருக்கிறீர். ஸ்வாபிப்ராயமாவது—ஸம்ஸாரம் கிழங்கெடுத்தாலல்லது பேரேன் என்பதாம். 'ஸம்ச்ரிதேப்ய:' என்கிற சதுர்த்தியும், 'திஷ்டஸே' என்கிற ஆத்மநே பதமும் வியாகரண ரீதியில் இங்ஙனே பொருள் பெறுவிக்கும் * प्रकाशनस्थेयाख्ययोश्च * श्लाघह्नुङ्स्थाशपां ज्ञीप्स्यमानः * என்னும் பாணிநி ஸூத்ரங்களை இங்கே அநுஸந்திப்பது. வரதராஜஸ்தவத்திலும் * विश्वस्मैवं करिगिरिपुरस्तिष्ठस इह * என்று ப்ரயோகமுள்ளது. பட்டரும் ஸ்ரீகுணரத்நகோசத்திலே * யத் தஸ்மை திஷ்டதேங்ய: * என்று ப்ரயோகித்தது இக்கட்டளையிலேயாம். 117

हस्तिशैलनिलयो भवन् भवान् साम्प्रतं वरदराजसाह्वयः ।
इष्टमर्थमनुकम्पया ददद्विश्वमेव दयते हि सुन्दर ! ॥११८॥

ஹஸ்திசைலநிலயோ பவந் பவாந் ஸாம்ப்ரதம் வரதராஜ ஸாஹ்வய:,
இஷ்டமர்த்த மநுகம்பயா ததத் விச்வமேவ தயதே ஹி ஸுந்தர. 118

* ** ஸ்ரீ ஹஸ்திசைல சிகரோஜ்ஜ்வல பாரிஜாதத்தின் ஔதார்யத்தை யநுபவிக்கிறாரிதில்.

ஹே ஸுந்தர பவாந் ஸாம்ப்ரதம் வரதராஜஸாஹ்வய: ஹஸ்திசைல நிலயோ பவந்—வாரீர் அழகரே! தேவரீர் இப்போது வரந்தரும் பெருமாளென்று திருநாமமுடையீராய் திருவத்திமாமலையில் வாழ்பவராய்க்கொண்டு.

அநுகம்பயா இஷ்டம் அர்த்தம் ததத் ஸந்—திருவருளாலே அர்த்திதார்த்த பரிதாந தீக்ஷிதராய்.

விச்வமேவ ஹி தயதே—உலகுக் கெல்லாம் அருள்புரியா நின்றீர்.

சதுர்முகப்ரஹ்மா தானொருவன் ஸாக்ஷாத்கரித்து அநுபவித்துக் களிப்பதற்காக அச்வமேதயாகஞ் செய்து எம்பெருமானைப் பெற்றான்; * चातकस्त्रिचतुरान्पयः कणान् याचते जलधरं पिपासया । सोऽपि पूरयति विश्वमम्भसा हन्तहन्त ! महतामुदारता—சாதகஸ் த்ரிசதுராந் பய:கணாந் யாசதே ஜலதரம் பியாஸயா, ஸோபி பூரயதி விச்வமம்பஸா ஹந்தஹந்த! மஹதாமுதாரதா * என்றும் * நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குமாங்கே பொசியுமால் * என்றும் சொல்லுகிறபடியே பேறு உத்தேஷ்டாவான வொருவனளவிலே சுவறிப்போகாமல் உலகமெல்லாம் பேரருள் பெற்று வாழநின்றது என்றதாயிற்று. 118

मध्येक्षीरपयोधि शेषशयने शेषे सदा सुन्दर ! त्वं तद्वैभवमात्मनो भुवि भवद्भक्तेषु वात्सल्यतः ।
विश्राण्याखिलनेत्रपात्रमिह सन् सह्योद्भवायास्तटे श्रीरङ्गे निजधाम्नि शेषशयने शेषे वनाद्रीश्वर ! ॥११९॥

மத்யேக்ஷீரபயோதி சேஷசயநே சேஷே ஸதா ஸுந்தர!
த்வம் தத்வைபவமாத்மநோ புவி பவத் பக்தேஷு வாத்ஸல்யத:.
விச்ராண்யாகிலநேத்ரபாத்ரமிஹ ஸந் ஸஹ்யோத்பவாயாஸ் தடே
ஸ்ரீரங்கே நிஜதாம்நி சேஷசயநே சேஷே வநாத்ரீச்வர! 119

* * * * குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி வடதிசை பின்பு காட்டித் தென்திசை யிலங்கை நோக்கிக் கடல் நிறக் கடவுளெந்தை யரவணைத் துயிலுமாற்றைத் திருவரங்கம் பெரிய கோயிலிலே அநுபவித்து இனியராகிறார். * க்ஷீர

ஸாகர தரங்க சீகராஸார தாரகித சாருமூர்த்தயே, போகி போக சயநீய சாயிநே மாதவாய * என்கிறபடியே திருப்பாற்கடலில் அரவணைமேல் பள்ளிகொண்டருளுங் கோலம் காட்டிலெறித்த நிலாவாகவன்றோ வுள்ளது; அது அங்ஙனாகாமே கண்படைத்தாரெல்லாரும் கண்டு களித்து வாழலாம்படி * திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையா லடிவருடப் பள்ளிகொள்கின்றபடியைப் பேசுகிறாராயிற்று.

ஹே வநாத்ரீச்வர ஸுந்தர!—வாரீர் திருமாலிருஞ்சோலைத் தலைவரான அழகரே!

மத்யேக்ஷீரபயோதி சேஷசயநே ஸதா சேஷே—திருப்பாற்கடலினிடையே அரவணைப் பள்ளியிலே அநவரதம் பள்ளிகொண்டருளாநின்றீர்.

ஆத்மந: தத் வைபவம் புவி பவத்பக்தேஷு விச்ராண்ய—சேஷசாயித்வ ரூபமான அந்த ஸ்வகீய வைபவத்தை இந் நிலவுலகத்திலும் பக்தர்கள் பக்கலில் வாத்ஸல்யாதிசயத்தாலே காட்டிக் கொடுக்கத் திருவுள்ளம்பற்றி.

அகில நேத்ர பாத்ரம் ஸந்—எல்லாருடைய கட்புலனுக்கும் இலக்காய்க்கொண்டு.

இஹ ஸஹ்யோத்பவாயாஸ் தடே—இங்கே திருக்காவேரிக்கரையில்.

நிஜதாம்நி ஸ்ரீரங்கே—விசேஷித்துத் தன்னிலமான திருவரங்கம் பெரிய கோயிலிலே.

சேஷசயநே சேஷே—அரவணைமேல் பள்ளிகொண்டருளாநின்றீர். 119

कल्कीभविष्यन् कलिकल्कदूषितान्दुष्टानशेषान् भगवन्! हनिष्यसि।
स एष तस्यावसरस्सुसुन्दर: प्रशाधि लक्ष्मीश! समक्षमेव न: ॥१२०॥

கல்கீபவிஷ்யந் கலிகல்கதூஷிதாந்
துஷ்டாநசேஷாந் பகவந்! ஹநிஷ்யஸி,
ஸஏஷ தஸ்யாவஸரஸ்ஸுஸுந்தர:
ப்ரசாதி லக்ஷ்மீச ஸமக்ஷமேவ ந:. 120

* * * கல்கியவதாரம் பவிஷ்யத்தாகையாலே அதனை ஒரு சமத்காரமாக அநுபவிக்கிறாரிதில். என்றைக்கோ செய்வதாகத் திருவுள்ளம்பற்றி யிருக்கிற அந்த அவதாரத்தை மஹா க்ரூரர்கள் மலிந்துள்ள இக்காலத்திலேயே செய்தருள்வது நன்று என்கிறார்.

ஹே லக்ஷ்மீச பகவந்!—ச்ரிய: பதியான திருமாலிருஞ்சோலைப் பெருமானே!

கல்கீபவிஷ்யந்—இனி யொருகால் கற்கியவதாரம் செய்து.

கலிகல்க தூஷிதாந் அசேஷாந் துஷ்டாந் ஹநிஷ்யஸி—கலிகல்மஷ தூஷிதர்களான ஸகல துஷ்டர்களையும் தொலைத்தருளப் போகிறீர். அதற்கொரு ஸமய ப்ரதீக்ஷை வேணுமோ?

தஸ்ய ஸஏஷ: அவஸர: ஸுஸுந்தர:—அதற்கு இந்த ஸமயந்தான் மிக வாய்ப்பானது.

ந: ஸமக்ஷமேவ ப்ரசாதி—எங்கள் கண்முகப்பே பாபிகளைத் தொலைத்தருளவேணும். கல்கியவதாரஞ்செய்து தொலைக்கவேண்டிய பாபிகள் மலிந்திருப்பதாக ஆழ்வான் திருவாக்கில் வெளிவந்தால் அக்காலத்தின் கொடுமையை என்னென்போம்! 120

ईदृशास्त्वदवतारसत्तमास्सर्व एव भवदाश्रितान् जनान्।
त्रातुमेव न कदाचिदन्यथा तेन सुन्दर! भवन्तमाश्रये ॥१२१॥

ஈத்ருசாஸ் த்வதவதார ஸத்தமா: ஸர்வ ஏவ பவதாச்ரிதாந் ஜநாந்,
த்ராதுமேவ ந கதாசிதந்யதா தேந ஸுந்தர பவந்தமாச்ரயே. 121

* * * இந்த ச்லோகத்தினால் திருமாலிருஞ்சோலையழகர் திருவடிகளிலே ஸ்வாபிமத ஸித்திக்காக ப்ரபத்தியும் செய்தருளுகிறார். ப்ரபத்திக்கு அபேக்ஷிதங்களான குண விசேஷங்களையெல்லாம் கீழே பஹு முகமாகப் பரக்க அருளிச்செய்து இதிலே சரணம் புகுகிறார்.

ஹே ஸுந்தர ஈத்ருசாः த்வதவதாரஸத்தமாः ஸர்வே ஏவ பவதாச்ரிதாந் ஜநாந் த்ராது மேவ— அழகரே? இப்படிப்பட்ட உம்முடைய மிகவும் சிறந்த திருவவதாரங்களெல்லாமும் * परित्राणाय साधूनाम् * என்கிற வாயோலைப்படியே ஸாதுபரித்ராணத்திற்காகவேயாம்.

கதாசித் அந்யதா ந—அவதாரத்திற்கு இதுவே ப்ரயோஜனமல்லது வேறு ப்ரயோஜன மில்லை யொருபோதும்.

தேந பவந்தம் ஆச்ரயே—இத் திருமலையிலே வந்து திருவவதரித்திருப்பதும் ஸாது பரித்ராணத்திற்காகவே யாதலால் அடியேனையும் ஒரு ஸாதுவாகத் திருவுள்ளம்பற்றி ரக்ஷித்தருளவேணுமென்று தேவரீரைச் சரணம் புகுகிறேன் என்றாராயிற்று. 121

त्वामामनन्ति कवयः करुणामृताब्धिं त्वामेव संश्रितजनिघ्नमुपघ्नमेषाम् ।
येषां व्रजंस्त्विह हि लोचनगोचरत्वं हे सुन्दराह्व ! परिचस्करिषे वनाद्रिम् ॥१२२॥

த்வாமாமநந்தி கவயः கருணாம்ருதாப்திம்
த்வாமேவ ஸம்ச்ரித ஜநிக்ந முபக்ந மேஷாம்,
யேஷாம் வ்ரஜந்நிஹ ஹி லோசந கோசரத்வம்
ஹை ஹே ஸுந்தராஹ்வ! பரிசஸ்கரிஷே வநாத்ரிம். 122

* * * கீழ் ச்லோகத்தில் பண்ணின சரணாகதி ஸபலமாகியே தீரவேணுமென்பதற்காக நான்கு ச்லோக மருளிச்செய்கிறார்.

ஹே ஸுந்தராஹ்வ த்வாம் கவயः கருணாம்ருதாப்திம் ஆமநந்தி—வாரீர் அழகரே! அப்ரத்யக்ஷ தத்வார்த்த ஸாக்ஷாத்காரக்ஷமர்களான பராசர பாராசர்யாதிகள் தேவரீரை அருட்கடலாகச் சொல்லுகின்றார்கள். [கவயः] " कविः क्रान्तदर्शी " என்னக்கடவதிறே.

த்வாமேவ ஸம்ச்ரித ஜநிக்நம் ஏஷாம் உபக்நம் (ஆமநந்தி)—ஆச்ரிதர்களுக்கு ஸம்ஸார விமோசகராகவும், அவர்களுக்கு ஆச்ரய பூதராகவும் தேவரீரையே சொல்லுகிறார்கள். எவர்களுக்கென்னில்;

இஹ ஹி யேஷாம் லோசந கோசரத்வம் வ்ரஜந் வநாத்ரிம் பரிசஸ்கரிஷே—இந் நிலத்திலே யாவர் சிலர்க்குக் கட்புலனுக்கிலக்காகித் திருமாலிருஞ் சோலைமலையைப் பரிஷ்க்ருத மாக்கியருள்கின்றீரோ.

பராசர பாராசர்யாதிகளான மஹர்ஷிகளின் வாக்கு பொய்யாகாதபடி அருள் புரிய வேணுமென்றதாயிற்று. 122

अशक्यं नो किञ्चित्तव न च न जानासि निखिलं दयालुः क्षन्ता चास्यहमपि न चागांसि तरितुम् ।
क्षमोऽतस्त्वच्छेषो ह्यगतिरिति च क्षुद्र इति च क्षमस्वैतावन्तोऽपलमिह हरे ! सुन्दरभुज ! ॥१२३॥

அசக்யம் நோ கிஞ்சித் தவ நச ந ஜாநாஸி நிகிலம்
தயாலுः க்ஷந்தா சாஸி, அஹமபி ந சாகாம்ஸி தரிதும்,
க்ஷமோதஸ் த்வச்சேஷோ ஹ்யகதிரிதி ச க்ஷுத்ர இதி ச
க்ஷமஸ் வைதாவந்நோபலமிஹ ஹரே ஸுந்தரபுஜ! 123

ஹரே ஸுந்தரபுஜ தவ அசக்யம் நோ கிஞ்சித்—வாரீர் சுந்தரத் தோளுடைய பெருமாளே! ஸர்வசக்தரான தேவரீருக்குச் செய்யமுடியாததொன்றுமில்லை காணீர். ஸங்கல்ப மாத்ரத்தாலே எதையும் செய்யவல்லீரென்கை.

நிகிலம் ந ச ந ஜாநாஸி—சக்தியில் குறையில்லாதாப்போலே ஜ்ஞானத்திலும் குறையில்லை கிடீர்; * உள்ளுவாருள்ளிற்றெல்லா முடனிருந்தறிதி * என்னப்பட்ட தேவரீர் அறியாததொன்றில்லை.

தயாலுः க்ஷந்தா ச அஸி—ஜ்ஞாந சக்திகளுக்குமேலே தயாகுணமும் க்ஷமாகுணமு முடையீராயிராநின்றீர்.

தேவரீர் படியை விண்ணப்பஞ்செய்த அடியேனே என் படியையும் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன், கேட்டருளீரென்று தம்படியையும் பேசுகிறார்;—

அஹமபி ஆகாம்ஸி தரிதும் நக்ஷமः—அடியேனோ செய்த பாபங்களை ப்ராயச்சித்தாதிகளால் போக்கிக்கொள்ள க்ஷமனாகின்றிலேன். பாவங்கள் கூடு பூரித்துக் கிடக்கிறேனென்கை.

அதः—தேவரீர் ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தத்வ தயாலுத்வ க்ஷமாநிதித்வாதி குணபூர்ணராயிருப்பதனாலும், அடியேன் பாபநிபர்ஹண க்ஷமனன்றிக்கே யிருப்பதனாலும்.

த்வச்சேஷ இதி அகதிரிதி க்ஷுத்ர இதி ச—தேவரீருக்கு சேஷப்பட்டவன், வேறு புகலற்றவன், பிறரும் கண்ணெடுத்துப் பார்க்கத்தகாத நீசனானவன் என்னுமிக் காரணங்கள் கொண்டும்.

க்ஷமஸ்வ—ஸர்வாபசாரங்களையும் க்ஷமித்தருளவேணும்.

நः இஹ ஏதாவத் பலம்—தேவரீருடைய ஜ்ஞான்சக்த்யாதிகளை அநுஸந்திப்பதும் அடியோங்களுடைய அஜ்ஞாந அசக்திகளை யநுஸந்திப்பதுமே இங்கு எங்கள் பக்கலுள்ள கைம்முதல் என்கை.

நான்காவது பாதத்தில் 'நோபலம்' என்றவிடத்து 'நः அபலம்' என்று பதம் பிரித்து 'நः ஏதாவத் அபலம் க்ஷமஸ்வ' என்று அந்வயிப்பாருமுளர். அபலமாவது அபசாரம். 123

लङ्कायुद्धहतान् हरीन् द्विजसुतं शम्बूकदोषान्मृतं सान्दीपन्यभिजं मृतं द्विजसुतान् बालांश्च वैकुण्ठगान् ।
गर्भे चार्जुनिसंभवं व्युदधरस्त्वेनैव रूपेण यः स्वामीष्टं मम मद्गुरोश्च ददसे नो किं वनाद्रीश्वर ! ॥१२४॥

லங்காயுத்தஹதாந் ஹரீந் த்விஜஸுதம் சம்பூக தோஷாந்ம்ருதம்
ஸாந்தீபந்யபிஜம் ம்ருதம் த்விஜஸுதாந் பாலாம்ச்ச வைகுண்டகாந்,
கர்ப்பஞ் சார்ஜுநிஸம்பவம் வ்யுததரஸ் ஸ்வேனைவ ரூபேண யः
ஸ்வாபீஷ்டம் மம மத்குரோச் ச ததஸே நோ கிம் வநாத்ரீச்வர ! 124

* * * பண்டு ராமக்ருஷ்ணாவதாரங்களிலே செய்தருளின அதிமாநுஷ மஹோபகார விசேஷங்களை யெடுத்துரைத்து, இப்படி விலக்ஷண சக்தியுக்தரான தேவரீர் எம்மபேக்ஷிதம் தலைக்கட்டாமையென்று ஒன்றுண்டோவென்கிறார்.

ஹேவநாத்ரீச்வர!—வாரீர் திருமாலிருஞ்சோலை யழகரே!

லங்காயுத்தஹதாந் ஹரீந்—இலங்கையில் நடந்த ராக்ஷஸ யுத்தத்திலே கொலையுண்டொழிந்த வானர முதலிகளையும்;

சம்பூக தோஷாத் ம்ருதம் த்விஜஸுதம்—தவம்புரியத் தகாத சூத்ர யோநியிலே பிறந்த சம்புகன் த்வம்புரிதலாகிற குற்றத்திற்குப் பலனாக அகால ம்ருத்யுவையடைந்த அயோத்யாவாஸி ப்ராஹ்மண குமாரனையும்;

ம்ருதம் ஸாந்தீபந்யபிஜம்— * மாதவத்தோன் புத்திரன் போய் மறிகடல் வாய் மாண்டானை * என்கிறபடியே ப்ரபாஸ தீர்த்தத்திலே மாண்டுபோன ஸாந்தீபநிபுத்ரனையும்;

வைதுண்டகாந் த்விஜஸுதாந் பாலாந் ச— * பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும் * என்கிற பெரியாழ்வார் பாசுரத்தில் சொல்லப்பட்டபடியே தன்னடிச் சோதி சேர்ந்த ப்ராஹ்மண புத்ரர்களான நான்கு சிசுக்களையும்;

ஆர்ஜுநிஸம்பவம் கர்ப்பஞ்ச— * மருமகன் தன் சந்ததியை உயிர்மீட்டு * என்றும் * உத்தரைதன் சிறுவனையு முய்யக்கொண்ட வுயிராளன் * என்றுமுள்ள பெரியாழ்வார் பாசுரங்களிற் பேசப்பட்டபடியே அச்வத்தாமாவின் அபாண்டவாஸ்த்ர ப்ரயோகத்திலுல் கரிக்கட்டையாய் விழுந்த அபிமன்யு புத்ரனையும். [அர்ஜுநஸ்ய அபத்யம் புமாந்—ஆர்ஜுநி:]

ய: த்வம் ஸ்வேனைவ ரூபேண வ்யுததர:—யாவரொரு தேவரீர், பண்டிருந்த வடிவில் சிறிதும் குறையாமே சிதையாமே அப்படியே புநருத்தாரம் செய்தருளிற்றோ; அப்படிப்பட்ட தேவரீர்.

மம மத்குரோச் ச ஸ்வாபீஷ்டம் நோ தத்ஸே கிம்—அடியேனுக்கும் அடியேனது ஆசார்யரான எம்பெருமானார்க்கும் அபீஷ்டமானதைக் கொடுத்தருளாதொழியுமோ? அவச்யம் கொடுத்தருளுமென்கிற ப்ரத்யயமுள்ள தெமக்கு—என்றபடி. 124

आयोध्यिकान् सपशुकीटतृणांश्च जन्तून् किंकर्मणो नु बत ! कीदृशवेदानाढ्यान् ।
सायुज्यलभ्यविभवान्निजनित्यलोकान् सान्तानिकानगमयो वनशैलनाथ ! ॥१२५॥

ஆயோத்யிகாந் ஸபசுகீடத்ருணாம்ச்ச ஜந்தூந்
கிங்கர்மணோ நு பத ! கீத்ருச வேதநாட்யாந்,
ஸாயுஜ்ய லப்யவிபவாந் நிஜநித்ய லோகாந்
ஸாந்தாநிகாந் அகமயோ வநசைலநாத ! 125

* * * முனிவன் வேண்டத் திறல் விளங்குமிலக்குமனைப் பிரிந்ததனுல் தரிக்கமாட்டாதே யோரக்லேசித்த பெருமாள் ராஜ்யத்தை விட்டெழுந்தருளத் தொடங்கிய போது, அயோத்யா நகரத்து உயிர்களெல்லாம் பெருமாளைச் சரணமடைந்து 'தேவரீர் எங்குச் சென்றுலும் அடியோங்களையும் கூடவே அழைத்துக்கொண்டெழுந்தருள வேணும்' என்று வேண்ட, பெருமாள் அவர்களுடைய ஆர்த்தியைக் கண்டு திருவுள்ள முகந்து அப்படியே யென்றிசைந்து அனைவரையும் தன்னைப் பின்தொடர்ந்து வருமாறு பணித்தருளி ப்ரயாணப்பட்டார்; அப்பொழுது அந்நகரத்திருந்த மனிசர்மாத்திரமேயல்லாமல் பசுக்கள் பக்ஷிகள் முதலான ஸமஸ்தவஸ்து ஜாதமும் பெருமாளைப் பின் சென்றன. இப்படி பலரும் புடைசூழப் பெருமாள் ஸரயூநதியிலிறங்கித் தன்னடிச் சோதிக்கெழுந்தருளும்போது தம்மிடத்து இடையறுத அன்புகொண்டு பின்பற்றி ஸரயுவில் மூழ்கி உடம்பைத் துறந்த எல்லா வுயிர்கட்கும், ப்ரஹ்ம லோகத்துக்கு மேற்பட்டதாய் பரமபதம்போலவே அபுநராவ்ருத்தியாகிற சிறப்புடைத்தான ஸாந்தானிகமென்னும் லோகத்தை யளித்தருளிஞரென்று இதிஹாஸமுள்ளது. இதனை "அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி" என்கிற பாசுரத்திலே குலசேகரப் பெருமாள் சுருங்கவருளிச்செய்தார். திருவாய்மொழியில் * கற்பாரி ராமபிரானையல்லால் * (7–5–1) என்கிற பாசுரத்திற்கு இவ் விதிஹாஸத்தை ப்ரமேயமாக்கி நிர்வஹிக்கு மாசாரியர்களும் சிலருளர். இவ்விதிஹாஸத்தை யுட்கொண்டே இந்த ச்லோகமருளிச்செய்கிறுர்.

ஹே வநசைலநாத !—வாரீர் திருமாலிருஞ் சோலையழகரே !

ஆயோத்யிகாந் ஸபசுகீடத்ருணாம்ச்ச ஜந்தூந்—அயோத்யாவாஸிகளாய், பசுக்களும் கீடங்களும் புற்களுமுட்பட ஸகல ஜந்துக்களையும்.

ஸாயுஜ்யலப்யவிபவாந் நிஜநித்ய லோகாந் ஸாந்தாநிகாந் அகமய:— ஸாயுஜ்யமென்னும் மோக்ஷத்திலே அடையக்கூடிய செல்வம் மல்கிய ஸ்ரீவைகுண்ட துல்ய பகவதநுபவாநுகூலங்களான ஸாந்தாநிகமென்னும் லோக விசேஷங்களை ப்ராபிக்கச் செய்தருளிற்றே; இது,

கிங்கர்மணோ நு கீத்ருச வேதநாட்யாந்—அந்த ஜந்துக்களை என்ன கர்மயோகமுடையனவாகவும் எவ்விதமான ஜ்ஞாநயோக முடையனவாகவும் திருவுள்ளம்பற்றியோ? கர்மயோகாதிகளொன்றிலும் அந்வயமின்றிக்கே யிருக்கச் செய்தேயும் ஸ்வகீய நிர்ஹேதுக க்ருபையாலேயிறே செய்தருளிற்று; அங்ஙனே இங்குமானாலாகாதோ என்று கருத்து.

இந்த ச்லோகத்தின் முதற்பதத்தை **आयोध्यगान्** என்று கொண்டார் ஸம்ஸ்க்ருத வ்யாக்யாதா; " अयोध्यासंबन्धिनो देशाः—आयोध्याः ; तान् गच्छन्तीति तथोक्ताः । साक्षादयोध्यावासिन एव न ; अयोध्यासंबन्धिदेशवासिनोऽपीत्यर्थः " என்றெழுதியுள்ளார். இது க்லிஷ்டமான பாடம்; **आयोध्यिकान्** என்பதே பெரியார் கொண்ட பாடமாகக் காண்கிறது. **अयोध्यायां भवा :—आयोध्यिकाः ।**

மூன்றுவது பாதத்தில் बत என்கிற ஸ்தானத்தில் वद என்றும் பாடமுண்டு, **किंकर्मणः** என்பது ஏகபதம். **किंकर्मणो मत्वा कीदृशवेदनाढ्यान् मत्वा सान्तानिकानगमयः—**என்று. (மத்வா என்பதை அத்யாஹரித்துக்கொண்டு) அந்வயிப்பது. அத்யாஹாரம் செய்யாதொழியினும் தாத்பர்யமதுவே தேறும். 125

हरितवारणभृत्यसमाह्वयं करिगिरौ वरदस्त्वमपूर्विकाम् ।
दृशमलम्भय एव हि सुन्दर ! स्फुटमदाश्च वरान् शतमीदृशान् ॥१२६॥

ஹரித வாரணப்ருத்ய ஸமாஹ்வயம்
கரிகிரௌ வரதஸ் த்வமபூர்விகாம்,
த்ருச மலம்பய ஏவஹி ஸுந்தர !
ஸ்புட மதாச்ச பரச்சத மீத்ருசம். 126

* * * ஸ்ரீஹஸ்திசைல சிகரோஜ்ஜ்வல பாரிஜாதமான தேவப் பெருமாளுக்கும் திருமாலிருஞ்சோலையழகர்க்கு முண்டான ஐக்கியத்தை ஒரு விலக்ஷண ப்ரக்ரியையாலே யருளிச்செய்கிறார். பச்சைவாரணதாஸர் என்றொரு பரம பாகவதோத்தமர் திருக்கச்சிநம்பிகளுக்கு தேஹாநுபந்தமுடையவர் இருந்தார்; [இவர் திருக்கச்சிநம்பிகளுக்குப் பிதாவென்று சிலரும், பிதா மஹரென்று சிலரும், பித்ருவ்யரென்று சிலரும் சொல்லக் கேள்வி.] இப்பெரியார் பிறவிக்குருடராயிருந்து தேவப் பெருமாளுடைய திருவருளாலே கண் பெற்றாரென்று இதிஹாஸமுள்ளது.' ஆளவந்தார் தேவப்பெருமாள் விஷயமாக அருளிச்செய்த * யஸ்ய ப்ரஸாதகலயா * என்கிற ச்லோகத்தில் * अन्धः प्रपश्यति— அந்த: ப்ரபச்யதி *என்றது இவ்விதிஹாஸத்தை யவலம்பித்தேயென்று சொல்லுவர்கள்; அதுதன்னை இங்கு அருளிச்செய்கிறாராயிற்று.

ஹே ஸுந்தர! கரிகிரௌ வரதஸ் த்வம்—வாரீர் அழகரே! * வேகவத்யுத்தரே தீரே புண்யகோட்யாம் ஹரிஸ் ஸ்வயம், வரதஸ் ஸர்வபூதாநாம் அத்யாபி பரித்ருச்யதே * என்கிறபடியே ஸ்ரீ ஹஸ்திகிரியில் வரதாதிராஜனாக ஸேவை தந்தருளாநின்ற தேவரீர்.

ஹரிதவாரணப்ருத்ய ஸமாஹ்வயம் அபூர்விகாம் த்ருசம் அலம்பய ஏவ ஹி—பச்சை வாரணதாஸரென்னும் பரம பக்தர்க்கு அபூர்வமான த்ருஷ்டியைக் கொடுத்தருளினது ப்ரஸித்தமேயன்றோ. இது த்விகர்மக ப்ரயோகம்.

ஈத்ருசம் பரச்சதம் ஸ்புடம் அதாச் ச—இது ஒன்றே யன்றிறே; இப்படி யருள்செய்தது பரச்சதமுண்டிறே. அடியேனுக்கும் இங்ஙனேயொரு திருவருள் செய்தாலாகாதோ வென்பது உள்ளுறை. நான்காவது பாதம் "स्फुटमदाश्च वरान् शतमीदृशान्" என்கிற பாடமர்கவும் காண்கிறது. 126

इह च देव ! ददासि वरान् परान् वरद ! सुन्दर ! सुन्दरदोर्धर ! ।
वनगिरेरभितस्तटमावसन्नखिललोचनगोचरवैभवः ॥१२७॥

இஹ ச தேவ! ததாஸி வராந் பராந்
வரத ஸுந்தர ஸுந்தர தோர்த்தர !,
வநகிரேரபிதஸ் தடமாவஸந்
அகில லோசந கோசரவைபவঃ. 127

* * * ஸ்ரீ ஹஸ்திகிரியிலே வரந்தரும் பெருமாளாயிருக்கிறபடியைக் கீழ் ச்லோகத்திலருளிச்செய்தார்; அத் திருமலையிற்போலவே இத் திருமலையிலும் வரந்தரும் பெருமையைப் பேசுகிறாரிதில்.

ஹே வரத ஸுந்தர ஸுந்தரதோர்த்தர! தேவ!—வாரீர் வரதரே! அழகரே! சுந்தரத் தோளுடைய தேவபிரானே!

இஹ ச வநகிரேঃ அபிதஸ் தடம் ஆவஸந்—இங்கும் திருமாலிருஞ்சோலைத் தாழ்வரைகளிலே யெழுந்தருளியிருந்து.

அகில லோசந கோசர வைபவஸ் ஸந்—எல்லாருடையவும் கண்ணுக்கு மிலக்கான வைபவத்தையுடையவராய்க் கொண்டு.

பராந் வராந் ததாஸி—சிறந்த வரங்களைத் தந்தருளா நின்றீர். ... 127

इदमिमे शृणुमो मलयध्वजं नृपमिह स्वयमेव हि सुन्दर ।
चरणसात्कृतवानिति तद्वयं वनगिरीश्वर ! जातमनोरथाः ॥१२८॥

இதமிமே ச்ருணுமோ மலயத்வஜம்
ந்ருபமிஹ ஸ்வயமேவ ஹி ஸுந்தர !,
சரணஸாத்க்ருதவாநிதி, தத் வயம்
வநகிரீச்வர ! ஜாதமநோரதாঃ. 128

* * * பெரியாழ்வார் திருமொழியில் (4-2-7.) * கொன்னவிலும் கூர்வேல் கோன் நெடுமாறன் தென்கூடல் கோன், தென்னன் கொண்டாடும் தென் திருமாலிருஞ் சோலையே * என்றவிடத்து விவக்ஷிதமான இதிஹாஸத்தை யுட்கொண்டு இந்த ச்லோகமருளிச் செய்கிறபடி. அப் பாசுரத்தின் வியாக்கியானத்திலே மணவாள மாமுனிகள் அருளிச்செய்த இதிஹாஸமே இங்கு ஸாரமாக எழுதப்படுகின்றது. அகஸ்த்ய முனிவன் வீற்றிருக்கும் மலய பர்வதத்திற் சென்று தர்மமே நடத்தக் கடவேனென்று மலய பர்வதத்தை யெழுதிக் கொடியெடுத்த மலயத்வஜனென்னு மரசன் தேரேறிக் கங்கை நீராடப் போகாநிற்கச் செய்தே * மதிதவழ் குடுமியளவிலே சென்றவாறே தேர் வடக்கு ஓடாமல் நிற்க, அவ்வரசன் அவ்விடத்திலே தேரை நிறுத்தி 'இங்கே தீர்த்த விசேஷமும் எம்பெருமானும் ஸந்நிதி பண்ணியிருக்கவேணும்' என்று நினைத்து இறங்கி ஆராய்ந்து பார்க்க, அவ்விடத்தில் நித்ய ஸந்நிஹிதரான அழகர் அவ்வரசனை நோக்கி 'இவ்வாற்றிலே நீராடு' என்று நியமித்தருள, நதியின் பெயரைக் கேட்டுணர்ந்து நீராட வேண்டுகையால் 'இவ்வாற்றுக்குத் திருநாமமென்?' என்று அரசன் கேட்க; 'முன்பு நாம் உலகளந்தபோது பிரமன் திருவடி விளக்கின காலத்தில் நம் பாதச் சிலம்பின் நீர்

இதிலே தெறித்துச் சிலம்பாறென்று பெயர் பெற்றதாக அழகர் அருளிச்செய்ய, அது கேட்ட அரசன் அம் மஹாநதியில் நீராடி கங்காஸ்நான விருப்பத்தையும் தவிர்ந்து அத் திருமாலிருஞ்சோலையில்தானே பேரன்பு பூண்டிருந்தானென்பது இதிஹாஸம். இதைத் திருவுள்ளம்பற்றியே "கொன்னவில் கூர்வேல்கோன் நெடுமாறன் தென்கூடல்கோன் தென்னன் கொண்டாடும் தென் திருமாலிருஞ்சோலையே" என்று பெரியாழ்வாரருளிச் செய்தார். அதைத் தழுவியே இந்த ச்லோகமும் அவதரிக்கிறது. இதில் மலயத்வஜ ராஜனென்று சிறப்பித்துக் கூறப்படும் அரசன் * பருப்பதத்துக் கயல்பொறித்த பாண்டியர் குலபதிபோல் * என்ற பெரியாழ்வார் திருமொழிப் (5-4-7) பாசுரத்திலும் கூறப்பட்டவன். அவ்விடத்து வியாக்கியானமும் ஸேவிக்க.

ஹே வநகிரீச்வர ஸுந்தர—வாரீர் திருமாலிருஞ்சோலையழகரே !

இஹ மலயத்வஜம் ந்ருபம்—இத் திருமலையிலே மலயத்வஜனென்னு மரசனை.

ஸ்வயமேவ—அவனுடைய ஸாதநாநுஷ்டாநாதிப்ரதீக்ஷையின்றிக்கே தேவரீருடைய நிர்ஹேதுக க்ருபையினாலேயே என்றபடி.

சர்ண ஸாத்க்ருதவாநிதி இதம் இமே வயம் ச்ருணும:—திருவடிக்கு ஆளாக்கிக்கொண்டீ ரென்னுமிவ் வரலாற்றை யாம் கேள்விப்படுகின்றோம்.

தத் வயம் ஜாதமநோரதா:—அப்படிப்பட்ட நிர்ஹேதுகக்ருபை நம்பக்கலிலும் பெருகு மென்று மநோரதித்திரா நின்றோமென்கை. 128

विज्ञापनां वनगिरीश्वर ! सत्यरूपामङ्गीकुरुष्व करुणार्णव ! मामकीनाम् ।
श्रीरङ्गधामनि यथापुरमेकतोऽहं रामानुजार्यवशगः परिवर्तिषीय ॥१२९॥

விஜ்ஞாபநாம் வநகிரீச்வர ! ஸத்யரூபாம்
அங்கீகுருஷ்வ கருணார்ணவ ! மாமகீநாம்,
ஸ்ரீரங்கதாமநி யதாபுர மேகதோஹம்
ராமாநுஜார்யவசக: பரிவர்த்திஷீய. 129

***—திருமாலிருஞ் சோலையழகருடைய திருக்கல்யாண குணாநுபவத்தைக் கீழ் ச்லோகத்தோடே தலைக்கட்டினாராயிற்று. இனி இது முதலாக நான்கு ச்லோகங்களாலே ஸ்வாபீஷ்டத்தை விஜ்ஞாபித்து ஸ்தவத்தைத் தலைக்கட்டியருளுகிறாராயிற்று. இந்த ஸ்தவமருளிச் செய்கிற காலத்திலே எம்பெருமானார் மேல் நாட்டிலே திருநாராயண புரத்திலே யெழுந்தருளியிருக்கவும், அவரைப் பிரிந்து தாம் கோயிலில் வஸிக்க மாட்டாமே திருமாலிருஞ்சோலையிலே வர்த்திக்கவும்நேர்ந்தது. இங்ஙனேநேர்ந்த ஆசார்ய விச்லேஷம் அஸஹ்யமாயிருக்கையாலே இந்த விச்லேஷவ்யஸனம் நீங்கப்பெற வேணு மென்று ப்ரார்த்திக்கிறாராயிற்று.

கருணார்ணவ வநகிரீச்வர !—கருணைக் கடலான திருமாலிருஞ் சோலையழகரே !.

ஸத்யரூபாம் மாமகீநாம் விஜ்ஞாபநாம் அங்கீகுருஷ்வ—யதார்த்தமான அடியேனது விண்ணப் பத்தைத் திருவுள்ளம்பற்றி யருளவேணும். அந்த விஜ்ஞாபனந்தானேதென்ன வருளிச் செய்கிறார் மேல் ;

அஹம் யதாபுரம் ஸ்ரீரங்கதாமநி ஏகத: ராமாநுஜார்யவசக: பரிவர்த்திஷீய—அடியேன் முன்பு போலத் திருவரங்கம் பெரிய கோயிலிலே ஒரு புறத்திலே எம்பெருமானாருடைய திரு வடி நிழலிலே வாழ்வேனாக. எம்பெருமானாரும் கோயில் வந்து சேர, அடியேன் அவரது திருவடிகளிலே சேர்ந்து வாழ்வேனும்படி அருள் செய்ய வேணுமென்றா யிற்று. 129

किंचेदञ्च विरिञ्चभावन ! वनाद्रीश ! प्रभो ! सुन्दर ! प्रत्याख्यानपराङ्मुखो वरदतां पश्यन्नवश्यं शृणु ।
श्रीरङ्गश्रियमन्वहं प्रगुणयंस्त्वद्भक्तभोग्यां कुरु प्रत्यक्षं सुनिरस्तमेव विदधत्प्रत्यर्थिनां प्रार्थनम् ॥१३०॥

கிஞ்சேதஞ்ச விரிஞ்சபாவந வநாத்ரீச ப்ரபோ ஸுந்தர !
ப்ரத்யாக்க்யாந பராங்முகோ வரததாம் பச்யந்நவச்யம் ச்ருணு,
ஸ்ரீரங்கச்ரியமந்வஹம் ப்ரகுணயந் த்வத்பக்த போக்யாம் குரு
ப்ரத்யக்ஷம் ஸுநிரஸ்தமேவ விததத் ப்ரத்யர்த்திநாம் ப்ரார்த்தநம். 130

*** கீழ்ச்லோகத்தில் செய்த ப்ரார்த்தனையைச் சிறிது விவரிக்கிறதாயிற்று இந்த ச்லோகம்.

ஹே விரிஞ்சபாவந வநாத்ரீச ப்ரபோ ஸுந்தர !—* உய்யவுலகுபடைக்க வேண்டி உந்தியில் நான்முகனைத் தோன்றுவித்த திருமாலிருஞ் சோலையழகரே !.

வரததாம் பச்யந்—அடியார் வேண்டினவற்றைத் தந்தருளக் கடவோமென்று இருக்கு மிருப்பைத் திருவுள்ளம்பற்றி.

ப்ரத்யாக்க்யாநபராங்முகः—உபேக்ஷித் தருளாமலென்றபடி. நெறிகாட்டி நீக்கிவிடாமல்.

கிஞ்ச இதஞ்ச அவச்யம் ச்ருணு—கீழ்ச்லோகத்திற் சொன்னதையேயன்றிக்கே இதையும் கேட்டருளியே யாகவேணும். அதுதான் ஏதென்னில்;

ப்ரத்யர்த்திநாம் ப்ரார்த்தநம் ப்ரத்யக்ஷமேவ ஸுநிரஸ்தம் விததத்—அடியேன் போலவே ப்ரதிபக்ஷிகளும் விபரீதமாக ஏதேனும் ப்ரார்த்திக்கக்கூடும்; அந்த ப்ரார்த்தனையை யெல்லாம் எங்கள் கண்முகப்பே நிரஸ்தமாக்கி.

ஸ்ரீரங்கச்ரியம் அந்வஹம் ப்ரகுணயந் த்வத்பக்த போக்யாம் குரு—தென்திருவரங்கங் கோயிற் செல்வத்தை நாடோறும் அபிவ்ருத்தமாக்கி தேவரீருடைய பக்தர்களுக்கே போக்யமாம்படி செய்தருள வேணும். 130

कारुण्यामृतवारिधे ! वृषपते ! हे सत्यसङ्कल्पन ! श्रीमन् ! सुन्दर ! योग्यताविरहितानुत्सार्य सद्वत्सल ! ।
क्षाम्यन् साधुजनैः कृतांस्तु निखिलानेवापचारान् क्षणात् तद्भोग्यामनिशं कुरुष्व भगवन् ! श्रीरङ्गधामश्रियम् ॥

காருண்யாம்ருத வாரிதே ! வ்ருஷபதே ! ஹேஸத்ய ஸங்கல்பந !
ஸ்ரீமந் ஸுந்தர ! யோக்யதா விரஹிதாந் உத்ஸார்ய ஸத்வத்ஸல,
க்ஷாம்யந் ஸாதுஜநைः க்ருதாம்ஸ்து நிகிலாநேவாப சாராந் க்ஷணாத்
தத்போக்யாம்நிசம் குருஷ்வ பகவந் ஸ்ரீரங்கதாமச்ரியம். 131

*** கீழிரண்டு ச்லோகங்களிற் பண்ணின ப்ரார்த்தனைக்கு சேஷபூதமே இந்த ப்ரார்த்தனையும்.

காருண்ய அம்ருதவாரிதே !—கருணைக்கு அமுதக்கடல் போன்றவரே ! பரதுःக்கா ஸஹிஷ்ணுத்வமே காருண்யமாகையாலே அதுதன்னையுடைய தேவரீருக்கு அடியேன் பிரார்த்திப்பது மிகையன்றோவென்று காட்டுகிறபடி.

வ்ருஷபதே !—வ்ருஷபாத்ரிபதே ! என்றபடி. வருஷபாத்ரியென்கிற திருமாலிருஞ் சோலைமலைக்குத் தலைவரே ! ஸ்ரீவைகுண்டம் க்ஷீராப்தி முதலானவற்றைவிட்டு தேவரீர் இங்கே வந்தெழுந்தருளியிருப்பதை நோக்கியருளவேண்டுமென்று காட்டு கிறபடி.

ஹே ஸத்யஸங்கல்பந !—ஸத்யஸங்கல்பரான தேவரீருக்கு எதுவும் ஸங்கல்ப மாத்ரஸாத்ய மாயிருக்க, அந்த ஸங்கல்பத்திற்கு வந்த துர்பிக்ஷமென்னோவென்க.

ஸ்ரீமந் ஸுந்தர பகவந்!—தேவரீருடைய வடிவழகிலேயே கண்வைத்திருக்கு மடியோங்கள் இவ்வழகுக்கு நித்ய ஸ்ரீர் நித்யமங்கலமென்று மங்களாசாஸநம் பண்ணவேண்டுமத்தனைபோக்கி வேறொன்று ப்ரார்த்திக்கத் தகாது. ஆயினும் ப்ரார்த்திக்க நேர்கின்றதென்கை. [பகவந்!] தேவரீருடைய ஜ்ஞாநசக்தி பலைச்வர்ய வீர்ய தேஜஸ்ஸுக்களாகிற ஷாட்குண்யம் காட்டிலெறித்த நிலவாகாமே ஸபலமாகைக்காக ப்ரார்த்திக்கிறோமென்று காட்டுகிறார் போலும்.

ஸத்வத்ஸல—தேவரீருடைய வாத்ஸல்யமாகிற குணவிசேஷமும் ப்ரார்த்திக்கச்செய்கிறதென்கை. ப்ரார்த்தனைதான் ஏதென்னில்;

யோக்யதாவிரஹிதாந் உத்ஸார்ய—* நல்லார்கள் வாழும் நளிரரங்கம் * என்கிறபடியே நல்லார்களே வாழ்ந்தவிடமான கோயிலிலே இப்போது மண்ணின் பாரமான அயோக்யர்களேயன்றோ மலிந்துகிடக்கிறது; அவர்களை அங்கு நின்றும் அகலவித்து.

ஸாதுஜநை: க்ருதாந் நிகிலாநேவ அபசாராந் க்ஷணாத் க்ஷாம்யந்—தேவரீருக்கு உயிர்நிலையான ஸத்புருஷர்கள் தேவரீருடைய வாத்ஸல்யத்தை நம்பி அபசாரங்கள் பட்டிருந்தாலும் அவற்றை ஒரு நொடிப்பொழுதில் க்ஷமாவிஷயமாக்கியருளி.

ஸ்ரீரங்கதாமச்ரியும் அநிசம் தத்போக்யாம் குருஷ்வ—திருவரங்கம் பெரியகோயிற் செல்வம் எந்நாளும் ஸத்புருஷர்களுக்கே போக்யமாம்படி செய்தருளவேணும். இதிற் காட்டிலும் வேறு ப்ரார்த்தநீயமில்லை யென்றதாயிற்று. 131

इदं भूयोभूयः पुनरपि च भूयः पुनरपि स्फुटं विज्ञीप्सामीत्यगतिरबुधोऽनन्यशरणः ।
कृतागा दुष्टात्मा कलुषमतिरसीत्यनवधेः दयायास्ते पात्रं वनगिरिपते ! सुन्दरभुज ! ॥१३२॥

இதம் பூயோபூய: புநரபி ச பூய: புநரபி
ஸ்புடம் விஜ்ஞீப்ஸாமீத்யகதிரபுதோ நந்ய சரண:,
க்ருதாகா துஷ்டாத்மா கலுஷமதிரஸ்மீ த்யநவதே:
தயாயாஸ் தே பாத்ரம் வநகிரிபதே ஸுந்தரபுஜ! 132

* * * ஆழ்வான் நைச்யாநுஸந்தானமே வடிவெடுத்திருப்பரென்றிறே ப்ரஸித்தி. மணவாள மாமுனிகளும் யதிராஜ விம்சதியிலே * वाचामगोचर महागुण देशिकाग्र्यकूराधिनाथ कथिताखिलनैच्य........ வாசாமகோசர மஹாகுண தேசிகாக்ர்ய கூராதிநாத கதிதாகில நைச்ய... * என்று ஆழ்வானுக்கு நைச்யாநுஸந்தானமே நிரூபகமென்பது தோன்றவிறே யருளிச்செய்தது. அப்படி தமக்கு அஸாதாரணச் செல்வமான நைச்யாநுஸந்தானத்தைப் பதியவைக்குமிந்த ச்லோகத்தோடே ஸ்தவத்தைத் தலைக்கட்டியருளுகிறாராயிற்று. அகதி: அபுத: அநந்யசரண: க்ருதாகா: துஷ்டாத்மா கலுஷமதி: என்னுமிவை ஆழ்வானென்னும் திருநாமத்திற்குப் பர்யாய பூதங்களாகவாயிற்று இவர் தாம் நினைத்திருப்பது.

ஹே வநகிரிபதே ஸுந்தரபுஜ!—வாரீர் திருமாலிருஞ்சோலைமலைத் தலைவரான சுந்தரத் தோளுடைய பெருமானே!

அகதி:—உபாய சூந்யனாய், அபுத: —ஜ்ஞாந சூன்யனாய், அநந்யசரண:—தேவரீரைத் தவிர்த்து வேறொரு புகலறியாதவனாயிருக்குமடியேன்.

இதம் பூயோபூய:புநரபிச பூய: புநரபி ஸ்புடம் விஜ்ஞீப்ஸாமி—இது தன்னையே மீண்டு மீண்டும் திருப்பித் திருப்பி விண்ணப்பம் செய்யாநின்றேன்.

"விஜ்ஞீப்ஸாமி" என்னும் பதத்தின் தத்வத்தையறியாதார் 'விஜ்ஞாப்ஸ்யாமி' என்று தவறான பாடம் கொண்டிருப்பர். வடமொழியில் (விஜ்ஞாப்ஸ்யாமி) என்றொரு சொல்வடிவமே கிடையாது. விஜ்ஞீப்ஸாமி என்றது விஜ்ஞாபயாமி என்றபடி.

'விஜ்ஞாபயிது மிச்சாமி' என்று ஸம்ஸ்க்ருத வ்யாக்யாதாவும் எழுதியிருப்பது பிறழ்வான பாடத்தில் ப்ரத்யயத்தாலே போலும்.

இதி—செய்த விஜ்ஞாபநத்தையே மீண்டு மீண்டும் செய்கிறேனென்ற காரணத்தினால்.

க்ருதாகாः துஷ்டாத்மா கலுஷமதிः அஸ்மி—குற்றவாளனாகிறேன்; துஷ்டஸ்வபாவமுடையேனாகிறேன்; கலங்கின புத்தியை யுடையேனாகிறேன். இதி—என்று திருவுள்ளம் பற்றும்படியாகி.

தே தயாயாः பாத்ரம்—தேவரீருடைய திருவருளுக்குக் கொளகலமாகிறேனத்தனை. தேவரீருடைய தயாகுணம் அடியேன்பால் அவசியம் ப்ரஸரிப்பதற்கு விஷய பௌஷ்கல்யமுண்டென்று விண்ணப்பஞ் செய்து தலைக்கட்டிற்றாயிற்று. ... 132

इत्थं वादिभयङ्करवंशीयाण्णङ्गरार्यसंकलिता । सुन्दरबाहुस्तवचरटीका सुधियां मुदे सदा भूयात् ॥

" अर्वाञ्चो यत्पदसरसिज द्वंद्वमाश्रित्य, पूर्वे मूर्ध्ना यस्यान्वयमुपगता देशिका मुक्तिमापुः ।
सोऽयं रामानुजमुनिरपि स्वीयमुक्तिं करस्थां यत्संबन्धादमनुत, कथं वर्ण्यते कूरनाथः ॥ "

इति प्रसिद्धवैभवेन सद्गुणामृताब्धिना गुरूत्तमेन कूरनाथदेशिकेन निर्मिताः ।
बुधैकभोग्यपञ्चरत्नकल्पपञ्चसत्कृतीः विवृत्य जन्मसार्थकत्वमाप वादिभीकरः ॥

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

பஞ்சஸ்தவ வியாக்கியானத்தில்


ஸுந்தரபாஹுஸ்தவ வியாக்கியானம்

முற்றிற்று.


எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஆழ்வான் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.




ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

ஸ்ரீபகவத் சாஸ்த்ரமாகிய ஸ்ரீபாஞ்சராத்ரம்

(காலாண்டு இதழ்)



மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் இந்த இதழில் ஸ்ரீபாஞ்சராத்ரம் பற்றிய வினாவிடை, ஸ்ரீவைஷ்ணவத்தின் அடிநிலைகள், திவ்யதேசத் திருக்கோயில்களில் நடைபெறும் உத்ஸவங்கள், ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தில் சில ஸம்ஹிதைகள் பற்றிய குறிப்புகள், வேதவிஜ்ஞானம், திவ்ய தேசங்களில் நடைபெறும் உத்ஸவங்கள், க்ரந்தபாஷை (பாலபாடம்) மற்றும் பல பயனுள்ள கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

மேலும் இதுவரை அச்சில் வெளிவராத, ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்த 'ஆகமப்ராமாண்யம்' ஸம்ஸ்க்ருதம், தமிழ் மூலம் அதற்கான விவரணத்துடன் வெளியிடப்படுகிறது. தனிப்பிரதி விலை ரூ.15/-, ஆண்டு சந்தா ரூ.60/-

பிரதிகள் கிடைக்கும் இடம்

திவ்யதேச பாரம்பரியப் பாதுகாப்புப் பேரவை,

214, கீழை உத்தரவீதி, ஸ்ரீரங்கம், திருச்சி - 6.

☎: 0431 - 2434398. E-Mail : akchari@vsnl.com

Shrimal Pillai Loka chariar Sishyan ,Toronto , Canada

Released by Maran's Dog Toronto , Canada

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

மொழியைக் கடக்கும் பெரும்புகழாளரான

ஸ்ரீகூரத்தாழ்வான் அருளிச்செய்த

வரதராஜஸ்தவமும், ஸ்ரீஸ்தவமும்

ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமி இயற்றிய

"தத்வார்த்த சிந்தாமணி" என்னும் வியாக்கியானத்துடன்



ஸ்ரீகூரத்தாழ்வான் - ஸ்ரீரங்கம்

Released by Marans Dog, Toronto Canada

Shrimal Pillai Lokacharar Sisiyas, Toronto, Canada

மறுஅச்சு மற்றும் கிடைக்குமிடம் :

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ

ஸ்ரீரங்கநாச்சியார் அச்சகம்

214, கீழை உத்தரவீதி, ஸ்ரீரங்கம் - 6.


☎: 0431 - 2434398. E-Mail : akchari@vsnl.com

விலை ரூபாய் 45/- தபாற்செலவு தனி.

Released by Maran's Dog Toronto , Canada

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:



பெருந்தேவித்தாயார் பேரருளாளன் – காஞ்சிபுரம்.

ஸ்வஸ்தி ஹஸ்திகிரிமஸ்தசேகர: ஸந்தநோது மயி ஸந்ததம் ஹரி: ।
நிஸ்ஸமாப்யதிகமப்யதத்த யம் தேவமௌபநிஷதீ ஸரஸ்வதீ ॥

– வரதராஜஸ்தவம் 1

இந்நூலினை ஸ்ரீவைஷ்ணவ சமூகத்தினர் அனைவரும் குறைந்த விலையில் பெற்றுப் பயன்பெறும் வண்ணம் தரமான அச்சுத் தாளினை கொடுத்து உதவியவர் நமக்கு பரம ஆப்தரும், ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேசங்களுக்கும், ஸம்ப்ரதாயத்திற்கும் பற்பல நற்பணிகளைச் செய்துவருபவருமான ஸ்ரீ.S.A.R.ப்ரஸன்ன வேங்கடாசார்யர் சதுர்வேதி ஸ்வாமி (ஸ்ரீபாஷ்யகாரர் சாரிடபிள் டிரஸ்ட், சென்னை - 17.)

ஸ்ரீ:
ஆழ்வான் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ வரதராஜஸ்தவ வியாக்கியான அவதாரிகை

*மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக்குறும்பாங் குழியைக்கடக்கும் நம் கூரத்தாழ்வானருளிச் செய்த பஞ்சரத்நமென்று ப்ரஸித்தமான பஞ்சஸ்தவத்தில் வரதராஜஸ்தவம் நான்காவது ஸ்தோத்ரமென்பர் பெரியோர். ஸ்ரீவைகுண்ட ஸ்தவம், அதிமாநுஷஸ்தவம், ஸுந்தரபாஹுஸ்தவம், ஸ்ரீஸ்தவம் என்று பஞ்சஸ்தவங்களின் அடைவு காண்க.

இந்தவரத ராஜஸ்தவம் *தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப் பூண்டவன்பாளரான எம்பெருமானருடைய நியமனமடியாகத் தேவப்பெருமாள் விஷயமாய் அருளிச் செய்யப்பட்டதாகும். ஸ்ரீவைஷ்ணவத்வேஷியும் வீர சைவனுமான சோழராஜனுடைய கொடுங்கோன்மையினால் திருக்கண்களையிழந்து தென்னரங்கன் திருப்பதியிலிருப்பையு மிழந்து திருமாலிருஞ்சோலை மலையேற எழுந்தருளின ஆழ்வான் ஸ்ரீவைகுண்டஸ்தவம் முதலாக மூன்று ஸ்தவங்களை யருளிச்செய்து, பிறகு சில ஆண்டுகள் கடந்த பின்பு சோழராஜன் மாண்டொழிந்தமை கேட்டு மகிழ்ந்து அழகர் ஸந்நிதியில் விடைபெற்றுக்கொண்டு திருவரங்கம் பெரிய கோயிலேற மீண்டெழுந்தருளின வளவிலே :—

திருநாராயண புரத்தேற எழுந்தருளியிருந்த எம்பெருமானார் கோயில்நின்றும் வந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவராலே சோழராஜஸதஸ்ஸில் ஆழ்வானுக்கும் பெரிய நம்பிக்கும் நேர்ந்த ஆபத்தைக் கேட்டருளிப் பரமதுக்கபராகுலராய் 'ஆழ்வானைகிலும் உயிர் வாழ்ந்திருக்கப்பெற்றோமே' என்று திருவுள்ளம் தேறியிருந்து, சில வாண்டுகள் கடந்தபின்பு மாறொன்றில்லா மாருதிச் சிறியாண்டானைக் கோயிலுக்குப் போகவிட்டருளி "கோயில் விசேஷங்களை யறிந்து வாரும்" என்று நியமித்தருள, அவரும் மிக விரைந்து கோயிலேற விடைகொண்டு, அப்போதே அங்கு வந்து சேர்ந்திருந்த ஆழ்வானை ஸேவித்து, சோழன் புழுத்து மாண்ட செய்தியுட்பட எல்லாவற்றையும் அறிந்துகொண்டு மீண்டு திருநாராயணபுரம் சென்று எம்பெருமானார் திருவடிகளிலே இவற்றை விண்ணப்பஞ்செய்ய, அது கேட்டு அவர் பெருமகிழ்ச்சியுடன் உடனே அங்கு நின்றும் புறப்பட்டு மிக விரைந்து கோயிலேற எழுந்தருளி முதலிகளும் தாமுமாக ஆழ்வான் திருமாளிகைக்குப் போந்தருள, ஆழ்வானும் எதிரேயெழுந்தருளி உடையவர் திருவடிகளிலே விழுந்து ஸேவித்துத் திருவடிகளைச் சிக்கனப் பிடித்துக்கொண்டு கிடக்க, உடையவரும் ஆழ்வானை வாரியெடுத்தணைத்துக்கொண்டு துஃக்காதிசயத்தாலே ஒரு வார்த்தையுமருளிச் செய்யமாட்டாமல் *உள்ளெலாமுருகிக் குரல் தழுத்து விம்மல் பொருமலாய் "வாரீர் ஆழ்வான்! இத் தர்சநத்துக்கு த்ருஷ்டிபூதரான உமக்குக் கண்போவதே!, இது என்னுடைய துஷ்கர்ம பலமன்றோ" என்றிங்ஙனே பலவாருகப் புலம்பி வார்த்தையடைவிலே ஆழ்வானைத் தேற்றியருளித் தாமும் தேறி, அவரையுங்கூட அழைத்துக்கொண்டு மடமே எழுந்தருளி; அதின்மற்றைநாள், ஆழ்வான் திருமாலிருஞ்சோலை யாத்திரையிலே அருளிச்செய்திருந்த மூன்று ஸ்தவங்களையும் எம்பெருமானார் திருச்செவிசாத்திப் போரவும் திருவுள்ளமுகந்து ஆழ்வானை நோக்கி "உம்முடைய இவ்வருளிச் செயல்களாலே யன்றோ நம்முடைய திருவரங்கச் செல்வம் நிஷ்கண்டகமாகப்பெற்று நாமும் இங்கு வாழ்ந்திருக்கப் பெற்றோம்!, *ஸ்ரீ ஹஸ்திசைலசிகரோஜ்ஜ்வல பாரிஜாதமான பேரருளாளர் *வரந்தரும் மாமணிவண்ணனுக ப்ரஸித்தராயிராநின்றார்; நீர் அவர் விஷயமாக ஒரு ஸ்தவம் விண்ணப்பம் செய்யும்; கண்கொடுத்தருள்வர்" என்றருளிச்செய்ய, "அடியேனுக்கு ஸ்வாமி திருவருளின் பலனை உட்கண்ணே போதும், பாழும் வெளிக்கண் வேண்டா" என்று ஆழ்வான் கூற, எம்பெருமானார், அப்படியன்று; தேவப் பெருமாள் விஷயமாக ஒரு ஸ்தவம் சொல்லியே யாகவேணும்" என்று பலகாலும் நிர்ப்பந்திக்க, ஆழ்வானும் ஆசார்ய நியமனத்தை சிரஸா வஹித்து இந்த ஸ்தவத்தை யருளிச்செய்தார்.

இதுதன்னில், *ததபி கிமபி ஹந்த துர்வாஸநா...என்கிற (90) ச்லோகத்தில் திருக்கண் வேணுமென் ப்ரார்த்தனை ஸூசிதமாகவுள்ளதென்பர் பெரியோர்.

[illegible]இந்த ஸ்தவம் தலைக்கட்டினவாறே தேவப்பெருமாள் திருமுன்பே இதனை அரங்கேற்றுவிக்கவேணுமென்று [illegible]ம்பற்றிய எம்பெருமானார் ஆழ்வானை யழைத்துக்கொண்டு பயணகதியிலே பெருமாள் கோயிலேற [illegible]ள, ஆழ்வான் வரதராஜஸ்தவத்தைப் பேரருளாளன் திருமுன்பே விண்ணப்பஞ் செய்து தலைக்கட்டு [illegible]ரிவிக்க எம்பெருமானார் சில அன்பர்களோடு வார்த்தையாடிக்கொண்டு பராக்காயிருக்க, பேரருளாளன் [illegible]களும், தச்செவி சாத்தி ப்ரஸந்நராய் "வாரீர் ஆழ்வான்! நம் பக்கலிலே உமக்கு விருப்பமானதை வேண்டிக் [illegible]ங்கள் இ என்று அருளிப்பாடிட்டு நியமிக்க; ஆழ்வான் உடையவர் திருவுள்ளப்படியே கண் வேணுமென்

ஞதே "நான் பெற்ற பேறு நாலூரானும் பெறவேணும்" என்று ப்ரார்த்திக்க, 'அப்படியே பெறக்கடவன்' என்று பேரருளாளன் வரமளித்தருளினன்.

[நாலூரானென்பவன் ஒரு வைஷ்ணவன்; சோழராஜனிடத்தில் வால்லப்யம் பெற்றிருந்து, பெரிய நம்பிக்கும் ஆழ்வானுக்கும் மஹாவிபத்து விளைவதற்கு மூலகாரணமாயிருந்தவன் இவனே. இவ்வகையாலே மஹாபராதியாய்ப் போந்த இவனுக்கு நரகமே பலிக்குமென்று நிச்சயித்து வருந்திய ஆழ்வான் அந்த மஹாபாபியையும் கைவிடமாட்டாத ஆந்ருசம்ஸ்யத்தாலே அவனுக்கு நன்மை விரும்பினர். இந்த மஹாகுணம் ஆழ்வானுக்கு அஸாதாரணமென்று ப்ரஸித்தம்.]

ஆழ்வான் திருக்கண் வரம் வேண்டிக் கொள்ளவில்லை யென்பதறிந்த எம்பெருமானர் திருவுள்ளமுளைந்து பெருமானை நோக்கி "ஸர்வஜ்ஞரான தேவரீர் இப்போது என் நினைவைத் தலைக்கட்டவில்லையே!" என்றும், ஆழ்வானை நோக்கி "நீர் ஸ்வதந்திரராய் என் நினைவைத் தலைக்கட்டாதே என்னை வஞ்சித்து இங்ஙனே செய்தீரே!" என்றும் இருவரையும் வெறுத்து இனி போன்! என்று திகைத்து நிற்க, பேரருளாளன் "இராமாநுசா! ஆழ்வான் நம்மையும் உம்மையும் காணுமிடத்துக் கட்கண்ணாலே காணக்கடவர்" என்று வரமளித்தருள, எம்பெருமானர். க்ருதார்த்தராய் ஆழ்வானுடன் மீண்டு கோயிலேற எழுந்தருளினர்.

நூறு சுலோகங்கள் கொண்ட இந்த வரதராஜஸ்தவம் ஒவ்வொரு தசகமும் ஒவ்வொரு வகையான விருத்தத்தில் அமையப்பெற்றிராநின்றது. ஸ்ரீமத் வேதாந்த தேசிகனருளிச்செய்த தயாசதகம் இந்த ரீதியையே அடியொற்றியது; அதுதன்னிலும் ஒவ்வொரு தசகம் ஒவ்வொரு விருத்தமாக அமைந்துள்ளது.

நம் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் அருளிச்செய்த ப்ரபந்தங்களெல்லாம் ரஹஸ்யத்ரயார்த்த விவரணமாய் அர்த்தபஞ்சக விசதீ கரண ப்ரவணமாயிறேயிருப்பது. அந்த க்ரமத்திலே இந்த வரதராஜஸ்தவம் அர்த்தபஞ்சக வைசத்யத்திலே விசேஷித்து நோக்குடைத்தாயிருக்கும். ஸ்ரீமந்நாராயணனே பரதத்வமென்றும், அநந்யார்ஹசேஷத்வமே ஆத்மஸ்வரூபமென்றும், குணாநுபவஜநிதப்ரீதிகாரித கைங்கரியமே புருஷார்த்தமென்றும், அஹங்காரமமகாரங்கள் தத் விரோதியென்றும், தந்நிவ்ருத்திக்கும் கைங்கர்யஸித்திக்கும் ஸர்வேச்வரன் திருவடிகளே கண்ணழிவற்ற உபாயமென்றும், ஜிதேந்த்ரியத்வம் தொடக்கமாகக் கைங்கர்யமீறுக உபாய பலமென்றும் அருளிச்செயயப்பட்டதிறே இதில். திருவஷ்டாக்ஷரத்திற் போலே ஸகல சாஸ்த்ரார்த்தங்களும் பொதிந்துகிடக்கப் பெற்ற இந்ததிவ்யஸ்தோத்ரத்திற்கு அறிவிலியான அடியேனிடும் வியாக்கியானம் "பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும், பத்தர் சொன்னவும் பன்னப்பெறுபவோ" என்கிற கணக்கிலேயாகத் தக்கது. ... *

அவதாரிகை முற்றிற்று.


தனியன் வியாக்கியானம்

ஸ்ரீவத்ஸசிஹ்நமிச்ரேப்யः நமஉத்திமதீமஹே।
யதுக்தயஸ் த்ரயீகண்டே யாந்தி மங்களஸூத்ரதாம்॥

வேதத்திற்குத் தாலிபோன்ற திவ்ய ஸூக்திகளை அருளிச்செய்த ஆழ்வானையே நாம் எப்போதும் வணங்குவோம் என்பது இதன் கருத்து. இவருடைய ஸ்ரீஸூக்திகள் வேதமாதின் கழுத்தில் தாலிபோனிருத்தலாவது என் என்னில்:—உலகத்தில் பெண்களுக்குக் கணவனிருக்கிறுன் என்பதை நாம் எது கொண்டு தெரிந்து கொள்ளுகிறேம்? என்னில்; பெண்களின் கழுத்தில் தாலியைக் கொண்டே; அதுபோல, ஆழ்வானுடைய திவ்யஸூக்திகளைக் கொண்டே வேத மாதுக்குக் கணவனுளன் என்று நிச்சயிக்க வேண்டியதாகும். எனவே, வேத வேத்யனான பரதெய்வம் ஸ்ரீமந் நாராயணனொருவனே யென்று நிர்ணயிப்பதில் ஆழ்வானுடைய ஸ்ரீஸூக்திகள் நிகரற்ற ஆற்றல் வாய்ந்தவை என்றதாயிற்று. அன்னவரை அநுக்ஷணமும் நாம் தொழ ப்ராப்தம். அஃதில்லையாயினும் ஒருகால் நமः என்கிற உக்திமாத்ரமும் அமையுமென்று இத்தனியனுல் காட்டப்பட்ட தாயிற்று. *

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ:



பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்,

கூரத்தாழ்வான் திருவடிகளே சரணம்.

கூரத்தாழ்வான் திருவாய்மலர்ந்தருளிய

பஞ்சஸ்தவத்தில்

நான்காவதான

வரதராஜஸ்தவம்

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர் இயற்றிய

தத்வார்த்த சிந்தாமணி வியாக்கியானத்துடன்.

श्रीमल्लक्ष्मणयोगिनो नियमनं मूर्ध्ना दधत्सादरं श्रीवत्साङ्कगुरूत्तमो गुणनिधिर्वाधिराजस्तवम् ।
दिव्यं यं विरचय्य दृष्टिमतुलां लेभे स एष स्तवो जिह्वाग्रे मम दोषगन्धविधुरो नित्यं समुज्जृम्भताम् ॥

हृता यद्या हृद्या गुणगणसमृद्धा सुमधुरा गभीरा सौहार्दं मनसि विदधाना विजयते ।
यदीया श्रीसूक्तिस्स खलु भगवान् भद्रजरितो गुरुः श्रीवत्साङ्को निवसतु मदीये हृदि सदा ॥

श्रीकांचीपरवादिभीकरगुरुश्रीवंशलब्धोदयः दासः श्रीगुरुवैष्णवाग्रिमनलिनेष्वणङ्करार्याह्वयः ।
व्याख्यास्यन् मणिप्रवालसरणौ हस्त्यद्रिनाथस्तवं दोषेष्वान्ध्यमिहाविरस्तु सुधियां निर्मत्सराणां सताम् ॥

प्रतिपदमर्थनिरूपण मादौ विरचय्य तदनु तात्पर्यम् ।
विशदीकरवाणि तथा यथा नु जिज्ञासुहृदयमानन्देत् ॥

(मूलम्.) स्वस्ति हस्तिगिरिमस्तशेखरः सन्तनोतु मयि सन्ततं हरिः ।
निस्समाभ्यधिकमभ्यधत्त यं देवमौपनिषदी सरस्वती ॥ १ ॥

ஸ்வஸ்தி ஹஸ்திகிரிமஸ்தசேகர: ஸந்தநோது மயி ஸந்ததம் ஹரி: ।
நிஸ்ஸமாப்யதிகமப்யதத்த யம் தேவமௌபநிஷதீ ஸரஸ்வதீ ॥ 1 ॥

பதவுரை

ஔபநிஷதீ	உபநிஷத்துக்களிலுள்ள	நிஸ்ஸம அப்யதிகம்	ஒத்தாரும் மிக்காருமில்லாதவனாக
ஸரஸ்வதீ	வாக்கானது		
யம் தேவம்	யாதொரு எம்பெருமானை	அப்யதத்த	ஓதிற்றோ,

ஹஸ்திகிரிமஸ்த சேகரஃ	ஹஸ்திகிரியின் சிகரத்திற்கு ஆபரணமாயுள்ள	ஸந்ததம்	எப்போதும்
ஸஃ ஹரிஃ	அந்த ப்ரணதார்த்திஹர வரதன்	ஸ்வஸ்தி	நன்மையை
மயி	அடியேன் மீது	ஸந்தநோது	நிரம்பச் செய்யவேணும்.

*** வேதாந்த வாக்யங்களாலே ஒப்புயர்வற்றவனாக ஓதப்பட்டுள்ள எம்பெருமான் திருவத்தி மாமலைக்கு சிரோ பூஷணமாக விளங்கா நின்றான்; அத்தேவபிரான் உபய விபூதியிலும் அடியேனுக்கு நன்மையை நல்கவேணும் என்றதாயிற்று. * ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் அடியேன் உடனாய்மன்னி வழுவிலா வடிமை செய்யப் பெற வேணுமென்பது பரமதாற்பரியம்.

[ஹஸ்திகிரீத்யாதி.] * திங்நாகைரர்ச்சிதஸ் தஸ்மிந் புரா விஷ்ணுஸ் ஸநாதநஃ, ததோ ஹஸ்தி கிரிர் நாம க்க்யாதி ராஸீத் மஹாகிரேஃ * என்று ஹஸ்திகிரி மாஹாத்மியத்தின் முதலத்யாயத்திலே சொல்லப்பட்ட படி முற்காலத்தில் திக்கஜங்கள் வந்து இத்திருமலையிலே எம்பெருமானை ஆராதித்ததனால் **ஹஸ்திகிரி** யென்று திருநாமமாயிற்றென்பர்.

[சேகரஃ] சிரஸ்ஸுக்கு அலங்காரம் என்றபடி. சிரஸ்ஸுக்கு வாசகமாக **மஸ்த** சப்தம் **இங்குத் தனியே யிருப்பதால். சேகர சப்தம்** அலங்கார மாத்திரத்தைச் சொல்லி நிற்கும்; **கரிகலப. என்னுவதல்லை பதங்களை நிர்ப்பது.**

[ஸந்தநோது] ஸம்யக் விஸ்தாரயது என்றபடி. [நிஸ்ஸமாப்யதிகம்] * ந தத்ஸமச் சாப்யதிக**ச்ச த்ருஸ்யதே * என்பது உபநிஷத்து. * ஒத்தாரும் மிக்காரும் தன்தனக்கின்றி** நின்றான் * **என்றும், * ஒத்தார்மிக்காரை யிலையாய மாமாய * என்றும் ஆழ்வார்கள் பாசுரம்.** ஒத்தார் இல்லை **யென்றபோதே மிக்கார் இல்லையென்னுமிடம் ஸித்தமாயிருக்க, அதனைத் தனிப்படச் சொல்லவேணுமோ வென்று சிலர்** சங்கிப்பர்கள், அர்த்தாத்ஸித்திப்பதைக் காட்டிலும் ஸுஸ்பஷ்டமாகவே ஸித்திப்பது **விசேஷமாதலால்** சொல்லிற்று என்று உணர்க. அன்றியும், ஒத்தார் இல்லையென்றால், **அநந்வயாலங் கார ரீதியிலே தனக்குத்தானே** ஒத்தவனாக ஆகக்கூடுமாதலால் * ககநம் ககநாகாரம் ஸாகரஸ் ஸாக **ரோபமஃ**'' என்றாற்போலே ''பேரருளாளன் பேரருளாளனோடு ஒத்தவன்'' என்றும் சொல்லுவதற்கு **ப்ரஸக்தியுண்டு;** ஆகவே இந்த விதத்தில் ஒத்தார் இருந்தாலும் மிக்கார் இல்லை—என்கிறதாகவுங் கொள்ளலாம், **ஔபநிஷதீ**—தத்திதவ்ருத்தி. (1)

श्रीनिधिं निधिमपारमर्थिनां अर्थितार्थपरिदानदीक्षितम् ।
सर्वभूतसुहृदं दयानिधिं देवराजमधिराजमाश्रये ॥ २ ॥

ஸ்ரீநிதிம் நிதிமபாரமர்த்திநாம் அர்த்திதார்த்த பரிதாநதீக்ஷிதம் ।
ஸர்வபூதஸுஹ்ருதம் தயாநிதிம் தேவராஜமதிராஜமாச்ரயே ॥ 2 ॥

ஸ்ரீ நிதிம்	ச்ரியஃ பதியாய்	ஸர்வ பூத ஸுஹ்ருதம்	ஸமஸ்த ப்ராணிகளுக்கும் அன்பனாய்
அர்த்திநாம்	யாசிப்பவர்களுக்கு	தயா நிதிம்	கருணைநிதியாய்
அபாரம்	அளவற்ற	அதிராஜம்	அனைவர்க்கும் மேற்பட்ட தலைவனாயிரா நின்ற
நிதிம்	நிதியாயிருப்பவனாய்	தேவராஜம்	தேவபிரானை
அர்த்தித அர்த்த பரிதாநதீக்ஷிதம்	வேண்டின பொருளைக் கொடுத்தருள்வதையே விரதமாகக் கொண்டவனாய்	ஆச்ரயே	அடிபணிகின்றேன்.

**பெருந்தேவி மணவாளனாய், அர்த்திகளுக்கு கொள்ளக்குறையாத நிதியாயிருப்பவனாய், கேட்டார் கேட்ட பொருள்களையெல்லாம் அளித்தருள்வதையே விரதமாகக் கொண்டவனாய் ஸகல ப்ராணிகளுக்கும் நன்மையையே ஆசம்ஸிப்பவனாய், பிறர்படும் இடர்கண்டு ஐயோ! என்று இரக்கங் கொள்ளுமவனாய், *அயர்வறுமமரர்களதிபதியான பேரருளாளனைப் பணிகின்றே னென்கை. (2)

नित्यमिन्द्रियपथातिगं महः योगिनामपि सुदूरगं धियः ।
अप्यनुश्रवशिरस्सु दुर्ग्रहं प्रादुरस्ति करिशैलमस्तके ॥ ३ ॥

நித்யமிந்த்ரியபதாதிகம் மஹ: யோகிநாமபி ஸுதூரகம் திய: ।
அப்யநுச்ரவசிரஸ்ஸு துர்க்ரஹம் ப்ராதுரஸ்தி கரிசைலமஸ்தகே ॥ 3 ॥

நித்யம்	சாச்வதமானதாய்	துர்க்ரஹம்	அளவிட்டு அறியக்கூடாததான
இந்த்ரியபத அதிகம்	சக்ஷுராதி இந்திரியங்களின் வழியைக் கடந்ததாய்	மஹ:	(தேவ பிரானுகிற ஒரு) தேஜஸ்ஸானது
யோகிநாம்	யோகிகளுடைய	கரி சைல மஸ்தகே	ஹஸ்திகிரிசிகரத்தில்
திய: அபி	புத்திக்கும்	ப்ராதுரஸ்தி	விளங்கா நின்றது.
ஸுதூரகம்	அதி தூரத்திலுள்ளதாய்		
அநுச்ரவ சிரஸ்ஸு	வேதாந்தங்களிலும்		

*** பேருளாளன் ஒரு விலக்ஷண தேஜஸ்ஸு; இது மற்ற ஸூர்யன் அக்நி முதலிய தேஜஸ்ஸுக்களைப்போல் ஒரு கால விசேஷத்திலே நசிப்பதல்லாமல் சாச்வதமாயுள்ளது. நமது மாம்ஸ சக்ஷுஸ்ஸாலே காணக்கூடாதது. இந்திரியங்களை அடக்கியாளவல்ல யோகிகளினுடைய புத்திக்கும் எளிதில் எட்டாதது. ஆனந்த குணமொன்றைத் துதிக்கத் தொடங்கிப் பிற்காலிந்த உபநிஷத்துக்கும் எட்டாதது. அப்படிப்பட்ட மிக அற்புதமான ஒரு தேஜஸ்ஸானது ஹஸ்திகிரிமஸ்தகத்தில் ஸர்வஸுலபமாக ஸேவை ஸாதிக்கின்றது என்கை. (3)

वल्लिका श्रुतिमतल्लिकामयी येन पल्लवितविश्वशाखया ।
स्वश्रिया करिगिरेरनुक्रियां वष्टि मृष्टवरदं तमाश्रये ॥ ४ ॥

வல்லிகா ச்ருதிமதல்லிகாமயீ யேந பல்லவிதவிச்வசாகயா ।
ஸ்வச்ரியா கரிகிரேரநுக்ரியாம் வஷ்டி ம்ருஷ்டவரதம் தமாச்ரயே ॥ 4 ॥

ச்ருதி மதல்லிகா மயீ	ச்ரேஷ்டமான வேதமாகிற	ஸ்வ ச்ரியா	தனது சோபையினாலே
வல்லிகா	கொடியானது	கரிகிரே:	ஹஸ்தி கிரியினுடைய
யேந பல்லவித விச்வ சாகயா	யாவனொரு தேவபிரானுகிற தளிரை யுடைத்தான ஸகல **சாகைகளையுமுடைய (கரிகிரிபக்ஷத்தில்) யாவனொரு தேவபிரானாலே தளிர் பெற்ற எல்லாக்கிளைகளையுமுடைத்தான**	அநுக்ரியாம்	அநுகாரத்தை (ஸாம்யத்தை)
		வஷ்டி	விரும்புகின்றதோ
		தம் ம்ருஷ்ட வரதம்	அந்த பூர்ண வரதனை
		ஆச்ரயே	**ஆச்ரயிக்கின்றேன்.**

*** ச்ருதியை ஒரு **லதையாக ரூபணம் பண்ணி**, கரிகிரிக்கும் ச்ருதிக்கும் ச்லேஷத்தாலே ஸாம்யம் சொல்லுகிறது. ச்ருதியாகிற லதையும் **வரதேந பல்லவித விச்வசாகையா**யிருக்கும்; ஹஸ்திகிரியும் **வரதேந பல்லவித விச்வசாகமா**யிருக்குமென்று சப்தச்லேஷம். அதாவது, ச்ருதிலதா பக்ஷத்தில் **'யேந'** என்கிற த்ருதீயைக்கு "தாம்யேந தநவாந்" என்ற விடத்திற்போல அபேதம் அர்த்தமாகக் கொள்ளவேணும். சாகா சப்தமானது காண்வ காடக காலாபாதி சாகா விசேஷங்களைச் சொல்லுகிறது. ஸாமாந்யமாக லோகத்தில் சாகைகளுக்கு அழகு பல்லவங்களினுலாகையாலே இந்த வேத சாகைகளுக்கும் பல்லவத்தினுல் அழகு சொல்ல வேணும். இங்கு பல்லவஸ்தாநீயன் எம்பெருமான்; வேதசாகைகள் எம்பெருமானுலே ஸஞ்ஜாத பல்லவங்களாயிருக்கின்றன வென்றுல் வேதங்களெல்லாம் பகவத் பரங்களாயிருந்துகொண்டு அழகாக விளங்குகின்றன வென்றபடி.

இனி, கரிகிரிபக்ஷத்தில் **சாகா** சப்தம் மரக்கிளைகளைச் சொல்லுகிறது. அவை பேருளாளனுலே பல்லவிதமாகையாவது ஹஸ்திகிரியிலுள்ள ஸகலவ்ருக்ஷங்களும் பேருளாளனுடைய நித்யஸந்நிதியாலே

ததீய திவ்ய கடாக்ஷத்தையே தாரகமாகக்கொண்டு செழிப்புற்று விளங்குகையாம். இவ்வகையாலே ஹஸ்திகிரியும் வேத மௌலியும் பரஸ்பர ஸாம்யாபந்நமாகிறது. எம்பெருமானுடைய பாரம்யத்தை ப்ரகாசப் படுத்தும் விஷயத்தில் ஹஸ்திகிரியானது வேதத்தை யொத்திருக்கின்ற தென்றவாறு.

மதல்லிகா சப்தம் ச்ரேஷ்ட வாசகம்; ச்ரேஷ்ட ப்ராமாணமான ச்ருதி யென்றபடி. **[ம்ருஷ்ட வரதம்]** பரிசுத்தனான வரதனை என்னவுமாம். (4)

यं परोक्षमुपदेशतस्त्रयी नेति नेति परपर्युदासतः ।
वक्ति यस्तमपरोक्षमीक्षयति एष तं करिगिरिं समाश्रये ॥ ५ ॥

யம் பரோக்ஷமுபதேசதஸ் த்ரயீ நேதி நேதி பரபர்யுதாஸத: ।
வக்தி யஸ் தமபரோக்ஷமீக்ஷயதி ஏஷ தம் கரிகிரிம் ஸமாச்ரயே ॥ 5

த்ரயீ	வேதமானது (ப்ருஹதாரண்யகம்)
இதி ந இதி ந (இதி)	இவ்வளவனல்லன் இவ்வளவனல்லன் (என்று)
பர பர்யுதாஸத: உபதேசத:	மேன்மேலும் மறுத்துக் கொண்டு போவதாகிற உபதேசத்தால்
யம்	யாவனொரு வரதனை
பரோக்ஷம்	இந்த்ரியங்களுக்கு வெளிப்பட்டவனாய் [அபரிச்சிந்நனாய்]
வக்தி	சொல்லி நின்றதோ
தம்	அந்த வரதனை
ய ஏஷ:	யாதொரு இந்த ஹஸ்திகிரி
அபரோக்ஷம் ஈக்ஷயதி	ஸாக்ஷாத்தாக ஸேவை ஸாதிப்பிக்கின்றதோ
தம் [ஏதம்] கரிகிரிம்	அந்த இந்த ஹஸ்திகிரியை
ஸமாச்ரயே	ஆச்ரயிக்கின்றேன்.

*** கீழ் ச்லோகத்தில் வேதத்துக்கும் ஹஸ்திகிரிக்கும் ஒருவாறு ஸாம்யம் வருணிக்கப்பட்டது; இனி வேதத்திலுங்காட்டில் ஹஸ்திகிரிக்கு ஏற்றம் கூறப்படுகிறது.

ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் (4-3-1.) *த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே* என்று தொடங்கி ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபமான ஸமஸ்த ப்ரபஞ்சத்தையும் ப்ரஹ்மத்தின் ரூபமாகப் பராமர்சித்து, மேலே (6) * **तस्य ह वा एतस्य पुरुषस्य रूपं यथा माहारजतं वासः** * இத்யாதியாலே ஆகார விசேஷத்தையும் சொல்லி, * **अथात आदेशो नेति नेति न ह्येतस्मादिति नेत्यन्यत् परमस्ति** * என்று, கீழ்க் கூறிய ரூபமென்ன ஆகாரமென்ன இவற்றோடு கூடிய ப்ரஹ்மம் இவ்வளவேயன்று, இவ்வளவேயன்று, ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் அந்த ப்ரஹ்மத்திற் காட்டில் பரமான [சிறந்ததான] வஸ்து வேறொன்று கிடையாது என்று ஸர்வோத்க்ருஷ்டமாகச் சொல்லி வைத்தும், அந்த ப்ரஹ்மத்தைப் பரோக்ஷமென்றதே யொழிய ப்ரத்யக்ஷமாகக் காட்டித் தந்ததில்லை; இந்த ஹஸ்திகிரியோ வென்றால், அப்படி ஸர்வாதிசாயியான பரப்ரஹ்மத்தை ஸகலஜந ஸாக்ஷாத்காரயோக்யமாகக் காட்டித் தாராநின்றது; ஆகவே அந்த வேதத்தில் அலைந்து வருந்துவதை விட்டு இந்த ஹஸ்திகிரிதன்னையே பற்றி உஜ்ஜீவிப்போமென்றபடி.

"**परपर्युदासतः उपदेशतः**" என்றது **परपर्युदासरूपेण उपदेशेन** என்றபடி. உதாஹரித்த ச்ருதி வாக்யத்தில் * **अथात आदेशः** * என்றவிடத்தில் " **आदेशः-उपदेशः क्रियत इत्यर्थः**" என்று பாஷ்யமாகையால் அவ்வர்த்தத்திற்கு வ்யஞ்ஜகமாக '**उपदेशतः**' என்றருளிச் செய்தார்.

"**प्रकृतैतावत्त्वं हि प्रतिषेधति ततो ब्रवीति च भूयः**" (3-2-21) என்கிற ப்ரஹ்மஸூத்ரத்தின் ஸ்ரீபாஷ்யத்தில் இந்த ச்ருதிவாக்யார்த்தம் சிக்ஷிக்கப்பட்டிருக்கின்றமை காண்க. ... (5)

एष ईश इति निर्णयं त्रयी भागधेयरहितेषु नो दिशेत् ।
हस्तिधामनि न निर्णयेत कः देवराजमयमीश्वरस्त्विति ॥ ६ ॥

ஏஷ ஈச இதி நிர்ணயம் த்ரயீ பாகதேயரஹிதேஷு நோ திசேத் ।
ஹஸ்திதாமநி ந நிர்ணயேத க: தேவராஜமயமீச்வரஸ் த்விதி ॥ 6 ॥

த்ரயீ	வேதமானது	நோ திசேத்	உண்டுபண்ணுமல் போனல் போகட்டும்;
ஏஷ: ஈச: இதி நிர்ணயம்	தேவபிரான்ஸர்வேச்வரன் என்கிற நிர்ணயத்தை	ஹஸ்தி தாமநி து	ஹஸ்திகிரியாகிற ஸ்தானத்திலே போ வென்ருல்
பாகதேய ரஹிதேஷு	[வேதார்த்தத்தை நன்ருக ஆராய்ந்து அறியமாட்டாத] தௌர்ப்பாக்ய சாலிகளிடத்தில்	தேவராஜம் அயம் ஈச்வர: இதி	தேவபிரானை (ஸேவித்து) இவனே ஸர்வேச்வரனென்று
		க: ந நிர்ணயேத	எவன் நிச்சயிக்ககமாட்டான்?

*** "தேவபிரானே ஸர்வேச்வரன்" என்கிற அர்த்தம் வேத வேதாந்தங்களில் நிச்சயிக்கப்பட்ட விஷயம் என்பது முதல் ச்லோகத்திலேயே குறிப்பிடப்பட்டது; ஆனல், இவ் வர்த்தமானது வேதாந்தங் களில் அனைவராலும் எளிதாகத் தெரிந்துகொள்ள முடியாது; ஜாயமாந கால கடாக்ஷம், ஆசார்ய கடாக்ஷம் முதலிய பாக்யமுள்ளவர்களுக்கே இப் பொருள் விளங்கும். அப்படிப்பட்ட பாக்ய மில்லாத பாஹ்ய குத்ருஷ்ட்யாதிகளுக்கு இப் பரமார்த்தம் தோன்ருது. சிலர் ஈச்வரனே யில்லையென்று பிதற்றுவர்; சிலர் பஸ்மதாரியைத் தலைவனென்று கொண்டு தடுமாறுவர். வேதமானது அனைவரிடத்திலும் வாத்ஸல்ய முடையதாகையால், பாக்யசாலிகள், தௌர்ப்பாக்யசாலிகள் என்னும் வாசியின்றிக்கே எல்லோர்க்கும் இப் பரமார்த்தத்தைத் தோற்றுவிக்க வேண்டியது அதற்குக் கடமையா யிருந்தும், அந்த வேதம் பக்ஷபாதம் பாராட்டி இராமாநுசனடியார்களான சில பாக்யசாலிகளுக்கே பரத்வ ஸித்தாந்தத்தைத் தெளிவித்ததே யொழிய மற்றுள்ள *கருவிலே திருவிலாதார்க்கு இதைத் தெளிவியாதொழிந்தது. ஒழிக; அது பற்றி நாம் வருந்தவேண்டியதில்லை; அக் குறை தீர இந்த ஹஸ்திகிரியானது அந்த ஸித்தாந்தத்தை ஸர்வ ஜந ஸுலபமாகச் செய்கின்ற தென்கிருர். எனவே, வேதத்தில் குதர்க்கம் கூறுகின்றவர்களும் ஹஸ்திகிரியிலே பேரருளாளனை ஸேவிக்கப் பெற்றவாறே, 'பேரருளாளனல்லது பரதெய்வமில்லை என்று தாமே பரவசமாகக் கையெழுத்திடும்படி ஆய்விடுகிறது—என்றபடி.

'ஹஸ்திகிரௌ' என்ருதல் 'ஹஸ்திகிரிதாமநி' என்ருதல் சொல்லாதே 'ஹஸ்திதாமநி' என்றது ஏகதேசக்ரஹணம். ஹஸ்தீச கரீச இத்யாதி ஸ்தலங்களிலும் இங்ஙனம் கொள்க. சதுர்த்த பாதத்தில் தேவராஜம் என்ற பதத்திற்கு அடுத்தபடியாக 'த்ருஷ்ட்வா' என்ருே 'ஸம்ஸேவ்ய' என்ருே ஒருல்யபந்த பதம் அத்யாஹரித்துக் கொள்வது நலம். (6)

है कुदृष्ट्यभिनिविष्टचेतसां निर्विशेषसविशेषताश्रयम् ।
संशयं करिगिरिर्नुदत्यसौ तुङ्गमङ्गलगुणास्पदे हरौ ॥ ७ ॥

ஹை குத்ருஷ்ட்யபிநிவிஷ்டசேதஸாம் நிர்விசேஷஸவிசேஷதாச்ரயம் ।
ஸம்சயம் கரிகிரிர் நுதத்யஸௌ துங்கமங்கலகுணஸ்பதே ஹரௌ ॥ 7 ॥

துங்கமங்கலகுண ஆஸ்பதே ஹரௌ	சிறந்த கல்யாண குணங்களுக்கு இருப்பிடமான எம்பெருமா னிடத்தில்	நிர்விசேஷ ஸவி சேஷதா ஆச்ரயம் ஸம்சயம்	இவன் குணமுடையவனு குண மில்லாதவனு என்கிற இரண்டு கோடிகளைப்பற்றிய ஸந்தேஹத்தை
குத்ருஷ்டி அபிநி விஷ்ட சேதஸாம்	குத்ஸிதமான யோசனைகளிலே பொருந்தின மனஸ்ஸை யுடைய துர்வாதிகளுக்கு [உண்டாயிருக்கிற]	அஸௌ கரிகிரி: நுததி ஹை	இந்த ஹஸ்திகிரியானது போக்கடிக்கின்றது; இது ப்ரஸித்தம்.

*** வேதத்திற்காட்டிலும் ஹஸ்திகிரியே சிறந்ததென்பதை நன்கு விவரிக்கிருர். எம்பெருமான் அநந்த கல்யாண குணங்களுக்கு ஆஸ்பதமாயிருப்பவன்; அப்படிப்பட்ட எம்பெருமானை வேதமானது சில விடங்களில் குணசாலியாகவும் சில விடங்களில் குண சூந்யனுகவும் சொல்லி வைத்தது. அதனல் விருத்தார்த்தமாகத் தோன்றுமிடங்களில் ந்யாய ஸஞ்சாரம் செய்து அவிருத்தார்த்த நிர்ணம் பண்ண வேணும். நிஷ்கல்மஷமான ஞானத்தை யுடையவர்கள் ந்யாய ஸஞ்சாரம் பண்ணினல்—'எம்பெருமான் குணசாலிதான், ஆனல் சில வேதவாக்யங்கள் அவனை நிர்க்குணனுகச் சொல்லுகின்றனவே, அவற்றிற்குக் கதியென்ன வென்ருல்; அந்த நிர்க்குண ச்ருதிகள் ஹேயகுண சூன்ய னென்பதைச்

சொல்லுகின்றனவே யொழிய குணமாத்ர சூன்யதையைச் சொல்லுகின்றன வல்ல' என்று நிர்ணயிப்பர்கள். குத்ருஷ்டிகளோ வென்றல், இப்படி ந்யாயஸஞ்சாரம் பண்ணித் தெளியமாட்டாமல் ஈச்வரனை நிர்க்குணனுகவே நிர்ணயித்தொழிந்தனர். மற்றும் சில ம்ருதுப்ரஜ்ஞர்களாயும் பீருக்களாயுமுள்ளவர்கள் கீழ்ச் சொன்ன இரண்டு வகை நிஷ்கர்ஷங்களில் ஒன்றையும் அவலம்பிக்கமாட்டாமல், "ஐயோ! ச்ருதிகள் இரண்டு வகையாகவும் சொல்லுகின்றனவே; எதையும் நாம் நிர்த்தாரணம் செய்யக் கூடவில்லையே; உண்மையில் அவன் குணசாலியோ? குணசூன்யனே? தெரியவில்லையே!" என்று மயங்கித் தடுமாறி நிற்பர்கள்.

அப்படிப்பட்ட ஸம்சயாத்மாக்கள் ஹஸ்திகிரியில் வந்து தேவபிரானை ஸேவித்தவாறே அவனுடைய ஸகல கல்யாண குணகணங்களையும் நன்ருக அநுபவிக்கப்பெற்று, "ஐயோ இந்த எம்பெருமானையோ நாம் குண விஷயத்தில் ஸம்சயித்தது! ஹா ஹா! நம் புத்தியின் கொடுமையென் சொல்!" என்று கதறும்படியாகும்; ஆகவே ஸம்சயங்களை விளைக்கவல்ல வேதங்களிற் காட்டிலும் ஸம்சயத்தை அடியறுக்கவல்ல இந்த ஹஸ்திகிரியே பரமப்ராப்யமென்றவாறு. (7)

न्यायतर्कमुनिमुख्यभाषितैः शोधितैस्सह कथंचन त्रयी ।
जोषयेद्धरिमनंहसो जनान् हस्तिधाम सकलं जनं स्वयम् ॥ ८ ॥

ந்யாயதர்க்கமுநிமுக்யபாஷிதை: சோதிதைஸ் ஸஹ கதஞ்சந த்ரயீ ।
ஜோஷயேத்தரிமநம்ஹஸோ ஜநாந் ஹஸ்திதாம ஸகலம் ஜநம் ஸ்வயம் ॥ 8 ॥

த்ரயீ	வேதமானது	ஹரிம் ஜோஷயேத்	எம்பெருமானை [பரதத்வமாக] உணர்த்தும்;
சோதிதை:	நன்ருக சோதிக்கப்பட்ட	ஹஸ்திதாம [து] ஸ்வயம்	ஹஸ்திகிரியோ வென்றல் தானுகவே
ந்யாய தர்க்க முநி முக்யபாஷிதைஸ் ஸஹ	மீமாம்ஸாந்யாயங்களென்ன; தர்க்கமென்ன, [வியாஸபராசராதி] முனிவரர்களுடைய சொற்களாகிய புராணங்களென்ன, ஆகிய இவற்றோடு கூடிக்கொண்டு	ஸகலம் ஜநம்	[பாபிகள் புண்யசாலிகள் என்ற வாசியற] அனைவர்க்கும்
கதஞ்சந	கஷ்டப்பட்டு	[ஹரிம் ஜோஷயதி]	எம்பெருமானை ஸேவை ஸாதிப்பிக்கின்றது.
அநம்ஹஸ: ஜநாந்	புண்யசாலிகளான சில பேர்களுக்கு		

*** "ஸர்வே வேதாயத்பதமாமநந்தி" வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய: " வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கு" என்றித்யாதிகளாலே 'வேதத்தில் பரதத்வமாக ப்ரதிபந்நன் ஸ்ரீமந் நாராயணனே" என்று ஓதப்பட்டிருந்தாலும், நாம் ஒவ்வொரு வேதவாக்யத்தையும் தனித் தனியாகப் பார்த்து அர்த்தத்தை நிச்சயிப்போமென்று புகுந்தால் கார்யமாகிறதில்லை; வேதமானது ஸஹாயாந்தரமில்லாமல் நமக்கு யதார்த்தத்தை வெளியிடுவதில்லை. 'மீமாம்ஸாந்யாயங்களையும் தர்க்கத்தையும் ஸாத்விக புராணங்களையும் ஸஹாயமாகக் கொண்டு ப்ரவர்த்தித்தால்தான் வேதார்த்தம் விளங்கும். இன்னும் சிறிது யோசித்தால் அந்த ஸஹாயங்களுக்கும் வேருெரு ஸஹாயம் தேவை யென்னவேணும். [சோதிதை:] எந்த ந்யாய தர்க்க புராணங்களை நாம் அநுகூலமாகக் கொள்ளுகிருேமோ, அந்த ந்யாய தர்க்க புராணங்களைக் கொண்டே ப்ரதி பக்ஷிகளும் தமது அபார்த்தங்களை ஸாதிப்பதனுல், வேதார்த்த நிச்சயத்திற்கு ஸஹாயமாகக் கொள்ளவேண்டிய ந்யாய தர்க்க புராணங்களுக்கும் 'சோதனம்' என்கிற ஸஹாயம் ஆவச்யகம். அதாவது அந்த ந்யாயதர்க்காதிகள் ஆபாதத: நமக்கு விபரீதார்த்தங்களைத் தோற்றுவிக்க வொண்ணுதபடி ஆழ்வாராசார்யர்களுடைய ஸ்ரீ ஸூக்திகளைக் கொண்டு அவற்றை சோதிக்கவேணும். ஆக இவ்வளவு பரிச்ரமத்தை ஸஹிக்க வல்லவர்கள் யாரோ சில பரமைகாந்திகளே யாவர். அப்படிப்பட்டவர்களுக்கு வேதத்தின் உண்மைப் பொருள் மஹதா ப்ரயாஸேந விளங்குமேயன்றி ஸர்வ ஜநங்களுக்கும் ஸாதாரணமாக விளங்காது. ஹஸ்திகிரியோவென்றல் அங்ஙனன்றி அனைவர்க்கும் அநாயாஸமாகவே பரம்பொருளை ப்ரகாசிப்பிக்கிறது. எனவே, மஹா ப்ரயாஸப்படுத்திச் சிலர்க்கு மாத்திரம் எம்பெருமானைத் தெரிவிக்கிற வேதத்திற் காட்டில் அவனை எளிதாக அனைவர்க்கும் ஸேவை ஸாதிப்பிக்கிற திருவத்திமாமலையே சிறந்தது என்றதாயிற்று. (8)

अद्भुतं महदसीमभूमकं किंचिदस्ति किल वस्तु निस्तुलम् ।
इत्यघोषि यदिदं तदग्रतः तथ्यमेव करिधाम्नि दृश्यते ॥ ९ ॥

அத்புதம் மஹதஸீமபூமகம் கிஞ்சிதஸ்தி கில வஸ்து நிஸ்துலம் ।
இத்யகோஷி யதிதம் ததக்ரத: தத்த்யமேவ கரிதாம்நி த்ருச்யதே ॥9॥

அத்புதம்	ஆச்சர்யகரமாயும் [தாயும்
மஹத்	அபரிச்சிந்நஸ்வரூபத்தையுடைய
அலீம பூமகம்	எல்லையில்லாத வைபவத்தையுடையதாயும்
[அத ஏவ]	இப்படி இருப்பதனாலேயே
நிஸ்துலம்	ஒப்பற்றதாயும்
கிஞ்சித் வஸ்து அஸ்தி இதி	ஒரு வஸ்து இருக்கின்றதென்று

யத் கில அகோஷி	யாதொரு வஸ்துவானது வேதாதிகளில் ப்ரஸித்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ
தத் இதம்	அந்த இந்த வஸ்து
கரிதாம்நி	கரிகிரியில்
அக்ரத:	இதோ
தத்த்யமேவ	வாஸ்தவமாகவே
த்ருச்யதே	காணப்படுகிறது.

*** "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே —யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்-ஏஷ ஸர்வபூதாந்தராத்மா" "எப்பால் யவர்க்கும் நலத்தாலுயர்ந்துயர்ந்து அப்பாலவன்" இத்யாதி ப்ரமாணசதங்களாலே ஒப்புயர்வற்றதாகக்கூறப்பட்டுள்ள ஸ்ரீமந் நாராயணனென்கிற ஒரு பரம்பொருள் இப்போது ஹஸ்திகிரியில் யதார்த்தமாகவே அனைவராலும் ஸேவிக்கப்படுகின்றது. [தத்த்யமேவ] ப்ரமாணங்களில் எம்பெருமானுக்குச் சொல்லப்பட்டிருக்கிற வைபவங்களை வாசித்தவர்கள் 'இப்படிப்பட்டவைபவத்தையுடைத்தாய் லோகவிலக்ஷணமான ஒரு வஸ்து உண்மையாயிருக்குமா?வேதங்கள் கவிகட்டுகிறப்போல் ஒன்று பத்தாக வர்ணிப்பதாயிருக்குமேயொழிய உண்மையில் இவ்வளவு வைபவமுடைய ஒரு வஸ்து இருக்கக்கூடுமென்று எம் நெஞ்சில் தோன்றவில்லையே!' என்று அதிசங்கித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஹஸ்திகிரியில் வந்து ஸேவித்தவாறே வேதம் சொன்னது ஒக்கும்! ஒக்கும்!! ஒக்கும்!!! என்று இசைந்து வியக்கும்படியாக அத்யாச்சர்யமான வைபவத்துடனே பேரருளாளன் ஸேவை ஸாதிக்கிறானென்றபடி. (9)

संवदेत किल यत् प्रमान्तरैः तत् प्रमाणमिति ये हि मेनिरे ।
तन्मतेऽपि बत मानतां गता हस्तिनाऽद्य परवस्तुनि त्रयी ॥ १० ॥

ஸம்வதேத கில யத் ப்ரமாந்தரை: தத் ப்ரமாணமிதி யே ஹி மேநிரே ।
தந்மதேபி பத மாநதாம் கதா ஹஸ்திநா அத்ய பரவஸ்துநி த்ரயீ ॥ 10 ॥

யத்	["ப்ரமாணமாக அபிமாநிக்கப்படுகிற] யாதொன்றானது
ப்ரமாந்தரைஃ	வேறு ப்ரமாணங்களோடு
ஸம்வதேத தத் கில ப்ரமாணம் இதி	இணங்குமோ அதுவன்றோ ப்ரமாணமாகும்" என்று
யே	யாவர் சிலர்
மேநிரே	எண்ணினார்களோ
தந்மதே அபி	அவர்களின் மதத்திலும்

அத்ய	இப்போது
ஹஸ்திநா	ஹஸ்திகிரியினாலே
த்ரயீ	வேதமானது
பரவஸ்துநி	பரம்பொருளாகிற எம்பெருமான் விஷயத்தில்
மாநதாம்	ப்ராமாண்யத்தை
கதா	அடைந்தது ;
பத!	[ஸந்தோஷக் குறிப்பு]

***"ஆதௌ வேதாஃ ப்ரமாணம்" என்று சொல்லுகிற வைதிகர்கள் எந்த ப்ரமாணத்தைக்கொண்டு வேதத்துக்கு ப்ராமாண்யத்தை உபபாதிக்கின்றனரென்றால் அதனுடைய ப்ராமாண்யம் மற்றொரு ப்ரமாணத்தைக்கொண்டு உபபாதிக்கத் தக்கதல்ல என்கிறார்கள். 'வேதபாஹ்யர்கள் இந்த வைதிக வாதத்தை அங்கீகரிப்பதில்லை. அவர்கள் சொல்லுவதென்னவென்றால், "ஸ்வதஃ ப்ரமாணமென்று ஒன்றும் கிடை.

யாது ; ஒன்றை நாம் ப்ரமாணமாகக் கொள்ள வேணுமானல் அதற்கிணங்க மற்ருெரு ப்ரமாணம் காட்டப் படவேணும். அப்படிக் காட்ட முடியாவிட்டால் அது ப்ரமாணமாகமாட்டாது; ஏவஞ்ச (ச்லோ.) "ப்ரமாணாந்தரஸம்வாதோ யஸ்ய ஸம்பவிதும் க்ஷம:, தஸ்யைவ ஸ்யாத் ப்ரமாணத்வம் நாந்யஸ்யேத்யவதார் யதே." என்கிருர்கள். அந்த பாஹ்யவாதிகளை நாம் கண்டிக்கவேணுமானல் அவர்கள் சொல்லும் வாதத்தை யங்கீகரித்துக் கண்டிப்பதே யழகு; அங்ஙனம் செய்யும்போது 'வேதம் ஸ்வத:ப்ரமாணம்' என்கிற வாதத்தை விட்டிட்டு அதற்கு ஸம்வாதமாக ஒரு ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தைக் காட்டினல் உடனே அந்த வாதிகள் "ப்ரமாணாந்தரஸம்வாதஸத்த்வாத் வேதா: ப்ரமாணமேவ" என்று கையெழுத்திட்டுப் போவர்கள். அப்படி வேதத்துக்கு ப்ராமாண்யத்தை ஸ்தாபிக்கக்கூடிய ப்ரமாணாந்தரம் எதுவென்ருல், ஹஸ்திகிரியேயாம். வேதத்திற் சொல்லப்படுகிற அர்த்தங்கள் [அதாவது - ஈச்வர னெருவனுண்டு ; ஸ்ரீமந் நாராயணனே தத்வம் ; அவனுக்கு குணங்களுண்டு ; விக்ரஹமுண்டு ; விபூதியுண்டு இத்யாதிகள்] ஹஸ்திகிரியில் கையிலங்கு நெல்லிக்கனிபோல் காணப்படுகிறபடியால் வேத ப்ராமாண்யத்தை ஒப்புக் கொள்ளாத பாஹ்யர்களையும் ஹஸ்திகிரியானது ஒப்புக்கொள்ளச் செய்கிறது என்றபடி.

இதனல் எம்பெருமானுக்கு வேதங்களில் கூறப்பட்டுள்ள விசேஷங்களெல்லாம் ஒன்று தவருமல் பேரருளாளன் பக்கல் ஸேவிக்கலாயிருக்குமென்ற தாகிறது.

[ஸம்வதேத] "வ்யக்தவாசாம் ஸமுச்சாரணே" என்னும் பாணிநிஸூத்ரத்தால் வததாது ஆத்மநே பதியாய்த்து. ஒரு ப்ரமாணத்துக்கு உபபாதகமாக மற்ருெரு ப்ரமாணத்தை உதாஹரித்தால் அதற்கு ஸம்வாத ப்ரமாணமென்று பெயர். இவ்விடத்தில் ஹஸ்திகிரியானது ஸம்வாத ப்ரமாணமாக ஆயிற்று. **[ப்ரமாந்தரை:]** அந்யா: ப்ரமா:-ப்ரமாந்தராணி, தை:; "ஆதச்சோபஸர்க்கே." என்ற ஸூத்ரத்தால் ஆங்ப்ரத்யயாந்த மாக நிஷ்பந்நமான ப்ரமாசப்தம் 'ப்ரமிதௌப்ரமா" என்ற அமரகோசத்தின்படி யதார்த்தஜ்ஞானவாசகமே யொழிய 'ப்ரமாகரணம் ப்ரமாணம்' என்னப்பட்ட ப்ரமாணபர்யாய மல்ல வென்றும் 'ப்ரமாணாந்தரை:' என்ன வேண்டியிருக்க 'ப்ரமாந்தரை:' என்ற இது சேருமோ? என்றும் சிலர் மயங்குவர். ப்ரமா சப்தம் ப்ரமாணவாசியுமாயுள்ள தென்று சப்த ரத்நாவளிகாரன் சொல்லி வைத்தான். அங்ஙனே ப்ரயோகங்களும் உண்டு. இங்கு ப்ரமாசப்தம் ப்ரமாணபர்யாயமாக வ்யாக்யாதம். பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தரசதகத்தில் "தச்சார்வாக மதேபி ரங்கரமண! ப்ரத்யக்ஷவத் ஸா **ப்ரமா**' என்று ப்ரமாசப்தத்தை ப்ரமாணபர்யாயமாக அருளிச் செய்தார். "தந்மதேபி கில" என்றும் பாடமுண்டு. **[ஹஸ்திநா]** ஹஸ்திகிரிணு என்றபடி; ஏகதேசக்ராஹணம். ***ஸ்வஸ்தி ஹஸ்திகிரி*** என்று தொடங்கி இதுவரை பத்து ச்லோகங்களும் ரதோத்ததா வ்ருத்தம். (10)

गुणायत्तं लोके गुणिषु हि मतं मङ्गलपदं विपर्यस्तं हस्तिक्षितिधरपते! तत् त्वयि पुनः।
गुणास्सत्यज्ञानप्रभृतय उत त्वद्गततया शुभीभूयं याता इति हि निरणैष्म श्रुतिवशात् ॥ ११ ॥

குணயத்தம் லோகே குணிஷு ஹி மதம் மங்கலபதம்
விபர்யஸ்தம் ஹஸ்திக்ஷிதிதரபதே தத் த்வயி புந: ।
குணஸ் ஸத்யஜ்ஞாநப்ரப்ருதய உத த்வத்கததயா
சுபீபூயம் யாதா இதி ஹி நிரணைஷ்ம ச்ருதிவசாத். ॥ 11 ॥

லோகே	உலகத்தில்	ஹஸ்தி க்ஷிதிதர பதே	ஹஸ்திகிரிநாதனே !
குணிஷு	குணசாலிகளிடத்தில்		
மங்கலபதம்	'இவர்கள் நல்லவர்கள்' என்ற சொல்லானது	தத்	அந்த விஷயமானது
குணயத்தம் ஹி மதம்	குணங்களைப் பற்றியதாக வன்ருே எண்ணப்பட்டிருக்கிறது ;	த்வயி புந:	உன்னிடத்திலோ வென்ருல்

விபர்யஸ்தம்	மாறுபாடாயிருக்கிறது ; [குணத்தைப்பற்றி வந்ததல்ல]
ஹி	ஏனென்றால்
ஸத்யஜ்ஞாந ப்ரப்ருதய:	ஸத்யம் ஞானம் முதலிய
குணா:	குணங்களானவை
த்வத்கததயா	உன்னை யடைந்திருப்பதனால்
சுபீபூயம் யாதா: இதி	மங்களத்தன்மையை அடைந்தன வென்று
ச்ருதிவசாத்	வேதங்களைக் கொண்டு
நிரணைஷ்ம	நிர்ணயித்தோம்.

*** உலகத்தில் நாம் பல பேர்களைப் பார்த்து 'இவன் நல்லவன், இவன் நல்லவன்' என்கிறோம்; அந்த நன்மையை நாம் எதுகொண்டு சொல்லுகின்றோமென்றால் அவனிடத்திலுள்ள நல்ல குணங்களைக் கொண்டேயாம். இரக்கம், ஒழுக்கம், வணக்கம், பொறுஸம முதலிய நற்குணங்களைக் கொண்டுதான் நாம் ஒருவனை நல்லவனென்கிறோம். இது உலகவியற்கை. தேவபிரானிடத்திலோ இது நேர் விபரீதமா யிராநின்றது. ஏனென்றால், மங்களபதமானது எம்பெருமானிடத்திலும் ப்ரயோகிக்கப் படுகின்றது ; குணங்களிடத்திலும் ப்ரயோகிக்கப் படுகிறது ; *மங்கலம் பகவாந் விஷ்ணு:* *பாவத்கமங்கல குணா:* இத்யாதிகாண்க. எம்பெருமான் ஸ்வத ஏவ மங்களமயனாகையால் அதுகாரணமாக அவனை மங்களமென் பதே யொழிய, மங்கள குணங்கள் அவனிடத்திலிருப்பது காரணமாகவல்ல. இனி குணங்களை மங்கள மென்பது எது கொண்டு? என்றால், மங்களமயனான எம்பெருமானோடு இவை ஸம்பந்தம் பெற்றமையால் தான். எந்த குணங்கள் எம்பெருமானோடு ஸம்பந்தம் பெற்றனவோ, அவையே மங்களமென்றும், எவை பெறவில்லையோ அவை ஹேயமென்றும் வேத மூல ப்ரமாணத்தால் நாம் அறுதியிட்டிருப்பதால் உலக ரீதியை நாம் எம்பெருமானிடத்தில் பாவிக்கலாகாதென்கை.

"ஸர்வஸ்ய சைவ குணதோ ஹி விலக்ஷணத்வம்" என்ற ஸ்ரீவைகுண்டஸ்தவஸூக்தியும் "குண ஜம் குணிநோ ஹி மங்கலத்வம் ப்ரமிதம்" என்ற ஸுந்தரபாஹுஸ்தவஸூக்தியும் காண்க. சுபஸ்ய பாவ:-சுபீபூயம். 'புவோ பாவே' என்னும் பாணிநிஸூத்ரத்தால் க்யப். இந்த ச்லோகம் முதல் "அநந் யாதீநத்வம்" என்னுமளவாகவுள்ள தசகம் சிகரிணீவ்ருத்தம். (11)

निराबाधं नित्यं निरवधि निरंहो निरुपमं सदा शान्तं शुद्धं प्रतिभटमवद्यस्य सततम् ।
परं ब्रह्माम्नातं श्रुतिशिरसि यत् तद्वरद ते परं रूपं साक्षात् तदिदमपदं वाङ्मनसयोः ॥ १२ ॥

நிராபாதம் நித்யம் நிரவதி நிரம்ஹோ நிருபமம்
ஸதா சாந்தம் சுத்தம் ப்ரதிபடமவத்யஸ்ய ஸததம் ।
பரம் ப்ரஹ்மாம்நாதம் ச்ருதிசிரஸி யத் தத் வரத தே
பரம் ரூபம் ஸாக்ஷாத் ததிதமபதம் வாங்மநஸயோ: ॥ 12 ॥

நிராபாதம்	விகாரமற்றதாயும்
நித்யம்	காலபரிச்சேதமற்றதாயும்
நிரவதி	தேசபரிச்சேதமற்றதாயும்
நிருபமம்	வஸ்து பரிச்சேதமற்றதாயும்
நிரம்ஹ:	ஹேயகுணமற்றதாயும்
ஸதா சாந்தம்	நித்யாநுகூலமாயும் [நித்ய போக்யமாயும்]
சுத்தம்	ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலசாத சுத்த ஸத்வமாயும்
ஸததம்	எப்போதும்
அவத்யஸ்ய	தோஷத்துக்கு
ப்ரதிபடம்	எதிர்த்தட்டாயும்
யத் பரம் ப்ரஹ்ம	யாதொரு பரப்ரஹ்மமானது
ச்ருதி சிரஸி	வேதாந்தத்தில்
ஆம்நாதம்	ஓதப்பட்டிருக்கிறதோ
ஹே வரத !	ஓ பேரருளாளனே !
தே	உன்னுடைய
ததிதம் ஸாக்ஷாத் பரம் ரூபம்	சிறந்த நிஜஸ்வரூபமாகிற அந்த இந்த ஸ்வரூபமானது
வாங்மநஸயோ: அபதம்	[வாயால் வருணிப்பதற்கும் நெஞ்சால் நினைப்பதற்கும் ஒண்ணாதபடி] மன மொழிகளுக்கு எட்டாதது.

***வேதத்தில் கூறப்பட்ட பரப்ரஹ்மஸ்வரூபத்தை பூர்வார்த்தத்தாலருளிச் செய்து உத்தரார்த்தத்தில் அந்த ஸ்வரூபம் ஸாக்ஷாத் நீ தான்; இப்படிப்பட்ட உன்னை வாய்கொண்டு துதிப்பதும் நெஞ்சு கொண்டு சிந்திப்பதும் முடியாதகாரிய மென்கிறார்.

[நிராபாதம்] உலகத்தில் ஒவ்வொரு கார்ய வஸ்துவுக்கும் மூன்று வகைக் காரணங்களுண்டு; உபாதானம், ஸஹகாரி, நிமித்தமென்பவை. ஒரு குடத்தை உண்டுபண்ண வேண்டுமானால் அதற்கு மண் உபாதான காரணமாகவும், தண்டசக்ராதிகள் ஸஹகாரி காரணமாகவும், குலால காலாத்ருஷ்டாதிகள் நிமித்த காரணமாகவும் ஏற்பட்டிருக்கின்றன; இவ்வாறுகவே ஒவ்வொரு கார்ய வஸ்துவுக்கும் பார்த்துக்கொள்வது. உலகங்கட்கெல்லாம் எம்பெருமான் காரணமென்னும்போது, அவன் எவ்வகைக் காரணமாக நிற்கிறுனென்றால் மூவகைக் காரணமும் அவனொருவனே யென்பது வேதவைதிக ஸித்தாந்தம்; இதன்மேலே ஒரு பூர்வபக்ஷம் கிளர்கின்றது. அதாவது, உலகத்தில் எந்த வஸ்துவை நாம் உபாதாந காரணமாகக் காண்கிறேமென்றால் எதுவானது தானே கார்யவஸ்துவாக விகாரப்படுகிறதோ அதைத் தான் நாம் உபாதாந காரணமென்கிறேம். குடத்துக்கு மண்ணை உபாதாந காரணமென்பதும், வஸ்த்ரத்துக்கு நூலை உபாத்ாந காரணமென்பதும் அக்காரணவஸ்துக்களே கார்யவஸ்துவாக விகாரப்படுகின்றதாலன்றே! அதுபோல ஈச்வரன் ஜகத்திற்கு உபாதாந காரணமானல் ஈச்வரனே ஜகத்தாக விகாரமடைகிறுனென்று கொள்ளவேணும். ஆனபின்பு ஸ்வரூபதோ விகாரமடைகிற ப்ரக்ருதியென்ன, ஸ்வபாவதோ விகாரமடைகிற ஜீவாத்மாவென்ன, இவ்விரண்டையும் போலவே ஈச்வரனும் விகாரியென்று ஒப்புக்கொள்ள வேணுமென்பதாகப் பூர்வபக்ஷம் கிளரும். அதற்கு ப்ரத்யாக்க்யானம் கூறும்போது "இவன்றனே ஜகத்தாய்ப் பரிணமிக்கையாலே உபாதாநமுமா யிருக்கும். ஆனல் நிர்விகாரனென்னும்படி என்னென்னில், ஸ்வரூபத்துக்கு விகாரமின்மையாலே. ஆனல் பரிணாம முண்டாம்படி யென்னென்னில், விசிஷ்ட விசேஷண ஸத்வாரகமாக; ஒரு சிலந்திக்குண்டான ஸ்வபாவம் ஸர்வசக்திக்குக்கூடா தொழியாதிறே!" என்றருளிச்செய்து எம்பெருமான் நிர்விகாரன் என்றே ஸ்தாபித்தார்கள். அந்த நிர்விகாரத்வத்தை இங்கு (நிராபாதம்) எனபதனலே அருளிச்செய்கிறார்.

[நித்யம்இத்யாதி] நிருபமம் என்கிற விசேஷணமானது 'நிரம்ஹஃ' என்றதற்குப் பிறகு கிடந்தாலும் அர்த்தச்சேர்த்தியைப்பற்ற 'நிரவதி' என்னும் விசேஷணத்துக்கு அடுத்ததாக அந்வயித்துக் கொள்ள வேணும். த்ரிவித பரிச்சேத ராஹித்யத்தைச் சொல்லுகின்ற அநந்தசப்தார்த்தத்தை அடைவே மூன்று விசேஷணங்களால் விவரிக்கின்றார். (நித்யம்) 'இன்ன காலத்திலுள்ளான். காலாந்தரத்திலில்லை' என்கிற கால பரிச்சேதத்தையுடையவனல்லன். (நிரவதி) எல்லையில்லாமையாவது ஸகல சேதநாசேதநங்களுக்கும் வ்யாபகமாய்க் கொண்டு விபுவாயிருக்கையாகையாலே 'இன்னதேசத்திலுள்ளான்; தேசாந்தரத்தில்லை,' யென்கிற தேசபரிச்சேத மின்மையைச் சொல்லுகின்றது. (நிருபமம்) இன்ன வஸ்துபோலே என்கிற வஸ்துபரிச்சேத மில்லாதவனென்கை. தத்வத்ரய வ்யாக்க்யானத்தில் மணவாளமாமுனிகள் ஸர்வாந்தர்யாமியாகையாலே ஸர்வத்துக்கும் தான் ப்ரகாரியாய் தனக்கு ப்ரகார்யந்தரமில்லாதபடி யிருக்கையாலே இன்ன வஸ்துபோலே என்கிற வஸ்துபரிச்சேதமின்றியிலேயிருக்கை' என்றருளிச் செய்தது இங்கே அநுஸந்தேயம்.

(நிரம்ஹஃ, சுத்தம்) என்ற இரண்டு விசேஷணங்களாலும் அகில ஹேய ப்ரத்யநீகத்வமும் கல்யாணைகதாநத்வமுமாகிற உபய லிங்கம் சொல்லப்படுகிறது. 'நிரம்ஹஃ' என்றாலும் 'அவத்யஸ்ய ப்ரதிபடம்' என்றாலும் ஹேயப்ரத்யநீகத்வமாகிற ஒரு அர்த்தமே ப்ரதிபந்நமாகிறபடியால் புநருக்தி வாராதோ வென்னில், ஒரு விசேஷணம் தான் ஹேய குண சூன்யனென்பதைக் காட்டுகிறது. மற்றெரு விசேஷணம்—தன்னைச் சேர்ந்தவர்கட்கும் ஹேய ஸம்பந்தமுண்டாகாதபடி நோக்கும் திறமையைக் காட்டுகிறதென்று கொள்க. (ஸதா சாந்தம்) சீறுபாறென்றிராமல் நித்யாநுகூலமாய், அத ஏவ நித்ய போக்யமா யிருக்குமென்றபடி. ஆக, பூர்வார்த்தத்தால் ப்ரஹ்மஸ்வரூபவைலக்ஷண்யத்தை அருளிச் செய்தாராயிற்று.

இனி, உத்தரார்த்தத்தில், இப்படிப்பட்ட ஸ்வரூபம் பேரருளாளனுடைய ஸ்வரூபத்திற் காட்டில் அபிந்நமென்றும், வாசா வருணிப்பதற்கும், மநஸா சிந்திப்பதற்கும் முடியாததென்றும் தலைக்கட்டுகிறார். (10)

प्रशान्तानन्तात्मानुभवजमहानन्दमहिमप्रसक्तस्तैमित्यानुकृतवितरङ्गार्णवदशम् ।
परं यत्ते रूपं स्वसदृशदरिद्रं वरद तत् त्रयी पिस्पृक्षन्ती परनिरसने श्राम्यति परम् ॥ ११ ॥

ப்ரசாந்தாநந்தாத்மாநுபவஜமஹாநந்தமஹிம-
ப்ரஸக்தஸ்தைமித்யாநுக்ருதவிதரங்கார்ணவதசம் ।
பரம் யத் தே ரூபம் ஸ்வஸத்ருசதரித்ரம் வரத தத்
த்ரயீ பிஸ்ப்ரக்ஷந்தீ பரநிரஸநே ச்ராம்யதி பரம் ॥ 13

ஹேவரத	வரதராஜனே !
ப்ரசாந்த அநந்த ஆத் மாநுபவஜ மஹாநந்த மஹிம ப்ரஸக்த ஸ்தைமித்ய அநுக்ருத விதரங்கார் ணவ தசம்	ப்ரசாந்த—மிக அனுகூலமாயும், அநந்த—அபரிச்சிந்நமாயுமிருக்கிற, ஆத்ம—ஸ்வ ஸ்வரூபத்தினுடைய, அநுபவஜ—அநுபவத்தாலே யுண்டாகிற, மஹாநந்தமஹிம-அதிக ஆநந்தாதிசயத்தாலே, ப்ரஸக்த—நேர்ந்த, ஸ்தைமித்ய—நிச்சலமாயிருக்கும் தன்மையாலே, அநுக்ருத—அநுகரிக்கப்பட்ட, விதரங்க—ஒய்ந்திருக்கிற அலைகளையுடைய, அர்ணவ — ஸமுத்திரத்தினுடைய, தசம்—அவஸ்தையையுடைத்தானதாயும்.

ஸ்வஸத்ருச தரித்ரம்	தன்னோடொத்த வேறொன்றையுடைத்தாகாததாயும்
பரம்	ஸர்வோத்தமமாயுமிருக்கிற
யத் ரூபம்	யாதொரு ஸ்வரூபமானது
தே [அஸ்தி]	உனக்கு இராநின்றதோ
தத்	அந்த ஸ்வரூபத்தை
பிஸ்ப்ரக்ஷந்தீ	ஸ்பர்சிக்த வேணு மென்று விரும்பாநின்ற
த்ரயீ	வேதமானது
பரநிரஸநே பரம் ச்ராம் யதி	ஹேயமான அவயவம் விகாரம் முதலியவற்றை மறுப்பதில் மாத்திரம் சிரமப்படுகிறது.

*** "அதிபதிதாவதிஸ்வமஹிமாநுபவப்ரபவத்ஸுகக்ருத நிஸ்தரங்கஜலதீயிதநித்யதசம்" என்கிற ஸுந்தர பாஹுஸ்தவ ச்லோகத்தின் பூர்வார்த்தத்தையும் இந்த ச்லோகத்தின் பூர்வார்த்தத்தையும் ஏகார்த்தகமாகக் கொள்க. எம்பெருமானுக்கு நித்யோதித தசை யென்றும் சாந்தோதிததசை யென்றும் இரண்டு அவஸ்தைகளுண்டு. அகில ஹேயப்ரத்யநீகமாய் கல்யாணைகதாநமாயிருக்கிற ஸ்வஸ்வரூபத்தின் வைபவத்தைத் தான் அநுபவித்து மகிழும் தசை, நித்யோதித தசையெனப்படும். தன் விபூதியை அநுபவித்து மகிழும் தசை சாந்தோதிததசை யெனப்படும். இங்கு நித்யோதித தசாவிசிஷ்டமான பகவத்ஸ்வரூபத்தைப் பற்றிப் பேசுகிறார். 'ப்ரசாந்த' என்பதும் 'அநந்த' என்பதும் ஆத்மாவுக்கு விசேஷணம். ஆத்மாவாவது ஸ்வஸ்வரூபம், அது ப்ரசாந்தமாயிருக்கையாவது மிகவும் அநுகூலமாயிருக்கை. இப்படி அத்யந்தாநு கூலமாயும் அபரிச்சிந்நமாயுமுள்ள ஸ்வஸ்வரூபத்தின் அநுபவத்தாலே உண்டாகிற யாதொரு ஆநந்தமுண்டு, அதன் பெருமையால் நிச்சலமாயிருக்கும் நிலைமை யாதொன்றுஉண்டு, அதனால் அலை ஓய்ந்த கடலின் அவஸ்தை அநுகரிக்கப்பட்டதாகிறது. அதாவது எம்பெருமான் தன்னைத்தான் அநுபவிப்பதனால் தான் அடைகிற ஆநந்தமானது தன்னை ஸ்தப்தனாகச் செய்து 'அலை ஓய்ந்த கடல் தானோ இது' என்னும்படி யாக்கிவிட்டதென்றபடி. இப்படிப்பட்ட சிறந்த ஸ்வரூபம் பேரருளாளனுடைய ஸ்வரூபத்திற் காட்டிலும் வேறு பட்டதல்ல. 'ததேவேதம் ரூபம்' என்கிற அர்த்தம் த்ருதீய பாதத்தில் போதரும்.

அப்படிப்பட்ட ஸ்வரூபத்தை வேதமானது ப்ரதிபாதிக்கத் தொடங்கி "நிஷ்கலம், நிஷ்க்ரியம்"... "யத்தத்ரேச்ய மக்ராஹ்யம்" இத்யாதிபாலே, "பகவத்ஸ்வரூபத்துக்கு ஹேயமான அவயவங்களும் விகாரமுமில்லை; அது கண்ணால் காணக்கூடாதது; கர்மேந்த்ரியங்களான பாண்யாதிகளால் பிடிக்கக்கூடாதது" என்றிப்படி பரநிரஸநத்தையே விசேஷமாகப் பண்ணிப்போந்ததே யொழிய, உள்ள குணங்களை ஆழ அநுபவித்து மகிழவில்லை என்கிறது நான்காவது பாதம்.

பரநிரஸநமாவது:—'அது இல்லை, இது இல்லை' என்றிப்புடைகளிலே சொல்லுகையாகிற ஹேயாவயவ விகாராதி ஸம்பந்த நிரஸநம். ஒரு விலக்ஷண வஸ்துவை அநுபவிக்க இழிந்தவன் அதில் உள்ள குணங்களைப் புகழ்ந்து அநுபவிப்பது அழகோ? இதில் அந்த தோஷமில்லை, இந்த தோஷமில்லை' என்று இல்லாதவற்றை எடுத்துக் கழிக்கை அழகோ? இல்லாத வற்றை எடுத்துக் கழிப்பதும் ப்ரசம்ஸையே

யாயினும் அநுபவிக்க இழிந்தவன் உள்ள குணங்களை வாயாரப் புகழ்வதே அழகிது; பாமிரஸநம் ஸ்வல்ப மாக இருக்கவேணும். பகவத் ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கப் புகுந்த வேதமோவென்றால் நஞ்கடிதமான வாக்யங்களையே விசேஷமாக ஓதியிருக்கிறதே யொழிய உள்ள குணங்களை அவ்வளவாகச் சொல்லமாட் டிற்றில்லை யென்கிறார். இதனால் பகவத் ஸ்வரூபத்தின் வாசாமகோசரமான வைலக்ஷண்யம் வ்யஞ்ஜித மாகிறது. (13)

न वक्तुं न श्रोतुं न मनितुमथोपासिसिषितुं न च द्रष्टुं स्प्रष्टुं तदनु न च भोक्तुं हि सुशकम् ।
परं यद्वस्तूक्तं ननु वरद साक्षात्तदसि भोः कथं विश्वस्मै त्वं करिगिरिपुरस्तिष्ठस इह ॥ १५ ॥

ந வக்தும் ந ச்ரோதும் ந மநிதுமதோபாஸிஸிஷிதும்
ந ச த்ரஷ்டும் ஸ்ப்ரஷ்டும் ததநு ந ச போக்தும் ஹி ஸுசகம் !
பரம் யத் வஸ்தூக்தம் நநு வரத ஸாக்ஷாத் தத்ஸி போ :
கதம் விச்வஸ்மை த்வம் கரிகிரிபுரஸ் திஷ்டஸ இஹ ॥ 14 ॥

ஹே வரத	வரதனே !
யத் பரம் வஸ்து	யாதொரு பரதத்வமானது
வக்தும் ந ஸுசகம்	உபதேசிக்கக் கூடாததாகவும்
ச்ரோதும் ந ஸுசகம்	கேட்கக்கூடாததாகவும்
மநிதும் ந ஸுசகம்	மனனம் பண்ணக் கூடாததாகவும்
அத	அதற்குமேல்
உபாஸிஸிஷிதும் நஸுசகம்	உபாஸிக்க விரும்பக் கூடாததாகவும்
த்ரஷ்டும் ச ந ஸுசகம்	காணக்கூடாததாகவும்
ஸ்ப்ரஷ்டும்ச ந ஸுசகம்	தொடக்கூடாததாகவும்
ததநு	அதற்குமேல்
போக்தும் ச ந ஸுசகம்	அநுபவிப்பதற்குக் கூடாததாயும்
உக்தம்	[ச்ருதிகளில்] சொல்லப்பட்டுள்ளதோ
தத்	அந்த பாதத்வமானது
ஸாக்ஷாத் த்வம் அஸி நநு	ஸாக்ஷாத் நீயேயன்றோ ஆகிறாய் ;
த்வம்	[இப்படி ஸர்வதா துர்லபனான] நீ
இஹ	இவ்வுலகத்திலே
கரிகிரிபுர:	கரிகிரியின் முன்னே
கதம்	எப்படி
விச்வஸ்மை திஷ்டஸே	ஸர்வஜனங்களுக்கும் தன் கருத்தை வெளியிட்டுக்கொண்டு நிற்கிறாய் ?

வேதாந்தத்தில் "ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" இத்யாதி வாக்யங்களானவை பரம் பொருளை ச்ரவணம் பண்ணவேணுமென்றிப்படி ஓதிவைத்து, மற்றோரிடத்தில் அந்த உபநிஷத்துக்களே *ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா* இத்யாதி வாக்கியங்களால்-அப் பரம்பொருள் ஒரு இந்த்ரியத்துக் கும் விஷயமாக மாட்டாதென்றோதிவைத்தன. அங்ஙனம் ஓதப்பட்ட பரம்பொருள் எதுவென்றால், ஸாக்ஷாத் பேரருளாளனாகிய நீயேகாண். அப்படி ஒரு இந்த்ரியத்துக்கும் விஷயமாக மாட்டாதவனாக ஓதப் பட்டுள்ள நீ இங்நிலவுலகில் ஸர்வஸுலபனாய் அவதரித்து ஹஸ்திகிரியின்முன்னே தன்னை வெளியிட்டுக் கொண்டு நிற்பது என்னோ? என்கிறார்.

(வக்தும்) வசனமாவது-எம்பெருமான் இப்படிப்பட்டவனென்று உபதேசித்தல். ச்ரவணமாவது ஒருவனுபதேசிக்க அதனைச் செவி சாத்துதல். மனனமாவது-கேட்ட அர்த்தங்கள் நெஞ்சிலே பதியும் படி சிந்தனை செய்தல், உபாஸிஸிஷையாவது தைலதாரைபோல் அவிச்சின்னஸ்ம்ருதி ஸந்ததியாகிற உபா ஸனையைச் செய்ய விரும்புதல். உபாஸிக்க விரும்புதற்கே முடியாதென்றால், உபாஸிக்க நிதராம் முடியா தென்பது கிம்புநர்ந்யாய ஸித்தம். உபாஸிஸிஷிதும் என்று ஸந்நந்தமாகப்ரயோகித்தவிது—விவிதிஷந்தி என்கிற சுருதிச்சாயையாலே என்னலாம்.

தர்சநமாவது-அந்த ஸ்ம்ருதி ஸந்தானத்தாலே விளையக்கூடிய ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமான விலக்ஷண ஸாக்ஷாத்காரம். ஸ்பர்சமாவது-ஸாக்ஷாத்காரத்திற்குப் பிறகு "பெருநிலங்கடந்த நல்லடிப்போது

....தழுவுவன்'' என்றாப்போலே ஆசைகிளர்ந்து தொடுகை. இனி, போக்தும் என்றது—சொல்லிச் சொல்லாத இந்த்ரியங்களுக்கு விஷயமாகக் கூடிய அநுபவத்தை யெனக் கொள்க. ஆக, ஒருவித அநுபவத்திற்கும் முடியாதது பகவத்ஸ்வரூபமென்கை. (திஷ்டஸே) பரஸ்மைபதியாகிய ஷ்டா-தாதுவை இங்கு ஆத்மநேபதியாக ப்ரயோகித்திருப்பது ''ப்ரகாசநஸ்தேயாக்க்யயோச்ச'' என்கிற ஸூத்ரத்தை அவலம்பித்தாம். விசவஸ்மை என்ற சதுர்த்தி. ''ச்லாக ஹ்நுங்ஸ்தாசபாம் ஜ்ஞீப்ஸ்யமாநஃ'' என்ற ஸூத்ரத்தை அடியோற்றியாம். நிற்பதனாலே: தன் கருத்தை உலகத்தார்க்கு உணர்த்துகிறுயென்றபடி. இங்குத் தன் கருத்தாவது-'நரன் உங்களை வாரிப்பிடியாகப் பிடித்துக்கொண்டு போக வந்திருக்கிறேன்'-என்பதாம். வேதவேதாந்தங்களுக்கும் துர்க்ரஹனை நீ ஸர்வஸுலபனாக இங்ஙனே அவதரித்து நிற்கிற விது என்ன ஸௌலப்ய ஸௌசீல்ய-பரமகாஷ்ட்டை! என்று ஈடுபடுகிறபடி. (14)

प्रकृष्टं विज्ञानं बलमतुलमैश्वर्यमखिलं विमर्यादं वीर्यं वरद परमा शक्तिरपि च।
परं तेजश्चेति प्रवरगुणषट्कं प्रथमजं गुणानां निस्सीम्नां गणनविगुणानां प्रसवभूः ॥ १५ ॥

ப்ரக்ருஷ்டம் விஜ்ஞானம் பலமதுலமைச்வர்யமகிலம்
விமர்யாதம் வீர்யம் வரத பரமா சக்திரபி ச ।
பரம் தேஜச்சேதி ப்ரவரகுணஷட்கம் ப்ரதமஜம்
குணாநாம் நிஸ்ஸீம்நாம் கணநவிகுணாநாம் ப்ரஸவபூः ॥ 15 ॥

ஹே வரத	ஓ வரதனே!
ப்ரக்ருஷ்டம் விஜ்ஞானம்	சிறந்த ஞானமென்ன
அதுலம் பலம்	ஒப்பற்ற பலமென்ன
அகிலம் ஐச்வர்யம்	அநவதிகமான ஐச்வர்யமென்ன
விமர்யாதம் வீர்யம்	எல்லையற்ற வீர்யமென்ன
பரமா சக்திரபி ச	ச்ரேஷ்டமான சக்தியென்ன
பரம் தேஜச்ச	சிறந்த தேஜஸ்ஸென்ன
இதி	ஆகிற [இவையாகிற]
ப்ரதமஜம் ப்ரவரகுணஷட்கம்	முதல் மூர்த்தியான பரவாஸுதேவ மூர்த்தியிலே யுள்ள சிறந்த ஆறு குணங்களானவை
நிஸ்ஸீம்நாம்	எல்லையற்றதுகளும்
கணநவிகுணாநாம்	எண்ணக்கூடாததுகளுமான
குணாநாம்	கல்யாண குணங்களுக்கு
ப்ரஸவபூ:	பிறப்பிடம்.

***ஜ்ஞானசத்தி பலைச்வர்ய வீர்ய தேஜஸ்ஸுக்களென்கிற சிறந்த ஆறு குணங்களும் பரவாஸுதேவமூர்த்தியிலே புஷ்கலங்களென்றும், எம்பெருமானுக்கு மற்றுமுள்ள அநந்த கல்யாண குணங்களுள் இந்த ஆறு குணங்களே சிறந்தவையென்றும், இக்குணங்களடியாகத் தான் இவற்றின் சாகோபசாகைகளாக மற்ற குணங்கள் பெருகுகின்றன வென்றும் சொல்லிற்றுயிற்று. ஜ்ஞானம் பலம் என்ற ஒவ்வொரு குணத்துக்கும் ப்ரக்ருஷ்டம், அதுலம் இத்யாதி விசேஷணங்கள் இட்டது, மற்றையோருடைய ஜ்ஞாநாதிகளை வ்யாவர்த்திப்பிக்க.

இந்த ஆறு குணங்களுக்கும் இன்ன இன்ன கார்யத்திலே விநியோகமென்னுமிடம் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தரசதகத்தில் ''யுகபதநிசமக்ஷஃ'' இத்யாதி ஸப்தச்லோகங்களிலே விசதம். அங்கே எமது வியாக்கியானம் கண்டு தெளிவது.

அஸங்க்யேயங்களாயுள்ள குணகணங்களுக்கு இந்த ஆறு குணங்களும் ஊற்றுவாய் என்னுமிடம் ''தவாநந்தகுணஸ்யாபி ஷடேவ ப்ரதமே குணாः'' இத்யாதி ப்ரமாண ஸித்தம்.

(ப்ரதமஜம்) குணங்களுக்குள்ளே முதன்மையாயுள்ளது என்றும் பொருளாகலாமாயினும் அது அழகியதன்று.

'கணநவிகுணநாம்' என்பதனால் தனித்தனியாக எண்ண முடியாதவை யென்பதும், நிஸ்ஸீம்நாம் என்பதனால் ஒரு பெரிய ராசியாகவும் எண்ண முடியாதவை யென்பதும் போதரும், மண் மணல் முதலிய

வற்றைத் தனித் தனியாக எண்ணக் கூடாதாயினும் 'ஒரு கூடை மண்' 'ஒரு வண்டி மணல்' என்று ஒரு ராசியாக எண்ணக் கூடும்; பகவத் குணங்கள் அப்படியும் எண்ணமுடியாதவை யென்கை. (15)

गुणैष्षड्भिस्त्वेतैः प्रथमतरमूर्तिस्तव बभौ ततस्तिस्रस्तेषां त्रियुगयुगलैर्हि त्रिभिरभुः ।
व्यवस्था या चैषा ननु वरद साविष्कृतिवशात् भवान् सर्वत्रैव त्वगणितमहामङ्गलगुणः ॥ १६ ॥

குணைஷ் ஷட்பிஸ்த்வேதை: ப்ரதமதரமூர்த்திஸ்தவ பபௌ
ததஸ் திஸ்ரஸ் தேஷாம் த்ரியுக யுகளைர் ஹி த்ரிபிரபு: ।
வ்யவஸ்தா யா சைஷா நநு வரத ஸாவிஷ்க்ருதிவசாத்
பவாந் ஸர்வத்ரைவ த்வகணிதமஹாமங்களகுண: ॥ 16 ॥

த்ரியுக	மூவிரண்டு குணங்களையுடைய	த்ரிபி: யுகளை:	மூவிரண்டுகளாலே
வரத	வரதனே !	அபு:	ப்ரகாசித்தன ;
தவ	உன்னுடைய	ஏஷா வ்யவஸ்தா யா	இபபடிப்பட்ட வ்யவஸ்தை யாதொன்றுண்டு
ப்ரதமதர மூர்த்தி:	எல்லா மூர்த்திகளுக்கும் முதன்மையரன பரவாஸுதேவ மூர்த்தியானது	ஸா	அந்த வ்யவஸ்தையானது
ஏதை :	இந்த [கீழ்ச்சொன்ன]	ஆவிஷ்க்ருதி வசாத்	[குணங்களை] வெளியிடுதல் பற்றியாம் :
ஷட்பி : குணை:	ஆறு குணங்களால்	பவாம்ஸ்து	நீயோ வென்னில்
பபௌ	விளங்கிற்று ;	ஸர்வத்ரைவ	எல்லா மூர்த்திகளிலுமே
தத: திஸ்ர: [மூர்த்தய:]	அதற்குமேல் மூன்று மூர்த்திகள்	அகணிதமஹா மங்கள குண :	எண்ணிறந்த சிறந்த கல்யாண குணங்களையுடையையாயிரா நின்றாய்.
தேஷாம்	அந்த குணங்களுடைய		

***(குணைரித்யாதி) அதிமாநுஷஸ்தவத்தில் 'ஜ்ஞாநம் பலம் விபுலம்' என்ற ச்லோகத்தில் சுருங்கச் சொன்னதை இங்கு விவரித்து அருளிச் செய்கிறார். பரவாஸுதேவ மூர்த்தி, ஸங்கர்ஷண மூர்த்தி, ப்ரத்யும்ந மூர்த்தி, அநிருத்த மூர்த்தி என்று சதுர்விதமான மூர்த்திகளில் ப்ரதமமான வாஸுதேவ மூர்த்தியில் கீழ் ச்லோகத்திற் சொல்லப்பட்ட ஜ்ஞானபலைச்வர்ய வீர்யசக்தி தேஜஸ்ஸுக்களென்கிற ஆறு குணங்களும் ப்ரகாசிக்கின்றன. மற்ற ஸங்கர்ஷணாதி மூன்று மூர்த்திகளில் ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு குணம் விழுக்காடு [அதாவது-ஸங்கர்ஷண மூர்த்தியில் ஜ்ஞானமும் பலமும், ப்ரத்யும்ந மூர்த்தியில் ஐச்வர்யமும் வீர்யமும், அநிருத்த மூர்த்தியில் சக்தியும் தேஜஸ்ஸுமாக] ப்ரகாசிக்கின்றன வென்பது பூர்வார்த்தத்தின் கருத்து.

ததஸ் திஸ்ர: "வ்யூஹங்கள் நாலென்றும், மூன்றென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லும். நாலு வ்யூஹமுண்டாயிருக்க வ்யூஹ வாஸுதேவ ரூபத்திற்குப் பரரூபத்திற்காட்டில் அநுஸந்தேய குண பேதமில்லாமையாலே த்ரிவ்யூஹமென்கிறது. இப்பக்ஷத்தை குணைஷ் ஷட்பிஸ் த்வேதை: என்கிற ச்லோகத்திலே ஸங்க்ரஹித்தார்கள்." என்ற ரஹஸ்யத்ரயஸார-தத்வத்ரய சிந்தநாதிகார ஸூக்தி இங்கே அநுஸந்தேயம்,

இங்ஙனே சொன்னால் பகவந்மூர்த்திகளிலேயே குணவைகல்யம் கொள்வது குறையாகுமே யென்று சங்கித்து உத்தரார்த்தத்தாலே பரிஹரிக்கிறார். (வ்யவஸ்தேத்யாதி) ஒவ்வொரு மூர்த்தியிலே இரண்டிரண்டு குணங்கள் என்று வகுக்கப்பட்ட வ்யவஸ்த்தையானது குணங்களின் ஸத்தாப்ரயுக்தமன்று; ஆவிஷ்கார ப்ரயுக்தம். அதாவது; ஒவ்வொரு மூர்த்தியிலே ஈரிரண்டு குணங்களைத்தான் கார்யவசாத் ப்ரகாசப் படுத்துகிறான் என்பதைப் பற்றச் சொல்லிற்றேயன்றி, இரண்டு குணங்கள் தவிர மற்ற குணங்கள் அந்த மூர்த்திகளில் இல்லை யென்பதைப் பற்றச் சொல்லிற்றல்ல என்கை. எல்லா மூர்த்திகளிலும் உன்னுடைய ஸகல குணங்களும் புஷ்கலமாயிருக்கின்றமையை அபலாபம் பண்ணமுடியாது. இரண்டிரண்டு குணங்கள் தான் ஆவிஷ்கரிக்கப்படுகின்றன. மற்றவை அநுத்பூதங்களாய்ப் பதிந்திருக்கின்றன என்றபடி.

परो वा व्यूहो वा विभव उत वाऽर्चावतरणः भवन् वाऽन्तर्यामी वरवरद यो यो भवसि वै।
स स त्वं सन्नैशान् वरगुणगणान् बिभ्रदखिलान् भजद्भ्यो भास्येवं सततमितरेभ्यस्त्वितरथा॥

பரோ வா வ்யூஹோ வா விபவ உத வார்ச்சாவதரணஃ
பவந் வாந்தர்யாமீ வரவரத யோ யோ பவஸி வை !
ஸ ஸ த்வம் ஸந்நைசாந் வரகுணகணாந் பிப்ரதகிலாந்
பஜத்ப்யோ பாஸ்யேவம் ஸததமிதரேபயஸ்த்விதரதா ॥ 18 ॥

வரவரத	சிறந்த வரங்களைக் கொடுக்கும் பேருளாளனே!
த்வம	நீ
பரோ வா	பரவாஸுதேவனாகவோ
வ்யூஹோ வா	வ்யூஹமூர்த்தியாகவோ
விபவோ பவந் வா	விபவாவதாரமாகப் பிறந்தவனாகவோ
உத	அல்லது
அர்ச்சாவதரணோ பவந் வா	அர்ச்சையாக அவதரித்தவனாகவோ
அந்தர்யாமீ வா	அந்தர்யாமியாகவோ
யோ யோ பவஸி வை	எவ்வெவனாக இருக்கிறாயோ

ஸ ஸ ஸந்	அவ்வவனாய்க் கொண்டு
ஐசாந்	ஈச்வரனுக்குரிய
அகிலாந் வர குணகணாந்	சிறந்த குண ஸமூஹங்களெல்லாவற்றையும்
பிப்ரத்	தன்னிடத்திலுடையவனாய்
ஏவம்	இப்படி ஸகலகுண விசிஷ்ட வேஷனாக
ஸததம்	எல்லா அவஸ்தைகளிலும்
பஜத்ப்ய : பாஸி	ஆச்ரிதர்களுக்குத் தோற்றுகிறாய்;
இதரேப்யஸ் து	அநாச்ரிதர்களுக்கோ வென்றால்
இதரதா	வேறுவிதமாக [குணசூன்யனாக]
பாஸி	தோற்றுகிறாய்.

***கல்யாண குணங்களின் ஆவிர்ப்பாவத்திற்கும் திரோபாவத்திற்கும் விஷயவிபாகம் கூறுகிறார் இதில். வரதனே! 'இன்ன அவதாரத்தில்தான் உன் குணங்கள் பூர்ணங்கள், இன்ன அவதாரத்தில் இல்லை' என்பது கிடையாது. பரவ்யூஹவிபவாந்தர்யாம்யர்ச்சாவதாரங்களில் எவ்வெவனாக நீ இருக்கிறாயோ அவ்வவ்விருப்புகளில் ஸர்வேச்வரத்வஸ்வரூபாநுபந்திகளான ஸகல கல்யாண குணங்களும் பரிபூர்ணங்களாகவே யிருக்கின்றன. ஆனால் அக்குணங்கள் ஆச்ரிதர்க்குத் தோற்றும் ; அநாச்ரிதர்க்குத் தோற்றாதென்கிறார்.

பகவத் ஸ்வரூபமானது பரத்வம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரமென்று ஐந்து ப்ரகாரத்தோடே கூடியிருக்கும். அதில் பரத்வமாவது 'நலமந்தமில்லதோர் நாடு' என்கிற ஸ்ரீவைகுண்டத்திலே நித்யர்க்கும் முக்தர்க்கும் அநுபவ விஷயனாய்க் கொண்டு ஷாட்குண்ய பரிபூர்ணனா யெழுந்தருளியிருக்குமிருப்பு. வ்யூஹத்துக்கு விநியோகம் லீலா விபூதியிலே யாகையாலே இவ் விபூதியினுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை நிர்வஹிக்கைக்காகவும், புபுக்ஷுக்களான ஸம்ஸாரிகளை அநிஷ்டநிவ்ருத்த்யாதிகளைப் பண்ணி ரக்ஷிக்கைக்காகவும், முமுக்ஷுக்களாய் உபாஸிக்குமவர்களுக்கு ஸம்ஸார நிவ்ருத்தி பூர்வமாகத் தன்னை வந்து சேருகைக் குடலான அநுக்ரஹத்தைப் பண்ணுகைக்கு உடலாகைக்காகவும், ஸங்கர்ஷண ப்ரத்யும்நாநிருத்தர்களாய்க்கொண்டு நிற்கும் நிலை-வ்யூஹமெனப்படும். இந்த வ்யூஹத்திலே வாஸுதேவரையும் கூட்டி சதுர் விதமாகச் சொல்லுவதுமுண்டு. வாஸுதேவ ஸங்கர்ஷண, ப்ரத்யும்ந, அநிருத்தர்களென்கிற இந்த வ்யூஹ சதுஷ்டய மூர்த்திகளுக்கே வைகாநஸ சாஸ்த்ரங்களில், புருஷ, ஸத்ய, அச்யுத, அநிருத்த பதங்களாலே வ்யபதேசமாம். இவற்றுள் ப்ரதம வ்யூஹமாகிய வாஸுதேவ ரூபம் பரரூபத்தில் காட்டில் குணாதிகளாலே எள்ளளவும் பேதியாது. ஆகவே தான் பரவாஸுதேவனென்றும் வ்யூஹவாஸுதேவனென்றும் வ்யவஹாரம். பரவாஸுதேவனுக்கு நித்யோதிதனென்றும் வ்யூஹ வாஸுதேவனுக்கு சாந்தோதித னென்றும் ஸாம்ப்ரதாயிக வ்யபதேசமாகும். பரவாஸுதேவனுடைய ஸங்கல்பம் நித்யவிபூதி நிர்வாஹகமென்றும் வ்யூஹ வாஸுதேவனுடைய ஸங்கல்பம் லீலாவிபூதி நிர்வாஹக மென்றும் சொல்லுவர்கள்.

விபவமாவது இதரஜாதீயமாய்க்கொண்டு ஆவிர்ப்பவிக்கை. இதுதான் எண்ணி முடிக்கப் போகாதபடி அநந்தமாய் கௌண முக்ய பேதத்தாலே இரண்டு வகையாகப் பிரிந்திருக்கும்.

ஆவேசாவதாரம் கௌணம், ஸாக்ஷாதவதாரம் முக்க்யம். ஆவேசந்தான் ஸ்வரூபாவேசமென்றும் சக்த்யாவேசமென்றும் த்விவிதமாயிருக்கும். அதில் ஸ்வரூபாவேசமாவது ஸ்வேநரூபேண ஆவேசிக்கை. அதாவது பரசுராமாதிகளான சேதனருடைய சரீரங்களிலே தன்னுடைய அஸாதாரண விக்ரஹத்தோடே ஆவேசித்து நிற்கை. சக்த்யாவேசமாவது-கார்ய காலத்திலே விதி சிவாதிகளான சேதனர் பக்கலிலே சக்திமாத்ரத்தாலே ஸ்புரித்து நிற்கை. அந்தர்யாமித்வமாவது-சேதனருடைய உள்ளே ப்ரவேசித்து ஸகல ப்ரவ்ருத்திகளுக்கும் நியந்தாவாயிருக்கை. இதுதான் ஆத்மாவினுள்ளே தன் ஸ்வரூபத்தாலே வ்யாபித்து நின்று நியமிக்குமதும், ஸவிக்ரஹனாய்க்கொண்டு ஹ்ருதயத்திலே வ்யாபித்திருந்து நியமிக்குமதும் என இருவகைப்பட்டிருக்கும். அர்ச்சாவதாரம் ப்ரஸித்தமேயாம்.

ஆக, இந்த பஞ்ச ப்ரகாரங்களுள்ளும் பரிபூர்ணமான திருக்குணங்களையுடையையாய் அக்குணங்களை அன்பர்களான ஆச்ரிதர்களுக்கு ஸேவைஸாதிப்பித்து, மற்றையோர்க்கு மறைத்திடுகின்றாய்—என்கிறது உத்தரார்த்தத்தில். (18)

दयाक्षान्त्यौदार्यम्रदिमसमतासौहृदधृतिप्रसादप्रेमाज्ञाश्रितसुलभताद्या वरगुणाः ।
तथा सौन्दर्याद्यास्तव वरदराजोत्तमगुणाः विसीमानोऽसंख्याः प्रणतजनभोगं प्रसुवते ॥ १९ ॥

தயாக்ஷாந்த் யௌதார்யம்ரதிமஸமதாஸௌஹ்ருதத்ருதி-
ப்ரஸாதப்ரேமாஜ்ஞாச்ரிதஸுலபதாத்யா வரகுணா: ।
ததா ஸௌந்தர்யாத்யாஸ் தவ வரதராஜோத்தமகுணா:
விஸீமாநோஸங்க்யா: ப்ரணதஜநபோகம் ப்ரஸுவதே ॥ 19 ॥

ஹேவரதராஜ	வரதராஜனே !
தவ	உன்னுடைய
விஸீமாந:	எல்லை யற்றதுகளும்
அஸங்க்யா:	எண்ணிறந்தவைகளுமான
தயா க்ஷாந்தி ஔதார்ய ம்ரதிம ஸமதா ஸௌஹ்ருத த்ருதி ப்ரஸாத ப்ரேம ஆஜ்ஞா ஆச்ரித—ஸுலபதாத்யா:	தயை, பொறுமை, ஔதார்யம், ஸௌகுமார்யம், ஸமத்வம், ஸுஹ்ருத்வம், உறைப்பு, கனிவு, அன்பு, ஆணை, ஆச்ரித ஸௌலப்யம் முதலிய

வரகுணா:	சிறந்த [ஆத்ம] குணங்களும்
ததா	அப்படிப்பட்ட
ஸௌந்தர்யாத்யா:	ஸௌந்தர்யம் முதலிய
உத்தம குணா:	சிறந்த [தேஹ] குணங்களும்
ப்ரணத ஜநபோகம்	ஆச்ரித ஜநங்களுக்கு மகிழ்ச்சியை
ப்ரஸுவதே	உண்டுபண்ணுகின்றன.

*** உன்னுடைய ஆத்ம குணங்களையும் தேஹ குணங்களையும் அவலம்பமாகக் கொண்டு அடியார்கள் மகிழ்கின்றனர் என்கிறார். பூர்வார்த்தத்தில் அருளிச் செய்யப்பட்ட பதினொரு குணங்களும் ஆத்ம குணங்கள். உத்தரார்த்தத்தில் அருளிச் செய்யப்பட்ட ஸௌந்தர்யமும் ஆத்ய சப்தஸங்க்ருஹீதங்களான ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாதி குணங்களும் திவ்யமங்கள விக்ரஹ குணங்களாம்,

[தயா] பிறர் படும் துன்பத்தைக் கண்டு தானும் வருந்துகை [க்ஷாந்தி] தண்டனைக்குரிய தோஷங்களையும் பொறுத்தருளுகை. [ஔதார்ய] ஆச்ரிதருடைய அபேக்ஷிதங்களைத் தானே இரந்து கொடுக்கை. [ம்ரதிமா] ஸௌகுமார்யகுணம். இது உபய கோடிப்ரவிஷ்டம். திருவுள்ளத்தில் ஸௌகுமார்யமாவது இளகியிருக்கை,

[ஸமதா] ஜாதி குணவ்ருத்தாதி நிம்நோந்நதத்வங்களைக் கணிசியாமல் அவரவர்களுக்கு ஆச்ரயணீயத்வத்தில் ஸமனாயிருக்கை. 'ந த்யஜேயம் கதஞ்சந' [ஸௌஹ்ருத] ஆச்ரிதர்க்கு ஸர்வமங்களாந்வேஷண பரனாகை. பகதத்தன் விட்ட சக்தியை அர்ஜுநனைத் தள்ளித் தன்னதப்புரத்திலே யேற்றாப்போலே ஆச்ரிதர்க்கு நேரும் தீங்குகளைத் தானேறிட்டுக் கொண்டு அநுபவிக்குமவனிறே.

[த்ருதி:] "தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியாரது செய்யார்" என்கிறபடியே பிராட்டி சிதகுரைத்தாலும் கைவிடகில்லாமல் ரக்ஷணத்தில் திண்ணியனாயிருக்கை. இக் குணம் 'உறைப்பு' எனப்படும், "ந த்யஜேயம் கதஞ்சந" என்னுமவனிறே.

[ப்ரஸாத:] எப்போதும் தெளிந்த முகமாயிருக்கை. அதாகிறது ஹிம்ஸிப்பதாக வருமளவிலும் ரஸாவ ஹனாயிருக்கை. பாரதஸமரத்திலே சக்ரோத்தாரணத்தினன்று அர்ஜுநனிளைத்துக் கைவாங்கினவாறே கண்ணபிரான் பண்டு பண்ணியிருந்த ப்ரதிஜ்ஞையை யழித்துத் திருவாழியைக் கொண்டு பீஷ்மரைத் தொடர்ந்தவளவிலும், "ஏஹ்யேஹி புல்லாம்புஜ பத்ரநேத்ர" என்றாரிறே பீஷ்மர். [ஆஜ்ஞா] செங்கோல் செலுத்துகை. [ஆச்ரிதஸுலபதா]*தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவமாய்க்கொண்டு அடியார்களுக்கு எளியனாகை. ஆத்யசப்தத்தாலே ஸௌசீல்யம் முதலிய குணங்களைக் கொள்க.

[ப்ரணதஜநபோகம் ப்ரஸுவதே] எல்லாக் குணங்களும் ஒரு வ்யக்திக்கே போக ஹேதுவாகா தொழிந்தாலும், 'வாத்ஸல்யாதிகளுக்கு விஷயம் அநுகூலர்; சௌர்யாதிகளுக்கு விஷயம் ப்ரதிகூலர்; இவற்றிற்குக் காரணமான ஜ்ஞானசக்த்யாதிகளுக்கு எல்லாரும் விஷயம்; ஜ்ஞாநம் அஜ்ஞர்க்கு; சக்தி–அசக்தர்க்கு; க்ஷமை-ஸாபராதர்க்கு, க்ருபை-துஃக்கிகளுக்கு. வாத்ஸல்யம்; ஸதோஷர்க்கு; சீலம்–மந்தர்க்கு; ஆர்ஜவம் - குடிலர்க்கு; ஸௌஹார்தம் - துஷ்டஹ்ருதயர்களுக்கு; மார்தவம்-விச்லேஷபீருக்களுக்கு; ஸௌலப்யம்-காணவாசைப்பட்டவர்களுக்கு" என்கிற இவ்வடைவில் ப்ராணதஜந போகப்ரதமாகக் குறையில்லை. (19)

अनन्याधीनत्वं तव किल जगुर्वैदिकगिरः पराधीनं त्वां तु प्रणतपरतन्त्रं मनुमहे ।
उपालम्भोऽयं भोः श्रयति बत सार्वज्ञ्यमपि ते यतो दोषं भक्तेष्विह वरद नैवाकलयसि ॥ १० ॥

அநந்யாதீநத்வம் தவ கில ஜகுர் வைதிககிர:
பராதீநம் த்வாம் து ப்ரணதபரதந்த்ரம் மநுமஹே ।
உபாலம்போயம் போ: ச்ரயதி பத ஸார்வஜ்ஞ்யமபி தே
யதோ தோஷம் பக்தேஷ்விஹ வரத நைவாகலயஸி ॥ 20 ॥

போ வரத!	வரதனே!
வைதிககிர:	வேதவாக்குகளானவை, தவ-உனக்கு
அநந்யாதீநத்வம்	பிறர்க்கு வசப்பட்டிராமையாகிற ஸ்வாதந்த்ரியத்தை
ஜகு:	சொல்லியுள்ளன;
வயம் து	நாங்களோ வென்றால்
ப்ரணத பரதந்த்ரம்	அடியவர்களுக்குப் பரவசனான
த்வாம்	உன்னை
பராதீநம்	பரதந்த்ரனாக
மநுமஹே	எண்ணுகிறோம்;
அயம்	இப்படிப்பட்ட

உபாலம்ப:	தூஷணமானது
தே	உன்னுடைய
ஸார்வஜ்ஞ்யம் அபி ச்ரயதி	ஸர்வஜ்ஞத்வத்தையும் பற்றுகிறது;
பத	ஆச்சர்யம்!
யத:	ஏனென்றால்,
இஹ	இவ்விபூதியிலுள்ள
பக்தேஷு	பக்தர்களிடத்தில்
தோஷம்	குற்றத்தை
நைவ ஆகலயஸி	சிறிதும் பார்க்கிறாயில்லையிறே.

*** வ்யாஜஸ்துத்யலங்காரமர்யாதையிலே பேருளாளனுடைய ஆச்ரித பாரதந்த்ரிய குணத்தையும் வாத்ஸல்ய குணத்தையும் அருளிச் செய்கிறார்.

"தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம்" என்றிங்ஙனே சொல்லுகிற ச்ருதிகளை உதாஸித்து 'பாரதந்த்ரியத்தையே வடிவாகவுடையவன் நீ' என்று அறுதியிடுவேனென்கிறார். அர்ச்சகபராதீனத்வம் அர்ச்சா ஸ்தலங்களுக்கெல்லாம் ஸாதாரணமாயிருந்ததே யாகிலும் பேருளாளன் பக்கலிலே ஆச்ரித பாரதந்த்ரியம் நெடுவாசி பெற்றிருக்கும். அர்ச்சாவதார ஸமாதியைக் கடந்து திருக்கச்சி நம்பிகள் பக்கலிலே ஸர்வாத்மநா பரதந்த்ரனாயிருந்ததும், உயிர் நிலையான எம்பெருமானாரையும் தாரை வார்த்து தத்தம் பண்ணும்படி திருவரங்கப் பெருமாளரையர்க்குத் தோற்று நின்றதும் முதலிய வ்ருத்தாந்தங்களை இங்கு அநுஸந்திப்பது.

ஆக இப்படி நீ பரதந்த்ரனாயிருக்கையாலே ஸ்வாதந்த்ரியம் உனக்கு வந்தேறி யென்றும் பாரதந்த்ரியமே இயற்கைவடிவென்றும் நிலையிடா நின்றோமென்மை, ஆச்ரிதர் பக்கலிலே பரதந்த்ரனாயிருப்பதும் அநாச்ரிதர் பக்கலிலே ஸ்வதந்த்ரனாயிருப்பதும் ஆக இரண்டு குணங்களும் எம்பெருமா

னுக்கு ப்ரமாணஸித்தமாயிருக்க, இந்த ச்லோகத்தில் ஸ்வாதந்த்ரியத்தை இல்லை செய்து பாரதந்த்ரியத்தைப் பேசினபடி யென்னென்னில்; இருட்டறையில் விளக்குப்போல இங்கே நன்கு விளங்குவது பாரதந்த்ரியமே யாகையாலும், 'ஸ்வாதந்த்ரியம் குடிபோய்த்து' என்னும்படி பேரருளாளப் பெருமாளாய் நிற்கையாலும் ஆழ்வான் தாம் இந்த குணத்திலே ஈடுபட்டு வித்தரானமையாலும் சொல்லிற்று.

இனி உத்தரார்த்தத்தாலே வாத்ஸல்ய குணத்தை அநுபவிக்கிறுர் : உன்னுடைய அநந்யாதீநத்வத்துக்குக் கண்ணழிவு சொன்னுப்போலே, ஸர்வஜ்ஞத்வத்துக்கும் கண்ணழிவு சொல்ல ப்ராப்தியுண்டே; ஸர்வஜ்ஞத்வ ஹாநிக்கு ஹேது சொல்லுகிறுர் [யதோ தோஷமித்யாதியாலே.] உலகத்திலுள்ள ஸர்வ பதார்த்தங்களையும் அறியுமவனன்றே ஸர்வஜ்ஞதயா வ்யபதேச்யனுவன். 'குன்றனைய குற்றம் செய்யினும்' என்றபடி ஆச்ரிதர்கள் மலைமலையாகச் செய்யும் குற்றங்களைக் காணுதிருக்கிற வுன்னை அஜ்ஞனென்னப் பொருந்து மத்தனை போக்கி ஸர்வஜ்ஞனென்னப் போமோ? பக்தர்களின் தோஷங்கள்தான் அல்ப ஸ்வல்பமன்றியே மலைமலையாயிருக்க அவற்றை அறியாதொழிவது உனக்கு 'அவிஜ்ஞாதா' என்கிற திருநாமத்துக்கு உபஷ்டம்பகமாகுமே யொழிய ஸர்வஜ்ஞத்வாநுகுணமாகாது காண் என்கிறுர்.

ஆகவித்தாலே, ஸ்ரீஸஹஸ்ரநாமத்தில் "அவிஜ்ஞாதா" என்ற திருநாமம் வ்யாக்யாதமாயிற்று.

ஆக இந்த ச்லோகம் உபாலம்பத்வய கர்ப்பிதமாயிருந்தாலும் தாத்பர்யவ்ருத்தியினுல் எம்பெருமானுடைய ஆச்ரிதபாரதந்த்ர்யம் வாத்ஸல்யம் என்கிற கல்யாண குணங்களை ப்ரசம்ஸித்தபடியாகத் தேறுகையாலே வ்யாஜஸ்துதியலங்கார மாகிறது. (20)

पाणिपादवदनेक्षणशब्दैः अम्बुजान्यपदिशन् वरद त्वम् ।
बाहुभिस्त्वतिविशालतमालान् आञ्जनं करिगिरेरसि शृङ्गम् ॥ २१ ॥

பாணிபாதவத நேக்ஷணசப்தை ஃ அம்புஜாந்யபதிசந் வரத த்வம் ।
பாஹுபிஸ் த்வதிவிசாலதமாலாந் ஆஞ்ஜநம் கரிகிரேரஸி ச்ருங்கம் ॥ 21 ॥

ஹேவரத	ஓ வரதனே!	அபதிசந்	மறைத்துக்கொண்டிரா நின்ற
பாணிபாதவதந ஈக்ஷணசப்தை:	திருக்கை திருவடி திருமுகம் திருக்கண் என்னும் திரு நாமங்களாலே	த்வம்	நீ
அம்புஜாநி	தாமரை மலர்களையும்	கரிகிரே:	ஹஸ்திகிரிக்கு
பாஹுபி:	புஜங்களினுலே	ஆஞ்ஜநம்	அஞ்சனமயமான
அதிவிசால தமாலாம்ஸ்து	மிகப் பெரிய பச்சிலை மரங்களையும்	ச்ருங்கம்	சிகரமாக
		அஸி	ஆகின்றுய்.

*** இனி அறுபத்திரண்டாம் சுலோகமளவாக வடிவழகு வர்ணநத்திலே ஊன்றுகிறுர். அது தன்னிலும் முதலிட்டு நான்கு சுலோகங்களாலே திவ்யமங்கள விக்ரஹ சோபையை ஸமுதாய ரூபேண அநுபவித்து, மேல் (ஆதிராஜ்யமதிகம்) என்று தொடங்கி ப்ரத்யங்க சோபையை அநுபவித்து இனியராகிறுர்.

ப்ரதமதசகத்திலே பேரருளாளனையும் ஒரு பொருளாக மதியாதே, அவனுகந்து வர்த்திக்கும் திருவத்திமாமலையையே பரமப்ராப்யமாக அநுஸந்தித்தருளின விவர், அத்திருமலையை விட்டுப் பேரருளாளனுடைய வடிவழகிலே ஊன்றுவானென்? என்று விசிகித்ஸை பண்ணுவார்க்குத் தெளிவு பிறக்கும்படி

ஒரு சமத்காரமாக அருளிச் செய்கிறுர் ; பேரருளாளனைத் திருவத்தி மாமலையிற்காட்டில் வேறு பட்டவனுக நான் ப்ரதிபத்தி பண்ணுகிறிலேன் ; திருமலையில் ஏகதேசமென்னலாம்படி யிராநின்றுனென்கிறுர்'

ஆழ்வார் *கிளரொளியிளமையில் ''திருமலையதுவே யடைவது திறமே'' ''போதவிழ் மலையே புகுவது பொருளே'' என்று திருமாலிருஞ் சோலைமலைதன்னையே ப்ராப்யமாக அருளிச்செய்து போந்து *முடிச்சோதியில் அத்திருமலைதன்னை விட்டு அழகருடைய வடிவழகிலே ஆழங்கால்பட்ட படியை உபபாதிக்கப்புகுந்த நம் ஆசார்யர்கள்,—''திருமலையை அநுபவித்துக் கொண்டு வாராநிற்கச்செய்தே 'வடமாமலை யுச்சியை' என்னுமாபோலே திருமலையில் ஏகதேச மென்னலாம் படியாய் கல்பகதரு பஹுசாகமாகப் பணைத்துப் பூத்தாற்போலே நிற்கிற அழகருடைய ஸௌந்தர்யத்தை யநுபவிக்கிறுர்'' என்றிறே அருளிச் செய்தது.

பேரருளாளனைப் பர்வதத்தின் ஏகதேசமாகச் சொன்னல் அதற்கு ஏற்ற லக்ஷணங்கள் அமைந் திருக்க வேணுமே யென்ன, அவ்வமைப்பை ருபகச்சாயையிலே அருளிச் செய்கிறுர் [பாணிபாதேத்யாதி] தாமரைக்காடும், தமாலவ்ருக்ஷங்களுமாயிறே மலை முகடிருப்பது; ''கைவண்ணம் தாமரை வாய் கமலம் போலும் கண்ணிணையு மரவிந்த மடியுமஃதே' என்னும்படியான பேரருளாளனும் திருக்கைகள், திருக் கண்கள், திருமுகம், திருவடிகள் என்னும் அவயவாபதேசத்தாலே தாமரைமலர்கள் நிறைந்து திகழ நிற்ப தாலும், புஜதண்டங்களென்னும் வ்யாஜத்தாலே தமாலவ்ருக்ஷங்கள் விளங்க நிற்பதாலும், ஆக இந்த நேர்த்தியையிட்டு, இவன்றன்னையே கரிகிரி ச்ருங்கமென்கிறதாய்த்து. மலைமுகடுதான் மேகஸமூஹங் களுக்கு இருப்பிடமாய்க் கொண்டும் ஸ்வபாவமாகவும் கறுத்திருக்குமிறே. *நீலமேகநிபனுன பேரரு ளாளனுக்கு அவ்வாகாரத்திலும் ஒரு குறையில்லையே. இது தோன்றவாய்த்து [ஆஞ்ஜனம்] என்றது.

[பாணீத்யாதி.] அல்லி போலே உள்ளங்கையும், இதழ்போலே விரல்களும், தாதுபோலே ரேகைகளும், விலக்ஷணமான கந்தமும், ம்ருதுவான ஸ்பர்சமும், புறவிதழ்போலே ச்யாமமான புறங் கையில் பசுமையும் ஏவமாதியான லக்ஷணங்களையுடைத்தா யிருக்கையாலே பாணியானது அம்புஜ மென்னலாம்படியிருக்குமாய்த்து. இப்படியே மேலும் கண்டு சொள்வது.

[பாஹுபிரித்யாதி.] கீழ் பாணியென்றது 'பஞ்சசாகச் சய : பாணிః' என்ற கோசத்தின்படி விரல் களோடே கூடி மணிக்கட்டளவான பாகத்தைச் சொல்லும், பாஹுசப்தம் புஜத்தைச் சொல்லும். தோளுக்குக் கீழ்ப்பட்ட தண்டாகாரமான பாகத்தைச் சொல்லும். இவன் தோள் நிழலிலே ஒதுங்கின வர்களுக்கு மதிளுக்குள்ளே யிருப்பாரைப் போலே பயம் கெட்டிருக்கலாம்படி வலியுடைத்தாய், ஒதுங்கினவர்கள் சுருங்கி நிழலே விஞ்சியிருந்து ச்ரமஹரமாயிருக்கையாலே அதிவிசால தமாலங்களாக பாஹுவை வர்ணிக்கக் கடவதிறே. ''கற்பகக்காவன நற்பலதோளன்'' என்று ஆழ்வார்கள் வாய்வெருவு வர்கள். ''பாஹுபிః'' என்ற பஹுவசனம் சதுர்ப்புஜத்வத்தைப்பற்ற.* அர்த்திதார்த்தபரிதான தீக்ஷிதனுக்கு இரண்டு கை போராதே. எம்பெருமான்றனக்கு ஸந்தோஷம் விஞ்சினல் ''தோள்களா யிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க்கண்களாயிரத்தாய் தாள்களாயிரத்தாய்'' என்னும்படி அவய வங்கள் ஸஹஸ்ரசாகமாகப் பணைக்குமிறே.

இந்த ச்லோகம் முதல் ''அஞ்ஜநக்ஷிதிப்ருதோ யதிநாம'' என்னும் சுலோகமளவாகவுள்ள இந்த தசகம் ஸ்வாகதாவ்ருத்தம். (21)

त्वामुदारभुजमुन्नसमायत्कर्णपाशपरिकर्मसदंसम् ।
आयताक्षमभिजातकपोलं पारणीयति वरप्रद दृङ् मे ॥ २२ ॥

த்வாமுதாரபுஜமுந்நஸமாயத்கர்ணபாசபரிகர்மஸதம்ஸம் ।
ஆ யதாக்ஷமபிஜாதகபோலம் பாரணீயதி வரப்ரத த்ருங் மே ॥ 22 ॥

ஹே வரப்ரத	ஓ வரதனே	ஆயதாக்ஷம்	[செவியளவும்] நீண்ட திருக்கண் களையுடையவனும்
மே த்ருக்	அடியேனுடைய கண்ணனது	அபிஜாத கபோலம்	ஆபிஜாத்யம் பொருந்திய கண்ட ஸ்தலங்களை யுடையவனுமான
உதாரபுஜம்	ஔதார்யமுள்ள பாஹுவை யுடையவனும்	த்வாம்	உன்னை
உந்நஸம்	உந்நதமான திருமூக்கை யுடைய வனும்	பாரணீயதி	பூர்ணநுபவம் பண்ண விரும்பு கின்றது.
ஆயத் கர்ணபாச	நீண்டு சிறந்த செவிகளை அலங்காரமாகக் கொண்ட நல்ல		
பரிகர்ம ஸதம்ஸம்	திருத்தோள்களையுடையவனும்		

*** தம்முடைய திருக்கண்களானவை பேரருளாளனுடைய ஒவ்வொரு திவ்யாவயவத்திலும் ஈடு பட்டு அவ்வழகு பொலிந்து நின்ற அவனை அப்படியே விளாக்குலைகொள்ளப் பாரித்திருக்கின்ற படியை அருளிச்செய்கிறார் இதில்.

[உதாரபுஜம்] "உதாரோ தாத்ருமஹதோ:" என்று சொன்னனிறே அமரன். "அலம்புரிந்த நெடுந்தடக்கை" என்னுமாபோலே அர்த்திகள் அலம் என்னும்படி இட்டு நீண்ட கையன். கொடுக் கையே விளைநீராக வளர்ந்த கை அர்த்திகளிருக்குமிடமளவும் செல்ல நீண்ட கை. "பாஹுச்சாயாம வஷ்டப்த:"என்கிறபடியே லோக மடங்க ஒதுங்கினலும் விஞ்சியிருக்கும்படியிறே புஜத்தின் பெருமை.

[உந்நஸம்] "மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ" வென்று நித்யஸந்தேஹ ஜநகமாயிறே*கோலநீள் கொடிமூக்கிருப்பது. உபோஷிதனுயிருந்தவன் வயிறாரவுண்பதையிறே பாரணையென்பது. "உண்ணுநாள் பசியாவதொன்றில்லை" என்றிருக்குமாழ்வான் "கண்டு கொண்டென் கண்ணிணையாரக் களித்து" என்கிறபடியே எம்பெருமானுடைய திருமேனியை ஸேவிக்கப்பெறும் நாளை த்வாதசியாகவும் அது பெறுத நாளை "அன்றெனக்கவை பட்டினி நாளே" என்கிறபடியே ஏகாதசியாகவும் திருவுள்ளம்பற்றியிருக்கிறராகையாலே நித்யத்வாதசியாகவேணுமென்று பாரிக்கிறார். (22)

नीलमेघनिभमञ्जनपुञ्जश्यामकुन्तलमनन्तशयं त्वाम् ।
अब्जपाणिपदमम्बुजनेत्रं नेत्रसात्कुरु करीश! सदा मे ॥ २३ ॥

நீலமேகநிபமஞ்ஜநபுஞ்ஜ ச்யாமகுந்தளமநந்தசயம் த்வாம் ।
அப்ஜபாணிபதமம்புஜநேத்ரம் நேத்ரஸாத்குரு கரீச ஸதாமே ॥ 23 ॥

ஹே கரீச	ஓ ஹஸ்திகிரி நாதனே!	அப்ஜ பாணி பதம்	தாமரை போன்ற திருக் கைகளையும், திருவடிகளையும் உடையவனாய்
நீலமேக நிபம்	கருமுகில் போன்றவனாய்	அம்புஜ நேத்ரம்	தாமரை போன்ற திருக்கண்களை யுடையனான
அஞ்ஜந புஞ்ஜ ச்யாம குந்தலம்	மைவண்ண நறுங் குஞ்சிக் குழலை யுடையனாய்	த்வாம்	உன்னை
அநந்தசயம்	திருவனந்தாழ்வான் மீது பள்ளி கொள்பவனாய்	ஸதா	எப்போதும்
		மே	அடியேனுக்கு
		நேத்ரஸாத் குரு	சக்ஷுர்விஷய மாக்கியருள்.

*** "த்வாம் மே த்ருக் பாரணீயதி" என்று கீழ் அருளிச் செய்ததையே விசததமமாக அருளிச் செய்கிறார். *கார்காலத்தெழுகின்ற கார்முகில்போல் வண்ணனாய், *மைவண்ண நறுங்குஞ்சி குழல் பின் தாழத் திகழுமவனாய், *ஐவாயரவணைமேல் ஆதிப்பெருமானாய், *விட்டிலங்கு செஞ்சோதித் தாமரை பாதம் கைகள் கண்கள் விளங்குமவனாய்ப் பேரருளாளப் பெருமானாயிருக்கிற நீ *அல்லு நன்பகலு மிடை வீடின்றி நல்கியென்னை விடாதே "காவிபோல் வண்ணர்வந்து என் கண்ணுளே தோன்றினரே" என்னும்படி *கண்ணுள் நின்றகலாதருள வேணுமென்கிறார்.

[நீலமேக நிபம்] "முகிலுருவம் எம்மடிகளுருவம் தானே."—தாபத்ரயா துரர்க்குத் தாப ஹரமாய் விரஹதாபாதுரர்க்கு அந்தத் தாபத்தையு மாற்றக் கடவதாயிருக்கும் வடிவிறே.

[அஞ்ஜநபுஞ்ஜேத்யாதி:] *நீலமேகநிபமென்கிறவடிவும் ஸ்படிகமென்னும்படியாய்த்து திருக்குழலின் இருட்சியிருந்தபடி. "ஒண்சுடர்க்கற்றை" என்று சொல்லுகிற தேஜோரூபமான திருமேனியில் நின்றும் கிளம்பினதொரு மைபோலே யிருக்கை. இத்திருக்குழலை ஸேவிக்கப்பெற்றவர்களுக்கு ஸர்வமும் ப்ரகாசிக்கும்படி ஸித்தாஞ்ஜனமாயிருக்கை.

பிங்கலஜடோ தேவ: என்றும் 'ஒருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ' என்றும் சொல்லுகிற ப்ரஹ்மருத்ரர்களின் மயிர்போலே கண்கொண்டு காணவொண்ணாதாயிருக்கை யன்றிக்கே *சுரியும் பல் கருங்குஞ்சி யெங்கள் சுடர் முடியண்ணல் தோற்றமே' என்கிறபடியே கண்டவர்கள் கண்களிலே அஞ்ஜன மெழுதினாற்போலே குளிர்ந்து ச்யாமளமாயிருக்கை.

[அனந்தசயம்] இவ்விடத்துக்குப் பொருள் சொல்லுவார் "அனந்த: சயே யஸ்யஸ:" என்று வ்யதிகரண பஹுவ்ரீஹியைக்கொண்டு ,'திருக்கையிலே திருவனந்தாழ்வானை யுடையவன்' என்று சொல்லிப் போருவது ஒன்றுண்டு. இவ்வர்த்தம் ஆழ்வான் திருவுள்ளத்திற்கு இசைந்ததுமன்று; ஸங்கதமுமன்று; பெரியோர் ஆதரிப்பதுமன்று ; *அரவணை மேற்பள்ளிகொண்ட முகில்வண்ணனென்னுமிவ் வர்த்தமே சாலப்பொருந்தும். "அத்தியூரான் புள்ளையூர்வான், அணிமணியின் துத்திசேர் நாகத்தின்மேல் துயில்வான்" என்று பூதத்தாழ்வாரும் "பணிபதி சயநீயாத் உத்தித: த்வம் ப்ரபாதே" என்று வேதாந்த வாரியரும் அருளிச்செய்துள்ள விடங்களுக்குரிய நிர்வாஹம் இவ்விடத்திற்கு மொக்கும்.

[அப்ஜபாணிபதம் அம்புஜநேத்ரம்] பாணி பாத நேத்ரமென்னும் மூன்று திவ்யாவயவங்களுக்கும் ஒரு தாமரையையே ஒப்புச்சொல்லுகிறாராகில் ஒரு ஸமஸ்தபதமாகவே ப்ரயுக்தமாகலாமே ; உபமான வ்யக்தி பிந்நபிந்நமாயிருந்தாலன்றோ பதபேதம் பண்ணவேணும். "அப்ஜபாணி பதலோசந ரம்யம்" என்றாற்போலே சொல்ல வடுக்குமே ; ஒரு அர்த்தத்தையே 'அப்ஜ' என்றும் 'அம்புஜ' என்றும் பிந்நபதங்களாலே சொல்லுவதில் குண விசேஷமென்? என்று சிலர் கேட்பர், "கண்ணும் வாயும் கைத்தலமுமடியிணையும் கமல வண்ணம்" என்று சேர அநுபவித்தவர் தாமேயிறே ஒரு போக்யதாநுஸந்தான காஷ்டையிலே நின்ற வாறே "கைவண்ணம் தாமரை, வாய் கமலம் போலும், கண்ணிணையு மரவிந்தம், அடியும..தே" என்று வாய்வெருவிற்று. இவ்வாழ்வான் தாமும் ஸுந்தர பாஹுஸ்தவத்திலே "அப்ஜ பாதமரவிந்தலோசநம் பத்மபாணிதலம்" என்று வாய்வெருவினபடி கண்டீரே.

[த்வம் ஸதா மே நேத்ரஸாத்குரு] "அவ்வண்ணத்தவர் நிலைமைகண்டும் தோழீ! அவரை நாம் தேவரென்றஞ்சினோமே" என்னும்படி அஞ்சி அகலவேண்டாதே *கண்டுகொண்டேன் கண்ணிணை ஆரக் களிக்கும்படி ஸதா தர்சநம் தந்தருள வேணுமென்கிறார். (23)

त्वक्च दृक्च निपिपासति जिह्वा विह्वला श्रवणवत् परवृत्तौ ।
नासिका त्वयि करीश तथेति प्राप्नुयां कथमिमां स्विदवस्थाम् ॥ २४ ॥

த்வக் ச த்ருக் ச நிபிபாஸதி ஜிஹ்வா விஹ்வலா ச்ரவணவத் பரவ்ருத்தௌ ।
நாஸிகா த்வயி கரீச ததேதி ப்ராப்நுயாம் கதமிமாம் ஸ்விதவஸ்தாம் ॥ 24 ॥

ஹே கரீச	ஓ ஹஸ்திகிரி நாதனே!
த்வக் ச	த்வகிந்த்ரியமும்
த்ருக் ச	சக்ஷுரிந்த்ரியமும்
நிபிபாஸதி	மிகவும் பானம் பண்ண விரும்புகின்றது;
ஜிஹ்வா	ரஸநேந்த்ரியமானது
ச்ரவணவத்	ச்ரோத்ரேந்த்ரியத்தோடொப்ப
பர வ்ருத்தௌ	இந்த்ரியாந்தரங்களின் வியாபாரத்தில்
விஹ்வலா	சாபல்யமுடையதாய்
[பவதி]	ஆகிறது.
நாஸிகா	க்ராணேந்த்ரியமும்
ததா	அப்படியே இந்த்ரியாந்தர வ்ருத்தியை விரும்பி நிற்கிறது.
இதி இமாம் அவஸ்தாம்	என்று சொல்லக்கூடிய [முக்தி தசையில் விளையக்கூடிய] இந்த அவஸ்தையை
அஹம்	அடியேன் [இந்த விபூதியிலே]

த்வயி	உன் விஷயத்திலே	கதம்ஸ்வித் ப்ராப்நுயாம்	எங்ஙனேயோ அடைந்திடுவேன் ?

* * * நம்மாழ்வார் *செய்ய தாமரைக் கண்ணனிலே "தேர்கடவிய பெருமான் கனைகழல் காண்ப தென்று கொல் கண்கள்" என்ற கண்விடாய் மாத்திரமே யன்றிக்கே மற்றை இந்திரியங்களும் விடாய்த்து ஓரிந்த்ரியத்தினுடைய வ்ருத்தியை மற்றை இந்த்ரியமாசைப்பட்டும், மற்றை இந்த்ரியங்களினுடைய வ்ருத்தியை மற்றை இந்த்ரியமாசைப்பட்டும், அவை யெல்லாவற்றினுடைய வ்ருத்தியையும் தாம் ஆசைப்பட்டும், தம்மிலும் விடாய்த்த கரணங்களும், கரணங்களிலும் விடாய்த்த தாமுமாய்; க்ஷாம காலத்தில் பஹுகுடும்பியானவன் தன் பசிக்கு ஆற்றமாட்டாதே ப்ரஜைகள் பசிக்கு ஆற்றமாட்டாதே அவற்றின் வாயில் சோற்றைத் தான் பறித்து ஜீவிப்பது, தன் வாயில் சோற்றை அவை பறித்து ஜீவிப்பதாய் 'என் பசிக்கு என் செய்வேன்? என் ப்ரஜைகளின் பசிக்கு என் செய்வேன்?' என்று படுமா போலே தாமும் தம்முடைய கரண க்ராமமுமாக நோவுபட்டுக் கூப்பிட்டார்—* முடியானேயில். இப்படி இந்த்ரியங்கள் தனித்தனியே சேதநஸமாதியாலே விடாய்க்கும்படியான அவஸ்தைதான் போஜனத்திற்கு மிக்க பசிபோலே பகவதநுபவத்திற்கு மிகவும் பாங்கான ஸாமக்ரியாயிருக்கும். ஓரிந்த்ரியம் மற்றோரிந்த்ரியத்தின் வ்ருத்தியிலே உற்று விஹ்வலமாம்படியான அவஸ்தை விண்ணுளார்க்கும் *விண்ணுளாரினும் சீரியரான ஆழ்வார்க்கும் பகவதிச்சையாலே கூடினப்போலே அடியேனுக்கும் கூடுவது எங்ஙனேயோ? என்று — அவ்வவஸ்தையிலே தமக்குள்ள அபிநிவேசாதிசயத்தை அருளிச்செய்கிறாராய்த்து இந்த ச்லோகத்தில்.

"நீலமேகநிபம் த்வாம் நேத்ரஸாத்குரு ஸதா மே" என்று கீழ் ச்லோகத்தில் ப்ரார்த்தித்த ஸதா தர்சநமானது இந்த ச்லோகத்தில் சொல்லப்படுகிற அவஸ்தை பிறவாதவன்று கடிக்கமாட்டாதாகை யாலும், கடித்தாலும் ரஸிக்கமாட்டாதாகையாலும் அந்த அவஸ்தை தன்னையும் உத்தேச்யமான கைங்கர்யத்தோபாதி பகவத்ஸந்நிதியிலே ப்ரார்த்திக்கிறாராய்த்து.

(த்வக்ச த்ருக்ச-இத்யாதி) இந்த ச்லோகத்திலே 'ப்ராப்நுயாம்' என்பது ப்ரதானக்ரியையாய் 'நிபிபாஸதி', 'விஹ்வலா' என்னுமிவை அவாந்தர க்ரியையாயிருக்கும். "இப்படிப்பட்டதொரு அவஸ்தையை அடியேன் எங்ஙனே அடைந்திடுவேன்?" என்கிறவிது ப்ரதான வாக்யம். எப்படிப்பட்ட அவஸ்தை என்றால், அந்த அவஸ்தையின் ஆகாரத்தைச் சொல்லுகிற முதல் மூன்று பாதங்களிலுள்ள க்ரியைகள் அவாந்தரவாக்யார்த்தம்.

த்வகிந்த்ரியத்திற்கு வ்ருத்தி-தொடுகையும் தழுவுதலும், சக்ஷுரிந்த்ரியத்திற்கு வ்ருத்தி-தர்சநம், ரஸநேந்த்ரியத்திற்கு வ்ருத்தி—ஆஸ்வாதநம், ச்ரவணேந்த்ரியத்திற்கு வ்ருத்தி—சப்தஸாக்ஷாத்காரம், க்ராணேந்த்ரியத்திற்கு வ்ருத்தி ஆக்ராணம்-என்றிப் புடைகளிலே ஒரோ-இந்த்ரியத்திற்கு ஒரோ வ்ருத்திகள் வ்யவஸ்திதமாயிருக்கும்படியான நிலைமை குலைந்து ஒரு இந்த்ரியம் மற்றோரிந்த்ரியத்தின் வ்ருத்தியை ஆசைப்படுவதாய் அலமந்து பெருமிடறுசெய்து கூப்பிடும்படியான பக்திப்பெருங்காதலின் உந்மஸ்தக தசையை அடியேன் அடைந்தேனும்படி அருள் செய்திடாய் என்கிறார். (24)

आधिराज्यमधिकं भुवनानाम् ईश ते पिशुनयन्किल मौलिः ।
चूलिकामणिसहस्रमरीचेः हस्तिभूषण भवत्युदयाद्रिः ॥ २५ ॥

ஆதிராஜ்யமதிகம் புவநாநாம் ஈச தே பிசுநயந் கில மௌலி: ।
சூலிகாமணிஸஹஸ்ரமரீசே: ஹஸ்திபூஷண பவத்யுதயாத்ரி: ॥ 25 ॥

ஹஸ்திபூஷண	ஹஸ்திகிரிக்கு அலங்காரமாயுள்ள	பிசுநயந்	கோட்சொல்லாநின்ற
ஹே ஈச	தேவாதிராஜனே !	தே மௌலி:	உன்னுடைய திருவபிஷேகமானது
புவநாநாம்	உலகங்கட்கெல்லாம்	சூளிகா மணி ஸஹஸ்ர-மரீசே:	[தன்] சிகரத்திலேயுள்ள ரத்நமாகிற ஸூர்யனுக்கு
ஆதிராஜ்யம்	[நீ] அதிராஜனாயிருக்கும் தன்மையை	உதயாத்ரி:	உதயபர்வதமாக
அதிகம்	மிகவும்	பவதி கில	ஆகாநின்றதன்றோ.

இந்த ச்லோகம் முதலாக, திருமுடி தொடங்கித் திருவடியீருக அநுபவித்து இனியராகிருர்.

இந்த ச்லோகத்திலே திருவபிஷேகத்தின் பெருமையை அநுபவித்துப் பேசுகிருர். (ஈச) திருவபிஷேகத்திலே கண்வைத்தார் சொல்லும் பாசுரம் இதுவிறே-ஈசத்வம் தோற்றவிறே முடிதரிப்பது. 'கண்டவாற்ருல் தனதேயுலகெென நின்ருன்'' மூவுலகங்கட்கு முரியானிவனென்னுமிடம் ஒரு ப்ரமாணம் கொண்டு பேசவேணுமோ தான் ? திருவபிஷேகமும் தானுமாய் நிற்கிற நிலையைக் கண்டவாறே அனைத்துலகுமனைத் துயிரும் இவனொருத்தனுக்கே உரிய தென்னும்படியிறே யிருப்பது.

(சூளிகாமணீத்யாதி) இப்படி உபயவிபூதிஸாம்ராஜ்ய ஸூசகமாக விளங்குகின்ற திருவபிஷேகத்தை ஒரு பர்வதமாக உல்லேகிக்கிருர். "பொற்சுடர்க்குன்றன்ன பூந்தண்முடியற்கு'' என்று திருவபிஷேகத்தைப் பர்வதமென்னக் கற்பித்தவர் ஆழ்வாராய்த்து. இந்த கிரீட பர்வதம் எதற்கு உறுப்பாகிறதென்ன அருளிச்செய்கிருர். (சூளிகாமணி ஸஹஸ்ரமரீசே: உத்யாத்ரி: பவதி) நுனியிலே அழுத்தின ரத்னம் யாதொன்றுண்டு, அது ஒரு ஸூர்யன்போலே யிராநின்றது. அந்த ஸூர்யனுக்கு உதயபர்வதமாய்த்துத் திருவபிஷேகம். *கதிராயிரமிரவிகலந்தெரித்தாலொத்த நீண்முடியன் என்னுமிடம் சொல்லுகிறது.

ஆக இந்த ச்லோகத்தாலே சொல்லிற்ருய்த்தது ;—பேரருளாளனுடைய திருவபிஷேகம் "இவனே ஸர்வலோகைகநாதன்'' என்னுமிடத்தை விளங்கச் செய்பவற்ருய் வீறுபெற்றிரா நின்றதென்பதும், அதுதான் தேஜ:புஞ்ஜவிஸ்தாரங்களாலே ஒரு பர்வதத்தோடொப்புச் சொல்லப்போருமதாய், சிகாரத்நம்* உதய பருப்பதத்தின்மேல் விரியுங்கதிரே போன்றதாய் விளங்குகின்றதென்பதுமாம். (25)

उद्धरत्युपरि भक्तजनानिति ऊर्ध्वताश्रयणसूचितशक्तिम् ।
ऊर्ध्वपुण्ड्रतिलकं बहुमानात् किं बिभर्षि वरद स्वललाटे ॥ २६ ॥

உத்தரத்யுபரி பக்தஜநாநிதி ஊர்த்வதாச்ரயணஸூசிதசக்திம் ।
ஊர்த்வபுண்ட்ரதிலகம் பஹுமாநாத் கிம் பிபர்ஷி வரத ஸ்வலலாடே ॥ 26 ॥

ஹேவரத	ஓ வரதனே !	ஊர்த்வதாச்ரயணஸூசித சக்திம்	ஊர்த்வாகார விசிஷ்டமா யிருக்கையினுல் ஸூசிப்பிக்கப் பட்ட சக்தியையுடைய
அயம் ஊர்த்வ புண்ட்ர திலக:	இந்த ஊர்த்வ புண்ட்ர திலகமானது	ஊர்த்வபுண்ட்ர திலகம்	ஊர்த்வபுண்ட்ர திலகத்தை
பக்த ஜநாந்	பகவத் பக்தர்களை	ஸ்வலலாடே	தன் திருநெற்றியிலே
உபரி உத்தாதி	ஊர்த்வகதியை அடைவிக்கின்றது	பஹுமாநாத் கிம் பிபர்ஷி	['நம் அடியாருகந்தது' என்கிற] ப்ரீதி விசேஷத்தாலேயோ-தரியாநின்ருய்.
இதி	என்று		

*** கீழ் திருவபிஷேகத்தினழகிலே ஈடுபட்டு அதுதன்னிலே கால்தாழ்ந்து அதனைவிட்டுப் போமாட்டாதே நிற்க, அத் திருவபிஷேகத்தின் ஒளியானது ஊர்த்வ புண்ட்ரதிலகத்தளவும் போர வீசிற்று; வீசவே, அத்திலகத்திலே கண்வைத்து அநுபவிக்கிருர். (உத்தரதீத்யாதி) ஊர்த்வ புண்ட்ர தாரணமின்றியிலே அநுஷ்டிக்கப் படுகிற ஸ்நானஸந்த்யாவந்தனுதி நித்யநைமித்திககருமங்கள் பஸ்மாஹுதி போலே விபலமாயொழியுமென்று சாஸ்த்ரம் சொல்லுகையாலே, கர்மவச்யரான சேதநர்க்குத்தான் கர்மாங்கமான ஊர்த்வபுண்ட்ர தாரணம் விதிப்ராப்தம். கேவலம் கர்மஸாக்ஷியான எம்பெருமான் நித்யநைமித்திகாதி கர்மமொன்றும் செய்யக்கடவனல்லனே; அவனுக்கு ஊர்த்வபுண்ட்ரதாரணம் ஆவச்யகமன்றிறே. ஆயிருக்கச் செய்தேயும் ஊர்த்வபுண்ட்ர திலகம் தரித்துக்கொண்டிருப்பதற்கு ஒரு ஹேது சொல்லவேணுமே; திருநெற்றிக்கு அலங்காரார்த்தமாகச் சாத்திக்கொண்டிரா நின்ருனென்று சொல்லு

வதிற் காட்டிலும் ஸ்வாதுதமமானதொரு ஹேது அருளிச்செய்ய விரும்பி "பஹுமாநாத் கிம்" என்கிறார். 'அடியாருகந்தது ஏதாகிலுமாம் ; அதுவே நமக்கு உபாதேயம்' என்று கொண்டோ ? என்கிறார்.

புண்ட்ரதிலகம் ஊர்த்வாகார விசிஷ்டமாயிருக்கு மது ஒரு அர்த்தவிசேஷத்திற்கு ஸூசகமாயிரா நின்ற தென்கிறார்—பூர்வார்த்தத்தாலே ! "ஊர்த்வகதி ப்ராபகம் புண்ட்ரம்—ஊர்த்வபுண்ட்ரம்" என்றிங் ஙனே சாகபார்த்திவஸமாஸம் போல் திருவுள்ளம் பற்றி அருளிச்செய்தபடி.

இந்த ஊர்த்வபுண்ட்ர தாரணத்தால் உனக்கு வருவதொரு பலனில்லையே. இதுதான் உனக்கு அகரணே ப்ரத்யவாயாவஹமு மன்று; கைங்கர்யரூபேண கர்த்தவ்யமு மன்று; சப்தசக்தியை விமர்சிக்கு மிடத்தில் உனக்கிது ப்ராப்தமு மன்று. ஆயிருக்கச் செய்தேயும் இதனை நீ தரிப்பது—'அடியாருகந்த தென்கிற திருவுள்ளத்தாலேயோ ?' என்கிறார்.

திருநெற்றி யலங்காரத்திற்குத் திலகமென்று பெயர். (26)

कर्णिका तव करीश किमेषा कर्णभूषणमुतांसविभूषा ।
अंसलम्ब्यलकभूषणमाहो मानसस्य मम वा परिकर्म ॥ २७॥

கர்ணிகா தவ கரீச கிமேஷா கர்ணபூஷணமுதாம்ஸவிபூஷா ।
அம்ஸலம்ப்யலகபூஷணமாஹோ மாநஸஸ்ய மம வா பரிகர்ம ॥ 27 ॥

ஹே கரீச	ஓ ஹஸ்திகிரி:நாதனே !	அம்ஸ விபூஷா	திருத்தோள்களுக்கு அலங்காரமோ?
தவ	உன்னுடைய	ஆஹோ	அங்ஙனன்றிக்கே
ஏஷா	இந்த	அம்ஸ லம்பி அலக பூஷணம்	திருத்தோள்களில் அலையா நின்ற திருக்குழல்களுக்கு அலங்காரமோ ?
கர்ணிகா	கர்ணபூஷணமானது	வா	அங்ஙனுமன்றி
கர்ணபூஷணம் கிம்	திருச்செவிகளுக்கு அலங்காரமோ ?	மம	அடியேனுடைய
உத	அல்லது	மாநஸஸ்ய பரிகர்ம	இதயத்திற்கு அலங்காரமோ ?

* * * திருநெற்றியில் திவ்யோர்த்வபுண்ட்ர திலகத்தினழகு திருச்செவிகளில் மகரக்குழைகளி னழகிலே கொண்டு மூட்ட அதனை அநுபவித்து அகம் குழைந்து மகிழ்கிறாராய்ச் செல்லுகிறது.

ஹேகரீச! தவ ஏஷா கர்ணிகா கிம் கர்ணபூஷணம்? உத அம்ஸவிபூஷா? ஆஹோ அம்ஸ லம்ப்யலக பூஷணம்? அத மம மாநஸஸ்ய பரிகர்ம வா? என்று கோடி சதுஷ்டயாவகாஹியான ஸம் சயம் தமக்கு வர்த்திக்கிற படியை அருளிச்செய்கிறார்.

கர்ணிகா கர்ணபூஷணம் கிம்?-"கஷ்டா வேதவ்யதா, கஷ்டோ நித்ய முத்வஹநக்லம:, ச்ரவணாநாம்" என்றான் முராரி. அதாவது—குண்டலத்தால் காதுக்கு ஒரு சோபையுமில்லை ; குண்டலதாரணத்துக் காகத் தான் குத்தப்படுகிற துக்கமும், நித்யம் அந்த குண்டலங்களைச் சுமந்துகொண்டு படும் துக்கமுமேயாய்த்து காதுக்கு மிகுவது. இது இத்தனை கஷ்டப்படுவது; இந்த குண்டலத்தால் அழகு பெறுவது கபோலமாய்த்து என்றான். வஸ்துஸ்திதி இதுவே யிறே. ஆனால் இந்த உலகத்தார்படி பேரு ளாளன் பக்கலிலே ஒவ்வாது. 'பைவிடப்பாம்பணையான் திருக்குண்டலக் காதுகளே" என்னும்படி குண்டலமும் காதுமான சேர்த்தியழகு அந்யாத்ருசமா யிருப்பதால், இந்த *மின்னுமணி மகர குண்டலங் கள் திருச்செவிகளுக்குத்தான் அலங்காரமோ? என்கிறார்.

(உத அம்ஸவிபூஷா) திருச்செவிகள் திருத்தோளளவும் தளதளென்று தொங்கா நின்றமையால் இந்த மணிமகர குண்டலங்களாலே திருத்தோள்கள் விறுபெற்று விளங்குவதனால் இவை திருத்தோள் களுக்குத் தான் அலங்காரமோ? என்கிறார். "உதக்ரபீநாம்ஸ விலம்பி குண்டல..." என்று திருக்குண்டல மும் திருத்தோள்களுமான சேர்த்தியழகை ஆளவந்தாரும் அநுபவித்தாரிறே.

(ஆஹோ அம்ஸலம்ப்யலகபூஷணம்) "மொய்ய நீள்குழல் தாழ்ந்த தோள்களும்'' என்றும் "களி வண்டெங்கும் கலந்தாற்போல் கமழ்பூங்குழல்கள் தடந்தோள் மேல் மிளிர நின்று விளையாட'' என்றும் ''மைவண்ணநறுங்குஞ்சி குழல் பின் தாழ'' என்றும் சொல்லுகிறபடியே திருத்தோள்களின் மேலே உலாவி யலையுமே திருக்குழல்கள்; ''குழல் மின் தாழ மகரம்சேர் குழை இருபாடிலங்கியாட'' என்று இத்திரு மகரக் குழைகளுக்கும் திருக்குழல்களுக்கும் ஒரு சேர்த்தியழகு அநுஸந்தித்துப்போருவதுண்டிறே. அதை அநுஸந்தித்து, இக் குண்டலங்கள் திருத்தோள்களில் அலையா நின்றுள்ள குழல்களுக்குத் தான் அலங்காரமோ? என்கிறார். முன்னே லலாட பர்யந்தமாய், பின்னே அம்ஸாவலம்பியாயிறே திருக்குழலிருப்பது. திருமகரக் குழைகள் திருக்குழலுக்கு ஆபரணமாயிருக்கிறதோ ? திருக்குழல்தான் திருமகரக் குழைகளுக்கு ஆபரணமா யிருக்கிறதோ? என்று தெரியாதபடியான பரபாகரஸமுண்டிறே அலகாவலீ மகர குண்டலங்களுக்கு.

(மாநஸஸ்ய மம வா பரிகர்ம) திருச் செவிகளும் திருக்குண்டலங்களுமான சேர்த்தியழகையும், திருத்தோள்களும் திருக்குண்டலங்களுமான சேர்த்தியழகையும், திருக்குழல்களும் திருக்குண்டலங்களுமான சேர்த்தியழகையும் அநுபவிக்க விரும்பி யிருக்கு மடியேனுடைய மனஸ்ஸுக்குத்தான் இது அலங்காரமோ? என்கிறார்,

இந்த ச்லோகத்தாலே சொல்லிற்றாய்த்தது என்னென்னில் ; இந்த மகரக் குழைகளானவை தேவரீருடைய திருச் செவிகளுக்கும், திருத்தோள்களுக்கும், அவற்றில் அலையும் திருக் குழல்களுக்கும். இவற்றையெல்லாம் உன்னித்து உள் குழைந்துருகு மென்னுடைய ஹ்ருதயத்திற்கும் சோபாவஹமாயிரா நின்றன வென்கிறார்—என்று சிலர் நிர்வஹித்துப் போருவர்கள். பாதத்ரயார்த்தத்தையும் பூர்வபக்ஷ கோடியிலே யாக்கி சரமசரணார்த்தத்தை ஸித்தாந்தமாக நிர்வஹித்துப் போருவாருமுண்டு. அதாகிறது— இந்த திவ்ய குண்டலங்களால் உன்னுடைய நிருபாதிக போக்யங்களான அவயவங்களிலே ஒன்றுக்கும் அபூர்வ சோபை விளையவேண்டிற்றில்லை, "குழுமித்தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தி னுள்ளே, எழுவதோருரு என்னெஞ்சுள் எழும் ஆர்க்குமறிவரிதே'' என்னுமா போலே—மயல் கொண்டு இருண்டு கிடக்குமென்னெஞ்சு ஒன்றுக்குமே விளக்கம் தருவதென்கிறார் என்றபடி. ... (27)

पारिजातविटपानभितो या पुष्पसम्पदुदियात् करिनाथ ।
तां विडम्बयति तावकबाहुषु आतता तु कटकांगदलक्ष्मीः ॥ २८ ॥

பாரிஜாதவிடபாநபிதோ யா புஷ்பஸம்பதுதியாத் கரிநாத ।
தாம் விடம்பயதி தாவகபாஹுஷு ஆததா து கடகாங்கதலக்ஷ்மீ: ॥ 28 ॥

ஹே கரிநாத	ஒ ஹஸ்திகிரி நாதனே !	பாரிஜாதவிட பாந் அபித:	கல்பவ்ருக்ஷத்தின் கிளைகளைச் சுற்றி
தாவக பாஹுஷு	உனது புஜங்களில்	யா புஷ்பஸம் பத் உதியாத்	யாதொரு புஷ்ப சோபை யுண்டாகுமோ
ஆததா	பரம்பியுள்ள	தாம்	அந்த சோபையை
கடக அங்கத லக்ஷ்மீஸ்து	கைவளை யென்ன தோள் வளை யென்ன இவற்றின் சோபையோ வென்றால்,	விடம்பயதி	அநுகரிக்கின்றது.

***திருக்குண்டலங்களின் அழகு திருத்தோளணிகளின் அழகிலே கொண்டு மூட்ட, அதனை அநுபவித்து இனியராகிறார்.

கீழ் ச்லோகத்தில், கர்ணிகா விஷயத்திலே தமக்கு நான்கு வகையான விசிகித்ஸைகள் விளைந்தபடியைப் பேரருளாளன் திருமுன்பே விண்ணப்பம் செய்தார். அவற்றுக்கு ஸமாதானம் பெற வேணுமென்று சாலவும் பாரித்தார். அது தான் பெற்றிலர். எம்பெருமான் ஜ்ஞாநிநாம் அக்ரேஸரரான ஆழ்வானுடைய ஸம்சயங்களைப் பரிஹரிக்க எங்ஙனே வல்லவனுவன் ? லஜ்ஜையாலே நிருத்தரனாய்க்

கவிழ்தலையிட்டு நிற்கவும் மாட்டாதே தோளைத் திருப்புவது, மார்பை நெறிப்பது, பீதகவாடையை உதறுவது, திருக்குழலைப் பேணுவதாய்ச் சில ஸ்ரீமத்கம்பீர சேஷ்டிதங்களைப் பண்ணினன்; "வாரிருக்கு முலைமலர்மடந்தையுறை மார்பிலே பெரியதோளிலே மயங்கி இன்புற முயங்கி என்னையு மறந்து தன்னையு மறந்ததே" என்னும்படி புத்திப்ரம்சத்தை விளைக்கவல்ல திவ்யாவயவங்களாகையாலே அவற்றிலே கண்வைத்து, கீழ்ப்பண்ணின ப்ரச்நங்களுக்கு ப்ரத்யுத்தரப்ரதீக்ஷையை மறந்து, "இதொரு தோளழகிருந்தபடியென் !" "இதொரு தோள்வளை யழகிருந்தபடியென் !" என்று அவற்றிலே ஊன்றி வர்ணிக்கத் தொடங்குகிறார்.

"அப்ஜபாணிபதம் அம்புஜநேத்ரம்" என்கிற இவ்வாழ்வானும் சிறிது ஆராய்ந்தவாறே 'என் சொன்னோமானோம் ?' என்று அநுசயித்து "அதீர்க்கம் அப்ரேமதுகம் க்ஷணோஜ்ஜ்வலம் நசோரம் அந்தஃகரணஸ்ய பச்யதாம், அநுப்ஜமப்ஜம் நு கதம் நிதர்சநம் வநாத்ரிநாதஸ்ய விசாலயோர் த்ருசோஃ?" என்பர். ஆனபின்பு, லௌகிகமான சில வஸ்துக்களை பகவத்விஷயத்திலே த்ருஷ்டாந் தீகரித்து ஸ்துதிக்கை யென்பது பர்யாயதஃ தூஷணமேயாம் என்று அத்யவஸித்து, அபூர்வமானதொரு உபமானத்தை ஸ்வபுத்தியாலே உத்ப்ரேக்ஷித்து அத்தோடொக்க வர்ணிக்கிறாராய்ச் செல்லுகிறது. அதாகிறது **அபூதோபமை.** இப்படி அபூதோபமையையிட்டு வர்ணிப்பதனால் விளைவதென்னென்னில்; வர்ணநீயவஸ்து நிஸ்ஸமாப்யதிகமென்னுமதிசயமேயாய்த்து விளங்குவது.

பேரருளாளனே ! தேவரீருடைய பாஹுக்களில் கங்கணங்களினுடையவும் கேயூரங்களி னுடையவும் சோபை பரம்பி யிருக்கிறது எங்ஙனே சொல்லலாயிருந்ததென்னில்; கல்பகதருவின் சாகைகளைச் சுற்றிப் புஷ்ப ஸம்பத்து நிரம்பி யிருந்தால் எங்ஙனே அழகுபெற்றிருக்குமோ, அங்ஙனே சொல்லலாயிருந்தது காண் என்கிறார். பாரிஜாததருஸ்தானீயன் பேரருளாளன்; அந்த வ்ருக்ஷத்தின் விடபஸ்தாநே பாஹுக்கள்; விடபத்தை முட்டாக்கிட்டுக் கிடக்கிற புஷ்பங்களின் ஸ்தானே கடக அங்கதங் கள். *அர்த்திதார்த்தபரிதாநதீக்ஷிதனைப்பாரிஜாதமென்னக் குறையில்லை. *காரானை யிடர்கடிந்த கற்பக மிறே. ஸ்ரீஹஸ்திசைலசிகரோஜ்வலபாரிஜாதம் என்று முச்சந்தியும் முறையிடாதாரில்லையிறே. பேரரு ளாளன் கல்பசாகியானால் அவனுடைய பாஹுக்கள் கல்பசாகையாகக் குறையில்லையிறே. *கற்பகக் காவன நற்பல தோளனிறே. திருமுழங்கைக்குக் கீழே கடக லக்ஷ்மியும் அதற்கு மேலே அங்கத லக்ஷ்மியுமாக விரவி, பாஹுதண்டங்களை ஜ்யோதிச் சக்ரம் ஆவரித்துக் கிடக்கும் நிலைமைக்கு ப்ரஸித் தோபமான மொன்று மில்லாமையாலே அபூதோபமை சொல்ல வேண்டிற்று.

இதனை அபூதோபமையாகக் கொள்ளாதே ப்ரஸித்தோபமையாகவே கொள்ளவேணு மென்பாரு முண்டு. திருவாய்மொழியில் 'சன்மம் பலபல செய்து' (3-10-1) என்ற பாட்டின் ஈட்டிலே "ஒள்வாள் தண்டு கொண்டு" என்ற விடத்திலே—"ஒரு கற்பகத்தரு பணைத்துக் கணுத்தோறு மரும்பினாற்போலே யாயிற்று வடிவும் திவ்யாயுதங்களும் சேர்ந்த சேர்த்தியிருப்பது" என்கிற ஸ்ரீஸூக்தி இந்த சுலோகத்தை அடியொற்றியதென்று கொள்ளலாம். (28)

मथ्यमानचलफेनिलसिन्धुप्रोत्थितिक्षणदशां गमितौ ते ।
वक्षसि स्फुरितमौक्तिकहारे कौस्तुभश्च कमला च करीश ॥ २९ ॥

மத்த்யமாநசலபேநிலஸிந்து ப்ரோத்திதிக்ஷணதசாம் கமிதௌ தே।
வக்ஷஸி ஸ்ப்புரிதமௌக்திகஹாரே கௌஸ்துபச் ச கமலா ச கரீச ॥ 29 ॥

ஹே கரீச — ஓ ஹஸ்திகிரி நாதனே !

ஸ்புரித மௌக்திக ஹாரே — தளதளென்ற முக்தாஹாரத்தை யுடையதான

மத்த்யமாந சல பேநில ஸிந்து ப்ரோத்திதி — கடையப்பட்டா நின்றும் [அதஏவ] அசையாநின்று நுரைகளையுடைத்தாயுமிரா நின்ற கடலில் நின்றும்

க்ஷண தசாம் — உதித்த ஸமயத்தின் அவஸ் தையை

தே வக்ஷஸி — உனது திருமார்பில்

கௌஸ்துபச் — ஸ்ரீகௌஸ்துபமணியும்

கமலா ச — பிராட்டியும்

கமிதௌ — அடைவிக்கப் பட்டுள்ளன.

திருத்தோள்களினழகு திருமார்பிலே கொண்டு மூட்ட, அதனழகை அநுபவிக்கிறார். நம் ஆழ்வார்களுக்கும் ஆசார்யர்களுக்கும் எம்பெருமானுடைய திவ்யாவயவங்களில், அல்லாத அவயவங்களெல்லாம் ஒரு தட்டும் திருமார்பு ஒரு தட்டுமாயிக்கும். அதுக்கடி என்னென்னில்; (வேதாந்தாஸ் தத்வசிந்தாம் முரபிதுரஸி யத்பாத சிஹ்நைஸ் தரந்தி) பரதத்வம் இன்னதென்று நிர்ணயிக்கையிலே * முயற்றி சுமந்தெழுந்த வேதாந்தங்கள் ஸ்ரீமந் நாராயணனுடைய திருமார்பிலே பிராட்டியினுடைய பாதலாக்ஷாரஸாங்கத்தைக் கண்டு 'இவனே யிறே பரதத்வமாகக் கடவன்' என்று நிர்ணயித்துக் கவலை தீருமாய்த்து. ஆகவே பரதத்வத்துக்கு ப்ரகாசகமான அவயவமிறே திருமார்வு.

(மத்த்யமாநேத்யாதி) பேரருளாளனுடைய திருமார்பிலே முக்தாஹாரங்கள் தளதளென்று விளங்குவதும், இடையே ஸ்ரீகௌஸ்துப மணியும் நாய்ச்சியாரும் திகழ்வதுமான இந்த நிலைமை எங்ஙனே வர்ணிக்கலாயிருந்ததென்றால்; பண்டொருகால் தேவர்களுக்கு ஜீவனமளிப்பதற்காகக் கடல் கடைந்தருளின காலத்திலே, அக்கடைதலாலே நுரைகள் சிளர்ந்து 'கருங்கடல்' என்னும்படியான கருநிறம் மாறி வெண்ணிறம் பெற்ற அக்கடலில் நின்றும் இந்த ஸ்ரீகௌஸ்துபமும் நாய்ச்சியாரும் தோன்றின ஸமயத்தில் நிலைமையாக தாதாத்ம்யம் சொல்லலாயிருந்ததென்கிறார்.

ஸமுத்ரஸ்தானத்திலே திருமார்வும், மதனகாலஸமுத்திதமாய் அதஏவ சஞ்சலமாயிராநின்ற நுரைகளின் ஸ்தானத்திலே - தளதளவென்ற முக்தாஹாரங்களும் அந்த நுரைகளினிடையே ஸ்ரீகௌஸ்துபமும் கமலையும் உதிக்கப்பெற்ற ஸமயதசையின் ஸ்தானத்திலே இப்போது திருமார்பிலே விளங்கும் நிலைமையும். ஆக இங்ஙனே உருவகப் படுத்தியிருக்குமிது மிகவும் பொருந்துமாறு காண்க. (29)

अञ्जनक्षितिभृतो यदि नाम उपत्यका वरद हेममयी स्यात् ।
तादृशी तव विभाति तु लक्ष्मीः आम्बरी बत विडम्बितविद्युत् ॥ ३० ॥

அஞ்ஜநக்ஷிதிப்ருதோ யதி நாம உபத்யகா வரத ஹேமமயீ ஸ்யாத் ।
தாத்ருசீ தவ விபாதி து லக்ஷ்மீ : ஆம்பரீ பத விடம்பிதவித்யுத் ॥ 30 ॥

ஹேவரத	வரத ராஜனே !	உபத்யகா	தாழ்வரையானது
விடம்பித வித்யுத்	மின்னல்போன்றதான	ஹேமமயீ	ஸ்வர்ண மயமாக
தவ ஆம்பரீ லக்ஷ்மீஸ் து	உனது பீதாம்பரசோபையோவெனில்	ஸ்யாத் யதி நாம	இருக்குமேயாகில்
அஞ்ஜநக்ஷிதி ப்ருதः	அஞ்சன மயமான தொரு மலையினுடைய	தாத்ருசீ	அதுபோன்றதாக
		விபாதி	விளங்குகின்றது
		பத !	ஆச்சர்யம்.

* * * திருமார்பினழகு பிதகவாடையிலே கொண்டுதள்ள அதனை அனுபவிக்கிறார்; மேகச்யாமமான திருவரைக்குப் பரபாகரஸாவஹமான திருப் பீதாம்பரம் அமைந்திருக்கும் படியை அபூதோபமையாலே பேசுகிறார். மைவண்ணமானதொரு மலைக்கு ஹிரண்மயமான தொரு தாழ்வரையுண்டாகில், திருப் பீதாம்பரத்தின் சோபையை அதனோடு ஒப்பிடலாமென்கிறார். அஞ்சன பர்வதத்தின் ஸ்தானத்தில் பேரருளாளன். ஹிரண்மய ஸாநுஸ்தானத்தில் திருப்பீதாம்பரம்.

''விடம்பிதவித்யுத்'' என்ற விசேஷணம் - த்ருஷ்டாந்தகோடியிலே ''ஹேமமயீ'' என்றதற்கு அநுகுணமாகக் கிடக்கிறது; (அஞ்ஜனக்ஷிதிப்ருதः) என்றதற்கு அநுகுணமாக தார்ஷ்டாந்திகத்தில் வசநவ்யக்தியொன்றுமில்லை யாகிலும் பேரருளாளனுடைய திருவுருவ வண்ணம் கீழே சொல்லிற்றுகையாலும், ஸுப்ரஸித்தமாகையாலும், த்ருஷ்டாந்தபலத்தாலும் ஸுவ்யக்தமாகக் கூடியதாகையாலும் இங்கே சொல்லிற்றில்லை யென்று கொள்க. (30)

परभागमियाद्रवेस्तमिस्रा वरदाद्य त्वयि तन्निशामयामः ।
गमिता तव वक्त्रचित्रभानोः परभागं ननु कौन्तली तमिस्रा ॥ ३१ ॥

பரபாகமியாத் ரவேஸ் தமிஸ்ரா வரதாத்ய த்வயி தந்நிசாமயாமஃ ।
கமிதா தவ வக்த்ரசித்ரபாநோஃ பரபாகம் நநு கௌந்தலீ தமிஸ்ரா ॥ 31 ॥

ஹேவரத	ஓ வரதராஜனே !	நிசாமயாம :	காணுகின்றோம்; [எங்ஙனே யென்னில்]
தமிஸ்ரா	இருள் திரளானது	தவ	உன்னுடைய
ரவே:	ஸூர்யனுக்கு	கௌந்தலீ தமிஸ்ரா	திருக்குழற் கற்றையிலேயுள்ள இருளானது
பரபாகம்	பரபாகமென்னும் படியை	வக்த்ர சித்ரபாநோ :	{ திருமுகமண்டலமாகிற ஸூர்யனுக்கு
இயாத்	அடையட்டும்;	பரபாகம் கமிதா நநு	பரபாக சோபையை அடைவிக்கப் பட்டிரா நின்றதிறே.
தத்	அந்த நிலைமையை		
அத்ய	இப்போது		
த்வயி	உன்பக்கலில்		

***இனி சதுர்த்த தசகம் பேரருளாளனுடைய திருமுக மண்டல வர்ணநபரமாய்ச் செல்லுகிறது. திருமுகமண்டலமாகிறது - திருநெற்றி, திருப்புருவம், திருக்கண், திருமூக்கு, திருக்கண்ணேங்கம், திருப்பவளநிலவு, புன்முறுவற்பெருக்கு, திவ்யகபோலம் முதலிய ஸந்நிவேசங்களமையப் பெற்றிறே யிருப்பது ; அவையெல்லாவற்றையும் வர்ணிப்பதாய்த்து இந்த தசகம்.

*கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீண்முடியோடு தோள்தீண்டியான திருமுகமண்டலத்தின் வெளிச்செறிப்பும், "கொள்கின்ற கோளிருளைச் சுகிர்ந்திட்ட கொழுஞ்சுருளின் உள்கொண்ட நீல நன்னூல் தழைகொல் ?" என்று நித்யஸந்தேஹ ஜநகமான திருக்குழற் கற்றையின்றெழுந்தும் ஆகவிப்படி "ஸாமாநாதிகரண்யம் ஹி தேஜஸ் திமிரயோஃ குதஃ" என்ன வொண்ணுமே ஒரு சேர்த்தியாக அமைந்திருக்கும்படிக்குச் சமத்காரமாகப் பாசுரமிடுகிறார்.

ஒரு நிறத்தினுடைய ஸந்நிதானத்திலே அதற்கு ப்ரதிபடமான மற்றொரு நிறம் அமைந்திருந்து சோபித்தால் அந்த சோபை பரபாக சோபை யெனப்படும். பெருமாளுடைய கரிய திருமேனியிலே ஹிரண்ய வர்ணையான பிராட்டி திகழ்வது பரபாக சோபை. கொவ்வைக் கனிபோன்ற திருவதரத்தினருகே மல்லிகையரும்பு போன்ற திருமுத்துக்கள் திகழ்வது பரபாக சோபை. அதி விசால தமால நிபமான பாஹுக்களிலே கனகமய கடகாங்கதங்கள் விளங்குவது பரபாக சோபை. இங்ஙனே பல காண்க. ஸூர்யனுக்கு இருள் பரபாகமென்று ஒருவரும் வ்யவஹரிப்பதில்லை. அப்படி ஒருவன் வ்யவஹரித்தாலும் அது அஸம்பத்தமாகும். பரஸ்பரம் ப்ரதித்வந்த்விகளான இரண்டு வர்ணங்களுக்கு ஸாஹசர்யம் கண்ட விடத்திலே யாய்த்து "அதுக்கு இது பரபாகமாயிராநின்றது" என்று சொல்ல வடுக்கும். சிவப்பு நிறத்தை ஒரு காலத்திலே கண்டவன் மற்றொரு காலத்திலே கறுப்பு நிறத்தைக் கண்டானாகில் அவன் "அந்தச் சிவப்புக்கு இந்தக் கறுப்பு பரபாகமாயிராநின்றது" என்று சொல்ல மாட்டான். நெஞ்சிலும் நினையான். இரண்டு வர்ணங்களையும் ஸமானகாலத்திலே ஸந்நிஹிதங்களாகக் காணுமவனே பரபாகமென்னக் கருதுவன். இப்படியான பின்பு "பாஸ்கரனுக்கு தமிஸ்ரையானது பரபாகம்." என்கிற வ்யவஹார முண்டாக ப்ரஸக்தியில்லை. ஸூர்யனுக்கும் தமிஸ்ரைக்கும் ஸாஹசர்யம் உபலப்தமாகில் அங்ஙனே வ்யவஹரிக்கக்கூடும். அது ஒருபோதும் நேராதாகையாலே அத்தகைய வ்யவஹாரம் நேராது என்பது ஸர்வ நிர்விவாதமான விஷயம். இப்படி அஸங்கடிதமான வ்யவஹாரம் ஸங்கடிதமாயிடுகவென்று ஆபத்தி பண்ணுகிறார் இந்த ச்லோகத்திலே.

(ரவேஸ் தமிஸ்ரா பரபாகம் இயாத்) "பகலுக்கு இரவானது பரபாகமாயிருக்கின்றது" என்கிற வ்யவஹாரம் உலகில் இல்லையேயாகிலும் அந்த வ்யவஹாரமுண்டாகலாமென்றபடி. இந்த ஆபாதநத்துக்கு நியாமகமேதென்னில் (கமிதேத்யாதி) ஆயிரம் கதிருடைய ஆதித்யனுதித்தாற்போன்றுள்ள

திருமுக மண்டலமும், காளராத்ரிகள் பல திரண்டாற்போன்றுள்ள முன்னுச்சிமயிர்க் கற்றைகளும் ப்ராப்த பரபாக பரஸ்பர ஸ்ரீயாய்க்கொண்டு உன் பக்கலிலே விளங்கக் காணுநின்றேமாகையால் பகலுக்கு இரவு பரபாகம்' என்கிற ப்ரதை பரவக்கடவதென்கிறார்.

இங்ஙனே அருளிச் செய்கிறவிவர்க்குத் திருவுள்ளக் கருத்து என்னவெனில், பேரருளாளனுடைய குந்தளங்கள் காளராத்ரிபோலே கறுத்து விளங்குகின்றனவென்பதும், திருமுக மண்டலம் கதிராயிரமிரவிபோலே ஜ்வலியா நின்றதென்பதும், இந்த முக குந்தளங்களுடைய பரபாக பரஸ்பர ஸ்ரீயானது பரமபோக்யமாயிராநின்றதென்பதும் இதனால் ஸித்திக்கும். இந்த தார்ஷ்டாந்திகமான முக குந்தளங்கள் ஸஹஸ்ராம்சு தாமிஸ்ரலங்கிபங்களென்னுமிடத்தை த்ருடீகரிக்குமளவில் விச்ராந்தமிந்த ச்லோகம்.

இந்த ச்லோகம் முதல் 'முகமுந்நஸம்' என்கிற ச்லோகமளவுமுள்ள பத்து ச்லோகங்கள் வஸந்த மாலிகாவ்ருத்தம். (31)

उभयोरपि पक्षयोस्तिथिर्या विषमीभावनिरासदाऽष्टमीति।
उपमानजसम्पदे हि सेन्दोः वरदाभूद्भवतो ललाटलक्ष्म्या ॥ ३२ ॥

உபயோரபி பக்ஷயோஸ் திதிர் யா விஷமீபாவநிராஸதாஷ்டமீதி !
உபமாநஜஸம்பதே ஹி ஸேந்தோ: வரதாபூத் பவதோ லலாடலக்ஷ்ம்யா ॥ 32 ॥

ஹே வரத	ஓ வரதராஜனே !	ஸா	அந்த அஷ்டமீ திதியானது
உபயோ: பக்ஷயோரபி	சுக்லமும் க்ருஷ்ணமுமாகிற இரண்டு பக்ஷங்களிலுமுள்ள	இந்தோ :	[அந்த] சந்திரனுக்கு
அஷ்டமீ இதி யா திதி :	அஷ்டமி யென்கிற யாதொருதிதி யானது	பவத :	உன்னுடைய
இந்தோ :	சந்திரனுக்கு	லலாட லக்ஷ்ம்யா ஸஹ	திருநெற்றியின் அழகோடே
விஷமீபாவ நிராஸதா	விஷமத் தன்மையைப் போக்கடிக்க வல்லதோ,	உபமாநஜ ஸம்பதே ச	ஒப்பிடுவதனாலுண்டாகிய செல்வத்தின் பொருட்டும்
		அபூத்	ஆயிற்று.

*** (உபயோரபீதியாதி) சுக்லபக்ஷத்திலும் க்ருஷ்ணபக்ஷத்திலும் அஷ்டமியென்று யாதொரு திதியுண்டு; அது எப்படிப்பட்டதென்னில்; (இந்தோ: விஷமீபாவ நிராஸதா.) சந்திரனுக்கு விஷம நிலைமையைப் போக்கி ஸமநிலைமையைக் கொடுக்கவற்று. ஏற்றத் தாழ்வில்லாமல் ஸமமான அர்த்தாம் சமாயிருக்கும் தன்மை மற்றைத் திதிகளில் இல்லையிறே சந்திரனுக்கு. விஷமீபாவநிராஸதத்வம் பௌர்ணமாஸிக்கு உண்டேயாகிலும் அந்த திதியிலே உதிக்கும் சந்திரனுக்கு இருளோடே சேர்த்தியில்லாமையாலே அந்த சந்திரன் லலாட பலகத்ருஷ்டாந்தத்வேந அவிவக்ஷிதன். இருளோடே சேர்த்தியையுடையவனாய் ஸமநிலைமையையுடையவனான சந்திரனேயாய்த்து திருநெற்றிக்கு ஒப்பாகச் சொல்லத் தகுமவன். அவன் அஷ்டமீசந்திரனேயாவன். பேரருளாளனுடைய திருமுக மண்டலத்திலே அல்லன்ன குழலை அர்த்தாம்சமாகவும் அழகிய திருநுதலை அர்த்தாம்சமாகவும் திருவுள்ளம்பற்றி அருளிச் செய்கிறபடி. (ஸா திதி: இத்யாதி.) அந்த அஷ்டமீ திதியானது சந்திரனுக்கு விஷமீபாவநிராஸத்தைக் கொடுப்பது மாத்திரமன்றிக்கே தேவரீருடைய திருநெற்றியோடே அவனை உபமிக்கலாம்படியான ஸம்பத்தையும் அவனுக்குத் தந்தாய்த்து என்கிறார்.

(உபமாநஜஸம்பதே) லோகத்தில் உபமேய பதத்திற்கு ப்ரதிகோடியாக உபமாநமென்றொரு பதம் வ்யவஹரிக்கப்படுவதுண்டு; அது ஸாத்ருச்யப்ரதியோகியான வ்யக்தியைச் சொல்லும் பதமாகையாலே தர்மிவாசகம். இங்குள்ள உபமாநபதம்—'ஸத்ருசீகரணம்' என்கிற அர்த்தத்திலே பாவே ல்யுடந்தமாக நிஷ்பந்நமாகையாலே தர்மவாசகம். (உபமாநம—ஒப்பிடுதல்) (32)

अलकालिचिकीर्षया किलात्ता सुपरीचिक्षिषया ललाटपट्टे ।
सुमषी निकषीकृता भ्रुवौ ते वरद स्यादकृतत्वतस्तु नैवम् ॥ ३३ ॥

அலகாலிசிகீர்ஷயா கிலாத்தா ஸுபரீசிக்ஷிஷயா லலாடபட்டே ।
ஸுமஷீ நிகஷீக்ருதா ப்ருவௌ தே வரத ஸ்யாத் அக்ருதத்வதஸ் து நைவம் ॥ 33 ॥

ஹேவரத	ஓ வரத ராஜனே !
[விதாத்ரா]	ப்ரஹ்மாவினுலே
ஆத்தா	கையில் எடுத்துக் கொள்ளப்பட்டதாய்
ஸுபரீசிக்ஷிஷயா	[அதன் கருமையை] நன்ருகப் பரீக்ஷித்துப்பார்க்க வேணுமென்ற விருப்பத்தினுலே
லலாடபட்டே	திருநெற்றியாகிற கற்பலகையிலே
நிகஷீக்ருதா	உரைக்கப்பட்ட
ஸுமஷீ	நல்ல மையானது
தே	உன்னுடைய
அலகாலிசிகீர்ஷயா	திருக்குழற்கற்றையை நிருமிக்கவேணுமென்கிற இச்சையினுல்
ப்ருவௌ	புருவங்களாக
[அபூத்]	ஆயிற்று;
து	இப்படி உத்ப்ரேக்ஷிக்கலாமாயினும்
அக்ருதத்வதஃ	[உன்னுடைய திருமேனி]க்ருத்ரிமமன்ருகையாலே [ஸ்வயம் வ்யக்தமாகையாலே]

ஏவம் ந ஸ்யாத் இங்ஙனே உத்ப்ரேக்ஷிக்கலாகாது.

* * * திருநெற்றியினழகை அநுபவித்த வநந்தரம் திருப்புருவ வட்டங்களினழகை அநுபவிக்கிருர். திருநெற்றியினடியிலே இரண்டிடத்திலும் அஞ்ஜனக்ருதமாய் மிகக்கனமான ரேகைகள் போன்ற திருப்புருவங்களின் அமைப்பை முந்துற முன்னம் ஒருவகையாக உல்லேகித்து, சிறிது விமர்சித்தவாறே அந்த உல்லேகம் பொருந்தாமையாலே அதுதன்னை மறுத்துரைக்கிருர்.

இந்த ச்லோகத்தில் முதலிலே 'விதாத்ரா' என்று ஒரு பதம் அத்யாஹரித்துக்கொள்ளக் கடவது. ஸர்வஸ்ரஷ்டாவான் சதுர்முகன் பேரருளாளனுடைய திருநெற்றிக்குமேலே கருங்குழல்களை ஸ்ருஷ்டிக்கப் புகுந்து அந்த குந்தலங்களுக்கு உபாதாந காரணமாகச் சிறந்த அஞ்ஜனத்தைக் கையிலே எடுத்துக்கொண்டு "இந்த அஞ்ஜனத்தின் நிறம் சிறந்ததுதானு?" என்று பரீக்ஷித்துப் பார்ப்பதற்காகத் திருநெற்றியாகிற உரைகல்லிலே இரண்டிடத்தில் தீற்றிப் பார்த்தான். அந்த மைதான் திருப்புருவங்களாக விளங்குகின்றன - என்று உல்லேகிப்பது முதல் மூன்று பாதம்.

இந்த உல்லேகத்தில், அப்ராக்ருதமாய் ஸ்வேச்சாக்ருஹீதமான பேரருளாளனுடைய திவ்யமங்கள விக்ரஹத்திற்கு ஸ்ருஜ்யத்வம் தோன்றுகையாலே இந்த அநுபபத்தியைத் திருவுள்ளம்பற்றி இங்ஙனே உல்லேகிக்க வொண்ணுதென்கிருர். ஒண்ணுமைக்கு ஹேது சொல்லுகிருர் [அக்ருதத்வதஃ] என்று. திருமேனி ஒருவராலும் ஸ்ருஷ்டிக்கப்பட்டதல்லாமையாலே இந்த உத்ப்ரேக்ஷை ஒவ்வாதென்கை.

இந்த உல்லேகம் அநுபபந்நமென்று தெரிந்துவைத்து அதனை முந்துற முன்னம் வாய்விடுவானேன்? என்னில்; பேரருளாளனுடைய திருப்புருவ வட்டங்கள் ஒப்பில்லாதவை யென்னுமிடத்தை ஸ்தாபிக்க இங்ஙனே பாசுரமிட்டபடி. ஒரு வஸ்துவின் அநுபமத்வத்தை வெளியிட விரும்புமவர்கள் சாதுர்ய ப்ரபேதத்தாலே பலபல வகையாகப் பேசுவர்கள்; அவற்றுள் இங்ஙனே ஒருவகை யிருக்கும்படி. திருக்குழலை வர்ணிக்கப் புகுந்த ஆழ்வார் "கொள்கின்ற கோளிருளைச் சுகிர்ந்திட்ட கொழுஞ்சுருளினுட்கொண்ட நீலநன்னூல் தழைகொல்" என்று முந்துற உத்ப்ரேக்ஷித்து, அப்போதே அது அநுபபந்நமென்று திருவுள்ளம்பற்றி 'அன்று மாயன் குழல்' என்ருரிறே. (33)

श्रवसश्च दृशश्च शब्दरूपग्रहणे ते न हि जीववद्व्यवस्था ।
उभयोरखिलेक्षणक्षमत्वात् वरदातः श्रवणाश्रये दृशौ ते ॥ ३४ ॥

ச்ரவஸச் ச த்ருசச் ச சப்தரூபக்ரஹணே தே ந ஹி ஜீவவத் வ்யவஸ்தா ।
உபயோரகிலேக்ஷண க்ஷமத்வாத் வரதாதஃ ச்ரவணுச்ரயே த்ருசௌ தே ॥ 34 ॥

ஹே வரதாத :	ஒ வரதனே !
தே	உன்னுடைய
ச்ரவஸச் ச	திருச்செவிக்கும்
த்ருசச் ச	திருக்கண்ணுக்கும்
சப்த ரூப க்ரஹணே	சப்தத்தையும் ரூபத்தையும் க்ரகஹிக்கும் விஷயத்தில்
ஜீவவத்	ஜீவாத்மாவுக்குப் போல
வ்யவஸ்தா ந ஹி	['இன்ன இந்த்ரியம் இன்ன குணத்தைத் தான் க்ரஹிக்கவற்று' என்கிற] வ்யவஸ்தை இல்லையன்றே ;
உபயோ:	அந்த இரண்டு இந்த்ரியங்களும்
அகிலேக்ஷண க்ஷமத்வாத்	எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷிப்பதில் ஸமர்த்தங்களாகையாலே
தே	உன்னுடைய
த்ருசௌ	திருக்கண்களானவை
ச்ரவண ஆச்ரயே	திருச்செவிகளை ஆச்ரயமாகவுடையனவாயின.

* * * பேரருளாளனுடைய திருக்கண்களின் பெருமையை விசித்ர வைகரியாலே வருணிக்கிருராய்ச் செல்லுகிறது. "காமம் கர்ணாந்தவிச்ராந்தே விசாலே தஸ்ய லோசநே" என்று ஸாமாந்ய புருஷர்களுக்கு இருக்குமது பரம புருஷனுக்கு சதகுணிதமாயிறே யிருப்பது. திருக்கண்கள் திருச்செவியளவும் நீண்டு விளங்கும்படியை வருணிக்கப்புகுந்தவர்கள் தம் தம் புத்தி வைசித்திரியத்திற்கு ஏற்ப ஓரோ வகையாக வருணிப்பர்கள். பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே "க்ருபயா பரயா கரிஷ்யமாணே" என்கிற ச்லோகத்திலே ஒரு வகையாக வருணித்தார் ; ஆழ்வானுடைய புத்தி சமத்காரம் மற்றொரு படியாகப் பெருகுகின்றது இங்கே.

ஜீவாத்மாக்களினுடைய இந்த்ரியங்களுக்கு விஷயவ்யவஸ்தையுண்டு ; சக்ஷுரிந்த்ரியத்திற்கு காண்பதொன்றிலே ஸாமர்த்தியம் ; ச்ரோத்ரேந்த்ரியத்திற்குக் கேட்பதொன்றிலே ஸாமர்த்தியம் என்றிப்படி ப்ரஸித்தமாயுள்ளது. ஒரு இந்த்ரியத்தின் சக்தி மற்றோரிந்த்ரியத்திற்குக் கூடுவதில்லை. அது கூடுவது முக்திதசையிலே பகவத்ஸங்கல்பத்தாலேயாய்த்து. இங்ஙனே ஜீவாத்மாக்களுக்குள்ள வ்யவஸ்தை பரமாத்மாவுக்கு இல்லை ; * தூது செய்கண்கள் கொண்டொன்று பேசித் தூமொழியிசைகள் கொண்டொன்று நோக்கி * (திருவாய்மொழி.) என்னும்படியிறே எம்பெருமான் படியிருப்பது.

* பச்யத்யசக்ஷுஸ் ஸ ச்ருணோத்யகர்ண: * என்றுமிறே ஓதிக்கிடக்கிறது. ஆகையாலே 'ச்ரோத்ரமேதான் சப்தத்தை க்ரஹிக்கக் கடவது, நயனமேதான் ரூபத்தை க்ரஹிக்கக் கடவது' என்கிற நியமமில்லையாய்த்து எம்பெருமானுக்கு.

[உபயோ: அகிலேக்ஷணக்ஷமத்வாத்] நயனச்ரவணங்களிரண்டும் ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரிக்கவற்றாகையாலே யென்கை. எம்பெருமானுடைய ஸகலேந்திரியங்களும் அகிலேக்ஷணக்ஷமமாயிருக்க * உபயோரகிலேக்ஷணக்ஷமத்வாத் * என்று நயநச்ரவணங்களிரண்டை மாத்திரம் இங்கே எடுத்துக் கூறியது, ப்ரக்ருதத்தில் இவ்விரண்டுக்குமே விவக்ஷையுள்ள தாகையாலே. திருக்கண்கள் திருச்செவியளவும் நீண்டிருக்கும்படிக்கு ஹேதூபபாதனம் பண்ணுகிறவித்தனையேயிறே இங்கு ப்ரஸக்தம். ஆகவே உபயோ: என்றது.

[தே த்ருசௌ ச்ரவணாச்ரயே] இந்திரியங்களுக்கு விஷயவ்யவஸ்தை உண்டாகிலன்றே அவ்வவ இந்திரியங்கள் தந்தமக்கடைத்த ஸ்தானங்களிலே யிருக்கவேணும்; அப்படிப்பட்ட வ்யவஸ்தையுள்ளது ஜீவாத்மாக்களுக்கேயாய் பரமாத்மாவுக்கு இல்லாமையாலே ஸ்தாநநியமமின்றிக்கே ஒன்றையொன்று ஆச்ரயித்திருக்கக் குறையில்லையிறே. நயநச்ரவணங்களுக்கு க்ராஹ்ய விஷய வ்யவஸ்தை யில்லாமையாலே திருக்கண்கள் திருச்செவிகளின் ஸ்தானத்தையும் விளாக்குலை கொண்டிராநின்றன வென்றதாயிற்று. வரதாத:! என்றது வரதாத்ரு சப்தத்தின் ஸம்புத்தி. (34)

करुणारसवाहिवीक्षणोर्मेः वरद प्रेममयप्रवाहभाजः ।
ततीरवनावली भ्रुवौ दृक्चलसिन्धोस्तव नासिकेव सेतुः ॥ ३५॥

கருணாரஸவாஹிவீக்ஷணோர்மே: வரத ப்ரேமமயப்ரவாஹபாஜ: ।
தததீரவநாவலீ ப்ருவௌ த்ருக் சலஸிந்தோஸ் தவ நாஸிகேவ ஸேது: ॥ 35 ॥

ஹே வரத — ஓ வரதனே !
கருணாரஸவாஹி வீக்ஷணோர்மே: — க்ருபாரஸத்தைபபெருக்கா நின்றகடாக்ஷமாகிற அலை களையுடைத்தாயும்
ப்ரேமமய ப்ரவாஹ பாஜ: — ப்ரணய ரூபமான ப்ரவாஹத்தை யுடைத்தானதாயு மிருக்கிற
தவ த்ருக் சல ஸிந்தோ: — உன் திருக்கண்களாகிற அசையும் கடலுக்கு,
ப்ருவௌ — திருப்புருவங்களானவை
தத தீர வந ஆவளீ இவ — பரம்பியதாய்க் கரையிலுள்ளதான சோலை போலும் ;
நாஸிகா — திரு மூக்கானது
ஸேதுரிவ — அணை போலும்.

* * * திருமூக்கினழகை அநுபவிக்கிறார். ஸிம்ஹாவலோகநந்யாயத்தாலே திருப்புருவ வட்டங் களிலும் செல்லுகிறார். [தவ ப்ருவௌ த்ருக்சலஸிந்தோ: தததீரவநாவலீ இவ; நாஸிகா ஸேதுரிவ] பேரருளாளனுடைய திருக்கண்கள் ஆச்ரிதவாத்ஸல்யாதிசயத்தாலே எப்போதும் அலைபாயாநின்று கொண்டிருப்பதால் 'அலையெறிகின்ற கடல்தானோ இது, என்னும்படியா யிருக்கின்றன. அத் திருக் கண்களின் மேலே திருப்புருவ வட்டங்கள்—'கடற்கரையிலே இருக்கக் கடவ சோலைச் செறிவோ!' என்னும்படியிருக்கின்றன. இரண்டு திருக்கண்களுக்கும் நடுவே 'மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ?' என்று நித்யஸந்தேஹஜநகமான கோலநீள் கொடிமூக்கு அமைந்திருப்பதானது—கட லிடையே கட்டிய அணைதானோ! என்னும்படியாயிராநின்ற தென்கிறார்.

திருக்கண்களை ஸமுத்ரமாக ரூபணம் பண்ணினபடிக்கு அமைய இரண்டு விசேஷணமிடுகிறார் பூர்வார்த்தத்தில் கருணாரஸேத்யாதி. "நாஸிகைவ ஸேது:" என்றும் ஓதுவர்கள். ... (35)

विभवं विवृणोति विस्तृणीते रुचमाविष्कुरुते कृपामपाराम् ।
अभिवर्षति हर्षमार्द्रभावं तनुते ते वरदैष दृष्टिपातः ॥ ३६ ॥

விபவம் விவ்ருணோதி விஸ்த்ருணீதே ருசமாவிஷ்குருதே க்ருபாமபாராம் ।
அபிவர்ஷதி ஹர்ஷமார்த்ரபாவம் தநுதே தே வரதைஷ த்ருஷ்டிபாத: ॥ 36 ॥

ஹே வரத — ஓ வரதனே !
தே — உன்னுடைய
ஏஷ: த்ருஷ்டி பாத: — இந்த கடாக்ஷமானது
விபவம் — [உன்னுடைய] உபயவிபூதி ஸார்வ பௌமத்வத்தை
விவ்ருணோதி — வ்யக்தமாக்குகின்றது ;
ருசம் — சோபையை
விஸ்த்ருணீதே — பரவச் செய்கின்றது ;
அபாராம் — எல்லையில்லாத
க்ருபாம் — கருணையை
ஆவிஷ்குருதே — வெளிப்படுத்துகின்றது ;
ஹர்ஷம் — ஆநந்தத்தை
அபிவர்ஷதி — பெருகச் செய்கிறது ;
ஆர்த்ர பாவம் — நெஞ்சு கசிந்திருத்தலை
தநுதே — உண்டாக்குகிறது.

* * * எம்பெருமான் பக்கலிலே நாலடிவரப் புகுராநின்றவர்கள் 'தொண்டரோர்க்கருளிச் சோதி வாய் திறந்து உன் தாமரைக் கண்களால் நோக்காய்' என்று ப்ரார்த்திப்பர்களிறே, "தேவராஜ தயாஸிந்தோ தேவதேவ ஜகத்பதே ! த்வதீக்ஷணஸுதாஸிந்துவீசிவிக்ஷேபசீகரை: ! காருண்யமாருதாநீதைச்சீதலைரபி ஷிஞ்ச மாம் ॥" என்று ப்ரார்த்திப்பதுதானும் மிகையாம்படி ஆச்ரிதர்திறத்திலே கடாக்ஷதாரைகள் ஸதா ப்ரஸரித்துக்கொண்டிறே பேரருளாளனுக்கிருப்பது. அதுதன்னை ஐந்து படியாக உபச்லோகிக்கிறாராய்த்து * விபவம் விவ்ருணோதீத்யாதியாலே. "ப்ருந்தாவநம் பகவதா க்ருஷ்ணேநாக்லிஷ்டகர்மணா ! சுபேந மநஸா த்யாதம் கவாம் வ்ருத்திமபீப்ஸதா ॥" என்று—எம்பெருமானுடைய மாநஸாநுத்யாநத்திற்குள்ள பெருமை அதுவானால், த்ருஷ்டிபாதத்தின் பெருமை * சொலப்புகில் வாயமுதம் பரக்குமே. [ஹே வரத ! ஏஷ தவ த்ருஷ்டிபாத: விபவம் விவ்ருணோதி] மாத்ருசரான க்ஷுத்ரர் பக்கலிலும் பள்ளமடையாகத் தானே ப்ரஸரியாநின்ற இந்த கடாக்ஷவீக்ஷணமானது நீயே உபயவிபூதிஸாம்ராஜ்ய துரந்தரனென்னு மிடத்தை விசதமாக்குகின்ற தென்கை. த்ருஷ்டிபாதம் விபவத்தை விசதமாக்குகையாவது—த்ருஷ்டிபாதம் பட்ட விடம் ஸார்வபௌமனாகும்படியாய் இருக்கை என்னவுமாம்.

[வீஸ்த்ருணீதே ருசம்] "கஞ்சைக்காய்ந்த கருவில்லி கடைக்கணென்னும் சிறைக்கோல்லால் நெஞ்சூடுருவ வேவுண்டு நிலையும் தளர்ந்து நைவேனை" என்கிறபடியே கடாக்ஷம் பட்டவாறே புரிந்து பார்த்து அழகுக்கிலக்காகி, ராமசரங்களுக்கு இலக்காளுரோபாதி பாடாற்றப்போகா திருக்குமிறே; "தாமரைக் கண்கள் கொண்டு ஈர்தியாலோ தகவிலே தகவிலையே நீ கண்ணா" இத்யாதி, சூர்ப்பணகை செவியும் மூக்குமறுப்புண்டு கதறியோடி அலமந்து முறையிடா நிற்கச் செய்தேயும் கண் வழியாக அழகிலே தோற்றவளாகையாலே "தருணௌ ரூபஸம்பந்நௌ ஸுகுமாரௌ மஹாபலௌ। புண்டரீக விசாலாக்ஷௌ" என்றிறே கதறினாள். திருமேனியிலே ப்ரவஹியாநின்ற திவ்யலாவண்யதரங்கிணீ தரங் கங்களடங்கலும் திருக்கண்ணோக்கிலே தொடை கொள்ளலாம்படியிறே பேருளாளன் ப்ரகாசிப்பது.

[ஆவிஷ்குருதே க்ருபாமபாராம்] 'உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ண' னிறே. க்ருபையில்லாத வன்று த்ருஷ்டிபாதத்திற்கு ப்ரஸக்திதானில்லையே. "காருண்யமாருதாநீதை:" என்றுரிறே ஆலவட்டமும் கையுமான அந்தரங்கர்.

[அபிவர்ஷதி ஹர்ஷம்] பரமாநந்தத்தைப் பெருக்காநின்றது. * வேர்த்துப் பசித்து வயி றசைந்து வேண்டடிசிலுண்ணும்போது ஈதென்று பார்த்திருந்து நெடு நோக்குக்கொள்ளுகிற போதை நெடுநோக்காலே பக்தவிலோசநத்தில் ருஷிபத்நிகளிலே ஒருத்தியை "தத்ரைகா வித்ருதா பர்த்ரா பகவந்தம் யதாச்ருதம், ஹ்ருதோபகூஹ்ய விஜஹௌ தேஹம் கர்மநிபந்தநம்" என்று ஸ்வவிஷயப்ரா- வண்யத்தாலே அப்போதேஸம்ஸாராந்முக்தையாம்படியாகவும், அல்லாதாரை க்ஷீண பாபராய் முக்த் யர்ஹராம்படி பரிசுத்தராகவும் பண்ணின ஸர்வேச்வரனுடைய கடாக்ஷம் ஆநந்த ஸந்தாயக மென்னு மிடத்தில் விப்ரதிபத்தியுண்டோ? "முக்திர்மோக்ஷோ மஹாநந்த:" என்னும்படியான மஹாநந்தத்தைக் கொடுக்கக் கடவது வெறும் ஆநந்தத்தைக் கொடுக்கமாட்டாதோ?

[ஆர்த்ரபாவம் தநுதே] கடைக் கண்ணோக்கம் பட்டவாறே கல்லும் கரையு மென்கிறது. (36)

अरुणाधरपल्लवे लसन्ती वरदासौ द्विजचन्द्रचन्द्रिका ते।
अधिविद्रुममस्तनिस्तलालीरुचमाविष्कुरुते हि पुष्कराक्ष ॥ ३७ ॥

அருணாதரபல்லவே லஸந்தீ வரதாஸௌ த்விஜசந்த்ரசந்த்ரிகா தே।
அதிவித்ருமமஸ்தநிஸ்தலாலீருசம், ஆவிஷ்குருதே ஹி புஷ்கராக்ஷ। 37 ॥

புஷ்கராக்ஷ	தாமரைக் கண்ணனே	த்விஜ சந்த்ர சந்த்ரிகா	சந்திரன் போன்ற திருமுத்துக் களின் ஒளியானது
ஹே வரத	வரம்தரும் பெருமானே!		
தே	உன்னுடைய	அதிவித்ருமம் அஸ்த நிஸ்தல ஆலீ ருசம்	பவழத்தின் மேலே வைக்கப்பட்ட முத்து வரிசையின் சோபையை
அருண அதர பல்லவே	சிவந்ததும் தளிர்போன்றதுமான திருவதரத்திலே		
லஸந்தீ	விளங்குகின்ற	ஆவிஷ்குருதே ஹி	வெளிப்படுத்துகின்றது போலும்.
அஸௌ	இந்த		

* * * "செக்கரிடை நுனிக்கொம்பில் தோன்றும் சிறுபிறை முளைப்போல், நக்க செந்துவர் வாய்த் திண்ணை மீதே நளிர் வெண்பல் முளையிலக" என்ற பெரியாழ்வார் திருமொழிக்கு ஒரு புடை ப்ரத்ய பிஜ்ஞாபகமாயிரா நின்றதாய்த்து இந்த ச்லோகம். "நாளிளந் திங்களைக் கோள்விடுத்து வேயகம்பால் வெண்ணெய் தொடுவுண்ட ஆனாயர் தாயவன்" "உறியார்ந்த நறு வெண்ணெய் ஒளியால் சென்று அங்குண்டானை" இத்யாதிப்படியே விபவாவதாரத்திலே காதாசித்கமாக ப்ரஸரிக்கக்கடவதான திருப் பவள நிலாவழகு பேருளாளனுடைய திருமுகமண்டலத்திலே அநவரதம் அதிசயிதமாய் விளங்குமிறே. அவ்வழகை அநுபவித்து இனியராகிறார். திருவாய்ப்பாடியில் உறிகளிலே கவ்யங்கள் சேமித்து வைத் திருக்கும்படியை அறிந்து * படலடைத்த சிறு குரம்பை நுழைந்து புக்குப் பசு வெண்ணெய் களவு காணப்போம்போது தன் நிறத்தினிருட்சியாலும் அவ்விடத்தினிருட்சியாலும் தெரியாமையாலே 'தடவா நிற்கச் செய்தே கையிலே வெண்ணெய்த் தாழிகளகப்பட்ட ஸந்தோஷத்தினால் வாய் மலர, அப்போது ப்ரஸரிக்கும் த்விஜசந்த்ர சந்த்ரிகையே கை விளக்காக அமுது செய்யும். கொண்டியிலே பிடியுண்டவாறே

கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டடியுண்டு அழுமாகையாலே திருப்பவள நிலவு அங்கே ஸக்ருத் ஸேவ்யமாயிருக்கும். திருவத்திமாமலையிலே போக்யமான திருமேனியை ஸேவிக்கையிலே யுண்டான ஆசாதிசயத்தாலே அநவரதம் பாகவதகோஷ்டிகள் திரளுகையாலே அவர்களைக் காணப் பெறுகையி லுண்டான களிப்புக்குக் காலோபாதியில்லாமையாலே நிரந்தரமாக ப்ரஸரியாநிற்கும் த்விஜசந்த்ர சந்த்ரிகை; அதிலே ஈடுபடுகிறார்.

உத்தரார்த்தம் உத்ப்ரேக்ஷையாய்ச் செல்லுகிறது. [அதிவித்ருமமித்யாதி] கொவ்வைக் கனிபோல் சிவந்த திருவதரத்தின் மேலே வெண்ணிறமான தந்தகாந்தி விளங்குகிறபடி எங்ஙனே யிராநின்றதென்றால்; பவழத்தின் மேலே முத்தை வைத்தால் எங்ஙனே சோபிக்குமோ அங்ஙனே விளங்காநின்ற தென்றபடி. ப்ரவாள ஸ்தாநத்திலே திருவதரமும், முக்தாபல ஸ்தாநத்திலே தந்தப்ரபையும்.

வித்ருமே-அதிவித்ருமம் இத்யவ்யயீபாவ:—'ஹரௌ' 'அதிஹரி' இதிவத். [அஸ்தநிஸ்தலாலீ ருசம்] 'அஸ்த' என்றது ந்யஸ்த என்றபடி. [நிஸ்தல] ஸம்ஸ்க்ருதநிகண்டுக்களில் முக்தா சப்தபர்யாய மாக நிஸ்தல சப்தம் உள்ளதாகத் தெரியவில்லை. 'வர்த்துலம் நிஸ்தலம் வ்ருத்தம்' என்று அமரஸிம்ஹ னும் 'நிஸ்தலம் வர்த்துலே சலே' என்று விச்வனும் இப்படியே பல நைகண்டுகர்களும் சொல்லிவைத்தார் கள். 'கண்டஸ்ய தஸ்யா: ஸ்தநபந்துரஸ்ய முக்தாகலாபஸ்ய ச நிஸ்தலஸ்ய' [குமாரஸம்பவே—1-42] என்று மஹாகவியும் வர்த்துலபர்யாயமாக ப்ரயோகிக்கக் காணாநின்றோம். ஆனால், தமிழில் 'நித்திலம்' என்றொரு சொல் முத்துக்கு வாசகமாக ப்ரஸித்தமாயிராநின்றது. சீவகசிந்தாமணி; மணிமேகலை முதலிய தமிழ்க்காவியங்களில் இச்சொல் விசேஷத: ப்ரயுக்தம். 'நின்றவூர் நித்திலத்தை' என்றும், 'நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை' என்றும், 'நித்திலங்கள் பௌவத்திரை யுலவு' என்றும் ஆழ்வார்களும் அருளிச் செய்துள்ளார்கள். ஒரு அரும்பதவுரைகாரர், 'நிஸ்தலம் என்னும் வடசொல் நித்திலமென்று திரிந்து கிடக்கிறது; முத்து என்றபடி. 'நிஸ்தலம் வர்த்துலே முக்தாபலே ச சபலேபி ச—இதி நிகண்டு:' என்றெழுதி வைத்திருக்கிறார். இனி வல்லார் வாய்க்கேட்டுணர்வது. (37)

स्मितनिर्झरिका विनिष्पतन्ती तव वक्षस्स्थलभूतले वि(की)शीर्णा ।
वरद प्रबिभर्ति हारलक्ष्मीम् अपि मुक्तावलिका नदीव तज्जा ॥ ३८ ॥

ஸ்மிதநிர்ஜ்ஜரிகா விநிஷ்பதந்தீ தவ வக்ஷஸ்ஸ்தலபூதலே விசீர்ணா ।
வரத ப்ரபிபர்த்தி ஹாரலக்ஷ்மீம் அபி முக்தாவலிகா நதீவ தஜ்ஜா ॥ 38 ॥

ஹே வரத	வரதனே !	ஹாரலக்ஷ்மீம்	ஸஹஸ்ரயஷ்டிக ஹாரசோபையை
விநிஷ்பதந்தீ	[முகமாகிற உந்நத ஸ்தாநத்தில் நின்றும்] விழாநின்ற	ப்ரபிபர்த்தி	அடைந்திடா நின்றது.
தவ ஸ்மிதநிர்ஜ்ஜரிகா வக்ஷஸ்ஸ்தல பூதலே	உன்னுடைய புன்முறுவலாகிற அருவியானது திருமார்பாகிற தரையிலே	முக்தாவலிகா அபி	ஏகாவலீ ஹாரமும்
		தஜ்ஜா	அந்த அருவியில் நின்றும் உண்டான
		நதீ இவ	ஆறுபோல்
விசீர்ணா[ஸதீ]	இறைந்ததாய்க்கொண்டு	[பாதி]	விளங்குகின்றது.

* * * அபிமதஜநதர்சநாநந்த வேகத்தாலே அர்ச்சாவதார ஸமாதியைக் கடந்து விம்மி வெளிவிழு கின்ற அவ்யக்த மதுர மந்தஹாஸ விலாஸந்தன்னையே மீண்டு மொருபடியாக உபச்லோகிக்கிறார். திருப் பவளமாகிற மேட்டுநிலத்தில் நின்றும் புன்முறுவலாகிற அருவியானது திருமார்பாகிற தரையிலே விழுந்து விப்ரகீர்ணமாய் அத் திருமார்புக்கு முக்தாஹாரமென்னலாம் படி விளங்குகின்றது, ஏற்கெனவே சாத்தி யுள்ள முக்தாவளியும் அந்த அருவியில் நின்றும் பெருகின ஒரு ஆறுபோலே விளங்குகின்ற தென்கிறார்.

வக்ஷஸ்தலத்திற் காட்டிலும் முகம் மேற்பட்டதாகையாலே அது ஒரு உன்னத ஸ்தானமாகவும், ஸ்மிதமானது ப்ரஸரணசீலத்தாலும் சுப்ரகாந்தியோகத்தாலும் நிர்ஜ்ஜரமாகவும், அந்த ஸ்மிதம் திருமேனி யில் விசகலிதமாக வ்யாபிப்பதானது உன்னத ப்ரதேசத்தில் நின்றும் தரையிலே அருவி விழுந்து சிதறுவ தாகவும் இங்ஙனே ரூபகப்ரக்ரியையிலே திருவுள்ளம்பற்றி அருளிச் செய்கிறபடி. இப்படி திருமார்பிலே சிதறிச் சிதறி வ்யாபியா நின்ற ஸ்மிதநிர்ஜ்ஜரமானது சதயஷ்டிகஸஹஸ்ரயஷ்டிக முக்தாஹாரம் சாத்தினாற்

ஹே ஹஸ்திநாத	ஓ கரிகிரி நாதனே !
உந்நஸம்	உந்நதமான நாஸிகையை யுடைய தாயும்
ஆயதாக்ஷம்	நீண்ட திருக்கண்களை யுடைய தாயும்
உத்யத் ஸ்மித தந்தம்	விம்மிவெளியெழுகின்ற புன்முறுவலையுடைய திருமுத்துகளை யுடையதாயும்
ருசிர அதரம்	அழகிய திருவதரத்தை யுடைய தாயும்
நத ப்ரு	வளைந்த திருப்புருவங்களை யுடைய தாயும்
லஸத் அம்ஸ விலம்பி கர்ண பாசம்	விளங்குன்ற தோள் வரை தொங்குகின்ற சிறந்த செவிகளை யுடைத்தாயு மிருக்கிற
தே முகம்	உனது திருமுக மண்டலமானது
மயி	அடியேன் விஷயத்திலே
நிச்சலம் அஸ்து	நீடித்திருக்கக் கடவது.

* * * "பரபாகமியாத்" என்னும் ச்லோகம் முதலாக இவ்வளவும் வர, திருமுக மண்டலத்திலுள்ள ஒவ்வொரு திவ்யாவயவந்தன்னையும் தனித்தனியே அநுபவித்து, இந்தச்லோகத்தாலே திருமுகத்தைப் பூர்ணமாக அநுபவிக்கிறார். ஆழ்வானுடைய சிந்தையாகிற பெண்ணானவள் இனிமேல் தேவாதிராஜனது கண்டாச்லேஷத்துக்குப் போகிறாளாகையால், நவோடையான பெண் பிறந்தகத்தில் நின்றும் புக்ககந்துக்குப் போம்போது ஜந்மபூமியிலுள்ள உறவு முறையாருள்ள விடமெங்கும் புக்கு அவர்களை உபலாலித்து வருமாபோலே தனக்கு சிரபரிசிதங்களான நயநநாஸிகாதி அவயவங்களை கண்டாச்லேஷ பூர்வாங்கமாக உபலாலநம் பண்ணி உகவாநின்றபடி.-என்று ஜீயாருளிச் செய்யும்படி. [தே முகம் மயி நிச்சலமஸ்து] " தூரீச்வரத்வாரபஹிர் விதர்திகாதுராஸிகாயை ரசிதோயமஞ்ஜலி: " என்று ப்ராக்ருதமுகாவலோகநத்தில் நசை யொழிந்து " இன்று யாம் வந்தோ மிரங்கு " என்று உன் கோயில் கடைத்தலைப்புகுந்த அடியேன் திறத்திலே உன்னுடைய திருமுக மண்டலம் எப்போதும் மாறுதே ஸேவைதந்தருள வேணுமென்கிறார். " வ்ருக்ஷே வ்ருக்ஷே ச பச்யாமி சீரக்ருஷ்ணாஜிநாம்பரம் " என்றபடி மாரீசனுக்கு எங்கும் இராமபிரானுடைய தோற்றமேயாயிருந்தாற்போலே இவர் தமக்கும் பேரருளாளனுடைய திருமுகமண்டலமே இடைவிடாது முன்னின்று தோற்றவேணுமென்று ஆசை யிருக்கிறபடி. (40)

पद्मायाः प्रणयरसात् समासजन्त्याः स्वं बाहुं सुबहुमतो भुजेन तेन ।
कां नामान्वभवदहो दशां तदात्वे कण्ठस्ते करिगिरिनाथ कम्बुकान्तः ॥ ४१ ॥

பத்மாயா: ப்ரணயரஸாத் ஸமாஸஜந்த்யா: ஸ்வம் பாஹும் ஸுபஹுமதோ புஜேந தேந ।
காம் நாமாந்வபவதஹோ தசாம் ததாத்வே கண்டஸ் தே கரிகிரிநாத! கம்புகாந்த: ॥ 41 ॥

ஹே கரிகிரிநாத !	திருவத்திமலைத் தலைவனே !
கம்பு காந்த:	சங்கம் போலழகிய
தே கண்ட :	உன்னுடைய திருக்கழுத்தானது
ப்ரணயரஸாத்	ப்ரீதிரஸத்தாலே
தேந புஜேந ஸ்வம்பாஹும் ஸமாஸ ஜந்த்யா:	அப்படிப்பட்ட [உனது] புஜத்தோடே தன்னுடைய புஜத்தைத் தழுவி முழுசா நின்ற
பத்மாயா:	பிராட்டிக்கு
ஸுபஹுமதஸ் ஸந்	மிகவும் பஹுமான பாத்ரமாய்க் கொண்டு
ததாத்வே	அக்காலத்தில்
காம் நாம தசாம்	என்ன அவஸ்தையை
அந்வபவத்	அநுபவித்ததோ !
அஹோ	அந்தோ !

* * * இனித் திருமுக மண்டலத்திற்குக் கீழே நோக்குகிறார். திருக்கழுத்திலே ஊன்றுகிறாராய்ச் செல்லுகிறது இந்த ச்லோகம். பேரருளாளனுடைய திருக்கழுத்தானது * க்ரமுகதருணக்ரீவை போலவும் சங்கம் போலவும் ரேகாத்ரயவிபக்தாங்கமாயிருக்கும். அந்த ரேகைகளைக் கண்ட வாறே 'ப்ரணய விலகல்லக்ஷ்மீ விச்வம்பராகரகந்தலீகனக வலயக்ரீடாஸம்க்ராந்தரேக இவோல்லஸந்' என்றுப் போலே கண்டாச்லேஷ தத்பரையான பிராட்டியின் திருக்கைகளிலணிந்துள்ள கனகவலயங்கள் திருக்கழுத்

த்வதீயாः புஜபரிகாः ஸாயாமாः	உழல் தடிபோன்ற உனது புஜங்களானவை நீட்சியோடு கூடி
த்ருதபரிணத் தயः	சுற்றுப் பரப்புடைத்தான
அப்தயோ வா	கடல்போலவோ
அத	அன்றி
தாத்ருச்யः	அத்தனை நீட்சியும் சுற்றுப்பரப்பு முடைய
சதஸ்ரோ திசோ வா	நான்கு திசைகள் போலவோ
பாஸந்தே	விளங்காநின்றன.
ஸ்புடம்	[உத்ப்ரேக்ஷாஸமுச்சயமவ்யயம்]:

* * * பேரருளாளனுடைய புஜங்களிலே ஈடுபடுகிறார். 'பாஹுச்சாயாமவஷ்டப்தோ யஸ்ய லோகோ மஹாத்மநः'—என்கிறபடியே இவன்தோள் நிழலிலே ஒதுங்கினவர்களுக்கு மதிளுக்குள்ளே யிருப்பார்க்குப் போலே பயம் கெட்டிருக்கலாம்படியும், ஸப்த லோக ப்ரஜைகளும் இத்தோள் நிழலிலே ஒதுங்கினாலும் அவ்வளவேயன்றிக்கே இன்னும் சதகுணித ஸப்த லோகங்களுண்டானாலும் அவற்றுக்கும் இடம்போரு மென்னும்படி ஒதுங்கினவர்கள் சுருங்கி நிழலே விஞ்சி விசாலதமங்களா யிருக்கும்படியும் பற்ற, திசைகளையும் கடல்களையும் ஒப்புச்சொல்ல ஒருப்படுகிறார்.

[ஹே வரத ! தமாலநீலாः வரப்ரதாः சத்வாரः த்வதீயாः புஜபரிகாः ஸாயாமாः த்ருதபரிணத்தயः அப்தயோ வா பாஸந்தே] * அலம்புரிந்த நெடுந்தடக்கை அமரர் வேந்தனிறே பேரருளாளன். அர்த்திகள் 'அலம் அலம்' என்னும்படியாய்; புறம்பொருவர் வாசலிலே செல்ல வேண்டாதபடி பர்யாப்தமாகக் கொடுத்து நீண்டதிருக்கைகளிறே.

[தமாலநீலாः] "கற்பகக்காவன நற்பலதோளன்" என்றபடி பச்சிலைக் காடு பரந்தாற் போலேயிறே திருத்தோள்கள் விளங்குகிறபடி. தாபார்த்தர் தமாலச் சாயையிலே ஒதுங்கி விடாய் கெடுமாபோலே தாபத்ரயாதுரர் இத்தோள் நிழலிலே யொதுங்கியிறே விடாய் தீருவது. [புஜபரிகாः] புஜாः பரிகா இவ புஜபரிகாः; பரிகமாவது உழல்தடி. ஆச்ரிதர்களுக்கு அஞ்ச வொண்ணாதபடி ரக்ஷணத் துக்கு ஶத்ருத பரிகரமாயிருக்கையாலே புஜங்களை அர்க்கலமாக அருளிச் செய்தபடி. இப்படிப்பட்ட புஜங்கள் கடல்போல் விளங்குகின்றன வென்றது நீளத்தையும் சுற்றுடைமையையும் நைல்யத்தையும் ச்ரமஹரத்வத்தையும் வதுஸ்ஸங்க்யத்வத்தையும் பற்ற. [ஸாயாமாः] ஆயாமமாவது தைர்க்யம்; * தைர்க்ய மாயாம ஆநாஹः * இத்யமரः ஆயாமேந ஸஹிதாः ஸாயாமாः. [த்ருதபரிணத்தயः] பரிணத்தியாவது பரிணாஹம். 'பரிணாஹோ விசாலதா' இத்யமரः। 'பரி' என்னும் உபஸர்க்கபூர்வகமான ணஹதாது கஞந்தமானால் 'பரிணாஹः' என்றும். க்திந்ப்ரத்யாந்தமானால் 'பரிணத்திः' என்றும். த்ருதா பரிணத்திः யைः தே - த்ருதபரிணத்தயः। ஆக இவ்விரண்டு விசேஷணங்களாலும் ஸமுத்ரங்களின் அகல நீளமுடைமை சொல்லப்பட்டது. 'அப்தயோ வா' என்ற விடத்தில் வாகாரம் இவார்த்தகம்; * உபமாயாம் விகல்பே வா * இத்யமரः.

இங்ஙனே புஜங்களுக்கு ஸமுத்ரங்களை ஒப்புச் சொன்னவிதிலும் த்ருப்திபெறாதே மற்றொரு த்ருஷ்டாந்தமருளிச் செய்கிறார். [அத தாத்ருச்யः சதஸ்ரः திசோ வா பாஸந்தே] தாத்ருச்யः என்றது 'ஸாயாமாः த்ருதபரிணத்தய' என்று கீழே அப்திக்குச் சொன்ன விசேஷணத்வயம் இங்கும் அநுஷங்கம் பண்ணிக்கொள்ள வேணுமென்று தெரிவித்தபடி. அகலமும் நீளமும் அளவிறந்து கிடக்கிற நால்-திசைகள் போலே உன்னுடைய புஜங்கள் விளங்குகின்றன வென்றபடி. ஸமுத்ரங்களின் அகல நீளங்க ளுக்காகிலும் ஓரளவிலே விச்சித்தியுண்டு. திக்குக்களின் விஸ்தாரம் அங்ஙனல்லவிறே. ... (42)

आश्लेषे वरद भुजास्तवेन्दिरायाः गोपीनामभिमतरासबन्धने वा ।
बन्धे वा मुदमधिकां यशोदयाहो संप्राप्तास्तव नवनीतमोषदोषात् ॥ ४३ ॥

ஆச்லேஷே வரத புஜாஸ் தவேந்திராயாः கோபீநாமபிமதராஸபந்தநே வா ।
பந்தே வா முதமதிகாம் யசோதயாஹோ ஸம்ப்ராப்தாஸ்தவ நவநீதமோஷதோஷாத் ॥ 43 ॥

ஹே வரத	வரதனே !
தவ புஜாஃ	உன்னுடைய புஜங்கள்
இந்திராயாஃ ஆச்லேஷேவா	பிராட்டியின் ஆலிங்கனத்திலேயோ
கோபீநாம் அபிமதராஸ பந்தநே வா	ஆய்ச்சிகளுக்கு அபிமதமாகத் திருக்குரவை கோத்ததிலேயோ
ஆஹோ	அல்லது
நவநீத மோஷ தோஷாத்	வெண்ணெய் களவு கண்ட குற்றத்திற்காக
யசோதயா	யசோதையினல்
பந்தே வா	கட்டுண்டதிலேயோ
அதிகாம் முதம்	அதிகமான மகிழ்ச்சியை
ஸம்ப்ராப்தாஃ	அடைந்தன ?.

* * * மீண்டும் அந்த புஜங்களிலேயே ஈடுபட்டுப் பேசுகிறார். இந்த புஜங்கள் நிஸ்ஸீமமாக வளர்ந் திருக்கைக்கடி ஸந்தோஷமாக வேணும். ஸந்தோஷமுண்டானல் சிறிய வடிவும் பெரிய வடிவமாகப் பரிண மியா நின்றதிறே. பரமபுருஷனும் மஹாபலி பக்கலிலே சென்று மூவடியிரக்க, மாவலி தாரை வார்த்து தத்தம் பண்ணினவாறே 'அபிமதலாபம் கிடைக்கப்பெற்றோம்' என்னும் ஆனந்தமே விளைகாகவிறே "மந்தரமீது போகி மதி நின்றிறைஞ்ச மலரோன் வணங்க வளர்சேர், அந்தர மேழினூடு செலவுய்த்த பாதம்" என்னும்படி ஓங்கி வளர்ந்தது. அப்படி போலே இந்த புஜ வ்ருத்திக்கு ஹேது ஏதேனுமொரு ஸந்தோஷமே யாகவேணுமென்று அறுதியிட்டு அந்த ஸந்தோஷந்தனக்குப் பல ஹேதுக்களுளவா கையால் "இந்த ஹேதுவா, அந்த ஹேதுவா ? எந்த ஹேது ?" என்று பேரருளாளனை நோக்கி ப்ரச்நம் பண்ணுகிறார்.

பூர்வார்த்தத்தில் இரண்டு ஹேதுக்களும், உத்தரார்த்தத்தில் ஒரு ஹேதுவும் ஆக மூன்று ஹேதுக்களை அருளிச்செய்து, இவற்றில் எந்த ஹேது வடியாக உன்னுடைய புஜங்கள் ஸந்தோஷ மடைந்தனவென்று வினவுகின்றார்.

ஹே வரத! தவ புஜாஃ இந்திராயாஃ ஆச்லேஷே அதிகாம் முதம் ஸம்ப்ராப்தா வா ? (உத) கோபீநாம் அபிமதராஸபந்தனே அதிகாம் முதம் ஸம்ப்ராப்தா வா ? ஆஹோ தவ நவநீதமோஷதோஷாத் (ப்ராப்தே) யசோதயா தாமபிஃ க்ருதே பந்தே அதிகாம் முதம் ஸம்ப்ராப்தா வா ?] என்று ப்ரச்நத்ரய மிருக்கிறபடி. "மேற்குறித்த மூன்று அவஸரங்களிலுமே ஆனந்த முண்டாயிற்று" என்று லகுவாகத் தானே மறுமாற்றம் சொல்லிவிட வொண்ணுதபடி அதிகாம் என்று விசேஷணமிடுகிறார். மூன்று அவஸரங் களிலும் ஆனந்த முண்டாயிற்றென்னுமிடம் நானறிவேன் ; இவற்றுள் எந்த அவஸரத்திலுண்டான ஆனந்தம் அதிகம் ? என்பதே யாய்ந்து இப்போது நான் கேட்டது ; இதுதன்னை ஆராய்ந்து விடை யளிப்பாய் என்கிறார். ஆக; பத்மாபரிஷ்வங்கம், ராஸபந்தனம், தாமபந்தனம் என்ற மூன்றவஸரங்களுள் உன்னுடைய புஜங்களுக்கு அளவிறந்த ஆநந்தமுண்டாகியது எந்த அவஸரத்திலே சொல்லா யென்றாராயிற்று. (43)

सालीया इव विटपास्सपल्लवाग्राः कल्लोला इव जलधेस्सविद्रुमाग्राः ।
भोगीन्द्रा इव च फणामणीद्धवक्त्राः भासन्ते वरद भुजास्तवारुणाग्राः ॥ ४४ ॥

ஸாலீயா இவ விடபாஸ் ஸபல்லவாக்ராஃ கல்லோலா இவ ஜலதேஸ் ஸவித்ருமாக்ராஃ ।
போகீந்த்ரா இவ ச பணாமணீத்தவக்த்ராஃ பாஸந்தே வரத புஜாஸ் தவாருணாக்ராஃ ॥ 44 ॥

ஹே வரத !	ஓ வரதனே !
அருணாக்ராஃ	சிவந்த நுனிகளையுடைய [சிவந்த திருவிரல்களையுடைய]
தவ புஜாஃ	உன்னுடைய புஜங்கள்
ஸபல்லவாக்ராஃ	தளிரோடு கூடிய நுனிகளையுடைத்தான
ஸாலீயாஃ	ஸாலவ்ருக்ஷத்தினுடையதான
விடபா இவ	கிளைகள் போலவும்
ஸவித்ருமாக்ராஃ	பவழங்களோடு கூடிய நுனிகளையுடைய
ஜலதேஃ	கடலினுடைய
கல்லோலா இவ	பெரிய அலைகள் போலவும்
பணாமணீத்த வக்த்ராஃ	படங்களினுடைய மணிகளால் ப்ரகாசிக்கின்ற முகங்களையுடைய

ரிங்காதோ வ்ரஜஸதநாங்கணேஷு கிம் தே கோயஷ்டிக்ரஹணவசாந்நு கோபகோஷ்ட்யாம்
ஆலம்பாத்தயநய ஸூத்ரதோத்ரயோர் வா பாணீநாம் வரத தவாருணத்வமாஸீத் ॥ 46 ॥

ஹே வரத — வரதனே !
வ்ரஜ ஸதந அங்கணேஷு — திருவாய்ப்பாடியிலுள்ள மனைகளின் முற்றங்களில்
ரிங்காதஃ கிம் — தவழ்ந்து விளையாடினதாலேயோ
கோப கோஷ்ட்யாம் — ஆயர்களின் திரளிலே
கோயஷ்டி க்ரஹண வசாந்நு — பசுக்களை மேய்க்கும் கோல்களைப் பிடித்ததனுலேயோ
ஹயநயஸூத்ர தோத்ரயோஃ ஆலம்பாத்வா — பார்த்தஸாரதியாயிருந்தபோது தேர்க் குதிரைகளைசிக்ஷித்து நடத்தும் கருவிகளாயிருந்த கடிவாளத்தையும் சாட்டையையும் பிடித்ததனுலேயோ
தவ பாணீநாம் — உனது திருக்கைகளுக்கு
அருணத்வம் ஆஸீத் — சிவப்புஉண்டாயிற்று?

* * * பேரருளாளனுடைய திருக்கைகளின் ஸ்வாபாவிகமான ஆருண்யத்திற்கு ஹேதுப்ரச்நம் பண்ணுகிருர். திருவாய்ப்பாடியில் ஆயர் மனைகள் தோறும் "தன் முகத்துச் சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்துபோய், பொன்முகக் கிண்கிணியார்ப்பப் புழுதியளைகின்ருன்" என்றும் "தண்ணந் தாமரைக்கண்ணனே கண்ணு! தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர் நடையால் மண்ணில் செம்பொடியாடிவந்து" என்றும் அருளிச்செய்தபடியே தவழ்ந்து விளையாடினபோது திருக்கைத்தலங்களைத் தரையிலே ஊன்றினமையாலே இவை சிவந்தனவோ ? அன்றியே * வேலிக்கோல் வெட்டியிலே யசோதையானவள் காக்கையை நோக்கி "காலிப்பின் போவாற் கோர் கோல் கொண்டுவா" கன்றுகள் மேய்ப்பதோர் கோல் கொண்டுவா" என்று பல காலும் வேண்டினபடியே அது கொண்டு கொடுத்த கோலைத் திருக்கையிலே தாங்கியிருப்பனிறே கண்ணபிரான்! "கோலால் நிரைமேய்த்து ஆயனுய்" என்றும் "கோலால் நிரைமேய்த்தவெம் கோவலர் கோவே" என்றும் அருளிச் செய்தார்களிறே. "லீலாயஷ்டிம் கரகிஸலயே தக்ஷிணேந்யஸ்ய தன்யாம்" என்றிறே வேதாந்த வாசிரியரும் அநுபவித்துப் பேசியது. அந்த கோயஷ்டியைப் பிடித்ததனுலே திருக்கைகள் சிவந்தனவோ ?

அன்றிக்கே, * பாரதத்துத்தேரில் பாகனுயூர்ந்தபோது "பற்றலர்வீயக் கோல் கையில் கொண்டு பார்த்தன் தன் தேர்முன் நின்ருனை" என்றபடி கசையும் கடிவாளமும் பற்றினமையாலே சிவந்தனவோ ? ஹயநயஸூத்ரமாவது—ஹயாநாம் (அச்வாநாம்) நயஃ-நயநம், சிக்ஷித்து நடத்துகை, அதுக்கு உபயுக்தமான ஸூத்ரம்—கடிவாளம்போன்றதொரு கயிறு. தோத்ரமாவது "தோத்ரம் ஸ்யாத்வ்ருஷபாச்வாதிப்ரேரணேசிததண்டகஃ" என்ற நிகண்டுவின்படி குதிரையைச் செலுத்துவதற்குரிய கருவியாகிற சாட்டை; இவையிரண்டும் பார்த்தஸாரதியாயிருந்த காலத்திலே கண்ணபிரானுடைய திருக்கையிலே யிருந்தனவாம்.

ரிங்கா—இரண்டு கைத்தலங்களையும் தரையிலே யூன்றி முழந்தாள்களாலே தவழ்ந்து செல்லுகைக்கு 'ரிங்கா' என்றும் ரிங்கணம்' என்றும் பெயர். 'ரிகி-கதௌ' இத்யேகே। பாலாநாம் ஹஸ்தபாதகமநம் ரிங்கா என்ருன் ஜீவாநந்தன். (46)

सर्वज्ञास्समुचितशक्तयस्सदैव त्वत्सेवानियमजुषस्त्वदेकभोगाः।
हेतीनामधिपतयस्सदा किमेतान् शोभार्थं वरद बिभर्षि हर्षतो वा ॥ ४७ ॥

ஸர்வஜ்ஞாஸ் ஸமுசிதசக்தயஸ் ஸதைவ த்வத்ஸேவாநியமஜுஷஸ் த்வதேகபோகாஃ ।
ஹேதீநாமதிபதயஸ் ஸதா கிமேதாந் சோபார்த்தம் வரத பிபர்ஷி ஹர்ஷதோ வா ॥ 47 ॥

ஹே வரத ! — பேரருளாளனே !
ஹேதீநாம் அதிபதயஃ — ஆயுதத் தலைவர்களான சங்க சக்ராதிகள்
ஸர்வஜ்ஞாஃ — ஸர்வஜ்ஞர்களாயும்
ஸமுசித சக்தயஃ — அந்தஜ்ஞானத்துக்கு ஏற்ற சக்தியுள்ளவர்களாயும்
த்வதேக போகாஃ — அநந்யபோகர்களாயும் [அத ஏவ]

ஸதைவ	எப்போதுமே	சோபார்த்தம் வா	அழகுக்காகவோ
த்வத்ஸேவா நியமஜுஷ꞉	உன்னைஸேவித்துக் கொண்டிருப்பதிலே நையத்யமுடையவர்களாயும்	ஹர்ஷதோவா	ஸந்தோஷத்தினுலோ
[ஸந்தி]	இருக்கிறார்கள் ;	ஸதா	எப்போதும்
ஏதாந்	இப்படிப்பட்டவர்களை	பிபர்ஷி	வஹித்துக்கொண்டிருக்கிறாய் ?

* * * திவ்யாயுதாழ்வார்களுடைய சேர்த்தியழகை யநுபவித்து, அவ்வநுபவ பரீவாஹமாக வொரு ப்ரச்நம் பண்ணுகிறார். ஹேதீநாமதிபதிகளாகிறார் "ரதாங்கசங்காஸிகதாதனுர்வரை꞉" என்னப்பட்ட திருவாழியாழ்வான், ஸ்ரீபாஞ்சஜந்யம், ஸ்ரீநந்தகம், ஸ்ரீகௌமோதகீ, ஸ்ரீசார்ங்கம்என்கிற பஞ்சாயுதாழ்வார்கள். இவர்களுக்கு ஆயுத கோடியிலும் ஆபரண கோடியிலும் பரிகணநமுண்டிறே. ஆயுதத்வாகாரேண இவ்வாழ்வார்களுக்கு தாரணம் அநாவச்யகமாகையாலே ஆபரணத்வேந தாரணமேயாயிருக்க வடுக்குமென்று திருவுள்ளம் பற்றி அதுதன்னை ப்ரச்நவ்யாஜேந வெளியிட்டருளுகிறா ராய்த்து.

[ஸர்வஜ்ஞாஸ் ஸமுசிதசக்தய꞉] எம்பெருமானுடைய ஜ்ஞானசக்திகளுக்குக் குறையுண்டாகிலிறே திவ்யாயுதாழ்வார்களுடைய ஜ்ஞாந சக்திகளுக்குக் குறையுண்டாக ப்ரஸக்தி தானுள்ளது. * தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையே யொக்க அருள்செய்யுமவனிறே அமரர்தலைவன் ; எம்பெருமானுடைய ஹிதங்களை நன்கு அறிகைக்கீடான ஸர்வதோமுக ஜ்ஞான பௌஷ்கல்யத்தையுடையவர்களாயும், அறிந்து தலைக்கட்டவல்ல சக்திபூர்த்தியை யுடையவர்களாயு மிருக்கும் படியைச் சொல்லுகிறது.

[ஸதைவ த்வத்ஸேவாநியமஜுஷ꞉] எப்போதும் உனக்கு அத்தாணிச் சேவகம் செய்வதையே விரதமாகக் கொண்டவர்களாயுமிறே அவர்களிருப்பது. [த்வதேகபோகா꞉] உன்னையே ஸர்வவித போக்ய வர்க்கமுமாகக் கொண்டவர்களாகையாலே ஒரு நொடிப்பொழுதும் உன்னைவிட்டு அகன்றிருக்க மாட்டா தவர்களென்றபடி.

[ஏதாந் ஸதா பிபர்ஷி ; (எதத்) கிம் சோபார்த்தம் ? (உத) ஹர்ஷதோ வா ?] இப்படிப்பட்ட பஞ்சாயுதாழ்வார்களை நீ ஒரு நொடிப்பொழுதும் விடாமல் ஏந்திக் கொண்டிருக்கைக்குக் காரணமில்லை, ஏனெனில் ; இவர்கள் ஸர்வஜ்ஞர்களாயும் ஸமுசித சக்திகளாயு மிருக்கையாலே நீ ஏவிக் காரியம் கொள்ள வேண்டாதபடி உன்றன் திருவுள்ளக் கருத்தறிந்து வேண்டிற்றுச் செய்து தலைக்கட்டவல்லவர்கள்; 'இவர்களை நாம் விடாமல் கையிலே ஏந்திக்கொண்டிராவிடில் இவர்கள் ஸ்வார்த்த பரதயா எங்கேனும் அகன்று போய்விடக்கூடும்' என்று சங்கிக்கவுமிடமில்லாதபடி இவர்கள் த்வதேகபோகர்களாயும் த்வத்ஸேவாநியதர்களாயு மிராநின்றார்கள். ஆகையாலே இவர்களை நீ திருக்கையிலேந்திக் கொண்டிருக்கை நிஷ்ப்ரயோஜனம் ; ஆயிருக்கச் செய்தேயும் நீ இவர்களை ஏந்திக்கொண்டிருக்கை வ்ருதா பரிச்ரமமாயிராதிறே; ஏதாகிலுமொரு சிறந்த ப்ரயோஜன மிருக்கவேணுமே. மாணிக்ய மந்திரத்திற்கு மங்களார்த்தமாக மணிவிளக்கேற்றுமா போலே கேவலம் சோபார்த்தமாகவே இவர்களை ஏந்தியிராநின்றாய்போலும். அன்றிக்கே அத்தாணிச் சேவகரை உகப்பின் மிகுதியாலே கடக்கவிட்டிருக்கமாட்டாத அரசர்கள் அவர்களை அநவரதம் அணைந்துகொண்டு தரித்திருக்குமாபோலே இவ்வாழ்வார்களுடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வ சக்தித்வாத்யநுஸந்தான ஜநித ஹர்ஷப்ரகர்ஷத்தால்தான் நீ இவர்களை விடமாட்டாதே தரியாநின்றாயோ ?

"சோபார்த்தம்" என்பதற்கு "ஸ்வகீயசோபார்த்தம்" என்று பொருள்கொள்ளாதே 'ஆபரணத்துக்கழகு கொடுக்கும் பெருமாள், என்னுமாபோலே பஞ்சாயுதாழ்வார்களுக்கு சோபையை விளைப்பதற்காக' என்று பொருள் கொள்வதும் பொருந்தும். அவ்வோ வஸ்துக்கள் மிகச் சிறந்தவையாயிருந்தாலும் வகுத்த ஸ்தானத்திலே இராதவன்று அழகை யிழக்கு மத்தனையிறே. அப்படியாகாமே இவ்வாழ்வார்களைத் தம் பக்கலிலே அமைத்துக்கொண்டு அவர்களுக்கு அழகு கொடுக்கிறாயோ வென்கை. (47)

किं धातुर्गगनविधानमातृकाऽभूत् वक्षस्ते वरद वरेण्य यत्र नाम ।
पद्माया मुखमथ कौस्तुभश्च जातौ चन्द्रार्कावुडुनिकरायते तु हार: ॥ ४८॥

கிம் தாதுர் ககநவிதாநமாத்ருகாபூத் வக்ஷிஸ் தே வரத வரேண்ய யத்ர நாம !
பத்மாயா முகமத கௌஸ்துபச்ச ஜாதௌ சந்த்ரார்க்காவுடுநிகராயதே து ஹாரः ॥ 48 ॥

ஹே வரத வரேண்ய	வரமளிக்கும் தேவர்களில் சிறந்த வரதராஜனே !	ஹாரஸ் து	முக்தாஹாரமோவென்றால்
யத்ர வக்ஷஸி	யாதொரு திருமார்பில்	உடுநிகராயதே	நக்ஷத்ரஸமூகம்போன்றதோ,
பத்மாயா:முகம்	பிராட்டியின் திருமுகமும்	[ததிதம்]	அப்படிப்பட்ட இந்த
அத கௌஸ்துபச் ச	கௌஸ்துப மணியும்	தே வக்ஷः	உனது திருமார்பானது
சந்த்ரார்க்கௌ	சந்த்ரஸூர்யர்களாக	தாதுः	ப்ரஹ்மாவுக்கு
ஜாதௌ	ஆயினவோ,	ககந விதாந மாத்ருகா அபூத் கிம்	ஆகாசமென்றொருபூதத்தைஸ்ருஷ்டிப்பதற்கு மூலநிதர்சநமாக ஆயிற்றோ !

* * * "உய்யவுலகு படைக்கவேண்டி உந்தியில் தோற்றினாய் நான்முகனை" என்றபடி அனைத்தையும் படைப்பதற்காகத் திருநாபிகமலத்தினின்றும் உன்னாலே தோற்றுவிக்கப்பட்ட சதுர்முகன் ஆகாசத்தை ஸ்ருஷ்டிப்பதற்கு நீ உன்னுடைய திருமார்பையே மாத்ருகையாகக் காட்டித் தந்தாயோ வென்கிறார்.

ஒன்றைப் பார்த்து ஒன்றை நிருமிக்குமிடத்தில் பூர்வவர்த்தியான வஸ்துவுக்கு **மாத்ருகை** யென்று பெயர். மாத்ருகைக்கு ப்ரதிஸம்பந்தியானது **புத்ரிகை** யெனப்படும். ஆகாச ஸ்ருஷ்டிக்குப் பேரருளாளனுடைய திருமார்வு **மாத்ருகை** யென்றது, திருமார்பைப்பார்த்து ஆகாசம் ஸ்ருஷ்டிக்கப்பட்டதென்றபடி. ககநமாகிற புத்ரிகைக்குத் திருமார்பு மாத்ருகையானால் இரண்டிற்கும் ஸாதர்ம்யம் இருக்கவேணுமே யென்னில், உத்தரார்த்தத்திலே அந்த ஸாதர்ம்யம் உபபாதிக்கப்படுகிறது. * அகலகில்லேனிறையு மென்று அலர்மேல் மங்கை யுறைமார்பனாகையாலே இடைவிடாது திருமார்பிலே யெழுந்தருளியிரா நின்ற பிராட்டியின் திருமுகமண்டலம் சந்திரன் பொலவும், * குருமாமணிப் பூண் குலாவித் திகழும் திருமார்பாகையாலே தள தள வென்று திகழாநின்ற ஸ்ரீகௌஸ்துபமானது ஸூர்யன் போலவும், முக்தாஹாரமானது நக்ஷத்ர கணங்கள் பொலவும் இருக்கும்படியைச் சொல்லிற்று. ஆக இந்த ச்லோகத்தால் பேரருளாளனுடைய திருமார்பின் வைசால்யமும் நைர்மல்யமும் அருளிச்செய்யப்பட்டதாய்த்து. ... (48)

अण्डानां त्वदुदरमामनन्ति सन्तः स्थानं तद्वरद कथं नु कार्श्यमस्य ।
माहात्म्यं स्वत इह येषु नूनमेषाम् ऋद्धिस्स्यान्महिमकरी न हीतरेषाम् ॥ ४९ ॥

அண்டாநாம் த்வதுதரமாமநந்தி ஸந்தः ஸ்தாநம் தத் வரத கதம் நு கார்ச்யமஸ்ய ।
மாஹாத்ம்யம் ஸ்வத இஹ யேஷு நூநமேஷாம் ருத்திஸ் ஸ்யாந்மஹிமகரீ ந ஹீதரேஷாம் ॥ 49 ॥

ஹே வரத !	ஓ வரதனே !	இஹ	இவ்வுலகில்
த்வதுதரம்	உனது திருவயிற்றை	யேஷு	எந்த வஸ்துக்களில்
அண்டாநாம்	அண்டங்களனைத்துக்கும்	மாஹாத்ம்யம்	பெருமையானது
ஸ்தாநம்	இருப்பிடமாக	ஸ்வதः	ஸ்வதஸ்ஸித்தமோ
ஸந்தः	[பராசராதி] ப்ரஹ்மவித்துக்கள்	ஏஷாம்	இந்த வஸ்துக்களுக்குத்தான்
ஆமநந்தி	இயம்புகின்றனர்.	ருத்திः	[உண்டாகிற] ஸம்ருத்தியானது
தத்	அப்படியிருக்க	மஹிமகரீ	பெருமையை விளைக்கவற்று ;
அஸ்ய	இந்தத் திருவயிற்றுக்கு	இதரேஷாம்	(இயற்கையான பெருமையில்லாத) மற்ற வஸ்துக்களுக்கு [உண்டாகிற]
கார்ச்யம்	மெலிவானது		
கதம் நு	எங்ஙனேயோ ! [என்று சங்கித்துத் தாமே ஸமாஹிதராகிறார்]	ருத்திः	ஸம்ருத்தியானது

மஹிமகரீ ந ஹி { பெருமையை விளைவிக்க வல்ல தன்று. | நூநம் இது திண்ணம்.

* * * பேரருளாளனுடைய திருவுதரத்தின் கார்ச்யத்தை சங்கா ஸமாதான முத்ரையாலே அருளிச் செய்கிறார்.

பேரருளாளனே! நீ * அண்டரண்ட பகிரண்டத் தொருமாநில மெழுமால்[வரை முற்று முண்டவனாகையாலே உன் திருவயிற்றிலே எத்தனையோ அண்டங்கள் கிடப்பதாகவிறே பராசரபாராசர்யாதி மஹர்ஷிகள் சொல்லியிராநின்றார்கள். அப்படியிருக்க இத்திருவுதரம் பெருத்தன்றோ விளங்கவேணும் உண்டதுருக்காட்டாதே சிறுத்துக் கிடப்பானேன்? என்று பூர்வார்த்தத்தாலே சங்கித்தபடி.

ஸ்வகீயசங்கையை ச்லேஷபங்கியாலே ஸ்வயமேவ பரிஹரித்துக் கொள்ளுகிறார். எந்த வஸ்துக்கள் ஸ்வதஸ்ஸித்தமான மாஹாத்ம்யத்தை யுடையனவோ அந்த வஸ்துக்களுக்கு உண்டாகிற ஸம்ருத்திதான் அவற்றுக்கு ஒரு பெருமையை விளைக்கக் கடவதாம்; ஸ்வதஸ்ஸித்தமாஹாத்ம்ய சூந்யமாய் அத ஏவ ஸ்வதோ லகுவான பதார்த்தங்களுக்கு ஸம்ருத்தி யுண்டானாலும் அதனால் ஒரு பெருமையும் விளையாது காண் என்றபடி.

இங்கே "மாஹாத்ம்யம்" என்கிற பதத்திற்கு இரண்டர்த்தம். உலகிலே ஆகாரப்ரயுக்தமான மஹத்த்வமென்ன, குணப்ரயுக்தமான மஹத்த்வமென்ன ஆக இவ்விரண்டு வகையான மஹத்த்வத்தையும் விவக்ஷித்து "மஹான்" என்று வ்யபதேசிப்பதுண்டு. பெரும் பெரிய மலைகள் வீடுகள் ஆறுகள் முதலிய உருவிற்பெரிய வஸ்துக்களை மஹச்சப்தத்தாலே வ்யவஹரிப்பது போலவே மேலான குணங்கள் படைத்த மஹாநுபாவர்களையும் மஹான்களென்கிறோம். அவர்கள் உருவத்தில் பெருமையுடையவர்களல்லாவிடினும் ["சிறுமாமனிசர்" என்கிறபடியே] பெருங்குணங்கள் படைத்திருப்பது பற்றியே அவர்களைப் பெரியோர்களென்கிறோம் அந்தப் பெருமையானது நேராக அவர்களிடத்திலே இல்லாவிடினும் குணங்கள் வழியாக இருப்பது பற்றி மஹச்சப்தேந வ்யபதேசம் நிகழ்கின்றது. ஆகவே நேராக ஸ்வரூபத்திலிருக்கும் பெருமை யொன்றும் குணத்வாரா ஏற்படுகிற பெருமை யொன்றுமாக இரண்டுவிதமான பெருமைகளும் மாஹாத்ம்யசப்தத்தாலே விவக்ஷிக்கப்படலாம்; "மாஹாத்ம்யம் ஸ்வதஃ" இத்யாதி ப்ரக்ருதஸ்தலத்தில் மாஹாத்ம்ய சப்தத்திற்கு ஸ்வரூபதோ ப்ருஹத்த்வமாகிற உருவப்பெருமை இரண்டாவது அர்த்தமாகக் கொள்ளப்படவேணும். குணதோ மஹத்த்வமாகிற ஸ்வபாவப் பெருமையே முதலர்த்தமாகக் கடவது.

நிஷ்க்ருஷ்டதாத்பர்யமேதென்னில், குலம் ரூபம் வயோ வித்யா என்னும்படியான சிறந்த குணங்களால் பெருமை பெற்றிருந்துள்ளவர்களுக்கு உண்டாகிற வொரு ஸம்ருத்திதான் அவர்களுக்குப் பெருமை பரவச் செய்யுமே யல்லது ஒரு குணமுமற்ற க்ஷுத்ர புருஷர்களுக்கு எவ்வளவு ஸம்ருத்தி யுண்டானாலும் அவர்களுக்கு ஸ்வதஸ்ஸித்தமான லாகவந்தான் விளங்கும். பெருமை யென்பது ஒருகாலும் உண்டாகமாட்டாது. இது லோகத்ருஷ்டமான விஷயம். இந்த த்ருஷ்டாந்தம் ப்ரக்ருதத்தில் உதரகார்ச்ய ஸமர்த்தநத்திற்கு எங்ஙனே உபயுக்தமாகிற தென்னில்; வ்யதிரேகமுகத்தாலேயாகிறது; பேரருளாளனுடைய திருவுதரத்திற்கு ஸ்வதோ மாஹாத்ம்ய மில்லாமையால் அண்டஸம்ருத்தியானது மஹிமகரியாகவில்லை யென்றதாகிறது. இப்போது மாஹாத்ம்ய சப்தார்த்தம் குணதோ மஹத்த்வமல்ல; ஸ்வரூபதோ மஹத்த்வமேயாம். ஸ்வதஃ க்ருசமாயிறே திருவுதர மிருப்பது இங்ஙனே அர்த்தபேத முண்டாகையாலிறே ச்லேஷபங்கி யென்னப்பட்டது. பேரருளாளனுடைய திருவுதரத்திற்கு ஸ்வதோ மாஹாத்ம்யமில்லையென்று சொன்னால் அது மஹாபசாரமன்றோ என்று சிலர் பேசுவது, சொற்சுவை யறியாமை. வியாஜஸ்துதி யலங்காரம் நினைப்பது. (49)

सौन्दर्यामृतरसवाहवेगजस्स्यात् आवर्तस्तव किल पद्मनाभ! नाभिः।
तत्पद्मं वरद विभाति कान्तिमय्याः लक्ष्म्यास्ते सकलवपुर्जुषो नु सद्म ॥५०॥

ஸௌந்தர்யாம்ருதரஸவாஹவேகஜஸ் ஸ்யாத் ஆவர்த்த ஸ்தவ கில பத்மநாப நாபிஃ।
தத்பத்மம் வரத விபாதி காந்திமய்யாஃ லக்ஷ்ம்யாஸ் தே ஸகலவபுர்ஜுஷோ நு ஸத்ம ॥ 50 ॥

பத்மநாப !	பற்பநாபனுகிய
ஹே வரத !	வரதனே !
தவ நாபி:	உனது திருநாபியானது
ஸௌந்தர்யாம்ருத ரஸவாஹ வேகஜ:	திருமேனி யழகாகிற அம்ருதரஸ ப்ரவாஹத்தின் வேகத்தாலே யுண்டான
ஆவர்த்த: ஸ்யாத்	சுழியாம்
தத்பத்மம்	அந்த நாபியிலுள்ள தாமரை மலரானது
தே	உன்னுடைய
ஸகல வபுர் ஜுஷ:	திருமேனி யெங்கும் வ்யாபித்திருக்கிற
காந்திமய்யா:	காந்தியாகிற
லக்ஷ்ம்யா:	லக்ஷ்மிக்கு
ஸத்ம நு	இருப்பிடம் போல
விபாதி	விளங்குகின்றது.

* * * கொப்பூழிலெழு கமலப்பூவழகிலீடுபட்டு அருளிச்செய்கிருர். பூர்வார்த்தத்தாலே திருநாபியையும், உத்தரார்த்தத்தாலே திருநாபிக்கமலத்தையும் வருணிக்கிறபடி.

[ஹே பத்மநாப ! தவ நாபி: ஸௌந்தர்யாம்ருதரஸவாஹவேகஜ: ஆவர்த்தஸ்ஸ்யாத் கில] மஹாப்ரவாஹ முள்ள விடங்களிலே சுழியுண்டாவதை மஹாநதி முதலியவற்றிலே காணு நின்றேம். பேரருளாளனுடைய திருமேனியடங்கலும் பெருவெள்ளம கோத்துப் பெருகாநின்ற ஸௌந்தர்ய ப்ரவாஹத்தின் வேகத்தினுலே யுண்டான சுழிதான் திருநாபியென்று வ்யபதேசிக்கப்படுகிறதென்கிருர்.

[தத்பத்மமித்யாதி] "தன்னுபி வலயத்துப் பேரொளிசேர் மன்னிய தாமரை மாமலர் பூத்து" [பெரிய திருமடல்] என்கிறபடியே அந்தத் திருநாபியிலே தோன்றியுள்ள தாமரைமலரானது.— திருமேனியெங்கும் திகழாநின்ற காந்தியாகிற பிராட்டியின் இருப்பிடமோ வென்கிருர். தாமரை மலர் பிராட்டிக்கிருப்பிடமாயிறே யிருப்பது. இந்த நாபீ கமலமும் ஒரு பிராட்டிக் கிருப்பிடமாக வேண்டுமே ; திருமேனியின் லாவண்ய ஸம்பத்தை லக்ஷ்மீத்வேந ருபணம் பண்ணி அந்த லக்ஷ்மிக்கிது இருப்பிடமென்கிருர். இதனுல் நாபீகமலம் திருமேனி முழுமைக்கும் சோபாவஹமா யிருக்கும்படியை அருளிச்செய்தவாறு. (50)

या दामोदर इति नामदा तवासीत् सा दामा किल किणकारिणी बभूव ।
तन्नूनं वरद वलित्रयच्छलेन त्वन्मध्यप्रथमविभूषणीबभूव ॥५१॥

யா தாமோதர இதி நாமதா தவாஸீத் ஸா தாமா கில கிணகாரிணீ பபூவ ।
தந்நூநம் வரத வலித்ரயச்சலேந த்வந்மத்யப்ரதமவிபூஷணீபபூவ ॥ 51 ॥

ஹே வரத !	ஓ வரதனே !
யா தாமா	யாதொரு தாம்பானது
தவ	உனக்கு
தாமோதர: இதி நாமதா ஆஸீத்	தாமோதரனென்னும் பெயரைத் தந்ததோ
ஸா கில	அந்தத்தாம்பன்றே
கிணகாரிணீ பபூவ	தழும்பையு முண்டு பண்ணிற்று ;
தத்	அந்தத் தழும்பானது
வலித்ரயச்சலேந	த்ரிவளியென்கிற வ்யாஜத்தால்
த்வந்மத்ய ப்ரதம விபூஷணீ பபூவ	உனது மத்யப்ரதேசத்திற்கு முதன்மையான பூஷணமாயிற்று.

* * * பேரருளாளனுடைய திருவுதரத்திலே திகழ்கின்ற த்ரிவளிகளை ஒரு சமத்காரமாக வருணித்தருளுகிருர். [ஹே வரத ! யா தாமா தவ தாமோதர இதி நாமதா ஆஸீத்] யசோதைப்பிராட்டி கண்ணபிரானுடைய திருவயிற்றிலே தாம்பைக்கொண்டு கட்டினளாகையாலே அது தோன்றத் தாமோதரனென்று திருநாமமாயிற்று. * தாமோதர இதி க்யாதோ யசோதா தாமபந்தநாத் * என்றிறே நிருக்தியும். ஆகையாலே யாதொரு தாம்பு உனக்கு தாமோதரனென்னும் திருநாமத்திற்கு ஹேது வாய்த்தோ.

[ஸா தாமா கில கிணகாரிணீ பபூவ] யசோதை கட்டின அந்தத் தாம்பானது தழும்பை யுண்டாகிற் றென்றபடி. ‘தாம்மோருருட்டித் தயிர் நெய் விழுங்கிட்டு தாமோ தவழ்வரென்று ஆய்ச்சியர் தாம்பினல், தாம்மோ தரக்கையாலார்க்கத் தழும்பிருந்த தாமோதரா!’ என்னக் கடவதிறே. பொய்கை யாழ்வார் தாமும் ‘அறியுமுலகெல்லாம் யானேயுமல்லேன், பொறிகொள் சிறையுவண மூர்ந்தாய், வெறிகமழும் காம்பேய் மென்தோளி கடை வெண்ணெய் உண்டாயை, தாம்பே கொண்டார்த்த தழும்பு’ என்றருளிச் செய்தாரிறே.

தழும்பாவது - தாமபந்தனத்தின் நெருக்கத்தாலே உண்டான காய்ப்பு.

[தத் வலித்ரயச்சலேந த்வந்மத்யப்ரதமவிபூஷணீ பபூவ] யசோதைப் பிராட்டி கட்டும்போது தாம்பை மும்மடியாக்கிக் கொண்டு கட்டுகையாலே த்ரிகுணீக்ருதமான அந்தத் தாம்பின் விமர்தாதிசயத்தாலுண்டான கிணத்ரயமே வளித்ரயம்போல் காட்சி தந்து சிறந்ததொரு மத்ய பூஷணமாக விளங்குகின்றதென்றபடி. நூநம் என்பது உத்ப்ரேக்ஷாலிங்கம். விபூஷணீ பபூவ என்னுதே ‘ப்ரதமவிபூஷணீ பபூவ’ என்றது ஸௌலப்ய ஸௌசீல்யங்களை வெளிப்படுத்தும் கோலமே முதன்மை பெறுமென்ற திருவுள்ளத்தாலாம். ‘த்வன்மத்யே ப்ரதமவிபூஷணீ பபூவ’ என்பதும் பாடம்.

ஆக இந்த ச்லோகத்தால் கண்ணபிரானுக்கும் தேவபிரானுக்குமுள்ள தாதாத்ம்யம் வெளிப்படும். (51)

यादृग्बीजाद्युषितभुवि यद्वस्तु हस्तीश जातं तत् तादृक्षं फलति हि फलं त्वय्यपीक्षामहे तत्।
यस्मादण्डाद्युषित उदरे तावके जायमानं पद्मं पद्मानन किल फलत्यण्डषण्डानखण्डान् ॥५२॥

யாத்ருக்பீஜாத்யுஷிதபுவி யத் வஸ்து ஹஸ்தீச ஜாதம்
தத் தாத்ருக்ஷம் பலதி ஹி பலம் த்வய்யபீக்ஷாமஹே தத் ।
யஸ்மாதண்டாத்யுஷித உதரே தாவகே ஜாயமானம்
பத்மம் பத்மாநந கில பலத்யண்டஷண்டாநகண்டாந் ॥ 52 ॥

பத்மாநந	தாமரை போன்ற திருமுகத்தை யுடைய
ஹஸ்தீச	ஸ்ரீஹஸ்திகிரிநாதனே !
யாத்ருக்பீஜாத்யுஷிதபுவி	எந்த ஜாதீயமான விதை பொருந்திய விடத்தில்
யத் வஸ்து	எந்த வஸ்துவானது
ஜாதம்	உண்டானதோ
தத்	அந்த வஸ்துவானது
தாத்ருக்ஷம் பலம்	அந்த விதையின் ஸஜாதீயமான பலத்தை
பலதி ஹி	உண்டாக்குகின்றதன்றோ
தத்	அந்த ந்யாயத்தை
த்வயி அபி	உன்னிடத்திலும்
ஈக்ஷாமஹே	காண்கின்றோம் ;
யஸ்மாத்	யாதொரு காரணத்தாலே
அண்டாத்யுஷிதே	அண்டங்கள் வஸிக்கப்பெற்ற
தாவகே உதரே	உனது திருவயிற்றில்
ஜாயமாநம்	உண்டாகிற
பத்மம்	[நாபிக்] கமலமானது
அகண்டாந்	அளவற்ற
அண்டஷண்டாந்	அண்ட ஸமூகங்களை
பலதி கில	உண்டாக்குகின்றதோ.

* * * ஸிம்ஹாவலோகந்யாயத்தாலே திரியவும் திருநாபீ கமலத்திலே யீடுபட்டருளிச் செய்கிறார். ஸகல ப்ரம்மாண்டங்களும் இதிலிருந்து உண்டாகும்படியை ஒரு சமத்காரமாக அருளிச்செய்கிறார்.

கடலையை விதைத்தால் காராமணி விளையாது. காராமணியை விதைத்தால் கடலை விளையாது. ‘யவா꞉ கிலோப்தா ந பவந்தி சாலய꞉’ என்றதிறே.

[யாத்ருக்பீஜாத்யுஷிதபுவி யத்வஸ்து ஹ்ஸ்தீச ஜாதம் தத் தாத்ருக்ஷம் பலம் பலதி ஹி] எந்த பதார்த்தம் எந்த பீஜத்தாலே விளைகின்றதோ அந்த பதார்த்தமானது தத்பீஜ ஸஜாதீயமான பலத்தை யே விளைவிக்கும். இவ்விஷயம் உலகத்தில் காணப்படுவது போல உன்னளவிலும் காணப்படா நின்றது. எங்ஙனேயென்னில், [யஸ்மாதித்யாதி] உன்னுடைய திருவுதரம் அண்டங்களுக்கெல்லாம் இருப்பிட மானது. அப்படிப்பட்ட திருவுதரத்திலே யுண்டான கமலமானது நிஜபீஜ ஸஜாதீயங்களான அண்டங் களையே யுண்டுபண்ணு நின்றது. இத்தால் 'உந்திமேல் நான்முகனைப் படைத்தான் உலகுண்டவ னெந்தை பெம்மான்' என்னுமிடம் சொல்லிற்றுகிறது. 'அண்டாத்யுஷிதே தாவகே உதரே' என்னும் போது 'அண்டானும் த்வதுதரமாமநந்தி ஸந்த:ஸ்தானம்' என்ற கீழில் ச்லோகம் ஸ்மர்த்தவ்யம். நாபிபத்மமானது ஸ்வஸ்மாதுத்பன்ன சதுர்முகத்வாரா அண்டஷண்டங்களுக்கு உத்பாதகமென்பர். எம்பெருமானுடைய பரத்வத்தை மூதலிக்கைக்கு அடியிடுகிறதாய்த்து இந்த ச்லோகம்.

இந்த ச்லோகம் முதற்கொண்டு 'சம்போரம்போருஹமுக' என்னும் ச்லோகமளவுள்ள தசகம்— மந்தாக்ராந்தாவ்ருத்தம். 'மந்தாக்ராந்தா ஜலதிஷடகைர்மோபநௌததௌ குருசேத்' இதி தல்லக்ஷணம்.

... (52)

अज्ञे यज्ञेश्वर किल जने क्वाप्यदर्शं विमर्शं विश्वाधीशः कतम इति तन्निर्णयं वर्णयामः ।
व्यावक्रोशी नृषु समुदिता यानुपाश्रित्य तेऽपि ब्रह्माद्यास्ते वरद जनितास्तुन्दकन्दारविन्दे ।

அஜ்ஞே யஜ்ஞேச்வர கில ஜநே க்வாப்யதர்சம் விமர்சம்
விச்வாதீச: கதம இதி தந்நிர்ணயம் வர்ணயாம: ।
வ்யாவக்ரோசீ ந்ருஷு ஸமுதிதா யாநுபாச்ரித்ய தேபி
ப்ரஹ்மாத்யாஸ் தே வரத ஜநிதாஸ் துந்தகந்தாரவிந்தே ॥ 53 ॥

யஜ்ஞேச்வர !	ஸர்வயஜ்ஞ ஸமாராத்யனான
ஹே வரத !	ஓ வரதனே !
க்வாபி அஜ்ஞே ஜநே	[அடியேனாகிற] ஒரு மூட ஜனத்தி னிடத்தில்
விச்வாதீச: கதம: இதி விமர்சம்	'ஸர்வ லோகங்களுக்கும் தலைவன் யார்' என்ற ஆராய்ச்சியை
அதர்சம்	நோக்கினேன் ; [ஸர்வேச்வரன்யார் ? என்று அஜ்ஞனான வடியேன் ஆராய்ந்து பார்த்தேனென்கை]
தந்நிர்ணயம்	அவ் வாராய்ச்சி முடிவை
வர்ணயாம:	சொல்கின்றோம் ;
யாந் உபாச்ரித்ய	யாவர் சில ப்ரஹ்மாதிகளைப்பற்ற
வ்யாவக்ரோசீ	[பரத்வ விஷயமான] மாறான கோலாஹலம்
ந்ருஷு ஸமுதிதா	[தேவதாந்தரப்ரவணரான] மனிதர் களிடத்தில் உண்டாயிற்றோ
தே ப்ரஹ்மாத்யா அபி	அந்த பிரமனாதி தேவதாந்தரங்களும்
தே	உன்னுடைய
துந்தகந்த அரவிந்தே	உந்தியை மூலகந்தமாக வுடைய தாமரை மலரில்
ஜநிதா:	உண்டாக்கப் பட்டவை [என்று நிர்ணயம் தேறிற்றென்றபடி].

* * * 'மேவித்தொழும் பிரமன் சிவனிந்திரனாதிக்கெல்லாம், நாபிக்கமல முதற்கிழங்கே' என்னு மர்த்தமருளிச் செய்கிறாரிதில். தேவதாந்தரங்கள் பக்கலிலே பரத்வசங்கைபண்ணுமவர்கட் கெல்லாம் இந்தத் திருநாபிக்கமலத்தைத் தொழுது தெளியலாமே யென்கிறார் போலும்.

[யஜ்ஞேச்வரா] இந்த ச்லோகத்தின் ப்ரமேயத்திற்கு அநுகுணமாயிருக்கிறதாய்த்து இந்த ஸம்போதநம். இந்த்ராதிகளை தேவதையாகக்கொண்டு பண்ணும் யஜ்ஞங்களெல்லாம் பகவ தாராதனமாகவே தலைக்கட்டுமென்றிறே பரமைகாந்திஸித்தாந்தம். 'பஞ்சமஹாயஜ்ஞாதி களான நித்யநைமித்திகங்களில் அவர்கள் பேர் சொல்லும்போது 'யே யஜந்தி பித்ருன் தேவான் ப்ராஹ்மணான் ஸஹுதாசனான்। ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்தி தே' இத்யாதிகளில்

மஹர்ஷிகளறுதியிட்ட படியே —ராஜஸேவகர் ராஜாவுக்கு சட்டைமேலே மாலையையும் ஆபரணத்தை யுமிட்டாலும் சட்டையில் துவக்கற்று ராஜாவின் ப்ரீதியே ப்ரயோஜனமாகத் தெளிந்திருக்குமாபோலவும்' இத்யாதி ரஹஸ்யத்ரயஸாரத்தில் க்ருதக்ருத்யாதிகாரத்திலே அருளிச்செய்தது இங்கே அநுஸந்தேயம்.

[அஜ்ஞே க்வாபி ஜநே "விச்வாதீசः கதமः" இதி விமர்சம் அதர்சம்] ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ரா திகளென்று சொல்லப்படுகிறவர்களுக்குள்ளே ஸர்வேச்வரன் யாராகக்கூடுமென்று அறிவிலாமனிச னாகிய நான் ஆராயப்புகுந்தேன் என்றபடி. [தந்நிர்ணயம் வர்ணயாமः] அந்த ஆராய்ச்சியின் முடிவு என்னாயிற்றென்னில்; சொல்லுகேன் கேண்மின் என்கிறார். அதுதன்னை யருளிச் செய்கிறார் வ்யாவக் ரோசீத்யாதியாலே. [யாநுபாச்ரித்ய ந்ருஷு வ்யாவக்ரோசீ ஸமுதிதா தேஹஸி ப்ரஹ்மாத்யாः தே துந்தகந்தாரவிந்தே ஜநிதாः] 'அபிநிவேசவசீக்ருதசேதஸாம் பஹுவிதாமபி ஸம்பவதி ப்ரமः' என்கிற படியே ஒரோன்றிலே அபிநிவேசாதிசயப்ரயுக்தமான அவிவேகத்தாலே ஒரோ சுருதி வாக்யங்களிலே மண்டிக் கிடந்து ஸ்வேச்சைக்கநுகுணமாக அபார்த்தங்களைப் பண்ணி * நளிர்மதிச்சடையனை நம்புவார் சிலரும் * நான்முகக்கடவுளை நம்புவார் சிலரும் * இமையவர் தலைவனை யேத்துவார் சிலருமாய் இப்படி யாவை யாவை சில தேவதாந்தரங்களைப்பற்ற பரத்வவிவாதம் ஜநிதர்மாக்களுக்கு உண்டாயிற்றே, அந்த தேவதாந்தரங்களுக்கடைய * நாபிக் கமலமேயிறே முதற்கிழங்காயிரா நின்றது. கார்யவர்க்கத்திலே ஏகதேசிகளாயுள்ளவர்களுக்கு விச்வாதீசத்வப்ரஸக்தியில்லை.

[வ்யாவக்ரோசீ]-பரஸ்பரவிவாத இதி பர்யவஸிதோர்த்தः 'கர்மவ்யதிஹாரே ணச் ஸ்த்ரியாம்' (3—3—43) என்கிற ஸூத்ரத்தால் ணச்ப்ரத்யயமும், 'ணசः ஸ்த்ரியாமஞ்' [5—4—14] என்கிற ஸூத்ரத்தால் ஸ்வார்த்திகமான அஞ் ப்ரத்யயமும் 'டிட்டாணஞ்' இத்யாதி ஸூத்ரத்தாலே ஙீயும் ப்ராப்த மாய் "வ்யாவக்ரோசீ" என்று ரூபம் நிஷ்பந்நமாய்த்து. மாககாவ்யத்தில் எட்டாவது ஸர்க்கத்தில் [ச்லோ 32] 'முக்தத்வாதவிதிதகைதவப்ரயோகாः' என்கிற ச்லோகத்தில் 'வ்யாத்யுக்ஷீம்' என்று ப்ரயோ கித்திருப்பதும், அங்கு மல்லிநாதவ்யாக்யாதா—'வ்யாத்யுக்ஷீம்'-வ்யதிஹாரேண உத்க்ஷணம் பரஸ்பராப்யு க்ஷணமித்யர்த்தः' என்று விவரித்திருப்பதும் இங்கேயநுஸந்தேயம்.

ஸித்தாந்தகௌமுதியில் உத்தரக்ருதந்தத்தில் 'ந கர்ம வ்யதிஹாரே' என்னும் ஸூத்திரத்தின் கீழ் 'வ்யாவக்ரோசீ' என்று உதாஹரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு பாலமநோரமையில் —'வ்யாவக்ரோசீ-பரஸ்பரம் நிந்தக இத்யர்த்தः' என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் அது ப்ராமா திகமென்றே கொள்ளவேணும். 'வ்யாவக்ரோசீ' என்பது கௌரீ சப்தம் போலே ஸ்த்ரீப்ரத்யயாந்த சப்தமென்னுமிடத்தை மறந்து நகாராந்தபுல்லிங்கமாக ப்ரமித்து 'பரஸ்பரம் நிந்தகः' என்கிற அர்த்தம் எழுதப்பட்டதென்று தெளிக.

விமர்சஸமயத்திலே தம்மை அத்யல்பதயா அநுஸந்தித்தமைக்காக 'அதர்சம்' என்று ஏகவசநமாகவும், தந்நிர்ணயப்ரகாசநஸமயத்தில் விஷய கௌரவாநுகுணமாகத் தம்மைக் கௌரவ்யராக அநுஸந்தித்தமைக்காக 'வர்ணயாமः' என்று பஹுவசநமாகவும் ப்ரயோகித்தருளினாரென்க.

[யாநுபாச்ரித்ய வ்யாவக்ரோசீ ந்ருஷு ஸமுதிதா] 'ந்ருஷு' என்றது—தத்தத்தேவதா ப்ரவணர் களான மநுஷ்யர்களை. சதுர்முகபக்தர்கள் ருத்ராதிகளின் பாரம்யத்தை தூஷித்து சதுர்முகபாரம்ய ப்ரதிஷ்டாபகமாக வாதிப்பது, ருத்ரபக்தர்கள் சதுர்முகாதிகளின் பாரம்யத்தை தூஷித்து ருத்ரபாரம்யப்ரதிஷ்டாபகமாக வாதிப்பது, இப்படி அவரவர்கள் ஸ்வஸ்வதேவதா பூஷணமாகவும் இதர தேவதா தூஷணமாகவும் வாதிப்பது.

[துந்தகந்தாரவிந்தே] துந்தம்--உதரம்; ததேவ கந்தः--மூலம் யஸ்ய தத்; தாத்ருசே அரவிந்தே நாபிகமலே இதி யாவத். (53)

मुष्णन् कृष्णः प्रियनिजजनैर्जय्यहैयङ्गवीनं दाम्ना भूम्ना वरद हि यया त्वं यशोदाकराभ्याम् ।
बद्धो बन्धक्षपणकरणीं तां किलाद्यापि मातुः प्रेम्णा गात्राभरणमुदराबन्धनाख्यं बिभर्षि ॥ ५४ ॥

முஷ்ணங் க்ருஷ்ண꞉ ப்ரியநிஜஜனைர் ஜய்யஹையங்கவீநம்
தாம்நா பூம்நா வரத ஹி யயா த்வம் யசோதாகராப்யாம் ।
பத்தோ பந்தக்ஷபணகரணீம் தாம் கிலாத்யாபி மாது꞉
ப்ரேம்ணு காத்ராபரணமுதராபந்தநாக்க்யம் பிபர்ஷி ॥ 54 ॥

ஹே வரத !	ஓ வரதனே !
க்ருஷ்ண꞉ த்வம்	க்ருஷ்ணுவதாரம் செய்தருளிய நீ
ஜய்ய ஹையங் கவீநம்	ஜயித்து ஸம்பாதிக்கக்கூடிய கவ்யத்தை
ப்ரிய நிஜ ஜனைஸ்ஸஹ	தோழன்மாரோடுகூட
முஷ்ணங்	களவாடினவனுய்
யசோதா கராப்யாம்	யசோதையின் கைகளால்
யயா தாம்நா	யாதொரு தாம்பிஞலே
பூம்நா	மிகவும்
பத்த꞉	கட்டுண்டவனுய்
அபூ꞉	ஆனுயோ
பந்தக்ஷபண கரணீம்	[ஸம்ஸாரபந்தமென்னும்] கட்டை அவிழ்த்துத்தொலைக்கவல்ல
தாம்	அந்தத் தாம்பை
அத்யாபி	[பேரருளாளனுக ஸேவை ஸாதிக்கிற] இப்போதும்
மாது꞉ ப்ரேம்ணு	தாயினிடத்திலன்பிஞல்
உதராபந்த நாக்க்யம்	உதரபந்தனமென்று பெயர் பூண்ட
காத்ராபரணம்	தேஹபூஷணமாக
பிபர்ஷி	சாத்தியருளாநின்ருய்.

* * * பேரருளாளனுடைய திருநாபீகமலத்திலே சுழியாறுபட்டுக் கிடந்த ஆழ்வான் திருவுள்ளம் அந்தக் கமலத்தோடேசேர்ந்த திருவுதரபந்தநத்திலே ஆழங்கால்படுகிற படியைச் சொல்லுகிறது இந்த ச்லோகம். திருநாபீகமலத்திற்கோவென்ருல் வெறும் ப்ரஹ்மாவொருவனுக்கே இருப்பிடமாகப் பெற்ற மேன்மையும் அழகுமன்ருே வுள்ளது. அதுக்காச்ரயமான நம்மைப் பார்த்தால் 'த்ரிவிதசிதசித்ப்ருந்தம் துந்தாவலம்பிவலிதரயம் விகணயதி வைச்வர்யம் வ்யாக்யாதி ரங்கமஹேசிது꞉ । ப்ரணதவசதாம் ப்ருதே தாமோதரத்வகர꞉ கிண꞉ ததுபயகுணுக்ருஷ்டம் பட்டம் கிலோதரபந்தநம் ॥' [ஸ்ரீரங்கராஜஸ்தவே] என்கிற படியே த்ரிவிதசேதநவர்க்கத்துக்குமாச்ரயமான மேன்மையையும், ஆச்ரிதர்க்குக் கட்டவுமடிக்கவுமாம்படி எளியோமாய் ஸௌலப்ய நீர்மையையும் உடையோமான ஏற்றத்தால் பட்டங்கட்டியன்ருே நாமிருப்பது ; என்று திருவுதரமானது திருநாபீகமலத்திற் காட்டில் தனக்குண்டான ஏற்றத்தைக் காட்டி நாபீகமலாவகாடமான ஆழ்வான்திருவுள்ளத்தை மீளவும் இச்சிக்க, அத்திருவயிற்றை ஆச்ரயமாகப்பற்றி நிற்கிற திருவுதரபந்தனமானது தன் பக்கலிலே வரவீர்த்து ஸ்வபோக்யதையை அநுபவிப்பிக்க இனியராய்ப்பேசுகிருர். பேரருளாளனுடைய திருவுதரபந்தனமென்கிற திருவாபரணம் தாமோதரத்வக்யாபகமான தாமபந்தனத்திற்கு ப்ரத்யபிஜ்ஞாபக மாயிருக்கும்படியை வெளியிடுவதாய்த்து இந்த ச்லோகம். 'ஜய்ய ஹையங்கவீநம்' என்ற விடத்து 'ஜய்ய' என்று தனிப்பதமாக்கி "ப்ரியநிஜ-ஜனைர்ஜய்ய!" என்று ஸம்புத்த்யந்தமாக யோஜித்து ஸ்வகீயபக்தஜனை꞉ ஜேதும் சக்ய꞉-பக்தபாரதந்த்ரேத்யர்த்த꞉' என்றுரைப்பாருமுண்டு. இவ்வர்த்தம் சப்த சக்திக்குப் பொருந்துமாயினும் அத்தனை ஸ்வாதுவாக மாட்டாது. வக்த்ரு விவக்ஷிதமுமல்ல. "ஹே வரத த்வம் க்ருஷ்ணஸ்ஸங் ஜய்யஹையங்கவீநம் ப்ரியநிஜஜனைஸ்ஸஹ முஷ்ணங்" என்று யோஜிப்பதுவே நன்று. பேரருளாளனே! நீ கண்ணபிரானுய்த் திருவவதரித்தருளினபோது "தன்னேராயிரம் பிள்ளைகளோடுகூடி கவ்யங்களைக் களவு கண்டாயே. அந்தோ! ஈதென்ன அவிவேகம். ஸ்வகீயமான வஸ்துவைப் பிறர் ஸ்வாதீனப்படுத்திவைத்துக்கொண்டிருந்தால், அவர்களை வென்று அவ்வஸ்துவை மீட்டுக்கொள்வதோ, களவு வழியாலே பெற்றுக்கொள்வதோ சொல்லாயப்பனே! உன்னுடையதான பூமியை மஹாபலி தன்னுடையதென்று பாவித்து இறுமாந்திருந்த காலத்திலே நேர்கொடு நேரே சென்று 'கெடுவாய் உன் மதமிருந்தபடியென்! திருவடிகளிலே வணங்கிப்போ ; இல்லையேல் தலையறுப்புண்பாய் ' என்று சொல்லி பரதவப்பிடாரைக் காட்டி பூமியையெல்லாம் ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள ப்ராப்தியுண்டாயிருக்கச் செய்தேயும் அந்த ருஜு மார்க்கத்திலே செல்லாதே "கண்டாரிரங்கக் கழியக்குறளுருவாய் வண்டாரான் வேள்வியில் மண்ணிரந்தான் காணேடீ" என்று அனைவரும் ஏசும்படி பிக்ஷுகவேஷதாரியாய்ச் சென்று பெற்ருப் போலே பிராநின்ற

திறே இவ்வபதாநமும். சராசரம் முற்றவும் நீயிட்டவழக்காயிருக்க உனக்கு உறுப்பாகாத நவநீத முண்டோ? அதுதன்னிலே பிறர் ஸ்வகீயபுத்தி பண்ணிக்கிடந்தார்களாகில் அவரவர்களுடைய துரபி மானத்தை யடியறுத்து உன்னுடைய ஸர்வஸ்வாமித்வத்தை உபபாதித்து இவ்வழியாலே நேர் கொடு நேரே அந்தக் கவ்யத்தைப் பெறுவதற்கு ப்ராப்தியுண்டா யிருக்கச் செய்தேயும், அஜ்ஞரைப்போலவும் அசக்தர்களைப் போலவும் களவு வழியிலே புகுந்து கைப்பற்றினையே! இது அவிவேகத்தின் ஸாம்ராஜ்ய மோ? ஸௌலப்யப்ரகாசந பரிபாடியோ? அறியோம்''—என்கிற இவ்வளவு உட்கருத்தை அமைத் திறே 'ஜய்யஹையங்கவீநம்' என்று அருளிச் செய்துளர். [ஜய்யம் ச தத் ஹையங்கவீநஞ்ச—ஜய்ய ஹையங்கவீநம்] 'க்ஷய்யஜய்யௌ சக்யார்த்தே' என்பது பாணிநிஸூத்ரம். ஜேதும் சக்யம் என்கிற பொருளிலே ஜய்யமென்றாகிறது. [ஜேதும் யோக்யமாகில் ஜேயம் என்றாம்.] ஹையங்கவீநம் ஜய்யமா கையாவது என்னென்னில், 'ஸமஸ்த வஸ்துக்களுக்கும் நான் கடவனான பின்பு என்னுடையதான கவ்யங்களிலே நீங்கள் ஸ்வகீயதா புத்தி பண்ணுகையாவதென்? எந்த வஸ்துவிலும் உங்களுக்கு ஸ்வாமித்வமில்லைகிடிகோள்; ஆனபின்பு உந்தம் மனைகளிலே திரளும் கவ்யங்களையடைய நமக்காக்கிப் போருங்கோள்; இல்லையேல் குடியிருப் பிழந்துபடுவீர்கள்' என்று கட்டளையிட்டு நிருபாதிகஸ்வாமித்வ முறையாலே நேர்கொடு நேரே லபிக்கக் கூடியதாகை. இப்படிப்பட்ட கவ்யத்தை [ப்ரியநிஜஜநை: [ஸஹ] முஷ்ணந்] கண்ண பிரானுடைய தீம்புகளுக்குப் பெருநிலை நிற்பார் * தன்னேராயிரம் பிள்ளைகளுண்டிறே.

'ப்ரியநிஜஜநைர்முஷ்ணந்' என்கிற விவ்விடத்திலே—''பீடே பீடநிஷண்ணபாலககலே [புஜே] திஷ்டந் ஸ கோபாலகோ யந்த்ராந்த: ஸ்திததுக்தபாண்டமபக்ருஷ்யாச்சாத்ய கண்டாரவம், வக்த்ரோபாந்த க்ருதாஞ்ஜலி: க்ருதசிர:கம்பம் பிபந் ய: பய: பாயாதாகதகோபிகாநயநயோ: கண்டூஷபூத்காரக்ருத்'' என்ற கர்ணாம்ருத ச்லோகமுணர்க. திருவாய்ப்பாடியில் பெண்கள் கவ்யங்களைத் திரட்டி உறிகளிலே சேமித்துவைக்கும் போது கண்ணபிரானுடைய குறும்புகளை நினைத்து அவனுக்கு எட்டவொண்ணாதபடி வைக்கவேணுமென்று உயர வைத்திடுவர்களிறே; அதுதன்னையறிந்து கண்ணபிரான் தன்னோட்டைப் பிள்ளைகளை உடன் கொண்டுபோய் ஒருவன் தோளிலே ஒருவனை நிறுத்தி உறிக்கு அளவாக அமைந்த வாறே தானேறிப்பறித்துண்பனும். இந்த உதவிக்காகச் சில பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு போவா னாகையாலே 'ப்ரியநிஜஜநை:' என்றது.

இப்படி வெண்ணெயைக் களவுகண்டவாறே உடையவர்கள் வந்து கண்டு 'இங்காரார் புகுதுவார் ஐயனிவனல்லால்' என்று அறுதியிட்டு, 'புண்ணில் புளிப்பெய்தாலொக்கும் தீமை புரைபுரை யாலிவை செய்யவல்ல, அண்ணற்கண்ணானோர்மகனைப்பெற்ற அசோதை நங்காய் உன் மகனைக்கூவாய்' 'சாளக்கிராமமுடைய நம்பி சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான், ஆலைக்கரும்பின் மொழியனைய அசோதை நங்காய் உன் மகனைக்கூவாய்' என்று யசோதைப் பிராட்டிபாடே வந்து முறையிட; அவளும் 'கண்ணியார் குறுங்கயிற்றால் கட்டி 'யதி சக்நோஷி கச்ச த்வமதிசஞ்சலசேஷ்டித' என்றொழிவளிறே; அதுதன்னைச் சொல்லுகிறது த்விதீயபாதம். [யசோதாகராப்யாம் யயா தாம்நா பூம்நா த்வம் பத்த:] யசோதைப்பிராட்டியானவள் யாதொரு தாம்பைக்கொண்டு தன் கைகளாலே உன்னைச் சிக்கெனக் கட்டினாளோ. பூம்நா—வாஹுல்யேந-அதிசயேநேத்யர்த்த:. மிகவும் என்றபடி. கட்டுகையிலே மிகை யாவது என்னென்னில் 'தாம்நா சைவோதரே பத்த்வா ப்ரத்யபத்நாதுலூகலே' என்கிறபடியே-முதலிலே திருவயிற்றிலே கட்டி, பிறகு அத் திருவயிற்றையும் உரலையும் ஒன்றாக இணைத்துப் பிணைத்த மிகையை நினைக்கிறது.

[பந்தக்ஷபணகரணீம் தாம்] 'கற்றினம் மேய்க்கலும் மேய்க்கப்பெற்றான் காடுவாழ்சாதியுமாகப் பெற்றான், பற்றி யுரலிடை யாப்புமுண்டான் பாவிகாளுங்களுக் கேச்சுக்கொலோ'? என்கிற படியே—இவ்வபதாநத்தை கர்ஹிப்பார் பாவிகளிறே. கண்ணபிரான் தனது ஆச்ரிதஸௌலப்யகுணத்தை ப்ரகாசப்படுத்துவதற்குத் தானே ஏறிட்டுக்கொண்ட கட்டிறே இதுதான். ''கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயன்'' என்ற பாசுரத்தின் ஹ்ருதயத்தை ''ஆநீதமக்ரே நிஜபத்தனார்த்தம் தாமாகிலம் ஸம்ஹிதமப்யபூர்ணம் । நிரீக்ஷ்ய நிர்விண்ணதியோ ஜநந்யா: ஸங்கோசசக்த்யா ஸ பபூவ பத்த்ய: ॥'' [யாதவாப்யுதயே—4-34]என்ற ச்லோகத்தால் வெளியிட்டருளினாரிறே. அவனுடைய அநுக்ரஹபரீவாஹரூபமான இந்த பந்தத்தை யநுஸந்திட்டார்க்கு பந்தநிவ்ருத்தியிறே பலமாவது,

பத்தம் ததா பாவ்ய தாம் முகுந்தமயத்நவிச்சேதிநி கர்மபந்தே, தபஸ்விநீ தத்க்ரது நீதிராத்யா ஸவ்ரீளமாரண்யகதாஸ்ய தஸ்தௌ ॥ * [யாதவாப்யுதயே-4-35] என்னக்கடவதிறே. 'பரமபுருஷனை கண்ணபிரான் இப்படி எளியனாய்க் கட்டுண்டு கிடந்தபடியே!'' என்று இந்த தாமபந்தவ்ருத்தாந்தத்தை * எத்திறமித்யாதிப்படியே உள்குழைந்து அநுஸந்திப்பார் 'மம மாயா துரத்யயா' என்னப்பட்ட மாயாபந்தத்தின் விச்சேதத்தைப்பெற்று மகிழ்வர்களிறே. அவ்வர்த்தம் சொல்லுகிறது 'பந்தக்ஷபணகரணீம்' என்று. பந்தஸ்ய [ஸம்ஸாரபந்தஸ்ய] க்ஷபணம்-நாசம் கரோதீதி பந்தக்ஷபணகரணீ.

[தாம் தாமாநம் உதரபந்தநாக்யம் காத்ராபரணம் அத்யாபி பிபர்ஷி] க்ருஷ்ணாவதாரத்திலே கட்டுண்ட அந்தத்தாம்பை ஸ்ரீ ஹஸ்திகிரிமூர்த்தாவிலே பேரருளாளனாய் நிற்கிற இந்நிலையிலும் 'திருவுதரபந்தன மென்கிற திவ்யாபரணமாய்ச் சாத்தியருளாநின்றாயென்கிறார். இது தனக்கு அடியென்னென்னில்; [மாதுஃ ப்ரேம்ணா] அந்த மாதாவின் பக்கலிலுள்ள ப்ரேமமேயிறே இன்றைக்கும் அந்தத் தாம்பை ஆபரணமாக வுகந்து சாத்திக்கொள்ளுகைக்கு ஹேதுவென்கிறார். உலகத்தில் பிள்ளைகள் தீமைகள் செய்து மாதாவின் கையாலே கட்டுண்டு கிடப்பதுண்டாகிலும் அந்த பந்தம் அவர்களுக்கு சோகாயவாமித்தனை. கண்ணபிரானுடைய கட்டு அப்படிப்பட்ட தன்றிறே. 'வெண்ணெய்க் கன்றுய்ச்சி வன்தாம்புகளால் புடைக்கலந்தானை யம்மானை' என்ற விடத்து 'தாம்புகளால் புடைக்க அலர்ந்தானை—புடைக்கப் புடைக்க முகவிகாஸம் பெற்றவனை' என்றிறே அருளிச்செய்வது. அதாவது நம்முடைய எளிமை வெளிப்படும்படி இங்ஙனே கட்டிப்போகடுவதே! என்று உகந்திருக்குமவனிறே. அல்லாதார்க்கும் தன் குணங்களை வெளியிடுவார் பக்கலிலேயிறே ப்ரேமம் மிக்கிருப்பது. அந்தப்ரேமத்தாலே கிமர் அன்று பெற்ற தாமபந்தனத்தை இன்னும் விடாதே உகந்து சாத்திக்கொண்டிருக்கிறபடி. 'மாதுஃ ப்ரேம்ணா' என்றது மாத்ருவிஷயக ப்ரேம்ணா என்றபடி. 'முஷ்ணந் க்ருஷ்ண' என்று ஸம்புத்த்யந்தமாகவும் சிலர் ஓதுவர். ஹையங்கவீநம்—ஹ்யஸ்தநகோதோஹோத்பவம் க்ருதம். "தத் து ஹையங்கவீநம் யத் ஹ்யோ கோதோஹோத்பவம் க்ருதம்" இத்யமரஃ. புத்துருக்குநெய். (54)

सौन्दर्याख्या सरिदुरसि विस्तीर्य मध्यावरुद्धा स्थानाल्पत्वाद्विषमगतिजावर्तगर्ताभनाभिः ।
प्राप्य प्राप्तप्रथिम जघनं विस्तृता हस्तिनाथ स्रोतोभेदं भजति भवतः पाददेशापदेशात् ॥ ५५ ॥

ஸௌந்தர்யாக்க்யா ஸரிதுரஸி விஸ்தீர்ய மத்யாவருத்தா
ஸ்தாநால்பத்வாத் விஷமகதிஜாவர்த்தகர்த்தாபநாபிஃ ।
ப்ராப்ய ப்ராப்தப்ரதிமஜகநம் விஸ்த்ருதா ஹஸ்திநாத ।
ஸ்ரோதோபேதம் பஜதி பவதஃ பாததேசாபதேசாத் ॥ 55 ॥

ஹே ஹஸ்திநாத	ஹஸ்திகிரிநாதனே!	ப்ராப்த ப்ரதிம	அடையப்பட்ட ப்ருதுத்வத்தையுடைய [கனமான]
உரஸி	திருமார்பில்	ஜகநம்	ஜகனப்ரதேசத்தை
விஸ்தீர்ய	பரவி [பெருகிக்கொண்டுவருமளவில்]	ப்ராப்ய	அடைந்து
மத்யாவருத்தா	மத்யப்ரதேசத்தாலே தடைபட்டதாய்	விஸ்த்ருதா [ஸதீ]	[முன்பு திருமார்வில் போல]பரவியதாய்க்கொண்டு
ஸ்தாநால்பத்வாத்	அவகாசம் ஸ்வல்பமாயிருந்ததாலே [உண்டான]	பவதஃ	உன்னுடைய
விஷமகதிஜ ஆவர்த்தகர்த்தாப நாபிஃ	விஷமகதியாலுண்டான குழிபோன்றிருக்கிற நாபியையுடைத்தான	பாததேச அபதேசாத்	திருவடிக ளென்கிற வ்யாஜத்தாலே
ஸௌந்தர்யாக்யா ஸரித்	ஸௌந்தர்யமென்று பெயர்பூண்ட நதியானது	ஸ்ரோதோ பேதம் பஜதி	ப்ரவாஹபேதத்தை யடைகிறது. [இரண்டுவாய்க்காலாகப் பிரிகின்றதென்றபடி.]

இனி, திருத்துடைகள் திருமுழந்தாள்கள் திருக்கணைக்கால்கள் முதலிய ஸந்நிவேசங்களைத் தனித்தனியே வர்ணிக்கப்புகுகிறாராய் அந்த அவயவங்களின் விசிஷ்டவேஷமாய், திருவுதரத்துக்குக் கீழ்ப்பட்டதான பாததேசத்தை ஒரு சமத்காரமாக வர்ணித்தருளுகிறார் இதில். [ஹே ஹஸ்திநாத! உரஸி விஸ்தீர்ய மத்யாவருத்தா, ஸ்தாநால்பத்வாத்விஷமகதிஜாவர்த்தகர்த்தாபநாபிச்ச பவதஃ ஸௌந்தர்

யாக்க்யா ஸரித் ஸ்ரோதோபேதம் பஜதி-இத்யந்வய꞉] பேரருளாளனுடைய திருமேனியிலே அழகு, வெள்ள மிட்டோடாநின்றதென்னலாம்படி யிருக்கையாலே அந்த ஸௌந்தர்யத்தை ஒரு நதியாக ரூபணம் பண்ணுகிறார். அந்த நதியானது [உரஸி விஸ்தீர்ய] திருமார்பிலே பரவி, விசாலமான இடம் வாய்த்தால் நதிகள் பரவிச் செல்லுமிறே. * பெரிய வரை மார்பிறே பேரருளாளனுடைய திருமார்பு. அதிலே இந்த ஸௌந்தர்யஸரித்தானது நிஸ்ஸங்கோசமாகப் பரவிற்றுய்த்து. [மத்யாவருத்தா] அங்ஙனம் மார்பிலே பரவிக் கீழிழியப் புக்கவாறே இடையிலே தடையுண்டதாய்த்து; இடையானது ப்ரக்ருதிக்ருசமாகையாலே. இட்டளத்திலே பெருகிச் செல்லவொண்ணாதிறே. ஆகையாலே ஸௌந்தர்ய நதியானது மத்யாவருத்தமாய்த்து. 'ஸ்தானால்பத்வாத்' என்கிறவிது மத்யமதீபம்போலே முன்னும் பின்னு மந்வயிக்கவுமாம். [விஷமகதிஜாவர்த்தகர்த்தாபநாபி꞉] ஸமகதியாகப் பெருகி வந்த ஸரித்து மத்யாவருத்தமாய்ப் போகவே அந்த ஸமகதி மாறி விஷமகதியாய்த்து. விசங்கடமான ப்ரதேசத்திலே விரிந்து செல்லவேண்டிய ப்ரவாஹமானது ஒரு ஸங்குசிதஸ்தலத்திலே விஷமகதியாகப் பெருகப்புக்கால் குளப்படியிலே கடலை மடுத்தாற்போன்ற ப்ரவாஹாதிக்யத்தாலே சுழிபடுவதுண்டிறே. அந்த சுழிதானோ என்னலாம்படியாய்த்து திருநாபி. ஆகவே விஷமகதியடியாகவுண்டான ஆவர்த்தகர்த்தம் [சுழி] போன்ற நாபியையுடைத்தான யாதொரு ஸௌந்தர்ய நதியுண்டு அதுவானது. [ப்ராப்தப்ரதிமஜகநம் ப்ராப்ய விஸ்த்ருதா ஸதீ] ஸ்தலஸங்கோசக் குறை நீங்கி ப்ருதுவான ஜகநஸ்தானத்தைப் பெற்று மீண்டும் திருமார்பில்போலே விஸ்த்ருதமாய். [பாததேசாபதேசாத் ஸ்ரோதோபேதம் பஜதி] இரண்டட்டத்திலும் நீண்டு விளங்குகின்ற திருவடிகளென்ற வ்யாஜத்தாலே அந்த ஸௌந்தர்ய நதிதான் இரண்டு பெருக்காகப் பிரியலுற்றதென்கிறார். உலகில் பெருக்காறுகளின் இயல்பு இங்ஙனே யிறேயிருப்பது. ஆகவித்தால் பேரருளாளனுடைய திருத்தாள்கள் ஸௌந்தர்யமே வடிவெடுத்தாற் போன்றுள்ளன என்றதாய்த்து. திருப்பாதங்களை ஸௌந்தர்யத்துக்கு அதிகரணமாக வர்ணிக்கை யன்றிக்கே ஸௌந்தர்யதாதாத்ம்யமாக வர்ணித்தவிது ஸௌந்தர்ய ப்ராசுர்யத்யோதநார்த்தமாம்.....(55)

रम्भास्तम्भाः करिवरकराः कारभास्सारभाजः वेषाश्लेषा अपि मरकतस्तम्भमुख्यास्तुलाख्याः ।
साम्यं सम्यक्वरद न दधुस्सर्वमुर्वोस्त्वदूर्वोः न ह्यैश्वर्यं दधति न तथा यौवनारम्भजृम्भाः ॥ ५६ ॥

ரம்பாஸ்தம்பா꞉ கரிவரகரா꞉ காரபாஸ்ஸாரபாஜ꞉
வேஷாச்லேஷா அபி மரகதஸ்தம்பமுக்யா ஸ்துலாக்யா꞉ ।
ஸாம்யம் ஸம்யக் வரத ந ததுஸ் ஸர்வமுர்வோ ஸ்த்வதூர்வோ꞉
ந ஹ்யைச்வர்யம் தததி ந ததா யௌவநாரம்பஜ்ரும்பா꞉ ॥ 56 ॥

ஹே வரத	ஓ வரதனே !	ஊர்வோ꞉	பருத்திருக்கிற
ஸாரபாஜ꞉	பலிஷ்டங்களான	த்வதூர்வோ꞉	உனது திருத்துடைகளுக்கு
ரம்பாஸ்தம்பா꞉	வாழைத்தண்டுகளென்ன	ஸர்வம் ஸாம்யம்	ஸர்வாத்மநா ஸாம்யத்தை
கரிவர கரா꞉	கஜேந்திரத்தின் துதிக்கைகளென்ன	ஸம்யக் ந தது꞉	நன்றாகப் பெறவில்லை ;
		ஹி	ஏனென்றால்
காரபா꞉	கரபப்ரதேசங்களென்ன	[தே]	கீழ்ச்சொன்ன ரம்பாஸ்தம்பாதிகள்
மரகதஸ்தம்ப முக்யா꞉	மரகதமயமான தூண் முதலியவையென்ன	ததா ஐச்வர்யம்	அப்படிப்பட்ட சக்தி விசேஷத்தை
	[ஆகிய இவை யெல்லாம்]	ந தததி	வஹிக்கின்றனவில்லை ;
வேஷா ச்லேஷா꞉	துடைகளினுடைய ஆக்ருதி போன்ற ஆக்ருதியின் ஸம்பந்தத்தையுடையவைகளாய்	ததா யௌவநாரம்ப ஜ்ரும்பா꞉	எப்போதும் யௌவனாரம்பமேயாயிருக்கிற அப்படிப்பட்ட அழகுகளையும் [அல்லது] யௌவனாரம்பத்தில் உண்டாகக்கூடிய அப்படிப்பட்ட விகாஸங்களையும்
	[அத ஏவ]		
துலாக்யா꞉ அபி	உபமானமாகப்போரும் ப்ரஸித்தியை உடையவையாயினும்	ந தததி	வஹிக்கின்றனவில்லையே;

* * * பாததேசத்திலே ப்ரதமாவயவமான திருத்தொடைகளின் அழகிலே ஆழங்கால்பட்டுப் பேசுகிறார். கந்தலிதகதலீகாண்டகரிகரகாபமரகதஸ்தம்பாதிகளை என்று அடிபருத்து நுனிசிறுத்து மதமதென்று மாம்ஸலங்களாயிறே பேரருளாளனுடைய திருத்தொடைகள் விளங்குவது. கதலீகாண்டப்ரப்ருதிகளை ஸாமான்யமாகச் சில கவிகள் தொடைகளுக்கு உபமானமாக வர்ணிப்பதுண்டாகிலும் பேரருளாளனுடைய திருத் தொடைகளுக்கு அவை உபமானமாக ப்ராப்தியில்லையென்னு மிடத்தை ஸஹேதுகமாக அருளிச்செய்கிறார். "நாகேந்த்ரஹஸ்தாஃ த்வசி கர்கசத்வாத் ஏகாந்தசைத்யாத கதலீவிசேஷாஃ I லப்த்வாபி லோகே பரிணாஹிரூபம் ஜாதாஸ்ததூர்வோருபமாநபாஹ்யாஃ" என்று ஸாமான்ய விஷயங்களில் சொல்லும்படி இதுவானால் பேரருளாளன் விஷயத்திலே கிமுத? என்னுமித்தனையிறே.

[ரம்பாஸ்தம்பாஃ] அடிபருத்து நுனிசிறுத்திருக்கைக்கும் குளிர்ந்திருக்கைக்கும் கதலீகாண்டங்களைத் துடைகளுக்கு உபமானமாகச் சொல்லிப் போருவதுண்டிறே. [கரிவரகராஃ] அப்படியே யானையின் துதிக்கைகளும் [காரபாஃ] * தஸ்யேதம் என்கிற அர்த்தத்திலே வந்த அண் ப்ரத்யயமல்ல; கரபா ஏவ காரபாஃ என்று ஸ்வார்த்திக ப்ரத்யயமாய்க் கிடக்கிறது. கரபமாவது—'கரபந்தாதாகநிஷ்டம் கரஸ்ய கரபோ பஹிஃ' என்ற அமரகோசத்தின்படி மணிக்கட்டுமுதல் சுண்டுவிரலளவுள்ள கரபஹிஃ ப்ரதேசம். இதுவும் அடிபருத்து நுனி சிறுத்திருக்கையாலே ஊரு த்ருஷ்டாந்தமாகும். [ஸாரபாஜஃ] இந்த விசேஷணம் ரம்பாஸ்தம்பாதிவிசேஷ்யசதுஷ்டயத்திலும் அந்வயிக்கைக்குரியது. பலிஷ்டங்களான (அல்லது) ப்ரசஸ்தங்களான கதலீகாண்டங்களென்ன, சுண்டாதண்டங்களென்ன, கரபப்ரதேசங்களென்ன, மரதகஸ்தம்பாதிகளென்ன இவையெல்லாம் [வேஷாச்லேஷா அபி, துலாக்யா அபி] தொடைகளினுடைய ஆக்ருதிபோன்ற ஆக்ருதியின் ஸம்பந்தத்தை யுடையவைகளாய் அதஏவ ஸாத்ருச்யப்ரஸித்தியை யுடையவைகளா யிருந்தபோதிலும் என்றபடி வேஷஸ்ய ஆச்லேஷஃ யேஷாம் தே—இதி வ்யதிகரணபஹுவ்ரீஹிஃ; அதவா வேஷம் ஆச்லிஷ்யந்தீதி வேஷாச்லேஷாஃ என்னவுமாம். ரம்பாஸ்தம்பாதிகள் ஊருஸமாநாகாரங்களென்றதாய்த்து. [துலாக்யாஃ] துலேதி ஆக்யா யேஷாம் தே, அதவா, துலாயாம் [ஔபம்யே] ஆக்யா [ப்ரஸித்திஃ] யேஷாந்தே இதி வா பவது. 'கரபோரு' 'ரம்போரு' இத்யாதி ப்ரயோகங்களுள்ளமையால் ரம்பாஸ்தம்பாதிகளுக்கும் தொடைக்கும் ஒரு உபமாநோபமேய பாவப்ரஸித்தியுண்டிறே; அத்தைச் சொன்னபடி. ஹஸ்திஹஸ்தயுகலாபஸுவ்ருத்தௌ ராஜதஃ க்ரமக்ருசௌ ச ஸதூரு ஸுந்தரஸ்ய வநபூதரபர்த்துஃ ||" என்று ஸுந்தரபாஹுஸ்தவத்திலே இவர் தாமும் அருளிச் செய்தாரிறே லௌகிக ப்ரஸித்தியை அநுஸரித்து. ஆக உபமாநத்வப்ரஸித்தியையுடைய இந்த வஸ்துக்களெல்லாம்;

[வரத! ஊர்வோஃ த்வதூர்வோஃ ஸர்வம் ஸாம்யம் ஸம்யக் ந ததுஃ] உன்னுடைய சிறந்த திருத்தொடைகளுக்கு ஏகதேசஸாம்யத்தை வஹிக்குமித் தனையல்லது ஸர்வதா ஸாம்யம் போராதுகாண் என்றபடி. ஸுவ்ருத்தங்களாய் க்ரமக்ருசங்களாயிருக்கும் அம்சத்திற்கு மாத்திரம் ஒருவாறு போலியாகக் கூடுமத்தனைபோக்கி, உட்புகுந்து பார்த்தால் ப்ரதாநாம்சங்களிலே குறையுற்றிருக்கு மிறே அவ்வுபமான பதார்த்தங்கள்.

ரம்பாஸ்தம்பாதிகளிற்காட்டில் பேரருளாளனுடைய திருத்தொடைகளுக்குள்ள சிறப்பு என்னென்ன, வ்யதிரேகமுகத்தாலே அருளிச்செய்கிறார். [ந ஹ்யைச்வர்யமித்யாதி] தே-என்ற ஒரு கர்த்ருபதம் அத்யாஹரித்துக்கொள்வது. அந்த 'ரம்பாஸ்தம்பாதிகளானவை [ந ஹி ததா ஐச்வர்யம் தததி] ஐச்வர்யமாவது—இங்கே சக்தி. அதாவது ஸாமர்த்த்யம். எம்பெருமானுடைய திருத்தொடைகளுக்கு அஸாதாரணமான சக்தி ஏதென்னில்; மதுகைடபஸம்ஹார வ்ருத்தாந்தத்தைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறபடி. திருமாலிருஞ்சோலை யழகருடைய திருத்தொடைகளுக்கு விசேஷணமிடும்பொது 'பிஷ்டதுஷ்டமதுகைடபகீடௌ' என்றருளிச்செய்தவரிறே இவர். எம்பெருமான் மதுகைடபர்களைத் துடையாலிறுக்கிக் கொன்றருளினனென்று ப்ரஸித்தமிறே. பண்டொரு ஸமயவிசேஷத்திலே அவ்வஸுரர்கள் பெற்றிருந்த வரம் பழுதாகாமைக்காக வாய்த்து துடையிடையிலிறுக்கி முடித்தது. இந்த சக்தி விசேஷமாய்த்து இங்கே ஐச்வர்ய சப்தத்தாலே விவக்ஷிதம். இப்படிப்பட்ட வல்லமை ரம்பாதிகளுக்கு அணுமாத்ரமுமிருக்க ப்ரஸக்தியில்லையிறே.

[ததா யௌவநாரம்பஜ்ரும்பாச்ச ந தததி] ரம்பாஸ்தம்பாதிகள் காலாதீநபரிணாமசாலிகளாகையாலே ஸர்வகாலத்திலும் ஒருபடிப்பட அழகுபெற்றிருக்கமாட்டா. ப்ரதமக்ஷணத்திலே செவ்வியவாகிக்

காணப்பட்டு த்விதீய க்ஷணத்திலே உருமாய்ந்தொழியும்படியிறே அவற்றின் ரீதி யிருப்பது. திருத்துடைகளோ வென்றால், யௌவனத்தின் உபக்ரமதசையிலே யிருக்கக்கடவ விஜ்ரும்பத்திற்கு ஒருபோதிலும் விச்சேதமின்றிக்கே யௌவநப்ராகபாவதசையே எப்போதும் கோட்சொல்வனபோல விளங்கா நின்றமையால் இவற்றுக்கும் அவற்றுக்கும் நெடுவாசிபோருமிறே. "ஜ்ரும்பஸ்து த்ரிஷு ஜ்ரும்பணம்" என்ற அமரகோசத்தின்படி ஜ்ரும்பசப்தம் லிங்கத்ரயத்திலும் உண்டாகையால் இங்கே ஸ்திரீலிங்கமாக ப்ரயுக்தமாய்த்து. [ஜ்ரும்பாம், ஜ்ரும்பே, ஜ்ரும்பா: இதி த்விதீயாபஹுவசநம். ஜ்ரும்பாந் என்றும் சிலர் ஓதுவர். ஜ்ரும்பமாவது விலக்ஷணவிகாஸம். ஸர்வம் ஸாம்யமென்றது ஸர்வாத்மநா ஸாம்யமென்றபடி. அம்சதஸ்ஸாம்யமேயுள்ளதத்தனை. (56)

या ते गात्रे वरद जनिता कान्तिमय्यापगाऽभूत् तस्यास्स्रोतोद्वितयमिह यद्याति पादप्रवादम् ।
तज्जातोर्ध्वभ्रमियुगमिवोद्भानुनी जानुनी ते स्यादुक्ष्णोर्वा ककुदयुगलं यौवनैश्वर्यनाम्नोः ॥ ५७ ॥

யா தே காத்ரே வரத ஜநிதா காந்திமய்யாபகாபூத்
தஸ்யாஸ் ஸ்ரோதோ த்விதயமிஹ யத் யாதி பாதப்ரவாதம்।
தஜ்ஜாதோர்த்வப்ரமியுகமிவோத்பாநுநீ ஜாநுநீ தே
ஸ்யாதுக்ஷ்ணோர் வா ககுதயுகளம் யௌவநைச்வர்யநாம்நோ: ‖ 57 ‖

ஹே வரத	ஓ வரதனே !
தே காத்ரே	உனது திருமேனியில்
காந்திமயீ	காந்திஸ்வருபமான
யா ஆபகா	யாதொரு நதியானது
ஜநிதா	உண்டாக்கப்பட்டிருக்கிறதோ
தஸ்யா:	அந்த நதியினுடைய
யத் ஸ்ரோதோ த்விதயம்	இரண்டு பிரிவான யாதொரு ப்ரவாஹமானது
இஹ	இந்தத் திருமேனியில்
பாதப்ரவாதம்	திருவடிகளென்கிற வ்யாஜத்தை
யாதி	அடைகின்றதோ ;
உத்பாநுநீ	மேற்கிளர்ந்த சோபையையுடைய

தே ஜாநுநீ	உனது முழந்தாள்கள்
தஜ்ஜாத ஊர்த்வ ப்ரமியுக மிவ	[பாத ப்ரவாதத்தை யடைந்த] அந்த ப்ரவாஹத்வயத்திலுண்டான ஊர்த்வாகாரமான இரண்டு நீர்க்குமிழி போல
[பாத:]	விளங்குகின்றன
வா	அல்லது
யௌவநைச் வர்ய நாம் நோ:	யௌவனமென்னும் ஐச்வர்யமென்னும் பெயரையுடைய
உக்ஷ்ணோ:	இரண்டு எருதுகளினுடைய
ககுதயுகளம் ஸ்யாத்	இரண்டு முசுப்புகளாம்,

திருமுழந்தாள்களினழகிலே ஈடுபட்டுப் பேசுகிறார். 'ஸௌந்தர்யாக்யா ஸரிதுரஸி' என்ற கீழ்ச்லோகத்தின் தாத்பர்யத்தை இந்த ச்லோகத்தின் பூர்வார்த்தத்தாலே அநுபாஷிக்கிறார். [ஹே வரத தே காத்ரே காந்திமயீ யா ஆபகா அபூத், தஸ்யா: யத் ஸ்ரோதோத்விதயம் பாதப்ரவாதம் யாதி] பேரருளாளனே! தேவரீருடைய திருமேனியிலே யாதொரு ஸௌந்தர்யமஹாநதி வெள்ளமிட்டுக்கிடக்கிறதோ ; அந்த நதியினுடைய யாதொரு ப்ரவாஹத்வயமானது அங்க்ரி தண்டங்களென்கிற வ்யபதேசத்தை யடைந்திருக்கிறதோ—[இவ்வர்த்தம் பூர்வோக்தாநுவாதமென்னுமிடத்தை நன்கு விளக்கும் யச்சப்தவீப்ஸை.]

[தஜ்ஜாதேத்யாதி] அந்த ப்ரவாஹத்வயத்திலுண்டான ஊர்த்வாகாரமான இரண்டு நீர்க்குமிழிகள் போலே விளங்காநின்றன—தேவரீருடைய திருமுழந்தாள்கள். எனவே, ஸௌந்தர்யம் தேங்கிநிற்குமிடமென்றதாய்த்து. இங்ஙனன்றிக்கே, வேறொருபடியாகவும் உத்ப்ரேக்ஷிக்கலா மென்கிறார் [ஸ்யாதித்யாதியாலே.] யௌவநைச்வர்யநாம்நோ ; உக்ஷ்ணோ: ககுதயுகலம் வா ஸ்யாத்—யௌவனமென்ன ஐச்வர்யமென்ன இவைகளாகிற இரண்டு வ்ருஷப ராஜங்களின் முசுப்புகள்தான் முழந்தாள்களாக மிளிர்கின்றன வென்றும் சொல்லலாமென்கை. வ்ருஷபங்களுக்கு முசுப்பானது அஸாதாரண நிருபகமாவதுபோல, திருமுழந்தாள்கள் யௌவநைச்வர்யங்களுக்கு அஸாதாரண நிருபகங்களா யிருக்கின்றன வென்றபடி. "யௌவநவ்ருஷககுதோத்பேதநிபம் நிதராம் பாதி விபோருபயம் ஜாநுசுபாக்ருதிகம்" என்ற ஸுந்தரபாஹுஸ்தவஸூக்தி இங்கே அநுஸந்தேயம். ஸ்ரோதோத்விதயம், ஸ்ரோதோயுகலமிதி பாடபேதః உத்பாநுநீ—உத்கச்சந்த: பாநவ: யயோஸ்தே. எப்போதும் வெளிக்கிளர்கின்ற ஒளிபொருந்தியவை. (57)

प्रेम्णाऽऽक्रातुं करिगिरिशिरोधोमुखीभावभाजोः अङ्घ्रिद्वन्द्वाह्वयकमलयोः दण्डकाण्डायमाने ।
अद्रिस्पर्शोद्भवसुखत उत्कण्टके रोमहर्षात् द्रष्टुर्दृष्टिर्वरद किमलं लंघितुं जंघिके ते ॥ ५८ ॥

ப்ரேம்ணாக்ராதும் கிரிகிரிசிரோதோமுகீபாவபாஜோ:
அங்க்ரித்வந்த்வாஹ்வயகமலயோர்தண்டகாண்டாயமாநே ।
அத்ரிஸ்பர்சோத்பவஸுகத உத்கண்டகே ரோமஹர்ஷாத்
த்ரஷ்டுர் த்ருஷ்டிர் வரத கிமலம் லங்கிதும் ஜங்கிகே தே ॥ 58 ॥

ஹே வரத	ஓ வரதனே !
கரிகிரிசிர:	கரிகிரியின் உச்சியை
ப்ரேம்ணா ஆக்ராதும்	[போக்யதாதிசய ப்ரயுக்தமான] ப்ரீதியால் ஆக்ராணம் செய்வதற்கு
அதோமுகீ பாவபாஜோ:	கவிழ்முகமாகவிருக்கும் நிலைமையை யடைந்துள்ள
அங்க்ரித்வந்த்வ ஆஹ்வயகமலயோ:	திருவடியிணைகளென்னும் தாமரை மலர்களினுடைய
தண்டகாண்டாயமாநே	நாளத்தண்டு போன்றனவாய்
அத்ரிஸ்பர்சோத்பவ ஸுகத:	திருமலையோட்டை ஸ்பர்சத்தாலுண்டான ஸுகத்தினாலாகிய
ரோமஹர்ஷாத்	மயிர்க்கூச்செறிவதனால்
உத்கண்டகே	கண்டகிதங்களாயிருக்கிற
தே ஜங்கிகே	உனது கணைக்கால்களை
த்ரஷ்டு: த்ருஷ்டி:	ஸேவிப்பவனுடைய கண்
லங்கிதும்	விட்டு அவ்வருகே போக
அலம் கிம்	வல்லதோ?

* * * பேரருளாளனுடைய திருக்கணைக்கால்களினழகிலே தாம் ஈடுபட்டபடியை அருளிச் செய்கிறார். திருவத்திமாமலையின் போக்யதாதிசயப்ரயுக்தமான ப்ரீதிவிசேஷத்தாலே அத் திருமலையின் உச்சியை மோந்து மகிழவேண்டுமென்று நினைத்த பேரருளாளன் திருவடித்தாமரைகளானவை கீழ்முகமாயிருப்பனவாகவும், திருக்கணைக்கால்களானவை அத்தாமரைகளின் நாளதண்டங்களோவென்னலாம்படி யிருப்பனவாகவும், ஹஸ்திகிரிஸ்பர்சத்தாலுண்டான ஸுகவிசேஷத்தாலே அக்கணைக்கால்கள் ரோமாஞ்சிதமா யிருப்பதானது கமலநாள தண்டங்களிலே கண்டகமென்னலாம்படி யிருப்பதாகவும். இப்படி பரமபோக்யமான திருக்கணைக்கால்களைத் தவிர்த்து மற்று எந்த வஸ்துவிலும் கண்செல்லவொண்ணாதபடி ஆபிருப்யம் விஞ்சியிருப்பதாகவும் அருளிச் செய்கிறார்.

[கரிகிரிசிர: ஆக்ராதும்] அத்யந்த ப்ரீதிவிஷயமான வஸ்துவிலே ப்ரீதிபரீவாஹமாகச் செய்யும் செயல்களிலே உச்சிமோருகை யென்பது ஒன்றிறே; "என் மார்வத்திடையழுந்தத் தழுவாதே முழுசாதே **மோவாதுச்சி**" என்னக்கடவதிறே. பேரருளாளன் பொருந்தி வர்த்திப்பதற்கு இத் திருமலையானது மிகவும் பாங்கான ப்ரதேசமாக வாய்த்தமையாலே அந்த ப்ரீதி விசேஷத்துக்குப் போக்குவீடாக இத்திருமலையை உச்சிமோர வேண்டுமென்று பேரருளாளனுடைய திருவடித்தாமரைகள் அதோமுகத்வத்தை ப்ராபிக்கவே, கணைக்கால்கள் நாள தண்ட ஸ்தாநீயத்வத்தை ப்ராபித்தன. ஸுந்தரபாஹுஸ்தவத்திலும்—"அதோமுகந்யஸ்தபதாரவிந்தயோ: உதஞ்சிதோதாத்தஸுநாலஸந்நிபே । விலங்க்ய ஜங்கே க்வநு ரம்ஹதோ த்ருசௌ வநாத்ரிநாதஸ்ய ஸுஸுந்தரஸ்ய மே ॥" என்றருளிச் செய்துள்ளமை **காண்க.**

திருக்கணைக்கால்களைக் கமல நாளதண்டமாகச் சொன்னால் அதுக்கு இருக்கக் கடவ கண்டக வ்யாப்தி யிருக்கவேணுமேயென்ன, அதுவுமுண்டென்கிறார் [அத்ரிஸ்பர்ச்சேத்யாதியாலே] இஷ்டதம வஸ்து ஸங்கத்திலே ரோமாஞ்சமுண்டாகக்கடவதிறே.

[த்ரஷ்டு:] அநுபோக்தாவான அஸ்மாத்ருச ஜநத்துக்கு என்றபடி. ஜங்கிகே=ஜங்கே ஏவ ஜங்கிகே; ஸ்வார்த்தே கப்ரத்யய:; தே ஜங்கிகே லங்கிதும் த்ருஷ்டி: அலம் கிம்? என்றது வைத்த கண் வாங்காதே இமைக் கொட்டுதலும் செய்யாதே ஸதாதர்சநம் பண்ணவேண்டும்படியிறே தேவரீருடைய திருக்கணைக்கால்களின் அழகிருப்பதென்கை. (58)

भक्तानां यद्वपुषि दहरं पण्डितं पुण्डरीकं यच्चाम्लानं वरद सततध्यासनादासनाब्जम् ।
आम्नायानां यदपि च शिरो यच्च मूर्धा शठारेः हस्त्यद्रेर्वा किमतिसुखदं तेषु पादाब्जयोस्ते ॥ ५९ ॥

பக்தாநாம் யத் வபுஷி தஹரம் பண்டிதம் புண்டரீகம்
யச்சாம்லாநம் வரத ஸததாத்யாஸநாதாஸநாப்ஜம் ।
ஆம்நாயாநாம் யதபி ச சிரோ யச்ச மூர்த்தா சடாரே:
ஹஸ்த்யத்ரேர் வா கிமதிஸுகதம் தேஷு பாதாப்ஜயோஸ் தே ॥ 59 ॥

ஹே வரத	ஓ வரதனே !
பக்தாநாம்	பக்தர்களான யோகிகளுடைய
வபுஷி	சரீரத்தில்
பண்டிதம்	ஞானவிகாஸசாலியாய்
தஹரம்	தஹரமென்றும் பேருடையதாய்
யத் புண்டரீகம்	யாதொரு தாமரையுண்டோ, [பரமபதத்தில்]
ஸததாத்யாஸநாத் [அபி] அம்லாநம்	நீ எப்போதும் வீற்றிருந்தபோதிலும் வாட்டமடையாத
ஆஸநாப்ஜம் ச யத்	ஆஸனத் தாமரையென்று யாதொன்றுண்டோ,

ஆம்நாயாநாம் சிரோபி ச யத்	வேதாந்தமென்பது யாதொன்றுண்டோ ;
சடாரே: மூர்த்தா யச் ச	நம்மாழ்வாருடைய திருமுடி யாதொன்றுண்டோ ;
ஹஸ்த்யத்ரே: மூர்த்தா ச ய:	இந்த ஸ்ரீஹஸ்திகிரியின் சிகரம் யாதொன்றுண்டோ
தேஷு	ஆக ப்ரஸித்தமான இந்த ஸ்தானங்களுள்
தே பாதாப்ஜயோ: அதிஸுகதம்	உன் திருவடித் தாமரைகளுக்கு மிக்க ஸுகத்தைக் கொடுக்கிற இடம்
கிம் வா	எது கொல் ?

* * * பேருளாளனுடைய திவ்யாவயவஸந்நிவேசங்களின் ஸௌந்தர்யத்திலே ஈடுபாடாய்ச் செல்லுகிற இப் ப்ரகரணத்திலே இந்த ச்லோகம் ப்ராஸங்கிகமாயிராநின்றதாய்த்து. இத் திருவடிகளின் அருமை பெருமைகளுக்குத் தகுதியாம்படி பொருந்தி வர்த்திக்கைக்குரிய நிலம் திருவத்திமாமலையினுச்சியேயாமென்கிற தம் திருவுள்ளத்தை ஒரு விலக்ஷண ப்ரச்நபங்கியாலே அருளிச் செய்கிறார்.

எம்பெருமானுடைய திருவடிகளுக்கு அதிஷ்டாந ஸ்தானங்கள் பலவுண்டு. 'போதில் கமலவன் நெஞ்சம் புகுந்து' என்றும் 'பனிக்கடலுள் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்தென் மனக் கடலுள் வாழவல்ல மாயமணாளநம்பி' என்றும் 'விட்டுசித்தன் மனத்தே கோயில்கொண்ட கோவலன்' என்றும் அருளிச் செய்தபடியே ஆழ்வார்கள் போல்வாரான பரமபக்தர்களின் ஹ்ருதய புண்டரீகம்-நலமந்தமில்லதோர் நாட்டிலே பகவத்பாதபீடியாக பகவச்சாஸ்த்ராதிகளில் ப்ரதிபாதிதமாய் விமலாத்யஷ்டசக்த்யதிஷ்டித தளாஷ்டகவிசிஷ்டமாய் கர்ணிகாபரிகர்மிதமாய் ஸதத விகாஸோந்முகமான ஆஸனபத்மம், 'நான்மறையுச்சியில் நன்கு விளங்கிய நாரணனார்பதமே' [வில்லிபுத்தூரார் பாரதம்] என்கிறபடியே, வேத மூர்த்தாவாகிய உபநிஷத்துக்கள்; 'வந்தெனதுச்சியுளானே' என்றும் 'திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலே யென்தலையே' என்றுமருளிச் செய்தபடியே—நம்மாழ்வாருடைய திருமுடி என்னுமித்யாதிஸ்தானங்கள் உன் திருவடிகள் பொருந்தி வர்த்திக்கைக்குப் பாங்கான இடங்களென்று கேட்டிருந்தோம்; நீ இப்போது ஹஸ்திகிரி மூர்த்தாவிலே பண்ணும் விருப்பத்தைப் பார்த்தால் அவ்வோ ஸ்தானங்களெல்லாம் 'கல்லும் கனைகடலு' மித்யாதியிற்படியே * புல்லென்றொழிந்தனகொல்! என்னும்படியாய் இவ்விடத்தையே பரமபோக்யமான ஸ்தானமாக ஆதரிக்கிறாய் போலிராநிற்றி; பெருமானே ! இன்ன இடந்தான் உன் திருவடிகளுக்குப் பாங்கான இடமென்று அறுதியிடமாட்டுகிறிலேன். நீயே தெரியவருளிச் செய்தருளவேணுமென்பது பரமதாத்பர்யம்.

ப்ரமாணபலத்தாலே பக்தஜநஹ்ருதயபுண்டரீகாதிகள் உன் திருவடிகளுக்குப் பாங்கான ப்ரதேசமென்றிருந்தாலும் ப்ரத்யக்ஷத்திலே ஸ்ரீஹஸ்திகிரிமூர்த்தாவே பாங்கான ப்ரதேசமென்று விளங்குகிறது. ஆகிலும் ப்ரத்யக்ஷத்தையே ப்ரதாநமாகக் கொண்டு சாஸ்த்ரப்ரமாணங்களை உபமர்திக்கும்படி ஸாஹஸம் அடியேனுக்கில்லாமையால் உன் திருவடிகளுக்கு அபிமததமமான அதிஷ்டாநபூமி இன்னதென்னுமிடத்தை நீயே சோதிவாய் திறந்து அருளிச் செய்தருளா யென்கிறார்.

"சேயோங்கு தண்திருமாலிருஞ்சோலைமலையுறையுமாயா! எனக்குரையாயிது மறைநான்கினு ளாயோ? தீயோம்பு கைமறையோர் சிறுபுலியூர்ச் சலசயனத்தாயோ? உனதடியார் மனத்தாயோ? அறியேனே. [பெரியதிருமொழி. 7—9—7] என்னும் பாசுரத்தை ஒரு புடை அடியொற்றியது இந்த ச்லோகம். அந்தப்பாட்டின் வ்யாக்யானத்திலே 'இத்தால் சொல்லிற்றுத்து—ஸௌபரி பல வடிவு கொண்டாப்போலே இவ்வோவிடங்கள் தோறும் இனி அவ்வருகில்லை யென்னும்படி குறையற வர்த்திக் கிறபடியைக் காட்டிக்கொடுத்தான்.' என்றருளிச் செய்திருக்கையாலே இந்த ச்லோகத்துக்கும் அதுவே தாத்பர்யமாகலாம்.

[பக்தாநாம் யத்வபுஷி தஹரம் பண்டிதம் புண்டரீகம்] [சாந்தோக்யத்திலே 2—1—1] 'அத யதிதமஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேச்ம...............' இத்யாதி ச்ருதியை அநுஸந்திப்பது. ஸ்ரீபாஷ்யத்தில் தஹராதிகரணப்ரமேயத்தையும் ஸ்மரிப்பது. (59)

पथ्यास्वथ्याङ्गुलिषु वरद प्रान्ततः कान्तिसिन्धोः वीचीवीथीविभवमुभयीष्वम्भसो लम्भितासु ।
विन्दन्निन्दुः प्रतिफलनजां सम्पदं किं पदं ते छायाच्छद्मा नखविततितां लम्भितश्शुम्भितस्सन् ॥ ६० ॥

பத்யாஸ்வத்யாங்குளிஷு வரத ப்ராந்தத: காந்திஸிந்தோ:
வீசீவீதீவிபவமுபயீஷ்வம்பஸோ லம்பிதாஸு ।
விந்தந்நிந்து: ப்ரதிபலநஜாம் ஸம்பதம் கிம் பதம் தே
சாயாச்சத்மா நகவிததிதாம் லம்பித: சும்பிதஸ் ஸந் ॥ 60 ॥

ஹே வரத	ஓ வரதனே!
காந்திஸிந்தோ:	காந்திக்கடலினுடைய
அம்பஸ: ப்ராந்தத:	நீரைச்சுற்றி
வீசிவீதீவிபவம்	அலை வரிசையின் சோபையை
லம்பிதாஸு	அடைவிக்கப்பட்டிருக்கிற
பத்யாஸு உபயீஷு அங்குளீஷு	திருவடிகளிலே யுண்டான இரண்டு வகுப்பான திருவிரல்களில்
ப்ரதிபலநஜாம் ஸம்பதம்	ப்ரதிபலிப்பதனாலுண்டான சோபையை

அத்ய விந்தந்	இப்போது அடைகிறவனாய் [அத ஏவ]
சாயாச்சத்மா	ப்ரதிச்சாயா ஸ்வருபனான
இந்து:	சந்திரனானவன்
நகவிததிதாம்	நகபங்க்தியாயிருக்கையை
லம்பிதஸ் ஸந்	அடைவிக்கப்பட்டவனாய்
தே பதம்	உனது திருவடியை
சும்பித: கிம்	விளங்கச் செய்தனன் கொல்?

*** திருவடிகளிலுள்ள திருநகங்களை வர்ணிக்கிறார். திருவிரல்களின் வர்ணநமும் ஊடே நிகழ்கின்றது—பேரருளாளனுடைய திருமேனியிலே ஒரு காந்திஸமுத்ரமுண்டாய்த்து; கடலாகில் அலைகளுமுண்டாகவேணுமிறே. அவ்வலைகள்தானோ என்னலாம்படியிராநின்றன திருவிரல்கள். அத்திருவிரல் களிலே ப்ரதிபலியாநின்ற சந்திரன் ப்ரதிச்சாயையென்னும் வ்யாஜத்தாலே நகபங்க்தியாயிருக்கையை யடைந்து திருவடிகளுக்கு சோபாவஹமாக அமைந்தானென்கிறார். ஸுந்தரபாஹுஸ்தவத்திலே 'ஸௌந்தர்யஸாரரம்ருதஸிந்துவீசீச்ரேணீஷு பாதாம்குலிநாமிகாஸு । ந்யக்க்ருத்ய சந்த்ரச்ரியமாத்ம காந்த்யா நகாவலீ சும்பதி ஸுந்தரஸ்ய ॥" என்றருளிச் செய்தபடி காண்க.

பத்யாஸு-பதஸம்பந்திநீஷு என்றபடி; 'சரீராவயவாத்யத்' [5—1—6] என்னும் ஸூத்ரத்தால் யத்ப்ரத்யயாந்தமா யிருக்கிறது. 'உபயீஷ்வங்குலிஷு' என்றது இரண்டு திருவடிகளிலுமுள்ளமையைப் பற்ற. உபௌ அவயவௌ ஆஸாமிதி உபய்ய: ; தாஸு.

[ப்ரதிபலநஜாம் ஸம்பதம் விந்தந் இந்து:] கடலலைகள்தோறும் சந்திரன் ப்ரதிபலித்துப் பல சந்திரனாகக் காணநின்றேமிறே. அப்படியே இங்கும் ஸௌந்தர்யஸாகரத்தின் தரங்கமாகிய ஒவ்வொரு திருவிரலிலும் சந்திரன் தனித்தனியே ப்ரதிபலித்து நகாவளியாக விளங்குகின்றானென்கிறார். "ப்ரதிபலநம் விந்தந்" என்றாலே போதுமாயிருக்க 'ப்ரதிபலநஜாம் ஸம்பதம்' என்றது:—சங்கரன் சடையினில் தங்கிச் சீர்குலைந்திருக்கும் சந்திரனுக்குப் பேரருளாளனுடைய திருவிரல்களிலே ப்ரதிபலிப்பதானது [illegible] என்னும் திருவுள்ளமாய்த்து. (60)

शम्भोरम्भोरुहमुख सखा सन् सहाङ्कश्शशाङ्कः कुर्वन् सेवां वरद विकलो वृत्तहीनस्सुवक्रः ।
त्वत्पादाब्जे प्रियमख नखच्छद्मनाऽऽश्रित्य नित्यं सद्वृत्तोऽभूत् स च दशगुणः पुष्कलो निष्कलङ्कः ॥६०॥

சம்போரம்போருஹமுக ஸகா ஸந் ஸஹாங்கச்சசாங்க꞉
குர்வந் ஸேவாம் வரத விகலோ வ்ருத்தஹீநஸ் ஸுவக்ர꞉ ।
த்வத்பாதாப்ஜே ப்ரியமக நகச்சத்மநாச்ரித்ய நித்யம்
ஸத்வ்ருத்தோபூத் ஸ ச தசகுண꞉ புஷ்கலோ நிஷ்கலங்க꞉ ॥ 61 ॥

அம்போருஹ முக	தாமரை போன்ற திருமுகத்தை யுடையவனுய்
ப்ரியமக	யஜ்ஞப்ரியனை
ஹே வரத	ஓ பேரருளாளனே ! [ஏற்கனவே]
ஸஹாங்க꞉	பாபமுடையவனுன (2) களங்கத்தை யுடையனுன
ஸ꞉ சசாங்க꞉	அந்த சந்திரனுனவன்
சம்போ꞉	ருத்ரனுக்கு
ஸகா	தோழனுயிருந்துகொண்டும்
ஸேவாம் குர்வந்	[சிரோபூஷணமாய்] ஸேவையைச் செய்தவனுயும்
விகல꞉	வித்யா விஹீனனுய் (2) மூளியாய்
வ்ருத்தஹீந꞉	ஸதாசாரஹீனனுய் (2) உருண்டை வடிவமிழந்தவனுய்
ஸுவக்ர꞉	குடில ஹ்ருதயனுய், (2) மிகவும் கோணலான ஆகாரமுடையவனுய்
ஸந்	ஆகாநின்று
நகச்சத்மநா	நகங்களென்கிற வியாஜத்தாலே
த்வத் பாதாப்ஜே	உன் திருவடித்தாமரைகளை
நித்யம் ஆச்ரித்ய	தினமும் ஆச்ரயித்து
நிஷ்கலங்க꞉	களங்கமற்றவனுய்
புஷ்கல꞉	நித்ய பூர்ணனுய்
ஸத்வ்ருத்த꞉	ஸதாசரமுடையவனுய், (2) உருண்டை வடிவமுடையவனுய்
தசகுண꞉	பதின்மடங்கு பெருகினவனுய்
அபூத்	ஆனுன்.

* * * இப்படி சந்திரன் ப்ரதிச்சாயா வ்யாஜத்தாலாவது பேரருளாளன் திருவடியை ஆச்ரயித்தமையாலே பெற்ற நன்மைகளை ச்லேஷபங்கியாலே ஒரு சமத்காரம் தோற்ற அருளிச்செய்கிறுர். சந்திரனுனவன் ருத்ரனுக்கு ஸகாவாகவும் ஸேவகனுகவும் இருந்துகொண்டு பாபிஷ்டனுகவும் ஞானசூன்யனுகவும் துர்வ்ருத்தனுகவும் வக்ரசித்தனுகவும் ஆய்விட்டான். 'அஸேவ்யஸேவையினுலே நாம் இத்தனை கேடுகளை யடைந்தோமே' என்று அவன்றனே அநுதபித்து நகவ்யாஜத்தாலே தேவரீருடைய திருவடியை யாச்ரயித்து அந்தக் கேடுகள் நீங்கி எல்லா நன்மைகளும் அடையப்பெற்றுனென்கிறுர்; வரதராஜபதாச்ரயணத்திற்கு முன்பு பாபிஷ்டத்வாதிதோஷவிசிஷ்டனுய் இருந்தானென்பது சப்தச்லேஷலப்யம். எங்ஙனேயென்னில்; [ஸஹாங்க꞉, விகல꞉, வ்ருத்தஹீந꞉, ஸுவக்ர꞉] அங்கேந ஸஹித꞉ ஸஹாங்க꞉, 'அங்கோலாஞ்சந உத்ஸங்கே கலங்கே பாபது꞉கயோ꞉' இதி ஹலாயுத꞉. சந்திரன் களங்க விசிஷ்டனென்னுமிடம் ஸுப்ரஸித்தம். அங்கசப்தார்த்தம் பாபமுமாகையாலே பாபிஷ்டனுய்க் கிடந்தானென்னுமிடமும் தோற்றுகிறது. [விகல꞉] விகதா கலா யஸ்ய ஸ꞉. கலா என்று சாஸ்த்ர விஜ்ஞானத்திற்கும் ஷோடசாம்சத்திற்கும் பெயர். 'கலா சில்பாதிவிஜ்ஞாநே பாகே சந்த்ரஸ்ய ஷோடசே' இதி மேதிநீ. ருத்ரசிரஸ்ஸிலுள்ள சந்திரன் கலாமாத்ரனுகையாலே பூர்ணனல்லனிறே. விகலனென்று மூளியென்றபடி, க்ஷயிஷ்ணு என்னவுமாம். இது வாஸ்தவார்த்தம். அறிவு கெட்டிருந்தானென்னுமர்த்தம் ச்லேஷசக்திலப்யம். [வ்ருத்தஹீந꞉] 'வ்ருத்தோऽதீதேऽப்யதீதேऽபி வர்துலேऽபி ம்ருதே வ்ருதே। வ்ருத்தேऽந்யலிங்கம் வா க்லீபே சந்தச்சாரித்ரவ்ருத்திஷு ।' இதி மேதிநீ. பூர்ணசந்த்ரனுகிலிறே வர்த்துலாகாரனு யிருக்கலாவது. அபூர்ணனுகையாலே வர்த்துலாகார சூந்யனென்பது வாஸ்தவார்த்தம். வ்ருத்தமென்பது ஸச்சரித்ரத்துக்கும் பேராகையாலே நல்ல நடத்தையில்லாதவனென்பது ச்லேஷசக்திலப்யார்த்தம் ॥ [ஸுவக்ர꞉] 'வக்ர꞉ குடிலே க்ரூரபௌமயோ꞉' இதி ஹைம꞉. சரீரத்திலே கௌடில்யமும் புத்தியிலே கௌடில்யமும் ஆக இரண்டுமுள்ளவனை வக்ரனென்பதுண்டு. இங்கே சரீரகத கௌடில்யம் வாஸ்தவார்த்தம். கோண

லான [அதாவது—ருஜுவல்லாத] புத்தியையுடையவனு யிருந்தானென்பது ச்லேஷசக்திலப்யார்த்தம். ஆக, ஸஹாங்கத்வம், விகலத்வம் வ்ருத்தஹீநத்வம் ஸுவக்ரத்வ மென்கிற நாலு தோஷங்கள் சந்த்ர னுக்கு முன்னே யிருந்தன. எந்த ஸமயத்திலே இக்குறைகள் இருந்தனவென்ருல், அதைக் காட்டுகிருர் [சம்போஃ ஸகா ஸந் சம்போஃ ஸேவாம் குர்வந் என்று.] ஈசாநதிக்கானது ஸோமதிக்குக்கு ஸந்நிஹிதமான மைபற்றி 'சம்போஸ்ஸகா ஸந்' என்றது. சிவசிரஸ்ஸுக்கு பூஷணமாயிருக்கும் தன்மைபற்றி 'ஸேவாம் குர்வந்' என்றது. 'ஸஹாங்கஃ' என்ற விசேஷணமொன்று மாத்திரம் 'குர்வந் ஸேவாம்' என்பதற்குப் பூர்வவர்த்தியாகையாலே ஸஹாங்கத்வமாகிற தோஷம் ஸ்வாபாவிகமென்றும் மற்ற விகலத்வாதிதோஷங் கள் அந்த தேவதாந்தரத்தின் ஸம்பந்தத்தாலே நேர்ந்தவையென்றும் விளங்காநிற்கும்.

இனி ஸ்ரீ தேவாதிராஜ சரணாரவிந்தஸமாச்ரயணத்தாலே இக் குறைகளெல்லாம் நீங்கி நன்மை பெற்றுனென்கிறது,—உத்தரார்த்தம். 'த்வத்பாதாப்ஜே' என்றது த்விதீயாத்விவசநம். 'ப்ரியமக!' என்று ஸம்போதனம். ஸஹாங்கனும் விகலனும் வ்ருத்தஹீநனும் ஸுவக்ரனும் இருந்த சந்திரன் பேரருளாளனுடைய திருவடித் தாமரைகளிலே நகவ்யாஜேந ஸமாச்ரயித்த பின்பு, நித்யம் ஸத்வ்ருத்த னும் தசகுணனும் புஷ்கலனும் நிஷ்கலங்கனுமாய்விட்டானென்கிற விதிலும் ச்லேஷமர்யாதை யாயிருக்கிறது. நகசந்த்ரனுக்கு வர்த்துலாகாரத்திலே குறையில்லாமையாலே ஸத்வ்ருத்தனென்கிறது. [ஸத் வ்ருத்தம் யஸ்மிந் ஸஃ—வித்யமாநவர்த்துலாகாரஃ என்றபடி.] பத்துத் திருவிரல்களிலும் பத்து (நக) சந்திரனுக வடிவுகொண்டமையாலே தசகுணனென்கிறது. நகத்வாவஸ்தையிலே பூர்த்திக்குக் குறை யில்லாமையாலே புஷ்கலனென்கிறது. மத்ய களங்கமுள்ளது ஆகாசஸ்த சந்த்ரனுக்கே யாகையாலும் நகசந்த்ரனுக்கு அப்படிப்பட்ட களங்கமிருக்க ப்ரஸக்தியில்லாமையாலும் நிஷ்களங்கனென்கிறது. பூர்வார்த்தத்திலே 'ஸஹாங்கஃ' என்றதுக்கு ப்ரதித்வந்த்வியாக இங்கே 'நிஷ்கலங்கஃ' என்றும் 'விகலஃ' என்றதற்கு ப்ரதிபடமாக 'தசகுணஃ' என்றும் 'வ்ருத்தஹீநஃ' என்றதற்கு ப்ரதியாக 'ஸத்வ்ருத்தஃ' என்றும் 'ஸுவக்ரஃ' என்றதற்கு ப்ரத்யநீகமாக 'புஷ்கலஃ' என்றும் அருளிச்செய்துள்ளபடி காண்க. நூநம் தேவதாந்தரஸேவா அபகர்ஷகரீ; பகவத்ஸேவா உக்கர்ஷகரீதி பாவஃ இதி ஸம்ஸ்க்ருதவ்யாக்யாந ஸூக்திஃ.

'யோ ஜாதக்ரசிமா மலீ ச சிரஸா ஸம்பாவிதச்சம்புநா ஸோऽயம் யச்சரணச்ரயீ சசதரஃ நூநம் நகவ்யாஜதஃ। பூர்ணத்வம் விமலத்வமுஜ்ஜ்வலதயா ஸார்தம் பஹுத்வம் ததா யாதஸ்தம் தருஷண்ட சைலநிலயம் வந்தாமஹே ஸுந்தரம் ॥' என்ற ஸுந்தரபாஹுஸ்தவச்லோகமும் இங்கு நினைக்க. ... (61)

त्वत्पादाब्जे प्रजाता सुरसरिदभवत्प्राक्चतुर्धा ततस्तासु
एकां धत्ते ध्रुवस्सा त्रिभुवनमपुनात्त्रीन्पथो भावयन्ती।
तत्रैका खं व्रजन्ती शिवयति तु शिवं सा पुनस्सप्तधाऽभूत्
तास्वेका गां पुनाना वरद सगरजस्वर्गसर्गं चकार ॥ ६२ ॥

த்வத் பாதாப்ஜே ப்ரஜாதா ஸுரஸரிதபவத் ப்ராக் சதுர்த்தா ததஸ்தாஸு
ஏகாம் தத்தே த்ருவஸ் ஸா த்ரிபுவநமபுநாத் த்ரீந் பதோ பாவயந்தீ।
தத்ரைகா கம் வ்ரஜந்தீ சிவயதி து சிவம் ஸா புநஸ் ஸப்ததாபூத்
தாஸ்வேகா காம் புநாநா வரத ஸகரஜஸ்வர்கஸர்கம் சகார ॥ 62 ॥

ஹே வரத	ஓ வரதனே!
த்வத்பாதாப்ஜே	உன் திருவடித்தாமரையில்
ப்ரஜாதா	உண்டான
ஸுரஸரித்	கங்கையானது
ப்ராக்	முந்துறமுன்னம்
சதுர்த்தா	நான்கு பிரிவாக
அபவத்	ஆயிற்று
ததஃ	பிறகு
தாஸு	அந்த நான்கில்
ஏகாம்	ஒன்றை
த்ருவஃ	த்ருவனவன்
தத்தே [ஸ்ம]	தரித்தான்;

ஸா	த்ருவனால் தரிக்கப்பட்ட அது
த்ரீந் ப்தஃ	மூன்று மார்க்கங்களை
பாவயந்தீ ஸதீ	உண்டாக்கா நின்றுகொண்டு
த்ரிபுவநம்	[ஸ்வர்க்க, அந்தரிக்ஷ, பாதாள] லோகத்ரயத்தை
அபுநாத்	பரிசுத்தமாக்கிற்று ;
தத்ர	மூன்று வழியாகப்பெருகின அவற்றுள்
கம் வ்ரஜந்தீ	அந்தரிக்ஷம் நோக்கிச் செல்கின்ற
ஏகா து	ஒரு நதியோவென்றால்
சிவம் சிவயதி	ருத்ரனைப் பரிசுத்தமாக்குகிறது ;
ஸா புநஃ	சிவனாலே தரிக்கப்பட்ட கங்கையோவென்றால்
ஸப்ததா அபூத்	ஏழு பிரிவாக ஆயிற்று ;
தாஸு	அவைகளில்
காம் புநாநா	பூமியைப் பரிசுத்தமாகச் செய்கின்ற
ஏகா	ஒரு கங்கையானது
ஸகரஜ ஸ்வர்க்க ஸர்க்கம் சகார	ஸகரபுத்ரர்களுக்கு ஸ்வர்க்க ஸ்ருஷ்டியைப் பண்ணிற்று. [ஸகரபுத்ரர்களை ஸ்வர்க்கம் அடையச் செய்தது.]

* * * பேரருளாளனுடைய திவ்யாவயவங்களின் வர்ணநம் கீழ் ச்லோகத்தோடே தலைக் கட்டிற்றாகிலும் இந்த ச்லோகமும் தச்சேஷபூதமாயிருக்கும். கீழ் திருக்கைகளை வர்ணித்தருளும்போது 'அம்போதேஸ்ஸ்வயமபிமந்த்தநம் சகர்த்த' என்னும் ச்லோகம் போலே இதுவும் ப்ராஸங்கிகமாம். பண்டொருகால் த்ரிவிக்ரமாவதாரம் செய்தருளின காலத்திலே "குறைகொண்டு நான்முகன் குண்டிகைநீர் பெய்து மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி - கறைகொண்ட கண்டத்தான் சென்னிமேலேறக் கழுவினான் அண்டத்தான் சேவடியை யாங்கு" [நான்முகன் திருவந்தாதி] என்றருளிச் செய்தபடியே திருவடி விளக்கின தீர்த்தம் பலமுகமாய்ப் பெருகினபடியை அருளிச் செய்கிறார்.

[ப்ராக்] அன்றிவ்வுலகமளந்தகாலத்து. [த்வத்பாதாப்ஜே ப்ரஜாதா ஸுரஸரித் சதுர்த்தா அபவத்] தேவரீருடைய திருவடித்தாமரையில் நின்றும் பெருகின கங்கையானது நாலுபடியாய்ப் பெருகலுற்றது. அவற்றில் ஒரு படியை அருளிச்செய்கிறார் [தாஸ்வேகாம் தத்தே த்ருவஃ] என்று. உத்தாநபாதனென்னும் சக்ரவர்த்தியின் புத்ரனாகிய த்ருவன் ஒரு கங்கையைத் தான் வஹியாநின்றான். த்ருவத்ருதையான அந்த கங்கை செய்தபடியை அருளிச்செய்கிறார். [ஸா த்ரிபுவநமபுநாத் த்ரீந் பதோ பாவயந்தீ] என்று. அந்த கங்கையானது மூன்று மார்க்கங்களை உண்டாக்கிக்கொண்டுபோய் ஸ்வர்க்கம், அந்தரிக்ஷம், பாதாளம் என்னும் த்ரிபுவநத்தையும் பரிசுத்தமாக்கிற்று. த்ருவனாலே தரிக்கப்பட்ட கங்கையானது மூன்று படியாகப் பெருகி மூவுலகங்களையும் தூய்மைபெறுவித்ததென்கை. அந்த மூன்று பெருக்குகளிலே ஒரு பெருக்கின் படியை அருளிச்செய்கிறார்.—தத்ரைகேத்யாதியாலே, [தத்ர கம் வ்ரஜந்தீ ஏகா து சிவம் சிவயதி] மூன்று வழியாகப்பெருகின அவற்றுள் அந்தரிக்ஷத்தை நோக்கிச்சென்ற ஒரு பெருக்கானது ருத்ரனுடைய சிரஸ்ஸுக்கு அணிகலமாகி அவனைப் பரிசுத்தனாக்கிற்று. "கஸ்ய பாதோதகேந ஸ சிவஃ ஸ்வசிரோத்ருதேந?" என்றிறே ஆளவந்தாரருளிச் செய்தது. ஸ்ரீபாகவதத்திலும் 'ஸஞ்சிந்தயேத் பகவதச் சரணாரவிந்தம்' என்று தொடங்கி 'யச்சௌசநிஸ்ஸ்ருதஸரித் ப்ரவரோதகேந தீர்த்தேந மூர்த்நி வித்ருதேந சிவச்சிவோऽபூத்' என்று சொல்லிற்று. உத்யோகபர்வத்தில் 'அத்ர கங்காம் மஹாதேவஃ பதந்தீம் ககநாச்ச்யுதாம் । ப்ரக்ருஹ்ய ப்ரததௌ லோகே மாநுஷே ப்ராஹ்மவித்தமஃ ॥ என்று கூடமாகச் சொல்லப் பட்டவிது ஈச்வரஸம்ஹிதையிலே 'த்ரவீபூதஸ்தா தர்மோ ஹரிபக்த்யா மஹாமுநே ! க்ருஹீத்வா தர்ம பாநீயம் பதம் நாதஸ்ய துஷ்டயே ॥ க்ஷாலிதம் பரயா பக்த்யா பாத்யார்க்யாதிபிரர்ச்சிதம் | ததம்பு பரயா பக்த்யா ததார சிரஸா ஹரஃ । பாவநார்த்தம் ஜடாமத்யே யோக்யோऽஸ்மீத்யவதாரணாத் । வர்ஷாயுதாந்யத பஹூந் ந முமோச ததா ஹரஃ ॥' என்று ஸுவ்யக்தமாகக் கூறப்பட்டது. சிவசிரோத்ருதையான அந்த கங்கையின் படியை அருளிச் செய்கிறார் ஸா புநரித்யாதியாலே. [ஸா புநஃ]—சிவனைப் பரிசுத்தமாக்கின அந்த கங்கையோவென்றால். [ஸப்ததா அபூத்]—ஹ்ராதிநீ பத்மிநீத்யாதி நாமங்களாலே ஏழுபடியாகப் பெருகிற்று. [தாஸு ஏகா காம் புநாநா ஸதீ ஸகரஜஸ்வர்க்கஸர்க்கம் சகார] ஏழுபடியான அவற்றுள் ஒன்றானது பூமியைப் பரிசுத்தப் படுத்தாநின்றுகொண்டு ஸகரபுத்ரர்களுக்கு ஸ்வர்க்க ஸ்ருஷ்டியைப் பண்ணித் தந்தது. ஒருகால் ஸகரசக்ரவர்த்தி அச்வமேத யாகம் பண்ணுமளவிலே அந்த அச்வமானது காணாமல் போக, அதனைத் தேடிக் கொணர்வதற்காகப் பிதாவாலே நியமிக்கப்பட்ட ஸகரபுத்ரர்கள், குற்றமற்ற பல ப்ராணிகளை ஹிம்ஸித்துக்கொண்டு பாதாளம் வரையில் நிலத்தைத் தோண்டிக்கொண்டு போகையில்

கபிலமஹாமுனியின் அருகிலே குதிரையைக் கண்டு அந்தக் கபிலமஹர்ஷியை அபிபவிக்கப்புக, உடனே அவர் இவர்களை பஸ்மீகரித்துவிட, பகீரதப்ரயத்நத்தினுல் பூலோகத்திலே கொணரப்பட்ட கங்கையின் தீர்த்தத்தைத் தெளித்து பஸ்மமாய்க்கிடந்த அவர்கள் ஸ்வர்க்கலோக மடைவிக்கப்பட்டனர் என்று ஸ்ரீராமாயணத்தில் பாலகாண்டத்தில் [38-43 ஸர்க்கங்களில்] சொல்லப்பட்ட கதையை அநுஸந்திப்பது.

ஆகவிந்த ச்லோகத்தாலே—ஸர்வ லோகங்களையும் பரிசுத்தப்படுத்தவல்ல தீர்த்த விசேஷத்தை வெளிப்படுத்தின பெருமை எம்பெருமான் திருவடிக்கு அஸாதாரணமென்று அநுஸந்திக்கப்பட்டதாய்த்து.

இந்த ச்லோகம் முதல் 'நரஸிம்ஹதநுரகௌணீ' என்றும் ச்லோகமளவாகவுள்ள தசகம் கீழ்மேல் தசகங்கள் போலே ஒரே வ்ருத்தத்திலே அமையாதே நாநாவ்ருத்தங்களிலே அமைந்திருக்கும். இந்த ச்லோகம் ஸ்ரக்தராவ்ருத்தம். 'ம்ரப்நைர்யாநாம் த்ரயேண த்ரிமுநியதியுதா ஸ்ரக்தரா கீர்த்திதேயம்' இதி தல்லக்ஷணம் ॥ — (62)

परिजनपरिबर्हा भूषणान्यायुधानि प्रवरगुणगणाश्च ज्ञानशक्त्यादयस्ते ।
परमपदमथाण्डान्यात्मदेहस्तथाऽऽत्मा वरद सकलमेतत् संश्रितार्थं चकर्थ ॥ ६३ ॥

பரிஜநபரிபர்ஹா பூஷணுந்யாயுதாநி ப்ரவரகுணகணுச்ச ஜ்ஞாநசக்த்யாதயஸ்தே ।
பரமபதமதாண்டாந்யாத்மதேஹஸ் ததாத்மா வரத ஸகலமேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த ॥ 63 ॥

ஹே வரத	வரதனே !	ப்ரவரகுண கணுச்ச	சிறந்த குணகணங்களும்
பரிஜந பரிபர்ஹா:	சேஷ சேஷாசநாதி பரிஜநங்களும் சத்ரசாமராதிபரிச்சதங்களும்	பரமபதம்	பரமபதமும்
பூஷணுநி	கிரீடகுண்டலாதி பூஷணங்களும்	அத அண்டாநி	அண்டங்களும்
ஆயுதாநி	திருவாழி திருச்சங்கு முதலிய திவ்யாயுதங்களும்	ஆத்மதேஹ:	ஸ்வாஸாதாரணவிக்ரஹமும்
		ததா ஆத்மா	திவ்யாத்மஸ்வரூபமும்
ஜ்ஞானசக்த்யாதய:	ஜ்ஞாநசக்தி முதலிய	ஏதத் ஸகலம்	ஆகிய இவையெல்லாவற்றையும்
தே	ப்ரஸித்தங்களான	ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த	ஆச்ரிதர்களுக்காக்கினுய்.

* * * இந்த வரதராஜஸ்தவமாகிறது த்வயவிவரணமென்றிறே பலகாலும் சொல்லிப்போந்தது. 'ஸ்ரீநிதிம் நிதிமபாரமர்த்திநாம்' என்கிற ச்லோகத்தாலே ஸ்ரீமத்பதத்தை விவரித்து, மேல் ப்ரதம தசகம் முடிய நாரபதார்த்தத்வேந திருமலையின் சிறப்பையருளிச்செய்து, நாராயணபதத்திலே குணப்ராதாந்ய விவக்ஷையாலே திருக்கல்யாண குணங்களை த்விதீயதசகத்திலருளிச்செய்து, திவ்யமங்களவிக்ரஹயோகமும் நாராயணசப்தார்த்தமாகையாலும் சரணசப்தார்த்ததயா ஆக்ஷேபத: ப்ராப்தமாகையாலும் அத்திருமேனியை யநுபவிக்கத் திருவுள்ளம்பற்றி 'பாணிபாதவதநேக்ஷணசப்தை:' என்று தொடங்கி கீழ் ச்லோகமளவாக வடிவழகு வர்ணநத்திலே ஊன்றினர். இந்த திவ்யமங்களவிக்ரஹாநுபவமானது ராமக்ருஷ்ணுதிவிபவாவதாரத் திருமேனியநுபவத்திலே கொண்டு முட்டிற்று. மேல் அப்படியே அநுபவிக்கப் புகுகிறுராய் அதற்கு முகவுரையாய் இராநின்றதாய்த்து இந்த ச்லோகம். 'ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம் । ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாசஸே' என்ற ஜிதந்தாச்லோகவிவரணமாய்த்து இந்த ச்லோகமிருப்பது. எம்பெருமானுடைய ஸ்வரூபரூபாதிகளெல்லாம் பரார்த்தமாகையாலே அந்த பாரார்த்த்யம் வெளியாம்படிக் குறிப்பாகத் திருவவதாரங்கள் செய்தருள நேர்ந்ததென்று இத்தால் அருளிச் செய்கிறபடி.

[பரிஜநபரிபர்ஹா:] பரிஜநபரிச்சதங்கள் ஆச்ரிதார்த்தமாயிருக்கையாவதெங்ஙனே யென்னில் ; அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்றுகொலோ ? என்று ஆழ்வார் வாய்வெருவுகையாலே பகவத பரிஜநம் ஆச்ரிதர்க்கு ப்ராப்யமாயிறே யிருப்பது. பரிஜநமாவது நித்யஸூரி வர்க்கம். ஆச்ரிதராவார் ஆழ்வார்போல்வார். பகவதர்த்தமாக அன்று காணும் நித்யஸூரிகள் சமைத்திருப்பது ; ஆச்ரிதர்க்கு உசாத்துணையாவதற்கேயிறே. 'நித்யாபிவாஞ்சிதபரஸ்பரநீசபாவை: மத்தைவதை: பரிஜநைஸ்தவ ஸங்க

ஸீய [ஸ்ரீவைகுண்டஸ்தவே] என்னக்கடவதிறே. இனி பரிபர்ஹமாவது சத்ரசாமராதிபரிச்சத. வர்கம், இவை ஸூரிகோடியிலே அந்தர்ப்பூதமாயிருக்கச் செய்தேயும் நித்யஸூரிகளுக்குக் கைங்கர்யோபகரணமாயிறேயிருப்பது ; ஆகையாலே இவையும் ஆச்ரிதார்த்தமாயின.

[பூஷணனி] தந்தாமுடைய பூஷணதிகள் எம்பெருமானுக் குறுப்பாகவேணுமென்று அல்லாதார் விரும்பாநிற்க, எம்பெருமான் தன்னுடைய பூஷணதிகளை ஸ்வாச்ரிதர்களுக்குறுப்பாகவிறே விரும்பிப் போருகிறது.

[ஆயுதாகி] இவையும் ஆச்ரித விரோதி நிரஸநத்திற்கு ஆயுதமாகவும், வினையற்று அநுபவிப்பார்க்கு ஆபரணமாயுமிருக்கும். எவ்வகையிலும் பாரார்த்த்யமேயாய்த்து இவற்றுக்கு வடிவாயிருப்பது. 'எப்போதும் கைகழலா நேமியான் நம்மேல் வினைகடிவான்' என்றும், 'கூரா ராழி வெண் சங்கேந்திக் கொடியேன்பால் வாராய்' என்றுமிறே அருளிச்செயல். ஆயுதத்தின் பாரார்த்த்யத்தை ஜயத்ரதவதப்ரகரணத்திலே தெளியக் கண்டுகொள்வது. 'நாழிகை கூறிட்டுக் காத்து நின்ற' இத்யாதி.

[ஜ்ஞாநசக்த்யாதயஃ ப்வரகுணகணஃ ச] ஜ்ஞாநம்—அஜ்ஞர்க்கு, சக்தி—அசக்தர்க்கு, க்ஷமை—ஸாபராதர்க்கு, க்ருபை—துக்கிகளுக்கு, வாத்ஸல்யம்—ஸதோஷர்க்கு, சீலம்—மந்தர்க்கு, ஆர்ஜவம்—குடிலர்க்கு, ஸௌஹார்த்தம்—துஷ்டஹ்ருதயர்க்கு. மார்தவம்—விச்லேஷபீருக்களுக்கு, ஸௌலப்யம்—காணவாசைப்பட்டவர்க்கு என்கிற இவ்வடைவிலே திருக்கல்யாணகுணங்களெல்லாம் ஆச்ரிதார்த்தமாயிறே யிருப்பது. சௌர்யவீர்யாதிகுணங்களுக்கு ஆச்ரிதார்த்தத்வமுண்டோவென்னில்; ஆச்ரிதவிரோதி நிரஸநார்த்தயா க்ரோதாதேரபி கல்யாணகுணசப்தேந ஸங்க்ரஹஃ' என்றுகத்ய பாஷ்யத்திலே தேசிகனருளிச் செய்த கட்டளையிலே அவையும் ஆச்ரிதார்த்தமாகக் குறை யில்லை.

[பரமபதம்] இதுவும் போகஸ்தானமன்றிக்கே ஆச்ரிதர்க்காகச் சமைந்ததாயிருக்கும், திருவாய்மொழி [3—8—8] 'வானவர் நாட்டையும் நீ கண்டுகொள்ளென்று வீடும் தரும் நின்று நின்றே' என்றவிடத்திலே ஈடு ஸேவிப்பது.

அண்டங்களெல்லாம் எம்பெருமானுடைய க்ரீடையிலே விநியுக்தங்களாயிருக்குமென்று சொல்லியிராநிற்க, இங்கே 'ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த' என்றதெங்ஙனே? என்னில்; இவற்றையெல்லாம் ஆச்ரிதர்க்கு உறுப்பாக்குகை தான் எம்பெருமானுடைய லீலைக்கு விஷயமிறே. ஆகையாலேவ்யாகாதமில்லை.

[ஆத்மதேஹஃ] திவ்யமங்கள விக்ரஹமும் ஆச்ரிதர்க்கேயாயிருக்கும். பரமபதத்திலே ஸூரிகளுக்கு போகயோக்யமாயிருக்கும். வ்யூஹத்தில் வந்தால் ச்வேதத்வீபவாஸிகளுக்கு போகயோக்யமாயிருக்கும். ப்ரஹ்மாதிகளுக்கு ஆச்ரயணீயமா யிருக்கும். விபவங்களில் வந்தால் அதீந்த்ரியமான விக்ரஹத்தை ஸாதுபரித்ராணார்த்தமாக இந்த்ரியகோசரமாக்கி அநுபவிப்பிக்கைக்கு உரித்தாயிருக்கும். அர்ச்சாவதாரங்களிலே வந்தால் 'பின்னானார் வணங்கும் சோதி' என்கிறபடியே அஸ்மதாதிகளுக்கேயாயிருக்கும்.

இங்ஙனே பல சொல்லி என்? உன்னுடைய திவ்யாத்மஸ்வரூபமே பரார்த்தமாயிருக்கு மென்கிறார். [ஆத்மா—இத்யேதத் ஸகலம் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த] நிலாத்தென்றல் சந்தநாதிகள் போலே தனக் கென்ன ஒன்றின்றிக்கே பிறர்க்கேயாயிருக்குமித்தனை.

இந்த ச்லோகம் மாலினீவ்ருத்தம். (63)

अनाप्तं ह्याप्तव्यं न तव किल किंचिद्वरद ते जगज्जन्मस्थेमप्रलयविधयो धीविलसितम् ।
तथाऽपि क्षोदीयस्सुरनरकुलेष्वाश्रितजनान् समाश्लेष्टुं पेष्टुं तदसुखकृतां चावतरसि ॥ ६४ ॥

அநாப்தம் ஹ்யாப்தவ்யம் ந தவ கில கிஞ்சித் வரத! தே
ஜகஜ்ஜந்மஸ்தேமப்ரலயவிதயோ தீவிலஸிதம் ।
ததாபி க்ஷோதீயஸ் ஸுரநரகுலேஷ்வாச்ரிதஜநாந்
ஸமாச்லேஷ்டும் பேஷ்டும் ததஸுகக்ருதாம் சாவதரஸி ॥ 64 ॥

ஹே வரத !	வரதனே !:
தவ	உனக்கு
அநாப்தம்	முன்பு கிடைக்காததாய்
ஆப்தவ்யம்	பிறந்து படைக்கவேண்டியதான
கிஞ்சித்	ஒன்றும்
ந கில	இல்லையிறே,
ஹி	ஏனென்றால்
ஜகஜ்ஜந்மஸ்தேம ப்ரலய விதய꞉	ஜகத்துக்களின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கார்யங்கள்
தே தீ விலஸிதம்	உனது ஸங்கல்பத்தின் விலாஸமாக நிகழ்கின்றதிறே ;
ததாபி	அப்படிப்பட்ட அவாப்தஸமஸ்த காமனாயினும்
ஆச்ரித ஜநாந்	[க்ஷண விரஹாஸஹிஷ்ணுக்களான] பாகவதர்களை
ஸமாச்லேஷ்டும்	அணைகைக்கும்
தத்ஸூக்ருதாம்	அந்த பாகவதர்களுக்குத் தீங்கிழைக்கும் துஷ்டர்களை
பேஷ்டும் ச	பொடிபடுத்துவதற்கும்
க்ஷோதீயஸ்ஸுர நரகுலேஷு	அதிக்ஷுத்ரமான தேவ மநுஷ்யாதி ஜாதிகளில்
அவதரஸி	அவதரித்தருளா நின்றாய்.

* * * 'பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்' என்று எம்பெருமான்றானே * சோதி வாய் திறந்து அருளிச் செய்ததை விவரியாநின்றுகொண்டு அவதாரஹேது இன்னதென்னுமிடத்தை அருளிச் செய்கிறார். ஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை நடத்துவதற்காகத் திருவவதரிக்கின்றானென்று சிலர் நினைக்கக் கூடுமென்று திருவுள்ளம்பற்றி அவற்றுக்கு அந்யதாஸித்தியை அருளிச் செய்கிறார் பூர்வார்த்தத்தாலே. [வரத! தவ அநாப்தம் ஆப்தவ்யம் கிஞ்சிந்நாஸ்தி கில] நீ அவாப்த ஸமஸ்த காமனென்றிறே ப்ரஸித்தி பெற்றிரா நின்றாய். இது வரையில் பெறுததாய் இனிப் பெறக்கடவதான ஒன்றும் இவ்வுலகில் இல்லை காண். ஆகையாலே ஏதேனுமொரு அபீஷ்ட ஸித்திக்காக நீ இந்நிலத்திலே வந்து திருவவதரிக்கிறா யென்கைக்கு அவகாச மில்லை. 'விச்வம் தியைவ விரசய்ய நிசாய்ய பூய꞉ ஸஞ்ஜஹர்ஷ꞉' இத்யாதிப்படியே ஸங்கல்ப மாத்ரத்தாலே ஸ்ருஷ்ட்யாதிகளை நிர்வஹிக்க வல்ல நீ ததர்த்தமாக அவதரித்தா யென்கை அஸங்கதம், 'ஸோகாமயத । பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி । ஸ தபோதப்யத , ஸதபஸ் தப்த்வா । இதம் ஸர்வமஸ்ருஜத । யதிதம் கிஞ்ச' என்றிறே ஓதிக்கிடக்கிறது.

பின்னை எதுக்காகத் திருவவதரித்த தென்ன [ஆச்ரித ஜநாந் ஸமாச்லேஷ்டும் தத்ஸூக்ருதாம் பேஷ்டும் சாவதரஸி] என்கிறார். ஸங்கல்பமாத்ரத்தாலே எதையும் செய்தருளக் கூடுமாகிலும் ஸாது பரித்ராணம் ஸங்கல்ப ஸாத்யமாகாதிறே. 'கள்ள மாயா! உன்னை என்கண் காணவந்து ஈயாயே' என்றும், 'என் கண்கட்குத் திண்கொள்ள வொருநாள் அருளாய் உன் திருவுருவே' என்றும் ப்ரார்த்திக்கு மவர்களுடைய காதலை ஸங்கல்பத்தாலே தலைக்கட்டப் போகாதிறே. 'மழுங்காத ஞானமே படையாக மலருலகில், தொழும் பாயார்க்களித்தாலுன் சுடர்ச்சோதி மறையாதே' இருந்தவிடத்திலே இருந்து ஸங்கல்ப ரூபஜ்ஞானத்தாலே ரக்ஷித்தாயாகில் 'ஆனையிடர்ப்பட்ட மடுவின் கரையிலே அரைகுலையத் தலைகுலைய உணர்த்தியற்று வந்து விழுந்தான்' என்கிற நிரவதிக தேஜஸ்ஸு இழந்ததேயன்றோ என்றாரிறே. ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுடைய கையில் பூவைச் செவ்வியழியாமே திருவடிகளிலே இடுவித்துக் கொண்டது ஸங்கல்பத்தாலே ரக்ஷிக்கப் பார்க்குமன்று பொருந்தாதிறே. இவ் வர்த்த விசேஷங்கள் தோன்றுகைக்காக வாய்த்து 'ஆச்ரித ஜநாந் ரக்ஷிதும்' என்னாதே 'ஸமாச்லேஷ்டும்' என்றருளிச் செய்தது.

[தத்ஸூக்ருதாம் பேஷ்டும் ச] தத்—கீழ்ச் சொன்ன ஆச்ரித ஜநங்கள் என்றபடி. * ஸாது சனத்தை நலியும் கஞ்சன்போல்வாரைக் கிழங் கெடுக்கைக்காகவும் என்கை.

துஷ்டர்களை ஸங்கல்பத்தாலே அழித்துவிட முடியாதோ? அதற்காக வந்து பிறக்கவேணுமோ வென்னில்; ஸ்ரீ வசனபூஷணத்தில்—'"ஈச்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத் தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறுமை யென்று ஜீயர் அருளிச் செய்வர்." என்ற விடத்து வ்யாக்க்யானம் ஸேவித்துத் தெளிக. "ஸங்கல்பமாத்ரத்தாலே ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வ சக்தியான ஸர்வேச்வரன் தன்னை யழிய மாறி இதர ஸஜாதீயனாய் அவதரித்துக் கைதொடனாய் நின்று செய்த ஹிரண்யராவணாதி நிரஸந ரூபங்களான அதிமாநுஷ சேஷ்டிதங்களெல்லாம் ப்ரஹ்லாதன் மஹர்ஷிகள் தொடக்கமான அவ்வொ பாகவத விஷயங்களில் அவ்வவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலே யென்று ஆப்ததம

ஹே வரத !	வரதனே !
தவ	உனக்கு
அநாப்தம்	முன்பு கிடைக்காததாய்
ஆப்தவ்யம்	பிறந்து படைக்கவேண்டியதான
கிஞ்சித்	ஒன்றும்
ந கில	இல்லையிறே,
ஹி	ஏனென்றால்
ஜகஜ்ஜந்மஸ்தேம ப்ரலய விதய:	ஜகத்துக்களின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கார்யங்கள்
தே ந்ரி விலஸிதம்	உனது ஸங்கல்பத்தின் விலாஸமாக நிகழ்கின்றதிறே;

ததாபி	அப்படிப்பட்ட அவாப்தஸமஸ்த காமனாயினும்
ஆச்ரித ஜநாந்	[க்ஷண விரஹாஸஹிஷ்ணுக்களான] பாகவதர்களை
ஸமாச்லேஷ்டும்	அணைகைக்கும்
ததஸுகக்ருதாம்	அந்த பாகவதர்களுக்குத் தீங்கிழைக்கும் துஷ்டர்களை
பேஷ்டும் ச	பொடிபடுத்துவதற்கும்
க்ஷோ தீயஸ்ஸுர நரகுலேஷு	அதிக்ஷுத்ரமான தேவ மநுஷ்யாதி ஜாதிகளில்
அவதரஸி	அவதரித்தருளா நின்றாய்.

* * * 'பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்' என்று எம்பெருமான்றானே *சோதி வாய் திறந்து அருளிச் செய்ததை விவரியாநின்றுகொண்டு அவதாரஹேது இன்னதென்னுமிடத்தை அருளிச் செய்கிறார். ஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை நடத்துவதற்காகத் திருவவதரிக்கின்றானென்று சிலர் நினைக்கக் கூடுமென்று திருவுள்ளம்பற்றி அவற்றுக்கு அந்யதாஸித்தியை அருளிச் செய்கிறார் பூர்வார்த்தத்தாலே. [வரத ! தவ அநாப்தம் ஆப்தவ்யம் கிஞ்சிந்நாஸ்தி கில] நீ அவாப்த ஸமஸ்த காமனென்றிறே ப்ரஸித்தி பெற்றிரா நின்றாய். இது வரையில் பெறாததாய் இனிப் பெறக்கடவதான ஒன்றும் இவ்வுலகில் இல்லை காண். ஆகையாலே ஏதேனுமொரு அபீஷ்ட ஸித்திக்காக நீ இங்கிலத்திலே வந்து திருவவதரிக்கிறா யென்கைக்கு அவகாச மில்லை. 'விச்வம் திவைவ விரசய்ய நிசாய்ய பூய: ஸஞ்ஜஹ்ருஷே' இத்யாதிப்படியே ஸங்கல்ப மாத்ரத்தாலே ஸ்ருஷ்ட்யாதிகளை நிர்வஹிக்க வல்ல நீ ததர்த்தமாக அவதரித்தா யென்கை அஸங்கதம். 'ஸோகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி | ஸ தபோதப்யத | ஸதபஸ் தப்த்வா | இதம் ஸர்வமஸ்ருஜத | யதிதம் கிஞ்ச' என்றிறே ஓதிக்கிடக்கிறது.

பின்னை எதுக்காகத் திருவவதரித்த தென்ன [ஆச்ரித ஜநாந் ஸமாச்லேஷ்டும் ததஸுகக்ருதாம் பேஷ்டும் சாவதரஸி] என்கிறார். ஸங்கல்பமாத்ரத்தாலே எதையும் செய்தருளக் கூடுமாகிலும் ஸாது பரித்ராணம் ஸங்கல்ப ஸாத்யமாகாதிறே. 'கள்ள மாயா ! உன்னை என்கண் காணவந்து ஈயாயே' என்றும், 'என் கண்கட்குத் திண்கொள்ள வொருநாள் அருளாய் உன் திருவுருவே' என்றும் ப்ரார்த்திக்கு மவர்களுடைய காதலை ஸங்கல்பத்தாலே தலைக்கட்டப் போகாதிறே. 'மழுங்காத ஞானமே படையாக மலருலகில், தொழும் பாயார்க்களித்தாலுன் சுடர்ச்சோதி மறையாதே' இருந்தவிடத்திலே இருந்து ஸங்கல்ப ரூபஜ்ஞானத்தாலே ரக்ஷித்தாயாகில் 'ஆனையிடர்ப்பட்ட மடுவின் கரையிலே அரைகுலையத் தலைகுலைய உணர்த்தியற்று வந்து விழுந்தான்' என்கிற நிரவதிக தேஜஸ்ஸு இழந்ததேயன்றோ என்றாரிறே. ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுடைய கையில் பூவைச் செவ்வியழியாமே திருவடிகளிலே இடுவித்துக் கொண்டது ஸங்கல்பத்தாலே ரக்ஷிக்கப் பார்க்குமன்று பொருந்தாதிறே. இவ் வர்த்த விசேஷங்கள் தோன்றுகைக்காக வாய்த்து 'ஆச்ரித ஜநாந் ரக்ஷிதும்' என்னாதே 'ஸமாச்லேஷ்டும்' என்றருளிச் செய்தது.

[ததஸுக க்ருதாம் பேஷ்டும் ச] தத்—கீழ்ச் சொன்ன ஆச்ரித ஜநங்கள் என்றபடி. *ஸாது சனத்தை நலியும் கஞ்சன்போல்வாரைக் கிழங் கெடுக்கைக்காகவும் என்கை.

துஷ்டர்களை ஸங்கல்பத்தாலே அழித்துவிட முடியாதோ? அதற்காக வந்து பிறக்கவேணுமோ வென்னில் ; ஸ்ரீ வசனபூஷணத்தில்— 'ஈச்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத் தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமை யென்று ஜீயர் அருளிச் செய்வர்" என்ற விடத்து வ்யாக்யானம் ஸேவித்துத் தெளிக. "ஸங்கல்பமாத்ரத்தாலே ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வ சக்தியான ஸர்வேச்வரன் தன்னை யழிய மாறி இதர ஸஜாதீயனாய் அவதரித்துக் கைதொடனாய் நின்று செய்த ஹிரண்யராவணாதி நிரஸன ரூபங்களான அதிமாநுஷ சேஷ்டிதங்களெல்லாம் ப்ரஹ்லாதன் மஹர்ஷிகள் தொடக்கமான அவ்வோ பாகவத விஷயங்களில் அவ்வவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலே யென்று ஆப்ததம

[illegible] நஞ்சீயர் அருளிச் செய்வர் " என்பது மணவாளமாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீ ஸூக்திகள். ஸாது [illegible]ணத்தையும் துஷ்ட நிரஸநத்தையும் ஸங்கல்பத்தினாலேயே ஸாதிக்க வல்லவனாயினும் அப்படி [illegible]திக்க எம்பெருமானுக்குத் திருவுள்ள மில்லை யென்றதாயிற்று. இந்த ச்லோகம் சிகரிணீ வ்ருத்தம். (64)

विवेकधियमेकतो ह्यभिनिवेशलेशो हरेत् महत्त्वभिनिवेशनं किमुत तन्महिम्नस्तव ।
अहो विसदृशे जगत्यवततर्थ पार्थादिकं निजं जनमुदञ्चयन् वरद तं समाश्लेषकः ॥ ६५ ॥

விவேகதியமேகதோ ஹ்யபிநிவேசலேசோ ஹரேத்
மஹத்த்வபிநிவேசநம் கிமுத தந்மஹிம்நஸ் தவ ।
அஹோ விஸத்ருசே ஜகத்யவததர்த்த பார்த்தாதிகம்
நிஜம் ஜநமுதஞ்சயந் வரத தம் ஸமாச்லேஷகஃ ॥ 65 ॥

ஹே வரத !	பேரருளாளனே !	தவ மஹிம்நஃ	உனது பெருமைக்கு
ஏகதஃ	ஒரு வஸ்துவிலுள்ள	விஸத்ருசே	அநுருபமல்லாத
அபிநிவேச லேசஃ	ஆசாலேசமும்	ஜகதி	இந்த லோகத்தில்
விவேகதியம்	[இது தக்கது, இது தகாதது என்று பகுத்தறிவதாகிற] விவேகஜ்ஞானத்தை	பார்த்தாதிகம்	அர்ஜுநாதிகளை
		நிஜம் ஜநம் உதஞ்சயந்	பந்துஜநமாக ஸம்பாவியா நின்றவனாய்
ஹரேத் ஹி	கொள்ளைகொள்ளுமிறே;	தம்	அந்த அர்ஜுநாதி ஜனத்தை
மஹத் அபிநிவேசநம் து	அதிகமான ஆசையோ வென்றால்,	ஸமாச்லேஷகஃ	தன்னோடு ஒரு நீராக்கச் செய்கிறவனாய்
கிமுத	விவேகத்தை அழிக்கு மென்பதில் என்ன ஸம்சயம் ?.	அவததர்த்த	அவதரித்தருளினாய்;
தத்	ஆகையால்	அஹோ	இதொரு ஸௌசீல்ய மிருந்தபடி யென் !

* * * கீழ் ச்லோகத்தில் ப்ரஸ்துதமான ஸௌசீல்யத்தை அநுஸந்தித்து விஸ்மிதராகிறார். ஏகதஃ அபிநிவேசலேசஃ விவேகதியம் ஹரேத்] ஒரு வஸ்துதன்னிலே ஸ்வல்பமபிநிவேசமுண்டானாலும் அது விவேகஜ்ஞானத்தைக் குலைத்துவிடுமென்னுமிடம் ஜகத் ப்ரஸித்தமிறே. 'இந்த வஸ்து நமக்குக் கிடைத்தாகவேணும்' என்று நெஞ்சில் பட்டால் பின்பு அது தன்னைப் பெறுகைக்காக ப்ரவர்த்திக்குமவன் ஒரு வரம்பிலே நில்லானாய்த்து. 'இது கர்த்தவ்யம், இது அகர்த்தவ்யம், இது பக்ஷ்யம், இது அபக்ஷ்யம், இவன் அஸேவ்யன், இவன் ஸேவ்யன், இது வக்தவ்யம், இது அவக்தவ்யம் என்றிவ்வளவு ஆராய்ச்சி செய்யமாட்டாதே ஏதேனுமொரு வழியிலே நுழைந்து தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுமிறே ஈடுபாட்டின் பணி.

'அபிநிவேசவசீக்ருத சேதஸாம் பஹுவிதாமபி ஸம்பவதி ப்ரமஃ' என்றிறே ஆகமப்ராமாண்யத்திலே ஆளவந்தாரு மருளிச் செய்தது. 'ஆசை பெருக ஆராய்ச்சி குறுகும்' என்பர்களிறே.

[மஹதபிநிவேசநம் து கிமுத] அத்யல்பமான அபிநிவேசம் படுத்துகிற பாடு இதுவானால் அவ்வபி[illegible]வேசம் அறவிஞ்சினால் விவேகம் குலைகிறபடி வாசாமகோசரமிறே. அபிநிவேசத்தின் அளவு ஏற ஏற [illegible] க்ஷயத்தின் அளவும் ஏறுமிறே. இந்த ஸாமாந்ய ந்யாயத்தை ப்ரக்ருதத்தில் அதிதேசிக்கிறார் [illegible]தியாலே] தத் — மஹத்தான அபிநிவேசம் உண்டானால் விவேகம் நன்றாகக் குலையுமாகையாலே [illegible]படி.

[illegible] [தவ மஹிம்நோ விஸத்ருசே ஜகதி] பிரானே! உன் பெருமைக்கும் நீ வந்து பிறந்த இவ்வுலகத்[illegible] என்ன சேர்த்தியுண்டு? 'அவஜாநந்தி மாம் மூடாஃ' என்று தானே முடிமேல் மோதிக்கொள்ளும் [illegible] கேட்டுக்கு எல்லை நிலமாயிறே இவ்விருள் தருமா ஞாலமிருப்பது. 'விண்ணுளார் பெருமாற்

[காலேந ஸம்சோத்ய தாநித்யாதி] த்வீபாந்தரத்திலே பக்வமாவதொரு பலத்தை ஸ்வதேசத்திலே புஜிக்க விரும்புவா ெனாருவன் அதற்கு வேண்டிய ஸம்ஸ்காரங்கள் பலவற்றையும் அடைவே செய்து நெடுங் காலம் பரிச்ரமப்பட்டாலிறே அபீஷ்டம் ஸித்திப்பது. அத்தனை விளம்பத்தைப் பொறுக்கமாட்டானாகில் ஸ்வதேசத்தை விட்டொழிந்து அந்த பலமுள்ளவிடத்திலே செல்லவேணு மித்தனையிறே. அப்படியே 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்' என்று கொண்டு விரும்பப்படும் ஜ்ஞாநிசேதநர்களை யநுபவிக்க விரும்பு கின்ற பரவாஸுதேவன் அவர்களை ஸம்ஸ்கார க்ரமத்தினாலும், கால க்ரமத்தினாலும் வரப் பார்த்திருக்கும் விளம்பம் பொறாதவனாய் ஸ்வதேசத்தை விட்டகன்று அவர்கள் வாழுமிடமான இருள் தருமா ஞாலத்திலே தானே அடியிட்டு வந்தருளினான் அவர்களோட்டை ஸம்ச்லேஷத்தின் பெருவிருப்பத்தாலே. இப்படி ஆச்ரித ஜந ஸம்ச்லேஷத்திலே அபிநிவேசாதிசயத்தாலே ஓடிவந்து அவதரித்தாயாகில் இதுபற்றி உன்னை ஆக்ஷேபிப்பா ராருமில்லை. ஆசாபாசத்தாலே செய்தாயென்றிட்டு அது தன்னில் காமசாராநுஜ்ஞை பண்ணக்கடவோ மென்கிறார் [அத்ராவதீர்ணோ பவே: என்னு மளவாலே].

[கிம் நாமேத்யாதி] ஆச்ரிதஜந ஸம்ச்லேஷ சாபலத்தாலே நீ இங்கே வந்து பிறந்ததில் விப்ரதிபத்தியும் பண்ணுகின்றிலோம். வந்து அவதரித்தவிடத்திலே உகவாத கம்ஸ சிசுபாலாதிகளுக்கும் உன்னுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை அநுபவயோக்யமாக்கித் தந்து அந்தப் படுபாவிகளையும் திருவடி சேர்த்துக் கொண்டா யென்பது யாதொன்றுண்டு; இது என் கொல்! என்று இது தன்னிலே போர விப்ரதிபந்நரா யிரா நின்றோம் காணென்கிறார்.

[அஸம்ச்ரிதேஷு வேஷம் விதரந் தாந் வ்ருணீஷே—இதம் கிம் நாம?] 'வைது நின்னை வல்லவா பழித்தவர்க்கும் மாகில்போர், செய்து நின்னசெற்ற தீயில்வெந்தவர்க்கும் வந்துனை, எய்தலாகுமென்பர்' [திருச் சந்த விருத்தம்] என்றருளிச் செய்தார் திருமழிசைப்பிரான். உன்னுடைய நிரங்குச ஸ்வாதந்த்ரியம் கரையழியப் பெருகப்புக்கால் 'உகந்தார், உகவாதார்' என்று வாசிவையாதே எல்லாரையும் ஒக்கத் திருவுள்ளம் பற்றுகிறபடி என்கொல்! என்று தலை சீய்க்கிறார்.

இதில் இரண்டாவது பாதத்தில் * ஆநீய ஸ்தபதே ஸ்வஸங்கமக்ருதம் * என்கிற பாடமே ப்ரஸித்தமாக வுள்ளது. * ஆநீய ஸ்வபதேந ஸங்கமயிதும் * என்பதே சுத்தமும் ப்ரசிநமுமான பாட மென்று கோயில் பத்தராவிஸ்வாமி அருளிச் செய்வாராம். இந்த ச்லோகம் சார்த்தூல விக்ரீடித வ்ருத்தம்.

वरद यदि न भुव्यवातरिष्यः श्रुतिविहितास्त्वदुपासनार्चनाद्याः ।
करणपथविदूरगे सति त्वयि अविषयतानिकृताः किलाभविष्यन् ॥ ६७ ॥

வரத யதி ந புவ்யவாதரிஷ்ய: ச்ருதிவிஹிதாஸ் த்வதுபாஸநார்ச்சநாத்யா: ।
கரணபதவிதூரகே ஸதி த்வயி அவிஷயதாநிக்ருதா: கிலாபவிஷ்யந் ॥ 67 ॥

ஹே வரத !	ஓ வரதனே !	ச்ருதிவிஹிதா:	வேதங்களில் விதிக்கப்பட்ட
புவி	இவ்வுலகில்	த்வதுபாஸந அர்ச்சநாத்யா:	உன்னையுபாஸித்தல் ஆராதித்தல் முதலிய க்ரியைகள்
நாவாதரிஷ்ய: யதி	நீ அவதரியாமல் போவாயாகில்	அவிஷயதா நிக்ருதா:	நிர்விஷயங்களா யொழிவதனால் திரஸ்க்ருதங்களாக
த்வயி	[பரவ்யூஹாந்தர்யாம்யாகார மாயிருக்கிற] நீ	அபவிஷ்யந் கில	ஆய்விடுமத்தனையிறே.
கரண பதவிதூர கே ஸதி	இந்த்ரியமார்க்கங்களுக்கு தூரஸ்த னாயிருக்குமளவில்		

* * * இங்ஙனே எம்பெருமான் அவதாரம் செய்தருளாவிடில் ச்ருதிஸ்ம்ருத்யாதி ஸகல சாஸ்த்ரங்களும் நிர்விஷயங்களா யொழியும் என்று சொல்லி அவதாரத்தின் ஆவச்யகதையை அருளிச்செய்கிறார்.

[ஹே வரத த்வம் புவி நாவாதரிஷ்யோ யதி] பேரருளாளனே! தேவரீர் இந்த பூமண்டலத்திலே ஸங்கர்ஷணாதி ரூபேண திருவவதரியா தொழியில், அத ஏவ [த்வயி கரண பத விதூரகே ஸதி] ப்ரவ்யூ

கடிமை செய்வாரையும் செறும் ஐம்புலனிவை, மண்ணுள் என்னைப் பெற்ருலென் செய்யா ?' என்று சிறந்த ஞானிகளும் நெஞ்சுளைந்து நடுங்கும்படியிறே இவ்வுலகத்தின் கொடுமை தானிருக்கும்படி. இப்படிப்பட்ட நிலவுலகிலே [அவததர்த்த] தேவரீர் அவதாரம் செய்தருளிற்று. இங்ஙனே பொருத்தமில்லா வுலகத்திலே திருவவதரிக்கைக்குக் காரண மின்னதென்னுமிடம் தோன்ற அருளிச் செய்கிருர். [பார்த்தாதிக மித்யாதி] அர்ஜுநன், அக்ரூரர்,விதுரர், மாலாகாரர் முதலானோரைத் தம் சுற்றமாகத் திருவுள்ளம் பற்றி அவர்களோட்டை ஸம்ச்லேஷத்திலே யுள்ள எல்லை விஞ்சிய ஈடுபாடுதான் 'இவ்விருள் தருமா ஞாலத்திலே நாம் போய்ப் பிறக்கையாவதென் ?'' என்று ஆராய வொட்டாதே பிறந்துகொடு நிற்கக் காரணமாயிற்றென்றபடி. * மஹதோ மந்தைஸ்ஸஹ நீரந்த்ரேண ஸம்ச்லேஷமாகிற ஸௌசீல்யம் அநுஸந்திக்கப் பட்டதாய்த்து. [அஹோ] இப்படியு மொரு ஸௌசீல்யம் உண்டாவதே ! என்று ஆச்சர்யப் படுகிருர். இந்த ச்லோகம் ப்ருத்வீ வ்ருத்தம். (65)

संश्लेषे भजतां त्वरापरवशः कालेन संशोध्य तानानीय स्वपदे स्वसङ्गमकृतं सोढुं विलम्बं बत ।
अक्षाम्यन् क्षमिणां वरो वरद सन्नत्रावतीर्णो भवेः किं नाम त्वमसंश्रितेषु वितरन् वेषं वृणीषे तु तान् ॥

ஸம்ச்லேஷே பஜதாம் த்வராபரவச꞉ காலேந ஸம்சோத்ய தாந்
ஆநீய ஸ்வபதே ஸ்வஸங்கமக்ருதம் ஸோடும் விலம்பம் பத ।
அக்ஷாம்யந் க்ஷமிணாம் வரோ வரத ஸந்நத்ராவதீர்ணோ பவே꞉
கிம் நாம த்வமஸம்ச்ரிதேஷு விதரந் வேஷம் வ்ருணீஷே து தாந் ॥ 66 ॥

ஹே வரத !	ஓ பேரருளாளனே !
க்ஷமிணாம் வர꞉ த்வம்	பொறுமைசாலிகளுள் சிறந்த நீ
பஜதாம்	பக்தர்களுடைய
ஸம்ச்லேஷே	கலவியில்
த்வராபரவச꞉	மிகவும் த்வரிதனாய் [அத ஏவ]
தாந்	அந்த பக்தர்களை
காலேந	காலக்ரமமாக
ஸம்சோத்ய	சீர்திருத்தி
ஸ்வபதே ஆநீய	தனது நிலையிடமாகிய பரமபதத்திலே கொணர்ந்து சேர்த்துக் கொண்டு [அல்லது] உனதடி சேர்த்துக்கொண்டு
ஸ்வஸங்கமக்ருதம் விலம்பம்	அவர்களை உன்னோடே அணையச் செய்வதில் ஏற்படுகிற விலம்பத்தை
ஸோடும்	ஸஹிப்பதற்கு
அக்ஷாம்யந்	வல்லவனல்லவனாய்
அத்ர	இவ்விருள்தருமா ஞாலத்தில்
அவதீர்ண꞉ பவே꞉	பிறந்தாயாகில் பிறந்திடுகிடாய்; [அதைப்பற்றி நான் ஒன்றும் கேட்கவரவில்லை]
கிம் து	பின்னையோ வென்ருல்
அஸம்ச்ரிதேஷு	அநாச்ரிதர்களிடத்தில்
வேஷம்	உனது திவ்யவிக்ரஹத்தை
விதரந்	அநுபாவ்யமாகக் கொடாநின்றவனாய்
தாந்	அவர்களையும்
த்வம் வ்ருணீஷே	நீ திருவுள்ளம் பற்றுகிருயே
[இதம்] கிம் நாம	இது என்கொல் ?

* * * கீழ் ச்லோகத்தில் சொன்ன ஸௌசீல்யம் அநாச்ரிதர் பக்கலிலும் வீறு பெற்று விளங்குபடியை அருளிச்செய்கிருரிதில். எம்பெருமான் ஒரு சேதனனைத் தன் திருவடித் தாமரைகளிலே அத்தாணிச் சேவகத்துக்கு ஆளாக்கிக் கொள்ளத் திருவுள்ளம் பற்றினுல் அந்த பகவந்மநோரதம் அப்போதே சடக்கெனத் தலைக்கட்டுவ தொன்றல்ல ; 'ஜன்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞான ஸமாதிபி꞉ । நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி꞉ ப்ரஜாயதே' என்னும், 'ஒன்றிநின்று நல்தவம் செய்து ஊழி யூழி தோறெலாம்' என்றும் சொல்லுகிறபடியே ஜந்மாந்தர ஸஹஸ்ரங்களிலே அருமையான பக்தி விளையப் பெற்றவனேயிறே நலமந்த மில்லதோர் நாட்டிலே போய்ப் புகப் பெறுவன். இதுதான் ஸ்வல்ப காலத்திலே [illegible]மாகக் கடவதன்றிறே. இந்த க்ரமத்தாலே சேதநர்கள் பரமபதத்தேற வருமளவும் பார்த்திருக்கும்[illegible]படியான விலம்ப ஸஹிஷ்ணுத்வம் எம்பெருமானுக் கில்லை யென்கிறது பூர்வார்த்தத்தாலே.

ஹாந்தர்யாமி ரூபேண நின்று இந்த்ரிய மார்க்கத்துக்கு அணித்தாகாதே அவ்வருகு பட்டால், 'அப்பால் முதலாய் நின்ற அளப்பரியவாரமுது' என்கிறபடியே லீலாவிபூதிக்கு அப்பாற்பட்டிருக்கிற பரத்வமானது அண்டத்துக்குப் புறம்பே பெருகிக் கிடக்கிற ஆவரணஜலம் போலேயாய்; 'பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும்' என்கிறபடியே கேட்டிருக்கு மித்தனை யல்லது சென்று காணவரிதாம்படியா யிருக்கிற வ்யூஹமானது பரத்வம் போலே அதி விப்ரக்ருஷ்ட மன்றிக்கே யிருந்தாலும் த்ருஷார்த்தனுக்கு துஷ்ப்ராபமான பாற்கடல் போலேயாய், கண்டு பற்றவேணுமென்று ஆசைப் பட்டவனுக்கு ஹ்ருதயத்திலே யிருக்கச் செய்தேயும் 'கட்கிலீ' என்கிறபடியே கண்ணுக்கு விஷயமன்றிக்கே அஷ்டாங்கயோக ரூப மஹாயத்நத்தாலே காணவேண்டும்படியான அந்தர்யாமித்வ மானது—த்ருஷார்த்தனுக்குக் கொட்டும் குந்தாலியும் கொண்டு கல்லினு லல்லது குடிக்கக் கிடையாத பூகத ஜலம் போலேயாய்—இப்படி இவை யெல்லாம் காணவாசைப்பட்டவர்க்கு உறுப்பன்றிக்கே யொழிகையாலே 'மண்மீதுழல்வாய்' என்கிற படியெ பெருக்காறு பெருகினாற்போலே பூமியிலே அவதரித்து ஸஞ்சரித்தருளா தொழிந்தால் சாஸ்த்ரங்களில் 'நிதித்யாஸிதவ்ய:' என்றும், 'அர்ச்சயேத்' என்றும் 'ப்ரணமேத்' என்றும் 'ப்ரதக்ஷிணீகுர்யாத்' என்றும் விதிக்கப்பட்டுள்ள உபாஸநார்ச்சந ப்ரதக்ஷிண நமஸ்கார ப்ரப்ருதிகளான வழிபாடுகளுக்கு விஷய மன்றிக்கே யொழியுமிறே யென்றாராயிற்று இந்த ச்லோகம் புஷ்பிதாக்ரா வ்ருத்தம். ... (67)

यदपराधसहस्रमजस्रजं त्वयि शरण्य हिरण्य उपावहत् ।
वरद तेन चिरं त्वमविक्रियः विकृतिमर्भकनिर्भजनादगाः ॥ ६८ ॥

யதபராதஸஹஸ்ரமஜஸ்ரஜம் த்வயி சரண்ய ஹிரண்ய உபாவஹத் ।
வரத தேந சிரம் த்வமவிக்ரிய: விக்ருதிமர்ப்பகநிர்ப்பஜநாதகா: ॥ 68 ॥

சரண்ய	ரக்ஷகனான
ஹே வரத	ஓ வரதனே !
ஹிரண்ய:	ஹிரண்யகசிபுவானவன்
த்வயி	உன் விஷயத்தில்
அஜஸ்ரஜம்	ஸார்வகாலிகமான
யத்	யாதொரு
அபராதஸஹஸ்ரம்	ஆயிரக்கணக்கான அபராதத்தை
உபாவஹத்	செய்தானோ
தேந	அந்த அபராதஸஹஸ்ரத்தால்
சிரம்	நெடுநாள் வரையில்
அவிக்ரிய:	விகாரமேயுண்டாகாதிருந்த
த்வம்	நீ
அர்ப்பக நிர்ப்பஜநாத்	சிறு குழந்தையாகிய ப்ரஹ்லாதனுக்கு நேர்ந்த நலிவு காரணமாக
விக்ருதிம்	மனோவிகாரத்தை
அகா:	அடைந்தாய்.

ஸங்கல்பமாத்ரத்தால் ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வசக்தியான ஸர்வேச்வரன் தன்னை யழியமாறி இதர ஸஜாதீயனாயவதரித்துக் கைதொடனாய் நின்று செய்த ஹிரண்ய ராவணாதி நிரஸநரூப அதிமாநுஷ சேஷ்டிதங்களெல்லாம் ப்ரஹ்லாதன் மஹர்ஷிகள் தொடக்கமான அவ்வோ பாகவத விஷயங்களில் அவ்வவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலே என்னும் அர்த்தமேயாய்த்து இந்த ச்லோகத்திலே அருளிச் செய்யப்படுகிறது.

[ஹே சரண்ய! வரத! ஹிரண்ய: த்வயி அஜஸ்ரஜம் யதபராத ஸஹஸ்ரம் உபாவஹத், தேந (அபராத ஸஹஸ்ரேண) சிரம் அவிக்ரிய: ஸ்திதஸ்த்வம் அர்ப்பக நிர்ப்பஜநாத் விக்ருதி மகா:] எம்பெருமான் தன்னளவிலே தீரக்கழிய அபராதப் படுமவர்களைப் பற்றி ஒன்றும் கணிசியான். ஸ்வாச்ரிதர் விஷயத்தில் ஸ்வல்பமபராதம் பண்ணுவானுண்டாகிலும் அவனை அப்போதே தலையறுத்துப் போடுவானென்றிறே இதிஹாஸ புராணாதிகளில் ப்ரஸித்தியிருப்பது. [த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம] சக்ரவர்த்தித் திருமகனார் எழுந்தருளி நிற்கச் செய்தே ராவணன் கோபுரசிகரத்தில் வந்து தோன்றின வாறே 'ராஜத்ரோஹியான பையல் திருமுன்பே நிற்கையாவதென்?' என்று மஹாராஜர் அவன்மேலே எழப் பாய்ந்து வென்று வந்தபோது இங்ஙனே அருளிச் செய்கிறார்.—நீர் மஹாராஜரான தரம் குலைய அவன் ஒரு வார்த்தை சொல்லுமாகில் நீர் தேடிப்போகிற சரக்குத்தான் நமக்கு என் செய்ய? என்றிறே

இங்ஙனேயிறே ஆச்ரித விஷயத்திலே எம்பெருமான் பக்ஷபதித்திருப்பது; 'ப்ராணேப்யோபி கரீயாம்ஸ:' என்னும்படியான அந்த பாகவதர்களுக்கு ஒரு தீங்கு நேர்ந்தால், தனக்குத் தீங்கு நேரும்போது பிறக்கும் சீற்றம் குளப்படி யென்னலாம் படியிறே சீற்றம் பெருகிச் செல்கிறபடி. ஸமுத்ரராஜனை சரணம் புகச் செய்தேயும் அவன் முகம் காட்டிற்றிலனாக, 'கோபமாஹாரயத் தீவ்ரம்' என்னும்படி சீற்றத்தை வரவழைத்துக் கொண்டார் பெருமாள். பின்பு ராவணனாலே திருவடி நோவுபட்டவாறே 'கோபஸ்ய வசமேயிவாந்' என்னும்படி கோபமிட்டவழக்கானார். இங்ஙனேயிறே பாகவத விஷயத்திலே எம்பெருமானுக்குள்ள பரிவின் மிகுதியிருப்பது.

ஹிரண்யகசிபுவானவன் எம்பெருமான் திறத்திலே நேர்கொடு நேரே அபசாரப்பட்டுத் திரிந்த நாள்கள் எண்ணிறந்தவையுண்டு. அந்நாள்களிலே எம்பெருமானுடைய திருவுள்ளம் அவ்வளக்கனளவிலே சிறிதும் விகரிக்கவில்லை. * பள்ளியிலோதிவந்த தன் சிறுவன் வாயிலோராயிர நாமம், ஒள்ளியவாகிப் போத ஆங்கதனுக்கு ஒன்றுமோர் பொறுப்பிலனாகிப் பிள்ளையைச் சீறி வெகுண்டு நலிந்தானென்றறிந்தவாறே 'நம்மளவிலே எத்தனை தீம்பனாயிருந்தாலும் பொறுத்திருப்புதோம்; நம்முடையவனான சிறுக்கனை நலிந்தானென்னா இனிப் பொறுத்திருக்கவோ?' என்று ஆறியிருக்கமாட்டாதே அப்போதே வந்து தோன்றிப் புடைத்தானாயிற்று.

'வரத்தால் வலி நினைந்து மாதவ நின்பாதம் சிரத்தால் வணங்கானாமென்றே? உரத்தினால் ஈரியாய் நேர்வலியோனாய விரணியனை ஓரரியாய் நீ யிடந்ததூன்.' (முதல் திருவந்தாதி—90) என்ற பொய்கையாழ்வார் பாசுரத்தை இந்த ச்லோகத்தோட இணைத்து நிர்வஹித்துக் கொள்க. (அப்பாசுரத்தின் திவ்யார்த்ததீபிகை காண்க) இந்த ச்லோகம் த்ருத விலம்பித வ்ருத்தம். (68)

त्वामामनन्ति कवयः करुणामृताब्धे ज्ञानक्रियाभजनलभ्यमलभ्यमन्यैः ।
एतेषु केन वरदोत्तरकोसलस्थाः पूर्वं सदूर्वमभजन्त हि जन्तवस्त्वाम् ॥ ६९ ॥

த்வாமாமநந்தி கவய: கருணாம்ருதாப்தே! ஜ்ஞாநக்ரியாபஜநலப்யமலப்யமந்யை: |
ஏதேஷு கேந வரதோத்தரகோஸலஸ்தா: பூர்வம் ஸதூர்வமபஜந்த:ஹி ஜந்தவஸ்த்வாம் ‖ 69 ‖

கருணாம்ருதாப்தே	அருளாகிற அம்ருதத்திற்குக் கடல் போன்ற	ஆமநந்தி	ஓதிவைத்திருக்கிறார்கள்;
ஹே வரத	ஓ வரதனே!	பூர்வம்	முன்பு [ஸ்ரீராமாவதாரத்தில்]
கவய:	[பராசரபாராசர்யாதி] கவிகள்	உத்தரகோஸலஸ்தா: ஜந்தவ:	உத்தரகோஸலத்திலுள்ள ஜந்துக்கள்
த்வாம்	உன்னை	ஸதூர்வம்	த்ருணமுட்பட
ஜ்ஞாநக்ரியா பஜநலப்யம்	ஞானயோக கர்மயோக பக்தி யோகங்களால் ப்ராப்யனாகவும்	த்வாம் அபஜந்த ஹி	உன்னை அடைந்தனவன்றோ? [அப்படி அடைந்ததானது]
அந்யை:	உபாயாந்தரங்களினாலே	ஏதேஷு	கீழ்ச்சொன்ன கர்மஜ்ஞான பக்தி யோகங்களுள்
அலப்யம்	அப்ராப்யனாகவும்	கேந	எந்த உபாயம் கொண்டு?

யாத்ருச்சிகம், ப்ராஸங்கிகம், ஆநுஷங்கிகமென்கிற ஸுக்ருத் விசேஷங்கள் சாஸ்த்ரவிஹிதமும் சேதன விதிதமுமன்றி யிருக்கத் தானே கல்பித்தும் கல்பிதமான அவை தன்னை ஒன்றை அனேகமாக்கியும் நடத்திக் கொண்டு போருமவனை ஈச்வரனுடைய ஸஹஜகாருண்ய விபவம் ஸ்ரீராமாவதாரத்திலே நன்கு விளங்கின படியை இந்த ச்லோகத்திலே அநுஸந்தித் தருளுகிறார்.

[கருணாம்ருதாப்தே] கருணையாகிற அம்ருதத்திற்குக் கடல் போன்றவனே! தேவபிரானுக்கிருள் திருவருளுக்குப் பிறந்தகம் என்னுமிடம் 'பேரருளாளன்' என்னும் திருநாமத்தாலேயே விளங்குமிறே. [கவய:] அப்ரத்யக்ஷதத்வார்த்தஸாக்ஷாத்காரக்ஷமர்களான பராசரபாராசர்யாதிகளென்கை. 'கவி: க்ராந்ததர்சீ' என்னக்கடவதிறே. [த்வாம் ஜ்ஞாநக்ரியாபஜநலப்யம் அந்யைரலப்யம் ச ஆமநந்தி] ஜ்ஞாநயோக,

கர்மயோக, பக்தியோகங்களாலே உன்னை ப்ராபிக்கலாமத்தனை போக்கி வேறென்றாலும் ப்ராபிக்கலாகா தென்கிறார்கள். [யே உத்தரகோஸலஸ்த்தா꞉ ஜந்தவ꞉ பூர்வம் த்வாம் ஸதூர்வமபஜந்த, தே ஏதேஷு கேந?] * முனிவன் வேண்டத் திறல் விளங்கு மிலக்குமனைப் பிரிந்ததனால் தரிக்கமாட்டாதே போர க்லேசித்த பெருமாள் ராஜ்யத்தை விட்டெழுந்தருளத் தொடங்கியபோது அயோத்யா நகரத்துயிர்களெல் லாம் பெருமாளைச் சரணமடைந்து தேவரீர் எங்குச் சென்றாலும் அடியோங்களையும் கூடவே அழைத்துக் கொண்டெழுந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க, பெருமாள் அவர்களுடைய பக்திப்ரகர்ஷத்தைக் கண்டு 'ததாஸ்து' என்றருளிச் செய்து அனைவரையும் தன்னைப் பின் தொடர்ந்து வருமாறு பணித்தருளி ப்ரயா ணப்பட்டார். அப்பொழுது அந்நகரத்திலிருந்த மநுஷ்யர்கள் மாத்திரமேயல்லாமல் பசுபக்ஷியாதி ஸமஸ்த வஸ்துஜாதமும் அகமகிழ்ந்து பெருமாளைப் பின் சென்றன. இப்படி பலரும் புடைசூழப் பெருமாள் ஸரயூ நதியிலிறங்கித் தன்னடிச்சோதிக் கெழுந்தருளும்போது தம்மிடத்து இடையறாத அன்புகொண்டு பின்பற்றி ஸரயுவில் மூழ்கி உடம்பைத் துறந்த எல்லாவுயிர்கட்கும் ப்ரஹ்மலோகத்துக்கு மேற்பட்டதாய் பரமபதம்போலவே அபுநராவ்ருத்தியாகிற சிறப்புள்ளதான ஸாந்தாநிகமென்னும் லோகத்தை அளித்தரு ளினார் என்கிற இதிஹாஸம் ப்ரஸித்தம். 'ஸதூர்வம்' என்றது த்ருணாதிகளுமுட்பட வென்றபடி. [ஏதேஷு கேந] கீழ்ச்சொன்ன கர்மஜ்ஞான பக்திகளில் எந்த வுபாயத்தை யனுஷ்டித்து அவை வீடு பெற்றன பிரானே யென்று மடிபிடிக்கிறார். கேவலம் உன்னுடைய நிர்ஹேதுக க்ருபையே பற்றாசாக உய்வித்தாயத் தனையிறே. இது தோன்றவாய்த்து 'கருணாம்ருதாப்தே' என்று ஸம்போதித்தது. இப்படிப்பட்ட க்ருபை * மு[illegible]தகவர்ஜமோ? என்கை இங்கு உள்ளுறை. இந்த ச்லோகம் வஸந்ததிலக வ்ருத்தம். ... (69)

भजत्सु वात्सल्यवशात् समुत्सुकः प्रकाममत्रावतरेर्वरप्रद ।
भवेश्च तेषां सुलभोऽथ किन्न्विदं यदङ्ग दाम्ना नियतः पुराऽरुदः ॥ ७० ॥

பஜத்ஸு வாத்ஸல்யவசாத் ஸமுத்ஸுக꞉ ப்ரகாமமத்ராவதரேர் வரப்ரத ।
பவேச்ச தேஷாம் ஸுலபோ த கிந்ந்விதம் யதங்க தாம்நா நியத꞉ புராருத꞉ ॥ 70 ॥

அங்க வரப்ரத	வாராய் வரதனே !	ஸுலபப்பச்ச	ஸுலபனாயும்
த்வம்	நீ	பவே꞉	ஆகுகிடாய்;
பஜத்ஸு	பக்தர்கள் பக்கலில்	புரா	பண்டு [க்ருஷ்ணாவதாரத்தில்]
வாத்ஸல்யவசாத்	ப்ரீதி விசேஷத்தாலே	தாம்நா	தாம்பினால்
ஸமுத்ஸுக꞉	மிக்க விருப்பமுடையவனாய்	நியத꞉	கட்டுண்டவனாய்
அத்ர	இவ்விபூதியில்	அருத꞉ இதி யத்	அமுதாய் என்பது யாதொன் றுண்டோ
ப்ரகாமம் அவதரே꞉	வேண்டியபடி அவதரித்துக்கொள்;		
அத	அதற்குமேல்		
தேஷாம்	அந்த அன்பர்களுக்கு	இதம் கிம் நு	இது என்கொல் ?

* * * ஸம்ப்ரதிபந்தமான க்ருஷ்ணாவதார ஸௌலப்யத்தை அநுஸந்திக்கிறார். 'ஸம்ச்லேஷே பஜதாம்' என்னும் ச்லோகத்தில் பாதத்ரயத்தால் அருளிச்செய்த அர்த்தத்தை இதில் பூர்வார்த்தத்தாலே ஸங்க்ரஹித்தாராய்த்து. [அங்க! வரப்ரத!] 'அங்க' என்றது—ஹே! என்றபடி; ஸம்போதநார்த்தகம வ்யயம். [வாத்ஸல்யவசாத் பஜத்ஸு ஸமுத்ஸுகஸ்ஸந்] தேசாந்தரகதனான புத்ரன் பக்கலிலே பிதாவி னுடைய ஹ்ருதயம் அவகாஹித்துத் துடிக்குமாபோலே, நித்யமுக்தரோடே கூடியிருந்து பரிபூர்ணாநுபவம் அவிச்சிந்நமாய்ச் செல்லாநிற்கச் செய்தேயும் அது உண்டதுருக் காட்டாதே ஸம்ஸாரிகள் பக்கலிலே திருவுள்ளம் குடிபோய் இவர்களைப் பிரிந்து ஆற்றமாட்டாதே இவர்களோடே கலந்து பரிமாறுகைக்காக இவ்விபூதியில் வந்து பிறந்தாயாகில் வேண்டியமட்டும் பிறந்து போருகிடாய். அந்த ஸம்ஸாரிகள் பக்க லிலே உன் ஸௌலப்யத்தை விநியோகித்தாயாகில் அதுவும் வேண்டிய மட்டும் விநியோகித்துப் போரு கிடாய். இவற்றில் அடியேனுக்கு அல்பமும் விப்ரதிபத்தியில்லை. கவ்யஸ்தேய நிமித்தமாகத் தாம்பால் ஆப்புண்டு அமுதா யென்று யாதொரு வ்ருத்தாந்தமுண்டு; இது இப்படி இருக்கும்படியென் ? என்று

இதிலே போர விசிகித்ஸிதனுயிரா நின்றேனென்கிறார். மநுஷ்யத்வைகாந்தமான அஜ்ஞான அசக்திகளைத் தான் ஏறிட்டுக் கொண்டாயே, பின்னை அமுது தீரவும் வேணுமோ? இது என்ன ஸௌலப்ய பரம காஷ்டை! என்று உள்குழைந்து உருகுகின்றமை பேச்சிலே தோன்றும்.

இந்த ச்லோகம் 'வம்சஸ்த வ்ருத்தம்'. (70)

नरसिंहतनुरगौणी समसमयसमुद्भवश्च भक्तगिरः ।
स्तम्भे च संभवस्ते पिशुनयति परेशतां वरद ! ॥ ७१ ॥

நரஸிம்ஹதநுரகௌணீ ஸமஸமயஸமுத்பவச்ச பக்தகிர: ।
ஸ்தம்பே ச ஸம்பவஸ் தே பிசுநயதி பரேசதாம் வரத ॥ 71 ॥

ஹே வரத	ஓ வரதனே !	ஸ்தம்பே ஸம்பவ: ச	[அதுதன்னிலும்] தூணில் வந்து தோன்றியதும்
அகௌணீ	அப்ராக்ருதமான		
நரஸிம்ஹதநு:	நரஸிம்ஹ திருக்கோலமும்	தே	உன்னுடைய
பக்தகிர: ஸமஸமயஸமுத்பவச்ச	பக்தனாகிய ப்ரஹ்லாதனுடைய [எங்குமுளன் என்ற] வாய்ச் சொல்லில் வந்து தோன்றியதும்	பரேசதாம்	பரமேச்வரத்வத்தை
		பிசுநயதி	தெரிவிக்கிறது.

* * * 'ந்ருஸிம்ஹராமக்ருஷ்ணேஷு ஷாட்குண்யம் பரிபூரிதம்' என்று அவதாரத்ரயத்திலே ஷாட்குண்ய பரிபூர்ததி சொல்லப்பட்டிருக்கிறபடியே—ஸர்வாவதாரங்களிலும் வைத்துக்கொண்டு ப்ரக்ருஷ்டதமமான அந்த அவதாரத்ரயத்திலே வாத்ஸல்யக்ருபா ஸௌலப்யாதிசயத்தை * யதபராத ஸஹஸ்ரமித்யாதி ச்லோகத்ரயத்தாலே அடைவே அருளிச்செய்து, ஸிம்ஹாவலோகனந்யாயத்தாலே மீண்டும் நரஸிம்ஹாவதாரத்திலே அபிநிவேசித்துச் செல்லுகிறார். ஸ்ரீஹஸ்திகிரியின் அடியிலே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிற ஸ்ரீ ந்ருஸிம்ஹனை மங்களாசாஸநம் செய்தருளின ச்லோகம் இது என்பாருமுளர்.

[ஹே வரத ! தே அகௌணீ நரஸிம்ஹதநுச்ச, பக்தகிர: ஸமஸமய ஸமுத்பவச்ச, ஸ்தம்பே ஸம்பவச்ச பரேசதாம் பிசுநயதி] அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநசாலியான நரஸிம்ஹ வேஷத்தைப் பரிக்ரஹித்தும், 'எங்கு முளன் கண்ணன்' என்று சிறுக்கன் சொன்ன க்ஷணத்தில் தானே வந்து தோன்றியதும், அந்தத் தோற்றந்தான் ஸம்பாவித ஸ்தலத்தில் நின்றுமாகாமே தூணிலிருந்து ஆனதும் ஆக இதெல்லாம் உன்னுடைய பரமேசித்ருத்வத்தை நன்கு விளக்குகின்றன வென்கிறார்.

அகௌணீ' என்றது அப்ராக்ருதையென்றபடி. ஸத்வ ரஜஸ் தமோமயமாயிறே ப்ரக்ருதி தானிருப்பது. 'ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்தி:' என்கையாலே சுத்த ஸத்வமயமாயிறே ந்ருஸிம்ஹமூர்த்தியிருப்பது. தனியே மாநுஷ மூர்த்தியாகப் பிறக்கலாம், ஸிம்ஹமூர்த்தியா யிருக்கலாம்; இங்ஙனே நரங் கலந்த சிங்கமாய்ப் பிறந்தது பரமேசித்ருத்வ ப்ரயுக்தமிறே. இப்படி ஸங்கீர்ணமூர்த்தியாகப் பிறவாதொழியில் ஹிரண்யவதம் அமையாதிறே. அவன் பெற்ற வரங்களைப் பழுதாக்காதபடியிறே எம்பெருமான் வ்யாபரிப்பது.

[பக்தகிரஸ் ஸமஸமய ஸமுத்பவச்ச] 'எங்குமுளன்' என்று ப்ரஹ்லாதன் சொல்லி வாய்மூடுவதற்கு முன்னமேயிறே வந்து தோன்றிற்று.

[தே பரேசதாம் பிசுநயதி] இவை யெல்லாம் உன்னுடைய பரமேசித்ருத்வத்தைக் கோட்சொல்லித் தாராநின்றன வென்கிறார். பரமபுருஷனன்றிக்கே ஸாமாந்யபுருஷனாகில் இத்தனை சக்தி விசேஷம் கூடாதிறே யென்று கருத்து.

ஆக, கீழ் ச்லோகத்திலே ஸௌலப்யத்தை யநுஸந்தித்தாராய் இந்த ச்லோகத்திலே பரத்வத்தை யநுஸந்தித்தாராய்ச் செல்லுகிறது. பரத்வே ஸதி ஸௌலப்யமிறே அபிநந்தநீயமாகத் தக்கது. கேவல ஸௌலப்யமும் கேவல பரத்வமும் அப்ரயோஜகமிறே. இனி இந்த ச்லோகத்தை இங்ஙனே பரத்வமா

தக் கொள்ளாதே கீழ்ச்லோகங்களுக்குச் சேர ஸௌலப்யபரமாகவே நிர்வஹித்துப் போருவாருமுளர். அதுதானெங்ஙனேயென்னில், [பரேசதாம்] பரஃ ஈசஃ யஸ்ய ஸஃ, பரேசஃ, பரதந்த்ரஃ என்றபடி. பரேசதாம் என்றது பாரதந்திரியத்தை யென்றதாய்த்து. தேவாதி சதுர்விதஜாதியிலுள்ளவற்றில் ஒன்றின் கையிலும் படக்கடவனல்லனாகவும், பகலிரவுகளுள் ஒரு காலத்திலும் படக்கடவனல்லனாகவும், அஸ்த்ரசஸ்த்ரங்களி லொன்றாலும் படக்கடவ னல்லனாகவும் இப்படியெல்லாம் ப்ரஹ்மருத்ராதிகள் கொடுத்த வரத்துக்கு விரோதம் வாராதபடியாகவும், ப்ரஹ்லாதனுடைய வார்த்தைக்கு உடன்பட்டபடியாகவும் நரஸிம்ஹாபதா நத்திலே காண்கையாலே தேவபாரதந்த்ரியமும் ஆச்ரிதபாரதந்த்ரியமும் தோன்றக்கடவதிறே. ஸ்வதந் த்ரனாகில் அவர்கள் கொடுத்த வரத்தைப் பாழ்படுத்தியே யதேச்சமாக வந்து பிறந்து வதைக்கலாமிறே. நரஸிம்ஹமாய்ப் பிறக்கவும் அந்திப்போதிலே தோன்றவும் திருவுகிர்களாலே கீளவும் மடியிலே வைத்து முடிக்கவும் வேண்டாவே. ப்ரஹ்லாதனுடைய ப்ரதிஜ்ஞா ஸமகாலத்திலே வந்துதோன்றவும் வேண்டாவே.

தேவர்கள் கொடுத்த வரத்தைப் பழுதாக்கவொண்ணாமையாகிற தேவபாரதந்த்ரியமும் ப்ரஹ்லா தனை விததப்ரதிஜ்ஞையுடையனாக்கவொண்ணாமையாகிற ஆச்ரிதபாரதந்த்ரியமும் உள்ளமையாலிறே இப்படியெல்லாம் செய்யவேண்டிற்று. ஆகையாலே 'பரேசதாம்' என்றதற்குப் பாரதந்த்ரியமென்று பொருள் பணித்தது பொருந்தத் தட்டில்லை. (71)

तापत्रयीमयदवानलदह्यमानं मुह्यन्तमन्तमवयन्तमनन्त नैव ।
स्थातुं प्रयातुमुपयातुमनीशमीश हस्तीश दृष्ट्यमृतवृष्टिभिराभजेथाः ॥ ७२ ॥

தாபத்ரயீமயதவாநலதஹ்யமாநம் முஹ்யந்தமந்தமவயந்தமநந்த நைவ ।
ஸ்தாதும் ப்ரயாதுமுபயாதுமநீசமீச ஹஸ்தீச த்ருஷ்ட்யம்ருதவ்ருஷ்டிபிராபஜேதாஃ ॥ 72 ॥

ஈச	ஸர்வஸ்வாமியாய்	நைவ அவயந்தம்	அறியாதவனையும்
அநந்த	அபரிச்சிந்நரூபனாய்	ஸ்தாதும் ப்ரயாதும் உபயாதும் அநீசம் [மாம்]	கை யொழிந்து நிற்பதற்கும் ஒன்றைச் செய்யப் போவதற்கும் உன்னைக் கிட்டுகைக்கும் அசக்தனான வடியேனை
ஹஸ்தீச	ஹஸ்திகிரிநாதனான வரதனே		
தாபத்ரயீமய தவாநலதஹ்யமாநம்	தாபத்ரயமான காட்டுத்தீயால் தபிக்கப் பெற்றிருக்கிறவனாய் [அத ஏவ]	த்ருஷ்டி அம்ருத வ்ருஷ்டிபிஃ	கடாக்ஷாம்ருத வர்ஷங்களால்
முஹ்யந்தம்	மயக்கமுடையவனையும்		
அந்தம்	[இந்த ஆர்த்தியின்] எல்லையை	ஆபஜேதாஃ	புடைசூழக் கடவாய்.

* * * ஸமஸ்தகல்யாணகுண விசிஷ்டனாய் ஆச்ரயண ஸௌகர்யாவஹ திவ்யவிக்ரஹ விசிஷ்டனாய் பத்நீபரிஜநாதிவிசிஷ்டனாய் ஸாதுபரித்ராணார்த்தமாக கேவலம் க்ருபாமாத்ரத்தாலே வந்து திருவவதரித் தருளுமவனான பேரருளாளனை விஸ்தரேண அநுபவித்துப் பேசின இவ்வளவால் த்வயத்தில் 'ஸ்ரீமந் நாராயண சரணௌ' என்னுமளவும் விவரித்தாராய் இனி 'சரணம் ப்ரபத்யே' என்னுமிடத்தை விவரிக்கப் புகுகிறாராய் பேரருளாளன் திருவடிகளிலே ப்ரபத்திபண்ண விழுந்தவர் தம்முடைய தோஷபூயஸ்த்வத்தை ஆவிஷ்கரித்தருளுகிறார் மேல் எட்டு ச்லோகங்களாலே. ஸ்வதோஷபூயஸ்த்வாநுஸந்தாந மென்கிற இது தன்னைச் சிலர் ப்ரபத்திக்கு பூர்வாங்கமாகவும் சிலர் உத்தராங்கமாகவும் சிலர் உபயாங்கமாகவும் செய்து போரக் காணாநின்றோம். ஆளவந்தாரும் எம்பெருமானாரும் ப்ரபத்திக்கு உத்தரத்திலே விசேஷித்து ஸ்வதோஷ பூயஸ்த்வாநு ஸந்தாநம் பண்ணினார்கள். ஆழ்வான் இங்கு ப்ரபத்திக்குப் பூர்வத்திலே ஸ்வதோஷபூய ஸ்த்வாநுஸந்தாநம் பண்ணுகிறார். ஆழ்வார்கள் ப்ரபத்திக்குப் பூர்வத்திலும் உத்தரத்திலும் பண்ணிப் போருவர்கள்.

[தாபத்ரயீமயதவாநலதஹ்யமாநம்] தாபத்ரயமாவது, ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் எனப்பட்ட மூன்று தாபங்கள். ஆதிவ்யாதிகள் ஆத்யாத்மிகதாபமாம். 'பசுபக்ஷிமநுஷ்யாத்யைஃ பிசாசோரகராக்ஷஸைஃ । ஸரீஸ்ருபாத்யைச்ச ந்ருணாம் ஜாயதே சாதிபௌதிகஃ ॥' என்னப்பட்டது ஆதிபௌதிகம். 'சீதவாதோஷ்ண வர்ஷாம்புவைத்யுதாதி ஸமுத்பவஃ । தாபோ த்விஜவரச்ரேஷ்டைஃ கத்யதே

சாதிதைவிகஃ ॥' என்னப்பட்டது ஆதிதைவிகம். ஆக இந்த தாபத்ரயத்திலே அகப்பட்டவன் தப்பிப் பிழைப்பது அரிதாயிருக்கையாலே இது தன்னை தாவாக்நியாகச் சொல்லக்கடவதாயிருக்கும். காட்டுத் தீயிலே அகப்பட்டவனுக்கும் தப்பிப் பிழைக்கை அரிதிறே. இப்படிப்பட்ட தாபத்ரயாத்மக தாவாக்நி யாலே தபிக்கப்படா நின்றேனடியேனென்கிறார்.

[அத ஏவ முஹ்யந்தம்] வஹ்நிதக்தனுக்கு மோஹப்ராப்தி அவர்ஜநீயமிறே. தாபத்ரயத்திலே தகர்ப்புண்ட அடியேனுக்கு அறிவு குடி போய்த்து என்கிறார்.

[அந்தம் நைவாவயந்தம்] இப்படி எத்தனைகாலம் அறிவழிந்துபடக்கடவேனோ அறிகிலேன்பிரானே யென்கிறார். தேசதஃ காலதோ வஸ்துதச்ச அபரிச்சிந்நனான வுன்னை ஒருபடி பரிச்சேதித்தறியிலுமாம். இந்த மோஹாவதியைப் பரிச்சேதித்தறியவல்லேனல்லே னென்கிறார்.

நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதல் முதலான ப்ரவ்ருத்தி ஸாமாந்யத்திற்கும் நீயே கடவனாகை யாலே ஸ்வாதந்த்ரியேண நான் ஒன்றுக்கும் கடவனன்றிக்கே யிரா நின்றே னென்கிறார்.

[ஸ்தாதுமநீசம்] கருமயோகம் முதலிய உபாயங்களை அநுஷ்டிக்கை தவிர்ந்து வெறுமனே கிடக்க மாட்டிற்றிலேன். ஏனெனில், 'ச்ருதிஸ்ஸம்ருதிர்மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே। ஆஜ்ஞாச் சேதீ மம த்ரோஹீ மத்பக்தோபி ந வைஷ்ணவஃ ॥' என்ற உன் திருமுகப் பாசுரத்தைப் பார்த்தவாறே சாஸ்த்ரவிஹிதங்களானவற்றை எங்ஙனே விட்டொழிவதென்று தளும்பாநின்றேன். [ப்ரயாதுமநீசம்] அவைதான் ஸ்வரூபவிருத்தங்களாகையாலும்; துக்க பஹுளமாகையாலும், பலவாகையாலும், ஸாபாய மாகையாலும், ஸ்வதஃ பலஸாதநங்களல்லாமையாலும், ஸாபேக்ஷங்களாகையாலும், விளம்பித பலங்க ளாகையாலும் அவற்றை யநுஷ்டிக்கப் போகமாட்டுகிறிலேன். [உபயாதுமநீசம்] உன்னைக் கிட்டவும் மாட்டுகிறிலேன். ப்ரபத்திபண்ணவும் மாட்டிற்றிலேனென்கை. ஏனென்னில், ஸ்வரூபாநுரூபமாய் ஸுகரமாய் ஸுகருபமாய் நிரபாயமாய் ஸ்வதஸ்ஸாதனமாய் நிரபேக்ஷமாய் அவிலம்பிதபலமாய் அயத்ந ஸாத்யமாய் ஸித்தமாய் ஏகமான வுபாயத்தை சோகநிராகரணார்த்தமாகச் சொன்னாலும் பூர்வாங்கமாக தர்மத்யாகத்தைப் பண்ணியே ப்ரபத்தியை அநுஷ்டிக்க வேண்டுகையாலும், மஹாவிச்வாஸமில்லாமை யாலும் ஆத்யந்திகமான ஆர்த்தி இல்லாமையாலும் ப்ரபத்தி பண்ணத் திகைத்து நிற்கவேண்டிற்றாமிறே. அன்றிக்கே, ஸ்வீகாரமும் ஸ்வாதந்த்ரிய கர்பமாகையாலே "உபயாதுமநீசம்' என்கிறாரென்னவுமாம். 'என்னுணர்வினுள்ளே யிருத்தினேன் அதுவுமவனதின்னருளே' என்று இத்தலையில் நினைவுக்கும் அடி அவனாகையாலே 'பறவையேறு பரம் புருடா! நீ யென்னைக் கைக்கொண்டபின்' என்னும்படியான அவனுடைய ஸ்வீகாரமே யொழிய தன் நினைவாலே பெறவிருக்கையானது 'உன் மனத்தாலென் நினைந் திருந்தாய்' என்கிற வதிகாரத்திற்குக் கொத்தையிறே. * நெடுநாள் அந்யபரையாய்ப்போந்த பார்யை லஜ்ஜா பயங்களின்றிக்கே பர்த்ருஸகாசத் தில் நின்று என்னை அங்கீகரிக்க வேணுமென்று அபேக்ஷிக்கு மாபோலே யிருப்பதொன்றாகையாலே 'உபயாதுமநீசம்' என்கிறார். இப்படிப்பட்ட வடியேனை கடாக்ஷா ம்ருதவர்ஷதாரைகளாலே குளிரச் செய்யவேணும். 'தக்தம்' என்று பூதகாலமாகச் சொல்லாதே 'தஹ்ய மாநம்' என்று வர்த்தமாநமாகச் சொல்லுகையாலே த்ருஷ்ட்யம்ருதவ்ருஷ்டிஸேகம் பலவத்தாக ப்ரஸக் தியுண்டென்று காட்டினபடி. 'தாமரைக் கண்களால் நோக்காய்' என்றும் 'அங்கணிரண்டுங் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல், எங்கள்மேல் சாபமிழிந்து' என்றும், 'த்வதீக்ஷண ஸுதாஸிந்துவீசி விக்ஷேபசீகரைஃ। காருண்யமாருதா நீதைச் சீதலைரபிஷிஞ்சமாம் ॥' என்றும் அருளிச்செய்து வைத்தார்க ளிறே. 'கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித்கதாசன' என்ற திருமுகப் பாசுரத்திலே 'கஞ்சித்' என்றதற்கு அடியேனை விஷயமாக்கவேணும்; 'கதாசந' என்றதற்கு அத்ய வர்த்தமாநகாலத்தை விஷயமாக்கவேணுமென்கிறார்.

[ஆபஜேதாஃ] என்றது அடியேனைச் சூழ்ந்துகொள் என்றபடி. என்னைச் சுற்றி த்ருஷ்ட்யம்ருத வ்ருஷ்டி பெய்ய வேணுமென்கை.

இந்த ச்லோகம் முதல் 'போகா இமே' என்னும் ச்லோகமளவாக வுள்ள தசகம் வஸந்ததிலக வ்ருத்தம். (72)

नानाविरुद्धविदिशासु दिशासु चाहो वन्ध्यैर्मनोरथशतैर्युगपद्विकृष्टः ।
त्वत्पादयोरनुदितस्पृह एष सोऽहं न स्वरित हस्तिगिरिनाथ! निशामयामि ॥ ७३ ॥

நாநாவிருத்தவிதிசாஸு திசாஸு சாஹோ வந்த்யைர் மநோரதசதைர் யுகபத் விக்ருஷ்ட: |
த்வத்பாதயோரநுதிதஸ்ப்ருஹ ஏஷ ஸோஹம் ந ஸ்வஸ்தி ஹஸ்திகிரிநாத நிசாமயாமி || 73 ||

ஹஸ்திகிரிநாத	பேரருளாளனே !
வந்த்யை:	[ஊமைகண்ட கனுப்போலே] பழுதாயொழிகின்ற
மநோரதசதை:	பல மனோரதங்களால்
நாநாவிருத்த விதிசாஸு	விருத்தங்களான பலபல குறுக்கு வழிகளிலும்
திசாஸு ச	நல்வழிகளிலும்
யுகபத்	ஒரே காலத்தில்
விக்ருஷ்ட:	இழுக்கப்பட்டவனாய்
த்வத்பாதயோ:	உன் திருவடிகளில்
அநுதித ஸ்ப்ருஹ:	அன்பு உதிக்கப்பெறாதவனாயிருக்கிற
ஏஷ ஸோஹம்	அடியேன்
ஸ்வஸ்தி	நன்மையை
ந நிசாமயாமி	நோக்குகின்றிலேன்.

* * * பேரருளாளனுடைய த்ருஷ்ட்யம்ருதவ்ருஷ்டியைப் பெற்றாலல்லது மற்றொருபடியாலும் தமக்கு நன்மையுண்டாக மாட்டாமையை அருளிச்செய்கிறார். [நாநாவிருத்த விதிசாஸு] பலவகைப் பட்ட தப்பு வழிகளிலும், [திசாஸு ச] நல்ல வழிகளிலும். தப்பு வழிகளாவன—நரகப்ராபகங்களான துச்சரிதங்கள். 'திசாஸு' என்னப்பட்ட திக்குக்களாவன—ஐஹிகாமுஷ்மிகபோக ஸாதனங்களான வழிகள், இவற்றிலே, [வந்த்யை: மநோரதசதை: யுகபத் விக்ருஷ்ட:] நரகஸாதநங்களான துரிதங் களிலும் ஸ்வர்க்காதி ஸாதனங்களான ஸுக்ருதங்களிலும் நிஷ்ப்ரயோஜனங்களான பல பல மனோ ரதங்கள் விளைவதுண்டிறே, * வாணிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள் மாதரார் வனமுலைப்பயனே பேணவேணுமென்றும், * புலம்படிந்துண்ணும் போகமே பெருக்க வேணுமென்றும், * ஓடியு முழன்று முயிர்களே கொல்லவேணுமென்றும் இப்படியெல்லாம் தீய வழிகளிலே யுண்டாகக் கடவ மனோரதங் களுக்கு ஒரு வரம்பில்லையிறே. இப்படியே புத்ரபச்வந்நாதி ஸாதனங்களான காம்யேஷ்டிகளிலுண் டாகக் கடவ மனோரதபரம்பரைகளுக்கும் ஒரு வரையறையில்லையிறே. இந்த மனோரதந்தான் * ஊமனார் கண்ட கனவிலும் பழுதாயொழிகையாலே 'வந்த்யை:' என்கிறது. தீய வழிகளிலும் நல்ல வழிகளிலும் நினைத்தபடி காரியம் கை கூடாமையாலே கவலைப்பட்டுக் கொண்டே காலம் கழிக்க வேண்டிற்றித்தனை போக்கி பலனொன்றும் பெற்றிலேனென்கிறார்.

[த்வத்பாதயோரநுதிதஸ்ப்ருஹ ஏஷ ஸோஹம்] * உன்னடிப்போது நானணுகாவகை வேற்று வழிகளிலே திரிந்துழல்கின்றேனத்தனை போக்கி 'நின்மூர்த்தி பல்கூற்றிலொன்று காணலுமாங்கொல்?' என்கிற ஸ்ப்ருஹாலேசமுமில்லையே பாவியேனுக்கென்கிறார்.

[ஏஷ ஸோஹம் நஸ்வஸ்தி நிசாமயாமி] பசவதநுராகத்தைக் கனக்கண்டறியாத நான் ஒரு நன்மை பெறுவேனாக எண்ணியிருக்கைக்கு என்ன ப்ரஸக்தியுண்டென்கிறார். (73)

हे निर्भयोऽस्म्यविनयोऽस्मि यतस्त्वदङ्घ्रौ लिप्सामलब्धवति चेतसि दुर्विनीते ।
दुष्कर्मवर्मपरिकर्मित एष सोऽहम् अग्रे वरप्रद ! तव प्रलपामि किञ्चित् ॥ ७४ ॥

ஹை நிர்ப்பயோஸ்ம்யவிநயோஸ்மி யதஸ் த்வதங்க்ரௌ லிப்ஸாமலப்தவதி சேதஸி துர்விநீதே |
துஷ்கர்மவர்மபரிகர்மித ஏஷ ஸோஹம் அக்ரே வரப்ரத தவ ப்ரலபாமி கிஞ்சித் || 74 ||

ஹே வரப்ரத	வரதனே !
ஏஷ ஸோஹம்	இவ்வடியேன்
நிர்ப்பய: அஸ்மி	அச்சமற்றவனாயிருக்கிறேன் ;
அவிநய: அஸ்மி	விநயமற்றிருக்கிறேன் ;
ஹை	அந்தோ !
யத:	ஏனெனில்,
துர்விநீதே	சீர்திருந்தாமலிருக்கிற
சேதஸி	[என்] நெஞ்சானது
த்வதங்க்ரௌ	உனது திருவடிகளில்
லிப்ஸாம்	விருப்பத்தை
அலப்தவதி ஸதி	அடையாதிருக்குமளவில்
துஷ்கர்மவர்ம பரிகர்மித:	தீவினைகளாகிற கவசங்களை அணிந்துள்ள
ஏஷ ஸோஹம்	இவ்வடியேன்
தவ அக்ரே	உன் எதிரில்
கிஞ்சித்	வாயால் வந்ததொன்றை
ப்ரலபாமி	பிதற்றுகின்றேன்.

* * * 'த்வத்பாதயோரநுதிதஸ்ப்ருஹ:' என்று சொன்னவிது பொய்யன்றிக்கே உண்மையாயிருக்கப்பெற்ற அடியேன், திருமுன்பே நிற்கைக்கும் அயோக்யனுயிருந்து வைத்து 'ஹஸ்தீச! த்ருஷ்ட்யம்ருதவ்ருஷ்டி பிராபஜேதா:' என்று வாய்கூசாதே விண்ணப்பம் செய்வது என்ன அச்சங்கெட்ட அநீதியென்று அநுசயிக்கிறார்.

[ஹை!] கெட்டேன் கெட்டேனென்கிறார். அவனுடைய வைலக்ஷண்யத்தையும் தம்முடைய ஸ்வருபத்தையும் கண்டார். தார்மிகன் வைத்த தண்ணீர்ப் பந்தலை யழிப்பாரைப்போலே ஆழ்வார் போன்ற மஹான்களுக்கு அநுபாவ்யமான வஸ்துவை நாம் ஸம்போதித்துப் பேசி தூஷிக்கிறபடி யென்னே! என்று வெறுக்கிறார்.

[நிர்ப்பயோஸ்மி] புரோடாசத்தை விரும்புகின்ற நாய்க்குப் போலே நமக்கும் தக்க தண்டம் தவிராதென்று அஞ்சி நடுங்க ப்ராப்தமாயிருக்க பயலேசமுமற்றிருந்தேனென்கிறார். கடதாஸீ ஸார்வபௌமன் பாடேவந்து 'என்னை நோக்காய்' என்று விரும்புமாபோலே நம்மைப் பாராதே விலக்ஷண விஷயத்தைக் காமுற்றோமே. இதனைப் பிறரறியில் என்படுவோம்! என்று அஞ்சாதே கிடக்கிறேன்.

[அவிநயோஸ்மி] 'நெடுநாள் ஸதாசார்ய ஸேவை பண்ணி ஸ்வருபஜ்ஞராய்ப் போந்த நீர் இங்ஙனே வெறுத்துக்கொள்ளக்கடவீரோ' என்று எம்பெருமான் திருவுள்ளமாக, அந்தோ! ஆசார்ய ஸேவையை நான் கனவிலும் செய்தறியேனென்கிறார். அவிநய:=அசிக்ஷித: என்றபடி, ஆசார்ய ஸேவையில்லாமையாலே அசிக்ஷிதனுயிராநின்றேனென்கை, 'உம்முடைய நிர்பயத்வத்தையும் அவிநீதத்வத்தையும் எதுகொண்டு நிச்சயித்தீர்?' என்று எம்பெருமான் கேட்டானுகக்கொண்டு மறுமாற்ற முரைக்கிறார். [யத இத்யாதிநா] துர்விநீதே மம சேதஸி த்வதங்க்ரௌ லிப்ஸாமலப்தவதி ஸதி-யத: த்வதாக்ரே கிஞ்சித்ப்ரலபாமி-[தத ஏவ] ஒரு படியாலும் திருந்தாதே சீர்குலைந்து கிடக்கிற பாவியேன் நெஞ்சு தேவரீர் திருவடித்தாமரைகளிலே ஆசாலேசமும் அமையப் பெறுதிருக்க, தேவரீர் திருமுன்பே நின்று வாய்திறக்க விரகுண்டோ? ஞானபக்திகள் தலையெடுத்தார் பேசும்படிகளை அநுகரித்துச் சில பாசுரங்கள் பேசாநின்றேனே! பயவிநயங்கள் அடியேனுக் குண்டாகில் இங்ஙனே பேச ப்ரஸக்தியுண்டோ? இது கொண்டே யாய்த்து அடியேன் 'நிரப்பயோஸ்ம்ய விநயோஸ்மி, என்றேனென்கிறார். 'நாணமில்லாச் சிறுதகையேன் நானிங்கலற்றுவதென்?' (74)

सव्याधिराधिरवितुष्टिरनिष्टयोगः स्वाभीष्टभञ्जनममर्षकरो निकर्षः ।
कृन्तन्ति सन्ततमिमानि मनो मदीयं हस्तीश! न त्वदभिलाषनिधिप्रहाणिः ॥ ७५ ॥

ஸவ்யாதிராதிரவிதுஷ்டிரநிஷ்டயோக: ஸ்வாபீஷ்டபஞ்ஜநமமர்ஷகரோ நிகர்ஷ:।
க்ருந்தந்தி ஸந்ததமிமாநி மநோ மதீயம் ஹஸ்தீச ந த்வதபிலாஷநிதிப்ரஹாணி: ॥ 75 ॥

ஹஸ்தீச	ஹஸ்திகிரி நாதனே!	இமாநி	ஆக இவைகள்
ஸவ்யாதி:	சரீர வ்யாதியோடு கூடின	மதீயம் மந:	என் மனதை
ஆதி:	மனோவ்யாதியென்ன	ஸந்ததம்	எப்போதும்
அவிதுஷ்டி:	[நெடுநாளநுபவித்தும்] த்ருப்தி பிறவாமையென்ன	க்ருந்தந்தி	ஈர்கின்றன.
அநிஷ்டயோக:	வேண்டாதவை வந்துசேர்வதென்ன	த்வதபிலாஷநிதி ப்ரஹாணிஸ்து	உன்னிடத்தில் அன்பு வைப்பதாகிற நிதியினிழவோவென்றால்
ஸ்வாபீஷ்ட பஞ்ஜநம்	விரும்பிய பொருள் கிடைக்காதபடி தடைபடுவதென்ன	ந க்ருந்ததி	வருத்துகின்றதில்லை [உன்னிடத்தில் அன்பு இல்லையே என்கிற துக்கம் மாத்திர மில்லை யென்கை].
அமர்ஷகர: நிகர்ஷ:	கோபத்தை யுண்டாக்கவல்ல தாழ்ச்சியென்ன		

* * * கீழ் 'த்வதங்க்ரௌ லிப்ஸாமலப்தவதி சேதஸி' என்றதை விவரிக்கிறதாய்த்து இந்த ச்லோகம். ''யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே। ஸா ஹாநிஸ்தந் மஹச்சித்ரம்

ஸா ப்ராந்திஸ் ஸா ச விக்ரியா ॥ '' என்று ஒரு க்ஷணம் ஒரு பகவத் சிந்தை மாறினாலும், அதுவேதான் மஹத்தான ஆபத்தென்றும், 'ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாந வர்ஜிதே! தஸ்யுபிர்முஷிதே நேவ யுக்த மாக்ரந்திதும் ந்ருணும் ॥ '' என்று பகவதநுத்யாநமின்றிக்கே ஒரு நொடிப்பொழுது கழிந்தாலும் ஸர்வஸ்வத்தையும் பறிகொடுத்தவன்போலே ஊணுமுறக்கமுமற்றுக் கதறக்கடவதென்றும் இப்புடைகளிலே சாஸ்த்ரம் சொல்லா நிற்க, அதிலே நான் கரையாதே கிடக்கிறேனென்கிறார். எனக்கும் சில கரைதல்களுண்டு; அவை விஷயாந்தரங்களிலேயாயிருக்கு மத்தனை போக்கி ''தேவரீர் பக்கல் பாவபந்தம் குலையப்பெற்றதே!' என்னுமத்தாலே யுண்டாகக் கடவ கரைதல் மாத்திரம் ஒருநாளுமெனக்கில்லை யென்கிறார்.

[ஸவ்யாதி: ஆதி:] ஆதியும் வ்யாதியுமென்றபடி ஆதிவ்யாதிகளுண்டானால் அடியேன் கரைகின்றேனே யொழிய பகவத் விஷயகபாவபந்தத்துக்கு ஹாநிவந்துவிட்டதே யென்று ஒருபோதும் கரைகிறேனில்லை யென்கை. [அவிதுஷ்டி:]—சிரகாலம் பஹுசோ புக்தேஷ்வபி விஷயேஷ்வத்ருப்தி:. விஷயங்களை நெடுநாள் வயிரார வுண்டு போந்தாலும் த்ருப்தனன்றிக்கே யொழிகை. [அநிஷ்டயோக:] விரும்பாதவை வந்து சேருகை. [ஸ்வாபீஷ்ட பஞ்ஜநம்] விரும்பினது கைபுகுரா தொழிகை. 'இன்னுமொரு பிள்ளை பிறக்கவேணும்' என்று விரும்பாநிற்கச் செய்தே ஏற்கனவே பிறந்துள்ள பிள்ளையும் செத்து, க்ருஹிணி தானும் செத்து நிற்கும்படியான சில ஸம்பவங்களுண்டிறே ஸம்ஸாரத்திலே; இவையாய்த்து அநிஷ்ட யோகமும் ஸ்வாபீஷ்ட பஞ்ஜநமும்.

[அமர்ஷகரோ நிகர்ஷ:] அமர்ஷமாவது ரோஷம். அதனை விளைக்கக்கடவதான நிகர்ஷம்—தண்மை. குலம், ரூபம், வித்யை, குணம் என்னுமிவற்றால் தான் குறைய நிற்க, பிறர் அவற்றால் நிறைய நின்றால் வருவதொரு அஸஹிஷ்ணுதை யுண்டிறே ப்ராக்ருத ஜனங்களுக்கு, அப்படிப்பட்ட அஸஹிஷ்ணுதைக்கு நிமித்தமான குலரூபவித்யாதநாதிஷு நிகர்ஷம். அதவா [அமர்ஷகரோ நிகர்ஷ:] நம் சௌரவம் குறையும்படி பிறர் ஒரு வார்த்தை சொன்னவாறே அவன் தலையை அரிந்து போகடும்படியானதொரு ரோஷமுண்டாகக் கடவதிறே; அந்த ரோஷஜனகமான நிகர்ஷமாகவுமாம்.

[இமாநி] ஆகக் கீழ்ச்சொல்லப்பட்ட இவை. ஆதிவ்யாதிகள், அவிதுஷ்டி, அநிஷ்டயோகம்-அபீஷ்ட பஞ்ஜனம், அமர்ஷகரமான நிகர்ஷம் என்னப்பட்ட இவை. 'இமாநி' என்று ஸாமாந்யே நபும்ஸகம். [மதீயம் மந: ஸந்ததம் க்ருந்தந்தி] ஐயோ! நமக்கு சரீர பீடை யுண்டாயிற்றேயென்றும், மனோவ்யாதி யுண்டாயிற்றேயென்றும் இப்படிப்பட்ட குறைகளைப் பற்றி அடியேன் அஹோராத்ரம் கவலைப்படாநின்றேனே யொழிய [த்வதபிலாஷநிதிப்ரஹாணிஸ்து [கிஞ்சிதபி] மதீயம் மநோ ந க்ருந்தந்தி] த்வதபிலாஷநிதிப்ரஹாணி:= த்வயி அபிலாஷ:, ஸ ஏவ நிதி: ; ப்ரக்ருஷ்டா ஹாநி: ப்ரஹாணி: ; நிதே:] ப்ரஹாணி:, 'பேரருளாளனுடைய பாதபங்கயத்திலே அநுராகம் குலையப்பெற்றோமே' என்று ஒருபோதும் கவலைப்படுகின்றிலே னென்கை. பகவத் விஷயத்திலே அபிலாஷை மாத்ரமே அக்ஷய பலப்ரதமாகையாலே அதனை நிதி யென்கிறார். (75)

विद्वेषमानमदरागविलोभमोहाद्याजानभूमिरहमत्र भवे निमज्जन् ।
निर्द्वन्द्व नित्यनिरवद्य महागुणं त्वां हस्तीश! कश्श्रयितुमीक्षितुमीप्सितुं वा ॥ ७६ ॥

வித்வேஷமாநமதராகவிலோபமோஹாதி ஆஜாநபூமிரஹமத்ர பவே நிமஜ்ஜந் ।
நிர்த்வந்த்வ நித்யநிரவத்ய மஹாகுணம் த்வாம் ஹஸ்தீச க:ச்ரயிதுமீக்ஷிதுமீப்ஸிதும் வா ॥ 76 ॥

நிர்த்வந்த்வ	ஜ்ஞாநாஜ்ஞானங்கள் ஸுகதுக்கங்கள் என்கிற த்வந்த்வமில்லாதவனையும்	வித்வேஷமாந மதராகவிலோப மோஹாதி ஆஜாந பூமி:	வித்வேஷ-ஒரு வஸ்துவில் அகாரணமாகப் பகைகொள்வதென்ன. மாந-ஆபிஜாத்யாதி ப்ரயுக்தமாக அஹங்கரிக்கையென்ன, மத-விஷய லாபத்தாலே கொழுப்படைவதென்ன, ராக-விஷய ப்ராப்தியை விருப்புகையென்ன, விலோப -
நித்யநிரவத்ய	ஸ்வபாவமாகவே ஹேயப்ரதிபடனாயுமுள்ள		
ஹஸ்தீச!	பேரருளாளனே!		

விசேஷ லோபமென்ன, மோஹ - மோஹமென்ன, ஆதி-இவை முதலான துர்க்குணங்களுக்கு, ஆஜாந பூமி: பிறப்பிடமாய்

அத்ர பவே — இந்த ஸம்ஸாரத்தில்
நிமஜ்ஜந் — மூழ்கிக்கிடக்கிற
அஹம் — அடியேன்
மஹாகுணம் — சிறந்த குணமுடைய
த்வாம் — உன்னை
ச்ரயிதும் — அடைவதற்கும்
ஈக்ஷிதும் — காண்பதற்கும்
ஈப்ஸிதும் — அடைய விரும்புவதற்கும்
க: — எவ்வளவன் ! [ஒன்றுக்கும் அதிகாரியல்லேன்]

* * * 'உன் விஷயதிலே அபிலாஷையில்லையே' என்கிற அநுதாபமுமில்லையென்றார் கீழ் ச்லோகத்தில்; அந்த அபிலாஷை தானும் அடியேனுக்கு அவத்யமென்கிறாரிதில்; நிகர்ஷத்தின் எல்லையிலே நிற்கிற நான் ஸர்வாதிகனான வுன்னை அபிலஷிக்க எவ்வளவன் என்கிறார். இதில் பூர்வார்த்தத்தாலே தம்முடைய தன்மையை அருளிச் செய்து, உத்தரார்த்த—ஏகதேசத்தாலே பேரருளாளனுடைய ஸர்வாதிகத்வத்தை அருளிச்செய்து, சரமபாதத்தாலே தம்முடைய அநர்ஹதையை அருளிச் செய்கிறார்.

[வித்வேஷமாநமதராக விலோப மோஹா த்யாஜாந பூமிரஹம்] வித்வேஷ மாவது—நிர்நிமித்தமாக ஒருவன் பக்கலிலே பகைகொள்ளுகை. மாநமாவது.—'மாநச்சித்த ஸமுந்நதி:' என்கிறபடியே ஆபிஜாத்யாதிப்ரயுக்தமான மேனாணிப்பு; கர்வம். மதமாவது-விஷயலாபத்தாலே யுண்டாகக்கடவ மனக்களிப்பு. ராகமாவது விஷயப்ராப்தியில் அபிலாஷம். விலோபமாவது.—ப்ராப்தமான பொருளை ஸத் பாத்ரத்திலே விநியோகிக்கைக்கு இடைச்சுவரான அபிநிவேசம். மோஹமாவது—க்ருதக்ருத்யங்களைப்பற்றித் தெளிவில்லாமை. ஆதிசப்தத்தாலே காமக்ரோதாதிகளை க்ரஹிக்கக்கடவது. இப்படிப்பட்ட தோஷங்களுக்குத் தம்மை ஜந்மபூமியாக அருளிச்செய்கிறார்—ஸத்குணகணாகராரான இவர் !

[நிர்த்வந்த்வ] : த்வந்த்வசூந்யனே! 'க்ஷுத்பிபாஸே சோகமோஹௌ ராகத்வேஷௌ ததைவ ச। காமக்ரோதப்ரப்ருதய: த்வந்த்வ சப்தேந வர்ணிதா:॥' என்னுநின்றதிறே. 'கொள்கை கொளாமையிலாதான், எள்கலிராகமிலாதான்' என்னுமாபோலே ராகத்வேஷசோகமோஹாதிகளற்றவனே! என்கை. அன்றிக்கே 'நிர்த்வந்த்வநித்யநிரவத்ய மஹாகுணம்' என்னுமளவும் ஸமஸித்து நிர்வஹிப்பாருமுண்டு; அப்போது த்வந்த்வபதம் ஸத்ருசவாசியாய், நிர்த்வந்த்வா: [அஸத்ருசா:] நித்யா: நிரவத்யா: யே மஹாகுணா:, தே யஸ்மிந் ஸ: என்றாய் அநுபமங்களாய் நித்யங்களாய் நிஷ்கல்மஷங்களான மஹாகுணங்களையுடையவனே! என்றதாகிறது.

[த்வாம் அஹம் ஈப்ஸிதும் வா ச்ரயிதும் வா ஈக்ஷிதும் வா க:? வித்வேஷாதிதோஷ பூயிஷ்டனான அடியேன் ஹேயப்ரத்யநீககல்யாணகுணாகரனான வுன்னை விரும்பவும் தொழவும் காணவும் எவ்வளவிலேன்? ஸர்வாத்மநா அடியேன் அநதிகாரியென்கை. (76)

पुत्रादयः कथममी मयि संस्थिते स्युः इत्यप्रतिक्रियनिरर्थकचिन्तनेन ।
दूये न तु स्वयमहं भवितास्मि कीदृक् इत्यस्ति हस्तिगिरिनाथ विमर्शलेशः ॥ ७७ ॥

புத்ராதய: கதமமீ மயி ஸம்ஸ்திதே ஸ்யு: இத்யப்ரதிக்ரியநிரர்த்தகசிந்தநேந ।
தூயே ந து ஸ்வயமஹம் பவிதாஸ்மி கீத்ருக் இத்யஸ்தி ஹஸ்திகிரிநாத விமர்சலேச: ॥ 77 ॥

ஹஸ்திகிரிநாத — பேரருளாளனே !
மயி ஸம்ஸ்திதே ஸதி — நான் மாண்டளவில்
[illegible] புத்ராதய: — இந்த மக்கள் முதலானவர்கள்
[illegible] ஸ்யு: இதி — எப்படியாவர்களோ என்று
[illegible] சிந்த[illegible]ந: — ப்ரதீகார மற்றதாய் [அத ஏவ] வ்யர்த்தமான சிந்தையால்
அஹம் — அடியேன்
தூயே — கஷ்டப்படுகிறேன்;
ஸ்வயம் கீத்ருக் பவிதாஸ்மீதி து — நாமெப்படி ஆகப்போகிறோமென்பது மாத்திரம்
விமர்சலேச: — சிறிது ஆராய்ச்சியும்
[மே] நாஸ்தி — அடியேனுக்கு இல்லை,

* * * கீழ் ப்ரஸ்துதமான தம்முடைய அநதிகாரித்வத்தையே இதில் ப்ரகாராந்தரேண ப்ரதிபாதித்தருளுகிறார். ஸ்ரீ வசன பூஷணத்தில் ஸச்சிஷ்யலக்ஷண ப்ரகரணத்திலே 'ஸ்வதோஷத்துக்கும் பகவத்பாகவத குணங்களுக்குமே காலம் போருகையாலே' என்றருளிச் செய்யுமிடத்து 'ஸ்வதோஷத்துக்கும்' என்று முதலிலே சொல்லுகையாலே பகவத்பாகவத குணாநுஸந்தானத்திற் காட்டிலும் ஸ்வதோஷா நுஸந்தானமே ப்ரதான கர்த்தவ்யம் என்னுமிடம் ஸித்தமாக நின்றதிறே. ஆழ்வானுடைய ஸ்ரீஸூக்திகளில் பகவத்குணாநுஸந்தானம் சுருங்கி ஸ்வதோஷா நுஸந்தானம் பெருகியிருக்குமென்றிறே ப்ரஸித்தியிருப்பது. ஆகையிறே சிஷ்ய லக்ஷணத்துக்கு இவர் ப்ரதம நிதர்சந பூமியாய்த்து. எம்பெருமானார் திருவடிகளிலே பலகோடி நூறாயிரம் முதலிகள் ஆச்ரயித்தார்களாயிருக்கச் செய்தேயும் 'ஸ்ரீவத்ஸ சிஹ்நசரணம் யதிராஜமீடே' என்று மணவாளமாமுனிகள் அருளிச்செய்தமை கண்டிரே.

[மயிஸம்ஸ்திதே ஸதி] மயி மரணம் கதே ஸதி, என்றபடி. 'பராஸுப்ராப்த பஞ்சத்வபரேத ப்ரேதஸம் ஸ்த்திதா: । ம்ருத ப்ரமீதௌ த்ரிஷ்வேதே' என்பது அமரம். [அமீ புத்ராதய: கதம் ஸ்யுரிதி] நாம் முடிந்தபிறகு நம்முடைய புத்ரகளத்ராதிகள் எப்பாடு படப்புகுகிறார்களோ வென்று [அப்ரதிக்ரிய நிரர்த்தக சிந்தநேந தாயே] லோகத்திலே ஜநிதர்மாக்களுக்குப் பல சிந்தைகள் விளைவதுண்டு; அவை ப்ரதீகாரஸஹங்களாயும் அத ஏவ ஸார்த்தகங்களாயுமிருக்கும்; நான் படுகிற சிந்தையோ வென்றால், 'இந்த கோபுரமிடிந்து கீழே விழுந்தால் செய்வதென்? இந்த மதிலிடிந்து மேலே விழுந்தால் செய்வதென்? கடல் வெள்ளம் நாட்டிலே வந்து பெருகிற் செய்வதென்?' இத்யாதி சிந்தைகள் போலே அப்ரதீகாரமாய் அத ஏவ நிரர்த்தகமாயிருக்கும். அப்படிப்பட்ட சிந்தையினால் அடியேன் நெஞ்சு தளர்ந்து புண்பட்டிருப்பதென்கிறார்.

[அஹம் ஸ்வயம் கீத்ருக் பவிதாஸ்மி? இதி து விமர்சலேசோபி நாஸ்தி] 'நாம் நாளைக்கு எப்பாடு படப்புகா நின்றோமோ' என்று அல்பமும் சிந்தித்தறியேன் கிடாயென்கிறார். ... (77)

शंपाचलं बहुलदुःखमनर्थहेतुः अल्पीय इत्यपि विमृष्टिषु दृष्टदोषम् ।
दुर्वासनाद्रढिमतस्सुखमिन्द्रियोत्थं हातुं न मे मतिरलं वरदाधिराज ॥ ७८ ॥

சம்பாசலம் பஹுலதுக்கமநர்த்தஹேது: அல்பீய இத்யபி விம்ருஷ்டிஷு த்ருஷ்டதோஷம் ।
துர்வாஸநாத்ரடிமதஸ்ஸுகமிந்த்ரியோத்தம் ஹாதும் ந மே மதிரலம் வரதாதிராஜ ॥ 78 ॥

வரதாதிராஜ	பேரருளாளப்பெருமாளே!	த்ருஷ்ட தோஷம்	ப்ரத்யக்ஷிக்கப்பட்ட தோஷங்களையுடையதாயும்
விம்ருஷ்டிஷு	ஆராய்ச்சி செய்யுமளவில்	இந்த்ரியோத்தம்	இந்த்ரியஜந்யமாயுள்ள
சம்பாசலம் இதி	மின்னல்போல் க்ஷணிகமானதென்றும்	ஸுகம்	விஷயஸுகத்தை
பஹுளதுக்கமிதி	துக்கப்ரசுரமானதென்றும்	மே மதி:	என் புத்தியானது
அநர்த்தஹேதுரிதி	அநர்த்தங்களுக்குக் காரணமென்றும்	துர்வாஸநாத்ரடிமத:	துர்வாஸனையின் உறைப்பினாலே
அல்பீய: இத்யபி	அத்யல்பமென்றும் [இப்படியாக]	ஹாதும் நாலம்	விடமாட்டாதிருக்கிறது.

* * * விஷயதோஷ ஸமஷ்டியை ஸ்பஷ்டமாகக் கண்டு கொண்டிருக்கச் செய்தேயும் துர்வாஸநாதார்ட்யத்தாலே அவற்றில் நசையறப்பெறுகின்றிலேனென்கிறார்.

[ஹே வரதாதிராஜ! விம்ருஷ்டிஷு சம்பாசலமிதி பஹுல துக்கமிதி அநர்த்தஹேதுரிதி அல்பீய இதி ச த்ருஷ்ட தோஷமபி இந்த்ரியோத்தம் ஸுகம், மே மதி: துர்வாஸநாத்ரடிமத: ஹாதும் நாலம்.] ஐந்த்ரியகமான ஸுகாபாஸங்களிலே பரமபோக்யதா புத்தியானது ஆபாதப்ரதீதியிலே தோன்றினாலும் விவேகிகளாயிருப்பார் சிறிது விமர்சித்தவாறே அவற்றினுடைய தோஷங்களடங்கலும் கையிலங்கு நெல்லிக்கனிபோலே விளங்கக்கடவதாயிருக்குமிறே. [விம்ருஷ்டிஷு] விம்ருஷ்டியாவது—விமர்சம்—ஆராய்ச்சி. ஆவ்ருத்தி பஹுத்வத்தைப்பற்ற 'விம்ருஷ்டிஷு' என்று பஹுவசனமாய்க் கிடக்கிறது.

ஒருகால் ஆராய்ந்தவாறே விஷயங்களின் தோஷபூயஸ்த்வம் அறியவரிதாய் பலகால் ஆராய்ந்தாலிறே அது அறியக்கடவதாயிருக்கும். அது தோன்றவாய்த்து 'விம்ருஷ்டௌ' என்னாதே 'விம்ருஷ்டிஷு' என்றது. வி-பூர்வகமான ம்ருசதாது-க்திந் ப்ரத்யயாந்தமாய் விம்ருஷ்டி யென்றாகக்கடவது.

[சம்பாசலம்] 'மின்னின்னிலையில மன்னுயிராக்கைகள்' என்றும், 'கர்ப்பேபி லீயதே பூயः ஜாயமானோஸ்தமேதி ச। ஜாதமாத்ரேபி ம்ரியதே பால பாவேத யௌவநே। மத்யமஞ்ச வயः ப்ராப்ய வார்த்தகே வா த்ருவா ம்ருதிः' என்றும், 'ஸம்பதः ஸ்வப்ந ஸங்காசாः யௌவநம் குஸுமோபமம்। தடிச்சஞ்சலமாயுச்ச கஸ்ய ஸ்யாஜ்ஜாந்தோ த்ருதிः' என்றும் சொல்லுகிறபடியே சரீரம் அஸ்திரமென்றால், சரீரோபாதிகமான இந்த்ரியஸுகம் ததோபி க்ஷணிகமென்னத் தட்டில்லையிறெ. ஆயிடுக; க்ஷணிகமேயாகிலும் அந்த க்ஷணத்திலாவது ஸுகரூபமாயிருக்குமோ வென்னில், அதுவுமில்லை யென்கிறார் [பஹுல துக்கம் என்று.] இந்த்ரிய ஸுகத்தை ஸுகமென்றே கொண்டாலும் துःக்காம்சமே ப்ரசுரமா யிருக்குமென்கை. இந்த ஸுகாபாஸமானது மேலுள்ள காலத்திலும் துக்கங்களை விளைக்கக் கடவதாயிருக்கு மென்கிறார். [அநர்த்த ஹேதுः என்று.] கண்டார், கண்டவிடங்களிலெல்லாம் கர்ஹிக்கும்படியாயும், மேல் கோரநரகப்ரவேச ஹேதுவாயுமிறெ இதிருப்பது. நாலு நாளிலே ஸர்வஸ்வத்தையு மிழந்து கையும் கபாலமுமாய்ப் படுகிற அநர்த்தங்கள் வாசாமகோசரமாயிறே யிருப்பது. [அல்பீயः = அத்யந்தமல்பம் என்றபடி. 'சிற்றின்பம்' என்றிறே வைஷயிக ஸுகங்களைப் பாமரர்களும் வ்யவஹரித்துப் போருகிறது.

[இதி த்ருஷ்டதோஷமபி] இங்ஙனே இதினுடைய தோஷங்கள் ஸுவ்யக்தமாகக் கண்டுகொண்டிருக்கச் செய்தேயும் அநாதி துர்வாஸநாவிபவமானது இந்த ஸுகாபாஸங்களிலே மேன்மேலென அபிநிவேசத்தைப் பெருக்குமத்தனை போக்கி விரக்தி ஹேதுவாகிறதில்லை யென்கிறார். ... (78)

बुद्ध्वा च नो च विहिताकरणैर्निषिद्धसंसेवनैः त्वदपचारशतैरसह्यैः ।
भक्तागसामपि शतैर्भवताऽप्यगण्यैः हस्तीश ! वाक्तनुमनोजनितैर्हतोऽस्मि ॥ ७९ ॥

புத்த்வா ச நோ ச விஹிதாகரணைர் நிஷித்தஸம்ஸேவநைஸ் த்வதபசாரசதைரஸஹ்யைः।
பக்தாகஸாமபி சதைர்பவதாப்யகண்யைः ஹஸ்தீச! வாக்தநுமநோஜநிதைः ஹதோஸ்மி ॥ 79 ॥

புத்த்வா ச	தெரிந்தும்	நிஷித்த ஸம்ஸேவநைः	சாஸ்த்ர நிஷித்தங்களைச் செய்கை யாகிற பாபங்களாலும்
நோ புத்த்வா ச	தெரியாமலும்	த்வதபசார சதைः	உன் திறத்தில் செய்யும் பல பல அபசாரங்களாலும்
வாக்தநுமநோ ஜநிதைः	வாக்கென்ன, சரீரமென்ன, மனஸ்ஸென்ன இவைகளால் உண்டாக்கப் பட்ட	அஸஹ்யைः	ஸர்வ ஸஹிஷ்ணுவான வுனக்கும் பொறுக்க முடியாத
பவதாபி அகண்யைः	[ஸர்வசக்தனான] உன்னாலும் எண்ண முடியாத	பக்தாகஸாம் சதைரபி	பல பல பாகவதாபசாரங்களாலும்
விஹித அகரணைः	விஹிதங்களைச் செய்யாமையாகிற பாபங்களாலும்	ஹதோஸ்மி	கெட்டேன்.

* * * வைஷயிகஸுகாபிநிவிஷ்டனென்னுமித்தனையேயோ? கரணத்ரயத்தாலும் அடியேன் செய்து போரும் அபசாரங்களுக்குத் தான் ஒரு வரம்புண்டோ வென்கிறார். [புத்த்வா ச நோ ச] புத்த்வா ச நோ புத்த்வா ச என்றபடி. [அறிந்தும் அறியாமலும்] அபசாரங்கள் புத்தி பூர்வகம், ப்ராமாதிகம், அகதிகம் என்று த்ரிவிதமாயிருக்கும். இங்கு 'புத்த்வா ச நோ ச' என்று புத்தி பூர்வகத்தையும் ப்ராமாதிகத்தையும் நிர்தேசித்தது அகதிகத்துக்கும் உபலக்ஷணமென்னலாம்.

[விஹிதாகரணைः] 'இடகிலேனோன்றட்டகில்லேனைம்புலன் வெல்லகில்லேன், கடவனாகிக் காலந்தோறும் பூப்பறித்தேத்தகில்லேன். [நிஷித்த ஸம்ஸேவநைः] 'விஹிதாகரணைः' என்றாப் போல் 'நிஷித்தகரணைः' என்னாதே 'ஸம்ஸேவநைः' என்றது—நிஷித்தக்ருத்யங்களில் ஆதரபூர்வகமாக அபிநிவேசித்தமை தோற்றுகைக்காக. த்விதீயபாதத்தில் 'த்வதபசாரசதைः அகண்யைः' என்றும், த்ருதீயபாதத்தில் 'பவதாப்யஸஹ்யைः' என்றும் ப்ராசீநபாடமென்று கேட்டிருக்கை. அந்த பாடத்திலே

பகவதபசாரபாகவதாபசாராஸஹ்யாபசாரரூப நாநாவிதாநந்தாபசாராந்' [சரணகதிகத்யே] என்றதை, நினைக்க.

அக்ருத்யகரணத்திற்காட்டில் பகவதபசாரம் க்ரூரதரமாய், அதிலும் பாகவதாபசாரம் க்ரூரதரமாய், அது தன்னிலும் அஸஹ்யாபசாரம் அதிமாத்ரக்ரூர தரமாயிருக்கும். இதுக்கடி பூர்வபூர்வங்களிற்காட்டில் உத்தரோத்தரங்களில் பகவந்நிக்ரஹமதிசயித்திருக்கை. [பவதாப்யகண்யைः] ஸர்வசக்தனான உன்னாலும் எண்ணவொண்ணாதபடியிறே அடியேன் அபராதம் செய்திருப்பது. 'பஹவோ ந்ருப கல்யாண குணாः புத்ரஸ்ய ஸந்தி தே' என்ற உன் கல்யாண குணங்களை ஒருபடி எண்ணி முடித்து விடலாம். அடியேனுடைய கல்யாண குணங்கள் வஸ்துதः அஸங்க்யேயங்களென்கிறார். இந்த விசேஷணம் 'விஹிதாகரணைः' இத்யாதிகளெல்லாவற்றிலும் அந்வயிக்கக் கடவது. [வாக்தநுமநோ ஜநிதைः] ஸமித்தையறுக்கக்கொடுத்த வாளைக்கொண்டு அந்தோ! கண்ணைக் குத்திக் கொண்டேனென்கிறார். [ஹதோஸ்மி] இப்படிப்பட்ட அபசாரஸஹஸ்ரங்களாலே ஸ்வரூபஸத்தையே கெட்டதென்கிறார். (79)

त्वद्दास्यमस्य हि मम स्वरसप्रसक्तं तच्चोरयन्नयमहं किल चस्खल प्राक् ।
त्वं मामकीन इति मामभिमन्यसे स्म हस्तीश! संशमय नस्तमिमं विवादम् ॥ ८० ॥

த்வத்தாஸ்யமஸ்ய ஹி மம ஸ்வரஸப்ரஸக்தம் தச்சோரயந்நயமஹம் கில சஸ்கல ப்ராக்
த்வம் மாமகீந இதி மாமபிமந்யஸே ஸ்ம ஹஸ்தீச ஸம்சமய நஸ் தமிமம் விவாதம் ॥ 80 ॥

ஹஸ்தீச	பேரருளாளனே!
அஸ்ய மம	இப்படிப்பட்ட [மஹா பாபியான] எனக்கு
த்வத்தாஸ்யம்	உன்பக்கல் அடிமையாயிருப்பதன்றோ
ஸ்வரஸப்ரஸக்தம் ஹி	ஸ்வாரஸிகமானது [ஸ்வதஸ்ஸித்தம்];
அயம் அஹம்	இந்த நான்
ப்ராக்	பண்டெல்லாம்
தத்	அந்த ஸ்வதஸ்ஸித்ததாஸ்யத்தை
சோரயந்	களவுகாணுநின்றவனாய்
சஸ்கல கில	நழுவிப் போந்தேன் காண்;
த்வம்	[நடுவே வந்துய்யக் கொள்கின்ற நாதனாகிய] நீ
மாம்	[இப்படிப்பட்ட] என்னை
மாமகீநः இதி	'இவன் நம்முடையவன்' என்று
அபிமந்யஸே ஸ்ம	அபிமானித்தருளினாய்;
நः	உனக்கும் நமக்குமுண்டான
தம் இமம் விவாதம்	நான் உன் தாஸனல்லேன் காண் என்று கைகழியப் போவதும், "நீ என் தாஸன்" என்று என்னை நீ பின் தொடர்வதுமான இந்த விஸம்வாதத்தை
ஸம்சமய	இனியெப்போதும் தலையெடுக்கவொண்ணாதபடி ஸமூல சாந்தி செய்தருள்வாய்.

* * * ஆக இவ்வளவும் ஸ்வதோஷ ஸமுதாயாநுஸந்தானம் செய்தருளி, பரகதஸ்வீகாரமடியாக ஸ்வரூபஸத்தை பெற்றேனென்கிறாரிதில். [அஸ்ய மம த்வத்தாஸ்யம் ஹி ஸ்வரஸப்ரஸக்தம்] இங்ஙனே தோஷவிசிஷ்டவேஷைக நிரூபணீயனான அடியேனுக்கு தேவரீருடைய திருவடித்தாமரைகளில் தாஸ்ய வ்ருத்தியேயிறே ஸ்வரஸதः ப்ராப்தமாயிருப்பது. சேஷத்வாதிகளும் ஜ்ஞாத்ருத்வாதிகளும் ஆத்மதர்மங்களாயிருக்கச்செய்தே சேஷத்வாதிகளை ப்ரதாநமாக்கி ஜ்ஞாத்ருத்வாதிகளை தததுகுணமாக யோஜிப்பர்களாய்த்து நம்மவர்கள்.

எம்பெருமானார் கோஷ்டியிலே உபயவேதாந்த க்ரந்த காலக்ஷேபம் நடவா நிற்க, 'ஆத்மாவுக்கு ஜ்ஞாநாநந்தங்களும் சேஷத்வமும் நிருபகமாகச் சொல்லா நின்றது. இவற்றில் அந்தரங்க நிருபகமேது?' என்று ஒரு நாள் திருவோலக்கத்திலே ப்ரஸ்துதமாக எம்பெருமானார் தாமெழுந்தருளியிருக்கச் செய்தேயும் இவ்வர்த்த விசேஷத்தை ஆசார்யமுகேந வெளியிட வேணுமென்று திருவுள்ளம் பற்றி ஆழ்வானை நோக்கி 'வாரீர் ஆழ்வான்! திருக்கோட்டியூருக்குச் சென்று, நம்பியை ஸேவித்து இதனை அறிந்து வாரும்' என்று நியமிக்க, ஆழ்வானும் நம்பி ஸந்நிதிக்கெழுந்தருளி தண்டன் ஸமர்ப்பித்து வ்ருத்தாந்தத்தை

விண்ணப்பம் செய்து ஆறுமாஸம் ஸேவித்திருந்தும் நம்பிகள் இரங்கியருளக்காணமையாலே 'எம்பெருமானர் ஸந்நிதியேற விடை கொள்ளுகிறேன்' என்று புறப்படப்புக, நம்பி ஆவசையழைத்து "* மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார் 'அடியேனுள்ளான்' என்றபடி கண்டாயே" என்றருளிச் செய்ய, ஆழ்வானும் 'தங்யோஸ்மி' என்று மீண்டெழுந்தருளினர்.

இதன் கருத்து என்னென்னில், திருவாய்மொழியில் 'கண்கள் சிவந்து' என்கிற பாட்டும் 'அடியேனுள்ளான்' என்கிற பாட்டும் எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கு மவை. இவற்றுள் 'அடியேனுள்ளான்' என்ற பாட்டில் முதல் விசேஷணத்தாலே 'எம்பெருமான் ஜீவாத்மாவை அநுப்ரவேசித்திருக்குமவன்' என்றருளிச் செய்யக் கருதிய ஆழ்வார் 'ஆத்மாவிலுள்ளான்' என்றாவது 'என்னுள்ளான்' என்றாவது சொல்லாமல் 'அடியேனுள்ளான்' என்று—அடிமையையிட்டு ஆத்மாவை நிரூபித்தமை தோற்ற அருளிச்செய்கையாலே ஆத்மாவுக்கு ஜ்ஞாநாநந்தங்களிற் காட்டிலும் சேஷத்வமே ப்ரதான நிரூபகமென்றதாயிற்று.

அடியேனுக்கு த்வத்தாஸ்யம் அந்தரங்கநிரூபகமாயிருக்கச் செய்தேயும் [அயமஹம் ப்ராக் தத் சோரயந் சஸ்கல கில] முன்புள்ள காலமெல்லாம் ஆத்மாபஹாரக் கள்ளனாய்ப் போந்தேன். [சோரயந்] த்வத்தாஸ்யமே ஸ்வரூபமென்னுமிடம் அறியாதொழிந்தேனல்லேன். அறிந்து வைத்தே உன்னை வஞ்சிக்கப்புகுந்தேன் காண். [ப்ராக் சஸ்கல] 'தெரிந்துணர் வொன்றின்மையால் தீவினையேன், வாளாவிருந்தொழிந்தேன் கீழ் நாள்களெல்லாம்' என்னுமாபோலே 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' என்கைக்கு ப்ராப்தியுண்டாயிருக்க அநாதிகாலம் இழந்து போந்தேன். சஸ்கல=ஸ்கல தாது, லிட். உத்தமபுருஷம் ஏக வசனம். நழுவினேனென்கை. இப்படி அநாதிகாலம் * யானேயென்னை யறியகிலாதே யானே யென்றனதேயென்றிருந்த வென்னை * 'இசைவித்தென்னையுன் தாளிணைக் கீழிருத்துமம்மானை நீ உன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே இசைவித்தருளினயத்தனைகாணென்கிறார். [த்வம் மாம் மாமகீந இத்யபிமந்யஸேஸ்ம] 'இவன் நம்முடையானிறே; இவனை நாம் கைவிட்டிருக்க வொண்ணுமோ? உடைமையைப் பேணவேண்டுவது உடையவனுடைய பரமேயிறே' என்று திருவுள்ளமாய் இன்றளவிலே நீயேகாண் என்னையபிமானித்தருளினை.

இங்ஙனே ஆழ்வான் விண்ணப்பம் செய்யக் கேட்ட பேரருளாளன் 'அப்படியாகில் இனி உமக்கு ஒரு குறையுமில்லையே? இனி நாம் உமக்குச் செய்யவேண்டிய தொன்றுமில்லையே? ஸமீஹிதஸித்தி பெற்றீரன்றோ? இனி நம்மை ஒன்றுக்கும் கால்கட்டாதே விடக்கடவீரன்றோ?' என்ன, [ஹஸ்தீச ஸம்சமய நஸ்தமிமம் விவாதம்]—என்கிறார். 'ஏதத்த் புநரபி தைவதுர்விபாகாதாலர்க்கம் விஷமிவ ஸர்வதஃ ப்ரஸக்தம்' என்னுமாபோலே பழைய துர்வாஸனையே மீண்டும் மறுவலிட்டுப் பாவியேனைப் படுகுழியிலே வீழ்த்துமோ வென்று ப்ரக்ருதிஸ்வபாவத்தாலே போர பயப்படா நின்றேன். அடியேன் ஸ்வதஸ்ஸித்தமான தாஸ்யத்தை மறந்து * அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழியுழன்று திரிந்தது ஒருநாள் இருநாள் அல்ல; அநாதிகாலமுண்டு இங்ஙனே கழிந்தது. 'த்வம் மே' என்றால் 'அஹம்மே' என்று நெடுநாளாக மார்பு நெறித்துக்கிடந்த அடியேனை இன்று நீ நிர்ஹேதுகமாக அபிமானித்து உரிமைப்படுத்திக் கொண்டாயென்னு என்னுடைய அஹங்கார மமகாரங்கள் வேரூன்றிக் கிடந்தவை இன்றோடு முதலற்றுப் போய்விடுமோ? 'விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையும் செறுமைம்புலனிவை மண்ணுளென்னைப் பெற்றால் என் செய்யா' என்று * மயர்வற மதி நலமருளப் பெற்றவர்களே அஞ்சி நடுங்கும் போது நீசனேன் எவ்வளவிலேன்? இன்று அபிமதனாய்ப் போந்திருக்கிற அடியேனே நாளைக்கு 'கோயம் விஷ்ணுஃ' என்றாப்போலே க்ஷேபித்துச் சொல்லவும் எதிரம்பு தொடுக்கவும் நேருமாகையாலே இவ்வளவிலே அடியேன் த்ருப்தனாகிறிலேன்.' 'நஃ தமிமம் விவாதம் ஸம்சமய'=த்வம் மே ஹம் மே என்கிற விவாதம் இனி நமக்கு ஒருநாளுமுண்டாகாதபடி ஸமூலமாகப் போக்கியருள வேணும். * சீமாலிகனவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமர்றவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலை கொண்டாய் * என்ற உன்படியை நினைக்குந்தோறும் * ஆற்றங்கரை வாழ் மரம் போலஞ்சுகின்றேன்; ஆகையாலே ஆத்மத்ரவ்யத்தையும் அடியேன் உன்றன்றோடு விவாதப்படாதபடி க்ருபை செய்தருளவேணுமென்கிறார்.

.... (80)

भोगा इमे विधिशिवादिपदं च किंच स्वात्मानुभूतिरिति या किल मुक्तिरुक्ता ।
सर्वं तदूषजलजोषमहं जुषेय हस्त्यद्रिनाथ! तव दास्यमहारसज्ञः ॥ ८१ ॥

போகா இமே விதிசிவாதிபதம் ச கிஞ்ச ஸ்வாத்மாநுபூதிரிதி யா கில முக்திருக்தா ।
ஸர்வம் ததூஷஜலஜோஷமஹம் ஜுஷேய ஹஸ்த்யத்ரிநாத தவ தாஸ்யமஹாரஸஜ்ஞ꞉ ॥ 81 ॥

ஹஸ்த்யத்ரிநாத	திருவத்தி மாமலை நாதனே ;	கிம் ச	இன்னமும்
தவ	உன்னுடைய	ஸ்வாத்மாநுபூதிரிதி	ஆத்மாநுபவ மென்று
தாஸ்யமஹாரஸஜ்ஞ꞉	அடிமைச் சுவடறிந்த	உக்தா	சொல்லப்பட்ட
அஹம்	அடியேன்	யா கில முக்தி꞉	யாதொரு மோக்ஷமுண்டோ
[யே] இமே போகா꞉	ஐஹிகங்களான யாவை சில போகங்களுண்டோ	ஸர்வம் தத்	ஆகிய அவை எல்லாவற்றையும்
[யத்] விதி சிவாதி பதம் ச	ப்ரஹ்மருத்ராதிகளுடைய பதவி யாதொன்றுண்டோ	ஊஷஜலஜோஷம் ஜுஷேய	ஊஷரஜலப்ராயமாக [அஸாரமாக] நினைக்கக்கடவேன்.

* * * தமக்குப் பேரருளாளன் தாஸ்யரஸஜ்ஞாபனம் பண்ணினபடியை அருளிச்செய்தார் கீழ் ச்லோகத்திலே; அடிமைச்சுவடு நெஞ்சில் பட்டவாறே ப்ரயோஜநாந்தர வைரஸ்யம் பிறக்கக்கடவதிறே. அது பிறந்தபடியை அருளிச் செய்கிறாரிதில். இவ்வுலகத்தி லிருந்துகொண்டு அநுபவிக்கப்படுகிற புத்ர பௌத்ராதிஸந்தாந ஸம்ருத்தி, பசு ஸம்ருத்தி, அன்ன ஸம்ருத்தி முதலிய போகங்களென்ன, ஸ்வர்க்காதி லோகங்களிலே இருந்துகொண்டு அனுபவிக்கப்படுகிற ரம்பாபரிரம்பாதி போகங்களென்ன, [ப்ரஹ்மபட்டம் ருத்ரபட்டம் என்றிப்புடைகளிலே உத்துங்கமாக ஓதப்படுகிற பதவிகளென்ன] கேவலாத்மாநுபவமென்று சொல்லப்படுகிற அவர மோக்ஷமென்ன.—இவை யெல்லாவற்றையும் அஸாரமாக புத்திபண்ணக் கடவேன்; பேரருளாளனே! உன் திறத்திலே தாஸ்யரஸம் ஜ்ஞாநகோசரமானால் இந்த போகாபாஸங்களெல்லாம் ரோகமாகத் தோற்றுமத்தனை போக்கி ஒரு போகமாகத் தோற்றுமோ தான்! என்கிறார்.

[தத் ஸர்வம் ஊஷஜலஜோஷம் ஜுஷேய] ஊஷஜலமாவது-உப்புத்தண்ணீர். ஊஷஜலத்தை எப்படி ஒருபொருளாக மதிக்கமாட்டார்களோ அப்படி அடியேன் பகவதநுபவ வ்யதிரிக்த போகங்களை ஒரு பொருளாக மதிக்கமாட்டேன் என்றதாய்த்து. (81)

विषयविषधरव्रजव्याकुले जननमरणनक्रचक्रास्पदे ।
अगतिरशरणो भवाब्धौ लुठन् वरद! शरणमित्यहं त्वां वृणे ॥ ८२ ॥

விஷயவிஷதரவ்ரஜவ்யாகுலே ஜநநமரணநக்ரசக்ராஸ்பதே ।
அகதிரசரணோ பவாப்தௌ லுடந் வரத சரணமித்யஹம் த்வாம் வ்ருணே ॥ 82 ॥

வரத	வரந்தரும் பெருமானே !	லுடந்	புரளாநின்ற.
விஷயவிஷதர வ்ரஜவ்யாகுலே	சப்தாதி விஷயங்களாகிற ஸர்ப்ப ஸமூஹங்களால் நிபிடமாயும்	அஹம்	அடியேன்
ஜநந மரண நக்ர சக்ராஸ்பதே	பிறப்பிறப்பாகிற முதலைக்கூட்டங்களுக்கு இருப்பிடமாயுமிருக்கிற	அகதி꞉ அசரண꞉ இதி	உபேயாந்தரசூந்யன், உபாயாந்தர சூந்யன் என்ற காரணத்தினாலே
பவாப்தௌ	ஸம்ஸாரக் கடலில்	த்வாம்	உன்னை
		சரணம் வ்ருணே	சரணம் புகுகின்றேன்.

* * * இவ்வளவாலே தம்முடைய ப்ரபத்த்யதிகார பூர்த்தியை வெளியிட்டருளி, இனி ப்ரபத்தி பண்ணுகிறாரிதில். இந்த ச்லோகத்தில் பூர்வார்த்தத்தாலே ஸம்ஸாரத்தின் க்ரௌர்யத்தை யருளிச் செய்கிறார்.

ஸம்ஸாரத்தை ஸமுத்ரமாக ரூபித்தமைக்குச் சேர இரண்டு விசேஷணமிட்டருளுகிறார். பாம்புக ளும் முதலைகளும் முதலிய பல துஷ்ட ஜந்துக்களுக்கு ஸமுத்ரம் ஆஸ்பதமாக இருக்கிறாப் போலே யாய்த்து இந்த ஸம்ஸாரந் தானுமிருக்கும்படி. சப்தாதி விஷயங்களாகிற பாம்புத் திரள்களும், ஜநநமரணங்களாகிற முதலைத்திரள்களும் இந்த ஸம்ஸாரஸாகரத்திலே கிடக்கின்றனகிடீர். பாம்பின் வாயிலே யகப்பட்டவனுக்கும் விஷயங்களின் வாயிலே அகப்பட்டவனுக்கும் மதிமயக்கம் ஒத்திருக்கை யாலே விஷயங்களை விஷதரங்களாகச் சொல்லுகிறது. [ஜநந மரணநக்ரசக்ராஸ்பதே] கடலிலே யிழிந்த வர்கள் முதலைகளுக்குத் தப்பிப் பிழைக்கவொண்ணாதாப்போலே யாயிற்று இந்த ஸம்ஸாரத்திலே ஜநந மரணங்களுக்கும்.

இப்படிபட்ட ஸம்ஸார ஸமுத்ரத்திலே 'ஆவாரார்துணை யென்றலை நீர்க்கடலுளழுந்தும் நாவாய் போல், பிறவிக்கடலுள் நின்று நான் துளங்க' என்கிறபடியே ஓர் அவலம்பமின்றிக்கே இங்குமங்கும் தட்டித் தடுமாறுகின்ற அடியேன் ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனாய் சேஷியாகையாலே ப்ராப்தனான வுன்னை உபாயமாகப் பற்றுகிறேன். 'சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே அடைந்த' என்கிறபடியே கரணத்ரயத்தாலுண்டான ஸ்வீகாரம் அதிகார பூர்த்திக்கு உடலாகையாலே அம் மூன்றும் அபேக்ஷிதமாயிருந்தாலும் ஜ்ஞாநாந்மோக்ஷமாகையாலே அவையிரண்டையுமொழிய இங்கு மாநஸமான வரணமாத்ரத்தைச் சொல்லுகிறதென்று சிலர் சொல்லுவர்கள். வாசிகமானவளவையே சொல்லுகிற தென்று பெரியார் பணிக்கும்படி. 'சரணவரணவாகியம் யோதிதா ந பவதி பத ஸாபி தீபூர்விகா' என்று மேலே அருளிச் செய்ததற்கு இந்த நிர்வாஹம் பொருந்தியதாமிறே.

இந்த ச்லோகம் முதலான 'ப்ரியமிதரததாபி' என்ற ச்லோகமளவாகவுள்ள தசகம் கௌரீ வ்ருத்தம். (82)

अकृतसुकृतकस्सुदुष्कृततरः शुभगुणलवलेशदेशातिगः ।
अशुभगुणपरस्सहस्रावृतः वरदमुरुदयं गतिं त्वां वृणे ॥ ८३ ॥

அக்ருதஸுக்ருதகஸ் ஸுதுஷ்க்ருத்தர: சுபகுணலவலேசதேசாதிகः ।
அசுபகுணபரஸ்ஸஹஸ்ராவ்ருத: வரதமுருதயம் கதிம் த்வாம் வ்ருணே ॥ 83 ॥

அக்ருதஸுக்ருதக:	அல்ப ஸுக்ருதத்தையும் அநுஷ்டிக்காதவனாய்	உருதயம்	பேரருளாளனாய்
ஸுதுஷ்க்ருத்தர:	பாபிஷ்டர்களில் அக்ரகண்யனாய்	வரதம்	வரம்தரும் பெருமாளான
சுபகுணலவலேச தேச அதிக:	நல்ல குணத்தின் லவ லேசத்திற்கும் அதிதூரஸ்தனாய்	த்வாம்	உன்னை
அசுபகுண பரஸ்ஹைஸ்ர ஆவ்ருத:	காமக்ரோதம் முதலிய பல்லாயிரம் தீய குணங்கள் சூழப்பட்டவனான அடியேன்	கதிம் வ்ருணே	சரணமாக அடைகிறேன்.

* * * தம்முடைய தோஷபூயஸ்த்வத்தைக் கீழில் தசகத்திலே பன்னி யுரைத்திருந்தாலும் அவ்வளவிலே பர்யாப்தி பெற மாட்டாத ஸ்வபாவத்தாலும் சரணவரண ஸமகாலத்திலே தோஷ ப்ராசுர்யாநுஸந்தான மாவச்யகமென்னு மிடத்தை வெளியிடுகைக்காகவும் மீண்டும் ஸ்வதோஷ பூயிஷ்டத்வாநுஸந்தான ஸஹிதமாக ப்ரபத்தி பண்ணுகிறார். 'ஷக்ருதேவ ஹி சாஸ்த்ரார்த்த:' என்ற நூல் வரம்பிலே நிற்குமவர்களன்றே நம் ஆழ்வாராசார்யர்கள். இப்ப்ரபத்தி தன்னை தேஹ யாத்ரா சேஷமாகவிறே நம்மவர்கள் கொண்டிருப்பது. ஸுகுமாரனான ராஜகுமாரனுக்குப் பிடி தோறும் நெய்யை யொழிய இழியாதாப்போலே இதின்றிக்கே செல்லாதாய்த்து நம்மவர்களுக்கு. ஒருகால் ப்ரபத்தி பண்ணியாயிற்றென்று மீளுமவர்களன்றே.

[அக்ருதஸுக்ருதக:] அல்பம் ஸுக்ருதம் ஸுக்ருதகம்; தத் அக்ருதம் யேந ஸ:—ஸ்வல்ப புண்ணியமும் பண்ணாதவ னென்றபடி. ஸுக்ருதமிவ ஸுக்ருதம் என்று இவார்த்தே கப்ரத்யயமாய் ஸுக்ருதம் போல் தோற்றக்கூடிய தொன்றும் செய்திலேனென்பதாகவும் உரைக்கலாம். அதாவது—**சில**

அஜ்ஞாத ஸுக்ருதங்களை எம்பெருமான்றனே ஆரோபித்து மடிமாங்காயிடுவதற்கு ஏற்ற க்ருத்ய லேசமும் செய்திலே னென்கை. ஸுக்ருதம் செய்யாதொழிந்தவளவேயோ? [ஸுதுஷ்க்ருத்தர:] துஷ்கர்மம் செய்தவர்களிலே என்னில் மிக்காருண்டோவென்கிறார். [சுபகுணலவலேசதேசாதிக:] சுபகுணஸ்ய ய: லவலேச:—அம்சமாத்ரம் தத் யத்ர தேசே வர்த்ததே, தம் தேசமதிகச்சதி—அதி க்ராமதீதி—சுப குணலவலேச தேசாதிக:—அத்யல்பம் சுப குணமுள்ள விடத்திலும் கால் தாழாதே கடக்க நிற்குமவ னென்கை. நான் குடியிருக்கும் ஊரிலும் ஸத்வகுணமமையாதுகாணென்கிறார். [அசுபகுணபரஸ் ஸஹஸ்ராவ்ருத:] துர்குணங்களிலே வ்யுத்பத்தி பண்ணவேண்டுவார் என் பக்கலிலே யதேஷ்டமாக வ்யுத்பத்தி பண்ணிக் கொள்ளலாமென்கிறார். காமக்ரோதலோபமோஹமதமாத்ஸர்யங்களென்றுப் போலே ஐந்தாறு துர்குணங்களையேயிறே நாட்டார் ஓலைப்புறத்திலும் சில வ்யக்திகளிலும் கண்டறிவது என் பக்கலிலே காணப்புகில் ஆயிரம் பதினாயிரம் என்ற கணக்கிலே அவற்றைக் கண்டறியலாம் கிடீர் என்கிறார் போலும். அசுபகுணாநாம் பரஸ்ஸஹஸ்ரம், தேந ஆவ்ருத: ஆச்சாதித:. ஒரோ மயிர்க்குழிக்கும் ஓராயிரம் துர்குணங்கள் காணக்கிடைக்கு மென்கிறார் போலும். இப்படிப்பட்ட அடியேன் *பிணி யொழித்தமரர் பெருவிசும்பருளும் பேரருளாளனெம்பெருமானும் *மணிமாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி யிலே வரம் தருமாமணிவண்ணனுயெழுந்தருளியிரா நின்ற தேவரீரை அநிஷ்ட நிவ்ருத்தி பூர்வமாக இஷ்ட ப்ராப்தியைப் பண்ணித்தர வல்ல உபாயமாகப் பற்றுகிறேன்—என்றாராயிற்று. ... (83)

शरणवरणवागियं योदिता न भवति बत साऽपि धीपूर्विका ।
इति यदि दयनीयता मय्यहो वरद! तव भवेत् ततः प्राणिमि ॥ ८४ ॥

சரணவரணவாகியம் யோதிதா ந பவதி பத ஸாபி தீபூர்விகா ।
இதி யதி தயநீயதா மய்யஹோ வரத தவ பவேத் தத: ப்ராணிமி ॥ 84 ॥

அஹோ வரத	வரதராஜனே!	தீபூர்விகா ந பவதி	புத்தி பூர்வமாக வல்ல.
யா	யாதொரு	பத	**அந்தோ!**
இயம்	இந்த	**இதி**	என்று [திருவுள்ளம்பற்றி]
சரணவரணவாக்	சரணாகதிவாக்கு	மயி தயநீயதா	**அடியேன் மீது இரக்கம்**
உதிதா	[அடியேனிடத்தில்] உண்டாயிற்றோ	தவ பவேத் யதி	**உனக்கு உண்டாகுமாகில்**
ஸாபி	**அதுவும்**	தத: ப்ராணிமி	பிறகு பிழைத்திடுவேன்.

* * * தேவரீரோ பேரருளாளப் பெருமாளாயிரா நின்றீர். அடியேனோ பிறவிக்கடலுளாழ்ந்து துளங்கா நின்றேன். ஆனபின்பு தேவரீர் அருளுக்குப் பாத்ரம் தேடுமவராயும், அடியேன் அருள்புரி வாரைத் தேடுமவனாயுமிருக்கிற இவ்விருப்புக் கேற்ப அடியேனை தயநீயனாகத் திருவுள்ளம் பற்றுமாகில் அடியேன் உய்யத்தட்டில்லை யென்கிறார்.

'இரைத்து நல்ல மேன்மக்களேத்த யானுமேத்தினேன்' என்றும், 'எப்படியூராமிலைக்கக் குருட்டாமிலைக்கு மென்னுமப்படி யானும் சொன்னேன்' என்றும் சொல்லுமாபோலே அடியேன் ஏதோ த்ருணச்சேத கண்டூயநாதி நிர்விசேஷதயா அபுத்திபூர்வமாகச் சொன்ன சரணவரண வாக்கை உபாய கோடியிலே அந்வயிப்பித்து அடியேனை நெகிழ்க்க நினையாதே கேவலம் ஸ்வகீய நிர்ஹேதுக க்ருபையாலே வாழ்விக்கவேணுமென்கிறாராகவுமாம்.

[மயி தயநீயதா தவ பவேத் யதி] 'இவன் கைம்முதல் கொண்டு ரக்ஷிக்கத் தக்கவனல்லன்; கேவலம் நமது நிர்ஹேதுக க்ருபைக்கே விஷயபூதன்' என்று திருவுள்ளம் பற்றுமாகில் [தத: ப்ராணிமி] அவ்விரக்கமடியாக உய்ந்துபோகக் கடவேன். இத்தால் 'உன்மனத்தாலென் நினைந்திருந்தாய்' என்கிற படியே ப்ராப்திக்குபாயம் அவன் நினைவு என்றதாய்த்து. தயநீயதா என்றது—தயநீயோயமிதி புத்தி:' என்றபடி. ப்ராணிமி என்று வர்த்தமான ப்ரயோகமாயினும் பவிஷ்யதர்த்தம் கொள்ளவடுக்கும். (84)

निरवधिषु कृतेषु चागस्स्वहो मतिरनुशयिनी यदि स्यात् ततः।
वरद! हि दयसे न संशेमहे निरनुशयधियो हता है वयम्॥ ८५॥

நிரவதிஷு க்ருதேஷு சாகஸ்ஸ்வஹோ மதிரநுசயிநீ யதி ஸ்யாத் தத: !
வரத ஹி தயஸே ந ஸம்சேமஹே நிரநுசயதியோ ஹதா ஹை வயம் ॥ 85 ॥

வரத	வரதனே !	தத:	அந்த அநுதாப மடியாக
ஆகஸ்ஸு	குற்றங்கள்	தயஸே ஹி	இரங்கியருள்வாய் காண் ;
நிரவதிஷு	எல்லையில்லாமல்	ந ஸம்சேமஹே	[இதில்] ஸம்சயப் படுகிறோமில்லை.
க்ருதேஷுஸத்ஸுச	செய்யப்பட்ட வளவிலும்	வயம் து	நாமோவென்றால்
மதி:	புத்தியானது	நிரநுசயதிய:	அநுதாப புத்தி யற்றவர்களாக
அநுசயிநீ ஸ்யாத் யதி	பச்சாத்தாபத்தையுடையதாகுமே யாகில்	ஹதா:	கெட்டுப்போனோம்
		ஹை	அந்தோ.

* * * அந்த தயநீயதைக்கும் அவ்வருகு பட்டேன் பாவியேனென்கிறார். செய்த குற்றங்களுக்கு அநுதபிக்கவேணுமே சேதனனானவனுக்கு. பாபங்களினுடைய ப்ராயச்சித்தங்களிலே அநுதாபமிறே முதல் நிற்பது. 'அநுதாபாதுபரமாத் ப்ராயச்சித்தோந் முகத்வத: ! தத்பூரணைச் சாபராதாஸ் ஸர்வே நச்யந்தி பாதச:' [ரஹஸ்யத்ரய ஸாரே] என்றும், 'பாபே க்ருதே யதி பவந்தி பயாநுதாப லஜ்ஜா: புந: கரணமஸ்ய கதம் கடேத' என்றும் சொல்லக்கடவதிறே. தீரக்கழிய அபராதங்கள் பண்ணினாலும் 'ஐயோ! என் செய்தோம்!' என்று கையைப் பிசைந்து அநுதபிக்கவாகிலும் பெற்றதாகில் 'இனி இவன் தீநெறியில் புகாதே செவ்வனே வர்த்திப்பான்' என்று தோற்றி எம்பெருமான் க்ருபையைப் புகவிடுகைக்குப் பாங்காகும். இந்த அநுதாபமுமின்றிக்கே மேலும் மேலும் பாபங்களைக் கூடு பூரிப்பதிலேயே நோக்குடையனான பாவியேனுக்கு எம்பெருமான் க்ருபை செய்ய என்ன பற்றாசுண்டு? இனி நாம் அந்த க்ருபையை இழந்தேபோமித்தனையாகாதே யென்று கொண்டு வயிறு பிடிக்கிறார். (85)

शरणवरणवागियं याऽद्य मे वरद! तदधिकं न किंचिन्मम।
सुलभमभिमतार्थदं साधनं तदयमवसरो दयायास्तव॥ ८६॥

சரணவரணவாகியம் யாத்ய மே வரத தததிகம் ந கிஞ்சிந் மம !
ஸுலபமபிமதார்த்ததம் ஸாதநம் தத்யமவஸரோ தயாயாஸ் தவ ॥ 86 ॥

ஹே வரத !	வரதனே !	மம ந	அடியேனுக்கு இல்லை.
அத்ய மே	இப்போது என்னுடைய	தத்	இப்படி அநந்யோபாயனாய் இருப்பதனால்
யா	யாதொரு		
இயம் சரணவரண வாக் [அபூத்]	இந்த சரணாகதி வாக்கானது உண்டாயிற்றோ	அயம்	இந்த ஸமயமானது
தததிகம் ஸுலபம்	அதற்கு மேற்பட்டதாய் ஸுகரமாய்	தவ	உன்னுடைய
அபிமதார்த்ததம்	அபேக்ஷிதபலப்ரதமான	தயாயா: அவஸர:	அருள் ப்ரஸரிப்பதற்கு வாய்த்த காலம்.
கிஞ்சித் ஸாதநம்	யாதொரு ஸாதனமும்		

* * * நிரவதிகமான அபராதங்களைப் பண்ணி அநுதாபலேசமுமில்லாதிருந்தேனாகிலும் என் பக்கலிலே சரணவரணவாக் கொன்றுண்டிறே ; அதுதான் அபுத்தி பூர்விகையே யாகிலும் எதேனுமொரு வ்யாஜமாத்ரத்தையே போரப் பொலியப் பெருக்கிக் கனக்கக் கார்யம் செய்யுமவரான தேவரீருக்கு அது தன்னை ஒரு பற்றாகக் கொள்ள விரகுண்டே, அப்படியே கொண்டு இவ்வளவிலே க்ருபையைப் புகவிடப் பாரீர் என்கிறார்.

'சரணவரண வாக்குத்தானும் அபுத்திபூர்வகமென்றீர். அநுதாபலேசமுமில்லை யென்றீர். ஸுக்ருத ஸுகுணாதிகளுக்கு ப்ரஸக்தியே யில்லையென்றீர். இவ்வளவிலும் தயை பண்ண வேண்டுமென்று மாத்திரம் வடிம்பிடாநின்றீர். இது எங்ஙனேயாவது? நாம் தயை பண்ணும் போதைக்கு உம் பக்கலிலே ஏதேனுமொரு கைம்முதலுண்டாகவேணுமே; அது ஒன்று மின்றியே தயை பண்ணிரே மாகில் இந்த தயை ஸார்வத்ரிகமாக வேண்டிவருமே; உம்பக்கலிலே ஏதேனுமொரு கைம்முதலுண்டாகில் சொல்லிக்காணீர்' என்று பேருளாளன் திருவுள்ளமாக; தேவரீர் ஸித்தோபாயமாயிருந்து வைத்து என் தலையில் சில உண்டோவென்று பார்க்கை சாலவழகியதாயிருந்ததீ! என் பக்கலிலேயும் ஸாதனமென்று பேரிடலாவதொன்று காணக்கிடைக்கவேணுமென்று தேவரீருக்கு நிர்ப்பந்தமுண்டாகில், கீழ்ச்சொன்ன சரணவரண வாக்கு தன்னையே அவலம்பமாகக் கொள்ளலாமே, அதற்கு மேற்பட்டதொரு ஸாதனம் என்னளவிலே கிடையாது; யாத்ருச்சிகமாகத் தோன்றிய இந்த சரணவரண வாக்கையும் காற்கடைக் கொண்டு இதிலும் விஞ்சியதொரு ஸாதனம் என்னளவிலே யுண்டாகவேணுமென்று விரும்பிற்றாகில் அந்த விருப்பம் பழுதா யொழியுமத்தனை. பின்பு அருளுக்கு அவகாசம் கிடையாதே. 'ப்ராப்தமான ஸமயத்தையும் இழந்தோமே!' என்று தேவரீர் பச்சாத்தபிக்கவிறே புகுகிறீர்; அது வேண்டாகாணும், இந்த சரணவரண வாங்மாத்ரத்தையே அலப்யலாபமாகக்கொண்டு என்னை வலையுளகப்படுத்தப் பாரீர் என்கிறார். (86)

विषयविषयिणी स्पृहा भूयसी तव तु चरणयोर्न साऽल्पापि मे ।
वरद! ननु भरस्तवैव त्वयं यदुत तव पदस्पृहाजन्म मे ॥ ८७ ॥

விஷயவிஷயிணீ ஸ்ப்ருஹா பூயஸீ தவ து சரணயோர் ந ஸால்பாபி மே।
வரத நநு பரஸ் தவைவ த்வயம் யதுத தவ பதஸ்ப்ருஹாஜந்ம மே ॥ 87 ॥

வரத	ஓ வரதனே!	ஸா	அந்த ஆசையானது
மே	அடியேனுக்கு	அல்பாபி ந	சிறுதுமில்லை,
விஷயவிஷயிணீ	சப்தாதி விஷயங்களைப் பற்றிய	தவ பதஸ்ப்ருஹா ஜந்ம இதி யதுத	உன் திருவடிகளில் [எனக்கு] அன்பை யுண்டாக்குவ தென்பது யாதொன்றுண்டோ
ஸ்ப்ருஹா	ஆசையானது		
பூயஸீ	மிகவும் அதிகமானது;	அயம்	இதுவானது
தவ	உன்னுடைய	தவைவ	உனக்கே
சரணயோஸ்து	திருவடிகளிலோ	பரோ நநு	தலைச்சுமைகிடாய்.

* * * பேருளாளனுடைய திருவருள் தவிர வேறொரு உபாயமும் தமக்கில்லாமையை இவ்வளவும்வர வெளியிட்டான பின்பு த்வயத்திலுத்தர கண்டார்த்தமான கைங்கர்ய ப்ரார்த்தனையைப் பண்ணியருள விரும்பி, ருசிமுன்னாகச் செய்யும் கைங்கர்யமே ரஸிக்குமாகையாலும் அந்த ருசிதானும் எம்பெருமான் தலையாலே வரக்கடவதென்று அத்யவஸித்திருக்கையாலும் போஜனத்துக்கு க்ஷுத்துப் போலேயான அந்த ருசியை விளைத்தருள்வதும் அத்தலைக்கே பரமென்கிறார்.

[ஹே வரத! விஷயவிஷயிணீ ஸ்ப்ருஹா பூயஸீ] சப்தாதி விஷயங்களிலே எனக்கு விளைகின்ற விருப்பம் அபரிச்சிந்நமாயிரா நின்றதீ! அவ்விஷயங்கள் அபரிச்சிந்நமாயிருக்கிறப்போலே அவற்றைப் பற்றின ஆசையும் அபரிச்சிந்நமாயிரா நின்றதாய்த்து. 'கோவாயைவரென் மெய்குடியேறிக்கூறைசோறிவைதாவென்று குமைத்துப் போகார், நானவரைப் பொறுக்ககிலேன் புனிதா' என்கிறார் போலும். [தவ சரணயோஸ்து ஸா ஸ்ப்ருஹா அல்பாபி ந], தேவரீருடைய திருவடித்தாமரைகளிலே எள்ளளவு காதலுண்டாயினும் கனத்த பேறு பெறலாமாயிருக்க, அந்தோ! ஸ்ப்ருஹாலேசமு முண்டாகப் பெற்றிலேன்.

'விஷயக்ராமங்களிலே விருப்பம் மீதூர்ந்து செல்லாநின்றதாகில் என்னை நீர் செய்யச் சொல்லுகிறதென்? * உண்டியே உடையே உகந்தோடித் திரிவாரோடே நீருமொருவராய்த் திரிந்து போது போக்கும்; என்பாடே வருகைக்கு ப்ரயோஜனமென்?' என்று பேருளாளன் திருவுள்ளமாக; இப்படி

அடியேனைக் கைவிடலாகாது ; விஷய க்ராமங்களிலே விருப்பத்தை வேரறுத்து தேவரீரளவிலே அது பெருகும்படி செய்தருள வேண்டுவது தேவரீருக்கே பாமன்றோ? ஆகையாலே தேவரீருடைய பாதார விந்த விஷயகமானஸ்ப்ருஹையை தேவரீர் தாமே விளைந்தருள வேணுமென்கிறார். * காதல் கடல் புரைய விளைவித்தகாரமர்மேனியிறே.

மூன்றாவதடியின் முதலில் 'அயம்' என்றது (புல்லிங்கநிர்தேசம் பண்ணினது). —பர: என்ற விதேயபதத்தில் நோக்காலே. (87)

इयमिह मतिरस्मदुज्जीवनी वरद! तव खलु प्रसादादृते ।
शरणमिति वचोऽपि मे नोदियात् त्वमसि मयि ततः प्रसादोन्मुखः ॥ ८८ ॥

இயமிஹ மதிரஸ்மதுஜ்ஜீவநீ வரத தவ கலு ப்ரஸாதாத்ருதே ।
சரணமிதி வசோபி மே நோதியாத் த்வமஸி மயி தத: ப்ரஸாதோந்முக: ॥ 88 ॥

ஹே வரத	வரதனே !	த்வம்	நீ
மே	[விஷயாநுரக்தனான] எனக்கு	மயி	அடியேனளவில்
சரணம் இதி வசோபி	சரணமென்கிற வாங் மாத்ரமும்	ப்ரஸாத உந்முக:	அநுக்ரஹத்தில் ஊங்க முடையவனாய்
தவ ப்ரஸாதாத் ருதே	உனது அநுக்கிரஹந்தாலன்றி	அஸி	ஆகிநின்றாய்;
நோதியாத் கலு	உண்டாக மாட்டாதிறே ;	[இதி] இயம் மதி:	என்கிற இந்த புத்தியானது
தத:	ஆகையினாலே [த்வதநுக்ரஹைக ஜந்யமான சரணவரணவாக் குண்டானதால்]	இஹ	இப்போது
		அஸ்மதுஜ்ஜீவநீ	அடியோமுக்கு உஜ்ஜீவநத்துக் குறுப்பு.

கீழ் ச்லோகத்திலே ப்ரார்த்தித்தபடியே தேவரீர் அடியேனுக்கு ஸ்வசரணாரவிந்த பரிசர்யா விஷய மான ருசியை விளைவியாதொழியினும் அடியேன் உய்ந்து போக ஒரு விரகுண்டு என்கிறார்.

[ஹே வரத ! மே தவ ப்ரஸாதாத்ருதே சரணமிதி வசோபி நோதியாத் ; தத: த்வம் மயி ப்ரஸா தோந்முகோஸி இதீயம் மதி: இஹ அஸ்மதுஜ்ஜீவநீ]. விஷயாந்தரமொழிய வேறொன்று மறியாத வெனக்கு தேவரீருடைய அநுக்ரஹமில்லாவிடில் 'வரத ! சரணமித்யஹம் த்வாம் வ்ருணே' என்ற வாசக மும் வெளிவரமாட்டாதிறே. [தத:] பகவதநுக்ரஹைக ஹேதுகமான சரணவசஸ்ஸு அடியேன் பக்கலி லேயுண்டாயிருக்கக் காண்கையாலே யென்கை. [த்வம் மயி ப்ரஸாதோந்முகோஸி] கார்யத்தைக் கொண்டு காரணத்தை ஸித்தவத்கரிக்கவேண்டுமித்தனையிறே. என்னுடைய நினைவின்றிக்கே என் வாயில்] சரணமென்ற வசஸ்ஸு உண்டாகக் காண்கையாலே தேவரீர் அநுக்ரஹாபிமுகராயிருக்கிற தென்னுமிடம் நிச்சிதம். [இயம் மதி: அஸ்மதுஜ்ஜீவநீ] பவதநுக்ரஹத்துக்கும் அடியேனுடைய சரணவசஸ் ஸுக்கும் கார்யகாரண பாவம் கொள்ளுகையாகிற இந்த அத்யவஸாயம் என் பக்கலிலே யுண்டான பின்பு இனியுஜ்ஜீவிக்கக் குறையுண்டோ ?— சரணவசஸ்ஸு ஜநிக்கும்படி அநுக்ரஹித்தருளின தேவரீரே மேலுள்ளவற்றையும் அநுக்ரஹித்தருளக்கடவீராயிருக்க நானிருந்து கரைய ப்ராப்தியுண்டோ வென்றபடி. 'ஏதாவதிம் கமயிது: பதவீம் தயாலோ:, சேஷாத்வலேச நயநே க இவாதி பார:' என்னுமாபோலே.

[ப்ரஸாதாத்ருதே] என்ற விடத்தில் 'ருதே' என்றது விநா என்றபடி. (88)

वरद यदिह वस्तु वाञ्छाम्यहं तव चरणलभाविरोधस्ततः ।
यदि न भवति तत् प्रदेहि प्रभो! झटिति वितर पादमेवान्यथा ॥ ८९ ॥

வரத யதிஹ வஸ்து வாஞ்சாம்யஹம் தவ சரணலபாவிரோதஸ் தத: ।
யதி ந பவதி தத் ப்ரதேஹி ப்ரபோ ஜடிதி விதர பாதமேவாந்யதா ॥ 89 ॥

ஹே வரத ப்ரபோ	வரதராஜனே !
அஹம்	அடியேன்
இஹ	இங்கே
யத் வஸ்து	யாதொரு வஸ்துவை
வாஞ்சாமி	விரும்புகிறேனோ
ததஃ	அந்த வஸ்துவாஞ்சையினால்
தவ சரண லபாவிரோதஃ	உனது திருவடிகளைப் பெறுவதற்கு ப்ரதிபந்தமானது
ந பவதி யதி	உண்டாக மாட்டாதாகில்
தத்	அந்த வஸ்துவை
ப்ரதேஹி	தந்தருள் :
அந்யதா	நான் ஒரு வஸ்துவை விரும்புமது உன்பதகமல ப்ராபதிக்கு ப்ரதி பந்தக மாகுமாகில்
பாதமேவ	திருவடியே
ஜடிதி விதர	உடனே தந்தருள்.

* * * சோழராஜனுடைய கொடுமையினால் திருக்கண்களை யிழந்த ஆழ்வான் எம்பெருமானு ருடைய நியமனத்தினால் திருக்கண் பெறுதற்காக இந்த ஸ்தவம் அருளிச்செய்கிறாராகையாலே அந்த ப்ரார்த்தனைக்கு உபோத்காதமாயிராநின்றதாய்த்து இந்த ச்லோகம்.

'நீலமேகநிபம்' என்கிற ச்லோகமருளிச் செய்தபோதே அப்ராக்ருத திவ்ய சக்ஷுஸ்ஸை அநந் யஸாமான்யமாக அநுக்ரஹித்தருளப் பெற்ற விவர் தம் வாயாலே மாம்ஸசக்ஷுஸ்ஸைத் தா வென்று நேர்கொடுநேரே ப்ரார்த்திக்கமாட்டாமையாலே அந்த ப்ரார்த்தனையைத் திருவுள்ளத்திலே யடக்கி வ்யங்க் யமர்யாதையிலே பாசுரமிடுகிறார். [ஹே வரதப்ரபோ ! இஹ யத்வஸ்து அஹம் வாஞ்சாமி ததஃ [தேந வஸ்துநா] தவ சரணலபாவிரோதோ ந பவதி யதி, தத் வஸ்து ப்ரதேஹி ; அந்யதா [தேந வஸ்துநா தவ சரணலபாவிரோதோ பவேத் யதி] பாதமேவ விதர] வாரீர் பேரருளாளப் பெருமாளே ! அடியேன் யாதொரு விஷயத்தை இப்போது தேவரீர் பக்கலில் யாசியாநின்றேனோ அவ்விஷயம் தேவரீருடைய திருவடித் தாமரைகளின் ப்ராப்திக்கு ப்ரதிபந்தகமாக முடியாதிருக்குமாகில் அவ்விஷயத்தை அடி யேனுக்குத் தந்தருள வேணும். இங்ஙனன்றிக்கே அடியேன் ப்ரார்த்திக்கும் வஸ்து தேவரீருடைய பாதகமல ப்ராப்திக்கு ப்ரதிபந்தகமாகத் தலைக்கட்டுமாகில் அடியேனுடைய ப்ரார்த்தனையை மறுத்து சடக்கென அடியேனைத் திருவடி சேர்த்துக் கொள்ளவேணுமென்கிறார். இவர் தாம் ப்ரார்த்திக்கும் வஸ்து இன்ன தென்று விசிஷ்ய நிர்தேசியாதே யத்தச் சப்தங்களையிட்டுப் பாசுர மிடுகிறார் காணும் மாம்ஸசக்ஷுஸ்ஸாகிற க்ஷுத்ரப்ரயோஜனத்தில் விருப்பத்தைத் தம் திருவாயாலே வெளியிடக்கூசி.

'தச்ச தேஹி' என்றும் பாடமுண்டு. (89)

तदपि किमपि हन्त दुर्वासनाशतविवशतया यदभ्यर्थये ।
तदतुलदय सार्व सर्वप्रद प्रवितर वरद क्षमाम्भोनिधे ! ॥ ९० ॥

ததபி கிமபி ஹந்த துர்வாஸநாசதவிவசதயா யதப்யர்த்தயே ।
தததுலதய ஸார்வ ஸர்வப்ரத ப்ரவிதர வரத ! க்ஷமாம்போநிதே ॥ 90 ॥

அதுலதய	ஒப்பற்ற அருளை யுடையவனே !
க்ஷமாம்போநிதே	பொறுமைக் கடலே !
ஸார்வ	ஸர்வஜனஹிதனே !
ஸர்வப்ரத	எல்லாவற்றையும் கொடுப்பவனே !
வரத	[அது தோன்ற] வரதனென்ற திரு நாமம் பூண்டவனே !
ததபி	ஆனபோதிலும்
[அஹம்]	அடியேன்
துர்வாஸனாசத விவசதயா	பல பல துர்வாஸனைகளுக்கு வசப் பட்டிருப்பதனால்
யத் கிமபி	ஏதோ வொன்றை
அப்யர்த்தயே	ப்ரார்த்திக்கிறேன் ;
தத் ப்ரவிதர	அதைக் கொடுத்தருள்.

* * * மாம்ஸசக்ஷுః ப்ராப்தியிலே தமக்கு விருப்பமில்லாமை தோற்ற வருளிச் செய்தார் கீழ். அது எம்பெருமானார் திருவுள்ளத்துக்குக் காலுஷ்யஹேதுவா யிருக்குமென்று அஞ்சி அந்த ப்ரார்த்தனை யிலே அபேக்ஷை தோற்ற அருளிச் செய்கிறாரிதில்,

[ததபி] ததாபி என்றபடி. அதாவது—ஔசித்யத்தை ஆராய்ந்து தேவரீர் திருவுள்ளமானபடி செய்வதென்று கீழ் ச்லோகத்திலே அடியேன் விஜ்ஞாபித்திருக்கச் செய்தேயும் என்கை. துர்வாஸநா சதவிவசதயா யத்கிமப்யப்யர்த்தயே] ஐஹிகத்தில் பண்ணிப் போந்த துர்வாஸநா தார்ட்யத்தாலே ப்ராப்தாப்ராப்த விவேகம் பண்ணுதே யாதொரு பேற்றை அடியேன் விரும்பா நின்றேன். [ஹே வரத தத் ப்ரவிதர] தேவரீர் அதுதன்னைத் தந்தருளவேணும். [அதுலதய] தேவரீர் பேரருளாளப் பெருமாளல்லீரோ? [ஸார்வ] ஸர்வஜனங்களோடும் ஸம்பந்தம் அவிசிஷ்டமன்றேவுமக்கு. [ஸர்வப்ரத] ஸர்வஸ்வ தாதாவென்று ப்ரஸித்திபெற்றுள்ளவுமக்கு இத்தனையும் செய்ய வடுக்குமே. [ப்ரவிதர வாத] தயா நிதியாய் ஸர்வஜநஸம்பந்தியாய் ஸர்வஸ்வதாதாவாய் திருநாமத்தாலும் வரதனுய் விளங்குகின்ற தேவரீர் கொடுத்தே தீரவேண்டுமென்கிருர். [க்ஷமாம்போநிதே] அடியேன் இங்ஙனே நிர்பந்தித்துக் கேட்பது அபசாரமேயாகிலும் க்ஷமாஸாகரரானவுமக்கு க்ஷமிக்க ப்ராப்தியுண்டாயிருக்க, நான் கேட்கத் தட்டென்? நீர் கொடுக்கத் தட்டென்? என்கிருர். (90)

प्रियमितरदथापि वा यद्यथा वितरसि वरद प्रभो त्वं हि मे।
तदनुभवनमेव युक्तं हि मे त्वयि निहितभरोऽस्मि सोऽहं यतः॥ ९१॥

ப்ரியமிதரததாபி வா யத் யதா விதரஸி வரத ப்ரபோ த்வம் ஹி மே।
ததநுபவநமேவ யுக்தம் ஹி மே த்வயி நிஹிதபரோஸ்மி ஸோஹம் யதః ॥ 91 ॥

வரத ப்ரபோ	வரதராஜனே!	விதரஸி	கொடுத்தருள்கிருயோ
அதாபி வா	இப்படி யடியேன் ப்ரார்த்தித்த போதிலும்	[ததா]	அப்படியே
த்வம்	ஸ்வதந்த்ரனுன நீ	ததநுபவநமேவஹி	அதையநுபவிப்பதேயன்றே
ப்ரியம்	இஷ்டமானதோ	மே	பரதந்த்ரனுன எனக்கு
இதரத் வா	அனிஷ்டமானதோ [ஹிதமான தையோ]	யுக்தம்	தகுந்தது;
யத்	யாதொன்றை	யதஃ	ஏனென்ருல்
யதா	எப்படி	ஸோஹம்	அடியேன்
மே	எனக்கு	த்வயி	உன் பக்கலில்
		நிஹிதபரோஸ்மி	பரஸமர்ப்பணம் பண்ணிக் கிடக்கிறேனிறே.

* * * பகவதி ந்யஸ்தபரரான தம்முடைய ஸ்வரூபத்திற்கும் குலைதல் வாராதபடி பேசவேணுமிறே; அப்படிப் பேசுகிருரிதில்.

தேவரீர் அடியேனுக்கு ப்ரியமானதைத் தந்தருளவுமாம்; அப்ரியமானதைத் தந்தருளவுமாம்; நிரங்குசஸ்வதந்த்ரரான தேவரீரை வடிம்பிடுவதற்கு அடியேன் அதிகாரியல்லேனிறே. தேவரீரிடத்தில் ந்யஸ்தஸமஸ்தாத்மபரனுன அடியேன் எவ்வளவுக்கு அதிகாரி யென்னில், தேவரீருடைய திருவுள்ளத்தாலே ப்ரியமென்றே ஹிதமென்றே நினைத்துத் தந்தருளுமதை அநுபவிக்கு மத்தனையேயிறே எனக்குற்றதென்ரு ராயிற்று. (91)

यथाऽसि यावानसि योऽसि यद्गुणः करीश! यादृग्विभवो यदिङ्गितः।
तथाविधं त्वाऽहमभक्तदुर्ग्रहं प्रपत्तिवाचैव निरीक्षितुं वृणे॥ ९२॥

யதாஸி யாவாநஸி யோஸி யத்குணஃ கரீச யாத்ருக்விபவோ யதிங்கிதஃ।
ததாவிதம் த்வாஹமபக்ததுர்க்ரஹம் ப்ரபத்திவாசைவ நிரீக்ஷிதும் வ்ருணே ॥ 92 ॥

கரீச	ஹஸ்திகிரிநாதனே!	யத்குணஃ	எந்த குணங்களுடையவனே
த்வம்	நீ	யதா அஸி	யாதொரு ப்ரகாரத்தை யுடையவனே
யோஸி	எவனுயிருக்கிருயோ	யாவாந் அஸி	எவ்வளவனுயிருக்கிருயோ

யாத்ருக் விபவோஸி	எப்படிப்பட்ட விபவத்தையுடையனுயிருக்கிருயோ	அபக்த துர்க்ரஹம்	பக்தர்களுக்கன்றி மற்றையோர்க்கு அரியனுன
		த்வா	உன்னே
யதிங்கிதஃ அஸி	எந்த வ்யாபாரத்தை யுடையவனு யிருக்கிருயோ,	ப்ரபத்திவாசைவ	சரண மென்கிற வார்த்தையால்
		நிரீக்ஷிதும்	ஸாக்ஷாத்கரிக்க
ததாவிதம்	அப்படிப்பட்டவனுய்	அஹம் வ்ருணே	அடியேன் விரும்புகின்றேன்.

* * * த்வயத்தில் உத்தர கண்டத்திலுள்ள நமச்சப்தத்தின் அர்த்தாநுஸந்தானமாக பகவத் ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூப ஸ்வருபத்தைக் கீழ் தசகத்திலே ப்ரதிபாதித்தவநந்தரம் 'நாராயணுய' என்ற சதுர்த்தியின் அர்த்தமான கைங்கர்ய ப்ரார்த்தனேயை இந்த தசகத்திலே செய்தருளி ஸ்தவத்தை நிகமிக்கிருர்.

அதில் இந்த ச்லோகத்தில்:—ஸவிபூதிகனுன வுன்னேக் குறையற ஸாக்ஷாத்கரிக்கவல்லேனும்படி அருள் செய்ய வேணுமென்கிருர். [ஹே கரீச! த்வம் யோஸி யத் குணோஸி யதாஸி யாவாநஸி யாத்ருக் விபவோஸி யதிங்கிதோஸி; ததாவிதம் அபக்த தூர்க்ரஹம் த்வா அஹம் ப்ரபத்தி வாசைவ நிரீக்ஷிதும் வ்ருணே]—[யோஸி] 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' என்றும் 'ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ' என்றும் சுடர் மிகு சுருதிகள் சொல்லுகிறபடியே ஸத்யத்வ ஜ்ஞாநத்வ அநந்தத்வ ஆநந்தத்வ அமலத்வ ச்ரிய:பதித்வாதிகளாகிற யாவை சில ஸ்வரூப நிருபக குணங்களாலே நிருபிதனுயிராநின்ருயோ. [யத்குணோஸி] 'பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ருயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச' என்கிறபடியே ஜ்ஞாநசக்த்யாதிகளாகிற யாவை சில கல்யாண குணங்களோடே கூடியிரா நின்ருயோ. [யதாஸி] 'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத் ப்ரயந்த்யபி ஸம்விசந்தி' இத்யாத்யுக்தமாய் ஜகஜ்ஜந்மாதிகாரணத்வாதிருபங்களான யாவை சில ப்ரகாரங்களே யுடையையாய் இராநின்ருயோ; [யாவாநஸி] 'அணோரணீயாந் மஹதோ மஹீயாந்' 'அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஃ ஸ்த்திதஃ' இத்யாத்யுக்த—யாவத்பரிமாணவிசிஷ்டனுயிரா நின்ருயோ; [யாத்ருக் விபவோஸி] 'பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் சாச்வதம் சிவமச்யுதம்' 'தமீச்வராணும் பரமம் மஹேச்வரம்' இத்யாத்யுக்தமான யாத்ருகைச்வர்யத்தோடே கூடியிரா நின்ருயோ; [யதிங்கிதோஸி] 'அந்தஃ ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா' இத்யாத்யுக்த சேதநாசேதந நியமனுதி ரூபமான யாத்ருசவ்யாபாரத்தை யுடையையாயிரா நின்ருயோ. [ததாவிதம்] அந்த ஸ்வரூப குண ப்ரகார பரிமாண விபவ சேஷ்டித விசிஷ்டனுன வென்றபடி. [அபக்த துர்க்ரஹம்] 'பத்துடையடியவர்க்கெளியவன்' என்னுமிடத்தை வ்யதிரேகோக்தியாலே அருளிச்செய்கிறபடி. எத்தனே சாஸ்த்ர ஜ்ஞான மிருந்தாலும் பக்தி யில்லாதவன்று துர்க்ரஹனுயிறே எம்பெருமானிருப்பது: 'பக்த்யா சாஸ்த்ராத்வேத்மி ஜநார்த்தநம்' என்ருனிறே ஸஞ்சயன். [த்வா] இப்படிப்பட்டவுன்னே [ப்ரபத்தி வாசைவ நிரீக்ஷிதும் வ்ருணே] வாங்மாத்ரமான ப்ரபதனத்தாலேயே ஸாக்ஷாத்கரிக்க விரும்புகிறேன். உன்னுடைய ஸ்வருபத்திலும் குணத்திலும் ப்ரகாரத்திலும் பரிமாணத்திலும் விபவத்திலும் சேஷ்டிதத்திலும் ஆக எல்லாவற்றிலும் சிறிதும் குறையாமே பரிபூர்த்தியாக வுன்னே ஸாக்ஷாத்கரிக்கப் பாரித்திருக்கிறேனென்கை. இவ்வளவு பாரிப்புக்கும் கைம்முதல் 'வரதமுருதயம் கதிம் த்வாம் வ்ருணே' என்னப்பட்ட வாசிக ப்ரபத்தியே காணென்கிருர். அடியேனுடைய ஆகிஞ்சந்யத்தையும் த்வதேகோபாயத்வத்தையும் அறுதியிட்டுச் சொன்ன வெனக்கு உன்னுடைய ஸ்வருப குணுதிகளே நீயே கேவல க்ருபா மாத்ரத்தாலே ஸாக்ஷாத்கரிப்பித்தருள வேணுமென்று கருத்து.

'யதாஸி' என்பதற்கு 'ஆதித்யவர்ணம் தமஸஃ பரஸ்தாத்' 'ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மயஃ புருஷஃ த்ருச்யதே' இத்யாத்யுக்த யாத்ருச விக்ரஹ விசிஷ்டனுயிராநின்ருயோ—என்றும் பொருளாகலாம். 'யதிங்கிதஃ' என்ற விடத்திலே இங்கித சப்தார்த்தம் மத்ஸ்ய கூர்மாத்யவதாரசேஷ்டிதங்களாகவுமாம். வ்ருணே—இச்சாமீத்யர்த்தஃ ||

இந்த ச்லோகம் முதல் ஸமாஹிதைஃ என்னும் ச்லோகமளவாகவுள்ள தசகம் வம்சஸ்த்தவ்ருத்தம்.

... (92)

अये दयालो वरद क्षमानिधे विशेषतो विश्वजनीन विश्वद।
हितज्ञ सर्वज्ञ समग्रशक्तिक प्रसह्य मां प्रापय दास्यमेव ते ॥ ९३ ॥

அயே தயாளோ வரத க்ஷமாநிதே விசேஷதோ விச்வஜநீந விச்வத!
ஹிதஜ்ஞ ஸர்வஜ்ஞ ஸமக்ரசக்திக ப்ரஸஹ்ய மாம் ப்ராபய தாஸ்யமேவ தே ॥ 93 ॥

தயாளோ	பேரருளாளனே!
க்ஷமாநிதே	பொறுமைக்கு நிதியே!
விசேஷதஃ	மிகவும்
விச்வஜநீந	ஸகல ஜனங்களுக்கும் ஹிதனே!
விச்வத	எல்லாவற்றையும் தந்தருள்பவனே
ஹிதஜ்ஞ	[அடியோங்களுக்கு] ஹிதமானவற்றை யறியுமவனே!
ஸர்வஜ்ஞ	எல்லாவற்றையு மறிபவனே!
ஸமக்ரசக்திக	பரிபூர்ண சக்தி யுடையவனே!
அயே வரத	வரந்தரும் பெருமாளென்ற திருநாமமுடையவனே!
மாம் தே தாஸ்யமேவ	அடியேனுக்கு உன்னடிமைத் திறத்தையே
ப்ரஸஹ்ய	எப்படியாவது
ப்ராபய	ப்ராப்தமாக்கியருள்.

* * * கீழ் ச்லோகத்திலே 'நிரீக்ஷிதும் வ்ருணே' என்று ஸாக்ஷாத்கார மாத்ரத்தில்விருப்பத்தை யருளிச் செய்தார். அவ்வளவிலே பர்யாப்தி பெறவொண்ணுமோ? 'கண்டேன் கமல மலர்ப் பாதம்' என்றால் அதற்கு அடுத்தபடியாக 'தொண்டே செய்தென்றும் தொழுது வழி யொழுக' என்கையிறே முறை. அப்படியே இவரும் ஸாக்ஷாத்காரானந்தர பாவியான கைங்கர்ய புருஷார்த்தத்தை ப்ரார்த்திக்கிறார் இந்த ச்லோகத்தில்.

[தயாளோ] பிறர் படும் துக்கத்தைக் கண்டு ஸஹித்திருக்கும் வன்மை தேவரீருக் குண்டாகிலன்றே இன்னுமடியேனை துக்கியாகவே வைத்திருக்க வொண்ணும்; சரீரத்துக் குண்டாமது சரீரிக்காகிறுப்போலே நான் படும் துக்கம் தேவரீருடையதான பின்பு இனி ஆறியிருக்கிறதென்? என்கிறார். பரதுக்கதுக்கியிறே தயாளுவெனப்படுவான்.

[வரத] அடியேனுக்கு இததனையும் செய்யத் திருவுள்ளமில்லை யாகில் தேவரீருடைய வரதத்வம் என்னாய்த்து? மாம்பழவுண்ணி யென்னுமாபோலேயோ தேவரீர் வரதரென்று திருநாமம் வஹிப்பது?

[க்ஷமாநிதே] அடியேனுடைய பூர்வாகங்களையே நோக்கி நிக்ரஹிக்கத் திருவுள்ளமாகில் க்ஷமா குணம் விலைச்செல்வது எங்கேயோ? 'கல்பகோடி சதேநாபி ந க்ஷமாமி வஸுந்தரே' என்ற தீர்க்க நிக்ரஹத்தை அடியேனளவில் பலிப்பிக்கத் திருவுள்ளமாகில் பேரருளாளனென்றும் வரதனென்றும் பூண்ட திருநாமங்கள் சால அழகியதாய்த் தலைக்கட்டுமாகாதே! க்ஷமாகுணத்துக்கு ஜலாஞ்ஜலியாமத்தனையோ?

[விசேஷதோ விச்வஜநீந] ஸர்வ ஜனங்களுக்கும் ஹிதைஷியா யிருந்து வைத்து அடியேனொருத்தன் திறத்திலே அந்த ஹிதைஷித்வம் வேர் பறியுண்டதோ? இவற்றின் புறத்தாளென்றெண்ணோ? என்னுமாபோலே விச்வத்தில் பஹிர்பூதனோ அடியேன்? 'ஸ்வஜநஸ்ய சரக்ஷிதா' என்றது கழிந்தால் 'ரக்ஷிதா ஜீவலோகஸ்ய' என்ற ஊர்ப்பொதுவும் கழியவேணுமோ தான்! 'க்ஷமாநிதே விசேஷதஃ' என்னும்போது அகாரம் ப்ரச்லிஷ்டமாய்க் கிடக்கிறது காண் என்று ஓரடைவிலே அழகியமணவாளச்சீயர் அருளிச்செய்யக் கேட்டிருக்கை. அதாவது—'அவிசேஷதஃ' என்று பதச்சேதம் திருவுள்ளமானபடி. கத்யத்திலே 'அநாலோசித விசேஷா சேஷ லோகசரண்ய' என்ற அர்த்தம் பொதிந்து கிடக்கிறபடி. அவிசேஷத:—இன்னாரினையா ரென்று வாசி பாராதே. [வஸிஷ்ட சண்டால விபாகம் பாராதே] அனைவர்க்கும் இருந்ததே குடியாக ஹிதனானவனே! என்கை.

[விச்வத]—'எனக்கே தன்னைத் தந்த கற்பகம்' என்கிறபடியே புறம்புண்டானவற்றையடையக் கொடுத்துத் தம்மையும் கொடுப்பவ ரல்லீரோ?

[ஹிதஜ்ஞ] * உண்ணிலாவிய ஐவரால் குமைதீற்றி என்னை யுன் பாத பங்கயம் நண்ணிலாவகையே நலியப் பார்த்திருக்கையோ அடியேனுக்கு தேவரீர் அறிந்து வைத்த ஹிதம்.

[ஸர்வஜ்ஞ] இதெல்லாம் அடியேன் உணர்த்த உணரவேண்டும்படியோ தேவரீருடைய அறிவு இருப்பது. அடியேனுடைய ஆற்றாமையின் கனத்தாலே சொல்லிக்கொடு நின்றேனத்தனை போக்கி தேவரீரறியாததுண்டோ? * உட்கிடந்த வண்ணமே புறம் பொசிந்து விளங்குகின்ற என்னார்த்தியை யறியீரோ? * உள்ளுவாருள்ளிற்றெல்லா முடனிருந்தறிவீராயினும் பாசுரம் கேட்டவாறே திருவுள்ள முகக்குமென்றன்றே அடியேன் பிதற்றுவது.

[ஸமக்ர சக்திக] தேவரீருக்கு சக்திவைகல்யமுண்டென்று அடியேன் அறியிருக்கவோ? இரும்பைப் பொன்னாக்க வல்லீரிறே. [தே தாஸ்யமேவ மாம் ப்ராபய,] ப்ரக்ருதி பாரவச்யத்தாலே அடியேனுக்கு க்ஷுத்ர பலாந்தரங்களிலே ருசியுண்டானாலும் அந்த ருசியைத் தொலைத்து தேவரீர் திறத்தில் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தையே பெறுவிக்கவேணுமென்றாராயிற்று. (93)

स्वकैर्गुणैस्स्वैश्चरितैस्स्ववेदनात् भजन्ति ये त्वां त्वयि भक्तितोऽथवा ।
करीश तेषामपि तावकी दया तथात्वकृत् सैव तु मे बलं मतम् ॥ ९४ ॥

ஸ்வகைர் குணைஸ் ஸ்வைச் சரிதைஸ் ஸ்வவேதநாத்
பஜந்தி யே த்வாம் த்வயி பக்திதோத வா ।
கரீச தேஷாமபி தாவகீ தயா
ததாத்வக்ருத் ஸைவ து மே பலம் மதம் ॥ 94 ॥

கரீச	கரிகிரி நாதனே!	தேஷாமபி	அவர்களுக்கும்
யே	எந்த சேதனர்கள்	தாவகீ தயா	உன்னுடையதான தயை
ஸ்வகைஃ குணைஃ	தம் குணங்களாலோ	ததாத்வக்ருத்	அந்த நித்யகைங்கர்ய நிலைமையை உண்டாக்கவற்று;
ஸ்வைஃ சரிதைஃ	தம் கர்மயோகங்களாலோ		
ஸ்வவேதநாத்	தம் ஞானயோகத்தாலோ	ஸைவ து தயா	அந்த தயையே யன்றோ
அதவா	அல்லது	மே	அடியேனுக்கும்
த்வயி பக்திதஃ	உன்திறத்தில் பக்தியாலோ	பலம்	முக்யஸாதனமாக
த்வாம்	உன்னை	மதம்	நிச்சிதம்;
பஜந்தி	பஜிக்கிறார்களோ		

ஆகிஞ்சந்யமே பற்றாசாகப் பணைக்கிற தேவரீருடைய திருவருளல்லது வேறொரு புகலில்லை யென்று பலகாலும் விண்ணப்பம் செய்து வந்தாரிறே இவர் தாம். கைங்கர்யரூப பல ப்ரார்த்தநா தசையிலும் அந்த அத்யவஸாயந் தன்னையே திண்ணிதாக விண்ணப்பம் செய்யவேணுமிறே. அங்ஙனே விண்ணப்பம் செய்கிறாராய்த்து இந்த ச்லோகத்தால்.

[ஸ்வகைர் குணைஃ] 'ஆநுகூல்யஸ்ய ஸங்கல்பஃ ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்' இத்யாதிகளாய் ஆத்மநிக்ஷேப பர்யந்தங்களான குணங்களாலே; ப்ரபத்தி யோகத்தாலே யென்றபடி. அன்றிக்கே, 'மத்பக்தஜநவாத்ஸல்யம் பூஜாயாம் சாநுமோதநம்। மத்கதாச்ரவணே ஸக்திஃ ஸ்வர நேத்ராங்க விக்ரியா ॥ ஸ்வயமப்யர்ச்சநம் சைவ மதர்த்தே டம்பவர்ஜநம்। மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி' என்று சொல்லப்பட்ட குணங்களாலே என்னவுமாம். [ஸ்வைச்சரிதைஃ] கர்மயோகத் தாலே யென்கை. 'கர்மயோகஸ்தபஸ்தீர்த்த தாந யஜ்ஞாதி ஸேவநம்' [கீதார்த்த ஸங்க்ரஹே] என்று கர்மயோகத்தில் அவாந்தர பேதைகள் பலவுண்டாகையாலே அத்தைப்பற்ற [சரிதைஃ] என்று பஹுவசன ப்ரயோகம் பண்ணிக்கிடக்கிறது. [ஸ்வவேதநாத்] 'ஜ்ஞாநயோகோ ஜிதக்ரோதைஃ பரிசுத்தாத்மநி ஸ்திதிஃ' என்கிறபடியே ஜிதமநஸ்கர்கள் நிரந்தர சிந்தன ரூபமாக பரிசுத்தாத்மத்யானத்திலே ஊன்றி யிருக்கையாகிற ஜ்ஞாநயோகத்தாலே யென்றபடி; தேவரீரளவில் ஐகாந்திகமான ப்ரீதியோடே த்யானார்ச்ச நப்ரணாமாதிகளிலே நிலைத்திருக்கையாகிற பக்தியோகத்தாலே யென்றபடி. [கரீச! த்வாம் யே பஜந்தி] கர்மஜ்ஞான பக்தி ப்ரபத்திகளென்கிற யோகங்களில் ஏதேனுமொன்றைப் பற்றி தேவரீரையணுகுவார்

சிலருண்டு. [தேஷாமபி] அவர்களுக்கும் [தாவகீ தயா ததாத்வ க்ருத்] அவரவர்கள் தம் தம் தலையாலே எத்தனை ஆனைத்தொழில்கள் செய்து போந்தாலும் 'ஸ ப்ரீதோலம் பலாய' என்கிறபடியே தேவரீர் திருவுள்ளமுகந்தருளினாலல்லது பேறு கைபுகுருகைக்கு ப்ராப்தியில்லையென்னுமிடம் அடியேன் சொல்ல வேணுமோ? க்ஷண பங்குரங்களாயும் அசேதநங்களாயுமுள்ள க்ரியாகலாபங்கள் ஸ்வாதந்தர்யேண பலப்ரதாந சக்தியையுடையனவல்லவே. 'ஐயன் பாழியிலே நிற்கும் ஆனை குதிரைகளும் போர்க்கு உரித்தாமோ?' அந்த அசேதந க்ரியா கலாபங்கள் தேவரீருடைய திருவருளை எதிர்பாராதே பயன் பெறுவிக்க மாட்டாவான பின்பு [ஸைவ து மே பலம் மதம்] அத்திருவருளே அடியேனுக்கு பலமாகத் தட்டுண்டோ? அநந்யதாஸித்தமான உபாயம் ஸித்தமாயிருக்க அந்யதா ஸித்தமான ஸாத்யோபாயங்களிலே புரண்டு புழுதி படக்கை மிகையிறே. (94)

यदि त्वभक्तोऽप्यगुणोऽपि निष्क्रियः निरुद्यमो निष्कृतदुष्कृतो न च ।
लभेय पादौ वरद स्फुटास्ततः क्षमादयाद्यास्तव मङ्गला गुणाः ॥ ९५ ॥

யதி த்வபக்தோப்யகுணோபி நிஷ்க்ரியः நிருத்யமோ நிஷ்க்ருததுஷ்க்ருதோ ந ச ।
லபேய பாதௌ வரத ஸ்புடாஸ் ததः க்ஷமாதயாத்யாஸ் தவ மங்களா குணாः ॥ 95 ॥

வரத	வரதனே !	தவ	தேவரீருடைய
அபக்தோபி	பக்தி சூன்யனாயினும்	பாதௌ	திருவடிகளை
அகுணோபி	குண மற்றவனாயினும் [ததங்கமான ஞானயோகமு மற்றவனாயினும்]	லபேய யதி து	அடைவேனேயாகில்
நிஷ்க்ரியோபி	கர்மயோக சூன்யனாயினும்	ததः	அதனால்
நிருத்யமோபி	ஆநுகூல்யஸங்கல்பரஹிதனாயினும்	க்ஷமாதயாத்யாः	பொறுமை, தயை முதலிய
ந நிஷ்க்ருத துஷ்க்ருதோபி ச	ப்ராயச்சித்தத்தாலே ஒழிக்கப்படாத பாபங்களை யுடையவனாயினும்	தவ மங்களாः குணாः	தேவரீருடைய திருக் கல்யாண குணங்கள்
அஹம்	அடியேன்	ஸ்புடாः [பவேயுः]	ப்ரகாசமாகும்.

* * * அடியேனை விஷயீகரியாத வளவில் தேவரீருடைய குணங்களெல்லாம் அஸத்ஸமங்களாயொழியுமான பின்பு, தம் பேறாக என்னை விஷயீகரித்தருளவேண்டுவது அவர்ஜநீய மென்கிறார். அடியேனையே பார்க்குமன்று * க்ஷிபாமிக்கும் * ந க்ஷமாமிக்கும் விஷயமாக்க வமையும்; தேவரீரைப் பார்த்தால் என்னை விடும்படியாயிருந்ததோ? விட்டீராகில் உம்முடைய குணங்களுக்கெல்லாம் ஜலாஞ்ஜலியே யாமத்தனையிறே என்கிறார்.

அடியேனுக்கு பக்தியோகமில்லை, ஜ்ஞானயோகமில்லை கர்மயோகமில்லை, ஆநுகூல்ய ஸங்கல்பமில்லை, ப்ராதிகூல்யவர்ஜநமில்லை, ஒன்றுமில்லை யென்பது ஸத்யம், இப்படியே தேவரீருக்கு க்ஷமையில்லை, தயையில்லை, வாத்ஸல்யமில்லை, ஒரு குணமுமில்லை யென்று சொல்லிவிடக் கூடுமாகில் பாவியேன் எங்ஙனே படுகொலைப் பட்டாலும் படலாமே; தேவரீர் படைத்திருக்கும் குணங்களுக்கு இரை தேடியிடாதே போந்ததாகில் 'ப்ரஹ்மம் நிர்குணம்' என்று பிதற்றின பேதையர்களைப் பெருமைப் படுத்திற்றுமத்தனை போக்கி ஜ்ஞானிகளை டவதரிப்பித்துப் பேசுவித்த பொய்யில் பாடல்களைப் பெருமைப் படுத்திற்றாக விரகில்லையே. உம்முடைய ஸத்தையேகிடீர் அழியப் புகுகிறது. என்னொருவனுடைய ஸத்தையை நோக்குமத்தாலே நீர் ஸத்தை பெறுவீராயிருக்க இழப்பதேன்? நீர் ஸ்ருஷ்ட்யவதாராதி முகத்தாலே பண்ணின க்ருஷிகளெல்லாம் உம்முடைய ஸத்தையை நோக்கிக் கொள்ளுகைக்காமத்தனையிறே. அதற்காக நீர் பட்டபாடுகள் அறிவீறே. அப்பாடெல்லாம் பழுதாயொழியவோ பார்க்கிறது; ஒளியிழந்த மணியும் மணமிழந்த மலரும்போலே பின்னை உம்மை மதிப்பாருண்டோ? நிரூபகமில்லையென்னில் நிரூப்யம் தானுண்டோ? மீனுக்குத் தண்ணீர் வார்த்தாற்போலே ஜ்ஞான க்ரியா பஜன ஸம்பத்ஸம்ருத்தர்களையே நீர் நோக்கிப் போந்தீராகில், பெரும்பாடுகள் பட்டு நிலை நிறுத்திக்கொண்ட க்ஷமாதயாதி குணங்களுக்கு விஷயந்தானெங்கே? விஷயம் வாய்த்த போதும் அவை ப்ரஸரித்ததில்லை

யென்னில் ககநாரவிந்த சசவிஷாணுதிகளைப் போலே அவை துச்சம் என்னவேணு மத்தனைபோக்கி அவற்றுக்கு ஸத்பாவம் சொல்லப்போகாதிறே. அவை யில்லையாம்போதைக்கு நீர் தாமில்லை யென்ற தாமே. ஆக, என் ஸத்தையை அழிக்கப் பார்த்தவிது உமக்கு ஸ்வஸத்தா நாசகமாய்த் தலைக்கட்டுமான பின்பு, கடுக வடியேனுக்கு புருஷார்த்தம் பெறுவிப்பதே பாங்கு என்கிறார்.

हे वरद ! यद्यप्यहम् अभक्तः, अगुणः, निष्क्रियः, निरुद्यमश्च भवामि; निष्कृतदुष्कृतश्च न भवामि । तथापि तव पादौ लभेय यदि ततः क्षमादयाद्याः तव मङ्गला गुणाः स्फुटा भवेयुः (95)
என்றும் யோஜிக்கலாம்.

विलोकनैर्विभ्रमणैरपि भ्रुवोः स्मितामृतैरिङ्गितमङ्गलैरपि ।
प्रचोदितस्ते वरद प्रहृष्टधीः कदा विधास्ये वरिवस्यनं तव ॥ ९६ ॥

விலோகநைர் விப்ரமணைரபி ப்ருவோ: ஸ்மிதாம்ருதைரிங்கிதமங்களைரபி ।
ப்ரசோதிதஸ் தே வரத ப்ரஹ்ருஷ்டதீ: கதா விதாஸ்யே வரிவஸ்யநம் தவ ॥ 96 ॥

வரத	வரதனே !	அஹம் ப்ரசோதித:	அடியேன் ப்ரேரிதனாய் [அத ஏவ]
தே விலோகநை:	உனது கடாக்ஷவீக்ஷணங்களாலும்	ப்ரஹ்ருஷ்டதீ:	**உவந்த உள்ளத்தனாய்**
ப்ருவோ:	திருப்புருவங்களினுடைய	தவ	தேவரீருக்கு
விப்ரமணைரபி	விலாஸங்களாலும்	வரிவஸ்யநம்	பரிசர்யையை
ஸ்மிதாம்ருதை:	பரமபோக்யமான புன்முறுவலாலும்	கதா விதாஸ்யே	எப்போது **செய்யப் போகிறேன்.**
இங்கிதமங்களைரபி	அழகான இங்கிதங்களாலும்		

* * * அத்தலையில் பேரருளன்றித் தமக்குப் புகலொன்று மில்லாமையை வெளியிட்ட வநந்தரம் கைங்கர்யத்திலே தமக்குண்டான த்வராதிசயத்தை ஆவிஷ்கரித்தருளுகிறார். 'கதா மாம் பகவாந் ஸ்வகீயயா அதிசீதலயா த்ருசாவலோக்ய ஸ்நிக்த கம்பீர மதுரயா கிரா பரிசர்யாயா மாஜ்ஞாபயிஷ்யதீதி பகவத் பரிசர்யாயாமாசாம் வர்த்தயித்வா' [ஸ்ரீ வைகுண்ட கத்யே] என்றருளிச் செய்தபடியே பரிசர்யை யிலாசையைப் பெருக்குகிறாராய்த்து.

'க்ரியதாமிதி மாம் வத' என்றும் 'ஏவ மற்றமரராட் செய்வார்' என்றும் சொல்லுகிறபடியே அத்தலை ஏவிக்கொள்ள வேணுமென்றிறே சாஸ்த்ரார்த்தமிருப்பது. 'அடிமை செய்யவேணும், எல்லா வடிமையும் செய்யவேணும், ஏவிக்கொள்ளவும் வேணும்' என்றிருக்கையிறே ப்ராப்தம். சோதிவாய் திறந்து நியமிப்பதோடு திருக்கண்ணோக்காலே நியமிப்பதோடு ப்ருவிப்ரமங்களாலே நியமிப்பதோடு வாசியற எல்லாம் உத்தேச்யமாயும் போகமாயுமிருக்குமிறே. ஆகையாலே, ஏதேனுமொருபடியாலே அடியேனை ஏவிப் பணிகொள்ளப்பெற்று, மகிழ்வது என்றோ என்கிறார்.

'தவ வரிவஸ்யநம் கதா விதாஸ்யே' என்பதை நைராச்யத்திலேயாக்கி, இனி நானிங்ஙனே அடிமை செய்வதென்றொரு பொருளுண்டோ? என்று ஆசையறுக்கிறாரென்று பொருள் சொன்னாரொருவர். அங்ஙனேயல்ல: 'என்றே யென்னை யுன் ஏரார் கோலத் திருந்தடிக்கீழ், நின்றே யாட்செய்ய நீ கொண்டருள நினைப்பதுதான்?' என்றாப்போலே அபேக்ஷிக்கிறாரென்றுதான் நிர்வஹிக்கும்படி. நைராச்யத்திலே தாத்பர்யமாக்குகைக்கு அவஸரமில்லையிறே.

'வரிவஸ்யா' என்றும் 'வரிவஸ்யநம்' என்றும் பணிவிடையைச் சொல்லுகிறது. ... (66)

विविश्य विश्वेन्द्रियतर्षकर्षणीः मनस्स्थले नित्यनिखातनिश्चलाः ।
सुधासखीर्हस्तिगते सुशीतलाः गिरश्श्रवस्याः शृणुयाम तावकीः ॥ ९७ ॥

விவிச்ய விச்வேந்த்ரியதர்ஷகர்ஷணீ: மநஸ்ஸ்தலே நித்யநிகாதநிச்சலா: ।
ஸுதாஸகீர் ஹஸ்திகதே ஸுசீதலா: கிரச் ச்ரவஸ்யா: ச்ருணுயாம தாவகீ: ॥ 97 ॥

ஹஸ்திபதே	ஹஸ்திகிரிநாதனே !	ஸுதாஸகீ:	அம்ருதம்போன்றனவாய்
விவிச்ய	உட்புகுந்து	ஸுசீதலா:	மிகக்குளிர்ந்தவையாய்
விச்வேந்த்ரிய தர்ஷ கர்ஷணீ:	ஸர்வேந்த்ரியங்களுடையவும் விடாயைத் தீர்ப்பவையாய்	ச்ரவஸ்யா:	செவிக்கினியவையான
மநஸ்ஸ்தலே	மனதில்	தாவகீ:	உன்னுடையவைகளான
நித்யநிகாதநிச்சலா:	எப்போதும் நாட்டப்பட்டு ஸ்திரமானவையாய்	கிர:	வாய் மொழிகளை
		ச்ருணுயாம	செவியேற்கக்கடவோம்.

* * * ' தொண்டரோர்க்கருளிச் சோதிவாய் திறந்துன் தாமரைக் கண்களால் நோக்காய் ' என்று ஆழ்வார் ப்ரார்த்தித்த அடைவிலே ப்ரார்த்தியாதே விலோகநதிமாத்ரத்தையே ப்ரார்த்தித்தாராய் நின்றார் கீழ். சோதிவாய் திறந்தொன்று சொல்லவேணுமென்றால் அர்ச்சாவதார ஸமாதியை அத்யந்தம் குலைத்ததாகுமாகையாலே அந்த ப்ரார்த்தனை ஆகாதென்று நினைத்தார்போலும் கீழ்; இனித்தான் பேருளாளனுடைய பரிமாற்றங்களை ஆராய்ந்தவாறே அது தன்னையும் நிர்விசங்கமாக ப்ரார்த்திக்கலாம்படியிறே யிருப்பது. திருக்கச்சி நம்பிகளோட்டைப் பரிமாற்றத்தை யாராய்ந்தார். அது ' அஸங்கேதமநாலாபம் ' என்ற அர்ச்சாவதார மர்யாதை குலைந்திருக்கும்படியை யுணர்ந்தார். இனி நாம் ஸம்பாஷணம் தன்னையும் ப்ரார்த்திக்கக் குறையென்ன? என்று தம்மில் தாமே தேறி அது தன்னை ப்ரார்த்திக்கிறாராய்த்து இந்த ச்லோகத்தில்.

[ஹே ஹஸ்திபதே ! தாவகீ: கிர: ச்ருணுயாம] தேவரீர் சோதிவாய் திறந்து அருளிச்செய்யும் ஸ்ரீ ஸூக்திகளை அடியோங்கள் கேட்கப் பெறவேணும். அந்த ஸ்ரீஸூக்திகள் எப்படிப்பட்டவை யென்ன, விசேஷிக்கிறார்—விவிச்யேத்யாதியாலே. [விவிச்ய] தர்மபூதஜ்ஞாநம் புகுமிடங்களடங்கலும் புகுந்து என்றபடி. [விச்வேந்த்ரிய தர்ஷ கர்ஷணீ:] ஸர்வேந்த்ரியங்களினுடையவும் விடாயைத் தீர்க்கவல்லவையாய்.

[மநஸ்த்தலே நித்ய நிகாத நிச்சலா:] ஹ்ருதய மத்யத்திலே நித்யப்ரதிஷ்டிதங்களா யிருக்கக் கடவவையாய். "எட்டனைப் பொழுதாகிலுமென்றும் என் மனத்தகலாதிருக்கும் புகழ்' என்னுமாபோலே 'இதொரு ஸ்ரீஸூக்தியிருந்தபடியென்' என்று இடைவிடாது ஈடுபடலாம்படி ஹ்ருதயத்தினுள்ளே பொதிந்துகிடக்கக்கடவ ஸ்ரீஸூக்திகளை யருளிச்செய்யவேணு மென்றபடி. [ஸுதாஸகீ:] போக்யதையிலே அம்ருத தாரையை யொத்திருக்கவேணும். [ஸுசீதலா:] * தாபத்ரயீமயதவாநல தஹ்யமாநனான அடியேனுடைய தாபங்களெல்லாம் தீருகைக் குறுப்பான குளிர்த்தி பொருந்தியிருக்கவேணும். [ச்ரவஸ்யா:] பகவதுக்திகள் தான் செவிக்கினிய செஞ்சொல்லாயிறே யிருப்பது. ச்ரவஸோ ஹிதம் ச்ரவஸ்ய மென்றுகக்கடவது. சரீராவயவாத்யத்' என்றிறே பாணிநீயம். ச்ரவஸ்ஸுக்கு ஹித மென்றது உபகாரக மென்றபடி. [தாவகீர்கிர:] கீழ்ச்சொன்ன குணங்களொன்று மில்லாதொழிந்தாலும் தேவரீருடையவை யென்னுமத்தாலே வருவதொரு மேன்மையுண்டிறே உக்திகளுக்கு. 'இங்கிதம் நிமிஷிதம்ச தாவகம் ரம்ய மத்புத மதி ப்ரியங்கரம்' [ஸுந்தர பாஹுஸ்தவே,] ததீயமென்னு மாகாரத்தாலேயிறே எல்லா முத்தேச்யமாவது. 'ச்ருணுயாம' என்றும் 'ச்ருணவாம' என்றும் பாடபேதமுண்டு; தாத்பர்யபேதமில்லை. தம்மடியார்களையும் கூட்டிக்கொண்டு பஹுவசனப்ரயோகம் பண்ணுகிறார். 'இனியா முறுமை' போலே ஸுமந்த்ர, அக்ரூரப்ரப்ருதிகள் விபவாவதாரத்தில் பாரித்த பாரிப்பை அர்ச்சாவதாரத்திலே பாரிக்கிறார், 'ஆசயா யதி வா ராம: புநச்சப்தாபயேதிதி' என்று ஸுமந்த்ரரும் 'மாமக்ருரேதி வக்ஷ்யதி' என்று அக்ரூரரும் மனோரதித்திருந்தார்களிறே. (97)

अशेषदेशाखिलकालयोगिनीषु अहं त्ववस्थास्वखिलास्वनन्यधीः ।
अशेषदास्यैकरतिस्तदाचरन् करीश वर्तेय सदा त्वदन्तिके ॥ ९८ ॥

அசேஷதேசாகிலகாலயோகிநீஷு அஹம் த்வவஸ்தாஸ்வகிலாஸ்வநந்யதீ: ।
அசேஷதாஸ்யைகரதிஸ் ததாசரந் கரீச வர்த்தேய ஸதா த்வதந்திகே ॥ 98 ॥

ஹே கரீச	கரிகிரிநாதனே !
அசேஷதேச அகில கால யோகிஷே	ஸர்வ தேச ஸர்வ காலங்களோடும் சேர்ந்த
அகிலாஸு அவஸ்தாஸு	ஸர்வாவஸ்தைகளிலும்
அசேஷதாஸ்ய ஏகரதிঃ அஹம்	ஸர்வவிதகைங்கர்யங்களிலும் ஆராதகாதலேயுடைய அடியேன்
தத்	அந்த அசேஷதாஸ்யத்தை
அநந்யதீঃ ஆசரந் ஸந்	வேறொன்றில் புத்தி செலுத்தாதவனுகி அநுஷ்டிக்கிறவனுய்
ஸதா	எப்போதும்
த்வதந்திகே	உனது ஸமீபத்தில்
வர்த்தேய	இருக்கக்கடவேன்.

* * * 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதঃ ஸ்வபதச்ச தே' என்கிறபடியே ஸர்வதேச ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யைகரதியாய் * ஒழிவில் காலமெல்லாமுடனுய் மன்னி வழுவிலா வடிமை செய்யப்பெறவேணுமென்கிருர், தர்மி ஒன்றே யாகையாலே விஷயம் எங்குமொக்க பூர்ணமரன பின்பு ஒரு தேசவிசேஷத்தில் போனல் செய்யக்கடவ அடிமைகளெல்லாம் இந்நிலத்திலே செய்யலாம்படிக் கீடாகக் குறையற்றிருக்குமிறே திருவத்திமாமலையானது. இவர்க்குத்தான் இவ்வுடம்பு விரோதியன்றிக்கே அடிமை செய்கைக்குப் பாங்காயிருக்குமாகையாலும், அங்குப் போனலும் 'ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ' இத்யாதிப்படியே குணநுபவமே பண்ணவேண்டுகையாலே அந்த சீலாதி குணங்கள் தான் இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாசிப்பது இங்கேயாகையாலும் 'நாமுமிங்கேயிருந்து நித்ய கைங்கர்யம் பண்ணுவோம்' என்று பாரிக்கிருர். பகவத்விஷயத்திலே அடிமை செய்ய வொருப்படுவார்க்கெல்லாம் உள்ள தொன்றுயிற்று முன்பே பாரித்துக்கொண்டிழியுமது, 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' என்றிறே இளைய பெருமாள்படி.

[அசேஷ தேசாகில காலயோகிஷே அகிலாஸ்வவஸ்த்தாஸு] ஸர்வதேசங்களிலும் ஸர்வகாலங்களிலும் என்றபடி. அவஸ்தைகளாவன ஜாகராதிகள். [அநந்யதீঃ] அந்ய பரனன்றிக்கே. * செருப்பு வைத்துத் திருவடி தொழுவாரைப் போலேயாக வொண்ணுதிறே. [தத் ஆசரந்] 'அசேஷ தாஸ்யை கரதி என்றதிலே ஏகதேசமான அசேஷதாஸ்யத்தைப் பராமர்சிக்கிக்கிறதாய்த்து தத்சப்தம். 'தவாசரந்' என்பது சிலர் பாடம். [ஸதா த்வதந்திகே வர்த்தேய,] பெருமாளும் பெரிய பிராட்டியுமாய் திரையை வளைத்துக்கொண்டிருந்தாலும் படிக்கம் குத்துவிளக்கு முதலியவை போலே அவ்வளவிலும் நின்று அந்தரங்க வ்ருத்திகளைப் பண்ண விரும்புகிறாய்த்து. (98)

इमं जनं हन्त कदाऽभिषेक्ष्यति त्वदक्षिनद्योर्वरद श्रमापहा ।
अकृत्रिमप्रेमरसप्रवाहजा विसृत्वरी वीक्षणवीचिसन्ततिः ॥ ९९ ॥

இமம் ஜநம் ஹந்த கதாபிஷேக்ஷ்யதி த்வதக்ஷிநத்யோர் வரத ச்ரமாபஹா ।
அக்ருத்ரிம ப்ரேமரஸப்ரவாஹஜா விஸ்ருத்வரீ வீக்ஷணவீசிஸந்ததி ॥ 99 ॥

வரத	பேரருளாளா !
த்வதக்ஷிநத்யோঃ	உனது திருக்கண்களாகிற நதிகளினுடைய
அக்ருத்ரிமப்ரேம ரஸப்ரவாஹஜா	ஸ்வாபாவிகமான ப்ரீதியாகிற ரஸ ப்ரவாஹத்தில் நின்று முண்டாகக் கடவதாய் [அத ஏவ]
ச்ரமாபஹா	விடாய் தீர்க்கவல்ல
விஸ்ருத்வரீ	எங்கும் பரவக்கூடிய
வீக்ஷண வீசி ஸந்ததিঃ	கடாக்ஷமாகிற அலைகளின் வரிசையானது
இமம் ஜநம்	இந்த அடியேனை
கதா அபிஷேக்ஷ்யதி ஹந்த	எப்போது மஞ்சனமாட்டப் போகின்றது ?

* * * 'யச்ச ராமம் ந பச்யேத்து யம் ச ராமோ ந பச்யதி । நிந்திதஸ்ஸ வஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே' என்கிறபடியே எம்பெருமானை ஸேவிக்கப்பெறுதல் எம்பெருமானலே கடாக்ஷிக்கப் பெறுதலாகிற ப்ராப்யத்வயமுண்டிறே. அது தன்னில், எம்பெருமானைத் தாம் ஸேவிக்கப்

பெறுவதிலும் காட்டில் எம்பெருமானுலே தாம் கடாக்ஷிக்கப்பெறுகை உத்தேச்ய தரமாயிருக்கையாலே அது தன்னை முந்துற முன்னம் இந்த ச்லோகத்தில் அர்த்திக்கிருர்.

[ஹே வரத ! த்வதக்ஷி நத்யோ: வீக்ஷணவீசி ஸந்ததி: இமம் ஜநம் கதாபிஷேக்ஷ்யதி?] தேவரீருடைய திருக்கண்களாகிற நதிகளில் நின்றும் வீக்ஷணங்களாகிற அலைவரிசைகள் பாவியேனை மஞ்சன மாட்டுவது என்றைக்கென்கிருர். [ச்ரமாபஹா அக்ருத்ரிமப்ரேமரஸப்ரவாஹஜா விஸ்ருத்வரீ] வீசி ஸந்ததியானது தன்னிலே படிந்தாருடைய விடாயையெல்லாம் தீர்க்கவற்ருயும் ப்ரவாஹத்தில் ப்ராதுர்ப்பவிப்பதாயும் விஸ்தார சீலமாயுமிருக்குமாபோலே கடாக்ஷதாரையும் தாபத்ரயநிவர்த்தநக்ஷமமாய் அவ்யாஜப்ரீதிரஸ ப்ரவாஹமடியாகப் பெருகுவதாய் ஆச்ரித ஜநமுள்ள விடமெங்கும் புக்கு வ்யாபிக்கக் கடவதாயிருக்கும்படியைச் சொல்லுகிறது.—கடாக்ஷாம்ருத ரஸாவஸேகத்தாலே அடியேனைக் கைங்கர்ய ஸாம்ராஜ்யாதிபதியாக ஆக்கியருளவேணுமென்று ப்ரார்த்தித்தபடி.

'அபிஷேக்ஷ்யதே' என்று சிலர் ஓதுவார்கள். (99)

सदातनत्वेऽपि तदातनत्ववत् नवीभवत्प्रेमरसप्रवाहया ।
निषेवितं त्वां सततोत्कया श्रिया करीश पश्येम परश्शतं समाः ॥ १०० ॥

ஸதாதநத்வேபி ததாதநத்வவத் நவீபவத்ப்ரேமரஸப்ரவாஹயா ।
நிஷேவிதம் த்வாம் ஸததோத்கயா ச்ரியா கரீச பச்யேம பரச்சதம் ஸமா: ॥ 100 ॥

கரீச	கரிகிரிநாதனே !	ஸதத உத்கயா	நித்யமாசை கொண்டிருக்கிற
ஸதாதநத்வேபி	நித்யபரிசிதமா யிருக்கச் செய்தேயும்	ச்ரியா	பிராட்டியாலே
ததாதநத்வவத்	அபூர்வமானுற்போல	நிஷேவிதம்	நித்யாநுபூதனுயிரா நின்ற
நவீபவத்ப்ரேம ரஸப்ரவா ஹயா	புதிது புதிதாக விளையா நிற்கிற ப்ரணய ரஸபரம்பரையையுடையவளாய் [அத ஏவ]	த்வாம்	உன்னை
		பரச்சதம் ஸமா:	பல்லாண்டு பல்லாண்டாக
		பச்யேம	ஸேவிக்கக் கடவோம்.

* * * 'யச்ச ராமம் ந பச்யேத்து' என்ற குறை தீரவிரும்புகிருரிதில். [ஹே கரீச ! ச்ரியா நிஷேவிதம் த்வாம் பரச்சதம் ஸமா: பச்யேம] பிராட்டியும் தேவரீரும் சேர்த்தியாயிருக்கக் காணப்பெறுவேணுகில் 'சதாயுர்வை புருஷ:—வேத நூற் பிராயம் நூறு' என்ற மர்யாதையைக் குலைத்து நூற்றுண்டுக்கு மேற்பட இருந்தாகிலும் கண்டு களிப்பேனென்கிருர்.

[ஸதா தநத்வேபி] நித்யமாய்ச் செல்லா நிற்கச்செய்தேயும் [ததா தநத்வவத் நவீபவத் ப்ரேம ரஸ ப்ரவாஹயா] எம்பெருமானளவிலே பிராட்டியின் ப்ரணயரஸம் அவிச்சிந்நஸ்ரோதோரூபேண நித்யமாய்ச் செல்லா நிற்கச் செய்தேயும் 'அப்பொழுதைக்கப்பொழு தென்னாரவமுதம்' என்னும்படியான விஷயமாகையாலே க்ஷணந்தோறு மிட்டுமாறினுப்போலே புதுக்கணித்திருக்குமாய்த்து. அவள்தான் திருமார்பிலே அவிநாபூதையாயிருந்துகொண்டு நித்யாநுபவம் பண்ணா நிற்கச் செய்தேயும் 'அகலகில்லேனிறையும்' என்பாளே; இதுதான் அகன்றிருந்து சொல்லுகிற வார்த்தையன்று. அகலுகைக்கு ப்ரஸக்தியுண்டாய்ச் சொல்லுகிற வார்த்தையுமன்று; 'ததா ததா நவம் நவம்' என்னும்படியான விஷயம்படுத்துகிற பாடிறேயிது. அநுபாவ்ய விஷயம் நவம் நவமானுல் அநுபவமும் நவம் நவமாமே; அதடியாக அநுபவித்ருஜந ப்ரணயரஸமும் நவம் நவமாமிறே; அதைச் சொல்லுகிறதாய்த்திங்கு. ததாதநத்வே இவ ததாதநத்வவத்; அப்போதுண்டானுற்போலே என்கை. இங்ஙனன்றிக்கே ததாதநச் சாஸௌ த்வச்ச—ததாதநத்வ:—தஸ்மிந் இவ—ததாநத்வவத்; என்று பணித்தார் சிங்கப்பெருமாள். த்வ: என்கிறவிது ஸர்வநாமசப்தங்களிலொன்று; இதற்கு இதர: என்று பொருள். 'ப்ரஜாபதிம் த்வோ வேத ப்ரஜாபதிஸ்த்வம் வேத' [யஜுஃஷி । கா 7 ப்ர] என்ற விடத்தில் போல. ஏவம் ச, ததாதநத்வவத்—அப்போதுண்டான வேறொரு வஸ்துவில்போல என்றதாகிறது.

[ஸததோத்கயா] உதகசப்தம் உத்கண்டிதார்த்தகம். நித்யோ ந்ஸுகையான என்றபடி. 'பிரி யேன் ; பிரியில் தரியேன்' என்று அல்லும் பகலும் வாய்வெருவுமவளிறே. [ச்ரியா நிஷேவிதம் த்வாம்] இப்படிப்பட்ட பிராட்டியோடே நித்யஸம்ச்லிஷ்டரான தேவரீரை [பரச்சதம் ஸமா: பச்யேம] நெடு நாளளவும் ஸேவிக்கக்கடவோ மென்கை. ஸமா:=த்விதீயா பஹுவசநம்;' காலாத்வநோரத் யந்த ஸம்யோகே த்விதீயா இதிபாணிநி:.

[பச்யேம] அபிநிவேசத்தில் தமக்குத் தோள்தீண்டிகளான தம்மடியாரையும் கூட்டிக் கொண் டமை தோன்ற பஹுவசநப்ரயோகம் பண்ணுகிருர். (100)

समाहितैस्साधु सनन्दनादिभिः सुदुर्लभं भक्तजनैरदुर्लभम् ।
अचिन्त्यमत्यद्भुदमप्रतर्क्यं वरप्रद त्वत्पदमाप्नुयां कथम् ॥ १०१ ॥

ஸமாஹிதைஸ் ஸாது ஸநந்தநாதிபி: ஸுதுர்லபம் பக்தஜநைரதுர்லபம் ।
அசிந்த்யமத்யத்புதமப்ரதர்க்கணம் வரப்ரத த்வத்பதமாப்நுயாம் கதம் ॥ 101 ॥

வரப்ரத	பேரருளாளனே !	அசிந்த்யம்	சிந்தைக்கும் விஷயமாகாததாய்
ஸாது	நன்ருக	அப்ரதர்க்கணம்	ஊஹத்துக்கும் அவிஷயமாய் [அத ஏவ]
ஸமாஹிதை:	ஸமாதி நிஷ்டர்களான	அத்யத்புதம்	மிகவு மாச்சர்யமான
ஸநந்தநாதிபி: [அபி]	ஸநந்தன ஸநக ஸநத்ஸுஜாதாதி முனிவர்களாலும்	த்வத்பதம்	உனது இருப்பிடமாகிய திருநாட்டை
ஸுதுர்லபம்	அடைய முடியாததாய்		
பக்தஜநை: அதுர்லபம்	பத்துடையடியவர்களாலே எளிதில் அடைய முடிந்ததாய்	கதம் ஆப்நுயாம்	எப்படி [ஸ்வப்ரயத்நத்தினுல்] அடைவேன் ?

* * * 'மநோரதாநாமதடா: ப்ரவாஹா:' என்கிறபடியே கரையழிந்து பெருகிச் செல்கிற தம் முடைய மநோரதப்ரவாஹ பரம்பரைகளை இங்ஙனே விண்ணப்பம் செய்தவளவிலும் 'கண்டேன் கமல மலர்ப்பாதம்' என்றும் 'உற்றேனுகந்து பணிசெய்து உனபாதம் பெற்றேன்' என்றும் சொல்லிக் களிக் கும்படி பேரருளாளன் அருள்செய்யக் காணுமையாலே தமக்குண்டான அதிசங்கையைத் திருமுன்பே விண்ணப்பம் செய்கிருர். 'உன்னுடைச் சோதி வெள்ளத் தகம்பாலுன்னைக் கண்டு கொண்டிட்டு. என்னுடைய யாருயிரார் எங்ஙனே கொல் வந்தெய்துவரே ?' என்ருப்போலே யருளிச் செய்கிருர்,

[ஸாதுஸமாஹிதை: [அபி] ஸநந்தநாதிபி: ஸுதுர்லபம்] தம் தலையிலே சில ஏறிட்டுக்கொண்டு ஸமிதை பாதி, ஸாவித்ரி பாதியாக முயல்வார்க்குக் கிட்டவரிது. அசேதநக்ரியாகலாபங்களையே உபாய மாகப் பற்றப்பற்ற * தத்விஷ்ணோ: பரமம் பதம் நெடுகுமாய்த்து. 'நேரே கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணன் அடிக்கமலந் தன்னையயன்.'

[பக்தஜநைரதுர்பலம்] 'அச்யுதபதாம்புஜ யுக்மருக்ம வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணய மேநே' என்னும்படி யிருப்பார்க்கு 'பையரவில் மாயன் பரமபதமுங்களுக்காம் கையிலங்கு நெல்லிக்கனி' என்னலாம்படி எளிதாயிருக்குமாய்த்து. நம்பிள்ளையின் சிறு முறி * நலமந்தமில்லாதோர் நாட்டிலும் விலைச்செல்லுமென்ற வார்த்தையை நினைப்பது.

[அசிந்த்யம்] சிந்தாபதமதிக்ராந்தமாயிறே பரமபதந்தானிருப்பது. எம்பெருமானும் கத்யத் திலே 'ப்ரஹ்மாதீநாம் வாங்மநஸாகோசரே ஸ்ரீமதிவைகுண்டே திவ்யலோகே....தேஷாமபி இயத்பரிமாண மியதைச்வர்ய மீத்ருசஸ்வபாவமிதி பரிச்சேத்துமயோக்யே' என்றருளிச் செய்தாரிறே. [அத்யத்புதம்] அத்யாச்சர்யமானதொரு ஸ்தான விசேஷ மென்னலாமத்தனை போக்கிப் பாசுரமிட வொண்ணுது காணும். [அப்ரதர்க்கர்ணம்] ஏவம் பூதத்வாத் எவம் ஸ்யாதேதத்' என்ருற் போன்ற தர்க்கத்துக்கும் அபூமியாய்த்து. அத ஏவ [அத்யத்புதம்] என்றிங்ஙனே யோஜிக்கவுமாம். இப்படிப்பட்டதான [த்வத்பதம்] தேவரீருடைய திவ்ய ஸ்தானத்தை. [கதமாப்நுயாம்] அகிஞ்சனனை அடியேன் எங்ஙனே ப்ராபிக்கவல்லேனென்கிருர்.

'வனத்திடரை ஏரியாம் வண்ணமியற்று மிதுவல்லால் மாரி யார் பெய்கிற்பார் மற்று ?' என்கிற கணக்கிலே * இருளகற்று மெறிகதிரோன் மண்டலத்தூடேற்றி வைத்தேணிவாங்கி அருள்கொடுத்திட்டடிய வரை யாட்கொள்ள வல்ல தேவரீரே அடியேனுடைய 'ஆகிஞ்சன்யாநந்யகதித்வாதிகளைத் திருவுள்ளம் பற்றி * நயாமி பரமாம் கதி மென்றபடியே கொடுபோகில் போகலாமத்தனை போக்கி, எலியெலும்பனான் நானே எப்படி ப்ராபிக்க வல்லேனென்கிறார். (101)

रामानुजांघ्रिशरणोऽस्मि कुलप्रदीपः त्वासीत् स यामुनमुनेस्स च नाथवंश्यः ।
वंश्यः पराङ्कुशमुनेस्स च सोऽपि देव्याः दासस्तवेति वरदास्मि तवेक्षणीयः ॥ १०२ ॥

ராமாநுஜாங்க்ரிசரணோஸ்மி குலப்ரதீப:
த்வாஸீத் ஸ யாமுநமுநேஸ் ஸ ச நாதவம்ச்ய:|
வம்ச்ய: பராங்குசமுநேஸ் ஸ ச ஸோபி தேவ்யா:
தாஸஸ் தவேதி வரதாஸ்மி தவேக்ஷணீய: ‖ 102 ‖

வரத	பேரருளாளனே !
ராமாநுஜாங்க்ரி சரணோஸ்மி	[அடியேன்] எம்பெருமானாருடைய திருவடிகளைச் சரணமாக அடைந்தவன் ;
ஸ து	அந்த எம்பெருமானாரோ
யாமுநமுநே:	ஆளவந்தாருடைய
குலப்ரதீப:	வித்யா வம்சத்திற்கணிவிளக்காக
ஆஸீத்	ஆனார்;
ஸ ச	அந்த ஆளவந்தார் தாமும்
நாதவம்ச்ய:	[வித்யாந்வயத்தாலும் குடல் துடக்காலும்] ஸ்ரீமந் நாதமுனிகளுடைய வம்சத்தவர்
ஸ ச	அந்த நாதமுனிகளும்
பராங்குசமுநே:	நம்மாழ்வாருடைய
வம்ச்ய:	வம்சத்தவர் ;
ஸோபி	அந்த ஆழ்வாரும்
தவ தேவ்யா: தாஸ:	உனது பிராட்டிக் கடியவர் ;
இதி	என்கிற இந்த பாரம்பர்யத்தாலே
தவ	தேவரீருக்கு [அடியேன்]
கடாக்ஷணீய: அஸ்மி	கடாக்ஷிக்கத் தகுந்தவனாகின்றே னிறே.

* * * நிகமத்தில், தம்மைக் கடாக்ஷித்தருளவேண்டுவது பேரருளாளனுக்கு அவர்ஜநீயமென்னுமிடத்தை மூதலிக்கிறார்.

[ராமாநுஜாங்க்ரி சரணோஸ்மி] எனக்கு நிதியுண்டு' என்பாரைப்போலே சொல்லுகிறார்காணும். 'ராமாநுஜார்ய சரணோஸ்மி' என்றும்த்து தத்வ தீபத்திலும் தீபப்ரகாசத்திலும் வாதிகேஸரி ஆதரித்தருளின பாடம். 'நான் ராமாநுஜார்யருடைய குலத்தையுடையேனாக நின்றேன்' என்றிறே தீபப்ரகாசத்திலே விவரித்தருளிற்று. "விப்ரர்க்கு கோத்ர 'சரண' ஸூத்ரகூடஸ்தர் பராசர பாராசர்ய போதாயனாதிகள், ப்ரபந்நஜனகூடஸ்தர் பராங்குச பரகாலயதிவராதிகள்." என்றிறே ஆசார்யஹ்ருதயம். கோத்ரஸூத்ரசரணங்களெல்லாம் இராமாநுசனுடையார்க்கு வ்யாவ்ருத்தமாயிருக்குமாய்த்து.

இராமாநுசனுக்குண்டான ஏற்றந்தானென்னில் [ஸ து யாமுநமுநே: குலப்ரதீப ஆஸீத்] அவர் தாம் பெரிய முதலியாருடைய குலத்துக்கோர் விளக்காய் விளங்கினார். இராமாநுசனுடைய குலம் சொட்டைக்குலமோ வென்னில் ; இங்கு குலமென்றும் வம்சமென்றுமுள்ள-சப்தங்கள் அபத்யஸந்தானபாரம்பர்யத்தையிட்டு ப்ரயுக்தமல்ல ; விஜ்ஞானஸந்தானமாய்த்து விவக்ஷிதம். ஆகவே, 'தூய்நெறிசேர் எதிகட்கிறைவன் யமுனைத்துறைவனிணையடியாம் கதிபெற்றுடையன் இராமாநுசன்' என்றதாய்த்து.

[ஸச நாதவம்ச்ய:] அந்த பெரிய முதலியார் தாமும் ஸ்ரீமந்நாதமுனிகளுடைய திருவம்சத்திலவர். இங்கு வம்ச சப்தத்தாலே 'பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய ப்ரஸீத மத்வ்ருத்தமசிந்தயித்வா' என்னும்படிக்கீடான குடல் துடக்கைச் சொல்லலாமாயினும் கீழோடும் மேலோடும் சேரும்படி சொல்லவேணுமிறே வித்யாஸம்பந்தமே முக்கியமாக விவக்ஷிதமென்னலாம்.

[ஸசபராங்குசமுநேர் வம்ச்ய:] அந்த நாதமுனிகளும் * குருகையில் வந்த குலமுனிவனுடைய குலக்கொழுந்து. * ஆரப்பொழில் தென் குருகைப்பிரான் அமுதத் திருவாயிரத் தமிழின் இசையுணர்ந்தோர்கட்கு இனியவர் தம் சீரைப் பயின்றுய்யும் சீலங்கொள் நாதமுனியிறே.

[ஸோபி தேவ்யா: தாஸ:] அவ்வாழ்வாராகிறார் உனக்குப் படுக்கைப்பற்று. * பங்கயத்தாள் திருவருளும் கொண்ட தொண்டரிறே. [இதி] இத்யஸ்மாத்தேதோ: என்றபடி [ஹே வரத ! தவ ஈக்ஷணீயோஸ்மி] உன்னைப்பற்றினாரை நீ கடாக்ஷித்தாலும் உபேக்ஷித்தாலும் கேள்வியில்லைகாண்; 'ஸித்திர் பவதி வாநேதி ஸம்சயோச்யுத ஸேவிநாம் । நஸம்சயோஸ்தி தத்பக்த பரிசர்யாரதாத்மநாம் ॥' என்றதெல்லாம் கடலோசையாக வொண்ணாதே அந்த:புரபரிகரத்தை நோக்காதிருக்கப் போமோ வுனக்கு. 'யஸ்யாவீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தேகிலம்' என்னும்படி யிருக்கிற வுனக்கு அவள் புருவம் நெறித்தவிடத்தே குடநீர் வார்க்கவேண்டி யிருந்ததே. பிராட்டியின் உகப்புக்காக ஆழ்வாரைக் கடாக்ஷித்தாய். ஆழ்வாருடைய உகப்புக்காக நாதமுனிகளைக் கடாக்ஷித்தாய். நாதமுனிகளுடைய உகப்புக்காக ஆளவந்தாரைக் கடாக்ஷித்தாய். ஆளவந்தாருடைய உகப்புக்காக எம்பெருமானாரைக் கடாக்ஷித்தாய், அவ்வெம்பெருமானாருடைய உகப்புக்காக அடியேனைக் கடாக்ஷித்துத் தீரவேணுமென்கிறார். 'ச்ருத்வாவரம் ததநுபந்த மதாவலிப்தே நித்யம் ப்ரஸீத பகவந் மயி ரங்கநாத !' என்றார் தேசிகன். இராமாநுசனுடைய அபிமானத்திலே ஒதுங்கிக்கிடக்கிற என்னைக் கடாக்ஷித்தருளாயென்று தலைக்கட்டினாராய்த்து. [இந்த ச்லோகம் வஸந்ததிலகவ்ருத்தம்.]

मन्त्ररत्नगर्भितार्थसारपूरमेदुरा कूरनाथदेशिकेन्द्रवक्त्रपद्मनिस्सृता ।
हस्तिशैलकल्पशाखिदिव्यकीर्तिसत्सुधा षट्पदार्थतत्वनिष्ठषट्पदैर्निपीयताम् ॥

श्रीवत्साङ्कगुरोर्गभीरहृदया सूक्तिः क भोः कुत्र भोः, क्षोदीयस्तु कदध्वसु प्रसृमरा स्वल्पीयसी मे मतिः ।
एवं सत्यपि हन्त हस्तिगिरिराड्योजयन् साहसे, स्वात्मीयामिह शक्तिपूर्तिमतुलां प्राचिख्यिपन्मन्मुखात् ॥

पदार्थो निश्शंकं प्रकटित इहाभूत् प्रथमतः, परस्ताद्भावार्थो विशदललिताध्वन्यभिहितः ।
अवर्ज्याश्शास्त्रार्थाः प्रकरणविशेषेषु घटिताः, सतां पौरोभाग्यप्रसृतिरिह माभूद्गुणदृशाम् ॥

इदमेव सतां विभूषणं यदहो दोषसमीचिकीर्षणम् ।
इदमेव नृणां विदूषणं यदहो केवलदोषभाषणम् ॥

इत्थं वादिभयङ्करवंशीयाण्णङ्गरार्यसङ्कलिता ।
श्रीवरदस्तवटीका विलसतु शरदश्शतं मुदे विदुषाम् ॥

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

கூரத்தாழ்வான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யரியற்றிய
பஞ்சஸ்தவ வ்யாக்யானத்தில் தத்வார்த்த சிந்தாமணி யென்னும்

ஸ்ரீ வரதராஜஸ்தவ வ்யாக்யானம் முற்றிற்று.

॥ श्रीरस्तु ॥

ஸ்ரீரஸ்து

கூரத்தாழ்வான் அருளிச்செய்த

பஞ்சஸ்தவத்தினுள் ஐந்தாவது ஸ்தவமாகிய

ஸ்ரீஸ்தவம்

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

தத்வார்த்தசிந்தாமணி வியாக்கியானம்

முதல் ச்லோகம்

स्वस्ति श्रीर्दिशतादशेषजगतां सर्गोपसर्गस्थितीः स्वर्गं दुर्गतिमापवर्गिकपदं सर्वञ्च कुर्वन् हरिः ।
यस्या वीक्ष्य मुखं तदिङ्गितपराधीनो विधत्तेऽखिलं क्रीडेयं खलु नान्यथाऽस्य रसदा स्यादैकरस्यात्तया ॥

ஸ்வஸ்தி ஸ்ரீர்திசதாதசேஷஜகதாம் ஸர்க்கோபஸர்க்கஸ்திதீ:
ஸ்வர்க்கம் துர்க்கதிமாபவர்க்கிகபதம் ஸர்வஞ்ச குர்வந் ஹரி: ।
யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கிதபராதீநோ விதத்தேகிலம்
க்ரீடேயம் கலு நாந்யதாஸ்ய ரஸதா ஸ்யாதைகரஸ்யாத் தயா,

அசேஷ ஜகதாம்	எல்லா வுலகங்களுக்கும்
ஸர்க்க உப ஸர்க்க ஸ்திதீ:	ஸ்ருஷ்டி ஸம்ஹார ரக்ஷணங்களையும்
ஸ்வர்க்கம்	ஸ்வர்க்கத்தையும்
துர்க்கதிம்	நரகத்தையும்
ஆமவர்க்கிக பதம்	மோக்ஷஸ்தானத்தையும்
ஸர்வம் ச	மற்றுமுள்ள எல்லாவற்றையும்
குர்வந்	உண்டுபண்ணு நிற்கிற
ஹரி:	எம்பெருமான்
யஸ்யா:	யாவளொரு பிராட்டியினுடைய
முகம்	முகத்தை
வீக்ஷ்ய	நோக்கிக்கொண்டு
தத் இங்கித பராதீந:	அந்த முகத்தின் (புருவ நெறிப்பு முதலிய) குறிப்புகளைப் பின்சென்றவனாய்
அகிலம்	ஸ்ருஷ்டி முதலாகக் கீழ்ச் சொன்னதையெல்லாம்
விதத்தே	உண்டுபண்ணுகிறான்;
அந்யதா	அப்படி அவளுடைய முகக் குறிப்பைப் பின்செல்லாவிடில்
அஸ்ய	இந்த எம்பெருமானுக்கு
தயா	அப்பிராட்டியோடு
ஐகரஸ்யாத்	ஒரு நீராக ஒருமித்திருக்கவேண்டிய காரணத்தினால்
இயம் க்ரீடா	(ஸ்ருஷ்டி முதலான) இந்த விளையாட்டானது
அஸ்ய	இந்த எம்பெருமானுக்கு
ரஸதா	ஆனந்தத்தை விளைவிப்பதாக
ந ஸ்யாத் கலு	ஆகமாட்டாதன்றோ;
(ஸா) ஸ்ரீ:	அந்தப் பெரிய பிராட்டியார்
ஸ்வஸ்தி	நன்மையை
திசதாத்	அளிக்கக்கடவள்.

* * * எம்பெருமான் ஸகல லோகங்களுக்கும் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைப் பண்ணும்போதும், அவரவர்களுடைய கர்மாநுகுணமான புருஷார்த்தங்களை யளிக்கும்போதும் யாவளொரு பிராட்டியின் முகக்குறிப்பை நோக்கி அதற்கிணங்கக் காரியம் செய்கிறானோ; எந்தப் பிராட்டியின் முகக்

குறிப்பை எம்பெருமான் பின் செல்லாவிடில் அவளோடு ஏகரஸனுயிருக்க வேண்டிய தனக்குத் தன் விளையாட்டுகள் ஆநந்தத்தைக் கொடாமல் வீணுய் விடுமோ ; அப்பிராட்டி நமக்கு நன்மையைத் தந்தருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறதாய்த்து.

எம்பெருமான் எல்லா வுலகங்களையும் படைத்தளித்தழிக்கும்போதும் அவரவர்கள் கரும பலன்களை அநுபவிக்கும்பொருட்டு ஸ்வர்க்க நரகாத்யநுபவ ஸ்தானங்களையும் எல்லையில்லா இன்ப வீடாகிய பரமபதத்தையும் மற்றுமுள்ள போக்ய போகோபகரண போகஸ்தானங்களான ஸகல பதார்த்தங்களையும் அவரவர்களுக்கு அளித்தருளும்போதும் பிராட்டியின் முகக் குறிப்பைப் பின் சென்று அவளுடைய நோக்கத்திற் கிணங்க எல்லாவற்றையு மளிக்கின்ருனென்றவிது எம்பெருமானுடைய பரம ராஸிகத்தைத் தெரிவித்தபடி.

ஸ்வஸ்தி திசதாத் என்று இவர் அபேக்ஷிக்கிற நன்மையாவது பிராட்டியை நன்ருக ஸ்துதிப்பதற்கு அநுகூலமான வாக்ஸம்ருத்தி, பக்தி ஸம்ருத்தி இத்யாதிகளே யென்பது மேல் ச்லோகத்தில் விசதமாம். (1)

हे श्रीर्देवि ! समस्तलोकजननीं त्वां स्तोतुमीहामहे युक्तां भावय भारतीं प्रगुणय प्रेमप्रधानां धियम् ।
भक्तिं भन्दय नन्दयाश्रितमिमं दासं जनं तावकं लक्ष्यं लक्ष्मि कटाक्षवीचिविसृतेस्ते स्याम चामी वयम् ॥

ஹே ஸ்ரீர்தேவி ! ஸமஸ்தலோகஜநநீம் **த்வாம் ஸ்தோதுமீஹாமஹே**
யுக்தாம் பாவய பாரதீம் ப்ரகுணய ப்ரேமப்ரதாநாம் தியம் !
பக்திம் பந்தய நந்தயாச்ரிதமிமம் தாஸம் ஜநம் தாவகம்
லக்ஷ்யம் லக்ஷ்மி ! கடாக்ஷவீசிவிஸ்ருதேஸ் தே ஸ்யாம சாமீ வயம்.

ஹே ஸ்ரீ: தேவி !	பெரிய பிராட்டியாரே !
ஸமஸ்தலோகஜநநீம் த்வாம்	எல்லாவுயிர்கட்கும் தாயாகிய உம்மை
வயம்	**அடி**யோம்
ஸ்தோதும் ஈஹாமஹே	ஸ்துதிக்க விரும்புகிறோம் ;
யுக்தாம்	(உம்மை ஸ்துதிப்பதற்குத்) தகுதியான
பாரதீம்	வாக்கை
பாவய	(எமக்கு நீர்) அருளவேணும்.
ப்ரேம ப்ரதாநாம்	அன்பு மிகுந்த
தியம்	புத்தியை
ப்ரகுணய	வளரச் செய்யவேணும் ;
பக்திம்	பக்தியை

பந்தய	நல்லதாகச் செய்யவேணும். (பரம பக்தியளவாக வளரச் செய்ய வேணுமென்கை.)
ஆச்ரிதம்	(உம்மை) அடைந்திருக்கின்ற
இமம் ஜநம்	இந்த ஜநத்தை (**அடியேனை**)
தாவகம் தாஸம்	உம்முடைய ஏவற் சேவகனாக (**அடிமை** கொண்டு)
நந்தய	ஆநந்தப்படுத்தவேணும்.
ஹே லக்ஷ்மி !	லக்ஷ்மியே !
அமீ வயம் ச	இந்த **அடி**யோங்களும்
தே	உம்முடைய
கடாக்ஷ வீசி விஸ்ருதே:	கடாக்ஷவீக்ஷணங்களாகிற அலைகளின் பரவுதலுக்கு
லக்ஷ்யம் ஸ்யாம	இலக்காகக் கடவோம்.

* * * கீழ் " **ஸ்வஸ்தி ஸ்ரீர் திசதாத்** " என்று ப்ரார்த்தித்த ஆழ்வானை நோக்கிப் பெரிய பிராட்டியார் '**ஆழ்வான் !** நான் உமக்கு ச்ரேயஸ்ஸை அளிக்கவேண்டு மென்பதாகக் கேட்டுக்கொண்டீர் ; நல்லது ; என்ன ச்ரேயஸ்ஸு வேணும் ? ஐச்வர்யம் வேணுமோ? ஸந்தானம் வேணுமோ ? வேண்டியதைக் கேளும், தருகிறேன்' என்ன ;

ஆழ்வான்—' அந்த க்ஷுத்ர புருஷார்த்தங்களை விரும்ப வந்தேனல்லேன் ; உம்மை வாயாரத் துதிக்க வேணுமென்று விரும்பி வந்தேன்.

பிராட்டி—'ஆகில் என்னிடத்தில் நீர் ப்ரார்த்தித்துப் பெறவேண்டியது என்ன இருக்கிறது? நீர் பெரிய பண்டிதர்; மஹா கவி; இஷ்டப்படி ஸ்தோத்திரம் பண்ணும்; இதில் நானளிக்க வேண்டிய ஸ்வஸ்தி என்ன இருக்கிறது?

ஆழ்வான்—'இங்ஙன மருளிச் செய்யலாகாது; உம்மைப் பாங்காக ஸ்துதிப்பதற்கு உரிய ஸரஸ்வதீஸம்ருத்தியை யருளவேணும்.'

பிராட்டி—'அந்தத் திருநாவீறு உமக்கு முன்னமே வாய்த்திருக்கிறது. வேறு தேவை யுண்டாகில் கேளும்.'

ஆழ்வான்.—'வாயால் ஏதோ சில சப்தங்களைச் சொல்லுகிறேனே யொழிய அன்பு மிகுந்து கனிந்த புத்தி எனக்கில்லை. அப்படிப்பட்ட புத்தியை அருளவேணும்.'

பிராட்டி.—'என்னை ஸ்துதிக்க வேணுமென்று நீர் விரும்பின போதே அப்படிப்பட்ட புத்தி உமக்கு உண்டாய்விட்டது. அன்பு மிகாமலும் நெஞ்சுகனியாமலு மிருந்தால் என்னைத்துதிக்க நீர் முயலமாட்டீர். ஆன பின்பு அப்படிப்பட்ட புத்தி உமக்குக் கைகூடியே யிருக்கிறது. வேறு தேவை யுண்டாகில் கேளும்.'

ஆழ்வான்.—'உம்முடைய பேரருளால் ஏதோ சிறிது பக்தி கிடைத்திருக்கிறது; அது பரபக்தியாகவும் பரஜ்ஞானமாகவும் பரம பக்தியாகவும் முதிரும்படி அருள்புரிய வேணும்.'

பிராட்டி.—'அதை நீர் விரும்ப வேண்டா; ஆழ்வார்க்குப்போல் காலக்ரமத்தில் படிப்படியாக அந்த பக்தி உமக்குப் பரிணமிக்கும்; க்ரமமாகத் தன்னடையே விளையப் போவதை அபேக்ஷிப்பதேன்?'

ஆழ்வான்.—'அம்மா! எப்போது அந்த பக்தி முதிரப்போகிறதென்று நான் எதிர் பார்த்திருக்கவும் அதுவரை தரித்திருக்கவும் சக்தனல்லேன். உம்மை வந்து பணிந்த என்னை இப்போதே அந்தரங்க கிங்கரனுக்கிப் பணிகொண்டு மகிழ்விக்க வேணும்; அதற்குறுப்பாக உம்முடைய குளிர்ந்த கடாக்ஷங்கள் அடியேன் மீது ப்ரஸரிக்க வேணும். இவ்வளவே அடியேன் விரும்புவது' என்கிறார்.

[இமம் ஜநம்] '**அஹம்**' என்று உத்தம புருஷனைச் சொல்லவேண்டு மிடத்து '**அயம் ஜந:**' என்று ப்ரதம புருஷனைச் சொல்லுதல் ஒருவகைக் கவி மர்யாதையாம். நைச்யாநுஸந்தான வகையிலே இது ஒரு காஷ்டை. நான் என்னுமல் அடியேன் என்பதற்கு மேற்பட்ட சொல் இது.

[கடாக்ஷவீசிவிஸ்ருதே:] க்ருபாஸாகரமான திருக்கண்களிலிருந்து கடாக்ஷமாகிற அலை வரிசைகள் பரவப் புக்கால் அததிவலைகள் விழுமிடம் அடியேனாக வேணுமென்கை.

[அமீ] கடாக்ஷம் பெறுமல் துவண்டு கிடக்கிற நிலைமையை * **ஏஹி பச்ய சரீராணிப்** படியே தம் உடம்பைத் தொட்டுக் காட்டுகிறபடி. (2)

स्तोत्रं नाम किमामनन्ति कवयो यद्यन्यदीयान्गुणान्
अन्यत्र त्वसतोऽधिरोप्य फणितिस्सा तर्हि वन्ध्या त्वयि ।
सम्यक्सत्यगुणाभिवर्णनमथो ब्रूयुः कथं तादृशी
वाग्वाचस्पतिनाऽपि शक्यरचना त्वत्सद्गुणार्णोनिधौ ॥ ३ ॥

ஸ்தோத்ரம் நாம கிமாமநந்தி கவயோ யத்யந்யதீயாந் குணாந்
அந்யத்ர த்வஸதோதிரோப்ய பணிதிஸ் ஸா தர்ஹி வந்த்யா த்வயி ।
ஸம்யக் ஸத்யகுணாபிவர்ணநமதோ ப்ரூயு: கதம் தாத்ருசீ
வாக் வாசஸ்பதிநாபி சக்யரசநா த்வத்ஸத்குணார்ணோநிதௌ ॥ 3 ॥

ஹே ஸ்ரீதேவி! பிராட்டியே!

[illegible] பண்டிதர்கள்

[illegible] [illegible]தை

ஸ்தோத்ரம் ஆமநந்தி } ஸ்தோத்திரமாகச் சொல்லுகிறார்கள் (ஸ்தோத்ர சப்தார்த்தத்தை என்னவென்று நிஷ்கர்ஷிக்கிறார்கள்?)

அஸதஃ	(ஸ்துதிக்கத்தக்கவனிடத்தில்) இல்லாதவைகளாயும்
அந்யதீயாந்	வேறிடத்திலுள்ளவையாயுமிருக்கிற
குணாந்	குணங்களை
அந்யத்ர	வேறொருவரிடத்தில் (ஸ்துதிக்கத் தக்கவனிடத்தில்)
அதிரோப்ய	ஏறிட்டு
பணிதிஃ	சொல்வதானது
ஸ்தோத்ரம் யதிது	ஸ்தோத்ர சப்தார்த்தமானால்
தர்ஹி	அந்த பக்ஷத்தில்

(இல்லாத குணங்களை இருப்பதாக ஏறிட்டுப் புகழ்வது ஸ்தோத்ரம் என்னும் பக்ஷத்தில்)

ஸா பணிதிஃ	அச்சொல்லானது
த்வயி	உம் விஷயத்தில்
வந்த்யா	வ்யர்த்தமாம்

(அப்படிப்பட்ட ஸ்தோத்ரம் உம்மளவில் பண்ண முடியாது)

அதோ	அதவா (அல்லது),
ஸம்யக் ஸத்ய குணாபிவர்ண நம ஸ்தோத்ரம் ப்ருயுஃ யதி	உள்ள குணங்களை உள்ளபடி வர்ணிப்பதை ஸ்தோத்ர சப்தார்த்தமாகச் சொல்லுவார்களாகில்,
த்வத் ஸத்குண அர்ணவதௌ	உம்முடைய கல்யாண குணங்களாகிற கடலில்

(கடல்போல் அபாரமாயுள்ள உமது கல்யாண குணங்களைப்பற்றி)

தாத்ருசீ வாக்	அப்படிப்பட்ட சொல்லானது

(உள்ளதை உள்ளபடி சொல்வதானது)

வாசஸ்பதிநா அபி	வாக்குக்கு வல்லபனான ப்ருஹஸ்பதியாலும்
சக்யரசநா கதம்	ஸாத்யமான சேர்க்கையை யுடையதாக எப்படியாகும் ?

* * * உம்முடைய குணங்களை உள்ளபடி வர்ணிக்கிற வாக்கானது ப்ருஹஸ்பதியாலும் கவனம் பண்ண முடியாதபோது, என்னால் முடியுமென்பதற்கு ப்ரஸக்தி ஏது? என்றபடி.

ஸம்போதநம் கீழ் ச்லோகத்திலிருந்து வருவித்துக் கொள்வது. பிராட்டியை நோக்கி 'உம்மை நான் ஸ்துதிக்க விரும்புவதே அஸம்பத்தமான விஷயம்' என்பதை ஒரு சமத்காரமாக அருளிச் செய்கிறாரிதில். "த்வாம் ஸ்தோது மீஹாமஹே" என்று கீழ்ச் சொன்னேனே; உம்மை ஸ்துதிப்பதென்பது ஸம்பாவிதமான விஷயந்தானா? என்று ஆராயுமளவில் அது ஸர்வாத்மநா அஸம்பாவிதமாகத் தோன்றுகிறதென்று உபபாதிக்கிறார்.

லோகத்தில் ஒருவனை ஒருவன் ஸ்தோத்ரம் பண்ணுகிறானே, அந்த ஸ்தோத்ரமானது என்ன? என்று விமர்சிப்போம். விமர்சித்தால் ஸ்தோத்ரசப்தார்த்தம் இரண்டு வகையாகத் தேறும். ஒருவனிடத்தில் இல்லாத குணங்களை வேறிடத்திலிருந்து கொணர்ந்து ஏறிட்டுப் புகழ்வதை ஸ்தோத்ர சப்தார்த்தமாகக் கூறுகிற பக்ஷம் ஒன்றுண்டு. (ஒரு யாசகன் ஒரு மொட்டைத் தலையனைப் புகழ வேண்டி 'குழலழகரே குழலழகரே' என்று கூறுவதாம்) இப்படிப்பட்ட ஸ்தோத்திரத்துக்குப் பிராட்டியிடத்தில் ப்ரஸக்தியில்லை. இவளிடத்தில் குணமில்லாமையும் வேறிடத்திலிருந்து குணங்களைக் கொணர்ந்து இவளிடத்தில் ஏறிடுகையும் அதிதராம் அஸம்பாவிதமாகையாலே. இனி மற்றொரு வகையாகவும் ஸ்தோத்ர சப்தார்த்தத்தை நிர்வசிப்பதுண்டு. அதாவது, ஒருவனிடத்திலுள்ள குணங்களை உள்ளபடி சொல்லிப் புகழ்வதாம். அப்படிப்பட்ட ஸ்தோத்ரமும் பிராட்டியிடத்தில் அஸாத்யம். பிராட்டியின் குணகணங்கள் ஒரு கடல் போன்றிருத்தலால் அவற்றில் ஏக தேசமும் ப்ருஹஸ்பதியாலும் வருணிக்க அரிது என்று ஸித்தமான பின்பு மற்றையோரால் அந்த குணங்களை ஒன்றுவிடாமல் உள்ளபடி வருணிக்க முடியாதென்னுமிடம் கிம்புநர்ந்யாயஸித்த மாகையாலே. ஆகவே இரண்டு வகையான ஸ்தோத்ரங்களில் ஒன்றுக்கும் பிராட்டி பக்கல் அவகாசமில்லையென்று சொல்லுகிற இம் முகத்தால் 'அஸாத்யமான ஸ்ரீஸ்தவத்தில் நான் இறங்குவது அதி ஸாஹஸம்; அதிசாபலக்ருத்யம்' என்று நைச்யாநுஸந்தானம் செய்துகொண்டாராய்த்து. (3)

ये वाचां मनसां च दुर्ग्रहतया ख्याता गुणास्तावकाः
तानेव प्रति साम्बुजिह्ममुदिता है मामिका भारती !
हास्यं तत्तु न मन्महे न हि चकोर्यैकाऽखिलां चन्द्रिकां
नालं पातुमिति प्रगृह्य रसनामासीत सत्यां तृषि ॥ ४ ॥

யே வாசாம் மநஸாம் ச துர்க்ரஹதயா க்யாதா குணாஸ் தாவகா:
தாநேவ ப்ரதி ஸாம்புஜிஹ்வமுதிதா ஹை மாமிகா பாரதீ ।
ஹாஸ்யம் தத்து ந மந்மஹே ந ஹி சகோர்யேகாகிலாம் சந்த்ரிகாம்
நாலம் பாதுமிதி ப்ரக்ருஹ்ய ரஸநாமாஸீத ஸத்யாம் த்ருஷி ॥ 4 ॥

ஹே ஸ்ரீர் தேவி	பிராட்டீ
தாவகா:	உம்முடையவையான
யே குணா:	எந்த குணங்கள்
வாசாம் மநஸாம் ச துர்க்ரஹதயா க்யாதா:	வாக்குக்கும் மனஸ்ஸுக்கும் எட்டாதவைகளாக ப்ரஸித்தி பெற்றிருக்கின்றனவோ
தாந் ப்ரத்யேவ	அந்த குணங்களைக் குறித்தே,
மாமிகா பாரதீ	எனது வாக்கானது
ஸாம்புஜிஹ்வம் (யதா ததா) உதிதா	ரஸமுறின நாக்கோடு கூடிக்கிளர்ந்தது. (ப்ரவர்த்தித்து விட்டது)
ஹை	(மகிழ்ச்சிக் குறிப்பு)
தத் து	அப்படி வாக்கு ப்ரவர்த்தித்ததை
ஹாஸ்யம்	பரிஹஸிக்கக்கூடியதாக
ந மந்மஹே	[அடியோம்] நினைக்கின்றிலோம் [ஏனென்றால்]
சகோரீ	சகோர பக்ஷியின் பேடையானது
அகிலாம் சந்த்ரிகாம் ஏகா [அஹம்] பாதும் அலம் நாஸ்மி இதி	நிலா முழுவதையும் நானொருத்தியே உட்கொள்ளவல்லே னல்லேன் என்று நினைத்து,
த்ருஷி ஸத்யாம் ரஸநாம்	தாஹமுள்ளவளவில் [தன்னுடைய விடாய் பொருந்திய] நாக்கை
ப்ரக்ருஹ்ய	மடக்கிக்கொண்டு [உள்ளே அடக்கிக்கொண்டு]
நாஸீத ஹி	வெறுமனிருக்க மாட்டாதன்றே;

[அதுபோல் அடியேனும் வேறுமனிருக்கமாட்டே னென்கை.]

* * * வாய்கொண்டு சொல்வதற்கும் நெஞ்சால் நினைப்பதற்கும் முடியாதவை யென்று ப்ரஸித்தி பெற்றுள்ள உம்முடைய குணங்களைப் புகழ்வதற்கென்றே என்னுடைய நாவில் ஜலமுறுகின்றது. வாக்கு வெளிக்கிளம்புகின்றது. ஆனால் அசக்யமான விஷயத்தில் முயற்சி செய்கிறவிது பரிஹாஸ்ய மென்று சிலர் நினைக்கக்கூடும். நான் இதைப் பரிஹாஸாஸ்பதமாக நினைக்கமாட்டேன். ஏனென்றால் நிலாவைப் பருகி ஜீவிக்கவேண்டிய சகோர பக்ஷியானது இந்த நிலா முழுவதையும் நம்மொருவரால் பருக முடியாதென்று நினைத்துத் தன் தாஹத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக அந்த நிலாவில் வேண்டிய அளவைப் பருகாமல் நாக்கைச் சுருக்கிக் கொண்டு நிற்கமாட்டாது. அதுபோல் நானும் உமது கல்யாண குணங்களை முழுவதும் வர்ணித்தநுபவிக்க முடியாதென்று கை வாங்கி நிற்கமாட்டேன். என்றால் கூடு மானவளவும் வர்ணிக்க முயல்வது உசிதமே யொழிய, பரிஹாஸாஸ்பதமாக மாட்டாதென்கை. இதனால் உள்ள அம்சங்களில் யாவச்சக்யம் வர்ணிப்பதும் ஸ்தோத்ரமாகுமென்றதாய்த்து. ... (4)

क्षोदीयानपि दुष्टबुद्धिरपि निःस्नेहोऽप्यनीहोऽपि ते
कीर्तिं देवि लिहन्नहं न च बिभेम्यज्ञो न जिह्रेमि च ।
दुष्येत्सा तु न तावता न हि शुना लीढाऽपि भागीरथी
दुष्येच्छ्वाऽपि न लज्जते न च बिभेत्यार्तिस्तु शाम्येच्छुनः ॥ ५ ॥

க்ஷோதீயாநபி துஷ்டபுத்திரபி நிஸ்ஸ்நேஹோப்யநீஹோபி தே
கீர்த்திம் தேவி லிஹந்நஹம் ந ச பிபேம்யஜ்ஞோ ந ஜிஹ்ரேமி ச ।
துஷ்யேத் ஸா து ந தாவதா ந ஹி சுநா லீடாபி பாகீரதீ
துஷ்யேத் ச்வாபி ந லஜ்ஜதே ந ச பிபேத்யார்த்திஸ் து சாம்யேச் சுந: ॥ 5 ॥

ஹே தேவி!	பிராட்டியே!
அஜ்ஞ: அஹம்	ஒன்றும் அறியாத அடியேன்
க்ஷோதீயாநபி	மிகவும் நீசனாயினும்
துஷ்டபுத்திரபி	கெட்ட புத்தியை யுடையேனாயினும்

நிஸ்ஸ்நேஹோபி	அன்பு இல்லாதவனாயினும்
அநீஹோபி	ஒருவிதமான நல்ல முயற்சி யில்லாதவனாயினும்
தே கீர்த்திம்	உம்முடைய கீர்த்தியை
லிஹந்	[ஸ்தோத்ர முகத்தாலே] வாய் கொண்டு அநுபவியா நின்றவனாய்
ந ச பிபேமி	அஞ்சுவதுமில்லை.
ந ஜிஹ்ரேமி ச	வெட்கப்படுவதுமில்லை.
ஸா கீர்த்திஸ் து	[என்னால் வர்ணிக்கப்படுகிற] அந்த கீர்த்தியோ வென்றால்
தாவதா	அவ்வளவால் [அல்பனான என் வாக்கில் நுழைந்து புறப்பட்ட மாத்திரத்தால்]
ந துஷ்யேத்	கெட்டுப்போய்விடாது (எப்படிப்போலவென்றால்]
பாகீரதீ	[ஸ்வதஃ பரிசுத்தமான] கங்கா தீர்த்தமானது
சுநா	நாயினால்
லீடா அபி	நக்கப்பட்டாலும்
ந ஹி துஷ்யேத்	கெட்டுப்போய் விடாதன்றோ.
ச்வா அபி	[கங்கா தீர்த்தத்தை நக்கின அந்த] நாயும்
ந லஜ்ஜதே	வெட்கப்படுகிறதில்லை ;
ந பிபேதி ச	பயப்படுவதுமில்லை.
சுநஃ	[அந்த] நாயினுடைய
ஆர்த்திஸ்து	நாஹமோ வென்றால்
சாம்யேத்	[கங்கா தீர்த்த பானத்தினால்] தணிந்துவிடும்.

* * * அதி க்ஷுத்ரனான ஒரு மநுஷ்யன் ஸர்வோத்க்ருஷ்டனான ஒருவனை ஸ்தோத்ரம் பண்ணப் புகுவது லஜ்ஜா பயங்களுக்கு ஆஸ்பதமாக லோகத்தில் காணப்படா நின்றது. அன்றியும் தேவர்களுக்கு சேஷமான புரோடாசத்தை நாய் ஸ்பர்சித்தால் அந்த புரோடாசம் துஷ்டமாகிறப்போலே உத்தம புருஷர்களை நீச ஜநம் ஸ்தோத் த்ர முகத்தாலே வாய்கொண்டு ஸ்பர்சித்தால் அந்த உத்தம புருஷர்களுக்குக் கெடுதி விளையக்கூடுமன்றோ? ஆனபின்பு, அதிக்ஷுத்ரரான நீர் ஸர்வோத்க்ருஷ்டையான பிராட்டியை லஜ்ஜா பயங்களின்றிக்கே ஸ்துதிக்கப் புகுந்து இதனால் அப்பிராட்டிக்குப் பொல்லாங்கு விளைக்க நினைத்து விட்டீரே! இது உமக்குத் தகுமோ? தகாதுகாணும்; ஆகையால் இனி யாவது லஜ்ஜாபயங்களை மேற்கொண்டு ஸ்தோத்ரத்தினின்றும் பிற்காலித்தீராகில் இரண்டு தலையும் நிரவத்யமாகும் என்று—ஆழ்வானை நோக்கிச் சிலர் சொல்லுவதாகக் கொண்டு இந்த ச்லோகம் ப்ரவ்ருத்தமாகிறது.

நான் லஜ்ஜைப்படவும் காரணமில்லை; என்னுடைய ஸ்தோத்ரத்தால் பிராட்டிக்கு அவத்யலேசமுமுண்டாகாதென்று ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார். நான் அதிக்ஷுத்ரனாய், துஷ்டபுத்தியையுடையவனாய், ஈரநெஞ்சு இல்லாதவனாய், 'கள்ளத்தேன் நானும் தொண்டாய்த் தொண்டுக்கே கோலம் பூண்டு' என்படி கபடமாகவாகிலும் சில கைங்கர்ய வேஷங்களைப் பூணலாமே; அப்படிப்பட்ட சேஷ்டிதமுமில்லாதவனாய் இவ்வகைகளாலே அந்யந்தகர்ஹணீயனா யிருந்தேனாகிலும், பிராட்டீ! உம்முடைய திருக்கல்யாண குணங்களை நிர்ப்பயனாகவும் நிர்லஜ்ஜனாகவும் ஸ்துதிக்க இழிந்துவிட்டேன். இப்படி ஸர்வாத்மநா அநர்ஹனாகிய அடியேன் உம்முடைய கீர்த்தியைப் புகழ இழிந்துவிட்டவளவால் அந்த கீர்த்திக்கு ஒரு அவத்யமும் விளையாது. இது எப்படிப் போலவென்னில்; நாய் என்பது ஒரு நிக்ருஷ்டமான ஜந்து. அது தன் விடாயின் மிகுதியினால் கங்கா தீர்த்தத்தைப் பருகுகிறது. அப்படியாகும் போது "ஐயோ! பரம புண்ய தீர்த்தத்தை நாம் ஸ்பர்சிக்கலாமோ?" என்று அது அஞ்சுவதுமில்லை, வெட்கப்படுவதுமில்லை; அந்த நாயினுடைய விடாயோ தீர்ந்துவிடுகிறது. அன்றியும், அந்த தீர்த்தமும் சுநகஸ்பர்சத்தால் கெடுவதுமில்லையன்றோ? அது போலவாமென்கிறார்.

இதனால் குண கணங்கள் கங்காப்ரவாஹம் போல் அபரிமேயமாயும் ஸ்வதச்சுத்தமாயு முள்ளவை என்பது விளங்குவதுடன் ஆழ்வானுடைய எல்லை கடந்த நைச்யாநுஸந்தானமும் நன்கு விளங்கும்.

[லிஹந்] பிராட்டியின் கீர்த்தியை கங்கையாகவும் தம்மை சுநகமாகவும் அநுஸந்தித்தமைக்குச் சேர (**லிஹந்**) என்கிறார். **லிஹ தாது**வுக்கு 'நக்குதல்' என்று பொருளாயினும், இங்கு, வாய் கொண்டு வருணிப்பதில் நோக்கு. (5)

ऐश्वर्यं महदेव वाऽल्पमथवा दृश्येत पुंसां हि यत् तल्लक्ष्म्यास्समुदीक्षणात्तव यतस्सार्वत्रिकं वर्तते ।
तेनैतेन न विस्मयेमहि जगन्नाथोऽपि नारायणः धन्यं मन्यत ईक्षणात्तव यतः स्वात्मानमात्मेश्वरः ॥ ६ ॥

ஐச்வர்யம் மஹதேவ வால்பமதவா த்ருச்யேத பும்ஸாம் ஹி யத்
தல்லக்ஷ்ம்யாஸ் ஸமுதீக்ஷணாத் தவ யதஸ் ஸார்வத்ரிகம் வர்த்ததே।
தேநைதேந ந விஸ்மயேமஹி ஜகந்நாதோபி நாராயணஃ
தந்யம் மந்யத ஈக்ஷணாத் தவ யதஃ ஸ்வாத்மாநமாத்மேச்வரஃ ॥ 6 ॥

[ஹே தேவி !]	பிராட்டியே !
பும்ஸாம்	மநுஷ்யர்களுக்கு
ஸார்வத்ரிகம்	[இவ்வுலகம் மேலுலகம் முதலிய] எல்லா விடங்களிலுமுண்டாகக் கடவதான
யத் ஐச்வர்யம்	யாதொரு விபவமானது
மஹதேவ வா	பெரிதாகவோ
அதவா அல்பம்	அல்லது ஸ்வல்பமாகவோ
த்ருச்யேத	காணப்படுமோ
தத்	அந்த விபவமானது
லக்ஷ்ம்யாஃ தவ	லக்ஷ்மியாகிற உம்முடைய
யதஃ ஸமுதீக்ஷணாத்	யாதொரு கடாக்ஷ விசேஷத்தாலே
வர்த்ததே	விளைகின்றதோ

தேநைதேந	அந்த இந்த கடாக்ஷத்தினால் [கடாக்ஷ விஷயத்திலே என்றபடி.]
ந விஸ்மயேமஹி	ஆச்சர்யப்படமாட்டோம் ;
யதஃ	ஏனென்றால்
ஜகந்நாதஃ	உலகங்கட்கெல்லாம் தலைவனாயும்
ஆத்மேச்வரஃ	தனக்குத் தானே ஈசனாயுமுள்ள
நாராயணோபி	ஸ்ரீமந் நாராயணனும்கூட
தவ	உம்முடைய
ஈக்ஷணாத்	கடாக்ஷம் பெறுவதனால்
ஸ்வாத்மாநம்	தன்னை
தந்யம்	க்ருதார்த்தனாக
மந்யதே	நினைக்கிறானிறே ;

[ஆகையால் ஆச்சர்யப்படக் காரணமில்லை யென்கை.]

* * * ஆக இவ்வளவும் கீழ் ஐந்து ச்லோகங்களும் ஸ்தோத்ரோபோத்காதமாய் இனிமேல் ஸ்தோத்ராரம்பமாய்ச் செல்லுகிறது.

ஐச்வர்யமானது ஐஹிகமும் ஆமுஷ்மிகமுமாய் இரண்டு படிப்பட்டிருக்கும். இஹலோகத்தில் தநதாந்யஸம்பத்ஸம்ருத்தராயிருக்கு மிருப்பு ஐஹிகைச்வர்யமாம். ஸ்வர்க்காதி பரமபதாந்தமான உபரிதந லோகங்களில் வீறுபெற்றிருக்கு மிருப்பு ஆமுஷ்மிகைச்வர்யமாம். இவ்விருவகைப்பட்ட ஐச்வர்யமும் பின்னையும் இருவகைப்படும். இஹலோகத்தில் க்ராமாதிகாரியாயிருக்குமிருப்பு லகுவான ஐச்வர்யமாம். சக்கரவர்த்தியா யிருக்குமிரும்பு குருவான ஐச்வர்யமாம். ஊர்த்வலோகங்களில் இந்திரனாயிருக்கு மிருப்பு லகுவான ஐச்வர்யமாம். 'சென்றால் குடையாம்' இத்யாதிப்படி யிருக்குமிருப்பு குருவான ஐச்வர்யமாம்: இப்படிப்பட்ட ஸகல ஐச்வர்யங்களும் மஹாலக்ஷ்மியே! உம்முடைய கடாக்ஷத்தின் பயனாக விளைகின்றன என்கிற இவ்விஷயத்தைக் கேள்விப்பட்டுப் பலர் ஆச்சர்யப்படுவார்கள். ஆனால் நான் இவ்விஷயத்தில் ஸ்வல்பமும் ஆச்சர்யப்படுவேனல்லேன். ஏனென்றால் ச்ருதிகளாலே நிஸ்ஸமாப்யதிகனாக ஓதப்பட்டுள்ள ஸாக்ஷாத் ஸர்வேச்வரனும் 'நாம் லக்ஷ்மீ கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகப் பெற்றபடியால்தான் தன்யரானோம்' என்று நினைப்பிடா நிற்கையாலே ஒன்றான ஸர்வேச்வரனையே தந்யனாக்கவல்ல உம்முடைய கடாக்ஷம் இவ்வருகுள்ள சேதநவர்க்கங்களுக்கு ஐச்வர்ய ஹேதுவாகிறவிது ஆச்சர்யபதமன்றிறே. இதனால் லக்ஷ்மீ கடாக்ஷம் எம்பெருமான் தனக்கும் ப்ரார்த்தநீய மென்றதாய்த்து. (6)

ऐश्वर्यं यदशेषपुंसि यदिदं सौन्दर्यलावण्ययोः रूपं यच्च हि मङ्गलं किमपि यल्लोके सदित्युच्यते ।
तत्सर्वं त्वदधीनमेव यदतः श्रीरित्यभेदेन वा यद्वा श्रीमदितीदृशेन वचसा देवि प्रथामश्नुते ॥ ७ ॥

ஐச்வர்யம் யதசேஷபும்ஸி யதிதம் ஸௌந்தர்யலாவண்யயோஃ
ரூபம் யச்ச ஹி மங்களம் கிமபி யல்லோகே ஸதித்யுச்யதே।
தத் ஸர்வம் த்வததீநமேவ யததஃ ஸ்ரீரித்யபேதேந வா
யத்வா ஸ்ரீமதிதீத்ருசேந வசஸா தேவி ப்ரதாமச்நுதே ॥ 7 ॥

ஹே தேவி !	பிராட்டி !
அசேஷபும்ஸி	ஸாஸ்தசேதனர்களிடத்திலும்
யத் ஐச்வர்யம் [அஸ்தி]	யாதொரு ஐச்வர்யமுள்ளதோ,
ஸௌந்தர்ய லாவண்யயோ: யதிதம் ரூபம்	அவயவ சோபையாகிற ஸௌந்தர்யமென்ன. ஸமுதாய சோபையாகிற லாவண்யமென்ன இவற்றின் உருவம் யாதொன்றுளதோ
லோகே	லோகத்தில்
யச்ச ஹி மங்களம்	மங்களகர மென்று பேர் பெற்றது யாதொன்று உண்டோ,
யத் கிமபி ஸத் இதி உச்யதே	யாதொன்று 'நல்லது' என்று சொல்லப்படுகிறதோ
தத் ஸர்வம்	அந்த ஐச்வர்யம் முதலியவையெல்லாம்
யத்	யாதொரு காரணத்தால்
த்வத் அதீநமேவ	உம் ஆணைக்கு அடங்கியதாகவேயிருக்கிறதோ
அத: [தத் ஸர்வம்]	இக்காரணத்தினல் அதெல்லாம்
ஸ்ரீ: இதி அபேதேந வா	ஸ்ரீயென்று அபேதமாகவோ [அதாவது, ஸ்ரீயென்னும் சொல்லாலேயோ]
யத்வா	அல்லது
ஸ்ரீமத் இதி ஈத்ருசேந வசஸா	ஸ்ரீயை யுடையது என்கிற சொல்லாலேயோ
ப்ரதாம்	ப்ரஸித்தியை
அச்நுதே	அடைகின்றது.

* * * உலகத்தில் அவ்வோ வஸ்துக்கள் மேன்மை பெற்றிருப்பதும் அழகு பெற்றிருப்பதும் எல்லாம் லக்ஷ்மீ ஸம்பந்த நிபந்தன மென்கிறர். ஐச்வர்யமாவது—**'ஈச்வரஸ்ய பாவ:'** என்றுய் ஒன்றுக்குக் கடவனுயிருக்கை. இப்படிப்பட்ட ஐச்வர்யம் **எறும்பு முதல் பிரமனளவாக** அனைவரிடத்திலு முண்டு. சிற்றெறும்புக்கு மேற்பட்டது மக்ஷிகை. மக்ஷிகைக்கு மேற்பட்டது மதுகரம், என்றிப்படி ஒன்றுக்கொன்று மேற்பட்ட உயிர்கள் உண்டாகையாலே ஒவ்வொரு ஆத்மாவுக்கும் ஒவ்வொரு வகையான ஐச்வர்ய முண்டிறே. **[ஸௌந்தர்ய லாவண்யயோ:]** சில வஸ்துக்கள் அவயவந்தோறும் அழகுடையதாயிருக்கும்; சில வஸ்துக்கள் ப்ரத்யேகாவயவ சோபையற்றிருந்தாலும் அவயவஸமுதாயத்திலே ஒரு விலக்ஷணமான சோபையை யுடைத்தா யிருக்கும். ஆக, இப்படி சில வஸ்துக்கள் ஸௌந்தர்யசாலிகளாயும் சில வஸ்துக்கள் லாவண்யசாலிகளாயும் இருப்பதும். **[யச் ச ஹி மங்களம்]**. மஞ்சள், புஷ்பம், தீபம் முதலிய சில வஸ்துக்கள் மங்களகரங்களாக ப்ரஸித்தி பெற்றிருக்கும்; இதுவும், **[யத் கிமபி ஸதித்யுச்யதே]** அழகிய வஸ்துக்களாயும் மங்கள வஸ்துக்களாயும் இல்லாதொழிந்தாலும் சில வஸ்துக்கள் 'நல்ல பொருள்கள்' என்று சொல்லப்படா நிற்கும். திருமண் கதிர் முதலானவை. ஆகவிப்படி அவ்வோ வஸ்துக்கள் சீர்மை பெற்றிருப்பதெல்லாம் **லக்ஷ்மீ** ஸம்பந்த நிபந்தனமானபடியால் தான் சில வஸ்துக்கள் ஸாக்ஷாத் லக்ஷ்மீ வாசக சப்தத்தாலும் சில வஸ்துக்கள் லக்ஷ்மீ விசிஷ்ட வாசக சப்தத்தாலும் வ்யவஹரிக்கப்படுகின்றன. திருவிளக்கு, திருமாளிகை, திருமாளிகை, திருமலை திருமேனி முதலிய வ்யவஹாரங்கள். **"ஸ்ரீரிதி அபேதேந ப்ரதாம் அச்நுதே"** என்பதற்கு உதாஹரணமாகவும், **ஸ்ரீமதநந்தஸரஸ் ஸ்ரீமத்வநாத்ரி** இத்யாதிவ்யவஹாரங்கள் **ஸ்ரீமதித்ருசேந வசஸா ப்ரதாம் அச்நுதே** என்பதற்கு உதாஹரணமாகவும் கொள்ளத்தகும். (7)

देवि त्वन्महिमावधिर्न हरिणा नापि त्वया ज्ञायते
यद्यप्येवमथापि नैव युवयोस्सर्वज्ञता हीयते ।
यन्नास्त्येव तदज्ञतामनुगुणां सर्वज्ञताया विदुः
व्योमाम्भोजमिदन्तया किल विदन् भ्रान्तोऽयमित्युच्यते ॥ ८ ॥

தேவி த்வந்மஹிமாவதிர் ந ஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே
யத்யப்யேவமதாபி நைவ யுவயோஸ் ஸர்வஜ்ஞதா ஹீயதே ।
யந்நாஸ்த்யேவ ததஜ்ஞதாமநுகுணாம் ஸர்வஜ்ஞதாயா விது:
வ்யோமாம்போஜமிதந்தயா கில விதந் ப்ராந்தோயமித்யுச்யதே ॥ 8 ॥

ஹே தேவி	பிராட்டி !
த்வந்மஹிம அவதி:	உமது பெருமையின் எல்லையானது
ஹரிணாபி	எம்பெருமானாலும்
யத்யபி ந ஜ்ஞாயதே	அறியப்படுகிறதில்லை.
த்வயாபி	உம்மாலும்
ந ஜ்ஞாயதே	அறியப்படுகிறதில்லை.
ஏவமதாபி	இப்படி ஒருவராலு மறியப்படா திருந்தபோதிலும்
யுவயோ:	உங்களிருவர்களுடைய
ஸர்வஜ்ஞதா	ஸர்வஜ்ஞத்வ பிருதானது
நைவ ஹீயதே	குறைவுபடுகிறதேயில்லை. [ஏனென்றால்]

யத்	யாதொரு வஸ்துவானது
நாஸ்தி ஏவ	[உலகில்] அடியோடு கிடையாதோ,
ததஜ்ஞதாம்	அந்த அஸத் வஸ்துவை யறிந்து கொள்ளாமலிருப்பதை
ஸர்வஜ்ஞதாயா:	ஸர்வஜ்ஞத்வத்திற்கு
அநுகுணம்	ஒத்ததாக
விது:	[விவேகிகள்] அறிகின்றார்கள்
வ்யோமாம் போஜம்	ஆகாயத்தாமரையை
இதந்தயா விதந்	உள்ளதாக [இது ஆகாசத் தாமரைப்பூ என்று] அறிகிறவன்
'அயம் ப்ராந்த: இதி உச்யதே கில	'இவன் பைத்தியக்காரன்' என்று [உலகத்தாரால்] சொல்லப்படுகிறானன்றோ

* * * பிராட்டியே! உம்முடைய வைபவமானது உம்மாலும் உம்முடைய பர்த்தாவான எம்பெருமானாலும் இவ்வளவென்று பரிச்சேதித்து அறியப்படுகிறதில்லை; ஆனால் இதுகொண்டு உங்களுடைய ஸர்வஜ்ஞத்வத்துக்குக் கொத்தை சொல்லமுடியாது. ஸர்வ பதார்த்தத்துக்குள்ளே உம்முடைய மஹிமாவதியும் சேர்ந்திருக்க, அதனை நீங்கள் அறியவில்லை யென்றால் ஸர்வ பதார்த்தத்தில் ஏகதேசத்தை அறியவில்லை யென்று ஏற்படுகிறபடியால் ஸர்வஜ்ஞத்வத்துக்கு ஏன் பங்கம் வராதென்னில் ;

உலகத்திலுள்ள பதார்த்தங்களில் ஒன்றை யறியாதொழிந்தால் அது ஸர்வஜ்ஞத்வபஞ்ஜகமாகுமே யன்றி அடியோடு இல்லாத பதார்த்தங்களை அறியாதொழிவது ஸர்வஜ்ஞத்வத்திற்கு ஹாநிகரமாகாது. இல்லாத வஸ்துக்களை இல்லாதவையாகவே அறிந்துகொள்வது ஸர்வஜ்ஞத்வத்திற்குப் பொருந்தியதேயாம். இல்லாத வஸ்துக்களையும் தெரிந்துகொண்டால்தான் ஸர்வஜ்ஞத்வம் ஸங்கதமாகுமென்று கொள்வார் அறிவிலிகளேயாவர். மலடிமகன், முயற்கொம்பு, கானல்நீர், ஆகாசமலர் இவைபோன்ற இல்லாத வஸ்துக்களை ஒருவன் உள்ளனவாக நினைத்துக்கொண்டு வ்யவஹரித்தால் அவன் ப்ராந்தர்களில் அக்ரேஸரனாக எண்ணப்படுவானேயன்றி, 'இவன் இல்லாத வஸ்துக்களையும் தெரிந்துகொண்டிருப்பதனால் விசேஷஜ்ஞாதா' என்று ஒருவராலும் புகழப்படான்.

அதுபோல, பிராட்டி ! உம்முடைய மஹிமைக்கு அவதியென்பது உலகில் ஸத்தாகக் காணப்படுகின்ற வஸ்துக்களைப்போல் வஸ்துத: உள்ளதானால் அதனை நீங்கள் அறியாதது உங்களுக்கு ஸர்வஜ்ஞத்வ பஞ்ஜகமாகும். வாஸ்தவத்தில் உம்முடைய மஹிமைக்கு எல்லையில்லாமையால் **த்வந்மஹிமாவதி:** என்கிற பதார்த்தம் முயற்கொம்பு முதலானவை போல அஸத்து. அப்படி அஸத்தான பதார்த்தத்தை நீங்கள் தெரிந்துகொள்ளாமையாவது உள்ளதாக அறியாமை. இது **யதார்த்தஜ்ஞாநபர்யாயமான** அஜ்ஞாநமே யொழிய ஸர்வஜ்ஞத்வ பஞ்ஜகமான அஜ்ஞாநமன்று. இது அடிக்கழஞ்சுபெறும். இந்த அஜ்ஞாநத்தையும் நீங்கள் பாதகமாகக் கொண்டு இதனைப் போக்கிக்கொள்ள நினைத்தீர்களாகில்— [அதாவது—பிராட்டியின் மஹிமைக்கு அவதியுண்டென்று நினைத்தீர்களாகில்] உங்களுடைய ஸர்வஜ்ஞத்வம் குலைந்து ப்ராந்தசிகாமணிகள் என்கிற பட்டமே பலிக்கும்கிடீர் என்றதாயிற்று.

ஆக இந்த ச்லோகத்திற்கு **ப்ரதாநப்ரமேயம்** பிராட்டி எல்லையில்லாத மஹிமையுடையவள் என்னுமத்தனையாய்த்து. (8)

लोके वनस्पतिबृहस्पतितारतम्यं यस्याः प्रसादपरिणाममुदाहरन्ति ।
सा भारती भगवती तु यदीयदासी तां देवदेवमहिषीं श्रियमाश्रयामः ॥ ९ ॥

லோகே வநஸ்பதிப்ருஹஸ்பதிதாரதம்யம் யஸ்யா꞉ ப்ரஸாதபரிணாமமுதாஹரந்தி ।
ஸா பாரதீ பகவதி து யதீயதாஸீ தாம் தேவதேவமஹிஷீம் ச்ரியமாச்ரயாம꞉ ॥

லோகே	உலகத்தில்	பகவதீ ஸா பாரதீது	பூஜ்யையான அந்த ஸரஸ்வதியானவள்
வநஸ்பதி ப்ருஹஸ்பதி தாரதம்யம்	ஒருவன் மரம்போல் ஜடனாகப் பிறப்பதும் ஒருவன் ப்ருஹஸ்பதி போல் மஹாவித்வானாகப் பிறப்பதுமான ஏற்றத் தாழ்வை	யதீயதாஸீ	யாவளொரு பிராட்டியின் அடியவர்களுக்கு அடியவளாயிருக்கிறாளோ;
யஸ்யா꞉ ப்ரஸாத பரிணாமம்	யாவளொரு ஸரஸ்வதியினுடைய அநுக்ரஹத்தின் பரிபாக பலமாக	தேவதேவமஹிஷீம்	தேவதேவ பிரானுடைய தேவியான
உதாஹரந்தி	[ஜ்ஞானிகள்] சொல்லுகிறார்களோ	தாம் ச்ரியம் ஆச்ரயாம꞉	அந்தப் பிராட்டியை ஆச்ரயிக்கிறோம்.

* * * 'லக்ஷ்மீகடாக்ஷம் பெற்றவர்கள் பக்கல் வாக்தேவியான ஸரஸ்வதியும் தாஸாநுதாஸியாகக் காத்திருப்பள்' என்கிறார்.

'கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கு மவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம்' என்றபடி மரமென்று இகழலாம்படி சிலர் மூடாத்மாக்களாயிருப்பதும், தேவகுருவான ஸாக்ஷாத் ப்ருஹஸ்பதியின் அபராவதாரமென்று புகழலாம்படி சிலர் **மஹாஜ்ஞாதாக்களா**யிருப்பதும் ஸரஸ்வதீகடாக்ஷத்தினுடைய **அந்வயவ்யதிரேகப்ரயுக்தமாக** நிகழ்கின்றதென்பது அனைவருமறிந்த விஷயம். அப்படிப்பட்ட வைபவமுடைய ஸரஸ்வதியும் லக்ஷ்மீகடாக்ஷம் பெற்றவர்களின் க்ருஹத்வாரத்திலே துவண்டு, அவர்களுக்கு ஏவல் தொழில் செய்யும் பரிசாரிகையா யிருப்பதால் அதற்கேற்ற பெருமை வாய்ந்த பிராட்டியை சரணம் புகுவோமென்கிறார்.

கீழ் இரண்டாம் ச்லோகத்தில் "**யுக்தாம் பாவய பாரதீம்**" என்று பிராட்டி பக்கல் வாக்ஸம்ருத்தியை ப்ரார்த்தித்த ஆழ்வானை நோக்கிச் சிலர், 'வாக்ஸம்ருத்தியைப் பிராட்டி பக்கல் ப்ரார்த்திப்பதால் என்ன பயன்? ஸரஸ்வதீதேவியன்றோ அதனை அளிக்க வல்லவள்; ஆனபின்பு அந்த ஸரஸ்வதியைக் குறித்து ஸ்தோத்ரம் பண்ணுவதே தகுதி' என்று சொல்ல, அவர்களுக்கு மறுப்பாக அருளிச்செய்தது இந்த ச்லோகம் என்னலாம். நீங்கள் வாக் தேவதை யென்று கொண்டாடுகிற அந்த ஸரஸ்வதியும் **ததீயதாஸி**யான பின்பு, நான் அந்த பிராட்டியைவிட்டு ஸரஸ்வதியைப் பற்றுதல் தகுதியல்லவென்று ஸூசிப்பித்தபடி.

[யதீயதாஸீ] யஸ்யா꞉ இமே யதீயா꞉; யதீயாநாம் தாஸீ.—என்றாகக் கடவது. இந்த வ்யுத்பத்தியால் ஸரஸ்வதியானவள் பிராட்டியின் அடியவர்களுக்கு அடியவள் என்னுமர்த்தம் விளங்கும். (9)

...

यस्याः कटाक्षमृदुवीक्षणदीक्षणेन सद्यस्समुल्लसितपल्लवमुल्ललास ।
विश्वं विपर्ययसमुत्थविपर्ययं प्राक् तां देवदेवमहिषीं श्रियमाश्रयामः ॥ १० ॥

யஸ்யா꞉ கடாக்ஷம்ருதுவீக்ஷணதீக்ஷணேந ஸத்யஸ் ஸமுல்லஸிதபல்லவ முல்லலாஸ ।
விச்வம் விபர்யயஸமுத்தவிபர்யயம் ப்ராக் தாம் தேவதேவமஹிஷீம் ச்ரியமாச்ரயாம꞉ ॥ 10 ॥

[illegible]	முன்னே [ப்ரளயகாலத்தில்]	ஸத்ய :	அந்த ஸங்கல்பமுண்டான க்ஷணத்திலேயே
[illegible] ஸமு[illegible]வீர்யம்	லக்ஷ்மீ கடாக்ஷம் பெருமையாலே வாட்டமடைந்திருந்த	ஸமுல்லஸித பல்லவம் உல்லலாஸ	கொழுந்து விட்டுக்கிளர்ந்து விளங்கிற்றே
[illegible]ஸ்வம் [illegible]ஸ்யா :	ஜகத்தானது யாவளொரு பிராட்டியினுடைய	தேவதேவ மஹிஷீம்	தேவதேவபிரானுடைய திவ்ய மஹிஷியான
[illegible] கடாக்ஷ ம்ருது [illegible]ணை தீக்ஷ [illegible]	'கடைக்கண்ணாலே மெல்லநோக்க வேணு' மென்கிற ஸங்கல்பத்தாலே	தாம் ச்ரியம்	அந்தப் பிராட்டியை
		ஆச்ரயாம ;	அடிபணிகிறோம்.

* * * ப்ரளய காலத்தில் ஸகலாத்மவர்க்கமும் க்ஷீணகளேபரவிதுரமாய் இறகொடிந்த பறவை போல் ஒரு ப்ரவ்ருத்திக்கும் யோக்யமன்றியே துவண்டு அஸத்கல்பமாய்க்கிடக்கையில் 'இவ்வாத்மவர்க்கமடைய ப்ரவ்ருத்திக்ஷமமாக வேணும்' என்று திருவுள்ளம் பற்று நின்ற யாவளொரு பிராட்டி அவ்வாத்மவர்க்கத்தை நோக்கிக் குளிரக் கடாக்ஷிக்க முயன்றவளவில் தானே, அனைத்தும் துவட்சி நீங்கித் தளிரும் முறியுமாய்ப் பசுகுபசுகென்று விளங்கி யோங்குமோ, அந்தப் பிராட்டியை சரணமடைகிறேனென்கிறார். அதுபோலே அஸத்கல்பனாய்க் கிடக்கிற அடியேனையும் குளிர நோக்கி ஸத்கோஷ்டியிலே அந்வயிப்பிக்க வேணு மென்னும் ப்ரார்த்தனை இதில் உள்ளுறை.

துர்வாஸச் சாபத்தாலே நிச்ஸ்ரீகமாம்படி புவநத்ரயத்தையும் பரித்யஜித்துப் பயோநிதியிலே பிராட்டி எழுந்தருளினபோது தத்கடாக்ஷ அபாவத்தாலே "**அஸந்நேவ**" என்னும்படி நஷ்டமான த்ரிபுவநம் பின்பு 'செழுங்கடலமுதினிற் பிறந்தவவளும்' என்னும்படி அமுதில் வரும் பெண்ணமுதாயவதரித்து ஸ்நாதையாய் மஹார்ஹ வஸநையாய் சித்ரமால்யாநுலேபநையாய்க் கொண்டு *திகழ்கின்ற திருமார்பில் சேர்ந்து 'அகலகில்லேனிறையும்' என்று ஸம்ச்லேஷித்த வநந்தரம் தன்னுடைய காருண்யசீதல கடாக்ஷ ஸுதாவர்ஷத்தாலே வழிய வார்க்க, அநந்தரம் அத்தாலே ஸத்தைபெற்று ஸம்ருத்தமான படியை இச்ச்லோகத்திற்கும் அதுவே கருத்தாகவுமாம். இப்போது '**ப்ராக்**' என்பதற்கு துர்வாஸச் சாபத்தாலே ஜகத்தடைய நிச் ஸ்ரீகமான வன்று என்று பொருளாய்த்து. இவ்வர்த்தம் சதுச் ச்லோகீ பாஷ்யகாரரான வேதாந்ததேசிகனுக்கும் அபிமதமாயிருக்கும். (10)

यस्याः कटाक्षवीक्षाक्षणलक्षं लक्षिता महेशाः स्युः ।
श्रीरङ्गराजमहिषी सा मामपि वीक्षतां लक्ष्मीः ॥ ११ ॥

யஸ்யாஃ கடாக்ஷவீக்ஷாக்ஷணலக்ஷம் லக்ஷிதா மஹேசாஸ்ஸ்யுஃ |
ஸ்ரீரங்கராஜமஹிஷீ ஸா மாமபி வீக்ஷதாம் லக்ஷ்மீஃ || 11 ||

யஸ்யா :	யாவளொரு பிராட்டியினுடைய	ஸ்ரீரங்கராஜ மஹிஷீ	ஸ்ரீரங்க நாச்சியாராகிய
கடாக்ஷ வீக்ஷா க்ஷண லக்ஷம் லக்ஷிதா :	கடைக்கண் நோக்கத்திற்கு ஒரு நொடிப் பொழுதாகிலும் இலக்காகப் பெற்றவர்கள்	ஸா லக்ஷ்மீ :	அந்தப் பிராட்டி
[illegible]ஹேசா : ஸ்யு:	பெருஞ் செல்வம் விஞ்சியவர்களாக ஆவர்களோ	மாமபி	அடியேனையும்
		வீக்ஷதாம்	கடாக்ஷித்வருள்க.

* * * யாவளொரு பிராட்டியின் கடாக்ஷவீக்ஷணத்திற்கு க்ஷணகாலம் பாத்ரமானவர்கள் தங்யராவர்களோ, அப்படிப்பட்ட மஹா மஹிமசாலிநியான பெரியபிராட்டியார் அடியேனையும் கடாக்ஷித்தருளி தங்களுக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறபடி.

'க்ஷணலக்ஷ்யம்' என்றும் பாடமுண்டு. பொருள் ஒன்றே. [**மஹேசாஃ ஸ்யுஃ**] இங்குச் சொல்லுகிற மஹேசத்வம் ஐஹிகமாயும் க்ஷுத்ரமாயுமுள்ள ஐச்வர்யமல்ல' அதுவாகில் அத்தகைய ஐச்வர்ய

Shrimal Pillai Loka chariar Sishyan ,Toronto , Cana

ஸித்திக்காக, ஆழ்வான் லக்ஷ்மீ கடாக்ஷத்தை விரும்புகின்றாரென்ன வேண்டிவரும். குபேர விபவகதினும் விஞ்சிக்கிடந்த நிரவதிக ஸம்பத்துக்களை த்ருணவத்கரித்து, 'பொன்வட்டில் தனையெறிந்த புத்முடையோன் வாழியே' என்று வாழ்த்துகைக்கீடான பரமவிரக்திபெற்று உஞ்சவ்ருத்தியாலே காலக்ஷேபம் நடத்திக்கொண்டு போந்த ஆழ்வானுக்கு இந்த க்ஷுத்ரமான ஐச்வர்யத்தில் கனவிலும் நினைவிருக்க ப்ரஸக்தி யில்லையே. ஆனபின்பு இங்குத்தை மஹேசசப்தம் ஸ்வரூபாநுரூப ஸம்ருத்தியையுடையவர்களையே சொல்லக்கடவது. அதாகிறது கைங்கர்ய ஸம்பத்து. * மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான் வேட்கையினோடு சென்றிழிந்து * கராங்கொளக் கலங்கின கானமர் வேழத்தை "ஸ து நாகவர: ஸ்ரீமாந்" என்றதும்; ராவணபவனத்திலே திரஸ்க்ருதனாய்ப் புகலிடம் தேடித் தரையிலே கால் பாவமாட்டாதே ஸ்ரீராமவிஷயீகாரம் பெறுவதாக ஆகாசத்திலே வந்து நின்ற ஸ்ரீ விபீஷணாழ்வானை "அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்" என்றதும், * குவலயத்துங்கக்கரியும் பரியுமிராச்சியமு மெல்லாம் துறந்து கானகமே மிக விரும்பிப் போந்த இளைய பெருமாளை "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" என்றதும் கைங்கர்ய ஸம்பத்தைக் கணிசித்திறே. இந்த கைங்கர்ய ஸம்பத்து இஹலோகத்தில் அர்ச்சாவதாரத்தில் கிடைக்க வேணுமானாலும் பரமபதத்தில் கிடைக்க வேணுமானாலும் லக்ஷ்மீ கடாக்ஷத்தாலன்றிக் கிடைப்பது அருமை என்னுமிடம் 'பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின்கோயில் சீய்த்து' 'பூவளரும் திருமகளாலருள் பெற்றுப் பொன்னுலகில் பொலிவர்தாமே' இத்யாதி அருளிச் செயல்களாலும் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளாலும் விசதம். பிராட்டிபக்கல் கடாக்ஷம் பெறாதே அவனைப் பெற நினைப்பார் பெறும் பேற்றுக்கு சூர்ப்பணகையை ப்ரதமநிதர்சனமாக நம்மாசார்யர்கள் காட்டிப் போருவர்கள். [ஸா மாமவிக்ஷதாம் லக்ஷ்மீ:] அடியேனையும் குளிரக் கடாக்ஷித்தருளி, அந்த கைங்கர்ய ஸம்பத்தை அடியேனும் பெற்றேனும்படி அருள் புரியவேணுமென்று இந்த ஸ்தவத்தைத் தலைகாட்டினாராயிற்று. (11)

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

த்த்வார்த்தசிந்தாமணி யென்னும்

ஸ்ரீஸ்தவ வ்யாக்யானம் முற்றிற்று.

Released by Maran's Dog Toronto , Canada

அர்வாஞ்சோ யத்பதஸரஸிஜத்வந்த்வமாச்ரித்ய பூர்வே
மூர்த்நா யஸ்யாந்வயமுபகதா தேசிகா முக்திமாபு:,
ஸோயம் ராமாநுஜமுநிரபி ஸ்வீயமுக்திம் கரஸ்தாம்
யத்ஸம்பந்தாத் அமநுத கதம் வர்ண்யதே கூராநாத:.

கூரத்தாழ்வான் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

Shrimal Pillai Loka chariar Sishyan ,Toronto

த்ரியுக! — த்ரீணி யுகாநி யஸ்ய ஸ: இரண்டிரண்டாக வகுக்கப்பட்ட மூன்று குண ஸமுதாயங்களை உடையவன் என்றபடி. பூர்வார்த்த முடிவில் [அபு:] என்ற பாடத்தை அறியாமல் பலர் 'அபூத்' என்று ஓதுவது பிழை. [அபாத், அபாஸம, அபு:] (16)

इयं वैयूही वै स्थितिरथ किलेच्छाविहृतये विभूतीनां मध्ये सुरनरतिरश्चामवतरन् ।
सजातीयस्तेषामिति तु विभवाख्यामपि भजन् करीश त्वं पूर्णो वरगुणगणैस्तान्स्थगयसि ॥ १७

இயம் வையூஹீ வை ஸ்திதிரத கிலேச்சாவிஹ்ருதயே
விபூதீநாம் மத்யே ஸுரநரதிரச்சாமவதரந் ।
ஸஜாதீயஸ் தேஷாமிதி து விபவாக்க்யாமபி பஜந்
கரீச ! த்வம் பூர்ணோ வரகுணகணைஸ் தாந் ஸ்தகயஸி ॥ 17 ॥

ஹே கரீச	ஹஸ்திகிரிநாதனே!	அவதரந்	அவதரித்தவனாய்
இயம் ஸ்திதி:	[கீழ்க் கூறிய] வ்யவஸ்தையானது	விபவாக்க்யாம் பஜந்	விபவாவதார மென்னும் திருநாமத்தை அடைந்தவனாய்
வையூஹீ வை	வ்யூஹத்தைப்பற்றியதாம்;	வரகுணகணை:	சிறந்த குணங்களின் சமூகங்களால்
அத கில	அதற்கு மேல்	பூர்ணோபி	நிறைந்தவனாயிருந்தாலும்
இச்சா விஹ்ருதயே	இஷ்டப்படி விளையாடுவதற்கு	தேஷாம்	அந்த தேவ மநுஷ்ய திரியக்குகளுக்கு
விபூதீநாம்	[உன்னுடைய] விபூதியாகிய	ஸஜாதீய இதிது	ஸஜாதீயன் என்ற காரணத்தால்
ஸுரநரதிரச்சாம் மத்யே	தேவ மநுஷ்ய திர்யக்குகளின் நடுவில்	தாந் ஸ்தகயஸி	அந்த குணஸமூகங்களை மறைத்துக்கொண்டிருக்கிறாய்.

***கீழ் ச்லோகத்தில் சொல்லப்பட்ட வ்யவஸ்த்தையானது வ்யூஹத்தைப் பற்றியது. அதாவது— ஸங்கர்ஷணாதி மூர்த்தித்ரயத்திலும் ஈரிரண்டு குணங்கள் விளங்குகின்றன வென்று சொன்ன ஏற்பாடு வ்யூஹவிஷய மென்கை. அதற்குமேல் விபவாவதாரத்தின்படி சொல்லப்படுகிறது. உன் விபூதியான தேவஜாதியில் ஒருவனாகவும் மநுஷ்ய ஜாதியில் ஒருவனாகவும் இப்படிப் பலபல யோனிகளில் பிறவாநின்ற நீ விபவாவதாரமென்னும் பெயரையடைந்தவனாய் இவ்வவதாரங்களிலும் ஸகல கல்யாண குணகண பரிபூர்ணனாயிருந்தும் அவர்களோடு ஒரு கோர்வையாகப் பிறந்த காரணத்தினால் வேறுபாடு தோன்றாமைக்காக அக்குணங்களை மறைத்துக் கொண்டிருக்கிறாய் என்றபடி. கோவர்த்தனோத்தாரணம் ஸேதுபந்தம், அம்ருதமதநம் முதலிய சில ஸமய விசேஷங்களில் தன் அபார சக்தி விசேஷத்தை ஆவிஷ்கரித் தருளினபடியால் மற்ற காலங்களில் அந்த சக்திவிசேஷத்துக்குறுப்பான குணங்கள் அந்தர்ஹிதங்களாயிருக்கின்றன என்பது அறியலாயிற்றென்கை.

விபவமென்பது விபூதி ஸஜாதீயனாய், தனது விபூதியான [illegible] ஜாதிகளில் ஒருவனாக அவதரித்தவையான அந்த அவதாரத்துக்கு விபவமென்று பெயராயிற்று. [illegible] அன்றிக்கே, தன் விபவங்களோடு கூடியே அவதரிக்கையென்னும் திருக்குணம் ஸகல கல்யாண குணகண விசிஷ்ட வேஷத்தை உட்கொண்டபடியாம்.

[இச்சாவிஹ்ருதயே] அஸ்மதாதி ஜந்மங்களுக்கு ஹேது கருமமாகிறாப்போலே பகவதவதாரங்களுக்கும் கருமமே ஹேதுவாமோ? என்னும் சங்கையை நிரஸிக்கிறார். 'முனிவரும் ஜற்றும் முற்றுமாய் [illegible] பிறந்த' என்று பஹுவிதமாகச் சொல்லப்படுகிற பகவதவதாரங்களுக்கு ஹேது 'இப்படி [illegible]' என்னும் ஸ்வேச்சையேயாகிய ஹேத்வந்தரமில்லையிறே.

[ஸுரநரதிரச்சாம் மத்யே அவதரந்] ஷட்த்ரிம்சத்பேத பிந்நமான பத்மநாபாதி விபவமும், உபேந்த்ர த்ரிவிக்ரம ததிபக்த ஹயக்ரீவ நரநாராயண ஹரிக்ருஷ்ண மத்ஸ்ய கூர்ம வராஹாத்யவதார விசேஷங்களும் [illegible] பண்ணின குப்ஜாம்ராவதாரமும் இவை போல்வன எண்ணிறந்த அவதாரங்கள் இங்கு அநுஸந்தேய விஷயம். (17)

போலே விளங்குகின்றதென்கிறார் த்ருதீய சரணத்தாலே. இனி நான்காவது பாதத்தால் சொல்லிற்றாய்த்தென்னென்னில் :— பேருளாளனுடைய திருமார்பில் ஏகாவளியான ஒரு முக்தாஹாரம் சாத்தப்பட்டிருக்கிறது. அது முக்தாவளியல்ல. வக்ஷஸ்ஸ்தலநிபதிதவிசீர்ணமான ஸ்மிதநிர்ஜ்ஜரத்தில் நின்றும் பெருகிய ஒரு ஆறுதான் முக்தாவளியாக விளங்குகின்றதோ என்று உல்லேகிக்கலாம்படி யிராநின்றதென்கை. ஆக இந்த ச்லோகத்தால், பேரருளாளனுடைய மந்தஹாஸ ப்ரபா ப்ரஸரமானது அநேக யஷ்டிக முக்தாஹாரமாகவும், வஸ்துதஃ திருமார்பிலே சாத்தியிருக்கிற ஏகாவளீ ஹாரமானது ஸ்மிதநிர்ஜ்ஜர விநிஸ்ஸ்ருதையான நதியாகவும் உத்ப்ரேக்ஷிக்கப் பட்டதாய்த்து.

விகீர்ண, விசீர்ண - இதி பாடபேதஃ. த்ருதீயபாதத்தை 'ஹாரலக்ஷ்மீமபி' என்னுமளவாக நிறுத்தியநுஸந்திப்பது அர்த்தச்சேர்த்திக்கு விபரீதம் ; 'அபி முக்தாவளிகா' என்று யதாக்ரமமாகவே அநுஸந்திக்கவேணும். (38)

परिमण्डितरासमण्डलाभिः वरदाघ्रातमभीष्टगोपिकाभिः ।
अनुवर्तितदातनप्रहर्षात् इव फुल्लं हि कपोलयोर्युगं ते ॥ ३९ ॥

பரிமண்டிதராஸமண்டலாபிஃ வரதாக்ராதமபீஷ்ட கோபிகாபிஃ ।
அநுவர்த்திததாதநப்ரஹர்ஷாத் இவ புல்லம் ஹி கபோலயோர் யுகம் தே ॥ 39 ॥

ஹே வரத	பேருளானனே !	தே கபோலயோ : யுகம்	உன்னுடைய கபோலத்வயமும்
பரிமண்டித ராஸமண்டலாபி :	அலங்கரிக்கப்பட்ட திருக்குரவை கோஷ்டியை யுடைய	அநுவர்த்தி ததாதந ப்ரஹர்ஷாத்இவ	இப்போதும் அநுவர்த்தித்து வாராநின்ற அப்போதைய ஹர்ஷப்ரகர்ஷத்தாலே போல
அபீஷ்ட கோபிகாபி :	ப்ரியைகளான கோபஸ்த்ரீகளாலே	புல்லம்	விகஸித்திரா நின்றது.
ஆக்ராதம்	மோரப்பட்ட		

* * * திவ்ய கபோலங்களை யநுபவித்து இனியராகிறார். அர்ச்சாவதாரத்திலும் விபவாவதார வாஸநை பண்ணிப் போருவர்கள் நம் ஆழ்வார்களும் ஆசார்யர்களும். 'கோவலனாய் வெண்ணெயுண்ட வாயன்— அண்டர்கோனணியரங்கன்' 'அடுதிறலயோத்தி யெம்மரசே ! அரங்கத்தம்மா' என்றிப்புடைகளிலே யாய்த்து ஆழ்வார்களீடுபாடு. மற்றையவதாரங்களிற் காட்டிலும் க்ருஷ்ணாவதாரம் ஸந்நிஹிதமாகையாலே இந்த க்ருஷ்ணாவதார வாஸநையே மிகுதியாகச் செல்லுமாய்த்து அர்ச்சாவதாரத்திலே.

பேரருளாளனுடைய திவ்ய கபோலங்களின் ப்ரபுல்லதையைக் கண்டவாறே க்ருஷ்ணாவதாரத்திலே ராஸக்ரீடா அவஸரத்திலே க்ருஷ்ண கபோலங்களுக்கு விளைந்த ஹர்ஷப்ரகர்ஷம் ஸ்ம்ருதிவிஷயமாகி தாதாத்ம்யபாவநை தோற்ற அருளிச் செய்கிறார். [பரிமண்டிதேத்யாதி] ராஸ மண்டலமாவது கண்ணபிரானுடைய ராஸக்ரீடா கோஷ்டி. ராஸக்ரீடையாவது தமிழில் 'குரவைக் கூத்து' எனப்படும். அதாவது 'அங்கனாமங்கனாமந்தரே மாதவஃ' இத்யாதிப்படியே ஒவ்வொரு ஆய்ச்சியின் பக்கலிலும் ஒவ்வொரு கண்ணனாகப் பல திவ்யமங்கள விக்ரஹங்களைப் பரிக்ரஹித்துக்கொண்டு கைகோத்தாடுவது. அங்ஙனே ஆடுங்காலத்தில் இரண்டு பக்கலிலுமுள்ள ஆய்ச்சிமார்களும் தங்கள் தங்களுக்கு அணித்தான க்ருஷ்ண கபோலத்திலே ப்ரீத்யதிசயத்தாலே முத்தம் கொடுக்க, அத்தாலே ஒரு விலக்ஷணமான ஹர்ஷப்ரகர்ஷம் உண்டாகக் கடவதிறே க்ருஷ்ணகபோலங்களுக்கு ; அந்த ஹர்ஷத்தினுடைய அநுவ்ருத்தியானது அத்யாபி மாறாமையாலே தத்ப்ரயுக்தமாகத்தான் இந்த திவ்ய கபோலங்கள் ப்ரபுல்லங்களாயிருக்கின்றனவோ ? என்று உந்நயிக்கிறபடி. (39)

मुखमुन्नसमायताक्षमुद्यत्स्मितदन्तं रुचिराधरं नतभ्रु ।
लसदंसविलम्बिकर्णपाशं मयि ते निश्चलमस्तु हस्तिनाथ ॥ ४० ॥

முகமுந்நஸமாயதாக்ஷமுத்யத்ஸ்மிததந்தம் ருசிராதரம் நதப்ரு ।
லஸதம்ஸவிலம்பிகர்ணபாசம் மயி தே நிச்சலமஸ்து ஹஸ்திநாத ॥ 40 ॥

ஹே ஹஸ்திநாத	ஓ கரிகிரி நாதனே !	நத ப்ரு	வளைந்த திருப்புருவங்களை யுடைய தாயும்
உந்நஸம்	உந்நதமான நாஸிகையை யுடைய தாயும்	லஸத் அம்ஸ விலம்பி கர்ண பாசம்	விளங்குன்ற தோள் வரை தொங்குகின்ற சிறந்த செவிகளை யுடைத்தாயு மிருக்கிற
ஆயதாக்ஷம்	நீண்ட திருக்கண்களை யுடைய தாயும்	தே முகம்	உனது திருமுக மண்டலமானது
உத்யத் ஸ்மித தந்தம்	விம்மிவெளியெழுகின்ற புன்முறுவலையுடைய திருமுத்துகளை யுடைய தாயும்	மயி	அடியேன் விஷயத்திலே
ருசிர அதரம்	அழகிய திருவதரத்தை யுடைய தாயும்	நிச்சலம் அஸ்து	நீடித்திருக்கக் கடவது.

* * * "பரபாகமியாத்" என்னும் ச்லோகம் முதலாக இவ்வளவும் வர, திருமுக மண்டலத்திலுள்ள ஒவ்வொரு திவ்யாவயவந்தன்னையும் தனித்தனியே அநுபவித்து, இந்தச்லோகத்தாலே திருமுகத்தைப் பூர்ணமாக அநுபவிக்கிறார். ஆழ்வானுடைய சிந்தையாகிற பெண்ணானவள் இனிமேல் தேவாதிராஜனது கண்டாச்லேஷத்துக்குப் போகிறாளாகையால், நவோடையான பெண் பிறந்தகத்தில் நின்றும் புக்ககந்துக்குப் போம்போது ஜந்மபூமியிலுள்ள உறவு முறையாருள்ள விடமெங்கும் புக்கு அவர்களை உபலாலித்து வருமாபோலே தனக்கு சிரபரிசிதங்களான நயநநாஸிகாதி அவயவங்களை கண்டாச்லேஷ பூர்வாங்கமாக உபலாலநம் பண்ணி உகவாநின்றபடி.-என்று ஜீயரருளிச் செய்யும்படி. [தே முகம் மயி நிச்சலமஸ்து] " துரீச்வரத்வாரப்ஹிர் விதர்திகாதுராஸிகாயை ரசிதோயமஞ்ஜலி: " என்று ப்ராக்ருதமுகாவலோகநத்தில் நசை யொழிந்து " இன்று யாம் வந்தோ மிரங்கு " என்று உன் கோயில் கடைத்தலைப்புகுந்த அடியேன் திறத்திலே உன்னுடைய திருமுக மண்டலம் எப்போதும் மாறாதே ஸேவைதந்தருள வேணுமென்கிறார். " வ்ருக்ஷே வ்ருக்ஷே ச பச்யாமி சீரக்ருஷ்ணாஜிநாம்பரம் " என்றபடி மாரீசனுக்கு எங்கும் இராமபிரானுடைய தோற்றமேயாயிருந்தாற்போலே இவர் தமக்கும் பேரருளாளனுடைய திருமுகமண்டலமே இடைவிடாது முன்னின்று தோற்றவேணுமென்று ஆசை யிருக்கிறபடி. (40)

पद्मायाः प्रणयरसात् समासजन्त्याः स्वं बाहुं सुबहुमतो भुजेन तेन ।
कां नामान्वभवदहो दशां तदात्वे कण्ठस्ते करिगिरिनाथ कम्बुकान्तः ॥४१॥

பத்மாயா: ப்ரணயரஸாத் ஸமாஸஜந்த்யா: ஸ்வம் பாஹும் ஸுபஹுமதோ புஜேந தேந ।
காம் நாமாந்வபவதஹோ தசாம் ததாத்வே கண்டஸ் தே கரிகிரிநாத! கம்புகாந்த: ॥ 41 ॥

ஹே கரிகிரிநாத !	திருவத்திமலைத் தலைவனே !	பத்மாயா:	பிராட்டிக்கு
கம்பு காந்த:	சங்கம் போலழகிய	ஸுபஹுமதஸ் ஸந்	மிகவும் பஹுமான பாத்ரமாய்க் கொண்டு
தே கண்ட:	உன்னுடைய திருக்கழுத்தானது	ததாத்வே	அக்காலத்தில்
ப்ரணயரஸாத்	ப்ரீதிரஸத்தாலே	காம் நாம தசாம்	என்ன அவஸ்தையை
தேந புஜேந ஸ்வம்பாஹும் ஸமாஸஜந்த்யா:	அப்படிப்பட்ட [உனது] புஜத்தோடே தன்னுடைய புஜத்தைத் தழுவி முழுசாகின்ற	அந்வபவத்	அநுபவித்ததோ !
		அஹோ	அந்தோ !

* * * இனித் திருமுக மண்டலத்திற்குக் கீழே நோக்குகிறார். திருக்கழுத்திலே ஊன்றுகிறாராய்ச் செல்லுகிறது இந்த ச்லோகம். பேரருளாளனுடைய திருக்கழுத்தானது * க்ரமுகதருணக்ரீவை போலவும் சங்கம் போலவும் ரேகாத்ரயவிபக்தாங்கமாயிருக்கும். அந்த ரேகைகளைக் கண்ட வாறே ' ப்ரணய விலகல்லக்ஷ்மீ விச்வம்பராகரகந்தலீகனக வலயக்ரீடாஸம்க்ராந்தரேக இவோல்லஸன் ' என்றுப் போலே கண்டாச்லேஷத்பரையான பிராட்டியின் திருக்கைகளிலணிந்துள்ள கனகவலயங்கள் திருக்கழுத்

திலே அழுத்தப் பெற்று அதனுலுண்டான ரேகைகளோ இவை! என்று சங்கிக்கும்படியா யிருக்கும். இப்ப டிப்பட்ட தொரு ஸம்பாவனை ஆழ்வான் திருவுள்ளத்திலே உதிக்க 'ஏகஸம்பந்திஜ்ஞானம் அபரஸம்பந்தி ஸ்மாரகம்' என்ற கணக்கிலே, பண்டு பிராட்டி செய்தருளின கண்டாச்லேஷம் ஸ்ம்ருதி விஷயமாக, ததநுஸந்தானமுகேன திருக்கழுத்திலே ஈடுபடுகிருராய்த்து. [ஹே ஹஸ்திகிரிநாத ! கம்புகாந்த: தே கண்ட: ப்ரணயரஸாத் தேந புஜேந ஸ்வம் பாஹும் ஸமாஸஜந்த்யா: பத்மாயாஸ்ஸபஹுமதேந: ஸந் ததாத்வே காம் நாம தசாம் அந்வபவத்] பிராட்டி எம்பெருமானேடே கைகோத்துத் தழுவி முழுசிப் பரிமாறின ஸமயம் பலவுண்டு ; திருப்பாற்கடல் கடைந்தபோது திவ்யமால்யாம்பரதரையாய் ஸர்வபூஷண பூஷிதையாய் ஸகல தேவதைகளும் பார்த்துக்கொண்டு நிற்கச் சென்றணைந்தது ஒன்றுண்டு; கரவதத் தினன்று ராக்ஷஸ வேட்டையாடின பெருமாளுடைய யுத்தாயாஸ பரிஸ்விந்நமான திருமேனியில் ராக்ஷஸ சரவ்ராதவ்ரணரோபணதிவ்யௌஷதமான காடாலிங்கனமொன்றுண்டு; இவை யெல்லாம் இங்கு ஆழ்வானுக்கு விவக்ஷிதமல்ல காணும். திவ்ய தம்பதிகளிருவரும் சேரநின்று ஒருவருக்கொருவர் கை கோத்து கண்டாச்லேஷம் பண்ணினது க்ருஷ்ணவதாரத்திலே விசேஷித்து வீறுபெற்றிருக்குமாய்த்து. [ப்ரணயரஸாத் ஸ்வம் பாஹும் தேந புஜேந ஸமாஸஜந்த்யா:] * எம்மைப் பற்றி மெய்ப்பிணக்கிட்டக்கால் இந்தப்பக்கம்நின்றவர் என் சொல்லார்' என்று அஞ்சவேண்டும் நிலத்திலன்றிக்கே * பொய்கை முது மணல் முல்லைப்பந்தல்களிலே பண்ணும் விஹாரமாகையாலே, 'ஆலிங்கிதாயாம் புநராயதாக்ஷ்யாமாம் ஆசாஸ்மஹே விக்ரஹயோரபேதம்' என்னும்படியான ப்ரணயரஸம் மீதூர்ந்திருக்குமிறே. அப்படிப்பட்ட ப்ரீதிவிசேஷத்தாலே பிராட்டியானவள் தன் கையை அவனுடைய கையோடே இணைத்து நெருக்கி அவன் பிடரியிலே தன் கையும் தன் பிடரியிலே அவன் கையுமாக உல்லஸித்து நிற்கும்படியைச் சொல்லுகிறது; 'தேந புஜேந' என்கிற விடத்தில் தச்சப்தம் விபவாவதாரஸம்பந்தபராமர்சியாம். அர்ச்சையிலும் விபவா வதார தாதாத்ம்யாநுஸந்தானத்தினுறைப்பு இருக்கிறபடி.

[ஸபஹுமத: தே கண்ட:] பிராட்டியின் பாஹுவானது எம்பெருமானுடைய கண்ட ஸ்பர்சத் தைப் பெற்றவாறே ஒரு விலக்ஷணமான இனிமை யுண்டாக, 'ஹா ஹா இதொரு ஸ்பர்சமிருந்தபடி யென்!' என்று அதுதன்னிலே உச்சாவசமான பஹுமாந விசேஷங்களைப் பண்ணுவளிறே பிராட்டி - அந்த பஹுமாந விசேஷங்களுக்குப் பாத்ரமான உனது திருமிடறுனது [ததாத்வே காம் நாம தசாம் அந்வபவத்] * நெஞ்சால் நினைப்பரிதால், * என்னும் படியிராநின்றதீ ; சொலப்புகில் வாயமுதம் பரக்குமே. "காம் நாம தசாமந்வபவத்' ' என்று ப்ரச்நம் பண்ணுகிருரல்லர் ; அதுவுமொரு நிலைமையே !" என்று ஈடுபடுகிருர். அந்த ஸமயத்தில் இத்திருமிடறு பட்டபாட்டை அணுகியிருந்து கண்ணுர அநுபவிக்கப் பெற்றிலோமே! 'என்னும்இழவு சொல்நலத்தில் வெளியாகிறபடி பாரீர்.

[கம்புகாந்த:] கம்புவத் காந்த: ; சங்கம் போலே அழகிய என்றபடி. "சங்கஸ்ஸ்யாத் கம்புரஸ்த்ரி யாம்" இத்யமர:. ரேகாத்ரயவிபக்தாங்கத்வாதி ஸாதர்ம்யத்தையிட்டு கண்டத்துக்கு சங்கஸாத்ருச்ய வர்ணனம் கவிஸமய ப்ரஸித்தம்.

இந்த ச்லோகம் முதல் 'யா தாமோதர இதி" என்னும் ச்லோகமளவாகவுள்ள பதினெரு ச்லோகங்களும் ப்ரஹர்ஷிணீ வ்ருத்தம். (41)

सायामा धृतपरिणद्धयोऽधयो वा तादृश्यस्स्फुटमथवा त्रिशश्चतस्रः।
चत्वारो वरद वरप्रदास्त्वदीयाः भासन्ते भुजपरिघास्तमालनीलाः ॥ ४२ ॥

ஸாயாமா த்ருதபரிணத்தயோப்தயோ வா தாத்ருச்யஸ் ஸ்புடமத வா திசச்சதஸ்ர: ।
சத்வாரோ வரத வரப்ரதாஸ் த்வதீயா: பாஸந்தே புஜபரிகாஸ் தமாலநீலா: ॥ 42 ॥

ஹே வரத	ஓ வரதனே !	வரப்ரதா:	[அடியார் வேண்டும்] வரங்களை யளிக்க வல்லவையாயும்
தமாலநீலா:	பச்சிலைமரம்போல் கறுத்தவை யாயும்	சத்வார:	நான்காயுமுள்ள

Shrimal Pillai Loka chariar Sishyan ,Toronto , Canada

போகீந்த்ராஃ இவ ச	சேஷன், வாஸுகி முதலிய அரவரசுகள் போலவும்	பாஸந்தே	விளங்குகின்றன.

* * * பேரருளாளனுடைய புஜங்கள் திருவிரல்களோடே சேர்ந்த சேர்த்தியழகுக்குப் பாசுரமிடுகிறார். நுனியிலே இளந்தளிர்களை யுடைய ஸாலவ்ருக்ஷ சாகைகள் போலவும், பவழங்களைக் கொழிக்கின்ற கடலலைகள் போலவும், முகத்தில் பணமணிகள் விளங்கப்பெற்ற ஸர்ப்பராஜங்கள் போலவும் விளங்குகின்றன—செவ்விய திருவிரல்களோடே கூடின தேவரீருடைய திருக்கைகள் என்கிறார்.

ஆக இந்த ச்லோகத்தால் பணைகள் போலவும் அலைகள் போலவும் அரவங்கள் போலவும் பருத்து நீண்டு மனோஹரங்களாய் விளங்குகின்ற திருக்கைகளும் செவ்விதழ் போலும் பவழங்கள் போலும் செம்மணி போலும் விளங்குகின்ற திருவிரல்களும் அநுபவிக்கப்பட்டன. "அருணாக்ராஃ" என்ற பதத்தில் திருவிரல்களுக்கு வாசகமான பதம் வ்யக்தமாக இல்லையாகிலும், அக்ரபத மானது அங்குளியை லக்ஷிக்கிறதென்றுணர்க. (44)

अम्भोधेस्स्वयमभिमन्थनं चकर्थ क्षोणीध्रं पुनरपि सप्तरात्रम् ।
सप्तानां विवलयसि स्म कण्ठमुक्ष्णाम् अम्लाना वरद तथाऽपि पाणयस्ते ॥ ४५ ॥

அம்போதேஸ் ஸ்வயமபிமந்தநம் சகர்த்த க்ஷோணீத்ரம் புநரபிச் ச ஸப்தராத்ரம் ।
ஸப்தாநாம் விவலயஸிஸ்ம கண்டமுக்ஷ்ணாம் அம்லாநா வரத ததாபி பாணயஸ் தே ॥ 45 ॥

ஹே வரத !	ஓ வரதனே !
ஸ்வயம்	நீ தானே
அம்போதேஃ அபிமந்தநம்	கடல் கடைவதை
சகர்த்த	செய்தருளினின்றாய் ;
புநஃ	அன்றியும்
க்ஷோணீத்ரம்	கோவர்த்தனமலையை
ஸப்தராத்ரம்	ஏழுநாளளவும்
அபிபஃ	தாங்கினின்றாய் ;
ஸப்தாநாம் உக்ஷ்ணாம்	ஏழு வ்ருஷபங்களினுடைய
கண்டம் ச	கழுத்தையும்
விவலயஸி ஸ்ம	நப்பின்னைப் பிராட்டிக்காக] முறித்தாய்
ததாபி	இத்தனை செய்து வைத்தும்
தே பாணயஃ	உனது திருக்கைகள்
அம்லாநாஃ	வாடவில்லை.

* * * எம்பெருமானுடைய திருக்கைகள் செய்தருளின சில அதிமாநுஷ திவ்ய சேஷ்டிதங்களை அருளிச் செய்து "இத்தனை ஆனைத்தொழில்கள் செய்திருக்கச் செய்தேயும் இத்திருக்கைகள் இறையும் வாட்டமடையவில்லையே !" என்று விஸ்மிதராகிறார்.

"கொடியேறு செந்தாமரைக் கைவிரல்கள் கோலமு மழிந்தில வாடிற்றில, வடிவேறு திருவுகிர் நொந்துமில மணிவண்ணன் மலையுமோர்சம்பிரதம்" என்ற பெரியாழ்வார் திருமொழியைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிற ச்லோகமாய்த்து இது. கோவர்த்தனோத்தரண சரிதமொன்றே யாய்த்து அப்பாசுரத்தில் ப்ரதிபாதிதம். இந்த ச்லோகத்தில், ஸமுத்ரமதநம் கோவர்த்தனோத்தரணம் ஸப்தர்ஷபபஞ்ஜநம்—என்ற மூன்று திவ்ய சேஷ்டிதங்களை அருளிச் செய்கிறார்.

[ததாபி தே பாணயஃ அம்லாநாஃ] இத்தனை ஆனைத்தொழில்கள் செய்த திருக்கைகள் சிறிதும் வாடவில்லையே! வதங்கவில்லையே! ஈதென்ன அற்புதம் என்கிறார். ஸமுத்ரமதந-கோவர்த்தனோத்தரண-ஸப்தர்ஷபபஞ்ஜநம் முதலிய சேஷ்டிதங்களைச் செய்தருளினவன் இப்பேரருளாளனே-என்கிற தாதாத்ம்யமும், அந்த மிடுக்குத் தோன்ற இப்போது ஹஸ்திகிரி மூர்த்தாவிலே எழுந்தருளி யிருக்கிறானென்னுமிடமும் இந்த ச்லோகத்திற்கு ப்ரதாநப்ரமேயமாம். (45)

रिङ्खतो व्रजसदनाङ्गणेषु किं ते गोयष्टिग्रहणवशान्नु गोपगोष्ठ्याम् ।
आलम्बाद्युगनयसूत्रतोत्त्रयोर्वा पाणीनां वरद तवारुणत्वमासीत् ॥ ४६ ॥

Released by Maran's Dog Toronto , Canada